பேரூர்ப்புராணம்

திருவாவடுதுறை ஆதீனம்

31-2

வெளியீடு எண் 244.

உ
சிவமயம்

கவிராக்ஷஸ ஸ்ரீ கச்சியப்பமுனிவர்
இயற்றிய

பேரூர்ப்புராணம்

பொழிப்புரை — குறிப்புரைகளுடன்

இஃது

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து
இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகள்
கட்டளையிட்டருளியபடி
வெளியிடப்பெற்றது

திருவாவடுதுறை ஆதீனம்
1969

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்,
— திருவாவடுதுறை. —



ஆனந்த தாண்டவம்

பொருளடக்கம்



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

முகவுரை

திருச்சிற்றம்பலம்

"ஆரூ ரத்தா ஐயாற் றமுதே அளப்பூர் அம்மானே
காரூர் பொழில்கள் புடைசூழ் புறவிற் கருகா வூரானே
பேரூர் உறைவாய் பட்டிப் பெருமான் பிறவா நெறியானே
பாரூர் பலரும் பரவப் படுவாய் பாசூர் அம்மானே."

திருச்சிற்றம்பலம்

பேரூர் என்பது கொங்கு நாட்டிலே உள்ள தேவார வைப்புத் தலம். இத்தலத்துக்குத் தக்ஷிணகைலாசம், பிப்பிலாரணியம், மேலைச் சிதம்பரம், ஆதிபுரி, தவசித்திபுரம், பத்திபுரம், ஞானபுரம், வன்மீக புரம், மேருபுரம், தேனுபுரம், பசுபதிபுரம், குருக்ஷேத்திரம், பிறவா நெறித்தலம் முதலிய தெய்வீகமான பலகாரணப் பெயர்கள் உள்ளன.

புராணம் என்பது பழைய வரலாறு எனப்பொருள்படும். புராண இலக்கியங்கள் பெருங்காப்பிய வகையைச் சார்ந்தன. வடமொழியில் உள்ள புராண நடைவேறு; தமிழ்மொழியுள் உள்ள புராண நடை வேறு. வடமொழியிலே உள்ள புராணங்கள் வரலாற்றை மட்டும் அறிவிப்பன. தமிழ்ப்புராணங்கள் வரலாற்றுடன் காவிய இலக்கணங் களையும்பெற்று விளங்குவன. வடமொழியிலே காவியங்கள் தனியே இயங்குவன. பெருங்காப்பிய இலக்கணம் தண்டியலங்காரம் முதலிய நூல்களிலே காணப்படும்.

மூர்த்திகள் :-

தலவிநாயகர் : பட்டிவிநாயகர் என்பவர்.

சுவாமி திருநாமம் : பட்டீசர், அரசம்பலவாணர்.

அம்மையார் திருநாமம் : மரகதவல்லி.

சிவலிங்கங்கள் : கொங்கணேசர் முதலிய பதினொருலிங்கங்கள், மூலேசர் முதலியபதினொரு இலிங்கங்கள், அக்கினீசுரர் முதலிய நான்கு இலிங்கங்கள், சோமநாதர் முதலிய இலிங்கங்கள்.

பூசித்துப் பேறுபெற்ருேர் : சுமதி, அந்தணன், முசுகுந்தன், இந்திரன், கரிகாலன், ஆலாலசுந்தரர், தில்லைவாழந்தணர், வியாசர், விசுவாமித்திரர், இயமன், பிரமன், அங்கிரன், உமாதேவியார் (கௌரி), குசத்துவன், குலசேகரன், திரிலோகச்சோழன், நாரதர், காலவர், காமதேனு முதலியோர்.

முனிவர் : அத்திரி, பட்டிமுனி (பிரமன்), கோமுனி (திருமால்), காலவர், அகத்தியர், ஆனந்தி, தும்புரு, நாரதர்.

பிறதலங்கள்: வடகயிலாயம், தென்கயிலாயம்.

சிவத்துதிகள்: (176-ம் பக்.) காமதேனு செய்த துதிப்பாடல்கள் 80-92; (186-ம் பக்.) திருமால்செய்த துதிகள் 19-26, (203-ம் பக்.) பிரமன் செய்த துதிகள் 10-14.

மலை : மருதமலை, வெள்ளிமலை, ஏமாசலம், பிரமன்மலை, திருமால்மலை.

ஆறுகள்: காவிரி, ஆம்பராவதி, பவானி, காஞ்சிநதி.

சபை: வெள்ளியம்பலம், (பிப்பிலப் பொதியில்.)

வெள்ளியம்பல நடனம்: வியாழபகவான் சூரியன் மீனராசியில் வரும்பொழுது பூரணை உத்திர நட்சத்திரம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

திருக்குறள்: 69 தென்புலத்தார், இல்வாழ்வானென்பான்; 71 தெய்வந்தொழாள்; 48 தம்மிலிருந்து; 153-பக் பகல் வெல்லும் கூகை.

திருக்குறட்கருத்து: 320பக்.

சில செய்திகள்: அக்கினி சாபத்தால் கிளி நாக்குக் கூழையானது. தருமவிடை, ஆதிசைவர் - அநாதிசைவர், பிரமசத்திரயாகம் 110 ஆண்டுகள் செய்தல். முப்பாழ், பரத்தையர் ஆசாரியரை ஒத்தல், நால்வகை மலடு, இருநாழி நெல்லால் முப்பத்திரண்டு அறம், வெள்ளாடை வீசல், அத்திரிமுனிவன் கண்ணிலும் பாற்கடலிலும் சந்திரன் தோன்றியமை. உத்தரகயிலை (நன்னீர்க்கடல்), மத்தியகயிலை (இமயம்) தக்ஷிணகயிலை (பேரூர்). மூன்றுமண்டலம், அனிச்சம் நீர்ப்பூ, மன்றம் எழுதல் (219-பக்) சித்தர் தம் நிலையுரைத்தல் (218) சிவபிரானும் உமாதேவியும் திருவிழாவில் எழுந்தருளும் வாகனங்கள் (229பக்) மந்துவும் நந்தியும் முழவங்கொட்டல். வடகயிலாயம் - 41-செய்யுள். 'மாதுக்க மாற்ற' 'ஏதுக்களாலும் எடுத்தமொழியாலும்' என்ற சம்பந்தர் தேவாரத்தை அடியொற்றியது. முருகவேள் - மருதமலை, வேற்படை - மருத

மரம். மருததீர்த்தப் பயன் (258-பக்) தீர்த்தத்தைத் தூய்மையில்லாது தொட்டால் வறண்டுபோம். (தூய்மை இல்லாமையினால் திருக்குற்றாலத்து அருவி வறண்டுபோதல் இக்காலத்திலே கண்கூடு) வைரவக் கடவுள் காசியில் வசிக்கும் உயிர்கள் செய்யும் பாவங்களைச் சூலத்தால் குத்திச் சுழற்றித் தீர்ப்பார். நூல்களைக் கற்றுத்தெளியினும் சிவஞானம் கூடப்பெறுதோருக்கு ஆணவமலம் நீங்காது (433பக்) வியாதன் கழுவாய்ப்படலம், காஞ்சிப்புராணம் சார்ந்தாசயப்படலத்தின் பொருள் கொண்டுள்ளமை காண்க. விசுவாமித்திரன் வரம்பெறுபடலம் துதிகள் 14—18. கௌரி தவம்புரி படலத்துக் கூறிய சிவபரத்துவம் கந்த புராணம் ததீசி உத்தரப்படலத்துக் கூறியது காண்க. போதிநிழற் பூரணப்பொருள் (529), பன்னீர் நீழலிற் கதித்தபெருஞ் சுவையமிழ்து (614 பக்).

முருகவேளுக்கு அபிடேகம், வழிபாடு, சந்தனலேபனம், சுகந்தம் சாத்தல், திருவிளக்கு, நிவேதனம் முதலியன 272 – 5 பக். பதினொரு உருத்திரரும் படைக்கலங்கள், அருட்சத்தியே வேற்படை — (மருத வரை-62) தாவரவகை 266 பக். வாசனைப்பொருள்கள் 267. வாத்திய வகை: மருதவரை: 71 – 72 செய்; அடைமொழியின்றி வந்தன. மிருகவகை, மரவகை 195 – 6பக். ஆகமம் தாங்கிய மீனம், ஆரணம் மீட்டருள் மீனம்: 289. போர் ஆயுதங்கள் - 291. மருதவரைப் படலம்: 63 முதல் முடியக் கந்தபுராணவரலாறு; மிகச் சுவை பயப்பது. முசுகுந்தன் முகம்பெறுபடலத்தில் நித்திய கன்மம், சிவபூசை, மலர் வகை பத்திரவகைகள் கூறப்பட்டுள.

காமத்தால் நிகழ்வன சுமதிகதிபெறு: 49 - 54. பன்னீர் மர நிழலில் இறைவர் இருத்தல், பிறவா நெறிப்பெயர், சோழன் துறை, உயர்ந்தவுந் தாமே யிழிந்தவும் தாமே என்பது, திருமாலாகிய ஆமையைப் பிடித்து அதன் ஓட்டைப் பெயர்த்துச் சிவபெருமானிடம் விநாயகர் தந்தமை. பள்ளுப் படலத்திலே சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறு. சாதிப்பெயர்கள் 384பக். பள்ளி எனவரும் தலங்கள் 385 பன்றிக்கொம்பைப் பறித்தவர் முருகவேள் என்பது முதலியன.

முருகவேள் துதிப்பாடல்கள்: மருதவரை – 51 - 56; 60 - 63.

நிருத்தப்படலம் 60—69 வரை: நடம் நவிலல் சாத்திரக் கருத்துடைமை காண்க. சிவபெருமான் முகம் ஐந்தும், உமாதேவி முகம் ஒன்றும், அறுமுகக்கடவுளுக்கு ஆறுமுகமாம் (259) கிரிகள் ஐந்து 262.

தீர்த்தம்: மருததீர்த்தம், கன்னிகைதீர்த்தம், கந்ததீர்த்தம் மூன்றும் தென்புறப்; அனுமதீர்த்தம் வடக்கில், மேல்பால் உச்சிமலை யில் சரவணப்பொய்கை.

பேரூரிலே உள்ள கங்கையின் பெயர்க்காரணம் 413பக். தீர்த்தப்படலத்தில் தீர்த்தப்பெயர்கள் கூறப்பட்டுள. சிறந்த மூலிகைகள், விம்மிதம் விளைப்பன முதலியன விம்மிதப் படலத்திற் காண்க.

சில சொற்கள்: தொள்ளம் - தெப்பம். அரியல் - கள். துமிலம் - ஆரவாரம். குரங்குற - வளைய. கிஞ்சுமாரம் - முதலை. மந்திரம் - குதிரைச்சாலை. கன்னிகாரம் - நீலம், பொம்மல், கோடணை, புல்லம், சராவம், வேணீர், வியவர், விமலதை, அச்சு - உடல், காதரம், உறுவர், ஏகநாதன். மண்ணை - பிசாசு, நிரந்தரித்தல். அமிழ்தர் - தேவர். விரையாக்கலி, விகங்கம், தெவ்வி, சிதடன், இகலன், வியாளம், சிதம்பு, சோடை, இயவை, மவுணர், பயிக்கம், மாசை, தடறு, அவவு, தெகிழ்ந்த;

பரோடை, விடபம், கிலுத்தம், இருவி, உடம்பிடி, வியவர், இயவோர், எருக்கினர், முப்பாழ், தன்னம், வஞ்சுளமரம், பிணிமுகம், சேவகம், கடகம், உறவி, குரங்கின, மந்திரம், தண்ணடை, நவிரம், நிரந்து, உலம்பின, அரட்டர், திமிலம், தூசம், பிடகை, சமழ்ப்பு, விலாழி, மதலை, கழுமல், அட்டித்தரல், இட்டிகை, காழகம், பக்கறை, அசதியாடல், மறுவலும், ஏட்டை.

இவர்வாக்கில் அடிக்கடி வருவன : தொள்ளை, குரங்கி, குரங்குற, மறுவலும்.

சில சொற்றொடர்கள் : கந்தர விதந்தரு சுதந்திர, இரண்டாம் நந்தை (227-பக்) பாகா மொழியவள் பாகா விடையொரு பாகா (230) மன்றுடிய குருமணி.

பிரமசத்திரயாகம் 64-பக், நால்வகைமலடு, திமிரப்பூணி, 'நகும் ஆறு இராறு இரட்டி — விளங்கும் முப்பத்தாறு' எனவும் கொள்க (329-பக்).

நந்தனவனம்: பெரும்பாலும் அடைமொழியின்றி வந்த மரப் பெயர்கள் (36-பக்) காண்க.

இந்நூலாசிரியர் திராவிட மாபாடியகாரராகிய ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகளைத் தமது வித்தியா குருவாகப் பெற்ற உம்மைப் புண்ணியத்தால் இவர்வாக்கிலே சைவநூற் கருத்துக்கள் அங்கங்கே ஏற்றபெற்றி எடுத்துக் குழைத்தமைக்கப்பட்டிருத்தலைக் காணலாம். சங்கநூற் கருத்துக்களும் சொற்களும் சொற்றொடர்களும் அமைந்து விளங்குவன.

சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, கலித்தொகை, பத்துப் பாட்டு, புறநானூறு முதலிய நூல்களின் கருத்துக்களைக் குறிப்புரை யிலே எடுத்துக் காட்டியுள்ளேன். தொல்காப்பியச் சூத்திரங்களையும் உரைப்பகுதிகளையும் நினைவில் வைத்துணரவேண்டிய செய்யுட்களும் பல.

கந்தபுராணச் செய்தியும், சுந்தரமூர்த்தி நாயனர் வரலாறு முசுகுந்தன் வரலாறுகளும் படித்து இன்புறத்தக்கன. அடைமொழி யின்றிப் பாடிய செய்யுட் பகுதிகள் புலவர்கட்குப் பெருவிருந்தாம்.

மூர்த்தி தலம் தீர்த்தம் முதலியன அமைந்துள்ள இடங்களும், அவைகளின் பயனுகப்பெற்ற பேறுகளும் விளக்கப்பட்டுள்ளன. மலை கள், நதிகள், தீர்த்தங்கள், சிவலிங்கமூர்த்திகள் முதலியன ஒருமுறை பேரூர் செல்லும் அடியார்களுக்கும், அன்பர்களுக்கும் தெளிவாகத் தெரிந்துகொள்ளும் முறையிலே புராணச் செய்யுட்களில் இடம்பெற் றுள்ளன.

அணிகள் : உருவகம், உவமை, வேற்றுப்பொருள் வைப்பு, தற்குறிப்பேற்றம், சிலேடை, மடக்கு முதலிய அணிகள் வந்துள்ளன. சொல்லாற்றலால் தொனிப்பொருள் உள்ள செய்யுட்களும் பல. மடக் கணியையும் அங்கங்கே காணலாம்.

குந்தனஞ் சந்தனம்; வழியெதுகை. தரங்கம் தரங்கம், சிலை சிலையாக் கோலி, கடாக்கடாய் மடக்கு. எண்ணலங்காரம்: ஒருவில் ஐங்கணை.

இவ்வாசிரியர் அருளிய புராணங்களிலே பூவாளூர்ப் புராணம், பேரூர்ப் புராணம், விநாயக புராணம், திருவானைக்காப் புராணம், தணிகைப்புராணம் என்ற முறையிலே ஆதீனத்தில் பாடம் சொல்லப் படுவன.

இத்தல புராணத்தைப்பற்றிய விரிவான ஆராய்ச்சி எழுதா மைக்குக் காரணம் நூல்முழுமையும் பொழிப்புரையும் குறிப்புரையும் விரிந்தமையாலும், அவ்வச் செய்யுட்களுள்ள பக்கத்தில் அதற்குரிய செய்திகள் விளக்கப்பட்டமையாலுமேயாம். எனினும், முகவுரையில் மிகச் சுருக்கமாகவும் எழுதப்பட்டுள்ளது.

இம்முனிவர்பெருமான் அருளிச்செய்த நூல்களிலே கடவுள் வாழ்த்தின் அழகும், நாட்டுச் சிறப்பு முதலிய காப்பிய உறுப்புக்களின் அமைதியும், அவற்றில் பழைய நூற்பிரயோகங்களும், இலக்கண

அமைதிகளும், சைவசாஸ்திரக் கருத்துக்களும், சைவ பரிபாஷைகளும் புதிய புதிய கற்பனைகளும் நிறைந்து சுவை ததும்புவன எனப் பெரியோர் கூறுவர். அந்த முறையிலே ஆராய்ந்து உரைவரைந்து கண்ட சுவை அனுபவத்திலேதான் அறியலாகும். பிள்ளையவர்களால் இயற்றப்பட்டுள்ள நாகைக்காரோணப் புராண அமைப்பும் பொருள்களும் ஸ்ரீமாதவச் சிவஞானயோகிகள் அருளிச்செய்த காஞ்சிப்புராண முதற் காண்டத்தையும், ஸ்ரீகச்சியப்பமுனிவர் அருளிச்செய்த இரண்டாங் காண்டம், பேரூர்ப் புராணம் திருவானைக்காப் புராணங்களையும் பெரிதும் அடியொற்றியனவேயாகும்.

மகாவித்துவான் பிள்ளையவர்கள் இந்த நூலாசிரியராகிய ஸ்ரீ கச்சியப்பமுனிவரையே தமது வழிபடுதெய்வமாகக்கொண்டு ஒழுகி வந்தனர் என்றும், நூல்கள் இயற்றும்பொழுதும் பாடம் சொல்லுகையில் பொருள் கூறும்பொழுதும் முட்டுப்பாடு நேர்ந்தால் இம்முனிவர் பிரானைத் தியானித்தல் வழக்கமென்றும் உடனே அது தமக்கு நீங்குமென்றும் பிள்ளையவர்களே நேரில் சொன்னார்கள் என மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் எழுதியுள்ளார்.

ஸ்ரீ கச்சியப்பமுனிவர் வாக்குக்குப் பொருள் மகா வித்துவான்களாலேயே செய்யக்கூடுமென்பதை இவ்வாதீன மகாவித்துவான் திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் செய்த நூல்களிலே பரக்கக் காணலாம். பல அரிய சொற்களைப் பிள்ளையவர்கள் தமது பிரபந்தங்களிலும் எடுத்தாண்டுள்ளார்கள். முன்பு இந்நூலாசிரியர் செய்துள்ள மிகச் சிறந்த தணிகைப் புராணத்தைக் குறிப்புரையுடனே நன்கு ஆராய்ந்து பதிக்கப்பட்டமையும், இவ்வாசிரியர் அருளிச்செய்த நூல்களைப் பின்பற்றிப் பிள்ளையவர்கள் செய்தநூல்கள் அமைந்துள்ளமையும் இப்பேரூர்ப் புராணத்துக்கு இந்த அளவிலாவது உரைகாண இயன்றது. மங்களாம்பிகை பிள்ளைத்தமிழிலே பேரூர்ப்புராணத்தில் உள்ள பல கருத்துக்களும் சொற்களும் சொற்றொடர்களும் அமைந்து விளங்கக்காணலாம். திருக்குடந்தைப் புராணமும் பேரூர்ப் புராணத்தைக் குழைத்தமைத்ததேயாம்.

இந்நூலாசிரியராகிய ஸ்ரீ கச்சியப்பமுனிவர், ஸ்ரீமாதவச்சிவஞான யோகிகள் மாணவர் பன்னிருவருள் ஒருவர். ஸ்ரீகச்சியப்பமுனிவரும், மதுரகவி தொட்டிக்கலை ஸ்ரீ சுப்பிரமணியமுனிவரும் ஆகிய இருவரும் பன்னிரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ திருச்சிற்றம்பல தேசிகர் பெரியபட்டத்திலும், ஸ்ரீ அம்பலவாணதேசிகர் சின்னப்பட்டத்திலும் இருந்த காலத்தில் ஸ்ரீ அம்பலவாணதேசிகரிடத்திலே சிவஞானோபதேசமும் சைவசந்நியாசமும் பெற்றுக்கொண்டனர்.

இலக்கணம் ஸ்ரீ சிதம்பரநாத முனிவர், இராமநாதபுரம் ஸ்ரீ சோமசுந்தரகுரு இவர்கள் ஸ்ரீ திருச்சிற்றம்பல தேசிக மூர்த்திகளிடத் திலே சைவ சந்நியாசமும் சிவஞானோபதேசமும் பெற்றனர்.

சுவாமிகள் மாணாக்கர் பன்னிருவராவார்: 1. கச்சியப்பமுனிவர், 2. தொட்டிக்கலை — சுப்பிரமணிய முனிவர், 3. மதுரையாதீனம் வேலாயுததேசிகர், 4. காஞ்சிபுரம் சரவணபத்தர், 5. இராமநாத புரம் சோமசுந்தரகுரு, 6. முத்துக்குமாரதேசிகர், 7. இலக்கணம் சிதம்பரநாத முனிவர், 8. கலியாணசுந்தர உபாத்தியாயர், 9. அடைக் கலம்காத்தான் முதலியார், 10. காஞ்சிபுரம் சிதம்பரமுனிவர், 11. திரு முக்கூடல் சந்திரசேகர முதலியார், 12. திருச்சிற்றம்பல தேசிகர் முதலியோர்.

பத்தாவது ஸ்ரீவேலப்பதேசிகர் பெரியபட்டத்திலும் பேரூர் வேலப்பதேசிகர் சின்னப்பட்டத்திலும் இருந்த காலத்திலே, சுசீந்திரம் திருமடத்தில் ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் பேரூர் வேலப்ப தேசிகர்பால் அநுக்கிரகம் பெற்றார்கள். பேரூர் வேலப்பதேசிகராகிய தமது ஞானசாரியர் பேரூரிலே ஓர் ஆனிமாதத்துப் பரணி நட்சத்திரத் திலே சிவபரிபூரணமாயினர். அதன்பின்பு மாதவச்சிவஞான யோகிகள் திருவாவடுதுறையை அடைந்து அங்கே வசித்துவந்தார்கள். பேரூர் வேலப்பதேசிகர் பரிபூரணமானதும் மற்றொரு வேலப்பத்தம்பிரானாகிய அடியாருக்கு ஆசாரியராக அபிஷேகம் செய்து, சின்னப்பட்டத்தில் இருத்தினர். பத்தாவது ஸ்ரீ வேலப்பதேசிகர் சங்கரநாராயணர் கோயிலில் ஓர் புரட்டாதிமாதம் மூலநட்சத்திரத்திலே சிவபரிபூரண மாயினார்கள். பின்பு வேலப்பதேசிகர் பதினொன்றாவது குருமகா சந்நிதானமாகப் பீடத்திலெழுந்தருளினர்.

மாதவச் சிவஞானயோகிகள் மாணவரும் தமது அடியார் கூட்டத்திலே சிறந்து விளங்கியவருமாகிய அரும்பாக்கம் - திருச்சிற் றம்பலத் தம்பிரானுக்கு ஆசாரியாபிடேகம் செய்து சின்னப்பட்டத்தில் இருத்தினர். பின் வேலப்பதேசிகராகிய பதினொன்றாவது மகாசந்நிதா னம் திருப்பெருந்துறையிலே ஓர் வைகாசிமாதம் பூரட்டாதி நாளிலே சிவபரிபூரணமானார்கள். திருச்சிற்றம்பலதேசிகர் பன்னிரண்டாவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளினர். அப்போது சின்னப்பட் டத்திலே ஸ்ரீ அம்பலவாணதேசிகர் எழுந்தருளியிருந்தார்.

ஸ்ரீ மாதவச்சிவஞான யோகிகள் திருவாவடுதுறையிலே கி. பி. 1785ல் சிவபரிபூரணமாயினர்; அது விசுவாவசு - சித்திரை - ஆயிலிய

நாள். கவிராக்ஷச ஸ்ரீகச்சியப்பமுனிவர் காஞ்சிபுரத்திலே சாதாரண – சித்திரை - புனர்பூச நாளிலே (1790) சிவபரிபூரணமாயினர். எனவே, பேரூர் ஸ்ரீவேலப்பதேசிக மூர்த்திகளுடன் ஸ்ரீகச்சியப்பமுனிவர் பேரூர் மடத்திலே தங்கியிருந்தார் என்னும் கூற்றுப் பொருந்தாது. பேரூர் வேலப்ப தேசிகர் சிவபரிபூரணமான பின்பு ஏறக்குறையப் பத்து ஆண்டுகளின் பின்பே ஸ்ரீகச்சியப்பமுனிவர் ஆதீனத்து அடியவர்கள் கூட்டத்திலே ஒருவரானர். பதினன்காவது பட்டத்திலே வீற்றிருந்த வேலூர் ஸ்ரீ சுப்பிரமணியதேசிகர் நன்ருகப் படித்துவரும்படி கச்சியப்ப முனிவரால் அறிவுறுத்தப் பெற்றவர்கள். ஆதீன வரலாற்று முறைகளை அறியாத பலரும் தமக்குத் தோற்றியவாறே சரித்திரங்களை எழுதும் வழக்கம் இக்காலத்துப் பரவிவிட்டது.

இருபத்தொன்ருவது பட்டத்திலே வீற்றிருந்த ஸ்ரீசுப்பிரமணிய தேசிகமூர்த்திகள் காலத்திலே திருப்பெருந்துறையில் பதினென்ருவது ஸ்ரீ பின் வேலப்பதேசிக மூர்த்திகளின் சமாதிக்கோயில் நன்கு திருப் பணி செய்விக்கப்பெற்றது. ஸ்ரீ கச்சியப்பமுனிவர் அருளிய திருத் தணிகைப்புராணம் குறிப்புரை முதலியவற்றுடன் 1960-ல் உத்தரவுப் படி ஆதீனத்தில் என்னுல் அச்சிட்டு வெளிப்படுத்தப்பெற்றது.

பேரூரிலே ஏறக்குறைய 200 ஆண்டுகளின் முன்பு சிவபரிபூரண மான வேலப்பதேசிகர் சமாதிக்கோயில் திருப்பணி செய்யப் பெறு வதும், அதனை அடுத்து ஸ்ரீ கச்சியப்பமுனிவர் அருளிய பேரூர்ப் புராணம் பொழிப்புரை குறிப்புரை முதலியவற்றுடன் 1969-ல் அச்சிடப் பெற்று வெளியிடும்படி ஸ்ரீ - ல - ஸ்ரீ இருபத்திரண்டாவது குருமகா சந்நிதானம் திருவருள் பாலித்திருப்பதும் ஏதோ மிகப் பெரியதோர் தெய்வீக நிலையை உலகம் பெறுவதற்குரிய சூசகம் என்பதைச் சொல் லாமலிருக்க முடியவில்லை. சில சில தெய்வீக சக்திகள் மறைந்து மறைந்து நூறு ஆண்டு, இருநூறு ஆண்டுகளுக்கு ஒரு முறை சிவ பெருமானுல் மீண்டும் தோற்றுவிக்கப்படுகின்றன.

சிவக்ஷேத்திர குருக்ஷேத்திர பரிபாலனங்களும், சித்தாந்தசைவ பரிபாலனம், செந்தண்டமிழ் மொழிப் பரிபாலனங்களும், திருமந்திர மாநாடு சித்தாந்த சைவமாநாடுகளும் வழக்கம்போலவே நடைபெறும் படி கண்ணுங் கருத்துமாக அநுக்கிரகம் செய்து இந்த ஆதீனத்திலே இப்போது இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானமாக வீற்றிருந்து புகழும் புண்ணியமும் ஒருங்கே பெற்று விளங்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பல வாணதேசிக சுவாமிகள் கட்டளையிட்டருளியபடி இந்நூல் வெளியிடப் பெறுகிறது.

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் ஆணையின்படியே இந்தப் பேரூர்ப்புராணம் 745 செய்யுட்கள்வரை வித்துவான் ச. தண்டபாணி தேசிகரவர்களால் பொழிப்புரை, குறிப்புரைகள் எழுதப்பட்டுள்ளன. நிருத்தப்படலம் தொடங்கி எஞ்சிய பகுதிகள் முழுவதும் ஒன்றுக்கும் பற்றாத நாயினேனையும் ஒருபொருளாகத் திருவுளத்துக்கொண்டு எழுதி முடிக்கக் கட்டளையிட்டருளியபடியே பொழிப்புரை - குறிப்புரைகள் எழுதிப் பதிக்கப்பட்டுள்ளன. எளியேன் அறியாமையால் எத்தனையோ குற்றங்கள் நேர்ந்திருப்பினும், சிறியேன்செய்த முயற்சியையும் பெரிதாகக்கொண்டு பொறுத்தருளும்படி பெரியோர்களை மிகத் தாழ்வுடன் வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

சித்தாந்த சைவமணி —

திருவாவடுதுறை,
10—4—69.

த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை,


ஆதீனவித்துவான்.

உ

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

— ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்.



கவிராக்ஷஸ ஸ்ரீ கச்சியப்பமுனிவர்

உ

சிவமயம்

ஸ்ரீ கச்சியப்பமுனிவர் சரித்திரச் சுருக்கம்

பேரூர்ப் புராண நூலாசிரியராகிய ஸ்ரீ கச்சியப்பமுனிவரர், சற்றேறக் குறைய இருநூற்று முப்பத்தைந்து ஆண்டுகளுக்குமுன் தொண்டை மண்டலத்தில் தணிகைத்திருப்பதியில், காஞ்சிபுரத்துப் பரம்பரைச்சைவ வேளாளர் குலத்திலே அபிஷிக்தர் மரபிலே அவதரித்து, ஒழுக்கம் அன்பு அருள் முதலிய நற்குணங்களோடு வளர்ந்து வருவாராயினர்.

பின்பு தந்தை தாயர்களாலே தக்கபிராயத்திலே வித்தியாரம்பம் செய்விக்கப்பெற்று, சிறிது கல்விகற்ற அளவிலே அக்கச்சியப்பமுனிவர், சிவக்ஷேத்திர யாத்திரை செய்யத்தொடங்கி, தொண்டை நாட்டிலுள்ள சிவதலங்களெல்லாம் தரிசித்துக்கொண்டு, சோழநாட்டிலே ஸ்ரீ சிதம்பரம் முதலிய திருப்பதிகளைத் தரிசித்தார். பின்னர் ஸ்ரீ ஞானக்கோமுத்தி யாகிய திருவாவடுதுறையை அடைந்து மடாலயத்தினுள்ளே புகுந்து, திருக்கயிலாய பரம்பரைச் சித்தாந்த ஞானபாநுவாகிய ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகளைத் தரிசித்து, திருவருள்நோக்கம் சித்திக்கப்பெற்று, அப்பொழுது அத்திருமரபில் 12-வது குருமகாசந்நிதானம் திருச்சிற்றம்பல தேசிகர் பெரிய பட்டத்திலும் அம்பலவாணதேசிகர் சின்னப்பட்டத்திலும் எழுந்தருளியிருந்தபடியால் சின்னப்பட்டத்திலுள்ள ஞானதேசிகரை ஒடுக்கத்திலே போய்த் தரிசித்து, பேரன்போடு வணங்கினர். வணங்கியபின் அந்த ஞானதேசிகரிடத்தே சமயதீக்ஷையும், விசேஷதீக்ஷையும் பெற்றுச் சிவாச்சிரமத்திற்குரிய துறவறத்தையடைந்து நிருவாணதீக்ஷை பெற்றுக் கொண்டனர்.

அங்ஙனம் தீக்ஷைபெற்ற கச்சியப்பமுனிவர், அகத்திய மகாமுனிவர் வரத்தினல் பாண்டிவளநாட்டிலே அவதரித்து எளிதில் வடமொழிக் கடலும் தென்மொழிக்கடலும் நிலைகண்டுணர்ந்து பின்வேலப்பதேசிக ராகிய ஞானசாரியரிடத்தே அனுக்கிரகம்பெற்று, மெய்யுணர்வின் முற்றுப் பேறுடையராய், சித்தாந்தசைவ சிவஞானபோத திராவிட மகாபாஷ்ய கர்த்தராய் எழுந்தருளியிருந்த சிவஞானயோகிகளை வித்தியா குருவாகக்

கொண்டு, அம்மெய்ஞ்ஞான முனிவரிடத்தே, தென்மொழியிலே பல இலக்கணங்களும், இலக்கியங்களும், தருக்கமும், சிவஞானநூல்களாகிய மெய்கண்ட சாத்திரம் பதினன்கும்,பண்டாரசாத்திரம் பதினன்கும் மற்றும் பல நூல்களும் ஓதி உணர்ந்து, கல்வி கேள்விகளில் வல்ல மகாவித்துவான் எனப் பெயர்பெற்று அச்சிவஞானயோகிகள் மாணுக்கர் பல்லோருள்ளும் சிறந்தவராய் விற்றிருந்தார்.

இவரது வாக்கு வல்லபத்தையும் பிரசங்க சாதுரியத்தையும் புகழாதார் இல்லை. இவர் செய்யுளியற்றும் விரைவு, நெட்டுருப் பண்ணிய பழம் பாடம் ஒப்பித்தல்போல் இருந்ததென்று கூறுவர். இதுமட்டோ! காலம் இடங்கட்கேற்பப் புதிது புதிதாக யுக்திகள் வேண்டிய வண்ணம் அவரது திருவாயினின்று தோன்றிக் கொண்டிருக்குமாளுல் அவர் பெருமை இத்துணைத்தெனச் சொல்லற்பாலதோ?

பின்பு கச்சியப்பமுனிவர் சிவபெருமான் அப்புலிங்கமூர்த்தியாக எழுந்தருளியிருக்கப்பெற்ற திருவானைக்காவில் அமர்ந்திருந்தபோது திருவானைக்காப்புராணமும் பூவாளூர்ப்புராணமும் மொழிபெயர்த்தருளினர்.

பின்னர்க் கொங்கநாட்டிலே, விராட்புருடனுக்கு விந்துஸ்தானமாய், சிவபிரானுலே படைக்கப்பட்டதாய், தென்கயிலாயம், பிப்பிலாரணியம், மேலைச்சிதம்பரம், ஆதிபுரி, தவசித்திபுரம், பத்திபுரம், ஞானபுரம், வன்மீகபுரம், மேருபுரம், தேனுபுரம், பசுபதிபுரம், குருக்ஷேத்திரம், பிறவாநெறித் தலம் முதலிய பல தெய்வீகமான ஏதுப்பெயர்களையுடையதாய், தேவர் அசுரர் முனிவர் முதலிய அனேகராலே பூசிக்கப்பட்ட அளவில்லாத சிவலிங்கங்களையுடையதாய், காஞ்சிநதி, கந்ததீர்த்தம், சக்கரதீர்த்தம், பிரமதீர்த்தம், காலவதீர்த்தம் முதலிய பலதிவ்விய தீர்த்தங்களையுடையதாய் விளங்கும் திருப்பேரூருக்குக் கச்சியப்பமுனிவர் சென்று அங்கே சில காலம் வசித்தபொழுது மூர்த்தி தலம் தீர்த்தங்களாகிய மும்மைச்சிறப்பும் பெற்று, இம்மை மறுமை விடுபேறு என்னும் மும்மைப்பயனும் தரத்தக்கதாயிருத்தலையும் மற்ற எந்தத்தலத்திலும் இயற்றும்பாவம் திருவிடைமருதூரிலும், அத் திருவிடைமருதூரில் இயற்றும் பாவம் இப்பேரூரிலும் தீரும் என்பதையும் பிரமகுண்டமாகிய திருநீற்றுமேட்டிலுள்ள விபூதியை அணிவோர்க்குப் பிரமராக்கதமும், மலடும், நோய்களும், இடர்களும், பாவங்களும் தீர்ந்து இகமும் பரமும் வீடும் கூடும் என்பதையும், பிறவாப் புளி இறவாப்பனை முதலிய பல ஸ்தல விம்மிதங்களையும், சோதிவிருக்ஷம், சிலாநதி முதலிய பலபருவத விம்மிதங்களையும், சிவபெருமான் பேரூரின் கண்ணே அரிபிரமாதியோர்க்கு ஆனந்த தாண்டவம் செய்துகாட்டிய

இரசத சபையிலே விராட்புருடனுக்கு இருதயஸ்தானமாய் விளங்கும் ஸ்ரீ சிதம்பரத்தின் கண்ணதாகிய கனகசபையிலே பஞ்சகிருத்திய திருநிருத்தஞ்செய்தருளும் திருக்கோலத்தைப் பரமாசாரியராகிய சுந்தரமூர்த்தி நாயனருக்குக்காட்டக் கண்டு வணங்கிப் பேரானந்தப் பெருங்கடலில் மூழ்கி மீண்டு ஸ்ரீ சிதம்பரத்தை அடைந்து சபாநாயகரை நமஸ்கரித்து "மடித்தாடு மடிமைக்களன்றியே" என்னும் திருப்பதிகம்பாடி, அதில் "பாரூரு மரவல்கு லுமைநங்கை யவள்பங்கன் பைங்கணேற்ற - னூரூரன் றருமனர் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட்கொள்வா - ரூரன் றம்பிரா னூரு ரன் மீகொங்கி லணிகாஞ்சிவாய்ப் - பேரூரர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம் பலத்தே பெற்றுமன்றே" என்று அந்நாயனர் சபாநாதரைத் திருப்பேரூரிலேகண்ட நிலைமையைச் சிறப்பித்தருளிய அற்புதத்தையும் பற்பல முறை உற்றுநோக்கி ஆனந்தவெள்ளத்தில் அமிழ்ந்து, காலந்தோறும் சுவாமி தரிசனம் செய்துகொண்டு திருவருட்செல்வராய் வீற்றிருந்தார்.

அப்போது சிலகாலம் மழையில்லாமையால் வெப்ப மிகுதி பற்றி, மக்கள் தாக சோகங்களுற்று வருந்துவதை நோக்கித் தெள்ளியோர் உள்ளமேபோல வெள்ளியம்பலத்தில் ஆனந்த தாண்டவம் செய்தருளிய காலத்து, ஆடலின் வேகத்தால் அருமைத்திருமேனியில் ஆபரணமாக அணிந்துள்ள அரவங்கள் விடத்தை உமிழ்ந்ததனல் தேவராதியோர்க்கு உளவாகிய தாகசோகங்களைத் திருமுடிக்கண்ணதாகிய கங்கையைக் காஞ்சி நதியாகச் செல்லும் வண்ணம் ஆக்ஞாபித்து மாற்றியருளிய பொருள் முதலியவற்றை அடக்கி அரசம்பலவாணர்மீது பெரிதும் அருமையாகிய ஒருபிரபந்தம் பாடி மழை வருஷிக்கச்செய்து மக்களுடைய தாகசோகங்களை மாற்றினர். பின்னும் பட்டீசர்மீது பலபதிகங்கள்பாடிப் பலருக்குக் குட்டநோய் முதலியவற்றைப் போக்கி மற்றும் பல அற்புதங்களையும் செய்தருளினர்.

இத்தலத்தின் மகிமைகளை உலகத்தார் பலரும் உணர்ந்துய்யும்படி, திருவுளங்கொண்டு, சொற்சுவையும் பொருட்சுவையும் இனிது விளங்கும் வண்ணம், காலம் இடங்களுக்கேற்ற அலங்கார அமைதியோடு இப்பேரூர்ப் புராணத்தை மொழிபெயர்த்தருளினர்.

அதன்பின் திருத்தணிகையை அடைந்து ஆங்கே சிலகாலம் வீற்றிருந்து இயற்றமிழ்ப் போதகாசிரியர் விசாகப்பெருமாளையர், வித்துவான் சரவணப்பெருமாளையர் இருவருக்கும் பிதாவாகிய கந்தப்பையர் முதலாயினேர்க்குக் கல்வி கற்பித்தருளினர். அப்போழ்து, பல வித்துவான்களும்

தமிழிற் றுப் புறச்சமயியாற் செய்யப்பட்ட சீவகசிந்தாமணியைப் பேரிலக்கிய மாகக் கொண்டாடுதலைச் சித்தத்திலேகொண்டு, அதினும் மாட்சிமை பெறத் திருத்தணிகைப் புராணத்தை மொழிபெயர்த் தருளிச்செய்தார். சொல்வளம், செய்யுள்நடை, சந்தம், பொருட்சுவை என்னும் இவைகளில் தமிழ்மொழியிலுள்ள எந்த இலக்கியமும் இதற்கு மேம்பட்டிலது என்பது அப்புராணத்தை ஓதியுணர்வோர்க்கு எளிதில் விளங்கும்.

தம்மாணுக்கரில் சிறந்தவராகிய கந்தப்பையருக்கு வயிற்றிலே ஒரு குன்மநோய் உண்டாயபொழுது தணிகையாற்றுப்படையைப் பாடி, அவர் நோயை மாற்றியருளினர். அதனல் அவர் சிவத்தியான உறைப்பிற் சிறப் புடையர் என்பது தெள்ளிதிற் புலப்படும். மற்றும் திருத்தணிகைப் பதிற்றுப்பத்தந்தாதி முதலிய பிரபந்தங்களும் அங்கே இருந்தபொழுது இயற்றினர்.

பின்பு சென்னைமாநகர்க்குச் சென்று அங்கே சிறிதுகாலம் வதிந்தார். அப்பொழுது அவ்விடத்துப் பக்த ஜனங்களும் பிரபுக்களும் வேண்டிக் கொண்டபடி விநாயகபுராணம், சென்னை விநாயகர் பிள்ளைத்தமிழ் முதலி யன இயற்றி, அவர்கள் அடியுறையாக இரண்டாயிரம் வராகனிட அதைக் கொண்டு, திருவாவடுதுறையில் ஆதீன பரமாசாரியராகிய ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள் சந்நிதி மண்டபப்பணி அணிபெறச் செய்வித்தருளினர்.

விநாயகபுராணம் அரங்கேற்றும் சபைக்கு ஐயாப்பிள்ளை என்னும் ஒரு பிரபு "நாம் வர இதென்ன இராமாயணமா" என்று சற்றே இகழ்ந் தனர். மற்றப் பிரபுக்கள் முனிவருக்கு அதனை மறைத்தும், அவர் தமது புராணத்தைத் தொடங்காது இராமாயணத்தை எடுத்துக்கொண்டு யாவ ரும் பிரமிக்கும்படி முதல் ஆறு செய்யுளில் நூறு குற்றம் ஏற்றினர். உடனே அப்பிரபு, நூறு வராகனும் பீதாம்பரம் முதலியனவும் கொண்டு போய்ப் பாதகாணிக்கையாக வைத்துத் தீர்க்கதண்டம் சமர்ப்பித்து, சுவாமிகளது மகத்துவம் அறியாத ஏழையைத் தேவரீர் காத்தருளுக என்று விண்ணப்பம் செய்யவும், அதன் பின்பு தமது புராணத்தைத் தொடங்கி அரங்கேற்றினர்.

இம்முனிவர் சென்னப்பட்டணத்தில் இருக்கும்போது காஞ்சிபுரத் தில் எழுந்தருளியிருந்த அவராசிரியராகிய சிவஞானயோகிகள்பால், ஆங் குள்ள தமிழ்வித்துவான்கள் ஒருங்குகூடி, நீவிர் காஞ்சிமான்மியம் செய்யப் புகுந்து, அதன் கண்ணே, கடவுள் வாழ்த்தில், "சங்கேந்து மலர்க் குடங்கை" என்பதை முதலிலுடைய சபாநாயகர் துதியை முன்னர்

அமைத்து, "தணந்தபெரும்" என்பதை முதலிலுடைய ஸ்தலநாயக ராகிய ஏகாம்பரநாதர் துதியைப் பின்னர் வைத்தது தவறு என்று சாதித் தனர். அச்சிவஞானயோகிகள் தம்முடைய மாணுக்கனைக் கொண்டு அவர்களைத் தலைமடங்கச் செய்வதே தகுதி என்று திருவுளங்கொண்டு, அதனைக் கச்சியப்பமுனிவருக்குத் தெரிவித்தார். உடனே முனிவர் சென்னை யினின்றும் புறப்பட்டு, ஸ்ரீ காஞ்சி சேர்ந்து, அனைவரையும் ஏகாம்பரநாதர் சந்நிதி மண்டபத்தில் சேரச்செய்து பிரசங்கிக்கத் தொடங்குவாராகி அந்த ஸ்தலத்து ஓதுவாரை நோக்கி, இந்த ஸ்தலத்துத் தேவாரப் பதிகங் களுள் ஒன்றனை முதலிலே ஓதும்படி சொல்ல, அவர் "திருச்சிற்றம்பலம்" என்று தொடங்கினர். அப்பொழுது கச்சியப்பமுனிவர், ஆக்ஷேபித்த வித்துவான்களை நோக்கி இவர், "திருச்சிற்றம்பலம்" என்று தொடங்கு கின்றாரே இது உங்கட்குப் பொருத்தந்தானு? இவரை நீங்கள் சேர்ந்து இச்சந்நிதியில், இந்த ஸ்தலத்துத் தேவாரப்பதிகங்களைப் பிருதிவியம்பலம் என்று சொல்லி ஆரம்பிக்கும்படி செய்யக்கூடாதா என்ற அளவிலே, அனைவரும் வாயெடாது ஊமர்கள்போலத் தலைவணங்கி இருந்தனர். அதன் மேல் விநாயகர்காப்புக்குப் பின் கடவுள்வாழ்த்தில் முதலாவது உயிர் களின் போகம் வீடுபேறுகட்கு ஏதுவாகப் பஞ்சகிருத்தியத் திருநிருத்தம் செய்தருளும் சபாநாயகர் துதிகூறுதலே முறை என்று நியாயங்கள் காட்டி அவ்வித்துவான்கள் அவமானம் அடையச் செய்தனர்.

பின்பு ஸ்ரீ காஞ்சியில் வீற்றிருக்கக்கருதி அங்கே அமர்ந்தபொழுது தம்முடைய ஆசிரியர் திருவாக்கைச் சிரமேற்கொண்டு காஞ்சிப்புராணத்து இரண்டாங்காண்ட மொழிபெயர்ப்புச் செய்தருளி, பின்னர்க் கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டுவிடுதூது, கச்சி ஆனந்தருத்திரேசர் பதிற்றுப்பத் தந்தாதி, பஞ்சாக்கரதேசிகர் அந்தாதி முதலிய பல நூல்கள் இயற்றி அருளினுர்.

இங்ஙனம் லோகோபகாரமாகப் பல நூல்கள் இயற்றிப் பல நன் மாணுக்கர்களுக்குக் கற்பித்துத் தமிழ் மொழியை அபிவிருத்தி செய்து, சிவப்பேற்றிற்குக் காரணமாகிய சிவத்தியாஞதிகளின் உறைப்பில் வதிந் தருளிய ஸ்ரீ கச்சியப்ப முனிவரர் ஸ்ரீ காஞ்சிபுரத்திலே, சாலிவாகன சகாத்தம் 1712-க்குச் சரியான சாதாரண ௵ சித்திரை மீ 11௨ மங்கள வாரத்தில் (கி. பி. 1790) புனர்பூச நக்ஷத்திரமும் பூருவபக்ஷத்துச் சப்தமி திதியும் கூடிய கும்பலக்கினத்தில் பரிபூரணதசை அடைந்தனர்.

ஏர்தரு சாலி வாகன சகாத்தம்
ஆயிரத் தெழுசதத் தொருபத்
திரண்டின்மேற் சாதா ரணவரு டத்தின்
இயைதரு சித்திரைத் திங்கள்
சார்தரு தெய்தி பத்தினே டொன்று
தகுசெவ்வாய் வாரம்பூ ருவத்தில்
சத்தமி புனர்பூ சத்திரு நாளிற்
றவலறு கும்பலக் கினத்திற்
சீர்தரு துறைசை வாழ்சிவ ஞான
தேவன்மா ணுக்கருண் முதன்மை
திகழ்ந்துள கச்சி யப்பமா முனிவன்
திருப்பெருங் காஞ்சியி னெய்திச்
சேர்தரு மடியார் தமதக விருளைத்
தினகரன் முன்னிரு ளென்னத்
திருந்துதன் னருளா லகற்றிவி டுறுத்திச்
சிறந்தபூ ரணதசை யடைந்தான்.

[இச்செய்யுள் முற்காலத்தது]

உ

சிவமயம்

தேவாரமாதி அருட்பாக்கள்

ஆரூர் மூலத்தான மாணிக் காவும்
ஆக்கூரிற் றூன்றூேன்றி மாடம் ஆவூர்
பேரூர் பிரமபுரம் பேரா வூரும்
பெருந்துறை காம்பீலி பிடவூர் பேணுங்
கூரார் கொறுக்கைவீ ரட்டா னமும்
கோட்டூர் குடமூக்குக் கோழம் பழும்
காரார் கழுக்குன்றுங் கானப் பேருங்
கயிலாய நாதனையே காண லாமே.

— அப்பர் சுவாமிகள் - க்ஷேத்திரக்கோவை.

அஞ்சைக் களத்துள்ளார் ஐயாற் றுள்ளார்
ஆரூரார் பேரூர் அழுந்தூ ருள்ளார்
தஞ்சத் தளிக்குளத்தார் தக்க ளூரார்
சாந்தை யயவந்தித் தங்கி ணூர்தாம்
நஞ்சைத் தமக்கமுதா வுண்ட நம்பர்
நாகேச் சுரத்துள்ளார் நாரை யூரார்
வெஞ்சொற் சமண்சிறையில் என்னை மீட்டார்
வீழி மிழலையே மேவி னூரே.

— அப்பர் சுவாமிகள் - திருவீழிமிழலைத் திருத்தாண்டகம்.

கூறுந டைக்குழி கட்பகு வாயன
பேயுகந் தாடநின் றூேரியிட
வேறுப டக்குட கத்திலை யம்பல
வாணனின் றூடல் விரும்புமிடம்
ஏறுவி டைக்கொடி யெம்பெரு மானிமை
யோர்பெரு மானுமை யாள்கணவன்
ஆறுச டைக்குடை யப்ப னிடங்கலிக்
கச்சி யனேகதங் காவதமே.

— சுந்தரமூர்த்தி சுவாமிகள் - திருக்கச்சியனேகதங்காவதம் - 2.

பாரூரு மரவல்கு லுமைநங்கை யவள் பங்கன் பைங்கணேற்றன்
ஊரூரன் றருமனர் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட் கொள்வான்
ஆரூரன் றம்பிரா னூரன் மீகொங்கி லணிகாஞ் சிவாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றா மன்றே.

— சுந்தரமூர்த்தி சுவாமிகள் - கோயில் - குறிச்சி - 10.

ஆரூ ரத்தா! ஐயாற் றமுதே! அளப்பூர் அம்மானே!
காரூர் பொழில்கள் புடைசூழ் புறவிற் கருகா வூரானே!
பேரூர் உறைவாய் பட்டிப் பெருமான் பிறவா நெறியானே!
பாரூர் பலரும் பரவப் படுவாய் பாசூர் அம்மானே!

— சுந்தரமூர்த்திகள் - ஊர்த்தொகை.

உலகெ லாமுய்ய வுறுதியாம் பதிக
முரைத்துமெய் யுணர்வரு வொருமை
நிலவிய சிந்தை யுடன்றிரு வருளா
னீங்குவார் பாங்குநற் பதிகள்
பலவுமுன் பணிந்து பரமர்தாள் போற்றிப்
போந்துதண் பனிமலர்ப் படப்பை
குலவுமீ கொங்கிற் காஞ்சிவாய்ப் பேரூர்
குறுகினர் முறுகுமா தரவால். 88

அத்திருப் பதியை யணைந்துமுன் றம்மை
யாண்டவர் கோயிலுட் புகுந்து
மெய்த்தவர் சூழ வலங்கொண்டு திருமுன்
மேவுவார் தம்மெதிர் விளங்க
நித்தனர் தில்லை மன்றுணின் றாட
னீடிய கோலநேர் காட்டக்
கைத்தலங் குவித்துக் கண்களா னந்தக்
கலுழிநீர் பொழிதரக் கண்டார். 89

காண்டலுந் தொழுது வீழ்ந்துட னெழுந்து
கரையிலன் பென்பினை யுருக்கப்
பூண்டவைம் புலனிற் புலப்படா வின்பம்
புணர்ந்துமெய் யுணர்வினிற் பொங்கத்

தாண்டவம் புரியுந் தம்பிரா னுரைத்
தலைப்படக் கிடைத்தபின் சைவ
வாண்டகை யாருக் கடுத்தவந் நிலைமை
விளைவையா ரளவறிந் துரைப்பார். 90

அந்நிலை நிகழ்ந்த வாரருள் பெற்ற
வன்பனா ரின்பவெள் ளத்து
மன்னிய பாடன் மகிழ்ந்துடன் பரவி
வளம்பதி யதனிடை மருவிப்
பொன்மணி மன்று ளெடுத்தசே வடியார்
புரிநடங் கும்பிடப் பெற்று
லென்னினிப் புறம்போ யெய்துவ தென்று
மீண்டெழுந் தருளுதற் கெழுவார்.

மடித்தாடு மடிமைக்க ளென்றெடுத்து
மன்னுயிர்கட் கருளு மாற்று
லடுத்தாற்று நன்னெறிக்க ணின்றுலும்
வழுவினர்க ளணையா வண்ணந்
தடுப்பானைப் பேரூரிற் கண்டநிலை
சிறப்பித்துத் தனிக்கூத் தென்று
நடிப்பானை நாமனமே பெற்றவா
றெனுங்களிப்பா னயந்து பாடி. 115

— ஏயர்கோன் கலிக்காமநாயனர் புராணம் - பெரியபுராணம்.

திருக்கோவையார்

மணமுரசு கூறல்

வரைவு தோன்ற மகிழ்வுறுதோழி நிரைவளைக்கு நின்றுரைத்தது

பிரசந் திகழும் வரைபுரை யானையின் பீடழித்தார்
முரசந் திகழு முருகிய நீங்குமெ வர்க்குமுன்னு
மரசம் பலத்து நின்றுடும் பிரானருள் பெற்றவரிற்
புரைசந்த மேகலையாய் துயர்தீரப் புகுந்து நின்றே.

திருப்புகழ்

தானுத் தனதான தானுத் தனதான

தீராப் பிணிதீர – சீவாத் துமஞான
ஊராட் சியதான – ஓர்வாக் கருள்வாயே
பாரோர்க் கிறைசேயே – பாலாக்கிரிராச
பேராற் பெரியோனே – பேரூர்ப் பெருமானே.

தத்த தானன தத்த தானன
தானு தானு தானு தானு தனதான.

மைச்ச ரோருக நச்சு வாள்விழி
மானு ரோடே நானுர் நீயார் எனுமாறு
வைத்த போதக சித்த யோகியர்
வாணுள் கோணுள் வீணுள் காணுர் அதுபோல
நிச்ச மாகவு மிச்சை யானவை
நேரே தீரா வூரே பேரே பிறவேயென்
நிட்க ராதிகண் முற்பு காதினி
நீயே தாயாய் நாயேன் மாயா தருள்வாயே
மிச்ச ரோருக வச்ர பாணியன்
வேதா வாழ்வே நாதா நீதா வயலூரா
வெற்பை யூடுரு வப்ப டாவரு
வேலா சீலா பாலா காலா யுதமாளி
பச்சை மாமயில் மெச்ச வேறிய
பாகா சூரா வாகா போகா தெனும்வீரா
பட்டி யாள்பவர் கொட்டி யாடினர்
பாரூ ராசூழ் பேரூ ராள்வாய் பெருமாளே.

படல அகராதி



கனகசபை

ஸ்ரீ நடராஜர் அம்பாளுடன்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ கச்சியப்ப முனிவர்
இயற்றிய

பேரூர்ப்புராணம்

காப்பு

கங்கையும் பனிவெண் டிங்களும் விரைத்த கடுக்கையந் தொங்கலு மரவும்
தங்குபொற் சடையு முக்கணுந் தாதை தாணுவென் றுணர்த்தமென் மலர்க்கை
அங்குச பாச மணிந்துவெற் புயிர்த்த வாரணங் கன்னையென் றுணர்த்தி
வெங்கலி முழுதுந் துமித்தருள் பட்டி விநாயகன் சேவடி பணிவாம்.

கடவுள்வாழ்த்து

பட்டீசர்

கடல்சூழ்ந்த வுலகுண்ட கனிவாய னிருந்தொழிலுங் கமழ்ந்த தெய்வ
மடல்சூழ்ந்த மலர்க்குரிசின் முதற்றொழிலு மவரோடு மடிக்கு ஞான்றவ்
அடல்சூழ்ந்த வரன்வழியே மீட்டும்வரப் பணித்தருளி யாவிக் கெல்லாம்
மிடல்சூழ்ந்த விருடணிக்கு மாதிநகர்ப் பட்டீசர் விரைத்தாள் போற்றி. 1

கங்கையும், பிறையும், கொன்றைமாலையும், பாம்பும், செஞ்சடையும், மூன்று கண்ணும் ஆகிய அடையாளங்கள் தந்தை சிவபெருமான் என்பதையும், கையின் கண்ணுள்ள அங்குசம், பாசமாகிய ஆயுதங்கள் தாய் மலைமகள் என்பதையும் உணர்த்த வறுமையை வெருட்டி ஓட்டும் பட்டிவிநாயகரைப் பணிவோம்.

குறிப்பு:- பனி - குளிர்ச்சி. திங்கள் - சந்திரன். கடுக்கை - கொன்றை. தொங்கல் - மாலை. அரவு - பாம்பு. தாணு - சிவன். வெற்பு என்றது ஈண்டு இமயமலையை. கலி - வறுமை. துமித்து - அழித்து. பட்டிவிநாயகர் - தலவிநாயகர் பெயர்.

1. சர்வசங்காரமாகிய பேரூழிக்காலத்தில் புனருற்பவம் புரியும்போது பிரமனது படைப்புத்தொழிலும், திருமாலின் காத்தற்றொழிலும் தம் வழியே வரப் பணித்து, உயிர்களின் அறியாமை இருளைப்போக்கும் பட்டீசர் திருவடிக்கு வணக்கம்.

அரசம்பலவாணர்

திருமார்பன் முதலான தேவருக்கெல் லாமறையோன் சிவனே யாமென்(று)
ஒருவாய்மை மறைகரைந்த துண்மையெனத் தெளிந்துலக முய்ய முத்தீ
மருவாருங் குழலுமைபத் தினிவளர்ப்ப விடக்கரத்து வயங்க வேந்திப்
பெருவாழ்வு தரவரசம் பலத்தாடும் பேரொளியைப் பேணி வாழ்வாம். 2

மரகதவல்லியம்மை

கங்கைநதி சடைக்கரந்த கணவனு ருருக்கலந்த தனக்கே யல்லால் [ரு(து)
துங்கமணிக் கோடிரண்டா யிரம்படைத்த கரியெவர்க்குந் தூண்டன் முற்
அங்கணெடும் புவனத்தென் றமைந்தனள்போற் பாசமொடங் குசங்கை
மங்கலமிக் கருள்பேரூர் மரகதவல் லியினிருதாள் வனசம் போற்றி. [ஏந்தும்

உலகு உண்ட கனிவாயன் - பிரமகற்பத்தில் உலகமனைத்தையும் விழுங்கித் தன் உதரத்தில் வைத்துக்காத்த கனிபோலும் சிவந்த வாயையுடையவனாகிய திருமால். இருந்தொழில் - அத்திருமால் செய்யும் பெரிய தொழிலாகிய காத்தல். அவரோடும் மடிக்கும் ஞான்று - தொழிலையும், தொழில்புரிபவர்களாகிய அவர்களையும் மடிக்கும் பேரூழிக்காலத்து. மடல் - இதழ், மிடல். அடல் - வலிமை. ஆவி - ஆன்மாக்கள். இருள் - ஆணவமலத்தின் காரியமாகிய அறியாமை. தணிக்கும் என்பதால் ஆணவத்தைக் காரியப்படாது அதன் வலி ஒடுக்கினமை மட்டுமே உணரப்படும்.

2. வேதங்களாற் சொல்லப்படும் பொருள் சிவனே ஆம் என்ற ஒப்பற்ற உண்மையை திருமால் முதலான தேவர்கள் அனைவருக்கும் வேதஞ்சொன்னது உண்மை என உலகம் தெளிந்து உய்ய, மூன்று தீயையும் பக்கத்தில் எழுந்தருளியுள்ள உமாதேவி வளர்க்க, இடக்கரத்து விளங்க ஏந்தி உயிர்களுக்குப் பெருவாழ்வு அளிக்க, அரச அம்பலத்தாடும் பேரொளிப் பிழம்பாகிய நடராசப்பெருமானைப் போற்றி யாம் வாழ்வோம்.

திருமார்பன் - திருமகளை மார்பிலேகொண்ட திருமால். மறையோன் - விதிகளை வகுக்கும் வேதம் மொழிந்த தலைவன். மறை - வேதம் 'சிவமே பரம்பொருள்' என வேதம் சொன்னது சத்தியம் என உலகம் தெளியக்கையில் தீயேந்தி ஆடுகின்ற அரசம்பலவாணர் என்க.

3. அயிராவணத்தில் ஏறியிருந்து அதனைச் செலுத்தும் தகுதி சிவபெருமான் மனைவியாகிய தனக்கே உரிமை என்பதை உணர்த்த அங்குசமும் பாசமும் தரித்தவள் அம்மை என்பது. கரந்த - மறைத்த. உருக்கலந்த தனக்கே - உருவிலே கலந்து ஒன்றாக விளங்கும் தனக்கே. அதாவது சத்தியும் சத்தியுத் தனுமாகப் பிரிப்பின்றி விளங்கும் தனக்கே என்றவாறும். துங்க மணிக்கோடு - முன்னோக்கி வளைந்து உயர்ந்த முத்துக்களையுடைய கொம்புகள். கொம்பு இரண்டாயிரம் படைத்த கரி - அயிராவணம். யானையை ஏவுவார் அங்குசம் ஏந்துதல் மரபாதலின் அம்மை அங்குசபாசம் ஏந்தியதை இங்ஙனம் உருவகித்தவாறும். வனசம் - தாமரைமலர்.

விநாயகக்கடவுள்

வேறு

கற்றை வெண்கதிர் மேருவி னெழுக்கிய காட்சியின் மணிமார்பின்
உற்ற முப்புரி நூல்கர டத்தினின் றுகுமதத் துருவேருய்ப்
பொற்ற தாதைபோற் றேவர்தஞ் சிகைகொலோ பூண்டன ரிவரென்னும்
பெற்றி நித்தலும் விளக்குமைங் கரன்கழற் பிரசமா மலர்போற்றி. 4

முருகக்கடவுள்

காமர் மல்கிய வுருவிஃ தன்றெனக் கருத்தின்முன் னுறத்தோற்றும்
காம னல்லுடல் பொடித்தகண் ணிடத்துமை கணவனுர் நிகரில்லாக்
காமர் மல்கிய வுருவெனத் தோற்றிய காளையை யடியார்தங்
காம முற்றமிக் கருளுமங் குலிநகர்க் கந்தனைப் பணிவாமால். 5

---

4. சந்திரகிரணம் மேருமலையில் விழுந்தோற்றம்போலச் செம்பொன் போலும் மேனியில் வெண்பூணூல் விளங்கவும், கன்னத்திலிருந்து ஒழுகும் மதநீர் கன்னங்கரேலென்றுவழியவும் விநாயகப்பெருமான் விளங்குந்தோற்றம் இவரும் தம் தகப்பனுரைப்போல மயிர்ப்பூணூல் அணிந்துள்ளனரோ என்னும் எண்ணத்தை நாடோறும் உண்டாக்கும் என்பதாம்.

கற்றை - தொகுதி. முப்புரிநூல் - பூணுநூல். கரடம் - கன்னம். பொற்ற - போற்ற என்பதன் குறுக்கல் விகாரம். தேவர்தம்சிகை - தேவர்களுடைய முடி மயிர். இறைவன்காபாலிகவேடந்தாங்கி உத்திராபதியாராக எழுந்தருளியபோது மயிர்ப்பூணுநூல் அணிந்தனராதலின் இங்ஙனம் உவமித்தார்.

5. அழகுமிக்க வடிவம் இஃதன்று என மன்மதன் உடலை எரித்த கண்ணில் அழகான வடிவுடன் தோற்றிய முருகனை, அடியார்கள் எண்ணிய எல்லாம் ஈடேற அருள்வழங்கும் அங்குலிநகர்க் கந்தனைப் பணிவோம் என்பதாம்.

காமர் மல்கிய - அழகு நிறைந்த. காமர் - உரிச்சொல். கருத்தில் முன் உறத்தோற்றும் காமன் - மனத்தில் முன்னேதோன்றும் இச்சை வடிவினனுகிய மன்மதன். முன் - குறிப்புமாம். முன்னம் என்பதன் சிதைவு. நங்கையர் காட்டும் குறிப்பின் வழியே ஆடவர் மனத்தில் தோன்றும் விருப்பத்தின் வடிவானவன் என்பது. காமன்+நல்லுடல் - மன்மதனுடைய நல்ல அழகிய உடல். காமன்+ அல் உடல் எனப்பிரித்து மதனனது இருள்போலுங்கரிய உடல் எனலுமாம். அல் - இருள். மன்மதன் நிறம் கருமையாதலின் இங்ஙனம் கூறப்பட்டது. மன்மதனை எரித்த கண் - நெற்றிக்கண். அதினின்றே முருகன் ஆறு தீப்பொறி களாக முதலிற்றேன்றினுர் என்ற நிகழ்ச்சி சுட்டப்படுகிறது. தோற்றிய காளை என்ருர் பிறக்கும்போதே வீரமிகுந்த குமரனுகத் தோன்றினமையின். காமம் முற்ற - விருப்பம் நிறைவெய்த. அங்குலிநகர் - சுட்டப்படும் நகரம். அதாவது இது எனச் சிறப்பாகச் சுட்டி அறியப்படும் நகர் பேரூர் என்பதாம். அங்குலி - சுட்டுவிரல்.

திருநந்திதேவர்

உலகம் யாவையு மொருநொடிப் பொழுதினுண் டுமிழுஞ்சக் கரமாதி
மலர்கை யேந்திய நாரணன் முதலிய வானவர் குழாமெல்லாம்
அலகி லார்வமு மச்சமுந் தழீஇநிரை யாகநின் றனர்போற்ற
இலகு வேத்திரச் சிறியகோற் பணிபுரி யேந்தல்பூங் கழல்போற்றி. 6

சண்டீச நாயனார்

வேறு

விண்ணவ ரேனுஞ் சிவபிரான் பத்தி மேவில ராயினல் வினையும்
திண்ணிய பாவ மெனப்படு மென்று சிறுவிதி தெரிப்பவன் பினரேல்
மண்ணவ ரேனும் வெய்யபா தகமு மருவினல் வினையெனப் படுமென்(று)
அண்ணலம் புவியிற் றெரித்தசண் டீச ரடிமலர் முடிமிசைப் புனைவாம். 7

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

வேறு

தவந்த என்பினைப் பெண்ணெனப் படைத்துஞ்சார் மழவன்
உவந்த பெண்ணுயி ரளித்துமொட் டாதெதிர் புத்தன்
நிவந்த சென்னியை யுருட்டியு முத்தொழி னிறுவிப்
பவந்த டுத்துயிர்க் கருளுஞ்சொற் றனவனைப் பணிவாம். 8

---

6. திருமால் முதலிய தேவர்கள் கைலைத்திருவாயிலிலே வரிசையாகநின்று வழிபட, திருக்கரத்திலே பிரப்பங்கோலைத்தாங்கி, சிவப்பணி புரியும் திருநந்தி தேவர் திருவடியை வணங்குவோம் என்பது.


கை சக்கரம் ஆதி மலர் ஏந்திய நாரணன் என மாற்றுக. அஞ்சியும் - அன்புபட்டும் சிவசந்நிதியில் நிற்கின்றனர் என்பதாம். வேத்திரம் - பிரம்பு.

7. தேவர்களே யாயினும் சிவபெருமானிடம் அன்பிலராயின் அவர்கள் செய்யும் புண்ணியமும் பாவமாம்; என்பதைத்தக்கன் காட்டவும், அன்புடையார் மண்ணுலகில் வாழ்பவர்களே ஆயினும் அவர்கள் செய்யும் பாவமும் புண்ணிய மாம் என்பதைத்தெரிவித்த சண்டேசர் திருவடியை முடிமீது சூடுவோம்.

சிறுவிதி - தக்கன். அண்ணல் அம்புவி - பெருமைதங்கிய பூமி.

8. இறந்த பெண்ணின் எலும்பினை மீட்டும் பெண்ணாகப் படைத்தும், கொல்லிமழவன் பெண்ணிற்கு உயிரளித்துக் காத்தும், புத்தர் தலையில் இடிவிழச் செய்து அவர்களை அழித்தும் படைத்தலாதி முத்தொழில்புரியும் சொல்வன்மை படைத்த ஞானசம்பந்தப் பிள்ளையாரை வணங்குவோம்.

கனகசபை தூண்களிலுள்ள சிற்பங்கள்



நர்த்தனகணபதி



ஸ்ரீ ஆறுமுகமூர்த்தி

திருநாவுக்கரசு நாயனர்

விஞ்சை கற்பன வேறிலை விடையவன் பதங்கள்
அஞ்சு மேயென வறியவெவ் வுலகுங்கற் புணையா
நெஞ்சு துட்கெனு நெடும்புனல் வேலையும் பிறவி
வஞ்ச வேலையு நீந்திய மன்னனைப் பணிவாம். 9

சுந்தரமூர்த்தி நாயனர்

ஆடு பாம்பணிந் தம்பலத் தாடிய வழகற்
பாடு பாப்பல பகர்ந்துமற் றிம்மையிற் பயனும்
கூடு மேலையிற் பயனுங்கோ தனைத்தையு மொருவும்
விடும் வாங்கும்வா ணிகத்துறு விரகனை வியப்பாம். 10

என்பு பெண்ணுக்கியது 'மயிலாப்பூரில் சிவநேசச்செட்டியார் மகள் பூம்பாவை அரவுதீண்டியிறக்க, செட்டியார் அவளைச் சுட்டு எலும்பைப் பச்சைக் குடத்தில் எடுத்துவைத்து ஞானசம்பந்தப் பிள்ளையாரிடம் தெரிவிக்க, பிள்ளையார் பதிகம்பாடிப் பெண்ணுருவாக்கிப் படைத்துக்கொடுத்தார் என்பது.

கொல்லிமழவன் மகளார் வயிற்றுநோயால் வாடித் திருப்பாச்சிலாச்சிராமத்திற்கு வர, ஞானசம்பந்தர் பதிகம்பாடி அந்நோயைப் போக்கி அவளுயிரைக் காத்தார்.

திருத்தெளிச்சேரிக்கு ஞானசம்பந்தர் எழுந்தருளியபோது புத்தர்கள் வாதிற்கு வர அவர்கள் தலையில் இடிவிழுந்தது; இறந்தனர். இது அழித்தல். இங்ஙனம் முத்தொழிலைச் செய்தார் பிள்ளையார். பனவன் - பிரமசாரியாகிய அந்தணன்.

9. 'கற்பன திருவைந்தெழுத்தே' என உலகம் தெளியும்படிக் கல்லே தெப்பமாகக்கொண்டு கடலை நீந்தியதன்றி, பிறவிக்கடலையும் நீந்திய திருநாவுக்கரசரை வணங்குவோம்.

விஞ்சை - வித்தை. விடையவன் - சிவபெருமான். பதங்கள் அஞ்சு - திருவைந்தெழுத்து. ஐந்தெழுத்துக்களும் ஓரெழுத்தொருமொழியாய் சி - சிவத்தையும், வ - சத்தியையும், ய - ஆன்மாவையும், ந - மலத்தையும், ம - மாயையையும் உணர்த்துதலானும், 'அந்தியும் நண்பகலும் அஞ்சுபதஞ்சொல்லி' என்ற வழக்கு உண்மையானும் இங்ஙனம் கூறியவாறும். துட்கெனும் - திடுக்கிடும்.

10. அம்பலக்கூத்தனைப் பாடுகின்ற பாக்களைப்பாடி இம்மைப் பயன்களையும், குற்றமே யில்லாத வீட்டுலகத்தையும் பெற்று இறைவனிடமே வாணிகம் செய்த நம்பியாரூரரை வணங்குவோம்.

கோது - குற்றம். வீடு - முத்தி. விரகன் - சாமர்த்தியசாலி, தந்திரம் உள்ளவன்.

மாணிக்கவாசக சுவாமிகள்

உள்ள மாகிய புலத்தினைப் பத்தியா லுழுது
தெள்ளு ஞானவித் துறுத்துநற் சிரத்தைநீர் பாய்த்திக்
கள்ள வான்பொறிக் களைகள்கட் டானந்தம் விளைத்துக்
கொள்ளை கூறுமா ணிக்கவா சகன்கழல் குறிப்பாம். 11

மற்றைய நாயன்மார்

அறத்தி னீடிய வகத்திடைச் சிவானந்தம் விளைய
உறத்த டாதுமுன் பாய்த்திய வொழுக்கநீர் முழுதும்
புறத்தி னேகுறக் கவிழ்த்ததே போன்மெனப் புனல்கண்
நிறத்தின் வாக்குமெய் யன்பின ரெவரையு நினைப்பாம். 12

குருமரபு

வேறு

அங்கணர்தங் கயிலைவரை நந்திநவின் றருளும்
  அருணூலை மொழிபெயர்த்த வாசிரியன் மரபில்
தங்குதுறை சையினமச்சி வாயர்மறை ஞானர்
  தயங்கியவம் பலவாண ருருத்திரகோ டியர்மா

---

11. மனமாகிறவயலை அன்பாகிய ஏராலுழுது, ஞானவிதையை விதைத்து சிரத்தை என்கிற நீரைப்பாய்ச்சி, இந்திரிய சுகமாகிற களைகளைப்பிடுங்கி, சிவானந்தயோகம் விளையச்செய்து, அதனை வேண்டுவோர்கொள்ளுக எனக் கூறும் மாணிக்கவாசகர் திருவடிகளை வணங்குவோம்.

சிரத்தை - ஊக்கம். கள்ள வான்பொறி - அறிவு ஏமாந்தபோது உடையவனையும் வஞ்சித்துப் புலன்கள் மேற்செல்லும் இந்திரியம். கட்டு - பிடுங்கி. கொள்ளை கூறுதல் - ‘மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே’ என கொள்ளை கொள்ளக் கூவுதல்.

12. சிவானந்தம் விளைய முன்னே மனப்புலத்தில் பாய்ச்சிய நீரை வடிகட்டுதல் போல ஆனந்தக்கண்ணீரை மார்பிலே வழியவிடுகின்ற உண்மை அன்பர்கள் அனைவரையும் தியானிப்போம்.

அறத்தின் நீடிய அகம் - தருமநெறியில் பழகிய மனம். ஒழுக்க நீர் - நல்லொழுக்கமாகிய தண்ணீர். நிறம் - மார்பு.

மங்கலவே லப்பரிரு குமாரசா மிகண்மா
சிலாமணியா ரிராமலிங்கர் வயங்கிருவே லப்பர்
இங்கணுயர் திருச்சிற்றம் பலவரிருள் துமித்திட்
டெனையாளம் பலவாண ரிவர்களையேத் தெடுப்பாம். 13

கடவுள்வாழ்த்து முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 14

---

13. திருக்கயிலை திருநந்திமரபில் வரும் துறைசை நமசிவாயமூர்த்திகள் முதல், என்னையாட்கொண்ட அம்பலவாணதேசிகர் வரையுள்ள ஆசாரியமூர்த்திகளைத்துதிப்பேம். அருள் நூல் - ரௌரவாகமம். மொழிபெயர்த்து - தமிழாக்கிச் சிவஞானபோதம் எனச்செய்து. மரபு - சந்தான பரம்பரை.

அவையடக்கம்

வேறு

சூழிமால் யானை சுமந்தநா னிலத்துச் சூழ்ந்தவேழ் கடலையு மொருங்கு
நாழியா லளப்பப் புகுந்ததே போலா நான்முகன் மாலளந் தறியா
ஊழியான் கருணை யூற்றெழ நடன முஞற்றுறும் பிப்பிலா ரணியப்
பாழிமான் மியங்கண் முழுவதுஞ் சிறியேன் பகருவான் புகுந்தது மாதோ. 1

சித்திரம் பிறங்கச் செம்பொனிற் குன்றி செறிப்பினுஞ் செய்கையே விழைவார்
ஒத்ததின் றிதற்கென் றுவப்பராற் கூடத் தொளிர்மணி யழுத்தினு மணியின்
உத்தமம் விழைவோ ரதனையே மதிப்ப ருரைத்தவென் கிளவியாற் சிலர்தாம்
கைத்தன ரேனும் பயனுறு மனத்தோர் கைக்கொள்வர் மான்மியச் சிறப்பால். 2

பண்டுகே வலத்திற் கிடந்தவா ருயிர்க்குப் பரிவினுற் றனதுப காரம்
கண்டரு ளிறைபோற் றுங்களே பிறர்தங் கவிதையிற் கரிசுதீர்த் தாள்கை
கொண்டவை யிருந்தோர் தம்மையா மிரப்பிற் கோதற விளங்கிய வவர்தம்
மண்டிய புகழுக் கியைவதன் றெனவா ளாதிருந் தனமவர் மாட்டு. 3

---

1. திருமாலும், பிரமனும் காணாத ஆனந்தக் கூத்தப் பெருமான் எழுந்தருளி அனவரத நடனம் புரியும் பிப்பிலாரணியம் என்னும் பேரூர்ப் பெருமையை யான் சொல்லப் புகுந்தது கடல் ஏழையும் படியால் அளக்கப் புகுந்ததுபோலாம்.

சூழி - முகபடாம். நாழி - படி. உஞற்றுறும் - புரியும். பாழி - பெருமை.

2. பொன்னில் குன்றிமணியைப் பதித்தாலும், இச்செயல் இன்று ஒத்தது என்று மகிழ்வர் கைத்தொழிற்றிறம் மெச்சுபவர்கள். இரும்பில் ஒளிமணிகளைப் பதித்தால் மணியின் உயர்வை மதிப்போர் இரும்பின் இழிவை நோக்காது மணியின் உயர்வையே மதிப்பர். அதுபோல என் சொல்லால் சிலர் வெறுத்தாலும் பயன் கொள்பவர்கள் மான்மியச் சிறப்பால் இந்நூலைக் கைக்கொள்வர்.

சித்திரம் பிறங்க - சித்திர வேலைப்பாடு விளங்க. குன்றி - குன்றுமணி. செய்கை - தொழிற்சிறப்பு. கூடம் - இரும்பு. கைத்தனரேனும் - வெறுத்தாராயினும்.

3. தொன்றுதொட்டுக் கேவல நிலையிற்கிடந்த உயிர்களுக்கு இரங்கி உபகரிக்கும் இறைவன்போல, பிறர் பாடல்களில் தாமே குற்றம்போக்கி குணங்கொள்ளும் தன்மையைக்கொண்டு அவையிலிருந்த புலவோர்களை, யாம் குற்றங்களைந்து குணம்பெய்து வாசிக்க என வேண்டிக் கொள்வோமாயின் அவர்கள் புகழுக்கு இழுக்காம் என்று வாளா இருந்தேம்.

கேவலம் - ஆணவமலத்துள் அழுந்திச் செயலற்று உலண்டுப் புழுவைப் போலக் கிடக்கும் உயிர்களின் நிலை. உபகாரங்கண்டருள் இறை - அவர்களுக்கு வினைக்கீடாகத் தனுகரணங்களை உதவிச் சிறிது ஞான விகாசமும் அளித்தருளும் இறைவன். கரிசு - குற்றம்.

கனகசபை தூண்களிலுள்ள சிற்பங்கள்



ஊர்த்துவ தாண்டவமூர்த்தி



ஆலங்காட்டு காளியம்மை

அருவருப் புடைய துடலமென் றறிந்து
மரும்பய னுறுநரு முரூரும்
ஒருவருந் திறத்தி னுரிமைமற் றதன்பா
லுறுத்துவர் மதுரமென் கிளவி
மருவரி திதுவென் றறிந்துமென் பாடன்
மாட்டுவை யகத்துளா ரெவரும்
பொருவருந் திறத்தி னுரிமைபூ ணுவராற்
பொறியிலே னிடத்துறு மகிழ்வால். 4

கடல்கடைந் தெடுத்த வமிழ்தமுஞ் சமழ்ப்பக்
கதித்ததீஞ் சுவையெழாற் பாடல்
நடவின ரிருவர் சேக்கைபெற் றிருந்த
நாயகன் செவியிடைத் துடிமான்
விடநிகர் குரைப்பு மேறலிற் றெளிந்தோர்
விதியுளி யுஞற்றுசெந் தமிழ்கள்
படருமச் செவியிற் சிறியனேன் றொடையும்
படருமா லுலகெலாம் பரவ. 5

---

4. உடல் அருவருக்கத்தக்கதென்று உணர்ந்தும் உடலாற் பயன்கொள் வாரும், அல்லாதாரும் அதனைத் தம் விருப்பப்படி விடமாட்டாமையால் அதன் மாட்டு உரிமை பாராட்டுவர். அதுபோல இந்நூல் இனிய சொற்களால் இயன்றிலது என்றறிந்தும் அறிவிலியாகிய என்மாட்டுவைத்த அன்பால் உலகவர் என் பாடலிலும் உரிமை கொண்டாடுவர்.

அரும்பயன் - யாம் இவ்வுடல் அடுத்ததன் பயன் கடவுளை வணங்கி முத்தி இன்பம் பெறுதலாகிய அரிய பயன். ஒருவ அரும் - நீங்குதற்கு அரிய. மருவு அரிது - பொருந்துதல் இல்லாதது. பொறி - அறிவு.

5. அமுதமும் வெறுக்கும்படி இனிய சுவையையுடைய பாடலை ஒலிக்கின்ற அசுவதரர் கம்பளர் என்ற இருவர் இருந்து பாடிய இன்னிசையைக் கேட்கின்ற செவியிலே மானொலியையும் பெருமான் ஏற்றதுபோல, சிவஞானியர் விதிப்படிச் செய்தளித்த செந்தமிழ்ப் பாமாலைகள் ஏறிய திருச்செவியில் அடியேன் பாடலும் இடம்பெறும்.

சமழ்ப்ப - வெறுக்க. அதாவது இது அசுவதரர் முதலியோர் பாடலின் இனிமையுடைத்தன்று என வெறுக்க என்பதாம். கதித்த - மிடுக்கு, துள்ளல், பரவல் முதலிய கதிவிகற்பங்களையுடைய. எழால் - இசையின் உச்சத்தாயி. நடவினர் இருவர் - இசையை நடத்துகின்ற அசுவதரர் கம்பளர் என்ற கந்திருவர் இருவர். இறைவன் திருச்செவியில் முற்சொன்ன கந்திருவர் இருவரும் தங்கி யிருந்து எப்போதும் இன்னிசை எழாலைச் செய்கின்றனர் என்பது வரலாறு. தொடை - பாடல். இச்செய்யுள் கருத்து முழுதும் தொல்காப்பியத் தேவர்செய்த திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகத்து அவையடக்கத்தும் காணப்பெறும்.

வேறு

கொன்றை மாலையுங் கூவிள மத்தமும் பிறையும்
துன்று வார்சடைப் பட்டிநா யகர்சுரர் போற்ற
மன்றி னுடல்செய் குடவயிற் சிதம்பரம் வயங்கு
கின்ற மேதகு கொங்குநாட் டணிகிளப் பாமால். 6

அவையடக்கம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 20

---

6. கொன்றைமாலை முதலியவற்றைத் திருமுடியிற்சூடிய பட்டிப்பெருமான் திருநடனஞ்செய்யும் மேலைச்சிதம்பரம் என்னும் பேரூர் விளங்குகின்ற கொங்கு நாட்டுச் சிறப்பைக் கூறுவோம்.

கூவிளம் - வில்வம். மத்தம் - ஊமத்தம்பூ. குடவயின் - மேற்குத்திசை.

திருநாட்டுப்படலம்

திங்களும் உரோணியுந் திகழ்ந்ததிற மென்ன
மங்கல வினைத்தொழிலு மங்கையரும் வேத
அங்கியும் வளர்க்குமறை யந்தணருங் காவும்
கொங்குமலி கின்றதொரு கொங்குவள நாடு. 1

கோதைபயில் விற்கொடி குலாவிய புயத்தன்
கோதையர் விழிக்கணை குளிக்குமரு மத்தன்
கோதைகம ழுங்கவிகைக் கொங்கனென வில்லுங்
கோதைநனி யாண்டதொரு கொங்குவள நாடு. 2

பருதியொடு வெண்மதி பரிக்கவொளி நல்கும்
உருகெழு கனற்புதல்வ னுண்டவொரு சீரால்
இருசுட ருயிர்த்தவர்க ளாண்டவிரு நாட்டின்
குருவென விளங்கியது கொங்குவள நாடு. 3

---

1. சந்திரனும் உரோகிணியும்போல, திருமணத்தொழிலும் பெண்களும், வைதிக அக்கினியும் அதனை வளர்க்கின்ற அந்தணரும், சோலையும் தேனும் மலிந்துள்ள கொங்குநாடு.

2. வில் எழுதிய கொடிவிளங்கும் புயங்களையுடையவனும், மகளிர்களின் மான்போலும் விழிகள் பதிந்து கிடக்கின்ற மார்பையுடையவனும், மாலைகள் மணம்வீசும் வெண்கொற்றக் குடையையுடையவனும் சேரர் மரபினனும் ஆகிய கொங்கன் என்னும் மன்னன் ஆண்டநாடு கொங்குநாடு.

கோதை - அம்பு பூட்டும் நாண் கயிற்றுமுடிச்சு. கோதையர் - பெண்கள். கோதை - மாலை. கோதை - கோக்கோதையாகிய சேரமன்னன்.

3. சூரியனும் சந்திரனும் ஒளியைத்தாங்க உதவிய அக்கினிகுலத்தோன்றல் ஆண்ட சிறப்பால், சூரியகுலம் சந்திரகுலம் இவற்றிலுதித்தவர்கள் ஆண்ட இரு நாட்டின் குருவாக விளங்கியது கொங்குநாடு.

பரிக்க - தாங்க. பருதி - சூரியன். கனல்புதல்வன் - அக்கினிகுலத்தோனாகிய சேரன். இருசுடர் - சூரிய சந்திரர்கள். அவர்கள் உயிர்த்தவர்கள் - அவர்களாற் பெறப்பட்ட சோழ பாண்டிய மன்னர்கள். குரு - வழிகாட்டும் ஆசாரியன்.

மலாடும்வளர் பாண்டியும் வழங்குபுன னாடு
நிலாவுதிறை யாகநிதி நிச்சமும் வழங்கி
விலாழிமத குஞ்சரமும் வெய்யபொருண் மற்றுங்
குலாவுசிறப் பெய்தியது கொங்குவள நாடு. 4

இலவிதழி பாகனி ழிழிந்தமலர்க் கைதை
கலவியது காரமிழ்து கான்றதொழி யாத
புலவுடைய தென்றுகடல் போக்கிநில மூன்றிற்
குலவிவள மெத்தியது கொங்குவள நாடு. 5

குறிஞ்சி

வேறு

கடலு வர்ப்பென நீக்கிய காமரிந் நாட்டின்
தடவு வண்மையை நோக்கியே சாகர முகந்த
படலை மென்முகில் பயிலுவர் முழுவது மகற்றிப்
புடவி யெங்கணும் பொழிந்துகண் படுப்பன வரைகள். 6

---

4. மலையமான் நாடும், பாண்டியநாடும், சோழநாடும் கப்பமாகப் பொருள்களை நிரம்ப தினமும் வழங்குவதால், யானை முதலிய எல்லாவற்றாலும் சிறந்து விளங்குவது கொங்குநாடு.

மலாடு-மலையமான் நாடு. மரூஉமொழி. புனல்நாடு-சோழமண்டலம், திறை-கப்பம். விலாழி - வாய்நுரைநீர். வெய்யபொருள் - விரும்பத்தக்க பொருள்கள்.

5. இறைவன் திருமுடியிலிருந்து நழுவிய தாழைகளையுடையதென்றும், கரிய நஞ்சையளித்ததென்றும் என்றும் புலால் நாறுவதென்றும் கடல் நிலமாகிய நெய்தல் நீங்க ஏனைய மூன்று நிலங்களாலும் அவற்றின் வளங்களாலும் விளங்குவது கொங்குநாடு.

இலவு இதழி - இலவம்பூப்போலும் சிவந்த உதடுகளையுடைய உமாதேவி. தாழை இறைவன் திருமுடியிலிருந்து நழுவி வரும்போது, முடிதேட அன்னமாகப் பறந்து சென்ற பிரமனுக்காக, 'பிரமன் முடியைக்கண்டான். அங்கிருந்து அடையாளமாக என்னைப் பெற்று வந்தான்' எனப் பொய்ச்சான்றுகூறிய இழிவுடையது என்பது குறிக்கப்பெறுகின்றது. கலவியது - கலந்தது. காரமிழ்து - கரிய நஞ்சு. கான்றது - கக்கியது.

6. கடல் உப்பானதென்று ஒதுக்கிய நாட்டின் வள்ளன்மையைக்கண்டு, கடல்நீரை முகந்த மேகம் உப்பைப்போக்கி, நல்ல நீரை உலகம் எங்கும் பொழிந்து, கண் உறங்குவதற்கு இடமாவனமலைகள்.

காமர் - அழகு. தடவு - பெருமை. சாகரம் - கடல். படலை - படர்ந்த, கூட்டமான; முகில் எனக் கூட்டுக. புடவி - பூமி. கண்படுப்பன - உறங்குவன. வரைகள் - மலைகள்.

கருவி நீண்முகிற் கஞ்சுகம் போர்த்ததன் மேலால்
குருதி மாமணிக் கொழுநிற வானவிற் பைம்பூண்
மருமம் வீழ்தரப் பூண்டுபன் மணிகொழித் திழியும்
அருவி யாரமு மணிந்ததா லருவரை யடுக்கம். 7

குழவி வாண்மதி தவழ்வது கோடெனத் தோன்ற
முழவ மாமழை முழக்கெழ முகத்துமின் னோடை
தழுவ மாலைவெள் ளருவியஞ் சலசல மதநீர்
ஒழுக வோங்கல்க ளரசுவா வெனச்சிறந் தனவால். 8

கழைநி வந்ததண் சாரலிற் களகள முழங்கும்
மழையை வேற்றுவா வரவென மதமலை யெதிர்ந்து
புழைநெ டுங்கர நீட்டவாய் முழையெனப் புகுந்த
தழைம மைக்குல நிமிர்வது தளைவிடு நாள்போல். 9

---

7. மலையடுக்குகள், மேகமாகிற சட்டையை அணிந்து, அதன்மேல் செம்மணிகளாலாகிய வானவில்போன்ற அணிகளை மார்பின்மேல் அணிந்து, முத்துக்களைக் கொழிக்கும் அருவிகளாகிற ஆரத்தையும் அணிந்தது.

கருவி - தொகுதி. கஞ்சுகம் - சட்டை. குருதிமாமணி - செம்மணி, மாணிக்கம். மருமம் - மார்பு. அருவி ஆரம் - அருவிகளாகிற முத்துமாலை. அடுக்கம் - ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கியுள்ள குன்றுகள்.

8. இளம் பிறை தவழ்வது யானையின் கொம்பெனத்தோன்றலாலும், மேகம் இடிப்பது யானையின்மேல் அடிக்கப்படுகின்ற முழவ ஒலியாகத் தோன்றலாலும், உச்சியிலே மின்னுவது யானையின் முகபடாம் எனத் தோன்றலாலும், மாலைமாலையாக அருவி விழுதல் சலசல என்றும் மதநீரொழுகுவது போலத் தோன்றலாலும், மலைகள் நடைமலைகளாகிய அரச யானைகளைப்போலச் சிறந்து விளங்கின.

குழவி வாண்மதி - பிறைச்சந்திரன். கோடு - கொம்பு. முழவம் - மத்தளம். ஓடை - முகபடாம். அரசுவா - பட்டத்தியானை.

9. மலைச்சாரலில் மழை முழக்கத்தைக்கேட்டு வேற்று யானை என்று எண்ணி, ஓர் மதயானை எதிர்த்துத துதிக்கையை நீட்டிப்பிடிக்க முயன்றபோது மேகம் அதன்வாயைக் குகை என்று எண்ணிப்புகுந்து வெளிவந்தது அது கூடல் நகரிலே மேகத்தைச் சிறைப்படுத்தி விடுதலைசெய்த நாளைப்போன்றது.

கழை - மூங்கில். நிவந்த - உயர்ந்த. உவா - யானை. மதமலை - யானை; வெளிப்படைச்சொல். புழை - தொளை. புழை நெடுங்கரம் - துதிக்கை. முழை - குகை. தழைமமழைக்குலம் - செறிந்த மேகக்கூட்டம். தளை - சிறை.

தண்ட மெண்ணில காட்டுவ தாழ்வரைக் குலமும்
தொண்ட கப்பறை முழக்குநர் துவன்றுசி றூரும்
கொண்ட சேவகங் காட்டுவ குலவரை முழையும்
மண்டு போர்பல வடுத்துழி மறவர்தம் புயமும். 10

சுடர்ம ணிக்குலந் துவன்றிய தடநெடுங் கோட்டுக்
கடகங் காட்டுவ கொடிச்சியர் கரங்களுங் காவும்
சுடர்ம ணிக்குலந் துவன்றிய தடநெடுங் கோட்டுக்
கடகங் காட்டுவ களித்தெழு களிறுங்கல் வரையும். 11

வேட்ட தற்பமே யாயினு மேவுமா முயல்வோர்
விட்டு வார்விழை யாதன மேன்மைய வேனுஞ்
சேட்டு மாமணி பொடிபடச் செந்தழல் விரைக்கா
னூட்டி னூர்தினை வித்தினு ருயர்மலை வாழ்நர். 12

---

10. தாழ்வரைகளின் கூட்டமும், தொண்டகப்பறை கொட்டும் மறவர்கள் நெருங்கிய சிற்றூரும் எண்ணற்ற தண்டங்களைக்காட்டுவன; கூட்டமான மலைக் குகைகளும், நெருங்கிய போர் பல வந்துற்றகாலை வீரர்கள்தம் தோள்களும் தாம் தாம் கொண்ட சேவகத்தைக் காட்டுவனவாம்.

தண்டம் - மூங்கில் அல்லது யானை செல்வழி; தண்டனை. தொண்டகம் - குறிஞ்சி நிலப்பறை. சேவகம் - யானை துயில்கொள்ளும் இடம்; வீரம்.

11. மலைநிலப்பெண்களாகிய குறத்தியர் கைகள் ஒளிவிடுகின்ற முத்துக்கள் நிறைந்த பெரிய நெடிய தந்தங்களாலாகிய வளையல்களைக்காட்டுவன. சோலைகள் ஒளி பொருந்திய மணிகளின் கூட்டம் செறிந்த பெரிய நீண்ட கொம்புகளை உடைய பூவாது காய்க்கும் மரங்களைக் காட்டுவன. மதங்கொண்டு களித்து எழும்புகின்ற ஆண்யானைகள், தம் கூட்டத்தைக் காட்டுவன. கல்லாகிய மலைகள் தம் பக்கங்களைக் காட்டுவன.

கடகம்-வளையல், பூவாதுகாய்க்கும் மரங்கள், யானைக்கூட்டம், மலைப்பக்கம்.

12. விரும்பியது மிக இழிந்த அற்பமான பொருளாயினும் அதனைப் பெற முயல்வோர் விரும்பப்பெறுதன மிக மிக மேலான பொருளாயினும் அதனை அழிப்பர். அதுபோல மலைவாழ் மக்கள் உயர்ந்த செம்மணிகள் துகளாக மணமுள்ள அகில் சந்தனம் முதலிய மரங்கள் செறிந்த காட்டைத் தீ மூட்டினார்கள்; தினையை விதைத்தார்கள்.

சேடு - பெருமை. விரைக்கான் - மணமுள்ளகாடு.

செய்ய கோலினர் திசைதொறுஞ் செலுத்துசக் கரத்தார்
வெய்ய தண்டமு முடையவர் வெல்பெருங் கதையார்
ஐய நாளறி கணியின ரசலமந் திரஞ்சூழ்
மெய்யர் யாவரும் வெற்பமர் வாழ்க்கையா டவரே. 13

முருந்து மூரலார் மொழியையு மியலையும் வேட்டு
வருந்து கிள்ளையு மஞ்ஞையும் வார்புனத் திதண்மேல்
இருந்து ளாரென வின்புறு மின்முகங் காணு
விருந்தி னுரென வெதும்புறும் விலகுகைக் கவணல். 14

கிழங்கு செந்தினை யைவனந் தோரைகேழ் மதுவூன்
பழங்க னற்பசி கெடுப்பன படிவன வருவி
முழங்கு தண்சுனை கண்படுப் பனமுதிர் மான்றோல்
தழங்கி ரும்புகழ்ப் பொருப்பினர் வாழ்க்கைதாழ் விலதே. 15

---

13. மலையின்கண் வாழுகின்ற குறவர்கள்அனைவரும் செங்கோலையுடையர்; (குருதிபடிந்து சிவந்த அம்பினையுடையவர்) எட்டுத் திசைகளிலும் செலுத்துகின்ற ஆஞ்ஞாசக்கரத்தை உடையவர்கள். (சக்கரப்படையை உடையவர்கள்) விரும்பத்தக்க தண்டாயுதத்தை உடையவர்கள். (தண்டனையை உடையவர்கள்) எல்லோரையும் வெல்லும் வரலாற்றுச் சிறப்பையுடையவர்கள் (கதாயுதத்தை உடையவர்கள்) நுணுக்கமாக நாள் கோள் முதலியவற்றை ஆராய்ந்து அறியும் சோதிடம் உடையவர்கள் (போருக்கும் தினைவிளைவுக்கும் உரிய நாளையறிவிக்கும் வேங்கையை உடையவர்கள்) அசைவின்றி மந்திராலோசனை செய்யும் உண்மை உடையார்; (மலைகளுக்குரிய மந்திரங்களைச் செபிக்கின்ற உண்மைத் தன்மை உடையார்) என வேடர்க்குரிய இயல்புகள் அரசர்க்கும் பொருந்த தொனிப் பொருள் தோன்ற இருத்தலை ஊன்றியுணர்க.

14. மயிலிறகின் அடிக்குருத்துப்போலும் பற்களையுடைய பெண்களின் மொழியையும், சாயலையும் விரும்பி அவற்றின் சிறப்புத் தமக்கு இன்மையால் வருந்துகின்ற கிளியும் மயிலும் பெண்கள், நீண்ட தினைப்புனத்தில் பரண்மேல் இருக்கின்றுர்கள் எனக்கண்டு இன்புறும். அவர்கள் கிளி முதலிய புட்களை யோட்ட வீசுகின்ற கைக்கவண்கல்லால் இனிய முகத்தைக்காணுத விருந்தினரைப் போல வருந்தும்.

முருந்து-மயிலிறகின் அடிக்குருத்து. மூரல்-பல். பல்லுக்கு மயிலிறகினடிக் குருத்து உவமம். கிளி மொழியை விரும்பியது. மயில் சாயலை விரும்பியதென்க. இயல் - சாயல். இதண் - பரண். இன்முகம் காணுவிருந்தினரென்ற பகுதி "முகந் திரிந்து நோக்கக் குழையும் விருந்து" என்ற குறட்கருத்தை அடியொற்றியது.

15. கிழங்கு, தேன், தினைமா, மலைநெல், துவரை, ஊன் இவையே குறவர் களின் பழமையான கனற்றுகின்ற பசியைக்கெடுக்கும் உணவுப்பொருள்களாம். அருவி நீரும் சுனை நீருமே அவர்கள் குளிக்கும் நீராம். முதிர்ந்த மான்தோலே அவர்கள் பாயலாம். இங்ஙனம் விளங்குகின்ற பெரிய புகழையுடைய குறவர் களின்வாழ்க்கை ஒன்றுலும் குறைவில்லாதது.

பிணிமு கத்தன புனங்களே பெரிதிரங் குவன
துணிபு னற்சுனைத் துடுமென விழுமரு விகளே
திணிப டும்வயி ரத்தன சிலம்புசூழ் தடமே
அணிப டுங்கொடுங் கோலின வழிமதக் களிறே. 16

பெரும்ப யத்தன பிரசம்வார் பொதும்பரே யல்ல
சுரும்பு முக்கமென் றேடவிழ் மலர்த்தடஞ் சுனையும்
கருங்க யத்தன கமழ்ந்தவச் சுனைகளே யல்ல
மருங்கு துன்றிய மழைதவழ் மணிவரைக் குலமும். 17

முல்லை

வேறு

அருவியம் புனங்களை யளிக்கு மேனலும்
இருவியு மாக்குந ரிருக்கை மால்வரை
மருவிய வுடையென மருங்கு வாங்கிய
திருவியல் கானகஞ் செல்வ மிக்கதே. 18

ஐவனம் - மலைநெல். தோரை - துவரை. தழங்கு - விளங்குகின்ற. பொருப்பினர் - குறவர்.

16. தினைப்புனங்களே மயில்களையுடையவை. துணிபட்ட நீரையுடைய சுனைகளும், திடுமென விழ்கின்ற அருவிகளுமே மிக ஒலிப்பன. மலைகளைச் சூழ்ந்த மரங்களே திணிந்த வயிரங்களையுடையவை. பிறவன்று என்பதாம். ஒழித்துக் காட்டணி.

பிணிமுகம் - நோயின் தொடக்கம். மயில் இரண்டற்கும் பொதுச்சொல். இரங்குவன - ஒலிப்பன, நோயால் மனம் உளைவன. வயிரம்-வயிரமணி; பகைமை. கொடுங்கோலின - வளைந்த கொம்புகளையுடையன. கொடுங்கோன்மையுடையன எனவே மக்கள் நோயையும், இரக்கத்தையும், பகைமையையும், கொடுங்கோன்மை யையும் உடையவர்கள் அல்லர் என்று உரைத்தவாறு.

17. மிகப் பெரிய பயத்தையுடையன தேன் சொரிகின்ற சோலைகளே யல்ல; வண்டுகள் கிண்ட அதனுல் மெல்லிய இதழ் விரிகின்ற பூக்களையுடைய நீர்ச்சுனைகளுமாம். கரிய கயத்தினையுடையன மணங்கமழ்ந்த அச்சுனைகள் மட்டு மல்ல; பக்கங்களில் நெருங்கிய மேகங்கள் தவழ்கிற கரிய மலைக் கூட்டங்களுமாம்.

பயத்தன - அச்சத்தைச் செய்வன; நீரையுடையன. கயத்தன - ஆழமான நீர்நிலைகளையுடையன; யானைக்கூட்டங்களையுடையன என இருமருங்கும் பொருள் கொள்க.

பிரசம் - தேன். பொதும்பர் - சோலை.

18. அருவிகள் வழிகின்ற அழகிய புனங்களைக்காக்கும் தினையையும், தட்டைகளையும் வளர்க்கும் குறவர் வாழிடங்களாகிய மலையைச் சுற்றியுள்ள

புல்லமாய்ப் புரமடு மிறையைத் தாங்கினோன்
புல்லமார் நிரைகளைப் புரக்க முன்னுவோன்
புல்லமா யிருந்ததிப் புடவி யென்றுபல்
புல்லமார் நிரையெலாம் புணர்ந்த செவ்வித்தே. 19

மந்திர வலியினுன் வளைத்துக் கட்டிய
வெந்திற லுழுவையின் வெடிகொ ளோதையும்
சுந்தர மகளிர்கள் துவன்றி மத்தெறி
பைந்தயி ரோதையும் பகுக்கொ ணாதரோ. 20

தொறுவியர் கற்பினுன் மிகுந்த தோற்றத்தை
நிறுவிய தென்பவே நிலத்தின் மங்கையர்
மறுவில்கற் புடையராய் வார்கு ழற்பெயும்
நறுவிரை முல்லையி னகைத்த கானமே. 21

பக்கங்களில் வளைந்து கிடக்கின்ற திருமகளுலவும் காடு ஆடையெனச் செல்வத்தால் மிக்கு விளங்கிற்று.

இருவி - தட்டை. வாங்கிய - வளைந்து சுற்றிக்கிடக்கின்ற.

19. காளையாகி, முப்புரம் எரித்த இறைவனைச் சுமந்த திருமால், புற்களை உணவாக உட்கொள்ளுகின்ற பசுக்கூட்டங்களைப் பாதுகாக்க முந்துகின்றோன் ஆயினன். இப்பூமியே பசுவடிவில் இருந்ததென்னும்படியாகப் பல பசுக்கூட்டங்கள் கூடிய அழகினையுடையது.

புல்லம் - காளை; மால் விடையாக இறைவனைத் தாங்கியதைக் குறிப்பது. புல் - பசும்புல். அம்-சாரியை. புடவி - பூமி. புல்லம் - பசு. பூமி வேனன் என்னும் அரசன் ஆட்சிக்காலத்தில் கொடுங்கோன்மைக்குப் பயந்து பசு வடிவெடுத்து மேருமலைச் சாரலில் ஓடியதாக, அரசன் அதனைப் பிடித்துக்கட்டி, இமயமலையைக் கன்றாக்கி ஓஷதிகளையும் பயிர் வளத்தையும் பாலாகக்கறந்தான் என்பது அக்கினி புராண வரலாறு. பல் புல் அம் ஆர் நிரை - பலவகையான புல்லுணவைக் கொள்ளும் பசுக்கூட்டங்கள். காளைகளையுடைய பசுநிரை எனலுமாம்.

20. மந்திரபலத்தால் வளைத்துக்கட்டிய கொடிய வலியபுலிகளின் உறுமலொலியும், அழகிய இடைச்சியர் கூடி மத்தால் கடையும் தயிரோதையும் பிரித்து உணரமுடியாதன.

உழுவை - புலி. புலிகளைவாய்க்கட்டு மந்திரத்தால் இடையர்கள் தம் நிரைக்கு இடையூறில்லாதிருக்கக் கட்டுவதியல்பு.

21. பூமி எங்கும் உள்ள மங்கையர் குற்றமற்ற கற்புடையராய் நீண்ட கூந்தலிற்சூடிய நன்மணங்கமழும் முல்லைப்பூக்கள் மலர்ந்தகாடு இடைப்பெண்கள் கற்பிற்சிறந்தவர்கள் என்ற தோற்றத்தை நிலைநாட்டுவன என்பர்.

ஏற்றினு விரலையா லிதழி யாத்தியும்
தோற்றலான் மாலொரு பாலிற் றுன்னலால்
ஆற்றநற் பான்முத லைந்து மாடலால்
நீற்றினன் திருவுரு நிகர்க்குங் கானகம். 22

பெருகிய பாற்கடற் பள்ளி பெற்றவன்
பருகிய வமுதினுன் பானெய் பற்றுமிக்(கு)
உருகிய காதலிற் கரந்துண் டானெனின்
வெருகுமங் குயர் ந்தன விழுப்ப வுண்டியால். 23

வேய்மணிக் குழலினும் வெய்ய மாலையில்
தாய்மணிக் குரையினுந் தழைக்குங் கன்றுதேர்
வாய்மணிக் குரையினும் வழங்கு தூதினும்
ஆய்மணி யனையவ ரகந்த ழைப்பரே. 24

சயமுறு தன்னில வரகுஞ் சாமையும்
வயல்வளர் செந்நெலும் வணங்க மிக்குறு
பயனொடு தலைநிமிர் பரிசு பெற்றன
வியலுறு மிறுங்குகம் பாதி யெங்கணும். 25

கற்புடைமைக்கு அடையாளமாக முல்லைப்பூச்சூடுதல் மரபு. ஆதலின்; உலக மகளிர்கள் தாம் கற்புடையர் என்பதைக் காட்டச்சூடும் முல்லைப்பூக்கள் மலர்ந்த முல்லைநிலமே இடைச்சியர் கற்பை நிலைநாட்டுவன என்பதாம்.

22. இடபத்தை உடைமையாலும், மானையுடைமையாலும், கொன்றை ஆத்தி மலர்களோடு தோன்றுதலானும், ஒருபக்கம் திருமால் பொருந்துவதாலும், மிகுந்த பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்ற பஞ்சகவ்யம் ஆடுதலாலும் திருநீறணிந்த சிவபெருமான் திருமேனியை ஒத்திருக்கும் முல்லைநிலம்.

23. பாற்கடலிற் பள்ளிகொள்ளும் அமுதம் உண்ட திருமாலே பால் நெய் முதலியவற்றை ஆசைமிகுதியால் திருடி உண்டான் எனில், மிக உண்டமையால் பூனையும் அங்கு உயர்ந்துள்ளன. வெருகு - பூனை.

24. நிலமணிபோலும் கரிய ஆயர் மகளிர்கள், புல்லாங்குழலின் அழகிய ஓசையாலும், விரும்பத்தக்க மாலைப்பொழுதில் தாய்ப்பசுவின் கழுத்திற்கட்டியுள்ள மணிகளின் ஓசையாலும், கொழுத்த கன்றுகள் தம் தாயைத் தேடிக் கத்துகிற வாயிலிருந்து உண்டான அழகிய ஓசையாலும், தம் ஊடலைத் தணிக்கத் தம் கணவர்கள் அனுப்புந் தூதின் ஒலியாலும் மனமகிழ்வர்.

25. வெற்றி பொருந்திய தன்னிலமாகிய முல்லை நிலத்திற்குரிய வரகும், சாமையும், வயலிலே வளரும் செந்நெல்லும் தலைவணங்க, மிக்க விளைவோடு தலைநிமிர்ந்து நிற்கும் தன்மையைப்பெற்ற அகன்ற சோளமும் கம்பும் முதலான தானியங்கள் எங்கும் உள்ளன.

காணமுந் திலமுநற் கடலைச் செல்வமும்
தூணுற ழுரையின துவரைக் கானமும்
மாணுறு மவரையும் பயறு மற்றவும்
பேணிந ரையுறப் பெருக்கஞ் சான்றவே. 26

விடுத்தவல் லேற்றினை விரகிற் பற்றினோர்க்(கு)
அடுத்தன எளிதினல் லணங்க ளுர்வடந்
தொடுத்தகுஞ் சரங்களுந் துளங்கு சிங்கமும்
கடுத்தவழ் கூற்றமுங் கைக்க டங்கியே. 27

கோலொடுங் கயிற்றொடுங் குழலொ டும்பசுக்
காலொடும் பழகுவ பொதுவர் கைத்தலம்
பாலொடுந் தயிரொடும் நெய்யொடும் பைம்பொற்
சாலொடும் பழகுவ தைய லார்கரம். 28

கதிர்முற்றினல் வரகும், சாமையும், செந்நெல்லும் தலைவணங்கி நிற்கும். முற்றினலும் நிமிர்ந்து நிற்பவை சோளமும் கம்பும் ஆதலின் இவ்வண்ணம் கற்பனை செய்தார். வியல் - பரப்பு, அகற்சி.

26. காணம் என்னும் கொள்ளும், எள்ளும், கடலையாகிற செல்வமும், தூண்களை ஒத்த அடித்தண்டினையுடைய துவரைக்காடும், மாட்சிமிக்க அவரையும் பயறு வகைகளும் ஏனையவும் அவற்றை வளர்த்தவர்களும் அப்பா! எவ்வளவு விளைந்துள்ளது என்று ஐயப்படும்படி பெருக்கம் நிறைந்தன.

பயிரிடுவார் எவ்வளவு விளையினும் சென்ற வருஷத்திற்கு இவ்வாண்டு விளைவு குறைவு என்றே சொல்லுமியல்பினர். அவர்களும் அமோகமான விளைச்சல் என்னும்படி விளைந்தன என்பதாம்.

27. திடலில்விட்ட வலிய காளையைத் தந்திரமாகத் தழுவிப்பற்றின இளைஞர்கள் கைக்கு அடங்கி எளிமையாகக்கிடப்பவை கன்னிகளின் முத்துவடம் அணிந்த கொங்கைகளாகிற யானைகளும், அசைந்தாடுகின்ற இடையாகிற சிங்கமும், கண்களாகிற விடம் தவழும் எமனும் ஆம்.

28. இடையர்களின் கைகள் மாடோட்டுங் கோலொடும், கயிற்றோடும், புல்லாங்குழலோடும், பசுக்களின் காலோடும் இடைவிடாது பழகுவனவாம். இடைச்சியர்கைகள் பாலோடும், தயிரோடும், நெய்யோடும், பசிய பொன்னிரைத்த சால்களோடும் பழகுவனவாம்.

மருதம்

அந்தினுந் தெய்வ தமருந் தவத்தினல்
உந்தியி னெருமல ருயிர்த்த தாமென
நந்துயிர் முத்தி னகைக்கும் பங்கயச்
சுந்தரப் பணைவனத் தருகு சூழ்ந்தவே. 29

வேறு

ஒன்றுக ணரனுக் கிந்திட் டுவணத்தோன் கமலக் கண்ணன்
என்றுல கிசைப்பப் பெற்றான் இத்தகு பதுமஞ் சாலத்
துன்றுநம் மிறைவ னோடு சோர்வற்க என்று மேகம்
நன்றுறை சிதறித் துஞ்சும் நனைமலர்க் காவு தோறும். 30

குழையொடு தோடு நாலக் கொடியிடை துடங்கக் கொங்கை
விழைதகக் காட்டிப் புள்ளின் வியத்தகு குரல்க டோற்றி
மழைமுகிற் கூந்தல் சோர மருங்குகண் மலர்கள் சேர்த்தித்
தழைமதுத் தெவிட்டிக் காமத் தையலர் புரையுஞ் சோலை. 31

---

29. தெய்வத்தைக் குறித்துச்செய்யும் அரியதவத்தால் கிணற்றில் தாமரை மலர் தோற்றியதைப்போலவும், உந்தியிலிருந்து ஒருமலர் தோன்றியதுபோலவும் சங்கீன்ற முத்தால் விளங்கும் தாமரையையுடைய அழகிய வயலாகிய மருதநிலம் முல்லைநிலத்தைச் சுற்றியுள்ளன.

தாமரை - கிணற்றிற்கும், உந்திக்கும் உவமை. முத்து அவற்றுள்தோன்றிய மலருக்கு உவமை. அந்து - கிணறு. நந்து - சங்கு. பணை - வயல்.

30. கருடவாகனத்தையுடைய திருமால் சிவபெருமானுக்கு ஒருகண் மலரைச் சாத்திய அதன்பயனால் உலகம் கமலக்கண்ணன் என்று புகழநின்றான். இவ்வளவு சிறந்த தாமரைப்பூக்களை உடல் முழுதும் பெற்ற நம் தலைவனாகிய இந்திரனோடு சோர்விலாது பொருந்துக என்று சுனைகளில் மலர்கள் நிறைந்த சோலைகள் தோறும் மேகங்கள் நன்றாகத்துளிகளைத் தூவிப்படிந்து கிடக்கும்.

உவணம் - கருடன். இந்திரன் ஆயிரங் கண்ணன் ஆதலின் பதுமஞ் சாலத்துன்றும் நம்மிறைவன் என்றுமேகம் கருதுவதாகக் கூறினர் என்க. உறை-நீர்த்துளி. காவுதோறும் மேகம் துஞ்சும் எனமுடிக்க.

31. குழையும் தோடுமாகிய காதணிகள் தொங்க. கொடிபோன்ற இடை அசைந்தாட, ஆடவர் விரும்பும் வண்ணம் கொங்கைகளைக்காட்டி, அன்னம் முதலிய பறவைகளின் வியக்கத்தக்க குரல்களைத் தோற்றுவித்து. மழைபொழியுங் கருமேகம்போன்ற கூந்தல் அவிழ்ந்துசோர, பக்கங்களில் கண்களாகிற மலர்களைப் பரப்பி; முற்றிய மதுவைத்தெவிட்டவுண்டு, காமமிக்க பெண்களைத் தளிர், மலரிதழ் இவைகள் தொங்க, கொடிகள் இடங்கள்தோறும் அசைந்தாட. விரும்பும் வண்ணம் மகரந்தப்பொடிகளைத் தோற்றுவித்து, பலவகையான பறவைகளின்

சிலம்புகா லணிந்து பாணி செறிந்தகற் கடகந் தோற்றி
வலம்புரி யுந்தி தாழ்ந்து மணிநிழற் காஞ்சி சூழ்ந்து
நலம்புரி யலர்க டோன்ற நாயகன் விழையத் துள்ளிப்
புலம்புகுத் தன்பின் மாதர் போன்றன வேரி யெல்லாம். 32

சுரும்பொடு ஞிமிறுந் தேனுந் தும்பியும் பாண ராக
அரும்பவிழ் கமல மெல்லாம் அரியலார் வள்ள மாக
விரும்பிய விலைமூ தாட்டி யாயின விலக லின்றி
இரும்புனற் றடங்க டோறு மிடையிடை விராய வன்னம். 33

முள்ளரைக் கமல மேய மூரியம் புனிற்றுக் காரான்
உள்ளூறத் தவழ்ந்து கோட்டி னுழிந்துநீர் குறைந்த பொய்கை
துள்ளுமீன் செருத்தன் முட்டத் துணைந்தவை பெயர்ந்து கொட்டுந்
தெள்ளிய நறும்பால் பாய்ந்து குறைவறத் தேக்கு மன்றே. 34

குரல்களைச் சார்ந்து, மகளிர் கூந்தலை ஒத்த மேகங்கள் சோர, கள்ளையுடைய பூக்களைச் சேர்ந்து, தேனைப்பெருக்கிய சோலை ஒத்தது என்க.

மகளிரின் வகைக்கும், புணர்ச்சி முதலிய செயல்கட்கும் ஏற்பப் பலவகையான பறவை ஒலிபோன்ற ஒலிகள் அவர்களிடத்தும் உண்டாம் ஆதலின் மகளிர்க்குச் சோலை உவமிக்கப்பெற்றது.

32. ஒலிக்கின்ற கால்வாய்களை நிரலே அணிந்து, நீரில் நெருங்கியுள்ள நண்டுகளைத்தோற்றி, வலம் புரிச்சங்குபோல நீர்ச்சுழிகள் தாழப்பெற்று, கரிய நிழலையுடைய காஞ்சி மரங்களாற் சூழப்பெற்று, நன்மையைச் செய்கின்ற தாமரை முதலிய நீர்ப்பூக்கள் தோன்றப்பூத்து, உடையவன் விரும்ப, துள்ளிக்கொண்டு, வயல்களில் நீரைப்பெருக்கிய ஏரிகள் அனைத்தும், காலிற் சிலம்பணிந்து, கைகளில் கல்லிழைத்த வளையல்களை தோன்றவணிந்து, வலம்புரிச் சங்குபோலும் கொப்பூழ் ஆழமாகப்பெற்று, மாணிக்க ஒளி வீசும் மேகலைகளை அணிந்து நன்மையைச் செய்கின்ற பூக்கள் சூழத்தோன்ற, தத்தம் கணவன்மார் விரும்பத், துள்ளிக்கொண்டு, அவர்கள் அறிவில் தம்மைப்புகச் செய்யும் அன்பினையுடைய மாதர்களைப் போன்றன.

33. சுரும்பு, ஞிமிறு, தேன், தும்பி என்ற நால்வகைச் சாதி வண்டுகளும் பாணர்களாக, அரும்பாயிருந்து மலர்ந்த தாமரையனைத்தும் தேன்பொருந்திய கிண்ணங்களாக, மிகுந்த நீரையுடைய தடாகங்கள் தோறும் இடையிடையே விலகலின்றிக் கலந்திருக்கின்ற அன்னங்கள், விரும்புகின்ற கள்விற்கும் மூதாட்டியாயின.

வண்டுகள் - கள்ளருந்தும் பாணர்கள். தாமரை - கிண்ணம். அன்னம் - விற்கும் பெண் ஆயின என்க.

34. முள்ளோடு கூடிய தண்டினையுடைய தாமரைக் காட்டில் புகுந்த வலிய - அழகிய - ஈன்ற அணிமையான எருமை நீருள் நன்முக நடந்துசென்று,

வள்ளையுங் குவளைப் போதும் மயங்கிமேய் செங்கட் காரான்
நள்ளுறச் சொரிந்த தீம்பால் நசையின்வாய் மடுத்துங் கஞ்சப்
பள்ளியிற் பயின்று மாதர் படர்தொறு நடைகள் கற்றும்
ஒள்ளிய தெய்வ நாட்டை மறந்தன ஓதி மங்கள். 35

பாவிரி புலவர் சாவாப் புலவரும் பழிச்சுந் தெய்வக்
காவிரி பவானி யாம்ப ராவதி கங்கை யென்னப்
பூவிரி காஞ்சி மாற்றும் பொங்கிவெண் டிரைகள் விசித்
தாவிரி பழன மோம்பத் தலைத்தலை பரந்த மாதோ. 36

வரைவிழி யருவி யென்ன மணிகொழி கலுழி யென்ன
விரைதரு நதிக ளென்ன வியத்தகு நீத்த மொன்றே
பரைதனக் குரிய கேள்வன் படைத்தளித் தழிப்போர் பானின்(று)
உரைதரு மூவ ரென்னப் படுவதொத் துரைவே றெய்தும். 37

கொம்புகளால் நிரை அடிக்க, அதனுல் நீர் நீங்கிக் குறைந்த பொய்கையானது, துள்ளுகின்ற மீன் மடியில்முட்ட அதனுல் விரைந்து, பொழிந்த தெளிவான நல்ல பால் பாய்ந்து குறைவு நீங்கி நிறையும் என்பதாம்.

முள் அரி - முளரி என்பது எதுகைநோக்கி முள்ளரியாயிற்று. முள்ளினை யுடைய தண்டுடன்கூடிய தாமரை. 'முள்தாள் தாமரை' என்பதும் அது. மூரி - வலிமை. புனிறு - கன்றின்ற அணிமை. காரான் - எருமை. கோட்டின் - கொம் பால் நீர் ஒழிந்து குறைந்த பொய்கை என மாறுக. செருத்தல் - மடி.

35. அன்னங்கள், வள்ளைக்கொடியையும் செங்குவளைப்பூக்களையும் கலந்து உண்கின்ற சிவந்த கண்ணையும் கரிய நிறத்தினையும் உடைய எருமை நிரம்பச் சொரிந்த இனியபாலை விருப்பொடு குடித்து, தாமரைப்பூவாகிற படுக்கையில் துயின்று, பெண்கள் செல்லுமிடந்தோறும் அவர்கள் நடைகளைப் பழகி, ஒளி மயமான தேவநாட்டையே மறந்துவிட்டன. ஓதிமம் - அன்னம்.

36. பாக்களை விரித்துரைக்கும் புலவர்களும், மரணமில்லாத புலவர் களாகிய தேவர்களும் துதிக்கும் தெய்வத்தன்மை பொருந்திய காவிரி எனவும் பவானி எனவும் ஆமிராவதி எனவும், கங்கை எனவும், பூக்கள் விரிந்த காஞ்சி என்றும் கூறப்படும் நதிகளும் பிறவும் பெருகி வெண்மையான அலைகளை வீசிக் கொண்டு கேடு நீங்கிய வயல்களைப் பாதுகாக்க பல இடங்களிலும் பரவின.

பாவிரிபுலவர் - கவிஞர். சாவாப்புலவர் - தேவர்கள். தா - அழிவு. இரி - நீங்கிய.

37. மலையிலிருந்து இறங்கும் அருவிகள் எனவும், முத்துக்களைக் கொண்டு வந்து கரைகளிற்கொழிக்கும் ஆறுகள் எனவும், மணங்களைச் சுமந்துவரும் அல்லது வேகமாகவரும் நதிகள் எனவும் வியக்கத்தக்க நீர் ஒன்றுமே பரையின் கணவனுகிய பரசிவம் முத்தொழிலையும் செய்கின்றவர்கள்பால் நின்று மூவ ரென்று சொல்லப்படுவதைப்போல வேறுவேறு பெயர் எய்தும்.

மலைபடு வயிரஞ் செம்பொன் மருப்புநித் திலஞ்சந் தாதி
அலையினிற் கவர்ந்து கொல்லை யாயர்தம் புறங்கண் டன்னோர்
விலையிழு தமுதந் துய்த்து மேற்செலப் பழன மள்ளர்
குலைதொறும் பறைக ளார்ப்பக் கொம்மென வெதிர்சென் றூரால். 38

மணித்தலைப் பாப்புக் கூட்டம் வைகிய நாக நாடிங்(கு)
அணித்தென வுடைப்பிற் றாழ்ந்த வவலெலா மலையின் பக்கந்
துணித்தவன் காவல் பூண்ட சோதிசூழ் நாக நாடுந்
தணித்தன மென்னத் தூர்த்துத் தடாயவன் குலைகள் செய்தார். 39

விலைமட மாதர் நெஞ்சின் வீற்றுவீற் றுடைப்பிற் சென்ற
அலைநெடும் புனல்கண் முற்றும் அகத்துற மறுத்த லோடுங்
குலைகளு ளடங்கி நல்ல குலம்வரு தெய்வக் கற்பின்
தலைவளர் மாதர் நெஞ்சி னொழுகின தடங்கால் தோறும். 40

கதுப்பிளந் தோகை நல்லார் கண்ணெனக் கயல்கள் பாய
மதுப்புனற் கமலம் பூத்த வளநெடு வயல்க ளெல்லாம்
புதுப்புனல் பாய வோகை பொங்கிய கருங்கை மள்ளர்
வெதுப்புறும் அரிய லார்ந்து வினைத்திறத் தூக்க மிக்கார். 41

---

38. மலைகளில் உண்டான வயிரமும், செம்பொன்னும், யானைக்கொம்புகளும், முத்துக்களும், சந்தனமும் முதலானபொருள்களை அலைகளில் அடித்துக் கொண்டுவந்து, முல்லை நிலத்திலுள்ள இடையர்களைப் புறங்கண்டு, அவர்களின் விலை உயர்ந்த பொருளாகிய வெண்ணெய் பால் இவைகளை உண்டு, மேலே பெருக்கெடுத்துவர, வயல்களில் உள்ள உழவர்கள், கரைகள்தோறும் நின்று பறைகள்கொட்ட விரைந்து எதிர்சென்றனர்.

39. நாகரத்தினங்களைத் தலையிற்கொண்ட பாம்புக்கூட்டங்கள் நாமும் 'நாகலோகம் இங்கிருந்து மிக அணிமையிலுள்ளது' என்னும்படி உடைப்பால் ஆழமான பள்ளங்கள் அனைத்தையும், மலைகளின் சிறகை அரிந்த இந்திரன் காவல்புரியும் ஒளிபொருந்திய தேவருலகத்தையும் கீழே வரச்செய்தோம் என்னும்படித் தூர்த்து, விசாலமான வலியசெய்கரைகளை அமைத்தனர்.

நாகலோகம் கீழே அணிமையிலுள்ளது என்பது போக - மேல் உள்ள தேவர் உலகம் கீழே வந்துவிட்டது என்னும்படிப் பள்ளத்தையும் தூர்த்து உயரமாகச் செய்கரை அமைத்தனர் என்பதாம்.

40. விலைமாதர் உள்ளம் போல வேறு வேருக உடைப்பில் போன வெள்ளத்தை உள்ளே அடங்கத்தடுத்தவுடன் அது கரைக்குள் அடங்கித் தெய்வக் கற்புடைய குலமாதர் உள்ளம்போலக் குளங்களிலும் வாய்க்கால்களிலும் ஓடின.

41. பெண்களின் கண்களைப் போலக் கயல்கள் பாயத் தாமரை பூத்த வயல்களிலெல்லாம் புதுநீர் பாய, மகிழ்ச்சி பொங்கிய மள்ளர்கள் கள்ளைக்குடித்து உழவுத்தொழிலில் ஊக்கமிகுந்தனர்.

வேறு

சீர்த்த வித்தொழி லாளர்க்குத் தென்றிசைப்
பார்த்தி வன்விரை யாக்கலி பாறுமென்(று)
ஓர்த்து ளங்கொள வன்னவ னூர்தியைக்
கார்த்த டங்கையி னுருழக் கட்டினர். 42

கமலக் கணணன்முன் ரேன்றிய காளைகை
யமருக் கேற்றவ லப்படை நம்மிரு
சமரக் கால்வழிச் சாருவ தாமெனத்
திமிரப் பூணிகள் செல்வ தருக்கியே. 43

வெள்ளை கைப்படை விற்றுற நந்தகோன்
பிள்ளை நீருட் பிறந்ததோற் றத்தினுள்
துள்ளு மொன்று துணைந்திரிந் தோடுமென்
றள்ள லுட்படிந் தாங்கலைப் புண்ணுமே. 44

கதுப்பு - கூந்தல். தோகை நல்லார் - மயில்போலும் சாயலையுடைய மகளிர். கருங்கை - வலியகை. வெதுப்புஉறு அரியல் - வெப்பமிக்க கள்.

42. யமன் சிவபெருமானை முன்வைத்து உழவர்க்குச் செய்த சபதம் சிதறும் என்று, ஆய்ந்து, அவன் வாகனத்தை உழுவதற்குக் கட்டினுர்கள்.

விரையாக்கலி - சிவபெருமான் முன்னிலையிற்செய்த சபதம். ஊர்தி - எருமை. கார் தடம் கையனுர் - கரிய விசாலமான கையையுடைய உழவர்கள்.

43. பலராமனுடைய கையிலே உள்ள போர்ப்படையான உழுகலப்பை, நம்முடைய இரண்டுகாலின் பின் வருவதாம் எனக் காளைகள் செருக்கிச்செல்வனவாம்.

கமலக்கண்ணன் - தாமரைபோன்ற கண்களையுடைய கண்ணபிரான். அவன் முன்தோன்றியகாளை - பலராமன். அமருக்கு ஏற்ற-போருக்கு இயைந்த. அலப்படை - கலப்பை. சமரக்கால்வழி - வாலின் குஞ்சம் தொங்குகின்றகாலின் பின். திமிரம் - இருள். திமிரப்பூணி - கரிய எருமைகள்; கருங்காளைகளுமாம்.

44. பலராமனுடைய கைப்படையாகிய கலப்பை பெருமையோடு உழ, நந்தகோன் மகனுகிய திருமால் நீருள் தோன்றிய காலத்து உருவாகிய கயல்மீன்களில் ஒன்று துள்ளும்; ஒன்று விரைந்து தப்பியோடும்; ஒன்று சேற்றிலமுந்தி மறையும். இங்ஙனம் அலைக்கப்படும்.

வெள்ளை - பலராமன். நந்தகோன் பிள்ளை - கண்ணன். நீரிற்பிறந்த தோற்றம் - மச்சாவதாரம் எடுத்த உரு. துணைந்து - விரைந்து. அள்ளல் - சேறு.

ஏத மென்றறி யாதய லாரிடங்
காத லிற்கவர்ந் தார்முகங் காட்டிய
சீத வம்புயந் தேனொடுந் தாழ்வன
நீதி மன்முனவ் வானனம் நின்றென. 45

நாய கன்கை நகம்படு மூற்றினால்
சாயன் மெல்லிய லார்கட ழைப்பபோல்
தேய லப்படை சென்றுறு மூற்றினால்
பாய பண்ணை பயப்பட நின்றவே. 46

மெய்யி னூறு வெளிப்பட நாணிய
மையன் மாதர் மறைத்தவெண் டுசெனத்
தைய சால்கள் தமைமறைத் திட்டதாற்
கையி னாற்றுநர் பாய்த்திய காமர் நீர். 47

நாவ லங்கனி நேர்நறுஞ் சாற்றினை
மாவ லங்கொளு மள்ளர் மரம்படுத்(து)
ஆவ லங்கொட்ட ஆற்றுக்கா லாட்டியர்
மேவ லங்கிய வெண்முளை வித்தினார். 48

---

45. துன்பம் வரும் என்றறியாமல் அயலாடவரிடம் காதலிற் கவரப்பட்ட மாதரின் முகத்தைக்காட்டிய தாமரை, தேனொடு கவிழ்ந்துநிற்பன நீதிசெலுத்தும் அரசன்முன் அம்மாதர்கள் முகம் நிற்பதுபோல ஆம்.

மன் - மன்னன்.

46. கணவன் செய்த நகக்குறியால் மாதர்கள் மகிழ்வதுபோலத் தேய்ந்த கலப்பையுழுத உழுசாலின் வழியே வயல் பயன்பட (நீர்புக) நின்றது.

ஊறு - புண், உழுசால். பாயபண்ணை - பரந்தவயல். பயப்பட - பயன்பட, நீர்புக.

47. உடம்பிற்பட்ட புண்கள் வெளிப்பட, அதற்கு வெட்கப்பட்ட பெண்கள் தம்மை மறைத்துக்கொண்ட வெள்ளிய ஆடைபோல, உழுசால்களை உழவர்கள் கையால் பாய்ச்சிய நீர் மறைத்தது.

தூசு - ஆடை. தைய - தைத்த, அதாவது கிழித்த. கையின் ஆற்றுநர் - கையால் தொழில் செய்வாராகிய உழவர்கள். காமர் நீர் - அழகிய நீர்.

48. நாவற்பழம்போலக் கறுத்த சேற்றை மள்ளர் பரம்படித்தபின், உழத்தியர் வெண்மையான நெல்முளைகளை விதைத்தார்கள்.

மா வலங்கொளும் மள்ளர் - மிக்க வலிமைகொண்ட உழவர்கள். மரம் - பரம்படிக்கும் பலகை. ஆவலங்கொட்ட - குலவையிட. ஆற்றுக்காலாட்டியர் - உழத்தியர். மே அலங்கிய - மேலே விளங்கிய வெண்முளை என்க.

சேறு செய்குந ரோர்புறஞ் சேற்றிடை
விறு வெண்முளை வித்துந ரோர்புறம்
நாறு வாங்கி நடுகுந ரோர்புறம்
வேறு வேறு வினைத்திற மிக்கதே. 49

ஏரி னுஞ்சிறப் பென்றெருப் பெய்தபின்
சீரி தென்று களையடச் செப்பினர்
நீரி னுஞ்சிறப் பாநெடுங் காவலென்(று)
ஆரி னுஞ்சிறப் பெய்தவ ளிப்பவர். 50

வேறு

கருங்களமர் களையென்னச் செங்கயற்கட் கடைசியர்கள்
மருங்குநெடுங் கொடிநுடங்க வளர்தானை மீச்செல்ல
நெருங்கியகை வளையொலிப்ப நிகரிறம தவயவத்துக்(கு)
ஒருங்கிகலும் பகைமுடிப்ப வொளிர்நறும்பூம் பணையடுத்தார். 51

செய்யவாய்க் கருங்கயற்கண் வெண்முறுவற் பைந்தொடிக்கைப்
பையரா வகலல்குற் காரன்னம் படர்தலொடும்
உய்யலாந் திசையாதென் றுய்யான மருங்கடுத்த
வெய்யபூம் பணைக்கமலம் விரவியவெள் ளோதிமங்கள். 52

---

49. சேறு செய்வார் ஒருபுறம்; சேற்றில் விதைப்பார் ஒருபுறம்; நாற்றுப் பிடுங்கி நடுவார் ஓர்புறம்; இவ்வாறு மருதம் வேறு வேறு தொழிற்சிறப்பால் விளங்கிற்று.

50. 'ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின், நீரினும் நன்றதன் காப்பு' என்ற குறள் கருத்து முழுதும் அமைந்திருத்தல் காண்க.

51. "போரெனிற்புகலும் பொருகழன் மறவரைப்போல" செங்கயன்மீன் போலும் கண்களையுடைய உழத்தியர்கள் உழவர்கள் களை என்று சொன்னவுடன், இடையாகிய கொடியசைய, அதில் வளர்கின்ற முன்தானை மேலே பறக்க, கையிலேயுள்ள சங்கவளை ஒலிப்ப, ஒப்பற்ற தங்கள் அவயவங்களுக்கு மாறுபட்ட பகையை ஒழித்துக்கட்டுவோம் என்று வயலில் இறங்கினர்கள்.

களை என்ன - இதுவரை தம் பகையை அழிக்கக் காலம் பார்த்திருந்தவர்கள் இப்போது உழவர்கள் களை என்று சொன்ன அளவிலேயே. கொடியசைய, படைமேற்செல்ல, சங்கம் முழங்க, முதலியன போர்மேற்செல்வார் செய்யும் குறிகளாகவும் தொனிக்கப் பொதுச்சொல்லாற் புகன்றவாறு. தானை - ஆடை, சேனை.

52. வயல்களில் தாமரையில் வாழ்ந்த வெள்ளன்னங்கள், சிவந்த வாயையும் கரிய கண்களையும் வெண்மையான பற்களையும், பசிய வளையணிந்த கைகளையும், பாம்பின் படம்போன்ற அல்குலையும் உடைய கரிய அன்னம்போன்ற

மழைகாட்டும் விழிகாட்டும் மலர்க்குவளை மகரவாய்க்
குழைகாட்டுஞ் செவிகாட்டுங் கொடிவள்ளை துவர்ச்செவ்வாய்
கழைகாட்டு முகங்கரங்கால் கமழுந்தி முலைகாட்டிப்
பிழைகாட்டு நனியென்னுப் பெரிதுமடர்த் தார்கமலம். 53

கனிச்சந்த வாய்நிகர்த்த கயிரவத்தின் றவம்பாரார்
அனிச்சந்த மடிநிகர்த்த வருந்தவத்தின் றிறம்பாரார்
இனிச்சந்த மிலையென்ன விறுத்திறுத்துத் திடர்செய்தார்
பனிச்சந்த வனமுலையார் பகைத்தவம்பார்த் தொழிப்பவரார். 54

பஞ்சாயு மிளமுருந்து பனிநகையி னுயிர்ப்பதென
எஞ்சாது பறித்தெறிந்தா ரேனையவும் பறித்தெறிந்தார்
அஞ்சாமை யிறையேவ வடர்ப்பவர்க்குப் பகைநொதுமல்
துஞ்சாத வுறவிவற்றிற் சூழ்வதுசற் றுளதாமோ. 55

உழத்தியர் வயலில் இறங்கியவுடன், நாம் தப்பிப்பிழைக்கும் திசை யாது என்று உய்யானவனத்திற் சென்று தங்கின.

53. கருங்குவளைப்பூக்களோ நம் விழிகளைமட்டும் காட்டுவன; வள்ளையிலைகளோ நம் மகரகுண்டலம் அணிந்த காதுகளை மட்டும் காட்டுவன; இத்தாமரைகளோ நம்முடைய சிவந்த வாய், முகம், கை, கால், கொப்பூழ், முலை முதலான அவயவங்களைத் தம்மோடு ஒப்பாகக்காட்டி மிகத் தவறுசெய்கின்றன என்று அவற்றை மிகுதியும் பிடுங்கி எறிந்தார்கள் உழத்தியர்கள்.

மழை காட்டும் விழி - குளிர்ச்சியைத் தோற்றுவிக்கும் விழிகள். மகரவாய்க் குழை - மகரகுண்டலம். கழைகாட்டும் முகம் - கரும்பின் இனிமையைக்காட்டும் சொற்களைப் பேசும் முகம். முலைக்குத் தாமரைமொட்டு உவமை.

54. கனிபோலும் அழகிய வாய்க்கு ஒப்பான செவ்வல்லியின் தவம் பாராராய்; அனிச்சப்பூ தம் அடிகட்கு ஒப்பான அரிய தவத்தின் தன்மையையும் நோக்காராய், இனிப் பழக்கமில்லை என்று பிடுங்கிப்பிடுங்கித் திட்டுபோலக் குவித்தார்கள். குளிர்ந்த சந்தனம் பூசிய முலையினையுடைய பெண்களுக்குப் பகையாகத் தவஞ்செய்து அவர்களை ஒழிப்பவர் உலகத்தில் யார். ஒருவருமிலர்.

இது வேற்றுப்பொருள் வைப்பணி. அனிச்சம் - முகர்ந்தால் வாடும் மலர். அது மாதர் அடிக்கு மென்மை காரணமாக உவமை. சந்தம் - பழக்கம்.

55. பஞ்சாய்க்கோரையும், வெண்குருத்தும் தங்கள் இளநகையைப்போலத் தோன்றுவனவென்று முழுதும்பறித்து எறிகின்ற கடைசியர்கள் மற்றக்களைகளையும் பிடுங்கி எறிந்தனர். தலைவன் அஞ்சாமையோடு ஆணையிட ஆணையின்வண்ணம் சொல்பவர்க்கு பகை, அயல், உறவு என ஆராயும் பொருள் சிறிதேனும் உண்டோ? இல்லையாம்.

துஞ்சாத - அயராத.

தளையவிழ்பூங் குழனிகர்த்த சைவலங்க ளொறுக்கின்ற
விளையவர்தங் கானிகர்த்த வெமைவிடுத்தற் கிதுவாமென்(று)
அளையமுந்து ஞெண்டுவரா லாமையகன் வயற்கிளைத்த
களைகளைய வுலாவுதொறுங் கான்மலர்மேல் விழுந்தெழுமால். 56

பட்டமிருந் தடம்பொய்கை பரந்தசெறு விவற்றெழுந்த
கொட்டியுநன் கிருந்தனவாற் குலத்தேவர் மணிமுடியில்
அட்டுமது மலரும்வய லவிந்தனவே யறிகிற்பிற்
சட்டவிடத் தாற்றழைத்துத் தபுவர்தணிந் துயர்ந்தோரும். 57

செழுக்கமல மதுமாந்தித் தெரிந்திதழ்மென் குழற்செருகி
விழுக்குவளை செவியேற்றி விரைத்தாது முலைக்கொட்டி
ஒழுக்குநறைக் கயிரவத்தின் ஒளிர்தண்டைச் சரணுறுத்துக்
குழுக்கொடுழத் தியர்மீண்டார் கொலைக்களத்தேல் சிறப்பினர்போல். 58

---

56. கூந்தலையொத்த பாசிகளைக் களைகின்ற மங்கையரின் கால்களையொத்த எங்களை அனுப்புதற்குத் தகும் என்று, நண்டு, வரால், ஆமை இவைகள், கடைசியர் களைபிடுங்க உலாவுதொறும் அவர்கள் காலில் விழுந்து எழுகின்றன.

நண்டு முதலியன கணைக்காலுக்கு உவமமாகலின், அவர்கள் காலில் விழுந்து கால்களாகிய நீங்கள் செல்லுமிடங்கட்கு, கால்களை ஒத்த எங்களை அனுப்பல் தகும் என்று கேட்கின்றன என்பதாம்.

57. சிறுகுளம், பெரியதடாகம், பொய்கை, பரந்தவயல் இவற்றில் முளைத்த கொட்டியும்கூட நன்றாக உயிருடன் இருந்தன. வயலிலே தேவர்கள் மணிமுடியிற் சூடப்பெறும் மதுப்பொழியும் தாமரை முதலான மலர்களும் களையாகப் பிடுங்கப் பெற்றுக் கரையில் அவிந்தன. இதனை ஆராயின் உலகத்தில் தாழ்ந்திருந்து உயர்ந்தோர்களும் செம்மையான இடத்திலே தழைத்துப் பிழைப்பார்கள் என்பது.

சட்ட - செம்மையாக. தபுவர் - பிழைப்பர்.

58. உழத்தியர்கள் போர்க்களத்தில் சிறப்புப்பெற்ற வீரர்கள்போல, தாமரைத் தேனைக்குடித்து, பூக்களை ஆராய்ந்து கூந்தலில் செருகிக்கொண்டு, பெருமை வாய்ந்த குவளைமலரைக் காதிற்செருகிக்கொண்டு, மணமுள்ள மகரந்தங்களை முலையிலே அப்பி, அல்லித்தண்டைக் காலிற்சுற்றிக்கொண்டு கூட்டமாக மீண்டார்கள்.

கொட்டி - அப்பி. நறை - தேன். கயிரவம் - செவ்வல்லிமலர். வீரர்கள் வீரபானஞ்செய்து, பூவணிந்து, ஒப்பனைசெய்து, சிலம்பணிந்து வருவதுபோல உழத்தியர்கள் களைகட்ட வந்தனர் என்க.

வேறு

குமிழ்தந் தொளிர்நா சியினர் குலனென் றியவா டவருக்(கு)
அமிழ்துந் தனியா வியுமா யணிசெய் குவதற் புதமோ
இமிழ்தண் புனலீர்ம் பணையி னெழுபுன் பயிர்கைத் தொழிலால்
உமிழ்தந் தனவோங் கிவளர்ந் துலகின் புறலாங் கருவே. 59

கரும்போ விஃதென் மர்கழைக் கரும்பித் துணையா வதுகொல்
அரும்பார் கதலித் துடவை யாமென் றுமறுத் தவர்தாஞ்
சுரும்பார் கதலிக் குலமித் துணையா வதுமுண் டுகொலோ
பெரும்பூ கமெனக் கொளவும் பெரிதும் விளைவா யினவால். 60

இருநா ழிநெலீந் தவரு மெண்ணான் கறமேற் றதனுல்
ஒருவா துசெயுத் தமியு மொருநா ளுருமா றிமலர்
மருவார் பிறவா நெறியின் வயலிற் றொழில்செய் தனரேல்
பெருவாய் மையசெந் நெலெலாம் பெரிதீண் டுதலோர் புகழோ. 61

---

59. குமிழம் பூப்போலும் மூக்கினையுடைய பெண்கள் முறைப்படி அணைந்த ஆடவர்க்கு ஆவியும் அமிழ்தும் தந்து அணிசெய்வது ஆச்சரியமா? வயலில் எழும் பயிர்கள் கைத்தொழிற்சிறப்பால் ஓங்கிவளர்ந்து உலகம் இன்புறும் கருவாகின்றன.

அமிழ்தும் தனியாவியும் ஆய் அணிசெய்குவது என்ற பகுதி 'அணியும் அமிழ்தும் என்னுவியும் ஆயவன்' என்ற திருக்கோவையாரடியை நினைவூட்டுவது.

60. இது கரும்போ! என்பர். கழைக்கரும்பு இவ்வளவு ஆகுமோ? வாழைச்சோலையாம் எனமறுத்தவர்களும், வண்டுகள் மொய்க்கும் வாழைக் கூட்டம் இவ்வளவு பெரிதாகுமோ? ஆதலால், இது பெரிய பாக்குவனமே எனக் கொள்ள மிகப்பெரிது விளைந்துள்ளன.

இச்செய்யுள் "கரும்பல்ல நெல்லென்னக் கமுகல்ல கரும்பென்ன" என்ற பெரியபுராண அடியை நினைவூட்டுவது. துடவை - சோலை. பூகம் - கமுகு.

61. முப்பத்திரண்டு அறங்களையும் செய்ய இரண்டு படி நெல்லளித்த சிவபெருமானும், அந்நெல்லைக்கொண்டு முப்பத்திரண்டு அறங்களையும் விடாது செய்த உமாதேவியும் ஒருநாள் இத்தலத்திலே மலர் முதலிய சூடாதவர்களாய், பிறவாத நெறியாலே உருவமாறிப் பள்ளராய் வயலில் தொழில் செய்தனராயின் பெரிய வாய்மையோடு செந்நெல் அனைத்தும் இத்தலத்தில் மிக விளைதல் ஒரு புகழாமோ.

வேறு

கண்ணுற நின்ற வாசான் கடவுளே யென்று முன்வே(று)
எண்ணின ரறிவு முற்ற விறைஞ்சிய வுண்மை காட்டும்
விண்ணினைப் பொருள தென்று வெண்மையி னிவந்த சாலி
மண்ணினைப் பொருள தென்று பசுமையின் வணங்கி யம்மா. 62

இறுதிவந் தடுத்த தோர்ந்தாங் கீண்டிய மணியும் பொன்னும்
நறுவிரைச் செழுநீ ரோடு நலத்தகு மடையிற் போக்கி
முறுகிய வன்பு பொங்க முதல்வன தடியிற் றாழ்ந்த
மறுவற விளைந்து சால வயங்கிய தெய்வச் சாலி. 63

முந்துற நிவந்த சென்னி மூப்புறச் சற்றே கோடிப்
பிந்துற முழுதுங் கூனிப் பெருநிலக் கிடக்கை மாந்தர்க்
கந்தியி னடுக்கு மாறுங் காட்டின நிவந்த சாலி
சந்தியின் வணங்கிக் கூனித் தரையிடைப் படுத்து மாதோ. 64

---

62. விண்ணைப் பொருளாக எண்ணி வெண்கதிராகத் தலை நிமிர்ந்திருந்த நெற்பயிர்கள், பசுமைகொண்ட காலத்து மண்ணையே பொருளாக எண்ணித் தலைவணங்கின தோற்றம், பிரத்தியட்சமாகக் கண்ணுக்கெதிரே நிற்கும் ஆசாரியன் கடவுளா? என்று, முன்னம் வேறாக எண்ணிய மக்கள் ஞானமுதிர, ஆசானே கடவுள் என்று உணர்ந்து வணங்கிய உண்மையை உணர்த்தும்.

நெற்பயிர் வெண்மையாய் இருந்தகாலத்து விண்ணையே பொருளாக எண்ணித் தலைநிமிர்ந்து சென்றது. பசுமைகொண்ட காலத்து மண்ணைப் பொருளாகக்கொண்டு தலைவணங்கியது. இது கடவுள் வேறு ஆசான் வேறு என்று எண்ணியவர்கள் ஞானமுதிர ஆசானே கடவுள் என உணர்ந்து வணங்கியதுபோலாம் என்பது கருத்து.

63. குற்றமற விளைந்து, மிக விளங்கிய தெய்வத்தன்மை பொருந்திய நெற்பயிர் தமக்கு முடிவுக்காலம் வந்தமையை ஆய்ந்து, மிக்கமணி, பொன் இவற்றை நல்ல மணம்பொருந்திய வளமிக்க நீரோடு, மடைவழியே வெளியிற் போகச்செய்து. முறுகிய அன்புமிக, முதல்வனாகிய இறைவனது திருவடியிற் பணிந்து சாய்ந்தன.

முடிவுக்காலத்து உடைமைகளை உதறிவிட்டு முறுகிய அன்பால் இறைவனடியிற் பணியும் அறிஞர்போலப் பயிர்கள் விளைந்து, மணி, முத்து, பொன் முதலியவற்றை நீரோடு மடைவழியே வழியச்செய்து சாய்ந்தன என்பதாம்.

64. ஓங்கி உயர்ந்த நெற்பயிர்கள், மாலைக்காலத்து வளைந்து கூனித் தரையில் படிந்து, முதலில் உயர்ந்த தலை, மூப்பு வரவரச் சிறிது கோணிப் பின்பு முழுதும் கூனிப்போய், பெரிய நிலத்திலே கிடத்தலையுடைய மக்களுக்கு இறுதியில் வந்து பொருந்துமாற்றையும் காட்டின.

விளைவினை நோக்குந் தோறும் விதுவினை மகவான் மெச்சுந்
தளைதொறும் பதடி யொவ்வொன் றிருந்தன தவத்தி னுள்ளந்
திளைதரு நல்லோர் மாட்டுஞ் சிதடர்சென் றுதிப்ப ரென்ன
வளைகட லிடத்துச் சான்றாய் வயங்கிய தோற்றம் போலாம். 65

பறவையும் விலங்கும் பல்வே றுறவியும் பசியிற் றீர
அறவினை நாளும் ஆற்றும் அகன்பணை விளைவு நோக்கி
நறவுண்டு மகிழ்ச்சி துள்ள நலத்தகு நாளான் மள்ளர்
மறவினைக் குயங்கை யேந்தி வளாவினர் வினையின் மூண்டார். 66

என்னணம் வளர்த்த யாமே யிறுத்துமென் றெண்ணல் வேண்டா
நன்னெறிப் படுத்து கென்று நாடொறும் வணங்கி நின்ற
தன்னிகர் விளைவு கொய்து தலைத்தலை யிட்டுக் கட்டி
வன்னிலைக் களத்தி னுய்த்து வானுறப் போர்கள் செய்தார். 67

இளமையில் நிவந்த பயிர் முற்றி வளைந்து முடிவில் சாய்ந்து மக்களும் இப்படி ஆவர் என்பதை உணர்த்தின என்பதாம்.

65. நெற்பயிர்கள் விளைந்திருப்பதைப் பார்க்கும்போதெல்லாம் இந்திரன் சந்திரனை மெச்சுவன். ஆயினும் பயிரின் மூட்டுக்கள்தோறும் ஒவ்வொரு பதரும் இருந்தன. அது தவத்திலே திளைத்திருக்கும் உள்ளத்தையுடைய நல்லோர் இடத்தும் மூடர்கள் சென்று பிறப்பர் என்று சொல்வதற்கு இவ்வுலகிற் சான்றாக விளங்கிய தோற்றம்போலாம் என்பது.

விது - சந்திரன். மகவான் - இந்திரன். பதடி - பதர். சிதடர் - மூடர்.

66. பறவைகளும் விலங்குகளும் முதலான பலவேறு வகையான உயிர்களும் பசிதீரத் தருமமாகிய வினையை நாளும் இயற்றும் அகன்ற வயல்களின் விளைவைப் பார்த்து, உழவர்கள் கள்ளுண்ட களிப்பால் துள்ளி நல்லநாள் பார்த்து அறுக்குந் தொழிலையுடைய அரிவாளைக் கையில் ஏந்தி, வளாக்கொண்டவர்களாய் அறுக்குந்தொழிலில் முனைந்தார்கள்.

உறவி - உயிர்கள். குயம் - அரிவாள். வளாவினர் - நெல்லறுக்க ஒவ்வொருவரும் வரைசெய்துகொண்ட பகுதி வளா என்பது; அதனைப் பிரித்துக்கொண்டவர்களாய் என்பதாம்.

67. பயிர்களை வளர்த்த நாமே எப்படிக் கொல்வோம் என்று எண்ண வேண்டா; எங்களை நல்வழிப்படுத்துக என்று தினந்தோறும் வணங்கிய தனக்குத்தானே நிகராகிய விளைவுகளைக்கொய்து தலையோடு தலை பொருந்த வைத்துக் கட்டி, வலிய நிலமான களத்திற்கொண்டுபோய். வானமளாவப் போரிட்டார்கள்.

அலம்படு கழனி தோறு மரிந்திடுந் திரளிற் றப்பி
நிலம்படக் கிடந்த சூடு நித்தலும் பொறுக்கிச் சேர்த்தங்(கு)
இலம்படு மாந்த ரெல்லாஞ் செல்வரா யிருப்ப ரென்னில்
நலம்பட விளைப்போர் செல்வ நவிற்றலா நகைமைத் தேயோ. 68

போரென்றுஞ் சூடி தென்றும் பொருவில்பல் லறமு மற்றும்
பாரென்றுந் தழைய வாக்கும் பண்பினை யுடைய சாலிக்(கு)
ஊரென்று மொழிவ தாமோ வவ்வுரை யொழித்து மென்னுக்
காரென்று கடுப்ப மள்ளர் கடாவிட லாயி னரே. 69

முன்னுற நடந்து முந்துந் தொழிலினை முடித்த பூணி
பின்னுற நடந்து பிந்துந் தொழிலையா முடித்தா மென்று
முன்னுறத் தோற்றஞ் சான்ற முதலினைப் பூணிக் காக்கிப்
பின்னுறத் தோற்று நெல்லைத் தமக்கெனப் பிரித்தார் மள்ளர். 70

---

68. கலப்பை உழுத வயல்களில் அரிந்திடும் அரிக்கூட்டத்தில் தவறி நிலத்திற் கிடந்த நெல்லரிகளைப் பொறுக்கி நாடோறும் சேர்த்தலால் அங்கு வறுமையுற்ற மக்கள் அனைவரும் செல்வரா யிருப்பார்கள் ஆயின், நன்மைவிளைய விளைவிக்கும் உழவர்களின் செல்வத்தைச் சொல்லுதலாகுமோ?

இலம்படுமாந்தர் - வறியர். அலம் - கலப்பை.

69. போர் என்றும், சூடு என்றும் பெயர்தாங்கிப் பலவகையறங்களையும் இப்பூமி என்றும் தழையும்படி ஆக்குகின்ற தன்மையினையுடைய நெல் மிகுந்த இடத்திற்கு ஊர் என்று பெயர் கூறலாமா? அப்பெயரை ஒழித்துக்கட்டுவோம் என்று மள்ளர்கள் மேகம் என்று விரையக் கடாவிடத் தொடங்கினர்.

மருதநிலத்துக் கிராமங்களை ஊர் எனல் மரபு. பார்தழைய அறம் வளர்க்கும் இடத்தை ஊரெனல் பொருந்தாது. கார்எனல்வேண்டும் என்று மள்ளர் கடாவிடலானார்கள் என்பதாம்.

70. வயலில் முன்னே நடந்து உழுதலாகிய முதற்றொழிலைக் காளைகள் முடித்தன. அதன்பின்னே நடந்து பிந்திய தொழிலாகிய நடுதல் களை கட்டல் முதலானதொழிலை நாம் முடித்தோம் என்று, முதலிற்றோன்றிய நெற்பயிராகிய வைக்கோலைக் காளைகட்குக்கொடுத்து, பின்பு தோன்றியநெல்லைத் தங்கட்கென்று பிரித்தனர் மள்ளர்.

பொங்கரித் திரளை யெல்லாம் பொள்ளென வாரிக் காற்றில்
தங்கிய பதடி யோடத் தலைத்தலை தூற்றிக் கூப்பிப்
பங்கமில் லரசற் குள்ள பகுதிதீர்த் தனைத்துங் கொண்டு
துங்கவண் கூட்டுட் பெய்து தொல்லறம் வழாமை யுய்ப்பார். 71

தழைக்குநெல் விளைவு வாய்த்த தளையினெண் மடங்கு சான்ற
கழைக்கருப் பினமும் பூகக் கானமுங் கதலிக் காடும்
மழைக்குலந் தவழுந் தெங்கு மதுநுகர் தேனி ருல்கள்
இழைக்குநந் தனமு மஞ்ச ளிஞ்சியு மூர்க டோறும். 72

தண்ணடை யினங்க ளானுந் தழைத்திடும் பாடி யானும்
புண்ணுடைப் படைக்கை வேடர் பொருந்திய சீறூ ரானும்
மண்ணடை யுலகின் மிக்க வளம்பல தழுவி நாளும்
விண்ணிடை யுலக நாண மிளிர்ந்தது கொங்கு நாடு. 73

---

71. பொங்குகின்ற நெற்குவியல் அனைத்தையும் விரைய வாரிக் காற்றிலே நெல்லொடு தங்கியுள்ள பதர் ஓடத் தலைக்குத்தலை தூற்றிக் குவித்து, குற்றமற்ற அரசனுக்குரிய ஆறிலொரு கடமையைக் கொடுத்துத் தீர்த்து எஞ்சிய எல்லாவற்றையும் வீட்டிற்குக் கொணர்ந்து, உயர்ந்த வளமான நெற்கூட்டிலேயிட்டு, பழமையான அறங்களைச் சிறிதும் தவறாது நடத்துவார்கள்.

கூடு - தொம்பை அல்லது நெற்சேர். அரி - நெல்.

72. ஊர்கள்தோறும், கழைக் கரும்புகளின் வகைகளும், கமுகங்காடுகளும், வாழைத் தோட்டங்களும், மேகக்கூட்டங்கள் தவழுகின்ற தென்னைகளும், மது உண்ணும் வண்டுகள் தேனடைகள் கட்டும் நந்தனவனங்களும், மஞ்சளும், இஞ்சியும், தழைக்கும் நெல் விளைச்சல்வாய்த்த வயலில் எட்டுமடங்கு நிறைந்தன.

தளை - வயலின் பரப்பு.

73. சோலைகளின் வகையாலும், வளமுற்ற பாடிகளாலும், விழுப்புண் படைத்த படைக்கல மேந்திய கைகளையுடைய வேடர்களின் சிற்றூர்களாலும் பூமியிலுள்ள நாடுகளில் சிறந்த வளப்பம் எல்லாம் தழுவப்பெற்று, நாடோறும் விண்ணுலகம் நாணமடைய விளங்கியது கொங்குநாடு.

தண்ணடை - சோலை. பாடி - முல்லைநிலத்தூர். சீறூர் - வேடர்கள் வாழும் ஊர்.

வேறு

மதியந் தவழுஞ் சையவரை வரைப்பிற் பிறந்த காவிரிநன்
நதியந் தனக்கு நேர்கிழக்கி னடத்த லொழிந்து தெனுதுதிசைக்
கதிகொண் டெழுந்த துயர்கொங்கு காணும் விழைவா லெனிலிந்தப்
பதிகொண் டமர்ந்த நாட்டின்வளம் பகர்த லெளிதோ பண்ணவர்க்கும். 74

கருங்கட் கமலை மணிமார்பன் கதிய வுலகும் அயனுலகும்
ஒருங்கு வரையின் சிறகரிந்தோ னுலகும் ஏனைச் சுரருலகும்
மருங்கு வளைந்த நகர்வெல்ல வயங்கிச் சிவலோ கத்தின்வளம்
நெருங்கும் பேரூர் வளஞ்சிறிது நிகழ்த்தி நிகழ்ந்த பிறப்பறுப்பாம். 75

திருநாட்டுப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 95

---

74. சந்திரன் தவழும் குடகுமலையின் எல்லையில் தோன்றிய காவிரி ஆறு நேர்கிழக்கே ஓடுதலைவிட்டு, தெற்குநோக்கி ஓடியது கொங்குநாட்டைக் காணும் விருப்பத்தால் எனின் இந்தக் கொங்குநாட்டின் வளம் தேவரும் சொல்லும் அளவினதோ! அன்று என்பதாம்.

பண்ணவர் - தேவர்.

75. திருமால் உலகும், பிரமன் உலகும், இந்திரனுலகும் மற்றைய தேவர்கள் உலகும் ஆகிய இவற்றைக் கொங்குநாட்டில் பேரூரைச் சுற்றியுள்ள ஏனைய ஊர்கள் வெல்ல, விளங்கிச் சிவலோகத்தின் வளமனைத்தும் நெருங்கிய பேரூர் வளத்தைச் சிறிது கூறிக் கிடைத்த இப்பிறவியை அறுப்பாம்.

நிகழ்ந்த பிறப்பு - வினைவயத்தான் நிகழ்வதான இப்பிறப்பை. கமலை - திருமகள். கதியஉலகு - அவளுங் கதியான வைகுண்டம். அயன் உலகு - சத்தியலோகம். ஏனைச்சுரருலகு - மற்றத் தேவர்களாகிய வருணன், குபேரன், ஈசானன் முதலானோர் வாழ்கின்ற உலகங்கள். பேரூர் சிவலோகத்தின் வளம் செறிந்தது என்பதாம்.

இரண்டாவது

திருநகரப்படலம்

உரைத்தநாற் பயனுட் பெரும்பய னுய தொள்ளிய வீடஃ துறலால்
தரைத்தலைப் பேரூ ரென்மர்கள் சிலரெத் தலத்தினுஞ் சாற்றுநாற் பயனும்
நிரைத்தலிற் பேரூ ரென்மர்கள் பலரே நீடிய வாதிமா நகரை
இரைத்தெழு கடல்போல் வளத்தினும் பேரூ ரென்மர்கள் பற்பலா யிரரே. 1

முள்ளரைக் கமலத் தயனுநா ரணனு முதிரொளி மோலிவா சவனும்
ஒள்ளிய சுரரு மந்தரத் துறக்க மொழிந்துபன் னுளிடை விடுத்துண்(டு)
எள்ளுறு மியக்க மிரண்டையு மடக்கி யிருந்தவ முயலுவ தெல்லாந்
தெள்ளிய பேரூர் வளத்தினைக் காணுஞ் செய்தியைக் குறித்தல திலையே. 2

புடைநகர்

செல்வம்வேட் டவர்பால் அளித்திடற் குரிய தெய்வத மென்னுமா தர்களும்
கல்விவேட் டவர்பா லளித்திடற் குரிய கலையணங் கென்னுமா தர்களும்
வில்வளாய்க் கவினும் பதிவயிற் பல்லோர் விரசின ரென்றவர் தவிசாய்
எல்விரா யொளிரு மலர்பல வணிந்த இலஞ்சியும் பொய்கையுந் தெரிக்கும்.3

---

1. அறநூல்களில் விதிக்கப்பெற்ற புருடார்த்தங்கள் நான்கனுள் பெரும் பயனுயுள்ளது வீடு. அதனை அடைவித்தலால் இப்பூமியிலே ஆதிமாநகரான இந் நகரைப் பேரூர் எனபார்கள் சிலர். எல்லாத் தலங்களைக் காட்டிலும் சொல்லப் பெற்ற புருடார்த்தங்கள் நான்கையும் வரிசையாகத் தருதலால் பேரூர் என்பார் கள் பலர். ஒலித்து அலையெழுகின்ற கடலினும் வளம்பல தருதலின் பேரூர் என்ப வர்கள் பலபல ஆயிரம் பேர்கள்.

2. தாமரைமலரின் மேலுள்ள பிரமனும், திருமாலும், மிக்க ஒளியுடைய கிரீடம் அணிந்த இந்திரனும், ஏனைய தேவர்களும் விண்ணுலகத்தைவிட்டு, பல நாட்கள் இடையிட்டு இடையிட்டு உண்டு, இகழத்தக்க இடைகலை பிங்கலையா கின்ற பிராண இயக்கம் இரண்டையும் அடக்கிப் பெரியதவம் செய்வதெல்லாம் தெளிந்த பேரூர் வளத்தைக் காண்பதற்கன்றி வேறு குறித்ததில்லையாம்.

3. விரும்பியவர்கட்குச் செல்வம் அளிக்கும் தெய்வமாகிய திருமகள்களும், கல்வியை யளிக்கும் கலைமகள் என்னும் பெண்களும், வில்போல் வளைந்து அழகு செய்யும் பேரூரில் பலர் வசித்தனர் என்பதை அவர்கட்கு ஆசனமாய்ச் சூரிய ஒளியோடு கலந்து மலரும் தாமரைகள் பல பூத்துள்ள நீரோடையும் பொய்கை யும் தெரிவிக்கும்.

வேறு

கஞ்ச மீனி னங்க லாவு காமர் பொய்கை யோடைகள்
எஞ்சு ருத ணிந்து தேவர் நாடி ருப்ப தாயினும்
அஞ்சி லோதி யார்ந டைக்க வாவு நெஞ்சி றுத்தலால்
அஞ்சம் யாவு மாங்கு வாழ்தல் அன்றி யந்த ரத்துரு. 4

ஆவி பொய்கை பண்ணை தோற லர்ந்த முண்ட கங்களுந்
தூவி யன்ன முங்க டுப்ப தொக்கு வேத ரெண்ணிலார்
ஓவி லின்ப மாந டத்தொ ருத்த னைத்தொ ழப்புகத்
தாவி லாத னங்க ளூர்தி தாம்பு றத்தி ருந்தன. 5

காம னைக்க றுத்த கால கால னூடு மாநகர்
தாமு மெய்த லாலு றுந்த ருக்கெ னக்கி ளர்ந்தன
மாம யிற்கு லஞ்சு வாக தங்கள் பூவை வண்டுதேன்
நேமி யம்புண் மற்று நீண்ட சோலை தோறி சைப்பன. 6

வன்னி கூவி ளங்க டுக்கை வாகை பாட லங்கடிக்
கன்னி கார மாத்தி சண்ப கங்கு ராம ராவிளாப்
புன்னை நாகம் வெட்சி நொச்சி பூங்கு ருந்து சந்தனம்
இன்ன வான நந்த னவ்வ னங்க ளிட்ட மெங்குமே. 7

இலஞ்சி - சிறிய நீரோடை. பொய்கை - தானேயான நீர்நிலை; மானிட ராக்காத நீர்நிலை என்பர் நச்சினர்க்கினியர்.

4. தேவர் நாடாகிய அமராபதி தாமரைகளும் மீன் கூட்டங்களும் கலந்த அழகிய பொய்கைகளையும் ஓடைகளையும் குறையாமல் அணிசெய்து இருப்பதாயினும் பெண்களின் நடையை விரும்புகின்ற மனம் உண்மையில் அன்னங்கள் அனைத்தும் பேரூராகிய அங்கு வாழ்தலே யல்லாமல் விண்ணுலகைச் சாரா.

கஞ்சம் - தாமரை.

5. வாவி பொய்கை வயல்கள் இவ்விடங்கள்தோறும் மலர்ந்த தாமரைகளில் தூவிகளையுடைய அன்னங்கள் வாழ்வது பொருந்தும் எங்ஙனம் எனின், இடைவிடாத பேரின்பத்தை வழங்கும் திருநடனத்தைப் புரியும் கூத்தப்பெருமானை தொழக் கணக்கற்ற பிரமர்கள் புகுவதால், அன்னங்களாகிய அவர்கள் வாகனங்கள் கேடின்றி நகர்ப்புறத்தே இருந்தன ஆம்.

6. பெரியமயிற் கூட்டங்கள், கிளிகள் நாகணவாய்ப்புள், வண்டு, தேன் சக்கரவாகப் பறவை முதலான மற்றுமுள்ள பறவைகள் நீண்ட சோலைதோறும் இருந்து ஒலிப்பன, மன்மதனை எரித்த சிவபெருமான் நடம்புரியும் பெரிய நகரைத் தாமும் அடைந்த செருக்கினல் கிளர்ச்சியுற்றன போலும்.

7. வன்னி முதலான மரங்கள் செறிந்த நந்தனவனக் கூட்டம் அந்நகர் எங்கும் என்க.

சாதி மௌவன் முல்லை மாத விக்கு லங்கள் பந்தர்செய்
பாத வப்பொ தும்ப ருட்ப டர்ந்து சேவ கங்கொளும்
போத கங்கள் வெள்ளி பங்கள் போந்த வென்ற யிர்ப்புறப்
போத கங்கு டைந்து தும்பி தாது குப்ப போர்க்குமே. 8

வேறு

கிம்புரிக் கோட்டின கேழ்த்த செங்கண
பைம்பொனின் ஓடைய பான கத்தின
உம்பரும் விழையவே ழுயர்ந்த போதகம்
பம்பிய கூடங்கள் பலவும் பாங்கெலாம். 9

விடுகணை பின்செல விசையிற் செல்வன
படுகளத் தொன்னலர் பனிப்பப் பாய்வன
கொடுமயிர்ச் சுவலின குரத்தெ ழுத்தின
வடுவறு பரியின்மந் திரங்க ளெண்ணில. 10

கூவிளம் - வில்வம். கடுக்கை - கொன்றை. பாடலம் - பாதிரி. கடி - மணம் பொருந்திய. கன்னிகாரம் - நீலோற்பலம்.

8. சாதிமுல்லை முதலிய கொடிகள் படர்ந்து பந்தராக விளங்கும் மரங்களின் சோலையில் தூங்கும் யானைகள் வெள்ளை யானைகள் வந்தனவோ என்று காண்பார் ஐயங்கொள்ள வண்டுகள் பூந்தாதுக்களை உதிர்த்து யானைகளை மூடி விடும்.

சாதிமௌவல் - சாதிமுல்லை. மாதவி - மல்லிகை. மாதவப்பொதும்பர் - மரச்சோலை. சேவகம்கொளும் - துயிலும். போதகம் - யானைக்கன்று. வெள்ளிபம் - வெள்ளையானை. அயிர்ப்புற - சந்தேகங்கொள்ள. போது + அகங்குடைந்து - பூக்களின் உள்ளே கிண்டி. தும்பி - வண்டு. தாது - மகரந்தம்.

9. யானைக்கூடங்கள் பல பக்கங்களில் உள்ளன என்பதாம்.

கிம்புரி - கொம்பில் அணியும் வளையம். கேழ்த்த - நிறம் பொருந்திய. ஓடைய - முகபடங்களையுடையன. பால் நகத்தின - வெண்மையான நகங்களையுடையன. உம்பர் - தேவர்கள். ஏழுயர்ந்தபோதகம் - ஏழுமுழம் உயர்ந்து ஏழுறுப்புக்கள் உறத்தாழ்ந்த (அரசுவாக்கள்) பட்டத்தி யானைகள்.

10. குற்றமற்ற குதிரைகள் கட்டிய எண்ணிலாத குதிரைச்சாலைகள் உள்ளன என்பது.

அம்புக்கு முன்னே செல்லும் வேகம் உடையன. படுகளம் - போர்க்களம். ஒன்னலர் - பகைவர். பனிப்ப - நடுங்க. கொடுமயிர் - வளைந்த பிடரிமயிர். சுவல்-பிடரி. குரம் - குளம்பு. எழுதின - இலக்கணங்களையுடையன. வடு - குற்றம். மந்திரங்கள் - குதிரைச் சாலைகள்.

ஆரடு குறட்டின வயம்பெய் சூட்டின
போரடு திறத்தன புரவி பூண்பன
தாரடு கொடியின சமைந்த வுள்ளின
தேரடுத் துயர்ந்தன சேக்கை எண்ணில. 11

வாளொடு பரிசைகை வயங்கு மீளிகள்
தோளொடு தூணிவிற் றுதைந்த மள்ளர்கள்
நாளொடு வேல்கதை நயக்கும் வீரர்கள்
தாளொடு போர்பயில் சாலை யெண்ணில. 12

கனைகுரல் வேழமுங் கவனக் கிள்ளையும்
புனைமணி யிரதமும் பொருவி ருனையும்
இனையநாற் படையுறுப் பெனைத்து மாக்குறும்
வினைஞர்தஞ் சேரிவெவ் வேறு வாய்ந்தன. 13

வேறு

கந்தடு கடக்கரி கடாவியமர் கற்குஞ்
சந்தணி புயத்தவர் தழங்குமிசை யானுஞ்
சுந்தர மணிப்படைக டோற்றுமொளி யானுங்
கந்தர முகைத்துடலு மிந்திரர் கடுத்தார். 14

---

11. தேர்கள் நிற்கும் சாலைகள் பல என்பதாம்.

ஆர் - ஆரக்கால். குறடு - வண்டிச்சக்கரத்தின் நடுவுறுப்பாகிய குடம். அயம்பெய்சூட்டின - இரும்புப் பட்டையிட்ட வட்டையை உடையன. புரவி - குதிரை. தார் - முன்படை. சேக்கை - தேர்க்கொட்டகை.

12. காலாட்படைகள் வாள்பயிலும் சாலைகள் பல என்பதாம். பரிசை - கேடயம். மீளிகள் - வீரர்கள். தூணி - அம்பறுத்தூணி. நாள் - நல்லநாள்.

13. நால்வகைச் சேனைகளையும் பயிற்றுவோர் சேரிகள் வேறுவேறு உள்ளன என்பதாம். வேழம் - யானை. கவனக்கிள்ளை - வேகமாகச் செல்லும் குதிரை. தானை - சேனை. ஆக்குறும் - பயிற்றும்.

14. யானைகளைச் செலுத்திப் போரைக் கற்கும் வீரர்களின் ஒலியானும், அழகிய படைகளின் ஒளியானும் மேகத்தை ஏறிச் செலுத்தி மாறுபட்டுப் பொரும் இந்திரர்களை ஒத்தனர்.

கந்து அடு கடகரி - கட்டுத்தறியை முறிக்கும் மதயானை. கடாவி - செலுத்தி. சந்து அணி புயத்தவர் - சந்தனம் பூசிய புயங்களையுடைய வீரர்கள். கந்தரம் - மேகம். உடலும் - மாறுபட்டுச் சண்டையிடும்.

தரங்கநிரை யன்றிஃது தாவிவரு கின்ற
துரங்கநிரை யென்னநனி தூண்டுபரி வீரர்
குரங்குளை மணிப்புரவி கொண்டம ருடற்றும்
அரங்கமலி கின்றவள கைக்கிறைவ ரொத்தார். 15

சடசட வொலிப்பவுருள் சக்கர மழுந்திப்
புடவிகுழி யக்கடவு போர்ச்சகட மள்ளர்
சுடரிரத மூர்ந்துபல சூரியர்க டம்முள்
அடலமர் குறித்தவரை யையென நிகர்த்தார். 16

ஓச்சுநெடு வாளெறியி னுய்ந்தெதி ரெறிந்தும்
மீச்சென்மணி வேல்புடை விலக்கியெதி ருய்த்தும்
மேச்செறி வறுத்தெதிர் தொடுத்துமிகல் வெய்யோர்
பூச்செருகி விஞ்சையர் புகழ்ந்திட மலைப்பார். 17

அடையல ருளஞ்சுழல வாறுபடை யுஞ்சூழ்
புடைநகர் வளஞ்சிறிது பொற்புற மொழிந்தாம்
உடையவர்க ளும்பரென வுற்றுநல ஞரும்
இடைநகர் வளஞ்சிறி தெடுத்தினி யுரைப்பாம். 18

---

15. இது அலைவரிசை யன்று. தாவி வருகின்ற குதிரை வரிசை என்று கண்டோர் கூற நன்றாகச் செலுத்துகின்ற குதிரை வீரர்கள், வளைந்த பிடரிமயிரோடு கூடிய அழகிய குதிரைமேல் ஏறிப்பொரும் களங்கள் நிறைந்த அளகைக்கு இறைவனாகிய குபேரனை ஒத்தனர்.

16. தேர்வீரர்கள் பொர எண்ணுகின்ற சூரியர்களை ஒத்தனர் என்பதாம்.

கடவு - செலுத்தப்படுகிற. போர்ச்சகடம் - சண்டைக்குப்போம் தேர்கள். அடல் அமர் - வலியபோர். ஐயென - விரைய.

17. வீசப்படுகின்ற வாளால் வீச்சினைத் தடுத்து எதிராக வீசியும், எதிர் வருகின்ற வேலைத் தடுத்தும், எதிரிகள்மீது தொடுத்தும் பகைகொண்டு போர் செய்கின்ற கொடிய வீரர்கள், வித்தியாதரர்கள் பூவணிந்து பாராட்டச் சண்டையிடுவர்.

18. பகைவர் மனம் சுழல அறுவகையான படைகளும் சூழ்ந்த புறநகர் வளம் புகன்றோம். செல்வமுடையவர்கள் தேவர்களைப்போல இன்பம் நுகரும் இடைநகர் வளம் சிறிது எடுத்துரைப்பாம்.

அடையலர் - பகைவர். பொற்பு - அழகு. உம்பா - தேவர்கள்.

இடைநகர்

வேறு

அளிதுன்றிய வுய்யானமு மவற்றாடலர் பம்பிக்
குளிர்தங்கிய தடமுங்குளிர் பொய்கைக்கரு கெல்லாம்
புளினங்களுஞ் செய்குன்றமும் புத்தேளிரு மேவும்
ஒளிபில்கிய மணிமேடையு முலப்பில்லன வுளவால். 19

பஞ்சாடிய வடிகட்கிடை பனிமென்றளிர் தாங்கி
எஞ்சாதெழு முலைகட்கிடை யிணரும்படு தாரு
வஞ்சாதருள் பெறநின்றன வலர்பூந்தட மாடு
மஞ்சார்குழ லியர்நல்கிய மணிவானிழை சுமந்தே. 20

இழையாலல தினையார்க்கழ கில்லென்றிறு மாந்த
குழையாடிய கொம்பேந்திய கொங்கைக்குல மடவார்
விழையாவணி யிழைதாங்கியு மிளிருற்றவர் நேராப்
பிழையாலுள நாணித்தலை பெரிதுங்குரங் கினவே. 21

---

19. இடைநகர்க்கண் உய்யானவனமும், தடாகமும், பொய்கைக் கரைகளில் மணற்குன்றுகளும், செய்குன்றுகளும், மணிமேடைகளும் எல்லையற்றன உள.

அளி - வண்டு. புளினம் - மணற்குன்று. புத்தேளிர் - தேவர். பில்கிய - பெருகிய.

20. செம்பஞ்சு ஊட்டிய அடிகட்குத் தோற்ற குளிர்ந்த மெல்லிய தளிர்களைத் தாங்கி, குறைவின்றி வளர்கின்ற முலைகளுக்குத் தோற்ற பூங்கொத்துக்களையும் தோற்றுவிக்கின்ற மரங்கள், தாமரை முதலிய பூக்களோடு கூடிய குளத்தில் நீராடும் மேகத்தையொத்த கூந்தலையுடைய மகளிர்கொடுத்த இரத்தினமயமான பெரிய நகைகளைச்சுமந்து அச்சமின்றி அவர்கள் அருளைப்பெறநின்றன.

தாரு சுமந்து அருள்பெற நின்றன என்க. தாரு - மரம். அடிக்குத் தளிரும், முலைக்குப் பூங்கொத்தும் உவமையாவன. அவை அவயவங்களின் அழகிற்கு ஒவ்வாது தோற்றன. பகையாய அவற்றைத் தாங்கிநின்ற தருக்கள் நீராடுகின்ற அவர்கள் அணிந்த அணிகளைத் தாங்கி அவர்கள் அருளைப்பெற நின்றன என்பதாம்.

21. நகைகளால் அல்லது நங்கையர்க்கு அழகில்லை என்று இறுமாப்பு கொண்டு தளிர்த்த கொம்புகள், நிமிர்ந்த கொங்கைகளையுடைய குலமகளிர்விரும்பாத அணிகளைத் தாங்கிநின்றும், விளங்கி அவர்கட்கு ஒப்பாகாத தவறால் மனம் நாணி மிகத் தலைவணங்கின.

குழையாடிய - தளிர்த்த; நகைத்த என ஒருபொருளும் தோன்ற நிற்றல் காண்க. குரங்கின - வளைந்தன.

கணைவென்றகண் மடவார்புனல் கலவித்துளை தோறுந்
துணைமெல்லடி படியும்புனல் தோய்ந்தாமென நடையின்
பிணையன்னமு முலைதோய்புனல் பெற்ருமென முலையின்
இணையுன்னிய நேமிக்குரு கினமுங் களிகூறும். 22

இயலாலின மெனவோகுழ லிருள்கூர்கன மெனவோ
வியலாநடை பயிறற்கருள் விளையும்வகை குறித்தோ
செயன்மாண்டொளிர் மணிமேடையுஞ் செய்குன்றமும் விரசுங்
கயனீள்விழி யவர்காணிய களிமாமயி லாலும். 23

வெயில்பம்பிய பூணுர்விளை யாடும்பொழி லிதனுட்
பயில்கின்றனம் அவரின்புறு பண்பேசெயன் முறையென்(று)
உயிரன்னதொர் பெடையோடளி யொண்கிள்ளைகள் பூவை
குயிலின்னன வமிழ்தத்திசை குயிலுஞ்செவி குளிர 24

சுணங்குக்கிணை யாகச்சுட ரழனின்றெளிர் பொன்னை
நுணங்கப்பொடி செயவோச்சுநுண் ணிடையார்கர முசல
மிணங்கத்தலை மற்றென்றினு முலைநேரிள நீரை
உணங்கச்சித றுபுமாதரை யுவகைக்கட னிறுவும். 25

---

22. பெண்கள் புனலாடுந்தோறும் அவர்கள் அடியிற்பட்ட நீரில்தோய்ந்தோம் என்று அவர்கள் நடையினுல் பிணைபட்ட அன்னங்களும், முலைமேற்பட்ட நீரைப்பெற்றேம் எனச் சக்கரவாகப் பறவைகளும் களிப்பு மிகும்.

கணை - அம்பு. கலவித்துளைதோறும் - மூழ்கிக்கலந்து துளையுந்தோறும். நேமிக்குருகு - சக்கரவாகப்பறவை.

23. சாயலால் இனம் என்றெண்ணியோ, கூந்தலை மேகம் எனக் கருதியோ, சாயலாகியநடையைத் தமக்குப் பயிற்றுவித்தற்கு அருள் உண்டாக்குவதற்காகவோ, கைத்தொழிற் சிறப்புவாய்ந்த மணிகள் பதிக்கப்பெற்ற மேடையிலும் செய்குன்றுகளிலும் பொருந்திய கயல்போலுங் கண்களையுடைய மகளிரைக் காண்பதற்காக மயில் ஆரவாரிக்கும்.

கனம் - மேகம். விரசும் - பொருந்திய. காணிய - காண.

24. மங்கையர் விளையாடும் பொழிலில் வாழ்வதால் நாம் அவர்கள் இன்புறுந்தன்மையில் நடப்பதேமுறை என்று கிளிகளும் நாகணவாய்ப்புட்களும் குயில்களும் தத்தம் பேடையோடு அவர்கள் செவிகுளிர அமிழ்தம்போன்ற இசையை எழுப்பும். வெயில்பம்பிய - ஒளிநிறைந்த. அளி - வண்டு.

25. பொன்தேமலுக்கு ஒப்பாக தீயிற் சுடர்விடும் பொன்னைப் பொடி செய்ய, உயரத்தூக்கிய மகளிர்கையிலுள்ள உலக்கையின் மற்றொருதலைப்பு அவர்கள் முலைக்கு ஒப்பான இளநீரைச் சிதறி அவர்களைக் களிக்கச்செய்யும்.

வேறு

சந்த ணிந்த பூண்முலை தம்மை நேர்வ தாமென
முந்து றுத்தொ றுப்பபோன் முகத்து முத்த ரும்புறக்
கந்த மாலை சோரவார் கதுப்பு யங்க மாதரார்
பந்த டிப்ப நோக்குவார் பதிந்த நெஞ்ச மீட்கலார். 26

பங்க யப்ப ரப்பிடைப் பமரம் விழ்வ போன்றுலாஞ்
செங்கை யம்ம னைப்பினர்ச் செல்லு மாத ரார்விழி
அங்க வற்றி னூடுலா மாட வர்க ணோர்முறை
கொங்கை தோன்ற வங்கணே குளித்து நிற்கு மோர்முறை. 27

செழும ணிக்கு தம்பைகள் செவியி னூச லாடுற
முழும டற்க முகிடை மூட்டி விட்ட வூசலைத்
தழுவி யாடு மாதரார் தம்மை யண்மி நோக்குறின்
வழுவி லார்கள் சிந்தையு மாலி னூச லாடுமே. 28

கண்ணி னிரு றைத்துகக் கலாய்த்தி ரங்கு மந்நலார்
வண்ண வாடை கொண்கனர் வலிந்து வாங்க மாமணிச்
சுண்ணம் விட்டெ றிந்துநீள் சுடர விப்ப வப்பொடி
நண்ணெ ளிக ளூற்றலு நாணி யோதி தாழ்த்துவார். 29

சுணங்கு - கணவரைப் பிரிந்தமையால் மகளிர் மார்பில் உண்டாகும் பொன்னிறமான தேமல். நுணங்கப் பொடிசெய - நுண் அணுக்களாகப் பொடி படுத்த. கரமுசலம் - கையிலுள்ள உலக்கை. உணங்க - காய. சிதறுபு - சிதறி.

26. மாதர்கள் பந்தடிப்பதைப் பார்த்துப் பதிந்தமனத்தை மீட்க இயலாது ஆடவர்கள் நோக்குவார்கள். முந்துறுத்து - முதலிலேயே. ஒறுப்பபோல் - அடிப் பதைப்போல. வார் கதுப்பு உயங்க - நீண்ட கூந்தல் அசைய.

27. சிவந்த கையிலுள்ள அம்மானைக்காய்க்குப் பின்னே செல்லும் பெண் களின் கண்கள் தாமரைக்காட்டிலே வண்டு விழ்வனபோல உலாவுவன. அவற்றி னூடே உலாவருகின்ற ஆடவர் கண்கள் ஒருமுறை மாதர் முலைகள் தோன்ற அங்கேயே ஒருமுறை பதிந்து நிற்பனவாம்.

28. காதிலே குதம்பைகள் ஊசலாட, கமுகமரத்திலே கட்டிய ஊசலைத் தழுவியாடுகின்ற பெண்களை அணுகி நோக்கினல், நிலைதவருத பெரியோர்களின் மனமும் மயங்கித்தள்ளாடும். குதம்பை - காதணி. மூட்டிவிட்ட - கட்டியுள்ள.

29. கண்ணில் நீர்துளித்துச் சிந்த ஊடி மனமிரங்கிய பெண்களின் ஆடைகளைக் கணவன்மார் வலிந்து இழுக்க, இரத்தினப்பொடிகளைத்தூவி வெளிச்சத்தை மறைக்க, அப்பொடி சூரிய ஒளிபட்டுப் பேரொளியை வீசுதலும் வெட்கிப்போய்க் கூந்தலை அவிழ்த்து விடுவார்.

கழற்று ருத காதலர் கலன்றெ றுந்த மதுரு
நிழற்ற நோக்கி மாற்றவர் நிரந்த ரித்து ளாரென
வழற்று ளத்தி ஞர்களை யவர்க லன்றெ றுந்தம
துழற்று ருச்சு வட்டினை யுணர்த்தி நக்க ணைப்பரால். 30

மாழை நோக்க ணங்கனர் மகிழ்நர் தம்மொ டாடிய
தாழை வாளு டையினன் றனது நூற்சு வைத்திறம்
பூழை வைத்து வாண்முகம் பொற்ப நோக்கிக் கூட்டினுட்
கூழை நாக்கி ளிசொலக் கொம்பிற் பூவை கற்குமே. 31

சாந்த மான்ம தங்களுந் தபனி யப்பொ டிகளுங்
காந்து பன்ம ணிகளுங் கமழ்ந்த தொங்க லீட்டமும்
பூந்து ணர்த்தி ரள்களும் பொற்ப மல்கு காட்சியான்
மாந்தர் வைகு மண்கொலென்று வானு ளார யிர்ப்பரே. 32

உறைத்து - துளித்து. கலாய்த்து - ஊடி. கனற்றலும் - வெளிப்படுத்து தலும்.

30. தம் கணவன்மார் அணிந்துள்ள கழற்ருத அணிகள்தோறும் தங்கள் உருதோன்ற அதனைக்கண்ட பெண்கள், தம் மாற்ருரைத் தம் கணவன்மார் மார்பில் தாங்கியுள்ளனர் என எண்ணி, ஊடிய மனமுடைய மனைவிமார்களை அவர்கள் அணிந்த அணிகடோறும் தம் உருவின் நிழல் பதிந்திருப்பதைச் சுட்டிக்காட்டி நகைத்து அவர்களை அணைத்துக்கொள்வார்கள்.

மாற்றவர் - மாற்ருளாகிய மனைவி. நிரம் - நெஞ்சு, மார்பு. உழல்துறு சுவட்டினை - உழலுகின்ற நெருங்கிய உருவின் நிழலை.

31. பெண்கள் தத்தம் கணவன்மார்களோடு நிகழ்த்திய காமநூல் சுவையின் வகைகளைக் கூட்டில் அடைபட்டிருக்கிற கிளி சிறுபொந்தில் முகத்தை வைத்து, முகத்தைப் பார்த்துச் சொல்லப் பூங்கொம்பிலுள்ள நாகணவாய்ப்புள் அதனைக் கற்றுக்கொள்ளும்.

மாழைநோக்கு - மாவடுவின் பிளவுபோன்ற கண். மகிழ்நர் - கணவன்மார். தாழைவாள் உடையினன் - தாழம்பூவாகிய உடைவாளை ஏந்திய மன்மதன். பூழை - பொந்து. கூழைநாக்கிளி - அக்கினியால் சாபமுற்று அறுபட்டுக் கூழையான நாவையுடைய கிளி.

32. சந்தனத்தூள், கத்தூரி முதலியன நிறைந்து விளங்குவதால் வானுளோர் மக்கள் வாழும் மண்ணுலகமோ என ஐயுற்றனர் என்பதாம்.

மான்மதம் - கத்தூரி. தமனியப்பொடிகள் - பொன்தூள்கள். காந்து - ஒளிவிடுகின்ற. தொங்கல் - மாலை. பொற்ப - அழகுமிக. அயிர்ப்பர் - ஐயப்படுவர்.

இலங் கெழிற்று றக்கமு மிடைந கரெ னப்படத்
துலங்கெ ழிலி டைநகர்த் தோற்ற மீத றைந்தன
மலங்க னீர்க்கி டங்கு சூழ்ந்த ரற்றநொச்சி யோங்கிய
நலங்கி ளர்ந்த வுண்ணகர் நன்மை தன்னங் கூறுவாம். 33

உண்ணகர்

வேறு

அவுணர் பேய்க்கண மவமர ணத்தவ ராரிரு ளிவையென்றுஞ்
சிவண வோர்புறத் திளிவரு நேமியஞ் சிலம்படுத் தது நீங்கிப்
புவனம் போற்றுற நின்றதே போன்மதில் புறக்கட லிருண்ஞாலம்
துவர நீத்தத னுடங்கடுத் திருந்ததே சூழ்ந்ததண் கிடங்கம்மா. 34

அடங்க லாருயிர் குடிப்பன தானையு மாடலம் பரிமாவுங்
கடங்க ளூற்றிய குஞ்சரத் திரள்களுங் கவின்றதேர் களுமல்ல
கிடங்கி னூடுலா மிடங்கருந் தாமரைக் கேழ்த்தமுள் ளரைத்தாளு
மடங்கு ருதமர் பற்பல புரிந்தடு மதிற்பொறி களுமாதோ. 35

---

33. சுவர்க்கமே இடைநகர் எனும்படி விளங்கும் இடைநகரைப் பற்றிக் கூறினோம். அகழிசூழ்ந்து மதில்கள் ஓங்கி வளைந்துள்ள அகநகரின் அழகைச் சிறிது கூறுவோம்.

துறக்கம் - சுவர்க்கம். மலங்கல் நீர் - கலங்கல் தண்ணீர். கிடங்கு - அகழி. நொச்சி - மதிள். தன்னம் - சிறிது.

34. அவுணர்கள், பேய்க்கணம், அவமரணம் அடைந்தவர்கள் நிறைந்த இருள் இவை என்றும் கலந்திருக்க, ஓர்புறத்திலே இழிந்த. சக்கரவாளகிரி தான் அடுத்துள்ள இடத்தைவிட்டு நீங்கி, உலகம்போற்ற நின்றதேபோலும் மதிலையும், புறவாழிக்கடல், அந்த இருளுலகத்தை விட்டுவிலகி, அச்சக்கரவாளகிரி போன்ற மதிலுடன் அடுத்திருந்ததேபோலும் அகழியும் என்ன, மதிலை அகழி சூழ்ந்தன.

அல்ல மரணத்தவர் - நேர்மையல்லாத மரணத்தை அடைந்தவர்கள். ஆர் இருள் - செறிந்த இருள். சிவண - பொருந்த. இளிவரும் - இழிந்த, நேமியஞ் சிலம்பு - சக்கரவாளகிரி. அடுத்தது நீக்கி - தான் அடுத்துள்ள இடத்தின் நீங்கி மதில், சக்கரவாளகிரி தீயோர்வாழும் இடத்தைவிட்டு உலகம்போற்ற வந்தது போலும்என்க. புறக்கடல் - புறவாழிக்கடல். துவர - நன்றாக, அறவே. அதன் உடங்கு - அதனுடன், மதிலுடன். புறக்கடல் சக்கரவாளகிரியுடன் அடுத்திருந் ததேபோல மதிலும் அகழும் இருந்தன என்க.

35. பகைவருயிரைக் குடிப்பன நால்வகைப் படைகளும் அல்ல. அகழியி லுள்ள முதலைகளும், தாமரைத்தண்டுகளும், மதிற்பொறிகளுமேயாம் என்பது.

அடங்கலார் - பகைவர். தானை - காலாட்படை. ஆடலம்பரி - வெற்றி தரும் குதிரைகள். பரிமா - விரைந்த செலவினையுடைய குதிரைகள். கடங்கள்.

பெருவ னப்பினுற் றுழனியாற் சுவையினுற் பெருகிய மணத்தாலெவ்
உருவு மின்புறு மூற்றினுன் மலர்க்கரங் கோடரித் தடங்கண்ணுர்
பொருவ வைவகைப் பொறிகட்கு நுகர்ச்சியாய்ப் பூவைய ருளமேபோன்
மருவு வஞ்சமுங் கொடுமையு மாழமும் வரம்புறக் காட்டாதால். 36

போதி யம்பலத் திருநட மாலொடு போந்துகண் டிணர்த்தில்லைச்
சோதி யம்பலத் தாடலு மிருந்தவா தொழுதுகண் ணுறக்காண்பா
னேதி யம்புவி தாங்கினே னுடல்வளைத் துயர்த்திய சிரமேபோன்(று)
ஆதி யம்புரி மதின்மிசைக் கோபுர மைதுவீற் றிருந்தன்றே. 37

ஓங்குமா டத்தி னுயர்வற வுயர்ந்தகோ புரத்தின்மே னிலமெல்லாம்
தூங்கு வீங்கிருட் பிழம்புவாய் மடுத்துணுஞ் சுடர்மணி விளக்கங்கள்
ஆங்க வான்மிசை யுயர்த்திய சேடனு ரரித்தடந் தலைச்சூட்டின்
நீங்கு ருதொளி கஞற்றிய மாணிக்க நிரையென விறைகொள்ளும் 38

மதநீர். மதமூன்றிடத்தினின்று ஊற்றுதலின் பன்மையாற் கூறினர் என்க. குஞ்சரம் - யானை. கவின்ற - அழகுசெய்யப்பெற்ற. இடங்கர் - முதலை. கேழ்த்த - நிறம் பொருந்திய. மடங்குருது - மடங்காமல். அமர் - போர். மதிற்பொறிகள் - மதில்மேல் வைக்கப்பெற்றுள்ள 'சென்றெறிசிரலும், நின்றெறி கவணும், நெய் யிடு குழிசியும், செம்பிடு பொறியும்' போன்ற இயந்திரங்கள்.

36. அகழி பெண்களைப்போல ஐந்து இந்திரியங்கட்கும் நுகர்ச்சியூட்டு வதாய், அவர்கள் மனம்போல வஞ்சனையும், கொடுமையும். ஆழமும் அளவிட்டுக் காண இயலாதது என்பதாம்.

வனப்பு - அழகு. துழனி - ஒலி. வனப்பு முதலியவற்ருல் அகழி, கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து உற்றறியும் ஐவகைப் போகங்களையும் தரும் மாதரை ஒத்தது என்க.

37. ஆதிசேடன் உடலை வளைத்துத் தலைநிமிர்ந்து தில்லைத் திருக்கூத் தையுங்காண விழைவதுபோலக் கிடந்தது மதிலும் மதில்மேலுள்ள கோபுரமும் என்பது.

போதியம்பலம் - அரச அம்பலம். மால் - திருமால். இணர்த்தில்லை - பூங் கொத்துக்களையுடையதில்லை. காண்பான் - காண்பதற்காக. ஓதி அம்புவி தாங் கினேன் - கற்று, உலகத்தைத் தாங்குபவனுகிய ஆதிசேடன். ஆதியம்புரி - பேரூ ரின் மற்றெருபெயர். ஐது - அழகிதாக.

38. கோபுரமீதுள்ள விளக்குகள் ஆதிசேடனுடைய முடிமீதுள்ள மாணிக் கங்களை ஒத்தன என்பது.

தூங்கு வீங்கு இருள் - மிக்க செறிந்த இருள். தடம் அரித்தலைச் சூட்டில் - விசாலமான பாம்புத் தலையிலுள்ள உச்சிக்கொண்டையில். கஞற்றிய - கக்கிய. இறைகொள்ளும் - தங்கும். காற்றுமண் டலத்தில் உலாவும்.

ஒளிநி லாவிய மதில்மிசை யுயர்த்திய வொண்டுகிற் கொடியெல்லாம்
வளியி னுட்டயர் வனநெடுந் துறக்கமார் வளத்தினை யெதிர்நோக்கித்
தெளிநி லாவிய விந்நகர் வளத்தினைச் சிறிதுமொவ் வாதென்றே
குளிரு நீர்ப்புவி தெளிதர முடித்தலை குலைத்துநிற் பனபோன்ற. 39

நாக வைப்பினைத் தலைப்படும் அகழியும் நாமவிஞ் சியுஞ்சொற்றும்
தேக மற்றவன் கணைகளி னலிபவர் திருவெலா முறவாங்கி
யேக மற்றவெண் ணிரண்டுறுப் பினுளமு திருக்கையோர்ந் தினிதூட்டிப்
போக வைப்பெனப் புணர்பவர் சேரியின் பொற்பினி யுரைப்பாமால். 40

பரத்தையர்வீதி

வேறு

அடுத்தெதிர் நோக்கினு ரறவ ராயினும்
கடுத்தலைக் கொண்டெனக் காம மீக்கொள
வெடுத்தபித் திகைதொறு மிலேகித் திட்டனர்
வடுத்தபு கலைச்சுவை வயங்கச் சித்திரம். 41

---

39. மதில்மிதுயர்த்திய துணிக்கொடிகள் வாயுமண்டலத்தில் ஆடுவன சொர்க்க வளப்பத்தை நேரில் பார்த்து, பேரூரின் வளப்பத்திற்குச் சிறிதும் ஒவ்வாதென்று உலகந்தெளியத் தலையசைப்பன போன்றன என்பதாம்.

துகிற்கொடி - துணிக்கொடி. வளியின் நாடு - வாயுமண்டலம். அயர்வன - அசைந்தாடுவன.

40. அகழியும் மதிலும் சொன்னோம்; போகபூமியெனப்புணரும் பரத்தையர் சேரியின் அழகுரைப்பாம் என்பதாம்.

நாகவைப்பு - நாகலோகம். நாம - அச்சம். இஞ்சி - மதிள். தேகமற்றவன் - அநங்கனுகிய மன்மதன். நலிபவர் - வருந்துவார். திதிவாரங்கட்கு ஏற்ப மகளிரின் கைமூலம், கன்னம், கண், நிதம்பம் முதலான பதினறு இடங்களில் அமுதநிலையுண்டாமாதலின் அதனையறிந்து வருகின்ற காளையர்க்கு இன்பம் வழங்குவோர் பரத்தையர் என்பது.

41. நோக்கினவர் துறவிகளேயாயினும் விடம் தலைக்கேறினற்போலக் காமம் ஊட்டும் சித்திரங்களைச் சுவர்தோறும் எழுதியுள்ளனர் என்பதாம்.

அறவர் - துறவி. கடு - விடம். பித்திகை - சுவர். இலேகித்து - எழுதி. வடுதபு - குற்றம் அற்ற. வயங்க - விளங்க.

தெள்ளிய கலைஞருஞ் சிறப்பென் றுட்கொள
வுள்ளுரு கமளியி னுளுற்று மொண்பொருள்
கிள்ளையும் பூவையுங் கிளந்து வாதுசெய்
பள்ளியு மைம்பொறி பறிக்கு மென்பவே. 42

சுண்ணமும் நறுமணத் தொங்க லிட்டமுங்
கண்ணிய துகில்களுங் கலனும் வார்மது
நண்ணிய தண்டுநற் கலவைச் செப்புங்கொண்(டு)
அண்ணலம் வேதிகை யாவி மாய்க்குமே. 43

முழாவொலி குழலொலி முறைசெ யாடலும்
எழாலிசை குரலிசை யெழுப்பு பாடலுந்
தழான்மனை யிரதியுந் தானுங் காமவேள்
விழாவயர் களமென விளங்கும் வைகலும். 44

ஆவிவந் தஃதென தாவி வந்ததென்(று)
ஓவிய மனையவ ரொல்கிக் கொண்டுபுக்(கு)
ஏவியல் விழிகளா லிளக்கி நெஞ்சகம்
பூவிய லணைமிசைப் போக மூட்டுவார். 45

---

42. கலைஞரும் பாராட்ட, படுக்கையறையின் நிகழ்ச்சிகளைக் கிளியும் பூவையும் வாதுசெய்யும் இடங்களும் ஐம்பொறிகளைக் கவருவனவாம்.

தெள்ளிய கலைஞரும் - காமம் கூடாதது எனத் தெளிந்த கலைஞர்களும். உள் உருகு அமளியின் - மனமுருகும் படுக்கையின். உளுற்றும் ஒண்பொருள் - நிகழ்த்தும் காமச்செயலாகிய பொருள்களை.

43. பரத்தையர் வீட்டு மேடைகள் காமுகர் உயிரைப்பறிக்கும் என்பதாம். சுண்ணம் - நறுமணப்பொடிகள். தொங்கல் - மாலை. கண்ணியதுகில் - சித்திர வேலைப்பாடுகளுடைய கண் கவருவனவாகிய ஆடைகள். கலன் - ஆபரணங்கள். மதுத்தண்டு - கள்ளடைத்த மூங்கிற்குழாய்கள். அண்ணல் அம் வேதிகை - பெருமையில் சிறந்த அழகிய மேடை. ஆவி - உயிர்.

44. ஆடலும் பாடலும் தழுவிய மனை இரதியுந் தானுமாக மன்மதன் விழாக்கொள்ளும் இடமாகவிளங்கிற்று என்பதாம்.

எழால் இசை - யாழோசை. குரலிசை - மிடற்றோசை. தழான்மனை-தழுவிய பரத்தை வீடு.

45. ஓவியம் ஒத்தபரத்தையர் விழிகளால் காளையர் கருத்தை உருக்கிப் போகம் ஊட்டுவார் என்பதாம்.

ஆவிவந்தது ஆவிவந்தது - என் உயிர் வந்தது உயிர் வந்தது என்று. உயிர்போன்ற ஆடவரை உயிர் என்று மருட்டினுள் என்பதாம். வந்தஃது - என்பது விரித்தல் விகாரம். ஒல்கி - அசைந்தாடி. ஏ - அம்பு.

போதுக ளாடிய பொம்ம லோதியர்
சூதுக ளாடியுஞ் சுவைத்த காமநூல்
வாதுக ளாடியு மருவி யாடியும்
மாதுக ளாடவர் வாகை தீர்ப்பரால். 46

மனைவியை வெறுத்து மைந்தர் வளநில மனைத்து நல்கி
நினைவொடு வாக்குக் காய நித்தலுந் தம்பா லாக்கத்
தனைநிக ரில்லா வின்பந் தருதலாற் கணிகை மாதர்
வினைநிகர் புதல்வர்த் தாழ்த்தி விடருள் குரவர் போன்றார். 47

உறுப்பினுட் குறைவு மின்றி யுரிமையோன் றேற்ற மாகத்
துறுத்தநெஞ் சுடைய வில்லிற் றுணைமுலை மாதர் தம்மை
வெறுத்தேறும் மைந்த ரெல்லாம் விழைதகு பால ரென்றால்
கறுத்தகட் கணிகை மாதர் காரிகை யுரைக்கற் பாற்றே. 48

காமவேள் கலையி னானுங் காரிகைத் திறத்தி னானும்
தூமமார் குழலி னார்க்குத் தோற்றுவிண் ணொளித்தா ரெல்லாம்
நாமவா மனத்த ராகி நானிலத் தின்று காறும்
வாமமார் மலர்மென் பாதம் வைத்தில ருருவுந் தோற்றார். 49

---

46. பரத்தையர் சூது, வாது முதலிய பலவகையான உபாயங்களால் போகத்தில் ஆடவர் வெல்லாதவண்ணம் செய்து தாம் வெல்லுவர் என்பதாம். மருவி - புணர்ந்து. வாகை - வெற்றி.

47. மனைவியை வெறுத்து, மக்கள், பொருள், நிலம், யாவுமளித்து, மனம் வாக்குகாயங்களைத் தம்பாலாக்க நிகரிலா இன்பந்தரும் பரத்தையர் வினையொத்த சிடனைப் பணியச்செய்து மோட்சம் அளிக்கும் ஆசாரியனை ஒத்தனர் என்பதாம்.

வினைநிகர் புதல்வர்த் தாழ்த்தி - இருவினை யொப்புவந்த சிடனைப் பணியச் செய்து, அதாவது மக்கட்பாசம் நீக்கி என்பது.

48. ஆடவர், அழகும் உரிமையும் பெற்ற மனைவியையும் வெறுத்துத் தம்மையே விரும்பச்செய்யும் கணிகையரழகு சொல்லுமளவினதன்று என்பதாம்.

குலமகளுக்குள்ள தனிச்சிறப்பு உரிமை என்ற ஒன்று. "தம்மில்லிருந்து தமதுபாத்து உண்டற்றால், அம்மா அரிவை முயக்கு" என்ற குறளின் ஒலியால் வந்த உரையிது. துறுத்த - செறிந்த. ஏறும் - வலிமை. காரிகை - அழகு.

49. பெண்களுக்குத் தோற்று தேவர்களாகி விண்ணில் ஒளித்தவர் எல்லாரும், அச்சமுடையராகி இன்றுவரை மண்ணுலகில் அடிகூட வைக்காதவர்களாகி உருவின்றி உள்ளனர் என்பதாம்.

காரிகைத் திறத்தினானும் - அழகிய தன்மையானும். தூமம் - புகை. நாம அவா மனத்தராகி - அச்சங்கலந்த மனத்தையுடையராகி. வாமம் - அழகு. உரு - வடிவு.

ஒருவர்வா யடுத்த தம்ப லொளிர்செழும் பவள வாயின்
மருவிவா னமுதாய் மற்று மடுத்தவர் வாயிற் புக்குப்
பெருமகிழ் வுறுத்த லாலே பிறங்கிய வரைவின் மாதர்
பொருவின்மந் திரத்தி னுக்கும் புனிதவெந் தழலே யொத்தார். 50

செவ்வணிச் சேடி மாரும் வெள்ளணிச் சேடி மாரும்
கௌவையம் பறைக ளார்ப்பக் கடைத்தலை முற்ற வைகும்
வெவ்விழி மாத ரின்பம் விலைசெயுஞ் சேரி யிதால்
எவ்வமில் பொருள்கள் விற்கு மெழில்கொளா வணங்கி ளப்பாம். 51

கடைவீதி

வேறு

பாட்டளி கெண்டிச் சுலவும் பன்மலர்த் தொங்கல்க ளூற்றிச்
சேட்டொளி வச்சிரச் சட்டந் திண்பவ ளத்திரள் காலில்
பூட்டியு யர்த்தி நிறுவிப் பூகமும் வாழையும் யாத்துத்
தோட்டலர் சிந்தி மெழுகித் தூமம் பயின்ற கடைகள். 52

---

50. ஒருவர் வாயில் பொருந்திய தம்பலத்தை விளங்குகின்ற செழுமை யான பவளம்போன்ற வாயில் பொருத்தித் தேவாமுதமாக மற்றவர் வாயிலும் புகுத்திப் பெருமகிழ்ச்சியை விளைவிப்பதால், பொதுமகளிர் ஒப்பற்ற மந்திரத் தால் ஆக்கப்பெறுகின்ற வேள்வித் தீயை ஒத்தனர்.

தம்பல் - தம்பலம், எச்சில். வரைவு இல்மாதர் - பொதுமகளிர். புனித வெந்தழல் - யாகத்தீ.

51. செவ்வணி அணிந்த தோழியரும், வெள்ளணியணிந்த தோழியரும் பழிச்சொல்லாகிய பறைகள் ஒலிக்க முன்வாசலை முற்றுகையிடும் விலைமாதர் இன் பத்தை விற்கும் சேரியிது. இனிக் குற்றமில்லாத பொருள்களை விற்கும் அழகிய கடைத்தெருவைப்பற்றிச் சொல்லுவோம்.

செவ்வணிச்சேடிமார் - தலைவர் பரத்தையர் வீட்டிலிருக்கும்போது தலைவி பூப்படைந்தாள். கருத்தரிக்கும் காலத்து அவளைப் பிரிதல் கூடாதாகையால் விரைவில் வீட்டுக்குவந்து கற்புடையாளைக்கூடுக என்று உணர்த்தத் தோழியர் செம்மலர், செவ்வணி, செவ்வாடை அணிந்து அவன் கண்பட அவனுறையும் பரத்தைவீட்டு வாசலுக்குச் செல்வது மரபு. அங்ஙனமே தலைவி கருவுயிர்த்து நீராடியமையைக் குறிக்க வெள்ளாடை முதலியன அணிவித்து அனுப்புதல்மரபு. இருவகையாரும் பரத்தையர் வீட்டு வாசல்களில் முற்றுகை யிடுகின்றனர் என்பதாம். கௌவை - பழிச்சொல். எவ்வம் - துன்பம். ஆவணம் - கடைத்தெரு.

52. மாலைகளை நாலவிட்டு, வயிரச்சட்டத்தைப் பவளக்காலில் பூட்டி உயர்த்தி நிறுத்தி, கமுகமும் வாழையும் கட்டி, பூக்களைச் சிந்தி, மெழுகிப் புகை யூட்டப்பட்டுள்ளன கடைகள்.

நித்திலக் கோவைமா ணிக்க நெடுந்தொடை நீலத் தொடையல்
வித்துரு மத்தின் பிணையல் வில்லுமிழ் கோமே தகத்தின்
கொத்தும ரகத மாலை கோப்பமை புட்பரா கங்கள்
வைத்தவ யிரமு மற்றும் வானவி ஞணமுன் யாத்தார். 53

இருவினை யாலிருண் மூழ்கும் எண்ணி லுயிரும் பெருமான்
கருணையின் நல்கும் உடலிற் கதித்துவெவ் வேறுகன் மங்கண்
மருவிவ ளர்ப்பன போல வணிகர்கள் பொற்குவை கொண்டு
பொருள்கள் வெவ்வேறு தமக்குப் பொருந்துவ விட்டுவர் நாளும். 54

வரையிற் பொருள்பெரி தென்கோ வனத்திற் பொருள்பெரி தென்கோ
குரைபுனற் பூம்பணை மாட்டுக் கொண்ட பொருள்பெரி தென்கோ
திரைதவழ் வேலைத் துறையிற் றெவ்வும் பொருள்பெரி தென்கோ
நிரைநிரை யாக வளங்க ணிறுத்த நியமத்தின் மாதோ. 55

தழைத்த கருமக் கியையத் தனுகர ணுதிய ளிக்கும்
குழைத்த கடுக்கைச் சடிலக் குழகன் றிருவருண் மான
இழைத்த குருமணி மாடத் தீண்டிய வெவ்வெப் பொருளும்
மழைத்தட ந்தோளின் வணிகர் வருவிலைக் கேற்ப அளப்பார். 56

பாட்டு அளி கெண்டி, பாடுகின்ற வண்டுகள் கிளறி. சுலவும் - சுற்றுகின்ற. தொங்கல் - மாலை. நாற்றி - தொங்கவிட்டு. சேடு - பெருமை.

53. கடையலங்காரம் கூறுகிறது இச்செய்யுள்; நித்திலம் - முத்து. வித்துருமம் - பவழம். பிணையல் - மாலை. மரகதம் - பச்சைமணி. வானவில - ஐந்துக்கு மேற்பட்ட நிறங்களையுடைய இந்திரவில். யாத்தார் - கட்டினர்கள்.

54. நல்வினை தீவினையாகிற இருவினைகளால் ஆணவ இருளில் மூழ்கிக் கிடக்கும் பலவுயிர்களும், சிவபெருமான் அருளால் உதவும் உடலொடு கூடிப் பிறந்து, வெவ்வேறன கன்மங்களைப் பொருத்தி வளர்ப்பனபோல; வணிகர்கள் பொன் குவியலைக்கொண்டு, தத்தமக்கேற்ற பலபொருள்களையும் தொகுப்பார்கள்.

55. வரிசைவரிசையாகப் பலவகையான வளங்களைத் தொகுத்த கடைத் தெருவில், மலைபடுபொருள் பெரிது என்பேனே? காட்டில் விளைந்த பண்டங்கள் மிகுதி என்பேனே? வயல்படுபொருள் மிகுதி என்பேனே? கடல்துறையிலிருந்துபெற்ற பொருள் எளிதென்பேனே?

வரைபடுபொருள் - மிளகு, முத்து, தந்தம் முதலியன. காடுபடுபொருள் - வெண்ணெய், தயிர் முதலியன. வயல்படுபொருள் - நெல்முதலியன. அலைபடு பொருள் - உப்பு, மீன், முத்து, பவழம் முதலியன. குரைபுனல்பணை - ஒலிக்கின்ற நீரையுடைய வயல். திரைதவழ்வேலை - அலைமோதுகின்ற கடல். தெவ்வும் - கவரும். நியமம் - கடைத்தெரு.

56. பரிபாகப்பட்ட கன்மத்திற்கு ஏற்ப உடல் உலகு கருவிகளையுதவும் சிவபெருமானுடைய திருவருள்போல, நிறம்பொருந்திய மணிகள் வைத்திழைக்

முன்னென் றறைந்துபின் னென்று மொழியு மதங்கள்போ லாது
பின்னர்க் கிளப்பது முன்னர்ப் பேசுபொ ருட்குமா றின்றி
மன்னுறு சைவசித் தாந்த வாய்மை நிகர்ப்பப்பின் வேறு
சொன்னிகழ்த் தாமை விலையைத் துணிந்தறுப் பார்துலைக் கோலார். 57

செந்தமிழ் நாட்டுறை வோருஞ் சேர்ந்த கொடுந்தமிழ் நாட்டின்
வந்திடு பன்னிரு வோரு மற்றைய தேயத்துப் பாடை
தந்திடு மீரொன் பதின்மர் தாமுந் தலைமயக் குற்றுங்(கு)
எந்தவு லகிது வென்ன யாரையு மையத் துறுத்தும். 58

வாரணம் விற்குந ரோர்பால் வாம்பரி விற்குந ரோர்பால்
தேரணி விற்குந ரோர்பால் செறிபடை விற்குந ரோர்பால்
தாரணி விற்குந ரோர்பால் சந்தனம் விற்குந ரோர்பால்
தோரண மல்கு நியமச் சுந்தரம் யார்சொல வல்லார். 59

கப்பட்ட மாடங்களில் செறிந்த எந்தப்பொருளையும் வணிகர்கள் விற்றுமுதலாகும் விலைக்கேற்ப அளந்துகொடுப்பார்கள்.

குருமணி - நிறம்பொருந்திய மாணிக்கமுதலான மணிகள். கடுக்கை - கொன்றை. சடிலம் - சடை. குழகன் என்றது என்றும் இளமையையுடைய சிவ பெருமானை.

57. துலைக்கோலையுடைய வணிகர், முன்னே ஒன்றைச் சொல்லிப் பின்னே அதற்குமாறாக ஒன்றைச் சொல்லும் சமயங்கள்போலாது, பின்னேசொல்வது முன்சொல்லப்பட்டதற்கு மாறில்லாமல் நிலைபெற்ற சைவசித்தாந்த சமயத்தின் உண்மையை ஒப்ப, பின்னே வேறு சொல் நிகழாவண்ணம் பொருள்களின் விலையைத்துணிவுசெய்து வரையறை செய்வார்கள்.

58. செந்தமிழ்நாட்டு மக்களும் பன்னிரண்டு கொடுந்தமிழ் நாட்டுமக் களும் வேற்றுமொழி பேசும் பதினெண்மொழி மக்களும் கலந்து இது எந்தவுலகு என்று யாரையும் ஐயம் உறுத்தும்.

பதினெண்பாடை பேசும் நிலவகைகளின் விரிவை நன்னூல் சூத்திரவுரை யில் காண்க.

59. பொருள் வெளிப்படை: வாரணம் - யானை, வாம்பரி - தாவுகின்ற குதிரைகள். தேரணி - தேர்வரிசை. படை - படைக்கலம். தார்அணி - மாலை முதலிய அணிகள்; குதிரையின் கழுத்திலணியும் கிண்கிணிமாலை முதலிய அணி களுமாம். தோரணம் - முன்வாயிலில் கட்டப்படும் பனையோலையும் மாவிலையுங் கலந்த தொங்கலலங்காரம்.

பிண்டியு நோலைத் திரளும் பிட்டு மவலும் சுவைகண்
மண்டு களிநெய் மிதந்த வருக்கமும் பாகும் விராவிக்
கொண்ட வறையல் பலவுங் கொண்முத லான புழுக்குங்
கண்டிடு முன்மண நாசி கலாய்ப்புன னாவிடை யூறும். 60

வருக்கைச் சுளைமாங் கனிகள் வாழைப் பழமிவை முற்றும்
முருக்கொ ளிரோட்டத் தமுதின் மொய்ச்சுவை தோற்றவல் லாவென்(று)
ஒருக்கு விலைசெயு மாத ரொண்பொரு ளோடுரு நோக்கிச்
செருக்கிய மைந்த ருயிருந் தெவ்வுவர் பின்விடல் வல்லார். 61

பொன்னணி வெள்ளி யணிகள் போற்றவு லோகக் கலன்கள்
என்னவு மில்லையென் னாமே யீந்திடு மாவணஞ் சொற்றாம்
மன்னிய செல்வப் பெருக்கால் வானவர் வைகுபொன் னாடு
வெந்திட வென்று விளங்கும் வீதியின் வண்ணம் விரிப்பாம். 62

மற்றைய வீதிகள்

வேறு

பனவர் மன்னவர் வணிகர்சூத் திரரிவர் பயின்றிடு மணிவீதி
அனகன் மந்திரத் தணிமதிற் புறத்தன வவற்றய லனநான்கென்(று)
இனிது சொற்றசா திகடம்மு ளுயர்ந்தவுங் கலந்தீன்ற
புனித மில்லவர் தத்தம தொழுக்கொடு பொருந்திவாழ் மறுகன்றே. 63

---

60. பிண்டி - மாவாலான பண்ணியாரம். நோலை - எள்ளுருண்டை. வருக்கம் - வகைவகையான உணவு. பாகு - வெல்லப்பாகு. வறையல் - வறுவல். புழுக்கு - சுண்டல்வகை. நாசி - மூக்கு. கலாய் - கலந்து. நாவிடைப் புனல் ஊறும் என்க.

61. பலா, மா, வாழை இவற்றின் பழங்கள் முழுதும் செம்முருக்கம் பூப்போலும் உதட்டிலிருந்தூறும் அமுதத்தின் சுவைக்கு ஒவ்வா என்று ஒருக்கிய விலைமாதர்கள், பணத்தோடு தலைநிமிர்ந்து தருக்கிய காமுகர் உயிரையும் பறிப்பர்; பின்பு விடுவார்களோ.

முருக்கு - செம்முருக்கம்பூ. ஓட்டம் - உதடு. தெவ்வுவர் - அபகரிப்பர்.

62. பொன், வெள்ளி, பொன்மயமான உலோகம் இவற்றாலாகிய அணி வகைகளில் எதுவும் இல்லையென்னாமல் வழங்கும் கடைத் தெருவைப்பற்றிச் சொன்னோம். நிலைபெற்ற செல்வத்தின் பெருக்காலே தேவலோகத்தையும் முதுகிடச்செய்யும் வீதிகளின் அழகை விரித்துரைப்பாம்.

63. நால்வகை வருணமக்களும் வாழும் வீதிகள் சிவபெருமான் திருக்கோயிலின் திருமதிட்புறத்தே உள்ளன. அவற்றிற்குப் புறத்தே அநுலோமர் பிரதிலோமர்கள் வாழுகின்ற நான்கு வீதிகள் உள்ளன.

தென்ற லூடுவந் தசைதரு பந்தருஞ் செறிந்தபந் தரினுள்ளால்
துன்று மாமணி வேதிகை யொழுக்கமுஞ் சுடர்ந்தவே திகையெங்கும்
ஒன்று பூரண கும்பமும் வயின்வயி னுயர்த்திய கொடிக்காடும்
நின்ற வார்கொடி யருகெலாந் தோரண நிரைகளு நெருத்தோறும். 64

வழுவை வாம்பரி மணிநெடு ந் தேர்சனம் வழங்கலி னெடுவீதி
புழுதி யாடுவ வொருமுறை யொருமுறை பொருகரி பரிதேர்பொன்
முழுது மாடவ ரளித்தளித் தொழுக்கிய முதுக்குறை ந் தோர்செங்கை
யொழுகு தீம்புன லத்துக ளவிப்பன வொருதினம் போனாளும். 65

வேறு

நச்சுறழ் விழியிற் றீட்டின ருகுத்த நலத்தரு மஞ்சனக் குழம்பும்
வெச்செனப் புலந்து சிதறிய கலனும் விராவிய வீதியி னவைதாம்
எச்சிலென் றறிந்தோ பிறர்மனை யவர்பா லிணங்கிய வவற்றையுந் தொடுதற்
கச்சம துற்றோ வறிந்தில மெவரு மடிக்கழல் தொடுத்தலால் வழங்கார். 66

செதுமகப் பயத்த லொருமகப் பயத்த லிலகவா ணுதலியர்ப் பயத்தல்
எதுவுமின் றுக விருத்தலென் றறிந்தோ ரியம்புநான் மலடுமாங் கின்றிப்
புதுவதி னியற்ற வணிகல னணிந்து பூவையர் குதுகலந் தழுவ
வதுவைக ளயரு மதுரமங் கலமே வைகலும் வளமனை தோறும். 67

---

64. தெருக்கடோறும் தென்றற் காற்று வீசும் பந்தரும், பந்தருக்குள்ளே இரத்தினங்களால் இழைக்கப்பெற்ற மேடைகளும், அவற்றில் பூரணகும்பங்களும், இடமிடங்கடோறும் உயர்த்திய கொடிகளின் காடும் கொடிகளின் பக்கத்திலே தோரணவரிசைகளும் உள்ளன.

65. ஒருநாளைப்போலத் தினமும், யானையும் குதிரையும் தேரும் காலாளும் வழங்குவதால் தெரு ஒருமுறை புழுதி எழுவன. ஒருமுறை யானை குதிரை தேர் பொன் இவைகளை ஆடவர் தானம் செய்து தாரைவார்த்த தண்ணீர் அப் புழுதியை அடக்குவனவாம்.

66. மாதர் கண்ணிலிருந்து உகுத்த மைக்குழம்பும், ஊடிச் சிதறிய அணிகளும், கலந்து கிடக்கின்ற வீதியில் அவைகளை எச்சில் என்றெண்ணியோ, பிறர் மனைவியர் அணிந்த அணிகளைத்தீண்டுதற்கு அஞ்சியோ, நாமறியோம்; ஆடவர்கள் தொடுதோலணிந்தல்லது வீதியில் நடக்கமாட்டார்கள்.

67. சாகும் குழந்தைகளைப் பெறுதல், ஒருபிள்ளையைப் பெறுதல், பெண்களையே பெறுதல், பிள்ளையே இல்லாதிருத்தல் என்ற நால்வகையான மலடுகளும் இன்றிப் புது நகைகளை அணிந்து, பெண்கள் மகிழத் திருமணம் புரியும் மங்கல ஒலியே ஒவ்வொருநாளும் வீடுகள்தோறும் விளங்குவன.

வருந்திய வேனில் வருபுனற் கெதிரு மள்ளரின் மனமகிழ்ந் தடுத்த
விருந்தெதிர் கொண்டு மலர்முகத் தினிமை விராவிய குளிர்மொழி கொடுத்
திருந்தறு சுவையி னல்வகை யுண்டி தேக்கெறி தரநனி யூட்டிப் [துத்
பொருந்திய திருவிற் கியைவன பிறவும் புகன்றளிக் குநரவ ணவரும். 68

உரம்பெறு பிரம சரிவனத் துறைவோ ருலகனைத் தையுமற நீத்தோர்
பரம்பரன் றெனது புலத்தவர் விருந்து பசையுடை யொக்கன்மன் றுறந்தோர்
அரம்புசெ யிலம்பாட் டினரிறந் தாரென் றையிரு வரையுநன் ரேம்பி
வரம்பெறு தமைப்பி னேம்புந ரல்லா தவர்மனை யறத்தவ ணிலரே. 69

பஃறிறத் தானு மழிதரு பொருளைப் பன்முறை யிரந்துகை யேற்றுச்
சிஃறிறத் தானு மழிதரா வுடலுந் திப்பிய கதிகளுஞ் செறிக்கும்
நஃறினத் தினரா லிவரிவர் போல நமக்குரி யாரெவ ரென்று
விஃறிவள் பூணு ரிரப்பவர்க் கெனைத்தும் விசலே விருதென வுடையார். 70

---

68. அந்நகரத்து எவரும், வேனிலால் வருந்தி தண்ணீரை எதிர்நோக்கும் உழவரைப்போல மனமகிழ்ந்து, வந்த விருந்தினரை எதிர்கொண்டழைத்து, மலர்ந்த முகத்தோடு, குளிர்ந்த வார்த்தைகளைச் சொல்லி, அறுவகைச் சுவையோடு நாலுவகையான உணவுகளையும் ஏப்பம் வரும்படி நன்ருக உண்பித்து, தம் செல்வநிலைக்கேற்பப் பிற பொருள்களையும் வழங்குவர்.

ஆறுசுவை - திதிப்பு, கார்ப்பு, புளிப்பு, உப்பு, உவர்ப்பு, கசப்பு என்பன. நால்வகை உண்டி - உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன என்பன.

69. ஞான வலிமைபெற்ற பிரமசாரியர்கள், வானப் பிரத்தர்கள், சந்நியாசிகள், சிவபெருமானுக்குரிய தென்றிசையில் வாழும் பிதிரர்கள், விருந்தினர், அன்புடைய சுற்றத்தார், அரசரால் நீக்கப்பட்டோர் அழுகின்ற வறியர்கள், ஒருவருமின்றித் தம்பால் வந்து இறந்தோர் என்ற பதின்மரையும் நன்ருகப் பாதுகாத்துப் பின்பு தம்மைப் பாதுகாப்பவரல்லாதவர்கள் அந்நகரத்து இல்லறத்தில் இலர்.

உரம் - வலி, அறிவுமாம். பரம்பரன் - சிவபெருமான், அவர் தென்னுடைய சிவனெனப்படுதலின் பரம்பரன் தெனது புலம் என்ருர். பசை - அன்பு. ஒக்கல் - சுற்றம். மன் - மன்னன். அரம்புசெய் - அழுதலைச் செய்கின்ற, குறும்பு செய்கின்ற எனலும் ஆம். இலம்பாடு - வறுமை. இப்பாடல் "தென்புலத்தார் தெய்வம்" "இல்வாழ்வா னென்பான்" என்ற குறள்களின் கருத்தைத்தாங்கி எழுந்தவை.

70. பலவாற்ருனும் அழியும் பொருளைப் பலமுறை யிரந்து வாங்கி, சில வகையானும் அழியாத உடலையும் தேவகதியையும் கொடுக்கும் நல்ல தன்மையையுடையவர்கள் இவர்கள்; இவர்கள்போல நமக்கு உரியவர்கள் யார்? என்று ஒளிநுடங்கும் துணிகளை அணிந்த இல்லறத்தார் இரப்பவர்கட்கு எதையும் வாரி வழங்குதலையே தம் விருது எனக் கொண்டவர்கள் ஆவர்.

விருது - பெருமை.

தங்குல தெய்வ மல்லது தேவ சாதியொன் றையும்பணிந்-தறியார்
சிங்குத லறியா வன்பிறைற் கணவன் சேவடி தொழுதெழு திறத்தார்
இங்குறை பவரென் றிறைஞ்சுதல் போல விரவியு மதியுந்தாழ்ந் திறப்பக்
கொங்குறை குழலார் பயிலுமே னிலையுங் கூடகோ புரமும்விண் ணிவந்த. 71

குங்குமப் பனிநீர் சிவிறியின் வாங்கிக் குலவுத்தோ ளாடவர் குலமும்
மங்கையர் குலமும் பனித்தெதி ராட வயங்குமப் புனன்மணி வரன்றித்
துங்கமே னிலையின் மேடைநின் றிழிவ சுரர்தொழு மேருமால் வரைநின்(று)
இங்குலி கத்தின் விராய்மணி சிதறி யிழிதரு மருவிபோன் றனவே. 72

வேறு

பளிக்கு மேனிலத் திற்பயின் மாதரார்
வெளிக்கண் நின்றவர் போன்று விளங்கலால்
களிக்கும் வானர மங்கையர் காண்கெனத்
தெளிக்க லுற்றன ராற்சில ரைச்சிலர். 73

தலைவர் தோள்புணர் தையலர் வாண்முக
மலரி னொள்ளொளி வெளவுதற் கன்றுகொல்
கலைம திக்கதிர் காலத ரூடுபோய்
உலவி யல்லதப் பாலொழி வில்லதே. 74

---

71. 'இங்கே தங்கிய பெண்கள் தத்தம் குலதெய்வத்தையல்லது பிற தெய்வங்களைத் தொழுது அறியாதவர்கள். குறையாத அன்பால் தம் கணவனையே தொழுது விடியலில் எழுகின்ற தன்மையையுடையவர்கள்' என்று சூரிய சந்திரர்கள் இறங்கிவந்து வணங்குதல்போல இறப்ப, மணம்பொருந்தியகூந்தலையுடைய பெண்கள் பயிலுகின்ற மாட கூடங்களும் கோபுரங்களும் விண்ணிலே உயர்ந்து விளங்குவன.

சிங்குதல் - குறைதல். முதலிரண்டடிகளில் 'தெய்வந்தொழாள்' என்ற குறளின் கருத்து விளங்குகிறது.

72. மகளிரும் ஆடவரும் தூவிக்கொள்ளும் சாதிலிங்கம் கரைத்த நீர் மாடத்திலிருந்து வழிவது மேருமலையிலிருந்து அருவி விழுவதுபோலாம் என்பது.

சிவிறி - நீர்தூவுந் துருத்தி. இங்குலிகம் - சாதிலிங்கம்.

73. பளிங்கு மாடத்தினுள் விளங்கு மாதர்கள், விண்வெளியில் தோன்றுவதுபோல் இருத்தலால் சிலர் சிலரைத் தேவமாதர்களைப் பாருங்கள் என்று காட்டுவதுபோலாம்.

74. கணவரைப் புணர்ந்த காரிகையர்களின் முகமாகிய தாமரையின் ஒளியைக் கவர்வதற்காக அன்று; வேறு வழியின்மையால் மதி மாளிகையின் சன்னல் வழியாக அல்லது அப்பால் போக இயலாது.

கால் அதர் - காற்றுப்புக வைத்த வழி.

கற்பி னார்மழை பெய்வது காண்பவென்(று)
அற்பி னலவர் பாலணமு சாதகம்
பொற்ப வோதிப் புயல்கண்டு போக்கொரீ இப்
பற்பல் காலமும் பாடுவ மாடெலாம். 75

துணைச்ச கோரஞ் சுதைகொளத் தன்னிடை
அணைத்தெஞ் சாம லவிர்மதிக் கோர்பெயர்
இணைக்க ணானன மென்றனர் விண்ணிற்போய்ப்
பணைத்த திங்களைப் பாற்றுதற் காய்ந்துளார். 76

செண்ண வஞ்சிலம் போசையு நீஞ்சொலால்
வண்ண மேகலை வாய்விடு மோசையும்
பண்ணை வண்டின் படர்குர லோசையும்
அண்ணன் மாடம் அருவிர வத்துமே. 77

பிழிம கிழ்ந்திடு பெய்வளைத் தோளியர்
கழிசி றப்புறக் கவற்றலிற் காமவேள்
ஒழிவு செய்தில னெண்கணை யேவிய
பழியி ராப்பக லுஞ்செய நிற்குமே. 78

---

75. கற்புடைய பெண்கள் மழைபெய்ய வைப்பார்கள் என்று அன்பினால் அவர்களை அணுகிய சாதகப்புள், அழகான அவர்களுடைய கூந்தலாகிய மேகத்தைக்கண்டு புறம்போதல் ஒழிந்து, பக்கம் எல்லாம் பலப்பல காலம் பாடிக் கொண்டேயிருப்பன.

76. விண்ணிற்சென்று பெருத்துள்ள சந்திரனை அழித்தற்குரிய வழிகளை ஆராய்ந்த பெண்கள் சகோரப் பறவையின் இரட்டையை அமுதுண்ணத் தம்மிடத்தில் எஞ்சாமல் அணைத்துக்கொண்டு, விளங்குகின்ற சந்திரனுக்கு இணைக் கண்ணானனம் என்றும் ஒரு பெயருண்டு என்றனர்.

இணைக்கண்ணானனம் - இரண்டு கண்களையுடைய முகம்.

77. சிலம்போசையும், மேகலையொலியும், வண்டோசையும் மாடங்களில் இரவும் பகலும் என்றும் நீங்காதன.

செண்ண அம்சிலம்பு - வேலைப்பாடமைந்த அழகிய சிலம்பு. பண்ணை - கூட்டம். அண்ணல் - பெருமை. இரவத்தும் - இரவிலும்.

78. கணவர் செய்யும் மிக்க ஒப்பனையும் பாராட்டும் கவலை ஊட்டுதலால், மகளிரை, மதனன் ஒழியாது பாணங்களைத்தூவி, இரவும் பகலும் பழிவாங்குவன்.

பிழி - தேன் அல்லது கள். கழி சிறப்பு கவற்றலின் - அவன் அளவுக்கு மிகச் செய்யும் சிறப்புக்கள் தான் செய்த தவற்றினை மறைக்க என்று எண்ணியமையால் புறத்தொழுக்கம் உடையான் என்ற கவலையை உண்டாக்க என்க. பிரிவால் உண்டான சிறப்பு எனலுமாம். பிரிவால் உண்டான சிறப்பாவன சுணங்கும் பொலிவும் முதலாயின.

புகரி லாவற மும்பொரு ளாக்கமும்
பகலெ லாம்பல வாற்றினு மீட்டுவார்
மகர வார்குழை மைந்தரி ராவெலாம்
பகருங் காமப் பயன்பெரி தீட்டுவார். 79

ஆது லர்க்கும் அறுசம யத்தர்க்கும்
ஓது வார்க்கும் உணவு பெருக்கிய
ஏதி லாவன்ன சாலையு மேனைய
தீதில் சாலையுஞ் செப்பவொண் ணாதரோ. 80

பாவ லர்பலர் சூழ்தரப் பண்பொடு
நாவ லர்க ணயந்துநன் னூறெரிந்(து)
ஓவி லின்ப வுததி படிதருந்
தாவி லாக்கழ கந்தலை தோறுமே. 81

ஊழ்விச் சாவன வோட மறையுளி
சூழ்விச் சைக்கலை வேதியர் துன்னுபு
வாழ்விச் சாதரர் வாழ்த்துமுத் தீவளர்
வேழ்விச் சாலை விளங்கு மிடந்தொறும். 82

---

79. ஆடவர்கள் பகற்பொழுதெல்லாம் பலவகையானும் குற்றமிலாத அறத்தையும் பொருளையும் சம்பாதிப்பர்; இரவிலே காம இன்பத்தை நுகருவர்.

புகர் - குற்றம்.

80. அன்ன சத்திரங்களும் ஏனைய தருமசாலைகளும் சொல்ல இயலாத அளவு பெருகியுள்ளன என்பதாம்.

ஆதுலர் - விருந்தினர். அறுசமயத்தார் - அகமும், புறமும், அகப்புறமும், புறப்புறமுமாகிய ஆறு ஆறுவகையான சமயக் கொள்கைகளையுடையார். இதனால் சமயக்காழ்ப்பின்மை காட்டியவாறு. ஏது - குற்றம்.

81. பாவலர் பலர்சூழ, நாவலர் நூல்நயம் தெரிந்து இன்பக்கடலில் படியும் கல்விக் கழகங்கள் பல என்பதாம்.

ஓவில் - இடையீடில்லாத. உததி - கடல். தா - கேடு.

82. ஊழ்வினையின் வித்தாகவுள்ள பாவ கன்மங்கள் ஓட, வேத விதிப்படி ஆராயும் வித்தைகளிலும் கலைகளிலும் வல்ல வேதியர்கள் நெருங்கி, வாழ்கின்ற வித்யாதரர்களோடு வாழ்த்துகின்ற முத்தீயை வளர்க்கும் வேள்விச்சாலைகள் இடங்கள்தோறும் விளங்கும்.

விச்சு - விதை. வேள்வி எதுகைநோக்கி வேழ்வி ஆயிற்று.

சரியை யோரிரண் டுந்தவி ராதவர்
கிரியை யோரிரண் டுங்கெழு முற்றவர்
உரிய யோக மிரண்டுமு ளுற்றுநர்
மரிய தூய மடங்கள னந்தமே. 83

மூன்று பாழுமு றையினி கழ்ந்தறத்
தோன்று மேலைச்சு கப்பெரும் பாழிடை
ஏன்ற வாழ்வினி தென்ன விருப்பவர்
ஆன்ற மாமட மும்பல வாங்கரோ. 84

விண்ணு ளாரும் விளம்பவல் லேமெனும்
வண்ண வீதி வளஞ்சொலின் முற்றுமோ
எண்ணில் வீதியுஞ் சூழ்ந்திமை யோர்தொழும்
அண்ணல் கோயி லணிசில கூறுவாம். 85

திருக்கோயில்

வேறு

வேத நாடருந் தனிப்பொருள் விளங்குமிந் நகர்மேல்
ஏத மாம்வகை யேகன்மி னென்றிமை யாரைக்
காத லாற்புடை விலக்குவ போன்றுகற் கதிர்க்கும்
மாதர் வாண்மதில் வானுறப் பலநிவந் தனவால். 86

---

83. சரியையும் ஞானத்திற்சரியையும், கிரியையும் ஞானத்தில் கிரியையும், யோகமும் ஞானத்தில் யோகமும் செய்கின்றவர்கள் பொருந்திய மடங்கள் பல.

மரிய - மரீஇய என்பது எதுகை நோக்கிக் குறுகி நின்றது. பொருந்திய என்பது பொருள்.

84. 'முப்பாழும் முறையே நிகழ்ந்து, அற்றுப்போக அதற்கு மேலுள்ள சுகவடிவான பாழில் பொருந்திய வாழ்வே இனிது' என விருக்கும் ஞானிகள் வாழும் மடங்கள்பல.

"முப்பாழும் பாழாய் முடிவில் ஒரு சூனியமாய் அப்பாலும் பாழான ஆனந்தமே" இனிதென்றிருக்கும் ஞானியர் என்பதாம்.

85. வல்லேம் - வன்மையுடையேமா? அல்லேம் எனப் பிரித்து விளம்ப மாட்டோம் எனக்கொள்ளலும் ஆம்.

86. 'சிவபெருமான் விளங்கும் இந்நகர்க்குமேல் செல்லாதீர்கள்' என்று இமையவர்களை விருப்பால் விலக்கும் மதில்கள் வானளாவ உயர்ந்துள்ளன.

கல்கதிர்க்கும் மாதர்வாண்மதில் - கற்கள் ஒளிவிடும் அழகியஒளிசெய்கின்ற மதில்கள். நிவந்தன - உயர்ந்துள்ளன.

மின்னு மாமணி விளங்கிய விமலர்தூ வியின்பாற்
பொன்னி ஞலிர சதத்திஞற் புரையறு மணியான்
மன்னு மாடங்கள் தயங்குவ வயங்குமே ருவின்பால்
துன்னு நாலிரு குலகிரி துலங்குவ போன்ற. 87

ஏக நாயகற் கினிதுறத் திருவமு தமைக்கும்
மேக மேற்றவழ் மடைப்பள்ளி வீங்குகுய்ப் புகையும்
யாக சாலையிற் புகையுமீண் டலினிரு நிலத்தோர்
மாகர் போலிமை யாதவ ராகலர் மாதோ. 88

அரச சீயத்தின் குரலெழுந் திசையணு காமை
விரசு வேழங்கள் நீளிடை விலகியாங் கிறைவர்ப்
பரசு வார்வினை சேயிடை முழுவதும் பாற
முரச மார்ப்பன மூவிரு காலமு முகிலின். 89

விண்ணின் நின்றெளி ருடுவெலாம் வினைச்சமம் பிறந்து
மண்ணி மும்மலச் சேற்றினை மலரடித் துணைக்கீழ்
நண்ண வெம்பிரான் திருமுன்னர் நண்ணிய தென்ன
எண்ணில் பன்மணி விளக்கிடை யருதிமைப் பனவே. 90

---

87. பட்டிப் பெருமான் எழுந்தருளியுள்ள கோயிலின் ஸ்தூபிபக்கலில் பொன்னுலும் வெள்ளியாலும், மணிகளாலும் ஆன மாடங்கள் விளங்குவன மேருவின் பக்கத்தில் எட்டுக் குலமலைகளும் விளங்குவபோன்றன.

88. மடைப்பள்ளிப் புகையும் யாகசாலைப் புகையும் நெருங்குதலால், மண்ணுள்ளோர் தேவர்கள்போல கண் இமைக்காதவர்கள் ஆகிலர். புகையால் மூடித்திறந்து மண்ணவராகவே விளங்கினர். புகையில்லையானுல் கண்ணிமைக்காமலேயிருந்து தேவர்களே ஆயினும் ஆவர் என்பது.

மாகர் - தேவர்கள்.

89. சிங்க ஏற்றின் குரல்கேட்குந் திசையில் அணுகாமல், யானை விலகிச் செல்லுவது போலச், சிவபெருமானை வணங்கும் அடியவர் வினைகள்முழுதும் அழிந்துகெட ஆறுகாலமும் முரசம் ஆர்ப்பன.

விரசு - கலந்த.

90. வானத்தில் விளங்கும் நட்சத்திரங்கள் அனைத்தும், இருவினை ஒப்புப் பெற்று, மும்மலச் சேற்றையுங் கழுவித் திருவடிப் பேற்றையடைய, பட்டிப்பெருமான் முன்னர்வந்தன என்று சொல்லும்படி எண்ணிலாத விளக்குகள் இடையருது விளங்கின.

உடு - நட்சத்திரம். மும்மலச் சேற்றினை மண்ணி என்க. மண்ணி - கழுவி. மணிவிளக்கு - இரத்தின தீபங்கள். இமைப்பன - விட்டுவிட்டு ஒளிசெய்வன.

தரும மாற்றுநர்க் கல்லது சந்நிதிச் சார்விங்(கு)
அருமை யாமென வனைவரு மறிந்தன ருய்யத்
தரும மேயுரு வாகிய தனிவிடை யுயர்த்த
உருவ வார்கொடி திருமுன்னர் விசும்பறுத் தோங்கும். 91

உருவம் யாதெடுப் பினுமந்த வுருவினை யிருவர்
துருவ யாவது மறிகலான் றெழும்பிடைப் படுத்தல்
பொருள தாமெனப் புவியுளோர் தெளிந்துயச் சித்த
தருவி டாதிறை முடிமிசை மலர்பல சாத்தும். 92

பவளத் தூண்மிசைப் பசுமணி யுத்திரத் தொளிகள்
திவளப் பாய்த்திய வச்சிரப் பலகையிற் செறித்துத்
துவளத் தூக்கிய நவமணி மாலைகள் துலங்குந்
தவளத் தேசினற் றபனியக் கோயிலொப் பிலதே. 93

தெனுது திக்கின னரசறத் தேவர்க டேவன்
தனுது விண்ணாகந் தழைதரத் தரைமகிழ் சிறப்ப
மனுதி மூன்றினு மாதிசை வர்கள்வழி படமற்(று)
அனுதி சைவர்விற் றிருந்தன ரருட்கொடை வழங்கி. 94

---

91. அறம் செய்தவர்கட்கு அன்றி, அரன் சந்நிதியையடைதல் இயலாத காரியம் என்பதை அனைவரும் அறிந்துய்யத் தரும வடிவாகிய இடபம் எழுதிய கொடி கோயிலின் வாயிலில் விண்ணை ஊடறுத்து ஓங்கும்.

உருவவார்கொடி - அழகிய நீண்டகொடி

92. எந்த உருவம் கொள்ளினும், இறைவனை வழிபடுதலே பொருளது என்று அனைவரும் தெளிந்துய்யச் சித்தவிருட்சங்கள் சிவபெருமான் முடிமீது பல மலர்களைச் சிந்திவணங்கும்.

சித்ததரு - சிந்தித்தவற்றைக் கொடுக்கும் கற்பகமாதிய மரங்கள்.

93. பொற்கோயில் தனக்கு ஒப்பின்றி விளங்கும் என்பதாம்.

ஒளிகள் திவள - ஒளிகள் நுடங்க, தவளத்தேசின் - வெண்மையான ஒளியையுடைய. தபனியம் - பொன்.

94. எமன் தன்னுட்சிகெட, இந்திரனுடைய நகரமான சொர்க்கம் வளமுற; மண்ணகம்மகிழ, ஆதிசைவர்கள் மனம் வாக்கு காயங்களான் வழிபட, அநாதி சைவனுகிய பரசிவன் அருள்வழங்கி விற்றிருந்தான் என்பதாம்.

இனிது தேவர்கள் யாரையு முறுப்பிடை யடக்கிப்
புனிதம் யாவையுந் தருபொரு ளைந்தையும் பூக்கும்
முனிவி லானினங் கிடந்தருண் முழுப்பயிர் தழைக்கும்
மனிதர் தேவர்சூழ் பட்டியின் பெருமையார் வகுப்பார். 95

விமல நாயகன் விண்ணவர் நாயகன் விடைத்த
சமலர் காணருந் தத்துவ நாயகன் நடஞ்செய்(து)
அமரு நாயக னருளினு லாங்கவன் பேரூர்க்
குமரி மான்மியங் கூறுவல் வினைப்பகை குமைப்பேன். 96

திருநகரப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 191

---

95. முப்பத்து முக்கோடி தேவர்களையும் தம் அவயவத்தடக்கி, தூய்மை அனைத்தையும் தரும் பஞ்சகவ்யங்களை உண்டாக்கும் சினமற்ற பசுக்கூட்டங்கள் விளங்கி, அருளால் பயிர்முழுதும் தழைக்கச் செய்கின்ற - தேவர்களும் மனிதர்களும் சூழ்ந்த பட்டியின் பெருமையைக் கூறவல்லவர் யார்?

96. சிவபெருமான் அருளால் பேரூர்மான்மியத்தைக் கூறுவேன்; என் வினைப்பகைகளையும் பதனழியச் செய்வேன் என்பதாம்.

விடைத்த சமலர் - தருக்கிய மலங்களோடு கூடிய சகலான்மாக்கள். குமரி மான்மியம்-அழியாத்தன்மைபெற்ற பெருமையோடுகூடிய வரலாறு. குமைப்பேன்-பதனழியச்செய்வேன்.

மூன்றாவது

நைமிசப்படலம்

கடலமிழ் தெடுத்து மாந்துங் கடவுளர் குழாங்கள் நாளும்
உடனுறைந் தவியின் பாக முண்பது போலும் வையத்(து)
இடர்தபத் தவங்க ளாற்றி யிருடிய ரின்னல் வாழ்க்கை
நடலைவே ரகழா நிற்கு நைமிசக் கான மன்றே. 1

முறுகிய வன்பு பொங்க முறைமுறை வளர்க்கும் வேள்வி
நறுமணப் புகைகள் பொங்கி நாகர்வா ழுலகிற் கற்பத்(து)
உறுசிறைச் சுரும்ப ரோப்பி யுலாவுதல் அறியா ரெல்லாம்
மறுவறு கற்ப கத்து மலரின்வண் டுறுதென் பாரால். 2

பிழைதபு தேவர்க் கெல்லாம் பெரும்பசி தவிர்த்த லானும்
மழைவளஞ் சுரந்து மண்ணின் மன்னிய வுயிர்கட் கெல்லாம்
தழைபசி தவிர்த்த லானுஞ் சகமொரு மூன்றுங் காக்கும்
விழைதரு செவிலித் தாயின் மிளிர்வதா லனைய கானம். 3

செருத்தலா னார்த்த யூபத் திரளினை நோக்கி யந்தோ
வருத்துவ திவற்றை விண்ணோர் வன்பசி தவிர்த்தற் கன்றே
உருத்தகு மனைய தேவர்க் கூட்டுதும் யாமு மென்னுக்
கருத்துற வடிசி லூட்டக் கற்றது காம தேனு. 4

---

1. இருடிகள், உலகத்துன்பங்கள் அனைத்தையும் போக்கப் பலவகையான தவங்களைச்செய்து, துன்ப வாழ்க்கையின் நடுக்கவேரைத் தோண்டும் நைமிசாரண்யவனமானது தேவர்கணங்கள் நாடோறும்தங்கி அவிப்பாகத்தை அருந்தும் இடம்போலும் என்பது. நடலை - நடுக்கம்.

2. நைமிசத்தில் இயற்றப்படும் யாகப்புகை பரவி தேவலோகக் கற்பக மலரிலுள்ள வண்டுகளை ஓட்டும். இதனை அறியாதவர்கள் கற்பகப்பூவில் வண்டு மொய்க்காதென்பார்கள். நாகர் - தேவர்கள். கற்பம் - கற்பகமரம்.

3. தேவர்களின் பெரும் பசியைப் போக்குதலானும், மழைவளஞ் சுரந்து மண்ணுலகிலுள்ள மக்களின் பசியைப் போக்குதலானும், மூன்றுலகையும் காக்கும் செவிலித்தாய்போல விளங்குவது நைமிசம்.

4. காமதேனு, யாகப்பசுக்களைக் கட்டியுள்ள யூபத்தம்பத்தைப் பார்த்து, ஐயோ! தேவர்களின் கொடும் பசியைப் போக்கவன்றோ இவைகளைக் கொல்வது? யாமும் அவர்கள் பெரும் பசியைத் தணிக்கப் பால் ஊட்டுவோம் என்று உணவு ஊட்டக் கற்றுக்கொண்டது.

பறவைகள் யாத்த யூபம் பசுத்தகர் யாத்த யூபம்
உறமணிக் கமடம் யாத்த யூபமும் உம்ப ரூரும்
பறவையும் விலங்கு நீர்வாழ் சாதியும் பார்த்துப் பார்த்திவ்
வறவினை கிடைத்த தின்றே நமக்கென வகத்துட் கொள்ளும். 5

பராய்ப்பணி முனிவ ரானும் பண்ணவர் பயிற லானும்
இராப்பக லிறப்பத் தேவர் கலன்கதி ரெறித்த லானும்
விராய்ப்புகை தவழ வண்டு விலக்கிய தருக்க ளானும்
உராய்ப்பொழி பசுந்தேன் கற்பத் துலகொடு பொருமக் காடு. 6

திரைதவழ் மணிப்பூம் பொய்கைத் தீர்த்தங்க ளணிந்து பொன்னம்
வரைசிலை யாக வாங்கி மதிலொரு மூன்றும் வென்ற
அரையனுக் கிருக்கை யாகி யருந்தவர் கருத்து முற்ற
விரையநல் கிடுமக் கானப் பெருமையார் விளம்ப வல்லார். 7

உவாவள ரனைய கானத் துறுகலி யுகத்தை யஞ்சித்
துவாபர யுகவந் தத்திற் றெருக்கனர் தவங்க ளாற்றும்
அவாவறு வசிட்டர் வச்ச ரகத்தியர் வாம தேவர்
தவாதநல் லொழுக்கஞ் சான்ற சவுனக ராதி யானோர். 8

செருத்தல் ஆன் - மடியையுடைய யாகப்பசு. யூபம் - யாகத்தம்பம். உருத்தரும் - அழகிய. அடிசில் - உணவு.

5. யாகததிற்கு என்று பறவைகளையும், யாகப் பசுவையும், ஆமைகளையும் கட்டிய யூபத்தினை; தேவர்கள் வாகனமாக்கொண்டு ஊரும் பறவை முதலியன பார்த்து இப்புண்ணியம் நமக்குக் கிடைக்கவில்லையே என எண்ணுவன.

கமடம் - யாமை.

6. நைமிசவனம் கற்பகவனத்தோடு கூடிய தேவருலகை ஒத்திருக்கும். பராய் - பராவி; வணங்கி. பண்ணவர் - தேவர்கள். வண்டு விலக்கியதரு-வண்டு மொய்க்காத மரங்கள். உராய் - உரசி.

7. பொய்கைகளோடும் தீர்த்தங்களோடும்கூடிச் சிவனுக்கு இருப்பிடமாகி முனிவர்கள் விரும்பிய எல்லாவற்றையும் கொடுக்கும் அவ்வனத்தின் பெருமையை யார் சொல்லவல்லார்?

8. யானைகள் வளரும் அவ்வனத்தில் கலியுகம் வரப்போவதற்கு அஞ்சித் துவாபரயுக இறுதியிலேயே வசிட்டர், வச்சர், அகத்தியர், வாமதேவர், சவுனகர் முதலான முனிவர்கள் கூடினர்.

'தவங்கள் ஆற்றும் அவா அறு வசிட்டர்...முதலானோர்' என்றது தவங்கள் செய்யும் முனிவர்கள். ஆசையற்ற முனிவர்கள் எனத்தனித்தனிக் கூட்டுக. தவாத - கெடாத.

பரவிய ஆண்டு நூற்றுப் பத்துற முடிவு செய்யும்
பிரமசத் திரயா கத்தைப் பேணிநர் வளர்க்க லுற்றார்
கரவறு மனைய யாகங் காணிய வாங்காங் குள்ள
வரமுறு முனிவர் தாமும் வந்தனர் தொக்கா ரன்றே. 9

வேதங்க ளனைத்துந் தேர்ந்த வியாதமா முனிவன் பாங்கர்க்
கோதறு புராண மெல்லாங் குறைவற வுணர்ந்து முக்கண்
நாதனை யுளத்தி னுட்டி நாவினை ந்தெழுத்துந் திட்டும்
சூதமா முனியு மந்தத் தூத்தவக் கானம் புக்கான். 10

வேறு

புக்க சூதனை யிருந்தமா தவத்தோர் பொங்கு காதலி னெதிர்கொடு வணங்கித்
தக்க வாதனத் திருத்தினர் பூசை சால வாற்றினர் பழிச்சினர் மொழிவார்
மிக்க மாதவம் புரிந்தன மடிகேள் விளைத்த மாதவப் பயனதாய் வந்து
கைக்க ணமல கக்கனி போலக் காட்சி தந்தனை கருணையா லெமக்கு. 11

கருவி மாமழை யெழுந்துநீர் பொழியக் கலதி வேனிலி னுருப்பமங் குளதோ
பருதி நாயக னெழுந்தொளி கஞற்றப் பாயி ருட்படா மருமையு முளதோ
பொருவில் வானமிழ் தெய்திடச் சாதல் போவ தல்லது புணர்வது முளதோ
மருவி நீதருங் காட்சியாற் கேள்வி வறுமை நீங்குரு திருப்பது முளதோ. 12

---

9. நூற்றுப்பத்து ஆண்டுகள் செய்யும் பிரமசத்திர யாகத்தைச் செய்யத் தொடங்கினர். இந்த யாகத்தைக் காண்பதற்காக உலகில் ஆங்காங்குள்ள முனிவர்கள் அனைவரும் அங்குவந்து கூடினர்.

10. வேதவியாசரிடம் புராணங்கள் அனைத்தையும் கற்றுச் சிவத்தியானமும் சிவமந்திர செபமும் இடைவிடாது செய்யும் சூதமுனிவரும் அவ்வனத்திற்கு வந்தார். தூ - தூய்மை.

11. எழுந்தருளிய சூதமுனிவரை அனைவரும் எதிர்கொண்டு அழைத்து வணங்கி, ஆசனத்திருக்கச்செய்தனர்; பூசித்தனர், புகழ்ந்தனர். நாங்கள் தவம் பல செய்தோம் ஆதலால் அடிகள் நாங்கள்செய்த தவப்பயனாக வந்துஉள்ளங்கை நெல்லிக்கனிபோலக் கருணையால் காட்சி தந்தருளினீர் என்றார்கள்.

12. மழைபொழிந்தால் வேனில் வெப்பம் குறையாதிருக்குமோ? சூரியன் உதித்தால் இருள் அழியாமலிருக்குமோ? அமிழ்தங்கிடைத்தால் சாவுவருமோ? அவைபோலத் தேவரீர் தரிசனத்தால் கேள்வி வறுமை நீங்காதிருக்குமோ?

கருவி - தொகுதி. கலதி - கீழ்மையான. உருப்பம் - கொடுமை. பருதி நாயகன் - சூரியன். கஞற்ற - வெளிப்படுத்த. இருட்படாம் - இருளாகின்ற போர்வை.

உரைத்த வொன்பதிற் றிருபுரா ணத்துள்
உலப்பில் சீர்ப்பிர மாண்டத்திற் சிறப்ப
விரித்தி டுங்கௌ மாரசங் கிதையில்
விளக்க மாண்டநற் குமாரகண் டத்தில்
நிரைத்தி டுஞ்சிவ தலங்களின் மேலா
நிகழ்த்து மாதிமா புரத்தின் மான்மியத்தைத்
தெரித்தல் செய்தனை முந்தொரு ஞான்று
செம்ம லேதெரிந் திட்டன மேனும். 13

காதன் மங்கையர்ப் புணர்தொறும் புணர்ந்த காமு கர்க்குளம் அமைதரா [விழைவங்(கு)
ஆத றிண்ணமற் றதுவெனப் பேரூ ரமல நாயகன் காதைகேள் வியினெம்
பேதை நெஞ்சக மமைந்தில வதனுற் பெரும வின்னுநீ பேசுதல் வேண்டும்
ஏத மற்றடி யேங்கதி யடைய வெனவி ரந்தடி தொழுதனர் மீட்டும். 14

முனிவர் தம்முளப் பரிவினை நோக்கி முகம லர்ந்தருள் சூதமா முனிவன்
இனிது கூறுவன் கயிலைவீற் றிருந்த வெம்பி ரான்சயி லாதியைத் தெளித்தான்
புனித நந்திவேற் குமரனுக் குரைப்பப் புலவு வேலவ னாரதற் களித்தான்
துனிவி லன்னதை வியாதமா முனிவன் சுரந்த பேரரு ளாலெனக் களித்தான்.

தெள்ள வின்னமு தாகிய மேலைச் சிதம்ப ரேசர்த மான்மிய மிதனைக் [கருதி
கள்ள வைம்பொறி கடந்தவர்க் கன்றிக் கரிசு ளார்க்குறு பொருண்முதல்
விள்ளின் விண்டவ ரோடுகேட் டவரும் வெய்ய தீக்குழி யிரவியின் வழக்கம்
உள்ள காலமு மழுந்திமிக் கின்ன லுழப்பர் தீயருக் குரைப்பது தகாதால். 16

---

13. பதினெண்புராணங்களுள் பிரமாண்ட புராணத்தில் கௌமாரசங்கிதையிலே குமாரகண்டத்தில் சொல்லப்பெற்ற ஆதிபுரமான்மியத்தை முன்பொருநாள் அறிவித்தீர். நாங்கள் அதை நன்ருக அறிந்தனம்; ஆயினும் ...

14. காதல் மங்கையரைப் புணருந்தோறும் காமுகர் மனம் அடங்காதவாறு போலப் பேரூர்ப் பெருமான் வரலாற்றைக் கேட்கும் விருப்பில் எங்கள் மனம் அமைதியுறவில்லை. ஆதலால் மீளவும் கூறவேண்டும்; என்று திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர் முனிவர்கள்.

15. சூதன் முனிவர்கள் அன்பைக்கண்டு முகமலர்ந்து, இவ்வரலாற்றை இறைவன் திருநந்திதேவருக்கும், அவர் முருகனுக்கும், அவர் நாரதமுனிவர்க்கும், அவர் வியாசருக்கும் அவர் எனக்கும் முறையே கூறினர்கள்.

16. தெளிந்த தேவாமுதம்போன்ற மேலைச் சிதம்பரேசர் மான்மியத்தை பொறிபுலன்களை அடக்கியவர்கட்கு அன்றி, குற்றங்களை உண்டாக்கும் பொருள் முதலானவற்றைக் கருதிக் கூறினல், சொன்னவரும் கேட்டவர்களும் சூரியன் உள்ளவரை நரகில் வீழ்ந்து வருந்துவர். ஆதலால் தீயோருக்கு இதனைக் கூறுதல் தகாது.

நீவி ரோள்ளறி வெனுமதம் விறி நீடு முன்வினை நிகளங்கள் பரிய
ஒவில் வன்மல வெளின்முதன் முருக்கி யுடற்று மாயையுங் கருமமு மென்னும்
தாவில் பாகொடு தோட்டிகை விலக்கித் தயங்கு பேரருட் காட்டினை யடுத்தீர்
மூவி லிக்கதைக் கவளம்வாய் மடுத்தன் முறைமையா மெனச் சொலத்
[தொடங் கினனுல். 17

ஆய காலையி லருந்தவ முனிவ ரடிக ணந்திபா லரித்தலைச் சுடர்வேல்
மேய பாணியன் பெற்றது மதனை வீணை மாமுனிக் களித்ததும் விளங்க
ஏயு மாறுமுன் னருளுக வென்ன விலங்கி ருந்துயர் வாழ்க்கைவல் வினைக்குச்
சேய னுகிய வியாதனைத் தொழுது தெரிக்க லுற்றனன் சூதமா முனிவன். 18

நைமிசப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 209.

---

17. நீங்கள், தெளிந்த ஞானமென்னும் மதங்கொண்டு, பழைய வினைகளாகிற விலங்கு தெறிக்க, ஆணவமலமாகிற கட்டுத்தறியை ஒடித்து, மாயையும் கன்மமுமாகிற பாகனையும், அவன் கையிலுள்ள, தோட்டியையும் விலக்கி, விளங்குகின்ற திருவருள் மயமான காட்டை அடைந்தீர்கள். ஆதலால் மூப்பில்லாத இக்கதையாகிற கவளத்தை உண்டல் உங்கட்கு முறையாம் எனச் சொல்லத் தொடங்கினுர்.

விறி - பெருக்கி. நிகளம் - விலங்குச் சங்கிலி அல்லது தளை. பரிய - தெறிக்க, உடைய. வெளில் - கட்டுத்தறி. மாயை பாகன், கன்மம்தோட்டி என்க. மூ இல் - மூப்பு இல்லாத. கவளம் - யானையுண்ணும் ஒரு வாயளவுள்ள உணவு.

18. அப்போது முனிவர், திருநந்திதேவரிடம் குமாரக்கடவுள் கேட்டதும். அவர் நாரதருக்கு உபதேசித்ததும் ஆகிய நிகழ்ச்சிகளை எங்களுக்கு முதலில் விளங்கக் கூறுக என வேண்டிக்கொள்ள; சூதமுனிவர், மாறுபட்ட பெரிய துன்ப வாழ்க்கையைக்கொடுக்கும் வலிய வினைகள் அனைத்துக்கும் தூரத்திலிருப்பவராகிய வியாசமுனிவரை வணங்கிநின்று விண்ணப்பிக்கலாயினர்.

அடிகள் நந்தியில் - திருநந்திதேவராகிய அடிகள்பால். அரித்தலைச்சுடர் வேல்மேய பாணியன் - தீ கனலுகின்ற உச்சியையுடைய தகட்டுவடிவான சுடர் விடுகின்ற வேலேந்திய கையையுடைய குமாரக்கடவுள். விலங்கு இருந்துயர் வாழ்க்கை எனப்பிரிக்க.

நான்காவது

புராண வரலாற்றுப்படலம்

திங்கட் கொழுந்து தவழ்முடியிற் சினவா ளரவுந் திரைகொழிக்கும்
கங்கைப் புனலு மணிந்துமத கரியு மரியுங் கதப்புலியும்
அங்கத் துறுத்த வடையாளத் தவிருந் தவள நிறம்வாய்ந்து
துங்கச் சிவனை யவனுருவாய்ச் சுமக்கும் பெருமைத் துயர்கயிலே. 1

பொற்கோட் டிமய மகட்பயந்து புனல்வார்த் தமலற் களித்ததுவு
அற்கா தழியப் புரமூன்று மவிர்பொற் குவட்டு மேருவரை
சொற்கார் முகமா யிருந்ததுவுஞ் சுரர்மா முனிவர் தொழுதேத்தி
நற்கா மியங்கள் பெறக்கயிலை நவிர மிடமா னமைகண்டே. 2

திரையுந் தரங்கக் கடலேழுந் தேங்கி யுயருங் கடைநாளின்
விரைய வண்ட முகட்டளவும் வீறி வளருங் கயிலாய
வரையை யுளத்தின் மதித்திறைஞ்சும் வரத்தா லன்றே வாமனனர்
புரையி னெடிய வுருவாகிப் புவன மளந்து தருக்கியதே. 3

---

1. திருக்கயிலை சிவனுருவந்தாங்கிச் சிவபெருமானைத் தாங்குகின்றது என்பதாம்.

பிறைதவழும் திருமுடியில் பாம்பு கங்கை இவற்றையணிந்து யானை, சிங்கம், புலி இவைகளின்தோலை உடலில்கட்டி, வெண்ணீறுபூசிய மேனியுடன் விளங்கும் சிவபெருமானை, பிறைமதி தவழும் சிகரத்திலே பாம்பையும் கங்காநதியையும் தாங்கி, யானை, சிங்கம், புலி இவற்றையும் சுமந்து, பனியால் வெண்ணிறமாய் சிவனுருவாகவே விளங்கும் கயிலைசுமக்கும் பெருமையுடையது எனப் பொருத்திப் பொருள் காண்க.

கதம் - கோபம். அங்கம் - உடம்பு. துங்கம் - உயர்வு.

2. கயிலை சிவபெருமானுக்கு இடமானமை கண்டு, இமயமலை மகளைப் பெற்று, அவருக்கு அளித்தது. மேரு வில்லாகி அவர் கையில் இருந்தது என்பதாம்.

புனல் வார்த்து - தாரை வார்த்து. அற்காது - தங்காமல். சொல் - புகழப் படுகின்ற. கார்முகம் - வில். நல் காமியங்கள்பெற - நல்ல விரும்பிய பயனைப் பெற. நவிரம் - மலை.

3. கடலேழும் பொங்கியுயரும் யுகப் பிரளய காலத்தில் அண்டமுகட்டள வும் வளரும் கயிலைமலையை மனத்தால் தியானித்து வணங்கிய வரத்தாலேயே

பறப்பைக் கொடியோ ரிருவோரும் பகைப்பக் கடைநாள் வெள்ளத்தின்
இறப்பக் கனலம் பிழம்பாகி யெழுந்து வளர்தன் முதல்வன்போல்
சிறப்பக் கடைநாள் வருந்தோறுந் தெண்ணீர்ப் பரப்பின் மிசைத்தோற்றும்
நறப்பைந் தருசூழ் கைலைவரை நலக்கும் பெருமை நவில்வாரார். 4

குயிலைப் பழித்த தீங்கிளவிக் குமரி யிடத்தின் வீற்றிருப்ப
வெயிலைப் பொடித்த நகைப்படையாற் கென்று மிடமா யிருப்பதிந்தக்
கயிலைப் பொருப்பென் றவனேயாங் கந்தற் கென்றுங் கிழமையுறச்
சயிலத் திரள்க ளிடமாகத் தலைமை படைத்த தனையவரை. 5

அலையும் புனலு மலருமுறு மவரோ மெலியர் பகைதுமிக்குஞ்
சிலையுஞ் சிலையாச் சிலைவிடங்கொ டேவன் வலிய னெனக்கருதா(து)
உலையும் புவன மென்னேயென் றுன்னி நகைத்த நகையெனலாம்
நிலையுங் கயிலை வரைகிளைத்து நிமிருங் கிரணத் தொளியினையே. 6

வாமனவதார மூர்த்தியாகிய திருமால் திருவிக்கிரம அவதாரமாகி உலகத்தை அளந்து செருக்கினர்.

திரையுந் தரங்கம் - மடியும் அலை. வீறி - பெருக்கங்கொண்டு. புரை - குற்றம்.

4. பறவைக் கொடிபிடித்த திருமாலும் பிரமனும் பகைகொள்ள, பேரூழிக் கால வெள்ளத்திலே தீப்பிழம்பாகி எழுந்து வளர்ந்த தன்னுடைய தலைவனைப் போலவே. பேரூழிக் காலந்தோறும், நீர்ப் பிரளயத்தின்மீது வளர்ந்து தோன்றும், மணம்பொருந்திய பசிய மரங்கள் அடர்ந்த கயிலை மலையின் நன்மைதரும் பெருமையைச் சொல்வார் ஆர்?

பறப்பை - பறவை, கருடனும் அன்னமும். இறப்ப - மிக. நற - மணம், கள்.

5. உமாதேவி இடப்பாகத்தில் வீற்றிருக்கச் சிவபெருமானுக்கு என்றும் இடமாவது இக்கயிலைமலையே என்று சிவபெருமானின் வேறல்லாத கந்தப்பெருமானுக்கு என்றும் உரிமை உண்டாக மலைகள் எல்லாவற்றிற்கும் தலைமை படைத்தது கயிலை.

நகைப்படையாற்கு - சிரிப்பையே படைக்கலமாகக்கொண்ட சிவபெருமானுக்கு. சயிலம் - மலை.

6. நிலையான கயிலை மலையிலிருந்துண்டாகி வளரும் ஒளியினை, கடலிலும் பூவிலும் வசிக்கும் திருமாலும் பிரமனுமோ மெலியவர்கள்; பகையை அழிக்கும் வில்லும் ஒலிக்காத கல்லாகக்கொண்டு. விடத்தை உட்கொள்ளும் தேவனே வலியன் என்று கருதாது வருந்தும் உலகத்தின் அறியாமை என்னே! என்று நகைத்த நகைப்பே எனலாம்.

கயிலையொளி முதல்வன் சிவனே என்றுணராத உலகை எண்ணி நகையாடிய நகைப்பு எனலாம் என்பது கருத்து.

தூய முனிவன் விழிக்கிளைத்தாஞ் சுவைப்பாற் கடலி னிடைமுளைத்தாம்
மேய விறைவன் முடிக்கங்கை வெள்ளத் துடனுய்ப் பயில்கின்ரும்
ஆய வெமக்கு நிகராரென் றகஞ்செய் மதியி னொளிமழுங்கப்
பாய கிரண மிருள்சீப்பப் பகலு மிரவு மவணிலேயே. 7

காம னுடலம் பொடிபடுத்த கனற்க ணிறைவன் றிருவருளின்
ஏம முடைய ராய்ப்பழகி யிருப்பா ரன்றி யேனையோர்
தாம வொளிகால் கயிலைவரைச் சார லடுப்பி னவர்விழிக்கு
நாம விருளே பகல்கூகை நல்ல விழியி னிருளேபோல். 8

அயிரா வணமுந் தவளமே யடல்வெள் ளேறுந் தவளமே
பயில்பா ரிடமு மடியாரும் பரிக்குஞ் சாந்துந் தவளமே
செயிர்தீர்த் தாங்குப் பயனருளுந் தீர்த்த மனைத்துந் தவளமே
வெயிலார் மணியின் கயிலாயம் வெள்ளென் றிருந்த பரிசானே. 9

வேறு

மும்மதக் களிற்றின முழங்கு மால்வரை
செம்மணி தாழ்வரைத் தேத்தெ லாமொளி
விம்முற நாப்பணே விளங்கு காட்சிமற்(று)
அம்மவெண் பாற்கலன் கனலிட் டன்னதே. 10

---

7. அத்திரிமுனிவன் கண்ணிலே தோன்றினேம்; பாற்கடலிலே பிறந்தோம்; இறைவன் முடியிலே கங்கை வெள்ளத்துடன் பழகுகின்றேம்; அத்தகைய எமக்கு நிகர் யார் என்று அகங்கொள்கின்ற மதியின் ஒளிகெட, இரவும் பகலும் இருளை ஓட்டிக் கிரணம் வீசுவது கயிலை.

8. கோட்டானுக்குப் பகற்காலம் இருளாகத் தெரிவதுபோல, சிவனருளால் இன்பம்பெற்று இருப்பார் அன்றி மற்றையோர் கயிலை மலைச்சாரலை அடையின் அவர்கள் கண்ணுக்குக் கயிலைஒளி அச்சத்தைச்செய்யும் இருளேயாம்.

நேமம் - நியமம். தாமஒளி - மாலையான ஒளி. நாமஇருள் - அச்சம் விளைக்கும் இருள். கூகை - கோட்டான்.

9. கைலாயம் வெண்மையாயிருப்பதால் சிவன்ஏறும் அயிராவணம் என்னும் யானையும் வெண்மையே. இடபமும் வெண்மையே. பூதகணங்களும், அடியாரும் பூசும் வீபூதியும் வெண்மையே. குற்றம்போக்கி முத்திப்பயனை அருளும் தீர்த்தங்களும் வெண்மையே!

10. அம்மலையின்கண் உள்ள மாணிக்கங்கள் தாழ்வரை அனைத்திலும் செவ்வொளிவீச, அவற்றின் நடுவில் கயிலைவிளங்கும் காட்சி வெண்பாற்கலத்தை நெருப்பில் இட்டதுபோலும்.

தேம் - இடம். நாப்பண் - நடு.

தழற்றலை யிரசதச் சானி றைத்தபால்
அழற்றலின் வழிந்தென வருவி தூங்குவ
சுழற்றிய கனறபத் தோன் றி ருந்தைபோல்
நிழற்றெளி மணிநிரை நிரைத்தங் கோடுவ. 11

மரம்பல தேனவண் மழையிற் சிந்துவ
வரம்பிறந் தெழுந்தபான் மடங்கத் தண்புனல்
நிரம்பமே லுறைத்தென நீடக் காலெழீ இ
அரம்பைக ளாற்றுவ போன்றங் காடுவ. 12

இரவிக ளனந்தமங் கிருந்து நோற்றென
அரதனக் குவால்பல அவிரு மோர்புறம்
கிரணவொண் மதிக்குலங் கெழுமி நோற்றெனத்
தரளவெண் மணிக்குவா றயங்கு மோர்புறம். 13

கணங்கொடு கணங்கசி வுளத்தி னட்டயர்
துணங்கையும் பாடலுந் துவன்று மோர்புறம்
வணங்கிடை வானர மகளி ராடலும்
இணங்கிசை முழவமு மியலு மோர்புறம். 14

---

11. வெள்ளிச்சாலில் வைத்த பால் கொதிப்பேறி வழிந்ததுபோல, அருவிகள் கயிலை மலையிலிருந்து ஒழுகுகின்றன. சுழற்றி எரிகின்ற தீ எரிய, நடுவில் தோன்றுகின்ற கரியைப்போல நிழலைச்செய்யும் நீலமணிகளின் வரிசை நிரையாக அங்கு ஓடுவன.

இரசதம் - வெள்ளி. தப - கொளுத்த. இருந்தை - கரி. நிழற்று ஒளிமணி - நிழல் செய்கின்ற ஒளிபொருந்திய மணி என்பது நீலத்தை.

12. கலத்தின் எல்லையைக் கடந்து பொங்கி எழுந்த பால் அடங்கக் குளிர்ந்தநீரை நிரம்ப மேலே தெளித்தாற்போல பல மரங்கள் தேனை மழை போலச் சிந்துவன. அங்கு வாழை இலைகள் ஆடுவன காற்றை மிக எழுப்பிப் பாலைஆற்றுவபோன்றன. அரம்பை - வாழை. உறைத்தென - துளித்தாற்போல.

13. சூரியர் பலர் இருந்து தவஞ்செய்தாற்போல இரத்தினக்குவியல் பல ஓர்புறம் விளங்கும். சந்திரர் பலர் நோற்றாற்போல முத்து வயிரமணிகளின் குவியல் ஓர்புறம் விளங்கும்.

இரவி - சூரியன். அரதனம் - இரத்தினம். குவால் - குவியல். தரளம் - முத்து.

14. பூதகணங்கள் கூடி கசிந்தவுள்ளத்தின் ஆடல்புரிகின்ற துணங்கையும், அதற்குரிய பாடலும் கயிலையின் ஓர் புறம் நெருங்கும். துவள்கின்ற இடையினையுடைய தேவமாதராடலும், அதற்கேற்ப இசையும் முழவொலியும் ஓர்புறம் ஒலிக்கும்.

தேவர்கள் சென்றுசென் றிறைக்குங் கற்பகப்
பூவயல் கிடப்பதிற் புகாவண் டன்பர்கள்
தூவிய மலர்தொறுந் துன்னு மேற்பவர்
ஈவில ரொழியவீ குநரைச் சேர்ந்தென. 15

வேறு

அரந்தை தீர்த்திடு மத்தகு கயிலையின் மலநோய்
கரந்த தேசுடைக் கணங்கண நாதரே முதலா
நிரந்து ளார்க்கெலா நீடுறு தலைமையு மிறைவன்
பரந்த கோயிலின் வாய்தல்கா வலும்பரித் துள்ளான். 16

மறைக ளாகம புராணங்கள் கலைகண்மற் றெவையும்
நிறைய வெம்பிரா னருள்செய நிரப்பிய வுளத்தன்
முறைசெய் நூலெலா மருள்புரி முதற்குரு வானேன்
அறையு நந்தியென் றுயர்பெய ரடுத்தவ னனையான். 17

பண்டு நான்கொடைந் திரட்டிய புராணங்கள் பயில்கால்
அண்டர் நாதனை யடிதொழு தடிகளே கருணை
கொண்டு நீயமர் பதிபல குவலயத் துளவான்
மண்டு மேன்மையின் மன்னிய தவற்றுள்யா தென்றான். 18

துணங்கை - இருகையையும் மடக்கி விலாவில் அடித்துக்கொண்டு ஆடும் ஒருவகைக்கூத்து. வணங்கு இடை - வளைந்த அல்லது துவளுகின்ற இடுப்பு. இசை இணங்குமுழவம் என்க.

15. யாசகர்கள் கொடாதவர்களைவிட்டுக் கொடுப்பவர்களைச் சேர்ந்தது போலத் தேவர்கள் தூவிய கற்பகமலர்கள் அயலே கிடப்ப, அவற்றில் வண்டுகள் நெருங்கவுமாட்டா. அன்பர்கள் அருச்சித்த மலர்கடோறும் வண்டுகள் மொய்க்கும்.

16. துன்பந்தீர்க்கும் அத்தகைய கயிலையில், ஆணவமலம் நீங்கப்பெற்ற, ஒளியையுடைய பூதகணங்களும், கணநாதர்களும் முதலான கூட்டத்தாரனைவர்க்கும் தலைமையும், இறைவன் கோயில் வாயில் காவலும் தாங்குகின்றவன்.

அரந்தை - துன்பம். கரந்த - மறைந்த. நிரந்துளார் - வரிசையானவர்கள். பரிந்துளான் - தாங்குபவன்.

17. வேதம் முதலானவற்றை எம்பெருமானே அருள்செய்ய நிரம்பிய மனத்தையுடையவன்; ஒழுங்குகளைக் கற்பிக்கின்ற நூல்களை அருள்செய்யும் முதற்குரவன்; நந்திபெருமான் என்னும் பெயர் தாங்கினேன்.

18. அவன் முன்பு ஒருகாலத்துப் பதினெட்டுப் புராணங்களையும் பயில்கின்ற காலத்து, இறைவனை வணங்கித் தேவரீர் திருவருளாலே, எழுந்தருளியிருக்கின்ற தலங்கள் பலவற்றில் மேலானது யாது அருளிச்செய்யவேண்டும் என்று கேட்டனர்.

நந்தி வாய்மொழி கேட்டலு நங்கையோர் பாகன்
எந்த நாளுமெம் மிருக்கையா யிலயஞ்செ யரங்காய்
மந்த ணத்ததா யெவற்றினு மேலதாய் வயங்குஞ்
சுந்த ரத்ததா லாதிமா புரியெனத் தொகுத்தான். 19

அற்றை நாண்முத லாதிமா புரியினை யனையான்
எற்றை நாளினு மிதயத்துத் தியானித்து வருவான்
ஒற்றை நாளுளத் துன்னியூற் றெழவிழி புளகம்
பெற்ற வாக்கையோ டவசமா யிருந்தனன் பெரிதும். 20

சிவம்பெ ருக்கிய வுளத்தினன் தேகத்தின் குறிகண்(டு)
அவம்பெ ருக்கிய வவுணரை யறுக்கும்வை வேலோன்
தவம்பெ ருக்கிய விளையரோ டாடலைத் தணந்து
நவம்பெ ருக்கிய செய்கைநா டுதுமென அடுத்தான். 21

அடுத்த தோர்ந்தெழு நந்தியை யிருத்தின னகத்துண்
மடுத்த தியாதெனக் குரையென வாய்மலர்ந் தனன்வெங்
கடுத்து பூவிய கண்டர்முன் கரைந்தவா நந்தி
விடுத்துக் கூறலும் வியந்தன னாதிமா நகரை. 22

---

19. இறைவன், எந்தநாளும் எம் இருப்பிடமாய் இலயம்செய்யும் அரங்கமாய், இரகசியமாய், எவற்றிலும் மேலாய், அழகியதாய் விளங்குவது ஆதிபுரியாகிய பேரூர் என்றருளினர்.

20. அன்றுமுதல் நந்திபகவான் ஆதிமாபுரியை என்றும் இதயத்தில் தியானித்து வருவார். ஒருநாள் பெருமானை எண்ணிக் கண்ணிலிருந்து ஆனந்த நீர்பொழிய, உடல் புளகம்கொள்ள, பரவசமாயிருந்தனர்.

21. இவ்வண்ணம் சிவம் பெருக்கிய உளத்தினராய நந்திதேவர் உடலில் உண்டான அடையாளங்களைக்கண்டு, முருகப்பெருமான் நவவீரர்களோடு விளையாடலை விட்டு, புதிய செயலை ஆராய்வோம் என்று நந்தியை அடைந்தார்.

அவம் - வீண் பாவச்செயல். வை - கூர்மை. நவம் - புதுமை.

22. முருகன், வந்ததையறிந்து இருக்கைவிட்டெழுகின்ற நந்திதேவரைப் பார்த்து இருக்கச்செய்து, நீர் எண்ணியது யாது? எனக்குச் சொல்லும் எனக் கேட்டார். நந்தி சிவபெருமான் தனக்குச் சொல்லிய முறைப்படித் தெரிவித்தலும் முருகப்பெருமான் ஆதிபுரியைப்பற்றி அதிசயித்தார்.

கடுத்துமாவிய கண்டர் - விடங்கலந்த கழுத்தையுடைய சிவபெருமான்.

உண்மை ஞானம்வந் தவர்க்கலா லுருதவான் வீட்டை
எண்மை யாவுறற் பாலதிம் மான்மிய மிதனைத்
திண்மை நோயற விளக்குது மெனுமகிழ் சிறப்ப
வண்மை நாடிய வுளத்தொடும் வைகுநா ளொருநாள். 23

வெள்ளி மால்வரை மணிமுடி கவித்தென விளங்குந்
தெள்ளு பேரொளிச் சிகரவண் கோயிலி னொருபால்
நள்ளு மாயிரங் கிரணமு நாற்றும்வெய் யவனேர்
கொள்ளு மாயிரந் தூணொளி கொழிக்குமண் டபத்தில். 24

சண்ட பானுவு மதியமும் விடிற்சக முழுதும்
உண்டு தேக்குமென் றுருவுவேற் றுமைசெய்து தன்பால்
கொண்ட தாமெனக் கொழுஞ்சுடர்ப் பவளக்காற் கவிகை
மண்டு வாருடல் வெள்ளென வயங்கிமே னிழற்ற. 25

கவள மால்களி றுரித்தவெங் கடவுடன் பகைக்குத்
திவளு நீகுடை யாவதென் னேயெனச் சினந்து
துவள வான்மதிக் கிரணங்க டுணித்தலைத் தாங்குத்
தவள மாமணிச் சாமரை சாரத ரிரட்ட. 26

---

23. உண்மைஞானம் பெற்றவர்களே அடையத்தக்க வீட்டை எளிதில் அடைவிப்பது இப்பேரூர் மான்மியம். இதனை 'வலிய அறியாமை என்னும் நோய் நீங்க விளக்குவோம்' என்று, மகிழ்ச்சி மிக வள்ளன்மை விரும்பிய உளத்துடன் இருக்குநாளிலே ஒருநாள்.

24. 'கயிலை மணிமுடி அணிந்தது என விளங்கும்' பேரொளிப் பிழம்பான கோயிலின் ஒருபால், ஆயிரங் கிரணங்களைப் பரப்பும் சூரியன்போல ஒளியைக் கக்கும் ஆயிரக்கால் மண்டபத்தில்.

நள்ளும் - பொருந்திய.

25. சூரியனையும் சந்திரனையும் வெளிவிட்டால் உலகமுழுதும் உண்டுதேக் கெறியும் என்று வடிவமாற்றித்தன்பால் வைத்துக்கொண்டதேபோல, கொழுத்த சுடரோடுகூடிய பவளக் கால்கோத்தவெண்கொற்றக் குடை, நெருங்குவார் உடல்வெளுக்க விளங்கி மேலே நிழலைச்செய்ய.

சண்டபானு - சூரியன். விடின் - வெளியேவிட்டால்.

26. யானையையுரித்த எம்கடவுளாகிய சிவபெருமானுக்குப் பகைவனாகிய மன்மதனுக்கு விளங்குகின்ற நீ குடையாவது எங்ஙனம்? என்று கோபித்து வானத்து உள்ள சந்திர கிரணங்களைத் துணித்து அலையச் செய்ததுபோல வெண்மையான இரத்தினங்கள் இழைக்கப்பெற்ற சாமரைகளைப் பூதகணத்தவர்கள் மாறி மாறி அசைக்க.

விழையத் தக்கமென் மலரினை விடுத்தவே ளுடலம்
குழையத் தக்கதேற் குறுகுவ தன்றென வஞ்சும்
தழையத் தக்கநல் வளியினைச் சார்ந்துநீ யுருவின்
இழையத் தக்கதென் றெழுப்புசாந் தாற்றிக ளசைய. 27

உரகர் போற்றுவா னடுத்தவி ருருவிடை யணிந்த
வரவ நோக்கிய மகிழ்ச்சியா னடுவா ரோடும்
விரவி வேற்றுமை தெரிப்பரி தாகவின் மணிசூழ்
பரவை யாலவட் டம்பல வும்பணி மாற. 28

கலந்து போற்றுந ருளத்தெழு மானந்தக் கடனின்(று)
அலர்ந்து வெண்டிரை யெழுந்தெழுந் தடங்குவ போல
மலர்ந்த வாண்முகத் தடியவர் வயின்வயின் விசும்
பொலந்தொ டிக்கையின் வெள்ளைகண் முறைமுறை பொங்க. 29

மால் - கரிய அல்லது பெரிய. எங்கடவுள் என்றவர்கள் சாரதர்கள் என்க. சாரதர் - பூதகணத்தார்.

27. விரும்பத்தக்க மெல்லிய பூக்களைத் தொடுத்த மன்மதன் உடலே குழைந்துபோம் தன்மையதானல் அணுகுந்தன்மையதன்று என அஞ்சுவன், வளரத்தக்க நல்ல காற்றைச்சார்ந்து காற்றே நீ திருமேனியில் இழையத்தக்கது என்று காற்றை எழுப்புகின்ற சாந்தாற்றிகள் இருமருங்கும் அசைய.

வேள் உடல் குழையத்தக்கதேல் குறுகுவதன்று என அஞ்சும்; சாந்தாற்றிகள் காற்றே நீ திருமேனியில் இழையத்தக்கது என்று இருமருங்கும் அசைய எனக்கூட்டிப் பொருள்கொள்க. இழைதல் - உரசுதல்.

28. நாகர்கள் சிவபெருமானை வணங்கும்பொருட்டு வந்து, விளங்குகின்ற சிவபெருமான் திருமேனியில் அணிந்த பாம்புகளைக்கண்ட மகிழ்ச்சியால் ஆடுகின்ற நாகர்களோடும் கலந்து வேறுபாடு அறிய இயலாதனவாக இருத்தலின் செம்மணிகள் கட்டப்பட்ட பிரபலமான ஆலவட்டங்கள் பலவும் பணிசெய்ய.

உரகர் - நாகர்கள். அவிர் - ஒளி விடுகின்ற. ஆலவட்டம் படமெடுத்த பாம்புபோல இருக்குமாதலின் அசைகின்ற ஆலவட்டமும் ஆடுகின்ற பாம்பும் வேறுபாடு அறிய இயலாவாயின.

29. கலந்து வணங்குகின்ற அடியார்களின் மனத்திலே எழுகின்ற, ஆனந்தக் கடலிலிருந்து தோன்றிய வெண்மையான அலைகள் எழுந்து எழுந்து அடங்குவனபோல, மலர்ந்த முகத்தையுடைய அடியார்கள் இடங்கடோறும் விசுகின்ற பொன்வளையலை அணிந்த கையிலே உள்ள வெண்மையான பரிவட்டங்கள் முறை முறையாக எழுந்து விளங்க.

வெண்மையான ஆடைகளை இருமருங்கும் விசுதல் ஒருவகையான அரச மரியாதை.

குழலுந் தோற்பொலி முழவமுங் குரலிசைப் பாட்டும்
மழலை வாய்மொழி மங்கைய ராடலு மயங்க
நிழலு மேனியின் வனப்பட நெடியவன் முதலோர்
உழலு நெஞ்சினர் பெண்ணவா யொதுங்கினர் வணங்க. 30

பாம்ப ணர்ந்தன கோட்டியாழ் பலர்கரந் தழுவி
ஏம்ப லோடுமென் னரம்புளர்ந் தெழுமிசை தேங்கச்
சாம்ப வானவர் மேலடர் தழல்விடம் பருகி
ஓம்ப லாதியா விருதெடுத் துலப்பிலர் பரச. 31

சமயப் பைம்பயிர் சாவிபோ கத்தனை யடைந்தோர்க்(கு)
அமையப் பொங்கிய வலர்முகக் கருணைவெள் ளத்துச்
சுமையப் பாவுழை யெனப்படுந் துணைவிழிக் கயல்பாய்
இமயப் பாவையெவ் வுலகுமீன் றவளிட மிருப்ப. 32

---

30. குழலும் முழவமும், வாய்ப்பாட்டும், பெண்களின் நடனமும் கலந்து நிகழ, அப்பெண்களின் ஒளிவிடும் மேனியின் அழகு வருத்த திருமால் முதலான தேவர்கள் பெண்களை விரும்பி வருந்துமனத்தினராய் நாணத்தால் ஒதுங்கி நின்று வணங்க.

தோல் பொலி முழவும் - தோலால் ஆனதொப்பியால் மூடப்பட்ட முழவம். மழலை - பொருள் விளங்கிச் சொல்லுருவம் நிரம்பாத மொழி. இது பெண்களின் இளமை காரணமாக நிகழும் இனிமை தருவது.

31. பாம்பு மேனோக்கி எழுந்தால் ஒத்த கோட்டினையுடைய யாழினைப்பலர் கையிலெடுத்து இனிமையோடு நரம்புகளை வருடுதலால் எழுந்த இசை நிறைய, சிவபெருமான் விடம் அருந்தித் தேவர்களைப் பாதுகாத்தது முதலான விருதுகளைக்கூறிப் பலர் புகழ்ந்து வணங்க.

அணர்தல் - மேலெழுதல். ஏம்பல் - இனிமை. வானவர் சாம்ப மேல் அடர்தழல் விடம் எனக்கூட்டித் தேவர்கள் வருந்த அவர்கள்மேல் நெருங்கிவந்த தழல்போலும் விடத்தை என்க. ஓம்பல் - பாதுகாத்தல். உலப்பிலர் - எல்லையிலாதார்.

32. சமயப்பயிர்கள் நீரின்மையால் சாவியாய்ப்போக, தன்னையடைந்த அடியார்களின் பரிபாக நிலைக்கு அமையப் பொங்கிய மலர்ந்த திருமுகத்திலிருந்துண்டான கருணை வெள்ளத்தால் அப்பயிர்கள் உள்ளீடுபெற்றுச் சுமையாக, பரவிய மருட்சியால் மான் எனப்படும் விழிகளாகிய இரு கயல்மீன்கள்பாய இருக்கின்ற உலக மாதாவாகிய இமயப்பாவை இடப்பாகத்திலே வீற்றிருக்க.

சுமைய - சுமையாக; அதாவது சாவியாய்ப்போன பயிர் மணிகள் பருத்துச் சுமை கொள்ள என்பதாம். பாவு - பரவிய.

கோத்தி ரங்குலந் தழுவினுங் கோதுமுற் றிரியச்
சாத்தி ரம்பல வுணரினுந் தம்பிரான் பணியில்
பாத்தி ரம்பிழை யாதெனப் பார்கொள நந்தி
வேத்தி ரங்கொடு பணிபுரிந் தடர்சனம் விலக்க. 33

இரவி மண்டல மிந்துவின் மண்டல மெரியின்
பரவை மண்டல மடுத்தன பவளவா னிலத்து
விரவு சிங்கத்தின் பிடர்த்தலை மிளிர்தரப் படுத்த
அரவின் செம்மணி யாதனத் தமலன்விற் றிருந்தான். 34

தேவர் தானவர் சித்தர்விச் சாதரர் கருடர்
மூவர் முப்பத்து மூவரும் யாவரும் வணங்கி
ஓவி லாததம் முளக்குறை யுரைத்தது நிரப்பி
ஏவ மீண்டுபோய்த் தத்தம திருக்கையெய் தினரால். 35

அன்ன செவ்வியின் மாடக மகதியா ழமைத்துக்
கின்ன ரம்புடை விழத்தருக் கேழிணை ரீனக்
கன்ன கங்கரைந் திளகக்காந் தருவர்கை விதிர்ப்பப்
பன்ன லம்பட விசையெழூஉம் பாணிமா முனிவன். 36

---

33. கோத்திரம் குலம் இவற்றில் நழுவாது தழுவியிருப்பினும், உண்டான குற்றங்கள் போகவும், சாத்திரங்களை முழுதும் படித்திருப்பினும் சிவப்பணியில் தகுதி குறையல் ஆகாது என உலகு உணரவும் திருநந்திதேவர் பிரம்பைத் தாங்கிச் சனங்களை விலக்கித் தொண்டுசெய்ய.

வேத்திரம் - பிரம்பு. பாத்திரம் - தகுதி. அடர்தல் - நெருங்குதல்.

34. சூரியமண்டலம் சந்திரமண்டலம் அக்கினிமண்டலம் மூன்றும் ஒன்று சேர்ந்தாற்போன்ற பவளம் பாவிய நிலத்திலே சிங்காதனத்திலே சிவபெருமான் விற்றிருந்தார்.

பரவை - பரப்பு, கடலுமாம். பிடர் - கழுத்து. மிளிர்தர - விளங்க. படுத்த - பதித்த.

35. முப்பத்து முக்கோடி தேவர்களும் இறைவனை வணங்கித் தங்கள் தங்கள் குறைகளை விண்ணப்பித்து, குறை நிரம்பப்பெற்று, அவர் ஏவலின் வண்ணம் தத்தம் இருப்பிடம் சென்றனர்.

36. அத்தகைய பொழுதிலே, முறுக்காணியோடுகூடிய மகதி என்னும் யாழைப் பண்ணமைத்து, கின்னரப்பறவை இசைகேட்டு மயங்கிப் பக்கத்திலே விழவும், மரங்கள் திறம்பொருந்திய பூங்கொத்து தளிர் இவைகளைப் பெறவும், கல்லும் மலைகளும் கரைந்துருகவும்: கந்தருவர்கள் கையுதறவும் பலவகையான இன்பந்தோன்ற இசையை எழுப்பும் பாடலில் வல்ல முனிவனாகிய நாரதன்.

இறைவன் வீற்றிருந் தருளிய சேவையு மெவரு
நிறைய வேட்டன வரம்பெறு நியதியு மற்றும்
கறையி னீங்குமிக் கயிலையி னல்லதை யில்லை
அறையி னீதுறழ் தலமுள தோவென அயிர்த்தான். 37

ஐய நீங்குவா னமலனை வணங்கியெம் மடிகேள்
வைய மீதிலிம் மால்வரை நிகர்தல முளதோ
உய்ய வீங்கரு ளென்றன னுமையொரு பாகன்
செய்ய வேண்முகம் பார்த்துநீ தெருட்டெனப் பணித்தான். 38

வியங்கொள் தம்பிரான் அருடலைக் கொண்டுவே லவனும்
தயங்கு தன்மணிக் கோயிலைச் சார்ந்து பேரூரின்
வயங்கு மான்மியம் விளக்குவன் இவணெனும் மகிழ்வாற்
புயங்கள் வீங்கமெல் லணைமிசைப் பொலிவொடும் இருந்தான். 39

மாடகம் - யாழின் முறுக்காணி. மகதி - நாரதன்கை யாழின் பெயர். கின்னரம் - இசைகேட்டு மயங்கும் பறவை. கேழ் - நிறம். இணர் - தளிர்ப்பூங் கொத்து. கல் + நகம் - கல்லும் மலையும். இவ்வளவு நன்ருகத் தமக்கு இசை அமையவில்லையே என்று கந்தருவர்கள் கையுதறினர்கள் என்பதாம். பாணி - பாடல்.

37. இறைவன் வீற்றிருந்தருளிய காட்சியும் யாரும் விரும்பிய வரங்களைப் பெறும் ஒழுங்கும், ஏனைய சிறப்பும் குற்றமேயில்லாத இக்கயிலையின் அல்லது வேறிடத்தில்லையாம். சொல்லப்போனுல் இதனை ஒத்த தலம் உளதோ எனச் சந்தேகித்தான்.

38. நாரதன், சந்தேகம் தெளிதற்பொருட்டுச் சிவபெருமானை நோக்கி வணங்கி, எம் அடிகளே! இக்கயிலாயத்தை ஒத்த தலம் இவ்வுலகத்தில் உள்ளதோ? அடியேன் உய்ய அருளிச்செய்யவேண்டும் என்று வேண்டிக்கொண்டனர். சிவபெருமான் முருகனைப்பார்த்து நீ நாரதனுக்குள்ள இவ்வையத்தைப் போக்குக எனக்கட்டளையிட்டனர்.

39. ஏவிய சிவபெருமானின் அருளைச் சிரமேற்ருங்கி, முருகப்பெருமான் தன் கோயிலை அடைந்து, பேரூர்மான்மியத்தை விளக்கிச்சொல்லப் போகிறேம் என்ற களிப்பால் தோள்கள் பருக்க, அணையின்மேல் அழகாக வீற்றிருந்தார்.

வேறு

சாரதப் படைகள் சூழுந் தலைவனுக் கொருசொ லோதிச்
சூரத மாக நின்ற தோன்றலே தெருட்டி விட்டின்
சீரதர் காட்டு கென்னுச் சேவடி வணங்கி நின்ற
நாரத முனியை நோக்கி நகைமுகத் தருள லுற்ருன். 40

உத்தர கயிலை யென்றுந் தக்கிண கயிலை யென்றும்
மத்தியிற் கயிலை யென்று வழங்கிடுங் கயிலை மூன்ரும்
உத்தர கயிலை சுத்தோ தகக்கடற் பால தாகு
மத்தியிற் கயிலை யிது மாடக வீணை வல்லோய். 41

தெக்கிண கயிலை கன்மஞ் செயத்தகு பரத கண்டத்(து)
எக்கட வுளரும் போற்ற எழில்வளர் கொங்கு நாட்டில்
தக்கமேற் றிசையின் எல்லை முடிவினிற் றயங்கா நிற்கும்
ஒக்குமிக் கயிலை மூன்றும் ஆயினும் உரைப்பக் கேட்டி. 42

அருந்தவப் பேறு வாய்ந்த அமரர்கண் முனிவ ரன்றித்
திருந்தவெவ் வுயிரு மின்பந் தெவ்வுதற் கெளிய வல்ல
விருந்திடு வடபாற் குன்று மிடைப்படு குன்றும் என்னுப்
பொருந்திய கருணை வெள்ளப் பூரணன் உளத்துட் கொண்டு. 43

---

40. பூதகணங்கள் புடைசூழ விளங்கும் சிவபெருமானுக்கே பிரணவமாகிய ஒரு சொல்லை உபதேசித்துச் சூரனை அதமாக அழித்த தோன்றலே! அடியேனுக்கு முத்திநெறியைக் காட்டுக என்று வணங்கிய நாரதரைப் பார்த்துக் குமரக்கடவுள் கூறத்தொடங்கினர்.

41. யாழ்வல்ல நாரதனே! உத்தர கயிலை, மத்திய கயிலை, தட்சிண கயிலை எனக் கயிலை மூன்ரும். அவற்றுள் உத்தர கயிலை நல்ல நீர்க்கடலின் பக்கலில் உள்ளது. மத்திய கயிலை இது.

42. தெக்ஷிணகயிலை பரதகண்டத்திலே தேவர்கள் தொழும் கொங்கு நாட்டிலே, மேற்றிசையின் எல்லையிலே விளங்கும். இப்படி கயிலை மூன்ருயினும் நான் சொல்கிறேன் கேள்!

43. செயற்கரிய தவஞ்செய்து பேறுபெற்ற தேவர்களும் முனிவர்களும் அன்றி, வேறு எவ்வுயிரும் எளிதில் இன்பம் எய்த முடியாதன வடக்கிலும் இடையிலும் இருக்கின்ற கயிலைமலைகள், என்பதைக் கருணைக் கடலாகிய சிவன் திருவுளத்தெண்ணி.

வழுவறு மோலித் தேவர் மானுடர் விலங்கு புள்ளுத்
தழுவிநீர் உறைவ வூர்வ தருவென மறைகள் சாற்றும்
எழுவகைத் தோற்றத் துள்ள வெவ்வகை யுயிரும் உய்யக்
கொழுமணி யிமைக்கும் வெள்ளிக் குன்றமாய்த் தென்பால் நின்ருன். 44

களத்துநஞ் சடக்கும் எந்தை கயிலையங் கிரியாய் நின்றேன்
உளத்திடை யன்பு பொங்க வுறுமடி யார்கள் பூசை
விளைத்தலும் வேண்டி மேலால் விரிகதி ரெறிக்குந் தேசு
திளைக்குமைம் முகமும் ஐந்து சிவலிங்க மாகக் கொண்டான். 45

இவ்வரைத் தேத்தெவ் வாற்றின் இருக்குமவ் வாறே தென்பால்
அவ்வரைத் தேத்தும் வேறே யவயவ வுருவந் தாங்கித்
தெவ்வரை முருக்கும் எந்தை சினகரம் ஒருபாற் கொண்டு
முவ்வரை வயிற்று ளோடு முழுதுல கேத்த வைகும். 46

அறைகழல் அமல மூர்த்தி அதோமுகம் என்னப் பட்ட
மறைதரு முகமும் அந்த மால்வரை வேராய்க் கீழ்போய்க்
குறைவில்பல் வளத்திற் சான்ற குணுதுசார் இலக்க ணங்கள்
நிறைசிவ லிங்க மாக நிலமிசை முளைத்த தன்றே. 47

---

44. எழுவகையான பிறப்பினையுடைய எல்லா உயிர்களும் உய்ய, தாமே கயிலைமலையாகத் தென்றிசையில் எழுந்தருளினர்.

45. கயிலை மலையாக நின்ற சிவபெருமான், அடியார்கள் அன்போடு பூசித்தலையும் விரும்பி, மேனேக்கி ஒளிவீசும் தேசுமிக்க ஐம்முகமும் பொருந்திச் சிவலிங்க உருத்தாங்கினர்.

46. மத்திய கைலாயமாகிய இங்கு எவ்வண்ணம் இருக்கின்ருரோ அவ்வாறே தென்பால் உள்ள கயிலையிலும் வேருக அவயவங்கள் அமைந்த திருமேனியையும் தாங்கிக் கோயிலின் ஒருபால் உமாதேவியாரோடும் வீற்றிருப்பர்.

தேத்து - இடத்து. அவயவ உருவம் தாங்கி - கரசரணுதி உறுப்புக்களையுடைய சோமாஸ்கந்த மூர்த்தியாகி. தெவ்வர் - பகைவர். சினகரம் - கோயில். முவ்வரைவயிற்ருள் - மூன்று மடிப்புக்களையுடைய வயிற்றேடு கூடிய உமாதேவி. முவ்வரையைத் திரிவலி என்னும் வடமொழி.

47. சிவபெருமானுடைய கீழ்நோக்கிய முகமான மறைந்த முகமும் அக்கயிலையின் வேராகக் கீழேசென்று பலவளங்களும் நிறைந்த கிழக்குப் பக்கத்திலே சிவலிங்கமாகத் தோன்றியது.

நாதனே யாகி நின்ற நளிர்வரைச் சிலம்பிற் கென்றும்
பூதகா ரணமா யைந்து பொறிகட்கும் அறிவு தோற்றும்
நீதியார் கருவி போன்று நிற்றலால் இலிங்கம் ஐந்தும்
ஓதுவார் பூத மைந்தின் உறுபெய ரோடுஞ் சேர்த்து. 48

மன்னிய புலன்கண் மாட்டு மனமன்றிப் பொறிக ளைந்துந்
துன்னுத லின்மை யாலத் துலங்கிய பொறிகட் காதி
என்னுமம் மனமே போன்றங் கிருநிலத் தெழுந்து நின்ற
அன்னதோர் இலிங்க மாதி லிங்கமென் றுய தன்றே. 49

பாரிடை முளைத்து நின்ற பலசிவ லிங்கங் கட்குச்
சீரிய முதன்மை யானுஞ் செப்புவ ரனைய நாமம்
ஆருமவ் வாதி லிங்கம் அமர்ந்தருள் கொழிக்கு மாற்றல்
ஓருமந் நகரை யாதி புரியென வுரையா நின்றார். 50

ஆதலிற் கயிலை மூன்றும் அடுத்திடு நாமத் தானும்
ஓதரு வளத்தி னானும் ஒக்குமற் றுலகம் போற்றும்
மேதகு பெருமையானும் விளைத்திடும் பயத்தி னானுங்
காதர மிரிக்குந் தென்சார்க் கயிலையே மிக்க தாகும். 51

48. அத்தகூஷிண கயிலாயத்திற்கு, பூதங்கள் ஐந்திற்கும் காரணமாய், ஐந்து பொறிகட்கும் அறிவு தோன்றச்செய்கின்ற நீதி தவறாத மனம் என்னும் அந்தக்கரணம்போல நிற்பதால் சிவலிங்கம் ஐந்தும் பிருதிவிலிங்கம், அப்புலிங்கம், தேயுலிங்கம், வாயுலிங்கம், ஆகாயலிங்கம் என ஐந்து பூதங்களின் பெயரோடு சேர்த்து வழங்கப்பெறும்.

49. புலன்கள் ஐந்திலும் பொறிகள் ஐந்தும் மனத்தைத் துணைக்கொண்டு அன்றிப் பொருந்துதலின்மையின் மனமே அவைகளுக்கு முதல் எனப்படும் அது போலப் பேரூரில் தோன்றிய அத்தகைய லிங்கமே ஆதிலிங்கம் எனப்பட்டது.

50. பூமியில் சுயம்புவாகத் தோன்றிய எல்லாச் சிவலிங்கங்கட்கும் சீரிய முதலாயிருப்பதாலும் அப்பெயரைச் சொல்வர். அனைவரும் ஆதிலிங்கம் எழுந்தருளியிருக்கும் அந்நகரை ஆதிபுரி என்றனர்.

51. ஆதலின், மூன்று கயிலையும் பொருந்திய பெயர்களானும், வளப்பத்தானும் ஒப்பனவே. உலகம் போற்றும் பெருமையானும், விளையச்செய்யும் பயனானும் தீவினைத் தொடர்பைக் கெடுக்கும் தென்கயிலையே மிக்கது.

என்றுவேற் றடக்கை நம்பி யிறைஞ்சுநா ரதன்க ருத்தில்
நின்றவை யத்தைப் போக்கி நீடுமந் நகரின் மற்றுந்
துன்றிய பெருமை யோடு தூத்தகு கதைக ளெல்லாம்
நன்றமிழ் துகுத்தா லென்ன நவின்றனன் மோன முற்றான். 52

புராண வரலாற்றுப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 261.

---

52. என்று முருகன், நாரதரின் ஐயத்தை அகற்றி, மற்றும் உள்ள பேரூரின் பெருமைகளோடு, தூய தக்க வரலாறுகள் அனைத்தையும் அமுதம் உகுத்தாற்போலக் கூறினர். பின் மோனம் அடைந்தனர்.

ஐந்தாவது

பதிகப்படலம்

வரந்திகழ் தவத்துக் காசிப னுயிர்த்த மாதவன் காலவ னென்பான்
பரந்திகழ் விடு வேட்டனன் அடுத்துப் பத்தியிற் பூசித்த வாறும்
உரந்திகழ் மலரோன் படைப்பற நோக்கி யுவணமேக் குயர்த்தவ னேவச்
சுரந்திழி செருத்தற் றேனுமா தவத்தாற் றொடர்ந்துபூ சனைசெய்த வாறும். 1

கடவுளான் கன்றின் கவையடிச் சுவடுங் கதிர்மணிக் கோட்டினல் லூறுஞ்
சுடர்மணி யுருவி னெம்பிரா னணிந்து சுரபிக்குப் படைப்பரு ளியதும்
நெடியவன் றெனது கயிலையொன் றமைத்து நிமலனைப் பூசித்த வாறும்
கடிமலர்க் கடவுள் வடகயி லாயங் கண்டுபூ சனைசெய்த வாறும். 2

காலவ னெடியன் கமலனென் றிவர்க்குக் கண்ணுத னடம்புரிந் ததுவும்
ஆலமொத் தடர்க்குஞ் சூரனைப் பயந்த வமரர்க ளிர்ப்பயத் தினராய்ச்
சாலவை கியது மவர்தமக் கிரங்கிச் சண்முகன் சூரனைத் தடிந்து
ஞாலமுற் றிறைஞ்ச மீண்டுயர் மருத நளிர்வரை விற்றிருந் ததுவும். 3

---

1. காசிபமுனிவன் மகனாகிய காலவர் முத்தியை விரும்பி இறைவனைப் பத்தியுடன் பூசித்ததும். திருமால், பிரமனுடைய படைப்புத் தொழில் அற்றுப்போவதைக்கண்டுக் காமதேனுவை ஏவ அதுமுன்செய்தபெரிய தவத்தால் இறைவனைப் பூசித்ததும்.

பரம் - மேன்மை. உரம் - ஞானம். உவணம் மேக்கு உயர்த்தவன் - கருடனை உயரப்பிடித்த திருமால். செருத்தல் - மடி. தேனு - காமதேனு.

2. சிவபெருமான், காமதேனுவின் குளம்படிச் சுவடும், கொம்பால் உண்டான வடுவும் தாங்கி, அப்பசுவிற்குப் படைப்புத்தொழிலை அருளியதும். திருமால் தென்கயிலையில் இறைவனைப் பூசனைசெய்ததும். பிரமன் வடகயிலாயம் ஒன்றையமைத்துப் பூசித்ததும்.

3. காலவமுனி, திருமால், பிரமன் இவர்கட்காக இறைவன் திருநடனம் செய்ததும். ஆலகால விஷம்போல வருத்தும் சூரபன்மனுக்குப் பயந்த தேவர்கள் பயமின்றி இருந்ததும். அத்தேவர்கட்காக முருகன் சூரசங்காரம் செய்து உலகமே தொழ மருதமலையில் எழுந்தருளியதும்.

நளிர்வரை - குளிர்ந்தமலை.

சுமதியென் றொருவ னந்தண னெடுநாட் டூர்த்தனுய்த் திரிந்துபா தகஞ்செய்
தமர்பதி தணந்து சுலாவுவா னெல்லை யடுத்திறந் தும்பரெய் தியதும்
நிமலனை மறவா முசுகுந்தன் விசும்பி னிசாசரர் குலனறுத் தமர்நாட்
குமரியங் கொருத்தி நகைத்தலுங் குறுகி நன்முகங் கொண்டுபோற் றியதும்.4

கழைசுளி யயிரா வதப்பெரும் பாகன் கடுந்தவப் பிருகுபுத் திரியால்
தழைதரு மரக்க வுருவினை யாங்குத் தணந்துபத் திமைபுரிந் ததுவும்
குழைமுக மடவா ரெழுவரோ டடுத்துக் கொலைப்பெரும் பாதகந் துமிய
மழையுறழ் தடக்கை மணிமுடிக் கரிகால் வளவனன் கெய்திய வாறும். 5

ஏழைபாற் றூது விடுத்தவ னனுக வெம்பிரான் றிருவிளை யாட்டான்
மாழைநோக் குமையுந் தானும்வேற் றுருவாய் வயற்றொழி னடவிய வாறும்
ஊழைவா ரலைநீ யெனப்புடை நிறுவு முயர்கவி வன்றொண்ட னுரையாற்
பீழைதீர் தில்லை யந்தணர் போந்து பிஞ்ஞக னடங்கண்ட வாறும். 6

வீங்குநீர் காஞ்சி நதியொடு மங்கண் விளங்கிய தீர்த்தத்தின் சிறப்பும்
ஓங்குமால் வரையின் விம்மிதம் பலவு முயர்பரம் பிரமமா லென்று [தவங்கள்
தூங்குகை நிமிர்த்த வியாதன்பொய்த் துரிசு துடைத்ததுந் துணையின்மா
தாங்கிய விசுவா மித்திரன் பணிந்து தணிவில்பல் வரம்பெற்ற வாறும். 7

---

4. சுமதி என்னும் அந்தணன் ஒருவன் காமுகனுகித் திரிந்து பஞ்சமாபாதகங்களையும் செய்து, ஊரைவிட்டுச் சுற்றியலைகின்றவன் ஒருநாள் இவ்வூர் எல்லையில் வந்து இறந்து மேல் உலகம் அடைந்ததும். சிவபெருமானை என்றுமே மறவாத முசுகுந்தச் சக்கரவர்த்தி தேவலோகஞ்சென்று அசுரர்களைக் கொன்று வெற்றியுடன் விளங்கும் நாளில் ஒரு குமரிப்பெண் சிரித்ததும் தன் குரங்குமுகம் நீங்கப்பெற்று நன்முகம் பெற்றதும்.

5. இந்திரன் பிருகு முனிவர் மகளால் விளைந்த அரக்க உருவை அகற்றி அன்பு செய்ததும். கரிகாலன் என்னும் சோழமன்னன் ஏழு சேடிப்பெண்களோடு பேரூரை அடைந்து கொலைப்பாதகம் போக்கிக்கொண்டதும்.

6. ஆலால சுந்தரப் பெருமான் வர, பட்டிப்பெருமான் விளையாட்டாகப் பள்ளன் ஆனதும். ஊழ்வினையை நீ வராதே எனப் பக்கத்திலே நிறுத்தும் உயர்ந்த கவிஞர் தலைவனுகிய சுந்தரர் உரையால் தில்லைவாழந்தணர்கள் சிவபெருமானுடைய திருநடம் கண்டவண்ணமும்.

ஏழை - பெண்ணுகிய பரவையார். மாழை நோக்கி உமை - மாவடுவின் பிளவுபோலும் கண்களையுடைய உமாதேவியார். பீழை - துன்பம்.

7. காஞ்சிநதி முதலான தீர்த்தங்களின் சிறப்பும். தக்ஷிண கைலாயத்தின் அற்புதங்கள் பலவும். பரம்பொருளும் பிரமமும் திருமாலே என்று வலக்கையை உயர்த்துச் சாதித்த வியாசருடைய பொய்யால் விளைந்த குற்றத்தைப் போக்கியதும். விசுவாமித்திரன் வணங்கிப் பல வரங்களைப் பெற்றதும்.

காதியா ணவத்தை யுயிரெலா முத்தி கலத்தலிற் றென்திசைக் கடவுள்
கோதிலா வரசு குறைந்தமை நிரப்பக் குழகனைப் பூசித்த வாறும்
போதினன் றெளியப் பூரணன் றலத்தின் பொருவின்மான் மியமரு ளியதுந்
தீதினு ரெருவ னங்கிர னென்பான் தேகநீத் தும்பரெய் தியதும். 8

இமவரை மாது தவம்புரிந் ததுவு மெம்பிரான் வரைந்துகொண் டதன்மேற்
குமரனுக் கிறைவன் வரைவினுற் றேவ சேனையைக் கூட்டிய வாறுஞ்
சமரவன் றடக்கை யான்குசத் துவசன் றவம்புரிந் தெச்சமெய் தியதும்
அமர்தரு குலசே கரனெனுஞ் சேரன் குட்டநோ யனுக்கிய வாறும். 9

வருந்திரி லோக சோழன்றுன் மதஞ்சேர் மாசறப் போற்றிய வாறும்
கருங்குழ லுமையாட் கெம்பிரான் வார்ந்த காமரு வேணிவெண் பூதி
திருந்துகண் மணிகூ விளமுப சாரந் தெரிதரத் தெருட்டிய வாறும்
பெருந்திரு வளிக்கும் பிரமகுண் டத்துப் பெருகிய பூதிமான் மியமும். 10

மின்னவிர் சடிலத் திளம்பிறை யணிந்த வேதியன் விரைமலர்க் கமலப்
பொன்னடித் தலத்துப் புரிதரும் விசேட பூசனைக் குரியகா லமுஞ்சீர்
மன்னிய குமர நாயக னருள மகதியாழ் முனிவரன் கேட்டுத்
துன்னிய மகிழ்வி னுண்டரு ளிறைவன் றுணையடி தொழுதுவாழ்ந் தனனால்.

பதிகப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 272.

---

8. எமன், ஆன்மாக்கள் அனைவரும் ஆணவமலம் கெட்டுச் சிவபதஞ் சேர்ந்தமையால் தன்னாட்சி குறைந்தமைகண்டு, அதனை நிரப்பச் சிவபெருமானைப் பூசித்தவண்ணமும். பிரமன் மனந்தெளியச் சிவபெருமானே தலமான்மியத்தை அருளியதும் அங்கிரன் என்னுங்கொடியோன் உடலைவிட்டு மேலுலகம் அடைந்ததும்.

9. உமாதேவி தவம் செய்ததும். எம்பிரான் கருணைகூர்ந்து உமாதேவியாரைத் திருமணம் செய்துகொண்டு, குமரக்கடவுளுக்குத் தேவசேனையைத் திருமணம் செய்து வைத்ததும். குசத்துவசன் என்பான் தவம்செய்து புத்திரப்பேறெய்தியதும். குலசேகரன் என்னும் சேரமன்னன் குட்டநோய் தீரப்பெற்றதும். வரைந்து - மணந்து. வரைவு - மணம். சமரம் - போர். எச்சம் - பிள்ளை. அமர்தரு - விரும்புகின்ற; போர்செய்கின்ற எனலுமாம். அனுக்கிய - கெடுத்த.

10. திரிலோகச்சோழன் துன்மதங்கெட வழிபட்டதும், உமாதேவியாருக்கு இறைவன் சடை, விபூதி, உருத்திராக்கம், வில்வம், பதினறுவகையான உபசாரங்கள் இவைகளைப்பற்றி தெளிவித்தவண்ணமும், பிரமகுண்டத்து விபூதிச்சிறப்பும்.

11. சிறந்த சிவபூசனைக் குரிய காலங்களும், ஆகிய இவற்றைக் குமாரக் கடவுள் அருளிச்செய்ய நாரதர்கேட்டுச் சிவபெருமான் திருவடிகளை வணங்கி அந்தலத்தில் வாழ்ந்து வந்தார்.

ஆறுவது

நாரதன் வழிபடுபடலம்

வாரணி பூண்முலை வள்ளி மணாளன்
போரணி வேலன் புகன்று தெளிந்த
காரணி தென்கயி லாயம் வணங்கக்
காரணி நாரதன் நச்சியெ ழுந்தான். 1

நொள்ளை படாதன வில்வமு நொச்சியும்
வள்ளையின் வார்செவிக் கங்கையும் தாங்கி
தள்ளையன் னன்றலம் நேர்ந்தன தாழ்ந்துளத்
தொள்ளையி லான்றுணை ந் தான்வழிக் கொண்டு. 2

தெங்கொடு பூகஞ் செறிந்து வளங்கள்
தங்கிய கொங்கு தலைப்பட லுற்றான்
மங்கல சின்மய மால்வரை கண்டான்
அங்கண் வணங்கின னன்பி னடுத்தான். 3

---

1. நாரதமுனிவர் முருகன் உபதேசித்த தென்கைலாயத்தை வணங்க விரும்பிப் புறப்பட்டார்.

வார் - கச்சு. புகன்று - விரும்பி. கார் - மேகம். நார் அணி - அன்புபூண்ட. நச்சி - விரும்பி.

2. நாரதன், வழியில் இறைவன் எழுந்தருளியுள்ள தலங்களை வணங்கிக் கொண்டே விரைந்து வழிநடந்தான். நொள்ளை - பூச்சிக்கடி, முடக்கு முதலிய குற்றங்கள். வள்ளை - வள்ளையிலை. தள்ளையன்னான். தாயையொத்த சிவபெருமான். நேர்ந்தன - எதிர்ப்பட்டனவற்றை. உளத்தொள்ளையில்லாதான் - மனத்தில் குறையில்லாத நாரதன். துணைந்தான் - விரைந்தனன்.

3. கொங்குநாட்டை அடைந்தான்; தெக்ஷிணகைலாயத்தைக் கண்டான்; அன்போடு நெருங்கினான்; வணங்கினான்.

மங்கல சின்மய மால்வரை - நித்திய மங்களங்களை வழங்குவதும் ஞானமே வடிவானதுமான பெரியமலை.

வாக்கிய கட்புனன் மார்ப நனைப்பத்
தேக்கிய வன்பு திளைத்தெழு சிந்தை
ஊக்கிய வன்மைகொண் டொள்ளிய பண்களின்
பாக்கிய மன்னுன் பரம்பிவர் கின்றான். 4

வேறு

மூவர்கள் வணங்குமுத லென்றுவழி பட்டாங்(கு)
ஏவரும் வியப்பவினர் மாமர மிறைக்கும்
பூவமரர் தூவுபொலம் பூவொடு மயங்கி
மேவவரும் வண்டினம் விலக்குவன கண்டான். 5

வித்தக விலங்கலடி காணவிழை வுற்றுப்
பத்தியொடு நாரணர் பரித்தவுரு வென்னக்
கொத்தினெடு பன்றியொளிர் குன்றடி யகழ்ந்து
மெத்துகிழங் காருவன வினைமுனி கண்டான். 6

காலனுயிர் சாயவடை பாலனுயிர் காழ்ப்பச்
சாலவருள் செய்தவொரு சாமிவடி வேயாம்
மேலவரை சேர்ந்தவெமை யார்தளைவ ரென்றே
கோலவிப மெண்ணில குறும்புசெயல் கண்டான். 7

---

4. இசைச்செல்வம்படைத்த நாரதன் ஆனந்தக்கண்ணீர் மார்பைநனைப்ப, அன்பு கிளர்ந்த சிந்தையோடு மலையை ஏறினன்.

வாக்கிய - ஒழுகவிட்ட. தேக்கிய - நிறைவித்த. பறம்பு - மலை. இவர்கின்றான் - ஏறுகின்றான்.

5. அங்கு, பெருமானை முத்தேவர்களும் வணங்கும் முதல்வன் என்று வழிபட்டு, அனைவரும் வியப்ப, மாம்பூக்கள் கற்பகமலரோடு கலக்க, அதில் மொய்க்காத வண்டினங்கள் கற்பக மலர்களை விலக்குவதைக் கணடான்.

பொலம்பூ - பொன்னிறமான கற்பகமலர்.

6. சிவபெருமான் திருவடியைக் காண்பதற்காகத் திருமால் எடுத்தவடிவு என்னும்படி, பன்றிகள் குட்டிகளோடு மலையடிவாரத்தைத் தோண்டிக் கிழங்குகளை யுண்பதை நாரதன் கண்டான்.

வித்தக விலங்கல் - ஞானமயமான மலை. பரித்த - தாங்கிய.

7. எமன் அழிய, மார்க்கண்டேயர் உயிர் உறுதிகொள்ள, அருள்செய்த சிவபெருமானின் வடிவமேயான மலையைச் சார்ந்திருக்கிறோம் ஆதலால் எம்மைக் கட்டுபவர் யார் என்று யானைகள் குறும்புசெய்வதைக் கண்டான்.

பாலன் - மார்க்கண்டேயன். காழ்ப்ப - உறுதிகொள்ள, மேலவரை - மேன்மைபொருந்தியமலை. 'உயர்ந்தோரை யடுத்த எம்மை யார் கட்டமுடியும்'என வேறும் ஒரு பொருள் தோன்ற நிற்றல் காண்க. கோல இபம் - அழகியயானை.

எங்களை நி கர்ப்பவுயி ரோடிறைவன் மெய்யில்
தங்குவன வல்லவுரி தந்தவின மென்ன
அங்கெழு களிப்பினனி யார்ப்பவென மாடே
சிங்கமொடு தோல்புலி சிலைத்தெழுவ கண்டான். 8

கையலது போதலறி யாதுகலை கால்விட்டு
உய்யவறி யாதுமுய லென்றுறு தருக்கால்
வெய்யவுளி யங்கடமை வீழ்கவய மற்றும்
மெய்முழுது மேவிவிளை யாடுவன கண்டான். 9

விலங்கலுரு வத்தும்வில காமைவிட நாக
அலங்கறமு விக்கவினி யாங்குவளர் சந்தின்
குலங்கதுவு சூழல்குடி கொண்டுசுடி கைக்கண்
இலங்குமணி நாகமினி தாடுவன கண்டான். 10

மேவிமு னணிந்தவியன் ருலணிக ளென்ன
ஆவியிகல் வேங்கையிபம் ஆடரி யிவற்றின்
தாவிலுரி யுந்தலைவெண் மாலிகைக ளென்ன
ஓவிலரு விக்குடிநை யூர்வனவுங் கண்டான். 11

---

8. சிவபெருமான் போர்த்துக் கொள்வதற்காகத் தோலையுதவிய யானை, உயிரோடு இறைவன் திருமேனியில் தங்கும் சிறப்பைப் பெறுமையால் எங்களை யொப்பன அல்ல என்று களிப்பினல் ஆரவாரிப்பன என, யானைகள் சிங்கம் புலி யிவற்ருேடு ஓலிப்பதைக் கண்டான். உரி - தோல். தோல் - யானை.

9. மான் கையை விட்டு வேற்றிடத்திற்குப் போதலை அறியாது; முயலகன் திருவடியை விட்டு உய்தலை அறியான். என்ற செருக்கால். கொடியகரடி, கடமா விரும்பப்படுகின்ற காட்டுப்பசு மற்றுமுள்ள விலங்குகள் மலையின் உடல்முழுதும் பொருந்தி விளையாடுவனவற்றைக் கண்டான்.

முயல் - முயலகன் என்பதோடு முயல் என ஒருவிலங்கின் பெயரும் உணர நிற்றல் காண்க.

10. இறைவன் மலைவடிவு கொண்டாலும், அவரை விடாமல் பாம்புகள் அவரைத்தழுவி அழகு செய்வதுபோல, சந்தனமரத்தின் அடியிலேகுடிகொண்டு நாகங்கள் இனிதாக ஆடுவனவற்றைக் கண்டான்.

விலங்கல் - மலை. நாக அலங்கல் - பாம்பாகிற மாலைகள். கவினியாங்கு - அழகுசெய்ததுபோல.

11. இறைவன் முன்பு விரும்பி யணிந்த தோலாடைகளைப் போல. உயிர்க ளோடு பகைகொள்கின்ற வேங்கைப்புலி, யானை, சிங்கம் இவற்றின் தோலையும், தலைமாலைகளைப்போல இடைவிடாது விழும் அருவிகளையும் கண்டான்.

நால்புழை நெடுங்கையிப நன்றமர் உடற்றக்-
கால்பொர வுடைந்தகழை நித்தில மணித்தூள்
பால்புரை விபூதிபல வச்சிர மணிக்கல்
சால்பின்வள ரென்பணி தகைத்தொளிர்வ கண்டான். 12

செஞ்செவி தமக்குரிய சேரியென வாழு
மஞ்சர்க ளெழுப்புமணி யாழிசை கடுப்பக்
கொஞ்சுகிளி மஞ்ஞைவிளை தோரைகள் கொறிக்கும்
வஞ்சநிமிர் சாரல்வளர் தேன்முரல்வ கண்டான். 13

செங்கையி னமைந்தொளி திகழ்ந்ததழ லொப்பத்
துங்கவொளி கான்றுவளர் சோதிமர முங்கைத்
தங்குதுடி யின்னெலி தழங்குதல் கடுப்ப
அங்கணமர் வேடரெழு மாகுளியுங் கண்டான். 14

ஆடுஅரி - வெற்றிகொள்கின்ற சிங்கம். அருவிக்குடிஞை - அருவியாகிய ஆறு.

12. யானைகள் சண்டையிடுவதால் அவற்றின்காலால் மிதிபட்டு உடைந்த, மூங்கில்முத்துக்கள் மாணிக்க முதலான மணிகளின் தூள், பால்போன்ற விபூதி பல வயிரமணிகள் ஆகிய இவை இறைவன் அணிந்துள்ள எலும்பணிகளை மறைத்து விளங்குவதைக் கண்டான்.

புழை நால் நெடுங்கை இபம் - ஓட்டையோடு தொங்குகிற நீண்ட கையை யுடைய யானை. உடற்ற - மாறுபட. சால்பு - பெருமையோடு. தகைத்து - மறைத்து.

13. இளங்காளையர்கள் எழுப்புகின்ற மணியோசையும் யாழோசையும் ஒப்பக் கிளிகளும் மயில்களும் துவரையைக்கொறிக்கும் வஞ்சனை நிறைந்த சாரலில் வளர்கின்ற வண்டுகள் ஒலிப்பதைக் கண்டான்.

மஞ்சர் - மைந்தர். மஞ்சர்கள் எழுப்பும் மணியாழிசை, செஞ்செவி தமக் குரியசேரி என வாழும் வஞ்ச நிமிர்சாரல் எனக்கூட்டுக. தேன் - வண்டு.

14. இறைவனுடைய திருக்கரத்தில் விளங்கும் செந்தழலை ஒப்ப ஒளிசெய் யும் சோதிமரமும், துடியாகிய உடுக்கைபோல ஒலிக்கும் வேடர்கள் எழுப்பும் ஆகுளிப்பறையையும் கண்டான்.

ஆகுளி - வேடர்கொட்டும் சிறுபறை.

ஏட்டைதரு வன்பிறவி யென்னுமலே யேறும்
வாட்டமும் வயங்குவரை யேறவரு மெய்ப்பின்
நீட்டமு மொருங்கற நிரம்புகுளிர் வன்கால்
சேட்டருள் நிகர்ப்பவரு திட்டையெதிர் கண்டான். 15

வேதனை பிறப்பற விழைந்தருளின் நின்ருேர்
காதலக னுள்ளொளியி னேடுகல வாமை
வாதனை மலம்விலங்கி யாங்குமலி மஞ்சு
மூதறிவி னுன்சிகர மூடுவது கண்டான். 16

ஆதிமல நீங்கவிடை யாவியருட் பின்னுய்ச்
சோதியிடை மூழ்கும்வகை சூழ்திரு வெழுத்தான்
மோதியிடை நின்றமல முற்றிரிவ தென்னக்
காதிவரு காற்றினது நீங்குவது கண்டான். 17

வேறு

இன்ன வாகிய வளம்பல கண்டுகண் டிவருநா ரதன்வாய்மை
மன்னும் யோகின ருள்ளமா தாரமூ விரண்டையு மரீஇயப்பால்
துன்னு மாயிரந் தொகுமிதழ்த் தாமரைச் சுடரினை யடுத்தாங்குக்
கொன்னு மால்வரை யாறையுங் கடந்துபோய்க் குடுமிமால் வரைசார்ந்தான்.

---

15. அவாவால் விளையும் வலிய பிறவி என்னும் மலே ஏறுவதால் உண்டான துன்பமும், விளங்குகின்ற மலைகளை ஏறுவதால் உண்டான களைப்பு மிகுதியும் கெடக் குளிர்ந்த காற்றை பேரருளை ஒப்ப வீசுகின்ற மேடுகளை எதிர்கண்டான்.

ஏட்டை - ஆசை. அவா என்ப எல்லாவுயிர்க்கும் எஞ்ஞான்றும். தவாப் பிறப்பீனும் வித்தாகலின் 'ஏட்டைதரு வன்பிறவி' என்ருர். சேடு - பெருமை. எய்ப்பு - களைப்பு. திட்டை - மணல் திட்டை.

16. துன்பந்தருகின்ற பிறவி நீங்க விரும்பித் திருவருளிலேயே தோய்ந்து நின்ருேர் உள்ளேயுள்ள ஞானத்தோடு ஆசை கலவாவண்ணம் வாசனைமலம் விலகினுற்போல, மேகங்கள் இயல்பாகவே ஞானம் வாய்ந்த பெருமானுறைகின்ற மலையின்மேல் மூடுவதைக்கண்டான்.

விலங்கியாங்கு - நீங்கினுற்போல. மஞ்சு - வெண்மேகமுமாம்.

17. உயிர் ஆணவமலம் நீங்கத் திருவருளின் பின்னே ஞானவொளியில் மூழ்குவதற்காக எண்ணப்படுகின்ற திருவைந்தெழுத்தால் அறிவைப்பற்றி நின்ற மலம் முழுதும் கெடுவதுபோல மேகங்கள் மோதி வீசுகின்ற காற்ருல் விலகுவதைக் கண்டான்.

18. இத்தகைய பல வளங்களைக்கண்டு மலையின்கண் ஏறும் நாரதமுனிவன் உண்மை ஞானத்தையுணரும் சிவயோகியர் உள்ளம் ஆருதாரங்களையும் கடந்து

கருத்த டங்கியோ கத்தினுற் சோதியைக் காண்பவர்க் கவணைந்தை
நிருத்த வண்சிலம் பொலியெழு வித்தென நெடுகிவிண் கிழித்தோங்கு
திருத்தன் வைகிய சிலம்பினை யடுத்தலுந் தேவதுந் துபியோடும்
அருத்தி மெய்யடி யார்சிவ முழக்கமு மடர்ந்தெழ மகிழ்கூர்ந்தான். 19

அங்கி பாங்கரி னமைத்தலாற் றொடுவதற் கவனியு ளோரஞ்சும்
பொங்கு சீதளத் தாவயி னெழுகிய புதுமண நதிதீர்த்தம்
முங்கி நீறுடன் முழுவது மணிந்துசெய் முறைமைமுற் றுறவாற்றி
எங்க ணுயகன் றிருமலை யிவர்ந்தனன் இவர்ந்தயாழ் மணித்தோளான். 20

இமய மீன்றவ ளோதியு மைங்கர னிறும்புசூழ் தடங்குன்றுஞ்
சிமய மோங்கிய நான்முகன் விலங்கலுஞ் செங்கண்மால் வளர்வெற்பும்
அமைவி ராவிய வேலவன் பறம்புந்த னடிவரை யெனத்தாழ
உமையோ டாரண மறிகலா னிருப்பநீண் டொளிர்வரை முடிசேர்ந்தான். 21

அப்பாலிருக்கும் சகஸ்திராரத்திலுள்ள சிவச்சோதியை அடைந்ததுபோல பெருமையுடைய மலைகள் ஆறையும் கடந்துபோய்ச் சிகரத்தையுடைய பெரிய மலையாகிய தெட்சிண கயிலாயத்தை அடைந்தான்.

இவரும் - ஏறுகின்ற. ஆதாரம் மூவிரண்டு - மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், விசுத்தி, அநாகதம், ஆஞ்ஞை என்ற நிலைகள் ஆறு. கொன்னும் - பெருமையோடுகூடிய.

19. மனம் அடங்கி லோகநெறியால் ஞானவொளியான சிவத்தைக் காண்பவருக்கு அங்கு நடனசபாபதி சிலம்போசையைக் கேட்கச்செய்யுமதுபோல, நாரதன் தட்சிணகயிலை மலையை அடுத்ததும் தேவதுந்திபி முழக்கமும், அடியார்களின் அர அர முழக்கமும் செறிந்துண்டாக நாரதன் மனமகிழ்ந்தான்.

நெடுகி - நீண்டு. திருத்தன் - தீர்த்தன்; தூய்மையானவன்; ஈண்டுச் சிவபெருமான். அருத்தி - ஆசை.

20. தீயைப் பக்கத்தில் அமைத்துள்ளதால் தொடுவதற்கே பூமியின்கண்ணுள்ள மக்கள் அஞ்சுகின்ற குளிர்ந்த காஞ்சிநதியின் தீர்த்தத்தில் நீராடி, திருநீறு உடல்முழுதும் பூசி, நித்திய கன்மங்களைச் செய்து, நாரதமுனிவர் சிவபெருமான் எழுந்தருளியுள்ள மலைமீது ஏறினர்.

அங்கி - தீ. அவனி - பூமி. செய்முறைமை - நாட்கடன்கள்.

21. உமையவள் மலையாகிய கௌரிசிருங்கமும், விநாயகப்பெருமான் எழுந்தருளியுள்ள மலையைச் சுற்றியுள்ள குன்றுகளும், பிரமன் இருக்கிற மலையும், திருமால் எழுந்தருளியுள்ள பதரியும், ஸ்கந்தமாதனமும், அடிவாரமாக விளங்க, உமாதேவியும் வேதங்களுங்கூட அறிய இயலாதவராகிய சிவபெருமான் எழுந்தருளிய மலையைக்கண்டான்.

ஓதி - மலை; என்றது கௌரிசிருங்கம் என்னும் மலையை. ஐங்கரன் மலை - அத்திகிரி என்பாரும் உளர்.

சேர்ந்து சுற்றெலாம் நோக்குவான் அடித்தலை செறிந்தவெற் புகளெல்லாஞ்
சார்ந்த பீடமா யவற்றின்மீப் போகிய தனிவரை நலன்முற்றும்
ஆர்ந்த தோர்சிவ லிங்கமாய்த் தோற்றலும் அஞ்சியிம் முடிமீதும்
ஏர்ந்து போற்றவெவ் வேறுரு வெடுத்தன னெனத்தெளிந்
தெதிர்போந்தான். 22

காந்த நேர்படும் ஊசியிற் சிவலிங்கக் கடவுடன் றிருமுன்னர்ப்
போந்த நாரதன் புந்திபோ யருண்மலை புகவிழிப் புனல்கார்போல்
ஏந்து மார்பக நனைப்பமெய்ப் புளகங்க ளெழமொழி தடுமாறச்
சேந்த வார்கழல் தாழ்ந்தனன் அன்பெனுந் திரைக்கட லிடைத்தாழ்ந்தான்.

நெடிது போதுதண் டெனக்கிடந் தானந்த நிரப்புநெஞ் சகத்தோடும்
படியின் மீதெழுந் துச்சியி லிருகையும் பதித்துவெள் ளியங்குன்றின்
முடியின் வீற்றிருந் தருளிய பராபர முக்கண சயபோற்றி
அடிய னேற்கருள் புரிந்ததற் புதமென வறைந்துபூ சனைசெய்தான். 24

அமரர் விஞ்சையர் சித்தர்சா ரணரருந் தவத்தின ரிவர்நாளுந்
தமது வைப்பென வழிபடு மிரசத சயிலவுச் சியின்வேற்கைக்
குமர னைங்கர னுமையொடு மைந்துருக் கொண்டுவீற் றிருக்கின்ற
விமலன் முந்துற வீணையி னெழான்முறை வீக்கியேத் தினன்மாதோ. 25

---

22. அடைந்து சுற்றும் முற்றும் பார்க்கின்ற நாரதன், அடிவாரத்தில் இருக்கிற மலையெல்லாம் பீடமாகவும் அதன்மேல் உயர்ந்துள்ள மலை அழகு நிறைந்த சிவலிங்கமாகவும் தோன்றுதலும், அஞ்சி இச்சிகரத்தின்மீதும் அழகுற வணங்க வெவ்வேறு வடிவங்கொண்டனன் பெருமான் எனத்தெளிந்து எதிரே வந்தான்.

23. காந்தத்தைக் கண்ட ஊசிபோல, சிவலிங்கப்பெருமான் முன்பு வந்த நாரத முனிவரின் மனத்தில் அருள்மலையாகிய சிவன்புக மேகத்தைப்போலக் கண்ணீர் பொழிந்து மார்பை நனைப்ப, உடம்பு புளகம்கொள்ள, மொழி தடுமாறத் திருவடியைத் தொழுதான். அன்புக்கடலில் மூழ்கினன்.

24. நீண்ட நேரம் மரத்தண்டுபோலப் பூமியில் கிடந்து, மகிழ்ச்சி மிக்க மனத்தோடு பூமியிலிருந்து எழுந்து, இரண்டு கைகளையும் தலைமேல் குவித்துக் கைலைமலையில் இருக்கின்ற கடவுளே. தேவரீருக்கு வெற்றி உண்டாகட்டும்; வணக்கம்; தேவரீரே! அடியேனுக்கு அருள்செய்தது அற்புதமெனச் சொல்லிப் பூசைசெய்தான்.

25. தேவர்கள் முதல் முனிவர் ஈறான பலரும், தமது செல்வம் என்று வணங்கும் வெள்ளியங்கிரியின் உச்சியில் முருகன், கணபதி, உமாதேவி முதலான ஐந்து திருமேனியை உடன்கொண்டு வீற்றிருக்கின்ற சிவபெருமான் முன்பு வீணை வாசித்து வணங்கினன்.

வைப்பு - செல்வம். இரசத சயிலம் - வெள்ளிமலை. எழால் - பாட்டு.

வேறு

கள்ளிவர் கோதை கரங்கொண்டு பூசித்து
வெள்ளி வரையை விழைந்தா ரிதுபிறப்பின்
உள்ளிய போக முழந்துமுள மாய்ந்து
தெள்ளுபே ரின்பந் திளைக்கின்ருர் மன்னே. 26

செம்பொரு ளார்ந்த செழுந்தீந் தமிழ்கொண்டு
நம்பன் கயிலை நயந்தேத்து நாவினேர்
இம்பர் நலியும் இடும்பையுடற் கிடந்தும்
உம்ப ரறியா வுருக்கிடந்தார் மன்னே. 27

காரோத வண்ணன் கசிந்தேத்துங் கண்ணுதறன்
பாரோதும் வெள்ளிப் பறம்புளத்திற் றிட்டினேர்
நீரோடு கண்ணின் நிலைதிரிந்தா ராயிடினும்
சீரோடு வைகுந் திருவுடையார் மன்னே. 28

வேறு

போற்று நாரதன் மீட்டும் பூரணர் பாதம் வணங்கிக்
கூற்றம் வென்றவை வேற்கட் கோமள வல்லி யன்னனை
ஊற்றி ருங்கடத் தானை யும்பர்கள் வெஞ்சிறை மீட்ட
வேற்ற டக்கையி னனை விழ்ந்து பழிச்சி யெழுந்தான். 29

---

26. தேன்மிகுந்த மாலையைக் கையில் ஏந்தி, வெள்ளிமலையை, விரும்பிப் பூசித்தவர்கள், இந்தப் பிறப்பிலேயே யோகங்கள் பலவற்றையும் பெற்று மனம் அழிந்து, பேரின்பத்தை அனுபவிப்பார்கள்.

27. செம்பொருள் ஆகிய சிவபெருமானைத் தமிழ்ப் பாமாலைகொண்டு விரும்பித் துதிக்கின்ற நாக்கையுடையவர்கள், இப்பிறவியிலே துன்பமயமான உடலில் கிடந்தும் தேவர்களும் அறியமுடியாத வடிவத்தில் விளங்குவார்கள்.

28. திருமால் வழிபடும் வெள்ளியங்கிரியை மனத்தில் பதித்தோர், கண்ணீர் வடிக்குந்துன்பம் உடையார் ஆனாலும், புகழோடு வாழும் செல்வமும் உடையார் ஆவர்.

கார் ஓதவண்ணன் - கரியகடல்போலும் நிறமுடைய திருமால். கண்ணுதல் - நெற்றிக்கண்ணுடைய சிவபெருமான், பார் ஓதும் - உலகம் புகழும்.

29. இங்ஙனம் துதிசெய்யும் நாரதன் மீட்டும் சிவபெருமானையும், உமையம்மையையும், விநாயகப்பெருமானையும், குமரக்கடவுளையும் விழ்ந்து வணங்கி எழுந்தான்.

கூற்றம் - எமன். வைவேல் - கூரியவேல். ஊற்று இரும் கடத்தானை - ஒழுகுகின்ற பெரிய மதநீரையுடைய கணபதியையும். பழிச்சி - தோத்தரித்து.

கட்டு பொற்சடை யொல்கக் காதணி குண்டல மாட
ஒட்டு வற்கலை தட்ப வுள்ள மெழுந்துமுன் செல்லச்
சட்ட வெற்பி னிழிந்து சாரலின் மேற்றிசைச் சூழல்
அட்டு நல்லொளிச் செம்பொன் ஆலயங் கண்டங் கடுத்தான். 30

வேறு

ஒழுகொளித் தரள நாற்கோட் டுவாப்பல மருங்கு சூழ
விழுகு மும்மத வெள்ளத்தி னிராயிரங் கோட்டு வேழம்
முழுகொளிப் புவனப் பொற்றேர் மூட்டிய கலினப் பாய்மா
மழுகுபொற் படியின் நீண்ட வாய்தலின் முன்னர் நிற்ப. 31

கழுக்கடை பிண்டி பாலங் கப்பண முசல ஞாங்கர்
மழுக்கதை தண்டு நேமி வச்சிரஞ் சுரிகை சூலம்
எழுக்குயஞ் சிலைவாள் பாச மின்னபல் படையி னோடும்
அழுக்கடை யாத பூதர் ஆலய மருங்கு மொய்ப்ப. 32

---

30. சடையசைய, குண்டலமாட, மரவுரி தடுக்க, மனம் முன்னே விரைந்து செல்ல, விரைவாக மலையினின்று இறங்கி, மலைச்சாரலின் மேற்குப் பக்கத்தில் செம்பொன்னுலாகிய கோயிலைக்கண்டு அங்குச் சென்றான்.

வற்கலை - மரவுரி. தட்ப - தடுக்க. சட்ட - விரைவாக. அட்டும் நல்லொளி- அணைந்த நல்ல ஒளி.

31. அயிராவத யானைகள் பல சூழ அயிராவணமும். உலகமாகிய தேரிலே பூட்டிய குதிரைகளும், கோயிலின் வாயிலிலே நிற்பன.

தரளம் - முத்து. நாற்கோட்டு உவா - நான்கு கொம்புகளையுடைய யானை; என்றது இந்திரன் ஏறும் அயிராவதம் என்னும் வெள்ளையானை. விழுகு மும்மதம்- விழுகின்ற மூன்று மதங்களையுடைய. இராயிரங்கோட்டு வேழம் - இரண்டாயிரம் கொம்புகளையுடைய சிவபெருமான் ஏறும் யானையாகிய அயிராவணம். கலினம் - சேணம்.

32. அக்கோயிலின் பக்கத்தில், பூதநாதர் கோயில் பல நெருங்க என்க.

கழுக்கடை - ஒருதலைச் சூலம். பிண்டிபாலம் - கையால் எறியும் ஒருவகைத் தண்டாயுதம். கப்பணம் - இரும்பால்செய்த யானைநெருஞ்சில் முள்போன்ற படை. முசலம் - உலக்கை. ஞாங்கர் - வேலாயுதம். மழு - தீயகல் அல்லது கைக் கோடரி. கதை - நுனிபெருத்த தண்டம். தண்டு - தண்டம். நேமி - சக்கரப்படை. வச்சிரம் - பல நுனிகளையுடைய ஒருவகை வேற்படை. சுரிகை - கத்தி. சூலம் - மூவிலைச் சூலம். எழு - இருப்புலக்கை. குயம் - வளைந்தவாள். சிலை - வில். வாள் - நேராக நுனிகூரிய குத்துவாள். பாசம் - வலிக்கும் கயிறு. அழுக்கடை யாத பூதர் - இவ்வாயுதங்களைப் பயன்படுத்துங்காலமே நேராமையால் கூறிய தாம்; அன்றிச் சிவசந்நிதானத்தில் இருப்பதால் ஆணவ அழுக்குப் பற்றாத பூதர் எனலுமாம்.

பணை துடி படகந் தக்கை பணவந் திண்டிமந் தடாரி
கிணை குளிர் பதலை மொந்தை சல்லரி பம்பை கேழ்மண்
கணைவளை கோடு பீலி காகளந் தாரை முற்றுந்
துணையறு கணங்க ளோர்பால் சுவையமிழ் தெனச்சே விப்ப. 33

விராவுநை வளமுன் னெட்டும் விளக்கஞ்செய் குறிஞ்சி யாழும்
அராகமுன் னுன வைந்தும் ஆக்குறும் பாலை யாழும்
பராவிவின் னவரும் போற்றும் படுமலைப் பாலை முன்னும்
தராதலம் வியக்கு மெட்டுஞ் சார்ந்திடு மருத யாழும். 34

நேர்திற முதலா நான்கு நிகழ்த்திய முல்லை யாழுந்
தேர்தரு நெய்தற் கான திறனியாழ் விளரி யெல்லாம்
ஆர்தரு புலவ ரோர்பா லமைத்திசை யெழுப்ப வோர்பால்
வார்தரு குழலின் பேத மனைத்தும்வல் லவர்வா சிப்ப. 35

---

33. பணைமுதலிய வாச்சியங்கள் சுவையோடு கூடிய அமிர்தம்போல ஒலிக்க.

பணை - முரசு. துடி - உடுக்கை. படகம் - போர்ப்பறையாகிய ரணபேரி. தக்கை - பம்பை வாத்தியம். பணவம் - தம்பட்டம். திண்டிமம் - தம்பட்டத்தில் ஒருவகை. தடாரி - பம்பைபோலப் பருத்த இருமுகப்பறை. கிணை - மருதநிலப் பறை. குளிர் - முழவு. பதலை - ஒருமுகப்பறை. மொந்தை - குடமுழா. சல்லரி - வாயகன்ற வெண்கலத்தகட்டாலாகிய ஜல்ஜல் என ஒலிக்கும் ஒருவகைத் தாளம். பம்பை - தக்கை வகையுள் ஒன்று. கேழ்மண் - நிறம்பொருந்திய மார்ச்சனை பூசிய முழவுவகை. கணைவளைகோடு - ஒலிக்கின்ற வளைந்த கொம்பு என்னும் கருவி. பீலி - சிறுசின்னம். காகளம் - எக்காளம். தாரை - வெண்கலத்தாலாகிய ஊது குழல். துணை - ஒப்பு. சேவிப்ப - ஒலிக்க.

34, 35. குறிஞ்சி பாலை மருதமுதலான யாழ்களையும் வல்லவர் வாசிப்ப என்க.

குறிஞ்சி யாழ் - நைவளம், காந்தாரம், படுமலை, பஞ்சுரம், மருள், அமிர்ப்பு, அரற்று, செந்திறம் என்னும் எட்டுவகைகளையுடையதாய்க் குறைந்த ஸ்வரங்கள் கொண்ட மலைநிலத்துக்குரிய பண். பாலையாழ் - அராகம், ஆசான், உறுப்பு, குறுங்கலி, தேர்திறமென்ற ஐந்தையும் ஆக்கும் பண். மருதயாழ் - படுமலைப்பாலை முதலான எட்டுப்பண். இவற்றுள் படுமலைப்பாலை - துத்தங்குரலாக எழும் இசை. எட்டின் வகை உணரக்கூடவில்லை.

முல்லையாழ் - பாலைப்பண்ணின் நேர்திறத்தை முதலாகக்கொண்டு நேர்திறம், குறுங்கலி, உறுப்பு, ஆசான் என்ற முறையில் நிகழ்த்தப்பெறும் நால் வகைப்பண். நெய்தல்யாழ் - விளரி. ஆர்தரு - நிறைந்த.

வேறு

காந்தாரம் புறநீர்மை கௌசிகங்குச் சரிநளுத்தை கவுடி நாட்டை
வாய்ந்தோதுஞ் சாதாரி கௌவாணங் கொல்லிக்கௌ வாணங் காஞ்சி
ஆய்ந்தார்கொள் சாயரிபஞ் சுரம்பழம்பஞ் சுரங்குறண்டி யமிழ்தாய்க் காதிற்
போந்தேறு மலகரிநற் பயிரவியென் றிவைவல்லார் புகழ்ந்து பாட. 36

கொடுகொட்டி பாண்டரங்கங் காபால மெனுமிறைவன் கூத்து மூன்றுங்
குடைகொட்டி யெனுங்குமர னுடலிரண் டுங்கணங்கொண் டொருபா லாடக்
குடமல்லு மரக்காலல் லியமென்னுந் தமக்குரிய கூத்து நான்கும்
குடம்வெல்லும் வளைக்கரத்தோ ரநேகரவ ணொருபாங்கர்க் கொண்டுபோற்ற.

உருத்திகழைங் கணைக்கிழவ ரநேகர்தமக் குரியபே டுவந்து காட்டப்
பருத்தபுயத் தயிராணி கடையமிட மலர்மாது பரவை யாடச்
சுரித்தகுழற் குமரிமரக் காறமுவ வெழுமாதர் துடிகொண் டாட
வரித்தமுலை யரம்பையர்கள் கரணமுதற் பலகூத்து மருவி யாட. 38

உறுவசிமே னகையரம்பை திலோத்தமையென் பவர்பலர்தா மொழுங்கி [னின்று
நறுமலர்க்கை வழிவிழியும் விழிவழியுள் ளமுநடப்ப நடன மாடத்
தெறுவினையைத் தெறுமுனிவர் குணலைபயின் றுரணங்க டிகழ வோத
மறுவிகந்த தும்புருநா ரதர்பலர்வி ணையினிருபால் வதிந்து போற்ற. 39

---

36. காந்தாரமுதல் பயிரவி யீறுன பண்களில் வல்லார் இறைவனைப் புகழ்ந்துபாட.

37. கொடுகொட்டி, பாண்டரங்கம், காபாலமென்ற மூவகைச் சிவனுடலை யும், குடைக்கூத்து, கொட்டிக்கூத்து என்னும் இரண்டு முருகனுடலையும், கூடி நின்று கணங்கள் ஒருபாலாடவும், குடக்கூத்து, மற்கூத்து, மரக்கால், அல்லியம் என்னும் திருமால் கூத்தையும் மகளிர் ஒருபால் நின்றுடவும் என்க.

கூத்தின் இலக்கணத்தையும், அவற்றின் ஆசிரியன், கருவி இவற்றின் அமைதிகளையும், சிலப்பதிகாரத்து அரங்கேற்றுக்காதை அடியார்க்கு நல்லார் உரையிற்காண்க.

38. மன்மதர்கள் பலர் தமக்குரிய பேடு என்னும் கூத்தைச்செய்ய, இந்தி ராணி கடையம் என்னும் கூத்தையும், திருமகள் பரவைக்கூத்தையும், குமரி மரக் காற் கூத்தையும், சத்தமாதர் துடிக்கூத்தையும், அரம்பையர்கள் நூற்றெட்டுக் கரணபேதங்களையும் ஆட.

இவற்றின் இலக்கணங்களை வடமொழி நாட்டிய சாத்திரத்து நான்காம் அத்தியாயத்தும், பரதார்ணவத்தும், தமிழில் 'ஆடல்வல்லான்' என்ற நூலி லும் காணலாம். மலர் இடம் மாது - திருமகள். குமரி - துர்க்கை. வரித்த - கச்சால் கட்டிய.

39. ஊர்வசி முதலான தேவ அரம்பையர் முறையாக நடிக்கவும், வருத்து கின்ற வினைகளைத்தையும் வருத்துகின்ற முனிவர்கள் குணலையாடிக்கொண்டு

இந்திரரெண் ணிலர்பிரம ரெண்ணிலார் பதினொருமூ வருமெண் ணில்லார்
சந்திரரெண் ணிலரேனை வானவரெண் ணிலர்நிசா சரரெண் ணில்லார்
கந்தருவர் விஞ்சையர்கள் கருடர்சாத் தியர்சித்தர் கரும தேவர்
அந்தரரென் பவர்பிறரு மநேகரகத் தினும்புறத்து மடர்ந்து போற்ற. 40

ஆடிகுடை சாந்தாற்றி யாலவட்டங் கவரிகொடி யனைத்து மொய்ப்பக்
கோடிமணித் தூணிறுவிக் குயிற்றியபொன் மண்டபத்திற் குமர வேளும்
நீடியமும் மதக்களிறு மருகிருப்ப வுமையிடப்பா னிலவத் தேசு
கூடியபொற் றவிசினிடை விற்றிருந்தான் மன்றுணடங் குயிற்றும் பெம்மான்.

அத்தகைய கோயிலினை யடுத்தநா
ரதமுனிவ னன்பு பொங்கப்
பைத்தமணி வாயிலிடைச் சடைசழங்க
வுடைசழங்கப் பன்னு வீணை
கைத்தலத்தின் மேக்குயர்த்திச் சனநெருக்கி
னூடேகிக் கடந்து வாய்தல்
சுத்தமருள் கோமாத ருடனிமிலே
றிருந்தநெடுஞ் சூழல் புக்கான். 42

வேதங்களை ஓதவும், தும்புரு நாரதரிருவரும் வீணையிசைக்கவும் என்க. குணலை - ஒருவகைக்கூத்து; பக்தி பரவசத்தால் ஆடுவது.

40. தேவகணங்கள் வெள்ளியங்கிரியின் அகத்தும் புறத்தும் நெருங்கித் துதிக்க என்க.

இந்திரர் முதலானோர் ஒவ்வோரண்டத்தும் ஒவ்வொருவராய்த் தத்தம் தொழில் புரிபவர்களாதலின் அநேகர், பலர், எண்ணிலர் எனக் குறித்தார்கள் என்க.

பதினொருவர் - உருத்திரர்கள் பதினொருவர். இவர்கள் அண்டங்கள்தோறும் பதினொருவர் ஆவர். மூவர் - பிரமா விஷ்ணு ருத்திரர் என்ற முத்தேவரில் பலர். நிசாசரர் - இரவில் இயங்கும் அசுரர்கள். சாத்தியர் - கணதேவதைகளில் ஒரு சாரார். கருமதேவர் - பிதிரர்.

41. சிவபெருமான், உமையம்மையும் விநாயகரும் முருகனும் பக்கங்களில் விளங்க, கனக மண்டபத்தில் இரத்தின சிம்மாசனத்தில் பரிவாரங்கள்சூழ விற்றிருந்தார்.

ஆடி - கண்ணாடி. சாந்தாற்றி - சிவிறி.

42. அத்தகைய ஆலயத்தையடைந்த நாரதர் அன்புமிக, திருக்கோயிலின் வாசலிலே சடைகுலைய, உடையவிழ, வீணையைத் தலைக்குமேல் தூக்கிக்கொண்டு சன நெருக்கத்தினிடையிலே வாயிலைக்கடந்து கோமாதர்களுடன் நந்தி விற்றிருக்கும் வாயிலையடைந்தான்.

வேறு

ஆங்க ணெட்டினு மைந்தினும்
பாங்கி னூரப் பணிந்தனன்
ஓங்கு கையினை உச்சியில்
தாங்கி முன்னுறச் சார்ந்தனன். 43

அந்தில் வந்தடர் மாசனம்
பந்தி கொள்ளப் பணித்துலா
நந்தி கண்டிவ ணூரதா
முந்து கென்னலு முந்தினன். 44

அன்றி னூர்புர மாரழற்(கு)
ஒன்ற வூட்டிய உத்தமன்
என்று வந்தனை யோவென
இன்று வந்தன னென்றனன். 45

ஆல மார்ந்த மிடற்றினன்
கோல நோக்கிக் குளிர்ந்தனன்
சால வன்பு தழைத்தெழச்
சில மார்துதி செப்புவான். 46

---

43. அங்குப் பஞ்சாங்க அட்டாங்க நமஸ்காரங்கள் செய்தான்; உச்சிமேற் கைகளைக் குவித்து வணங்கினன்; திருமுன்னர் அடைந்தான்.

எட்டு - சிரம், கையிரண்டு, முழந்தாள் இரண்டு, மார்பு, செவியிரண்டு ஆகிய எட்டு உறுப்புக்களும் நிலத்திற்றோய வணங்கும் நமஸ்காரம். அஞ்சு - தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு ஆகிய ஐந்துறுப்புக்களும் தோய வணங்கும் வணக்கம்.

44. அங்கு, வந்து நெருக்குகின்ற சனக்கூட்டத்தை வரிசையாக வாருங்க ளென்றுபணித்து வாயிலில் உலாவுகின்ற நந்திதேவர்கண்டு 'நாரதா! கொஞ்சம் முந்திக்கொள்' என்ன, நாரதன் முந்தினன்.

45. பெருமான், என்று வந்தாய் என வினவினர். நாரதன் இன்றுவந்தேன் என விண்ணப்பித்துக் கொண்டனன்.

அன்றினர் - பகைவர். ஒன்ற - பொருந்த. என்று வந்தனை என்பது 'என்று வந்தாய் என்னும் எம்பெருமான்றன் திருக்குறிப்பே' என்பதை நினைப் பித்தல் காண்க.

46. பெருமான் திருமேனி அழகைக்கண்டு மனங்குளிர்ந்தான். அன்புமிகத் தோத்தரித்தான்.

வேறு

தண்ணார் மதியுந் தழல்வா ளரவுஞ் சடிலத் தணியுந் தலைவா சரணம்
பண்ணா ரிசையும் பகைமான் குரலும் படர்செஞ் செவிநா யகனே சரணம்
பெண்ணா முமையு நீயா னுருவும் பிணையுந் திருமே னியனே சரணம்
விண்ணா டருமண் ணவரும் பணியும் வெள்ளிக் கிரிவே தியனே சரணம். 47

அண்டங் களனைத் துநொடிக் குமுன மடலைப் பொடியாக் குநுதற் சுடராற்
பண்டின் பமளிக் குமலர்க் கணைவேள் படவென் றருண்மி ளிமையாய் சரணந்
தொண்டொன் றுமலா லறியா தவர்தஞ் சுரிகுஞ் சிமுடிக் கணியாஞ் சரணம்
மிண்டுந் தருமன் படிவத் துதவும் வெள்ளிக் கிரிவே தியனே சரணம். 48

தண்டா துலகோர்க் குவரம் பலவுந் தழையச் சொரியங் கையின்மும் மலமும்
அண்டா தடைவா ருடலும் பொருளு மணுவுந் தரவேற் றருள்வாய் சரணம்
கண்டா னலனென் றெவரும் பரவுங் கடியார் மலர்துன் றுபதத் திடைமண்
விண்டான் பதுமக் கண்ணீந் தருளும் வெள்ளிக் கிரிவே தியனே சரணம். 49

மத்தக் கரியி ருரிபோர்த் தருளும் வயவா வியவார்க் கருளாய் சரணம்
பத்திக் கமிழ்தா கியினித் தருளும் பரமா புரமாய்த் தவனே சரணம்
எத்திக் குமிறைஞ் சநடம் புரியு மிறைவா மறைவாய் மொழியாய் சரணம்
வித்தைக் கொருவைப் பெனவே திகழும் வெள்ளிக் கிரிவே தியனே சரணம்.

---

47 - 52. இதுமுதல் ஆறு பாடல்கள் நாரதன் கூறிய துதி.

47. சடிலம் - சடை. இறைவன் திருச்செவியில் இடக்கரத்திலுள்ள மான் ஒலியையும் கேட்பதைக் குறிப்பது. பிணையும் - பிரியாமல் ஒரே மேனியில் சேர்ந்துள்ள.

48. நொடிக்குமுனம் - கையால் நொடித்தலைச்செய்யும் கால அளவுக்குள். அடலை - சுடுகாடு. மிளிமையாய் - வீரனே. குஞ்சி - ஆண்பாற்சிகை. மிண்டும் தருமன் - அகங்களிக்கும் எமன்.

49. தண்டாது - கெடாது. மண்டாது - நெருங்காது. அணுவும் - உயிரும். உடலும் பொருளும் அணுவும் தர 'ஏற்றருள்வாய்' என்றது "அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும் குன்றேயனையாய் என்னை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ" என்ற திருவாசக நினைப்பு. மண் விண்டான் - திருமால்; ஆதிவராகமாகிப் பூமியைக் கடலினின்று வெளிப்படுத்திய செய்தியைக் குறிப்பது. திருவிழிமிழலையில் திருமால் ஆயிரம் தாமரைமலரில் ஒன்று குறையப் பூசைக்காலத்துத் தனது தாமரைக்கண்ணையே பிடுங்கிச் சாத்திய வரலாற்றைக் குறிப்பது.

50. ஈர் உரி - குருதிகசியும் ஈர்ந்த தோல். வயவா - வெற்றியையுடையவனே! வியவார்க்கு - இறைவனுடைய அற்புத குணங்களைக் கண்டு வியந்து போற்றாதார்க்கு. வைப்பு - புதையல். வித்தை - சிவஞானம்.

அழலங் கையினுய் சரணஞ் சரண மரிதங் கையினுய் சரணஞ் சரணம்
பழியென் பணியாய் சரணஞ் சரணம் பரவென் பணியாய் சரணஞ் சரணம்
குழவெண் மதியாய் சரணஞ் சரணங் குணவோர் மதியாய் சரணஞ் சரணம்
விழிமும் மையினுய் சரணஞ் சரணம் வெள்ளிக் கிரியாய் சரணஞ் சரணம்.51

செய்யா வுருவாய் சரணஞ் சரணம் செய்யாய் கிரியாய் சரணஞ் சரணம்
நெய்யா வுடையாய் சரணஞ் சரணம் நெய்யார் படையாய் சரணஞ் சரணம்
பொய்யார்க் குரியாய் சரணஞ் சரணம் பொய்யார்க் கரியாய் சரணஞ் சரணம்
வெய்யாய் தணியாய் சரணஞ் சரணம் வெள்ளிக் கிரியாய் சரணஞ் சரணம்.

வேறு

என நா ரதனேத் துதலும் பகவன்
பனவா விழைவே துபணித் துமென
அனகா வுனதா ளுறுமன் படியேன்
மனமா ரவழங் குதிமா லறவே. 53

காரார் தருதென் கயிலா யமிதின்
வாரார் முலேயோ டுமகிழ்ந் தருளின்
சீரார் தருசே வையெந்நா ளுமெனக்(கு)
ஆரா வமுதே யருளென் றனனே. 54

---

51. அரி தங்கையினுய் - திருமாலின் தங்கையான உமாதேவியாரை மணந்தவனே. பழி என் பணியாய் - அடியேன்செய்த பழி என்ன என்று கட்டளை யிடுவாயாக. பர என்பு அணியாய் - மேலான எலும்பு அணிகளையுடையவனே. குழ - இளமை. குணவோர்மதியாய் - குணங்களால் கட்டுண்ட அயன் முதலி யோரை மதிக்காதவனே.

52. செய்யாவுரு - தாமே கருதி மேற்கொண்டதன்றிப் பிறரால் கற்பிக்கப் படாத திருமேனி என்பதாம். நெய்யா உடை - திசைகளாகிற ஆடை, வெளிப் படைச்சொல். பொய்யார் - மெய்யர். பொய்யார் - பொய்யை உடையவர்கள். 'வெய்யாய் தணியாய்' என்பது 'வெய்யாய் தண்ணியாய்' என்னும் திருவாசக அமைதி.

53. இவ்வாறு நாரதன் துதித்தலும், சிவபெருமான், அந்தணனே! உன் விருப்பத்தைக் கூறுக எனலும், நாரதன் திருவடிப்பேற்றையருளும் அன்பை எனக்கு வழங்கவேண்டும் என்று வேண்டினன்.

இது 'அன்பெனக்கு நிரந்தரமாய் அருளாய்' என்ற பகுதியின் நினைவு. அனகா - பாவமற்றவனே.

54. தென் கைலாயமாகிய வெள்ளியங்கிரியிலே என்றும் எழுந்தருளி எனக்கு அருள் வழங்குவாயாக என வேண்டினன். ஆரா அமுதே - அமையும் எனக் கருத இயலாத அமுதம் போன்றவரே.

அவ்வா றிறைவன் வரமாங் கருளச்
செவ்வாய் மையினுன் கொடுசே வடிதாழ்ந்(து)
ஒவ்வா மலமோப் பியபோ திவனத்
துவ்வா வமுதுந் தொழமீண் டனனே. 55

வேறு

கற்பக வேலி நீழற் கடவுளா னிரைகள் வைகப்
பொற்பிரு நிதிகள் கோடி பொலிந்தநீ ரோடை சூழ
விற்பொலி மணிச்செய் வைப்பின் வெள்ளிமேல் வேய்ந்திட் டுள்ளால்
அற்புதக் கவிகைப் பூங்க லழுத்துமம் பலமுங் கண்டான். 56

வெள்ளியம் பலமுன் தாழ்ந்து வியத்தகு நடமும் போற்றிச்
சுள்ளியின் வேலி சூழ்ந்த சுடர்மலை முகங்க ளான
தெள்ளொளி யிலிங்க மேலாற் செறிமணி மோலி யேயாம்
நள்ளொளிச் சிகரக் கோயி னளிவரை வலமாச் சென்ருன். 57

கதிர்மணிக் குலமும் பொன்னுங் கையரிக் கொண்டு போதும்
அதிர்புனல் வழக்க ருத வற்புதக் காஞ்சி மாடே
முதிர்வளம் பலவும் நோக்கி முன்னிநீள் போதிக் கானத்(து)
எதிரறு துறைநீ ராடி யெம்பிரான் கோயில் சார்ந்தான். 58

---

55. அவ்வாறே இறைவன் வரமருள, நாரதன் திருவடியை வணங்கி, அரசம்பலத்திலிருக்கும் உண்ணப்படாத அமுதமான நடராசப்பெருமானையும் வணங்கச் சென்ருன்.

ஒவ்வாமலம் - உணர்வுருவான உயிரோடு கூடியிருத்தற்குப் பொருந்தாத அறியாமை வடிவான ஆணவமலம். ஒப்பிய - வெருட்டிய.

56. கற்பகச் சோலையிலே காமதேனுக்களின் கூட்டம் தங்க, சங்கநிதியும் பதும நிதியும் விளங்கும் நீரோடையாகிய மானசசரஸ் சூழ, இரத்தினம் இழைத்த இடத்திலே விளங்கும் அம்பலத்தையும் தரிசித்தான்.

வில் - ஒளி. வைப்பு - இடம். பூங்கல் - பதுமராகமணி.

57. வெள்ளியம்பலத்தின் முன்பு போற்றி, வியக்கத்தக்க திருநடனத்தையும் வணங்கி, வெள்ளிமலையின் முகங்களான இலிங்கத்தின் மேலாக மணிமுடி போன்ற ஒளி மிகுந்த கோயிலோடு கூடிய வெள்ளியங்கிரியை வலங்கொண்டு சென்ருன்.

சுள்ளி - மயிற்கொன்றை. நள் ஒளி - செறிந்த ஒளி. நளிவரை - பெரியமலை.

58. மணி, பொன் முதலானவற்றைக் கையால் அரித்துக்கொண்டுபோகும் நீர் ஓட்டம் நீங்காத அற்புதமான காஞ்சியாற்றின் பக்கத்தில், முதிர்ந்த பல வளங்களையும் பார்த்து, அரசவனத்திற்கு எதிரிலுள்ள துறையில் நீராடி, எம்பிரான் கோயிலுட் புகுந்தான்.

கொழுந்தெழுங் கிரணக் கல்லிற் குயிற்றுகோ புரமுன் தாழ்ந்து
தொழுந்தலைக் கரத்தி னேடுந் துணைவிழி யுறைப்பப் போந்து
விழுந்தனன் ஏற்றின் முன்னர் விழுந்தன மலங்கள் மூன்றும்
எழுந்தனன் இன்ப வெள்ளம் எழுந்ததாங் குடங்கு மாதோ. 59

அயனரி யரனு மாகி அளித்தளித் தழித்து மற்றவ்
அயனரி யரனுக் கெட்டா ஆனந்தப் பொருளே யங்கண்
அயனரி யரனும் போற்ற முளைத்தரு ளாதி லிங்கம்
அயன்றரு குமர னுன்ற தவத்தினல் கண்டு கொண்டான். 60

வறுமையுற் றவர்கள் சிந்தா மணியெதிர் கண்டா லென்ன
முறுகிய வன்பு பொங்க முதல்வனு ரருகு போந்து
மறுகிய பிறவி வேலை வறக்குமொள் ளமிழ்தைக் கண்ணுன்
மொறுமொறுத் தமரர் நிற்ப முகந்துகொண் டருந்தி னுனே. 61

தேக்கிய வுளத்தா னந்தச் செழுங்கட லூற்றே யென்ன
வாக்கிய விழியி னீரு மயிர்தொறு மரும்பும் வேரும்
ஆக்கையை மண்ணுச் செய்ய வருட்புனற் குளித்தான் போன்று
நீக்கிய மலத்தா னுங்கு நெடிதுநின் றரிதி னிங்கி. 62

---

59. ஒளி மணிகளாலான கோபுரத்தின் முன் வணங்கி, கைகள் சிரமேற் குவிய, கண்ணீர் பொழியச் சென்று நந்தியம்பகவானுக்கு முன்பு வணங்கினன். ஆணவமுதலான மலங்கள் மூன்றும் விழுந்தன. எழுந்தனன்; இன்பவெள்ளமும் கூடவே எழுந்தது.

60. மாலும் அயனும் அரனுமாகி முத்தொழில்களையும் செய்து அம்மூவர் களுக்கும் அறிதற்கு அரிய பொருளே, அம்மூவரும் வந்து ஒருங்குவணங்க முளைத்த ஆதிலிங்கப்பெருமானை பிரமபுத்திரனுகிய நாரதன் நிறைந்த தவத்தால் தரிசித்தான்.

61. வறியவன் சிந்தாமணி என்னும் தெய்வமணியைக் கண்டாற்போல, முதிர்ந்த அன்பு மிகச் சிவபெருமான் திருமுன்பு போய், பிறவிக்கடலை வற்றச் செய்யும் சிவபரம் பொருளாகிய ஒள்ளிய அமுதத்தை, தேவர்கள் பொருமையால் மொறு மொறுப்பக் கண்களால் முகந்து அருந்தினுன்.

62. மனத்திலே நிறைந்த ஆனந்தக்கடலின் ஊற்றைப்போல, ஒழுகுகிற கண்ணீரும், மயிர்க்கால்தோறும் அரும்பும் வேர்வையும், உடலைக்கழுவ, திரு வருளாகிய நீரிலே குளித்தவனைப்போல, மலம் நீங்கிய நாரதன் நீண்டநேரம் சந்நிதியில் நின்று, பிரியமுடியாமற் பிரிந்து.

இருள்குடி கொண்ட கூந்த லெழில்குடி கொண்ட பொற்றோள்
அருள்குடி கொண்ட வாட்க ணணிகுடி கொண்ட கொங்கை
பொருள்குடி கொண்ட செஞ்சொற் புகழ்குடி கொண்ட தாளு
மருள்குடி விலகி வைகு மரகத மயிலைத் தாழ்ந்தான். 63

ஒன்றெனப் பலவே யென்ன வுருவென வருவே யென்ன
அன்றென வாமி தென்ன வணுவென மகத்தே யென்ன
நின்றவன் பரமா னந்த நிருத்தஞ்செய் போதி மன்றுள்
வென்றவைம் பொறியான் சென்று விம்மிதத் திறைஞ்சிப் போந்தான். 64

தவழ்புனற் காஞ்சி யாற்றுத் தடங்கரை மருங்கு முக்கட்
பவனருட் குறியோன் றன்பாற் பதிட்டைசெய் தாங்குப் பாங்கர்
நவமுறத் தீர்த்த மொன்று நலத்தக வாக்கி யந்தச்
சிவமலி நீரி னாட்டிச் செய்தனன் பூசை முற்றும். 65

அன்னதன் சிவலிங் கத்தி னருச்சனை முறையிற் செய்து
மன்னிய வாதி லிங்க வரதனைப் பணிந்தும் வெள்ளி
நன்னகத் திறைவன் கோல நயத்தகக் கண்டும் வையத்
தென்னுமன் பிலாத தூய னின்னண மிருக்கின் றானால். 66

---

63. இருள்குடியிருப்பது போன்ற கூந்தலையும், அழகு குடியிருக்கும் பொன்னிறமான தோள்களையும், அருள்நிரம்பிய கண்களையும், ஆபரணங்கள் தங்கிய கொங்கைகளையும், பொருள் நிறைந்த சொற்களையும், புகழ் மிகுந்த திருவடிகளையும், உடைய மயக்கம் குடிவிலகித் தெருள் தங்கும் மரகதாம்பிகையை வணங்கினான்.

64. சிவமாந்தன்மையான் ஒன்றே என்று கூறவும், பொருள்கடோறும் கலந்திருப்பதால் பலவே என்னவும், புலனாதல் தன்மையால் உருவெனவும், அறிவுக்குப்புலனாய் பொறிகட்குப் புலனாகாமையான் அருவே எனவும், கலந்திருப்பினும் அப்பொருளாகாது வேறாயிருத்தலின் அன்றெனவும், பொருட்டன்மையின் வேறாகாது கலந்திருத்தலின் பொருளேயாம் எனவும், கட்புலனாகாமையின் அணுவெனவும், பெரியவற்றிற் கெல்லாம் பெரிதாகலின் மகத்து எனவும், நின்ற பெருமான் பரமானந்த தாண்டவம்செய்யும் அரச அம்பலத்தைப் பொறியைந் நடக்கிய நாரதன் சென்று ஆச்சரியத்துடன் வணங்கிச் சென்றான்.

65. காஞ்சியாற்றங்கரைப் பக்கத்தில் சிவலிங்கம் ஒன்றை அன்போடு பிரதிஷ்டைசெய்து அங்கே பக்கலில் தீர்த்தம் ஒன்றும் தோண்டி, அந்த மங்கல நீரால் திருமஞ்சனம் செய்வித்துப் பூசித்துவந்தான்.

66. அத்தகைய தனது சிவலிங்கத்தில் அருச்சனைகள் பலவும் புரிந்து, ஆதிலிங்கநாதரையும் பணிந்து, வெள்ளியங்கிரி நாதனையும் விருப்பமிகத் தரிசித்து இவ்வுலகப் பற்றிலாத தூயனாகிய நாரதன் இங்ஙனம் பூமியில் வாழ்கின்றான்.

வேறு

இந்த மாநிலம் வழுத்துமெய்த் தவத்தீ ரிலங்கு வேற்படை வலக்கரத் தணிந்
நந்தி கூறிடக் கேட்டது மதனை நார தற்கவன் றெருட்டிய வாறும் [தோன்
அந்திற் கேட்டநா ரதனதன் வழியே யடுத்து வந்தனை புரிந்தது மெல்லாம்
வந்த வாறினிக் காலவன் வாய்மை மரீஇய தோர்மினென் றறைதருஞ்
[சூதன். 67

நாரதன் வழிபடுபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 339

---

67. இவ்வுலகமே போற்றும் பெரிய தவமுடையோர்களே! வலக்கரத்தில் வேற்படையேந்திய குமரக்கடவுள் நந்திதேவர் சொல்லக்கேட்டதும், அதனை நாரதனுக்குக் குமரன் கூறியதும், அதன்வண்ணம் நாரதன் வந்து வழிபட்டதும் ஆகிய அனைத்தும் நிகழ்ந்தவாறிதுவாம். இனிக்காலவன் வழிபட்ட வரலாற்றை ஆராயுங்கள் என்று சூதன் சொல்லத் தொடங்கினன்.

ஏழாவது

காலவன் வழிபடுபடலம்

வரியளி மதுவுண்டு மதுரமெல் லிசைபாடும்
விரிமல ரயனீன்ற மேதகு காசிபனுக்(கு)
உரிமையின் மகன்வேத மோதிய செந்நாவன்
கரிசறு தவமாற்றுங் காலவ னெனும்பேரான். 1

நல்வினை யோவாமே நயந்துசெய் திடுநாளில்
அல்வளர் மலபாக மடுத்தருள் பதிவுற்றுத்
தொல்வினை யவைமாறத் தொகுதரு கருமந்தாம்
பல்வகை களுமொப்பாம் பரிசுற விவைநினைவான். 2

செய்திடு கருமத்தாற் சேர்பய னுலகத்து
மைதிக ழிருள்சீக்கும் வானவ னுலகாதி
பைதிகழ் மணிநாகப் பள்ளிய னுலகந்த
மைதம ருலகத்தி னுர்வமொ டெய்துவதாம். 3

மேவுமவ் வுலகத்து மேதினி வரைப்பேபோல்
ஓவிலம் பொறிகட்கு முறுபுல னுகர்வித்தே
போவன காலங்கள் புதுமையி னெருவாய்மை
ஆவதன் றண்டங்க ளனைத்துமவ் வியல்பினவே. 4

---

1. பிரமன் மகனாகிய காசிபனுக்கு மகன் காலவன் என்பான். அவன் வேதங்களை நன்கு ஓதியவன்; தவம் பல செய்பவன். கரிசு - குற்றம்.

2. அவன் பதி புண்ணியங்கள் பலவற்றைச் செய்துவரும் நாளில், மலபரிபாகமும், சத்திநிபாதமும், இருவினை யொப்பும் வரப் பின்வருமாறு எண்ணலானான். ஓவாமே - இடைவிடாது.

3. நாம் செய்த கன்மங்களின் பயன் சூரியனுலகம் முதல் வைகுந்தம் வரையுள்ள உலகங்களை அன்புடன் அடைவதாம்.

மைதிகழ் இருள் - மைபோல விளங்கும் இருள். பை - படம். நாகப்பள்ளியன் - திருமால். ஐது அமர் உலகம் - மிக நுண்ணிதாகி விரும்பப்படும் உலகம்.

4. அந்த உலகங்களிலும், இப்பூமியைப்போலவே இடைவிடாமல் பொறிகட்குப் புலன்களை யூட்டியே காலங்கள் கழிகின்றன. ஒன்றும் புதுமையாக நிகழ்வதில்லை. எல்லா அண்டங்களும் அப்படியேதான். ஓவில் - இடைவிடாமல்.

வேறு

காரண மூன்றி னன்றிக் காரிய நிகழ்வ தின்றுங்
காரண மண்டங் கட்குக் கருதுறின் மாயை சத்தி
காரண மில்லா வீசன் முதற்றுணை நிமித்தங் காண்பர்
காரண மாயை நல்குங் காரிய தத்து வங்கள். 5

தத்துவக் குழுவின் செய்கை யல்லது சகல மில்லை
தத்துவஞ் சடமே யற்றேற் றத்துவச் செயற்கும் வேறே
தத்துவ மான சித்தின் சத்தியோன் றடுத்தல் வேண்டும்
தத்துவ நம்மை யென்று ந் தகைப்பது மில்லை யாமே. 6

அத்தகு சித்து நானே வன்றிவே றுண்டோ மற்று ந்
தத்துவ வுடலே நானுத் தருக்கினே னிந்நாள் காறும்
பொத்துதத் துவத்தை நாடிற் பொருந்துநான் வேறு மானேன்
சித்தினை நாட வென்னிற் சித்தும்வே றுண்டு போலும். 7

அனைத்துமாய் மாயை நம்மை யடுத்தது கருமத் தாகும்
நினைத்திடு கருமந் தானு நிகழ்வதா ணவத்தி னாகும்
வினைத்திருக் கெய்த நிற்றல் வெய்யவா ணவவி ருட்டும்
எனைத்துயி ரினையும் வாட்டு மபக்குவ விரவி னாகும். 8

---

5. முதல், துணை, நிமித்தம் என்ற மூன்று காரணங்களை அன்றிக் காரியங்கள் நிகழ்வதில்லை. அண்டங்களுக்குக் காரணம் மாயையாகிய சத்தியாம். தமக்கொருகாரணமும் இல்லாத இறைவன் ஏனைய பொருள்களுக்கு முதல் துணை நிமித்த காரணங்களைக் காண்பர். அனைத்திற்கும் காரணமான மாயையே காரியமாகிய தத்துவங்களை உண்டாக்கும்.

6. தத்துவக் கூட்டங்களின் செயலல்லது உருவுடைப்பொருள் ஒன்றுமின்றும். தத்துவங்களோ சடம். அங்ஙனமாயின் தத்துவங்கள் செயற்பட இவற்றின் வேறானதும் உண்மைப் பொருளானதுமான சித்துப் பொருளினால் அடுத்தல்வேண்டும். தத்துவங்கள் நம்மை என்றும் தடுப்பதில்லையாம். சகலம் - உரு.

7. தத்துவங்களைத் தொழிற்படுத்தும் அறிவுடைப் பொருள் நானே? என்னின் வேறானதோ? மேலும் தத்துவகாரியமான உடலே நான் என்றெண்ணி இந்நாள்வரைத் தருக்குக்கொண்டேன். என்னைப் பொதிந்துள்ள தத்துவங்களின் இயல்பை ஆராயும்போது, தத்துவங்களோடு பொருந்திய நான் அவற்றின் வேறானவன் என்பதை உணர்ந்தேன், சித்துப்பொருளை ஆய எண்ணின் என்னையும் உணர்த்தும் சித்து என்னின் வேறாக ஒன்று உண்டுபோலும்.

8. தனுவாதி அனைத்துமாய் மாயை நம்மைப் பொருந்தியது நாம் செய்த கருமத்தின் பயனாலேயாம். அக்கருமமும் ஆணவமலத்தினால் விளைந்ததாகும். கன்மங்கள் மாறுபாடெய்தி நிற்றலும் கொடிய ஆணவ மலமாகிய இருள் எல்லா உயிர்களையும் வருத்துதலும் பரிபாகமுறாத கலப்பினால் ஆவதாம்.

இத்தகு தொடர்க ளெய்தா தெவற்றினு மேலாய் நின்ற
அத்தகு கடவு ளன்றி யறிவெழு பருவ மாதி
மிக்குற விளைத்து விடு விளைப்பவ ரிலையத் தேவும்
தக்கவா வழிபா டாற்றிச் சார்தரார்க் கருளா தம்மா. 9

அருவுரு விரண்டு மின்றி யடர்குணங் குறிக ளின்றித்
தெருளுநின் மலமா யொன்ருய்ச் சித்துமாய்ச் சத்துமாகிப்
பொருவில்பூ ரணமா யின்பாய்ப் போக்கொடு வரவு மில்லா
ஒருவனை வழிபா டாற்ற லொருவர்க்கு முடியா தேனும். 10

மந்திர முலகிற் றிட்டும் வரிவடி வெழுத்தி னின்று
வெந்திறற் பூத மாதி விலக்குமா போல வெட்டா
எந்தையும் வடிவி னின்றே யிருண்மல மகற்றி விடு
தந்திடு மருளா லெங்கோன் றங்கிய வடிவு தம்முள். 11

வேறு

வண்டு முரல முறுக்கவிழு மலர்மே லவனைப் பணிகிற்பின்
அண்ட மடங்க வுயிரெல்லா மாக்கு மாற்ற றருகிற்கும்
விண்ட மலரி னறுந்துளப விண்டு மலர்த்தாள் வழிபாட்டின்
மண்டு முயிரைத் திதிப்படுத்து வளர்க்கு மாற்ற லுளதாமால். 12

---

9. இத்தகைய பந்தங்களில் சிக்காது, எவற்றிலும் மேலாய்நின்ற இறைவனையன்றி, ஞானப்பேறு முதலிய பரிபாகநிலைகளை முறையே உண்டாக்கி, உயிர்கட்கு விடுபேறளிப்பவர் வேறெருவரும் இலர். அவ்விறைவனும் தக்கவிதமாக வழிபட்டுத் தன்னைச் சரண் என்றடையாதார்க்கு அருள் வழங்காராம்.

10. அரு, வுரு, அருவுரு இன்றி, குணமும், அடையாளங்களும் இன்றி, தெளிந்த அநாதியே மலமற்ற பொருளாய், தன்னின் வேறிலாது தானென்றேயாய் உண்மை அறிவுப்பொருளாய் நிகரற்ற நிறைபொருளாய், இன்பவடிவாய், அழிவும் தோற்றமும் இல்லாத ஒப்பற்ற பரம்பொருளை வழிபடுதல் ஒருவர்க்கும் இயலாதாயினும்.

11. உலகில், தகட்டில் எழுதப்பெறும் எழுத்து வடிவான மந்திரங்களைக் கொண்டு, பூத பைசாசங்களை வெருட்டுவதுபோல, ஒருவராலும் அடையவும் அறியவும் எட்டாத எந்தையாகிய இறைவனும், வடிவுகொண்டு, உயிர்களின் இருளாகிய மலத்தைப்போக்கி, திருவருளே காரணமாக விடுபேறளிப்பர். அங்ஙனம் அவர் தங்கிய வடிவங்களுள்.

12. பிரமனை வணங்கப் படைப்பு ஆற்றலும், திருமாலை வணங்கக் காப்பாற்றலும் உண்டாவதாம்.

திதிப்படுத்தும் - காக்கும், நிலைபெறுத்தும்.

புவன முழுது மொருநொடியிற் பொடிக்கு மரனை வணங்கினல்
புவன முழுது மொருநொடியிற் பொடிக்கு மாற்ற லினிதருளும்
மவுன முடைய ராயுமா மகேச ரடியைப் பூசிப்பின்
கவன மறுத்து விவாகத்திற் கருத்தை யுதவிப் புரப்பாரால். 13

அமரர் விழையுங் கலியாண வழகர் பாதம் பூசிப்பின்
கமலன் முதலோர் தலைதுளக்கக் கலியா ணத்தை முடித்தருள்வர்
உமைத னுருவுந் தமதுருவு மொற்றித் திருந்தார் தமைப்போற்றில்
சிமய முலையார் போகத்திற் சிறப்ப மோகங் கொடுப்பரால். 14

தொல்லை யுலகம் போற்றெடுக்குஞ் சோமாக் கந்தர் தமைத்தாழின்
நல்ல மகவுஞ் சந்தானத் தொடர்பு மினிது நல்குவார்
மல்லற் றிகிரிப் படைமால்கை வழங்கி ளுரை யருச்சிப்பின்
அல்ல லிரியப் பெரும்போக மகிலம் வியப்ப வளிப்பாரால். 15

வம்பார் தெய்வ வடவாலின்
வதிந்தார் கமலத் தாளிறைஞ்சில்
தம்பால் விருப்புந் துயரிலங்குஞ்
சகத்தில் வெறுப்புந் தழைப்பிப்பார்
பம்பா தரவிற் கடிளைகொளும்
பயிக்க வேடத் தரைப்பரசில்
கொம்பே ரிடையார் கரநெரிப்பக்
கொள்ளும் போகம் வெறுப்பிப்பார். 16

---

13. உருத்திரனை வணங்கினல் உலகமுழுவதையும் ஒரு நொடிப்போதிலே அழிக்கும் வன்மை உண்டாகும். உமாமகேசர் திருவடியைப் பூசித்தால், வேகத்தைத் தடுத்து, திருமணவிருப்பை உதவுவார்.

14. கல்யாணசுந்தரர் திருவடியைப் பூசித்தால், பிரமனும் தலையசைக்கத் திருமணத்தை முடித்தருள்வார். அர்த்தநாரீசராகிய உமையொரு பாதியரைப் பூசித்தால் மலையொத்த முலையையுடைய பெண்கள் போகத்தில் மிக மோகம் விளைப்பர்.

15. சோமாஸ்கந்தரை வழிபடின், நற்புத்திரப்பேறும் சந்தானவிருத்தியும் அளிப்பர். சக்கரப்பிரதரை வழிபடின், உலகம் வியப்பப் பெரும்போகம் அளிப்பார்.

16. தட்சிணமூர்த்தியின் திருவடியை வணங்கினல், தன்பால் அன்பும், உலகத்தின்பால் உவர்ப்பும் உண்டாக்குவர். பிட்சாடனரை வழிபடின் காதன் மனையாள் கையுதறப் போகத்தில் வெறுப்பை உண்டாக்குவர்.

பயிக்கம் - பிச்சை.

கையி லெடுத்த சூலத்துக் கங்கா ளரைப்பத் திமைபுரியின்
வைய முழுதும் பணிகேட்ப வயிராக் கியத்தை யளித்திடுவர்
எய்யு மதவே ளுருப்பொடித்த விறைவர் மலர்த்தா ளருச்சிப்பின்
பொய்யி லறிவுள் ளகத்தரும்பப் புணர்பக் குவத்தை வருவிப்பார். 17

எருமை யூர்தி யுயிர்குடித்த வெறுழ்த்தாட் புலவர் கழல்பழிச்சில்
பருவ முடையார்க் கிடர்பலவும் பாற்றி யபயங் கொடுத்தளிப்பர்
பொருவில் வலத்துச் சலந்தரனைப் புரட்டுங் கடவுள் பதமேத்தின்
வெருவில் யோக முழப்பவர்தம் வெகுளித் தழலை விட்டுமால் 18

பேணு மதில்க ளொருமூன்றும் பிழைப்பப் பொடித்தார் சரண்பரசில்
கோணை யுயிரை வயமாக்குங் குணமூன் றனையும் பேதிப்பார்
பூணு மதத்து நரமடங்கல் புரட்டுஞ் சரபத் தடிவழுத்தின்
மாணும் வினைமா யையின்வலிகள் வழுவக் கடைக்கண் புரியுமால். 19

நெருப்புக் குளிரும் விடமுண்ட
நீல கண்டர் சரண்டுதிப்பின்
இருப்புக் கிடனின் றெனமலநோ
யிரியல் போகக் கடைக்கணிப்பர்
ஒருக்கி மனத்தை மூன்றுதா
ளொருவர்க் கடிமை யுறச்செய்யின்
கருக்கை சரியை கிரியையோ
கத்தி னுழக்குங் கடன்பணிப்பார். 20

---

17. கங்காளரை அன்புசெயின். அவர் உலகம் முழுதும் ஏவல்கேட்ப வைராக்கியத்தை அளிப்பர். காமதகன மூர்த்தியை வழிபடின், மெய்ஞ்ஞானம் தோன்ற தம் திருவடியைச் சாரும் பக்குவத்தை உண்டாக்குவார்.

18. காலாரியின் திருவடியைத் தொழுதால், பரிபாகம்பெற்ற அன்பர்களின் துன்பங்களனைத்தையும் துடைத்து, அபயம் அருளுவர். சலந்தராரியைத் தொழுதால், அச்சமின்றி யோகஞ் செய்வாரின் கோபக்கனலை அழிப்பர்.

19. திரிபுராரியின் திருவடியைத் தொழுதால் மாறுபட்ட ஆன்மாக்களை வசப்படுத்தும் முக்குணங்களையும் மாற்றுவார். சரபமூர்த்தியின் திருவடியைத் தொழுதால் வலிய கன்மங்களும், மாயையும் விலகக் கடைக்கண்ணோக்கம் செய்வார்.

20. நீலகண்டர் திருவடியைத் துதித்தால் ஆணவமலம் இனித் தனக்கு இடமில்லையென்று ஓடும்படித் திருக்கடைக்கண் அருள்வர். மனத்தை ஒருமைப் படுத்தித் திரிபாதமூர்த்திக்கு அடிமைசெய்யின் மீளவும் கருவிற்புகுதலை வெறுக்கின்ற சரியை கிரியை யோகங்களில் முயலும் முறையினை அருள்வர்.

இருவ ரிருபாற் கிளைத்தெழுந்த வேக பாதர் தமைநாடில்
பொருவின் ஞான நிட்டையிவை புந்தி விழைய வருள்புரிவர்
தெருளு மறைகண் ஞாளியாய்ச் சிவனும் வடுகர்க் கன்புசெயின்
மருவுஞ் சங்க மனைத்தினையும் வழுக்கி முழுக்க வாழ்வாரால். 21

தரும விடையேற் றினிதுகந்த தம்பி ரானை விழைந்தடையில்
பருவ முடையார்க் கனுக்கிரகம் பரிந்து புரிந்து புரந்தருளும்
செருகு மிதழிச் செஞ்சடைச்சந் திரசே கரர்தாண் மனமுறுத்தின்
பெருகுஞ் சனன மரணத்திற் பெரிது மச்சந் தோற்றுவரால். 22

நின்று சபையி லானந்த நிருத்தம் புரிவார்க் காளாயின்
வென்ற பொறியார்க் கானந்த வெள்ளம் பெருக விளைப்பரால்
துன்று சடையிற் றிரைக்கங்கை சுருக்கி னூர்தங் கழலடையின்
மன்ற வுயிர்க்கு நிரந்தரமா னந்த நிகழ வழங்குவரால். 23

வேறு

மொழிந்த நாலிரு மூவர்க்கு மூலமாய்
ஒழிந்தி டாவரு வோடுரு வாய்மயல்
அழிந்த வாணொடு பெண்ணுரு வாகியும்
எழுந்த தாகு மிலிங்கநன் மூர்த்தியே. 24

---

21. ஏகபாத மூர்த்தியை வழிபடின், மனம் ஞானநிஷ்டையை விரும்ப அருளுவர். வேதங்கள் நான்கையும் நாயாக வரச்செய்யும் வடுகராகிய பைரவரைப் பூசித்தால், வாழ்நாள் முழுதும் ஆசையை வென்று வாழ்வார்கள்.

22. இடபாரூடரை வணங்கின், பரிபாகிகட்குக் கருணைசெய்து பாதுகாப்பர். சந்திரசேகரர் திருவடியை மனத்தால் நினைத்தால், பிறப்பிறப்புக்களில் அச்சந்தோன்றச்செய்வர்.

23. ஆனந்த நடராசர்க்கு அடிமையாயின், பொறியடக்கம் பெற்றோர்க்கு அவர் ஆனந்த வெள்ளம் பெருகச்செய்வர். கங்காதர மூர்த்தியை வழிபடின், உயிர்கட்கு இடையீடில்லாத ஆனந்தம் அருளுவர்.

24. சொல்லிய இருபத்துநான்கு மூர்த்திகட்கும் மூலமாய், அருவுருவத் திருமேனியாய், மயக்கம் நீங்கிய ஆண் பெண் உருவாகியும் தோன்றியது சிவலிங்க மூர்த்தியாம்.

மாடு வேண்டினு மண்முழு தாளுறும்
பாடு வேண்டினும் பண்ணவர் விண்ணமாள்
பீடு வேண்டினும் பேதுசெய் தியாவையும்
வீடு வேண்டினும் வெய்து முடிக்குமே. 25

ஆத லாலிலிங் கத்தி னமர்ந்தருள்
வேத நாதனை மேதகு வைப்பிடை
ஏத நீங்க விறைஞ்சுது மென்றுளக்
காதல் கைமிகக் காலவன் முன்னினன். 26

அண்டர் நாதனை யாங்கத் தலந்தொறும்
கொண்ட காதலிற் கும்பிட்டுப் போதுவான்
வண்டு பாட மதுப்பொழி பூம்பொழில்
விண்டு மாவுறுங் கொங்கினை மேவினன். 27

ஆங்கு வைகு மமலன் பலதளி
தாங்கு காதலிற் றாழ்ந்தெழுந் தேகியே
ஓங்கு மாதி புரத்தினை யுற்றனன்
வீங்கு காஞ்சி நதிக்கரை மேயினன். 28

நலக்குங் காஞ்சி நதிக்கரை நண்ணலும்
வலக்க ணும்வலத் தோளுந் துடித்தன
அலக்க ணந்திக்கு மற்புத வைப்பிஃ
திலக்கம் பூசித்தற் கென்று மகிழ்ந்தனன். 29

---

25. சிவலிங்கம், செல்வம், அரசாளும்பெருமை, தேவருலகாளும்பெருமை, இவை அனைத்தையும்விட்டு அடையும் வீடுபேறு இவற்றுள் எதை விரும்பினாலும் விரைவில் அருளும்.

26. ஆதலால் சிவலிங்கப் பெருமானைச் சிறந்த தலத்தில் வழிபடவேண்டும் என்று காலவமுனிவன் விரும்பினன்.

27. விரும்பித் தேவதேவனாகிய சிவனைத் தலந்தோறும் வழிபட்டு வருகின்ற காலவன் கொங்குநாட்டினை அடைந்தான்.

28. கொங்குநாட்டிலே உள்ள சிவாலயங்கள் பலவற்றையும் வணங்கி, ஆதிபுரமாகிய பேரூரை யடைந்தனன். காஞ்சியாற்றங்கரையில் தங்கினன்.

29. காஞ்சிநதிக்கரையை யடைந்ததும் காலவற்கு, வலக்கண்ணும் வலத்தோளும் துடித்தன. துன்பங்களை அத்தமிக்கச்செய்யும் அற்புதமான இடம் இது, வழிபடற்கு ஏற்றது என்று மகிழ்ந்தான்.

அலக்கண் + அந்திக்கும் - துன்பம் மறையும்.

மின்னெ ழுக்கி மிளிர் தர வைத்தெனப்
பொன்னெ ழுக்கிப் புகுநதிக் காஞ்சி நீர்
தன்னெ ழுக்கிற் றகப்புகுந் தாடினன்
மன்னெ ழுக்க மரபுளி முற்றினன். 30

வேறு

அச்சு வத்திரட் கானகத் தூடுபோ யமரர்தம் மடவார்கள்
கச்சு வத்திரங் கலனொடும் வாழ்தரக் கருணைசெய் பெருமானை
விச்சு வத்திருப் பெயருடை விமலனை மெய்யடி யார்போற்றி
நச்சு வத்திர மைந்துடை நாதனை நனியிடத் தெதிர்கண்டான். 31

கண்ட கண்மல ருறுசிறப் பெய்திய காட்சியிற் புனற்றுரை
கொண்ட தண்ணன்முன் ருழ்ந்திடா துயர்தரு கொள்கையிற் கரம்வேணி
மண்டு சென்னிமேற் குவிந்தது கருணைமுன் படிதரா தெழுந்தென்ன
மொண்டு கொண்டவே ரொடுமயிர் பொடித்தது முழுத்தவ னடிவீழ்ந்தான்.

புரண்டு மண்மிசை யெழுந்தனன் ஞெழுதனன் புரிசடை நறுந்தூளி
வரண்டி வன்னிலத் துழிதரத் தட்டமிட் டாடினன் வலம்வந்தான்
திரண்ட மாமறை பன்முறை பழிச்சினன் சென்றொரு மருங்கெய்தி
அரண்ட காதென வுலகுகை தொடுமுண வறமனுக் கணித்திட்டான். 33

---

30. மின்னலை ஒழுகவிட்டு, விளங்கவைத்தாற்போன்ற பொன் ஒழுகிவருகின்ற நீரோடுகூடிய காஞ்சியாற்றில் தன் குலதன்மத்திற்கேற்ப நீராடினன் நிலைபெருன ஒழுக்கத்திற் சிறந்த காலவன்.

31. குதிரைக்கூட்டம் நிறைந்த காட்டின் வழியே சென்று தேவமாதர்க்கு கச்சு, வஸ்திரம், ஆபரணங்கள் இவற்றை அவர்கள் வாழும்படி வழங்கும் பெருமானை, லோகநாதனை, மெய்யடியார்வணங்கி அன்புசெய்யும் ஐம்முகங்களையுடைய பெருமானை அவ்விடத்தில் தரிசித்தான். விச்சுவம் - உலகம்.

32. தரிசித்த கண்களாகிய தாமரைகள் சிறப்பெய்திய காட்சியினுலே ஆனந்த நீர் சொரிந்தன. பெருமான் முன்பு தாழாமல் உயர்கின்ற கைகள் சடை தங்கிய சென்னியின் மேற்சென்று குவிந்தன. கருணை வெள்ளத்தின்முன் மடங்காது எழுந்தாற்போல உரோமங்கள் வேர்வையோடு புளகங்கொண்டன. முற்றிய தவத்தோனுகிய காலவன் திருவடியில் வீழ்ந்து வணங்கினன்.

33. மண்மேல் விழுந்து புரண்டான்; எழுந்தான்; சடை புழுதியை வரண்டி வலிய நிலத்திலே புரளச் சுற்றியாடினன்; வலம் வந்தான்; வேதமந்திரங்களால் பலமுறை தோத்தரித்தான்; ஒருபாற்சென்று, நமக்குப் பாதுகாப்புத் தகாது என விலக்கி, புவன போகங்களையும் நீக்கித் திருவைந்தெழுத்தை எண்ணினன்.

உலகு - புவனம். உணவு - போகம்.

அற்றை நாளிர வுறங்கிலன் மற்றைநா ளலரிகீழ்த் திசைவேலை
உற்ற காலையி லெழுந்துகா லையிற்செயு முறுகடன் முறையாற்றி
வற்ற லோடுகை யேந்தினர் கோயிலின் வடகிழக் கினிற்காஞ்சிப்
பொற்ற நீர்நதிக் கரையினோர் சிவலிங்கம் புதிதுறத் தாபித்தான். 34

திருத்த மொன்றவ ணகழ்ந்தன னத்தடத் திருத்தமந் திரமோதிக்
கருத்தன் சென்னியி லாட்டியா ராதனைக் கடனெலா முடித்திட்டான்
வருத்தி யாக்கையைக் கனிபுனல் வளியுண்டு வரிசையி னவைநீக்கி
நிருத்த னைந்தெழுத் தயுதத்தை யாயிர நித்தலுங் கணித்தானால். 35

ஆதி லிங்கரை யருள்பெறக் காலவ னடுத்துவந் தனையாற்றிச்
சோதி மல்கினு னெனப்பெயர் திசைதொறுஞ் சுலாவலி னுங்காங்கு
நீதி மல்குற வதிதரு மாதவர் நித்தலு மடுத்தேத்திக்
கோதி லத்தவன் குணங்கள்கொண் டாடுவர் குறுகுவர் தமதெல்லை. 36

இசைப ரந்தெழ வின்னண மயுதமாண் டிவனருந் தவமாற்ற
மிசைப ரந்தெழு தேவரும் பூதரும் விரவியெங் கணுஞ்சூழ
நசைப ரந்தெழு சீர்த்திவெள் விடையின்மே னல்வகை யிசையெல்லாந்
திசைப ரந்தெழத் தேவர்க ணுயகன் சினகரத் தெதிர்நின்றான். 37

---

34. அன்றிரவு உறங்காமல், மற்றைநாள் வைகறையில் எழுந்து, நாட்கடன்களைச் செய்து, சிவாலயத்தின் ஈசானிய பாகத்திலே, காஞ்சிநதிக்கரையிலே ஒரு சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தான். அலரி - சூரியன். வேலை - கடல். வற்றல் ஓடு - கபாலம்.

35. அங்கே தீர்த்தம் ஒன்றையும் தோண்டிப் பெருமானுக்குத் திருமஞ்சனம் செய்வித்து, ஆராதனைக் கடன்களைச் செய்தான். உடலை நோன்புகளால் வருந்தச்செய்து பழம், நீர், காற்று இவைகளையுண்டும், ஒவ்வொன்றாக அவைகளை நீக்கியும், கூத்தப்பெருமானுடைய திருவைந்தெழுத்தைப் பதினையாயிரமுறை செபித்தான்.

36. காலவன் ஆதிலிங்கப்பெருமானை அடைந்து வழிபட்டு ஒளி நிறைந்தான் என்ற புகழ் திசைகடோறும் பரவ, ஆங்காங்குள்ள பெரிய தவமுனிவர்கள் அனைவரும் வந்து இவனைவழிபட்டு, குணங்களைப் பாராட்டித் தம் இடத்திற்குச் செல்வர்.

37. இவன் இவ்வண்ணம் புகழ் பரவும்படிப் பதினாயிரம் ஆண்டுத் தவம் புரிய, பூதகணங்களும் தேவகணங்களும் புடைசூழ, விருப்பம் மிக்கு எழுகின்ற புகழைப்போல வெளுத்த விடையின்மேல் நால்வகை இசைகளும் ஒலிக்கத் தேவதேவனாகிய சிவபெருமான் திருக்கோயிலின் முன் நின்றான்.

மிசை - மேலே. (அதாவது விண்ணில்) நசைபரந்தெழு சீர்த்தி - அன்பு மிகுதலால் விளையும் மிகுபுகழ். நால்வகையிசை - தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி என்ற நான்கினும் உண்டாகிற இசை. சினகரம்-கோயில்.

பஞ்ச துந்துபி முழக்கமுஞ் சிவகணம் பரந்தர கரவென்ன
விஞ்சு றுஞ்சிவ முழக்கமுஞ் செவித்துளை விரவமெய்ச் சிவயோகின்
நெஞ்ச முய்த்தவ னெய்யென விழித்தன னின்மலன் றனைக்கண்டான்
அஞ்சு முள்ளமோ டெழுந்தனன் பணிந்தன னவசமாய்க் கிடக்கின்றான். 38

வலக்க ணின்றநான் முகன்முக நோக்கினன் மழமத விடையூர்தி
கலக்க ணின்றன மெனவுள மகிழ்ந்தவ னடந்துதன் மருமானை
நிலக்க ணின்றெடுத் தொருகரந் தாங்கின னெடியவன் முகம்பார்த்தான்
அலக்க ணின்றிகந் தனமென மகிழ்ந்துசென் றவனொரு கரமீந்தான். 39

அருளிப் பாடிவண் வருகென விருவரு மறைந்துடன் புகுகாலை
இருளிப் பாடில தெனுங்குழ லுமைமுக மிறைவனோக் கினனன்னாள்
தெருளிப் பாடுற லறிந்துகொ லினியிவன் றிகழுநம் மோடொன்றாய்
மருளிப் பாடற வதிபவ னல்லனோ வெனவரு நகைகொண்டாள். 40

தாதை தாதைமூ தாதைதன் றாதையுந் தடங்கரந் தரப்போந்த
மேதை மீட்டுமங் கிறைஞ்சின னெழுந்தனன் வியந்தனன் வலம்வந்தான்
பேதை பாகனை யிமையவர்க் கிடர்புரி பேமதி லடுமேருக்
கோதை வார்சிலைக் கரத்தனை யுள்ளகங் குழைதரத் துதிசெய்வான். 41

---

38. பஞ்சமுக வாத்திய முழக்கமும், அடியார்களின் அர அர முழக்கமும் செவிவழிச் செல்ல, யோக நிலையிலிருந்து விழித்தவனாகிச் சிவபெருமானைக் கண்டான்; அஞ்சியமனத்துடன் எழுந்தான்; பணிந்தான்; பரவசமானான்.

பஞ்சதுந்துபி - ஐந்து முகங்களையுடைய வெண்கலத்தாலியன்ற ஒருவகை வாத்தியம். இது திருவாரூர், திருத்தருப்பூண்டி என்ற இருதலங்களிலே மட்டும் இன்றும் உள்ளது.

39. வலப்பக்கத்து நின்ற பிரமன் முகத்தைச் சிவபெருமான் நோக்கினார். அக்குறிப்பை உணர்ந்து நலமாக இருக்கின்றோம் என மனம் மகிழ்ந்து பிரமன் தன் குலத்தோன்றலாகிய காலவனைப் பூமியினின்றும் வாரி எடுத்து ஒரு கையில் தாங்கிக்கொண்டு, திருமால் முகத்தைப் பார்த்தான். அவன் நாம் இன்று துன்பத்தினின்று நீங்கினோம் என மகிழ்ந்து அவனும் ஒரு கை கொடுத்தான்.

40. 'இங்கு வருக என அருளிப் பாடு' என்று பிரமனும் திருமாலும் கூறிக் காலவனோடு புகுந்த காலையில், இருளுக்கு இத்துணைப் பெருமையின்று என்னும் படியான கூந்தலையுடைய உமாதேவியாரின் திருமுகத்தைச் சிவபெருமான் நோக்கினார். உமாதேவியார் இம்முனிவன் தெளிந்து பெருமையை எய்துதல் அரிதோ? நம்மோடு ஒன்றி நம்முடனேயே மயக்கறத் தங்குபவன் அல்லனோ? என்று புன்முறுவல் பூத்தார்.

41. பிரமனும் திருமாலும் கைலாகு கொடுக்க வந்த ஞானியான முனிவன் மீண்டும் அங்கு வணங்கினான்; எழுந்தான்; விம்மிதமுற்றான்; வலம் வந்தான்; மனங்குழையச் சிவபெருமானைத் துதிசெய்தான்.

வேறு

தேவர்கள் தேவ போற்றி செங்கண்மால் விடையாய் போற்றி
மூவர்கள் முதல்வ போற்றி முக்கணெம் பெருமான் போற்றி
மேவலர் புரமூன் றட்ட மேருவன் சிலையாய் போற்றி
பூவல ரிதழி மாலைப் புரிசடைப் புராண போற்றி. 42

மண்ணிடை யைந்தாய் நின்று மண்ணுமாய் வதிந்தாய் போற்றி
தண்ணிய புனலி னன்காய்ப் புனலுமாய்த் தவழ்ந்தாய் போற்றி
ஒண்ணிற வழலின் மூன்று யழலுமா யொளிர்ந்தாய் போற்றி
திண்ணிய வளியி ரண்டாய் வளியுமாய்த் திரிந்தாய் போற்றி. 43

வானிடை யேக மாகி வானுமாய் விரிந்தாய் போற்றி
பானுவுள் ளீடாய் நின்று பானுவு மானாய் போற்றி
தூநகை மதியுள் ளீடாய் மதியுமாய்ச் சூழ்ந்தாய் போற்றி
நானெனு முயிர்க்குள் ளீடா யுயிருமாய் நவின்றாய் போற்றி. 44

ஐம்புல வேடர் தாக்க வலைப்புண்டே னேல மோலம்
வெம்புடற் சிறையிற் பட்டு மெலிகின்றே னேல மோலம்
பம்பிரு வினையின் வல்லி பரிந்திட வறியே னேலம்
இம்பரித் தொடரி னின்று மெடுத்தரு ளிறைவா வோலம். 45

இமையவர்க்கு இடர்புரி பெமதில் - தேவர்களுக்குத் துன்பம் செய்கின்ற அச்சத்தை விளைவிக்கிற திரிபுரமாகிய மும்மதிள். கோதை - தோலாலானகட்டு.

42. இதுமுதல் 46 முடிய காலவன் செய்த துதி.

மேவலர் - பகைவர். இதழி - கொன்றை.

43. மண்ணிடை ஐந்தாய் நின்றும் மண்ணுமாய் வதிந்தாய் - பிருதிவியாயும், சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்ற ஐந்து குணங்களாயும் தங்கியவனே! புனலின் நான்கு - கந்தம் நீங்க ஏனைய நான்கு குணங்கள். அழலின் மூன்று-முன் நீருக்குரிய குணங்களில் கந்தம் ரசம் இரண்டும்நீங்க நிற்றல். வளி இரண்டு - சத்தமும், பரிசமுமாகிய குணங்கள் இரண்டு. இதனால் பூதங்களாயும், அவற்றின் குணங்களாயும் விளங்கும் இறையியல்பு கூறப்படுகிறது.

44. பானு உள்ளீடு - வெம்மை. பானு - சூரியன். மதியுள்ளீடு - தண்மை.

45. பம்பு - நிறைந்த. வல்லி - விலங்கு. பரிந்திட - நீங்க. இம்பர் - இவ்வுலகில். இத்தொடரினின்றும் - பந்தமாகிய கட்டினின்றும்.

பொறிவழி நடந்து கொட்கும் பொறியினைத் துடைப்பா யோலம்
நெறியெனக் குழியில் வீழ்த்து நிசியிரு ளறுப்பா யோலம்
அறிவென வறிவாய் நிற்கு மறிவக லறிவே யோலம்
செறிபொழிற் போதி நீழற் றிகழ்ந்தபே ரொளியே யோலம். 46

இருந்துதி முனிவன் கூற விமயவெற் புயிர்த்தா ளஞ்ச
வருந்துதிக் கையின் வேழ மலைத்தருண் முனைவன் கேளாத்
திருந்துதி கவலைச் சேற்றிற் சிக்கயாப் புண்ட நெஞ்சம்
பொருந்துதி யுவகை வேட்ட பொருளினி நுவறி யென்றான். 47

இத்தலத் திழிஞ ரேனு மிருந்தருந் தவங்க ளாற்றின்
அத்தமற் றவரு முத்தி யடைவது வேண்டு நின்பாற்
பத்திமை யடியேற் கென்றும் பணித்திட வேண்டும் வேட்ட
முத்தியீ தென்று தேற மொழிந்தஃ தீதல் வேண்டும். 48

என்றனன் முனிவர் கோமா னிமயவில் வாங்கி நொச்சி
வென்றவன் கருணை பொங்க வேட்டநல் வரங்க ளீந்து
துன்றிய குழுவை நோக்கத் தொழுதவை யகலப் போக
நின்றவன் முடிகை வைத்து நிலையினை யுணர்த்தப் புக்கான். 49

---

46. பொறிவழி நடந்துகொட்கும் பொறி - வினைவழியே இயங்கிச் சுழலும் கண் முதலிய ஐம்பொறிகள். நிசியிருள் - இரவுபோன்ற ஆணவ காரியமான அஞ்ஞானம். அறிவு அகல் அறிவு - அறிவெல்லையைக்கடந்த ஞானசொரூபியே என்பது.

47. காலவமுனிவன் துதிக்க இறைவன் திருச்செவிமடுத்து, கவலைச்சேற்றில் அகப்பட்டு வருந்தும் மனத்தைத்திருத்து; களிப்பை எய்து; விருப்புடைய பொருளைக்கேள் என்றார்.

48. இத்தலத்திலே இழிந்தவர்களாயினும் தவஞ்செய்வார்களாயின் அவர்களும் முத்தியடைதல் வேண்டும்; தேவரீர்பால் என்றும் நீங்காத அன்பு அடியேனுக்கு உதவவேண்டும்; விரும்பிய முத்தி இதுவென்று உணர்த்தி அதனையும் அடியேற்கு அருளுதல் வேண்டும்.

49. என்று முனிவர்தலைவனாகிய காலவன் கூறினான். இறைவன் அவன் விரும்பிய வரங்களைக் கொடுத்து, கூடியிருந்த தேவர் முனிவர் பூதர் முதலானவர்களின் குழுவை நோக்க, அவர்கள் இறைவனைத் தொழுது விடைகொண்டு புறம் செல்ல, சிவபெருமான் தமது திருக்கரத்தை முனிவன் சிரமீது வைத்து உண்மையை உபதேசிக்கத் தொடங்கினார்.

வேறு

அகர மோடுறு மகரத்தின் வலிகெட வடுக்கும்
பகர மேவலும் பதிதன்ம முதலிய முறையால்
நிகழு மாவயி னிடருண் மலமற வுயிர்தான்
திகழு நானென வதனையே சிவமென்பர் தெளியார். 50

ஏக மேயெனு மிருக்கெனி னிருக்கினுட் பொருள்கேள்
ஏக மேபதி பலவல வெனுமது காண்டி
ஏக மேயெனச் சுட்டுவா னொருவனிங் குளனவ்
வேகன் போலல னிருண்மலத் தோடுள னிவனே. 51

மன்ற வேதமத் துவிதமென் றுரைத்திடு மரபால்
ஒன்ற லாற்பொரு ளிலையெனி னுணர்த்துதுந் தெளிதி
என்றும் வேறன்மை யுணர்த்துமிக் கிளவியே யிதனால்
நின்ற வாருயிர் பலவுந்தா னாய்நிற்கு நிமலன். 52

சொன்ன தத்துவ மசியெனுஞ் சுருதியின் மொழியும்
மன்னு காரணப் பதியுநா னெனவரும் பசுவும்
என்ன வேபொரு ளிருமைகண் டியைந்துவே றின்மை
தன்னை நாட்டிய தல்லது தனியென்ற தின்றே. 53

---

50. அகரமாகிய உயிரோடு பொருந்தும் மகரமாகிய மலத்தின் வன்மையை வாட்டப் பொருந்தும் பகரமாகிய பதிபொருந்துதலும், சிவதன்ம முதலானவை முறையானே ஆன்மாவினிடமாகப்பொருந்தும். அவ்விடத்து பேரருளால் மலம் நீங்க உயிர் நான் என முனைத்து நிற்கும். அதனையே பிரமம் என்பர் சிலர். அவர்கள் உண்மை இயல்பினை உணராரே ஆவர். இவர்கள் அகம்பிரம வாதிகள்.

51. வேதம் "ஏகமேவ அத்விதியம் பிரம" என்னும். அதன் உள்பொருள் பதி ஒன்றே பல அல்ல என்னும் அதுவே. இதனை நன்கு அறிவாயாக. அங்ஙனம் பதிப்பொருளை ஒன்றேயென அறிபவன் ஒருவன் உளன். அவன் அவ்வொன்றான பரம்போன்றவனல்லன். அறியாமையை விளைவிக்கும் மலத்தோடு அநாதியே கூடியுள்ளவன்.

52. பெரும்பாலும் வேதம் அத்துவிதம் என்று சொல்லும் முறைமையால், பொருள் ஒன்றல்லாது வேறில்லை என்பதே பொருளாயினும் உண்மையை உணர்த்துவோம் தெளிந்துகொள். அத்துவிதம் என்னும் இச்சொல் என்றும் இறைவன் உயிர்களோடு கலந்து வேறன்றாயிருக்குந் தன்மையை உணர்த்தும். இதனால் உலகத்துள்ள உயிர்கள் பலவற்றிலும் அநாதிமுத்தனாகிய சிவன் கலந்து தானாய் நிற்பன்.

53. 'தத்துவமசி' என்னும் வேதவாக்கியமும், நிலைபெற்ற நிமித்தகாரணனாகிய பதியும், நான் என அறிபவனாக வரும் பசுவும், என இருபொருளைக்கண்டு,

ஈண்டு நாமுரைத் திட்டதே பொருள்பொரு ளேகம்
வேண்டி னுருரைத் திட்டது வெற்றபொய் யாதல்
காண்டி ஞாதிரு ஞானஞே யமுங்கரைந் தன்ருல்
நீண்ட வேதமற் ஞென்றென நிகழ்த்துமோ வதுதான். 54

சத்தி யாலுயிர்க் கிருளறத் தனுகர ணுதி
உய்த்து டங்குநின் றசைப்பதை யுணர்கிலார் பதியே
மெத்து மாயையிற் பிணிப்புண்டு வீற்றுவிற் ருகி
முத்தி யெய்துமென் பார்மொழி விரோதநீ தெரிதி. 55

பொக்க மிக்கறப் புனலொடு புனல்கலந் தாங்குத்
தொக்கு நின்றிடு மறிவுட னறிவெனச் சொல்லின்
ஒக்கு நற்பதி யுயிரென லாமொத்த தென்னில்
தக்க தன்றுபா சத்துற லாதலிற் றவறே. 56

ஆட்சி நற்கர ணங்கெட வாகுமுற் றுன்பங்
காட்சி யென்னக்கா ணுதமை முத்தியேன் மரண
மாட்சி நித்திரை மரத்துயி ராதியு முத்தி
மூட்சி பெற்றன வாமத னுன்மொழி பிழையே. 57

அவை தம்முள் பொருந்தி வேறன்மையை நிலைபெறுத்தியதல்லது தனியானவை என்பது உணர்த்துவதன்று.

54. இம்மகாவாக்கியத்திற்கு நாம் சொன்னதே பொருள். ஒன்றே என்னும் கருத்தை விரும்பினவர்கள் சொன்னது வெறும் பொய்யாதலை அறிவாயாக. பெரிய வேதம் அறிபவனும், அறிவும், அறியப்படு பொருளும் என மூன்றையும் சொல்லிய அதே வேதம் பொருள் ஒன்றெனவும் சொல்லுமோ?

55. இறைவன் தனதருட்சத்தியால் உயிர்களின் மலம் நீங்க உடல் உலகம் கரணங்களை உதவி, உடனுய்க்கலந்து நின்று, உயிர்களை இயக்குவதையும் உணர ஆற்றலில்லாதாராய், சிவமே மாயையாற் கட்டுண்டு தனித்தனி யுருக்கொண்டு முத்தியை எய்தும் என்பர் சிலர். அவர் கூற்றில் முன்னேடுபின் முரண் உண்மையை உணர்வாயாக. இவர்கள் மாயாவாதிகள்.

56. பொய்மை அறவே நீங்க, நீரோடு நீர் கலந்தாற்போல, ஞான சொரூபமான இறையோடு ஞானசொரூபமான உயிர் கலக்கும் எனக் கூறின்; அது பொருந்தும். உயர்ந்த பதிப்பொருள் பசுவாயிற்று எனல் ஆம்; இரண்டும் சமமாயின எனின் பொருந்தாது. பசு பாசத்தோடு கூடியிருத்தலால் அவர்கள் கூறும் சமம் தவறுடையதேயாம். இது சிவசமவாதி கூற்றைக் கண்டித்ததாம்.

57. நல்ல மனமுதலிய கரணங்களை அடக்கியாளும் தன்மை கெடின் துன்பம் விளையும் ஆதலால் கரணங்கள் செயற்படாதது அதாவது காட்சி முதலிய வற்றை யியற்ருமையே முத்தி என்பிராயின், மரணநிலையும், சிறந்த நித்திரை

குளிகை தாக்கலுஞ் செம்புறு கோதுமுற் றழிய
ஒளிபெற் றுங்குறு மலமுயிர்க் கருளினு லொழியத்
தெளிவு சேர்வது முத்தியேற் செறிமலங் களிம்பின்
விளிவு றுதுநித் தியமத னுலிது விணே. 58

அருளை டுத்தலு மெய்வகை யுணர்வுமைந் தொழிலும்
பெரிதெ டுத்திடு முயிரெனல் பிழைமறை பேசா
திருளை டுத்தசிற் றறிவினுக் கைந்தொழி லெடாதாற்
பொருளை டுத்ததண் புணரிநீர் முழுவது நாழி. 59

மாட்டத் தங்கிய காட்டத்தி னங்கியின் மலத்தை
ஓட்டித் தங்கலுஞ் சிவமுயி ரேகமா மென்னிற்
காட்டத் தின்மையங் கியினுறுங் கரையிரு பொருளும்
நீட்டித் தோர்ந்துபா ரேகமாய் நிற்குமோ நில்லா. 60

வேனில் வெப்பிடை யுழன்றவர் மென்றரு நிழல்பெற்(று)
ஆன வெப்பினைத் துடைத்தல்போ லரனடி நிழற்பெற்(று)
ஈன வல்வினை யிரித்துமென் பதும்பிழை மரம்போன்
ஞான வித்தக னவைநலந் தெரிதரா தவனே. 61

நிலையும் கரணங்களால் உணராத மரமுதலிய உயிர்களும் முத்தி எய்தினவாதல் வேண்டும். அதனுல் அவர்கள் கூறுவனவும் தவரும்.

58. இரதகுளிகை பட்டவுடன் செம்பிற் களிம்பு நீங்கியதுபோல, திருவருளால் மலம்நிங்க, ஞானந்தெளிவதுதான் முத்தி என்பையாயின், ஆணவ மலம் செம்பிற் களிம்புபோல அழியாததாம்; நித்தியமாம். அதனுல் நீ கூறும் இரு கருத்தும் விணே.

59. திருவருளைச் சார்ந்ததும் உயிர் உள்ளதை உள்ளவாறு உணருமென்பதும், பஞ்சகிருத்தியங்களையும் மிகச்செய்யும் என்பதும் தவறு. இங்ஙனம் வேதங்கள் ஒருபோதும் கூரு. அறியாமையோடு கூடிய ஆன்மாக்களுக்கு என்றும் ஐந்தொழில்செய்யும் ஆற்றல் இல்லையாம். எதுபோல எனின், ஒருநாழி கடல்நீர் முற்றையும் முகவாததுபோல என்க.

60. எரியின்மாட்டி எரிக்கத் தங்கிய விறகிலே நெருப்பைப்போல, மலத்தை நீக்கிச் சிவம் தங்குதலும் சிவமும் உயிரும் ஒன்றேயாம் எனின், நெருப்பிலே விறகின் இல்லாமை பொருந்துமே! விறகும் நெருப்புமாகிய இருபொருளும் ஒருசேர உண்டா என்பதை நீயே யோசித்துப்பார். இரண்டும் ஒன்ருய்நிற்குமோ நில்லா.

61. வேனிற்காலத்து வெயிலிலே அலைந்தவர்கள் மரநிழலை அடைந்து. வெப்பத்தைப் போக்கிக்கொள்ளுதல் போலச் 'சிவபெருமானுடைய திருவடி நிழலைச்சார்ந்து இழிந்த வலிய வினைகளின் கொடுமைகளை ஒழிப்போம்' என்பதும் தவரும். ஞானவித்தனுகிய சிவன் மரம்போல நலந்தீங்கு தெரியாதவனே?

உலக மாய்ச்சிவம் பரிணமித் துயிருமாய் வினையுண்(டு)
இலகு பேரொளி யதீதத்திற் றருமென்ப ரிதுபொய்
உலகு காரண மாயையுண் ணுன்வினை யமலன்
இலகு ருதொளி குருடனுக் கிருட்டறை யிடத்தே. 62

வினையொப் பெய்துழிக் கருவியு மலத்தையும் வீட்டி
முனைவ னல்கிய ஞானமு ஞானத்தின் முதலுந்
தனையு நோக்குரு தேகமாய்ச் சார்பய னுவப்பும்
புனைவ தின்றியே நிற்பது பொருளென்பர் சில்லோர். 63

அருவ வல்வினை தொலைந்திலா தழியினுங் கருவி
மருவி நிற்பினும் வாய்மையெய் தாதவை யொன்ருய்ப்
பொருது மென்றிடி னபேதமாம் புணர்பய னுவப்பும்
ஒருவு மென்றிடி னென்பய னுரைத்தமுத் தியினல். 64

இன்ன பல்வகை யவரவ ரியம்புமா றெல்லாம்
நன்ன ரல்லன காட்டின நற்றவ வினிக்கேள்
முன்னும் வன்மலம் பசுபதி மூன்றுநித் தியமாய்
மன்னு மெங்கணு மாயினு மலமுயிர்ப் பதிவே. 65

---

62. சிவமே உலகமாய்ப் பரிணமித்து, உயிரும் ஆகி வினைகளை நுகர்ந்து கடந்த நிலையில் உண்மை ஞானத்தை உதவும் என்பர் சிலர். இதுவும் பொய். உலகத்திற்கு முதற்காரணமோ மாயை; அநாதி நின்மலனுகிய இறைவன் வினைப் போகங்களை நுகரமாட்டான். பிறவிக் குருடனுக்கு இருட்டறையிலே ஒளி விளங்கவே விளங்காது.

63. இருவினை யொப்பு எய்திய காலத்து, வினைகளை நுகரும் அகக்கருவி, புறக்கருவிகளையும் ஆன்மாவை மறைத்து நிற்கும் மூலமலத்தையும் அழித்து, இறைவன் உபகரித்த உண்மை ஞானமும் ஞானமுதலாகிய அறிபவனும் தானுகிய சிவமும் ஆகிய இம்மூன்றையும் நோக்காமல், அனைத்தும் ஒன்ருக, மனத்தால் வினையும் இன்பத்தையும் உணராது இருப்பதே முத்தி என்பர் சிலர். இவர்கள் பாஷாணவாதிகள்.

64. அருவமாகிய சூக்கும கன்மங்கள் ஒருபோதும் அழியாது; அப்படியே அழிந்தாலும், கருவிகளைப்பொருந்தி நுகர்ச்சிக்குரியவாயினும் முத்தி சித்தியாது; அவையனைத்தும் ஒன்ருய்ப் பொருந்தும் எனின் வேற்றுமையின்ரும். ஏகமாத லால் வினையும் பயனுகிய ஆனந்தமும் இன்றியிருப்பதே முத்தி எனின் அம்முத்தி யினல் உயிர்க்கு உளதாம் பயன் என்ன?

65. நல்லதவமுடைய முனிவனே! இவ்வண்ணம் பலவகையாக அவரவர் களும் சொல்லுவன எல்லாவற்றிலுமுள்ளநல்லன அல்லனவற்றைஅறிவித்தோம். இனி உண்மையைக்கேட்பாயாக:- அநாதியே வலியமலமும் உயிரும் இறைவனும் நித்தியமான என்றும் அழியாத பொருளாய் எங்கும் நிலைபெறுமாயினும், மலம் என்றும் உயிரைச் சார்ந்தேயிருக்கும்.

வேறு

சிற்றறிவாய்ச் சுதந்திரமின் மையுமா யன்றே
செறிந்தவுயிர் கேவலத்தி னிருள்விழிபோற் கிடப்பப்
பற்றுபரு வத்திறைவன் பரிந்துடல விளக்குப்
பணிப்பவது வாய்வினையிற் படர்ந்துபுரி காலை
யுற்றமருந் துறுபித்துக் கறிவறியா மையினு
மூட்டுதா யெனச்சிவபுண் ணியமுடனின் றுறுவித்
தற்றமிலா தியிற்பந்த மறுதியிற்பந் தமுமா
யடர்ந்தமல மூன்றினையுங் கிழாக்கி யறுத்து. 66

தத்துவத்தி னுருக்காட்சி சுத்தியுற லோடுந்
தனைநோக்கி யுயிர்சிவமாத் தருக்கவிறை முன்னாய்
இத்தனைநாள் காறுமிடர்ப் பிறப்பிறப்பிற் படுநீ
யிருஞ்சிவமன் றுனைக்காண வெடுத்தருளு முதருன்
சுத்தவரு ளெனக்காட்டக் கண்டருளாற் றொழில்க
டோற்றுவலென் றெழவிரும்பி னெரிபோல அருளே
அத்தகைமை புரிவதுனக் கிலையெனத்த னுண்மை
யறிந்தருளே முதலென்ன வருளாயே விடுமால். 67

---

66. உணர்த்த உணரும் சிற்றறிவினதாய். என்றும் அதாவது பெத்த நிலையிலும் முத்திநிலையிலும் குடம்போலச் சுதந்திரமில்லாததாய், அநாதியே ஆணவமலத்தோடுகூடிய ஆன்மா இருளிலே கட்டுண்டகண்ணைப்போலக் கேவல அவத்தையில் செயலற்றுக்கிடப்ப, இறைவன் அவ்வான்மாவை ஆட்கொள்ளத் தக்க பருவத்திலே, காரணமில்லாத கருணையைச்செய்து, தனுகரணங்களாகிய விளக்கினையுதவ, அவ்வுடலே தானென மயங்கி வினைகளை நுகர்ந்து, வினைகளைச் செய்கின்ற காலத்து, பைத்தியம் பிடித்தக் குழந்தைக்கு அதன் அறிவுடைக் காலத்தும் அறியாமை மேவிய காலத்தும் பித்தம் போக்குதற்குரிய மருந்தை ஊட்டுகின்ற தாயைப்போல, இறைவன் ஆன்மாவின் உடனாக நின்று சிவபுண்ணியங்களை அடையச்செய்து, மிச்சமின்றி ஆதியில் ஆன்மாவைப் பந்திக்கச் செய்த பந்தங்களாகிய மாயை கன்மங்களையும், அநாதியே பந்தித்து நின்ற ஆணவமலத்தையும், வலியொடுக்கியும் கெடுத்தும்.

67. தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி இம்மூன்றும் அனுபவத்திற்கு வந்தவுடன், ஆன்மா தன்னை நோக்கியதால் அது ஆன்மரூபம் ஆன்ம தரிசனம் செய்து, தானே சிவம் எனத் தருக்க, பதியாகிய சிவம் முற்பட்டு, 'இத்தனை நாளும் பெரிய பிறவிக்கடலில் பட்டுழலும் நீ ஒருபோதும் சிவமாகாய்! உன்னை, தன்னையும் என்னையும் காண அஞ்ஞானக்கடலினின்று தூக்கி எடுத்த முதல்வன் சுத்த கருணைசொரூபமாகிய தானே' என்று உணர்த்த உணர்ந்து, அருளால் தொழில்களைத் தோற்றுவிப்பேனென ஆன்மா சிறிது முயல, எரியைச் சார்ந்த இரும்பு தன் கருமைநீங்கிச் செந்நிறத்தையும் வெப்பத்தையும் அடைவது போல, உன்னைச்சார்ந்த சிவகருணையே உன்னை அருளால் தொழில்கள்செய்ய

அருளிதுமற் றனுதிமுத்தன் சத்தியவன் சத்தி
மான்கிரண மலரியைப்போ லறிகவென வறிந்து
பொருவில்சிவத் தினையருளுங் கழியவிழி கதிரைப்
புணர்ந்ததென வொன்ருகா திரண்டாயும் படாமல்
பெருகுபர மானந்த வெள்ளமொன்றே திளைக்கும்
பெற்றியிது முத்திநிலை பெற்றவுடல் பகலின்
மருவும்விளக் கெனமாயு மதற்கமைத்த வூழும்
வதிந்திறைவன் றனதாக வேற்றிடுவன் காணே. 68

சஞ்சிதமுன் பேயழிந்த தேறும்வினை யுளதேல்
தயங்கருளி னிரியுமல மழியாது சத்தி
செஞ்சுடர்முன் னிருள்போலத் தேயுமுட லுலகில்
திரித்ருகால் வாதனையிற் றிறம்புவது முளதாம்
அஞ்செழுத்தை விதிப்படியுச் சரிக்கினது விலகு
மாண்டருளுந் தனிமுதலை மூன்றிடத்தும் வழிபட்(டு)
எஞ்சலிலாச் சீவன்முத்தி பரமுத்தி யிரண்டு
மீண்டேபெற் றிடுவரிறை ஞானமுணர்ந் தோரே. 69

இயக்குகின்றது; உனக்கு அவ்வாற்றல் இயற்கையிலேயில்லை எனத் தன் சிறப்பியல்பை உணர்ந்து அருளே முதல்வன், அவனியக்க இயங்குகின்ருேம் என்று உணர்ந்து அருண் மயமாகிவிடும் என்பதாம்.

68. அருள் அநாதிமுத்தனுகிய சிவனுடைய பரிக்கிரகசத்தி; அவன் சக்திமான்; சூரிய ஒளியையும் சூரியனையும்போல என அறிந்து. இங்ஙனம் அறிதற்கு உபகாரப்பட்ட திருவருளும் மறைய, கண்ணொளியும் சூரிய ஒளியும் வேருயினும் கலப்பில் ஒன்ருயும், தன்மையில் வேருயும் இருத்தல்போல ஒன்றேயாகாமலும், இரண்டாகாமலும், சிவானந்த வெள்ளம் ஒன்றையே நுகரும் இந்நிலையே முத்தி. இதனை ஆன்மா எய்துதற்குக் கிடைத்த கருவியாகிய உடல் பகல் விளக்கைப் போல மாயும்; உடலின் நுகர்ச்சிக்காக வரையறுத்து உதவப்பெற்ற பிராரத்த கன்மங்களும் மாயும். அந்நிலையில் இறைவன் உயிரிற்றங்கி உயிரைத் தானுக ஏற்றருள்வன் இதனை அனுபவத்திற் காண்பாயாக.

69. சஞ்சித கன்மம் முன்பே அழிந்தது; ஏறும் வினையாகிய ஆகாமியம் இருக்குமாளுல் அது விளங்குகின்ற அருளாகிற தீயால் தீய்ந்துபோம். அநாதி பந்தமான மூலமலம் மட்டும் அழியாது. சூரியன் முன் இருள் தன் மறைப்புத் தன்மையும் கருநிறமும் அறுதல் போலத் தேய்ந்து வலிகெட்டும். பிராரத்தகன்மம் தேயும்வரை அதனைத்தாங்கி உடல் உலகில் திரிகின்றவரை வாசனுமலம் தாக்கத் தந்நிலையினின்று மாறுபடுவதும் உண்டு. அதனுல் அவ்வாசனு மலம் அஞ்செழுத்தை விதிப்படி எண்ணிஞல் அகலும். அவ்விடத்துச் சிவஞானம் பெற்ருேர் இறைவனைக் குரு லிங்க சங்கமமாகிய மூன்றிடத்தும் வழிபட்டு, நிலைபெற்ற சீவன் முத்தி - பரமுத்தியாகிய இருவகை முத்திகளையும் அடுத்த உடம்பு இயங்கும் இந்த உலகத்திலே பெறுவர்.

வேறு

என்று காலவ முனிக்கிறைவன் முத்தி யருள
நன்று முத்திபெறு நற்றவன் மகிழ்ந்து தலைவா
ஒன்று வாதனையு மாக்கையொழி கிற்பி னிலையா
நின்ற விவ்வுடலு நீக்குகென வண்ண லருளும். 70

வெள்ளி யம்பல நமக்குள து வெள்ளி வரையில்
கள்ள வைம்பொறி கடந்துவரு கால வவதி
னுள்ளு மன்பர்வினை யோயவழி யாது தினமும்
கொள்ளு மின்பநட னங்குயிலு கின்றன மரோ. 71

போதி யம்பல மிதாமித னினும்பு ரையெலாம்
காதி யைந்தொழி னடித்துமது காண லரிதாம்
ஓதி யாய்ந்தவரு மாதலி னெரோவொ ருதினம்
பாதி மாதொடு பயின்றுபுரி தும்ப லர்தொழ. 72

இன்ன தானவர சம்பல மிறைஞ்சி யிருநீ
நன்னர் மாலயர் தமக்குநட மாடு துமிவண்
அன்ன வேலைநட னந்தொழுதி யாக்கை யொழியும்
என்ன வோதினன் மறைந்தன னிலிங்க முதல்வன். 73

---

70. என்று காலவமுனிவருக்கு இறைவன் முத்தி நிலையினை எடுத்து உபதேசிக்க, அவன் மகிழ்ந்து தலைவா! இவ்வுடல் அழியின் இதனைப் பற்றியுள்ள வாசனைமலமும் அகலுமே! ஆதலால் இவ்வுடலையும் நீக்கியருள்க. என வேண்டிக்கொள்ளச் சிவபெருமான் கூறுவார்.

71. கள்ளத்தனம் பொருந்திய ஐந்துபொறிகளையும் வென்ற காலவமுனிவனே! இந்த வெள்ளியங்கிரியிலே வெள்ளியம்பலம் ஒன்றுள்ளது; அதில் தியானிக்கின்ற அன்பர்களின் வினைவலிகெட நாடோறும் நீங்காமல் ஆனந்தத் தாண்டவம் செய்கின்றோம்.

72. இதுதான் அரச அம்பலம். இதில் நும்முடைய குற்றங்கள் அனைத்தையும் அழித்துப் பஞ்சகிருத்தியப் பரமானந்தத் தாண்டவம் செய்கின்றோம். அது ஞானிகள் முதலிய யாராலும் காணுதற்கு அரியதாம். ஆதலால், ஒரொரு நாள் அர்த்தநாரீசரராக இருந்து பலர் தொழ நடிக்கின்றோம்.

73. இத்தகைய அரச அம்பலத்தை வணங்கிக்கொண்டு நீ இங்கே இரு. பிரம விஷ்ணுக்களுக்காக நாம் நன்றாக நடமாடுகின்றோம்; அப்போது நடனத்தை வணங்கின் உன்னுடைய இவ்வுடல் ஒழியும். என்று கூறிச் சிவலிங்கத்தில் முதல்வன் மறைந்தான்.

மும்மை வையகமு மேத்துமுதல் வன்ம றைதர
விம்மி னுன்விழியி னீருக விழுந்த லறினுன்
அம்ம வோவிறைவ னீங்கவுயிர் வாழ்க்கை யமரும்
எம்ம னேர்க்குமெளி வந்ததெவ னென்று கசிவான். 74

வண்டு காளிறைவன் மாலேபுகு மின்ம துமிக
உண்டு தேக்கெறிய லாகுநும துண்டி யொழிவில்
அண்ட வாணரறி யாயொரு மடந்தை யயர்வு
கண்டி டாமைகட னன்றெனுமி னென்று கரைவான். 75

இதழி வண்டெரிய னேற்றதிளி வந்த தலேயென்
பதளு நோற்றன வராவினமு நோற்ற னகுறை
மதியு நோற்றது வயங்குருவி னின்ற விழியால்
பதியை நோக்குறவு நோற்றில னெனப் பரிவனுல். 76

ஒன்ற வுள்ளகம் வரிக்குமொரு வன்படி யெலாம்
சென்று நோக்குதிசை தோறுமுரு வந்திகழ் தரக்
கன்றி னீங்குபசு விற்கடி தடுத்து நிலமேன்
மன்ற வீழ்ந்தெழும் வணங்குமிது மாய மெனுமால். 77

---

74. மூன்றுலகமும் தொழும் முதல்வன் மறைய. முனிவன் விம்மினுன்; கண்ணீர் சிந்தக் கீழே விழுந்தலறினுன்; ஐயோ! இறைவன் எம்மைவிட்டுப் பிரிய, உயிர்வாழ விரும்பும் எங்களுக்கும் இறைவன் இரங்கி வந்தது எங்ஙனம் என்று மனம் கசிவான்.

75. ஏ வண்டுகளே! இறைவன் அணிந்துள்ள மாலேயில் புகுங்கள்; தேனே நிரம்ப உண்டு ஏப்பம் விடலாம். நீங்கள் தேனுண்டு ஒழிந்த காலத்துத் தேவர்களும் அறியாத ஒரு பெண்ணுகிய உமாதேவியார் வீற்றிருப்பதைக் காணுமலிருப்பது முறைமையன்று, என்று சொல்லுங்கள் என்று மனங்கரைவான்.

76. கொன்றைமாலே தவஞ்செய்தது. இழிவான கபாலம், எலும்பு, புலி, யானே இவற்றின் தோல் எல்லாம் தவஞ்செய்தன. பாம்புக் கூட்டங்களும் தவஞ்செய்தன. குறை மதியாகிய பிறையும் நோற்றது. விளங்குகின்ற என் உடம்பிலுள்ள இந்தக் கண்ணுலே நாயகனேக் காணத் தவஞ்செய்திலேன், என வருந்துவான்.

77. மனம் ஒருப்பட உள்ளத்தில் எழுதிய இறைவனேப் பூமி எல்லாம் சென்று நோக்கிய திசைகள் தோறும் உருவம் திகழ, கன்றைப்பிரிந்த பசுப்போல விரைவாக வந்து, பூமியின்மேல் வீழ்ந்தெழுவன்; வணங்குவான்; இறைவன் காட்சிதந்த இது மாயம் என்பான்.

உள்ளம் ஒன்ற - மனம் ஒருப்பட. வரிக்கும் - எழுதிய. படி - பூமி. மன்ற - மிக.

அன்பெ லாமொரு பிழம்பென வடுத்த முனிவன்
இன்ப வெள்ளமினி தூறவதி வுற்றி றைவனூர்
வன்பெ ரும்பழைய மாமல மிரித்த வடிவின்
முன்பு போலவழி பாடுகண் முடித்து வருமால். 78

பள்ள மானபிற விப்பரவை நீந்த முனிவன்
தொள்ள மாகவருள் பெற்றமை தொகுத்துரை செய்தாம்
கள்ள வைம்பொறியி லிர்கடவு ளான்வ ழிபடல்
விள்ளு வாமென விளம்புமொரு சூத முனிவன். 79

காலவன் வழிபடுபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 418

---

78. அன்பெலாந்திரண்டு ஒரு வடிவான முனிவன், இன்பவெள்ளம் ஊற அதில் மூழ்கி, சிவபெருமான் வலிய பெரிய பழைய மூலமலத்தைப் போக்கிய வடிவுடன், முன்போல வழிபாடுகளை முடித்து வருவான்.

79. காலவன் ஆழமான பிறவிக்கடலை கடக்க தெப்பமாகத் திருவருளைப் பெற்றமையைத் தொகுத்துக்கூறினோம்; கள்ளத்தனமான ஐம்பொறிகளை வென்ற நைமிசமுனிவர்களே! தேவப்பசுவாகிய காமதேனு வழிபட்டதைச் சொல்வாம் என்று சூதமுனிவன் சொல்லத் தொடங்கினன்.

தொள்ளம் - தெப்பம்.

எட்டாவது

காமதேனு வழிபடுபடலம்

மைக்கி ளர்ந்த மணிமிடற் றண்ணலார்
முக்கு ணத்தினு மூவரைத் தோற்றினர்
அக்க டவுளர்க் காக்கம ளிப்பழிப்(பு)
ஒக்க நல்க வுளுற்றுந ராயினர். 1

அன்ன மூவரு ளம்புய மேலவன்
மன்னு சாயம்பு மாமனுப் பட்டத்தில்
தன்னை நேருஞ் சகரனென் பானுல
கின்ன றீர விருந்தர சாளுநாள். 2

படைக்க யோகிற் பயின்றிருந் தானவண்
விடைக்கு நித்திரை மேயது மேவலும்
படைப்பு நின்றது பார்த்தனர் வச்சிரப்
படைக்கை யானொடு பண்ணவர் யாவரும். 3

அம்ம வோபக லேயய னித்திரை
விம்ம நின்ற விளைவிஃ(து) ஓர்ந்திடில்
செம்மை யன்றெனச் சிந்தை மருண்டனர்
இம்மெ னத்திருப் பாற்கட லெய்தினர். 4

---

1. இறைவன், முக்குணத்தாலும் மூவரைப் படைத்தார். அவர்களுக்கு படைப்பு, காப்பு, அழித்தல் தொழில்களை முறையாக அருள அவர்கள் அத்தொழில் களைச் செய்வாராயினர். மை - விடம். மூவர் - பிரம விஷ்ணு ருத்திரர்கள்.

2. சுவாயம்புவ மனுவின் மரபிலே சகரன் என்பவன் உலகம் துன்பத்தி னின்று நீங்க இருந்து அரசாளும் காலத்தில் அம்மூவருள் ஒருவரான பிரமன்.... சாயம்பு மா மனுப்பட்டத்தில்-சுவாயம்புவ மனுவந்தரத்தில். இன்னல்-துன்பம்.

3. படைப்புத் தொழிலைச்செய்ய யோகத்திலிருந்தான். அப்போது அங்கு மிகுந்த நித்திரை வந்தது. அதனால் படைப்புத் தொழில் நின்றது. இந்திரனும் தேவர்களும் இதனைக் கண்டனர். விடைக்கும் நித்திரை - மிக்க தூக்கம். பண்ணவர் - தேவர்.

4. அம்மவோ! பிரமன் பகலிலேயே நித்திரை மிகுந்ததால் விளைந்த பயன் இது. இது நேர்மையன்று என்று மனம் மயங்கினர். விரைந்து திருப்பாற்கடலை அடைந்தார்கள். அம்ம - இரக்கக்குறிப்பு இடைச்சொல்.

இந்தி ரன்முத லோரிருத் தாரென
வந்தில் வாயில்காப் பாள ரறைதலும்
மைந்த னித்திரை கேட்க மலர்விழித்
தந்தை நித்திரை யைத்தணந் தானரோ. 5

குரவப் பள்ளிக் குழலியோர் பாலுற
உரவப் பள்ளி யுகுமழை போலமர்
அரவப் பள்ளியி னுன்றன தாரருள்
விரவப் பள்ளியுண் மேவிவ ணங்கினர். 6

அணங்கு வேல்வலத் தந்தர வாழ்க்கையிர்
உணங்கும் வாண்முகத் துற்றதிங் கென்னெனப்
பணங்கொள் பாயலி னுன்வின வப்பணிந்(து)
இணங்கு மன்பி னிமையவர் கூறுவார். 7

யாது காரண மோவறி கின்றிலோம்
பேதை யேம்பல காற்பிறப் பெய்துபு
சாத லெய்துழி யல்லது சார்தராக்
கோது நித்திரை கொண்டன னின்மகன். 8

---

5. இந்திரன் முதலிய தேவர்கள் வந்திருக்கிருர்கள் என வீட்டு வாயில் காவலர்கள் வந்து கூறுதலும், மகன் நித்திரை கொண்டதைக் கேட்கத் தந்தையாகிய திருமால் நித்திரை நீங்கினர்.

வந்து இல்வாயில் காப்பாளர் எனப் பிரிக்க. அன்றி அந்தில் அசையாகக் கோடலுமாம்.

6. நறுமணம் பள்ளிகொள்ளும் கூந்தலையுடைய தேவி ஓர்பாலுற, மலைமேலுள்ள நிலையான விவசாயக் காட்டினுள் சிந்திய மழையைப்போல, சேடசயனனுகிய திருமாலின் நிறைந்த அருள் கலக்க, திருமால் எழுந்தருளியுள்ள பள்ளியுள் அடைந்து வணங்கினர்கள்.

குரவம் - நறுமணம். உரவப்பள்ளி - மலைமேல் உள்ள நிலையான விவசாய நிலம்.

7. பிறரை வருத்தும் வேலின் வலிமையால் விண்ணில் வாழ்கின்றவர்களே! உலர்ந்த ஒளிமுகத்தோடு இங்கு வந்தது என்ன? என வினுவ, இணங்கிய அன்பினையுடைய தேவர்கள் விண்ணப்பித்துக் கொள்வார்கள்.

8. அறியாமையுடையவர்களாகிய நாங்கள் பிறந்து இறக்கும்போதல்லாமல் எம்மையடையாத குற்றமுள்ள நித்திரையை நின் மகனுகிய பிரமன் கொண்டான் யாது காரணமோ அறியேம்.

படைப்பு நிற்பப் பணித்திடு மாயுளின்
தொடக்க முற்றிடுந் தொல்லுயி ரெல்லையீ(று)
ஒடுக்க முற்று மொடுங்கி னளிக்குநின்
நடைக்குந் தாழ்வு நணுகுவ தாகுமே. 9

அன்ன வாறணு காமை யுலகெலா
மன்ன வாக்கம் வழங்குதல் வேண்டுமால்
கன்னி யந்துள வக்கடி மார்பினுய்
என்ன மீட்டு மிறைஞ்சின ரும்பரார். 10

வேறு

இலகொளிக் கவுத்துவ மிமைக்கு மார்பினன்
அலமரு மமரர்த மார்வ நோக்கினன்
உலகுறு படைப்பொரு தேனு வாக்குமா
நலமுறச் செய்து நீர் நடமி னென்றனன். 11

விடைகொடுத் தருளலும் வியந்து துள்ளினர்
கடவுள ருடனுறை காம தேனுவங்(கு)
அடிமலர் முடிமிசை யணிந்த ராவின்மேல்
தடவிழி வளர்பவன் றனக்கி தோதுமால். 12

---

9. படைப்பு நின்றுபோக, அவ்வவ்வுயிர்கட்கென்று வரையறை செய்த ஆயுளின் தொடக்கம் உற்ற பழமையான உயிர்களை தத்தம்எல்லையிலே அரன் ஒடுக்கத்தைச்செய்ய முற்றும் ஒடுங்குமாயின் உயிர்களைப் பாதுகாக்கும் உன் தொழிற்கும் தாழ்வு வந்து அடையுமே.

10. துளவமாலை மணநாறு மார்பினையுடைய திருமாலே! அத்தகைய நிலை வாராமல் உலகமெல்லாம் நிலைபெறப் படைப்பை வழங்கவேண்டும் என்று மீளவும் தேவர்கள் வணங்கினர்கள்.

கன்னியந்துளவம் - திருமால் ஒருவர்க்கே யுரிமையான கன்னிமைகழியாத துளவம் என்றார்.

11. கவுத்துவம் என்னும் மணி ஒளிசெய்யும் மார்பினையுடைய திருமால் சுழன்று வருந்துகின்ற தேவர்களின் விருப்பத்தை நோக்கினன்; உலகப் படைப்பை ஒரு காமதேனு இயற்றுமாறு செய்தும் நீங்கள் போகலாம் என்றான்.

தேனு - காமதேனு.

12. தத்தம் இருப்பிடம் செல்லத் திருமால் விடைகொடுத்து அருளுதலும் தேவர்கள் மகிழ்ச்சியினால் துள்ளினர்கள். காமதேனுவும், திருமாலை வணங்கி நின்று இதனைச்சொல்லும். அரா - பாம்பு. சேடன்.

யானைமே லிடுமெழிற் பரும மில்லுறை
பூனைமே லிடுவது புகன்ற தொக்குமால்
கானுலா மலர்வரு கடவுள் செய்தொழில்
தேனுவா லாமெனச் செப்பு கின்றதே. 13

அல்லதூஉ மடிகளுக் கசதி யாடுதற்(கு)
ஒல்லுவ தாமொரு பேதை யேனிடைச்
சொல்லுலா நின்மகன் ரேற்றத் தோன்றியான்
புல்லுறு பௌத்திரி யான பொற்பினல். 14

என்றுவான் சுரபியங் கியம்பக் கேட்டருண்
மன்றலந் துளவினன் மகிழ்ந்து நோக்குபு
நன்றுநன் றசதியா டிலந விற்றிய(து)
இன்றுநீ யறிதிபட் டாங்கென் றேற்பவே. 15

அத்தொழி லாக்குதற் குரியை யல்லையேல்
உத்தமி யும்பர்முன் னுரியை யென்றுனை
வைத்தியா முரைத்துமோ வசிக்கற் பாலைநீ
எத்திறம் வருமெனில் இயம்பக் கேட்டியால். 16

---

13. யானையின் மேலிடும் அழகான அம்பாரியைப் பூனைமேல் வைப்ப தொக்கும்; பிரமன் செய்யுந்தொழில் காமதேனுவால் ஆம் என நீங்கள்சொல்வது.

பருமம் - யானை மேலிடுந்தவிசு; அம்பாரி. கான் - மணம்.

14. நின்மகனாகிய பிரமன் படைக்கத் தோன்றிய யான் உமக்குப் பிள்ளை வயிற்று மகளாகிய பேத்தியானதால், பேதையாகிய என்னிடம் தேவரீர் நகையாடுதலும் பொருத்தமே.

அசதியாடுதல் - நகையாடுதல்; பரிகாசம் பேசுதல்.

15. இங்ஙனம் காமதேனு சொல்லக்கேட்ட திருமால், மகிழ்ந்து அதனைப் பார்த்து, நன்று நன்று நாம் நகையாடவில்லை; யாம் சொன்னதை இன்று நீ உண்மை என்று அறிவாயாக.

வான்சுரபி - தேவப்பசு, காமதேனு. மன்றல் - மணம். பட்டாங்கு-உண்மை.

16. அப்படைப்புத் தொழிலைச் செய்வதற்கு நீ உரியவளில்லையாயின், உத்தமியே தேவர்களுக்கு முன்னிலையில் நீ தகுதியுடையாய் என்று உன்னை யாம் சொல்லுவோமா? நீ நகைத்தற்குரியாய். எப்படி அவ்வன்மை வரும் என்பையாயின் யாம் சொல்லுவோம் கேள்.

அசித்தல் - நகையாடுதல், பரிகாசம் செய்தல்.

அன்பினுக் கெளியவ னமல நாயகன்
வன்பினுக் கரியவன் மழவெள் ளேற்றினன்
தன்பதப் பணியினுல் சகம ளித்திடல்
என்பணி யயன்பணி யெடுத்த லாகுமே. 17

ஆங்கவன் பூசையா லணைவு ருப்பொருள்
ஓங்கிய வுலகினி லொன்று மில்லையால்
பாங்குற அவனடி பணிந்து போற்றுறின்
வீங்கிய சிருட்டிநீ விரைவின் மேவுதி. 18

வழிபடற் குரியநல் வரைப்பொ ருத்தலின்
அழிமதக் கலுழியு மலர்ந்த பூம்பொழில்
பொழிமதுக் கலுழியும் பொறிவண் டோம்புறும்
கழிசிறப் பிமவரை கடிதங் கேகென்ருன். 19

மாயவ னருடலை வைத்துத் தாழ்ந்தெழூஉம்
பாயசீர்த் தேனுவின் படர்ச்சி நோக்கினர்
மேயவோ கையினுளம் விளங்கி விண்ணவர்
போயின ரவரவர் புகலி டங்களின். 20

---

17. அன்புக்கு எளியவரும், வன்புக்கு அரியவருமான சிவபெருமான் கட்டளைப்படி உலகத்தைக் காத்தல் என் தொழில். உலகத்தைப் படைத்தல் பிரமன் தொழிலாம். மழ - இளமை.

18. அவனைப் பூசித்தலால் ஆகாத காரியம் உலகத்தில் ஒன்றுமேயில்லை. அவன் திருவடிகளை நன்ருகப் பணிந்து துதிப்பாயாயின், உயர்ந்த படைப்பு வன்மையை நீ விரைவில் எய்துவை.

19. நீ வழிபாடு செய்தற்கு உரிய நல்ல இடம், யானை மதத்தாலாகிய ஆறும், பொழில்கள் பொழிந்த தேனும் வண்டுகளைப் பாதுகாக்கும் சிறப்பு மிக்க இமயமலையாகும். அங்குச் செல் என்ருன்.

வரைப்பு + ஒருத்தல் எனப் பிரிக்க. வரைப்பு - இடம். ஒருத்தல் - யானை.

20. திருமாலின் திருவருளாணையைச் சிரமேற்ருங்கி வணங்கிக் காமதேனு வானுலகம் செல்வதைக் கண்டனர்; மகிழ்ச்சியால் உள்ளம் பூரித்தனர். தேவர்களும் அவரவர் இடங்களுக்குச் சென்றனர்.

வேறு

வழிக்கொளுங் காம தேனு மணியொடு கனகஞ் சிந்திச்
செழிக்கும்வெள் ளருவி யார்க்குஞ் சிமயஞ்சே ரிமய வெற்பின்
விழிக்கொளிர் சுடர்போ னிற்கும் விமலனை யுளத்தி லுன்னி
அழிக்குமைம் பொறிக ளோட வடுத்துமே லிவர்ந்த தன்றே. 21

ஆங்கொரு சூழல் வைகி யரும்புனல் திருத்த மாடி
விங்கிய வன்பு பொங்க வித்தகன் சரணம் பற்றி
நீங்கருந் தவங்க டேவ வருடமா யிரநி கழ்த்தத்
தேங்கிய கருணை வள்ளல் திருவுளக் கருணை கூர்ந்து. 22

மகதியாழ் முனிவ னீண்டு வருகென மதித்தா னன்னுன்
பகவனு ரருள்கொண் டுய்ப்பப் படர்ந்தன னிமய வெற்பில்
தகவினுற் றவத்தி னின்ற தடமருப் பாவை நோக்கிப்
புகரிலா முனிவ னுங்குப் போந்தெதிர் நின்ரு னன்றே. 23

கண்டது காம தேனுக் கரையிலா மகிழ்ச்சி பொங்கக்
கொண்டல்கண் டெழுந்த மஞ்ஞைக் குலமென வெழுந்து தாழ்ந்து
கண்டிரண் முத்தஞ் சிந்தக் கசிந்துள முருகி நின்றங்(கு)
அண்டரும் வணங்கும் வீணை யருந்தவற் குரைக்கு மாதோ. 24

---

21. செல்கின்ற காமதேனு மணிகளையும் பொன்னையும் சிந்திச் செழிப்பாக விளங்கும் அருவிகள் ஒலிக்கும் உச்சிகளையுடைய இமயமலையிலே கண்களுக்கு ஒளிதரும் சூரியனைப்போல நிற்கும் சிவபெருமானை மனத்தில் எண்ணி, ஐம்பொறிகளும் அகல இமயத்து உச்சியில் ஏறியது.

அழிக்கும் - வருத்தும். சிமயம் - கொடுமுடி. இவர்ந்தது - ஏறிற்று.

22. அங்கு ஓரிடத்தில் தங்கி, நீராடி அன்பு மிக இறைவன் திருவடிகளைத் துதித்து, தேவ வருடங்களில் ஆயிரமாண்டு தவஞ்செய்ய இறைவன் திருவருள் கூர்ந்து.

23. நாரதன் இங்கு வருக எனத் திருவுளங்கொண்டார். அவன் சிவனருளைப் பெற்றுய்ய இமயஞ்சார்ந்தான். தகுதியோடு தவஞ்செய்கின்ற காமதேனுவைக் கண்டு நாரதன் அங்கு வந்து அதன்முன் நின்ருன்.

மகதியாழ் - நாரதன் கையில் உள்ள யாழ். தடமருப்பு - பெரிய கொம்பு. புகர் - குற்றம்.

24. காமதேனு கண்டது. எல்லையற்ற மகிழ்ச்சிபொங்க மேகங்கண்ட மயில்போல எழுந்து வணங்கி, கண்ணீர்வார, மனமுருகி நின்று நாரதருக்குச் சொல்லும். அண்டர் - தேவர்கள்.

வேறு

அருந்த வர்க்கு ளருந்தவ னாய வருந்தவா
திருந்து தாமரை மேய திசைமுக னானவன்
இருந்த யோகி னிடையே யிருந்துயின் மேவலின்
வருந்தி வானவர் மாயனை யண்மவம் மாயவன் 25

படைக்க நீபனி மால்வரை மேவிப் பரமனார்
அடிக்க ணன்பு வழாமை யருந்தவ மாற்றென
விடுக்க விவ்வரை மேவி யிருந்தவ மேயினேன்
எடுக்குந் தேவ வருடமோ ராயிர மேகின. 26

இன்னு நாத னிருங்கரு ணைக்கிலக் காயிலேன்
என்ன வோகுறை யான்செய் தவத்தி னறிந்திலேன்
மன்னு பட்டிமை வல்லவ னாதலின் மாயவன்
சொன்ன தும்விளை யாடல்கொ லென்று துணிந்திலேன். 27

கயிர வத்துரை கண்ண னுரைத்தன னாயினும்
பயில ருந்தவர்க் கவ்வுழிப் பார்ப்பதி நாயகன்
செயிர றுத்துச்சிந் தித்தன யாவையுஞ் சேர்த்திடும்
புயனி கர்த்த கருணையு மென்னிடைப் பொய்க்குமோ. 28

---

25. தவச்சிரேட்டரே! பிரமன் யோக நிலையிலேயே துயில் கொள்ளுதலால், தேவர்கள் வருந்தித் திருமாலை அணுக அவர்.

26. படைப்புத் தொழிலை செய்வதற்காக நீ இமயமலை சென்று சிவபெருமானுடைய திருவடிக்கண் வைத்த அன்பு நீங்காமல் அரிய தவத்தைச்செய்க என்று கூறி அனுப்ப இம்மலையை அடைந்து ஆயிரம் தேவயாண்டு தவத்தைச் செய்கிறேன்.

27. இன்னும் சிவபெருமானுடைய திருவருள் கிட்டவில்லை! யான் செய்த தவத்தில் என்ன குறையோ! யான் அறிந்திலேன்; மாயவன் கள்ளம் உள்ளவனாதலின் அவன் சொன்னதும் விளையாட்டோ என்று துணிவு கொண்டிலேன்.

பட்டிமை - கள்ளம்.

28. செவ்வாம்பல் என்று உரைக்கத்தகும் கண்களையுடைய திருமால் சொன்னாலும், பார்வதி நாதனாகிய சிவபெருமான், தவம் புரிவோர்கட்குக் குற்றம் நீக்கி எண்ணிய எல்லாவற்றையும் அளிப்பன். அத்தகைய மேகம் போன்ற கருணை என்பால் மட்டும் பொய்யாகுமோ?

இன்ப மீதலிற் சங்கர னென்பரவ் விசனுர்
துன்ப மென்பாற் றுடைத்தில ஞலெனச் சொல்லெழீஇ
அன்பி ஞற்றெழு மாவினை நோக்கி யருந்தவன்
நின்பெ ருந்துயர் நீவுதி யென்று நிகழ்த்துமால். 29

தழுவி நீசெய் தவத்திற் குறையில தாயினும்
வழுவி லாக்குருக் காலமுந் தேயமும் வாலிதேல்
பழுதி லாத கருமம் விரைவிற் பயப்படும்
ஒழுக லாறிஃ(து) என்றலு மோதுஞ் சுரபியே. 30

நின்னின் மிக்க குருவெனக் கில்லைநின் ருண்மலர்
தன்னை யான்றெழு கால மிதற்குச் சமமிலை
இன்ன வெற்பி னிடமிக்க துண்டெனி லவ்விடை
மன்னி யான்செயும் வாய்மை யருளெனத் தாழ்ந்ததே. 31

தாழ்ந்த தேனுத் தழைப்பத் தவத்துயர் நாரதன்
வாழ்ந்த கண்ணருள் வைத்துத்தன் னெஞ்சிடை வள்ளியை
வீழ்ந்த கந்தனை யாதிபு ரேசனை மிக்குறீஇச்
சூழ்ந்து போற்றிச் சுதையென வோதத் தொடங்கினுன். 32

---

29. உலகத்திலே உயிர்களுக்கு இன்பந்தருவதால் அவனைச் சங்கரன் என்று சொல்லுவார்கள். அவர் என்பால் உள்ள துன்பத்தைப் போக்கிலர். எனச்சொல்லி அன்போடு தொழுத பசுவைப் பார்த்து, நாரதன் உன் துயரை ஒழி என்று சொல்லுவான்.

சம்+கரன் - இன்பம் செய்பவன். சொல் எழீஇ - சொல்லை எழுப்பி. நீவுதி - நீக்குவாயாக.

30. நீ தழுவிச்செய்த தவத்தில் குறைவில்லை; ஆயினும், குற்றமிலாத குருவும் காலமும் இடமும் தூயதாயின் விரைவில் பயன்தரும்; இதுதான் ஒழுகும் நெறி என்று நாரதன் கூறுதலும், காமதேனு சொல்லும்.

பழுதிலாத கருமம் - பாவமில்லாத நற்செயல்.

31. தேவரீரைவிடச் சிறந்த குரு எனக்கில்லை. நின் திருவடிகளைத் தொழுதற்குரிய காலமும் இதைவிடச் சிறந்தது ஒன்றுமில்லை. இந்த வெள்ளிமலையை விடச் சிறந்த இடமிருக்குமானல் அவ்விடத்தை அடைந்து யான் செய்ய வேண்டிய உண்மைகளையும் உபதேசித்தருள்க என்று வணங்கியது.

32. தவத்திற் சிறந்த நாரதமுனிவன் வணங்கிய காமதேனு மனமகிழ வாழ்வதற்கேற்ற கருணை நோக்கம் பாலித்து, தன் மனத்தில் வள்ளிமணாளனுகிய முருகனையும், ஆதிபுரிநாதரையும் மிக அடைந்து போற்றி வணங்கி அமுதம் போல மந்திரத்தைச் சொல்லத் தொடங்கினுன்.

வேறு

சுரபி யைந்தெழுத் தேயெனத் தொல்லைமா நிலத்தில்
பரவு மந்தண மாய்ப்பயில் கின்றது பணிந்து
விரவு தேவரு மேன்மைநா டரிதுமே வினர்க்குப்
புரவு பூண்பதா லாதிமா புரியெனும் வைப்பு. 33

சரத வந்நக ரெவ்வுழி யெனத்தள ரலைநீ
பரத கண்டத்திற் பசுந்தமிழ் நாட்டினிற் சைய
வரைத னக்குத்தென் றிசையினில் வளம்பயில் கொங்கென்
றுரைத னேடுய ரொருபெரு நாடுள ததனில். 34

மதுவ னத்தின்மேற் றிசைப்பொறி வண்டுபண் பாடும்
புதும லர்த்திரள் சுழித்தெழும் பொங்குகா வேரி
நதித னக்குத்தென் றிசையினும் பராவதி வடபால்
பதிவு கொண்டெழும் பவானியின் கீழ்த்திசை யுளதால். 35

செப்பு மந்நக ரெல்லைக டிசைதொறு நாடின்
ஒப்பு மூன்றியோ சனையுள வும்பரார் சூழவ்
வைப்பின் மேற்றிசை முடிவினி லிரசத வரையாய்
முப்பு ரங்களை யெரித்தருண் முதல்வனே யிருந்தான். 36

---

33. காமதேனு ஸ்ரீ பஞ்சாக்கரத்தை அடியேனுக்கு உபதேசித்தருள்க என வேண்டிக்கொள்ள, நாரதன் பழைமையான இந்தப் பூவுலகிலே, அனைவரும் பரவுகின்ற இரகசியமான மந்திரத்தைச் செபிக்கத்தக்க இடம், பணிந்து வசிக்கிற தேவர்களாலும் அறிதற்கரிய மேன்மையுடையது; வந்தடைந்தவர்களைப் பாது காப்பது; ஆதிபுரி என்னும் தலம்.

ஏய் என - இயைவிக்க (உபதேசிக்க) என. மந்தணம் - இரகசியம். புரவு - காத்தல்.

34. உறுதியான அந்நகர் எங்குளது என்று தளராதே! பரதகண்டத்திலே பைந்தமிழ் நாட்டிலே, குடகுமலைக்குத் தென்திசையிலே வளமிக்க கொங்கு நாடு என்று ஒரு நாடுள்ளது.

35. மதுவனத்தின் மேற்றிசையிலே, காவிரி நதிக்குத் தென்திசையிலே, ஆம்பராவதியாற்றின் வடதிசையிலே, பவானியின் கீழ்த்திசையிலேயுள்ளது ஆதிபுரி.

36. அந்நகரத்தின் எல்லைகளை யாராயின் மூன்று யோசனை பரப்புளது. தேவர்கள் வசிக்கும் இடமாகி அதன் மேற்றிசை முடிவிலே வெள்ளியங்கிரியிலே திரிபுர சங்காரமூர்த்தியாகிய பரமசிவனே வீற்றிருந்தான்.

அமல நாயகற் கேற்புற வவ்வரை வலப்பால்
விமல நாயகி விளங்குமே மாசல மானுள்
கமல னரணன் கண்ணுதல் வலமிடம் வரலான்
நிமிலன் பாலவர் தாமுநின் ருர்நெடுங் கிரியாய். 37

ஆர ணன்றனக் கருஞ்சிறை யிட்டவேற் கரத்தோன்
பூர ணன்றனக் கேற்புறத் தானுமோர் பொருப்பாய்
நார ணன்வரைக் கீழ்த்திசை நண்ணியவ் வரையில்
பார ணைந்தெழத் தனதிய லுருவொடும் பயின்ருன். 38

குழைகி ழித்தெழு கொடுங்கணை விழியவ ளரவின்
இழைய ணிந்தவ னயன்புவி யிடந்தவ னிவருந்
தழையுந் தத்தம தோங்கலிற் சகமெலா மிறைஞ்சி
விழைய வேறுமாய்த் தமதிய லுருவின்விற் றிருந்தார். 39

அந்த ரத்துளா ரனைவரு முனிவருஞ் சூரன்
வெந்தி றற்குளம் வெரீஇயர னருளினுன் மேவித்
தந்தம் பேரினுற் ருபித்த சிவலிங்க மனேகம்
பந்த நீக்குமவ் விரசதப் பறம்பிடை யுளவால். 40

---

37. சிவபெருமானுக்கு ஏற்ருற்போல அம்மலையின் வலப்பக்கத்திலே அம்மை ஏமாசலமாகி இருந்தாள். பிரமனும் திருமாலும் சிவபெருமானுக்கு வலப்பக்கமாகவும் இடப்பக்கமாவும் வருதலால் சிவபெருமான் பக்கலிலேயே அவர்களும் பெரிய மலையாய் நின்றனர்.

38. பிரமனைச் சிறைப்படுத்திய வேலாயுதக் குமரனும். சிவபெருமானுக்கு இயையத் தானும் ஒரு மலையாய், திருமால் மலைக்குக் கீழ்பால் அடைந்து, அம்மலையின் அடிவாரத்திலே தனது இயல்பான திருமேனியோடும் எழுந்தருளினர்.

ஆரணன் - வேத முதலாகிய சிவபெருமான். பூரணன் - நிறைவானவன்.

39. உமாதேவியாரும், சிவபெருமானும், பிரமனும், திருமாலும் தங்கள் தங்கள் மலையிலே உலகம் எல்லாம் வணங்கி விரும்பத் தத்தம் உருவோடு தனித் தனி விற்றிருந்தனர்.

அரவின் இழை - சர்ப்பாபரணம். புவியிடந்தவன் - பூமியை வராகமூர்த்தியாய்த் தோண்டிய திருமால். ஓங்கல் - மலை. விழைய - விரும்ப.

40. விண்ணுலகத்துள்ளவர்களும் சூரபன்மனுக்குப் பயந்து, சிவனருளால் வந்து, தத்தம் பேரினுல் தாபித்த சிவலிங்கம் பல உயிர்களின் கட்டையறுத்து விடுபேறு உதவும் அவ்வெள்ளியங்கிரியில் உள.

வெந்திறல் - கொடியவலிமை. வெரீஇ - அஞ்சி. பறம்பு - மலை.

அவற்று ளொன்றனை யகனுறத் தொழினுநாற் பயனும்
நிவப்ப வெய்துறு நியுதம்பன் முறைகங்கை மூழ்கி
உவப்பின் விச்சுவ நாதனைத் தொழவுறும் பயன்கள்
தவப்பொ ருந்துமச் சயிலத்தை யொருமுறை காணின். 41

பண்டு நற்றவம் பயிற்றிய மாதவர்க் கன்றிக்
கண்டி டப்படா தத்தகு கடவுண்மால் வரைதான்
அண்டர் நாயக னுகிய வவ்வரைப் பெருமை
கொண்டு ரைத்திடக் கூடுமோ வொருவர்க்குங் கூடா. 42

அனைய வோங்கலைத் தன்னிடத் தணிந்துமூ வுலகும்
நினைவின் வந்தனை புரிதர நிமலனுர்க் கிடமாய்த்
தனை நி கர்த்திடு மாதிமா புரியினைச் சார்ந்து
துனைய நின்விழை வெய்தெனச் சொற்றனன் மறைந்தான். 43

மகதி வீணையின் மாதவ னருளினை நோக்கிப்
புகலி லேற்கொரு புகலிடங் கிடைத்ததா லென்ன
அகம லர்ச்சியி னமரரா னருந்தவன் சரணந்
தகவ ணங்கியப் பனிவரை தணந்துசென் றன்றே. 44

---

41. அந்த மலைகளில் ஒன்றை மனம் ஈடுபட்டுத் தொழுதாலும் அறம் பொருள் இன்பம் வீடு என்ற நால்வகைப் பயன்களும் உளவாம். பல ஆயிரம் தடவை கங்கையில் மூழ்கி, விசுவநாதரை வழிபட்ட பயன், அம்மலையை ஒருமுறை காணின் மிகப்பொருந்துவதாம்.

நிவப்ப - மிக. நியுதம் - பேரெண். தவ - மிக.

42. முன்பு தவஞ்செய்த பெருந்தவத்தினர்க்கன்றி அம்மலைக் காணவும் முடியாது. தேவதேவனுகிய சிவபெருமானே ஆன அம்மலையின் பெருமையைச் சொல்ல இயலுமோ? ஒருவராலும் இயலாது.

43. அத்தகைய வெள்ளியங்கிரியைத் தன்னிடம் உடையதாய், மூன்று உலகத்தானும் தியானிக்கப் படுகின்ற - சிவபெருமானுக்கு இடமான - தனக்குத் தானே ஒத்த ஆதிபுரியை அடைந்து விரைவாக உன் விருப்பத்தைப் பெறுவாயாக எனச் சொல்லி நாரதன் மறைந்தான்.

துனைய - விரைய. விழைவு - விருப்பம்.

44. நாரதன் அருளைக்கண்டு, அடைக்கலமாக அடையும் இடம் இல்லாத எனக்கு அத்தகைய ஓரிடம் கிடைத்தது என்று மன மகிழ்ச்சியோடு நாரதன் திருவடிகளை வணங்கி, இமயமலையை விட்டகன்றது.

புகல் - அடைக்கலத்தானம்.

உயர்ந்த சையமால் வரையினை யடுத்தவ ணொழிந்து
வியந்து விண்ணவர் போற்றுறும் வெள்ளியங் கிரியை
நயந்த டுத்தது நறும்பயஞ் செருத்தனின் றூறிப்
பயந்த கன்றினை யூட்டியுட் பரிவுசெய் சுரபி. 45

வேறு

குருமலி நவமணியின் குவடுகள் பலநின்ற
மருவுசிந் தாமணியின் வளத்தன வுலமெல்லாம்
தருவென மரமெல்லாந் தழையொளி யிழைதருவ
கருவளர் கொடியெல்லாங் காமர்வல் லியின்வாய்ந்த. 46

கற்சுனை நறும்போதுங் காமர்நீர் தவழ்வனவும்
விற்செறி யிருநிதியின் மேதக விளங்கினவால்
பொற்சிதர் ஞெமிர்சாரல் புல்லிய மிருகமெலாம்
நற்செயல் வளர்காம தேனுவி னண்ணினவே. 47

எங்கணுந் தேவர்குழா மெங்கணு மரம்பையர்கள்
எங்கணு மிருடியர்க ளெங்கணு மகம்புரிதல்
எங்கணும் விம்மிதங்க ளெங்கணும் பெருவளங்கள்
எங்கணு மெழிற்குகைக ளெங்கணு மினியனவே. 48

---

45. நல்ல பால் மடியில் சுரந்து கன்றுக்கு ஊட்டி அன்பு செய்கின்ற காமதேனு குடகுமலையை அடைந்து அதைவிட்டு நீங்கி, தேவர்கள் வியந்து துதிக்கும் வெள்ளியங்கிரியை விரும்பி வந்து அடைந்தது.

சையமால்வரை - குடகு. செருத்தல் - மடி. பரிவு - அன்பு. கன்றுக்குப் பாலூட்டி மகிழவேண்டிய காமதேனு, கன்றைப் பிரிந்து கடவுளை விரும்பி வந்து சேர்ந்தது என்ற நயம்தோன்ற நிற்றல் காண்க.

46. நிறம் மலிந்த நவரத்தினங்களாகிய சிகரங்கள் பல நின்றன. கற்கள் அனைத்தும் சிந்தாமணியைப்போல வளம் பயப்பனவாம். மரங்கள் அனைத்தும் கற்பகதருக்களைப்போல மிக்க ஒளியை இழைய விடுவன. பெருமை வளருகின்ற கொடிகள் எல்லாம் காமர்வல்லியைப்போல வாய்ந்தன. காமர்வல்லி - கற்பக விருட்சத்தின்மேல் படரும் கொடி.

47. கல்லிலுள்ள சுனைகளிற் பூத்துள்ள மலர்களும், அழகிய நீரில் தவழ்கின்ற சங்குகளும், ஒளிமிக்க சங்கநிதி பதுமநிதியாகிய இரண்டு செல்வங்களைப் போல விளங்கின. பொன்துகள் சிதறிக்கிடக்கின்ற நிறைந்த மலைச்சாரலில் உள்ள விலங்குகள்யாவும் நன்மையான புண்ணிய கன்மங்களையே செய்யும் காமதேனுவைப் போன்று வசித்தன. வில் - ஒளி.

48. எங்கும் தேவர்கூட்டங்களும், அரம்பையர்களும், முனிவர்களும், யாகம் செய்தலும், வியத்தக்க காரியங்களும், பெரிய வளப்பங்களும், அழகிய குகைகளும் இனியவாக விளங்குவன.

அருவியின் குலமொருபா லலர்மடுத் திரளொருபால்
இருவியி னிலனொருபா லேனலின் புனமொருபால்
செருவினை வேடொருபால் தேன்முரல் வனவொருபால்
கருமுகில் தவழ்வொருபால் களிமயி லகவொருபால். 49

மும்மதக் களிவேழ மூடிய விருளத்துச்
செம்மணிக் குகையுள்ளால் சேவகங் கொண்டொழிந்து
சும்மைகொண் டொளிர்கிரணச் சோதியைத் தழலென்று
இம்மென வீமனைப்போ லினத்தொடு மிரிவனவால். 50

சோதிசெய் மரமந்தி துன்னுபு துயில்கூர்ந்து
பாதியி னிரவெல்லைப் பசுமயில் கண்மலர்ந்துக்
காதிய தழல்வந்து கதுவிய தெனவோடிப்
போதியல் சந்தானப் பொதும்பர்புக் குறைவனவே. 51

நஞ்சென வறியாது நளிர்மடுப் புனல்பருகித்
துஞ்சிய யூகத்தைத் துணையது விரையப்போய்க்
கஞ்சமொ டொளிர்கின்ற கற்சுனை யமிழ்தத்தைப்
பஞ்சியிற் றோய்த்தூட்டிப் பருவர லொழிவனவே. 52

---

49. அருவிக்கூட்டங்கள் ஒருபால்; நீர்மடுக்களின் கூட்டம் ஒருபால்; தினைப்புனம் ஒருபால்; தாளரிக்கூட்டம் ஒருபால்; போர்த்தொழில் புரியும் வேடர் ஒருபால்; வண்டுகள் ஒலிப்பன ஒருபால்; கார்மேகங்கள் தவழ்வன ஒருபால்; களிப்புடன் கூடிய மயில்களின் அகவும் ஒலி ஒருபால்.

50. மதங்கொண்டயானை மூடிய இருளில், சிவந்த மாணிக்கக் குகையில் படுக்கையைவிட்டு நீங்கி, தொகுதியாகி விளங்குகின்ற கிரண ஒளியைத் தீ என்று கருதி, இம்மென்று விரைவாக, வீமசேனனைப்போலத் தம் சுற்றத்தோடும் ஓடுவன.

அரக்கு மாளிகை தீப்பற்றியகாலத்து வீமசேனன் தம் சகோதரர்களைத் தூக்கிக்கொண்டு அரக்கு மாளிகையைவிட்டு ஓடியதுபோலச் செம்மணிக்குகையில் சேவகங்கொண்ட யானை குகை தீப்பிடித்ததாக எண்ணிச் சுற்றத்தோடும் ஓடிற்று என உவமையும் பொருளும் இயையக்கொள்க.

51. பசிய மயில்கள் அந்திக்காலத்துச் சோதி மரத்தையடைந்து தூங்கிப் பாதி இரவில் விழித்து, 'நம்மை அழிக்கத் தீ வந்து பரவிவிட்டதே' என்று ஓடிப் பூத்துள்ள சந்தான மரச்சோலையில் புகுந்து ஒளிந்தன.

அந்தி - மாலைக்காலம். துன்னுபு - பொருந்தி. காதிய - அழிக்க. சந்தானம் - தேவவிருட்சங்களில் ஒன்று. பொதும்பர் - சோலை.

52. நஞ்சென்று அறியாமல் குளிர்ச்சியான மடுத்தண்ணீரைப் பருகி இறந்த கருங்குரங்கை, அதன் துணையான பெண் குரங்கு விரைந்துசென்று,

பளிக்குக்குன் றருகண்மிப் பயிரவு மணைகில்லாக்
கிளிக்குறு துனிநீவக் கெழுமியங் குறுசேவல்
ஒளிக்கவி னிழனேக்கி யுதுவென முயங்குற்று
வெளிக்கணின் றதுநீங்க வேறுபட் டலமருமே. 53

இன்னன வளமெல்லா மிமையவர் பசுநோக்கித்
துன்னிய மகிழ்தூங்கித் தோடவி ழலருந்தி
முன்னுறு நதிக்காஞ்சி முரிதிரைப் புனலாடி
மன்னுறு கடனெல்லா மரபுளி முடித்தன்றே. 54

வேறு

சீரேந்து தன்னிடத்தில் திகழ்ந்த வைந்து பொருளோடும்
பாரேந்து பலபொருளும் பல்க வமைத்துக் கொண்டண்மி
நீரேந்து சடைமுடியி னிமல னுரை வழிபட்டுக்
காரேந்து மவ்வரையில் சிலநாள் கழிய வதிந்ததே. 55

தாமரைகள் பூத்து விளங்குகின்ற மலையிலே சுனையின்கண் உள்ள அமுதத்தைப் பஞ்சில் தோய்த்து உண்பித்து உயிர்ப்பித்துத் துன்பம் நீங்கிற்று.

யூகம் - கருங்குரங்கு. கஞ்சம் - தாமரை. பருவரல் - துன்பம்.

53. பளிங்குமலையின் பக்கத்தை அணுகிப் புணர்ச்சிக்காக அழைக்கவும், வந்துசேராத பெண்கிளிக்கு உற்ற ஊடலைப் போக்க அணுகிவந்த ஆண்கிளி, ஒளியிலே தெரிகின்ற அழகிய கிளியின் நிழலைப்பார்த்து கிளியென்றே மயங்கிப் புணர்ந்து பறந்துபோக வெளியிலே நின்று பெண்கிளி வேறுபட்டுத் துன்புறும்.

அண்மி - அணுகி. பயிர்தல் - பெண்பறவையை ஆண்பறவைப் புணர்ச்சிக்காக அழைக்கும் ஒலி. துனி - ஊடல். கவின் - அழகு. அலமரும் - வருந்தும்.

54. இத்தகைய சிறப்பெல்லாவற்றையும் காமதேனு கண்டு, நிறைந்த மகிழ்ச்சிகொண்டு காஞ்சிநதியில் நீராடி, நாட்கடன்கள் அனைத்தையும் முறைப்படி முடித்தது.

உந்தி - செலுத்தி. முரிதிரை - மடங்கி விழ்கிற அலை. மரபுளி - முறைப்படி.

55. காமதேனு தன்னிடம் உள்ள பஞ்சகவ்வியமாகிய ஐந்துபொருளோடும், பூமியின்கண் உள்ள பலவகையான பொருள்களையும் நிரம்பத் தேடியமைத்துக்கொண்டு ஆலயத்தை அடைந்து, சிவபெருமானைப் பூசித்து, மேகங்களைத் தாங்கிய அம்மலையில் சில நாட்கள் தங்கியது.

வேறு

வரைநீ ளுச்சி தனின்முளைத்த மணிமா லிங்க மைந்தோடுங்
கரைநீர்க் காஞ்சி யிருமருங்குங் காழி லமரர் தாபித்த
புரைதீ ரிலிங்கம் பற்பலவும் பூசித் திருந்த கடவுளான்
தரைசேர் போதி வனத்திறைவன் தன்னைப் பணிய வெழுந்ததே. 56

வேறு

மணிவாரிப் பொன்கொழித்து மலர்க ளுந்தித் தேன்விராய்
அணியாரத் தவழ்ந்தேகு மருநீர்க் காஞ்சி மருங்கூடு
தணியாத விழைவோடுஞ் சாருங் காம தேனுத்தான்
துணியார்சோ மன்வழிபட் டசோமே சரைப்பூ சித்ததே. 57

வேறு

என்ற வெல்லை சூதனை யிருந்த வர்வ ணங்குபு
நன்று சோமன் வார்குழ னங்கை பாக னூர்தமைச்
சென்றுபூசை செய்தவேது செப்பு கென்ன வன்னவன்
ஒன்று மன்பி னுள்ளக முவந்த வர்க்கு ரைக்குமால். 58

வேறு

முதலு கத்தினின் முளரி மேலவன்
புதல்வன் றக்கன்பூத் தனைஞ் ஞூற்றுவர்
குதலை வாய்மொழிக் கொம்ப னூர்களைச்
சுதைநி கர்த்தவத் தோகை மாரினுள். 59

---

56. மலையுச்சியிலுள்ள அரதனலிங்கங்கள் ஐந்தோடும், காஞ்சி நதிக் கரையில் தேவர்கள் தாபித்து வணங்கிய சிவலிங்கங்கள் பலவற்றையும் பூசித்து வாழ்ந்த காமதேனு அரசவனத்திலே உள்ள சிவபெருமானையும் பூசிக்க விரும்பிப் புறப்பட்டது. புரை - குற்றம். காழ் - பகைமை, குற்றம்.

57. நவமணிகளையும் அடித்துக்கொண்டு, பொன்னை இருகரை மருங்கும் கொழித்து ஒதுக்கி, பூக்களை அடித்துக்கொண்டு வருகின்ற நீரோடுகூடிய காஞ்சி நதியின் கரைமீது தணியாத அன்போடு வரும் காமதேனு சந்திரன் வழிபட்ட சோமநாதரைப் பூசித்தது.

58. என்றபோது முனிவர்கள் சூதனை வணங்கிச் சந்திரன் இறைவனைப் பூசித்த வரலாற்றைச் சொல்லுக என வேண்டச் சூதன் மனமகிழ்ந்து அன்போடு அவர்களுக்கு உரைப்பான்.

59. முதல் யுகமாகிய கிருதயுகத்தில் பிரமன் மகனாகிய தக்கன் ஐந்நூறு பெண்களைப் பெற்றான். அவர்களுள்.

எழுவர் கூடிய விருப தின்மரென்
றெழுகு தாரகை யொண்க ணூர்தமைக்
குழுமி விண்ணவர் குதுக லங்கொள
முழும திக்குநூன் முறையி னீந்தனன். 60

பங்க யத்தனும் பதினைந் தென்றுசொற்
பொங்கெ ழிற்றிதிப் பூவை மார்தமைத்
திங்க ளுக்குறச் சேர்த்தி னனவர்
தங்க ளன்பனுய்த் தருக்கி வாழுநாள். 61

மன்ற லங்குழன் மாது ரோகிணி
பொன்ற யங்குதோட் புணர்ச்சி யேவிழைந்(து)
ஒன்ற வேனையோ ரோர்ந்து தேய்கநீ
என்று சாபமங் கிறுத்திட் டாரரோ. 62

அலங்கு பைங்கதி ரமர னத்திரி
நலங்கொள் சேவடி நண்ணித் தாழ்ந்தனன்
வலங்கொள் சாபத்தின் வரவு சொற்றனன்
இலங்க ருந்தவ னேவ வேகினன். 63

முளரி - தாமரை. குதலை - சொல் நிரம்பாது பொருள் நிறைந்த சொல். சுதை = அமுதம்.

60. இருபத்தேழு நட்சத்திரங்களாகிய பெண்களைத் தேவர் மகிழச் சந்திரனுக்கு மணம்புரிந்து கொடுத்தான்.

தாரகை - நட்சத்திரம்.

61. பிரமன் பதினைந்து திதிகளாகின்ற பெண்களைச் சந்திரனுக்கு மணம் புரிந்து கொடுத்தான். அவர்கள் அன்பனாக அவன் தருக்கி வாழுங்காலத்தில்.

திதி பதினைந்து - பிரதமை முதலியன. பூவைமார் - பெண்கள்.

62. சந்திரன் அவர்களுள் ரோகிணியோடு புணர்தலையே விரும்பி அவளோடு ஒன்றியிருக்க, மற்றைய திதிகளும் நட்சத்திரங்களுமாகிய பெண்கள் நீ தேய்ந்துபோக என்று சாபம் இட்டார்கள்.

மன்றல் - மணம். தயங்கு - விளங்குகின்ற. ஏன்ற - கூடியிருக்க.

63. சந்திரன் அத்திரிமகரிஷியை வணங்கித் தனக்குச் சாபம் வந்த வரலாற்றை அறிவித்தான். அம்முனிவன் ஏவ, மலைச்சாரலை அடைந்தான்.

குலிங்க ராதியோர் குறுகி யேத்துமப்
புலிங்கத் தீக்கையான் பொருப்பின் சாரலில்
இலிங்க நூன்முறை யிருவிப் போற்றினன்
கலிங்கத் தோலினன் கதழ்வின் முன்னுறீஇ. 64

மாத ராரிடும் வலிய சாபமன்
போத முற்றுதல் புல்லு ருதுகாண்
ஆத லாலுட லல்கி மல்குகென்(று)
ஏத நீங்கவீர்ஞ் சடையி னேற்றினன். 65

அற்றந் தீர்தர வமல நாயகன்
கற்றைச் செஞ்சடை காணி பெற்றிடும்
வெற்ற வெண்மதி வெள்ளி வெற்பின்மேல்
உற்ற வேலையவ் வோங்கல் காண்பவர். 66

அலக்கண் முற்றுநீத் தாயுண் மல்குற
விலக்க ணத்தம ரினிய மாதரும்
நலக்கு மைந்தரு நவையில் செல்வமுங்
குலக்க டும்பொடுங் குழுமி வாழ்வரால். 67

---

64. குலிங்கர் முதலானோர் வந்து வணங்கும் கயிலைமலைச் சாரலில் ஆகம விதிப்படிச் சிவலிங்கம் ஒன்றைத் தாபித்து வணங்கினன். புலித்தோல் ஆடை அணிந்த இறைவன் அவன்முன் விரைந்து தோன்றி;

புலிங்கத்தீ - பொறிகளோடுகூடிய தீ. இருவி - தாபித்து. கலிங்கம் - ஆடை. கதழ்வின் - விரைவாக.

65. 'பெண்களிட்ட கொடிய சாபம் மிகவும் வந்தடையாது' என்று தன் சடையின்மேல் தாங்கினன்.

போத - மிகவும். அல்கி - தங்கி. மல்குக - வளர்ச்சியடைக. ஏதம் - துன்பம்.

66. துன்பம் நீங்க இறைவனது செஞ்சடையில் இடம்பெற்ற வெண்மதி கயிலை மலைமீது காட்சி அளித்தபோது அம்மலையைப் பார்ப்பவர்கள்;

அற்றம் - துன்பம். காணி - இடம்.

67. துன்பம் நீங்கி ஆயுள் மிக, அழகிய மனைவிமார்களையும், நல்லபிள்ளைகளையும், குற்றமில்லாத செல்வத்தையும், கூட்டமான சுற்றத்தையும் பெற்று வாழ்வார்கள்.

அலக்கண் - துன்பம். மல்குற - நிறைய. இலக்கணம் - அழகு; மகளிர்க்குரிய அறுபத்துநான்கு இலக்கணங்களுமாம். நவை - குற்றம். கடும்பு - சுற்றம்.

தாம வாண்மதி தாழ்ந்து போற்றிய
சோம நாதனர் மேன்மை சொற்றனம்
காம தேனுவக் கடவு ளார்தமை
ஏம மல்குற வினிது தாழ்ந்தபின். 68

வேறு

கொங்கணே சுரரே யிராக்கதே சுரர்சீர் குலவனந் தேசுரர் வாய்மை
தங்கிய வாகீ சுரரகத் தீசர் தக்ககா ளீசுரர் தீர
எங்கணும் வளர்வேத் திரவனே சுரர்வி ரேசரின் பருள்விசா கேசர்
துங்கமார் சாந்தா கேசுரர் தாலே சுரரையுந் தொழுதுதாழ்ந் ததுவே. 69

நயக்குமூ லேச ரிந்திரே சுரர்நா கேசுரர் காலவே சுரர்நோய்த்
துயக்கறும் வசிட்டே சுரர்வாம தேவே சுரர்காசி பேசர்தொல் வினையைப்
புயக்குநற் சனகே சுரர்புகழ் புலத்தி யேசர்பாற் கரேசர்புத் தேளிர்
வியக்கும்வண் பார்க்க வேசர்தம் பதமும் விதியுளி தொடர்ந்துபோற் றியதே.

இடர்கெடுத் தருளு மங்கியீ சுரரே மேசுரர் நாரதே சுரர்நாற்
புடவியும் வணங்குந் தில்லைவ னேசர் பூங்கழற் பாதமு மேத்தி
விடபம்விண் டுழாவும் போதியங் கானின் விரிநிழ லகத்துற மேவி
அடர்பெரு வளமு மதிசயம் பலவு மவ்வயி னெடிதுநோக் கியதே. 71

எங்கணு முப்பத் திரண்டிலக் கணத்தி னிலிங்கமோ பலவுள வெங்கும்
அங்கணர் பூசைக் குரியபல் லிடமு மமைந்துள வாதலின் யாங்குத்
தங்கிநா மெந்த விலிங்கத்தி லாரா தனைபுரி வாமென வயிர்த்துப்
புங்கவர் சுரபி நிற்பவா னுடு பொலிந்ததா லசரிரி வாக்கு. 72

---

68. சந்திரன் வழிபாடுசெய்த சோமநாதருடைய பெருமையைச் சொன்னோம். அச்சோமநாதரைக் காமதேனுவும் இன்பம் பெருக வணங்கியபின்.

தாமம் - மாலை; ஈண்டு வரிசையாம். ஏமம் - இன்பம்.

69. கொங்கணேசுரர் முதலான பதினொரு பெருமான்களையும் காமதேனு வணங்கியது. வேத்திர வனம் - பிரப்பங்காடு.

70. அங்ஙனமே மூலேசுரர் முதலாகப் பதினொரு பேரையும் வணங்கிற்று. துயக்கு - கட்டு. புயக்கும் - நீக்கும்.

71. இடர்கெட அருளும் அக்கினிசுரர் முதலாக நால்வர் பாதங்களையும் வணங்கிக் கிளைகள் ஆகாயத்தை அளாவுகின்ற அரச வனத்திலே அதன் நிழலில் இருந்து பல வளங்களையும், அதிசயங்களையும் மிக நன்ருகப் பார்த்தது.

72. எங்கும் முப்பத்திரண்டிலக்கணங்களோடு கூடிய இலிங்கங்கள் உள்ளன. எங்கும் இறைவனை பூசித்தற்குரிய இடங்கள் அமைந்துள்ளன. நாம் எங்கு

வேறு

விண்ணிடை வாழும் பசுவே நின்னையம் விடுதிகண்டாய்
ஒண்ணிற வாண்மதி சூடிய நாதற் குரியதலம்
மண்ணிடை யீதன்றி வேறின்மை யோர்ந்துயர் மாதவரும்
எண்ணுறு தேவரு மென்று மிவணிருக் கின்றனரே. 73

தணவாமை யீண்டு வதிதலை வேட்டுத்தண் மாமலரோன்
பணவா ளரவிற் றுயில்வோன் கணிச்சிப் படையவனும்
மணமாரும் போதி வனத்திடை யேவளர்ந் தண்டமளாய்
இணரா ரரச மரமா யிருந்தன ரின்புறவே. 74

மூவரு மாகிய போதியின் மேற்றிசை மொய்க்கனக
மாவரை மேவிய நாவ லிறத்தன் மறுத்திருப்ப
மேவர வேற்றுரு வாயிருக் கின்றது வேதமொடு
தேவரு நாடருந் தேவன் றிருவருள் செய்திடவே. 75

எந்த இலிங்கத்தைப் பூசிப்போம் என ஐயுற்றுக் காமதேனு நிற்க, ஆகாயத்திலே அசரீரி வாக்கு எழுந்தது.

அங்கணர் - சிவபெருமான். அயிர்த்து - ஐயுற்று. புங்கவர் சுரபி - உயர்ந்த தேவர் பசுவாகிய காமதேனு.

73. விண்ணுலகில் வாழும் பசுவே! நின் சந்தேகத்தை ஒழி. சிவபெருமானுக்குரிய தலம் மண்ணுலகில் இதுவன்றி வேறில்லாமையைத் தெளிந்து உயர்ந்த முனிவர்களும், கணக்கற்ற தேவர்களும் என்றும் இங்கே வசிக்கின்றார்கள்.

கண்டாய் - முன்னிலையசைச்சொல்.

74. நீங்காமல் இங்கு வசித்தலை விரும்பிப் பிரமனும், படத்தோடுகூடிய ஆதிசேடன்மேல் தூங்கும் திருமாலும், மழுவாயுதந் தரித்த உருத்திரனும் ஆகிய மூவரும், மணம் நிறைந்த அரசவனத்தில் வந்து, அரசமரமாய் வானளாவ வளர்ந்திருந்தனர்.

தணவாமை - நீங்காமல். பணம் - படம். கணிச்சி - மழுப்படை. இணர் - பூங்கொத்து.

75. முத்தேவர் வடிவான அரசமரத்தின் மேற்றிசையிலே, மேருமலையில் இருக்கின்ற நாவல்மரம், மகாதேவன் திருவருளைச்செய்ய, சாதலை மறுத்து வேறு வடிவாக விளங்குகின்றது.

கனகமாவரை - மேருமலை.

பாவலர் போற்ற வளர்பாரி சாதம் பலாமரந்தண்
பூவலர் மாவுஞ் சித்தே சமரமு மெனப்பொலியும்
நாவலர் போற்றிட நான்குகந் தம்மினு நாவலது
ஓவில தாகி யுகமொரு நான்கு முறுந்தோறுமே. 76

கலியிடை யீசன் திருவரு ளாற்சித்துக் கைக்கொளலான்
ஒலிமலர்ப் பன்னீர் மரமென வையக மோதுவது
நலிதலில் லாதசித் தேச மரமெனு நாமமுறு
ஞெலிதழன் மாதவர் நீக்க முருவிந் நெடுவனத்தே. 77

அன்னணம் வேற்றுரு வாகிய நாவற் கணியிடத்தே
மன்னிய பேரரு ளானுதி லிங்கம் வயங்கியதான்
முன்னொரு நாள்விந்த மால்வரை யண்ட முகட்டளவுந்
துன்னுத னோக்கி வடவரை நாணித் துளங்கியதே. 78

இதனெக் கழுத்த மிறுப்பதெவ் வாறென் றினைந்துநிற்ப
மதனெக் கழுத்த மிறுத்த பிரான்மது வார்கமலப்
பதமிக் கழுத்துங் கருத்துடை நாரதன் பார்த்தணவி
யதனெக் கழுத்த மறுமா றுரைப்ப வெழுந்ததுவே. 79

---

76. அந்நாவல்மரம், பாரிசாதம் பலாமரம் மாமரம் சித்தேசமரம் என்ற நான்காக நான்கு யுகங்களிலும் இடைவிடாது பொருந்தும்.

77. கடைந்த தீயையுடைய முனிவர்கள் நீங்காத இந்தப் பெரியவனத்தில் தழைத்த மலர்களோடுகூடிய பன்னீர்மரம் என உலகத்தாரால் சொல்லப்படுவது, ஈசன் திருவருளால் கலியுகத்தில் சித்துக்களைக் கைக்கொள்வதால், சித்தேசமரம் எனப்பெயர் பெறும்.

ஒலிமலர் - தழைத்த பூக்கள். ஞெலிதழல் - தீக்கடைகோலால் கடையப்பட்ட தீ.

78. அவ்வண்ணம் வேற்றுருவம் பெற்ற நாவல் மரத்திற்கு அணிமையில், ஆதிலிங்கப் பெருமான் விளங்கினர். முன்னொருக்கால், விந்தியாசலம் அண்ட முகட்டளவும் சென்று உயர்ந்ததை நோக்கி, இமயம் வெட்கி நடுங்கியது.

79. இதன்செருக்கை அடக்குவதெங்ஙனம் என்று வருந்த, சிவபெருமானுடைய தேனொழுகும் தாமரை மலர்போன்ற திருவடிகளையே மிக நெஞ்சத்து அழுந்துகின்ற கருத்தினையுடைய நாரதன் கண்டு அதன் கர்வம் அடங்குமாறு உபதேசிக்க இமயம் எழுந்தது.

ஏக்கழுத்தம் என்பது சந்தம்நோக்கி எக்கழுத்தமாயிற்று; செருக்கு என்பது பொருள். இனைந்து - வருந்தி. அணவி - கலந்து.

ஈண்டோர் கணத்தி லணைந்துவன் மீகமெனப்பொலிந்து
தூண்டா விளக்கன்ன சோதியைத் தன்னகத் தேநிறுவி
நீண்டானுங் காண்பரி தாகப் பொதிந்துநிற் கின்றதிதோ
காண்டாரை யாக நறும்பால் சொரிமடிக் காமர்பெண்ணே. 80

இந்தவன் மீகத் திடைநறும் பால்பொழிந் தேத்துதிநீ
சிந்தையில் வேட்டது பொள்ளென முற்றுறுந் தேனுநின்பால்
வந்திடு மாறுமவ் வாறில் வருஞ்செந்நெ லாதியுங்கொண்
டந்தணர்க் கீந்துல கின்புறி னீயுய்தற் கையமுண்டே. 81

வேறு

என்று வானி லெழுந்த வாக்கொ டிடக்க ணுட விரிச்சியும்
நன்றெ ழுந்தது நோக்கி நோக்கி நயந்து வாய்மை நவிற்றிய
வென்ற வைம்பொறி யானை யுன்னி வியந்து வாழ்ந்தன மென்றவண்
நின்ற தேனு நடந்து காஞ்சியி னீர்ப டிந்துப டர்ந்ததே. 82

காத ரம்பல காவ தங்கள் கடந்தி ருப்பமுக் கண்ணனுர்
ஆத ரம்பெரி துந்த னக்கணித் தாக வன்பு தழீஇக்கொடு
நாத னுருரு மூடு புற்றி னயந்து பான்முலை விம்முறப்
போத வாட்டி மகிழ்ந்து பூசை புரிந்த ருந்தவ மேயதே. 83

---

80. தாரையாகப் பால்சொரியும் மடியையுடைய காமதேனு என்னும் பெண்ணே! இத்தலத்தில் ஒருகணத்தில் வந்து புற்றுப்போலவிளங்கித் தூண்டா விளக்கினைஒத்த சிவச்சோதியைத் தன்னுள் அடக்கி, திருமாலும் காண அரிதாக இதோ நிற்கின்றது. இதனைக்காண். நீண்டான் -திரிவிக்கிரமாவதாரத்தில் மிக உயர்ந்தவனாகிய திருமால்.

81. காமதேனுவே! இந்தப்புற்றில் பாலைச்சொரிந்து நீ வழிபாடுசெய். மனத்தில் விரும்பியது விரைந்து நிறைவேறும். உன்னிடம் உண்டாகும் பால், தயிர், மோர், நெய், கோசலம், கோமயம் என்னும் ஆறையும், அவற்றால் உண்டாகும் செந்நெல் முதலியவற்றையுங் கொண்டு, அந்தணர்க்குத் தானஞ்செய்து உலகம் இன்புறுமாயின் நீ உய்வதற்கு ஐயமுண்டோ? இல்லை.

82. என்று இவ்வாறு ஆகாயத்தில் எழுந்த அசரீரியோடு இடக்கண்ணும் துடிக்க, பக்கச்சொல்லும் நன்றாக, அதனைக்கண்டு, வியந்து, இவ்வுண்மையை உணர்த்தியவரும் இயல்பாகவே ஐம்பொறிகளும் அடங்கியவரும் ஆன சிவபெருமானையும் வணங்கி வாழ்ந்தோம் என்று அங்குநின்ற காமதேனு காஞ்சி ஆற்றுக்குச்சென்று நீராடி வந்தது.

விரிச்சி - பக்கத்தில் போவார் வருவார் பேசும் பேச்சு. அது நல்லதாக இருத்தலும் ஒரு சகுனமாதலின் அதனையுங்கேட்டு வியந்தது என்பதாம்.

83. மலை வெகுதூரம் கடந்திருப்பினும் சிவனிடம்வைத்த அன்பு தனக்கு மிக அணிமையில் இருந்ததால், அன்பு கொண்டு, சிவபெருமான் திருமேனியை

நிச்ச நிச்சமிவ் வாறு பூசை நிகழ்த்தி யும்பர்த மாண்டுகள்
எச்ச மின்றியோ ராயி ரஞ்செல வெய்த ருந்தவ மேயதால்
பொச்ச மின்றி யெழுந்த வன்பு புகுந்து ருக்கநெ கிழ்ந்துள
நச்சி நச்சி நறுங்க ணீருக நன்னெ றிப்படு தேனுவே. 84

கற்ற கல்வியி னும்ப யன்கரு தார்பு ரங்கன லூட்டிய
கொற்ற வில்லியை யேத்த லென்று குறித்த வாய்மையி னந்தணீர்
பெற்றம் வந்தனை செய்த வாறிது பிஞ்ஞு கன்குளப் புச்சுவ
டுற்ற வாறினி யோது வாமென் றுரைக்க லுற்றனன் சூதனே. 85

காமதேனு வழிபடுபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 503

மூடியுள்ள புற்றில் விரும்பி, மடிசுரந்துவிம்மப் பாலைப்பொழிந்து திருமஞ்சனம் செய்வித்து, மகிழ்ந்து பூசை செய்தது.

84. வஞ்சகமின்றி விளைந்த அன்பு மனத்தையுருக்க விரும்பிக் கண்ணீர் சிந்த நல்வழியிற் சார்ந்த காமதேனு நாள்தோறும் இவ்வண்ணம் பூசைசெய்து வரத் தேவ வருடங்கள் ஆயிரம் சென்றன. பசு பிறரால் எய்துதற்கு அரிய தவத்தைப் பொருந்தியது.

பொச்சம் - பொய். எச்சமின்றி - குறைவு இல்லாமல். நச்சி - விரும்பி.

85. முனிவர்களே! 'கற்றதனுல் ஆய பயன் சிவபெருமானை வழிபடுதலே' என்று காமதேனு சிவபூசை செய்த வரலாறு இதுவாம். சிவபெருமான் குளம்பு அடையாளம் பெற்ற வரலாற்றைச் சொல்லுவோம் என்று சூதர் சொல்லத் தொடங்கினர்.

கருதார் - சிவனை எண்ணுதவர்களாகிய திரிபுர அசுரர்கள். கொற்ற வில்லி - வெற்றிதரும் வில்லை ஏந்திய சிவபெருமான். பெற்றம் - பசு. பிஞ்ஞகன் - சிவன்.

ஒன்பதாவது

குழகன் குளப்புச் சுவடுற்றபடலம்

கற்பக நீழல் வைகுங் காமரு காம தேனுப்
பொற்பகப் போதி நீழற் பூசிக்கு நாளி னோர்நாள்
முற்பகற் பூசை யாற்றி முதிர்தவத் திருந்த தாக
விற்பகற் கதிரோன் மேல்பால் வேலையைச் சாரச் சென்றான். 1

தனதக மிருக்கை கொண்ட தம்பிரா னுருவ மெல்லாம்
கனலுறழ் நெய்த்தோர் தோய்ந்த காட்சியிற் பொலியு மாறு
முனமுல கனைத்து முன்னத் தறியுமுற் பனமே யென்னத்
தினகரச் செல்வன் மாதோ சேந்தன னுடலஞ் சால. 2

இரவெனுங் கால நண்ப னெய்துவ தோர்ந்து தென்பால்
பரவைமண் ணுலக மாது பசுமஞ்சள் குளித்த தேய்ப்ப
விரவிய வெப்ப நீங்கு மிளவெயின் மிளிர வேகி
அரதன மிமைக்கு மேல்பா லலைகடன் முகட்டைச் சார்ந்தான். 3

---

1. கற்பக நிழலிலே வாழும் காமதேனு அரசமர நிழலிலே தங்கி வழிபட்டு வருநாளில் ஓர் நாள் காலைப் பூசையை முடித்துக்கொண்டு சிவயோகத்தில் இருந்தது. அப்போது சூரியன் அத்தமித்தான்.

வேலை - கடல்.

2. தன் மனத்தை இடமாகக்கொண்ட சிவபெருமான் திருமேனி முழுதும் நெருப்பை ஒத்த குருதியிற்றோய்ந்து அழகிலே விளங்குமாற்றினை, உலகம் முன்பே அறியும் உற்பாதம்போலச் சூரியன் உடல் சிவந்தான்.

நெய்த்தோர் - இரத்தம். உற்பனம் - பின்வருந்தீங்கை முன்னறிவிக்கும் இயற்கை நிகழ்ச்சிகள். தினகரன் - சூரியன். சேந்தனன் - சிவந்தான். சால - மிக.

3. இராக்காலம் என்னும் நண்பன் வருவதை யறிந்து, தென்றிசையில் கடலையுடைய மண்ணுலகமாகிறபெண் பச்சைமஞ்சள் தேய்த்துக் குளித்தாற் போல வெப்பமில்லாத இளவெயில் எறிப்பச்சென்று, இரத்தினமணிபோல் விளங்கும் மேற்றிசையிலுள்ள கடல் உச்சியை அடைந்தான் சூரியன்.

பரவை - கடல். அரதனம் - செம்மணி.

பகைகொளுங் கரிய நாகம் பற்றுபு பையப் பையத்
தகைகொள விழுங்கி யாங்குத் தரளமு மணியும் பொன்னும்
வகைவகை கரையி னெற்றும் வார்திரைக் கடலி னுள்ளால்
நகைகொளுங் கிரணக் கற்றை நாட்கதிர் குளித்த தன்றே. 4

செம்மைசெய் யரசன் மாயத் திகழும்வெண் மதியார்க் கஞ்சி
விம்முறு தொழிலிற் பாங்கர் மேவிய மாந்த ரெல்லாம்
தம்முடை யிருக்கை யண்மித் தகவுற வடங்கி யாங்குக்
கொம்மெனப் பறவை யாதி குவிந்ததஞ் சேக்கை சார்ந்து. 5

உரியவ னொருவன் மாய வொக்கலு மயலுங் கூடிப்
பரிவொடு மவலித் தாங்குப் பகலவ னிங்க லோடும்
புரிமுறுக் கவிழ்ந்து பைந்தேன் பொழிமலர்ப் பொதும்பர் தோறும்
விரிசிறைத் தொழுதிப் புள்ளின் றுழனிமிக் கெழுந்த மாதோ. 6

குடநிகர் செருத்தல் விம்மிக் குவிமுலை விங்கித் தாங்காத்
தொடரிரு காலின் வாரச் சுவைப்பய மொழுகக் கற்றுப்
படுமணி யிசைப்ப வோடிப் பட்டிக டோறுஞ் சார்ந்தாங்(கு)
அடர்மனக் கலிவிற் கன்றை அழைத்திடுங் குரல்க ளெங்கும். 7

---

4. முத்து, பவளம், மணிகள், பொன் இவைகளை வகைவகையாகக் கரையில் கொண்டுவந்தெறியும் அலைகளையுடைய கடலுக்குள் ஒளி வீசுகின்ற சூரிய கிரணங்களின் தொகுதியையுடைய தினகரன், பகையான கேதுபற்றிப் பையப் பைய விழுங்கினாற்போல மறைந்தனன்.

சூரியன்பகை கேது என்பது மரபாதலின் கரியபாம்பு கேதுவை யுணர்த்திற்று. வார்திரை - நீண்ட அலை. நகை - ஒளி. நாட்கதிர் - சூரியன்.

5. செங்கோலரசன் இறக்க, விளங்கும் வெள்ளை மதியார்க்கு அஞ்சி வருந்தும் மக்களனைவரும் தம்முடையவீட்டில் அடங்கினாற்போல, பறவை முதலிய உயிரினங்கள் விரைந்து தம் கூட்டினைச் சார்ந்தன.

வெண்மதியார் - வெள்ளையான அதாவது உள்ளீடு இல்லாத அறிவினையுடைய அரசர்கள். வெண்மையான சந்திரன் என இருபொருளுங்கொண்டு நயம் காண்க. பாங்கர் - பக்கம். அண்மி - அணுகி. சேக்கை - இருப்பிடம்.

6. உரியவன் ஒருவன் இறந்துபோகச் சுற்றத்தாரும் அயலாரும் கூடி அன்போடு அழுது புலம்பினாற்போல, சூரியன் மறைய, அரும்புகள் மலர்ந்து தேன் பொழியும் சோலைகள்தோறும், பறவைகளின் ஒலிமிகுந்தன.

ஒக்கல் - சுற்றத்தார். அயல் - அயலார். பரிவு - அன்பு. அவலித்தல் - புலம்பல். பகலவன் - சூரியன். விரிசிறைத் தொழுதிப்புள் - விரிந்த சிறகுகளின் தொகுதிகளோடுகூடிய பறவை. துழனி - ஒலி.

7. குடம்போன்ற மடிகள் விம்மி, முலைக்காம்புகள் வீங்கி, தாங்காமல் இருகால் வழியாகவும் சுவையோடுகூடிய பால் ஒழுகக் கன்றோடுகூடிய பசு மணி

கலவிசெய் தவச மாகிக் காமரு சேக்கை யிட்ட
அலரணைப் படுக்கை நின்று மணங்கனுர் தலைவ னீங்கத்
தலையெடுத் தெழுவ தென்னத் தழற்கதிர்க் கலவி நீத்த
மலர்மதுக் கமலத் தோடு வண்டலை நிமிரா நின்ற. 8

உருகெழு பரிதித் தோன்ற லொண்கதிர்க் கரத்தா லள்ளிப்
பருகலிற் குறைந்த பொய்கைப் பனிப்புன னிரப்பு மாபோன்
மருண்மலி மாலைக் காலம் வருதலு மனஞ்சோ காந்து
பெருகிய கண்ணீர் வாரப் பேதுறு நேமிப் புள்ளு. 9

பருதியங் கடவு ளென்னும் பற்றல னிரியல் போக
வருமதி யரசற் குற்ற மாலையஞ் செல்வ னன்னுன்
பொருண்மலி தெனுது திக்கின் புடவியா மனையைச் சால
இருளெனுங் கதவஞ் சாத்தி யிருந்தனன் காவல் பூண்டு. 10

ஒலிக்க ஓடிச்சென்று பட்டிகளைச் சார்ந்து, மனக்கனிவோடு கன்றையழைக்கும் குரல்கள் எங்கும் ஒலிப்பன.

செருத்தல் - மடி. பயம் - பால். கற்று - கன்றோடுகூடிய பசு. படுமணி - ஒலிக்கின்ற மணி. அடர்மனக் கனிவின் - வருத்துகின்ற மனத்தின் கனிவினுலே.

8. புணர்ந்து, அதனுல் தன்வசம் அழிந்து, அழகிய மலர்ப்படுக்கையி லிருந்து கணவன் பிரிந்துபோகப் பெண்கள் தலைதூக்கி எழுவதைப்போல சூரிய கிரணங்களின் புணர்ச்சியைப் பிரிந்த தாமரையிதழ்கள் தலைநிமிர்ந்தன.

சேக்கை - படுக்கை. தழற்கதிர் - சூரியன். சூரியனைத் தாமரைக்குக் கண வனுகக் கூறுதல் மரபு. தோடு - இதழ்.

9. சூரியன் கிரணங்களாகிற கையால் அள்ளிப்பருகுதலால் குறைந்த நீரையுடைய பொய்கையைப் பனித்தண்ணீரால் நிரப்புவதுபோல, மயக்கந்தரு கின்ற மாலைக்காலம் வரலும், மனம் வருந்தி, கண்ணீர் சொரிந்து, சக்கரவாகப் பறவை வருந்தும்.

உரு - அச்சம். மருள் - மயக்கம். சோகாந்து - வருந்தி. வார - ஒழுக. நேமிப்புள் - சக்கரவாகப்பறவை.

10. சூரியனுகிய பகைவன் ஓட, இனிவரஇருக்கும் சந்திரனுகிய அரசற்குத் தக்க மாலைக்காலமாகிய மகன், அச்சந்திரனுக்குரிய பொருள் நிறைந்த தெற்குத் திசையிலுள்ள பூமியாகிய வீட்டை மிக்க இருள் என்னும் கதவைச் சாத்திக்காவல் பூண்டு இருந்தனன்.

தென்னுடு பாண்டியற்குரியதாய்ச் சந்திரனுடைமையாதலால் மாலையாகிற சந்திரன் மகன் மாற்றலனுகிய சூரியன் மறையச் சந்திரனுக்காக இருட்கதவைச் சாத்திக் காவலிருந்து பொருளைப் பாதுகாத்தனனென மாலைக்காலம் வருணிக்கப் பட்டமை காண்க.

ஒற்றையந் திகிரி யெங்கு முருட்டிவார் கிரண மென்னப்
பற்றிய செங்கோ லோச்சிப் பரிவுசெய் யிரவு நீக்கிக்
கொற்றவ னேக வாங்கே குறுநில மன்ன ரென்ன
முற்றிய மாலை நோக்கி முல்லைக ணகைத்த மாதோ. 11

வெய்யவற் கொளிமை யாந்து வேறுபட் டிருந்த செந்தீ
உய்யவெண் மதிக்கீழ்ச் சில்ல தேயமுற் றுள்வ தொப்ப
மையணி விழியி னர்கள் வயக்குமொண் விளக்க மாகி
மையென மனைக டோறு மமர்ந்தொளி கஞற்று மாலோ. 12

அருவிமும் மதமால் வேழத் தகடுகீண் டயில்கொள் சூலத்
தொருவன்வந் தெழுந்த தேபோ லுலகெலாம் பொதிந்து நின்ற
இருணெடு வயிறு போழ்ந்திட் டெழுந்ததா லெறிநீர் வைப்பின்
மருவிய பைங்கூ ழெல்லாம் வளர்த்திடு முவவுத் திங்கள். 13

பற்றலன் - பகைவன். உற்ற - மகனாக உற்ற. மாலை ஒளி இருள் இரண்டுங் கலந்தகாலமாய் வரும் மதியரசனுக்கு மகனாகக் கூறப்பட்டது.

11. ஏகசக்கராதிபதியாய்ச் செங்கோல் செலுத்தி இரத்தலையே ஒழித்த மன்னன்போல, ஒற்றைச் சக்கரத்தையுருட்டி, கதிர்கள் என்னும் செங்கோலைச் செலுத்தி, துன்புறுத்தும் இராக்காலத்தைப் போக்கி, அரசனாகிய கதிரவன் மறைய, குறுநில மன்னர்களைப்போலச் சூழ்ந்த மாலைக்காலத்தைக் கண்டு முல்லை அரும்புகள் மலர்ந்து நகைத்தன.

முற்றிய - முற்றுகையிட்ட.

12. சூரியனுக்கு ஒளியால் தோற்று அதனுடன் பகைத்து வேறுபட்டிருந்த தீ, தான் உய்வதற்காகச் சந்திரனின்கீழ்ச் சில நாடுகளைப் பெற்று ஆள்வதைப் போல. பெண்கள் ஏற்றும் விளக்குகளாகி, வீடுகள்தோறும் ஒளியைச்செய்யும்.

மையாந்து - தோற்று. ஓரரசனுக்குத் தோற்ற அரசன் ஒருவன், வென்ற அரசனிடம் ஏதோ சில நாடுகளைப் பெற்று வாழ்வதுபோல தீ விளக்குகளாகி வீடுகளில் இடம் பெற்று ஒளி செய்தன என்பதாம்.

13. உலகில் பயிர்களனைத்தையும் வளர்க்கும் நிறைமதி யானையின் வயிற்றைக் கிழித்துச் சூலப்படையையுடைய சிவபெருமான் எழுந்தருளியது போல, உலகமனைத்தையும் மறைத்திருந்த இருளைக் கிழித்துக்கொண்டு வெளிப் பட்டது.

அகடு - வயிறு. யானையையுரித்து இறைவன் வெளிப்பட்டதுபோல இருளைக் கிழித்துச் சந்திரன் தோன்றினன் என்க. பைங்கூழ் - பயிர். உவவுத் திங்கள் - பூர்ணிமை சந்திரன்.

உரகமுண் டுமிழ்ந்த காலை யுட்டுளை யெயிற்றுக் காரி
விரவிய தென்ன நாப்பண் விளங்கிய களங்கத் திங்கள்
கிரணங்கள் கஞற்றிற் றெங்குங் கிளரிருட் கபாட நீக்கிப்
பரவுமிற் பொருளைக் கையிற் பரிசித்துப் பார்க்கு மாபோல். 14

வரையெலாம் வெள்ளி வெற்பின் மயங்கின மாயோன் பாயல்
திரைதவழ் கடலே யென்னத் திகழ்ந்தன கடல்க ளெல்லாம்
புரைதபு வெள்ளி தன்னாற் பொலிந்ததோ ருலகே யென்னத்
தரைவள ருலக முற்றுந் தயங்கின கிரணத் தம்மா. 15

விழைதகு கருப்பு வில்லி வெண்மதிக் கவிகை முற்றும்
தழைதகத் தூக்கு முத்தின் றாமங்க ளரசங் காட்டுக்
குழைதகு சாகை தாக்கக் கொம்மெனச் சிதர்ந்து சுற்றின்
உழையுழை கிடத்தன் மானு முடுக்களங் கொளிர்ந்த தோற்றம். 16

மைந்தர்க ளாக்கங் காண வயிறுவாய்ந் துயிர்த்த தாயர்
சிந்தையின் மகிழ்ச்சி மேன்மேற் றிளைத்தெழல் திண்ண மன்றே
சந்திர னெழுத லோடுந் தரங்கநீர்ப் புணரி பொங்கி
அந்தின்மிக் கெழுந்த தென்ப ஆரவா ரத்தினோடும். 17

---

14. ராகு விழுங்கி யுமிழ்ந்த காலத்து அப்பாம்பின் பல்லிலுள்ள விடம் கலந்ததுபோல நடுவில் விளங்கிய களங்கத்தையுடைய சந்திரன், கிரணங்களை வெளிப்படுத்திய செயலானது, எங்கும் இருட்கதவைத் திறந்து, வீட்டிலுள்ள பொருள்களைக் கையால் தீண்டிப் பார்க்குமாறுபோல விளங்கிற்று.

உரகம் - பாம்பு. காரி - விடம். கஞற்றிற்று - வெளிப்படுத்திய செயல்; வினையாலணையும் பெயர். கபாடம் - கதவு. பரிசித்து - தீண்டி.

15. சந்திரன் ஒளியால் மலைகள் யாவும் வெள்ளிமலைபோல் விளங்கின. கடல்கள் யாவும் பாற்கடலைப் போன்றன. பூமியுலுள்ள உலகங்கள் யாவும் குற்ற மற்ற வெள்ளியால் ஆகிய உலகேயென்ன ஒளிசெய்தன.

16. விண்ணில் நட்சத்திரங்கள் விளங்கும்காட்சி, மன்மதனுடைய வெண் மதியாகிய வெண்கொற்றக் கொடையின் ஓரத்தில் தழையத்தொங்கவிட்ட முத்து மாலைகள் அரசவனத்துக் கிளைகள் தாக்க அறுந்து, சுற்றிலும் இடமிடங்கள் தோறும் கிடப்பதை ஒக்கும்.

தாமங்கள் - மாலைகள். குழைதகு சாகை - தளிரோடுகூடிய கிளை.

17. பிள்ளைகளின் வளர்ச்சியைக் காணப் பெற்றதாய்மார்கள், மனம் மேலும் மேலும் மகிழ்தல் உறுதியல்லவா? சந்திரன் உதித்தவுடன் கடனீர் பொங்கி அங்கு ஆரவாரத்தோடும் எழுந்தது என்பர்.

வயிறு வாய்ந்து உயிர்த்த தாயர் - வயிற்றில் கருப்பெற்றுப் பெற்றதாய் மார்கள். கடலிலிருந்து சந்திரன் உதித்தலின் கடல் சந்திரனுக்குத் தாயாயிற்று. புணரி - கடல். அந்தில் - அசையுமாம்.

மறைநெறிக் கஞ்சாத் திங்கள் வார்கதிர்க் கரங்க ணீட்டி
மிறைசெய வுள்ள மாழ்கி மெலிந்தென தகத்தின் மன்னு
நிறையினை யழித்த லென்று ஞெரேலெனக் கும்பிட் டாங்குத்
துறைமலி கமலக் காடு தூமலர் கூப்பி நின்ற. 18

பாங்குறு கமல மாதைப் பகலவன் கலவி யாற்ற
ஈங்கிது பார்த்த லொண்ணா தெனவளர் குவளை யெல்லாம்
தீங்கினுக் கஞ்சி மூடுஞ் செறியிதழ் மலர்க டம்பால்
தாங்கிய வன்பர் காணத் தடந்தொறும் விழியா நின்ற. 19

நீத்தனை யெம்மைச் சால நெருப்பென வுடற்றும் வெய்யோன்
பாய்த்திய மிறையிற் பட்டுப் பருவர லுழந்தேம் பாராய்
காத்தினிக் கைக்கொ ளென்று கனிந்துசெவ் வாய்விண் டாங்கு
பூத்தன கயிர வங்கள் புதுநிலா வெறித்த லோடும். 20

---

18. நீர்த்துறைகள் தோறும் நிறைந்துள்ள தாமரைக்காடுகள், வேத வொழுங்குக்கு அஞ்சாத சந்திரன் தன்னுடைய கிரணங்களாகிய கைகளை நீட்டித் திமையைச்செய்ய மனமயங்கி, மெலிந்து என் உள்ளத்தில் நிலைபெற்ற நிறை என்னுங் குணத்தினை அழிக்காதே என்று, விரைந்து கும்பிட்டதுபோல மலர்கள் குவிந்து நின்றன.

சந்திரன் வேதநீதிக் கஞ்சாதவன் என்றது குருபன்னியைப் புணர்தல் முதலிய பாவங்களைச் செய்தமையின். மிறை - வலாற்காரம். மாழ்கி - மயங்கி. நிறை - மனத்தைக் கற்புநெறிக்கண் நிறுத்தும் வன்மையாகிய மகளிர் குணம் நான்கனுள் ஒன்று. அழித்தல் - அழிக்காதே; எதிர்மறை முன்னிலை வினைமுற்று.

19. அழகிய கமலமாகிய பெண்ணைச் சூரியன் புணர, இதனைப் பார்த்தல் கூடாது எனக் கண்மூடிய குவளைமலர்கள் யாவும், தீமைக்கஞ்சிக் கண்மூடும் செறிந்த இதழ்களையுடைய குவளைமலராகிய கண்களை, தம்பால் தங்கிய அன்பரைக்காண தடாகங்கள்தோறும் மலர்ந்தன.

பாங்கு - அழகு. ஒருபெண்ணை யொருவன்புணர அதனைப்பார்த்தல் கற்புக்கு இழுக்காதலின், பகலவன் தாமரையைப் புணரக் குவளை குவிந்தன என்பதாம். அங்ஙனம் குவிந்த நிலங்கள் தம்பால் அன்புதாங்கிய சந்திரனைக் காண விழித்தன என்க.

20. 'எம்மைவிட்டுப் பிரிந்தாய். சூரியன் எங்களை நெருப்புப்போலத் தகிக்கிறான். வலாற்காரத்திலகப்பட்டுத் துன்புற்றோம். இனி எம்மைக் காப்பாற்றிக் கைக்கொள்வாயாக' என்று கனிந்து வாய்திறந்தாற்போல அல்லிமலர்கள் புதுநிலா எறிக்கப் பூத்தன.

கயிரவங்கள் - செவ்வல்லி மலர்கள்.

தாமரைப் பொகுட்டின் மேவித் தண்ணறு நுகர்ந்த வண்டு
காமரு குமுத நீலங் கதுவித்தேன் பருகா நின்ற
தேமரு செல்வ மாயச் சேர்ந்தவர் தம்மை நீத்திட்(டு)
ஏமரு மேதி லார்பா லிரும்பயன் றுய்ப்பார் மான. 21

கணவர்தம் வதனத் திங்கட் கருணையஞ் சுதைகூட் டுண்டு
பணவர வல்குல் நல்லார் படர்விழிச் சகோரங் கொட்ப
உணவினை விழைந்து சூழ்ந்த வும்பருஞ் சகோரப் புள்ளும்
இணர்படு கிரணத் திங்க ளின்சுதை நுகரா நின்றார். 22

வேறு

பகலிற் றுக்கிய படர்சிறைக் காக்கையின் குழாங்கள்
உகலிற் சார்தர வொறுப்பன கூகையின் குலங்கள்
நகலிற் றீர்தரு நாமவே லரசர்நண் ணாரை
இகலிற் றீர்தரு காலம்பார்த் திருப்பது தகைய. 23

---

21. இனிமைபொருந்திய செல்வம் அழியத் தம்மைச்சேர்ந்த காமுகர்களைக் கைவிட்டு இன்பம் மருவிய அயலாரிடம் பெரும்பயனை நுகரும் பரத்தையர்போலத் தாமரையின் கொட்டையிலே இருந்து குளிர்ந்த தேனையுண்ட வண்டு,அழகிய நீலம் அல்லி முதலான பூக்களையும் அடைந்து தேன் குடித்தன.

இப்பொருளில் வண்டு பரத்தையராகவும், மலர்கள் ஆடவராகவும்கொள்க. இனி, தம்மைச்சேர்ந்த மனைவியரைவிட்டுத் தம் செல்வம் அழிய இன்பந்தரும் பரத்தையர்பால் பெரியபயனை நுகர்வார்போல, தாமரைத் தேனுண்ட வண்டு அல்லிப்பூ, நீலப்பூக்களிலும் தேனுண்டன எனலுமாம். இப்பொருளில் வண்டு ஆடவர். மலர்கள் மாதர்கள். தேன் இன்பம் எனக்கொள்க. முன்னது வறும் பூத்துறக்கும் வண்டு போல்குவம் என்ற பழைய மரபை ஒட்டிய பொருளதாதல் தெளிக.

22. கணவர்களுடைய கருணையாகிற அமுதத்தைக் கூடியுண்டு பெண்களின் விழிகளாகிற சகோரப்புட்கள் திரிய, உணவை விரும்பிவந்த தேவர்களும் சகோரப்பறவைகளும் சந்திர கிரணத்திலுள்ள அமுதைப்பருகினர்.

பண அரவு அல்குல் - பாம்பின் படத்தை ஒத்த அல்குல். (பெண்குறி) நல்லார் - பெண்கள். பெண்களின் விழியைச் சகோரப் பறவைக்கு ஒப்பாகச் சொல்லுதல் மரபு; வட்டமான தோற்றம், ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமை இவற்றால். உம்பர் - தேவர். இணர் - கூட்டம். இன்சுதை - இனிய அமுதம்.

23. நகைதீர்ந்த அச்சம்தரும் வேலை ஏந்திய அரசர்கள் பகைவரை பகை அடங்கிய காலம்பார்த்து கொல்லுவதைப்போலக் காக்கைகள் பகலில் கூகைகளைத் தாக்கின. பகல் சிந்துதலால் அதாவது கழிதலால் இரவில் கோட்டான் கூட்டங்கள் காக்கைகளைத்தாக்கின. இச்செய்யுள் "பகல்வெல்லுங் கூகையைக் காக்கை" என்னும் திருக்குறளைத் தழுவி எழுந்த கருத்துடையதாம்.

அரிய லாருந ரொருபுற மரிவையர் தமக்குத்
தெரியல் பூண்கலன் அணிகுந ரொருபுறந் திணிதோட்
பிரிக லாதவ ரொருபுறம் பிரிந்தவர்ப் பெருமை
உரிய மாணல மிழக்குந ரொருபுற மானுர். 24

திமிர வேழத்தைத் தேம்பொழிற் பாசறைத் தளைத்து
நிமிரும் வாண்மதிக் குடையெழ நிறைமணஞ் சீதம்
உமிழ்மென் கான்மணித் தேருடை யமரனு முடற்றுந்
துமிலப் போர்துறந் திரதிதோட டொய்யிலிற் ரேய்ந்தான். 25

மாத ராரிணை விழைச்சுமா செனத்தெளிந் தகன்று
காத லாரண மறிகலான் கழற்றுணை நிறுவி
ஏத மேதுமெய் யாதமெய் யிருடியர் தமக்கும்
போத மாதர்பாற் புகுவதற் கெழுந்ததவ் விரவு. 26

உயிர்கள் யாவையு முவப்புறு முவாமதி யிரவில்
எயில்கண் மூன்றையு மெரித்தவர் பூசனை யியற்றிச்
செயிரெ லாந்தபு தேவரா னிருக்கையைச் சேர்ந்து
பயிலும் யோகத்தி னிருந்தது படர்பொறி யடக்கி. 27

---

24. கள் அருந்துபவர் ஒருபுறம்; காதலியர்களுக்கு மாலை, அணி முதலியவற்றை யணிபவர்கள் ஒருபுறம்; அவர்களது தோளைப் பிரியாமல் தழுவிக்கிடப்பவர்கள் ஒருபுறம்; ஒருவரை ஒருவர் பிரிந்தவர்களாய், அது தாங்காமல் தமக்கேயுரிய பேரழகை யிழப்பவர்கள் ஒருபுறம்; இவ்வாருனர்கள் மக்கள்.

25. இருளாகிற யானையைச் சோலையாகிற பாசறையிலேகட்டி, உயர்ந்த ஒளிபொருந்திய சந்திரனுகிய குடை கிளம்பியவுடன், நிறைந்த மலர் மணத்தைத் தாங்கிவருகின்ற குளிர்ச்சியை யுமிழ்கின்ற மெல்லிய காற்ருகிய தென்றலைத் தேராக உடைய மன்மதனும் மாறுபடும் போரை நீங்கி இரதியோடு கூடிக்களித்தான்.

திமிரம் - இருள். மதனனுக்கு இருள்யானை, மதிகுடை, தென்றல்தேர் ஆதல்காண்க. நிறைமதி எழ மதனனும் மக்களோடு பொருதலை ஒழிந்து இரதியோடு இரமித்தான் என்க. துமிலப்போர் - ஆரவாரமான சண்டை.

26. அந்த இராக்காலம், மாதரைப்புணர்தல் இழிந்த செயலென்று உணர்ந்து நீங்கி, வேதமும் உணரமுடியாத இறைவன் திருவடியை மனத்தகத்தே நிறுவிக் குற்றமொன்றுமே புரியாத இருடிகளுக்கும் அறிவு, மாதர்பாற் செல்ல எழுச்சியையளித்தது.

இணைவிழைச்சு - புணர்ச்சி. ஆரணம் அறிகலான் - வேதத்தாலும் அறிய முடியாதவராகிய இறைவன். போதம் - அறிவு.

27. உலகத்திலுள்ள உயிர்கள் அனைத்தும் மகிழும் பூர்ணிமை இரவிலே, குற்றமனைத்தையும் முற்ற ஒழித்த காமதேனு, சிவபெருமானைப் பூசித்துத் தம்மிருப்

ஆய காலையி லறவனுர் திருமுன்ன ரெல்லா
மேய வானிரைக் கன்ருெடு மேவியாட் டயர்ந்து
தூய தேனுவின் கன்றிருந் ததுசுடர் மதியின்
பாய வாணிலா நோக்கியுட் படர்களி கூர்ந்து. 28

மதியெ னுந்தனி மாமனு மகிழ்ச்சியி னேக்க
நுதிகு ரங்குற நோன்மைசால் வாலினை யெழுப்பிப்
பதிசெ வித்துணை நிமிர்தரப் பார்சித ளெடுப்பக்
கதிகொண் டோடிய துளர்தரு காலும்பின் னுக. 29

ஓடிச் சேணிடை நிற்குஞ்சற் ருெய்யென மீளும்
வாடி வேரொடு மிறும்புகள் குளம்புற்று மடிய
நீடி நின்றபைம் புதலினைக் குப்புறு நிமிருங்
கூடி நின்றகன் றினத்துறுங் குறுகிமோந் தார்க்கும். 30

நிலங்க திர்த்தகோட் டினுநெடுந் தாளினு மகழும்
விலங்கி மேக்கெழீஇப் பின்னடி விதிர்ப்புற வோடுங்
கலங்கும் வன்றலை துளக்குங்கா சினிதுக ளாடி
இலங்க மண்டிலங் கொளுந்திசை திசையிரி தருமால். 31

பிடம் சார்ந்து ஐம்பொறிகளையும் அடக்கிச் சிவயோகத்தில் இருந்தது. எயில்கள் மூன்றும் எரித்தவர் - திரிபுரங்களையும் எரித்த சிவபெருமான். செயிர் - குற்றம்.

28. அப்போது நிறைமதியின் நிலவைப்பார்த்து மனமகிழ்ந்து காமதேனுவின் கன்று சிவபெருமான் சந்நிதியில் எங்கும் பசுக்கூட்டங்களோடு சென்று விளையாடியது.

29. சந்திரனுகிய பெரிய மனுதேவன் மகிழ்ச்சியோடு நோக்க, குளம்பின் நுனிவளைய பெருமைதாங்கிய வாலைத் தூக்கிக்கொண்டு, காதுகள் நிமிரப் பூமியில் தூசிகிளம்பக் காற்றும் பிற்பட வேகமாக ஓடிற்று.

30. ஓடித்தூரத்தே சென்று சற்று நிற்கும். விரைந்துமீளும். வேரொடும் வாடிச் சிறுதூறுகள் குளம்பால் அழிய, உயர்ந்த புதர்களும் கவிழ, நிமிர்ந்து நிற்கும். தன்னேடுகூடிய கன்றுகளின் கூட்டத்தையடையும். வந்துமோந்து ஆரவாரிக்கும்.

31. கூரிய கொம்பாலும், குளம்பாலும் நிலத்தைத் தோண்டும்; விலகிக் குறுக்காக மேலெழும்பி, பின்னங்கால் நடுங்க ஓடும்; கலங்கும்; தலையையசைக்கும்; பூமியைப் புழுதியாக்கி வட்டமாகச் சுற்றிவரும்; திசைகடோறும் ஓடும்.

நிருத்த மாட்டயர் நிருமலன் கன்றுரு வாகித்
திருத்த மேவரச் செய்திடு நடனமீ தொன்றே
கருத்தி னுடரி தெனக்கட வுளர்விசும் பேறி
உருத்த வன்பொடு மிமைப்பிலா விழிப்பய னுற்றார். 32

சடச டென்றிரி தருந்தனி யோதையுந் தழங்கப்
படர்நெ டுங்குரல் பயிற்றுறு மோதையும் பரப்ப
அடர்வ னத்துறை பறவையு மிருகமு மஞ்சிக்
குடர்கு ழம்பவோட் டந்தன வூர்வன குமைந்த. 33

கவைய டிப்படுங் கதிர்மணிக் குலங்களும் பொடிந்த
குவைபி லைத்தருக் கோட்டிடைப் படுவன துமிந்த
இவையெ னத்தெரி யாவகை யிலதைகள் குழைந்த
அவையி னைத்தலி னுங்குறை நிரைகளும் வெருண்ட. 34

அன்ன கன்றுடை யுறுப்புறுப் பமர்தரு மமரர்
இன்னன் மிக்குழந் தெய்த்தன ரென்செய வல்லார்
வன்னி கொன்றையு மத்தமு மலைத்தவார் சடில
முன்ன வன்றனைக் காவென முறைமுறை பணிந்தார். 35

---

32. நிருத்தஞ்செய்யும் பெருமான் கன்றின் வடிவுதாங்கி, செய்யுந் திரு நடனம் இதுவோ? நாம் கருத்தாலும் ஆராயமுடியாததொன்று இது என்று தேவர்கள் விண்ணிற்சென்று மிக்க அன்போடு பார்த்து, இமைக்காத கண் பெற்ற பயனைப் பெற்றனர்.

33. சடசட என்று ஓடும் தனியோசையையும், குரல் பயிற்றுறும் பேரோசை யையும் இக்கன்று விளங்கப் பரப்புவதால், வனத்திலுள்ள பறவைகளும், விலங்கு களும் அஞ்சிக் குடல்குழம்ப ஓடின. எறும்பு, பாம்பு, பல்லி முதலிய ஊர்ந்து செல்லும் உயிர்கள் மிதிபட்டுக் குமைந்தன.

குமைதல் - பதனழிதல்.

34. பிளவுபட்ட குளம்படியிற்பட்ட ரத்தினக்கற்களும் பொடிபட்டன; கொம்புகளிடையிலே சிக்கிக் கூட்டமான இலைகளையுடைய மரங்களும் ஒடிந்தன; கொடிகள் இவை இன்ன கொடிகள் என்று அறிய இயலாதவண்ணம் குழைந்தன; கூட்டத்தில் புகுந்தோடுதலால் பசுக்கூட்டங்களும் வெருண்டோடின.

35. அத்தகைய கன்றின் உறுப்புக்கள்தோறும் உள்ள தேவர்களும் துன்ப மிக்கு வருந்தினர்; இளைத்தனர்; என்ன செய்வார்கள்; எங்களைக் காத்தருள வேண்டும் என்று சிவபெருமானை அடிக்கடி வணங்கினர்.

வன்னி - ஒருவகை இலை. (பத்திரம்) மத்தம் - ஊமத்தம்பூ.

அட்ட நாகமு மட்டதிக் கயங்களு மலைந்த
முட்டி லாதுமண் பரித்தமா சேடனூர் முடிகள்
சட்ட வாற்றில வாயின தவிர்ந்துவா ழிடமாய்
விட்ட மாதிரத் தலைவரும் விதிர்விதிர்த் தனரே. 36

அடிய ழுந்தமிக் கிடுந்தொறு மவனிகம் பிப்ப
நெடிய குன்றுக டுளங்கின துளும்பின நெடுநீர்க்
கடல்க ளூடிய காரிகை மடந்தையர் கணவர்
தடவு வார்புய மிறுகுறத் தழீஇயினர் தாமே. 37

களிமி குந்தெழ வின்னண மாட்டயர் கன்று
நெளிய வன்னில ஞெரேலென நேருற வோடி
ஒளிசெ யாதிலிங் கத்தினை யுள்ளுறப் பொதிந்து
வெளியி னின்றவன் மீகத்தை மிதித்ததோ ரடியின். 38

நீட்டி யிட்டகா னிருமலன் சென்னியி லழுந்திப்
பூட்டி யிட்டெனப் புயக்கவந் துருமையின் முகத்தைக்
கோட்டிக் கோட்டினூற் கோட்டுமண் கொண்டுபுற் றுடைத்துச்
சேட்டு மாமணி யுருவமுங் கீழ்ந்துசென் றதுவே. 39

---

36. இக்கன்றின் செயலால் எட்டுத்திக்கிலும் உள்ள யானைகளும் பாம்புகளும் மலைகளும் வருந்தின. தடையின்றிப் பூமியைச்சுமக்கும் ஆதிசேடன் முடிகள் உறுதியாகப் பொறுக்கமாட்டாவாயின. திக்குப்பாலகர்களும் நடுநடுங்கினர்.

நாகம் - பாம்புகள்; மலைகள். அலைந்த - வருந்தின; இடம் பெயர்ந்தன. சட்ட - உறுதியாக. தவிர்ந்து - ஒழிவாகி. மாதிரத்தலைவர் - திக்குப்பாலகர்கள்.

37. கன்று அழுந்த அடிவைக்குந்தோறும், பூமிநடுங்குவன. பெரியமலைகள் நடுங்கின. கடல் ததும்பின. கணவரோடு ஊடல் கொண்டிருந்த பெண்கள் தம் கணவர் தோளை வலியத் தழுவினர்.

தடவுவார் புயம் - அகன்ற பெரியதோள்.

38. களிப்புமிக்கு இவ்வாறு விளையாடுகின்ற கன்று மலைநாடு நெளியும் படிச் சென்று, நேரே ஓடி, ஆதிலிங்கப் பெருமானை உள்ளே வைத்து மறைத்து வெளியே நின்றபுற்றினை ஓரடியால் மிதித்தது.

39. நீட்டிவைத்த கால் சிவபெருமான் திருமுடியில் அழுந்திப் பூட்டி போட்டாற்போலப் புய்த்தெடுக்க வராமையால், கழுத்தை வளைத்துக்கொம்பினால் மண்ணைத்தாங்கும் புற்றையுடைத்து, பெருமையோடு கூடிய பெரிய அழகிய திருவுருவத்தையும் பிளந்து சென்றது.

பூட்டியிடுதல் - பிணையலிற்கட்டுதல். சேடு - பெருமை.

குளம்ப மூந்திய வூற்றினுங் கோடுபுக் கெடுத்த
இளம்பு ணூற்றினு மெழுந்தநெய்த் தோர்பெரு கியதால்
களம்பு குந்துபுற் றுருவமாய்க் கரந்தமா மேரு
வளம்பொ லிந்ததன் னொளியினை வயக்கினன் மான. 40

திண்மை மல்குமண் பொதிந்துபூ சனைபுரி திறனோர்ந்(து)
ஒண்மை மல்கிய வங்கியும் பூசனை யுளுற்ற
வண்மை மல்கிய திருவுரு வளைந்ததும் போலுந்
தண்மை மல்கிய செம்புனல் பெருகிய தயக்கம். 41

வேறு

இறைவனார் திருமேனி யிளங்கன்றி னிடருழந்த
மிறைதெரிந்து சோகத்தின் விழுந்ததுபோ லுயிர்த்தொகுதி
பொறைதவிர வருதுயிலிற் புணர்யாமங் கழிதரவை
கறையடுத்த துறுஞ்சோகங் கழிக்கவரு மருத்துவன்போல். 42

கனிவாயைத் திறவாது களத்தொலிகொண் டழுவார்போல்
கனிவாயி னிசைமிழற்றி நண்ணுவவண் டலர்தோறும்
பனிவாய்ந்த மலர்களின்வாழ் பண்ணவர்க்குப் பணிவார்கட்(கு)
இனியான்மெய் வடுப்பட்ட திசைத்திசைத்தே குவபோல. 43

---

40. குளம்பு அழுந்திய காயத்திலும், கொம்பு குத்திய இளங்காயத்திலும் இரத்தம் பெருகியது. இத்தலத்திலே வந்து புற்றுருவமாகி மறைந்த பொன்மலை போலும் தன் திருமேனியின் ஒளியை மிக விளங்கச்செய்தான் இறைவன்.

நெய்த்தோர் - இரத்தம். வயக்கினன் - விளக்கினன்.

41. குளிர்ந்த குருதிபெருகிய விளக்கமானது, ஒளிநிறைந்த அக்கினி தேவனும், உறுதியான மண்ணிலே மறைந்துப் பூசிக்கின்ற விதிகளையறிந்து பூசிக்க, வள்ளன்மை நிறைந்த சிவலிங்கத் திருமேனி வளைந்து கொடுத்தது போலும்.

குருதி திருமுடியிலிருந்து வளைந்து ஒழுகுவது அக்கினி வழிபட இறைவன் முடி சாய்ந்ததுபோல இருந்தது என்பதாம்.

42. சிவபெருமான் திருமேனி ஓரிளங்கன்றால் துன்புற்ற குற்றத்தை யறிந்து, சோகத்தில் விழுந்ததுபோல, உயிர்க்கூட்டங்கள் சுமைநீங்க வருகின்ற தூக்கத்தாலே வந்த யாமம் கழிய, மிக்க சோகத்தை நீக்கவரும் வைத்தியனைப் போல விடியற்காலம் வந்தது.

43. கொவ்வைக்கனிபோன்ற வாயைத் திறவாமலே கழுத்தில் ஒலியை யடக்கி அழுகின்றவர்களைப்போல, வண்டுகள் வாயினாலே மலர்கடோறும் சென்றுமிக இசையைப்பாடி வருவன; குளிர்ந்த பூக்களில் வாழ்கின்ற தேவர்கள்

நிலவுமிழும் பனிக்கிரண நிரப்பவருங் குளிர்க்குடைந்திட்(டு)
எலிமயிர்ச்செம் போர்வையழ கெறிக்குமுருப் போர்த்ததுபோல்
ஒலிகுருதி கொப்பளிக்கு மூறுதெறிந் தாற்ருமே
கலிகெழுவன் குரலெழுப்பிக் கரைவனகோ ழிக்குலங்கள். 44

திரணமெடுத் திடைநாட்டித் தேவர்கடம் வலியழித்த
பரமரெறுழ்த் திருமேனி படுமூறு தெரிந்ததனுல்
உரன்மலிந்து வரும்பாவ மொழிப்பமுயன் றனபோல
வரமலிந்த வலிகெழுவு மனுக்கணிப்ப கருங்குருவி. 45

எட்டுருவி ஞேருருவா யிருந்தநா மெம்பிராற்(கு)
இட்டமுறுந் திருமேனி யிடர்காணத் தகுமேயென்(று)
உட்டிகழும் வருத்தத்தா லொளிமழுங்கிற் றுவாமதியம்
அட்டுமொளி விளக்கழலு மவ்வாற்றின் மழுங்கிற்றே. 46

அனைவர்க்கும், வணங்குவார்க் கினியனுகிய சிவபெருமான் திருமேனி வடுப்பட்டதைச் சொல்லிச் சொல்லிச் செல்வனபோல தோன்றின.

களம் - கழுத்து. பண்ணவர் - தேவர்.

44. நிலா உமிழும் குளிர்ந்த கிரணங்கள் பரப்ப அதனுல் விளையும் குளிர்க்கு வருந்தி, அழகுவீசுந் திருமேனியிலே வெளுக்கப்பட்ட செம்மையான எலிமயிர்ப்போர்வை போர்த்தியதுபோல ஒலிக்கின்ற இரத்தம் சொரியும் புண்ணை யறிந்து, தாங்காமல், ஓசைமிக்க குரலை எழுப்பிக் கோழிக்கூட்டங்கள் கூவுவன.

கரைவன - ஒலிப்பன எனப் பொதுமையில் வந்தது.

45. புல்லை நடுவில்நட்டுத் தேவர்கள் வலிமையை யடக்கிய பரமசிவனுடைய திருமேனியில் உண்டானபுண்ணை யறிந்தமையால், வலிமிக்கு வருகின்ற பாவத்தை நீக்கமுயன்றனபோலக் கருங்குருவிகள் மேன்மை சிறந்த வன்மையோடு கூடிய மந்திரங்களை எண்ணுவனவாம்.

திரணம் - புல்.

46. இறைவனுடைய அட்டமூர்த்திகளுள் ஒன்ருக இருக்கின்ற நாம், அவர்மேனியில் உண்டான துன்பத்தைக் காணல் தகுமோ என்று மனத்துள் எழுந்த வருத்தத்தால் பூர்ணிமைச் சந்திரன் ஒளி மழுங்கிப்போயிற்று. ஏற்றப்படுகின்ற ஒளி தருகின்ற விளக்கிலுள்ள தீயும் அவ்வாற்ருல் ஒளிமழுங்கியது.

எட்டுரு - நிலன், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், இயமானன் என்ற எட்டும் இறைவன் திருமேனி. உவாமதியம் - நிறைமதி. அட்டும் ஒளி - ஏற்றப்படும் ஒளி.

உருத்திரனைச் சதாசிவனை யொளிர்விந்து நாதத்தைக்
கருத்திறந்த பேரொளியைக் கடப்பாட்டிற் றியானித்தார்
வருத்தமறுஞ் சரியைமுத னாற்பணியு மரீஇயினோர்
திருத்தனவ னுருச்செம்புண் டீரநினைப் பார்போல. 47

கூகைவிழி யொளிவிளங்கக் குணிப்பரிய பலவிழிகட்(கு)
ஆகுமொளி யடக்கமுற வடுத்தவிர வினைநோக்கி
ஏகுதிகொ லெனவியம்பி யிழித்தலர்தூற் றுவபோலச்
சாகைதொறும் வளர்சேக்கைத் தடஞ்சிறைப்புள் சிலம்பினவே. 48

கருமவுத யந்தழைத்துக் கழிகாலைக் கனலியந்தேர்
அருணவுத யஞ்சிறந்த தரசனென விருந்தவன்கன்
றுருவினிறைக் கிடர்செய்த தோர்ந்திலனென் றுயர்கணங்கண்
மருவுமவன் றிசைநகரம் வாளெரியூட் டியதென்ன. 49

வேறு

பனியெனும் பருவந் தாக்கப் பங்கயப் பொய்கை முற்றும்
நனியழ கிழந்தா லென்ன நாயக னிறத்த லோடும்
வனிதைய ரணிநீத் தென்ன மதியொடு முடுக்கண் மாயத்
தனியொடு வான மாங்குத் தவ்வென விருந்த தம்மா. 50

---

47. பரிசுத்தனாகிய இறைவனுடைய திருமேனியிலுண்டான புண் ஆறிப் போக நினைப்பார்போல; சீகண்ட உருத்திரன், சதாசிவன், விந்து, நாதம், பரசிவம் இவர்களை முறைப்படித் தியானித்தார்கள்; துன்பமற்ற சரியை முதலான நான்கு செயல்களையும் பொருந்தினவர்கள்.

திருத்தன் - தீர்த்தன் - தூயன்.

48. கோட்டானின் கண்கள் ஒளிவிளங்க, குறித்தற்கரிய பல கண்களுக்கு உதவும் ஒளியாகிய சூரியன் மறைய, வந்த இராக்காலத்தை நோக்கி, 'போகிறாயோ' என்று இழிவுபடுத்திப் பழிதூற்றுவன போலக் கிளைகள்தோறும் பறவைகள் ஒலித்தன. சாகை - கிளை. சேக்கை - கூடு.

49. கிழ்த்திசைக்கு அரசாக இருந்த இந்திரன், தன் வீட்டுக்கன்று திருமேனிதாங்கிய இறைவனுக்குத் துன்பஞ் செய்ததை யறிந்திலன் என்று சிவ கணங்கள், அவன் வாழும் திசையிலுள்ள நகரங்களுக்குத் தீ மூட்டியதைப்போல, மக்களைக் கன்மத்திலீடுபடுத்தும் உதயம் விளங்கித் தோன்ற வைகறைப் பொழுதிலே தீயாகிற தேரையுடைய அருணோதயம் சிறந்து விளங்கிற்று.

50. பனிக்காலம் வரத் தாமரைத்தடாகம் அழகிழந்தாற் போலவும், கணவன் இறக்கப் பெண்கள் அணிகலன்களைத் துறந்தாற்போலவும், சந்திரனும் நட்சத்திரங்களும் மறைய வானம் தனித்து வெறிச்சென இருந்தது. தவ்வென - வெறிச்சோடி; அதாவது வெறுவிதாகி.

வேறு

கண் ணுக வுருவாகக் கைக்கொண்டோன் றிருமேனி
புண் ணுகத் தனதுருவும் புண்ணுதல் கற்பென்று
மண் ணுத மணியுருவம் வார்குருதி யெழப்புண் ணுய்
விண் ணுர வெழுந்தான்போன் றெழுந்தனன்வெங் கதிர்க்குரிசில். 51

வேறு

நெருங்கிவிண் ணமரர் சால நெடுமலை கொண்டு வாட்டத்
தருங்கதிர் மணியெ வர்க்கும் பயன்படத் தக்க தன்றென்(று)
இருங்கதிர் மணியை யாரு மின்புற வீன்ற தென்ப
கருங்கடன் மருங்கு சூழ்ந்த காமர்பாற் புணரி நாண. 52

நெருப்பிது சுடுமென் றஞ்சி நிறைபுன லள்ளி யோக்கி
விருப்பொடுந் தணிப்பார் மான வெஞ்சுட ரெழுத லோடுந்
தருப்பண மறையி னீதி தவறிலர் செய்யா நின்ருர்
பொருப்பினை வணக்குந் திண்டோட் பூரணன் பாதம் போற்றி. 53

வெய்யவ னுருவ நோக்கி வெருண்டுபைங் குவளைக் கானம்
ஓய்யென மலர்க்கண் மூடிற் றுவாமதிக் கலவிக் காலை
யையென வுறுத்தப் பட்ட வணியிதழ்க் குறியைக் காப்பச்
செய்யவாய் மூடிற் ருேடைத் தேம்புனற் குமுதக் காடு. 54

---

51. கண்களில் ஒன்ருகவும் திருமேனியாகவும் தன்னைக்கொண்ட இறைவனுடைய திருமேனி புண்ணுனதால், தானும் புண்படுதலே கற்புடைமையாம் என்று சூரியன் கழுவப்படாத செம்மணிபோன்ற தன்மேனியில் குருதிசோரப் புண்பட்டு ஆகாயத்தில் எழுந்தனன்.

மண்ணுதமணி - சாணைமுதலிய வினை நிகழ்த்தப்பெருத மாணிக்கம்.

52. தேவர்கள்கூடி மேருமலையை இட்டுக் கலக்க வந்த சிந்தாமணி கௌத்துபம் முதலிய இரத்தினங்கள் எவர்க்கும் பயன்படத் தக்கன அல்ல என எண்ணி, உலகவர் அனைவரும் மகிழத் தினமணியாகிய சூரியனை பக்கத்திலுள்ள பாற்கடலும் நாணக் கருங்கடல் பெற்றது என்று சொல்லுவர்.

53. வேதநீதி பிழையாத அந்தணர் மேருமலையை வில்லாக வளைக்கும் வலியதோள்களையுடைய சிவபெருமான் திருவடிகளை வணங்கிச் சூரியோதயமான உடன் இது நெருப்பு; சுடும் என்று அஞ்சி நிறைந்த தண்ணீரை அள்ளி வீசி விருப்பத்தோடு நெருப்பைத் தணிப்பவர்களைப் போலத் தருப்பணம் செய்தனர். தருப்பணம் - மந்திரம் சொல்லி இருகையாலும் நீரை அள்ளியிறைக்குஞ்சடங்கு.

54. சூரியன் வடிவைக்கண்டு நீலம் செங்குவளையின் காடுகள் விரைந்து கண்மூடின. நீரோடைகளிலுள்ள செவ்வல்லிக்காடுகள், தம்நாயகனுகிய பூரணச்

தணந்தவென் கணவன் வல்லே சார்தர வருளு கென்னுப்
பணந்தழை யரவ மாலைப் பகவனைக் கரங்கள் கூப்பும்
மணந்தவழ் கமல மென்றாழ் வருதலுந் தழுவி மார்பம்
புணர்ந்திடக் கூப்புங் கைகள் பொருக்கென விடுத்து நின்ற. 55

ஆடவர் மணித்தோ ளார வணைந்திராப் பொழுது முற்றும்
பாடகத் தளிர்மென் பாதப் பாவையர் குவவுக் கொங்கை
பீடுமிக் குறுத னேக்கிப் பின்கொடுத் தினைந்தா லென்ன
வாடிய நேமிப் புட்கள் வயின்வயின் மகிழ்ச்சி கூர்ந்த. 56

விளம்பிய காலைப் போதின் விரைகமழ் தீர்த்த மாடி
உளம்பொதி யன்பு பொங்க வுறுகட னாற்றித் தேனு
இளம்பனி மதிவெண் கோட்டின் எரிபுரை சடிலத் தேவை
நுளம்புறு வனத்திற் பூசை முடித்திட நோக்கிற் றன்றே. 57

சந்திரன் தம்மைப் புணர்ந்தகாலத்தில் விரைந்து தந்த இதழ்களிலுள்ள பற்குறியைப் பிறரறியாமல் காப்பதற்காகச் சிவந்த வாயை மூடின.

55. 'எம்மைப் பிரிந்த எம்கணவன் விரைந்து வந்து எம்மைச்சேர அருள் செய்க' என்று திருமாலையும் இறைவனையும் கைகூப்பி வணங்கி நின்ற தாமரைகள் சூரியன்வந்தவுடன் அவனைத் தழுவி அவன் மார்பில் புணருவதற்காகக் கூப்பிய கைகளை விரைந்து விரித்து நின்றன.

பணந்தழை யரவ மால் - படங்களோடு விளங்குகின்ற ஆதிசேடன் மீது சயனித்துள்ள திருமால். என்றாழ் - சூரியன்.

56. இரவுமுழுதும் ஆடவர் தோளைப்புணர்ந்து, பெண்களின் கொங்கைகள் பெருமை யடைதலைக்கண்டு புறங்கொடுத்து வருந்தினாற்போல, இரவு முழுதும் வாட்டமுற்ற சக்கரவாகப் பறவைகள் விடிந்ததும் இடமிடங்கடோறும் மகிழ்ச்சியுற்றன.

பாடகத் தளிர் மென் பாதப் பாவையர் - பாடகம் என்னும் காலணியை அணிந்த தளிர்போலும் மெல்லிய கால்களையுடைய பெண்கள். குவவு - குவிந்த. பீடு - பெருமை. முலைகளுக்குச் சக்கரவாகப்புள் உவமையாதலின் இங்ஙனம் கூறினர். சக்கரவாகம் இரவில் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்து வாட்டமுறுவன இரவில் கணவரைக் கூடிப் பெருத்த கொங்கைகளுக்கு நாணிப் புறங்கொடுத்தன என்பதாம்.

57. காமதேனு மேற்கூறிய விடியற்காலையில் நீராடி மனத்தில் அன்பு பொங்க, நாட்கடன்களை முடித்துக்கொண்டு அரசவனத்தில் சிவபெருமானைப் பூசிக்க நோக்கிற்று.

குளிர்ந்த இளமதியையும், வெண்மையான ஆதிவராகத்தின் கொம்பையும், தீயை ஒத்த சடையையும் உடைய இறைவனை என்க. நுளம்பு - கொதுகு.

தீதுறு சகுனங் காட்டத் தெய்வதச் சூழ னீண்ட
பாதவங் கிடந்த வாறும் படர்துகள் பட்ட வாறும்
பூதலம் புழுதி பட்ட புதுமையு நோக்கி யென்னே
ஈதிவ ணிகழ்ந்த வாறென் றெண்ணியங் கேகுங் காலே. 58

பாலினு லாட்டப் பட்டுப் பளிக்கொளி காட்டும் புற்றின்
மேலெலாஞ் செந்நீ ராடி மிளிர்தலை நோக்கி யிது
மாலினுர் பூசை யாற்றி மந்திரத் தருச்சித் திட்ட
சேலினுர் தடத்துச் செந்தா மரைமல ராகு மன்றேல். 59

பத்தியிற் றனத னண்மிப் பதுமரா கத்தின் குப்பை
மெத்துறச் சொரிந்து பூசை விளைத்ததொன் றுகு மன்றேல்
அத்துமற் றமரர் செஞ்சாந் தணிந்ததா மதுவு மன்றேற்
கொத்துறு மசுர ரன்பிற் கோடித்த செம்பட் டாமல். 60

என்றுசே யிடையே கண்ட விமையவ ருவக்குங் கற்றுன்
மன்றவீ தெனத்தே ருத மனத்தொடு மனவே கத்திற்
சென்றது தேவ தேவர் சிந்தையு நாடொணுத
கொன்றைவார் சடையான் வைகுங் குரூஉமணிப் புற்றின் பாங்கர். 61

---

58. கெட்ட சகுனந்தோன்ற, தெய்வீகச் சூழலான அங்கே பெரிய மரங்கள் விழுந்துகிடப்பதையும், கொடிகள் தூளாகக்கிடப்பதையும், பூமி புழுதி பட்டதையும் கண்டு, 'என்னே ! இங்கு நிகழ்ந்தது' என்று எண்ணி அங்குச் சென்றபோது,

59. பாலபிடேகம் செய்து பளிங்குபோல் ஒளிவீசும் புற்றின்மேலெல்லாம் செங்குருதி பாய்ந்து விளங்குதலைக்கண்டு, இது திருமால் திருமஞ்சனமாட்டி மந்திரங்களால் அர்ச்சித்த செந்தாமரைப் பூக்களாகலாம். அன்றேல்,

சேலின் ஆர்தடம் - சேல்மீன்கள் நிறைந்த தடாகம்.

60. குபேரன் வந்து பதுமராக மணிகளைச் சொரிந்து அன்புடன் பூசித்த ஒன்ருகலாம்; அன்றேல் தேவர்கள் சாத்திய செஞ்சந்தனமாக இருக்கலாம்; அதுவுமன்றேல், அசுரர் கூட்டம் அன்புடன்சாத்திய செம்பட்டாடையாகக்கூடும்.

61. என்று தூரத்தே கண்ட தேவப்பசுவாகிய காமதேனு, இது இன்னது என்று தெரியாத மனத்துடன் புற்றின்பக்கம் மனத்தினும் மிக்க வேகத்தோடு சென்றது.

குரூஉ மணிப்புற்று - நிறம்பொருந்திய மாணிக்கம்போலச் சிவந்தபுற்று.

பாயின குருதி நோக்கிப் பதைபதைத் தன்னே வன்னே
ஆயின செய்தி யென்னே யாரிது செய்ய வல்லார்
தாயினு மினியார்க் கிது சார்வதே யென்று தன்பான்
மேயின மழவுக் கன்றை விழியுறப் பார்த்துச் சோரும். 62

கோட்டொடு குளப்புக் கால்கள் குருதிதோய்ந் திருந்த கெட்டேன்
பாட்டளி முரலுங் கொன்றைப் பசுந்தொடைப் பரம னூர்தந்
திட்டிய புகழ்சான் மெய்யிற் செம்புனல் வெள்ளம் போர்ப்ப
வேட்டைவல் வினையைச் சால விட்டவோ விண்டுப் போந்தேன். 63

பூவினு னுறங்க வாக்கம் பொய்த்ததும் புலவ ரீசர்க்(கு)
ஏவினற் கிசைத்த வாறு மேறுமா மவன்சொ னம்பித்
தாவிலாத் தவஞ்செய் தாய்ந்த தவத்தினுன் கரைந்த வாறும்
மேவியா காய வாக்கு விரித்தது மிதற்கு மன்னே. 64

நன்னலம் பயப்ப துண்டேற் றியவு நல்ல வாகுஞ்
செந்நல மிழப்ப துண்டே னல்லவுந் தீய வாகும்
இன்னவால் வினையி னுக்க மெனினிடை யேது வான
அன்னவர் தம்மை நோவ வழக்கிலை யந்தோ வந்தோ. 65

---

62. பரவிக்கிடக்கின்ற இரத்தத்தைப் பார்த்துப் பதைபதைத்து, ஐயோ ஐயோ! என்ன ஆயிற்று? இதுசெய்தார் யார்? தாயினும் இனிய இவர்க்கு இது விளையலாமா? என்று தன் பக்கலில் உள்ள கன்றைப்பார்த்து மனஞ் சோரும்.

63. கொம்பிலும் குளம்பிலும் குருதிபடிந்திருப்பதைக் கண்டு 'தொலைந் தேன்; சிவபெருமானுடைய திருமேனியிலே இரத்தம்மூட வேட்டைத்தொழில் செய்து பாவத்தைச் சம்பாதிக்கவோ இங்குவந்தேன்'

அளி பாட்டுமுரலும் கொன்றைப் பசுந்தொடைப் பரமனூர் எனக்கூட்டிப் பொருள்கொள்க.

64. பிரமன் தூங்கப் படைப்பு நின்றதும், தேவர்கள் திருமாலுக்கு இச் செய்தியைத் தெரிவித்ததும் திருமால் பேச்சை நம்பித் தவஞ்செய்து இளைத்ததும், அசரீரி சொன்னதும் இதற்காகத்தானே!

புலவர் - தேவர்கள். ஈசர்க்கு ஏவினற்கு - இறைவனுக்குப் பாணமாக விளங்கிய திருமாலுக்கு. ஏறு மாமவன் - இடபவாகனமுமான திருமால். தா - கேடு.

65. நல்வினை பயன் கொடுக்குமாயின் தீச்செயல்களும் நற்செயல்களாம்; செம்மையான நன்மைகளை இழக்கநேரின் நல்லனவும் தீயனவாகும்; வினையின் விளைவு இது. ஆராயின் நடுவில் காரணமானவர்களை நொந்துகொள்வது வழக் கன்று. அந்தோ! அந்தோ!

நல்லுயிர் கோறல் செய்த நன்றியைக் கோற லாதி
புல்லுப பாத கத்துட் பொலிந்ததிண் வினைக ளாகுஞ்
சொல்லுமா பாத கங்க ளவற்றினுந் துயரஞ் செய்வ
வல்லதி பாத கங்க ளவற்றினும் வலிய வாமே. 66

உறுமதி பாத கத்து ளொருவிழி நுதலிற் கொண்ட
மறுவிலிக் கிழைத்த குற்ற மாற்றுறு கழுவா யில்லை
தெறுவலிக் காலற் செற்றோன் சேவடிப் பிழைப்பி னுள்ளும்
பெறுமுரு வூறு செய்த பிழைக்குநேர் பிழையுமில்லை. 67

அப்பிழை படைப்பு வேண்டி யருந்தவ மாற்றி நாயேன்
எப்புல வோருங் கூடி யின்னமு தெடுக்க முன்னி
ஒப்பின்மந் தரத்தை நாட்டி யுரகங்கொண் டலைத்து வேலை
வெப்புநஞ் சடப்பட் டாங்கு மேவினே னென்செய் கேனே. 68

திருவடிப் பிழைத்தல் சற்றே செய்யினுஞ் செய்த பாவி
மருவிய குலத்து முன்னர் வந்திறந் தோரெல் லோரும்
பொருநின ரிருக்கின் றோரும் பொருந்தமேல் வருவோர் தாமும்
ஒருவரு நிரய முற்று மூழிகள் பலவுந் துய்ப்பார். 69

---

66. நல்ல உயிர்களைக் கொல்லுதல், செய்ந்நன்றி மறத்தல் முதலான புல்லிய துணைப்பாதகங்களில் சிறந்தன வலிய வினைகளாகும். சொல்லப்பெற்ற மாபாதகங்கள் அவற்றினும் துன்பந்தருவன. வலிய அதிபாதகங்கள் அவற்றின் வலிமை வாய்ந்தனவாம்.

பாதகங்கள் உபபாதகம், மாபாதகம், அதிபாதகம் என முத்திறப்படுதலும், அவற்றினும் சிறந்தது சிவனுக்குப் பாதகஞ்செய்தல் என்பதும் குறிக்கப்பெற்றன.

67. அதிபாதகங்களுள் சிவபெருமானுக்குச் செய்த தீமைக்குப் பிராயச் சித்தமே இல்லையாம். அங்ஙனம் சிவபெருமானுக்குச் செய்த தீமைகளுள்ளும் திருமேனியைச் சிதைத்த குற்றத்திற்கு நிகரான குற்றம் இல்லை.

தெறுவலிக்காலன் - பிறரை வருத்தும் வலிமையையுடைய எமன்.

68. தேவர்கள் அனைவருங்கூடி இனிய அமுதம் எடுக்க எண்ணி, ஒப்பற்ற மந்தரமலையை மத்தாகநாட்டி, வாசுகி என்னும் பாம்பைக் கயிருகக் கட்டிக் கடைந்து, கடலில் எழுந்திருந்த நஞ்சினல் வருத்தப்படுத்தப் பட்டதுபோல நாயேன் படைப்புத்தொழிலை விரும்பித் தவஞ்செய்து, சிவனது திருமேனியைச் சிதைவுபடுத்திய பெரும் பாவத்தை அடைந்தேன்; என்செய்வேன்.

புலவோர் - தேவர். உரகம் - பாம்பு, வாசுகி.

69. இறைவன் திருவடிகளுக்குச் சிறிது பிழை செய்யினும், அங்ஙனம் செய்த பாவி பிறந்த குலத்தில் முன்பே பிறந்திறந்தவர்களும், அந்தக் குலத்தில்

நன்குற நமக்கு நாடி யிருத்தலு நவையே யாகும்
மின்குடி கொண்ட மேனி விழுப்புணுக் காற்றே னுற்றேன்
என்குல மிறக்க வின்றே யானுமிங் கிறுக வென்னுத்
தன்குலக் கன்று மாழ்கத் தரையிடை விழுந்த தன்றே. 70

நாசியி னுதிரஞ் சோர நனிதலை நிலத்தின் மோதுங்
காசினி குழியக் கால்கள் கதுமென எடுத்துத் தாக்கும்
பூசிய நீற்றுத் தன்மெய் புண்கொளப் புரண்டு கொட்கும்
ஆசிடை யுயிர்ப்பு விங்கி யடங்கமூர்ச் சித்த தம்ம. 71

நெடிதுபோ தவச மாக நிலத்தெதிர் கிடந்த தாயைப்
படியின்மே னின்ற கன்று பரிவொடு நக்கா நின்ற(து)
அடியினூ புரங்க ளார்ப்ப வாடிய வழக னேக்கி
நொடியின்வா னிடையே நின்ற னேன்மைசா லறவெள் ளேற்றின். 72

இன்று பிறந்து வாழ்கின்றவர்களும், இக்குலத்தைப் பொருந்த மேல் பிறக்க இருப்போர்களும் நீங்கற்கு அரிய நரகமுழுவதிலும் அகப்பட்டுப் பலஊழிக்காலம் வருந்துவார்கள் என்றவாறு.

பொருநினர் - பொருந்தி இருப்பவர்கள். ஒருவ அரும் - நீங்கற்கரிய. நிரயம் - நரகம்.

70. இக்கொடிய பாவத்தை நன்றாக ஆராய்ந்து இருத்தலும் நமக்குத் தீமையாம்; மின்னல் குடிகொண்டாலொத்த ஒளியான திருமேனியில் பெரிய புண் ணுற்றமைக்கு ஆற்றேன்; ஆற்றேன்; என் குலமே அழிக; இன்றே யானும் அழிக; என்று தன் குலத்திற்கு உரிய கன்று மயங்கத் தரையில் வீழ்ந்தது.

விழுப்புண் - பெரிய புண். இறக்க என்பதனைச் செயவெனெச்சமாக்கி குலம்கெட யானும் அழிவேனாக என்றலும் ஒன்று. மாழ்க - மயங்க.

71. மூக்கிலிருந்து இரத்தம் சொரியத் தலையைப் பூமியில் மோதிக்கொள் ளும்; கால்களைத் தூக்கிப் பூமி குழிபட உதைத்துக்கொள்ளும்; திருநீறுபூசிய தன் மேனி புண்படப் புரண்டு புரண்டு சுழலும்; விரைவாக இடையில் பெருமூச்சு விட்டு அதுவும் அடங்க மூர்ச்சையுறும்.

காசினி - பூமி. ஆசு இடை உயிர்ப்பு விங்கி - விரைவாக இடையிலே பெரு மூச்சு விட்டு. அம்ம - இரக்கக்குறிப்பு இடைச்சொல்.

72. நீண்டநேரம் தன் வசமற்றுத் தரையிற்கிடந்த தாய்ப்பசுவைப் பூமி மேல்நின்ற கன்று அன்போடு நக்கிற்று; திருவடியில் வேதச் சிலம்புகள் ஒலிக்கத் திருநடம்புரியும் சுந்தர தாண்டவமூர்த்தி அதனைக்கண்டு, வானத்திலே பெருமை சான்ற இடபவாகனத்தின்மீது நொடிப்பொழுதில் காட்சிவழங்க நின்றனன்.

படி - பூமி. பரிவு - அன்பால் விளைந்த துயர். நூபுரம் - சிலம்பு. நோன்மை- பெருமை. அறவெள்ளேறு - தருமமே வடிவான வெள்ளிய இடபம்.

வேறு

பாரிட நெருங்கமலர் பண்ணவ ரிறைப்ப
வாரண முழங்கவடர் பல்லிய மியம்ப
வாரணி முலைப்பெணிட மன்னின ளிருப்ப
நீரணி வனத்தின்வெளி நின்றருளு நாதன். 73

ஓங்குமொலி யானுமிடை யும்பர்திர ளானுந்
தாங்கரு வெருட்கொடு தளர்ந்துவிழு தாயை
நீங்கியல மந்துநெடி தோடிய திளங்கன்(று)
ஆங்கதனை நோக்கியயன் மேல்விழி யளித்தான். 74

அந்தணன் வணங்கியரு கேமெல நடந்து
கொந்துபடு பாசறுகு கொய்துகர நீட்டிப்
பந்தமுற வங்கைவளர் பாசமிட நிட்டுத்
தந்தன னடத்தியொரு சாமிதிரு முன்னர். 75

---

73. ஆன்மநாதராகிய சிவபெருமான், பூதகணங்கள் நெருங்கி நிற்கவும், தேவர்கள் பூமாரி பொழியவும், வேதங்கள் முழங்கவும், நெருங்கிய பல வாத்தியங்கள் ஒலிக்கவும், கச்சணிந்த முலையினையுடைய உமாதேவியார் இடப்பாகத்தில் எழுந்தருளியிருக்கவும், மழைநீர் மிகுந்த காடாகிய வானத்தின் வெளியிலே நின்றருளுவர்.

பாரிடம் - பூதகணம். பார் இடம் நெருங்க - பூமியிடம் செறிய மலரைத் தேவர்கள் பொழிய எனலுமாம். ஆரணம் - வேதம். நீரணிவனம் - மேகஞ் சூழ்ந்த வானம்.

74. மிக்க ஒளியாலும், அங்கே திரண்டுள்ள தேவர்கள் கூட்டத்தாலும், பொறுக்க இயலாத மருட்சியைக்கொண்டு தள்ளாடித் தளர்ந்துவிழுகின்ற தாய்ப் பசுவைப் பிரிந்து வருந்தி நீண்டதூரம் ஓடிச்சென்றது இளங்கன்று. இறைவன் அக்கன்றைப்பார்த்து கருணை மிகுந்து பிரமனை நோக்கினர்.

இடையும்பர் - நெருங்கிய தேவர்கள். வெருள்கொடு - வெருண்டு. அலமந்து - வருந்தி. அயன் - பிரமன்.

75. பிரமன் சிவபெருமானை வணங்கி, கன்றின் பக்கல் மெல்ல நடந்து சென்று, அறுகம்புல் கொத்தைப் பறித்து நீட்டி, கட்டுறக் கையிலே உள்ள கயிற்றைக் கழுத்திலே பூட்டி ஒப்பற்ற சிவபெருமான் திருமுன் நடத்தித்தந்தனன்.

அந்தணன் - பிரமன். கொந்து - கொத்து. பாசறுகு - பசுமையான அறுகு. பந்தமுற - கட்டிலகப்பட. பாசத்தால் பந்தமுறக்கட்டி என வேறும் ஒரு பொருள் தோன்றநிற்றல் காண்க. சாமி - எல்லாவற்றையும் உடைமையாகக்கொண்டவன்.

அங்கணன் விழிக்கடை யளிப்பவரு ணந்தி
அங்கைகொடு தட்டியெழு கென்றறைய வூழி
அங்கியுமிழ் வேல்வல மணிந்தகும ரேசன்
அங்கணொழு கும்புன லகங்கைகொடு மாற்ற. 76

ஐந்துகர னண்ணலருள் செய்யவுட லந்தை
வந்துபுழை வார்கையறன் மல்குதுளி யாக
வெந்துயரின் மூழ்குமதன் மெய்முழுது முய்த்தான்
நந்தியது சோகமுயிர் நந்தியது கற்ருன். 77

சொறிந்தன னெழுந்தசுரை யானுடல் வலாரி
மறிந்துலவு காற்றினிறை வன்றுக டுடைத்தான்
செறிந்துபுன லாட்டிவரு ணன்செல முகுந்தன்
அறிந்திறைவர் தாளணிய தாகவுறு வித்தான். 78

பண்டறிகி லாதபரமன் படிவ மாரக்
கண்டதுள நெக்கது கனற்கண்மெழு கென்ன
விண்டவிழி நீர்பொழிய மெய்ம்மயிர் பொடிப்ப
மண்டனில் விழுந்துவலம் வந்துதுதி செய்யும். 79

---

76. சிவபெருமான் கடைக்கண்ணுல் குறிப்பித்தருளத் திருவருளே வடிவான நந்தியம்பகவான் உள்ளங்கையால் தட்டி 'எழுக' என்று சொல்ல பேரூழிக் காலத்துத் தீயைக்கக்கும் வேலாயுதத்தை ஏந்திய குமாரக்கடவுள் பசுவின் கண்களிலிருந்து ஒழுகும்நீரைக் கையால் துடைக்க.

அங்கணன் - சிவபெருமான். ஊழியங்கி - ஊழிக்காலத்துத் தீ. வலம் - வலக்கரத்து.

77. சிவபெருமான் அருள அக்குறிப்பை உணர்ந்த விநாயகக்கடவுள் அதன் உடம்பைத் தடவிக்கொடுத்து, தம் துதிக்கையின் துவாரத்திலுள்ள நீரால் கொடிய துன்பத்தில் மூழ்கியுள்ள அந்தப் பசுவின் உடல்முழுதும் தெளித்தார். உடனே கன்றோடு கூடிய பசு துன்பம் அகன்றது. உயிர் தழைத்தது.

தைவந்து - தடவி. புழை - துவாரம். அறல் - நீர். நந்தியது - ஒழிந்தது. நந்தியது - தழைத்தது என முறையே பொருள்கொள்க. கன்று+ஆன்=கற்ருன்.

78. இந்திரன் பூமியைவிட்டு எழுந்துநின்ற காமதேனுவினுடைய உடலைச் சொறிந்துகொடுத்தான். உலவுகின்ற காற்றின் தலைவனுகிய வாயுதேவன் மீண்டும் தூசியைத் துடைத்தான். வருணன் நெருங்கி நீரால் குளிப்பாட்டிச் செல்ல, திருமால் இதை அறிந்து சிவபெருமான் திருவடிகளின் பக்கத்து ஒட்டிச்சென்ருர்.

79. இதுவரை காணப்பெருத சிவபெருமான் திருமேனியை நன்ருகத் தரிசித்தது; மனம் நெகிழ்ந்தது; நெருப்பில் அகப்பட்ட மெழுகுபோலத் திறந்த

வேறு

தண்ணார் மதிசூ டியசங் கரனே
விண்ணோர் பணிகின் றவிழுத் துணையே
அண்ணா வருளே யமுதே யளியே
மண்ணா வினையேற் கெளிவந் தனையே. 80

ஆரு டியவார் சடையந் தணனே
நீரு டியமே னியினின் மலனே
ஏரு டியநீள் கொடியெம் பெருமான்
மாரு வினையேற் கெளிவந் தனையே. 81

ஏஎ யெனவேள் வியிறுத் திடுநாட்
காயா தபனார் பல்கழற் றினவா
வீயா தவிண்ணோர் தபவீட் டினவா
மாயா வினையேற் கெளிவந் தனையே. 82

அடியா ரகமே குடியா மொளியே
படிநா டரிய பரதெய் வதமே
முடியா முடிவே முதலா முதலே
மடியா வினையேற் கெளிவந் தனையே. 83

கண்களிலிருந்து நீர்சொரிய, உடல்முழுதும் புளகங்கொள்ள பூமியில் விழுந்து வணங்கி, வலம்வந்து துதிசெய்து நிற்கும்.

இதுமுதல் பன்னிரண்டு பாடல்கள் காமதேனு இறைவனைப் போற்றிய துதிப்பாடல்கள்.

80. அண்ணா அருள் - அணுக இயலாத திருவருளே. அண்ணா - மூத்தோனாக நன்னெறிப்படுத்துபவனே எனலுமாம். மண்ணா வினையேற்கு - கழுவப் படாத வினைகளையுடைய எனக்கு.

81. ஆறு ஆடியவார்சடை - கங்கையுலவும் நீண்டசடை. நீறு - திருநீறு. ஏறு ஆடிய நீள்கொடி - இடபம் வெற்றியுடன் விளங்கும் நீண்ட கொடி.

82. ஏஎ யென - விரைவாக. வேள்வி - தட்சயாகத்தை. காய் ஆதபனார் - எரிக்கின்ற சூரியன். சூரியன் பல்லையுடைத்தவரே என்பதாம். வீயாத - அழியாத. தப - கெட. வீட்டினவா - அழித்தவனே.

83. படி - ஒப்பு. முடியாமுடிவே - தாம் முடிவெய்தாது பிறர்க்கு முடிவாக உள்ளவனே! முதலாமுதலே - பிறரால் அளிக்கப்படாத இயல்பான முதன்மையை யுடையவனே!

கங்கா ளமணிந் தகரும் புயனே
சிங்கா மலர்மெல் லணையான் சிரமொன்(று)
அங்காந் துரையா டவறுத் தவனே
மங்கா வினையேற் கெளிவந் தனையே. 84

அறிவா மமலே சனெடம் பிகையே
வெறியார் கடம்விழ் கரடத் தவனே
பொறிமா மயிலூர் தருபுண் ணியனே
மறியா வினையேற் கெளிவந் தனிரே. 85

வளிவந் துளர்போ திவனத் திடையே
களிவந் திலதான் கழிவுற் றதெனத்
தெளிவந் தவர்செப் பலுரு வகையே
எளிவந் தனைபோ லுமெனக் கிறைவா. 86

அருண்மே னியளித் தவர்செய் தொழிலுள்
வெருளா துபடைப் புவிதிப் பலென
மருளான் மதியெண் ணிவலித் தமையால்
இருளார் பழிபா வமிணங் கினவே. 87

கெட்டே னடிகேள் கிளர்பொன் னுருவம்
பட்டு டுருவப் படர்காற் சுவடு
கெட்டு சிநிகர்த் தமருப் புழவும்
ஒட்டா தவர்நே ரவுறுத் தினனே. 88

---

84. கங்காளம் - முழு என்பு. திருமாலின் தசைகழிந்த முழு என்பு. சிங்கா- கெடாத. மலர் மெல்லணையான் - பிரமன். அங்காந்து - வாய்திறந்து.

85. வெறி - மணம். கடம் - மதநீர். கரடம் - மத்தகம்.

86. வளி - காற்று. போதிவனம் - அரசவனம். களி - மகிழ்ச்சி. தெளிவந் தவர் - ஞானிகள்.

87. என்னுடைய அருள்வடிவான மேனியைப்படைத்த இறைவன் செய் கின்ற தொழிலில் படைப்புத்தொழிலை யான் வெருளாது இயற்றுவேன் என மயக்கவுணர்வால்வந்த விதி செலுத்தியமையால், ஆணவ இருள் வடிவான பழியும் பாவங்களும் வந்தடைந்தனவே.

88. அடிகளே! கெட்டேன்; காலின் சுவடு விளங்குகின்ற பொன்போன்ற மேனியிலே பட்டு ஊடுருவிச்செல்லவும், நீளமான ஊசிபோன்ற கொம்பு உழுது புண்படுத்தவும், பகைவரை ஒப்ப வருத்திவிட்டேனே.

கருணைக் கடலா தலினீ கடியா(து)
இருமைக் குமளிப் பவெதிர்ந் தனையால்
அருமைத் திருமே னியணங் கவளெப்
பொருள்கொண் டுபொறுத் தனள்பூ ரணனே. 89

கணவன் வழிகா ரிகையா ரதனுன்
மணமென் குழன்மா துபொறுத் தலுமாம்
அணவுங் கணநா தர்முனு தவர்தாங்
குணம்யா வதுகொண் டுபொறுத் தனரே. 90

தலைவன் வழியல் லதுசார்ந் தவரும்
உலைவொன் றுமுறுத் தல்செயா ரதனுல்
நிலைநின் கருணைப் பெருநீர் மையறிந்(து)
அலைசெய் திலரான் றகணத் தவரே. 91

அன்னு பிழைசெய் துயிர்வாழ்க் கையுமிங்
கென்னு மதனு லெனையின் னருளால்
என்னு ருயிருள் ளளவுந் தழலுங்
கொன்னுர் நிரயங் குடியாக் குதியால். 92

---

89. கடியாது - வெறுக்காமல். இருமை - இம்மை, மறுமை. அருமைத் திரு மேனியில் பாதியாக இருக்கின்ற உமாதேவி எங்ஙனம் எப்பொருள்கொண்டு பொறுத்தாள் என்பதாம்.

90. பெண்கள் தத்தம் கணவன்மார் எண்ணப்படியே நடப்பர்; ஆதலினுல் மணம் வீசுகின்ற மெல்லிய கூந்தலையுடைய உமாதேவி பொறுத்தலும் கூடும். கலந்த கண நாதர் முதலானோர் எக்குணத்தை எண்ணிப் பொறுத்தனர்.

91. சார்ந்த அடிமைகள், தலைவன் சொற்படியன்றி ஒன்றும் வருந்தார். அதனுல் நிலைத்த நின் கருணையினது பெருந்தன்மை அறிந்து சிவகணத்தவர்கள் வருந்திலர்.

92. தாயைப் போன்றவனே! தவறு செய்து உயிர் வாழ்தலால் இவ்வுல கத்தில் ஆகும் பயனென்னவாம். அதனுல் என்னை இனிய அருளாலே உயிருள்ள அளவும் கொளுத்துகின்ற அச்சமிகுந்த நரகத்தை குடியாக்குகின்ருய்.

நிரயம் - நரகம். கொன் - அச்சம்.

வேறு

நடுநடுத் தின்னண நவிற்று மாவினைக்
கடுமிடற் றிறைவர்கண் ணளித்துத் தேற்றுவார்
விடுவிடு கவலையை விதிர்ப்புற் றஞ்சலை
கொடுநெடும் பிழையினை யகத்திற் கொண்டிலேம். 93

மன்றநீ புரிந்திலை மதவி ளங்குழக்
கன்றறி யாமையிற் கண்ட திப்பிழை
ஒன்றுநின் பரிவினு ளுளத்திற் கண்டிலம்
அன்றியு மடியவர் குற்றங் காண்கிலேம். 94

குளப்படிச் சுவடும்வன் கோட்டி னேறுநம்
வளப்படு முடிக்கணி மதியி னுக்கினேம்
உளப்படு முமைமுலைச் சுவடொண் கைவளைத்
திளைப்புறு தழும்பும்போன் மகிழ்சி றத்தலின். 95

ஒள்ளிய விவ்வடை யாள மும்பர்சூழ்
வெள்ளியங் கிரிமிசை விளங்கி லிங்கத்து
நள்ளுற வணிந்தன நவிற்றி லிங்கங்கள்
தெள்ளிய வுலகம்வே றின்மை தேறவே. 96

---

93. நடுநடுங்கி இவ்வாறு கூறும் காமதேனுவை நீலகண்டராகிய சிவ பெருமான் திருக்கடைக்கண் சாத்தி தேறுதல் கூறுவார். கவலையை விடு; விடு; நடுங்கி அஞ்சாதே! உன் கன்றுசெய்த கொடிய பெரிய தவற்றினை நம் மனத்தில் கொண்டிலேம்.

94. இப்பிழையைப் பெரும்பாலும் நீ புரியவில்லை. மதங்கொண்ட இளைய கன்று அறியாமையால் செய்தது. ஒருமைப்பட்ட உள்ளன்பால் எம்மனத்து அப் பிழையைக் கண்டிலேம். அன்றியும் அடியார்கள் செய்த குற்றங்களைப் பாரோம் அல்லவா?

95. இவ்வடுக்கள் எம்மனத்திற்குகந்த உமாதேவியாரின் முலைத்தழும்பும் வளைத்தழும்பும்போல மகிழ்ச்சி விளைவித்தலான் குளம்படியின் சுவட்டையும், கோம்பால் உண்டான காயத்தையும் பிறைமதியைப்போல எம்முடிக்கு அணி யாக்கினேம்.

96. விளக்கமான இந்த அடையாளத்தை தேவர்கள் வலம்வரும் வெள்ளி யங்கிரிமீது விளங்கும் சிவலிங்கத்தின் நடுவே அணிந்தோம்; புகழப்படுகின்ற இலிங்கங்கள் வேறு சிறந்தன இல்லை என்று உலகம் தெளிந்துய்வதற்காக.

நள் - நடு.

இவ்வடை யாளங்கண் டிறைஞ்சி யேத்தினர்
ஔவிய மனத்தின ரேனு மன்னவர்
பௌவமென் றயிர்ப்புறும் பவத்தி னீங்கிப்போய்ச்
செவ்விய முத்தியைச் சேர்வர் திண்ணமே. 97

ஆதலி னின்பரி வகற்றிச் சூழலின்
மாதவ மாற்றிநீ வாடு கின்றனை
ஏதுளத் தெண்ணிய தியம்பு கென்னலுங்
காதலி னுரைத்திடுங் காம தேனுவே. 98

வாழிநின் பொற்கழல் வாழி யென்பிழை
ஊழியு நிரயம்புக் குழந்துந் தீர்ப்பதோ
பாழிமால் விடத்தினைப் பருகி னாலென
ஏழையேற் கிரங்குநின் கருணை யீட்டமே. 99

கடையனே னுய்ந்தனன் கன்று முய்ந்ததிங்
கிடையரு தென்குல மென்று முய்ந்ததால்
உடையவ பிழைபொறுத் துவத்தி மற்றினி
அடைவதுன் பாலெனக் கற்புச் செல்வமே. 100

---

97. இங்கு இவ்வடையாளங்களைக் கண்டு வணங்கின மக்கள் வஞ்சக மனத்தினராயினும் பிறவிக்கடலை நீந்திச் செம்மையான முத்திக்கரையை அடைவர்; இது உறுதி.

ஔவியம் - வஞ்சனை. பௌவம் - கடல். அயிர்ப்புறும் - ஐயப்படத்தக்க. பவம் - பிறவி.

98. ஆதலால், உன் துன்பத்தைப்போக்கி, இந்த மலைச்சூழலிலே பெருந் தவம் செய்து நீ வாடுகின்றாய்; நீ உன் மனத்து எண்ணியது யாது? சொல்லுக என்று இறைவன் கேட்டலும், காமதேனு விருப்பொடு சொல்லும்.

99. நின் பொன்னடி வாழ்க; வாழ்க; மகாப்பிரளய காலம்வரை நரகத்திற் புகுந்து வருந்தியும் என் பிழை தீர்க்கத்தக்கதோ? மிகப் பெரிய விடத்தைப் பருகினாற்போல ஏழையேனாகிய அடியேற்கு இரங்கிய நின்திருவருளின் கூட்டம் நன்று.

பாழி - பெருமை.

100. கடைப்பட்ட நாயேன் உய்ந்தேன். என் கன்றும் உய்ந்தது. இடையருது என் குடிமுழுதும் உய்ந்தது. என்னை உடைமையாகப் பெற்றவனே! என் பிழைகளைப் பொறுத்து மகிழ்தி. இனிமேல் அடியேன் தேவரீர்பால் அடைய விரும்புவது நின்பால் நீங்காத அன்புச்செல்வம் ஒன்றுமே.

வானவர் சூழ்ச்சியின் மாலங் கேவலின்
ஆனமர் கொடியின யகில மாக்கலும்
யானுற வருளுதி யெனலுந் தேனுவுக்(கு)
ஏனவெண் கொம்பின னியம்பு கின்றனன். 101

பத்தியு மளித்தனம் பலருங் காணிய
இத்தலத் திப்பொழு தெமது நாடகங்
கைத்தலக் கனியெனக் காட்டக் காணுதி
முத்தியும் வழங்குது முடிவிற் றேனுவே. 102

வேறு

காம தேனுபுர மென்ன விந்நகரி காம மல்குபெயர் கொள்ளவும்
நீம னாதரவின் வைக லானரசி னீடு சூழலிது பட்டியென்
நாம மேவவு நமக்கு மப்பெயர்மு னட்டி நாதனென வோதவும்
ஏம மாருலக முற்று மின்பமுற விண்டு னக்குவர மாக்கினும். 103

நேச மல்கிவழி பாடு செய்குநரை நீடு முத்தியி னிறுத்துநிர்ப்
பீச மாநகர மீதி தன்கணுயர் பெற்ற மேவிழைவு முற்றுறத்
தேசு லாவுபொரு ளாதி நல்குவது செய்தி லேநகர முத்தியே
வீசு மென்பது விளக்க நின்றவொரு சான்று முண்டது விளம்புதும். 104

---

101. இடபக்கொடி உடையவனே! தேவர்களின் சூழ்ச்சியால் திருமால் ஏவியதால், உலகத்தைப் படைக்கும் வன்மையையும் அடியேன்பெற அருளுவாயாக என்று கூறுதலும், இறைவன் பசுவே கேள் எனச் சொல்லத்தொடங்கினன்.

கேழல்வெண் கொம்பினன் - பன்றியின் வெண்மையான கொம்பையுடையவன்; இறைவன். பூமியை இரணியாக்கனிடமிருந்து காத்த ஆதிவராகம் தருக்கியதாக அதனைவென்று அதன்கொம்பை மார்பிலணிந்தார் என்பது வரலாறு.

102. காமதேனுவே உனக்கு அன்பை அளித்தோம்; பலரும் காண்பதற்காக இத்தலத்திலேயே இருந்து இப்பொழுது எமது நடனத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டக் காண்பாயாக. முடிவில் உனக்கு முத்தியையும் வழங்குவோம்.

103. இவ்வூர் காமதேனுபுரம் என விருப்பம் மிக்க பெயரான் வழங்கவும் நீ நிறைந்த அன்போடு இங்கிருப்பதால் அரசவனமாகிய இது பட்டியென்ற பெயரைப் பொருந்தவும், நமக்கும் அப்பெயரை முதலிலேயுடைய பட்டிநாதன் என்ற பெயர் வழங்கவும் இன்பம்சேர்ந்த இவ்வுலகமுற்றும் மேலும் இன்பத்தை அடைய உனக்கு இங்கே வரமளித்தோம். காமம் - ஆசை. மன் ஆதரவின் - நிலைபெற்ற அன்பால். ஏமம் - இன்பம்.

104. அன்பு நிறைந்து வழிபடுகின்ற அடியார்களை என்றும் மாருத முத்தியில் நிலைநிறுத்துகின்ற நிர்ப்பிஜ நகரமாகிய இதில் தவத்தால் உயர்ந்து விளங்கு

வடுக ரெண்மருள் வலம்பு ரிந்துமலி தோகை ஞாளியெனும் வாகனம்
விடுதி செய்தவொரு ஞான நல்வடுகன் மேவி யிந்நகரி காவல்பூண்
டிடுவ னீங்கினிது காண்டி யாதலி னிணர்த்த கோடுக ளொசிந்தெழக்
கடுவ னின்றுகளு மிவ்வ னத்துனது காம நல்குதல் கணித்திலம். 105

வரும்பி றப்பினல மெய்த நிற்குமறம் வந்த விப்பிறவி யின்னலந்
தரும்பெ ரும்பொருள் பரந்த காமமிவை தம்மை நாடிய தவங்களும்
அரும்பு மெய்யொளி யளிக்கு மிந்நகரி ஊந்தி யோசனை தெனுதுற
விருந்து ணர்ப்பொழில் வராக நீள்வரை யிருந்த தானைமலை யென்பரே.106

தூம்பு றுங்கைமத வேழ மேய்ந்துபயில் சோலை சூழ்ந்தவத னுச்சியின்
ஆம்ப ரத்தினடி நின்றெ ழுந்தொழுகு மாம்ப ராவதி வடாதினில்
தேம்ப ழுத்துவரு காவி ரிக்குடதி சைக்க ணூர்த்துலவு காஞ்சியென்
றோம்பு கின்றகுடி ளைத்தெ னுதொருச பீச மாநகர முண்டரோ. 107

கின்ற பசுவே உன்னுடைய விருப்பம் நிறைவேற ஒளிமிக்க பொருள் முதலான வற்றை ஏழையர்க்குக் கொடுப்பாயாக. முத்தி நகரத்தை இறைவன் உனக்கு அளிக்கும் என்பதை விளக்க உனக்கு ஒரு சான்றும் இருக்கின்றது. அதனைச் சொல்லுவோம்.

நிர்ப்பீஜமாநகரம் - மறு பிறவிக்குக் காரணமாகிய வினை வித்து அற்ற பெரிய தலம். பெற்றம் - பசு.

105. பைரவர் எண்மருக்குள் நாய் வாகனத்தை விட்ட ஞானபைரவர் எழுந்தருளி இந்நகரைக் காவல் பூண்பர். இதனை இங்குக் காண்பாயாதலின் பூங்கொத்துக்களோடு கூடிய கிளைகள் தாழ்ந்தெழ ஆண்குரங்குகள் கிளைகளி னின்று சுற்றுகின்ற இந்த அரசவனத்தில் உன் விருப்பத்தை உதவ எண்ணி னேம் அல்லோம்.

வடுகர் - பைரவர். வலம்புரிந்து மலிதோகை ஞாளி - வால் வலப்பக்கமாக நிறைந்துள்ள நாய்வாகனம். தோகை - வால். ஞானபைரவருக்கு நாய்வாகன மில்லாமை அறியத்தக்கது. இணர்த்த - பூங்கொத்துக்களோடு கூடிய. கடுவன் - ஆண்குரங்கு. காமம் - விருப்பம். கணித்திலேம் - எண்ணிலேம்.

106. இனி வரப்போகும் பிறவிகளில் இன்பம் எய்த உதவியாகும் அறமும், வந்த இப்பிறவியில் இன்பத்தைத் தரும் பெரும்பொருளும், எல்லா உயிர்களிடத் தும் பரந்துள்ள காமமுமாகிய இவைகளை விரும்பிச் செய்யும் தவங்களும் தோற்று விக்கிற உண்மையான ஒளியை அளிக்கும் இந்நகர்க்கு ஐந்துயோசனை தெற்கே, பெரியதுணர்கள் நிறைந்த பொழில்கள் சூழ்ந்த, பன்றிகள் நீண்ட மலையிலே வாழ்வதாகிய ஆனைமலை என்பர். துணர் - பூங்கொத்து.

107. துதிக்கைகளோடுகூடிய மதயானைகள் மேய்கின்ற சோலைகள்சூழ்ந்த அம்மலையின் உச்சியிலே மாமரத்தினடியிலே யிருந்து உண்டாகி ஓடிவரும் ஆம்ப ராவதியாற்றின் வடதிசையில், தேமாமரங்கள் பழுத்து உதிர்ந்து வருகின்ற

வன்னி நீள்வன மிருத்த லானஃது வஞ்சி யென்றுபெயர் மேவிய
தன்ன மாநக ரடுத்து நம்முருவி னேது பூசைபுரி கிற்றியாங்
குன்ன வாவினை நிரப்பு துங்கடிதி னென்று ரைத்தருளி யும்பரார்
துன்னு சூழலிடை யார ணங்கடுதி செய்ய மாநடன மாடினன். 108

நந்தி மத்தள முழக்க வீணைகொடு நார தாதியிசை பாடநீள்
இந்து வென்றநுத லம்மை தாளமிசை யக்க ரத்தின்முறை யொத்திட
எந்தை போற்றிசய போற்றி போற்றியென யாவ ருங்களி துளும்புற
அந்தி வண்ணனுயர் பிப்பி லப்பொதியி லாடல் கண்டதுயர் பெற்றமே.109

போதி யம்பல நடித்து நாதர்புனி தச்சி வக்குறியு ளாயினர்
சோதி மல்குநட னச்சு வைக்கட லழுந்து கின்றசுரர் கோதன
மாதி லிங்கமறை புற்று மற்றுமடி யோட கழ்ந்துவெளி கண்டது
கோதி லாதநிதி யஞ்ச னத்தவர் குறித்த கழ்ந்துவெளி கண்டென. 110

இட்ட காற்சுவடு நீண்ட கோடுழுத வேறு நல்லவடை யாளமாம்
பட்டி நாயகர்வன் மீக நாதர்பக ராதி லிங்கமக லாதவர்க்
கொட்டு மன்புள மயற்பு றத்தொழி விசைந்தி லாமைசில நாளுற
முட்டி லாதவழி பாடு முன்னரின் முடித்தி ருந்திசைவு கொண்டபின். 111

காவிரியாற்றுக்கு மேற்கே காஞ்சியாற்றுக்குத் தெற்கே ஒரு வித்துடன் கூடிய நகரம் உண்டு. குடிரை - ஆறு. ஆம்பரம் - மா. சபீச மாநகரம் - கருவூர். பிசம் - கரு.

108. வன்னிவனம் இருப்பதால் அது வஞ்சிமாநகர் எனப்படுவது. அந் நகரையடைந்து நம் உருவாகிய சிவலிங்கத்தில் அழகாகப் பூசனைசெய். அங்கே உன் விருப்பத்தை நிறைவேற்றுவோம் என்று கூறித் தேவர்கள் கூட்டத்தின் நடுவில் வேதங்கள் ஏத்த மகாநடனத்தைச் செய்தார் இறைவன்.

109. நந்தி மத்தளம் கொட்ட, நாரதாதி முனிவர்கள் வீணையைக் கொண்டு இசைபாட, பிறைமதியை வென்ற நெற்றியையுடைய உமாதேவியார் தாளத்தின் மேல் அக்கரங்களின் முறைகட்கு இயைய ஒத்துத்தாளமிட, எந்தை போற்றி சயபோற்றி, என அனைவரும் மகிழ்ச்சி ததும்ப, சந்தியாகாலத்து வானம்போலும் சிவந்த நிறமுடைய சிவபெருமான் அரசவனத்தம்பலத்திலாடும் நடனத்தைக் கண்டது காமதேனு. பிப்பிலப்பொதியில் - அரசம்பலம்.

110. அரசம்பலத்தில் நடித்துச் சிவபெருமான் தூய்மையான சிவலிங்கத் துள் மறைந்தருளினர். ஒளிமயமான திருநடனத்தின் சுவைக்கடலில் அழுந்து கின்ற தேவர்களும், கோதனமும் மையணிந்தவர்கள் புதையலையறிந்து தோண்டிக் கண்டதுபோல, ஆதிலிங்கத்தை மறைத்திருந்த புற்றை முழுதும் அடியோடகழ்ந்து வெளிசெய்தது.

111. தன்கன்றிட்ட குளம்புச்சுவடும், நீண்ட கொம்புழுத புண்ணும் நல்ல அடையாளமாகும். பட்டிநாயகரும், வன்மிகநாதரும் ஆதிலிங்கருமான

பிப்பி லாரணியம் வெள்ளி மால்வரை பெருக்க ருதபிற வாநெறி
ஒப்பி லாதபிற வாநெ றித்தல மொளிர்ந்த பல்பொருளு மும்பரார்
எய்ப்பி லாதுபல கால மும்பணி யியற்றி லிங்கமொடு முள்ளகந்
தப்பி லாவகை யுறுத்தி றைஞ்சுபு தணந்த தாலமரர் கோதனம். 112

வேறு

மாடு போந்துறு மாதிர நோக்கி வணங்குபு
நீடு கின்ற வருச்சுன மால்வரை நேர்புகுந்
தோடு நீர்ச்சுனை தோய்ந்துமை யம்மை யுயிர்த்தருள்
நாடு செல்வத்தை நச்சி யிறைஞ்சி யெழுந்ததே. 113

உச்சி யோங்க லிவர்ந்தத னூடுரு வப்புகுந்
தெச்ச மாக விருப்பன குன்றிடைத் தாழ்ந்துபோய்
எச்ச நாயக னாகிய வீச னிருந்தருள்
கச்ச மில்வள மல்கிய நாகங் கலந்ததே. 114

இறைவர்க்கு ஒட்டிய அன்பு நிறைந்த உள்ளம் வேற்றுப்புறத்துச் செல்லாத வண்ணம் சிலநாள் பொருந்தப் பண்டைய நாளைக்காட்டிலும் இடை ஈடுபடாத வழிபாடுகளை முடித்து இருந்து இறைவனிடம் உத்தரவு பெற்றபின்.

இசைவு - அநுமதி.

112. தேவப்பசு பிப்பிலாரணியமும் வெள்ளியங்கிரியும் என்றும் பெருக் கருத பிறவாப் பெருநெறியும் ஆகிய ஒப்பற்ற பிறவா நெறித்தலத்தில் விளங்கிய பலபொருளையும், தேவர்கள் இடைவிடாது பலகாலமும் பணிகள் பலபுரியும் சிவலிங்கத்தோடும் மனம் தவறிப் புறஞ்செல்லாது நன்கு தியானித்து வணங்கி அந்நகரைவிட்டுப் பிரிந்தது.

அத்தலத்துள்ள பல பொருள்களையும் சிவலிங்கநாதரோடு பணிந்து காம தேனு அகன்றது என்பதாம்.

113. காமதேனு தான்செல்லும் திசையை நோக்கித் தொழுது மருதமலை யிற்புகுந்து, சுனையில் நீராடி, உமாதேவி பெற்ற அருளை விரும்பும்செல்வமாகிய முருகனை விரும்பி வணங்கி எழுந்தது.

உமையம்மையுயிர்த்து அருள்நாடு செல்வம் - என்றது முருகனை.

114. மலையுச்சியில் ஏறி அதனிடையே ஊடுருவிச்சென்று, அம்மலையின் மதலையாக விளங்கும் குன்றிடை வணங்கிச் சென்று, யாகநாயகனாகிய சிவ பெருமான் எழுந்தருளியுள்ளதும் குறைவற்ற வளங்கள் நிறைந்ததுமாகிய சிவ மலையைச் சேர்ந்தது.

எச்சம் - பிள்ளை. யாகம். கச்சம் - குறை.

அங்க ணுதன் முடித்தலத் தும்மடை யாளங்கண்
டெங்க ணாயக னின்னரு ளின்னண மோவெனப்
பொங்கு மார்வம் புறத்தெழ வன்பு புதுக்கிப்போய்ப்
பங்கி னுள்சிலை நண்ணி யவளைப் பணிந்ததே. 115

அரிதி னங்ககன் றாடறுத் தேகி யயன்சிலம்
புரிதி னேத்தி யொழிந்து சென்றுனை விலங்கலின்
வரிது மாவிய வண்டுள ராம்பர மூலத்துப்
பெரிது மூற்றெழு தீர்த்தந் துளைந்தது பெற்றமே. 116

ஆம்ப ராவதி யின்கரை யேநடந் தாங்கிடைத்
தோம்ப டாவகை சோமன் பணிந்தசோ மேசனைக்
கூம்பு ருதவன் பாற்குழைந் தேத்திக்கும் பிட்டுப்போய்
நாம்ப டாதரு ளல்கும்வஞ் சித்தல நண்ணிற்றே. 117

அன்ன மாடு மகன்றுறைக் காவிரி யாற்றினும்
இன்ன றீர்த்திடு மாம்பர மாநதி யின்கணுந்
துன்னி யாடிச் சுருதிக ளுடருந் தோன்றலைப்
பன்னு நூன்முறைப் பூசனை யாற்றிப் பயின்றதே. 118

---

115. அவ்விடத்து, இறைவனுடைய திருமுடித்தலத்திலும் தன் கன்றின் குளப்படையாள முதலியவற்றைக் கண்டு, எங்கள் நாயகன் திருவருள் இவ்வண்ணமோ எனவியந்து, உளம்நிறைந்து பொங்கி வருகின்ற அன்பைப் புதுக்கிச் சென்று உமாதேவி மலையை அடைந்து உமாதேவியாரையும் வணங்கிற்று.

பங்கு - பக்கம். பங்கினுள் - இடப்பக்கத்தை இடமாகக்கொண்ட உமா தேவியார். சிலை - மலை.

116. பசுவானது, நீங்கமுடியாமல் அருமையாக அம்மலையை அகன்று போய் இடைமறித்துச்சென்று, பிரமன்மலையை உரிமையாக வழிபட்டு, அதனையும் நீங்கிப்போய் ஆனைமலையில் வரிகளுடன் கலந்த வண்டுகள் ஒலிக்கின்ற மாமரத்தின் அடியில் மிக ஊறி எழுகின்ற தீர்த்தத்தில் ஆடியது.

117. ஆம்பராவதி நதியின் கரைவழியே நடந்து, அங்கு, குற்றம் பொருந்தாத வண்ணம் சந்திரன் வழிபட்ட சோமேசப் பெருமானைக் குவியா மனத்தன்போடு, குழைந்து வழிபட்டுக் கும்பிட்டுச் சென்று, அச்சமுண்டாகாது அருள்வழங்கும் கருவூரை அணுகியது.

118. அன்னப்பறவைகள் விளையாடும் அகன்ற நீர்த்துறைகளையுடைய காவிரியாற்றிலும், துன்பங்களைத் துடைக்கின்ற ஆம்பர நதியிலும் நீராடி, வேதங்களாலும் நாடமுடியாத நாதனைச் சிவாகம நெறியின் வண்ணம் பூசித்து அங்கே தங்கிற்று.

கால காலன் கபாலங்கை யேந்திய கண்ணுதல்
ஏல வார்குழ லோடெதிர் தோன்றியெண் ணும்வரஞ்
சால விசலுந் தாழ்ந்தது கொண்டு தணந்துபோய்
ஞால மாதி யுயிர்த்தொகை நன்று படைத்தவே. 119

ஆன டுத்துயர் பூசனை யாற்றி யகிலமுந்
தான ளித்தலி னூற்கரு வூரெனத் தக்கது
வான டுத்தெழும் வஞ்சி பசுபதி யாயினோர்
பான நஞ்சினர் பாழியு மானிலை யாயிற்றே. 120

கூர்க ழித்தலைக் கூம்பவிழ் நீலங்கண் ணீலந்தண்
கார்க ழித்த மிடற்றினர் காமர்பே ரூரின்விண்
ஊர்க ழித்துறு மானெதி ராட லுவந்தது
மார்க ழித்திரு வாதிரை நாளந்த மாண்பினால். 121

ஆண்டு தோறுமந் நாள்வரும் போதங் கடுத்துயர்
தாண்ட வம்புரி தத்துவ நாதனைத் தாழ்பவர்
பூண்ட சோதி முடியடை யாளங்கள் போற்றுவோர்
நீண்ட மாலறி யாநிலை யெய்துவர் திண்ணமே. 122

---

119. சிவபெருமான் உமாதேவியாரோடு காட்சியளித்து, காமதேனு எண்ணிய வரத்தை மிகக் கொடுத்தலும் வணங்கி விடைபெற்றுச்சென்று உலகம் உயிர்கள் அனைத்தையும் நன்றாகப் படைத்தது.

120. காமதேனு வந்து பூசித்து உலகத்தைப் படைத்த காரணத்தால் கருவூர் எனப்பெயர் பெற்றது. வானத்தை யளாவி மேலெழும் வஞ்சிக்கொடி போலும் உமாதேவியாரும், விடத்தைக் குடித்தவராகிய பசுபதி நாதரும் வாழ்கின்ற கோயிலும் ஆனிலை எனப்பெயர் பெற்றது.

121. மிக்க நீரோடைகளில் மொட்டவிழ்ந்த நீலமலர்களும், கண்ணாகிய நீலமலர்களும், குளிர்ந்தமேகமும் ஆகிய இவற்றின் கருமையை நீக்கிய அதாவது அவற்றைவிடக் கரிதாகிய கழுத்தினையுடைய சிவபெருமான், பேரூரிலே விண்ணுலகை விட்டு வந்த காமதேனுவின் எதிரில் திருநடனம் செய்யத் திருவுளங் கொண்டது மார்கழித் திருவாதிரைத் திருநாளாகும். அந்தச் சிறப்பினால்.

122. ஆண்டுகள் தோறும் அந்த மார்கழித் திருவாதிரைத் திருநாள் வரும்போது, அவ்வூரில் திருநடம் செய்யும் தத்துவ நாதனாகிய பெருமானை வணங்குபவர்களும், சோதிவடிவப்பெருமான் தாங்கிய அடையாளங்களைக்கண்டு வணங்குபவர்களும், திரிவிக்கிரமாவதாரம் எடுத்த திருமாலும் காண இயலாத பேரின்ப முத்திநிலையை அடைவார்கள் உறுதி.

அமிர்த மின்ற வலைகடற் ருேன்றிய வானுவந்(து)
அமிர்த மாட்டி யருச்சனை சால வியற்றிய
அமிர்த லிங்கத் தமலர்த மிக்கதை கேட்டவர்
அமிர்த ராகுவர் செல்வரு மாகுவர் வாய்மையே. 123

ஈது நாதன் முடிக்கடை யாள மியைத்தவா
ருேதி ளுமினி மாதவத் திர்பொன் னுடையினன்
பூத நாதனைத் தென்கயி லாயத்துப் போற்றிய
காதை கேண்மின்க ளென் றருட் சூதன் கரைவனுல். 124

குழகன் குளப்புச் சுவடுற்றபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 627

---

123. அமுதத்தைப்பெற்ற அலைகளோடு கூடிய பாற்கடலிலிருந்து தோன்றிய பசுவாகிய காமதேனு மகிழ்ந்து தன்பாலால் அபிஷேகஞ்செய்து அருச்சனை மிகச் செய்த அமிர்தலிங்கத்திறைவருடைய வரலாறுகளைக் கேட்டவர்கள் தேவர் ஆவர்; செல்வருமாவர் இது சத்தியம்.

124. இதில், இறைவன் திருமுடிமேல் குளம்புச்சுவடும் கொம்புச்சுவடும் வந்த வரலாற்றைச் சொன்ஞேம். பெரிய தவமுடையவர்களே ! இனிப் பீதாம்பர தாரியாகிய திருமால் சிவபெருமானைத் தென்கயிலாயத்துப் பூசித்த வரலாற்றைக் கேளுங்கள் என்று அருளுருவான சூதமாமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

பத்தாவது

தென்கயிலாயப்படலம்

கள்ளிவர் நீல மலர்ந்து விரைத்த கழிச்சூழல்
துள்ளிய வாளை விழுந்து களச்சொரி செந்தேனல்
பள்ளம டைப்பணை பைம்பொழில் சூழ்ந்து பரிந்தோம்பும்
வள்ளிய கீழைச் சிதம்பர மென்றொரு வைப்புண்டால். 1

ஆரண மின்னு மளந்திது வென்றறி யாதெய்க்கும்
பூரணன் மேலைச் சிதம்பர வைப்பது போலென்றும்
வாரண வுந்தன மாதுமை காண மகிழ்ந்தாடு
நேரண வுந்தவ ரல்லது காண நிகழ்த்தானல். 2

அத்தகு மாநட னந்தரி சிப்ப வருட்டாதை
உத்தம னேவ வியாக்கிர பாத னுவந்தேகிப்
பத்தியி னுல்வழி பாடுகள் செய்து பயின்றியோகின்
வைத்த கருத்தொடு வைகினன் வைகிய காலத்து. 3

---

1. தேன் மிகுந்த நீலமலர்கள் பூத்து மணம் வீசுகின்ற நீரோடைகளில் துள்ளிய வாளைமீன்கள் விழுந்து புரள, அதனல் சொரிந்த செந்நிறமான தேனல் பள்ளமடையாகிய வயலும், பசுமையான சோலையும் சூழ்ந்து அன்புடன் வளர்க்கும் வளம்பொருந்திய கீழைச்சிதம்பரம் என்று ஒரு தலம் உண்டு.

2. வேதங்களும்கூட இன்னும் அளந்து இதுதான் சிவத்தினியல்பு என அறியமாட்டாது இளைக்கும் எங்கும் நிறைந்த பரிபூரணனுகிய சிவன், மேலைச் சிதம்பரத் தலத்தைப்போல கச்சணிந்த தனங்களையுடைய உமாதேவியார் காண மகிழ்ந்தாடுதலை, நேர்மையோடு கூடிய தவமுடையோர் அல்லது, ஏனையோர் காண என்றும் நிகழ்த்தான்.

3. அத்தகைய பெரிய நடனத்தைத் தரிசனஞ்செய்ய அருணிறைந்த தந்தையாகிற மத்தியந்தனமுனிவர் ஏவ வியாக்கிரபாதமுனிவர் மகிழ்ந்து வந்து அன்போடு வழிபட்டு தங்கி, யோகத்தில் வைத்த மனத்தோடு இத்தலத்துத் தங்கினர். தங்கியகாலத்து,

தாரு வனத்தினர் கொள்கை தெரிந்து தடுத்தாள
வாரு மதிக்கணி யுஞ்சடை வேய்ந்தழ லூடாடுங்
காரு மலைத்த களத்தர் பயிக்க வுருக்கொண்டார்
வாரு மலைத்தெழு பூண்முலை மாதுரு மால்கொண்டான். 4

வாழிய தாரு வனத்திடை மற்றிரு வோருஞ்சென்
ருழியி னுன்முனி வோர்நிறை சிந்த வருட்செல்வன்
தாழிரு ளோதியி னுர்நிறை கொண்டு தவத்தோர்கள்
பாழிய லைத்து மறுத்தவ ணுடல் பயின்ருனே. 5

ஆங்குட னின்றரு ளாடல் வணங்கிய மாலன்று
விங்கிய வல்லிரு ளிங்கிய காலை விழிக்கின்ருன்
பூங்கணு கப்புனன் மெய்முழு தும்புள கம்போர்ப்பத்
தாங்கிய வன்பொடு சங்கர சங்கர வென்ருர்த்தான். 6

அச்சுத கந்த வினுங்குளிர் சேட னடுத்தேத்தி
அச்சுத மிட்ட வருச்சியி னுன்விழி யான்முன்னுள்
அச்சுதன் வெந்தவி ஞான்று மயர்த்திலை யிக்காலத்
தச்சுத வென்கொ லயர்த்தனை யென்று விளையன்னுன். 7

---

4. தாருகாவனத்து முனிவர்களின் 'கன்மமே பிரமம்' என்னுங் கொள்கையைத் திருவுளத்தெண்ணி, அவர்களைத் தடுத்தாட்கொள்ள, நீண்ட மதியைச் சடையிலணிந்து, நெருப்பிடை நின்று நடனஞ்செய்யும், கரிய விடம்பொருந்திய கழுத்தையுடைய சிவபெருமான் பிட்சாடனத் திருக்கோலங்கொண்டார். திருமால் உமாதேவியாரின் உருவந்தாங்கினுர்.

பயிக்க உரு - பிச்சாடன வடிவம். வார் - கச்சு. உகரம் சாரியை.

5. தாருகாவனத்திற்கு இருவரும் சென்று, திருமால் முனிவர்களின் மனவலியை அழிக்க, திருவருட் செல்வராகிய சிவபெருமான் தாழ்ந்து இருண்ட கூந்தலையுடைய முனிபன்னியர்களின் கற்பு நிறையை அழித்து, முனிவர்களின் ஆச்சிரமங்கள் அனைத்தையும் கெடுத்து அங்குத் திருவிளையாடல் புரிந்தார்.

வாழிய - முன்னிலையசை. ஓதி - கூந்தல். பாழி - ஆச்சிரமங்கள்.

6. அங்கே உடனின்று அருள்மயமான நடனத்தைக்கண்ட திருமால், அன்று செறிந்த இருளகன்ற விடியற்காலையில் கண் விழிக்கின்றவன் கண் நீர் சொரிய, உடல்முழுதும் புளகம்கொள்ள, நிறைந்த அன்போடு சங்கர சங்கர என்று ஆரவாரித்தான்.

7. நல்ல நீரினும் குளிர்ந்த ஆதிசேடன் திருமாலை வந்து வணங்கி, அச்சுதனே! அழியாமை பொருந்திய தேவர்களின் உச்சியில் விளங்கும் சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணுல் முன்னெரு காலத்து அந்த உன் மகனுகிய மன்மதன்

மாதவர் சிந்தை மயக்க மறுத்து மகிழ்ந்தாடல்
நாத னவின்றது மற்று முரைப்ப நடங்காண
ஆதர வுற்றருள் பெற்றொளிர் மேரு வடுத்தன்பால்
காதர மோட வருந்தவ முண்டிகை விட்டாற்றி. 8

கானமர் கொன்றையி னுரெதிர் போந்து கருத்தோர்ந்து
தேனமர் தில்லை வனம்புகு மாறுசெப் பிப்போத
வான மரத்திரி வாழன சூயை மருங்கன்று
தானமர் வுற்ற பதஞ்சலி யாய்த்தன தூர்நண்ணி. 9

சில்பக லங்க ணிருந்து திகழ்ந்த பிலத்தூடு
பல்பக னீங்க விவர்ந்து வியாக்கிர பாதன்சேர்ந்
தல்பக லுந்தொழு தில்லை யடுத்தனை யானீயிங்
கொல்பக னற்பக லென்று களிப்ப வுடங்கண்மி. 10

வெந்தவிந்த காலத்தும் இவ்வண்ணம் மயங்கினுய் அல்லை. அத்தகைய நீ இன்று ஏன் மயங்கினுய் என்று வினவியபோது, அத்திருமால். ‘அச்சு உதகந் தன்னினும் குளிர்சேடன்’ எனவும், ‘அச்சுதம் இட்டவர் உச்சியினன்’ எனவும், ‘அ சுதன் வெந்து அவிஞான்றும்’ எனவும், ‘அச்சுத என்கொல்’ எனவும் சொல் சிதைவு செய்து பொருள்கொள்க.

அச்சு உதகம் - நல்ல தண்ணீர். சுதன் - பிள்ளையாகிய மன்மதன்.

8. தாருகா வனத்து முனிவர்களின் மனமயக்கத்தை நீக்கிக் களிப்புடன் இறைவன் நடனம் செய்ததும், ஏனைய நிகழ்ச்சிகளையும் கூற ஆதிசேடன் அந்த நடனத்தைத் தானுங்காணவிரும்பித் திருமாலின் அருளைப்பெற்று, விளங்குகின்ற மேருமலையை அடுத்து அன்போடு ஆசை பெருக்கெடுக்க உணவைத் துறந்து தவம் செய்து.

காதரம் - ஆசை.

9. முல்லை நிலத்திலே வளரும் கொன்றை மாலையை அணிந்த சிவபெருமான் வெளிப்பட்டருளி, சேடனுடைய எண்ணத்தை அறிந்து, தேன் சொரியும் தில்லை வனத்திற்கு வரும் வண்ணம் சொல்லி மறைந்தருளச் சேடன், விண்ணுலகில் வாழ்கின்ற அத்திரி முனிவனோடு வாழ்கின்ற அநசூயையின்பால் மகவாய்ப் பொருந்திப் பதஞ்சலியாகத் தன் ஊரை அடைந்து.

10. சிலநாள் அங்கிருந்து விளங்கிய பிலத்தினிடையே பலநாள் சென்று ஏறி வியாக்கிரபாதர் அல்லும் பகலும் வணங்கிக்கொண்டிருக்கும் தில்லைநகரை அடைந்து வியாக்கிரபாதர் பதஞ்சலியே நீ வந்தநாள் நல்லநாள் என்று பாராட்டி மகிழ்ந்து கூடவே தங்கியிருந்து.

ஒல்பகல் - வந்தநாள். உடங்கு அண்மி - கூடவே தங்கி.

பொன்னெடு பூசம் வரக்கதி ரோனடு வான்புல்ல
மின்னெளிர் மன்றின் விளங்கிழை காண விடைப்பாகன்
நன்னட மாட நயந்து பணிந்து நலங்கொண்டு
மன்னி யிருந்தன னுடொறு மாடன் மகிழ்ந்தேத்தி. 11

வேறு

ஆய காலை யாழிப் பாயலான்
போய சேடன் புரிவ தென்னெனத்
தூய நெஞ்சிற் சூழு மெல்லையின்
மேய வினை முனிவன் விள்ளுவான். 12

மேரு மாட்டு மேவி மாதவ
மாரு மாற்றற் கரிய தாற்றினன்
ஒரு மீச னுருவு வேறுகொண்
டரு ளூர்வ மென்று பேதித்தான். 13

உறுதி நோக்கி யுமையோர் பாகனுய்
மறுவி லாத வாய்மை கூறுபு
நிறுவு தில்லை நிருத்தங் காட்டிடச்
சிறுமை நீங்கிச் சேவை செய்யுமால். 14

---

11. வியாழக்கிழமையோடு பூசநட்சத்திரங்கூடிய சித்தியோக தினத்திலே சூரியன் நடுவானத்தையடைந்த நண்பகலிலே கனக சபையிலே உமாதேவியார் காண இடப வாகனத்தையுடைய இறைவன் பரமானந்த தாண்டவத்தைச்செய்ய அதனை விரும்பிப் பணிந்து இன்பமார்ந்து, நாடோறும் திருநடனம் கும்பிடப் பெற்று நிலைபெற்று வாழ்ந்தான்.

பொன் - வியாழன்.

12. அப்போது திருமால் தன்னை விட்டுப் பிரிந்து சென்ற ஆதிசேடன். செய்வது யாது என்று தூயமனத்தால் ஆராயும்போது வந்த நாரத முனிவன் கூறுவான். ஆழிப்பாயலான் - பாற்கடலைப்படுக்கையாகக் கொண்ட திருமால்.

13. மேருமலையையடைந்து யாரும் செய்தற்கரிய தவத்தைச் செய்தான். இதனை யாராய்ந்த இறைவன் வேறு உருவங்கொண்டு, சேடனைநோக்கி உனது ஆசையை விடு என்று அவன் மனதை மாற்றினர்.

14. சேடனுடைய மனவுறுதியைக் கண்டு, உமாதேவியை ஒருபாகத்திற் கொண்டவராய் எழுந்தருளிவந்து, குற்றமில்லாத உண்மையை உபதேசித்து நிலைபெற்ற தில்லையில் திருநடனத்தைக் காட்டத் தன் சிறுமைகள் நீங்கப்பெற்று வணங்கிக்கொண்டிருக்கின்றுன்.

இனைய வண்ண மியம்ப நாரதன்
வனைது ழாயின் மௌலி வானவன்
அனைய னாயி னான்கொல் சேடனென்
றனையன் னான தருளை முன்னினான். 15

ஈங்கி ருந்திட் டென்னை யெய்தினேன்
ஆங்க வன்ற னோட டுத்துநான்
பாங்கி னேற்பிற் பரத மற்றெனை
நீங்க வீச னிகழ்த்து மேகொலாம். 16

ஏற தாக வேறி னானுருக்
கூறு மாகக் கொள்ள கில்லனோ
ஆறு சூடி யாடல் காண்பலென்
றூறு மன்பி னொய்யென் றேகினான். 17

வேறு

பொற்கோட் டிமய வரைப்புறத்துப் பொலிந்த கயிலை வரையடுத்துச்
சொற்கோட் டமுமௌ வியவுளமுந் துறந்த வடியார் தொழுமேரு
விற்கோட் டியகைப் பெருமானை விரையார் மலர்தூஉய் மணியிமைக்குங்
கற்கோட் டிமிலேற் றின்னிரைகள் காப்ப வெடுத்தோ னிறைஞ்சினான். 18

---

15. இவ்வாறு நாரதன் சொல்ல, துளசிமாலையணிந்த திருமால் சேடன் அத்தன்மையன் ஆய்விட்டானா என்று தாயை ஒத்த இறைவனுடைய திருவருளைத் தியானித்தான்.

16. இங்கிருந்து என்ன பயனைக்கண்டேன்? அவனோடு தில்லைக்குச் சென்று நானும்விதிப்படி தவஞ்செய்வேனாயின் இறைவன் என்னைப்புறக்கணித்து விட்டு நடனம்புரிவாரா?

17. அடியேனை இடபவாகனமாகக் கொண்டு ஏறிய சிவபெருமான் திருமேனியிலே ஒரு பாதியாக அடியேனை ஏற்றுக்கொள்ள மாட்டாரோ? ஆதலால் கங்கையை அணிந்த சிவபெருமானுடைய திருநடனத்தை யானும் காண்பேன் என்று சுரக்கின்ற அன்போடு விரைந்துசென்றான்.

ஒய் - விரைவுப்பொருளைத் தரும் இடைச்சொல்.

18. காளையுடன் கூடிய பசு நிரைகளைக்காக்க மலையைக் குடையாகத் தூக்கிய திருமால் பொன்மயமான சிகரங்களையுடைய இமயமலைச் சாரலிலே விளங்குகிற கயிலாய மலையைச்சார்ந்து தீய சொல்லும் வஞ்சக உள்ளமுமில்லாத அடியார்கள் தொழும், மேருவை வில்லாக வளைத்த திருக்கரத்தையுடைய சிவபெருமானை மணம் நிறைந்த மலர்களைத் தூவி அருச்சித்து வணங்கினான். இமில் ஏற்றின் நிரைகள் காப்ப கல்கோடு எடுத்தோன் எனக்கூட்டுக.

வேறு

எழுந்துவலம் வந்தன னிருந்துதி விளைத்தான்
கொழுந்துமதி வேய்ந்தகுழ காகுறுகு வார்கட்
கழுந்துபடு வன்பிறவி யாழிகரை யேற்ற
முழுந்துருளு முன்னுதவு மும்பர்பெரு மானே. 19

விமதிரி யம்பக விடங்கமல நாச
வாமமக லாதவுமை மாதுமண வாள
தாமமணி வேணிசசி கண்டவிட முண்ட
சேமமணி கண்டசிவ லோகவடி போற்றி. 20

புராதன நிராமய புரங்கள்பொடி செய்த
தராதல நெடுஞ்சகட சங்கர சயம்பு
கராசல வுரிக்கவய கச்சப வுரத்த
அராவணி புயத்தவடி கேளடிகள் போற்றி. 21

வாதுபுரி காளியை வணக்கிய நடத்த
தீதுபுரி சண்டனுயிர் செற்றதிற லாள
போதுபுரி கொன்றைபுனல் புல்லறுகு வன்னி
தாதுபுரி மத்தமிலை யுந்தலைவ போற்றி. 22

வேறு

ஒருமுறை போற்றி யொன்ப தோடொரு முறைமை போற்றி
நருசத முறைமை போற்றி சகத்திர முறைமை போற்றி
வருமுறை யயுத நூரு யிரமுறை மலர்த்தாள் போற்றி
குருபர கோடி கோடி கோடியி னளவும் போற்றி. 23

---

19. இதுமுதல் ஏழுகவிகள் திருமால் செய்த துதி.

துதி - தோத்திரம். அழுந்துபடு பிறவி ஆழி - ஆழமான பிறவிக்கடல். உழுந்து உருளுமுன் - ஓர் உழுந்து உருளும் கால அளவைக்குள்.

20. வாமம் - இடப்பாகம். தாமம் - மாலை. சசிகண்ட - சந்திரசேகர. சேமம் மணிகண்ட - பாதுகாப்பான நீலகண்டனே.

21. தராதல நெடுஞ்சகட - பூமியாகிற தேரையுடையவனே. சயம்பு - தானே தோன்றிய சுயம்புவே. கராசலஉரிக்கவய - யானைத்தோலைக் கவசமாகக் கொண்டவனே. கச்சப உரத்த - ஆமைஓட்டை யணிந்த மார்பை உடையவனே.

22. சண்டன் - எமன். தாது - மகரந்தம். மிலையும் - சூடும்.

23. ஒன்றுமுதல் மகாகோடிவரை போற்றி கூறினன் என்க.

ஐயபொற் சடிலம் போற்றி யருள்பொழி கடைக்கண் போற்றி
செய்யபங் கயங்கள் வென்ற திருமுகப் பொலிவு போற்றி
பையர விணையாக் கொண்ட படர்செவிக் குழைகள் போற்றி
கையமர் படைகள் போற்றி காலினூ புரங்கள் போற்றி. 24

வரிப்புறத் தும்பி பாடு மதுமலர்க் கொன்றை மாலை
எரிப்புறங் கண்ட வேணி யிசைத்தவ நின்முன் போற்றி
வெரிப்புறம் போற்றி பக்க மேலொடு கீழும் போற்றி
தெரிப்புறக் கொண்ட கோலத் திறமெலாம் போற்றி யென்னு. 25

துதிபல விளைத்துத் தானைத் தொக்கிரு காலு ளாக்கி
விதியுளி குடந்தம் பட்ட விண்டுவை யிறைவன் கூவி
முதிருமன் புடையை யென்னு முதுகிடைக் கொம்மை கொட்டி
மதியிடை வேட்ட தென்னே வழங்கென வழங்கு மாயன். 26

கண்ணடி மிளிரக் கொண்டாய் கங்காள ந் தோளிற் கொண்டாய்
வண்ணவென் பிறப்பிற் கோடு மருப்புரி பலவுங் கொண்டாய்
பெண்ணென வணைத்துக் கொண்டாய் பேமதிற் கணையாக் கொண்டாய்
திண்ணிய விமிலே ருகத் திருவுள மகிழ்ந்து கொண்டாய். 27

---

24. ஐய - அழகிய. இணையா - இரட்டைக் குண்டலங்களாக.

25. வரிப்புறத்தும்பி - வரிகளை முதுகிலேயுடைய வண்டுகள். எரிப்புறங் கண்ட வேணி - செந்தீயை நிறத்தால் வென்றசடை. வெரிப்புறம் - முதுகுப்புறம். தெரிப்புற - காண.

26. இவ்வண்ணம் பல துதிகளைச்சொல்லி, ஆடையை ஒதுக்கி, விதிப் படிக் கை குவித்து வணங்கிய திருமாலை இறைவன் அழைத்து, 'நீ முதிர்ந்த அன்புடையாய் என்று முதுகிலே தட்டிக்கொடுத்து, நின்னறிவில் விரும்பியது யாது' சொல்லெனத் திருமால் சொல்லுவன்.

குடந்தம் - கை நிறையப் பூவை எடுத்துக் கை குவித்து வணங்குதல்; அதாவது புஷ்பாஞ்சலி செய்தல். 'குடந்தம்பட்டுக் கொழுமலர்சிதறி' என்ற திருமுருகாற்றுப்படையையும் நோக்குக. கொம்மை கொட்டுதல் - கை குவித்துத் தட்டிக்கொடுத்தல்.

27. கண்ணடியை விளங்கத் தாங்கினுய்; முழு என்பைத் தோளிற் கொண்டாய். அழகான என் பிறப்புக்கள் பலவற்றிலே நான் பன்றியானபோது கொம்பையும், மீனனபோது மருப்பையும், நரசிங்கமான்போது என் தோலையும் கொண்டாய், மோகினி ஆனபோது அணைத்துக்கொண்டாய், அச்சம் தரும் திரிபுரத்தையழிக்க அம்பாகக் கொண்டாய், நான் ஏறுருக்கொண்டபோது இடப வாகனமாகக்கொண்டாய்.

முழுதுல களிக்கு மாற்றன் முன்னெனக் கிந்தாய் பின்னர்
விழுமிய படைக ளிந்தாய் வியத்தகு புதல்வ ரீந்தாய்
கழுமணி யனைய மெய்யிற் காமரு வலப்பா லிந்தாய்
வழுவுறு முனிவர் தாரு வனத்திடை நடன மிந்தாய். 28

நின்னருட் கிலக்க மாக நின்மல நீயிவ் வாறென்
தன்னையு மடிமை கொண்ட தாயத்தாற் புலியும் பாம்பும்
நன்னல மெய்தத் தில்லை நகர்வயிற் குயிற்று நின்ற
மன்னரு ணடமு மின்னே வழங்குவா யென்று போந்தேன். 29

அருந்தவம் பெரிது மாற்று மடுபுலித் தாள னேடும்
வருந்திமெய் யரிதி னேற்ற வாளராத் தலைவ னேடும்
இருந்துநின் னடனம் போற்ற விருந்தவஞ் செய்தே னல்லேன்
திருந்திய வுலக வாழ்விற் சிக்கயாப் புண்டே னெந்தாய். 30

ஒருவர்தம் பொருட்டு மேலை யுருற்றுத லுளதே லன்று
திருநடங் காண்பே னென்னிற் சிந்தையு மமைந்த தில்லை
மருவிய வுடல முன்னே மாய்தலு முளதா மற்றால்
பொருவிலி நடனங் காட்டப் புரிதக வென்று தாழ்ந்தான். 31

---

28. அளிக்கும் - காக்கும். படைகள் - சக்கரம், வாள் முதலியன. புதல்வர்-காமனும் சாமனுமாகிய பிள்ளைகளை. கழுமணியனையமெய்யில் - சாணை பிடித்துக் கழுவிய மாணிக்கத்தை ஒத்த செம்மேனியில். காமரு - அழகிய.

29. இலக்கமாக - குறியாக. தாயத்தால் - முறைமையால். புலி - வியாக்கிர பாதர். பாம்பு - பதஞ்சலி. நன்னலம் - நல்ல இன்பம். குயிற்று நின்ற - செய்தருளிய.

30. திருந்திய-மலமாயா பந்தங்களினின்று திருந்தி உய்வதற்காக. செய்யிய என்னும் வாய்பாட்டு வினைஎச்சம். உலகவாழ்விற் சிக்குண்டதாகக் கருதும் இயல்பு ஆன்மாக்களுக்கு வினைப்பரிபாகம் உண்டாயபோது உளதாம் நிலையாதலின் நான் சிக்குண்டது பிராரத்தகன்மங்களையுண்டு தொலைத்து மலபரிபாகம் பெறவே என்ற உண்மை உணர்ந்தவாறுணர்த்தியதாம். சிலர் 'திருந்திய உலகவாழ்வு' நல்ல பாம்பெனல்போல இலக்கணைமொழி என்பர் இவ்வுரை அத்துணைச் சிறப்பின்மை ஓர்க.

31. முன்பொருநாள் நடனம் ஒருவர்க்காகச் செய்யப்படுவது உளதேல் அன்றைக்கு நடனத்தைக் காண்பேம் எனில் மனம் அமைதியுறவில்லை. எடுத்த உடலம் நடனம் காண்பதற்கு முன்னே அழிதலும் கூடும்; அதனால் ஒப்பிலாதவரே! நடனத்தைக் காட்ட அருள்செய்க எனப் பணிந்தெழுந்தான்.

புரிதக - அருள்புரிக.

அருள்பொழி முறுவல் சற்றே யரும்பியா லால மாந்தி
இருள்பொழி மிடற்றுத் தேவன் வெயில்பொழி திகிரி யேவி
மருள்பொழி சிஞ்சு மாரம் வௌவிய வும்பல் காத்தோன்
தெருள்பொழி யுள்ளத் தார்வந் திருவுளஞ் செய்து சாற்றும். 32

வேறு

பதஞ்சலி வியாக்கிர பாத ரென்பவர்
இதஞ்சலி யாதுசெய் திடவ வர்க்குநாம்
சிதம்பர நகர்வயிற் செய்யுந் தாண்டவம்
சுதந்திர மாக்கினும் பிறர்க்குத் துச்சிலாம். 33

மனைபுடைக் கலமணி வாக னங்களாய்க்
கனைகதி ரெமதுருக் கலப்பு மாகிய
நினையவ னுடக நிகழ்த்திக் காட்டுறின்
முனைவனு நமக்கது முறைமை யன்றுகாண். 34

குணதிசைச் சிதம்பரங் குடவ ளைக்கையாய்
மணமலி தில்லையங் கான மாதவந்
திணிதரு குடதிசைச் சிதம்ப ரந்தவர்
அணிபுரிந் திறைஞ்சிச்சூ ழச்சு வத்தகான். 35

---

32. கருணையைப் பொழிகின்ற புன்முறுவல் சிறிது பூத்து, விடம் உண்டு கறுத்த கழுத்தையுடைய சிவபெருமான், மருளைப்பொழிகின்ற முதலையைக் கவர்ந்த யானையை வெயிலைப் பொழிகின்ற சக்கரப்படையை ஏவிக்காத்த திருமாலின் தெளிவடைந்த உள்ளத்தில் நிறைந்துள்ள ஆசையைத்திருவுளத்தெண்ணிச் சொல்லுவார்.

மருள் - மயக்கம். கிஞ்சுமாரம் - முதலை. உம்பல் - யானை; ஈண்டுக் கஜேந்திரனை உணர்த்திற்று. தெருள் - தெளிவு.

33. பதஞ்சலி வியாக்கிரபாதர் என்ற இரு முனிவர்களும் சிவபுண்ணியங்களைச் சலிக்காமல் செய்ய, நாம் சிதம்பரத்தில் இயற்றும் தாண்டவத்தை அவர்களுக்கு உரிமையாக்கினேம். அத்தாண்டவம் பிறர்க்கு எச்சில் போல்வதாம்.

இதம் - நன்மை; அதாவது சிவபுண்ணியம். துச்சில் - எச்சில்.

34. மனைவியாகவும், அம்பாகவும், அணிகளாகவும், வாகனங்களாகவும் ஆனதோடன்றி மிக்க ஒளியான எமது மேனியில் ஒருபாதியுமான உனக்கு அங்கு மீட்டும் அதே நாடகத்தை நிகழ்த்திக்காட்டின் முதல்வனுகிய நமக்கு முறையன்று.

மனைவியானது திருமால் மோகினியவதார காலத்தில். ஏனையவும் முன்னர் உணர்த்தப்பெற்றன.

35. வளைந்த சங்கையுடையவனே! கீழைச்சிதம்பரம் மணமிகுந்த தில்லைவனம். மேலைச்சிதம்பரம் முனிவர்கள் அழகுசெய்து வழிபட்டுய்யும் அரசவனம்.

தெள்ளொளிக் கனகமன் றிணர்த்த தில்லையுள்
ஒள்ளிய நமதரு ளுருவின் வண்ணமாம்
வெள்ளியம் பலம்விரி போதிக் காட்டினுள்
வள்ளிய வெமதுரு வண்ண மாகுமால். 36

அல்லதூஉ மெவற்றினு மதிக நீரது
நல்லொளி நமதுபா லத்து நண்ணுபு
வில்லுடைக் காமனை விளிப்ப மேக்குநீண்
டெல்லுமிழ் விழிவிழித் திடமண் விழ்ந்ததே. 37

விழ்ந்தது வெள்ளியாய் விளைந்த தாதலின்
போழ்ந்திருள் பொரித்தொளிர் மணிபொன் னேனவுந்
தாழ்ந்தன மேன்மையிற் றகவு யர்ந்ததாற்
சூழ்ந்தவ ருள்ளமுந் துலக்கும் வெள்ளியே. 38

மணிவரை பொன்வரை மண்ணி ருந்துநாந்
தணிவறு காதலிற் றவள வெள்ளிவெற்
பணிவளர் கோயில்கொண் டமர்ந்த வண்ணமுந்
துணிவுறு மதனுடைத் தூய்மைத் தோற்றத்தால். 39

---

36. மிக்க ஒளிவாய்ந்த கனகசபையோடு கூடிய தில்லையில் உள்ள நம் திருமேனி நம் திருவருளாலியன்ற அருளுருவம். அரசவனத்தில் உள்ள வெள்ளியம்பலத்தில் உள்ள நம் உரு வள்ளன்மையே யானதாம்.

எமது உரு வள்ளிய வண்ணம் ஆகும் எனக்கூட்டுக. வள்ளிய வண்ணம் - வள்ளன்மையாய தன்மை.

37. அல்லாமலும் எவற்றினும் மிக்க தன்மையதாம் நல்ல ஒளி நம் நெற்றியிலிருந்து உண்டாகிக் கருப்புவில்லையுடைய மன்மதனை எரிப்ப, மேனோக்கி நீண்ட அந்த ஒளிபொருந்திய நெற்றிக்கண் திறக்க அதுவழியே மண்ணில் விழுந்தது.

38. அங்ஙனம் விழுந்தது வெள்ளியாய் விளைந்தது. ஆதலால் இருளைக் கெடுத்து அழித்து ஒளிசெய்வதால் சுற்றியுள்ளவர்கள் மனத்தையும் விளக்கும் வெள்ளியானது, மணி பொன் முதலான மற்றவைகளைத் தாழ்த்தினமேன்மையால் தகுதிபெற உயர்ந்தது.

39. அதன் தூய்மையான தோற்றத்தால், இவ்வுலகில் இரத்தினகிரி, பொன்மலை முதலாயின இருந்தும் நாம் தணியாத காதலால் வெண்மையான வெள்ளிமலையை விரும்பி அதில் அழகிய கோயில்கொண்டு எழுந்தருளிய வண்ணத்தையும் துணிந்து சிந்தியும்.

அரதன மன்றினு மம்பொன் மன்றினும்
விரவிய மகிழ்வினு மகிழ்ச்சி மிக்கதாம்
இரசத மன்றின்மற் றெமக்கெஞ் ஞான்றுமே
புரவுகொண் டயன்றனைப் பூத்த வுந்தியோய். 40

அடிமையர் பலருளு மன்பு மிக்குறும்
அடிமையை யாதலி னவரெ லாரினும்
நெடியவ வுரிமையை நினக்கெ னக்குறி
நெடிதுசெ யதனிடை நிருத்தங் காட்டுதும். 41

வாதுசெய் தூர்த்ததாண் டவத்தின் வார்முலை
மீதுகண் ணுறத்தலை வெள்கிச் சாய்த்தவள்
கோதுகு மாநந்த நடமுங் கும்பிடத்
தீதுகு மாதவஞ் செய்தி ருக்குமால். 42

மூலவன் மலமற முருக்கி முத்திசேர்
காலவ முனிவனுங் காமர் நாடக
மேலவங் கினிதுறக் காணு மிச்சையிற்
சாலவன் பியற்றுபு தங்கிப் போற்றுமால். 43

வேறு

இலங்குவிராட் புருடனுக்குக் குணதிசையிற் சிதம்பரந்தா னிதய மாகும்
நலங்கிளருங் குடதிசையிற் சிதம்பரநா ரணனயனுங் கிழமை பூண்ட
துலங்கிடைபிங் கலைசுழுனை மூன்றுமரி யயன்வரைகள் சுடரும் வெள்ளிப்
புலங்கிளர்நம் வரைமூன்று மாய்விந்துத் தானமெனப் பொலிந்த தாகும். 44

---

40. காத்தல் தொழிலைச்செய்து, பிரமனையும் தோற்றுவித்த உந்திக் கமலத்தை உடைய திருமாலே! இரத்தினசபை கனகசபை இவற்றில் நாம் இருப்பதைவிட வெள்ளி மன்றுள் விளங்குவது எமக்கு என்றும் மகிழ்ச்சி மிக்கதாம்.

41. நெடியமாலே! அடியவர் பலருள்ளும் நீ அன்புமிக்க அடிமையாதலின் அவர்கள் எல்லோரினும் சிறந்த பெரிய அந்தவுரிமையை உனக்கு அளிப்பதாக நீண்டநாளாகக் குறித்து அவ்வெள்ளிமன்றுள் நிருத்தம் செய்துகாட்டுவோம்.

42. எம்மோடு வாதிட்டு, நாம் ஊர்த்துவ தாண்டவம் செய்ததால் மார்பைநோக்கிக் குனிந்து வெட்கித் தலைசாய்த்த காளியும், குற்றமற்ற ஆனந்தத் தாண்டவத்தையும் வணங்க தீதற்ற தவம் செய்திருக்கிறுள்.

43. மூலமலமாகிற ஆணவம் நீங்க அழித்து முத்தியை அடைந்த காலவ முனிவனும் அழகிய அந்த நடனத்தைக் காண மிக அன்புசெய்து இத்தலத்திலே தங்கி ஏம்மை வழிபட்டு வருகின்றுன்.

44. கிழைச்சிதம்பரம் விராட் புருடனுக்கு இதயமாகும். மேலைச்சிதம்பரம் திருமால் பிரமன் நாம் என்ற மூவருக்கும் உரிமையாய், இடை பிங்கலை சுழுமுனை

அன்னவிராட் புருடனுக்கங் கனவரத தாண்டவநா மாடிக் காட்டுந்
தன்மையினு லெந்நாளு மிடையரு தொளிர்நாதந் தழங்கா நிற்கும்
மன்னியமா தவர்கேட்பர் கேட்டவர்க்கு மாருத வறிவா னந்தம்
பன்னரிய முதன்மையுநித் தியமுமுறும் விகாரமுதற் பலவும் நீங்கும். 45

அவ்வரைப்பி னெமைவழிபட் டசும்புமொளி யிரசதவம் பலத்தி னுடல்
செவ்விபெறத் தரிசித்தோர் விந்துநா தந்தவிரத் திகழு ஞானத்
தெவ்வமலி மலமூன்று மிரியவுயர் சிவபோக மினிது துய்ப்பர்
இவ்வரநம் வரைமேலு மிரசதவம் பலங்காண்போ ரெய்து வாரால். 46

மருத்துளரு மத்தகைய தென்கயிலை நமதுருவாய் வயங்கு மாற்றல்
உருத்திரவெற்பெனும்பெயருமுறும்யோக வரையெனவுமுரைப்பர்சான்ருேர்
திருத்தமுற நடம்பயின்று தெரித்துநடம் பயிற்றுவோர் செத்தெல் லோரும்
கருத்தடங்கும்யோகுழப்ப நாமிருந்து தனியோகங் கைக்கொண் மாண்பால்.

என்ற மூன்று நாடிகளும் பிரமன்மலை, திருமால்மலை, நம்மலையாகிய வெள்ளிமலை மூன்றுமாகி, விராட் புருடனுக்கு விந்துத்தானமாக விளங்கும்.

விந்துத்தானம் - புருவமத்தி. அங்கு மூன்று நாடிகளும் கூடியுள்ளன. ஆதலால் மூன்று மலைகளும்கூடி, நம் மூவருக்கும் உரியனவாய் விளங்குகிறதென்ருர்.

45. அந்த விராட் புருடனுக்கு அந்த விந்துத்தானத்திலிருந்து நாம் அனவரத தாண்டவம்புரிந்து காட்டுவதால் எந்நாளும் ஒருநாதம் இடைவிடாமல் ஒலித்துக்கொண்டே இருக்கும். நிலைபெற்ற தவமுடையவர்கள் அவ்வொலியைக் கேட்பர். அவர்கட்கு என்றும் மாருத ஞானமும் ஆனந்தமும் சொல்லுதற்கரிய நலைமையும் நாடோறும் உண்டாகும். மனேவிகார முதலான குற்றங்கள் யாவும் அகலும்.

46. அத்தலத்தில் எம்மை வழிபட்டு, வெள்ளியம்பலத்தில் திருநடனத்தையும் தரிசித்தவர்கள் விந்து நாதங்களாகிற மாயையின் நீங்கி, விளங்கும் சிவ ஞானத்தால் துன்பமிக்க மும்மலங்களும்கெட, உயர்ந்த சிவபோகத்தைத்துய்ப்பர். இவ்வரத்தை தம் மலைமேலும், வெள்ளியம்பலத்தைக் காண்போர் எய்துவர்.

அசும்பும் ஒளி - ஒழுகுகின்ற ஒளி. விந்துநாதம் தவிரத் திகழும் ஞானம் - பாசஞானமல்லாத பதிஞானம். எவ்வம் - துன்பம்.

47. காற்று உலவும் அத்தகைய தென்கயிலாயம் நமதுருவாக விளங்குதலால், அது உருத்திரவெற்பு என்னும் பெயரையும் அடையும். அதனைச்சான்ருேர் யோகமலை எனவும் உரைப்பர். நாம் இங்கிருந்து யோகம் செய்வதால், திருந்த நடனம் பயின்று, ஆய்ந்து நடனம் பயிற்றுவிப்போரைப் போன்று அனைவரும் மனம் அடங்கிய யோகத்தைச் செய்வர்.

செத்து - உவமவுருபு. உழப்ப - செய்வர்.

விண்ணவரிற் சாத்தியரின் விஞ்ஞையரிற் கருடரிற்காந் தருவர் தம்மின்
மண்ணவரிற் பலரங்கண் யோகுழந்து நற்கதியை மருவி னேர்கள் [ணுதால்
திண்ணமுற விப்பொழுதும் யோகுழப்போர் தமையெண்ணிற் றெரிக்கொ
வண்ணமுறுமதன்பெருமை தெரிக்கலுறின் வானவர்க்கும் வாழ்நாள்போதா.

ஆவயிற்சென் றெமைப்பூசை புரிந்தமரர் சுரபியுரித் தாத லானுங்
கோவடிவின் வருமைந்துங் கொண்டெமது முடிக்காட்டுங் கொள்கை யானுந்
தூவடிவி னுருவாய்த் தோற்றியற மெமைப்பரிக்குந் தொடர்பி னுநுந்
தேவரனை வருமுறுப்பிற் செறிந்தபசு நமக்குவகை செய்வ தாகும். 49

நீயுமொரு கோமுனியா யாங்கடுத்து நமைப்பூசை நிகழ்த்து கண்டாய்
மாயிருவை யகம்வியப்பப் பொன்னுமிர வியுமீன மருவா நின்ற
வேயுமொளிப் பூரணையுத் திரமாதி வாரமிவை யியைந்த வேலைப்
பாயுமொளி யிரசதவம் பலத்தாடல் புரிதுமினிப் படர்க வென்ருன். 50

வேறு

குறைமதி முடியினர் குறைதப
அறைதலு மறைகழ லடிமலர்
நிறைமதி நெடியவ னேருற
முறைமுறை தொழுதனன் முன்னுவான். 51

---

48. தேவர்களிலும், சாக்தேயரிலும், வித்யாதரர்களிலும், கருடரிலும், காந்தருவர்களிலும், மக்களிலும் யோகஞ்செய்து, நற்கதியையடைந்தோர் பலர். இப்போதும் தவஞ் செய்வோரை எண்ணின் எண்ணிலடங்காது. அத்தலத்தின் பெருமையை விளங்கக் கூறின் தேவர்களுக்கும் வாழ்நாள் போதா.

49. அங்குச்சென்று தேவப்பசுவாகிய காமதேனு எம்மைப் பூசித்தமையால் எமக்கு உரியதாயிற்று ஆதலானும், பசுவின் மேனியிலிருந்து வரும் பால் முதலிய பஞ்சகவ்வியங்களைக்கொண்டு எமது முடிக்கு அபிஷேகித்தலானும், தரும தேவதை தூய பசு வடிவில் தோன்றி எம்மை வாகனமாகத் தாங்குதலானும் முப்பத்துமுக்கோடி தேவர்களும் உறுப்புக்களிற் செறியப்பெற்ற பசு நமக்கு மகிழ்ச்சியூட்டுவதாகும்.

50. ஆதலால் நீயும் ஒரு கோமுனியாய் அத்தலத்தை அடைந்து எம்மைப் பூசி. பெரிய உலகம் வியப்ப, வியாழனும் சூரியனும் மீனராசியில் பொருந்திய ஒளி மிக்க பூரணையும் உத்திரநாளுங்கூடிய ஞாயிற்றுக்கிழமையில் ஒளி பரவுகிற வெள்ளியம்பலத்திலே நடனம்செய்வோம். இனி அங்குச்செல்க என்றருளினர்.

51. சிவபெருமான் குறைதீர இங்ஙனம் கூறுதலும், நிறைந்த அறிவை யுடைய திருமால் நேரே திருவடிமலரைப் பலமுறைவணங்கி எண்ணுவானுயினன்.

பூமுனி யாதுறை பொற்புடை
மாமுனி வருமறு மாற்றினன்
ஏமுனி முதலவி கந்தனன்
கோமுனி யெனவுருக் கொண்டனன். 52

பொற்கலை பூமி படுத்தனன்
வற்கலை மாண வுடுத்தனன்
விற்கலின் மோலி விடுத்தனன்
அற்கலில் வேணி யடுத்தனன். 53

விரையொடு சாந்தம் வெறுத்தனன்
புரைதபு பூதி பொறுத்தனன்
உரைகல னுதி யொறுத்தனன்
சுரைபடு மக்கந் துறுத்தனன். 54

அந்தியி னருண்மனு விண்டனன்
குந்திய நடையடிக் கொண்டனன்
கந்தியல் கயிலைமுன் கண்டனன்
உந்திய வொலிசெவி யுண்டனன். 55

---

52. தாமரை மலரை வெறுக்காது அதன் கண் உறைகின்ற அழகினை யுடைய இலக்குமியை மனைவியாகவுடைய முனிவனாகிய திருமால், தனக்கு வரக் கடவனவாகிய குற்றங்களைப் போக்கினன். இறுமாப்பு கோபம் முதலியவற்றை விட்டான். கோமுனி எனவடிவு கொண்டான்.

மா - திருமகள். மாமுனி - திருமகளையுடைய முனி; என்றது திருமாலை.

53. பிதாம்பரத்தைப் பூமியில் விசினன். மரவுரியைச் சிறக்க உடுத்தான். ஒளியைச் செய்கின்ற கிரீடத்தைவிட்டான். சுருங்காது பரந்தசடையைப் பொருத் தினன்.

வற்கலை - மரவுரி. வில் கலின் - ஒளியை வீசுகின்ற. அற்கல் - சுருங்குதல். வேணி - சடை.

54. மணப்பொருள்களையும் சந்தனத்தையும் வெறுத்தான். குற்றமற்ற விபூதியை அணிந்தான். புகழத்தக்க பொன்னணிகளை விடுத்தான். சுரையோடு கூடிய உருத்திராக்கத்தை அணிந்தான்.

சுரை - உட்டுளை, அக்கம் - உருத்திராக்கம்.

55. காலைமாலையாகிய இருசந்திகளிலும் திருவருள் மயமான ஸ்ரீ பஞ்சாக் கரத்தைச் செபித்தான். குந்தி நடந்தான். மேகங்கள் விளங்கும் கயிலையைக் கண்டான். உந்திக்கமலத்துண்டான நாதத்தைச் செவியாற்கேட்டான். குந்திய நடை அடிக்கொண்டனன் - பதுமாசனத்திற்குந்திய பிராணயாமப் பயிற்சியைப்

பரவிய வரைவளம் பார்த்தனன்
அரகர கரவென வார்த்தனன்
விரவிய புளகமெய் போர்த்தனன்
சிரமிரு கைத்தலஞ் சேர்த்தனன். 56

தண்டென வடிவரை தாழ்ந்தனன்
தொண்டுசெய் முறைபல சூழ்ந்தனன்
மண்டிய வன்பிடை வாழ்ந்தனன்
விண்டுவி னெஃகுதல் வீழ்ந்தனன். 57

வேறு

வருடையு மரைகளும் வழுவையு முழுவையும்
எருமையு முளியமு மெறுழியுங் கவயமும்
அரிணமும் புருடவன் மிருகமு மரிகளும்
வெருண்மகண் மிருகமு மிடைசரி யொழுகினன். 58

வருக்கையுங் கதலியும் வகுளமு மகருவுந்
துருக்கமுந் திமிசுந்திந் திருணியுங் குடசமு
முருக்கரை திலகமுந் திரிகைகுங் கிலியமும்
நெருக்கிய சிறுநெறி நெடியவ னொழுகினன். 59

பழகினன். கந்தியல் கயிலைமுன் கண்டனன் - நடுநாடியின் வழியாகக் கட்டுத் தறிபோல இயல்வதாகிய கயிலையைக் கண்டான். உந்திய ஒலி - உந்திக்கமலத்தில் இருந்து எழும் நாதம் எனவும் யோகபரமாக உரைத்தல் நன்று.

56. எங்கும் பரந்துள்ள மலைவளத்தைக் கண்டான். அரகர அரகர என ஆரவாரித்தான். உடல் முழுதும் கலந்த புளகாங்கிதமுற்றான். சிரத்தின்மேல் கரங்களைச் சேர்த்து வணங்கினன்.

57. தண்டம்போல மலையடிவாரத்தில் விழ்ந்து வணங்கினன். சிவபெருமானுக்குத் தொண்டுசெய்யவேண்டிய முறைகள் பலவற்றையும் ஆராய்ந்தான். மிகுந்த அன்புக்கடலிலாழ்ந்தான். விஷ்ணுவாக இருந்த நிலையிலுள்ள செருக்கொழிந்தான்.

58. வருடை முதலிய மிருகங்கள் நெருங்கிய வழியிற் சென்றான்.

வருடை - ஆடு. மரை - மான். வழுவை - யானை. உழுவை - புலி. உளியம் - கரடி. எறுழி - காட்டுப்பன்றி. கவயம் - காட்டுப்பசு. அரிணம் - மான். புருடவன் மிருகம் - புருஷமிருகம்; ஆண்டலை விலங்கு. அரி - சிங்கம். வெருள்மகள் மிருகம் - பெண்டலை விலங்கு. சரி - வழி.

59. வருக்கைப்பலா முதலிய மரங்களடர்ந்துள்ள வழியாற் சென்றான்.

வருக்கை - ஒருவகைப்பலா. கதலி - வாழை. வகுளம் - மகிழமரம். அகரு - அகில்; அல்லது ஒருவகை மணமரமுமாம். துருக்கம் - குங்குமப்பூ மரம். திமிசு -

வெள்ளிலுஞ் சுள்ளியும் வில்லமு மில்லமும்
கள்ளிவ ராண்களுங் கதமறு வேங்கையு
மள்ளிலை யாரமு மலர்சொரி நாகமும்
நள்ளிணர்ப் பொழில்பல நடைவயி னொருவினன். 60

வஞ்சியர் நெஞ்சிவர் மஞ்சளு மிஞ்சியும்
வஞ்சியுந் துஞ்சில வஞ்சில ழிஞ்சிலும்
வஞ்சுள முஞ்செறி மஞ்சிவர் பஞ்சர
வஞ்சமும் விஞ்சவ ருஞ்சலங் கொஞ்சினன். 61

வேறு

விண்ணோங்கிய பணை நின்றுகு வெண்ணித்தில மணியும்
பண்ணோங்கிய வரிவண்டுளர் பனிமென்மல ரினமும்
தண்ணோங்கிய திரையிற்கொடு தள்ளித்தவ வுரறி
மண்ணோங்கிய தவழ்காஞ்சியை மகிழ்ந்தானதிற் படிந்தான். 62

பனிநீர்மலர் விரைமென்கனி பலவுங்கர மருவிக்
கனிநீர்மையி னுளமென்புகள் கரையப்புணர் விழியின்
நனிநீர்மணி மருமத்துக நகநீண்முடி யேறித்
தனிநீர்மையி னகலத்தலை வனதாண்மலர் தாழ்ந்தான். 63

வேங்கை. திந்திருணி - புளியமரம். குடசம் - வெட்பாலை. முருக்கு - கல்யாண முருக்கமரம். அரை - ஒருவகைமரம். திலகம் - மஞ்சாடிமரம். திரிகை - முந்திரி மரம். குங்கிலியம் - குங்கிலியமரம்.

60. வெள்ளில் - விளா. சுள்ளி - மயிற்கொன்றைமரம். வில்லம் - வில்வ மரம். இல்லம் - தேற்றுங்கொட்டைமரம். ஆண் - செம்மரம். கதம் - கோபம். கதமறுவேங்கை - வேங்கைமரம். ஆரம் - சந்தனம். நாகம் - சுரபுன்னைமரம். நள் இணர் - செறிந்த பூங்கொத்துக்களையுடைய.

61. வஞ்சியர் நெஞ்சிவர் மஞ்சளும் - பெண்களின் மார்பில் அப்பப்பெற்ற மஞ்சளும். வஞ்சியும் - ஒருவகைக்கொடியும். துஞ்சு இலவம் - தூங்குதற்கு உரிய இலவமரம். சில் அழிஞ்சில் - ஏறழிஞ்சில் இறங்கழிஞ்சில் என்னும் மரங்கள். வஞ்சுளம் - அசோகு. பஞ்சரம் - செருந்திமரம். வஞ்சம் - ஆச்சாமரம். சலம் - இலாமிச்சைமரம். கொஞ்சினன் - சிமைக்கொஞ்சிமரம் இவற்றினிடையே சென்றான்.

62. மூங்கிலிலிருந்துசிந்திய முத்தும், பன்னீர்ப்பூக்களும், அலையில் அடித்துக்கொண்டுவந்து விசிப் பூமியிற் சிறந்து விளங்கும் காஞ்சி நதியைக் கண்டு மகிழ்ந்தான்: அதில் மூழ்கினான். தவ - மிக.

63. பனிநீர்ப் பூ, மெல்லிய கனிவகைகள் பலவற்றையும் கையில் ஏந்திக் கொண்டு. கனிந்த தன்மையால் உள்ளமும் எலும்புகளும் கரைந்துருக, இரு கண்களிலிருந்தும் மிக்க நீர் மார்பில் சிந்த, மலையுச்சியில் ஏறித் தனித்தன்மை நீங்கத் தலைவனுடையனவாகிய திருவடிக் கமலங்களை வணங்கினான்.

கண்ணூர்தரு மணியைத்தவர் கருதுஞ்சுட ரொளியைப்
பண்ணூர்தரு பயனைக்கனி பழனூர்தரு சுவையைத்
தண்ணூர்புன னிழலொத்தமர் தமியேன்பெரு வாழ்வை
விண்ணூர்தரு மமிழ்தத்தினை விதியால்வழி பட்டான். 64

அமையாவுள மலமந்தவ ணரிதிற்பெயர் கிற்ப
உமையாளையும் வழிபட்டவ ணொழிவுற்றுயர் சாரல்
எமையாளவு மிமையோர்தொழ விறைவீற்றிருந் தருள்வார்
தமையாலய முள்ளெய்துபு தாழ்ந்தான்விடை கொண்டான். 65

அடர்வெள்ளியின் வேய்ந்தொள்ளொளி யசும்பித்தனி விசும்பின்
இடமல்கிய பலவைப்பையு மெழில்வெண்ணிற மாக்கு
நடமல்கிய வருண்மன்றமு நயனத்தெதிர் காணுத்
தொடர்மல்கிய வன்பாற்றெழு தெழுந்தான்மலை யிழிந்தான். 66

வேறு

மாதிக் கானை தாங்கிய மண்ணுண் டவன்மாசு
மோதிக் காம முற்றருள் காஞ்சி முதுகூலஞ்
சோதிக் கான வன்பு துளும்பத் தொடர்வுற்றுப்
போதிக் கானம் புக்கு வணங்கிப் புறஞ்சூழ்ந்தான். 67

---

64. கண்மணியை, தவத்தோர் தியானிக்கும் சுடர்விடும் ஒளியை, பண்ணின் பயனுவானை, கனிந்த பழத்தின் சுவை போன்றவனை, குளிர்ந்த நீரையும் குளிர்ந்த நிழலையும் ஒத்துவிளங்கும் அடியேனுடைய பெருவாழ்வு ஆவானை, தேவாமுதம்போல்பவனை வேதாகம விதிப்படி வழிபட்டான்.

65. அமைதிபெருத மனம் வருந்தி, அவ்விடத்தைவிட்டுப் பிரியமுடியாமற் பிரிந்து, உமாதேவியாரையும் வழிபட்டு அங்கிருந்து பிரிந்து, எம்மை ஆள்வதற்காகவும் தேவர்கள் வணங்குவதற்காகவும் வீற்றிருக்கும் இறைவனை அவர் எழுந்தருளியிருக்கும் கோயிலினுள் சென்று வணங்கி விடைகொண்டான்.

66. வெள்ளித் தகட்டால் வேயப்பெற்று, ஒளியைப்பெருக்கி ஒப்பற்ற ஆகாயத்தையும் அங்குள்ள பல இடங்களையும் அழகிய வெண்ணிறமாக்கும் நடஞ்செய்யும் திருவருள்மயமான மன்றத்தையும் தரிசித்து, இடைவிடாப் பேரன்பால் தொழுது எழுந்தான்; மலையினின்று இறங்கினன்.

67. பெரிய திக்குயானைகளால் தாங்கப்பெற்ற பூமியை உண்ட திருமால் தம் குற்றங்களைப் போக்கி, விருப்பத்தை முற்றுவித்து அருள்கின்ற காஞ்சியாற்றின் கரையிலே ஒளிமயமான இறைவன்மாட்டுண்டான அன்பு ததும்பத் தொடர்ந்துசென்று, அரசவனத்தை அடைந்து வணங்கி வலம்வந்தான்.

காமம் - விருப்பம். முற்றருள் - முழுதும் அருளுகின்ற காஞ்சி என்க.

மாதவ ரானும் வானவ ரானு மண்ணனு
மிதவன் வண்ண மென்னவொ ணுத விறைமுன்னர்ச்
சிதர னென்னுங் கோமுனி சென்று திருவார்ந்த
பாத மிறைஞ்சிப் பன்முறை சூழ்ந்து பரிவுற்முன். 68

துஞ்சுத லோடு முண்டி விடுத்துத் தொழுமந்நாள்
எஞ்சிய காலைச் செய்கடன் முற்று மினிதாற்றி
இஞ்சிகள் சூழ்ந்த வெம்பெரு மான்கோ யிலின்மாடே
நெஞ்சுறு மன்பாற் றென்கயி லாய நிருமித்தான். 69

தென்கயி லாய மிருத்துமி லிங்கச் சிவனுரை
நன்கருள் சக்கர தீர்த்த மெனப்புவி நாடத்தான்
தன்கயி ணுங்கொரு தீர்த்தம கழ்ந்தத் தட நீரால்
என்கட னுட்டுத லின்கட னுடுத லென்ருட்டி. 70

தூசவிர் சாந்தந் தூமணி யாரஞ் சுடர்மோலி
வாசநன் மாலை மற்று மணிந்து மறையோதி
ஆசக லாறு தீஞ்சுவை யுண்டி யயில்வித்துத்
தேசவிர் தீப மாதி யளித்துச் சேவித்தான். 71

இன்னண நிச்சந் தென்கயி லாய மினிதேத்தி
முன்னவ னுதி லிங்கமு மேத்தி முதிர்யோகந்
தன்னிலை கண்ட காலவ னேடுந் தவமாற்றி
மன்னிய வெள்ளி மன்றும் வணங்கி வதிவுற்முன். 72

---

68. தவசியர் விண்ணேர் மண்ணேர் ஆகிய எவராயினும் அவன் தன்மை இது என்றறிய இயலாத இறைவன் முன்னர் லட்சுமி நாயகனுகிய கோமுனிவன் சென்று திருவடிகளை வணங்கிப் பலமுறை வலம்வந்து அன்புகூர்ந்தான்.

69. உறக்கம் உணவு இவைகளை விட்டுத் தொழும் அந்நாள், எஞ்சிய நாட்கடன்களனைத்தையும் செய்து, மதில் சூழ்ந்த சிவபெருமான் திருக்கோயிலின் பக்கத்தே, மனநிறைந்த அன்போடு தென்கயிலாயத்தை உண்டாக்கினன்.

70. அதில் எழுந்தருளிய பெருமானைத் தன் கையால் தோண்டப்பட்ட சக்கரதீர்த்தத்தைக் கொண்டு என் கடன் தேவரீரைத் திருமஞ்சனங் கொள்ளச் செய்தல்; நும்கடன் திருமஞ்சனங் கொண்டருளுதல் என அபிஷேகித்து.

71. தூசு - ஆடை. தூமணி ஆரம் - தூயமணியாலான மாலை; அல்லது தூய மாணிக்கங்களும் முத்துக்களும் எனலுமாம். மோலி - கிரீடம். அயில்வித்து - நிவேதித்து. தீபமாதி - தீபம் தூபம் முதலியன.

72. நிச்சம் - நாள்தோறும்.

கோமுனி பூசை கொண்டவர் தென்கயி லாயத்தைத்
தாமுறை யேத்துந் தன்மையர் செல்வந் தகவாழ்ந்திங்
கேமுறு மின்ன லெய்துத லின்றி யிமையாருங்
காமுறு நன்சிவ லோக மணைந்து களிகூர்வார். 73

நன்கயி லாய் நன்னகர் முற்று நடுவைகுங்
கொன்கயி லாய மாதிலிங் கத்தின் குடியென்று
தென்கயி லாய மென்றுறு மாறுந் திருமார்பன்
தன்கயி லாயக் கோயிலுக் கிட்டான் றனிநாமம். 74

மாதவர் கல்லி னுக்கிய வள்ளன் மகிழ்கூர
மாதவ ரன்பார் தென்கயி லாய மிதுவாஞ்சை
மாதவ ரம்பு ளாம்வட பாலிற் கயிலாய
மாதவர் கேண்மி னென்று வலித்தான் மகிழ்சூதன். 75

தென்கயிலாயப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 702

---

73. கோமுனி பூசித்த தென்கயிலாயத்தை விதிப்படி வணங்குவோர் செல்வம் தகுதி பெற வாழ்ந்து, இவ்வுலகில் துன்பமின்றி இன்பம் எய்தி தேவர்களும் விழையும் சிவலோகஞ்சார்ந்து மகிழ்வர்.

74. நல்ல திருக்கயிலாயத் திருநகரில் முழுதும் நடுவில் விளங்கும் ஆதிலிங்கம் எழுந்தருளியிருக்கும் பகுதி பெருமைவாய்ந்த கயிலாயம் என்று எண்ணி தன் வடிவுமாறிப் பசுவடிவுகொண்ட திருமால் தான் அமைத்த கயிலாயக் கோயிலுக்குத் தென்கயிலாயம் எனப் பெயரிட்டான்.

75. சிவபெருமான் திருவுளங்களிக்க திருமகள் நாயகனுகிய திருமால் கல்லாற் செய்ததும், பெரியதவத்தைச் செய்யும் முனிவர்கள் அன்பு செய்வதுமாய தென்கயிலாயம் இது. நம் ஆசையும் அறிவும் ஆகிய இவற்றின் எல்லைக்கு ஏற்ப விளங்கும் வடகயிலாய வரலாற்றையும் முனிவர்களே கேளுங்கள் என்று சூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

முதலடியில் உள்ள மா தவர்-திருமகள் கணவராகிய திருமால். இரண்டாம் அடியிலுள்ள மா தவர் - பெரிய தவத்தோராகிய முனிவர்கள். மூன்ருமடியில் வாஞ்சை மாத வரம்புள் ஆம் எனப்பிரித்து ஆசையும் அறிவுமாகிய இவற்றின் எல்லையுள் விளையும் என்க. மாதத்தின் மறுபெயர் மதி. மதி - புத்தி; அல்லது அறிவு. அன்றி மாத வரம்பு - மாதங்களின் எல்லையாகவுள்ளது பங்குனி மாதம். அதற்குள் ஆனதாவது பங்குனி உத்திரத்திலே திருநடனதரிசனம் ஆகும் வடகயிலாயம் எனலுமாம்.

பதினொன்றாவது

வடகயிலாயப்படலம்

கொம்பே ரிடையாள் குடிகொண் மார்பன்
வம்பார் தருபோ திவனம் வைகி
நம்பா நடனந் தருக வென்னுப்
பம்பா தரவிற் பணியு நாளில். 1

வண்டா மரைமா மலரி ருக்கை
கொண்டா னிடையே குறுகி மொய்த்த
மிண்டா கியநித் திரைவி டுத்தான்
கண்டான் கழுவிச் சுசிமு டித்தான். 2

முன்போ லுலகாக் குதன்மு யன்றான்
என்பார் மருமத் தவனி சைத்த
வன்பார் மறையின் முறைம றப்பால்
தன்பா லதுசார் விலது கண்டான். 3

---

1. திருமால் அரசவனத்தில் தங்கிச் 'சிவபெருமானே நடனக்காட்சியை அடியேற்கு அருளுக' என அன்புடன் வழிபடுநாளில்.

கொம்பு ஏர் இடையாள் - பூங்கொம்பை ஒத்த மெல்லிய இடையினையுடைய திருமகள். வம்பு - மணம். பம்பு - நிறைந்த.

2. பிரமன் நடுவிலேகொண்ட நித்திரையை விட்டெழுந்தான்; கண்ணைக் கழுவிச் சுத்தம் செய்துகொண்டான்.

இருக்கை - ஆசனம். மிண்டாகிய - நிறைந்த. சுசி - சுத்தம்.

3. முன்போல் படைக்கத் தொடங்கினான். இறைவன் அருளிய வேதங்களின் முறையை மறந்தமையால் சிருட்டி கைவரப்பெறுமையை அறிந்தான்.

என்பு ஆர் மருமத்தவன் - என்புமாலை நிறைந்த மார்பையுடைய சிவபெருமான்.

அந்தோ விதுவோ செயவ னந்தல்
வந்தோ வியதென் றுளம தித்து
நொந்தான் றெழிஞேன் மைகொள முந்தைத்
தந்தா னவனே சரண மென்ருன். 4

எழுந்தா னிடையிற் கயிலை நண்ணிக்
கொழுந்தோ டியவன் பினுளங் கொண்டு
விழுந்தான் விமலே சர்சரண் மிது
தொழுந்தோ றவர்தூ முறுவல் கொண்டார். 5

சோகாந் தனையென் னிதுசொல் லென்று
மாகாந் தன்வினு வமலர் வாணிக்
கேகாந் தமதா னவெழி லுவன்
காகாந் தியையென் றுகரை கிற்பான். 6

வேறு

கொடுவினைகொ டனுகரண புவனமொடு போகமிவை கூட்டி டுமுனம்
அடுமல வயிற்றினுறை கின்றதென நித்திரை யகட்டின் மருவிப்
படுமுணர் வயர்ந்துமறை வித்தையு மயர்ந்துபணி யான தொழிலும்
விடுதிபெற வெற்றவுடல் போன்றுநினை யேசரண மேவுதல் செயதேன். 7

---

4. ஐயோ! இது செய்யவா தூக்கம் வந்துபோயிற்று என்று மனத்தில் எண்ணி நொந்தான். சிருட்டித் தொழிலில் மேன்மை பொருந்த முன்பு எனக் கருளிய பெருமானே சரணம் என்ருன்.

5. எழுந்தான்; மத்திய கயிலாயத்தை அடைந்து, கிளைத்தெழுந்த அன் பால் மனம் நிறைந்து விமலேசர் திருவடியில் விழுந்தான். பிரமன் விழுந்து வணங்குந்தோறும் சிவபெருமான் புன்முறுவல் பூத்தார்.

இடையிற்கயிலை - மத்திய கயிலாயமாகிய வெள்ளிமலை. கொழுந்தோடிய அன்பு - மேன்மேலும் வளரும் அன்பு. தூமுறுவல் என்ருர்; திரிபுரமெரித்த நகை போலாது அறக்கருணை செய்யும் புன்னகையாதலின்.

6. 'வருந்தினுய் என்னகாரணம்' சொல்லென்று விண்ணைக்கடந்து விளங் கும் பெருமான் கேட்க, பிரமன் 'என் ஒளியைக் காப்பாற்று' என்று கரைவான். 'சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு' என்புழிப்போலச் சோகாந்தனை - வருந்தினை எனப் பொருள்கொள்க. மாக+அந்தன்=மாகாந்தன் - விண்ணைக்கடந்த சிவம். வாணி - கலைமகள். வாணிக்கு ஏகாந்தமதான எழில் நாவன் - கலைமகளுக்கு தனியிடமான நாவையுடைய பிரமன் என்க. காந்தி - தேசசு. ஒளி - வேதமந்திர ஜபத்தால் விளையும் ஆற்றல் மிகும் ஒளி.

7. ஆன்மாக்கள் தாம்செய்த தீவினைகளுக்கு ஏற்பக்கொள்ளும் தனுகரண புவன போகங்களை இறைவன் கூட்டுமுன்னம், வருத்துகின்ற ஆணவமலத்திடை

நல்வினை யியற்றுதலி னேடுகழி தீவினையு நண்ண வடியேன்
தொல்வினை யுடற்கணுறு வித்தபரி சானினது சூழ ருளினல்
ஒல்வினை முதற்றொழி லுளுற்றுநிய திப்பொழுதி னேங்கு துயிலாய்ப்
புல்வினை யடுத்ததெனின் யானஃது போற்றும்வகை புல்லு றுவதோ. 8

நின்னருளி னுலளிய னேன்பிழை பொறுத்துமறை நீதி யருளி
நன்னருல கந்தமிய னேனினி துயிர்க்கும்வர நல்கு தியென
முன்னவ னடித்தல முடித்தலைக டிட்டிமொழி மாது கணவன்
பன்னரிய வன்பினுள நெக்குருக வின்றுதி பரப்புதல் செய்தான். 9

இந்திரனு நந்தனரி கரத்தவனு மந்தரரு மேனை யவரும்
வந்தடி பணிந்துநனி நொந்தன மிரங்குகென வல்வி டமிடுங்
கந்தர விதந்தரு சுதந்திர நிரஞ்சன கரந்தை யறுகு
சந்திர னணிந்தசடி லத்தநினை யன்றுசர ணேது மிலனே. 10

அழுந்திக் கேவலாவத்தையிற் கிடப்பதுபோல நான் நித்திரையில் முழுகி உணர்வற்று, வேதவித்தைகளையும் மறந்து, என் கடமையான படைத்தல் தொழிலையும் மறந்து, வெற்றுடல்போல தேவரீரைச் சரணம் அடைந்தேன்.

ஆன்மா சகலாவத்தைக்கு வருதற்கு முன்பு கேவலாவத்தையில் மலத்திற் கட்டுண்டு கூட்டுப் புழுப்போல அறிவிழந்து கேவலாவத்தையிற் கிடப்பதுபோல நித்திரையில் மூழ்கிச் செயலற்றுக் கிடந்தேன் என்கின்றான் பிரமன்.

8. புண்ணிய கன்மங்களைச் செய்தலோடு, மிக்க பாவகன்மங்களும் வந்தடைய, அடியேன் செய்த பழவினைகள் எனது உடலில் வந்தடைந்தமையால், தேவரீர் திருவருளால் முடிந்தவரைச் சிருட்டித் தொழிலை யான் செய்கின்ற காலத்து என்னை வந்து சாரக் கடவவாகிய பிராரத்த கன்மம் வருமாயின் அதனை யான் வைத்துப் பரிபாலிக்கும் வகையிற்றழுவப்படுவதாமோ ?

பழவினை துயிலாக வருமாயின் அதனை யான் எப்போதும் போற்றிப் புல்லலாமா ? என்பது கருத்து.

9. தேவரீர் திருவருளால் கருணை செய்யத்தக்க அடியேன்செய்த பிழைகளைப் பொறுத்து வேத ஒழுங்கை அடியேற்கருளி, நன்றாக உலகப்படைப்பை அடியேன் செய்யுமாறு வரம் அருளுக என்று இறைவன் திருவடிக் கமலங்களைச் சிரமீது சூட்டிக்கொண்டு பிரமன் சொல்லுதற்கரிய அன்பால் மனநெகிழ்ந்துருக இனிமையாகத் தோத்தரித்தான்.

திட்டி-எழுதி, அதாவது சூட்டி. மொழி மாது கணவன்-நாமகள்கணவன்.

10. இந்திரனும் திருமாலும் தேவர்களும் மற்றையோரும் 'மிகவருந்தினேம் கருணைபாலிக்க' என வந்து அடிகளில் வீழ்ந்து வணங்க விடமுண்ட கழுத்தை யுடையவனே! இன்பமருளும் நித்திய சுதந்தரனே! நிரஞ்சனனே! சிவகரந்தை, அறுகு, சந்திரன் இவைகளைச் சூடிய சடையையுடையவனே! தேவரீரையன்றி அடைக்கலத்தானம் ஒன்றும் இலேன்.

பராபர புராதன பராவுதல்செ யாருளம்வி ராவுதல் செயா
நிராமய வலாணவ நிராகரண நெஞ்சிடை நிலாவு சரண
விராறனெ டிராறுய ரிராறுசெயி ராகமதி ராத ருள்பவ
தராதல மராதசரு மத்தநினை யன்றிசர ணேது மிலனே. 11

ஆற்றல்புரி காலனுயிர் மாற்றிவழி பாடுநனி யாற்று சிறுவன்
ஏற்றமிக மேலுலக மேற்றியருள் வாழ்வருளு மேற்றின் முதல்வ
காற்றிரத மாரன்மது ஊற்றுகணை யேவவுயிர் காற்று மிறைவ
சாற்றுமறை தோற்றிய சதுர்த்தநினை யன்றிசர ணேது மிலனே. 12

சதங்கைசிறு கிண்கிணி தழங்கிட வொதுங்குதளர் மென்ன டையுறும்
பதங்கழியு முன்னடு கதங்கொடிதி மைந்தர்கள் பதங்கள் கழிய
விதங்கழிவி லங்கலு நுணுங்கமறல் கந்தனை யிலங்கி யதச
சதங்கணிப தங்கொள வழங்கிநினை யன்றிசர ணேது மிலனே. 13

அந்தரர் - விண்ணோர். கந்தர-கழுத்தையுடையவனே. நிரஞ்சன - ஆணவ மலமாகிய கருமை என்று மில்லாதவனே!

11. மேலானவர்க்கெல்லாம் மேலானவனே! பழைமைக்கெல்லாம் பழைமையானவனே! வணங்காதார் உள்ளத்தில் இணங்காத நிராமயனே! வலிய ஆணவமலத்தை வென்று ஒதுக்கியவனே! மனத்தில் விளங்கும் திருவடிகளையுடையவனே? முப்பத்தாறு தத்துவங்களாகிற குற்றங்கள் மனதைவருத்தாமல் அருள்பவனே! பூமியில் பொருந்தாத திருமேனியை உடையவனே! தேவரீரை அன்றிச் சரண்புகுமிடம் எனக்கு இலென்.

நிராமயன் - உருவற்றவன். இராறனெடு இராறு உயர்இராறு - முப்பத்தாறு; என்றது தத்துவங்களை. ஆகவே தத்துவங்கள்; ஆன்மாவைச் சேட்டியாதவாறு காப்பவன் என்பதாம். மராத - மருவாத என்பதன் சிதைவு.

12. வலிமைமிக்க யமன் உயிரைப்போக்கி, தம்மை வழிபட்ட சிறுவனாகிய மார்க்கண்டேயர் உயர்வடைய வீட்டுலகம் அருளி, வாழ்வுதவிய இடப வாகனத்தையுடையவனே! தென்றற்காற்றையே தேராகவுடைய மன்மதன் தேன் சொரியும் பூவம்புகளை ஏவ அவன் உயிரைக் கக்கச்செய்த இறைவ! நான்கு வேதங்களையருளிய நான்காம் பொருளானவனே! உன்னையன்றிச்சரணம் ஏதும் இலேன்.

காற்றும் - கக்கச்செய்யும்; அதாவது அழிக்கும். கால்+த்+உம்=பிறவினைப் பெயரெச்சம். சதுர்த்த - பிரமா விஷ்ணு ருத்ரன் என்ற மூவர்க்கும் அப்பாற்பட்ட நான்காம் பொருளாகிய பரசிவமே என்பதாம்.

13. சதங்கைகளும் சிறு கிண்கிணிகளும் ஒலிக்கத் தள்ளாடி யொதுங்கும் தளர்ந்த மென்னடைநடக்கும் பருவங்கழிவதற்கு முன்பே தேவர்களைக்கொல்லும் சினங்கொண்ட தைத்திரியர்களாகிய அசுரர்கள் பதவிகளனைத்தும் கழியவும், நன்மையற்ற மலையாகிய கிரவுஞ்சமலையும் தூளாகவும் மாறுபட்ட முருகப்பெருமானுக்கு இந்திரபதவியை வழங்கிய நின்னை அன்றிச் சரணிலேன்.

அந்திநிற முங்கருக வங்கிநிற முங்கருக வஞ்சு டர்விடுஞ்
செந்துவர்க ளுங்கருக விந்துவொடு செம்பரிதி தேசு கருகச்
சுந்தரமி குந்ததிரு மேனிவலம் வந்ததொடர் பாற்புற மெனைத்
தந்திடல டாதருளு தந்தைநினை யன்றுசர ணேது மிலனே. 14

வேறு

என்றி ருந்துதி யியம்பு தாமரை யிருக்கை யானைமுக நோக்குபு
கொன்றை துன்றுசடை யெம்பி ரானினிது கூறு வானுலகர் தாதைகேள்
நன்று நின்விழைவு முற்ற விண்டுவர நல்கி லேநமது வைப்பதாய்
மன்ற வென்றுநிலை பெற்ற வாதிபுரி யுள்ள தங்கண்மது சூதனன். 15

வெள்ளி மன்றினட மாடல் காணவிழை வுற்று நம்மருளி னுன்மறை
தெள்ளு கோமுனிவ னுகி நோற்றருள் செறிந்த காலவ னெடுந்தவக்
கள்ள வைம்பொறி கடிந்து பூசனை கடைப்பி டித்துவதி கின்றனன்
நள்ளி யங்கணுெரு நீயு மாடனனி காண்டி பின்புவர நல்குதும். 16

அசுரபதவி இளமையிலே அழியவும், கிரவுஞ்சமலை துகளாகவும் பகைத்த கந்தப்பெருமானுக்கு இந்திரபதவி வழங்கின நின்னையன்றி அடைக்கலமாவார் பிறரில்லை என்பதாம். சூரபன்மனுதியரை வென்று அவர்கள் ஆண்ட விண்ணுலகைப் பெற்று, இந்திரனுக்குப் பதவி வழங்கும்படிச் செய்த வரலாறு குறிப்பிடப்பெறுகின்றது.

நுனுங்க - துகளாக. தசசதங்கணி - ஆயிரங்கண்ணுேடைய இந்திரன்.

14. செம்மைநிறம்வாய்ந்த சந்தியாகாலம், செந்தீ, பவழம், விந்துமாயை, சூரியன் இவையனைத்தும் கருக, அழகான நின்திருமேனியை வலம்வந்த தொடர்பால் அடியேனைப் புறம்போகவிடாது அருள்வழங்கும் தந்தையே நினையன்றிச் சரன் ஏதும் இலன்.

இறைவன் திருமேனிச் செம்மையில் அவற்றின் செம்மைகுன்றி கருமையாகத் தோன்றின என்பதாம். திருமேனிச்செம்மை தமக்கின்மையால் வெட்கிக் கருக எனலுமாம்.

15. எனத் துதிக்கும் பிரமனைப் பார்த்து சிவபிரான் இதனைக் கூறுவார்: உலகத் தந்தையே கேள்! நல்லது. உன் விருப்பம் முழுதும் முற்ற இங்கு வரம் தரமாட்டோம். என்றும் அழியாத ஆதிபுரி என்றொரு நகரம் நம் இருக்கையாய் உள்ளது. அங்கே திருமால்.

16. வெள்ளியம்பலத்துத் திருநடனங்காண விரும்பி நம் திருவருளின் வண்ணம் வேதங்களையுணர்ந்த கோமுனிவனுகி, நோற்று அருள்மிகுந்த காலவ முனிவனோடு பொறிகளை அடக்கி நம்மைப் பூசித்துவருகின்றான். அங்குச் சென்று நீயும் நடனம் காண். பின்பு வரம் அருளுவோம்.

பட்டி நாதரென வெம்மை நீளுலகு பன்னுகின்றதிமை யார்பசு
ஒட்டி வந்தனை புரிந்த வேதுவினவ் வும்ப ரார்பசுவும் வந்தனை
சட்ட வாற்றியது நீயு றங்கிவிடு தன்மை சென்றமையி னுதலான்
அட்ட திக்கினரு மேத்து பட்டிமுனி யாகி யங்குறுக வென்றனன். 17

ஆல மாந்தமல னுர்கி ளத்தலு மலர்ந்த தாமரை யலங்கலான்
சால நோற்றதவ மென்கொ லோபெரிய சாமி கொண்டருளு மோர்பெயர்
ஏல யான்றழுவ வென்று வந்தடியி றைஞ்சி யன்புட னெழுந்துயர்
மூல மாமனுந வின்று பட்டிமுனி யாகி யாதிபுர முன்னினுன். 18

தண்டி னேடுகர கம்பி டித்தகர முந்த யங்குபொடி மேனிமேற்
புண்ட ரந்திகழும் வண்மை யும்பொருவி லக்க மாலைபுரண் மார்பமுந் [தகக்
தொண்டி னுற்குழைவு கொண்ட வுள்ளம்வெளி தோற்று மாக்கையசை வுந்
கண்டு கோமுனி களித்து வம்மெனவு கந்த பட்டிமுனி தாழ்ந்தனன். 19

இந்த வாறுவர வென்கொ னீயினி தியம்பு கென்னும்வளர் கோமுனிக்
கந்தின் மோகமுற வாக்கு மாற்றலயர் வுற்றி டைக்கயிலை மேவியான்
றந்தை மாலொடு மிருத்தி தாண்டவ மளித்து மென்றுவிடை தந்தனன்
முந்தை மாதவ முதிர்ந்த தென்றுவகை முற்றி யுற்றதிவ ணென்றனன். 20

---

17. காமதேனுவும் நீயுறங்கிப் படைத்தல் தொழிலைக் கைவிட்ட தன்மையால் என்னை வந்தடைந்து நன்ருகப் பூசித்தது. அதனுல் உலகு நம்மைப் பட்டிநாதர் என்று பெயரிட்டு அழைக்கலாயிற்று. ஆதலான் நீ பட்டிமுனியாகி அத்தலத்திற்குச் செல்லுக. சட்ட - நன்ருக.

18. இவ்வண்ணம் நஞ்சமுண்ட பெருமான் சொல்லுதலும் தாமரை மலர் மாலையை அணிந்த பிரமன் இறைவன் ஏற்றருளிய பெயராகிய பட்டிநாதர் என்ற பெயரையே அடியேனும் தழுவநேர்ந்ததே! யான் செய்த தவம் என்கொலோ என்று அன்புடன் வணங்கி எழுந்து சிபஞ்சாக்கரத்தை ஓதிப் பட்டிமுனியாகி ஆதிபுரத்தை அடைந்தான்.

ஆலம் மாந்து அமலன் - விடம் உண்ட இறைவன். அலங்கல் - மாலை. மூலமாமனு - மூலமந்திரம்.

19. தண்டும் கமண்டலமும் தாங்கிய கையும், புளகாங்கிதம் கொண்ட மேனியின்மேல் திரிபுண்டரம் விளங்கும் வளமும், ஒப்பற்ற உருத்திராக்க மாலை புரளும் மார்பும் சிவப்பணியாற் குழைந்த மனத்தைப் புறம்பே காட்டும் உடல் நடுக்கமும் கண்டு கோமுனி மகிழ்ந்து வாரும் என்றழைக்க, மகிழ்ந்த பட்டிமுனி வணங்கினுன்.

பொடிமேனி - வினைத்தொகை; புளகங்கொண்ட உடல். வம் - வாரும்.

20. நீ இவ்வண்ணம் வந்தது என்ன காரணம் சொல் எனக்கேட்கும் கோமுனிவருக்கு பிரமன், யான் மயங்கித் தூங்கப் படைத்தல் தொழிலில் ஆற்றல்

நாயி னுங்கடைய னேனை யும்பெரிய நாய கன்றிரு வுளஞ்செயு
மாயி னுய்ந்தன னெனக் கசிந்தருளை யுன்னி நெக்குருகு கோமுனி
தாயி னும்பரியு மாதி லிங்கமுறை தம்பி ரான்றிருமு னுய்த்தலும்
வாயி னைந்துபத மல்க வந்தனை புரிந்து சூழ்ந்துமறை பாடினுன். 21

வேறு

மின்கொண்ட மேரு விலங்கற் சிலைதாங்கிக்
கொன்கொண்ட நொச்சி குமைத்தா ரிவரென்பர்
கொன்கொண்ட நொச்சி குமைத்தா ரிவராயின்
புன்கன்றின் காலிற் பொதிர்ந்தவா றென்னே
புனிற்று மருப்பிற் புழைபட்டா ரென்னே. 22

உழக்குஞ் சமர்க்க ணொருவே லரக்கன்
அழக்குன் றடியி னடர்த்தா ரிவரென்பர்
அழக்குன் றடியி னடர்த்தா ரிவராயின்
குழக்கன்றின் காலிற் குழைந்தவா றென்னே
குருத்து மருப்பிற் குழிந்தார்மற் றென்னே. 23

அழிந்து, மத்திய கயிலாயத்தை அடையச் சிவபெருமான் 'உன் தந்தையாகிய திருமாலோடும் இரு; தாண்டவதரிசனம் அளிப்போம்' என்று ஆணைவழங்கி அனுப்பினன். நானும் முன்செய்த தவம் பலித்ததென்று மகிழ்ச்சிமிக்கு இங்கே வந்தேன் என்றுன்.

மேவி - மேவ எனச் செயவெனெச்சமாக்குக. அன்றி மேவிய யான் என்னும் பெயரெச்சத்திறு தொக்கதாகக் கொள்ளலுமாம்.

21. நாயினுங்கடைப்பட்ட அடியேனையும் பெரியபெருமான் திருவுளங் கொண்டு இவ்வண்ணம் அருளியிருப்பாராயின் 'அடியேன் உய்ந்தேன்' என மனங்கசிந்து, திருவருளை எண்ணி எண்ணி, நெஞ்சுருகிய கோமுனி தாயினும் அன்பு செய்யும் ஆதிலிங்கத்தை இடமாகக்கொண்டு எழுந்தருளியுள்ள சிவ பெருமான் திருமுன்னர் அழைத்துச் செல்லுதலும், பிரமனுகிய பட்டிமுனி வாயில் ஐந்தெழுத்து நிறைய, வணங்கி வேதகீதம் பாடினுன்.

ஐந்தெழுத்தை ஐந்துபதம் என்றது ஒவ்வோரெழுத்தும் ஒவ்வொருபதமாய் இறையும் அருளும் உயிரும் மலமும் மாயையுமாகிய பொருளை உணர்த்துதலான் என்க.

22. மேருவை வில்லாக ஏந்தி பெருமைகொண்ட முப்புரங்களை அழித்தார் இவர் என்பர்; அங்ஙனமாயின் இவர் புல்லிய கன்றின் காலிற் சுவடுபட்டது என்னே! அதன் இளைய கொம்பாற்றுளை பட்டவாறு என்னே. விலங்கல் - மலை, சிலை - வில். புனிற்று மருப்பு - இப்போதுதான் முளைக்கும் கொம்பு.

23. போரில் அனைவரையும் கலக்கும் வேலை ஏந்திய ஒப்பற்ற அரக்கனு கிய இராவணன் அழ கயிலைமலையின் அடியிலே வைத்து அமுக்கி வருத்தினர்

வள்ளி கணவன் மலைபொடிப்ப வாரிலைவேல்
கொள்ளப் படைத்துக் கொடுத்தா ரிவரென்பர்
கொள்ளப் படைத்துக் கொடுத்தா ரிவராயின்
துள்ளிளங் கன்றிற் சுவடுற்று ரென்னே
தோற்று மருப்பிற் றுளைபட்டா ரென்னே. 24

வேறு

பீடியல் கன்றி னுமடை யாளப் பெருமானை
மூடிய வன்பாற் பாடிய பட்டி முனியிப்பால்
கூடிய கோலக் கோமுனி கூறு நெறியானே
பாடியல் பூசை யாதிக ளாற்றப் படர்குற்றுன். 25

பொன்னொடு வெள்ளி வார்கரை யுந்திப் பொருதோடுந்
தன்னிக ரில்லாத் தண்புனற் காஞ்சி நதிதாழ்ந்து
நன்னடம் வல்லே நான்பெறு கென்னு நசையோடும்
பன்னின னுடிச் செய்கடன் முற்றும் படிசெய்தான். 26

ஆலவ னத்திற் கொற்றவை கோட்ட மதன்கீழ்சார்
காலவன் பூசை கண்டரு ளீசர் நகர்மேல்பாற்
கோலம ருத காஞ்சியின் றென்பாற் குளிர்பன்னீர்
மூலலிங் கத்தி னுத்தர திக்கின் முன்னுற்றுன். 27

இவர் என்பர்; அங்ஙனமாயின் குழக்கன்றின் காலால் குழைந்தது என்னே! முதிராத கொம்பால் குழிபட்டவாறுதான் என்னே.

24. வள்ளி காந்தனுகிய முருகப்பெருமான் கிரவுஞ்ச மலையைப் பொடியாக்க நீண்ட தகட்டு வடிவான வேலாயுதத்தைப் படைத்துக்கொடுத்தவர் இவர் என்பர்; அங்ஙனமாயின் துள்ளுங்கன்றால் சுவடுபட்டது என்னே! முளைக்குங் கொம்பால் துளைக்கப்பட்டது என்னே.

25. குழக்கன்றினுலாகிய அடையாளங்களைக்கொண்ட பட்டிப்பெருமானை நிறைந்த அன்போடு தோத்தரித்த பட்டி முனிவன் கோமுனி உபதேசித்த வண்ணம் பெருமையோடுகூடிய பூசைமுதலாயின செய்யச் சென்றுன். பாடு, பீடு - பெருமை.

26. பொன்னையும் வெள்ளியையும் வாரிக்கரைகளில் வீசிச் செல்லும் ஒப்பில்லாத காஞ்சியாற்றில் மூழ்கி, 'விரைவில் நடன தரிசனத்தை நான்பெறக் கடவேனுக' என்ற விருப்போடும் பாடினன்; ஆடினன்; செய்யப்படும் பூசைகளாகிய கடமைகளை முழுதும் செய்தான். வார்கரை - நீண்டகரை. வல்லே - விரைவில். நசை - விருப்பம்.

27. ஆலங்காட்டுக் காளிகோயிலுக்குக் கிழக்கிலும், காலவன் பூசித்த இறைவன் கோயிலுக்கு மேற்கிலும், காஞ்சியாற்றிற்குத் தெற்கிலும், பன்னீர்

தடவிய வங்கைக் குண்டிகை யாங்குத் தரையுள்ளே
இடவிய தீர்த்த மாக விருத்தி யிமையாரும்
வடகயி லாய மென்று துதிப்ப வளரங்கி
அடவியி னூடு மண்ணலை நூலா னமர்வித்தான். 28

குண்டிகை வாவித் தண்புன லானுங் குளிரார
மண்டிய காஞ்சி வார்புன லானும் வளர்வேணி
அண்டனை யாட்டி வண்டுப டாத வலர்சாத்தி
உண்டிகள் நல்கி யொளிபிற காட்டி யுவப்பித்தான். 29

வடவனம் வாழுங் கொற்றவை பொற்றூண் மகிழ்கூரக்
கடவிய பூசை காதலி னூற்றிக் கதிர்வெள்ளித்
தடவரை யேகிச் சம்புவை யங்குந் தாழ்ந்தன்பால்
சுடர்மணி வெள்ளி யம்பல நோக்கித் தொழுதானுல். 30

நித்தலு மிவ்வா ரூதிபு ரத்து நிமலற்காம்
பத்திகள் செய்து காலவ னோடும் பசுவான
உத்தம னோடும் போதிவ னத்தி னுறைநாளின்
முத்திய ளிக்கும் யாகம் வளர்க்கு முறைபூண்டான். 31

மரத்தடியிலுள்ள சிவலிங்கப்பெருமானுக்கு வடக்கிலும் அமைந்த இடத்தை அடைந்தான்.

28. கமண்டலத்தைத் தீர்த்தமாகப் பூமியில் புதைத்து, தேவர்களும் வட கயிலாயம் எனப்போற்ற தீவளரும் காடாகிய இடுகாட்டில் ஆடும்பெருமானை ஆகம விதிப்படிப் பிரதிட்டைப்பண்ணினுன்.

தடவிய - அகன்ற. இடவிய - இடமாக அமைந்த. அங்கி அடவி - சுடுகாடு. நூல் - ஆகமம்.

29. கமண்டல நீரானும், காஞ்சியாற்று நீரானும் சிவபெருமானை அபிஷேகித்து, வண்டு தீண்டாத பூக்களைச்சாத்தி, நிவேதனஞ்செய்து தூப தீபங்கள் காட்டி மகிழ்வித்தான்.

வேணி அண்டன் - சடாபாரத்தையுடைய தேவதேவனுகிய சிவன்.

30. ஆலங்காட்டில் வாழும் காளியை அன்போடு பூசித்து வெள்ளியங் கிரிக்குச்சென்று, அங்குச் சிவபெருமானையும் வணங்கி, வெள்ளியம்பலத்தை யும் கண்டுவணங்கினுன்.

31. நாடோறும் ஆதிபுரத்தில் உள்ள சிவபெருமானுக்கு ஏற்ற பணிகளை அன்போடு ஆற்றிக் காலவமுனிவனேடும் கோமுனிவனேடும் அரசவனத்தில் தங்கியிருக்கும் காலையில் மோட்சத்தை நல்கும் யாகம் ஒன்றைச் செய்யத் தொடங்கினுன்.

வேறு

விண்ணவர் வருகவிஞ் சையர்வருக
புண்ணிய முனிவரர் புகுதகவென்
றெண்ணிய முடங்கலுய்த் தெவ்வெவரும்
நண்ணுற வவர்மகிழ் நலஞ்செய்தான். 32

வளமருள் காஞ்சியின் வடபாங்கர்க்
களமறு விலதுகண் ணுறநாடி
அளமரு பிறவிக ளவையேங்க
உளமுவ கையினுற வுழுவித்தான். 33

விண்டொடு சாலையும் விதியாற்ருல்
குண்டமும் வேதியுங் குறித்திட்டுத்
தண்டமும் யூபமுஞ் சமிதைமுதல்
பண்டமுங் குறைவறப் பயில்வித்தான். 34

வரமலி வஞ்சுள மரமீந்த
அரணியின் ஞெலிதழ லதுமூட்டி
இரணிய வுலகமு மெழுதூமம்
பரவிய விருள்செயப் பாவித்தான். 35

---

32. விண்ணவர் முதலிய அனைவரும் வருக என ஓலையனுப்பி அவர்கள் வந்ததும் அவர்கள் மகிழ நலம்பல செய்தான்.

முடங்கல் - ஓலை.

33. காஞ்சியாற்றின் வடகரையிலே குற்றமே இல்லாத இடத்தை ஆராய்ந்து பிறவிவலையிற்சிக்கிச் சுழலும் உயிர்கள் ஓங்க மனமகிழ உழுவித்தான்.

அலமரு என்பது அளமரு என எதுகைநோக்கித் திரிந்தது. முனிவன் ஏரின் மேழிபிடித்து உழுதல் கூடாதாதலின் உழுவித்தான் என்ருர்.

34. வானளாவிய யாகசாலையும், விதிப்படி யாககுண்டங்களும், வேதிகைகளும் குறித்து, தண்டம், யூபத்தம்பம், சமித்து முதலான திரவியங்களையும் குறைவின்றிச் சேர்த்தான்.

பயில்வித்தான் - பழகச்செய்தான், அதாவது யாகசாலையில் விளங்கச் செய்தான் என்பதாம். யூபம் - யாகப்பசுகட்டும் தம்பம். சமிதை - அரசு, புரசு, வன்னி, மா, அத்தி, சித்தி முதலிய மரங்களில் தானே உலர்ந்து விழுந்த வளார்.

35. வரத்தானிறைந்த கல்யாண முருக்கமரம் பெற்ற அரணிக்கட்டையில் கடையப்பட்ட தழலைமூட்டி, தன் உலகமாகிய சத்தியலோகத்துடன் பொன்மயமான சுவர்க்கத்திலும் யாககுண்டத்தினருநது எழும் தூமம் பரந்த இருளைச் செய்ய யாகஞ்செய்தான்.

துடுப்புநெய் முறைமுறை சொரிந்தங்கண்
எடுப்பிய வங்கியி னிசைவித்த
தடுப்பருந் தீஞ்சுவை தகுமுண்டி
மடுப்பவர் மடுப்புற மடுப்பித்தான். 36

நல்வகைப் பயன்பிற நாடாமே
பல்வகை வேள்வியும் பரனூர்தம்
எல்வகை மலரடி யிணை நாடி
அல்வகை மலமற வாற்றினனால். 37

விண்ணவ ரனைவரும் வியப்புற்றார்
மண்ணவ ரனைவரு மகிழ்கூர்ந்தார்
அண்ணலுந் திருவரு ளினரானார்
பண்ணிய முனிவனும் பரிவகன்றான். 38

வேறு

அளவிடு சூழ்ச்சி யெல்லை யுயிர்கட் கடாத வறிவான சோதி யமலன்
வளவிய பாத முன்னி மறைநான்கும் வல்ல மறுவென்ற பட்டி முனிவன்
உளமலி யன்பு பொங்க வுலகேத்த வாற்று முயரோம குண்ட நினைவோர்
விளர்தபு காம நல்கு திருநீற்று மேடி தெனநின்று மேன்மை தகுமே. 39

---

36. சுருவத்தால் நெய்யை முகந்து பலமுறை சொரிந்து, யாககுண்டத்தில் எழுப்பிய தீயில் இட்ட தடுத்தற்கரிய இனிய சுவையை யுடைய உணவை உண்பவர் உண்ண உண்பித்தான்.

துடுப்பு - சுருவம்.

37. வேறு நல்லபயன்களைக்கருதாமல் இறைவன் திருவடிகளையே விரும்பி அவ்வகையான் தன் முனைப்பு அழிய பலவகை யாகங்களையும் செய்தான்.

எல்வகை - ஏல்வகை என்பதன் சிதைசொல். பொருந்தும் வகை என்பது பொருள். மலம் அற - ஆணவ வலிகுன்ற.

38. பரிவு - துன்பம். பண்ணிய முனிவன் - யாகம் பண்ணிய பட்டி முனிவன்.

39. அளவிட்டு அறிவேம் என்னும் சூழ்ச்சியின் முடிவில் நிற்கும் உயிர்களுக்கு அடுக்க ஒண்ணாத ஞானசொருபியான இறைவனுடைய வளமான திருவடிகளைத் தியானித்து நான்கு வேதங்களிலும், வல்லவனும் குற்றங்கள் அனைத்தையும் வென்றவனுமான பட்டிமுனிவன் உள்ளத்தில் நிறைந்த அன்பு

முண்டக மேலி ருந்த பிரமன் சமைத்த முறையா லவன்பெ யரொடும்
விண்டிடு தீர்த்த மான குண்டிகைத் தீர்த்தமாடி மிளிர்நீற்று மேட்டி னிதி
மண்டிய பூதி மெய்யின் வதிவித் தெழுந்து வடபா லடுத்த கயிலை [போன்
அண்டனை யன்பி னேத்து மவரே பிறந்த வறிவாள ரல்லர் பிறரே. 40

வேறு

மாதுக்க மாற்ற விழைவார்கண் மண்ணின் மகிழ்போக மெய்த லுறுவார்
ஏதுக்க ளான பலகொண்டு விண்ணி னிமையார்க ளாதல் விழைவார்
சாதுக்க ளாதல் விழைவாரு மன்பு தழைவுற்ற பட்டி முனிவன்
போதுக்கண் மேவி வழிபட்ட செம்மல் புகலன்றி வேறு முளரோ. 41

வேறு

ஒலிதழ னுப்ப ணின்று நிறைநீரு ணின்று முயர்கா னடைந்து முகிலூேய்
வலிகெழு குன்றி னுச்சி வதிவுற்று முண்டி வழுவித்தும் வைய முழுதுங்
கலிகெழு சித்தி பெற்று மதியோர்க ளெய்து கதிமுற்று மொன்று பொழுதின்
மலிதக நல்கு மென்ப வழிபாடு செய்யின் வடபா லிருந்த கயிலை. 42

பொங்க உலகினர் தொழச்செய்த யாககுண்டம் எண்ணுவோரின் வெள்ளறிவைப் போக்கி விருப்பத்தை அளிக்கும் திருநீற்று மேடு என நிலைபெற்று மேன்மை பொருந்தும். அடாத - பொருந்தாத. வளவிய - வளமான.

40. பிரமன் உண்டாக்கிய கமண்டல தீர்த்தத்தில் நீராடித் திருநீற்று மேட்டில் செல்வம்போலக் குவிந்துகிடக்கும் திருநீற்றை உடல்முழுதும் பூசி வட கயிலை நாதனை அன்போடு வணங்குபவரே பிறந்த ஞானிகள் மற்றையோர் அஞ் ஞானிகளே.

வதிவித்து - விளங்கச்செய்து; பூசி. அண்டன் - தேவன்.

41. பெரிய துன்பங்களைப் போக்கிக்கொள்ள விரும்புபவர்களும், இப்பூ வுலகிலே நிறைந்த மகிழ்ச்சியோடு போகம் அடைய விரும்புவோரும், பல கார ணங்களால் சொர்க்கபூமியில் தேவர்களாகவேண்டும் என விரும்புபவர்களும், சாதுக்களாகவேண்டும் என விரும்புபவர்களும், பட்டிமுனிவன் பூக்களைக்கொண் டர்ச்சித்து வழிபட்ட சிவபெருமானை அடைக்கலமாக அடைதலன்றி அடையத் தக்க வேறு எவருளர்.

42. தீயில் நின்றும், நீரிடை நின்றும், காட்டில் உறைந்தும், மேகங்கள் தவழும் மலையுச்சியில் தங்கியும், உணவு துறந்தும், உலகமுழுதும் கொண்டாடும் சித்திகளைப்பெற்றும் ஞானிகள் அடையும் கதியனைத்தையும் வடகயிலையை வழி படின் ஒருநாளின்கண் நிரம்பக் கொடுக்கும் என்பர்.

வடகயி லாய மேய மணிகண்டர் மேன்மை வரைசெய்து செப்ப லரிதே
புடவியி லெய்து மார்வ மருவா தொழிந்த புரைதீர்ந்த நோன்மை யறிவீர்
நடநட ராச னங்க ளொருமூவ ருக்கு நயமல்க நல்கு திறன்மற்
றுடலுறு நோய்கண் மாய வுரைசெய்து மென்ன வுயர்சூத னோத லுறுவான்.

வடகயிலாயப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 745

---

43. வடகயிலாய நாதன் பெருமையை யாரும் அளவிட்டுச் சொல்ல இயலாது. மீண்டும் பூமியில் பிறக்கும் ஆசையற்ற குற்றமற்ற ஞானிகளே! நடராசர் அத்தலத்தில் மூன்றுபேருக்கு இன்பம் உண்டாக நடனதரிசனத்தை அருளிய தன்மையை, உடற்பிணி நீங்க உரைப்போம் எனச் சூதமுனிவர் சொல்லத் தொடங்கினர்.

பன்னிரண்டாவது

நிருத்தப்படலம்

உரைத்தபரு வத்திநெடு முயர்கணவன் வரவுள்ளித்
தரைத்தலையேக் கறுமடவார் தமைநேர விடைக்கயிலை
வரைத்தலத்துத் தம்பெருமான் வரைந்தநா ளொடுநடமால்
கரைத்தவுளத் திடைநாடி யிருந்தனர்கா லவன்முதலோர். 1

இவ்வாறு சிவபூசை யினிதாற்றி யிருக்குநாள்
செவ்வாய்மைக் கோமுனிவன் சிவபெருமா னெம்மன்றும்
ஒவ்வாத விரசதமன் றுளதென்று னதுகாணும்
அவ்வாய்மை பெற்றிலே னெனவயர்ந்து தியானித்தான். 2

அண்ணலார் திருவருளா லசரீரி வாக்கெழுந்து
நண்ணரியமுன் னம்பலத்தை நம்பர்மறைத் தருளினர்
திண்ணமுற வவ்வயினீ செய்தொருமன் றதினுங்கள்
பண்ணவன்மெய் யுருவமைத்துப் பணிகவெனப் பணித்ததே. 3

---

1. தம்பால் சொல்லிச்சென்ற கால வரவையும், கணவன் வரவையும் நினைத்து நிலவுலகில் ஆசையால் தாழ்கின்ற மகளிரையொப்ப, இடையிலுள்ள கயிலாயமாகிய ஆதிபுரியில் சிவபெருமான் குறித்த நாளிலே நடங்காணவேண்டு மென்னும் மயக்கத்தால் உருகிய உள்ளத்தில் காலவர், கோமுனி, பட்டிமுனிவர் முதலியோர் ஆராய்ந்திருந்தனர்.

பருவம் - காலம். உள்ளி - நினைந்து. ஏக்கறும் - தாழும். இடைக்கயிலை வரை - மத்தியிலுள்ள கயிலாயமலை. மால் - மயக்கம். நாடி - ஆராய்ந்து.

2. இப்படிச் சிவபூசையை இனிதாகச் செய்திருக்கும் நாளில் செவ்விய உண்மை பொருந்திய கோமுனிவர், சிவபெருமான் முன்னர் எந்த மன்றமும் ஒப்பாகாத வெள்ளிமன்று ஒன்றுண்டு எனக் கூறியருளினர்; அம்மன்றத்தைக் காணும் அக்கூற்றை இதுவரையில் பெற்றிலேனே என்று சோர்ந்து தியானித்தார்.

வாய்மை - உண்மை. அயர்ந்து - சோர்ந்து.

3. அப்போது இறைவர் திருவருளால் 'நீ விரும்பும் பழைய அம்பலத்தைப் பரமசிவன் மறைத்தருளினர்; ஆகலின், அவ்விடத்திலேயே நீ உறுதி பெற ஓர் அம்பலத்தை நிருமிப்பாய், உங்கள் இறைவர் திருவுருவத்தைப் பதிட்டைசெய்து வழிபடுக' என்று விண்ணில் ஒரு அசரீரிவாக்கு எழுந்தது.

விண்ணெழுந்த மொழிகேளா விம்மிதனுய்ப் பரவசனுய்
மண்ணிடந்த கோமுனிவன் மாதவத்துக் காலவனைப்
பண்ணரிய பெருந்தவத்துப் பட்டிமுனி யொடும்விளித்துப்
புண்ணியன்மெய்த் திருவருளாற் போந்ததிது வெனமொழிந்தான்.

மன்னுதிரு வருளதுவேல் வாழ்ந்தனம்வாழ்ந் தனமென்று
பன்னியவர் தொழுதாடப் பண்ணவர்க ளுலகாளும்
மன்னவனை வரக்கூவி வயங்கியகோ முனிநுங்கள்
கம்மியனைத் தருகவெனக் காவலனுந் தருவித்தான். 5

மன்றுபுரி யிடங்காணுர் மயங்கினர்நிற் குங்காலைக்
கொன்றைசடை மிலைத்தபிரான் கோமளவல் லியினகன்று
தொன்றுதொடு நடம்புரியுந் தொல்லையிடங் காட்டுதற்கு
வென்றிமிகுஞ் சித்தனென வேற்றுருக்கொண் டாங்கடுத்தான். 6

கோதிலிர சதமன்றங் கோமுனிவன் முயலுற்ருன்
சோதிநடங் காண்டுமெனத் துன்னியவா னவரரையர்
வேதியரே னையர்பலரும் விம்மிதங்கொண் டகங்களிப்பப்
போதிவனத் திடைச்சித்துப் புரிபாக்குப் புரிவுற்ருன். 7

அசரிரி வாக்கு - ஆகாயவாணி. நம்பர் - சிவபெருமான். வயின் - இடம். மெய்யுரு - திருவுருவம்.

4. அந்த அசரீரியைக் கேட்டுக் கோமுனிவர் விம்மிதமுற்ருர், பரவசப் பட்டார், காலவமுனிவரையும் பட்டிமுனிவரையும் அழைத்தார். புண்ணியமூர்த்தியின் திருவருளால் அசரீரி இவ்வாறுண்டாயிற்று என்று மொழிந்தார்.

மண்ணிடந்த கோமுனிவன் - திருமால் அமிசமாகவுள்ள கோமுனிவர்.

5. நிலைபெற்ற திருவருளானது அதுவாயின் நாம் வாழ்ந்தோம் வாழ்ந் தோம் என்று சொல்லி அவர் தொழுது கூத்தாட, கோமுனிவர் விண்ணுலகத்தை ஆளும் இந்திரனை அழைத்து, உங்களுடைய தச்சனை அழைக்க என்று சொல்ல இந்திரனும் கம்மியனைத் தருவித்தான்.

பன்னி - சொல்லி. பண்ணவர் ... மன்னவன் - இந்திரன்.

6. வெள்ளியம்பலத்தை நிருமித்தற்கு உரிய இடத்தைக் காணுதவராய்க் கோமுனிவர் மயங்கி நிற்கும் காலத்துச் சிவபிரான் உமாதேவியாரை அகன்று தொன்றுதொட்டு நடனமிடும் பழைய இடத்தைக் காட்டுதற்குச் சித்தர் உருக் கொண்டு அங்குத் தோன்றினர்.

மிலைந்த - சூடிய. கோமளவல்லி - உமாதேவியார்.

7. குற்றமற்ற வெள்ளி மன்றத்தைக் கோமுனிவர் காண முயற்சித்தார். சிவபெருமானுடைய நடனத்தைக் காண்போம் என்று நெருங்கிய வானவர்களும்

வேறு

பருதி வானவன் காலையின் மேக்கெழப் பணிக்கும்
அருவி மால்வரை துரும்பென வளியிடை யலைக்குங்
கருவி மாமழை யின்றியே புனலுறை கஞற்றுந்
தருணர் பாலரா மூத்தவர் தருணராச் சமைக்கும். 8

அரவின் வாயிடை யலைகடற் சுவையமிழ் தெடுக்குங்
கரளம் வான்சுதை யாகுமா கடைக்கணித் தருளும்
பரவை விண்ணெழுந் தங்கணே பயில்வுறப் பயிற்றுஞ்
சுரர்கண் மாநுடர் மாநுடர் சுரரெனத் தோற்றும். 9

மண்ணு ளேசிவ லோகமும் வருவித்துத் தெரிக்கும்
விண்ணு ளேநர ருலகமு மேவித்து மறைக்குந்
திண்ண மாகிய வசரத்தைச் சரமெனத் திரிக்கும்
வண்ண மாகிய சரத்தினை யசரமா வயக்கும். 10

இந்திரனும் அந்தணர்களும் மற்றும் பலரும் ஆச்சரியம் கொண்டு மனம் குதூகலிக்க அரசவனத்தில் சித்துச்செய்வதற்குச் சித்தர் வேடங்கொண்டு வந்த சிவபெருமான் விரும்பினர்.

8. சூரியனை உதயகாலத்தில் மேற்கெழச்செய்வார். பெரிய மலையும் துரும்பென்று சொல்லும்படியாகக் காற்றில் அலையச்செய்வார். கூட்டமாகிய மேகங்களில்லாமல் மழைபெய்யும். தருணவயதுடையவர் பாலர் ஆவர். மூத்தவரைத் தருணராகும்படிச் செய்வார்.

வளி - காற்று. கருவி மா மழை: கருவி - தொகுதி; அக்கினி சம்பந்தமாகிய சூரியகிரணங்கள் ஜலத்தை இழுக்க, அது நுட்பமாகிய புகையாய் எழுந்து வாயுவோடு கலந்து முகில் வடிவாகலின் தொகுதி என்றார். ''கருவி தொகுதி'' தொல். உறை - துளி.

9. பாம்பின் வாயிலே கடல் அமுதை எடுப்பிப்பார். நஞ்சு தேவாமிர்தம் ஆகும்படி கடைக்கணிப்பார், கடல் ஆகாயத்தில் எழுந்து அங்கே தங்கும்படி செய்விப்பார். தேவர்கள் மானுடராயும் மானுடர் தேவராயும் வரச்செய்வார்.

கரளம் - நஞ்சு. சுதை - அமுதம்.

10. நிலவுலகத்திலே சிவலோகத்தை வருவித்துக்காட்டுவார். விண்ணுலகிலே நரகலோகத்தை வரச்செய்து மறைத்தருளுவார். அறிவில்லாதபொருள்களை அறிவுடையனவாக மாறுபடுத்துவார். இயங்குதிணையை நிலைத்திணையாகச் செய்வார்.

மேவித்து - மேவுவித்து.

கற்பின் மேதகு மாதரு முள நனி கலங்கப்
பொற்பின் மேதகு மாடவர் தங்களைப் பூக்கும்
வற்பின் மேதகு மாதவர் குழாங்களு மயங்க
அற்பின் மேதகு மரிவையர் பலர்தமை யாக்கும். 11

கோடி யிந்திரர் கும்பிடக் கடைக்கணித் தருளுங்
கோடி நான்முகர் கும்பிட முடிவறி தசைக்குங்
கோடி நாரணர் கும்பிடக் குறுநகை காட்டுங்
கோடி ருத்திரர் கும்பிட வருகெனக் கூறும். 12

அறையு மாயிர வாயிரந் தருமநூ லமைக்கும்
பொறைகொ ளாயிர வாயிரம் பொருட்டுறை கிளக்குந்
துறைகொ ளாயிர வாயிரங் காமநூ றெகுக்கும்
மறைக ளாயிர வாயிரம் புதியன வகுக்கும். 13

எட்டுச் சித்தியும் வல்லவர் முடியினைப் பிரம்பால்
தொட்டுச் சித்திக டொலைத்தவர்க் கறிவின்மை துரக்கும்
எட்டுச் சித்தியுஞ் சிறுமகார் களுமெளி தியற்றத்
தொட்டுச் செங்கையி னீறவர் மெய்யுறத் தூவும். 14

---

11. கற்புடைய மாதர்களும் மனம் கலங்கும்படி அழகுமிக்க ஆடவர்களைத் தோற்றுவிப்பர். வலிய பெருந்தவத்தினர் கூட்டமும் மயங்கும்படி அன்புமிக்க மங்கையர் பலரைத் தோற்றுவிப்பர்.

பூக்கும் - படைக்கும். அற்பு - அன்பு.

12. கோடி இந்திரர்களும் கோடி நான்முகக்கடவுளரும் கோடிக்கணக்கான நாரணரும் கோடி உருத்திரர்களும் கும்பிடும்படியாகக் கடைக்கண் சாத்துவார். முடியசைப்பார், புன்முறுவல்செய்வார், வருக என்பார்.

வறிது - சிறிது. "வறிது சிறிதாகும்" தொல்.

13. ஆயிரக்கணக்கான அறநூல்களை உண்டாக்குவார். ஆயிரம் ஆயிரமாக உள்ள அர்த்தநூல்களைச் சொல்லுவார். பலவகைப்பட்ட துறைகளையுடைய காமநூல்களை ஆயிரமாயிரமாகத் தொகுப்பார். ஆயிரமாயிரமாகவுள்ள மறைகளைப் புதியனவாகச் செய்வார்.

பொருட்டுறை - அர்த்தசாஸ்திரம்.

14. அட்டமாசித்திகளில் வல்லவர்களுடைய முடியைப் பிரம்பால் தொட்டு அவர்களுடைய சித்திகளையெல்லாம் தொலைப்பார், அறிஞராகச்செய்வார். சிறு பிள்ளைகளுக்கும் எளிதாக எட்டுச் சித்திகளும் கைவரும்படியாகத் தமது திருக்கரத்தால்தொட்டு விபூதியை அவர்மீது தூவுவார்.

அறிவின்மை - அறியாமை. துரக்கும் - போக்கும்.

சித்திவ் வாறுபல் கோடிகள் விளைத்தலுஞ் சித்துக்
கொத்தெ லாந்தெரிந் தவர்களு மும்பரார் குழுவும்
பித்த ராகிய சித்தனு ரடியிணை பிரியாப்
பித்த ராயினர் பெருகுமா னந்தமுட் டிளைப்ப. 15

வேறு

மட்டு விரியு நறுந்துளப மறைத்த நிறத்துக் கோமுனியும்
பட்டி முனியுங் காலவனும் பல்லாற் ருனு மிவனுரென்
றெட்டி யுணரு முள்ளகமு முணர்ந்து தெளியா வகைமருட்டச்
சட்ட விறுவி யறிதுமெனத் தழைத்த சித்தர் மருங்கணைந்தார். 16

படைத்தி யயனு மலையுலகம் பரித்தி யரியு மலையாங்கே
துடைத்தி யரனு மலமறைப்புச் சூழ்தி தொழுமீ சனுமல்லை
தடைத்த மலநோய் நலியவரு டருதி யைந்து முகனுமலை
கொடுத்தி பலநூன் மாதவர்க்குங் குருவு மலைநீ யாரென்றூர். 17

---

15. இவ்வாறு பலகோடி சித்திகளை எல்லாம் செய்த அளவிலே சித்துக்களின் நிலைமுழுதும் தெரிந்தவர்களும் தேவர்கள் கூட்டமும் அருட்பித்தராகிய சித்தருடைய திருவடிகளைப்பிரிந்து செல்லமாட்டாமல் பித்தம்பிடித்தவர் ஆனுர்கள்; நிறைந்த இன்பத்தை மனத்திலேகொண்டு திளைத்தார்கள்.

ஆனந்தம் உள் திளைப்பப் பத்திப்பித்துக்கொண்டார்.

16. திருத்துழாய் மாலையை மறைத்த மார்பினையுடைய கோமுனிவரும், பட்டிமுனிவரும், காலவமுனிவரும் பலவிதத்தானும் இவர் யாரென்று ஆராய்ந்து அறியும் மனமும் தெளியாதபடி மயக்கத்தைச்செய்ய, விரைந்து இவர் யாவர் என வினவி அறிவோம் என்று சித்தமூர்த்திகளின் பக்கலை அடைந்தனர்.

மட்டு - தேன். மருட்ட - மயக்க. சட்ட - விரைவாக.

17. "ஐய, நீ யாவற்றையும் படைக்கின்ருய்; பிரமனும் அல்லை. படைத்த உலகத்தைப் பாதுகாக்கின்ருய்; நீ விஷ்ணுமூர்த்தியும் அல்லை. தோற்றியவாறே துடைத்தல் தொழிலும் செய்கின்ருய்; நீ அரனும் அல்லை. மறைப்புத் தொழிலைச் செய்கின்ருய்; நீ மகேசுரனும் அல்லை. தடைசெய்யும் மலநோயானது கெடும்படியாக அருள் செய்கின்ருய்; ஆயினும் நீ ஐந்துமுகக்கடவுளும் அல்லை. சிறந்த தவசிகளுக்கும் பல நூல்களைக் கொடுக்கின்ருய்; நீ குருவும் அல்லை. யார் நீ" என்றனர்.

தடைத்த - தடைசெய்த. ஐந்துமுகன் - சதாசிவமூர்த்தி.

முனிவர் வினவ முனிவருக்கு முனியாஞ் சித்த ரிறுக்கின்ருர்
துனியில் கேள்வி மாதவத்தீர் தொகுத்து மொழியக் கேண்மினே
நனிசித் துடையோ ரெவ்வெவரு நாடுமுதன்மைச் சித்தரேம்
இனிய பெயருஞ் சித்தேச ரென்ப தாகு மறிமினே. 18

காலங் கடந்து வினைகடந்து கருவி யனைத்துங் கடந்துமல
மூலம் கடந்த தன்மையே முழுது முணர்பே ரறிவினேங்
கோலங் கடந்த வுருவினேங் கோல மனைத்துங் குறிக்கொண்டேஞ்
சீலங் கடந்த வறிவினர்க்குச் சேயே மல்லேந் தெளிமினே. 19

என்று கிளந்த சித்தேசர்க் கெதிர்கை தொழுது முனிவரர்கள்
வென்ற வினையீர் காலத்தின் விகற்பங் கடந்து முழுதுணர்ந்த
நன்றி யுடையீர் நீராகி னம்ப னடன நவில்கின்ற
மன்றந் தெரிக்க வல்லீரேல் வகுத்த வுரைமெய் யாமென்ருர். 20

---

18. இவ்வாறு முனிவர்கள் வினவ, முனிவர்களுக்குள்ளே சிறந்த முனிவ ராக விளங்கும் சித்தர் விடைகூறுவார்: குற்றமில்லாத நூற்கேள்வியை உடைய மாதவத்தீர்! நாம் சொல்வதைக் கேண்மின், நாம் சித்துவிளையாடும் எத்தகை யோருக்கும் ஆராய்ந்து அறிதற்கு அருமையான முதன்மைச் சித்தர் ஆவேம்; நமது பெயரும் சித்தேசர் என்பதாம் என்பதை அறிவீர்கள்.

இறுத்தல் - சொல்லுதல்.

19. காலத்தையும் வினையையும் கருவிகளையும் மலமூலத்தையும் கடந்த தன்மையை உடையேம். முற்றும் உணர்ந்த பேரறிவுடையேம். அழகுகளைக் கடந்த வடிவத்தை உடையேம். அழகுகள் அனைத்தையும் அறிந்தோம். சீலத் தையும் கடந்த அறிவுடையவர்களுக்கு நாம் தூரத்தேம் அல்லேம். நீவிர் தெளிமின்கள்.

சேயேம் - தூரத்தேம்.

20. என்று சித்தேசர் சொல்ல, முனிவரர்கள் கையாற்ரெழுது, வினையை வென்ற சித்தரே! காலத்தின் மாறுபாட்டையும் கடந்து முற்றும் உணர்ந்த பெரியீர் நீவிர் ஆயின், சிவபெருமான் திருநடனம் செய்தருளுவதாகச் சொல்லிய அம்பலத்தைத் தெரிவிக்க வல்லவராயின் இதுவரை நீர் சொல்லிய யாவும் மெய்யேயாம் என்ருர்கள்.

வகுத்த - சொல்லிய.

பொம்ம லோதி யிடமறைத்துப் போந்த சித்தர் முறுவலித்துச்
செம்ம லுடையி ராதலினுல் தேவ தேவன் திருமன்ற
நும்மை யறிவித் திடுதுமென நுவன்ரு ருய்ந்தோ மெனத்தாழ்ந்தார்
வம்மி னெனக்கொண் டுடன்போந்தார் மணிப்பா துகைக ணிலந்தோய.

ஆதி லிங்கந் தனக்குவட கிழக்கி னெல்லை யடர்வினைகள்
காதி யிருந்த காலவனீச் சரத்துண் மூவ ருருவான
போதி நிழலிற் புக்கருளிப் பொருந்த மன்ற மெழுகவெனச்
சோதி மலரத் திருவாயாற் சொன்ஞர் மன்ற மெழுந்ததே. 22

அண்ட முகட்டைப் பொதிர்ப்பனபோ லசும்பு மொளியின் கதிர்நிமிரப்
பிண்ட மான கீழண்டப் பித்தி தொடுத்த வடியினதாய்க்
கொண்ட திசைக ளோரெட்டுங் குறுகி யணிய வாய்க்கிடப்ப
மண்டி யெழுந்த விரசதத்தின் மன்றின் பெருமை வகுப்பாரார். 23

---

21. வாமபாகத்திலுள்ள உமாதேவியாரை மறைத்துக்கொண்டு எழுந்தருளிய சித்தமூர்த்திகள் புன்முறுவல் செய்து, முனிவர்களை நோக்கி, 'நீவிர் சிறந்தவர்களாதலின் சிவபெருமானது வெள்ளிமன்றை உமக்குக்காட்டுவோம்' என்றருளினர். முனிவர்களும் நாங்கள் உய்ந்தோம் என்றனர். முனிவர்களே! நம்மோடு வம்மின் என்று தமது திருவடிகள் நிலத்திலே தோயும்படி சித்தர் தம்முடன் அவர்களை அழைத்துச்சென்ருர்.

பொம்மல் - பொலிவு, மிகுதி எனினுமாம். ஓதி - கூந்தல். பொம்மலோதி - உமாதேவி; அன்மொழித் தொகை. முறுவலித்தல் - புன்சிரிப்புக் கொள்ளல். நும்மை - உருபுமயக்கம்.

22. ஆதிலிங்கமூர்த்திக்கு வடகிழக்கில் உள்ள காலவனீச்சுரத்துள் மும்மூர்த்தி வடிவான அரசமரத்தின் நிழலிலே சென்று, 'மன்றம் எழுக' எனத் திருவாய் மலர்ந்தார். அக்கணத்திலேயே மன்றம் எழுந்தது.

காதி - போக்கி. போதி - அரசு. சோதி - சித்தர்வடிவாக வந்த சிவ பெருமான்.

23. அண்டமுகட்டைத் துளைப்பதுபோலத் தோன்றும் ஒளியின் சுடர் ஓங்கிச் செல்ல, கீழ் அண்டச்சுவரில் அடியையுடையதாய், எட்டுத்திசைகளையும் நெருங்குமாறு எழுந்த அவ்வெள்ளிமன்றத்தின் பெருமையை யாவர்தாம் சொல்ல வல்லார்?

பொதிர்த்தல் - துளைத்தல். அசும்பும் - துளிக்கும். அண்டப்பித்தி - அண்டச் சுவர். இரசதம் - வெள்ளி.

பளிக்குச் சிலேத்திண் சுவர்நீடிப் பளிக்குச் சுவர்க்கு ளோவியங்கள்
வெளிக்க ணமரர் நிற்பதுபோல் விளங்கி வெள்ளி மேல்வேய்ந்து
களிக்குஞ் செம்பொன் வரைநிறமுங் கழிக்கும் பைம்பொற் றலமுள்ளால்
துளிக்குங் கிரண வொளிமணிக டுவன்றிச் சுடர்ந்த தெழுமன்றம். 24

மந்தா ரத்தின் மலர்கற்ப மலர்சந் தான மலர்தாருக்
கொந்தார் மலரா தியிற்செய்த கோதை நவமா மணிமாலே
சிந்தா மணியின் பலகோவை தெய்வ நிதித்தா மரைத்தெரிய
னந்தா வொளிப்பொன் னரிமாலே யுள்ளும் புறம்பு நான்றனவே. 25

பனிநீ ரளவித் தேன்விராய்ப் பசுந்தா தணவி மான்மதந்தோய்ந்
தினிய புழுகார்ந் துரோசனேசேர்ந் திளகு நறுங்குங் குமச்சாந்தம்
நனியெவ் விடனு மணிந்தைந்து நறிய புகையுந் தவழ்ந்தமண
மனித ருலகும் விண்ணுலகும் வளர்மா திரமுங் கமழ்ந்ததே. 26

---

24. பளிங்குக்கற்களால் அமைந்த சுவர்கள் நீண்டு, பளிங்குச்சுவரினுள்ளே யுள்ள சித்திரங்கள் வெளியே தேவர்கள் நிற்பதுபோல விளங்கி, வெள்ளித் தகடுகளால் மேலே வேயப்பட்டு, மேருமலேயின் பொன்னிறத்தையும் தோற்கச் செய்யும் பசிய பொன்னுலாகிய இடத்தில் ஒளிவீசும் மணிகள் நெருங்கிய மன்றம் பிரகாசித்தது.

பளிக்குச் சிலே - பளிங்குக்கல். ஓவியம் - சித்திரம். மணிகள் துவன்றி; துவன்றி - நெருங்கி.

25. மந்தாரம் கற்பகம் சந்தானம் ஏனேய பாரிசாதம் அரிசந்தனம் முதலிய தெய்வதருக்களின் கொத்தாகவுள்ள மலர் மாலேகளும், நவமணிமாலேகளும், சிந்தாமணியின் பல கோவைகளும், தெய்வ நிதியாகிய தாமரை மலர் மாலேயும், பொன்னரி மாலேகளும் அகத்திலும் புறத்திலுமாகத் தொங்கின.

கொந்து - பூங்கொத்து. தார், கோதை, கோவை, தெரியல் என்பன ஒரு பொருட்சொற்கள். நந்தாஒளி - கெடாத ஒளி.

26. பனிநீர், தேன், பசிய மகரந்தப்பொடிகள், கஸ்தூரி, புழுகு, கோரோசனே, குங்குமப்பூ முதலிய வாசனேப் பொருள்கள் எல்லாம் கலந்த சேற்றை எவ்விடங்களிலும் பூசப்பெற்று, ஐவகையான வாசனேப்புகையும் கமழப் பெற்றுள்ள மணம், மண்ணுலகும் விண்ணுலகும் எட்டுத்திசைகளும் வீசின.

அளவி, விராய், அணவி, தோய்ந்து, ஆர்ந்து, சேர்ந்து என்பன ஒரு பொருளன. குங்குமச் சாந்தம் - குங்குமச்சேறு. மாதிரம் - திசை. புகை - புகைக்கும் அகில் முதலாயின. அவையாவன:- "அஞ்சனக் கட்டி யரியாசம் பச்சிலே, ஆரம் அகிலுறுப்போ ரைந்து" சிலப்பதிகாரம்.

கையிற் புனையா விசித்திரப்பொற் கலைப்பட் டனைத்தும் விதானித்து
மையி னகன்ற வெழினியுமெல் வளர்கம் பலமும் விரித்திட்டு
நெய்யின் றெரியு மணிவிளக்கு நெய்யுற் றெரியுந் தழல்விளக்கும்
பொய்யின் றெளிர நிரைநிரையிற் பொருத்தி வனப்புப் பொலிந்ததே.

வேறு

மன்றங்க ணெழுந்து விளங்கலு நோக்கி வானோர்
இன்றுய்ந்தன மென்றிணர் மாமலர் மாரி தூர்த்தார்
நன்றிங்கிவர் செய்தி யெனத்துதி நாவி னூர
அன்றங்குறு மாதவர் சித்த ரடிக்கண் வீழ்ந்தார். 28

அருண்மல்கிய கோமுனி யாதிய ருந்த வத்தோர்
தெருண்மல்கிய சித்த ரடித்தலந் தாழ்ந்து சொல்வார்
இருண்மல்கிய யாங்களு முய்யவிங் குற்று நீரே
பொருண்மல்கிய மன்ற மெடுத்தனிர் போற்றி வாழ்ந்தேம். 29

இன்னுந்தமி யேங்கண் மனக்குறை யீங்கொன் றுண்டு
மின்னுந்தழல் போனிறத் தீரது விள்ளக் கேண்மின்
மன்னுஞ்சபை நாயகர் மெய்யுரு வாய்ப்பச் செய்து
கொன்னும்வழி பாடுக ளாற்றல் குறித்து ளேமால். 30

---

27. ஒருவர் கையாற்செய்யாத அழகுமிக்க பொன்னுடை பட்டு முதலியவை களால் மேற்கட்டிசெய்து, குற்றமில்லாத எழினியும், மென்மையான கம்பளங்களும் விரித்து, இரத்தினதீபமும் நெய்விளக்கும் வரிசை வரிசையாக ஒளிசெய்ய அழகு விளங்கியது.

கையிற் புனையாப் பொற்கலை: ''கைபுனைந் தியற்றுக் கவின்பெறு பூந் துகில்''. மை - குற்றம். எழினி - திரைச்சீலை: அவை ஒருமுக எழினி, பொரு முக எழினி, கரந்துவரல் எழினி என்பன.

28. வெள்ளிமன்றம் அவ்விடத்துத் தோன்றி விளங்குதலைக் கண்டு விண் ணோர் கற்பகப்பூமாரி பொழிந்தார். தவசிகளும் 'இச் சித்தர் செயல் நன்று' எனத் துதித்து அவர் திருவடிகளில் வீழ்ந்தார்கள்.

இணர் - பூங்கொத்து. நாவின் ஆர: ஆர - நிரம்ப.

29. அருள்நிறைந்த கோமுனிவர் முதலிய தவசிகள் ஞானம் நிறைந்த சித்தேசருடைய திருவடிகளில் வீழ்ந்து அஞ்ஞானம் நிறைந்த யாங்களும் உய்யும் படி தேவரீர் இங்கு எழுந்தருளி இவ்வெள்ளி மன்றத்தை வெளிப்படுத்தருளினீர் (யாங்கள்) வணங்குகின்றோம்; வாழ்ந்தோம் என்றுசொல்லி.

தெருள் - ஞானம். இருள் - அஞ்ஞானம், அறியாமை.

30. இன்னும் எங்களுக்கு ஒரு மனக்குறையுண்டு. அது நிலைபெற்ற சபா நாயகர் திருவுருச்சமைத்துச் சிறந்த வழிபாடுகளையும் செய்யக்கருதினோம்.

சிற்பந்தவி ராதடி கேள்புரி தெய்வ மன்றின்
பொற்பின் றிறனுக் கியையப் புலவோர் கடச்சன்
நற்பங்கயன் மான்முத லோருநன் ருக்க வல்லார்
அற்பங்கவர் சிற்றறி வாளர்க ளான நீரால். 31

முழு துங்கவர் பேரறி வாட்சியிர் யார்க்கு மூத்திர்
பழுதொன்றுமி லாதிர் பரம்பரை நூலும் வல்லிர்
தொழுதும்மடி போற்றுதும் யாந்துளங் காமை யந்திப்
பொழுதொன்றிய வேணியி ளுருரு பொறப்ச் செய்யிர். 32

என்றுரது கேட்டுயி ருக்குயி ராகி எங்கும்
நின்றூர்திரை கோலுமி னென்றனர் நேர்வ ணங்கிப்
பின்றூழ்சடை மாமுனி வோரது பேணிச் செய்ய
ஒன்றுமுகுர்த் தத்தள வுந்திரை யுள்ளி ருந்தார். 33

ஒன்று - சிறிது. தழல் - அக்கினி. விள்ள - சொல்ல. மெய் - திருமேனி. மெய்யுரு - உண்மை வடிவத்தை எனினுமாம். வாய்ப்ப - பொருந்த.

31. சிற்பநூல் முறைவழுவாது, அடிகளே! தேவரீர் எழுவித்த வெள்ளி மன்றத்தின் அழகினுக்கு ஒப்பாகத் தெய்வத்தச்சனும், பிரமனும், திருமாலும் சிற்றறிவும் சிறுதொழிலுமுடைய தன்மையால் மாட்டாதவராவர்.

பொற்பு - அழகு. திறன் - சிறப்பு. புலவோர் தச்சன் - மயன். புலவர் - தேவர். வல்லார் - மாட்டார்.

32. முற்றறிவுடையீர்! யாவர்க்கும் மூத்தவரே! குற்றமொன்றுமில்லாதவரே! பாரம்பரியமாகவுள்ள நூல் வல்லவரே! தொழுவோம், வணங்குவோம். நாங்கள் கலங்காதபடி அந்திவண்ணச் சடையராகிய ஆடும்பிரானுடைய மூர்த்தத்தை எங்கட்கு அருளுவீராக.

முழுதுங்கவர் பேரறிவுஆட்சி - சர்வஞ்ஞத்துவம், சர்வகர்த்திருத்துவங்கள். யார்க்கும் மூத்தீர்; "மூத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி" (திருநாவுக்) பரம்பரை - இடையறுதுவருதல். துளங்காமை - கலங்காமை. அந்திப்பொழுது - மாலைக்காலம். வேணி - சடை. அந்திப்பொழுதொன்றியவேணி; "தழலொத் தவிர்புரிசடை" (செய் - 61)

33. என்று முனிவர்கள் விண்ணப்பித்ததைக்கேட்டு உயிர்க்குயிராய் எங்கும் நிறைந்துள்ள சிவபிரானாகிய சித்தர், முனிவர்களைப்பார்த்துத் திரையிட்டு மறையுங்கள் என்றார். முனிவர்கள், சித்தமூர்த்தியை வணங்கி அவ்வாறே திரை யால் மறைத்தனர். சித்தர் ஒரு முகூர்த்த நேரம் திரையினுள்ளே இருந்தார்.

இரண்டாமுகுர்த் தத்தி லிடுந்திரை யோடு சித்தர்
திரண்டாரறி யாமை மறைந்தனர் செய்த வத்தான்
முரண்டாவிய மூவரு மொய்த்தவர் யாரு மாதோ
டரண்டானென வாடும் பிரானுரு வாங்குக் கண்டார். 34

மருண்டார்வெருண் டார்வரு சித்தர்நம் வள்ள லென்று
தெருண்டார்வியந் தார்சிவ காமியுந் தானுங் கண்டம்
இருண்டானெதிர் நின்றமை நோக்கிய யாரு மேத்திச்
சுருண்டார்தரு பங்கி முடித்தலை துன்னித் தாழ்த்தார். 35

வேறு

செம்பொன்மால் வரையும் புதுநிறம் படைப்பத் திகழொளி வெள்ளியங் [கிரியும்
உம்பரார் பணியும் வெள்ளியம் பலமு முலகுறு சராசர மனைத்தும்
பைம்பொனூர் நிறமா யதிசயம் விளைப்பப் படரொளிக் கிரணம்விட் டெறிக்குந்
தம்பிரா னுருவ முனிவர்மூ வருந்தா பித்தருச் சனைசெய முயன்றார். 36

உம்பரார் பலருங் கோமுனி யேவ வுய்ந்தன மெனப்பணி முயன்றார்
உம்பரார் தச்ச னுலய நகர மாதிக ளுவப்புறப் புரிந்தார்
உம்பர்கோன் காம தேனுகற் பகமு முறுபொரு டரப்பணித் திட்டான்
உம்பர்கோ னேவ வுலகமா ளரையர் தத்தமக் குறுபணி செய்தார். 37

---

34. இரண்டாம் முகூர்த்தத்திலே சித்தர் அங்கே கூடியிருந்தோர்க்குத் தெரியாமல் திரையோடு மறைந்தருளினர். தவவலிமையுள்ள கோமுனிவர், காலவமுனிவர், பட்டிமுனிவர் ஆகிய மூவரும் யாவரும் அங்கே ஆடும்பிரான் வடிவத்தைக்கண்டு தரிசித்தனர்.

ஆடும்பிரான் - நடராசமூர்த்தி.

35. மயங்கி அஞ்சிப் பின்பு நம் முன்புவந்த சித்தர் நம்முடைய சிவபெருமானே எனத்தெளிந்தனர், வியந்தனர். சிவகாமவல்லியும் நடராசமூர்த்தியும் எதிர்நின்ற செயலைக்கண்ட யாவரும் தொழுது துதித்து வணங்கினர்கள்.

தெருண்டார் - தெளிந்தார்.

36. மேருமலையும் புதிய நிறமாகத் தோற்ற; வெள்ளிமலையும், தேவர்கள் வணங்கும் வெள்ளியம்பலமும், உலகத்திலுள்ள இயங்கியற் பொருள்களும் நிலையியற்பொருள்களும் பசிய பொன்னிற முடையதாய் வியக்கும்படி பரவுகின்ற ஒளிக்கதிர்களை வீசும் சிவபெருமான் வடிவத்தை மூன்று முனிவர்களும் பதிட்டை செய்து அருச்சிக்க முயற்சித்தனர்.

உம்பர் - தேவர். கிரணம் - கதிர்.

37. கோமுனிவர் இன்னது செய்க எனக் கட்டளையிட, நாங்கள் யாவரும் உய்ந்தோம் எனத் தேவர்கள் பணிசெய்யத் தொடங்கினர். தெய்வத்தச்சன்

வடதிசைத் தலைவ னிரம்புபண் டாரம் வாய்திறந் திருநிதி போதந்
திடனக னகர முழுவது நிறைத்தா னிடிஞ்சில்கள் கரகங்கள் கும்பம்
படரொளி மணியான் மயனிரு மித்தான் பசுங்குசை சமிதைபற் பலவுங்
கடனறி முனிவர் விதியுளி நாடிக் கவர்ந்தரு மறைகரைந் திறுத்தார். 38

வானவர்குரவ னுள்வரை யறுத்தான் மகதியாழ் முனிவனு கமத்தின்
ஊனமில் விதியாற் குண்டமொன் பதும்வே திகைகளு மொளிபெற
தேனமர் மலய மாதவன் பதிட்டை செய்யுமா சானென வமைந்து[வகுத்தான்
வேனவில் கரத்தோன் முன்வரும் பட்டி விநாயகன் பூசனை முடித்தான். 39

அங்குர மமைத்தன் முதல்வினை யனைத்து மாகம விதிப்படி யாற்றி
மங்கல வியங்க ளியம்பவா னவர்கண் மலர்மழை பொழிதர மன்றின்
அங்கண ருருவோ டம்மைதன் னுருவி னமைத்தபொற் கும்பநீ ராட்டிப்
பொங்கறு சுவைநி னிவேதனம் பிறவும் பொற்புற முற்றுவித் தனனால். 40

ஆலயம், நகரம் முதலியன நிருமித்தான். இந்திரன், காமதேனு கற்பகம் முதலிய வற்றை நோக்கி வேண்டிய பொருள்கள்யாவும் கொண்டுவந்து சேர்க்கும்படி பணித்தான். இந்திரன் கட்டளையால் நிலவுலகத்து மன்னர்கள் தங்கள் தங்க ளுக்குரிய பணிகளைச் செய்தார்கள்.

38. குபேரன், சரக்கறையைத் திறந்து பெருநிதிக் குவியல்களால் அந் நகர முழுவதும் நிறைத்தான். மயன், சிறந்த இரத்தினங்களால் அகல், கலசம், கும்பம் முதலியவற்றை நிருமித்தான். பச்சைத்தருப்பை சமித்துவகை முதலிய பலவற்றையும் கிரியாவிதியை நன்கு உணர்ந்த முனிவர்கள் விதிப்படி ஆராய்ந்து சேகரித்து வேதமந்திரங்களைக் கூறிக்கொண்டு தொகுத்துவைத்தனர்.

வடதிசைத்தலைவன் - குபேரன். பண்டாரம் - சரக்கறை. இடன் அகல் நகரம். இடிஞ்சில் - அகல். குசை - தருப்பை. சமிதை - ஓமத்துக்குரிய சுள்ளிகள்.

39. வானவர்களுக்குக் குருவாகிய வியாழப்புத்தேள் நல்ல நாளைக் குறித்தார். நாரதமுனிவர் ஆகமவிதிப்படி குற்றமில்லாமல் ஒன்பது யாக குண் டங்களையும், வேதிகைகளையும் செய்துமுடித்தார். அகத்தியமுனிவர் பிரதிட்டை செய்தற்குரிய ஆசிரியத்தன்மைமேற்கொண்டு பட்டிவிநாயகமூர்த்தியின் பூசையை முற்றுவித்தார்.

மகதி யாழ் - நாரதமுனிவருடைய யாழ். வேதிகை - திண்ணை, மேடை. மலயமாதவன் - பொதியில் அகத்தியர். வேல் நவில் கரத்தோன் - முருகக்கடவுள்.

40. அங்குரார்ப்பணம் முதலிய பூர்வாங்கக்கிரியைகளையெல்லாம் சிவாகம விதிப்படிசெய்து, மங்கலவாத்தியம் முழங்க, தேவர்கள் மலர்மழை பொழிய, வெள்ளியம்பலத்திலே நடராசமூர்த்தியுடன் சிவகாமவல்லியம்மைக்குக் கும்ப நீரால் திருமஞ்சனம்செய்து, ஆறு சுவைகளுடன் அமைத்த நிவேதனம் முதலிய வைகளையும் செய்து முற்றுவித்தார்.

கன்னிகை செம்பொ னிரசதங் கலைகள் கலனிலம் பரிகரி யிரதம்
அன்னமற் றனைத்து மேற்பவர்க் குதவி யருந்தவக் கோமுனி முதலோர்
பன்னருஞ் சிறப்பிற் றம்பெரு மானைப் படரொளி வெள்ளியம் பலத்துந்
துன்னுறு தினங்க டொறுமறு காலந் துகளறு பூசனை புரிந்தார். 41

வேறு

இவ்வகை செல்லு நாளி லெம்பிரா னடனங் காட்டு
மவ்வரு நாளு மண்மைத் தாயதென் றறிந்து முன்னர்ச்
செவ்விய பதிட்டைக் குற்றோ ரனைவருஞ் செல்லா தாங்கண்
எவ்வமில் காலந் தோறு மேத்திவாழ்ந் திருந்தா ராக. 42

பங்குனி மதியஞ் சாரப் பட்டிமா முனிவன் சென்று
தங்குகோ முனிவன் பாதந் தாழ்ந்திது செப்பி னுனல்
நங்களை யாள நம்பர் நடம்புரி நாளு மிந்தத்
திங்களின் வருவ தற்றாற் செய்வதொன் றுண்டு கேண்மோ. 43

அங்குரம் - முளை. இயம் - வாத்தியம். மன்றில் அங்கணன் - நடராசமூர்த்தி. கும்பநீராட்டி - கும்பாபிஷேகம்செய்து.

41. கன்னிகை, பொன், வெள்ளி, ஆடை, அணிகலம், நிலம், குதிரை, யானை, தேர், சோறு மற்றுள்ள தானங்களையெல்லாம் யாசிப்போருக்குக் கொடுத்துக் கோமுனி முதலியோர் பலவகைச் சிறப்புக்களுடன் வெள்ளியம்பலத்திலே நாடோறும் ஆறு காலங்களிலும் குற்றமறச் சிவபெருமானைப் பூசித்து வருவாராயினர்.

இரசதம் - வெள்ளி. செம்பொன் - தங்கம். கலை - ஆடை. கலன் - ஆபரணம். பரி - குதிரை. கரி - யானை. துகளறு - குற்றமற்ற. குற்றமாவது மந்திரலோபம், தந்திரலோபம், திரவியலோபம் முதலியன.

42. இவ்வாறு செல்லும் நாட்களில் சிவபெருமான் நடனங்காட்டும் அரியநாளும் சமீபித்தது என்று தெரிந்து முன்பு பிரதிட்டை செய்தற்கு வந்திருந்தோர் அனைவரும் திரும்பிச்செல்லாமல் அவ்விடத்தே காலந்தோறும் ஸ்ரீ ஞானமா நடராசரை வழிபட்டு துதித்துத் தங்கியிருந்தார்கள்.

அண்மைத்து - சமீபித்தது. பதிட்டை - பிரதிட்டை என்பதன் மரூஉ. எவ்வம் - துன்பம், குற்றம்.

43. பங்குனி மாதம் வந்தடுத்தது. பட்டிமுனிவர் சென்று கோமுனிவர் திருவடிகளில் வணங்கிச் சொல்வாராயினர். நம்மையெல்லாம் ஆட்கொண்டு அருளும்பொருட்டுச் சிவபெருமான் திருநடஞ்செய்யும் நாளும் இந்த மாதத்திலே வருகின்றது. அதனல் நாம் செய்வதொன்று உண்டு.

நம்பர் - சிவபெருமான்.

திருவிழா வெடுத்து நாதர் திருநட நவிற்று மந்த
ஒருவிழா நாளு மந்தத் துற்றிடு நாள தாக
மருவியா நிற்றன் மாண்பாம் வரதவென் றியம்ப வன்னோன்
ஒருவியா மகிழ்ச்சி பொங்க வுவன்றனைத் தழுவிக் கொண்டான். 44

பட்டிமா முனிவ விந்தப் பணிசெயத் தக்க தாகும்
இட்டமா முலகுக் கெல்லா மிறைவற்கு மிட்ட மாகும்
முட்டிலா தியற்று கிற்பா முறையுளி யமரர்க் கெல்லாம்
ஒட்டவிங் குறுவ யாவு முளுற்றுமா றியம்பு கென்றான். 45

விடைமுகத் தவன்சொற் கேட்டோன் விச்சுவ கன்மற் கூவி
அடையலர் புரங்கள் செற்ற வடிகளார் விழாவுக் கேற்ற
நடைநக மிரத மாதி நலத்தக வாக்கி வைவேற்
படையவ னைங்கைப் புத்தேள் படிவமா தியுஞ்செய் யென்றான். 46

மயன்வரு கென்று கூவி வளநக ரால யங்கள்
குயினுழை மாட மற்றுங் கோடணை புரிய வேவி
வயமலி குலிச வேற்கை மன்னவற் கூவி வேட்ட
பயன்மலி பரிசில் யார்க்கும் பண்புறக் கொடுக்க வென்றான். 47

---

44. திருவிழாவைத் தொடங்கிச் சிவபெருமான் திருநடம் செய்யும் அந்த நாள் இறுதியில் வருவதாகச் செய்தலே மிகச்சிறந்ததாம் என்று கோமுனிவரிடம் பட்டிமுனிவர் கூறினர். கேட்ட கோமுனிவர் நீங்காத மகிழ்ச்சியுடன் மிகவும் அவரைத்தழுவிக்கொண்டார். அந்தத்து-முடிவில். வரதன்-வரங்களைக் கொடுப்ப வன். ஒருவா என்பது ஒருவியா என வந்தது.

45. பட்டிமுனிவரே! இந்தப்பணி செய்யத் தக்கதேயாம். உலக நாயக ராகிய சிவபெருமானுக்கும் இஃது உகந்ததே. தடையின்றிச் செய்வாம். தேவர் களுக்கெல்லாம் இவ்விடத்துக்கு வேண்டியன யாவும் விதிப்படி சித்தப்படுத்து மாறு சொல்லுக என்று கோமுனிவர் கூறினர்.

இந்தப்பணி என்றது திருவிழாவை. முட்டு-முட்டுப்பாடு, தடை. முறையுளி-விதிப்படி. உளுற்றுமாறு - செய்யுமாறு.

46. கோமுனிவர் கூறியதைக்கேட்ட பட்டிமுனிவர் விசுவகன்மாவை அழைப்பித்தார். சிவபெருமானுடைய திருவிழாவுக்குரிய யானை தேர் முதலிய வற்றை நன்றாகச்சித்தம் செய்வாய். முருகக்கடவுள், விநாயகக்கடவுள் முதலிய படிவங்களையும் உடன் செய்க என்று கட்டளையிட்டார். விடைமுகத்தவன் - கோமுனிவர். விசுவகன்மா - தெய்வத்தச்சன். அடையலர் - பகைவர். நடைநகம்-நடக்கின்ற மலை என்றது யானையை. படிவம் - உருவம்.

47. மயனை அழைத்து வளமான நகரம், ஆலயங்கள், மேகங்கள் நுழையும் மாடங்கள் முதலியவற்றைச் சமைக்க என ஏவினர். இந்திரனை அழைத்து விரும்பிய பயன் நிறைந்த பரிசில்களைச் சிறக்கக் கொடுக்க என்றார்.

அவரவ ராற்றற் கேற்ப வமலனுர் பணிக ளேவி
அவரவர் தந்தை யான வருந்தவன் விடைமு கத்தோற்
கவரவர் பணியி னிற்ப வறைந்தன னென்று தாழ்ந்தான்
அவரவர் பணிக ளாக வனைவரு மாற்றி னுரே. 48

தகட்டுடன் மீனுய் முன்னர்த் தவழ்ந்தகோ முனியு மண்ட
முகட்டையுந் துளைக்கும் வைவேன் முனைவன்சண் டீச னுக
மகட்டிடை யசைத்த பிள்ளை யாதியோ ருருவத் தோடும்
பகட்டெழி லிரத மற்றும் பதிட்டைசெய் தமைத்துக் கொண்டான். 49

பங்குனிப் பருவஞ் சேர்முன் பக்கத்தி னிரண்டா நந்தை
தங்குகார்த் திகைநாட் புல்லந் தடங்கொடி யேற்றி மைந்தர்
மங்கையு மருங்கு போத மன்றிடை நடிக்கு மையர்
மங்கல முழங்க வீதி வயினுலாப் போதச் செய்தான். 50

மயன் - அசுரத்தச்சன். குயின் - மேகம். கோடணை - அலங்காரம். வயம்-வெற்றி. குலிசவேல் - வச்சிரப்படை. வேட்ட - விரும்பிய.

48. அவ்வவருடைய ஆற்றலுக்குத் தக்கபடி சிவபெருமானுக்குரிய பணிகளைச் செய்யுமாறு நிருமித்து அவரவர்களுக்கும் தந்தையாக விளங்கும் பட்டி முனிவர் கோமுனிவருக்கு எல்லோரையும் அவரவருக்குரிய பணிகளைச் செய்ய ஏவினேன் என்று கூறி வணங்கினுர். எல்லோரும் அவரவர் வேலைகளைச் செய்வது போலவே நன்கு செய்தனர்.

அமலனுர் - சிவபெருமான். விடை முகத்தோன் - கோமுனிவர்.

49. முன்னே மீன்வடிவங்கொண்ட திருமாலாகிய கோமுனிவர் முருகவேள், சண்டீசர், பிள்ளையார் முதலிய பஞ்சமூர்த்திகளின் வடிவங்களையும் யானை, தேர் முதலியவைகளையும் பிரதிட்டை செய்து அமைத்துக்கொண்டார்.

வைவேல்-கூரியவேல். நாகம்-பாம்பு. அகடு-வயிறு. அசைத்தல்-கட்டுதல்.

50. பங்குனித்திங்கள் பூர்வபக்கத்திலே சட்டிதிதியோடு கூடிய கார்த்திகை நாளில் துவசாரோகணம்செய்து விநாயகர் சுப்பிரமணியர் அம்பிகை முதலியோர் பக்கத்திலே வர வெள்ளியம்பலத்திலே நிருத்தம் செய்தருளுகின்ற ஞானமா நடராசரை மங்கல வாத்தியங்கள் முழங்க வீதியில் உலாவருமாறு செய்வித்தார்.

முன்பக்கம் - பூருவபக்கம். மைந்தர் - மூத்தபிள்ளையார், இளையபிள்ளையார். மங்கை - சிவகாமசுந்தரியம்மை. புல்லம் - இடபம். இரண்டாம் நந்தை - சஷ்டி. முதற்பக்கம் தொடங்கி மூன்று வட்டமாக வருகிற ஐந்து பக்கங்களின் பெயர்: நந்தை, பத்திரை, சயை, இருத்தை, பூரணைஎன்பன. அவை: 1,6,11 நந்தையாம்.

வேறு

கொடிநீள் கதலியு முயர்பூ கமுமதி குயின்மே லிவர்தர மலிவித்துக்
கடியார் புகையொளி கனிசந் தனமலர் கவினென் றியபுன னிறைகும்பம்
படிவே திகையொடு பயில்கா வணநிரை படர்தோ ரணநிரை நிறைவித்த
முடிவா னவர்புகழ் மணிவீ தியினகர் முறையா லிறையவன் வலம்வந்தான்.

கவிகைக் குளிர்நிழல் விரியக் கதிர்பொழி கவரித் திரளிரு புடைதுள்ளச்
சவிவின் மணிவட மொளிர்சுற் றுடையன சாந்தாற் றிகள்பல ததைகிற்ப
அவிர்விண் ணுடுவின தளவுங் குறைபட வடரத் தழனிமிர் தருபந்தங்
குவிமென் முலையவர் நடனத் தொடுமிறை குலவீ தியினகர் வலம்வந்தான்.

விண்ணு டுடையவ ரெதிர்தூ வியவெயில் விரியும் பலமணி திடர்செய்ய
மண்ணு டுடையவர் பரிவாய் மதகரி வளர்கைத் துளையுமிழ் புனல்வாரித்
தண்ணார் நதியென வொழுகச் சரண்பணி யிமையார் முடியொடு முடிதாக்கித்
திண்ணார் மணிநிறை பொடிபட் டுகவணி திகழ்வீ தியினகர் வலம்
[வந்தான். 53

---

51. கதலிகைக் கொடியும் உயர் கமுகெழுதிய கொடிகளும் சந்திரமண்டலத்தையும் மேகமண்டலத்தையும் தாண்டிச்சென்று அசையும்படி நிறையச்செய்து, மணம் நிறைந்த புகையும் ஒளியும் பழம் சந்தனம் மலர் நீர் நிறைந்த குடம் படிகள் திண்ணை முதலியவைகள் பொருந்திய காவணங்களும் தோரண வரிசையும் நிறையச்செய்து தேவர்கள் புகழ்ந்து சொல்லும் அழகிய வீதிகளையுடைய நகரத்தை இறைவர் வலமாக உலாப் போந்தருளினர்.

கதலி - வாழை. பூகம் - பாக்குமரம். குயின் - மேகம். கடி - வாசனை. வேதிகை - திண்ணை. காவணம் - பந்தர். வாழை கமுகு முதலியவற்றை எழுதிய கொடிகளைக்கட்டி அழகுசெய்தல். "கதலிகைக் கொடியும் காழூன்று விலோதமும், மதலை மாடமும் வாயிலும் சேர்த்துமின்" என்றது காண்க.

52. குடைகள் குளிர்ந்த நிழலைச்செய்ய, கவரிகள் இரண்டு பக்கங்களிலும் மாறி மாறி அசைய, ஒளிபொருந்திய மணிவடங்கள் சூழ்ந்த சாந்தாற்றிகள் பல நெருங்கி வர விண்மீன்களின் அளவும் குறையும்படி நெருங்கிய பந்தங்களும், நடனமாதர் நடனவிதங்களும் மிக விளங்குகின்ற வீதிகளில் இறைவர் உலா வந்தார்.

கவிகை - குடை. கவரி - சாமரம். சவி - ஒளி. சவி வில் மணி - மிக்க ஒளி வீசும் இரத்தினங்கள். ததைகிற்ப - நெருங்க. உடுவினது அளவு - நட்சத்திரங்களின் எண்ணிக்கை.

53. வானுலகத்தோர் எதிரிலே தூவிய ஒளியையுடைய மணிகள் திடரைச் செய்ய, மண்ணுலகத்திலுள்ளோருடைய குதிரைவாய் நுரைகளும் யானைத்துதிக்கையினின்று ஒழுகும் நீரும் ஆறுபோல நிறைந்துசெல்ல, திருவடிகளில் வணங்கும் தேவர்களுடைய முடிகளுடன் முடிகள் மோதிக்கொள்ளுவதால் இரத்தின வரிசைகள் பொடிபட்டுச்சிந்த அழகான வீதியில் இறைவர் நகர்வலம் வந்தார்.

மணிமொய்த் தொளிவிடு கனகச் சிவிகைதண் மதிமண் டலமெறும் வளர்பூ
பிணிவிட் டலர்மல ரிரதம் விடைகரி பிறைவந் திறைகொளு மிரதத்தோ [தம்
டணிமெத் தியசிறை யன்னம் பரியெழி லமையிந் திரநல்வி மானத்துந்
திணிகட் செவியணி முடியா னென்பது தினம்வீ தியினகர் வலம்வந்தான். 54

ஒன்றோ வியவொரு பஃதென் றுரைபட வுறுநாள் கழியும்வை கறையிஞ்சி
வென்றார் பொறிவலி வென்றார் பணிசெய விரைநீர் முதலபி டேகங்கொண்
டின்று நடநவில் பொழுதென் றனைவரு மெழுநீர் நதிமுழு கிச்சார்ந்து
நன்று மொருபஃ தெனுநாட் சபையெதிர் நகைமா மணிசெய்மண் டபநிற்ப.

அரிதா கியபணி புரிகோ முனிமுதன் முனிமூ வருமரு கேநிற்ப
வரிவீ ணையினிசை யுயர்நா ரதமுனி மகிழ்தும் புருவுட னெழுவிப்பத்
திரியா வகைபல தாளங் குறுமுனி திகழா நந்திய மினிதொத்த
உரிதா முழவுமந் துவுநந் தியுமிரு தலையுங் கரமல ருறுவிப்ப. 56

வருகந் தருவரு மலியுங் கருடரு மதுரத் துடனிசை பலபாட
ஒருகந் தழிநிலை யருளா லருளென வுறுதா பதரர கரவென்னப்
பெருகந் தரர்சிலர் வளர்சிந் தையின்மறை பெருவா ரிதியொலி படவோத
அருகந் தர்கண்முத லியதுன் மதியரு மருள்கண் டடிதொழ வணைகிற்ப. 57

திடர் - மேடு, திட்டு. குதிரைவாய்நீரும் யானைத்துதிக்கைநீரும் விலாழி எனப்பெறும். பொடிபட்டு உக; உக - சிந்த.

54. ஒளிவீசும் இரத்தினத்தினால் பதிக்கப்பட்ட தங்கச்சிவிகை, சந்திர மண்டலம், பூதம், புஷ்பகவிமானம். இடபம், யானை, இரதம், அன்னம், குதிரை, இந்திரவிமானம் முதலியவைகளில் ஆரோகணித்து ஒன்பது நாட்களிலும் இறைவர் திருவுலாப் போந்தருளினர். கனகம் - பொன். எறும் - வலிமை. மலர் இரதம் - பூத்தேர். கட்செவி - பாம்பு.

55. ஒன்று நீங்கிய பத்து நாட்கள் கழியும் நாளின் வைகறையிலே புரம் பொடித்தாராகிய சிவபெருமான் புலனடக்கிய புங்கவர் பணிவிடைகளைச் செய்ய, வாசனைபொருந்திய நீர் முதலியவற்றால் திருமஞ்சன மாடக்கொண்டு, இன்று தான் நடனம் செய்யும் நாளென்று எல்லோரும் ஏழு தீர்த்தங்களிலும் முழுகிப் பத்தாம்நாள் சபைக்கு எதிரேயுள்ள மணிமண்டபத்திலே நிற்க. ஓவிய - நீங்கிய. வைகறை - விடியற்காலம். இஞ்சிவென்றார்-திரிபுரத்தை வென்ற சிவபெருமான்.

56. சிறந்த பணிகளைச் செய்யும் கோமுனிவர் முதலாகவுள்ள மூன்று முனிவர்களும்அருகிலே நிற்க, தும்புரு நாரதர் இருவரும் யாழ்வாசிக்க, அகத்திய முனிவரும் ஆநந்தியும் தாளமொத்த, மந்துவும் நந்திதேவரும் முழவங்கொட்ட. பணி - சிவத்தொண்டு. குறுமுனி - அகத்தியர். இருதலையும் - இரண்டு பக்கமும்.

57. கந்தருவர் கருடர் முதலியோர் இனிய பல இசைப்பாடல்கள் பாட, பற்றற்ற பரம்பொருள் அருளால் அருளைப்பூண்ட தவசிகள் அரகர முழக்கம் செய்ய, விண்ணுலக வாசிகள் சிலர் வேதமந்திரங்களைக் கடல்போல் ஒலிக்க,

ஆகா வென்பவ ரூகூ வென்பவ ரருகுற் றரியமெல் லிசைபாட
ஏகா வென்மரும் யோகா வென்மரு மாகிச் சித்தர்க ளெதிரேத்தக்
காகா வெனவுர கர்கள்பன் மணியொளி கஞலத் திசைதிசை தொழுதாடப்
பாகா மொழியவள் பாகா விடையொரு பாகா வெனவவு ணர்கள்பம்ப. 58

மன்று டியகுரு மணியே யடியவர் மதியா டியகளி நறவேபொய்
வென்றூர் நுகர்சுவை யமிழ்தே பத்திமை விளைவார் விளைசிவ விளைவேபுன்
கன்று னெனவுயிர் களின்வைத் தருளிய கனிவே கருணைசெய் கனியேயென்
றென்று தரவுட னுரையா விழியிணை யுறைசிந் திடவடி யவர்தாழ. 59

ஒருபா லுமைதன துருவின் விரவுற வொருகைத் துடியொலி யெழவங்கி
ஒருவா தொருகையி னொளிரக் கவிதர வொருகை யொருகர மமைவெய்த
ஒருதாண் முயலகன் வெரிநிற் பதிவுற வொருதாள் குஞ்சித முறவீசி
ஒருகா ளியின்முகம் விழிநோக் குறமணி யொளிரம் பலநட நவில்கின்றான்.

சமணர் முதலிய பொல்லாத புத்தியுடையோரும் திருவருளைக்கண்டு திருவடிகளை வணங்கும்பொருட்டு நெருங்க.

கந்தழியாவது ஒருபற்றுமற்று அருவாய்த்தானே நிற்கும் தத்துவங்கடந்த பொருள். அது "சார்பினுற் றோன்றாது தானருவா யெப்பொருட்குஞ் — சார்பெனநின் றெஞ்ஞான்று மின்பந் தகைத்தரோ — வாய்மொழியான் மெய்யான் மனத்தா னறிவிறந்த — தூய்மையதா மைதீர் சுடர்" (தொல் - புறத்திணை - சூத்- 33. நச். மேற்); "உற்ற வாக்கையி னுறுபொரு ணறுமல ரெழுதரு நாற்றம்போற், பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்" (திருவாச - அதிசய. 9). என்பன காண்க. தாபதர் - தவவொழுக்க முடையோர். பெருகு + அந்தரர் - பெருகந்தரர். அருகந்தர்கள் முதலிய துன்மதியர் - சமணபுத்தர்கள்.

58. ஆகா, கூகூ என்னும் இசைவல்லோர் இருவரும் அண்மையிலிருந்து அருமையான மெல்லிசையைப்பாட, ஏகா யோகா என்பவராய்ச் சித்தர்கள் எதிரிலே துதிசெய்ய, கா கா என்று கூறி நாகர்கள் பலமணிகளால் ஒளிசெய்ய, திசைதோறு முள்ளோர் தொழுது ஆட, பாகுபோலும் இனியசொல்லையுடைய உமாதேவியை வாமபாகத்தி லுடையவரே! விடையை ஏறிச்செலுத்துபவரே! என்று துதித்து அவுணர்கள் நெருங்க.

59. சபையிலே நடனமிடும் குருமணியே! அடியார்கள் அறிவிலே ஆடி யருளும் களிப்பையுடைய தேனே! பொய்ம்மையகன்ற தத்துவஞானிகள் நுகரும் சுவையமுதமே! பத்தியை விளைக்கும் மெய்யன்பர்கள் விளைவிக்கும் சிவவிளைவே! இளைதாகிய கன்றையுடைய பசுப்போல உயிர்களிடத்து வைத்தருளிய இரக்கம் உடையவரே! கருணைசெய்யும் கனியே என்று விருப்புடன் உரைத்து அடியார்கள் கண்ணீர்வார்ந்து வணங்க. நறவு - தேன். புன் கன்று ஆன். ஆதரவு - விருப்பு. உறை - நீர். குருமணி: "அருந்தவர்க் கரசாய் ஆலின் கீழிருந்த அம்பலவா" (திருவிசைப்பா)

60. ஒருபக்கத்தில் உமாதேவியார் தமது திருமேனியில் பொருந்த, ஒரு கையிலே உடுக்கை ஒலிசெய்ய, அக்கினி நீங்காமல் ஒரு கரத்திலே விளங்க, ஒரு

தழலொத் தவிர்புரி சடையெண் டிசைதட வரவெண் மதியொடு புனறுள்ள
அழகொன் றியகுழை யசையக் குறுநகை யலரப் புருவமு முரிவெய்தச்
சுழல்கட் செவியர விழிவெண் டலைதிணி தோளிற் றுயல்வர வதள்பொங்க
உழல்சில் லரிபயின் மணிநூ புரவொலி யுறழத் திருநட நவில்கின்றான். 61

பூதங் களுமுறழ் கரணங் களுமெழு பொறியும் பொறியினுள் ளொளியான
பேதங் களும்வரு காலங் களுமொளி பில்கும் கலைகளு மொளிவிந்து
நாதங் களுமவை தருபோ தங்களு நவில்வே தங்களு மறியாமே
ஏதங் கொளுமுயிர் போதங் கெடவிர சதமன் றிடைநட நவில்கின்றான். 62

அளவா யளவத னளவா யளவத னளவுந் தணிதரு மளவாகி
அளியா யளியத னளியா யளியத னளியுந் தணிதரு மளியாகி
ஒளியா யொளியத னொளியா யொளியத னொளியுந் தணிதரு மொளியாகி
வெளியாய்வெளியதன் வெளியாய் வெளியதன் வெளியின் வெளிநட நவில்
[கின்றான். 63

கரம் கவிய, ஒரு கரம் அபயகரமாக, ஒரு திருவடி முயலகன் முதுகிலே ஊன்றி யிருக்க, ஒரு திருவடி வளைவுற வீசி, ஒப்பற்ற காளிதேவியின் முகத்திலே பார்வை யுற, மணிகள் ஒளிவீசும் வெள்ளியம்பலத்திலே இறைவர் நடஞ்செய்வாராயினர்.

பால் - பக்கம். துடி - உடுக்கை. வெரிந் - முதுகு. குஞ்சிதம் - வளைவு "தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில், சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா, ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி, நான்ற மலர்ப் பதத்தே நாடு." (உண்மை விளக்கம் - 35) இஃது ஊனநடனம் குறித்தது.

61. தீயையொத்து விளங்கும் முறுக்கியசடை எட்டுத்திசைகளையும் தடவ பிறைச்சந்திரனோடு கங்கையும் துள்ள, அழகிய குழை அசைய, புன்சிரிப்புத் தோன்ற, புருவம் நெற்றியிலேறி வளைய, பாம்பணியும் வெண்டலை மாலையும் தோளிலே தொங்க, புலித்தோல் விளங்க, இரத்தினப்பரல்களையுடைய சிலம்புகள் ஒலிக்க வெள்ளிமன்றத்திலே இறைவர் திருநடனம் செய்தருளுகின்றார்.

தழல் - நெருப்பு. தடவர - தடவ. கட்செவியாகிய அரவு. துயல்வர - தொங்க. அதள் - தோல்; இங்கே புலித்தோல். அரி - பரல். நூபுரம் - சிலம்பு.

62. பூதங்கள் அந்தக்கரணங்கள் ஐம்பொறிகள் புலன்கள் காலம் கலை ஒளியினையுடைய விந்து நாதங்கள் முதலியவைகளும் அவைகள் தரும் அறிவும் வேதங்களும் அறியாமல் குற்றத்தை விளைக்கும் ஆன்ம போதமும் கெடும்படியாக வெள்ளிசபையிலே இறைவர் நடனஞ் செய்தருளுகின்றார்.

உறழ் - பிறழும். பொறியின் உள்ளொளி - தன்மாத்திரைகள். பில்கும் - துளிக்கும். போதம் - அறிவு. ஏதம் - துன்பம்.

63. காண்டல் கருதல் உரை என்னும் அளவாயும், அவ்வாறு அளக்கும் அறிஞர் அளவிற்கு அளவாயும், அறிஞர் அளந்தறிந்து அமிழ்ந்தும்படியல்லாத ஓர் அளவுடையதாயும், விந்துசத்திக்கு மேலாய் அநுக்கிரகமே தொழிலான

ஓரா ணவமுத லிருவல் வினைமல மூன்றும் முடன்முத லியநான்கும்
ஆரா வுடலிடை யுறுசாக் கிரமுத லைந்தும் மநுமுதல் வழியாறுஞ்
சாரா வகையெழு ஞானம் பெறவரு டகவெண் ணுநர்பணி யொன்பானுந்
தேரா வருள்பணி பத்துந் திகழ்தரு திகழம் பலநட நவில்கின்றான். 64

ஒருபான் றிசைகளு மொன்பா னுருவமு மோரெண் வடிவமு முலகேழும்
மருவா நின்றொளி ராறு தாரமும் வளரைந் திணைகளு மறைநான்குந்
தருமூ வழல்களு மிருமைப் பயனொடு தானு கியவொரு தனிவீடுந்
தெருள்வா ரிஃதல திலையென் றுணர்வுறு திகழம் பலநட நவில்கின்றான். 65

சதாசிவருக்கு மேலாய்க் கருணையேதானை பராசத்திக்கு மேலாய் அச்சத்தியும் கீழ்ப்பட்டு ஒடுங்குதற்குக் காரணமான அநுக்கிரகத்தையுடையதாயும், கலைக்கு மேலாகிய ஒளியான அசுத்தமாயை ஒளி, அதற்கு மேலாகிய சுத்த வித்தைஒளி, அந்தச் சுத்தவித்தை ஒளிக்கு மேலாகிய விந்து ஒளியும் கீழ்ப்படுவதற்குக் காரணமாய் மேம்பட்டு ஒளிரும் ஒளிப்பொருளாய், ஆகாசவெளிக்கும் வெளியாகிய பிரகிருதிவெளி, அதற்குக் காரணமாகிய கலையான வெளி, அதனினும் மேம்பட்டு விளங்கும் வெளியிலே திருக்கூத்தினைச் செய்தருளுகின்றார்.

எனவே, பரமாகாயத்தினும் இதயாகாயத்தினும் ஞானகாயத்தினும் கலந்திருப்பவர் என்க.

64. ஓர்கின்ற ஆணவமாகிய வேரினையுடைய வலிய நல்வினை தீவினைகளும், மூன்று மலங்களும், தநு கரண புவன போகங்களாகிய நான்கும், உடம்பினிடையே தோன்றும் சாக்கிரம் முதலிய ஐந்தும், மந்திராத்துவா முதலிய ஆறத்துவாக்களும் பொருந்தாதபடி எழுகின்ற ஞானத்தைப் பெறும் பொருட்டு அருளும் தன்மையை எண்ணுகின்ற ஆன்மாக்களின் பணிகள் ஒன்பதையும் தேர்ந்தறிய முடியாத அருட்பணி என்னும் பத்தும் விளங்குதற்குக் காரணமாகவுள்ள அம்பலத்திலே இறைவர் திருக்கூத்தாடுகின்றார்.

ஆணவமாகிய ஒரு முதல் என்க. இரண்டாகிய வல்வினை:பண்புத்தொகை.

அருள் தக எண்ணுநர் - ஆன்மாக்கள். அவர்பணி ஒன்பது - தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி; ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி; சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம் என்பன. ஒன்பதும் குருவருளால் அறிந்து அநந்நியமாயிருக்கின்ற சிவபோகத்தைச் சிவபிரானருள அநுபவிக்கும் நிலையான அம்பலத்திலே நடனஞ்செய்தருள்கின்றார். முத்தான்மா எய்துதற்குரிய பேரின்ப உறுதிப்பொருள் சிவபெருமானுடைய அருட்குணமேயாம்; அதுவே அம்பலம் என்று கூறப்படும். எண்ணலங்காரம்.

65. பத்துத்திக்குகளும் நவந்தருபேதங்களும் அட்டமூர்த்தி சொரூபங்களும் ஏழுலகங்களும் ஆறுதாரங்களும் ஐந்து திணைகளும் நான்கு வேதங்களும் மூன்று அக்கினிகளும் இம்மைமறுமைப் பயன்களும் இவைகளுடனன்றித்தானுகிய ஒப்பற்ற விட்டின்பமும் தெளிந்தோர் இதுவல்லாமலில்லை என்று உணர்கின்ற அம்பலத்திலே ஆடல் செய்தருள்கின்றார்

அஞ்சக் கரமென வெட்டக் கரமென வாறக் கரமென நான்கென்னப்
பிஞ்சக் கரமுத லுருமூன் றெனவளர் பேரக் கரமுதன் மூன்றென்ன
நெஞ்சத் துறநவி லீரக் கரமென நிலையோ ரக்கர மெனநின்ற
செஞ்சொற் றிறமிரு நான்கா கியும்பிற வாயுந் திருநட நவில்கின்றான். 66

நகரந் திருவடி மகரம் வயிறெழி னகுதிண் புயம்வக ரஞ்சீர்சால்
சிகரந் திருமுகம் யகரந் திருமுடி சிகரந் துடிகவி தருசெங்கை
வகரம் யகரம தபயந் தருகரம் வளர்தீ நகரநன் மகரங்கீழ்
உகளும் முயலக னௌிர்வா சிகைபிர ணவமா யொருநட நவில்கின்றான்.67

தோற்றந் துடிதிதி யபயந் தொலைவெரி தோலா மறைவுநின் றிடுதாளி
னூற்றுங் கழலினல் லருளுந் தகநனி நவிமா யையையுத றிக்கன்ம
நீற்றிக் கருமல மிருவித் திருவரு ணிலையா லுயிர்களை வாங்கிக்கொண்
டாற்றுஞ் சுகவடி வாக்கிப் பதிவுறு மருளம் பலநட நவில்கின்றான். 68

தெருள்வார் - தெளிந்தோர். ஒன்பானுருவம்: பிரமன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன், விந்து, நாதம், சத்தி, சிவம் என்பன. அட்டமூர்த்தம்: பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்பன.

66. சிவாயநம: என்கிற ஐந்தெழுத்தும், ஓம் ஹாம் ஹௌம் சிவாயநம: என்கிற எட்டெழுத்தும், ஓம் நமசிவாய என்கிற ஆறெழுத்தும், ஓம் சிவாய என்கிற நாலெழுத்தும் ஆக உச்சரிக்கிற விதிப்படியே உச்சரித்து; இவ்வாறு உச்சரிக்கிற முறைமையைவிட்டுப் பஞ்சாக்கரத்தினுடைய சொரூபத்தை அறிந்து, பிஞ்செழுத்தாகிய 'வகாரம்' ஆகிய பராசத்தியையும் பெருவெழுத்தாகிய 'சிகாரம்' ஆகிய சிவத்தையும் தன்னுடைய இருதயத்திலேவைக்கில், பேசும் எழுத்தாகிய 'வகாரம் ஆகிய சத்தி' பேசா எழுத்தாகிய 'சிகாரம் ஆகிய சிவத்தை' இரண்டறக் கூசாமல் உணரும்படியும், இரண்டெழுத்து ஓரெழுத்து என்னும் நிலையை உணரும்படியும், மற்றும் 'வசிய' என்னும் மூன்றும் 'சிவய' என்னும் மூன்றுமாகிய ஐந்தெழுத்தின் வகை எட்டாகியும் பிறவகையாகியும் திருநடஞ்செய்கின்றார்.

"அஞ்செழுத்தும் எட்டெழுத்தும்...பேசாஎழுத்தினையும்" என்று கொடிக்கவியில் பேசப்பட்டது காண்க.

67. திருவைந்தெழுத்திலே நகரம் திருவடியிலும், மகரம் திருவுந்தியிலும், சிகரம் திருத்தோளிலும், வகரம் திருமுகத்திலும், யகரம் திருமுடியிலும் ஆக இந்த முறைமையிலே திருமேனியாகக்கொண்டும்; சிகரம் டமருகம் ஏந்திய திருக்கரமாகவும், வகரம் வீசிய திருக்கரமாகவும், யகரம் அமைத்த திருக்கரமாகவும், நகரம் அக்கினியேந்திய திருக்கரமாகவும், மகரம் முயலகனை மிதித்த திருவடியாகவும் இந்த முறைமையிலே திருமேனியாகக் கொண்டு திருவாசி ஓங்காரமாக ஒப்பற்ற திருநடனத்தைச் செய்தருளுகின்றார்.

68. டமருகம் ஏந்திய திருக்கரத்திலே சிருட்டியாகவும், அமைத்த திருக்கரத்திலே ஆன்மா இரட்சையாகவும், அக்கினியேந்திய திருக்கரத்திலே மல

அருளோ விலையென மேலா கியவுயி ரருளான் முதன்மைய தாயங்கு
மருளா லருள்புரி தொழில்செய் குவலென மதியுற் றதனையு மொருவிப்போய்ப்
பொருளா கியவரு ளுருவா யதன்முதல் புகலென் றறிதல்செய் தருணின்றுந்
தெருளார் சிவமுடன் விரவிச் சுகமுறு திருவம் பலநட நவில்கின்றான். 69

வேறு

சோதி மல்கிய விரசத சபையிற் றுரியத் தேவளர் வல்லியுந் தாமும்
போதி யம்பொழிற் புண்ணிய முதல்வர் பொருந்தி யத்தநா ரீசராய் நடிக்கும்
வேத நூபுர வொலியும்பல் லியமும் விரிக்கு மின்னிசை செவித்துளை நிறைப்ப
ஏத மில்லவ ரனைவருங் கேளா வேங்கி நின்றனர் திருநடங் காணார். 70

வெள்ளி யம்பலத் தாட்டயர் முதலே வேத நாடரும் விழுத்துணைப்பொருளே
வள்ளி கேள்வனை யுயிர்த்தமா மணியே வான வர்க்கறி யாதவா னவனே
புள்ளி மான்கரத் தேந்துவித் தகனே புடைநெ ருங்குபூ தப்படை யானே
தள்ளி யெம்வினை யருணடங் காட்டாய் சங்க ராசய போற்றியென் றிரந்தார்.

சங்காரமாகவும், உறுதியாய் ஊன்றிய சீபாதத்திலே பிரபஞ்சத்தை மறைக்கும் திரோதமாகவும், தூக்கிய சீபாதத்திலே அநுக்கிரக முத்தியாகவும் இந்த முறைமையிலே முத்தி பஞ்சகிருத்தியமே திருக்கூத்தாம். மற்றும், உடுக்கை தரித்த திருக்கரத்தினலே மாயையை நீக்கி, அக்கினியேந்திய திருக்கரத்தினலே கன்ம மலத்தை நீருக்கி, ஊன்றிய திருப்பாதத்தினலே கன்மமலம் மேலிடாமல் அழுத்தி, தூக்கிய பாதத்தினலே அருளே தனுவாக நிறுத்தி, அமைத்த திருக்கரத்தினலே அருளினல் ஆனந்த வெள்ளத்திலே ஆன்மாவை அழுத்தி இன்பவடிவாகச்செய்து நிலை பெற்ற அருளாகிய அம்பலத்திலே சிவபெருமான் திருநடனம் செய்தருளுகின்றார்.

69. அருளென்பதொன்றில்லை என்று உலகநிலையிலே மேம்பட்டு விளங்கும் உயிர் திருவருளால் முதன்மை பெற்றும் மயக்கங் காரணமாகத் திருவருள் செய்யும்காரியங்களை நானும் செய்வல் என்று புந்திகொண்டிருந்ததனையும் நீங்கிப் போய், அருள்வடிவாய் அவ்வருளுக்கு முதலாகிய சிவமே நமக்குச்சரண் என்று அறிந்து அவ்வருளினின்றும் தெளிந்த சிவப்பொருளுடன் இரண்டறக் கலந்து பேரின்பத்தை நுகரும் திருவம்பலத்திலே திருநடனம் செய்தருளுகின்றார்.

மருள் - மயக்கம். ஒருவி - நீங்கி. தெருள் - தெளிவு.

70. ஒளிநிறைந்த வெள்ளிமன்றத்திலே துரியநிலைக்கண் விளங்கும் சிவசத்தியாகிய சிவகாமவல்லியம்மையும் தாமும் அரசவனத்திலே புண்ணிய முதல்வராகிய தாம்பொருந்தி அர்த்தநாரீச மூர்த்தமாய் நடனம் செய்யும் வேதச்சிலம்பின் ஒலியும், பலவகை வாச்சியங்களின் முழக்கமும் செவிகளை நிறைக்க, குற்றமில்லாத பரிபக்குவ முடையோர் யாவரும் கேட்டனர். ஆயினும் திருநடனத்தைக் காணாதவராய் ஏங்கி நின்றார்கள்.

வல்லி-சிவகாமவல்லி. நூபுரம் - சிலம்பு. இயம் - வாத்தியம். ஏதம் - குற்றம்.

71. வெள்ளியம்பலத்திலே திருக்கூத்தியற்றும் முழுமுதற் கடவுளே! மறைகளும் காணமுடியாத மேம்பட்ட உயிர்த் துணையாக உள்ளவரே! முருகவேளைப்

விரையத் தாண்டவங் கண்ணுரு மெலிவும்
விண்ணெ ழுந்துநீர் சுரந்தமா மேகம்
புரையத் தாண்டவங் காட்டியல் லாது
போது ருனெனு மகிழ்வுங்கொண் டுள்ளங்
கரையத் தாழ்ந்தவர் மறைப்பினை மாற்றிக்
கருணை நோக்கெதிர் வழங்கினுர் செய்ய
வரையக் கார்த்தணி யூர்தொறு மிரந்துண்
டம்ப லத்துநின் ருட்டயர் முதல்வர். 72

ஊன நாடக நவிற்றியெவ் வுயிர்க்கு முறுக ணுணவ வலிகெடுத் தருளி
ஞான நாடக நவிலுமங் கணனுர் ஞான நாட்ட நன் றருளலு மலம்போய்
மோன மாதவ முனிவரர் மூவ ராதி யோரனை வருமுதிர் நடனத்
தான வானந்தங் கண்களாற் பருகி யறிவு ளேயறி வடங்கியொன் ருனுர். 73

உரையுங் காயமு முணர்வுமெட் டாத
வொருவ ரக்கர மைந்துமே யுறுப்பாய்
விரைநி லாவிய போதிசூழ் வரைப்பின்
வெள்ளி யம்பலத் திணர்த்தபூங் கூந்தல்
வரைய ணங்கொடு மாட்டயர் நடன
மணிபொன் வானிதி மனைவியிற் பெரிதும்
பரைதன் பாலராய்ப் பேணுவார்க் குளதோ
பவஞ்சி வாநந்தம் பருகுவ தல்லால். 74

பெற்றருளிய மாணிக்கமே! தேவர்களால் அறிதற்கரிய தேவதேவரே! மானேந்திய கையரே! நெருங்கிச் சூழ்ந்த பூதப்படையையுடையவரே! எங்களுடைய பொல்லாத வினைகளையெல்லாம் போக்கித் தேவரீருடைய அருள் நடனத்தைத் தரிசிக்குமாறு அருள்செய்யும். சங்கரா! சயபோற்றி என்று இரந்தார்.

72. விரைவாக இறைவர் வெள்ளியம்பலத்திலே ஆடியருளும் திருக்கூத்தைக் காணுமையால் உளதாகிய மெலிவும், ஆகாயத்திலெழுந்து கருக்கொண்ட மேகம் போலத் தாண்டவத்தைக் காட்டியல்லது செல்லமாட்டார் என்னும் மகிழ்ச்சியும் கொண்டு மனங்கரைந்து வணங்குவோர் மறைப்புச் சத்தியை மாற்றிக் கருணை நோக்கினை வழங்கி அம்பலத்து நின்று திருக்கூத்தைச் செய்யும் முழுமுதற் கடவுள் அருள் செய்தார்.

73. ஊன நாடகத்தைச் செய்தருளி எவ்வுயிர்களுக்கும் துன்பத்தைச் செய்யும் ஆணவமலவலியைக் கெடுத்தருளி ஞான நாடகத்தைச் செய்யும் சிவபெருமான் ஞான நாட்டத்தை நன்ருக அருளியபின் மலவலிகெட்டு மோன மாதவ முனிவரரும் மூவர்கள் முதலியோரும் ஆகிய யாவரும் முதிர்ந்த நடனத்தால் உண்டாகிய ஆனந்தத்தைக் கண்களால் பருகிச் சிவபோதத்தினுள்ளே சீவபோதம் அடங்கப்பெற்று ஒன்ருயினர்கள்.

74. வாக்கு காயம் மனங்களுக்கு எட்டாத ஒப்பற்ற சிவபெருமானுடைய திருவெழுத்தைந்துமே உறுப்பாக, அரசவனத்திலுள்ள வெள்ளியம்பலத்திலே

பகிர தன்பெருந் தவத்தினுற் புவியிற்
பரந்த வானதி யகிலமும் படர்ந்து
முகேரெ னக்குடைந் தாடநின் றதுபோன்
முதிர்ந்த மாதவ முனிவரே யல்லால்.
தகிர் கணீவிரென் றெழித்தல்செய் யாது
சார்ந்த வர்க்கெலாஞ் சகசவா ணவநோய்
உகிரென் றேம்புதாண் டவந்தெரித் தருளு
மொருவர் தம்பெருங் கருணையார் தெரிப்பார். 75

அகில லோகமு நடுநடுத் திரங்க வன்று வாதுசெய் தூர்த்துவ நடன
முகிலி னேர்மிடற் றிறையவர் காட்ட முகத்து நாட்டங்கண் முதிர்நறுங் களப
நகிலி னூட்டிய காளியுந் தவத்தா னங்கை பார்ப்பதிக் கொப்பநல் லுமுவைத்
துகிலி னூர்முக நோக்கிநின் றருளுந் தூய தாண்டவங் கண்டுகொண்
[டிருந்தாள். 76

வேறு

விழிநீருக மெய்யி னுரோம மிகப்பொ டிப்ப
மொழிவாயின் விளங்க வெழாது முழங்க வங்கை
ஒழியாது முகிழ்ப்ப வுளூற்றிய வாடல் கண்டோர்
கழிகூர்மகிழ் வானட மாடுதல் கைக்கொண் டாரால். 77

பார்வதி தேவியாரோடும் செய்யும் நடனத்தின் பேற்றை,மணி,பொன், தேவநிதி, மனைவி முதலியவற்றினும் மேலானதாகக் கருதும் மெய்யன்பர்கட்குப் பிறப்பிறப்புக்கள் உள்ளதோ? இல்லை சிவானந்தத்தை நுகர்வதையன்றி அவர் வேறொன்றை விரும்புவரோ? விரும்பார்.

75. பகிரதனுல் கொண்டுவரப்பட்ட கங்கைநதி நிலவுலகிலுள்ளார் முழுக இன்பத்தை விளைவிக்கும். சிறந்த மாதவர்களேயல்லாமல் நீவிர் தக்கவரல்லீர் என்று நீக்காமல், அடைந்து தரிசனம் செய்வோர்க் கெல்லாம் ஆணவவலியைக் கெடுப்பீர் என்று பாதுகாக்கும் தாண்டவத்தைக் காட்டியருளும் சிவபெருமான் பெருங்கருணையை யாவரே எடுத்துச்சொல்லுவார்.

76. உலக முழுவதும் நடுங்கி இரங்க வாதுசெய்து ஊர்த்துவ நடனத்தை இறைவர் செய்தருள, நாணி முகங்கவிழ்ந்த காளியும் தவத்தினுல் இறைவியை யொப்ப இறைவருடைய திருமுகத்தை நோக்கி நின்று தூய தாண்டவத்தைத் தரிசித்திருந்தாள்.

77. ஆனந்தமா நடராஜமூர்த்தியின் ஆடலைக்கண்டோர் யாவரும் மிகுந்த மகிழ்ச்சியால் கண்களில் நீர்பொழிய, உடம்பில் மயிர் பொடிப்ப, வாய் குழற, கரங்கள் நீங்காமல் குவிப்ப, ஆனந்தத்தால் தாங்களும் ஆடத்தொடங்கினர்.

பொடிப்ப - சிலிர்ப்ப. முகிழ்ப்ப - குவிய. உளூற்றிய - செய்த.

அயனுடின னுடின னரண னுய்ந்த சூலப்
புயனுடின னுடின னீள்புயல் வேணி யீசன்
மயனுடின னுடினன் வானவர் தச்ச னேங்கைக்
கயனுடின னுடின னிரு கையி னேந்தல். 78

விண்ணேர்முழு தாடினர் விஞ்சைய ராடி னுர்கள்
பண்வீணைய ராடினர் பன்னக ராடி னுர்கள்
எண்மாதிர ராடின ரெண்மரு மாடி னுர்கள்
மண்ணேர்முழு தாடினர் மாதவ ராடி னுர்கள். 79

இருகோடி மருத்துவ ரீரிரண் டோடு நான்கு
வருகோடி வசுக்கள் வரைந்திடு பத்தொ டொன்று
தருகோடி யுருத்திரர் சாரு மிராறு கோடி
அருகாவொளி யாதவர் நால்வரு மாடி னுர்கள். 80

அறுநான்கினி ராயிர மாமுனி வோர்கள் சித்தர்
உறுசாத்தியர் பூத ரியக்க ருலப்பில் பேயர்
தெறுதானவர் தெவ்வு மரக்கர் வேதாளர் கோள்கள்
எறுழ்நாள்க ளிராசி யுடுக்களு மாட்ட யர்ந்தார். 81

---

78. பிரமதேவர், விஷ்ணுமூர்த்தி, உருத்திரர் முதலியோர் ஆனந்தத்தால் ஆடினர். மயன் ஆடினன். வானவர்தச்சன் ஆடினன். விநாயகக்கடவுளும் பன்னிருதோள் வள்ளலும் ஆடினர்.

சூலப்புயன் - உருத்திரன். புயல்வேணி ஈசன் - மகேசுவரன். புயல் - நீர். வேணி - சடை. ஐங்கைக்கயன்: கயன் - யானை முகக்கடவுள்.

79. மற்றும் வானேர் யாவரும் ஆடினர். விஞ்சையர், கந்தருவர், நாகர், ஆடினுர்கள். எட்டுத் திசையிலுள்ளோரும் ஆடினுர்கள். திக்குப்பாலகரும் ஆடினுர்கள். மண்ணிலுள்ளோரும் மாதவரும் ஆடினுர்கள்.

விஞ்சையர் - வித்தியாதரர். வீணையர் - கந்தருவர். பன்னகர் - நாகர். எண்மாதிரர் - எட்டுத் திசையிலும் உள்ளோர். எண்மர் - அஷ்ட வசுக்கள்.

80. இரண்டு கோடி மருத்துவர்களும் அஷ்டவசுக்களும் பதினெருகோடி உருத்திரர்களும் பன்னிரண்டுகோடி ஆதவர்களும் ஆகிய நான்கு வகைப்பட்ட முப்பத்துமூன்றுகோடி தேவர்களும் ஆடினுர்கள்.

மருத்துவர் - அசுவினிதேவர். ஆதவர் - சூரியர். அருகா ஒளி - சுருங் காத ஒளி.

81. நாற்பத்தெண்ணுயிரம் முனிவரர்களும் சித்தர்களும் சாத்தியர்களும் பூதர்களும் இயக்கர்களும் எண்ணில்லாத பேயர்களும் அசுரர்களும் அரக்கர் களும் வேதாளரும் கோள்களும் நாள்களும் இராசிகளும் உடுக்களும் ஆகிய யாவரும் ஆடினர்.

மலையாடின வாரிதி யாடின மன்னு மீரேழ்
உலகாடின வோங்கிய வண்ட மனைத்து மாட
விலகாத விராட்புரு டப்பெயர் வேந்து மாடிற்
றிலகீசுர னுடினு டாதவர் யாவ ரம்மா. 82

வேறு

நிருத்த நாடக நேருறக் காண்டொறுங்
கருத்தின் மிக்க களியா லனைவருந்
திருத்த மாகத்தஞ் சேவடி தூக்கிநின்
றருத்தி கூர்தர வாட்டயர் வேலையில். 83

ஐய நாடக மாட்டயர் வேகத்தின்
ஐயன் மெய்யி லணிந்த வராவினம்
ஐயு ணர்வு மயர்ந்து வருத்தமுற்
றைய வங்க ணுமிழ்ந்தன வாலமே. 84

அரையி னன்றித் தனுக்கை முழுவதும்
புரிவி னுற்புலித் தோலிறை போர்த்திட்டாங்
கெரியை வென்றில குந்திரு மேனியின்
வரிக ளாக வழிந்ததவ் வாலமே. 85

அறுநான்கின் இராயிரம் - நாற்பத்தெண்ணுயிரம். உலப்பில் - கெடுதலில்லாத. நாள்கள் - நாண்மீன்கள். எறுழ் - வலிமை. உடுக்கள் - நட்சத்திரங்கள்; விண்மீன்கள். ஆட்டயர்ந்தார் - ஆடினர்.

82. மலைகள், கடல்கள், ஈரேழு உலகங்கள், அனைத்து அண்டங்கள் ஆடின. விராட்புருடனும் ஆடினன். இதற்குக் காரணம் விளங்குகின்ற இறைவன் அசைந்தால் உலகில் அசையாதவரும் உண்டோ.

"அவனன்றி ஓரணுவும் அசையா" என்பதை இது நினைப்பூட்டுகின்றது.

வாரிதி - கடல். ஈரேழுலகு - பதினன்கு உலகங்கள்.

83. நிருத்தமாகிய நாடகத்தை நேரே காணுந்தோறும் காணுந்தோறும் எல்லோரும் மனக்களிப்பினல் பரிசுத்தமாகும் பொருட்டுத் தம்முடைய சிவந்த திருவடியைத் தூக்கி நின்று ஆசைமிக ஆடுகின்ற காலத்தில்.

நிருத்தநாடகம் - பண்புத்தொகை. திருத்தம் - தீர்த்தம், பரிசுத்தம். அருத்தி கூர்தர - அன்பு மிக.

84. சிவபெருமான் நடனம் செய்யும் வேகத்தினல், அவருடைய திருமேனியில் அணிந்து விளங்கும் பாம்புக்கூட்டங்கள், ஐந்து அறிவுகளும் சோர்ந்து வருத்தத்தை அடைந்து நஞ்சைக் கக்கின. அயர்ந்து - சோர்ந்து. ஆலம் - நஞ்சு.

85. தம்முடைய திருவரையில் அல்லாமல் திருமேனிமுழுவதும் இறைவர் அன்போடு புலித்தோலைப் போர்த்திட்டது போல் நெருப்பை வென்று விளங்கும் சிவந்த திருமேனியில் அந்த நஞ்சு வரிவரியாக வழிந்தது.

மிண்டு மாலத்தின் வேக முடற்றலுங்
கண்ட நின்ற கடுவெளிக் கொண்டதோ
மண்டு பாப்பணி வாய்விட மோவென
அண்ட ராதி யனைவரு மஞ்சினர். 86

இரிந்து ளார்சில ரேங்கின ரோர்சிலர்
பரிந்து காவென் றிரந்தனர் பற்பலர்
திருந்து நாடகச் செவ்வியின் மாய்தலும்
பொருந்த நன்றென் றிருந்தனர் பற்பலர். 87

ஓசிய வுள்ளமங் குள்ளவர் யாவர்க்கும்
பசியுந் தாகமும் பம்பிய தன்னதைக்
கசியு நெஞ்சினர் கண்ணக லாதமர்
நொசியு நுண்ணிடைப் பார்ப்பதி நோக்கினள். 88

வேறு

தனதொரு கூற்று லன்னபூ ரணியைத் தந்தன ளன்னபூ ரணியும்
வனமுலை யன்னை மலரடி வணங்கி மற்றெனக் கருள்பணி யாவ
தெனவுமை யம்மை யெம்பிரா னடத்துக் கெய்திய வனைவரும் பசியான்
மனமடி வடைந்தா ரன்ன நீ வழங்கி வளரெனத் திருவருள் பணித்தாள். 89

ஆக்கை - திருமேனி. புரிவு - விருப்பம். எரி - அக்கினி.

86. நெருங்கிய நஞ்சின் வேகமானது வருத்தத் தொடங்கலும் தேவர் முதலியோர் யாவரும் இறைவருடைய கண்டத்தில் பொருந்திய ஆலகால விடமானது வெளிப்பட்டதோ அல்லது நிறைந்த பாம்பாபரணத்தினின்று ஒழுகும் நஞ்சோ என்று எண்ணி அஞ்சினார்கள்.

மிண்டும் - நெருங்கும். உடற்றல் - வருத்தல். கண்டம் - கழுத்து. கடு - ஆலகாலவிடம். பாப்பணி - பாம்பாகிய அணி; வலித்தல் விகாரம். அண்டர் - தேவர்.

87. சிலர் கெட்டோடினர். சிலர் ஏங்கினர். சிலர் இரங்கிப் பாதுகாப்பாய் என்று இரந்தனர். பலர் இத்திருக்கூத்தின் அழகிலே இறந்தும் இருத்தல் நன்று என்று அங்கே தங்கினர்.

இரிதல் - கெட்டோடல். பரிந்து - இரங்கி. திருந்து நாடகம் - ஆன்மாக்களைப் பக்குவப்படுத்தும் ஐந்தொழில் நடனம்.

88. உள்ளமானது புழுங்க, அங்குள்ளவர்களுக்கெல்லாம் பசியும் தாகமும் நிறைந்தது. அந்தச் செயலை உருகிய உள்ளத்து அடியவர்களை விட்டகலாத பார்வதியம்மையார் நோக்கினர்.

ஓசிய - புழுங்க, இடிய. பம்பியது - நிறைந்தது. நொசியும் - துவளும்.

89. தன்னுடைய அம்சத்தினால் அன்னபூரணியைத் தோற்றுவித்தார். அன்னபூரணியும் பார்வதி அம்மையாருடைய திருவடிகளை வணங்கி, "எனக்கு

ஒருகரத் தேந்தும் பாத்திரத் தன்ன மொருகையிற் சராவத்தா னள்ளி
இருள்வளர் கூந்த லன்னபூ ரணியங் கிட்டன ளொருமுறை யதுபொற்
பெருவரை யென்ன வளர்ந்தது கண்டு பெருகிய மகிழ்ச்சியா னெவரும்
மருவினர் முகந்து வாய்மடுத் துண்டு வன்பசி தணிந்தனர் மலிந்தார். 90

வரைமுகம் புழுங்கச் சுடரயில் விடுத்த
வள்ளிதன் கேள்வனு ரிரங்கி
விரைகமழ் வேணீர் வியவரிற் கொணர்ந்து
விடுத்தருந் தாகநோய் தணித்தார்
புரையற வுடலின் விரவிய வெப்பம்
புழைக்கைநீர் துளிக்குமா றுயிர்த்துத்
தரையிடை யெவருங் குளிர்ப்பமேற் படுத்துத்
தந்திமா முகத்தவன் றணித்தான். 91

அஞ்சலே யஞ்ச லென்றிரி குநரை யங்கையா லமைத்தனன் வீரன்
எஞ்சலு ருமை யிரிந்தவர் வருகென் றிசைவுறக் கூவினன் வடுகன்
தஞ்சமு ருமை யவரவர்க் கிடங்கள் சமைத்தனன் கேத்திர பாலன்
மஞ்சிவர் நகரங் காவல்செய் தண்டி வருத்தங்கள் விளையருள் புரிந்தான். 92

இட்ட பணி யாது?'' என்று வினவ, உமையம்மையார், 'எம்முடைய சிவபிரான் திருக்கூத்தைக் காணும் பொருட்டு வந்த யாவரும் பசியால் மனம் நொந்தனர். ஆதலின் நீ அவர்களுக்கு அன்னத்தை வழங்கி வளர்ப்பாய்' எனக் கட்டளை இட்டருளினர்.

90. அன்னபூரணியம்மை, ஒரு கையிலே ஏந்திய பாத்திரத்தில் உள்ள அன்னத்தை ஒரு கையிலுள்ள அகப்பையான் அள்ளி அங்கு வழங்கினர். ஒரு முறை அன்னமிட்ட போதே அது மேருகிரிபோல வளர்ந்ததைக் கண்டு மிக்க மகிழ்ச்சியால் யாவரும் நெருங்கி, மொண்டு, உண்டு மிக்க பசியினின்று நீங்கினர்.

சராவம் - அகப்பை. பொற்பெருவரை - மேருமலை.

91. கிரவுஞ்சமலை வருந்த வேலாயுதத்தை விடுத்த வள்ளிகணவனாகிய முருகவேள் இரங்கிக் குடித்தற்குரிய மணம்பொருந்திய நீரை ஏவலாளர்களால் கொணர்ந்து கொடுத்துத் தாகநோயைத் தணித்தருளினர். யானைமுகக்கடவுள் அங்குள்ளோர் உடம்பிலே பொருந்திய வெப்பம் நீங்கும்படி, துதிக்கையிலுள்ள நீரைத் துளிக்கும்படி மூச்சுவிட்டு இன்புறுத்தினர்.

வேணீர் - குடிநீர். வியவர் - ஏவலர். புழைக்கை - துதிக்கை. உயிர்த்து - மூச்சுவிட்டு. தந்தி - யானை.

92. வீரபத்திரக்கடவுள், கெட்டோடுவோரை எல்லாம் தமது திருக்கரத்தால் அஞ்சற்க அஞ்சற்க என்று அபயங்கொடுத்தருளினர். வயிரவக்கடவுள் மீதமில்லாமல் கெட்டோடியவரையெல்லாம் வருக என அன்புடன் அழைத்தருளினர். சேத்திரபாலர் அவரவர்களுக்கும் தங்க இடங்களை அமைத்தருளினர். நகரத்தைக்

வேறு

அனைவரு மகிழ்ச்சி கூர்ந்தா ரம்பலத் தாடு மையர்
அனையவர் முகத்தி னேக்கி யருளின லருளிச் செய்வார்
வனைபுகழ் மன்ற மீதின் வயக்கிய நடன மென்றுங்
கனைகட லுலகில் யாங்கு மொருவர்க்குங் காட்டி லேமால். 93

ஞானத்தா னம்மை யன்றி வேறென்று நாடாச் சிந்தை
மோனத்தா னுயர்ந்த தண்டி மொய்த்தநம் மருளா லென்றும்
வானத்தார் வணங்கக் காவன் மருவுமிம் முத்தி வைப்பின்
மீனத்தாம் விழவு நோக்கி வியந்தனி ராத லாலே. 94

மும்மல மிரிய விந்த முதிர்சுவை நடனங் காணச்
செம்மலும் பெற்றீ ரின்னுஞ் சிந்தையின் வேட்ட வெல்லாங்
கொம்மென விரந்து கொண்மி னென்றனர் குவளைக் கண்டர்
தம்மடி வணங்கி யாருந் தனித்தனி வரங்கள் கொள்வார். 95

காவல்செய்யும் சண்டி அவர்களுக்குள்ள வருத்தங்களைக் கேட்டறிந்து அருள் செய்தார்.

93. முருகவேள் முதலிய புத்திரர். அனைவருக்கும் செய்த அருளினல் யாவரும் மகிழ்கூர்ந்திருந்தனர். வெள்ளியம்பலக் கூத்தராகிய சிவபெருமான் திருநடங்காண வந்தோர் முகத்தைப் பார்த்து அருளினல் இதுவரையில் இந்த வெள்ளிமன்றத்தில் செய்த திருக்கூத்தை உலகத்தில் எவ்விடத்தும் எவருக்கும் காட்டினேம் அல்லேம் என்று அருளினர்.

94. இந்தப் பங்குனி மாதத்திலே நடைபெற்ற திருவிழாவைத் தரிசித்து மகிழ்ந்த காரணத்தால் ஞானத்தினலே நம்மையல்லாமல் வேறென்றையும் விரும்பாத மனத்தையும் மோனத்தையும் கொண்டு மேம்பட்ட சண்டியே நம்முடைய அருளால் எப்பொழுதும் இந்த முத்தித்தலத்தில் தேவர்களெல்லோரும் வணங்கும்படியாகக் காவல் பொருந்துவார்.

95. ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் கெட்டோடும்படி இந்தத் திருநடனத்தைத் தரிசிக்கும் சிறப்பும் பெற்றுள்ளீர். இன்னும் நீங்கள் மனத்தில் விரும்பிய எல்லாம் விரைந்து கேட்டுக்கொள்ளுங்கள் என்று கரிய கண்டத்தையுடைய சிவபெருமான் அருள்செய்ய, அவருடைய திருவடிகளைத் தனித்தனியே யாவரும் வணங்கி வரங்களைப் பெறுவாராயினர்.

இரிய - கெட்டோட. செம்மல் - சிறப்பு. வேட்ட - விரும்பிய. கொம்மென - விரைந்து. குவளைக்கண்டர் - நீலகண்டத்தையுடைய சிவபெருமான்.

31

கரமலர் முகிழ்த்துத் தாழ்ந்து காலவ முனிவன் சொல்வான்
அரவக லல்கு லார்த மாசையு நிலனும் பொன்னும்
புரவியல் போக முற்றும் புரையெனப் போக்கி யென்னை
வரமலி யடியி னிழல் வைத்தனை யேனு மெந்தாய். 96

இரவிமுன் விளக்குக் காட்டா தாயினு மிருக்குங் காறும்
விரவியு மதனைக் கண்கள் வித்தக மாகு மன்றே
பரருறு பயத்த தாகும் படிவமு மெனக்கற் றுமாற்
கரவுசெய் தருளல் வேண்டுங் கடல்புரை கருணை வாழ்வே. 97

திருவருள் புரிந்த ஞான்றுஞ் சிறியனே னிரந்தே னீதன்
றருடணங் காட்டிப் பின்ன ரறைந்தவா புரிது மென்னக்
கருணையி னுரைத்தி யின்பக் காமர்நா டகமுங் கண்டேன்
மருள்வள ருடல மின்னே மாற்றுதல் வழக்கே யென்றான். 98

புறக்கணி யாத வண்ணம் பூரணன் கடைக்க ணித்தான்
சிறக்கணித் திட்ட யாக்கை தீர்ந்தது முனிவன் வல்லே
மறக்கணித் தடர்ப்ப மேலே வருவினை யின்றி யொன்றாய்
அறக்கணித் தருளு மின்பத் தவசமா யழுந்தி னானே. 99

---

96. அதனைக்கேட்ட காலவமுனிவர் தம்முடைய கரங்களைக் குவித்து வணங்கிச் சொல்வாராயினர். பெண், மண், பொன் முதலியவற்றிலுள்ள ஆசையும் மேலைப்பதங்களிலுள்ள போகம் முழுவதும் குற்றமென்று விலக்கி அடியேனைச் சிறந்த திருவடி நிழலிலே வைத்தருளினீர். ஆயினும், எமதுபிதாவே!

முகிழ்த்து - கூப்பி. புரஇயல்போகம் - இந்திரலோகம், சத்தியலோகம், வைகுந்தலோகம் முதலியவற்றில் அனுபவிக்கும் அனுபவங்கள். புரை - குற்றம். வரம் - மேன்மை.

97. சூரியன் முன்னே விளக்கு ஒளி செய்யாதாயினும் அது இருக்கும் வரையும் அதனைக்கலந்தும் கண்கள் அறியுமன்றே. பிறர் கொண்ட பயனுடைய வடிவமும் எனக்கு அத்தன்மையதே. ஆகலின் என்னுடைய இவ்வுடலை மறைத்தருளல் வேண்டும்.

98. தேவரீர் இயல்பாகவே அடியேனுக்குத் திருவருள்புரிந்த காலத்திலும் இதனைச் சிறுமையையுடையேன் இரந்தேன். அன்று திருவருள் நடனத்தைக் காண்பித்துப் பின்பு விரும்பியவாறே செய்வேன் என்று கருணையுடன் அருளிச் செய்தீர். அவ்வாறு பேரின்பமயமாகிய அழகிய நடனத்தையும் தரிசித்தேன். அஞ்ஞானம் மிகுதற்கு ஏதுவாகிய இவ்வுடம்பை மாற்றியருளுதலே வழக்காகும் என்று விண்ணப்பித்தார்.

99. அம்முனிவர் விண்ணப்பத்தைப் புறக்கணித்து ஒதுக்காமல் பூரணன் கடைக்கண்சாத்தி யருள்செய்தார். அருவருப்புற்ற யாக்கை ஒழிந்தது. முனிவர்

கவலையும் பிறவி வேலை கடந்திடுந் தொள்ள மான
தவலரு வெள்ளி மன்றின் றனிநடங் காணும் பேறு
சவலையி லாத சேடன் றன்னிளுந் தகைமை யுன்னிக்
குவலய நிறத்து மேனிக் கோமுனி வியந்து பின்னர். 100

கடகரி யுரிவைப் போர்வைக் கண்ணுதல் பாதம் போற்றி
நடனமிவ் வெள்ளி மன்றி னுடொறு மடிய னேற்கும்
உடலிது கழிநாட் காறு முஞற்றுதல் வேண்டு மென்ருன்
அடலைகொண் டணிந்த பெம்மா னங்ஙன மாக வென்ருன். 101

நாகத்தார் மருமத் தண்ண னடனமிங் கெய்தும் பேறு
மோகத்தா னன்றே யென்று மோகத்தாள் பாத முன்னி
மாகத்தார் வியப்ப மைநூற் றனையவார் கூந்தன் மங்கை
பாகத்தான் சரணந் தாழ்ந்து பட்டிமா முனிவன் சொல்வான். 102

விரைந்து மேலும் வந்து துன்புறுத்தும் ஆகாமிய வினையில்லாமல் ஒன்றுபட்டு அனுபவிக்கும் பேரின்பத்திலே அவசமாய்த் திளைத்திருந்தார்.

100. கவலையையேயுடைய பிறவிக்கடலைக் கடக்கும் தெப்பத்தையொப்ப நீங்காத வெள்ளியம்பலத்திலே ஒப்பற்ற நடனத்தைக்காணும் பேற்றைப் பெற்றதை நினைந்து பொன்னிறமுடைய திருமேனியையுடைய கோமுனிவர் வியப்படைந்து பின்னர்.

தொள்ளம் - தெப்பம். வேலை - கடல். தவலரு - நீங்குதற்கு அருமையான. சேடன் - ஆதிசேடன், இங்கே பதஞ்சலி முனிவரைக்குறித்தது. குவலயம் - பூமி, பொன்னிறம்.

101. யானைத்தோலைப் போர்த்து விளங்கும் சிவபெருமானே! வணங்குகின்றேன். இந்த வெள்ளிமன்றத்திலே நாள்தோறும் நடனம் செய்தருளல் வேண்டும். அடியேனுக்கு இவ்வுடம்பு கழியுங்காலம்வரை நடனத்தைத்தரிசிக்கும்படி அருள் செய்க என்று விண்ணப்பம் செய்தார். உலகத்தையெல்லாம் நீறு செய்து தமது திருமேனியிலே சண்ணித்த சிவபெருமானும் அவ்வாருகுக என்று அருளினர்.

கடகரி - மதயானை. உரிவை - தோல். கண்ணுதல் - நெற்றிக்கண்ணை உடைய சிவபெருமான். உஞற்றுதல் - செய்தல். அடலை கொண்டணிதல்: "தவளத்த நீறணியுந் தடந்தோளண்ணல்" என்க.

102. பாம்புமாலையையணிந்த மார்பினையுடைய சிவபெருமான் திருநடனத்தைக் காணும் பேறு ஆசையானன்றே என்று சிவகாமவல்லி திருவடிகளை நினைந்து, விண்ணேர் வியக்குமாறு கரிய கூந்தலையுடைய உமையம்மையைப் பாகத்திலேயுடைய சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கிப் பட்டி முனிவர் கூறுவாருயினர்.

நாகம் தார் மருமம்: மருமம் - மார்பு. மோகம் - ஆசை. முன்னி - நினைந்து. மாகத்தார் - விண்ணேர்.

இத்தலத் திருக்கை யோர்க்கு மித்தலந் தரிசித்தோர்க்கும்
உத்தம நடனங் காணு முறுதவத் தவர்க்கு மீளா
முத்தியை யளிக்க நிற்றி முக்கணு வேட்டு ளார்கட்
கத்தமும் பொருளு மின்பு மிவையுநன் றருளல் வேண்டும். 103

அள்ளலம் படுக ரான வணங்கினர் போக வாழ்க்கை
எள்ளிநா னடன மொன்றே கண்டுகொண் டிருத்தல் வேண்டும்
வள்ளலே யென்றி ரந்தான் வரமெலா மளித்து நீண்ட
வெள்ளியம் பலத்து ளாடும் விகிர்தன்மற் றிதுவு நல்கும். 104

படைப்பினை வேட்டு நம்பாற் படர்ந்தனை யாத லாலே
இடைப்படும் படைப்போர் கூற்று னெய்துமுன் னுருவந் தாங்கிக்
கடைப்படா தங்கி ருந்து கடைப்பட வாக்கு நந்தங்
கொடைப்பெரு நடன நாளுங் கும்பிடிவ் வுருவி னீங்கே. 105

மாயனுந் தொல்லை மேனி வாய்ப்புறக் கொண்டோர் கூற்றுற்
பாயபல் லுயிரை யெல்லாம் பாற்கடல் துயின்று காத்துத்
தூயவிவ் வடிவி னீங்குச் சுடரொளி வெள்ளி மன்றின்
நேயநன் னடன நாளு நியதிகொண் டினிது காண்க. 106

---

103. இத்தலத்திலே வசிப்போருக்கும், இத்தலத்தைத் தரிசிப்போருக்கும், சிறந்த நடனத்தைக் காணும் மிக்க தவத்தோருக்கும் வீட்டின்பத்தைக் கொடுத்தருளும் பொருட்டு நிற்கின்றீர், சிவபெருமானே! விரும்பியவர்கட்குச் செல்வமும் மக்களும் இன்பமும் ஆகிய இவற்றையும் மிகுதியாக அருள வேண்டும்.

உறுதவம் - மிக்கதவம். அத்தம் - செல்வம். பொருள் - மக்கள்: "தம் பொருளென்பதம் மக்கள்" என்றமை காண்க.

104. சேற்று நிலமான பெண்களுடைய போக வாழ்க்கையை வெறுத்துத் திருநடன மொன்றையே நான் தரிசனம் செய்து கொண்டிருத்தல் வேண்டும். வள்ளலே! என்று இரந்து விண்ணப்பித்தார். அவர் கேட்ட வரங்கள் எல்லாவற்றையும் கொடுத்து இறைவர் மேலும் அருளிச் செய்வார்.

விகிர்தன்-வேறுபாடுடையோன். அள்ளல்-குழைசேறு. எள்ளி - இகழ்ந்து.

105. படைப்புத்தொழிலை விரும்பி நம்பால் வந்தாய் ஆதலால் அப்படைப்புத்தொழிலை ஒரு கூற்றுல் செய்யும் முன்னைய வடிவத்தைத் தாங்கிப் படைப்பினைச் செய்க; நம்முடைய நடனத்தை இவ்வுருவந் தாங்கி இங்கே எப்போதும் கும்பிட்டிருப்பாயாக.

106. திருமாலும் முன்னுள்ள வடிவத்தைக் கொண்டு ஒரு கூற்றினலே நிறைந்த உயிர் வருக்கங்களைத் திருப்பாற் கடலில் யோகநித்திரை செய்திருந்தே பாதுகாத்தலைச் செய்தும், பரிசுத்தமாகிய இந்த வடிவத்திலிருந்துகொண்டு

சூரனு லச்ச மெய்திச் சுரர்கள்வந் தபய மெய்த
வாரநா மளித்துக் காத்து வதிவித்துச் சூர னுவி
ஆரனுண் முலைப்பா லுண்ட வமரனல் விளித்தா மற்றுல்
தீரமாங் காஞ்சி வைப்பிற் சிவணுநர்க் கிடும்பை யில்லை. 107

பகையினுன் மண்ணை தன்னுற் பார்த்திவர் தம்மா னேயால்
தகைசெயு மனுவால் வானேர் தங்களா லவுணர் தம்மான்
மிகைசெயு மரக்க ராலும் விலங்குசெந் துக்க ளானும்
புகையழ லானு மீங்குப் புல்லுநர்க் கச்ச மின்றே. 108

எந்தமைக் குறித்து நீசெ யெரியழற் குண்டத் தென்றுங்
கந்தவெண் பூதித் தோற்றங் கழிவின்றி வளர்வ தாக
வந்தவெண் பூதி போற்று மவர்களும் வேட்ட தெய்திப்
பந்தமுற் றிரியச் சொன்ன பொருளினும் பயமுந் தீர்வார். 109

வெள்ளி மன்றத்திலே நாம் செய்யும் இந்த நடனத்தை எந்நாளும் நியமமாகத் தரிசித்தும் இருக்கக் கடவன்.

மாயன் - விஷ்ணுமூர்த்தி. பாய - பரவிய. நியதி - நியமம், கடப்பாடு.

107. சூரபதுமனுடைய கொடுங்கோல் ஆட்சிக்குப் பயந்து தேவர்கள் வந்து சரணமடைய அவர்களுக்கு அபயம் தந்து இருத்திச் சூரனுயிரைக் கந்தக் கடவுளால் மாய்த்தோம். அதனல் காஞ்சி நதியைச் சார்ந்தவர்களுக்குத் துன்ப மென்பதில்லை.

ஆரல்நாள் - கார்த்திகைமீன். விளித்தாம் - கெடுத்தோம். சிவணுநர் - பொருந்துவோர்.

108. பகையினுலும், பேய் பூதங்களாலும், அரசர்களாலும், நோயினுலும், தடை மந்திரங்களாலும், தேவர்களாலும், அசுரர்களாலும், பொல்லாத அரக்கர் களாலும், விலங்கு முதலிய துஷ்ட செந்துக்களாலும், நெருப்பினுலும் இங்கே வசிப்போருக்குத் துன்பமில்லையாம்.

மண்ணை - பேய், தகைசெயுமனு - ஏவல் பில்லி சூனியங்களால் தடை செய்யும் மந்திரம்.

109. என்னைக் குறித்து நீ செய்கின்ற யாககுண்டத்திலே மணம் வீசும் வெள்ளிய விபூதி நீங்காமல் என்றும் வளர்வதாகுக. அந்த விபூதியை விரும்பி அணியும் தொண்டர்களும் விரும்பியவற்றைப் பெற்று பந்தபாசங்கள் முற்றும் கெட்டோட மேலே கூறியவற்றுல் உண்டாகிய அச்சமும் ஒழிவார்.

எரி அழற்குண்டம் - யாககுண்டம். வேட்டது - விரும்பியவை. இரிய - கெட்டோட.

ஆனந்த நடன நோக்கி யனைவரு நம்மைப் போல
ஆனந்த முளத்தி னீட வாட்டயர்ந் தனர்க ளன்றே
ஆனந்த மருளு நம்மு னன்னண மாடு வோர்க்கும்
ஆனந்த முறுக வேட்ட பொருள்களு மடுப்ப தாக. 110

என்றிறை வரங்க ணல்க விட்டகா மியம்வேட் டோரும்
ஒன்றுவேட் டோரு மன்றி னுறுநடம் வேட்டோர் யாரும்
நன்றிசெய் முனிவர் வாங்கு நல்வர நமக்குஞ் சாலு
மன்றவென் றிரந்து வேறு வரங்கொளா தமைதி பெற்றார். 111

ஒன்பதோ டேழு கையி னொளிர்படை தாங்கி நம்பன்
மன்பதைக் கிரங்கி யாட மலர்புரை கரங்க ளெட்டின்
மின்படை தாங்கி வாது விளைத்துமுன் னாணி நின்று
பின்பரு ணடனங் கண்ட பெய்வளை வணங்கிக் கூறும். 112

தெவ்வரை முருக்குஞ் சூலத் தேவனே போதி சூழ்ந்த
இவ்வரைப் பிடைநின் றோங்கு மிரசத மன்றி னுயேற்
கொவ்வரு நடனங் காண்டன் முதன்மையை யுறுத்தா யன்றே
எவ்வெவ நாளு மீங்கிம் முதன்மையா னுறுக வென்றாள். 113

---

110. ஆனந்தக்கூத்தைக்கண்டு அனைவரும் நம்மைப்போல உள்ளத்தில் ஆனந்தம் மிக வாட்டம் நீங்கினரன்றோ! இன்பத்தைத்தரும் நம் முன்பு ஆனந்தம் பெருக உண்டாகுக. விரும்பிய பொருள்களும் வந்து பொருந்துவதாகுக.

வாட்டு அயர்ந்தனர் - வாட்டம் நீங்கினர்; ஆட்டு அயர்ந்தனர் எனினுமாம். ஆடினர் எனப் பொருள்கொள்க. அன்னணம் - அவ்வாறு.

111. என்று இறைவர் வரங்களை அருளக் காமியத்தை விரும்பினோரும், விட்டின்பத்தை விரும்பினோரும், வெள்ளி மன்றத்து நடனத்தை விரும்பித் தரிசித்தோரும் ஆகிய எல்லோரும் முனிவர் பெற்ற வரங்கள் எமக்கும் பொருந்துவதாம் என்று வேறு வரங்களைக் கேளாதவராய் அமைதியுடனிருந்தார்.

மன்ற - மிகுதியாக.

112. பதினாறு கரங்களிலும் ஒளிபொருந்திய படைக்கலங்களைத் தாங்கி நின்று சிவபெருமான் உயிர்த்தொகுதிகளுக்கு இரங்கி, திருக்கூத்தைச் செய்தருள, மலர்க்கரங்களெட்டினிலும் படைக்கலங்களை யேந்தி வாதுசெய்து, எதிரில் நாணி நின்று, பின்பு அருள் நடனத்தைக் காளிகண்டு வணங்கிக் கூறுவாள்.

113. பகைவரை யழிக்கும் சூலபாணியே! அரசு சூழ்ந்த இத்தலத்தில் நின்று உயர்ந்து விளங்குகின்ற வெள்ளிசபையினில் நாயினேனுக்கு ஒத்த நடனத்தைத் தரிசிக்கும் முதன்மையை அளித்தீர். எவ்வெக் காலங்களினும் இப்போது போலவே இந்த முதன்மையை எனக்குக் கொடுத்து அருள்செய்க என்றாள்.

அன்னண மாக வென்று ரமலனு ரதனைக் கேட்ட
மின்னிழை யுமையாள் காளி மிளிர்முக நோக்கி யாடத்
தன்னுளத் தரும்பு மூடல் புலவியாய் வரந்தா னல்கப்
பின்னது துனியாய் நீடப் பெரிதுமற் றிதனைச் செய்தாள். 114

வேறு

நாடகங் காண்டலின் முதன்மை நம்மது
பாடகத் தளிரடிப் பாவை மற்றவள்
பீடுறக் கொள்ளுமே யென்று பிஞ்ஞக
னேடுசெம் பொன்னிக ருருவி னீங்கினள். 115

பரிசனம் பரதங்கண் டிறைஞ்சு மாதவர்
வரிசைசெ யமுதர்கண் மற்று ளோரையுங்
கரிசிறன் கணங்களாற் காதிக் கொண்டுபோய்ப்
புரிசடைக் கடவுளைப் புலம்பு செய்தனள். 116

வாயிலாற் றுனியினை மாற்றித் தாதைநற்
ருயிலா னயமொழி தந்து புல்லுறீஇ
நீயிலா திருத்துமே நிகழ்முக் கோணமெய்க்
கோயிலா யென்றவள் குளிர்ப்பக் கூறுமால். 117

---

114. 'அவ்வாறே ஆகுக' என்று இறைவர் காளிக்கு அருளினராக. அதனைக்கேட்ட உமாதேவியார், காளியின் முகம்நோக்கி ஆடுதல் குறித்துத் தன் உள்ளத்தில் தோன்றிய ஊடலானது புலவியாய், வரந்தந்தபின்பு அது துனியாக நீட்டிக்கவும் இதனைச் சொல்வாராயினர்.

ஊடல் - கலவியிற்பிணங்கல். புலவி - பிணக்கு. துனி - புலவிநீட்டம்.

115. திருக்கூத்துத் தரிசனம் செய்தல் நம்முடையதாகிய முதன்மையே யாம். அக்காளிக்கு முதன்மையேது? என்று சிவபெருமானுடன் சிறுபிணக்கினை உமாதேவியார் கொண்டார்.

நாடகம் - திருக்கூத்து. பாடகம் - காலணியினொன்று. பிஞ்ஞகன் - மயிற் பீலியைக் கோலமாக அணிந்த சிவபிரான்.

116. பரிசனங்களும், திருநடங்கண்டு கும்பிட்டிருக்கும் மாதவரும், தேவரும், ஆகிய மற்றுள்ளவர் யாவரையும் தன் கணங்களோடு மோதிக்கொண்டு சென்று சிவபெருமானேடு பிணக்குக் கொண்டார்.

117. வாயில்களினுலே புலவி நீட்டத்தை மாற்றுவித்துத் தாய் தந்தையர் இல்லாத சிவபெருமான் விருப்பத்தை விளக்கும் சொற்களைக் கூறி, அணைத்து திரிகோணவாசினியாகிய உன்னையல்லாமல் நாமிருத்தல் கூடுமோ? என்று உமாதேவியார் மனம் குளிருமாறு சொல்வாராயினர்.

பல்வகை மன்றினுட் பத்தர்க் கின்னருள்
நல்வகை மன்றுநல் லனவ வற்றுளுஞ்
சொல்வளர் ரஞ்சிருர் தொழுது போற்றிய
எல்வளர் மன்றெமக் கினிய வாகுமால். 118

எமதுருத் தோன்றியெஞ் சிரூர்களாகிய
கமலனு நேமியுங் கழிப்பி வல்வினை
விமலதை யடைந்துமெய் நடனம் போற்றுறுந்
தமரமன் றிதுதக வுயர்ந்த தாயினும். 119

ஓங்கிய விரசத வோங்கன் மீமிசைத்
தாங்கிய விரசத சபையை நேர்வதன்
ருங்கது பிரமர்நா ரணர ளப்பிலார்
நீங்கிய தொழிலராய்ப் போற்ற நின்றதே. 120

ஆக்கலு மழித்தலு மாய வூழ்வினை
நீக்கமில் லார்தொழ நின்ற விச்சபை
ஊக்கிய நடமுவள் காண்க வச்சபைத்
தாக்கரு நடன நீ தகவிற் காண்கவே. 121

---

118. பலவகையாகிய மன்றங்களினுள்ளே அடியார்களுக்கு அருள்செய்யும் பொருட்டுள்ள மன்றுகள்சிறந்தன; அவைகளுள்ளும் நமது குமாரர்கள் தொழுது வணங்கிய மன்றுகள் நமக்கு மிக இனிமையுடையனவாம்.

எல் - ஒளி.

119. எம்முடைய வடிவத்தினின்று வந்துதித்தவராகிய பிரமனும் விஷ்ணுவும் வலிய வினைகளைப் போக்கித் தூய்மைபெற்றுத் திருக்கூத்தினைத் தரிசித்த மன்றம் மிக உயர்ந்தது; ஆயினும்,

கமலன் - பிரமன். நேமி - திருமால். விமலதை - தூய்மை.

120. உயர்ந்த வெள்ளிமலையின் மேல் உள்ளதாகிய வெள்ளி சபையை ஒப்பதன்று. அஃது எண்ணிறந்த பிரமர்களும் நாரணர்களும் தத்தமது தொழில்கள் நீங்கப்பெற்று வணங்கும்படி யுள்ளதாம்.

இரசத ஓங்கல் - வெள்ளிமலை. மீமிசை - மேல். இரசதசபை - வெள்ளி மன்றம். நேர்வது - ஒப்பாவது.

121. படைத்தலும் அழித்தலும் நீக்கமில்லாதுள்ள உயிர்கள் வணங்கும் படியாகவுள்ள இச்சபையில் நடித்த நடனத்தை ஊக்குவித்த அவள் தரிசிக்கட்டும். அச்சபையில் நடிக்கும் நடனத்தை நீ தக்கவாறு தரிசிப்பாயாக.

ஊழ்வினையே இறத்தல் பிறத்தல்களுக்குக் காரணமாம். அவ்வூழும் நீக்கம் இல்லாத ஊழ் என்ருர். உவள் என்றது காளியை.

இச்சபை நாடகத் தின்று போலெறுழ்ப்
பொச்சமில் காளிதான் போற்று மேல்வையின்
முச்சகந் தொழுதெழு முதல்வி யென்றுநம்
அச்சொடும் விரவியொன் ருதி தாழவே. 122

என்னநல் வரமுமைக் கினிது நல்கினுன்
அன்னமும் பன்றியு மறிவொ ணுதவன்
மின்னிய விரசத வெற்பி னூழியு
மன்னிய விரசத மன்றிற் ரேன்றினன். 123

எண்ணிலர் பிரமர்க ளெண்ணி ஞரணர்
எண்ணில ரிந்திர ரெவரும் போற்றுற
எண்ணில்பல் லியநனி யியம்ப வாடினுன்
எண்ணிலாக் கருணையெம் பிராட்டி காணவே. 124

முழங்கின துந்துபி முனிவ ரார்த்தனர்
தழங்கின சிலம்பொலி தாள மேங்கின
வழங்கின நரம்பிசை வங்கி யத்திசை
பழங்கணி லெதிரொலி பறம்பு செய்யவே. 125

---

122. இந்த வெள்ளியம்பலத்திருக்கூத்தை இன்று போலவே வலிமையும் பொய்ம்மையும் இல்லாத காளி வணங்குங் காலத்து, மூவுலகுந் தொழ நின்ற தேவியே! எப்போதும் நம்முடைய திருமேனியுடன் நீ கலந்திருந்து வணங்க ஒன்ருவாய்.

எறுழ் - வலிமை. பொச்சம் - பொய். ஏல்வை - பொழுது. அச்சு - உடல். விரவி - கலந்து. அவள் தாழும்படி ஒன்ருவாய் என்க.

123. என்று உமாதேவியாருக்கு நல்ல வரத்தை இறைவர் கொடுத்தருளினர். அப்பெருமான் அன்னவுருவாகிய பிரமனுலும், பன்றியுருவாகிய திருமாலாலும் தேடிக்காண வொண்ணுதவர். ஒளிபொருந்திய வெள்ளிமலேயிலே ஊழிக்காலத்திலும் நிலேபெற்ற வெள்ளி மன்றத்தில் தோன்றியருள்செய்வார்.

124. அளவில்லாத பிரமர்களும், நாரணர்களும், இந்திரர்களும், யாவரும் வணங்கும்படியும் அளவிறந்த கருணையையுடைய உமாதேவியார் காணும்படியும் பலவகை வாத்தியங்களும் முழங்கத் திருக்கூத்தியற்றியருளினர்.

125. துந்துபி வாத்தியங்கள் முழங்கின. முனிவர்கள் ஆரவாரம்செய்தனர். சிலம்பொலி சத்தித்தன. தாளங்கள் ஒலி செய்தன. நரம்புக்கருவிகளும், வங்கியங்களும் இசையை எழுப்பின. துன்பமில்லாத எதிரொலி உண்டாகும்படியாக மிக்கொலித்தன.

பழங்கண் - துன்பம். பறம்பு - மலே

ஆடினர் சிலரெதி ராடி யாரணம்
பாடினர் சிலர்மறை பாடி யின்னருள்
கூடினர் சிலரருள் கூடி யானந்த
நீடினர் சிலரிறை நிருத்தம் போற்றினர். 126

வரையெலாந் தாண்டவ நாத மல்கிப்பின்
தரையெலாம் பரத்தலிற் றரையு ளார்சிலர்
உரையெலாங் கடந்தொளி ரொருவன் குன்றினும்
புரையெலாந் தபப்புகுந் தாடல் போற்றினர். 127

அன்றுபோ லென்றுமவ் விரண்டு மன்றினும்
மன்றலங் கடுக்கைவார் சடிலத் தெம்பிரான்
நின்றருள் நாடக நிகழ்த்து மாருயிர்க்
கொன்றிய மலப்பிணி யோட்டந் தெய்க்கவே. 128

இருசபை யிடத்தினு மீண்டு நாதங்கள்
ஒருமுறை செவியுறத் தவமு ஞற்றினேர்க்
கருள்பெற யோகுழந் தாங்குக் கேட்குமப்
பொருவினு தமும்புறக் கணிக்கும் பெற்றித்தே. 129

---

126. சிலர் எதிர்நின்று ஆனந்தக் கூத்தாடினர். சிலர் வேதமந்திரங்களைப் பாடியாடினர். வேத மந்திரங்களைப்பாடி நின்று சிலர் அருளைப் பெற்றனர். சிலர் அருளோடுகூடி ஆனந்தத்தை அநுபவித்தனர். சிலர் இறைவருடைய திருநிருத்தத்தை வணங்கினர்.

ஆரணம், மறை என்பன ஒருபொருட் சொற்கள்.

127. மலைமுழுவதும் தாண்டவத்தின் ஒலிநிறைந்து, பின்பு பூமிமுழுவதும் பரவுதலினல் நிலவுலகத்துள்ளார் சிலர் வாக்குகளின் எல்லையையும் கடந்து விளங்கும் ஒப்பற்ற மலையினும் புகுந்து குற்றங்களெல்லாம் நீங்குமாறு திருக்கூத்தைத் தரிசித்தனர்.

மல்கி - நிறைந்து. பரத்தலின் - பரவுதலினல். உரை - வாக்கு. புரை - குற்றம். தப - கெட.

128. அன்றுபோல என்றும் அந்த இரண்டு மன்றங்களினும் கொன்றை மாலையணிந்த சடையையுடைய சிவபெருமான் நிலைபெற அருட்கூத்தினைச் செய்தருளுவர். நிலைபெற்ற உயிர்களுக்குப் பொருந்திய மலநோய் ஓடி இளைக்குமாறு.

ஓட்டந்து எய்க்க நிகழ்த்தும் என்க. மன்றல் - வாசனை. கடுக்கை - கொன்றை. சடிலம் - சடை. அருள் நாடகம் - அருட்கூத்து. ஓட்டந்து - ஓடி. எய்க்க - இளைக்க.

129. இரண்டு சபைகளினும் நிறைந்த ஒலியினைக்கேட்கும் தவமுடையோர்க்கு அருளைப்பெறுதற்குரிய சிவயோகத்தைச்செய்து கேட்கப்பெறும் அந்த ஒப்பற்ற நாதமும் புறக்கணிக்கும் தன்மையையுடையது.

மன்றினைச் சேயிடை யிருந்து வாழ்த்தினும்
ஒன்றிய திசையுற நோக்கித் தாழினும்
நன்றெதிர் நோக்கினர் நவிற்றக் கேட்பினும்
அன்றிய காதர மவர்கட் கில்லையே. 130

அற்றைநா ளந்திவந் தணைய வண்ணலார்க்
குற்றபூ சனை நனி யுஞற்றி மாதவர்
பொற்றவெண் கயிலையம் பொருப்பி லேற்றினர்
கொற்றவீ தியைவலங் கொள்ளச் செய்தனர். 131

மன்றிடைத் திருவுரு வரதன் வைகிய
தன்றைவார் கொடிப்படப் பெற்றந் தாழ்த்தினர்
வென்றபூங் கழலடி வேந்த ராதியோர்
நன்றுதம் மிருக்கையை நண்ணி வாழ்ந்தனர். 132

பத்திசெய் கோமுனி பட்டி மாமுனி
உத்தம ரிருவரு முறுதங் கூற்றினற்
கொத்துறு வையகங் குயிற்றிக் காத்தருள்
வித்தக னடந்தொழு நியம மேவினர். 133

உலகமுற் றுயிர்த்தரு ளுமையுந் தானுமாய்
அலகில்பல் லுயிர்க்குநல் லறிவு நண்ணுமா
றிலகிய விரசத மன்றி னென்றுநந்
தலைவனை நந் தொழினடந் தரநின் றனரோ. 134

---

130. இரசத சபையைத் தூரத்திலேயிருந்து துதித்தாலும், பொருந்திய திசையை நோக்கி வணங்கினாலும், நன்கு எதிரிலே நின்று தரிசித்தோர் சொல்லக் கேட்டாலும் அழிவினைச் செய்யும் துன்பம் அவர்களுக்கு இல்லை. சேயிடை-தூரம். நவிற்ற-சொல்ல. அன்றிய-பகைத்த. காதரம்-துன்பம்.

131. அன்று மாலைக்காலம் வரச் சிவபெருமானுக்குரிய பூசனைகளை நன்ருகச்செய்து, முனிவர்கள் வெள்ளிய கயிலைமலையிலே கொண்டு சேர்த்தனர்; வீதியுலாவையும் விதிமுறையில் வரச்செய்தனர்.

132. வெள்ளிமன்றத்திலே சிவபெருமான் எழுந்தருளிய பின்பு விடைக் கொடியைத் தாழச்செய்தார். அரசர் முதலியோர் தங்கள் இருக்கையை யடைந்து வாழ்ந்தனர்.

133. பத்தி செய்யும் கோமுனிவரும், பட்டிமுனிவரும். ஆகிய சிறந்த இரு முனிவரும் பொருந்திய தம்முடைய கூற்றினல் உலகங்களைப் படைத்துக் காத்து அருள் செய்யும் சிவபெருமானுடைய திருக்கூத்தைத் தரிசிக்கும் நியமத்தை மேற் கொண்டார்கள். எய்க்க - இளைப்புறும்படி. வையகம் - உலகம். குயிற்றி - செய்து, ஆக்கி. நியமம் - கடப்பாடு.

134. எல்லாவுலகங்களையும் பெற்றருளிய உமாதேவியாரும் தானுமாக எண்ணிறந்த உயிர்களுக்கெல்லாம் நல்ல அறிவு பொருந்த என்றும் விளங்கும்

நாயகன் விழவுநா டகமுங் கண்டுமுன்
பாயமெய்த் தவத்தினர் பலரு முய்ந்தனர்
ஆயவக் கதைபுகன் றடிய னேனுமின்
றேயும்வல் வினைப்பவ மிரித்திட் டுய்ந்துளேன். 135

அளவினைக் கடந்தொளி ரமல னுடகத்
தளவினை யென்னறிந் தறைந்து ளேனென்றான்
துளவினை யணிந்தவ னுய தூமுனி
வளவினை தபுமடி வழுத்துஞ் சூதனே. 136

உய்ந்தன மடியரே மெழுமைத் தோற்றத்தும்
உய்ந்தன மெனப்பணிந் துறுவர் கூறுவார்
மைந்துடைச் சூரினும் வானு ளோர்பயஞ்
சிந்திய தென்றுமுன் றெரிக்கப் பட்டதே. 137

அக்கதை விளங்குமா றருள்வ தென்றனர்
பொக்கமின் முனிவரர் புகறல் கேட்டலுங்
கொக்கிற கணிந்தொரு கோலங் கொண்டருள்
நக்கனை யுளத்துறீஇ நவிலுஞ் சூதனே. 138

நிருத்தப்படலம் முற்றியது

ஆகத் திருவிருத்தம் — 883

இரசத சபையில் நம்முயிர்த்தலைவராகிய சிவபெருமான் ஐந்தொழில் நடனத்தைச் செய்தருளுகின்றார்.

135. சிவபெருமானுடைய திருவிழாவையும் திருநடனத்தையும் தரிசித்துத் திருமுன்னரிருந்து துதித்த உண்மைத் தவமுடையோர் யாவரும் உய்ந்தனர். அந்த வரலாற்றைச் சொல்லி அடியேனும் வலிய வினையால் உளவாகிய பிறப்பினையும் கெடச்செய்து உய்ந்தேன். பவம் - பிறப்பு. பாவமெனினுமாம்.

136. "மறையினன் அயனன் மாலன் மனத்தினன் வாக்கான் மற்றும், குறைவிலா அளவினனும்" கூறெணாதாகிய அவற்றைக் கடந்து நின்றொளிரும் சிவபெருமானுடைய திருக்கூத்தின் அளவை எவ்வாறு அறிந்து சொல்லும் தரமுடையேன் யான் என்று விஷ்ணுமூர்த்தியின் கூற்றினைப்பொருந்தும் தூய கோமுனிவருடைய திருவடியைத் துதித்து வணங்கும் சூதமுனிவர் சொல்லியருளினர். அமலன் - சிவபெருமான். வினைதபும் - வினைகளைக்கெடுக்கும்.

137. யாங்கள் எழுவகைத் தோற்றத்தினின்றும் உய்ந்தோம் என்று வணங்கி, வலிய சூரனால் உண்டாகிய தேவர்களுடைய அச்சம் நீங்கியது என்ற செய்தி முன்கூறப்பட்டதே. உறுவர் - தவசிகள்.

138. ஆயினும், அந்த வரலாற்றினை விளக்கமாகக் கூறியருளுக என வேண்டினர். பொய்ம்மை நீங்கிய நைமிசமுனிவர்கள் வேண்டுகோளைக்கேட்டு சிவபெருமானை மனத்திலே நன்கு தியானித்துச்சூதமுனிவர் சொல்லுவாராயினர். பொக்கம் - பொய். கொக்கிறகு - ஒருபூ; கொக்கினது இறகு எனினுமாம்.

பதின்மூன்ருவது

அபயப்படலம்

முக்க ணக்கனை மும்மத வேழத்தின்
தொக்க ணிந்த சுருதித் தலைவனை
மிக்கு வேற்றுமை செய்துவிண் ணேரொடுந்
தக்க யாகஞ் சமைத்தனன் தக்கனே. 1

மாறு பட்டமை நோக்கிய வள்ளலார்
ஏறு பட்ட வெறுழ்வலி வீரனல்
ஊறு பட்டொழி வெய்தவிண் ணேர்மகம்
நீறு பட்டற நிக்கிர கஞ்செய்தார். 2

பகைஞு ஞேடுடன் பட்டதோர் பாதக
மிகைத ணிந்தது வீரன் சவட்டலால்
தகைகொண் டெஞ்சிய பாதகத் தின்பயன்
நுகர்வித் தேநொடிப் பானுளத் தெண்ணினர். 3

---

1. மூன்று கண்களையுடையவரும், யானைத்தோலையணிந்த வேதநாயகரு மாகிய சிவபெருமானை அவமதித்து, தேவர்களுடன் ஒருபெரிய வேள்வியைத் தக்கன் செய்யத் தொடங்கினன்.

முக்கண் நக்கன் - சிவபெருமான். வேழத்தின் தொக்கு - யானைத்தோல். வேற்றுமை செய்து - மதியாமல்: என்றது அப்பிரானுக்கு அவிகொடாமல்.

2. தம்மை வேறுபடுத்தி மனம் மாறுபட்ட தக்கன் மகம் வீரபத்திரக் கடவுளால் இடையிலே நிறைவேருது நீறுபட்டழியச் சிவபெருமான் கோபித்து அருளினர்.

எறுழ்வலி - மிக்கவலிமை. நிக்கிரகம் - தண்டனை.

3. வீரபத்திரக்கடவுள் வேள்விச்சாலையில் புகுந்து மிதித்துத் துகைத்து அழித்தலால், பகைவனுகிய தக்கனுடன் சேர்ந்த பாதகத்தின் மிகுதி தணிந்தது ஆயினும், எஞ்சிய சிவத்துரோகத்தின் பயன் ஊட்டியே அழிக்குமாறு திருவுளங் கொண்டார்.

சவட்டல் - மிதித்து அழித்தல். எஞ்சிய - மீதமான. நொடிப்பான் - அழிக்கும் பொருட்டு.

மாயை பாங்கர் மறுவறு காசிபன்
நேய மாகி நிறையழி காதலில்
தோய மூவரைத் தோற்றினர் சூரனே
சீய மாமுகன் றாரகச் செம்மலே. 4

மோக மாமல மூன்றுமொத் தன்னவர்
பாக சாதன னெஞ்சம் பதைப்புற
யாக மாங்க விசாரத் தியற்றினர்
ஏக நாத னிடைவரம் வாங்கினர். 5

எண்மர் வன்மை யிளக்கினர் மாலயன்
திண்மை முற்றுஞ் சிதைத்தன ரிந்திரன்
கண்ம லர்த்தலை வன்க ணுறுந்தொகை
உண்மை யண்ட மொராணை செலுத்தினர். 6

தான வர்க்குத் தகைமை பெருக்கினர்
வான வர்க்கு வருத்தந் திருத்தினர்
கான மல்கிய கற்பக நாடெலாம்
ஊன மல்க வொலிதழ லூட்டினர். 7

---

4. குற்றமற்ற காசிபமுனிவர் மாயைபால் அன்புசெய்து சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் என்னும் புதல்வர்களைத் தோற்றுவித்தார்.

நிறை - மனத்தைப் புலன்வழிச் செலுத்தாமல் அடக்குதல். சீயம் - சிங்கம்.

5. ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையொத்த அப்புதல்வர் மூவரும் இந்திரனுடைய நெஞ்சம் நடுங்க. ஆபிசாரயாகம் செய்து ஏகநாதராகிய சிவபெருமானிடம் வரங்களைப்பெற்றனர்.

பாகசாதனன் - இந்திரன். அவிசாரம் - தீயவேள்வி.

6. அட்டதிக்குப்பாலகர், திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் வலிமை முழுவதையும் சிதைத்தார்கள். இறைவன் தனக்குக் கொடுத்த அண்டங்கள் முழுவதும் ஆணை செலுத்தினர்.

7. அசுரர்களுக்குப் பெருமையை உண்டாக்கினர்; தேவர்களுக்கெல்லாம் வருத்தத்தை விளைத்தனர்; கற்பகநாடு முழுதும் பொடியாகத் தழலையூட்டினர்.

தழல் - நெருப்பு.

இன்ன வாறவ ரின்னல் விளைத்தலிற்
பன்ன கத்தின் பறைவிழத் தாக்கிய
மன்ன னுதியர் வைகிட மற்றனர்
கன்னி பாகன் கயிலையைச் சார்ந்தனர். 8

வெள்ளி யங்கிரி வித்தக வெங்களை
அள்ளி யுண்ணினல் லாற்கத மாறிலாத்
தொள்ளை யுள்ளத்துச் சூரனை யஞ்சினேம்
பொள்ளெ னப்புரட் டாயெனத் தாழ்ந்தனர். 9

கருடன் ருக்கிய கட்செவி போலவுந்
தருமன் ருக்கு நரகர் தகையவும்
வெருவு முள்ளத்த ராயவிண் ணோர்க்கெலாங்
கருணை நாதர் கடைக்கணித் தோதுவார். 10

தக்க னேடு மகத்திற் றருக்கிய
மிக்க பாவம் விளித்திலி ராதலால்
தொக்க செல்லற் றுளைந்தனி ரிவ்வெலாம்
பக்கு விட்டறப் பன்னுதுங் கேண்மினே. 11

---

8. இவ்வாறு சூரன் முதலியோர் துன்பம் விளைத்தலைப் பொறுக்காத இந்திரன் முதலிய தேவர்கள் இருக்க இடமில்லாதவராய் உமையொருகூறுடைய சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கயிலாயத்தை அடைந்தார்கள்.

இன்னல் - துன்பம். பல் நகத்தின் பறை - பல மலைகளின் சிறகுகள். தாக்கிய - வச்சிராயுதத்தால் எறிந்த. மன்னன் - இந்திரன்: "வேந்தன் மேய தீம்புன லுலகமும்"; வேந்து என்னும் பெயருண்மையின்.

9. வெள்ளிமலையில் வீற்றிருக்கும் பெருமானே! எங்களையெல்லாம் வாரி நுங்கினுலல்லாமல் சினந்தணியாத உள்ளத்தையுடைய சூரனுக்கு அஞ்சினேம். விரைந்து அவனை அழித்தருளுக என்று வணங்கினர்கள்.

கிரி - மலை. கதம் - கோபம். தொள்ளை உள்ளம் - புரைபட்ட மனம்.

10. கருடனல் தாக்கப்பெற்ற பாம்புகள்போலவும், இயமனல் தண்டிக்கப் பட்ட நரகலோகவாசிகள்போலவும் வெருவிய மனத்தையுடைய விண்ணோர்களுக் கெல்லாம் கருணையே வடிவமாயுள்ள சிவபெருமான் கடைக்கணித்து அருள் செய்வாராயினர்.

11. தக்கன் செய்த வேள்விக்குச் சென்றிருந்து செருக்குற்ற பாவம் மிக்க மையால் பொறுக்கமுடியாத துன்பத்தில் மூழ்கினீர்கள். அப்பாவம் முழுவதும் நீங்கும்பொருட்டுச் சொல்லுவோம் கேளுங்கள்.

மகம் - யாகம். செல்லல் - துன்பம். பக்குவிடுதல் - பிரிந்துகெடுதல்.

வேறு

மாயவனே நின்னுலும் மறையவனே நின்னுலு மலர்க்கண் மெய்யின்
மேயவனே நின்னுலும் விண்ணவரே நும்மாலும் விளியா வாற்றல்
ஆயவனை யெவராலு மடர்ப்பரிது நமதுவிழி யழலிற் ரேன்றுஞ்
சேயவனை யல்லாது தேவர்கா ளவன்வருநா ளளவு நீயிர். 12

விங்குபுக ழாதிபுரி யென்றெருவைப் புளததனில் விரவி வாழ்வார்க்
கேங்கலுறு மிடரில்லைப் பிணியில்லைப் பயமில்லை யிலம்பா டில்லை
தேங்கலுறும் புகழுண்டு வலியுண்டு நலமுண்டு தேசு முண்டு
தாங்கலுறும் பேரின்ப முளதாகுந் தயங்கியவத் தலத்தைச் சார்மின். 13

ஆவயிற்சென் றடுத்தலொடு மரியபா தகநும்மை யகல்வ தாகு
மாவலியி னவுணர்பிரான் றண்டமுநும் வயினினிமேன் மருவா சூட்டுச்
சேவல்வல முயர்த்தவனுஞ் சிறுவரையி னுமக்கிரங்கித் தெவ்வைச் சாடு
மேவலரை வலியழிக்கு மருதவரை யவணுளது வேக வென்ருர். 14

வேறு

வெள்ள நதியிற் பிள்ளை வெண்மதி
தொள்ள மென்ன நள்ளுந் தூமுடி
வள்ளல் விள்ள மருத மால்வரை
கொள்ளு மொள்ளல் கூறு கென்றனர். 15

---

12. திருமாலே! பிரமனே! இந்திரனே! தேவர்களே! உங்கள் யாவராலும் அழிக்க முடியாத ஆற்றல்பெற்றுள்ள சூரபன்மனை எவராலும் கொல்லுதலரிது. நம்முடைய கண்ணிலிருந்து தோன்றும் நெருப்பிலே தோன்றும் முருகவேளை யன்றி அக்காரியம் முடியாது. அதனல் தேவர்களே! அவன் வருங்காலம் வரையில் நீங்கள்.

13. மிகுபுகழையுடைய ஆதிபுரி என்ஞேர் இடமுளது. அங்கே சென்று வாழ்வோருக்குத் துன்பமில்லை; நோயுமில்லை; வறுமையுமில்லை; அச்சமும் இல்லையாம். மிக்க புகழ், வலிமை, நலங்களுண்டு. ஒளியுண்டு; பேரின்பமும் உளதாம். ஆதலின் அத்தலத்தைச் சேருங்கள்.

14. நீங்கள் அங்கே சென்றிருப்பின் இப்பெரும் பாவம் உம்மை விட்டகலும். மிக்க வலியுடைய சூரனது தண்டனையும் இனி உம்மை வந்தடையா. சேவலங்கொடியுயர்த்த முருகவேள் விரைவின்வந்து உமக்கிரங்கிப் பகைவனை அழிப்பான். பகைவரை வலிகெடச்செய்யும் மருதமலையும் அங்குள்ளது. செல்லுங்கள் என விடை கொடுத்தருளினர். மா வலி - மிக்க பலம். சூட்டு - உச்சிக் கொண்டை.

15. மிக்க கங்காநதியிலே பிறைச்சந்திரன் தெப்பம் (மரக்கலம்) என்று சொல்லும்படி நடுவிலுள்ள தூயமுடியினையுடைய சிவபெருமான் திருவாய் மலர்ந்

சிறகர் வண்டு சென்று வீழ்கலா
நறவ மாலை நாறுந் தோளினுர்க்
குறவி னுள்ள மோகை கொள்ளமெய்
அறவன் மேன்மை யறைத லுற்றனன். 16

முருக னென்னு மொய்கொண் மொய்ம்பினுன்
உருகு மன்பர்க் குதவி செய்யவே
பெருகு காமர்ப் பிறங்க லாயினுன்
அருகின் வேலு மருத மாயதே. 17

மருத வண்டு மலர்ப்பொ தும்பரின்
மருதம் பாட வாய்ந்த வேள்வரை
மருத நின்ற மறுவில் காட்சியான்
மருத வோங்க லென்ன மன்னுமே. 18

கால வங்கிக் கடவுள் வேணியிற்
சால வைகுந் தண்பு னனதி
ஞாலம் விண்டு நண்ணும் வேர்வழி
மூலம் வந்து முன்னு கின்றதே. 19

தருள, மருதமலையைச் சென்றடையும்படியுள்ள மேன்மையைக் கூறியருளுக என்ருர்கள்.

பிள்ளை - குழவி. தொள்ளம் - மரக்கலம், தெப்பம். நள் - நடு. ஒள்ளல் - மேன்மை.

16. வண்டுகள் சென்று விரும்பாத கற்பகப்பூ மாலையை யணிந்த தேவர்கட்கு அன்போடு மனமகிழ்வுறத் தருமமே வடிவான சிவபெருமான் கட்டளையிட்டருளுவாராயினர். தேவர்கள் சூடும் மாலையில் வண்டுகள் மொய்யா என்பர். வீழ்தல் -விரும்புதல். நறவம் - தேன். உறவு - அன்பு.

17. முருகவேள் மனமுருகும் மெய்யடியார்கட்கு அருள் செய்யும் பொருட்டு மிக்க அழகிய மலைவடிவமாகவுள்ளார். வேற்படையும் மருதமரமாயிற்று. மொய்-வலிமை. மொய்ம்பு - தோள். காமர்-விருப்பம், அழகு. பிறங்கல்-மலை.

18. மருதநிலத்து வண்டுகள் மலர்ச்சோலைகளில் மருதப்பண்ணைப்பாடும்படிபொருந்தும் முருகவேளாகிய மலையில், மருதமரம் நின்ற குற்றமற்ற காட்சியால் மருதமலை என்ன நிலைபெற்று விளங்கும். மருதம் - மருதநிலம். பொதும்பர் - சோலை. மருதம் - மருதப்பண். வேள்வரை - வேளாகியமலை; பண்புத்தொகை. ஓங்கல் - மலை.

19. காலாக்கினியுருத்திரக்கடவுள் சடையிற்பொருந்தும் குளிர்ந்த கங்காநதி, பூமிபிளந்துள்ள வேரின் வழியாக வந்து பொருந்தும். காலஅங்கி - காலாக்கினி. வேணி - சடை. ஞாலம் - பூமி.

வேறு

அத்தகு தீர்த்த வரவினைக் கேட்டோ ரணிவளர் நம்முல குறுவர்
அத்தகு தீர்த்தங் கண்ணுறக் கண்டோ ரழகிய நமதரு கிருப்பர்
அத்தகு தீர்த்தம் படிந்தவர் நந்த மழிவிலாத் திருவுரு வெடுப்பர்
அத்தகு தீர்த்தம் பருகினோர் நந்த மடியிணை நீழல்விட் டகலார். 20

மண்ணைகோட் பட்டோர் மண்ணையி னகல்வர்
மகவிலார் மகவினைப் பெறுவர்
கண்ணொளி யிகந்தார் கண்ணொளி படைப்பர்
கவினிலார் கவினுருத் திகழ்வர்
பெண்ணல மிழந்தார் பெண்ணல முறுவர்
பிணியினர் பிணியில ராவர்
எண்ணிய வரங்கள் எண்ணியாங் கியைவ
ரெனைவரு மனையதீர்த் தத்தால். 21

சுசியிலா ததனைத் தொட்டிடின் வறக்குஞ் சுசிசெயிற் பண்டுபோற் சுரக்குங்
கசிவுறு முள்ளத் தடியவர்க் கெம்பாற் கலப்புறக் கரையழிந் தெழுந்த
வசிபெறு மன்பி னுருப்பவிர் வேனில் வைகிய பொழுதும்வற் றுத
நொசிவறு தீர்த்த மதுதனை மருத தீர்த்தமென் றகிலமு நொடிக்கும். 22

---

20. அப்படிப்பட்ட தீர்த்த வரலாற்றினைக் கேட்டவர்கள் நம்முடைய சாலோக பதவியைப் பெறுவர். அதனைத்தரிசித்தோர் நமது சமீபத்திலிருப்பர். அத்தீர்த்தத்தில் முழுகினோர் நம்முடைய சாரூபம் பெறுவர். அதனை உண்டோர் நமது திருவடிகளை விட்டகலார்.

21. பேய் பிசாசுகளால் கொள்ளப்பட்டவர் அவைகளினின்று விடுபடுவர். பிள்ளையில்லாதோர் பிள்ளைகளைப் பெறுவர். கண்பார்வை நீங்கினோர் பார்வையைப் பெறுவர். அழகில்லாதோரும் அழகினையடைவர். பெண்களாலுண்டாகும் நலமில்லாதவர் அந்நலார் நலம் பெறுவர். பிணிப்பட்டோர் பிணியினீங்குவர். எண்ணிய வரங்களையெல்லாம் எண்ணியபடியே பெறுவர்.

மண்ணை - பிசாசு. இகந்தார் - நீங்கினோர்.

22. தூய்மையில்லாதார் அத்தீர்த்தத்தைத் தொட்டால் வறண்டுபோம். தூய்மை செய்யின் முன்புபோலப் பெருகும். கசிந்த மனத்து அடியார் எம்பால் கலத்தலை வேண்டிக்கொள்ளும் அளவுகடந்த அன்பினைப்போல, வேனில்மிக்க காலத்தும் வற்றாத வருத்தமில்லாத அதனை மருததீர்த்தம் என்று உலகம் சொல்லும்.

சுசி - தூய்மை. வசிபெறும் அன்பின் - நிலைத்த அன்பைப்போல; இன் ஐந்தாவது ஒப்புப்பொருள். உருப்பு - வெப்பம். நொசிவு - வருத்தம், நுண்மை. நொடிக்கும் - சொல்லும்.

ஆங்கத னயலே கன்னிகை தீர்த்த மதனய லேகந்த தீர்த்தம்
ஈங்கிவை மூன்றுந் தென்புறச் சார லிருப்பன வடபுறச் சாரல்
ஓங்கிய வனும தீர்த்தமொன் றுளதா லுமைமக னிருக்கையின் மேல்பால்
தாங்கிய வுச்சி வரையிடை யுள து சரவணப் பொய்கையென் றென்று. 23

அருச்சுன தீர்த்தம் போலவே யுரைத்த தீர்த்தமு மறமுத னுன்கும்
வருத்தமொன் றின்றி யளிப்பன வாகும் வைகலு மவ்வரைச் சாரல்
உருத்திகழ் காம தேனுவுற் றுலாவி யுறுபசி யிரிதர மேய்ந்து
மருத்திகழ் தீர்த்தம் பருகிநீள் சோலை மலர்நிழ லயர்வுயிர்ப் பதுவே. 24

உம்பர்கா ளந்த வரையினைக் கண்டோ ருவப்புறக் கேட்டவர் பணிந்தோர்
வம்புலாங் கடப்பந் தாரினு னுங்கு வதிதரு முருவழி படுவோர்
செம்பொனு திகளாற் றிருப்பணி பிறவுஞ் செய்பவ ரிவரெலாஞ் செயிர்தீர்ந்
திம்பரி னெதிரில் செல்வரா யும்ப ரின்பெலாங் கைக்கொள்வ ரெளிதின். 25

உத்தம மாகி யொளிருநம் முகங்க ளோரைந்து முமைமுக மொன்றும்
வித்தக மின்றி யவன்முக மாருய் விளங்கின வாதலா னமிர்
சத்தியுஞ் சிவமு மெனநினைந் தயில்வேற் சண்முகன் சரணமே சரணு
அத்தகு வரையி னருந்தவம் புரிமி னவனருள் வழங்குவ னென்றுன். 26

---

23. அத்தீர்த்தத்தின் அயலாகக் கன்னிகை தீர்த்தமும், அதன் அயலில் உள்ள கந்த தீர்த்தமும் ஆகிய இம்மூன்றும் தெற்குச்சாரலில் உள்ளன. வடபுறச் சாரலில் அனும தீர்த்தம் உள்ளது. முருகவேள் இருக்கையின் மேல்புறத்து உச்சி மலையில் சரவணப்பொய்கை உள்ளதாம்.

24. இத்தீர்த்தத்தைப் போலவே சொன்னதீர்த்தங்களும் அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய உறுதிப்பொருள் நான்கினையும் எளிதிற்கொடுப்பன. நாடோறும் இம்மலைச்சாரலைக் காமதேனு வந்தடைந்து மேய்ந்து இத்தீர்த்தத் தைக் குடித்துச் சோலை நிழலில் இளைப்பாறும்.

இரிதர - கெட்டோட. மரு - வாசனை. அயர்வுயிர்த்தல் - இளைப்பாறல்.

25. தேவர்களே! அம்மலையைக் கண்டவரும், கேட்டோரும், வணங் கினோரும், முருகவேளின் வடிவத்தை வழிபடுவோரும், திருப்பணி செய்வோரும் இவ்வுலகத்தில் ஒப்பில்லாத செல்வராவார். அவ்வுலகத்தில் இன்பமெல்லாம் எளிதில் பெறுவர்.

உம்பர் - தேவர். வம்பு - வாசனை. கடப்பந்தார்-கடப்பமலர்மாலை. செயிர் - குற்றம். இம்பர் - இவ்வுலகம். உம்பர் - மேலுலகம்.

26. நம்முடைய ஐந்து திருமுகங்களுடன், உமாதேவியின் முகமொன்றும் கூடி ஆறுமுகங்களாயின அம்முருகவேளுக்கு என்று அறிவீர். ஆகலின், சத்தியும் சிவமுமே சண்முகக்கடவுள் எனக்கொண்டு அவன் திருவடிகளை அடைக்கலம்

வேறு

அண்ண லாரருள் செய்தலும்
எண்ண முற்றிய தின்றென
விண்ணு ளார்கள் வியந்தனர்
மண்ணி னேக வலித்தனர். 27

விமல னர்விடை பெற்றனர்
கமல வாவி கலந்ததோர்
அமல னாதி புரத்தினைச்
சமல நோயறச் சார்ந்தனர். 28

காஞ்சி மாநதி கண்டனர்
வாஞ்சை யோடும் வணங்கினர்
பாஞ்ச சன்னிய பாணிய
னஞ்சு ராதிப னாதியோர். 29

பரந்த தோயம் படிந்தனர்
சுரந்த காத லுளும்பமெய்
நிரந்த ரித்தனர் நீற்றணி
அரந்தை தீர்கட னாற்றினர். 30

புகுந்து அம்மலையிலே அருந்தவம் புரிவீராக. அப்பெருமான் உங்களுக்கெல்லாம் அருள் செய்வான்.

ஐந்து முகங்கள்:- ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோ சாதம் என்பன.

27. சிவபெருமான் அருள் செய்தபின் நமது எண்ணம் இன்று நிறைவேறியது என்று தேவர் வியந்தனர். நிலவுலகத்துக்குச்செல்ல உறுதிகொண்டனர்.

28. சிவபெருமானிடம் விடைபெற்று, மலநோய் கெடுமாறு ஆதிபுரத்தை விண்ணோர் அடைந்தனர்.

அமலம் - மலமின்மை. சமலம் - மலத்தோடு கூடியிருத்தல்.

29. காஞ்சிநதியைத் திருமால் முதலிய தேவர் யாவரும் கண்டு மகிழ்வுடன் வணங்கினார்கள்.

பாஞ்சசன்னியம் - திருமால் கரத்திலுள்ள சங்கு. பாணி - கை. சுராதிபன் - தேவேந்திரன்.

30. தீர்த்தத்தில் முழுகினர். பெருவிருப்புடன் விபூதியை உடம்பு முழுவதும் பூசினர். துன்பங்கெடும்படி நாட்கடன்களை முடித்தனர்.

தோயம் - நீர். நிரந்தரித்தல் - நிறைதல். அரந்தை - துன்பம்.

கோயி லேக்குறு குற்றனர்
வாயின் முன்னர் வணங்கினர்
தாயி னுந்தயை யுய்த்தருள்
நாய னூரெதிர் நண்ணினர். 31

அமிழ்த லிங்கத்தி னுதியை
அமிழ்த ரானவ ரன்புகொண்
டமிழ்த மெல்லிசை யாற்றுதித்
தமிழ்த வின்னரு ளார்ந்தனர். 32

சூர னச்சந் தொலைத்தனர்
வார மன்றும் வணங்கினர்
சாரல் வெள்ளிச் சயிலமேல்
நார வேணியை நண்ணினர். 33

கண்டு கண்கள் கலுழ்ந்தனர்
தண்டெ னத்தரை வீழ்ந்தனர்
கொண்ட வன்பிற் குனித்தனர்
அண்ட காவென் றரற்றினர். 34

---

31. கோயிலை அணுகித் திருவாயிலின் முன் வணங்கினர். பெற்ற தாயினும் அன்பைச் செலுத்தும் சிவபெருமானுடைய சந்நிதியை அடைந்தார்கள்.

தாயினும் தயையுடையான்: "தாயிற் சிறந்த தயாவான தத்துவனே".

32. அமிழ்தலிங்க வடிவான இறைவரைத்தேவர்கள் அன்புடன் வணங்கினர். அமுதம் போன்ற இன்னிசை பாடித் துதித்தனர். அமுதமாகிய அருளை நுகர்ந்தனர்.

அமிழ்தர் - தேவர்.

33. சூரபன்மனுடைய அச்சம் தீர்ந்தனர். அன்புடன் வெள்ளிசபையையும் தொழுதனர். வெள்ளிமலையில் வீற்றிருக்கும் சிவபெருமானை அடைந்தார்கள்.

வாரம் - அன்பு. சயிலம் - மலை. நாரவேணி - கங்காசலம் பொருந்திய சடையையுடைய சிவபெருமான். நாரம் - நீர். வேணி - சடை. மன்று - வெள்ளி அம்பலம்.

34. தரிசித்துக் கண்களில் நீரொழுகப் பெற்றனர். தண்டம் போலத் தரையில் வீழ்ந்து வணங்கினர். அன்புமேலிட ஆடினர்கள். தேவதேவரே! பாது காத்தருள்க என்று ஓலமிட்டனர்.

நல்ல காஞ்சி நதிக்கரை
எல்லை முற்று மிருக்கைகொண்
டொல்லி லிங்க முறத்தழீஇ
வல்ல பூசை வயக்குவார். 35

வேறு

நாரண னொருபாற் பூசை நடத்தின னளின மேய
ஆரண னொருபாற் பூசை யமைத்தன னவிரும் வெள்ளை
வாரண னொருபாற் பூசை வளர்த்தனன் மல்கு வானோர்
சாரண ரொருபாற் பூசை சமைத்தனர் தழைத்த வன்பால். 36

விஞ்சையர் கருடர் வீணை வித்தகர் யோகர் சித்தர்
அஞ்சையு மடக்கு மாண்மை யருந்தவ முனிவர் யாரு
நெஞ்சிடை யுறுதி யன்பி னிறையொடு வேறு வேறு
தஞ்செய லடங்க விசன் றனிச்செயற் பூசை செய்தார். 37

அயன்வரை யுமையா ளோங்க லவிரொளி வெள்ளி வெற்புப்
புயனிகர் மேனிச் செல்வன் பொருப்புயர் மருதக் குன்றென்
றியலுமைந் தடுக்கன் மாட்டு மிரும்புனற் றீர்த்தந் தோறும்
வயமரு ளிறைவ னூர்த மலரடி பூசித் தாரால். 38

---

35. சிறந்த காஞ்சிநதியின் கரைமுழுவதும் தங்கி, சிவலிங்க மூர்த்தியை நன்றாகத் தழுவி, சிறந்த பூசைசெய்யத் தொடங்கினார்கள்.

36. விஷ்ணுமூர்த்தி ஒருபக்கத்தும், பிரமதேவர் ஒருபுறத்தும், தேவேந்திரன் ஒருபக்கத்திலும், ஏனைத் தேவர்கள் ஒருபாலுமாக இருந்து பேரன்புடன் பூசை செய்தனர்.

நளினம் - தாமரை. ஆரணன் - வேதன். வெள்ளைவாரணன் - ஐராவத யானையையுடைய இந்திரன். வாரணம் - யானை.

37. வித்தியாதரர், கருடர், காந்தருவர், யோகியர், சித்தர்கள், புலனைந்தையும் பொறிவழிச் செலுத்தாத தவமுனிவர்கள் எல்லோரும் மனவுறுதியுடன் கூடிய அன்பினால் வேறுவேறாக இருந்து சிவச்செயலின்றிச் சிவச்செயலேயாகப் பூசைசெய்தார்கள்.

அஞ்சையும் அடக்கும்......முனிவர் : ''வென்றுளே புலன்களைந்தார்''.

38. சிவமயமாகிய வெள்ளியங்கிரி, பிரமகிரி, விஷ்ணுகிரி, உமாதேவிகிரி, மருதகிரி ஆகிய ஐந்து மலைகளிலுமுள்ள தீர்த்தங்களில் முழுகினார்கள். அம்மலைகளைத் தரிசித்தார்கள். சிவபெருமான் திருவடிகளைப் பூசித்தார்கள்.

துவன்றியன் னவர்க ளன்பிற் றெழுஞ்சிவக் குறியு ளொன்றிற்
பவன்றனை நினைந்து போற்றும் பண்பினர் பகையுந் தேயுங்
கவன்றவுட் பயமுந் தீருங் கதியவர்க் கொல்லை யெய்தும்
புவன்றன தடியி னீழற் பொருவில்வாழ்க் கையுமுண் டாமால். 39

விண்ணவர்க் கபய நல்கி விமலனு ரச்சந் தீர்த்த
வண்ணமீ தறிமி னென்று மாதவர்க் கியம்பிச் சூதன்
பண்ணவர்க் கிரங்கிச் சூரைப் பறந்தலைப் படுத்து மாட்டுந்
திண்ணிய மணிவே லண்ணல் செயலினைத் தொருக்க லுற்றான். 40

அபயப் படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 923

அயன் - பிரமன். ஓங்கல் - மலை. புயல் - மேகம். அடுக்கல் - மலை. வயம் - வெற்றி.

39. அவர்கள் அன்பினாலே பூசித்த சிவலிங்கங்களுள் ஒன்றிலே சிவபெருமானை நினைந்து போற்றுவோர்களின் பகை ஒழியும். மனத்தில் கவலையுடன் அச்சம் தீரும். வீட்டின்பம் அவர்கட்கு விரைந்து சித்திக்கும். சிவபெருமான் திருவடி நீழல் வாழ்க்கையும் உண்டாகும்.

40. தேவர்களுக்கு அபயந்தந்து சிவபெருமான் அவர்களுடைய பயத்தைப் போக்கியருளிய வண்ணம் இதுவாகும். அறிவீராக என்று சூதமுனிவர் நைமிசாரணிய வாசிகளுக்குச் சொல்லித் தேவர்களுக்கு இரங்கிச் சூரபன்மனைப் போர்க்களத்தில் அழித்த முருகவேளுடைய செயல்களைத் தொகுத்துக் கூறுவாராயினர்.

விமலனார் - மலரகிதராகிய சிவபெருமான். மாதவர் - நைமிசாரணிய முனிவர்கள். பறந்தலை - போர்க்களம்.

பதினைன்காவது

மருதவரைப்படலம்

கருது வார்க்குக் களிதர வல்லது
பொருது வார்க்குப் புயவலி யீவது
சுருதி நீண்முடி போல்வது தூய்மையின்
மருத வோங்கல் வளத்திற் பெரியதே. 1

காம னுக்குநற் கட்டழ குய்ப்பது
நாம கட்கும் கலைநவில் விப்பது
பூம கட்குஞ்செல் வம்புணர் விப்பது
போர்ம கட்கும்வன் போர்த்திறஞ் சேர்ப்பது. 2

எண்ணு வார்த மிடர்க டவிர்ப்பது
கண்ணிற் கண்டோர் கருத்தி னிருப்பது
விண்ணங் குத்தி மிளிர்ந்த முடியது
பண்ணை வண்டு பயில்பொழி லுள்ளது. 3

---

1. மருதமலையானது வளமிக்கது; சிந்திப்பவர்கட்கு மகிழ்ச்சியை ஊட்ட வல்லது; போர்வீரர்களுக்குத் தோள்வலியைக் கொடுப்பது; வேதசிகைகள் போல உயர்ந்தது; தூய்மையை உடையது.

பொருதுவார் - போர் செய்வோர். சுருதி - வேதம்.

2. இன்னும் அம்மருதமலை காமவேளுக்கு நல்ல அழகைத்தருவது; சரசுவதிதேவிக்கும் கல்வியைப் பெருக்குவது; திருமகளுக்கும் செல்வ வளத்தைச் சேர்ப்பிப்பது; போரைச்செய்யும் கொற்றவைக்கும் போர்வன்மையைத் தருவதாம்.

காமன்-மன்மதன். கட்டழகு-பேரழகு. போர்மகள்-துர்க்கை, கொற்றவை.

3. நினைப்பவர்களுடைய துன்பங்களை நீக்குவது; அம்மலையைத் தரிசித்தோருடைய கருத்தில் நிலைபெறுவது; ஆகாயத்தை அளாவி யுயர்ந்த சிகரத்தையுடையது; கூட்டமாகிய வண்டுகள் மொய்க்கும் சோலைகளையுடையது.

இடர் - துன்பம். கருத்து - எண்ணம். முடி - சிகரம். பண்ணை - கூட்டம்.

கால காலனுங் காமுற நிற்பது
கோல மானவன் கும்பிடப் பட்டது
ஞால மீன்றவ னுறத் தக்கது
வேல னேயுரு வான வியப்பது. 4

பத்தர் கோமுனி பட்டி முனிவனு
நித்த நித்த நிரந்தரித் துள்ளது
சித்தர் வானவர் திப்பிய மாதவர்
சுத்த யோகியர் சூழ்ந்த பரப்பது. 5

எண்மைத் தாய தொழில்சற் றியற்றினும்
வண்மைத் தாக வரும்பய னுய்ப்பது
திண்மைத் தாகிய தீமை பெருக்கினும்
நுண்மைத் தாக நுவலுமுன் மாய்ப்பது. 6

வாழை மென்கனி மந்திய யின்றுபோய்த்
தாழை தாவச் சடசட வீழ்கனி
கூழை வன்குரக் குக்குலங் கொண்டுகற்
பூழை யூடு புகுதுமோர் பாலெலாம். 7

---

4. காலனுக்குக் காலனுகவுள்ள சிவபெருமானும் விரும்புதற்குரியது. பன்றிவடிவங்கொண்ட திருமாலும் வழிபடப்பட்டது. படைப்புக் கடவுளாகிய பிரமனும் வெட்கும்படியுள்ளது. முருகக்கடவுளே வடிவாக விளங்கும் அதிசய முள்ளது.

கோலம் - பன்றி. ஞாலம் - பூமி, உலகம். வேலன் - வேற்படையையுடைய முருகக்கடவுள்.

5. மெய்யன்பர்களாகிய பட்டிமுனிவரும் கோமுனிவரும் நிலைபெற வசிப்பது. சித்தர்களும், தேவர்களும், தெய்வ இருடிகளும், தூயசிவயோகிகளும் சூழ்ந்து விளங்கும் விசாலத்தை யுடையதாம்.

6. எளிமையாகவுள்ள நற்செயல்களைச் சிறிது செய்யினும் அவை பெரும் பயனைத் தருவதாகவுள்ளது. வலிய பெரிய தீமைகளைச் செய்தாலும் அத்தீமைகள் யாவும் மருதமலை என்று சொல்வதன் முன் மிகப்பொடியாக அழிவனவாம்.

எண்மை-எளிமை. சற்று-சிறிது. வண்மை-வள்ளற்றன்மை, கொடைக் குணம். நுவலல் - சொல்லுதல்.

7. மென்மையான வாழைக்கனிகளை மந்திகள் தின்றுபோய்த் தென்னை மரங்களில்பாய சட சட என்னும் ஒலியுடன் கீழேவிழும் தெங்கம்பழங்களைச் சிறிய வலிய குரங்குக் கூட்டங்கள் எடுத்துச் சென்று ஒருபுறத்து மலைக்குகையிலே புகுவனவாம்.

கன்னி காரங் கருந்துணர்ப் பாடலம்
வன்னி கொன்றைமந் தாரங் குராமராப்
புன்னை பிண்டி பொரியரைக் கூவிளம்
மன்னு நந்த வனங்களோர் பாலெலாம். 8

மயிலை மாலதி மல்லிகை பித்திகை
அயின்மு கைத்தள வங்குள விக்குலம்
பயிலு மாதவி பம்பிய சூழலின்
இயலும் வண்டி னிசையொரு பாலெலாம். 9

நரந்த மென்கனி நாவலந் தீங்கனி
கரந்து மண்ணுட் கனிபல வின்கனி
நிரந்த முந்திரி கைக்கனி நித்தலுஞ்
சுரந்து வாசஞ் சுலாவுமோர் பாலெலாம். 10

மந்தி - பெண்குரங்கு. தாழை - தெங்கு. கூழை - குட்டையான. கற்பூழை - மலைக்குகை. பால் - பக்கம்.

8. கோங்கு, பாதிரி, வன்னி, கொன்றை, மந்தாரம், குரா, மரா, புன்னை, அசோகு, வில்வம் முதலிய மரங்கள் நிலைபெற்ற நந்தவனங்கள் ஓர் பக்கத்தில் உள்ளன.

கன்னிகாரம் - கோங்கு. பாடலம் - பாதிரி. துணர் - பூங்கொத்து. பிண்டி- அசோகு. கூவிளம் - வில்வம். பொரியரை - பொருக்குக்களையுடைய அடிமரம்: சருச்சரை, பொரியரை, பொகுட்டரை, கோழரை, முள்ளரைகளையுடைய மரங் களில் வில்வம் பொரியரையுடையது.

9. இருவாட்சி (வெட்சி), சண்பகம், மல்லிகை, சிறுசண்பகம், கூரிய மொட்டுக்களையுடைய முல்லை, காட்டுமல்லிகை (மலைப்பச்சை), குருக்கத்தி முதலியகொடிகள் நிறைந்தபரப்பிலே ஒருபக்கம் வண்டுகளின் இசைப்பாட்டுக்கள் உள்ளன.

மயிலை - இருவாட்சி; வெட்சி. மாலதி - சண்பகம். பித்திகை - சிறுசண்பகம். அயில்முகை - கூரிய மொட்டு. தளவம் - முல்லை. குளவி - காட்டுமல்லிகை. "பறவாக்குளவி" என்பர். சூழல் - சுற்றுப்புறம்.

முன்பாடலில் கோட்டுப்பூ வகைகளும், இப்பாடலில் கொடிப்பூ வகைகளும் கூறப்பட்டன.

10. நாரத்தை, நாவல், ஈரப்பலா, முந்திரிகை முதலிய கனிவகைகளெல் லாம் ஒரு பக்கத்திலே நாடோறும் பெருகி மணம் கமழ்ந்து சூழ்வனவாம்.

நரந்தம் - நாரத்தை. கரந்து - ஒளித்திருந்து. மண்ணுட்கனியும் பலா என்றது ஈரப்பலாவை: அது வேர்ப்பலாவாகும். "படிக்கு ளீரப் பலாப்பழுத் தொண்புவி, வெடித்த வாயின்" (பிரபுலிங்கலீலை). நிரந்த - நிறைந்த, பரவிய.

ஏல மேயில வங்கங்கச் சோலந்தக்
கோல மாஞ்சியுங் குங்கும முங்கடி
கால நின்ற கருப்புர வாழையும்
ஞாலம் வெளவநன் ருகுமோர் பாலெலாம். 11

நாக நீண்முழை நாகங்கண் டச்சுற
நாக தாளியி னன்கனி பாம்பெனத்
தோகை மஞ்ஞை தொடர்ந்துமுன் கொத்திநின்
றூக மோட வுலேக்குமோர் பாலெலாம். 12

சரோரு கங்களு நீலமுந் தங்கிய
பரோடை நீரொடு மட்டை பருகுதோல்
உரோம நீண்மரத் தொண்குழை வாய்மடுத்
தரோக மெய்திய திர்க்குமோர் பாலெலாம். 13

கனேயெ ருமைம ரங்கள் கனேத்தலுங்
கனேயெ ருமையெ னக்கதழ் வேங்கையங்
கனேநல் லார்மனு வாற்கட்டப் பட்டன
கனேம லர்ப்பொழில் காட்டுமோர் பாலெலாம். 14

---

11. ஏலம், இலவங்கம், ஏலப்பட்டை, வால்மிளகு, சடாமாஞ்சி, குங்குமப் பூ, வாசனை வீசும் கருப்பூரவாழை முதலிய வாசனைப் பொருள்களெல்லாம் உலகத்தை விழுங்கும்படி அம்மருதமலேயின் ஒரு பக்கத்திலே நிறைந்துள்ளன.

கச்சோலம் - ஏலப்பட்டை. தக்கோலம் - வால்மிளகு. மாஞ்சி - சடாமாஞ்சி. கடி - வாசனை. கால - வெளிப்பட. ஞாலம் - உலகம்.

12. மலேயினது நீண்ட குகைகளிலேயுள்ள பாம்புகள் கண்டு பயப்படும் படி நாகதாளியின் கனியைப் பாம்பு என்று கருதி மயில்கள் தொடர்ந்து போய்க் கொத்தி நின்று கருங்குரங்குகள் ஓடும்படி ஒரு பக்கத்திலே உலாவுவன.

நாகம் - மலே. முழை - குகை. நாகம் - பாம்பு. ஊகம் - கருங்குரங்கு. உலேக்கும் - வருத்தும்.

13. தாமரை மலர்களும், நீலோற்பலமலர்களும் பொருந்திய சுனை நீரையும், மட்டையையும் உண்ணும் யானைகள் தழைகளையும் உண்டு நோயின்றி ஒரு பக்கத் திலே பிளிறுவன.

சரோருகம் - தாமரை. பரோடை - சுனை. மட்டை - பனை, தென்னை, வாழை, கமுகுகளின் மட்டை. தோல் - யானை. அரோகம் - நோயின்மை. அதிர்க்கும் - பிளிறும்.

14. ஒலிக்கின்ற எருமை மரங்கள் ஒலித்தவுடன் எருமை (காரா) களின் ஒலியென நினைத்து கோபிக்கும் வேங்கைகள் தெய்வப்பெண்களின்

காய வாழ்க்கையர் காய மிவையல
மாய மென்கொலிவ் வன்மரம் வைகலுஞ்
சாயை யில்லெனச் சார்ந்த வரையுறச்
சாயை யில்லாத் தருக்களோர் பாலெலாம். 15

விடபத் தேறிநின் றார்க்கு விழாக்களுங்
கடக வேழமுங் காமரு தேர்களுந்
தொடர்பி னேனவுந் தோற்றி விடுத்திடி
னடலை யாக்குநற் றருவோர் பாலெலாம். 16

சருகு காய்கனி வௌவத் தனதுழை
விரவு வாரை விளாரிற் றணிந்தடித்
தரவிற் சீறிநல் லாவி மடித்திடு
முரனி லாவும ரமொரு பாலெலாம். 17

மந்திரங்களால் கட்டப்பட்டனவாய் மிக்க மலர்ச்சோலைகளை அம்மலையின் ஒரு பக்கம் காட்டும்.

கனைத்தல் - ஒலித்தல். கதழ் - கோபிக்கும். எருமை - காரான். மனு - மந்திரம்.

15. விண்ணோர்கள் ஆகாயம் இவையன்று இது மாயம் எவன்கொல்? அகக்காழுள்ளமரங்கள் நாடோறும் நிழலில்லை எனச்சார்ந்தோர் ஐயப்படும்படி நிழல் கொடாத மரங்கள் ஒருபால் உள்ளன.

காயம் - ஆகாயம் வன்மரம் - அகக்காழுள்ளமரம். சாயை - நிழல். ஐயுற - சந்தேகப்படும்படி.

16. மரக்கிளைகளில் ஏறிநின்று ஆரவாரிக்கும் விழாக்களும் கிம்புரிகள் கட்டப்பெற்ற யானைகளும் அழகிய தேர்களும் தொடர்புடைய மற்றவைகளையும் தோற்றுவித்து மறைக்கின் பொய்யாக்கும் நல்ல மரங்கள் ஒருபக்கத்தில் உள்ளன.

விடபம் - மரக்கிளை; இடபக்கொடி எனினுமாம். கடகவேழம்: கடகம் - முறிதந்தப்பூண். வேழம் - யானை. நடலை - பொய், வஞ்சனை.

17. உலர்ந்த இலைகளையும் காய்கனிகளையும் பறித்தற்குத் தன்பால் வருகின்றாரை வளாரினால் வளைத்து அடித்து, பாம்புபோலச் சீறி உயிரைப்போக்கும் வலிமையமைந்த மரங்கள் ஒருபால் உள்ளன.

சருகு - உலர்ந்தஇலை. தனதுழை - தன்னிடத்து. உரன் நிலாவும் - வலிமை பொருந்திய.

சுவானக் குட்டிக டொக்க வெனப்புக்க
கவான்வ ரைத்தலைக் கண்ட புலிப்பறழ்
சுவானக் குட்டியிற் காய்பல தோற்றிய
சுவானக் குட்டிம ரமொரு பாலெலாம். 18

வழுத்தும் வேடம காரின மானுடம்
பழுத்து நிற்பன பார்த்துக் கிலுத்தத்தைக்
குழுக்கொண் டாடநும் பிள்ளையுங் கூட்டுகென்
றெழுக்கத் தோடுமி ரப்பொரு பாலெலாம். 19

தங்கு லத்துறுந் தையல ராமென
வெங்கு லக்கொடு வில்லினர் பேதையர்
மங்குல் சூழ்வரை யின்மகண் மாவைக்கண்
டிங்கு வம்மின்க ளென்பதோர் பாலெல்லாம். 20

கருட வேகத்திற் காடு சுலாவுநர்
இருடி யாமென்றி றைஞ்சி விடுத்தெழப்
புருட வன்மிரு கம்புழை வைகிய
வருடை யாடும்வ ரையொரு பாலெலாம். 21

---

18. நாய்க்குட்டிகள் தொகுதியாகவுள்ளன என்று புகுந்த மலைப்பக்கத்திலே கண்ட புலிக்குட்டிகளுக்கு நாய்க்குட்டிகள் போலக் காய்களைத் தோற்றுவிக்கும் நாய்க்குட்டிமரங்கள் ஒரு பக்கத்துள்ளன.

சுவானம் - நாய். புலிப்பறழ் - புலிக்குட்டி. சுவானக்குட்டியின்: இன் ஐந்தனுருபு ஒப்புப்பொருளில் வந்தது.

19. துதிக்கும் வேடர்குழந்தைகளின் கூட்டம் மனித உடம்பு முதிர்ந்து நிற்றலைக்கண்டு மணிக்கட்டுகளைக் கூடிநின்று விளையாட்டுச் செய்வதற்கு உம்முடைய பிள்ளைகளையும் கூட்டிவருக என்று இரந்து சொல்லுதல் ஒரு பக்கத்தில் உள்ளன.

மானுடம் பழுத்து நிற்பன - கிழப்பருவத்தோடு நிற்கும் பெண்டிரையும் ஆடவரையும் பார்த்து. கிலுத்தம் - மணிக்கட்டு: சிறு பிள்ளைகள் கையோடு கையை விரித்து மணிக்கட்டுகளைக் காட்டி விளையாடுதல் மரபு.

20. தம்முடைய குலப்பெண்கள் என நினைந்து வேடர்குலச்சிறுமிகள் மேகங்கள் சூழ்ந்த மலையிலுள்ள அலிகளைக்கண்டு இங்கு வருக என்று அழைத்தல் ஒருபக்கத்தில் உள்ளது. மங்குல் - மேகம். மகண்மா - அலி.

21. கருடன் செல்லும் வேகத்தைப்போன்று காடு முழுதும் சுற்றுகின்றவர் இருடிகள் என்று வணங்கி விடுத்துப் புருஷாமிருகம் செல்ல, குகைகளில் தங்கிய மலையாடுகளும் அம்மலையின் ஒருபால் உள்ளன.

வேறு

இவ்வாறு பெருவளங்கொண் டேழோ டேழா
மவ்வாய்மை யுலகனைத்து மணைந்து போற்றுஞ்
செவ்வாய்மை மருதவரைத் தேத்துத் தேவர்
ஓவ்வாத பகைமாய்ப்ப வுன்னிச் சார்ந்தார். 22

மாலாதி வானவர்தம் வரவு கேளா
ஆலால மனையவினை யகற்றி யங்கு
வேலானை நினைந்திருக்கும் வீணைச் செல்வன்
காலார நடந்தெதிர்போய்க் கண்டு தாழ்ந்தான். 23

வருகவரு கெனநெடுமால் வணங்கி னானை
இருகரமு முறத்தழுவி யெடுப்பி யன்பான்
முருகனருட் குரியையென முகமன் கூறி
ஒருவவிது கேட்டியென வுரைக்க லுற்றான். 24

ஆயிரங்கண் ணானைவிண்ணி னகற்றி யன்னான்
சேயிரங்கச் சிறைப்படுத்த தீயோ னச்ச
மாயிருந்தண் போதிவனம் வந்து மென்பூத்
தூயிரந்து பரனருளாற் றொலைத்தா மிப்பால். 25

சுலாவுநர் - சுற்றுகின்றவர். இருடி - முனிவர். புழை - குகை. வருடைஆடு-மலையாடு, குறும்பாடு.

22. இவ்வாறு மிகுந்த வளப்பத்தையுடைத்தாய்ப் பதினான்கு உலகமும் நெருங்கி வணங்கும் பெருமையினையுடைய மருதமலையினிடத்துத் தேவர்கள் பகைவரை அழிக்க எண்ணிச் சார்ந்தனர். தேத்து - இடத்து.

23. திருமால் முதலிய தேவர்களுடைய வரவைக்கேட்டு நஞ்சையொத்த வினைகளையெல்லாம் போக்கி அவ்விடத்து வேற்படைக் கடவுளைத் தியானித்து இருக்கும் மகதி என்னும் வீணையையுடைய நாரதமுனிவர் கால்களினாலே நடந்து சென்று எதிரே வணங்கினார்.

ஆலாலம் - ஆலகால விடம். வீணைச்செல்வன் - நாரதமுனிவர்.

24. வருக வருக என்று வணங்கிய நாரதமுனிவரைத் திருமால் இரு கரங்களாலும் தழுவிக்கொண்டு அன்பினால் முருகக்கடவுளின் திருவருளுக்குப் பாத்திரமுடையாய் நீ என்று உபசார வார்த்தைகளைச் சொல்லி, ஒப்பற்ற முனிவனே! இதனைக் கேட்பாய் என்று சொல்லுவாராயினர். வணங்கினானை-வினையாலணையும் பெயர். எடுப்பி - எடுத்து. முகமன் - உபசாரவார்த்தை.

25. இந்திரனை விண்ணுலகத்தினின்று போக்கிவிட்டு, அவன் மகனாகிய சயந்தன் அழுதுபுலம்பச் சிறையிலகப்படுத்திய தீயசூரனிடத்துள்ள அச்சத்தை

அழியாத வரம்படைத்த வவுணர் கோனை
வழியோடுங் கெடுத்தெமக்கு வாழ்க்கை நல்க
ஒழியாத வடிமையொரு முருகற் காற்றக்
கழிகாத லொடுமிங்குக் கடிது புக்காம். 26

மாழாந்த வெமக்கிரங்கி மணிவே னம்பி
தாழாது வினைமுடிக்கத் தக்க வாய்மை
சூழாவொன் றுரைத்தியெனச் சொன்னான் சொன்ன
ஏழாழி யுலகுண்டோற் கிருடி கூறும். 27

வேறு

சிவதருமம் பலவவற்றுட் சிறந்ததுபூ சனையதனுள்
அவமில்பல வுபசாரத் தைந்துசிறந் தனவவற்றைத்
தவமலியப் பதினாறு மண்டலநந்தண் டாதியற்றிற்
கவலையறப் பயனிம்மைப் பிறப்பிடையே கைகூடும். 28

இந்த அரசவனத்திலே வந்து பரனை அருச்சித்து அவனருளால் நீங்கினோம். பின்பு,

ஆயிரங்கண்ணன் - இந்திரன். சேய் - புத்திரனாகிய சயந்தன்.

26. அழியாத வரத்தைப்பெற்றுள்ள சூரபன்மனை எச்சத்தோடும் அழித்து எங்களுடைய வாழ்க்கையைக் கொடுத்தருளும்படி ஒப்பற்ற முருகவேளுக்கு மீளா ஆளாய்ப் பணிசெய்ய மிக்க விருப்புடன் விரைந்து இங்குவந்தடைந்தோம்.

அவுணர்கோன் - சூரபன்பன். வழி - எச்சம், புதல்வர். கழி காதல் - மிகுந்த விருப்பம்.

27. மயங்கிய எங்களுக்கு இரங்கி வேற்கரத்தையுடைய குமரக்கடவுள் விரைந்து போர்செய்து அப்பகையை முடிக்கத்தக்க செயலை ஆராய்ந்து கூறியருளுக என்று உலகத்தைத் தமது திருவயிற்றிலடக்கிய திருமால் சொல்ல அவருக்கு நாரதமுனிவர் கூறத்தொடங்கினர்.

மாழாந்த - மயங்கிய. வினை - போர்த்தொழில். சூழா - ஆராய்ந்து.

28. சிவதருமங்கள் பல உள்ளன. அவற்றுட் சிறந்தது சிவபூசை. பூசனைக்குரிய உபசாரங்களில் ஐந்து சிறந்தன. அவ்வுபசாரங்களை நீங்காமல் பதினாறுமண்டலம் நன்கு செய்துவரின் கவலைகளெல்லாம் நீங்கும்படி இப் பிறவியிலேயே பயன் கைகூடுவதாம்.

தவம் மலிய - தவம் நிறையும்படி. தவமலிய - மிகுதியாக. ஒருமண்டலம் - நாற்பத்தெட்டு நாட்கள் கொண்டது.

ஆங்கவைதா மபிடேக மரியவிரை விளக்குமனுத்
தாங்குமருச் சனைநிவே தனமாகு மிவைதம்மை
ஓங்கும்வகை யியற்றுவது முரைப்பக்கேண் மந்தரத்தின்
வீங்குதிரைக் கடல்கலக்கி விண்ணவர்க்குச் சுதையளித்தோய். 29

பருதிகுணக் கெழுமுன்னர்ப் பன்னிரண்டு புதுச்சாலின்
மருவுபுதுப் புனறுகிலான் வடித்தெடுத்து மணல்பரப்பி
இருவிநிறை தொறுமேல முதலான திரவியங்கள்
பெருகுவிரை மலரோடு பெய்துமனு வாலமைத்து. 30

அரம்பைநெடுங் கனிதிருத்தி யாயிரத்துக் காறுபடி
சுரந்தமடிப் பசுவின்பால் சொரிந்துசெழுந் தேனறுநெய்
பரந்தசுவை யக்கார மிவ்விரண்டு படியட்டி
வரந்தழைபஞ் சாமிரத மணிக்கலத்தி னினிதமைத்து. 31

பாங்கான பால்செந்தேன் பன்னியமூ வகையிள நீர்
ஆங்கான வைந்தமிழ்த மருவிரைச்சந் தனக்குழம்பும்
ஓங்காரத் துட்பொருளா மொருமுருக னுருவாட்டி
நீங்காமை யிடையிடையே நிறைநீர்சங் கினிலாட்டல். 32

---

29. அவ்வைந்து உபசாரங்களாவன:- அபிடேகம், தூபம், தீபம், மந்திரங்களால் அருச்சித்தல், நிவேதனம் என்பன. இவைகளை உயர்ந்தபடி செய்வதும் சொல்வோம் கேள்; மந்தரமலையால் திருப்பாற்கடலைக் கடைந்து தேவர்களுக்கு அமுதளித்தருளியவரே!

விரை - தூபம். மனு - மந்திரம். சுதை - அமுதம்.

30. சூரியன் உதிப்பதற்கு முன்பு பன்னிரண்டு புதிய சால்களில் புதிய நீரை வடிகட்டி எடுத்து, மணலைப்பரப்பி அதிலே வைத்து, ஏலம் முதலிய திரவியங்களை மணம் நிறைந்த மலர்களோடு நீரிலேபோட்டு மந்திரங்களைக் கொண்டு செபித்து.

பருதி-சூரியன். துகில்-மெல்லிய ஆடை. இருவி-இருத்தி. மனு-மந்திரம்.

31. வாழைப்பழத்தைத் திருத்தி, ஆயிரத்துக்கு ஆறுபடி வீதம் பசுவின் பால் சொரிந்து, தேன், நெய், வெல்லம் இரண்டு இரண்டுபடி வீதம் பெய்து சிறந்த பஞ்சாமிருதத்தைப் பாத்திரத்தில் எடுத்தமைத்து

அரம்பை - வாழை. அக்காரம் - வெல்லக்கட்டி. மணிக்கலம் - இரத்தின மிழைத்த பாத்திரம்.

32. சிறந்த பசும்பால், தேன், மூன்றுவகைப்பட்ட இளநீர், பஞ்சாமிருதம், மணம் நிறைந்த சந்தனக்குழம்பு இவைகளைப் பிரணவப்பொருளாகவுள்ள முருக வேளுக்கு அபிடேகம் செய்து, இடையிடையே நீங்காமல் நிறைந்த நீரைச் சங்கினால் எடுத்து அபிடேகித்து. சங்கு - வலம்புரிச் சங்கு, இடம்புரிச்சங்குகள்.

இளநீரை யொருகலத்து மேலாமைத் தனித்தனியே
அளவார வெடுத்தாட்டி னதிகபல னுறுமைந்தும்
உளதான வபிடேகத் துயர்ந்தனவாம் விரையிரண்டாந்
தளராத விலேபனமுந் தயங்குசுகந் தமுமென்ன. 33

காசில்பனி நீர்பச்சைக் கருப்பூரங் குங்குமப்பூ
மாசிலுரோ சனைபுழுகு மான்மதநா வியுங்கலந்த
வாசிகந்த மலாக்காச்சந் தனமிலே பனமதனைத்
தேசவிருந் திருமேனி முழுதுஞ்செறி தரக்கொட்டல். 34

முல்லையிரு வாட்சிபிச்சி முகைநெகிழ்மல் லிகைபன்னீர்
நல்லமருக் கொழுந்துவெட்டி வேரிவைநற் சுகந்தங்கள்
சொல்லுமிவை யோரேழுந் தொடுத்துருவந் தெரியாமை
வல்லபடி யலங்கரித்தன் மணங்கமழப் புறமெல்லாம். 35

ஒருபடிநெய் கொளத்தகழி யுறவுயர மும்பர்பிரான்
திருவிழியி னளவுமுறத் திகழுமிர சதத்தியற்றிக்
குருமலியம் மணிவிளக்கங் கிருபாலுங் கொளவிருவிக்
கருதுகபி லையதிலதேற் காராவி னெய்நிரப்பி. 36

---

33. இளநீரை ஒரு பாத்திரத்திலும் ஏலாமல் தனித்தனியே எடுத்து அபிடேகித்தால் அதிக பலனுண்டு. ஐந்துமுள்ளதாகிய அபிடேகத்திலே உயர்ந்த வாசனை இரண்டுவகையாம். அவை இலேபனமும் சுகந்தமுமாம்.

கலம் - பாத்திரம். விரை - வாசனை. இலேபனம் - மேற்பூச்சு.

34. குற்றமற்ற பனிநீர், பச்சைக்கருப்பூரம், குங்குமப்பூ, கோரோசனை, புழுகு, கத்தூரி, சவ்வாது முதலியன கலந்த கலவையுள்ள மலாக்காச்சந்தனம் இலேபனமாம். அதனை ஒளிபொருந்திய திருமேனி முழுவதும் பொருந்தக் கொட்டுதலாம்.

காசு - குற்றம். உரோசனை - கோரோசனை. மான்மதம் - கத்தூரி. நாவி - சவ்வாது. இதனை அட்டகந்த மென்பர்.

35. முல்லை, இருவாட்சி, பிச்சி, மல்லிகை, பன்னீர், மருக்கொழுந்து, வெட்டிவேர் இவை சுகந்தங்கள். மேலேகூறிய இந்த ஏழையும் தொடுத்துத் திருமேனி தெரியாமல் முழுவதும் சாத்தி அலங்கரித்தல் வேண்டும்.

36. ஒருபடி நெய் கொள்ளும்படியுள்ள தகழியுடையதாய், தேவநாயகன் திருக்கண்கள் வரை உயரமுடையதாய் வெள்ளியினலியன்ற விளக்குகள் இரண்டு பக்கங்களிலும் வைத்து, கபிலை நெய்யினலாவது அதுஇல்லையாயின் காரான் நெய்யினலாவது தகழியை நிறைத்து.

செம்பருத்தி வெண்பஞ்சிற் பசுங்கருப்பூ ரஞ்செறித்துப்
பம்புவிரற் பருமையுறப் பண்ணுதிரி நுதிக்கொளுத்தும்
வெம்புமெரிக் கொழுந்தெழுந்து பன்னிரண்டு விரலளவை
வம்பிலதா யிருபகலும் வயங்குவதாம் விளக்கன்றே. 37

செய்யதா மரைநூலிற் றிரிகோடல் சிறப்பினதாம்
ஐயபசுங் கருப்பூர மகப்படா தொழிவுற்றே
கையமரு மாலத்திக் கருப்பூரந் திரிக்காகும்
நெய்யுரைத்த திலதாயி னேர்ந்தபசு நெய்யுமாம். 38

வெள்ளியினுன் மணிவிளக்கு விதிப்பரிதேல் விளக்கமுற
வொள்ளியவெண் கலத்தானு முஞற்றுதலாம் பலவிளக்குத்
தெள்ளுமுறை யுறுவிக்குந் திறனிலதே லொன்றேனும்
வள்ளலவன் திருமுன்னர் வயக்குவது மரபாமால். 39

சேயிதழ்ப்பங் கயங்கொண்டு சேவல்வல முயர்த்தபிரான்
ஆயிரநா மமுநவின்றங் கருச்சிக்க வருச்சனையி
தேயுமல ரிலதாயி னிலகியவெண் டுளசியொடு
தூயபசுங் கூவிளங்கள் தொகுத்தடியிற் றூவுதலாம். 40

---

37. செம்பருத்தியினின்று எடுத்த வெள்ளியபஞ்சில் பச்சைக் கருப்பூரம் விராவிக்கலந்த விரல் பருமனுள்ளதிரியிட்டுக் கொளுத்தும்நெருப்பின் கொழுந்து பன்னிரண்டு விரல்கள் உயரமுடையதாக இரவும் பகலும் விளங்குவதே தீபமாம்.

38. செந்தாமரை நூலால் திரிபோடுவது சிறப்பானது. பச்சைக்கருப்பூரம் கிடையாவிடின் ஆலத்திக் கருப்பூரம் திரிக்கு ஆகும். முற்கூறிய காரானெய் கிடையாதொழியின் கிடைத்த பசுநெய்யுமாம்.

ஐய - அழகிய.

39. வெள்ளியினால் அழகிய விளக்கை வைத்தல் இயலாதாயின் வெண்கலத்தானும் செய்யலாம். பல விளக்குகள் வைத்தல் கூடாதாயின் ஒரு விளக்கேனும் பொருத்தி வைத்தல் கடனும்.

40. சேவற்கொடியை வலமுயர்த்த செவ்வேள் திருநாமம் ஆயிரமும் சொல்லி, சிவந்த தாமரை மலரால் அருச்சிக்க. செந்தாமரையிலதாயின் விளங்கும் வெண்துளசியோடு பசிய வில்வமும் கொண்டு திருவடியில் அருச்சிக்க.

ஆயிரநாமம் - சகஸ்திரநாமம்:'பேராயிரம்பரவி வானோரேத்தும் பெம்மான், (தேவா)'. கூவிளம் - வில்வம்.

பால்புரையு மரிசியொரு படிக்குப்பால் படிமூன்று
சால்பசுநெய் படிகால்சர்க் கரைகழஞ்செண் பதிற்றிரட்டி
ஏலமொடு சுக்கிடித்த விடிவீசம் படியிரதங்
காலுமுய ரிளந்தெங்கின் கனியொன்று முறப்பெய்து. 41

பாகமுறச் சமைந்ததற்பின் பசுங்கதலிக் கனிபதினைந்
தோகையொடுந் தோலொருவி யொருங்குபடுத் தினிதெடுத்த
மாகர்விழை பரமானம் வயங்கவருச் சித்தவுடன்
ஏகனுக்கு நிவேதிக்க விதுநிவே தனமாமால். 42

வளமார விவையைந்தும் வருடமிரண் டுறவாற்றற்
குளதாகும் பொருளில்லா ருருப்பவிரும் பின்பனியே
இளவேனின் முதிர்வேனி லெனும்பருவ மூன்றினிலும்
அளவாரச் செயினுரைத்த வவதியுமாற் றினராவார். 43

முப்பருவத் தினுமவற்றை முற்றுவிக்குந் திறனிலரேற்
செப்பியவா றுள்ளகத்துச் செய்தொருசா ரினிதுவதிந்
தொப்பரியான் மனுவயுத மொருநாளைக் குறக்கணிக்கின்
எப்பொருளு மவர்க்கெய்து மிடர்முழுதும் விரைந்தறுமே. 44

---

41. பாலை யொத்த வெள்ளிய அரிசி ஒருபடிக்கு மூன்றுபடி பாலும், காற்படி பசுநெய்யும், சர்க்கரை நூற்றறுபது கழஞ்சும், ஏலம் சுக்கு இவற்றின் பொடி வீசம்படியும் ஒரு இளந்தேங்காய்த் துருவலும் சேர்த்து.

இடி - தூள். இரதம் காலும் - சுவைமிக்க.

42. பாகம் பொருந்தச் சமைத்த பின் பச்சை வாழைப்பழம் பதினைந்தை உரித்துப்போட்டு இனிமையாக எடுத்தபரமான்னத்தை அருச்சித்தவுடன் முருகக் கடவுளுக்கு நிவேதனம் செய்க; இதுவே நிவேதனமாம்.

பாகம் - பக்குவம். கதலி - வாழை. மாகர் - தேவர். ஏகன் - ஒப்பற்ற பரம்பொருள்.

43. வளப்பம் நிறைய இவை ஐந்தும் வருடத்துக்கு இரண்டுமுறை, பொருளில்லாதோரும் பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் மூன்று பருவங்களிலும் செய்வாராயின் பகைத்துன்பங்களையும் மாற்றுவார்.

இவை ஐந்தும் என்றது அபிடேகம், தூபம், தீபம், மந்திரார்ச்சனை, நிவேதனம் முதலியவற்றையாம். 30ஆம் பாடல் முதல் 12 பாடல்களால் இவை கூறப்பட்டன.

44. பின்பனி இளவேனில் முதுவேனில் ஆகிய மூன்று பருவங்களிலும் செய்யும் திறனிலராயின் கூறிய விதிப்படி மனத்தால் கற்பித்துக்கொண்டு ஓரிடத்தில் உட்கார்ந்து ஒப்பற்ற முருகவேள் மந்திரததைப் பதினாயிரம் உரு வீதம் ஒரு

எனமகதி யாழ்முனிவ னியம்புதலு முலகுண்டோன்
மனமகிழ்ந்து கமலன்மக வானிமையோர் புடைசூழ
அனகனுயர் வரையேறி யருச்சுனமூ லத்தினெழும்
பனிவிரவு நறுந்தீர்த்தம் படிந்தாடிக் கடன்முடித்தான். 45

புரந்தரனை நான்முகனைப் புலவர்குழாத் தினைநோக்கி
அரந்தைநமக் கறவேண்டி னருந்தவன்சொற் படிநீயிர்
பரந்தபொருள் கொணர்ந்தேவற் பணிபுரிகென் றுனன்னுர்
கரந்தமகிழ் வினராகித் தொழிறலைநின் றனர்புரிய. 46

ஆராத பெருங்காத லகந்திளைப்ப மருதவரைச்
சீராரும் பெருமானைத் தேவர்கள்சிந் தாமணியை
வாராரு முலையுமையாள் மகிழ்தூங்குங் குலக்கொழுந்தைக்
காராரு நிறத்தினுன் கடப்பாட்டிற் பூசித்தான். 47

நாளுக்கு செபிப்பாராயின் எப்பொருளும் அவருக்கு எளிதிற் கைகூடும்; துன்பம் முழுவதும் விரைவில் நீங்கும்.

45. என்று நாரதமுனிவர் கூறத் திருமால் மகிழ்ந்து பிரமன் இந்திரன் முதலியோர் புடைசூழ முருகவேள் மலையிலேறி மருதினடியில் உள்ள குளிர்ந்த தீர்த்தத்தில் முழுகி நித்திய கடன்களை முடித்தார்.

மகதி - நாரதமுனிவருடைய யாழ். கமலன் - பிரமன். மகவான் - இந்திரன். அனகன் - பாவமில்லாதவர். அருச்சுனம் - மருதமரம்.

46. இந்திரனையும் பிரமதேவரையும் தேவர்குழுவையும் பார்த்து, திருமால் நமக்குத் துன்பம் தொலையவேண்டுமாயின் முனிவர் கூறியபடியே உரிய பொருள் களையெல்லாம் கொண்டுவந்து தொண்டுசெய்யுங்கள் என்று கூறினர். அவர்கள் மகிழ்ச்சி மிக்குடையராய்த் தாங்கள் பணிபுரியத் தொடங்கினர்.

புரந்தரன் - இந்திரன். புலவர் - தேவர். அரந்தை - துன்பம். அருந்தவன் - நாரதமுனிவர்.

47. அமையாத பேரன்பு மனத்திலே விளைய மருதவரையிலுள்ள சிறந்த முருகக்கடவுளைத் தேவர்கட்குச் சிந்தாமணி போன்று நல்கும் குமாரவேளை உமா தேவியாருடைய மகனுகிய கொழுந்துபோன்றவரை நீலநிறத்தையுடைய திருமால் நியதியாகப் பூசிக்கத் தொடங்கினர்.

ஆராத - அமையாத. மகிழ்தூங்கும் - மகிழ்ச்சிமிகும். கடப்பாடு - நியதி.

நாரதன்செப் பியமுறையே நாரணன்பூ சித்திருப்ப
வாரணமும் பல்லியமு மரகரவோ தையு மயங்கப்
போரணவும் வீரர்களும் பூதர்களும் புடைநெருங்கக்
கூரணவும் படைவேற்கைக் குமரவே ளெதிர்நின்றான். 48

வேறு

ஓராறு மணிமுடியு மோராறு திருமுகமு மொராறு வாயும்
ஈராறு மலர்விழியு மீராறு குழைச்செவியு மிராறு தோளும்
போராரும் படைபலவுந் தாராரும் வரைமார்பும் புலம்புந் தண்டைச்
சீராருஞ் சேவடியு மழகெறிப்ப நின்றானைத் திருமால் கண்டான். 49

வானவர்தங் குலமுழுது முய்ந்தனவென் குலமுழுதும் வாழ்ந்த தின்றே
தானவர்தங் குலமுழுதுஞ் சாய்ந்ததெனு மோகைநலே சிறப்ப வல்லே
தேனறுந்தண் மலர்தூவிச் சேவடியின் மணிமோலி தீட்டி யும்பர்
ஆனவர்கள் சிவசிவவென் றார்ப்பவலம் வந்துதுதி யாரச் செய்வான். 50

---

48. நாரதமுனிவர் கூறியபடியே விஷ்ணுமூர்த்தி பூசித்திருக்க, வேதமும் வாத்தியங்களும் அரகர ஒலியும் ஒருமித்து ஒலிசெய்ய, போர்வீரர்களாகிய நவ வீரரும் பூதகணங்களும் பக்கத்திலே சூழக் கூர்மைபொருந்திய வேற்படையை யுடைய குமாரக்கடவுள் எதிரிலே தோன்றிக் காட்சி அளித்தார்.

ஆரணம் - வேதம். மயங்க கலந்து ஒலிக்க. வீரர் - நவவீரர்கள்.

49. ஆறு திருமுடிகளும் ஆறு திருமுகங்களும் ஆறுவாய்களும் பன்னிரண்டு திருக்கண்களும் பன்னிரண்டு திருச்செவிகளும் பன்னிரண்டு தோள்களும் பல படைக்கலங்களும் கடப்பமலர் மாலையை அணிந்து விளங்கும் திருமார்பும் ஒலிக்கும் தண்டையணிந்த திருவடிகளும் அழகுவீசும்படி காட்சி யளித்தருளும் முருகவேளைத் திருமால் தரிசித்தார்.

பலபடை: பதினொரு உருத்திரர்களையும் படைக்கலங்களாகச் செய்து இறைவர் முருகவேளுக்கு அருளியன.

50. வானோர்குலம் வாழ்ந்தன, என்குல முழுதும் வாழ்ந்தது, இப்போதே அவுணர்குலம் அழிந்தது என்னும் ஒலி பெருகியது. தேவர்கள் மலரிட்டு வணங்கினர்; சிவ சிவ என்று ஆரவாரிக்க வலம்வந்து துதிக்கத் தொடங்கினர்.

தானவர் - அசுரர். ஓகை - உவகை. வல்லே - விரைவாக. மணிமோலி - இரத்தினகிரீடம். மணிமோலி தீட்டுதலாவது முடித்தழும்பு திருவடிகளிற் படும்படி வணங்குதல்.

வேறு

முரண்மணி யிமைக்கு மோலி முடிகெழு முருக போற்றி
மரணமும் பிறப்பு நீத்தோர் மதிவள ரமுத போற்றி
இரணவல் லவுண ராவி யிறுத்திடு மிறைவ போற்றி
அரணென வெம்மைக் காக்கு மறைகழ லறவ போற்றி. 51

இருள்கெட விளங்கி யேற்றோர்க் கின்னருள் வழங்கி முத்தி
மருவினர் கன்ம மோர்ந்து மறைமுடிப் பொருள்க ளெல்லாந்
திருகற விளக்கி யொன்னார்ச் செற்றுவண் குறவர் மாதோ
டருள்வளர் நகைகொண் டாடு மறுமுகத் தலைவ போற்றி. 52

வேறு

ஐயருக் கேந்தி யுக்கஞ்சேர்த் தூரு வமைத்தொளி ரங்குசங் கடாவி
வையிலை யெஃகும் வட்டமுந் திரித்து மார்பொடு மமைந்துதா ரோடு
தையுறப் பொலிந்து மீமிசைச் சுழன்று தடமணி யிரட்டிவான் பொழிந்து
தெய்வமங் கையர்க்கு வதுவைசூட் டயர்ந்து திகழும்பன் னிருகர போற்றி. 53

---

51. மாறுபட்ட இரத்தினங்கள் பதிக்கப்பட்டு ஒளிவீசும் திருமுடியையுடைய முருகக்கடவுளே! வணங்குகின்றேன். இறப்புப் பிறப்புக்களைத் தவிர்த்த சிவஞானிகள் அறிவிலே வளர்கின்ற அமுதமே! வணங்குகின்றேன். போரில் வல்ல அவுணர்கள் உயிரைப் போக்குகின்ற இறைவரே! வணங்குகின்றேன். கோட்டையைப்போல எங்களைப் பாதுகாக்கும் வீரக்கழலையுடையவரே! வணங்குகின்றேன்.

முரண் - மாறுபாடு; ஒன்றுக்கொன்று மாறுபட்ட ஒளியைவீசும் பலவகை இரத்தினங்கள். மதி - அறிவு. மதிவளர் அமுதம் என்றது நயம். இரணம் - போர். அரண் - கோட்டை, மதில், வேலி.

52. ஆணவ இருள் கெடும்படி ஞானவொளியாய் விளங்கி, யாசித்தோருக்கு இனிய கருணையைச் செய்து, முத்தியை விரும்பும் பக்குவர்களுடைய இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் முதலியவற்றையறிந்து, வேதாந்தத் தெளிவாம் சித்தாந்தப் பொருள்களை மாறுபாடின்றி விளக்கி, பகைவரையழித்து, வள்ளியம்மையாரோடு மகிழும்படியான ஆறுமுகக்கடவுளே! வணங்குகின்றேன்.

விளங்கி, வழங்கி, ஓர்ந்து, விளக்கி, செற்று, நகைகொண்டாடும் தலைவ எனக்கூட்டுக. ஆறுதிருமுகங்களின் செயல் கூறியபடி. திருமுருகாற்றுப்படை 91 முதல் 103 வரையுள்ள அடிகளைத் தழுவிக் கூறப்பட்டது இப்பாடல்.

53. எக்காலத்தும் ஆகாயத்தில் இயங்கும் முறைமையினையுடைய தெய்வ இருடிகளுக்குப் பாதுகாவலாகவும், மருங்கிலும், துடையின்மேலும் வைத்தும், தோட்டியைச்செலுத்தியும், வேலினையும் பரிசையையும் வலமாகச் சுழற்றியும், மார்பொடுவைத்தும், மாலையொடு பொருந்தியும், மேலே சுழன்று களவேள்விக்கு முத்திரை கொடுத்தும், மணியை மாறியொலிக்கப் பண்ணியும், மழையைப் பெய்

நிழல்சுளித் தெழுந்து குலாலன்சக் கரம்போ னேரலர் நெடுங்களத் தலமந்
தழல்விழித் துருமிற் பிளிறிமும் மதமு மருவியிற் சலசல பொழிந்து
சுழல்வளி யெழுப்பி முறச்செவி யசையத் துதிக்கையின் வளிநிலங் குழிப்பக்
கழலடிப் பொருந ருயிருணுங் களிற்றிற் காட்சிதந் தருள்பிரான் போற்றி. 54

முருகுகொப் பளிக்கு மடுக்கிதழ்ப் பொகுட்டு முளரியுங் குமுதமு மறியப்
பொருகய லுகளுஞ் சரவணப் பொய்கை பொலிவுற வினிதுவீற் றிருந்தங்
கருகுவந் தடுத்த மீன்முலை யருந்தி யாக்கையி னிளமையோ டியையத்
திருகுவன் கோட்டுத் தகரிவர்ந் தூருஞ் செல்வநின் றிருவடி போற்றி. 55

வித்தும், தெய்வமகளிர்க்கு மணமாலையைச் சூட்டியும் விளங்குகின்ற பன்னிரு திருக்கரங்களை யுடையவரே! வணங்குகின்றேன்.

இச்செய்யுளில் முருகவேளுடைய பன்னிரு கரங்களும் தொழில் செய்யும் முறை கூறப்பட்டது. திருமுருகு 107 முதல் 118 வரையிலுள்ள அடிகளைத் தழுவியிருத்தல் காண்க.

ஐயர் - தெய்வ இருடிகள். உக்கம் - மருங்கு. ஊரு - துடை. அங்குசம் - யானையோட்டும் தோட்டி, ஐ இலை எஃகு - அழகிய இலைத்தொழிலமைந்த வேல். வட்டம் - பரிசை, கேடகம். வான் - மேகம். வதுவை - கல்யாணம். சூட்டயர்ந்து - சூட்டுதலைச்செய்து.

54. நிழலைக் கோபித்தெழுந்து குயவன்சக்கரத்தைப்போல, பகைவருடைய பகைப்புலத்துச் சுழன்று தீப்பொறிச் சிந்த விழித்து இடிபோலப்பிளிறி அருவி போன்று மும்மதம்பொழிந்து சூறைக்காற்றை எழுப்பி முறம்போன்ற காதுகளை அசைத்துக்கொண்டு துதிக்கையின்காற்று நிலத்தைக் குழியாக்கக் காலால் பகைவரை மிதித்துக்கொல்லும் யானையின்மேல் வீற்றிருந்து காட்சியளிக்கும் எமது பிரானே! வணங்குகின்றேன்.

சுளித்து - கோபித்து. குலாலன் - குயவன். நேரலர் - பகைவர். அலமந்து - சுழன்று. உரும் - இடி. பொருநர் - போர்வீரர். தம்மை வழிபடுவாரிடத்து வருங்கால் யானைமேல்வந்து அருள்செய்தல் இயல்பு. பகைவெல்வோர் தியானிக்கவேண்டிய மூர்த்தியைக் கூறியது. இவர் கஜவாகனர்.

55. தேனையொழுகவிடும் ஆயிரம் இதழுடைய தாமரையும் அல்லியும் பொருந்த, கயல்மீன்கள் பிறழும் சரவணப்பொய்கையினிடத்து அழகாக வீற்றிருந்து, கார்த்திகைத் தையல் அறுவரின் முலைப்பாலுண்டு, மாறுத இளமைப் பருவத்துடன் கூடி, நாரதமுனிவர் வேட்ட வேள்வித்தீயிலே தோன்றிய ஆட்டுக்கிடாவில் ஏறிச் செலுத்தியருளுகின்ற செல்வமுடையவரே! உம்முடைய திருவடிகள் எம்மைப் பாதுகாக்கக்கடவன.

முருகு - தேன். பொகுட்டு - தாமரைப் பூங்கொட்டை. முளரி - தாமரை. உகளும் - பிறழும், தாவும். மீன் - கார்த்திகைநாள். திருகு - மாறுபட்ட. தகர் - ஆட்டுக்கிடா.

ஓமெனு மொழியி னுறுபொருள் வினவி யுள்ளவா றுரைத்திட வல்லா
நாமகள் கொழுநன் றனைச்சிறைப் படுத்து நறுமலர்க் கொடுங்கணைக் கழை
காமனை முனிந்த கண்ணுதற் பரமன் காமுறக் குருமொழி கொடுத்த [விற்
சேமமே மருத வரைவளர் ரமிழ்தே திருவருள் வழங்குக வென்றான். 56

வேறு

மதுவுயிர் குடித்தவன் வழுத்தி நிற்றலுங்
கதுமெனத் திருவுளங் கருணை கூர்தர
விதுவணி சடையவன் விழியிற் றோன்றிய
முதுமறை முடியினன் மொழிகின் றனரோ. 57

நமதுரு வாகிய நவிரத் திவ்வயின்
நமதுரு வுளத்திடை நாட்டி வானுளீர்
நமதடிப் பூசனை நன்றி யற்றினீர்
நமதருள் வழங்குது நாட்டம் யாதென்றான். 58

கடம்பணி புயத்தினன் கரையக் கேட்டனர்
இடம்படு வானவ ரெழுந்து துள்ளினர்
உடம்பிடித் தடக்கையி னொருவ னின்புறக்
குடம்படு கூத்தினன் குழைந்து கூறுவான். 59

---

56. பிரணவப்பொருளைக்கேட்டுச் சொல்லாமல் விழித்த பிரமதேவரைத் தலையிலே குட்டிச் சிறையிலடைத்தும், மன்மதனை எரித்த சிவபிரான் விரும்ப உபதேசத்தைக் கொடுத்தருளிய சேமப்பொருளே! மருதமலையில் வளர்கின்ற அமுதமே! கருணை செய்தருளுவீராக என்று தோத்திரம் செய்தார்.

ஓம் - பிரணவம். வல்லா - மாட்டாத. நாமகள் கொழுநனை இருந்தும் சொல்லமாட்டாதவனுயினன் என்றது நயம். கணை - அம்பு. கழைவில் - கருப்பு வில். காமன் - மன்மதன். கண்ணுதல் - நெற்றிக் கண்ணையுடைய. குருமொழி - உபதேசம். சேமம் - வைப்புநிதி.

57. மது என்னும் அசுரனையழித்த திருமால் இவ்வாறு துதித்துநின்ற அளவில் கருணைமிக்கு முருகவேள் சொல்வாராயினர்.

கதுமென - விரைந்து. விது - சந்திரன். முதுமறை முடியினன் - வேதாந்தப் பொருளாக விளங்குபவன். மறைமுடி - உபநிடதம்.

58. நமது வடிவாகவுள்ள இம்மலையில் நமது வடிவத்தை மனத்தில் வைத்துத் தியானித்துப்பூசித்தீர்கள். கருணை செய்வோம். உமது விருப்பம் யாது? என்றார். நவிரம் - மலை. வயின் – இடம். நாட்டம் - எண்ணம், விருப்பம்.

59. கடப்பமலர் மாலையை அணிந்த முருகவேள் வினவக்கேட்ட தேவர்கள் மகிழ்ந்து கூத்தாடினர். வேற்படை விமலராகிய செவ்வேள் இன்புறும்படி குடக்கூத்தாடிய திருமால் வணங்கி விண்ணப்பிப்பாராயினர்.

வேறு

பருதி வானவ னொளிகெட மூவிரு முகனும்பல் கதிர்வீசித்
திருவெ லாந்தர நிற்பது காண்டலிற் றிசைகளுன் கொடுமேல்கீழ்
மருவு மூவிரு வைப்பினுஞ் சூரனல் வதிதரு கொடுங்கோன்மை
இருளெ லாமிற்றை வைகலே யிற்றதென் றெண்ணின மிவணெந்தாய். 60

செம்மை யம்புயத் தேமலர் வென்றொளி திகழ்தரு முகந்தோறும்
விம்மு தண்கரு ணைக்கட லூற்றெழ விளங்குமிவ் விருநாட்டம்
அம்ம கண்ணுறக் காண்டலி னுரைத்தவா றிடத்தும்வா ழடியார்பால்
இம்மை யும்மையென் றிரண்டுமார்ந் தனவென வெண்ணின மிவணெந்
[தாய். 61

உருத்தி ரப்பெய ரண்ணலார் பதினொரு வருங்கொடி கணைகண்டை
வருத்து தோமரம் வச்சிர மங்குசம் வனசம்வாண் மழுத்தண்டம்
பருத்த வார்சிலை யாயருட் சத்தியே சத்தியாய்ப் பகர்நின்கை
இருத்தல் காண்டலி னிறந்தன பகையென வெண்ணின மிவணெந்தாய். 62

உடம்பிடி - வேல். குடம்படுகூத்து - குடக்கூத்து: காமன்மகன் அநிருத்தனைத்தன்மகள் உழைகாரணமாக வாணன் சிறைவைத்தலின் அவனுடைய சோ என்னும் நகரவீதியிற் சென்று நிலங்கடந்த நீனிறவண்ணன் குடங்கொண்டு ஆடியகூத்து. இதுவினோதக்கூத்து ஆறினுளொன்று என்பர். பஞ்சலோகங்களாலும் மண்ணாலும் குடங்கொண்டாடினது.

60. சூரியன் ஒளி கெடும்படி ஆறுதிருமுகங்களும் ஒளியைச்செய்து அழகு முழுவதும் விளங்கி நிற்றலைக் காணும்போது நான்கு திசைகளும் மேல் கீழ் உள்ள முழுதிடங்களினும் சூரனுடைய கொடுங்கோலாகிய இருள்முழுவதும் இற்றை நாளிலேயே அழிந்தொழிந்தது என நினைந்தோம்; எமது பரமபிதாவே!

வைப்பு - உலகம், இடம். வைகல் - நாள்.

61. தாமரையைவென்று விளங்கும் முகங்கள்தோறும் உண்டாகின்ற கருணைநாட்டத்தை நாங்கள் காணும்போது மேலே கூறிய ஆறிடத்தும் வாழ்கின்ற அடியார்களிடத்து இம்மை மறுமைப்பேறுகள் நிறைந்தன என்று எந்தையே! இங்கே எண்ணினேம்.

அம்புயம் - தாமரை. கருணையாகியகடல். கண்ணுறக் காண்டலின் - பிரத்தியட்சமாகப் பார்த்தலினல்.

62. பதினொரு உருத்திரர்களும் கொடி கணை கண்டை தோமரம் வச்சிரம் அங்குசம் வனசம் வாள் மழு தண்டம் சிலையாகவும், அருட்சத்தியே வேற்படையாகவும் சொல்லப்படுகின்ற தேவரீரது கரங்களிலிருத்தலைக் காணும்போது பகை அழிந்தது என நாங்கள் இங்கே எண்ணினேம் எமது பிதாவே!

கடிநி லாவிய வெட்சிமா லிகைமுடிக் கவினக்காண் டலின்வென்றிக்
கொடிநி லாவிய தானவர் கோட்டத்துக் குரங்கியல் லாந்தன்னே
மிடிநி லாவிய சயந்தனே முதலிய விண்ணவர் குழாமென்னும்
படிநி லாவிய பசுவுமீண் டனவெனப் படர்ந்தன மிவணெந்தாய். 63

என்று நாரண னியம்பலு முறுவலித் தெம்பிரா னெதிர்நோக்கி
ஒன்று மஞ்சலி ரிற்றைநா ளேபடை யொடுநடந் தொன்னுரைக்
கொன்று நும்பதி யருளுது மெனவிடை கொடுத்துவல் லெறுழ்ப்பூத
வென்றி யம்படை யெழுகென வியவரின் வியன்முர சறைவித்தான். 64

"விறு கேதனம்வச்சிர மங்குசம் விசிகம், மாறி லாதவே லபயமே வலமிடம் வரதம், ஏறு பங்கயமணிமழுத் தண்டுவில் லிசைந்த, ஆறி ரண்டுகை யறுமுகங் கொண்டுவே ளடைந்தான்" (கந்தபுராணம் - மகேந்திர-சயந்தன்கனவு: செ - 4) என்பதும் காண்க.

கணை - அம்பு. கண்டை - மணி. தோமரம் - இருப்புலக்கை, எறிவேல். வனசம் - தாமரை. சிலை - வில்.

63. மணம் பொருந்திய வெட்சிமாலையை முடியிலே அணிந்து விளங்குதலால், வெற்றிக்கொடி விளங்கும் அவுணர்கோயிலில் அறிவு சுழன்று, ஐயோ! செல்வமிழந்த சயந்தன் முதலிய தேவர் குழுவாகிய பசுக்கள் மீட்கப்பட்டன என்று எந்தையே! நாங்கள் இங்கே வந்தடைந்தோம்.

பசுக்களை மீட்டலும், அடித்துக்கோடலும் என இவ்விரண்டும் வெட்சித்திணை எனவேகொண்டார் ஆசிரியர். "வெட்சிதானே குறிஞ்சியது புறனே" என்பர். ஆகோடல் பாதுகாத்தற்பொருட்டு. பசுக் கவரச்செல்வோர் வெட்சி சூடுதல் மரபு.

கடி - வாசனை. மாலிகை - மாலை. குரங்கி - மதி; அறிவு என்னும் பொருளில் வந்த 'மதி' என்னும் சொல்லைச் சந்திரன் என்னும் பொருள்தரும் 'குரங்கி' என்னும் சொல்லாற் கூறினர். மதி - அறிவு, சந்திரன். அல்லாந்து - சுழன்று. மிடி - வறுமை. படி - பூமி.

64. என்று விஷ்ணுமூர்த்தி சொல்லிய காலத்தில் முருகக்கடவுள் மந்தகாசம் செய்து, நீவிர் அஞ்சற்க; இன்றே படையுடன் சென்று பகைவரைக் கொன்று உம்முடைய நாட்டை அருளுவோம் என விடைகொடுத்தார். விரைந்து பூதப்படைகள் போருக்கு ஆயத்தமாய்ப் புறப்படுக என வள்ளுவரைக்கொண்டு முரசறைவித்தார்.

முறுவலித்து - புன்சிரிப்புச்செய்து. ஒன்னர் - பகைவர். எறுழ் - வலி. வியவர் - முரசறைவோர்.

அமரர் தச்சனை யழைத்துவி ரர்கண்முத லாந்தலை வருக்கெல்லாஞ்
சமர வன்பெருந் தேர்களுங் கரிகளுந் தாவுமான் களுமாக்கித்
திமிர மன்னமெய் நிறத்தினர்க் கதிசயஞ் செய்வன கொடுவென்னுக்
குமர நாயக னருளினன் யவனனுங் குயிற்றின னவர்க்கீந்தான். 65

வீர வாகுவை விளித்தனன் வீரர்க ளிலக்கத்தெண் மருமண்ட
மார மாக்கினேன் முதலிய தலைவர் நூற் றெண்மரு மடுபோரிற்
கோர மேபுரி யிராயிர வெள்ளமாங் குழிவிழிக் கணந்தாமும்
யாரு நீவியங் கொளப்படு வாரென வீந்தன னதிகாரம். 66

வாழி முப்புரங் குறுநகை யாலெரி மடுத்தவன் சிறுமைந்தன்
வாழி வேலவ னடியவர் குழாமெலாம் வாழிவை யகம்வாழி
வாழி விண்ணவர் சூரன்மே னம்படை வகுப்பெலா மெழுகென்னு
வாழி வண்முர செருக்கினர் வியவரி னுணர்ந்திடு மியவோரே. 67

அலக்க ணித்தலும் வானவர்க் காற்றிய வவுணர்தம் படைமுற்றுங்
கலக்கத் தக்கசா ரதர்களுஞ் சாரதத் தலைவருங் கவினுர்ந்த
விலக்கத் தொன்பதின் மரும்பரி கரியெழி லிரதம்பா கர்கள்பண்ணி
நலக்கத் தந்தெதிர் தொழவவற் றிவர்ந்தனர் நாளொடு கோளஞ்ச. 68

---

65. தெய்வத்தச்சனை விளித்து வீரர்கள் முதலிய சேனைத்தலைவர்களுக்கெல்லாம் போருக்குரிய தேர் கரி பரிகளையெல்லாம் நிருமித்து அசுரர்பால் வெற்றி தருமாறும் அவர் வியக்குமாறும் தருக என்று குமரநாயகன் அருள் செய்தார். விசுவகர்மாவும் அவ்வாறே விரைந்துசெய்து அவர்களுக்குக் கொடுத்தான்.

அமரர் தச்சன் - தெய்வக்கம்மியன். சமரம் - போர். தாவும் மான் - வாம்பரி. திமிரம் அன்னமெய் நிறத்தினர் - கரியமேனியுடைய அவுணர்; திமிரம் - இருட்டு. அதிசயம் - வியப்பு, மிகுவெற்றி. குயிற்றினன் - செய்தான். யவனன் - கம்மியன்.

66. வீரவாகு தேவரை அழைத்து இலக்கத் தெண்மராகிய வீரர்களும், அண்டாபரணன் முதலிய நூற்றெட்டுப் பூதசேனாதிபதிகளும், போரில் வல்ல இரண்டாயிரம் வெள்ளம் பூதகணங்களும் உன்னுடைய தலைமையில் ஏவப்படுவார் என்று அதிகாரம் அளித்தருளினர்.

அண்டம் ஆரமாக்கினேன் - அண்டாபரணன். குழிவிழிக்கணம் - குழிந்த விழிகளையுடைய பூதகணங்கள். வியங்கொள - ஏவ.

67. திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளருளிய இளைய பிள்ளையார் வாழி. வேற்படைக்கடவுளது அடியார்களெல்லோரும் வாழி. உலகம் வாழி. தேவர்கள் வாழி. சூரன்மேல் நம்முடைய படைவகுப்புகளெல்லாம் போர் செய்ய எழுக என்று முரசறைவோரால் அறிந்த தேவர்கள் தாமும் முரசறைவித்தனர்.

எருக்கினர் - அறைவித்தார். வியவர் - முரசறைவோர். இயவோர் - கடவுளர்.

68. தேவர்களுக்கெல்லாம் துன்பம் விளைவித்த அவுணர் படை முழுவதையும் கலக்கத்தக்க பூத கணங்களும், பூத சேனாதிபதிகளும், இலக்கத்தொன்பது

முருக வேளுடன் வருகவென் றருளலு முகுந்தனு மலர்த்தேவும்
பெருக யாகநூ றியற்றிய வரையனும் பிறங்கிய சுரர்யாரும்
உருகு காதலிற் றெழுதெழு முனிவரு முவந்துத் தமக்கேற்ற
திருகி லாதநற் சிறப்பொடு தோன்றினர் சயசய சயவென்றார். 69

மிக்க சாரதப் படையிரா யிரவெள்ளம் விரர்விண் ணவர்யாருந்
தொக்கு மேவுறக் கொண்டுபல் லாயிர வண்டமுந் துனைந்தோட
முக்க ணாயகன் மனத்திடைத் தோற்றிய முழுமணிப் பொலந்தேரைத்
தக்க மாருத வலவன்முன் றரவிவர்ந் தருளினன் றனிவள்ளல். 70

வேறு

படகந் திண்டிமம் பணவமா னகங்கிணை பம்பை
துடிதடாரிசல் லரிதக்கை துந்துபி யுடுக்கை
குடமு ழாமுர சாகுளி தொண்டகங் குளிரும்
இடிப லாயிர முழங்கிய தெனவியம் பினவால். 71

விரர்களும், குதிரை யானை தேர் முதலியவற்றைப் பாகர்களுடன் போர்க்கோலத்துடன் வர அழைத்தனர்; நாள்களும் கோள்களும் அச்சங்கொள்ளுமாறு அவற்றில் ஏறிச்சென்றனர்.

அலக்கணித்தல் - துன்பஞ்செய்தல். சாரதர் - பூதர். பண்ணி - அலங்கரித்து. இவர்ந்தனர் - ஏறிச்சென்றனர்.

69. திருமால், பிரமன், இந்திரன், ஏனைத்தேவர்கள் முதலிய யாவரும் உடன் வருக என்று முருகவேள் அருள்செய்ய அன்புடன் உருகிய முனிவர்களுடன் அவரவர்களுக்குரிய சிறப்புக்களுடன் வந்து தோன்றிச் சயசய என்று போற்றினர்கள்.

யாகம் நூறியற்றிய அரையன் - இந்திரன்: நூறு அசுவமேதயாகம் செய்து முடித்தவன் என்க. திருகு - மாறுபாடு.

70. மிகுந்த ஈராயிரம் வெள்ளமுடைய பூதகணங்களும் வீரர்களும் விண்ணவர்களும் தொகுதிதொகுதியாகப் பொருந்திப் பல ஆயிரக்கணக்கான அண்டங்களிலும் நெருங்கிச் செல்ல, சிவபெருமான் அருளிய முழுமணிப் பொற்றேரை, வாயுதேவனாகிய தேர்ப்பாகன் எதிரிலே கொண்டுவந்து நிறுத்த, முருகவேள் அதில் ஆரோகணித்தார்.

துனைந்து - விரைந்து. மாருதம் - வாயுதேவன். வலவன் - தேர்ப்பாகன்.

71. படகம், திண்டிமம், பணவம், ஆனகம், கிணை, பம்பை, துடி, தடாரி, சல்லரி, தக்கை, துந்துபி, உடுக்கை, குடமுழா, முரசு, ஆகுளி, தொண்டகம், குளிரி முதலிய பல்வகைப்பட்ட வாத்தியங்களும் பல்லாயிரம் இடிமுழக்கம்போல, முழக்கத்தைச் செய்தன.

மடைவ யிர்க்குலங் காகளம் பீலிவண் டாரை
குடவ ளைக்குலங் குழலின மழையெனக் குமுற
மிடையும் பல்வகை யாழ்களு மெல்லிசை யெழுப்ப
உடைய நாயகன் விருதெழுந் துலம்பின முறையான். 72

வடிநெ டும்படை மிளிர்ந்தன மிளிர்ந்தன மணிப்பூண்
கொடிநி ரைக்குலந் துவன்றின துவன்றின குடையுங்
கடிகொள் சாமரை மறிந்தன மறிந்தகால் வட்டம்
பிடியன் னார்நடைச் சிலம்புகள் சிலம்பின பெரிதும். 73

நிரந்து நால்வகைப் படைகளும் புடைவர நிமலன்
பரந்த நானிலம் பொருதெனப் பனிவிசும் பாரு
விரைந்து முந்துறக் கிரவுஞ்ச விலங்கலை யடுத்தான்
சுரந்த சேனையோ டெதிர்த்தனன் றூரகத் தோன்றல். 74

படைக டூண்டியு மத்திரம் விடுத்தும்பட் டிமைகள்
அடைய மாயைக ளாற்றியு மமர்த்ததா ரகனை
உடைய நாயக னேங்கிய சிலம்பொடு மொறுத்துத்
தடையெ லாந்தபச் சூரன்வாழ் நகர்ப்புறஞ் சார்ந்தான். 75

இச்செய்யுளில் பலவகையான வாத்தியங்களும் அடைசொல் இன்றி வந்தன காண்க. இவை போர்முரசு.

72. வயிர்க்குலம், காகளம், தாரை, சங்குகள், குழல்வகை முதலியன மேகம் போல முழங்கின. நெருங்கிய பலவகைப்பட்ட யாழ்களும் மெல்லிய இசையை எழுப்பின. நம்மையெல்லாம் ஆளுடையநாயகராகிய முருகக்கடவுளின் விருதுகள் ஒலித்தன.

உலம்பின - ஒலித்தன. வயிர் - ஊதுகொம்பு. காகளம் - எக்காளம்.

73. கூரிய படைக்கலங்கள் ஒளிவீசின. இரத்தினுபரணங்கள் பிரகாசித்தன. கொடிகளின் கூட்டவகைகளும் குடைகளும் நெருங்கின. சாமரங்கள் வீசப்பட்டன. ஆலவட்டங்களும் அசைந்தன. பெண்களுடைய காற்சிலம்புகளும் ஒலிசெய்தன.

74. நால்வகைப் படைகளும் நெருங்கிப் பக்கத்திலே வர, முருகக்கடவுள் பூமி சுமக்கமாட்டாதெனத் திருவுளங்கொண்டு ஆகாயவழியாக முற்பட்டு விரைந்து கிரவுஞ்சமலையை வந்து அடுத்தார். அதனைக்கண்ட தாரகாசுரன் சேனையோடு வந்து எதிர்த்தான்.

75. படைக்கலங்களை எறிந்தும், அம்புகளை விடுத்தும், பலவகையான மாயைகள் செய்தும் போர்செய்த தாரகாசுரனை முருகவேள் உயர்ந்த கிரவுஞ்ச மலையோடு அழித்துத் தடைகளில்லாமல் சூரபன்மன் வசிக்கும் நகர்ப்புறத்தை வந்து சேர்ந்தார்.

வரையி னேடுத னிளவலி னுயிர்தப மாட்டித்
திரையு நீர்க்கடற் றடையெலாஞ் சிறுவரை கடந்து
புரையி லாநகர்ப் புறத்துவே ளடுத்தமை கேளா
வரைய னுகிய சூரனு மழலுயிர்த் தெழுந்தான். 76

வேறு

காசிபன் மாயையைக் கலந்து தோற்றிய
வாசிறு மிருநூறு யிரவெள் ளத்தரும்
பேசிய விவர்வழிப் பிறந்த வீரரும்
ஏசின்முன் னுள்ளவ ரெவரு மீண்டினர். 77

இரதமுங் கரிகளு மிவுளிப் பந்தியும்
விரவிய கொடிகளும் விளங்குந் தொங்கலும்
வரமலி கவிகையு மாதி ரந்தொறும்
பரவுறச் சூர்மகன் பாரித் தேகினன். 78

வஞ்சகன் வரவினை மதித்து வானவர்
அஞ்சின ரமரர்கோ னுகம் வேர்த்தனன்
கஞ்சனுங் கலங்கினன் கலங்கு கின்றதோர்
நெஞ்சினைத் தேற்றின னெடிய மாயனும். 79

---

76. கிரவுஞ்சமலையுடன் தன்தம்பி தாரகன் உயிரையும் ஒழித்து, கடலிடை நேர்ந்த தடைகளையெல்லாம் சிறிது நேரத்திலே போக்கிக் கடந்து, முருகவேள் நகர்ப்புறத்திலே வந்தடுத்த செய்தியை கேட்டுச் சூரபன்மனுகிய அரசன் அழலெழப் பெருமூச்செறிந்தான்.

77. காசிபமுனிவர் மாயை என்பவளைக் கூடித் தோற்றுவித்த இரண்டு நூறுயிர வெள்ளம் அவுணர்களும், இவர்கள் வழியிலே பிறந்த அவுண வீரர்களும் மற்றும் முன்புள்ள அவுணர்களும் எல்லோரும் நெருங்கிப் போருக்கு வந்தனர்.

ஆசு இறும் - குற்றமற்ற. ஏசு இல் - ஏசுதல் இல்லாத.

78. தேர்களும், யானைகளும், குதிரைகளின் தொகுதியும், கலந்த கொடி வகைகளும், மாலைகளும், சிறந்த குடைகளும், திக்குகள்தோறும் பரவும்படி சூரபன்மன் புதல்வன் போருக்குப் புறப்பட்டான்.

இவுளிப்பந்தி - குதிரைக்கூட்டம். தொங்கல் - மாலை. வரமலி - சிறந்த. கவிகை - குடை. மாதிரம் - திக்கு.

79. வஞ்சகத்தன்மையையுடைய பாநுகோபன் வருதலைக்கண்டு தேவர்கள் அஞ்சினர். இந்திரன் உடல் வேர்த்தனன். பிரமதேவரும் கலங்கினர். திருமால் கலங்குகின்ற தேவர் முதலியோர் நெஞ்சைத் தேற்றினர்.

வேறு

அறந்தலை திரிந்த பதகன்போர் புரிய வாடலம் படையொடு விரையப்
பறந்தலை யடுத்தா னென்றுநா ரதன்போய்ப் பணிந்துநின் றுரைத்தமை
[கேளா
நிறந்தழை கடப்பந் தாரினு னிரத நெரேலெனச் செலுத்திநே ரடுத்தான்
மறந்தழை திணிதோள் வீரரும் படையு மறலினர் தூசிமே னடந்தார். 80

சூலம்வெங் கணைவே லபயமும் வலப்பாற் றொடிக்கையி னிடக்கையின் வரதஞ்
சாலும்வன் கதைவில் பாசமுந் தயங்கச் சந்திரன் மணிமுடி யெறிப்பக்
கோலமுற் றமைந்து மடங்கலூர்ந் திருபாற் குவிமுலை மாதரிவ் விருவர்
ஏலும்வண் பலகை வாளொடு மேவ லியற்றுசூ லினியுமு னடந்தாள். 81

வேறு

வெம்பு பசிக்கண் மெலிந்தவர் வெய்ய நறுஞ்சுதை கண்டெனப்
பம்பை மலிந்த பறந்தலைப் பாடமர் முன்பு கிடைத்திடாத்
தும்பை மலைத்தெழு மள்ளர்கள் சூழ்நெடுங் காலமும் வாழ்கெனத்
தம்பர மாமிறை யோர்களைச் சாற்றினர் போர்கள் தொடங்கினர். 82

ஆகம் - உடம்பு. கஞ்சன் - உந்தித்தாமரையில் தோன்றிய பிரமதேவர்; தாமரைமலரை ஆசனமாகவுடையவர் எனினுமாம்.

80. அறநெறி திறம்பிய பாதகனுகிய பானுகோபன் வெற்றியுடைய படைகளுடன் போர்க்களத்துக்கு வந்த செய்தியை நாரதர் முருகவேளை வணங்கிக் கூறினர். அதனைக்கேட்டுக் கடப்பமலர் மாலையை அணிந்த முருகவேள் தேரை விரைந்து செலுத்தி நேரேவந்தார். வலியதோளையுடைய இலக்கரும் ஒன்பதின்மருமாகிய வீரர்கள் பகைவருடைய தூசிப்படையை நோக்கிச் சென்றுர்கள்.

பதகன் - பாவச்செயலுடைய பானுகோபன். ஆடல் அம் படை: ஆடல் - வெற்றி. பறந்தலை - போர்க்களம். நிறம் - மார்பு. நெரேலென - விரைந்து. மறம் - வீரம். வீரர் - இலக்கத்து ஒன்பதின்மர். மறலினர் - பகைத்தோர். தூசிப் படை - முன்படை, கொடிப்படை எனினுமாம்.

81. சூலம் கொடிய அம்புகள் வேற்படை அபயம் வலதுபக்கக் கைகளிலும், வரதம் கதை வில் பாசம் இவை இடக்கைகளிலும் விளங்க, மணிமுடி நிலாவெறிப்ப அழகுடன் வலிய சிங்கவாகனத்திலேறி, இருபக்கங்களிலும் இரண்டிரண்டு மாதர்கள் கேடகம் வாள் இவைகளை ஏந்தி ஏவல் செய்யும் சூலினியும் உடன் வந்தாள். கணை - அம்பு. தொடி - வளையல். கோலம் முற்று அமைந்து: கோலம் முற்ற மைந்து மடங்கல் எனினுமாம். மைந்து - வலிமை. மடங்கல் - சிங்கம். சூலினி - காளி.

82. மிக்க பசியினல் மெலிந்தவர் விருப்பத்தைத்தரும் சுவையையுடைய அமுதத்தைக் கண்டாற்போல, பம்பை முதலிய வாத்தியங்கள் நிறைந்த போர்க்

கொடிக ணுடங்கவை யத்தொடு கொம்மென வைய மெதிர்ந்தன
வெடிகோண் முழக்கொடு வேழமும் வேழமும் வேறு மலைந்தன
படிசிதர் கொள்ள நடம்பயில் பரியொடு பரிக ளமர்த்தன
வடிகழல் கட்டிய தானையுந் தானையு மாறுகொண் டேற்றன. 83

செல்பல வேழந் திமிங்கலந் திமிங்கல கலங்க ணிகர்த்தன
பல்பரி யுந்திரை செத்தன பல்கிய கூர்ம நிகர்த்தன
வெல்பல கைக்குலம் வாளைகள் விழ்ந்தன வேலொடு வாள்களுந்
தோல்படைத் தேர்கல னொத்தன சூழ்கட லொத்தது தானையே. 84

ஒள்ளிய பாய்விரி கூம்புக ளொத்தன வோடிர தக்கொடி
விள்ளுடல் வார்குரு திப்புனல் வித்துரு மக்கொடி போன்றன
தெள்ளிய வீரர் விழிப்பன சேர்வட வாமுகம் வென்றன
மள்ளர் தெழித்தெழு மோதைகள் வாரிதி யோதை மலைத்தன. 85

களத்திலே முற்பட்டுப் போர் கிடைக்கத் தும்பை மலர்மாலையை அணிந்த போர் வீரர்கள், நீண்டகாலம் வாழ்க என்று தமக்கு மேலான தலைவர்களை வாழ்த்திப் போர் செய்யத் தொடங்கினர்.

வெய்ய - விரும்புதற்குரிய. பாடு - இடம். மள்ளர் - போர்வீரர். பகைவ ரோடு போர் செய்வோர் தும்பைப்பூவைச் சூடுதல் உரித்து. ''பொருத றும்பை புணர்வ தென்பர்'' (பன்னிரு)

83. கொடிச்சீலைகள் அசையும்படி தேர்களோடு தேர்கள் எதிர்ந்துசென்றன. பெரிய முழக்கத்துடன் யானையோடு யானைகள் போர்செய்தன. குதிரைச் சேனை களுடன் குதிரைச்சேனைகள் போரிட்டன. வீரக்கழலை யணிந்த சேனை வீரர்களும், சேனை வீரர்களும் பகைத்து எதிர்ந்தனர்.

நுடங்க - அசைய. வையம் - தேர். வேழம் - யானை. மலைந்தன - போர் செய்தன. படி - பூமி. சிதர்கொள் - குழிக்கும். தானை - சேனை: காலாட்படை.

84. செல்லும் பல யானைகளும் திமிங்கிலம் திமிங்கிலகிலங்களை ஒத்தன. குதிரைச் சேனைகள் அலைகளையொத்து விளங்கின. பரிசை வட்டங்கள் நிறைந்த ஆமைகளை நிகர்த்தன. வேல் வாள் முதலியன வாளை மீன்களையொத்தன. தேர்ப் படை மரக்கலங்களை ஒத்தன. காலாட்படை கடலை யொத்தது.

செத்தன - போன்றன. கூர்மம் - ஆமை. பலகைக்குலம் - பரிசைவட்டங்கள்.

85. ஓடுகின்ற தேர்களில் கட்டப்பட்ட கொடி பாய்மரங்களின் கூம்புக ளொத்தன. உடல் கிழிந்து மிக்கொழுகும் இரத்தம் பவளக் கொடிகளைப் போன்றது. போர் வீரர்களுடைய தீப்பொறி பறக்கும் கண்கள் வடவா முகாக்கி னியைவென்றன. வீரர்கள் ஆரவாரித்தெழும் ஓசை கடலொலியை மாறுபடுத்தின.

ஆகமந் தாங்கிய மீனமு மாரண மீட்டருண் மீனமும்
மாகர் நறுஞ்சுதை யுண்ணிய மந்தரந் தாங்கிய கூர்மமும்
ஆகி யவுணத் தலைவர்க ளாடம ரிற்கைமி குந்துராய்
வேக நெடும்படை சாரத வேலை துளும்ப வுழக்கினர். 86

செங்கையின் வார்வலை வீசிய செம்ம லரிகர புத்திரன்
ஐங்கர னொத்தவு ணப்படைக் கதிபர்த மாற்ற லழித்தெதிர்
பொங்கிய தானவ மாக்கடல் போகுயர் மந்தர மத்தென
வெங்கண் விறற்சிலைப் பாரிட வீரர் துளும்ப வுழக்கினர். 87

தானவர் வேலை கலங்கலுந் தானவர் கோன்விறன் மைந்தர்கள்
வானவர் மேலடர் நஞ்சென வன்மைகொள் பூதரை யோப்பினர்
ஆனநஞ் சுண்டமர் தேவென வையென வீரவா குப்பெயர்
மானவன் கைத்திறங் காட்டியம் மைந்தரை மாய்த்தொளி தோற்றினன்.

---

86. ஆகமப்பொருள்களைத் தமது மனத்தகத்துட்கொண்டு விளங்கும் திரு நந்திதேவராகிய மீனமும், வேதங்களைக் கடலில்கொண்டு ஒளித்த சோமகன் என்னும் அசுரனிடமிருந்து மீட்டருளிய திருமாலாகிய மீனமும், தேவர்கள் அமுதுண்ணும் பொருட்டு மந்தரமலையாகிய மத்தைத் தாங்கியிருந்த திருமாலாகிய கூர்மமுமாகி நின்று அவுண சேனுதிபதிகள் செய்யும் போரில் ஊக்கமிகுத்துப் பூதகணங்களாகிய கடல் கொந்தளிக்கும்படி கலக்கினர்கள்.

ஆரணம் - வேதம். மாகர் - தேவர். சுதை - அமுதம். கூர்மம் - ஆமை. ஆடு அமர் - வெற்றிமிகும் போர். சாரதர் - பூதர்கள். வேலை - கடல். கடலில் விநாயகக் கடவுளால் வீசி எறியப்பட்ட ஆகமங்களை எடுத்து உலவியது திரு நந்திதேவராகிய மீனம் என்க.

87. கையில் வலைகொண்டு வீசிய செம்மலும், அரிகர புத்திரரும், விநாயகக்கடவுளும் போன்று வலிய பூதவீரர்கள் அவுணசேனுதிபதிகளின் வலியை அழித்து, எதிர்ந்த அசுரர்களாகிய கடலை மிகவுமுயர்ந்த மந்தரமலையாகிய மத்தைப்போலக் கலக்கினர்கள்.

அரிகர புத்திரர் - ஐயனர். தானவர் - அசுரர். போகுஉயர் - மிகவும் உயர்ந்த. பாரிடர் - பூதர்.

88. அசுரமாக்கடல் கலங்கியமையைக் கண்ட சூரபன்மனுடைய மைந்தர்கள், தேவர்கள்மேல் சென்று தாக்கிய ஆலகாலவிடம் போலக் கொதித்தெழுந்து வலிய பூதகணங்களை ஓடச்செய்தனர். பாற்கடலிலுண்டாகிய ஆலகாலவிடத்தை யுண்ட சிவபெருமானைப்போல வீரவாகுதேவர் விரைந்து கைவன்மையைக் காட்டி அம்மைந்தர்களை மாய்த்துப் புகழோடு விளங்கினர்.

தானவர்கோன் - சூரபன்மன். ஒப்பினர் - ஓட்டினர். ஒளி - புகழ்.

கணங்கண் மகிழ்ந்தெழுந் தாடின கவந்த மனந்தநின் ருடின
துணங்கைகொண் டாடின பேயினந் துன்றின வன்கழு குக்குலம்
வணங்கல கின்பருந் தின்குலம் வானுயர் பந்த ரியற்றின
பிணங்கண் மலிந்த பறந்தலைப் பெட்பி னெருங்கின நாய்நரி. 89

எங்கு முடைந்த பொலஞ்சக டெங்கு முலந்த கடாக்கரி
எங்கு மடிந்த வயப்பரி யெங்கு மடங்கிய மள்ளர்கள்
எங்குந் துணிந்த திணிந்ததோ ளெங்குந் துமிந்த நிமிர்ந்ததாள்
எங்குங் குறைந்த முடித்தலை யெங்குங் குரைக்குநெய்த் தோர்நதி. 90

வேறு

இன்ன வாறு சேனையோ டெதிர்த்த மைந்தர் விழ்கள
முன்னர் நோக்கி நன்று நந்த மொய்ம்பி னுற்ற லின்னினி
ஒன்ன லாரை யாவியுண் டொழிப்ப லென்று காய்ந்தகான்
வன்னி யென்ன நேர்ந்துளான் மடங்கன் மாமு கத்தனே. 91

---

89. பூதகணங்கள் மகிழ்ந்து கூத்தாடின. கவந்தங்கள் எண்ணிலாதன நின்று ஆடின. பேய்க்கூட்டங்கள் துணங்கைக் கூத்தாடின. வலிய கழுகுக் கூட்டங்கள் நெருங்கின. வளைந்த அலகினையுடைய பருந்துக்கூட்டங்கள் ஆகாயத்திலே உயர்ந்த பந்தரையிட்டன. பிணங்கள் நிறைந்த போர்க்களத்தில் நாய் நரிகள் விருப்புடன் நெருங்கின.

கவந்தம் - உடற்குறை. அனந்தம் - அளவிறந்தன, முடிவில்லாதன. துணங்கை - ஒருவகைக் கூத்து; இதனைச் சிங்கிக்கூத்து என்பர்; "பழூப்புடையிருகை முடக்கி யடிக்கத், துடக்கிய நடையது துணங்கையாகும்" என்பது இதன் இலக்கணம். துன்றின - நெருங்கின. பெட்பு - விருப்பம்.

90. எவ்விடத்தும் அழகிய தேர்கள் உடைந்தன. எங்கும் மதயானைகள் இறந்தன. வெற்றிபொருந்திய குதிரைப்படை எவ்விடத்தும் மடிந்தன. எங்கும் நிறைந்த போர்வீரர்களுடைய தோள்கள் துணிந்து வீழ்ந்தன; தாள்கள் அற்றன. தலைகள் அறுந்தன. குருதியாறு எவ்விடத்தும் ஒலித்தன.

பொலம் - அழகு, பொன் எனினுமாம். மள்ளர் - போர்வீரர். துமிந்த - அற்றன. நெய்த்தோர் - இரத்தம்.

91. இவ்வாறு அவுணர் சேனையுடன் சென்று போர்செய்த மைந்தர்கள் இறந்தொழிந்த போர்க்களத்தை எதிர்நோக்கி நமதுவலிமை நன்று, இனிப் பகைவருயிரை உண்டொழிப்பேன் என்று காட்டுத்தீப்போற் கோபித்துச் சிங்கமுகாசுரன் எதிர்ந்தான்.

மொய்ம்பின் ஆற்றல் - தோள்வலிமை. மொய்ம்பு - தோள். கான் வன்னி - காட்டுத்தீ. மடங்கல் மா முகத்தன்: மடங்கல் - சிங்கம்.

சுரிகை யாய்தங் கப்பணஞ் சூல நேமி யீட்டிவாள்
பரசு பிண்டி பாலம்வேல் பாசங் குந்த முசுண்டிவச்
சிரமெ ழுக்க ழுக்கடை சிலைகு யங்க லப்பைதண்
டுரிமை கொண்ட பூதர்கண் டொல்லை மேல டர்ந்தனர். 92

வரைதி ரண்ட பலபுய மடங்கன் மாமு கத்தன்மேல்
திரைதி ரண்ட வேலைவீழ் செல்லெ ழுந்து மேருவின்
நிரைதி ரண்ட தாரைக ணிரப்பு கின்ற தாமென
உரைதி ரண்ட பூதர்க ளொண்ப டைவ ழங்கினர். 93

தேக முட்டி நோன்படை சிதர்ந்து வீழ நீண்முழை
நாக நின்று சிங்கமொன்று நாக மேல டர்ந்தெனப்
பாக மல்கு தேரிழிந்து பல்லி தழ்ப்ப டுத்தவன்
சாக ரத்தை யொத்தபூதர் தங்கண் மேற்ப டர்ந்தனன். 94

வேறு

மன்னி ரும்படை சுமந்த கைத்திரளின் மல்கு பூதர்சில ரைத்தழீஇச்
செந்நெல் வாரி யெனத்த ரைக்கணுயிர் சிந்த மோதியயல் வீசிடு
நன்னர் நெல்லுநவை வையும் வேறுற நடந்தி றுக்குமெரு மைத்திரள்
என்ன வன்கழலி னூற்று கைத்துயி ரிறுக்கு மெற்றியு மொறுக்குமே. 95

---

92. உடைவாளும், யானை நெருஞ்சிமுள்ளும், சூலமும், சக்கரப்படையும், ஈட்டியும், வாட்படையும், மழுவும், பிண்டி, பாலம், வேல், பாசம், குந்தம், முசுண்டி, வச்சிரம், எழு, கழுக்கடை, வில், அங்குசம், கலப்பை, தண்டு, முதலியவைகளும் தமக்கு உரிய படையாகக்கொண்ட பூதர்கள் எதிர்த்துப் போரிற் சென்றனர். படைக்கலங்கள் அடைமொழியின்றி அமைந்துள்ளமை காண்க.

93. மலைகள் திரண்டாற்போன்ற பல தோள்களையுடைய சிங்கமுகாசுரன் மேல், அலைகள் திரண்டு நெருங்கும் கடலில்விழுந்து மேகங்கள் மேலெழுந்து மேரு மலையினிடத்து வரிசைகள் மிகுத்த தாரைகளைப் பொழிவதுபோல, புகழ்மிக்க பூதர்கள் படைக்கலங்களைச் சிந்தினர். பல புயம் - இரண்டாயிரம் தோள்கள். வேலை - கடல். செல் - மேகம். உரை - புகழ்.

94. சிங்கமுகாசுரன் பூதர்கள்விடுத்த படைக்கலம்யாவும் தனது தேகத்திலே பட்டுப் பொடியாகி வீழ, பெரிய குகையிலிருந்து புறப்பட்டு ஒரு சிங்கம் யானைகளின் மேல் போருக்குச் சென்றதென்று கூறுமாறு, பாகர்கள் நிறைந்த தேரிலிருந்து இறங்கிப் பற்களால் உதட்டைக் கடித்துக் கொண்டு கடல் போன்று விளங்கும் பூதர்கணத்தின்மேல் போருக்குச் சென்றனன்.

நோன்படை - வலிய படைக்கலங்கள். சிதர்ந்து - பொடியாகி. முழை - குகை. நாகம் - மலை, யானை.

95. நிலைபெற்ற பெரிய படைக்கலங்களைச் சுமந்து விளங்கும் கைகள் பல வற்றுனும் சில பூதர்களைத் தழுவியெடுத்து, செந்நெல் அரிகளைத் தரையில் அடிப்

நோக்கி னுற்சிலரை மாய்க்கும் வன்மொழி நொடிப்பி னுற்சிலரை வீக்கும்வார்
மூக்கி னீடிய வுயிர்ப்பி னுற்சிலரை மொத்து மத்தமிகு சிங்கமாய்த்
தாக்கு மாயனு நடுங்க வீரர்கள் சழங்க நீளிரதம் யாவையும்
ஒக்கி யொன்றன்மிசை யொன்றை யொய்யென வுடைக்கு மூழியழ
[லொத்துளான். 96

இலக்க வீருமொ ரெண்ம ருந்தலைவர் யாரு மேற்றபல பூதரும்
நிலக்கண் வீழ்ந்தவச மாக நோக்கியய னின்ற வீரபுய னேர்ந்தவன்
அலக்க ணெய்தசிலை யாயி ரங்களு மறுத்து நீடமர் விளைத்துயிர்
கலக்க மெய்தின னறிந்து மைந்துமிகு கந்த வேளிரத முந்தினுன். 97

வேறு

கண்டு சிங்கமுக னங்கிவிழி கால மொழிவான்
அண்ட ராருயி ரளிக்கவரு கின்ற னையிதோ
மண்டு போர்நுமரை மாய்த்தனை விடுத்து மிளமை
கொண்டு ளாய்குறுகு நுந்தையிடை யென்ற னனரோ. 98

பதுபோல மோதிப் பக்கத்திலே வீசுவான். நெல்லையும் கோதாகிய வைக்கோலையும் வேறுபடுத்தும் பொருட்டு மேலே மிதித்துச் செல்லும் எருமைக்கூட்டங்கள் போல அவன் கால்களால் துகைத்தும் எற்றியும் பூதர்கள் உயிரைப்போக்குவான்.

நவை - குற்றம். வை - வைக்கோல். இறுக்கும் - வேறுபடுத்தும்பொருட்டு மிதிக்கும். ஒறுக்கும் - அழிக்கும்.

96. பார்வையால் சிலரை அழிப்பான். சொல்லின் கடுமையால் சிலரை அழிப்பான். பெருமூச்சினுல் சிலரை மோதுவான். செருக்குக்கொண்ட நரசிங்கமாய் உயிரை அழித்தமாயோனும் நடுக்கங்கொள்ளவும், வீரர்கள் கதறும்படியாகவும், தேர்கள் முழுவதையும் ஒன்ருேடொன்று எடுத்துத்தாக்கி விரைந்து உடைத்தெறிவான்; ஊழித்தீயை யொத்தவனுகிய சிங்கமுகாசுரன்.

நொடிப்பு - சொல். வீக்கும் - அழிக்கும். நீடிய உயிர்ப்பு - பெருமூச்சு. மத்தம் - உன்மத்தம். சழங்க - கதற.

97. இலக்கம் வீரர்களும், எட்டு வீரர்களும், சேனுதிபதிகளும், எதிர்த்த பல பூதர்களும் நிலத்திலே விழுந்து வசமிழக்க, அதனைப்பார்த்து அயலிலே நின்ற வீரவாகுதேவர் எதிர்ந்து, அவன் துன்புற ஆயிரம் விற்களையும் அறுத்து மிகுந்த போர்விளைத்துக் கலக்கமெய்திய செய்தியை அறிந்து, கந்தவேள் இரதத்தை அவன்முன் செலுத்தலாயினர்.

ஏற்ற - எதிர்ந்த. அவசம் - வசமிழத்தல். அலக்கண் - துன்பம். மைந்து - வலிமை.

98. அதனைக்கண்ட சிங்கமுகாசுரன் கண்களில் தீப்பொறி கக்கச் சில சொல்லுவான். தேவர்கள் உயிரைப் பாதுகாக்க வருகின்ருய், இதோ இந்தப்

வெய்ய சிங்கமுக கேண்மொழியின் வெற்றி யுளதோ
கையி னுலெமது வென்றிநனி காண்டி யினிநீ
உய்ய வேண்டினிமை யார்சிறை யொழித்தி யிலையேல்
ஓய்யெ னப்படை வழங்குரைய லென்ன முருகன். 99

மான மேலெழ மடங்கன்முக னுயி ரநெடுங்
கூனல் வான்சிலை குடங்கைகொடு வாளி சொரிய
ஞான நாயக னகைத்தொருகை நாட்டு சிலையால்
ஊன மாகவரு கோல்கணை யுறுத்தி னன்மிக. 100

மீட்டும் வெய்யவன் விடுந்தொறும் விராவு கணைகள்
விட்டி யன்னவன் விறற்சிலை விளங்கு துவசஞ்
சேட்டு மாமணி முடித்திரள் செறித்த கவயம்
ஓட்டு பாகிரதம் யாவையு மறுத்து ரறினன். 101

போரிலே நிறைந்த நும்மவரையெல்லாம் அழியச் செய்தனே. இளமைப் பருவ முடையவனே! உன்னை விடுத்தேன் உன் தந்தைபால் செல்வாய் என்ருன்.

அங்கி - அக்கினி. கால - கக்க. அண்டர் - தேவர். நுமர் - நும்மவராகிய சேனையிலுள்ளார்.

99. சிங்கமுகன் கூறிய வார்த்தையைக் கேட்ட முருகவேள், சிங்கமுகனே! கேள். பேசும் பேச்சினுல் வெற்றிகிட்டுமோ? கையினுல் எமது வெற்றியினைக் காண்பாய். இனி, நீ பிழைக்க வேண்டுமாயின் தேவர் சிறையை விட்டிடுக. இல்லையாயின் விரைவிலே படைக்கலங்களை விடுப்பாய். வாயினுற் பேசுதல் வேண்டா என்றருளினர்.

வெய்ய - கொடிய. காண்டி - காண்பாய். ஓய்யென - விரைவாக.

100. மானம் மேம்படச் சிங்கமுகாசுரன் ஆயிரம் வளைந்த விற்களைக் கைகளிற்பிடித்து அம்புகளைப்பொழிய, ஞானவடிவாகிய முருகவேள் சிரித்து ஒரு கரத்திலே கொண்ட வில்லில் தொடுத்துவிட்ட கணைகளால் வருகின்ற அம்புகளை யெல்லாம் கெடச்செய்தார்.

மடங்கல் - சிங்கம். வாளி, கோல், கணை என்பன ஒருபொருட்சொற்கள். சிலை - வில்.

101. மறுபடியும் கொடியவனுகிய சிங்கமுகன் அம்புகளைப் பொழியுந் தோறும் அவைகளையெல்லாம் அழித்து, அவனுடைய வலிய வில், கொடி, சிறந்த மணிமுடித்தொகை, கவசம், தேர்ப்பாகன், தேர் முதலிய எல்லாவற்றையும் அழித்து ஆரவாரித்தார்.

விட்டி - அழித்து. துவசம் - கொடி கவயம் - கவசம். பாகு - தேர்ப் பாகன். உரறுதல் - ஒலியெழுப்பல்.

மாம டங்கன்முகன் வஞ்சின முரைத்து வெகுளாத்
தோம ரங்குலிச மாதிக டுறுத்தமர் செய்தான்
ஆம னைத்தையு மடர்த்தமரர் தொல்ப டைகளும்
ஏம மின்றியற வென்றன னிராறு புயனே. 102

இரண்டு பாணிசிர மொன்றுதக வேனை யசிரந்
திரண்ட கைத்தொகுதி தீர்ந்தவன் விசாக னெதிர்போய்
முரண்டி கழ்ந்தவிது வல்லையெனின் முன்னு தியெனத்
திரண்ட தண்டமொரு கைக்கொடு சினந் தணவினன். 103

வல்லை யேலென வுரைத்தமை பதித்து முருகன்
நல்ல வேற்படை விடுத்தில னகைத்தொ ருகரம்
புல்லு வச்சிரம் விடுப்பவவன் போர்க்க தையினை
ஒல்லை நுண்டுகள் படுத்துயிரு முண்ட ததுவே. 104

ஆயி ரந்தலை யிரட்டியுறு மங்கை யிளவன்
மாயி ருஞ்சம ருழந்துயிர் மடிந்த தறியாக்
கூயி ரங்கியொரு சூரனுயிர் கொண்டு வலிகொண்
டேயி ரங்குவது மாங்கொலென வெண்ணி முனைவான். 105

---

102. சிங்கமுகாசுரன் சபதங்கூறிச் சினந்து கைவேல், வச்சிராயுதம் முதலிய படைக்கலங்களைச் செலுத்திப் போர்புரிந்தான். சிங்கமுகன் வரவிடுத்த படைக்கலங்களையெல்லாம் அழித்துத் தெய்வதப் படைகளையும் அவனுக்குப் பாதுகாவலின்றி ஒழியுமாறு பன்னிருகைப் பண்ணவன் செய்தார்.

தோமரம் - பெருஞ்சவளம்; கைவேலுமாம். குலிசம் - வச்சிராயுதம்.

103. இரண்டுகைகள் ஒருதலையொழிய ஏனைய தலைகளும் தொகுதியாகிய கைகளும் நீங்கியவனாகிய சிங்கமுகன் விசாகக்கடவுள் திருமுன்போய் வலிமிக்க இத்தண்டாயுதத்தைப் புறங்காண வல்லையாயின் வருக என்று திரண்ட தண்டாயுதத்தை ஒரு கையிலே கொண்டு சினந்து நெருங்கினன்.

பாணி - கை. விசாகன் - விசாகநாளுக்குரிய முருகவேள். முரண் - வலிமை. முன்னுதி - முற்படுவாய். அணவினன் - நெருங்கினன்.

104. வல்லவனாயின் என்ற சொல்லைக்கேட்டு முருகவேள் சிறந்த வேலாயுதத்தை விடாதவராய் நகைத்து, ஒரு திருக்கரத்திலேந்திய வச்சிரப்படையை விடுத்தார். அவன் கரத்திருந்த கதையைப் பொடிபடுத்து அவனுயிரையும் அஃது உண்டது.

மதித்து - திருவுளங்கொண்டு. புல்லும் - பொருந்தும். நுண்துகள் - நுண்ணிய பொடி.

105. ஆயிரம் சிரங்களும் இரண்டாயிரம் கரங்களும் உடையவனாகிய தன் நம்பி பெரிய போர்செய்து, உயிர் இழந்த செய்தியை யறிந்து சூரபன்மன் அலறி

வேறு

இந்த வண்ட வரைப்பி னேழ்தலை யிட்ட வாயிர வண்டம்வாழ்
வெந்தி றற்படை வீரர் சார விளம்பு வீரென விண்டனன்
தந்தை நன்றென வொற்ற ரோடினர் சாற்ற யாரு மிறுத்தனர்
அந்த ரம்புவி வேலை மாதிர மற்ற வெற்றிட மாதலே. 106

வந்து முந்தி யிறுத்த தானவர் வாய்தன் முட்டி நெருங்கிமேல்
இந்த வண்ட நெடுஞ்சு வர்ப்புற னெல்லை முற்றுற வீண்டலின்
அந்த வந்த வகன்ற வண்ட மிருந்து ளாரங் கிருந்துளார்
முந்து தானவர் வாய்தல் விட்டபின் முன்னு வாமென வுன்னியே. 107

சிங்க மாமுக னொத்த வாண்மையர் சிற்சி லாயிரர் தாரகப்
பைங்கண் வேழ முகத்த னொத்தவர் பற்ப லாயிரர் மைந்தனும்
வெங்க திர்ப்பகை யாற்றல் கொண்டவர் வேறு வேறுபல் லாயிரர்
அங்கி மாமுக னொத்த வீர ரனேகர் தானவர் தானையுள். 108

அமுதான்; பின்பு, உயிரைச் சுமந்து வலிமை பெற்றிருந்தும் அலறி அழுவது தக்கதாகுமோ? என எண்ணிப் போர்செய்ய முயன்றான்.

சமர் - யுத்தம்.

106. இந்த அண்டத்தினும் மற்றுள்ள ஆயிரத்தேழு என்னும்எண்ணுள்ள அண்டங்களிலும் வாழ்கின்ற கொடிய படைவீரர் யாவரும் இங்கேவந்து சேரும்படிசொல்வீர், என்று ஒற்றர்களுக்குக் கட்டளையிட்டான். அவ்வாறே ஒற்றர்கள் விரைந்துசென்று தெரிவித்தனர். யாவரும் அங்கே வந்துகூடினர். ஆகாயம் பூமி கடல் திக்கு முழுதும் வெற்றிடமா தலின்றி ஒழிந்தன.

வரைப்பு - இடம். விண்டனன் - சொன்னான். இறுத்தனர் - வந்து தங்கினர்.

107. முந்தி வந்து கூடிய அசுரர்கள் யாவரும் வாயிலை முட்டி நெருங்கினர். இந்த அண்டச் சுவரின் புறத்திலே முழுதும் நெருங்கியுள்ளார். முற்பட்டுச் சென்ற அசுரர்கள் வாயிலை அகன்ற பின்பு நாம் செல்வோம் என நினைந்து அந்த அந்த அண்டங்களில் உள்ள அசுரர்கள் யாவரும் அங்கங்கே இருந்தனர்.

இறுத்த - வந்தடைந்த. வாய்தல் - வாயில். ஈண்டலின் - நெருங்குதலினால். முன்னுவாம் - செல்வோம்.

108. சிங்கமுகாசுரனை யொத்த வலிய வீரர்கள் சில ஆயிரவரும், தாரகாசுரனைப்போலும் வீரர்கள் பலப்பல ஆயிரவரும், சூரபன்மன் மைந்தனாகிய பாநுகோபனையொத்த வலிமைகொண்டவர் வேறு வேறாகப் பல்லாயிரவரும், அக்கினி முகாசுரனையொத்த வீரர்கள் அநேகரும் அவ்வசுரர் சேனையிலுள்ளனர்.

பைங்கண் - பசியகண். கதிர்ப்பகை - பாநுகோபன். அங்கி - அக்கினி. தானவர் தானை - அசுரர் சேனை.

முக்கண் வேழ முனிந்த வேழ முகத்த ஞொத்தவ ரெண்ணிலார்
நக்கன் வென்ற கயத்தை யொத்திடு நாம வேலின ரெண்ணிலார்
ஒக்க வண்டம் விழுங்கு கொக்கினை யொத்த நோன்மைய ரெண்ணிலார்
மிக்கு யர்ந்த சலந்த ரப்பெயர் வீர ஞொத்தவ ரெண்ணிலார். 109

அந்த காசுரன் முப்பு ரத்தவ ராண்மை விஞ்சுசு ராக்கன்வாள்
விந்தை மாட்டிய தார காசுரன் வெய்ய பண்டன் மயிடனென்
றிந்த மானவ ராதி யாமெறு ழாள ரொத்தவ ரல்லது
மைந்து தாழ்ந்தவ ரில்லை யில்லை மலிந்த தானவர் தானையுள். 110

அங்க ணங்க ணுரைத்த வண்ட மடுத்த வேதர்க ணரணர்
தங்கு வச்சிர ரும்பர் மாதவர் தங்க ளாற்ற லழித்தவர்
நுங்கி டாதவ ரத்தர் மாயை நுனித்த றிந்தவர் விஞ்சையிற்
சிங்கி டாதவர் மன்ன வர்க்குயிர் செத்து நன்றிசெய் சிந்தையோர். 111

---

109. மூன்று கண்களையுடைய யானைமுகப் பிள்ளையாரால் கோபிக்கப்பட்ட கயமுகாசுரனை ஒத்த வலியினையுடையார் அளவிறந்தோர். சிவபெருமான் வென்ற யானையையொத்த வேல் வீரர் எண்ணிலாதவர். ஒருசேர அண்டங்களையெல்லாம் உண்டு விழுங்கும் கொக்கு ஒப்பென்று கூறும் வலிமையுடையார் எண்ணில்லாதவர். சலந்தராசுரனையொத்த வீரர்கள் எண்ணிலாதவர்.

முக்கண் வேழம் - விநாயகக்கடவுள். நக்கன் - சிவபெருமான். வென்ற கயமாவது தாருகவனமுனிவர்கள் ஏவிவிட்ட யானை. நாமவேல் - அச்சத்தைத் தரும் வேல். கொக்கு - கொக்கு வடிவமாக வந்த குரண்டாசுரன். நோன்மை - வலிமை. சலந்தரன் - சிவபெருமான் கோபத்தில்தோன்றிய அசுரன்.

110. அந்த அசுரர் சேனையில் அந்தகாசுரன், திரிபுரத்தவுணர், சுராக்கன், தாரகாசுரன், பண்டாசுரன், மயிடாசுரன், முதலிய மானமுடையவர் போன்ற வலிமையை யுடையவரல்லாமல் வலிகுன்றிய வீரர்கள் இல்லை இல்லை.

எறுழாளர் - வலியுடையவர். மைந்து - வலிமை.

111. மேலே கூறிய அண்டங்களிலுள்ள பிரமதேவர்களும், திருமால்களும், இந்திரர்களும், தேவர், முனிவர்களும் ஆகிய இவர்களுடைய வலிமை அழியச் செய்த அசுரர்களும், அழியாத வரத்தையுடையவர்களும், மாயையில் நுட்பமான வன்மை பொருந்தியவர்களும், மாயங்களில் கெடாதவரும், அரசருக்கு உயிரையுங்கொடுத்து நன்றிசெலுத்தும் மனமுடையவரும்.

வேதர் - பிரமர்கள். வச்சிரர் - இந்திரர்கள். நுங்கிடாத - அழியாத. நுனித்து - நுட்பமாக. சிங்கிடாத - கெடாத.

ஆய வாயிர மாயி ரங்கர மாயி ரஞ்சிர மந்தமா
மேய வாக்கையர் வேங்கை மாமுகர் வேழ மாமுகர் யாளியோர்
சீய மாமுக ரெண்கு மாமுகர் சிம்புண் மாமுகர் வன்பகை
மாய வாடமர் செய்யு மேழக வன்மு கத்தரு மெண்ணிலார். 112

வேறு

மடங்கரிய தானவர்கண் மல்குதலே நோக்கி
இடங்கழிகொள் வாருளர்கொ லெம்மவரி னென்னு
உடங்கமரர் புள்ளுருவ மாகியொழி வுற்ருர்
தடங்கிரி முழைத்தொகுதி சார்ந்தயர்வு யிர்த்தார். 113

பூதர்க ணடுங்கினர்கள் பூதர்தலே வோர்கள்
வேதனே யுளத்திடை மிகுத்தன ரிலக்கர்
ஆதபுதல் காண்டலரி தென்றுள மயர்த்தார்
நாதனுள னென்றுநவ வீரர்வலி கொண்டார். 114

---

112. ஆகிய ஆயிரம் ஆயிரமாகிய கரங்களும், ஆயிரம் சிரங்களும் பொருந்திய உடலுடையவரும், வேங்கைமுகம் யானேமுகம் யாளிமுகம் சிங்கமுகம் கரடி முகம் சரபமுகம் ஆட்டுமுகம் என்னும் முகங்களேயுடையவருமான அசுரர்களாகிய போர் வீரர்கள் எண்ணில்லாதவர் உள்ளனர்.

சீயம் - சிங்கம். எண்கு - கரடி. சிம்புள் - சரபம். ஆடு அமர் - வெற்றி தரும்போர். மேழகம் - ஆடு. ஏழகம் எனினுமாம்.

113. குறைவில்லாத அசுரர்கள் நிறைந்து வருதலேக்கண்டு அளவுபடுத்தற்குரியார் உளரோ நம்மவர்களில் என்று நினேந்து தேவர்கள் பறவை வடிவங்கொண்டு அவ்விடம்விட்டு அகன்ருர்கள்; பெரிய மலேக்குகைகளிலே போய்ப் புகுந்து பெருமூச்செறிந்தார்கள்.

மடங்கரிய - மடங்குதற்கு அருமையான. மல்குதல் - நிறைதல். இடங்கழி - அளவுபடுத்தல். உடங்கு - ஒருசேர. முழை - குகை. அயர்வுயிர்த்தல் - பெருமூச்செறிதல்.

114. பூதகணத்திலுள்ளார் நடுக்கங் கொண்டனர். பூதசேனுதிபதிகள் மனத்திலே துன்புற்றனர். இலக்கர்கள் ஆ! இவ்வசுரவீரரிடமிருந்து நீங்குதல் அரிது என்று மனத்தில் சோர்ந்தனர். முருகக்கடவுள் இருக்கிருர் என்று நவ வீரர் மனத்தில் உறுதிகொண்டனர்.

தபுதல் - நீங்குதல். ஆ - இரக்கக்குறிப்பு. அயர்த்தல் - சோர்வு கொள்ளல். வலி - உறுதி.

இத்தகைமை யாதுமிறை நோக்கிநகை செய்து
தத்துபரி பூண்டசக டத்தைநொடி முன்னர்
எத்திசையு மேகவினி தூர்கவென விண்டான்
அத்தனுரை கொண்டுவளி யங்ஙன முகைத்தான். 115

மண்டில முறுத்தமணி வையமிசை நின்றே
அண்டர்தொழு மாறுமுக னம்புபல கோடி
கொண்டொரு தொடைக்கமைதி கொள்ளவமர் செய்தான்
மிண்டியம ராடல்புரி வெய்யவர்கள் தம்மேல். 116

ஒறுத்தன பொலஞ்சக டொறுத்தகவி கைக்கா
டறுத்தன முடித்தலை யறுத்தன வெறுழ்த்தோள்
இறுத்தன பகட்டுர மிறுத்தன கழற்கால்
கறுத்தவுண ராவிகளை கந்தன்விடு வாளி. 117

---

115. இச்செயல்கள் எல்லாவற்றையும் முருகவேள் கண்டார், நகைத்தார், குதிரைகள் பூட்டப்பெற்ற நமது தேரை ஒருநொடிப்பொழுதினுள் எல்லாத்திசைகளிலும் செலுத்துக என உத்தரவிட்டார். முருகக்கடவுள் ஆணையை மேற்கொண்டு வாயுதேவன் அவ்வாறே தேரைச் செலுத்தினன்.

தத்து - தாவிச்செல்லும். சகடம் - தேர். வளி - வாயுதேவன். உகைத்தான் – செலுத்தினன்.

116. சூரிய மண்டிலம் போன்று ஒளிவீசும் மணிகள்பதித்த தேரின்மேல் இருந்தே தேவர்களால் தொழப்படும் ஆறுமுகக் கடவுள் ஒரு தொடுத்தலுக்குப் பல கோடி அம்புகளைச் செல்லவிடுத்து, நெருங்கிப் போர்புரியும் கொடிய அசுரர்கள்மேல் போர்செய்தார்.

மண்டிலம் - சூரியமண்டிலம். வையம் - தேர். தொடை - தொடுத்துவிடுதல். தொடைக்கு - தொடுப்புக்கு.

117. கோபித்துவந்த அவுணர் உயிரைக் கொள்ளும்பொருட்டு முருகவேள் தொடுத்துவிட்ட அம்புகள் தேர்களையழித்தன; குடைகளின் தொகுதியை அழித்தன; முடியோடு கூடிய தலைகளை அறுத்தன; வலியதோள்களை அறுத்தன; யானைகளின் வலியைத் தொலைத்தன; வீரக்கழலை அணிந்த கால்களைத் துணித்தன.

பொலஞ்சகடு - அழகியதேர், பொற்றேர் எனினுமாம். கவிகை - குடை. எறுழ் - வலிமை. பகட்டு உரம் - யானைகளின் வலிமை. கறுத்து அவுணர் ஆவி எனப் பிரிக்க.

பக்குவிடு நீரன பசும்பொன்மனை மக்கள்
ஒக்கலிவை யேயல வுடம்புமுட லின்கண்
தொக்குறு முறுப்புமறி கென்றுதுணி வித்த
புக்கவுண ராவிகள் புயக்குமிறை வாளி. 118

தீவினைய ரேனுமிறை செங்கையயி லம்பாற்
சாவவர மாற்றினர்க டானவர்க டம்முட்
சாவுடலை வாளிகொடு தள்ளவட வைக்கட்
பூவுலகி னேற்றனர்கள் போரவுணர் சில்லோர். 119

மக்களு மிவர்க்குதவு மார்க்கமில ராவர்
இக்கொடி யரைக்கதியி னேற்றுது மெனத்தான்
புக்கதென வேள்பகழி போரவுண ராக்கை
மிக்குலவு கங்கைநதி யாதியிடை வீழ்க்கும். 120

குய்யக வுலோகர்மகிழ் கொள்ளவவ னுய்க்கு
மையநெடு நேமிவரை யப்புற மிருந்து
நையலகை யாதிநவை யோர்க்குமிரை யாக்கு
மெய்யன்விடு வாளியுயிர் வீத்தசுரர் காயம். 121

---

118. பசியபொன்னும் மனைவி மக்களும் சுற்றமும் ஆகிய இவைகளல்ல; உடம்பும் உடம்பின்கண் தொகுதியாகவுள்ள உறுப்புக்களுமே பிளக்கும் தன்மையையுடையன அறிவாயாக என்று போரிலே எதிர்ந்து வந்த அவுணர் உயிர்களைப்போக்கும் முருகவேளின் அம்புகள் துணித்தன.

பக்குவிடுதல் - பிளத்தல். நீரன - தன்மையுடையன. ஒக்கல் - சுற்றம். புக்க + அவுணர் = புக்கவுணர். புயக்கும் - போக்கும்.

119. கொடிய செயலுடையராயினும் முருகக்கடவுளுடைய சிவந்த கரத்திலுள்ள கூரிய அம்பினால் இறத்தற்கு வரம்பெற்றனர் அசுரர்கள். தங்களில் சாவுகின்ற உடம்பை அம்பினால் போக்குதற்குப் போரவுணர் சிலர் நிலவுலகத்தில் தவங்கிடந்தனர்.

இறை - முருகவேள். அயில் - கூர்மை. வடவைக்கண் - வடவாமுகாக்கினியிடத்து.

120. அவுணர்களுடைய மக்களும் இவர்களுக்கு உதவிசெய்யும் நிலையிலராவார். இந்தக் கொடியவர்களை நல்ல கதியிலே செலுத்துவோம் என்று தாமே புகுந்தாற்போன்று முருகக்கடவுளின் அம்புகள் போர்செய்யும் அவுணர் உடம்புகளைக் கங்கைநதி முதலிய புண்ணிய தீர்த்தங்களில் கொண்டுபோய் வீழ்த்தும்.

கதி - முத்தியுலகம். வேள் - முருகக்கடவுள். பகழி - அம்பு.

121. முருகக்கடவுள் செலுத்தும் அம்புகள் உயிரைப்போக்கிய அசுரர் உடம்புகளைத் தேவசாதியில் ஒரு பகுப்பினர் இருக்கும் குய்யகவுலகம் மகிழும்படி

எண்டிசையு மண்டலமு மீண்டினரை யுண்டு
விண்டல மிடைந்தவர்தம் வெவ்வுயிரை மாந்தி
அண்டம்வளர் பித்திகையி னப்புற மலிந்த
கண்டகரை யுங்கடித யின்றகுகன் வாளி. 122

ஒளிதழுவி நின்றவரை யண்ணலென வுன்னு
திளையரென வெள்ளினவ ரின்னுயிரு நிப்பர்
தெளிமினென யாவரையுந் தேற்றுவன போன்ற
வளியிலரை யட்டுலவு மாறுமுகன் வாளி. 123

திண்ணரிய படைத்தகுவர் தேகமுழு தட்டு
வெண்ணிண மளைந்துகறை மெய்முழுது மாடித்
துண்ணென வெழுந்துசுடர் வாளிதுரி சோவ
வண்ணவரை தோறுடலு ராவுவன மாதோ. 124

அங்கே கொண்டுபோய்ச் சேர்க்கும். பெரிய சக்கரவாளகிரியின் அப்புறத்தில் இருந்து துன்புறும் பேய் முதலியோருக்கும் இரையாக அங்கே கொண்டுபோய்ப் போடும்.

குய்யகவுலோகர் - தேவசாதியின் ஓர் பகுப்பினர். நேமிவரை - சக்கரவாள கிரி. நை - துன்புறும். நவை - குற்றம்.

122. எட்டுத்திசைகளினும் நிலவுலகத்தினும் நெருங்கியிருந்த அவுணர் உயிரைக் குடித்து, ஆகாயத்தில் நெருங்கிய அவுணர்கள் உயிரையும் உண்டு, அண்டச்சுவரின் அப்புறத்தில் நிறைந்துள்ள தீயவர் உயிரையும் உண்டன குகக்கடவுள் செலுத்திய அம்புகள்.

மண்+தலம் - மண்டலம். பித்திகை-சுவர். கண்டகர் - பகைவர். அயின்ற - உண்டன.

123. இரக்கமொன்றிலாத அவுணரைக் கொன்று உலாவுகின்ற ஆறுமுகக்கடவுளின் அம்புகள், 'புகழுடன் விளங்குகின்றோரைப் பெரியோரென்று எண்ணாமல் அற்பர் என எண்ணி இகழ்ந்தோர் உயிரும் போம் என்பதை யாவரும் தெளிவாக அறியுங்கள்' என்று யாவரையும் தெளிவிப்பனபோன்று விளங்கின.

ஒளி - புகழ். அண்ணல் - சிறந்தோர். இளையர் - அற்பர். எள்ளினவர் - இகழ்ந்தோர். அளியிலார் - இரக்கமில்லார். அட்டு - கொன்று.

124. வலிய சேனைத்தலைவருடைய உடல் முழுவதையும் அழித்து, வெள்ளிய கொழுப்புகளை அளவி, இரத்தக்கறையில் மூழ்கி, விரைந்தெழுந்து, அம்புகள் குற்றந்தீர அழகிய மலைகள்தோறும் உடம்புகளைத் தேய்ப்பனவாம்.

தகுவர் - அவுணர். கறை - இரத்தக்கறை. நிணம் - கொழுப்பு. துரிசுஓவ - குற்றங்கெட. உராவுவன - உரிஞ்சுவன.

சிறுபடைய ரேனும்வலி மிக்கவர் சினந்தால்
உறுபடைக ளாற்றுவது முண்டுகொல் சமர்க்கண்
அறுமுக னொருத்தனொரு கைச்சிலையி னம்பான்
முறைமுறை யிறுத்தபடை முற்றுமுயிர் மாய்ந்த. 125

பாதக ருடற்பரிச மானபழி தீரக்
காதலொடு மாடுவ கடுப்பமுரு கேசன்
கோதைபயில் வார்கணைகள் கொங்குகமழ் கங்கை
ஓதமுத லானபல தீர்த்தமு முறந்த. 126

வேறு

இறுத்த தானைக ளிறந்தபி னெங்குநெய்த் தோரும்
அறுத்த பல்வகைத் துணிகளு மழனும்வா னளவும்
வெறுத்தி டங்கெட வித்தக னோக்கின னகைத்தான்
ஒறுத்த முப்புர மெனத்தழ லுண்டுநீற் றியதே. 127

---

125. சிறிய படையை யுடையவராயினும் வலிமை மிகுந்தவர் கோபித்தால் பொருந்திய படைகள் அதனைச் சகித்தல் கூடுமோ? போரில் ஆறு திருமுகங்களையுடைய ஒப்பற்ற கடவுளின் கையிலுள்ள வில்லில் தொடுத்துவிட்ட அம்பினால் முறைமுறையாக வந்து போரிட்ட படைகள் முழுவதும் அழிந்தன.

படைகள் - சேனைகள். சமர் - போர். இறுத்த - வந்துதங்கிய.

126. பாதகர்களாகிய அவுணர்கள் உடலிலே தைத்த பழியானதுதீரும்படி விருப்பமுடன் சென்று முழுகுவன போன்றன; முருகக்கடவுள் வில்லிற்றொடுத்து விட்ட அம்புகள் வாசனைவீசும் கங்காநதி முதலான பல தீர்த்தங்களிலும் சென்ற செயல்.

ஆடுவ - மூழ்குவன. கோதை - விற்குதை; நாணி. கொங்கு - வாசனை. ஓதம் - நீர். உறந்த - சென்றன.

127. போர்க்களத்திலே வந்து எதிர்ந்த சேனைகள் இறந்தொழிந்தபின் இரத்தமும், அறுபட்ட பலவகையான உடற்குறைகளும், பிணங்களும் ஆகாயத்தையளாவி இடமின்றிக் கிடந்தமையைக்கண்ட முருகவேள் பார்த்துச் சிரித்தருளினர். சிவபெருமான் ஒறுத்துச் சிரித்த திரிபுரம் பொடிபட்டமைபோல அவைகள் தீக்கடவுள் உண்ண நீறாயின.

நெய்த்தோர் - இரத்தம். துணி - துண்டங்கள். அழன் - பிணம். நோக்கினனகி நகைத்தான். வித்தகன் - சதுரப்பாடுடைய முருகக்கடவுள்.

தடைபட் டப்புறத் திருந்தவர் தடைதபு தலுமே
மிடைத லுற்றனர் வெடிபட முழங்கிமுன் போல
அடைத லுற்றவர் தம்மையு மறுத்தண்ட வழிவிற்
படையி னேர்கணை தொடுத்தன னடைத்தனன் பகவன். 128

அனைத்துந் தானைக ளிறந்தமை யவுணர்கோன் பாரா
நினைத்தல் செய்குவா னின்மலன் வரமிருப் பதனல்
எனைக்கொல் வாரிலை யிளையவன் றன்னையான் வென்று
வினைக்கண் விழ்ந்துளா ரையுமெழூப் புவலென வெகுண்டான். 129

விரைந்து தேரினைச் செலுத்திமே லடர்ந்தனன் பூதர்
வரைந்த பூதர்தந் தலைவர்க ளிலக்கர்வன் விரர்
நிரந்து வேறுவே ருடமர் விளைத்தனர் நீங்கக்
கரந்தை வேய்ந்தவன் கான்முளை கடுகத்தே ருகைத்தான். 130

---

128. உடற்குறை, பிணம் முதலியவற்ருல் தடையுண்டு அப்புறத்தி லிருந்த அவுணர்சேனை தடை நீங்கியபின் வந்து நிறையலாயின. முருகக்கடவுள் அவற்றைக்கண்டு முன்புபோலப் பெருமுழக்கம்செய்து அவைகளையும் கணையினல் அழித்து வில்லிலே ஒரு கணையைத் தொடுத்துவிடுத்து அண்டவழியை அடைத் தருளினர்.

தபுதல் - நீங்குதல். மிடைதல் - நெருங்குதல். அண்ட வழி - அண்டத்தின் வழியை. பகவன் அண்டவழி அடைத்தனன் எனக் கூட்டுக. பகவன் - ஆறு குணங்களோடு கூடியவர். பகம் - ஆறு.

129. சேனைகளெல்லாம் இறந்தொழிந்தமையைச் சூரபன்மன் கண்டு, நின்மலராகிய சிவபெருமானுடைய வரம் எனக்கு இருத்தலினல் என்னைக் கொல்லுபவர் யாவருமிலர்; ஆகலின், அவனை யான்வென்று போரில் இறந் தொழிந்தோரையும் எழுப்புவேன் என நினைந்து வெகுண்டான்.

நின்மலன் - இயல்பாகவே பாசங்களின் நீங்கிய தூயோன்; மலரகிதன் என்றபடி. வினை - போர்.

130. சூரபன்மன் விரைவாகத் தேரைச் செலுத்தி மேலே நெருங்கிப் போரிட்டான். பூதர்களும், பூதசேனுதிபதிகளும், இலக்கரும், வலிய வீரர்களும் வேறு வேருகக் கலந்துநின்று போரைச் செய்தனர். சிவகரந்தையை முடிக் கணிந்த சிவபெருமானுடைய குமாரராகிய முருகவேள் விரைந்து தேரைச் செலுத்தினர்.

கான்முளை - புத்திரர். கடுக - விரைவாக. உகைத்தல் - செலுத்துதல்.

இருவ ருஞ்சிலை வாங்கின ரெறுழ்க்கணை தொடுத்தார்
பொருது மாதிரஞ் சுற்றுவர் கடலூறும் புகுவார்
கருவி வானென விசும்பிடைத் தோற்றுவர் கரப்பார்
அருவி மால்வரை தொறுஞ்சம ராற்றியே யடுப்பார். 131

மண்ணிற் கீழுல கனைத்தினு மரீஇச்சம ருழப்பார்
விண்ணிற் பல்வகை யுலகமும் விராய்ப்படை தொடுவார்
துண்ணென் றின்னண மமர்த்துழிச் சூரன்மே லண்ட
வண்ண வாய்தலை வழக்கற வடைத்தமை கண்டான். 132

இளையன் சூழ்ச்சியு மென்னென்ப தெனக்கனன் றங்கை
வளைவில் வார்கணை பன்முறை தொடுத்தனன் வாய்தல்
வெளிகண் டப்புறத் திருந்தவர் தங்களை விளித்தான்
தெளிவி லான்செய லறிந்தனன் றேவரைப் புரப்போன். 133

செங்கை வைகிய படைகளுட் சிலபடை நோக்கித்
தங்கு மாயிரத் தேழெனு மண்டமுஞ் சாரா
அங்க ணங்கண்வை கியவரட் டர்களுயிர் மாந்தி
இங்கண் வம்மினென் றியம்பின னப்படை யெழுந்து. 134

---

131. முருகவேள் சூரபன்மன் ஆகிய இருவரும் வில்லையெடுத்து வளைத்தனர்; வலிய அம்புகளைத்தொடுத்துவிட்டனர்; போர்செய்து திக்குகளிற்சூழ்வார்; கடல்தோறும் புகுவார்; மேகம்போல விண்ணிலே தோற்றுவாராய் ஒளிப்பார்; பெரிய மலைகள்தோறும் சென்று சென்று போர்செய்வார்.

எறுழ்க்கணை - வலிய அம்புகள். மாதிரம் - திசைகள். விசும்பு - ஆகாயம். கருவிவான் - மேகம்.

132. நிலவுலகின்கீழ் எல்லாவுலகத்தினும் சென்று போர்செய்வார். ஆகாயத்தின்மேல் உள்ள பலவகை உலகங்களினும் சென்று படைக்கலங்களை வீசுவர். விரைந்து இவ்வாறு போர்செய்யுங்காலத்துச் சூரன் அண்டப்பித்தியின் வாயில் அடைபட்டிருத்தலைக்கண்டான்.

விராய் - கலந்து. அமர்த்துழி - போர்செய்யும் காலத்தில். வாய்தலை - வாயிலை. வழக்கற - போய்வருதல் இன்றி.

133. இவனுடைய சூழ்ச்சியும் யாது? என்பேன் எனக் கனன்றான். கையிலுள்ள வில்லிற்பூட்டிய அம்புகளால் பல முறை எய்து வாயிலைத் திறந்தான். அண்டத்தின் புறத்திருந்த சேனைகளை அழைத்தான். தெளிவில்லாத சூரனுடைய செயலைக் குமாரவேள் தெரிந்தார். சூழ்ச்சி - ஆலோசனை. வாய்தல் - வாயில்.

134. தமது திருக்கரத்திலுள்ள படைக்கலங்களுள் சிலவற்றை நோக்கி, ஆயிரத்தேழ் அண்டங்களினும் சென்று அங்கங்கேயுள்ள அவுணவீரர் உயிரையுண்டு இங்கே வருக எனக் கட்டளையிட்டருளினர். அப்படைக்கலங்கள் எழுந்து; அரட்டர் - வீரர்.

வேறு வேறுபல் லுருக்கொடு விரைந்துபோய் விசாகன்
கூறு மாயிரத் தேழெனு மண்டமுங் குறுகி
நீறு செய்துவல் லவுணரை மீண்டுநின் மலன்கை
ஏறி முன்புபோ லிருந்தன விதுகண்டு சூரன். 135

ஆங்கு நின்றறை கூவிப்போ யப்புறத் தண்டத்
தோங்கி னானுட னேகியங் குடன்றமர் புரிந்தான்
காங்கெ யன்கடுஞ் சூரனம் முறையண்டந் தோறும்
நீங்கி னானுட னேகினு னிமலனும் பொருது. 136

அண்ட மாயிரத் தெட்டினு மவுணர்கோ னுழைய
விண்டி டாதுடன் புகுந்தமர் விளைப்பதும் வியப்போ
மண்டு மாருயிர்க் குயிரதாய் வதிந்தண்டந் தோறுங்
கொண்டு கொண்டுசெ லொருமுத லாகிய குமரன். 137

கந்த வேளுந்த னுடன்வரச் சிலபகல் கழித்திட்
டிந்த வண்டம்வந் திறுத்தனன் மாயைசூழ்ச் சியினல்
அந்த மில்லதோ ரமிழ்தமந் தரமெனு மடுக்கல்
வந்தி டுந்திற மியற்றினன் மாண்டவ ரெழுந்தார். 138

---

135. வேறுவேறு பலவகைப்பட்ட வடிவங்களையெடுத்து விரைந்துபோய், விசாகப்பெருமாள் கூறிய ஆயிரத்தேழு அண்டங்களினும் அணுகி, வலிய அவுணர்களைப் பொடிப்படுத்தி முன்புபோலவே நின்மலராகிய முருகவேள் திருக்கரங்களில் வந்து பொருந்தின. சூரன் இதனைக்கண்டு;

விசாகன் - முருகக்கடவுள்.

136. அவ்விடத்தினின்று அறைகூவி அழைத்துச்சென்று அப்புறத்து அண்டத்தைச் சேர்ந்தான். கங்காபுத்திரரும் உடன்சென்று மாறுபட்டுப் போர் புரிந்தார். கொடிய சூரனும் அவ்வாறே அண்டங்கள்தோறும் நீங்கிச்சென்றான். நிமலனாகிய குமரவேளும் உடன் சென்று சென்று யுத்தம் செய்தார்.

அறைகூவல் - அழைத்தல். உடன்று - மாறுபட்டு. காங்கெயன் - கங்கா புத்திரன்.

137. அவுணர்கோனாகிய சூரன் ஆயிரத்தெட்டு அண்டங்களினும் போய்ப் போய்ப் புக உடன்சென்று போர்புரிதல் ஒரு வியப்போ? நிறைந்த உயிர்களுக்கெல்லாம் உயிராய்த் தங்கியிருந்து அண்டங்கள்தோறும் கொண்டுகொண்டு செல்லும் ஒப்பற்ற முதல்வராகிய குமரக்கடவுள்.

வதிந்து - தங்கி.

138. கந்தவேள் போகுமிடந்தோறும் உடன்வரக்கண்ட சூரன் சிலபகல் கழித்தான். இந்த அண்டத்துக்கு வந்து சேர்ந்தான். மாயை ஆலோசனையினல்

தம்பி மைந்தர்க டானவத் தலைவர்தா னவர்கள்
உம்ப ரச்சுற வனைவரு மொழிவின்றி யெழலுங்
கம்ப மற்றிடுஞ் சூரன்மிக் குவகையிற் களித்தான்
வம்பு முற்றிய கனவிதென் றுள்ளக மதியான். 139

முருக வேளது நோக்கினன் முறுவலித் தங்கை
ஒருப டைக்கல முகைத்தன னுரையெழு முன்னர்ப்
பொருத நின்றதா னவர்களைப் பொருப்பொடும் பொடித்த
தருளி லாதவ னயர்ந்தன னுற்றினன் மாயை. 140

எண்ணின் மாயையு மெதிர்நிலா தழிதர விற்றின்
வண்ண மாமர மாயினன் வஞ்சகன் மணிவேல்
அண்ண லேவின னதுகிழித் தந்தரப் புனலின்
மண்ணி நீருடன் முன்புபோன் மலர்க்கைவாழ்ந் ததுவே. 141

முடிவில்லாத அமிழ்த மந்தரமலை வருமாறு செய்தான். மாண்டவர் யாவரும் அவுணர் சேனையில் எழுந்தனர்.

இறுத்தனன் - தங்கினான். அடுக்கல் - மலை.

139. தம்பியாகிய சிங்கமுகன், புத்திரர்கள், சேனைத்தலைவர்கள் முதலிய யாவரும் தேவர்கள் அஞ்சுமாறு ஒழிவின்றி உயிர்பெற்றெழுந்தனர். அசைவில்லாத சூரன் பேருவகைகொண்டு களிப்படைந்தான். புதுமைமுதிர்ந்த கனவிது வென உள்ளத்திற் கொண்டிலன்.

கம்பம் - நடுக்கம். வம்பு - புதுமை. உள்ளகம் - மனம்.

140. முருகவேள் அதனை நோக்கினர், புன்முறுவல் செய்தார், கரத்திலிருந்த ஒரு படையைச் செலுத்தினர். சொல்லிச் செல்லுமுன் போர்செய்யுமாறு நின்ற அவுணர்களை அமுதமந்தர மலையுடன் அது பொடிசெய்தது. இரக்கமில்லாத சூரன் சோர்ந்து மாயை விஞ்சையினால் போரிட முயன்றான்.

முறுவலித்து - புன்சிரிப்புச்செய்து. உகைத்து - செலுத்தி. பொருத - போர் செய்த. பொருப்பு - அமுதமந்தரமலை.

141. சூரனியற்றிய அளவிறந்த மாயைகளும் எதிர் நில்லாமல் அழிந்தன. இறுதியில் அழகிய ஒரு மாமர வடிவாய் வஞ்சகன் நின்றான். வேற்படையை விமலன் ஏவியருள, அவ்வேல் அம்மாமரத்தைக் கிழித்து, ஆகாய கங்கையில் முழுகி, முன்புபோலச் செவ்வேள் கரத்தில் வாழ்ந்திருந்தது.

வண்ணம் - அழகு. அண்ணல் மணிவேல் ஏவினன். அந்தரப்புனல் - ஆகாய கங்கை. மண்ணி - கழுவி : நீராடி.

இருது ணிபடக் கிடந்தவ னெழுந்துகுக் குடமும்
பொருவின் மஞ்ஞையு மாய்ச்சமர்க் கெதிர்ந்தனன் புனிதன்
வருக வென்றருள் விழிக்கடை வழங்கினன் மலம்போய்
அருணி லேக்கிலக் காயின வாங்கிரு புள்ளும். 142

சேவல் வண்கொடி யுயர்த்தினன் சிறைமயி லூர்ந்தான்
மூவர் தம்முத லாகிய முக்கணன் புதல்வன்
தேவர் பூமழை சொரிந்தனர் தேவர்தஞ் சிறையை
நீவி விண்குடி யேற்றின னிலத்திடை மீண்டான். 143

கமலம் பூத்திடத் தீர்த்தமொன் றகழ்ந்துபே ரூரின்
அமிழ்த லிங்கத்தி னருச்சனை புரிந்துசென் றமரர்
தமது வைப்பெனப் போற்றுறு மருச்சுனச் சயிலங்
குமர நாயக னமர்ந்தனன் குவலயம் போற்ற. 144

மருத வெற்பிடை வதிதரு முருகனைப் பணிவோர்
பொருவி லன்னவன் புகழ்களைக் கேட்பவர் தாமும்
ஒருவி வன்பகை வெறுக்கைபெற் றும்பரா யிற்றில்
அருளொ டுங்கலந் தானந்தத் தவசராய்த் திளைப்பார். 145

---

142. இரண்டு துண்டுகளாகக் கிடந்த சூரபன்மன் எழுந்து கோழியும் மயிலுமாக வடிவங்கொண்டு போருக்கு வந்தான். புனிதராகிய முருகக்கடவுள் வருக என்று அருளினல் கடைக்கண் சாத்தினர்.

குக்குடம் - கோழி. பொரு இல் - ஒப்பில்லாத. மஞ்ஞை - மயில். சமர்க்கு - போர்செய்யும்பொருட்டு.

143. முருகக்கடவுள் சேவலை வலமிக்க கொடியாக மேலே உயர்த்தினர், தோகையையுடைய மயிலை வாகனமாகக் கொண்டு ஊர்ந்தருளினர். தேவர்கள் பூ மழை சொரிந்தனர். தேவர்களுடைய சிறையை மீட்டு விண்ணிற் குடிபுகச் செய்தருளினர். பின்பு நிலவுலகுக்கு மீண்டார்.

முக்கணன் - சிவபெருமான்.

144. பேரூரிலே தீர்த்தமொன்று உண்டாக்கி, அமுதலிங்கேசரைப் பூசித்துச்சென்று, தேவர்கள் தம்முடைய வைப்பு எனப்போற்றும் மருதவரையைச் சார்ந்து, உலகம்போற்றுமாறு குமரநாயகன் விற்றிருந்தருளினர்.

அருச்சுனச் சயிலம் - மருதமலை.

145. மருதவெற்பிலே விற்றிருந்தருளும் முருகக்கடவுளை வணங்குகின்ற வர்களும், ஒப்பற்ற அப்பெருமான் புகழைக் கேட்கின்றவர்களும், கொடும் பகை யினின்று நீங்கிச் செல்வங்களைப் பெற்றுத் தேவர்களாய் இன்பந்துய்த்திருந்து இறுதியில் அருளுடன் கலந்து ஆனந்த பரவசராய்த் திளைத்திருப்பார்கள்.

அங்கண் மாநிலஞ் சுமதியென் றறையுநான் மறையோன்
பொங்கு தீவினை புரிந்தவன் புரையில்வான் கதியில்
தங்கி ஞனெனி ஞதிமா புரத்திடைத் தவத்தால்
நங்க ணதனை நாடுவார்க் குருதது முளதோ. 146

என்று கூறலு முனிவரர் சூதனை யிறைஞ்சி
நன்று கூறினை யுய்ந்தன நவைபயில் சுமதி
ஒன்றும் வான்கதி யுற்றன னென்றனை விளங்க
மன்ற வோதுதி யெனவெதிர் வழங்குவன் சூதன். 147

மருதவரைப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1070

வெற்பிடை: இடை - ஏழனுருபு. வதிதரு - தங்கும். பொருவில் - ஒப்பில்லாத. ஒருவி - நீங்கி. வெறுக்கை - செல்வம். உம்பர் - தேவர். அவசர் - பரவசமுடையார்.

146. நிலவுலகத்திலே சுமதி என்னும் ஓர் அந்தணன், மிக்க தீவினை புரிந்தவன், குற்றமற்ற சிறந்த முத்திபெற்றுய்ந்தான் எனில் ஆதிமாபுரத்தில் சிவபெருமானைத் தவஞ்செய்து பூசிப்போருக்குக் கிடையாத பொருளுமுண்டோ?

அங்கண் - இடமகன்ற. வான்கதி - சிறந்த முத்தியுலகம். அங்கண் நாதன் - சிவபெருமான்.

147. என்று கூறக்கேட்ட நைமிசாரணியவாசிகள் சூதமாமுனிவரை வணங்கி, நன்றுகூறினீர்; நாங்கள் உய்ந்தோம். குற்றச்செயல் மிக்க சுமதி சிறந்த முத்தியை யடைந்தான் என்று அருள்செய்தீர்; அதனை எங்கட்கு விளங்குமாறு நன்கு சொல்லியருளுவீராக என வேண்டினர். சூதமுனிவர் அவர்களுக்கு மேலும் சொல்லுவாராயினர்.

நவை - குற்றம். மன்ற - மிகுதியாக. எதிர்வழங்குவன் - விடைகூறத் தொடங்கினர்.

பதினைந்தாவது

சுமதி கதிபெறுபடலம்

பங்கயப் பொய்கை யுகளும் பருவரால் பாய்ந்து முட்டத்
துங்கக் கமுகின் மடறுமியப் பைங்கனி கள்சொரி யாநிற்குந்
தெங்கு மிடைந்த மகாராட்டிர மென்னுந் தேயந் தன்னில்
தங்கு மறையோ னொருவன் றதும்பெயர் மற்றெச்ச தேவன். 1

அன்று னெடுநா ளருந்தவங்க ளெச்சங்க ளாற்றி முக்கண்
முன்னோ னருளான் மனைக்குரிமை பூண்ட முகிலன்ன கூந்தல்
மின்னே ரிடையாண் முலைகறுப்பக் கண்குழிய விளர்ப்ப மாமை
நன்னா ளிடையே யுயிர்த்தா ளொருமைந் தனகர் கொண்டாட. 2

தமர்க ளுடன்மகிழ்ந்து தாதைசடங் கனைத்துந் தகவி னுற்றிச்
சுமதி யெனுநாம மிட்டழைத்தான் றேன்றலுமப் பெயருக் கேற்பத்
திமில மறைபயின்று தெள்ளிப் பலகலையுஞ் சீல மாதி
அமைதி பெறவொழுகி யாறடுத்த வொருபதாண் டாயு ளுற்றான். 3

---

1. தாமரைப் பொய்கைகளில் பிறழும் வரால்மீன்கள் பாய்ந்து மோதுவதனால் பாக்கு மரங்களிலுள்ள மடல்கள் கிழியப் பசிய பழங்களை விழ்த்துகின்ற தென்னை நெருங்கியுள்ள மகாராட்டிரம் என்னும் தேசத்தில் பிராமணகுலத்தில் தோன்றிய ஒருவன் எச்சதேவன் என்னும் பெயருடையவன்.

பங்கயம் - தாமரை. பொய்கை - மானுடரால் ஆக்கப்படாத நீர்நிலை. துமிய - கிழிய. எச்சம் - யக்ஞம், யாகம்.

2. அந்தப்பிராமணன் நெடுநாள் அரிய தவங்களைச்செய்து யாகங்களையும் இயற்றி மூன்று கண்களையுடைய சிவபெருமான் திருவருளால் மனைவி முலைக்கண் கறுப்பு நிறத்தையடைய, கண்கள் குழிவிழ, மாமை நிறம் வெளிர்ப்ப, நல்ல சுப முகூர்த்தத்தில் நகரத்திலுள்ள யாவரும் கொண்டாடும்படி ஒரு அழகிய மைந்தனைப் பெற்றெடுத்தாள்.

முகிலன்ன - மேகம்போன்ற. மின் நேர் இடை - மின்னலையொத்த மருங்குல். மாமை - பொன்போன்ற தேமல். முலைக்கண் கறுத்தல், கண்குழிதல், உடல் விளர்த்தல் முதலியன கருக்கொண்டோருக்கு நிகழ்வன. "செய்யவாய் வெளிறுது துணைமுலைக்கண் கருகாது சேல்போல் நீண்ட, மையவாய் மதர்த்த கருங் கண்பசவாது" உமாதேவியாரைக் காஞ்சனமாலையார் பெருமல் எடுத்தணைத்தாள் என்ற பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடல் காண்க.

3. சுற்றத்தாருடன் மகிழ்ச்சியடைந்து, தந்தையானவன் செய்யவேண்டிய சடங்குகளையெல்லாம் நன்றாகச்செய்து முடித்து, சுமதி என்னும் பெயருமிட்டு

தெய்வ மறையோன் சிவதாமா வென்ஞெருவன் சீர்சால் கற்பின்
தையன் மனைவி வயிற்றுதித்த பேரழகின் றனயை தன்னை
உய்யு நெறிபலவு முள்ளா னிவற்களித்த லூழா மென்று
கையி னறும்புனலோ டீந்து கடியயருங் காட்சி கண்டான். 4

திமிரப் பிழம்பைத் தெளித்தெடுத்து வார்த்தனைய தேம்பெய் கோதைக்
குமரி நலன்முழுதுங் கூட்டுண்டு வாழுநாட் குமர னென [கோலம்
சுமதி யெனும்பெயரான் றோடவிழ்ந்த கொன்றையந்தார்த் தொல்லோன்
அமரர் தொழும்விழவு நோக்கப் பருப்பதத்தை யடைத லுற்றான். 5

வேறு

மல்லி கார்ச்சுன மால்வரை நாயகன்
புல்லம் வார்கொடி யேற்றிப் புவிதொழச்
செல்லு நல்ல திருவிழ வின்வளம்
எல்லி யும்பக லுந்தொழு தேத்துநாள். 6

அழைத்தான். புத்திரனும் இட்ட பெயருக்கேற்ப வேதங்களை ஓதி, பலகலைகளையும் பயின்று, ஒழுக்கம் அடக்கம் முதலியவற்றால் மேம்பட்டுப் பதினறு பிராயமுற்றான்.

தமர் - சுற்றம். தாதை - தகப்பன். திமிலம் - ஒலி: சந்தை சொல்லிப் பயின்று. தெள்ளி - தெளிவாக. ஆறு அடுத்த ஒருபது - பதினறு.

4. தெய்வத்தன்மையுடைய வேதியனுகிய சிவதாமா தன் புத்திரியை இவனுக்குக் கொடுத்தலே முறை என நினைந்து தாரைவார்த்துக் கொடுத்து மணஞ் செய்யும் காட்சியையும் கண்டான்.

தனயை - புத்திரி. ஊழ் - முறைமை. கடி அயரும் - கலியாணம் செய்யும். காட்சி - கோலம்.

5. இருளின் திரளை வடித்தெடுத்து வார்த்தாற்போன்ற கூந்தலையுடைய சிவதாமாவினது மகளின் நலத்தை நன்ருக அநுபவித்து வாழுங்காலத்தில் சுமதி சிவபெருமானுடைய விழாக்காணும் விருப்புடையவனய்த் திருப்பருப்பதத்தை அடைந்தான்.

திமிரம் - இருட்டு. பிழம்பு - திரட்சி. தோடு - இதழ். கொன்றையந்தார்த் தொல்லோன் - சிவபெருமான். பருப்பதம் - மல்லிகார்ச்சுனம்.

6. மல்லிகார்ச்சுனத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானுக்கு இடபக்கொடி யேற்றி, உலகமுழுதும் வணங்கச் செய்யும் திருவிழாவின் வளப்பத்தை இரவும் பகலும் தரிசித்து வணங்கி வருங்காலத்தில்.

புல்லம் - இடபம். எல்லி - இரவு. மல்லிகார்ச்சுனம் ஸ்ரீசைலம் எனவும் பெயர்பெறும். திருநந்திதேவர் பூசித்த தலம். தேவார முதலிகள் மூவர் திருப்பதிகமும் பெற்றுள்ளது.

அமிழ்தந் துய்க்கு மமையத்துப் பித்துறீஇ
உமிழ்தல் செய்து விடத்தையுண் டாலெனக்
குமிழ்த ருங்கொடி நாசியொ ருத்திபால்
இமிழ்த ரும்படி யெய்திய வூழினல். 7

வீதி யின்வள நோக்கவெ ளிக்கொடு
போது வான்கவி னுற்பொலி வுற்றொரு
மாதர் வீதி வளங்கண்டு புக்குழி
ஆத வன்கதி ராலயர் வெய்தினன். 8

பந்தர் நீண்டு பனிப்புது நீருகுத்
திந்தி ரன்புர மெய்திய தாமெனச்
சுந்த ரங்க டொகுத்ததொர் மாளிகை
முந்து றக்கண்டு முன்கடை நண்ணினன். 9

மணமுஞ் சீதமும் வெளவிச் சிறுவளி
அணவி வெப்பம கற்ற வயர்வுயிர்த்
துணர்வு மீக்கொ ளுவகைய னும்மனைப்
புணர்கின் றார்திறங் கேட்கப் புகன்றனன். 10

---

7. அமுதத்தை யுண்ணும் சமயத்தில் பைத்தியங்கொண்டு அதனை உமிழ்ந்து விட்டு நஞ்சை உண்டாற்போல, குமிழம் பூவையொத்த நாசியையுடைய ஒருத்தியினிடத்துக் கட்டுண்ணும்படி அடைந்த ஊழ்வினையால்.

பித்து உறீஇ: உறீஇ - உற்று. நாசி - மூக்கு. இமிழ்தல் - கட்டுண்ணல். ஊழ் - முன்வினை; முறைமை எனினுமாம்.

8. வீதியின் வளப்பத்தைக் காணும்பொருட்டு வெளியே செல்லுகின்றவன் அழகினால் மிக விளங்கியுள்ள ஒரு சிறந்த வீதியின் வளத்தைப் பார்த்துச் சென்றவிடத்து சூரிய வெப்பத்தால் மிகச் சோர்வுற்றான்.

போதுவான் - வினையாலணையும்பெயர். கவின் - அழகு. மாதர் - காதல்; விருப்பத்தைத்தரும் என்க. புக்குழி: உழி - இடத்து. ஆதவன் - சூரியன். கதிர் - கிரணம். அயர்வு - சோர்வு.

9. பந்தர் நீண்டுளதாய்க் குளிர்ந்த நீரைத் தெளித்து இந்திரபுரியை அடைந்தாற்போன்று அழகுகள் நிறைந்த ஒருமாளிகை எதிர்ப்படக்கண்டு அதன் முன்றிலை (அவன்) அடைந்தான்.

பனி - குளிர்ச்சி. உகுத்து - தெளித்து. இந்திரன்புரம் - அமராவதி. சுந்தரம் - அழகு. முன்கடை - முன்புறம்.

10. வாசனையும் குளிர்ச்சியும் மிக, மெல்லிய காற்றுப் பொருந்தி வெப்பத்தை மாற்றச் சோர்வு நீங்கி உணர்வுமிக்கு மகிழ்வுடையவனாய் அந்த வீட்டில் வசிப்போரைப் பற்றி விசாரிக்கத் தொடங்கினான்.

மழைத வழ்ந்தெழு மாளிகை யின்னதில்
தழைவ ளத்தொடு தங்குகின் ருர்தமை
விழைகின் றேற்கு விளம்புதி யென்றனன்
உழைநின் ருெரு வன்கிளப் பானரோ. 11

வேறு

திருந்திய விந்நகர்த் தேத்துச் சீர்மிகுந்
திருந்திடு மந்தண ரிருக்கை நாப்பணே
பொருந்திய வாழ்க்கையோர் புனித வேதியன்
அருந்தவத் துயிர்த்தவ ளழகி னெல்லையாள். 12

பொன்ஞெளி திகழ்தரு பொருவின் மாமையான்
மன்னுமே மாங்கியென் றுரைக்கு மாண்பினள்
அன்னவ ளிந்நக ரமர்ந்த வாழ்க்கையோர்
தொன்னெறி வேதியன் றுணைவி யாயினள். 13

சீதம் - குளிர்ச்சி. சிறு வளி - இளங்காற்று. அணவி - பொருந்தி. அயர் வுயிர்த்து - சோர்வு நீங்கி.

11. மேகமண்டலத்தைப் பொருந்தி உயர்ந்த இம்மாளிகையில் மிக்க வளப்பத்துடன் வாழ்கின்ருரை விரும்பிக்கேட்கும் எனக்கு விடைகூறுக என்ருன். பக்கத்திலே நின்ற ஒருவன் விடைகூறத் தொடங்கினன்.

மழை - மேகம். விழைகின்றேற்கு - விரும்பிக் கேட்கும் எனக்கு. உழை - பக்கம். கிளப்பான் - சொல்லுவான்.

12. திருத்தமாகிய இந்நகரினிடத்துச் சிறந்த அந்தணர்சேரியின் நடுவிலே பொருந்திய வாழ்க்கையையுடைய தூய வேதியன் அருந்தவப் புதல்வி, அழகினுக்கு ஓர் எல்லையாயுள்ளாள்.

தேத்து - இடத்து. நாப்பண் - நடுவிடம். புனிதம் - தூய்மை. உயிர்த்தவள் - பெறப்பட்டவள்.

13. பொன்போலும் ஒளிவிளங்கும் ஒப்பற்ற நிறத்தினுல் ஏமாங்கி என்னும் பெயரிட்டு அழைக்கப்பட்டவள். அவள், இந்நகர வாழ்க்கையையுடைய நல்லொழுக்கம் உள்ள பிராமணனுக்கு மனைவியாயினள்.

மாமை - நிறம். ஏமாங்கி: ஏமம் - பொன்: பொன்னி. துணைவி - மனைவி.

இடை நில நாடொறு மினைந்து தேய்தரப்
புடைபரந் தெழுந்தபூண் முலைகள் போர்மதன்
கொடைபயி லிருநிதிக் குப்பை யாமென
நடைபயின் மங்கையாம் பருவ நண்ணினாள். 14

நாண்மட மச்சநற் பயிர்ப்புத் தோட்டியும்
ஆண்மைசெய் பாகனு மணியுந் தூசமும்
ஏண்மலி நிகளமு மிரியக் காமமாம்
மாண்மதம் விறலின் வரம்பி கந்தனள். 15

குருகுகைப் புழைக்கையால் வளைத்தக் குஞ்சரம்
வருமுலைக் கோட்டினான் மார்ப மூத்துபு
மருமலி யுவளக வனத்தி லாடவர்
திருவெனுங் கவளம்வாய் தெவிட்டிச் செல்லுமே. 16

---

14. அவள் நாடோறும் இடைதேயும்படி பக்கங்களிலே பரவிப் பருத்துப் புடைத்து மேலெழுந்த நகில்கள் மன்மதன் கொடையாக வழங்கும் மிக்க நிதிக் குவியல் என்னும்படி தோன்ற மங்கைப் பருவத்தை அடைந்தாள்.

இடைநிலம் - இடையாகிய நிலம். இனைந்து - வருந்தி. புடை - பக்கம்.

15. நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் அங்குசமும், ஆண்மை என்னும் பாகனும், மணியும் கட்டும்கயிறும் வலிமிக்க சங்கிலியும் கெடக் காமமாகியமதமானது விறுகொண்டெழுதலினால் வரம்புகடந்து அவள் ஒழுகலாயினாள்.

நாற்குணங்களை அங்குசமாகவும், அடக்கியாளும் குணத்தைப் பாகனாகவும், காமத்தை மதமாகவும் உருவகம் செய்து அவளை யானையாக உருவகம் செய்யாமையின் இது ஏகதேச உருவகவணி.

தூசம் - யானைக்கழுத்திடு கயிறு; புரசை என்பதும் அது. நிகளம் - சங்கிலி, விலங்கு. ஏண் - வலிமை. மதங்கொண்ட யானை அங்குசத்தையும் (தோட்டி), பாகனையும், நிகளத்தையும் மதியாது தன் மனங்கொண்டவாறு ஒழுகுதல் இயல்பு. விறுதல் - மேம்படுதல்.

நாணம் - செய்யத்தகாதவற்றில் மனமொடுங்குதல். மடம் - எல்லாம் அறிந்தும் ஒன்றும் அறியாது போலிருத்தல்; கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை எனவும்படும். அச்சம் - புதியதைக்கண்டவிடத்து அஞ்சுதல். பயிர்ப்பு - தன் கணவனல்லாத ஆடவரது ஆடைமுதலியன தன்மேற்பட்டால் அருவருத்தல்.

16. வளையல்களை அணிந்த கையாகிய துதிக்கையினால் வளைத்து, அந்த (ப்பெண்ணாகிய) யானை வளர்ந்துவரும் நகில்களாகிய தந்தங்களால் மார்பிலே நன்கு தழும்புண்டாகக் குத்தி, அந்தப்புரமாகிய காட்டிலே ஆடவர்களுடைய செல்வமாகிய கவளத்தையுண்டு தேக்கித்திரியும்.

மங்கையிற் பெருங்கவின் மருவ லான்வளை
அங்கையா னுகிய வணங்குக் காற்றல்வீழ்
துங்கமா தவரெனத் துறந்து ளோருளும்
இங்கிவள் விழிவலைக் கிடர்ப்ப டாரிலை. 17

தந்தையே யாகநற் றமைய னுகவச்
சுந்தரி விழிவலைத் துவக்குண் டானெனிற்
பிந்துற வருவன வருகெ னுப்பிழைத்
தந்தின்மென் முலைதழா தகறற் பாலனே. 18

புனையிழை யிவள்செயல் புனலொ டேற்றவன்
அனைவரும் புகறர வறிந்தும் பன்முறை
மனைவயிற் கண்டுமென் மரபு குன்றிற்றென்
றினைபவன் கோறலை யெண்ணி னனரோ. 19

யானை துதிக்கையால் வளைத்திழுத்துக் கொம்பினல் குத்திக் காட்டிலே கவளத்தையுண்டு திரியும்; ஏமாங்கியும் வரும் ஆடவரைக்கையாலணைத்து, நகில்கள் அவர் மார்பிலே நன்ருக ஞெமுங்கும்படி புல்லி, அந்தப்புரத்திலே அவர் செல்வம் முழுவதையும் பறித்துக்கொண்டு மகிழ்ந்து உலாவுவாள் என்க. முற்றுருவகம்.

குருகு - வளையல். புழைக்கை - துதிக்கை. குஞ்சரம் - யானை. கோடு - கொம்பு. உவளகம் - அந்தப்புரம்; மருமலிவனம். கவளம் - வாயளவுகொண்ட உணவு.

17. மங்கைப் பருவத்திலே பெரிய அழகு பொருந்துதலால் ஏமாங்கியின் கண்வலையிலகப்பட்டு, திருமாலாகிய மோகினிபால் தமது தவவலிமையெல்லாம் கெட்டொழிந்த தாருகவனமுனிவர் போலத் துறவிகளுள்ளும் துன்பப்படாதவர் இல்லை.

கவின் - அழகு. வளைஅங்கையான் - பாஞ்சசன்னியம் என்னும் சங்கையேந்திய திருமால். அணங்கு - பெண்: ஈண்டு விஷ்ணு மோகினி. விழிவலை : பண்புத்தொகை.

18. தந்தையேயாயினும் தமையனுயினும் ஆக அந்த அழகியின் விழிவலையிலே கட்டுண்டான் எனில், மேல்வரக்கடவன வருக என்று முறைமையில் தப்பி அவளை அணையாமல் விட்டு நீங்குவானே? நீங்கான்.

துவக்குண்டல் - கட்டுப்படல். பிந்துறவருவன: பகை பழி பாவம் அச்சம் என்பன நான்கும் வந்துசேரும். அறம் புகழ் கேண்மை பெருமை இந்நான்கும் ஒருக்காலும் சேராவாம். அரசதண்டனைக்குள்ளாதல், நரகத்துக்கே ஏதுவாதல்: "காணிற் குடிப்பழியாம் கையுறிற் கால்குறையும், மாணின்மை செய்யுங்கா லச்சமாம் - நீணிரயத், துன்பம் பயத்தல்" முதலியனவும் பிறவுமாம்.

19. ஏமாங்கியின் பொல்லாத செயலைக் கணவன் பலரானும் அறிந்தும், வீட்டிலே பன்முறை நேராகக்கண்டும் என்குலம் பெருமையிழந்தது என எண்ணி வருந்தினவனுய் அவளைக் கொலைசெய்ய நினைந்தான்.

கோறலுக் குடன்படுங் கொண்கன் செய்தியைத்
தூறலுக் குடன்படுந் துணைவி முன்றெரிந்
தாறலைத் திருநிலத் தடக்கிப் பொன்னினும்
வேறலைச் செய்தனள் வித்த வெம்பழி. 20

நாண்டகு மறையவர் நல்ல சேரியின்
வேண்டியாங் கொழுகுமவ் வினைமுற் றுமையின்
மாண்டகு பரத்தையர் வாழ்வ் வீதியிற்
காண்டகு மிம்மனை கவினச் செய்தனள். 21

அரத்தகச் சிறடி யருப்புக் கொங்கையாள்
பரத்தையர் தொழிலெலாம் பயின்று காளையர்
வரத்தினை யேற்றிவண் வதிகின் றாளென
விரித்தன னிதுவினை யிருக்கும் வேலையில். 22

பரியக நூபுரம் பாதத் தேங்கிட
விரியொளி மேகலை யரையின் மின்செய
வரியளி குலங்கள்வார் குழலிற் சூழ்தரத்
தெரியிழை மாதரா ளாங்குச் சென்றனள். 23

புனை இழை - அலங்கரித்த ஆபரணத்தையுடையாள்; அன்மொழித்தொகை. இனைபவன் - வருந்துபவன். கோறல் - கொல்லுதல்.

20. கொல்ல மனம்வைத்த கணவன் செயலைப் பழிக்கு உடன்படும் மனைவி முன்னரே அறிந்து அவனைக் கொன்று பூமியில் புதைத்துப் பொன்னினுலும் வென்றாள், கொன்ற கொடும்பாவம்.

கொண்கன் - கணவன். தூறல் - பிறரால் தூற்றப்படுதல். அடக்கி - புதைத்து. வேறல் - வெல்லுதல். வித்த - கொன்ற.

21. சிறந்த பார்ப்பனச்சேரியில் இவள் விரும்பியபடியெல்லாம் நடக்கும் செயல் முடிவு பெருமையினுல் பரத்தையர் வசிக்கும் இந்த வீதியில் அழகிய இந்த மாளிகையைக் கட்டி முடித்தாள்.

22. செம்பஞ்சுக்குழம்பு ஊட்டப் பெற்ற சிறிய பாதத்தையும், தாமரை மொட்டுப்போன்ற நகில்களையும் உடைய ஏமாங்கி பரத்தையர் தொழில்களெல்லாம் இடைவிடாது பழகிக் காளைப்பருவமுடைய ஆடவர் வருகையை எதிர் நோக்கி இங்கே வசிக்கின்றாள் என்று விரித்துரைத்தான். அதனை நன்கு விசாரித்திருக்கும் வேளையில்.

அரத்தகம் = அலத்தகம் - செம்பஞ்சுக்குழம்பு. வரத்து - வருகை. ஏற்று - எதிர்கொண்டு.

23. பாத கிண்கிணி, சிலம்பு முதலியன ஒலிக்க, மேகலாபரணம் இடையிலே பிரகாசிக்க, வண்டுக்குழாங்கள் கூந்தலிற்சூழ ஏமாங்கி அங்கேவந்தாள்.

சிறுவளி படர்வழித் தேம்பெய் கோதையின்
உறுமன மெழவுகைத் தொல்கி நின்றனள்
முறுவலித் தொருமுலே தோற்றி மூடினள்
நறுமலர் விழிப்படை சிறிது நாட்டினுள். 24

முறுகிய காதலின் மொத்துண் டாலென
உறுவளி நாசியி னுயிர்த்துச் செம்மலேப்
பெறுவதற் கருந்தவம் பெரிது மாற்றினேன்
மறுமையு மிம்மையும் வழுவி லேனென்ருள். 25

துடித்தன வெனக்கிடத் தோளுங் கொங்கையும்
வடித்தவேல் விழியு நல் வரைப்பிற் பல்லியு
நொடித்தன விரிச்சியு நுவலப் பட்டன
கடைத்தலேக் குமரநிற் காண்டற் கென்றனள். 26

பரியகம் - பாதகிண்கிணி. நூபுரம் - சிலம்பு. அளிகுலம் - வண்டுக்கூட்டம். தெரி இழை - ஆராய்ந்த ஆபரணங்களே உடையாள்.

24. இளங்காற்று வீசுதலால் கூந்தலின் மணம்வீசச் செலுத்தி அசைந்து நின்ருள். புன்முறுவல்செய்து ஒரு நகிலேக்காட்டி மூடினுள், நீலமலர் போன்ற கண்களாகிய படைக்கலத்தைச் சிறிது செலுத்தினுள்.

சிறுவளி - இளங்காற்று. கோதை - மாலேயையணிந்த கூந்தல். உகைத்து - செலுத்தி. ஒல்கி - அசைந்து. முறுவல் - புன்சிரிப்பு.

25. முறுகியெழுந்த அன்பினுலே மோதப்பட்டாற்போலப் பெருமூச் செறிந்து, செம்மலாகிய உம்மைப் பெறுவதற்கு அரும்பெருந் தவஞ்செய்தேன். இம்மைப்பேறு மறுமைப்பேறுகளில் இனிக் குறைவொன்றுமின்று என்ருள்.

மொத்துண்டல் - மோதப் படல். உறுவளி - மிக்க காற்று.

26. எனக்கு இடப்பக்கத்தோளும் நகிலும் துடித்தன. இடக்கண்ணும் துடித்தது. நல்ல இடத்திலே பல்லியும் சொல்லியது. நற்சொல்லேயும் கேட்டேன். முன்றிலிலே குமாரபருவத்தையுடைய உம்மைக் காணும்பொருட்டே இவைகள் நிகழ்ந்தனபோலும்.

பெண்களுக்கு இடந்துடித்தல் நற்குறி. வலந்துடித்தல் தீக்குறி.

வடித்த - கூர்மையாகச் செய்யப்பட்ட. வரைப்பு - இடம். நொடித்தன - சொன்ன. விரிச்சி - நற்சொல். கடைத்தலே - வீட்டின் முன்புறம்.

நென்னலின் வைகறை நீங்கு மெல்லையில்
தன்னிக ரில்லதோர் தரள மாலிகை
கன்னியென் கரந்தரக் கனவி னேனிதோ
நின்னையுய்த் தளித்தன ணிமலை யென்றனள். 27

அயலவர் போற்கடைத் தலைய மர்ந்தனிர்
வியன்மனை நுமதியா னும்மின் வேறலேன்
பயின்மனை யுவளகம் படர்கம் வம்மினென்
றுயிரினு முரிமைசெய் தொண்கை பற்றினள். 28

வேறு

ஏமாங்கி விழிக்கணை யோடெழின் மார னெய்த
வீமாண் கணை பட்டுள மற்றுவி கார மென்னுந்
தீமாந்த வருந்திய பூசுரன் செங்கை யன்னாள்
தூமாண்கரத் தாற்றொடச் சோர்ந்தழி யாவி பெற்றான். 29

உருவத்திடை யோங்கி யுருக்கு முலப்பி னேய்க்கும்
பருவத்தொடு நல்கு மருந்துபல் கோடி யுள்ள
புருவச்சிலை கோலி விழிக்கணை பூட்டி மாதர்
வருவித்திடு நோய்க்கவ ரல்லது மற்று முண்டோ. 30

---

27. நேற்று விடியற்காலத்தில் ஒப்பில்லாத ஒரு முத்துமாலையைக் கன்னிப் பருவமுடையவள் ஒருத்தி தரக் கனவுகண்டேன். அந்த நிமலை உம்மை என்பால் அளித்தருளினள் என்றாள்.

நென்னல் - நேற்று. வைகறை - விடியற்காலம். தரளமாலிகை - முத்து மாலை. கனவினேன் - கனாக்கண்டவளானேன். விடியற்காலத்துக்கனா விரைவிற் பலித்தது என்றாள்.

28. அயலார்போல வீட்டின் முன்புறத்திலே இருக்கின்றீர். சிறந்த இந்த வீடு நும்முடைதே, நானும் நும்மின் வேறல்லேன். வீட்டின் அந்தப்புரத்துக்குச் செல்வோம் வாரும் என்று உயிரினும் இனிய அன்புடையவளாக அவன் கையைப் பிடித்து அழைத்தாள்.

உவளகம் - அந்தப்புரம்.

29. ஏமாங்கியின் கண்ணம்புடன் மன்மதன் எய்த பூவம்பும்பட்டு, உள்ளம் காமவிகாரமென்னும் நெருப்புண்ணுதலால் வருந்திய அந்தணன் தன்கையை அவள் பிடித்தவுடன் சோர்ந்து அழிந்த உயிரைப்பெற்றான்.

விழிக்கணை - கண்ணாகிய அம்பு. மாரன் - மன்மதன். வீ மாண் கணை : வீ - மலர் : மலரம்புகள். மாந்த - உண்ண.

30. உடம்பிலே மிகுந்து உருக்கும் எல்லையில்லாத நோய்களுக்கும் அந்த அந்தக் காலங்களிலே கொடுக்கும் மருந்துகள் பல கோடிக்கணக்காக உள்ளன.

விண்ணோங்கி வளர்ந்த பருப்பத மீது நெற்றிக்
கண்ணோங்கிய நம்பன் விழாக்கவின் கண்ட பேறே
பண்ணோங்கிய மென்மொழி யாள்கரம் பற்றிற் றென்ன
எண்ணோங்கிய நெஞ்சொ டெழுந்துட னேகி னானே. 31

மலர்மெல்லணை மாதொடும் வைகினன் மாதி னேவல்
அலர்மென்குழ லார்சிலர் சாந்த மலங்கன் மாலை
பலவுங்கொடு முன்னுற வேந்தினர் பைம்பொ னங்கி
குலவுஞ்சும திக்கணி யாக்கின டானுங் கொண்டாள். 32

வேறு

மாடகத் திவவு நல்லியாழ் மதுரமெல் லிசைகா தூட்டிப்
பாடகத் தளிர்மென் பாதப் பைங்கிளி யரிய லூட்ட
ஆடவர் திலக மன்னு னநங்கவேள் சரங்கள் பாய
ஓடரித் தடங்க ணங்கை யுருவினைத் தழுவிக் கொண்டான். 33

புருவமாகிய வில்லைவளைத்துக் கண்ணாகிய அம்பைப் பூட்டி, பெண்கள் வருவிக்கும் நோய்க்கு அவரேயல்லாமல் அதனைத்தீர்த்தற்கு வேறு மருந்தும் உண்டோ? இல்லை.

உருவம் - வடிவம். உலப்பில் - கேடில்லாத.

31. திருப்பருப்பத மலையிலே சிவபெருமானுடைய விழாவின் அழகைத் தரிசித்ததன் பயனே ஏமாங்கியின் கரம் என்னை வலிந்து பற்றியது என்று கருதிய உள்ளத்தவனாய் எழுந்து அவள் பின் தொடர்ந்து சென்றான்.

பருப்பதம் - சீசைலம். எண் - எண்ணம்; ஆலோசனை.

32. சென்ற அந்தணன் மலர்ப்படுக்கையில் அவளோடு இருந்தான். அவளுடைய வேலைக்காரிகளில் சிலர் சந்தனம் மலர்மாலை முதலியவற்றை ஏந்திக் கொண்டு முன்னே வந்து நின்றனர். அவைகளையெல்லாம் ஏமாங்கி சுமதிக்கு அணிந்தாள், தானும் அணிந்துகொண்டாள்.

அணை - படுக்கை. பைம்பொனங்கி - ஏமாங்கி.

33. முறுக்காணியோடு கூடிய நரம்புக் கட்டினையுடைய யாழிசையை அவனுடைய செவிக்கு அமுதாக்கி, பாடகம் என்னும் அணிகலத்தையணிந்த பாதங்களையுடைய கிளிபோல்வாள் தன் மொழியமுதையும் கலந்தூட்டச் சுமதி மன்மதன் அம்புகள் தைக்கப் பெறுதலால் அவள் உடம்பைக் கட்டித் தழுவிக் கொண்டான்.

மாடகம் - முறுக்காணி. திவவு - யாழ்க்கட்டு. பாடகம் - மகளிர் காலில் அணியும் ஒருவகை ஆபரணம். அரியல் - மொழியமுது; குறிப்புமொழி. அனங்கவேள் - மன்மதன்.

தாதிய ரெழினி விழ்த்துத் தணந்தனர் புறத்துப் போத
மாதினை யிடப்பான் முன்கை வலக்கையிற் சாய்த்துப் புல்லிப்
போதிவர் கூந்தல் சோரப் புணர்முலை வருடிப் பின்னிச்
சோதிவெண் டரளச் செவ்வாய்ச் சுவையமிழ் தாரத் துய்த்தான். 34

ஓதியு நுதலு நீவி யோடரிக் கடைக்க ணக்கிச்
சோதிய கவுள்கை மூல மாதிகள் சுவைத்துக் கொங்கை
ஆதிகள் புடைத்துக் கிள்ளி யங்கையாற் பிசைந்து தாள்கள்
நீதியி னல்குன் மாட்டு நிகழ்த்துவ பலவுஞ் செய்தான். 35

மூடிக மயூர பாத முழுமதி பாதித் திங்கள்
தோடவி ழுற்ப லாதித் தொகுகுறி நகத்தாற் பல்லாற்
பாடுறத் தோற்றிப் பூனை பன்னகங் குக்கு டாதிப்
பீடுறு கரண பேத நாடொறும் பிறங்கச் சேர்ந்தான். 36

---

34. தோழிகள் திரைச்சீலையையிட்டு மறைத்து அவ்விடத்தினின்றும் நீங்கினராய்ப் புறத்திலே சென்றனர். சுமதி ஏமாங்கியின் குழல் அவிழும்படி, நகில்களை வருடி, இடதுபக்கத்து முன்கையிலே தன்வலக்கையால் அவளைச் சாய்த்துப் புல்லி அமுதபானம் பண்ணினான்.

எழினி - திரைச்சீலை. "இடத்தூண் நிலையிடத்தே உருவு திரையாக ஒருமுக எழினியும், இரண்டு வலத்தூணிடத்தும் உருவு திரையாகப் பொருமுக எழினியும், மேற்கட்டுத் திரையாகக் கரந்து வரல் எழினியும் செயற் பாட்டுடனே வகுத்து என்க" என்பர் சிலப்பதிகார உரையாசிரியர்; "மேற்கட்டுத் திரையாய் நிற்பது ஆகாய சாரிகளாய்த் தோன்றுவார்க்கெனக் கொள்க" எனவும் கூறினர்.

வருடி - தடவி. செவ்வாய்ச் சுவையமிழ்து - அதரபானம். அதரம் - கீழுதடு.

35. மற்றும், கலவியிற் செய்தற்குரியனவாகிய கூந்தலையும், நெற்றியையும் கையால் தடவி, இன்பம் தரும் பொருட்டுக் கடைக்கண்களை நக்கி, கபோலம் கை மூலம் முதலியவற்றைச் சுவைத்து, பற்குறி நகக்குறி பாணிகொடுதட்டுதல் முதலியவைகளும் செய்து, கிள்ளுதல் பிசைதல் செய்து அல்குலிலேயும் பாதங்களிலும் செய்வன பலவும் செய்தான்.

36. மூடிகம் மயூரபாதம் முழுத்திங்கள் அர்த்தசந்திரன் நீலோற்பலம் முதலியனபோன்ற குறிகளை நகத்தினாலும் பற்களாலும் நன்றாகத்தோன்றச் செய்து, பூனை பாம்பு கோழி முதலியனபோலச் சித்திர கரணபேதங்களும் நாடோறும் விளங்குமாறு அவளோடு துய்த்திருந்தான்.

மூடிகம் - பெருச்சாளி. மயூரம் - மயில். உற்பலம் - நீலோற்பலம்: மூங்கில் இலை எனினுமாம். பாடுற - சிறப்பாக. பூனை - பூனை. பன்னகம் - பாம்பு. குக்குடம் - கோழி. கரணம் ஐந்து; அவை உத்தானிதம், திரியக்கு, ஆசிதகம், ஸ்திதம், ஆன்மிதம் என்பன. அவற்றின் பேதங்கள் நாற்பது; விரிந்த நூல்களிற் காண்க.

அறிந்தவ ரொருவ ரில்லா வயனக ராத லாலே
பறிந்திட நாணுஞ் செய்யும் பற்பல வொழுக்கும் விட்டுச்
செறிந்தொரு கலத்திற் றூனுந் தெரிவையு மொருங்கு துய்த்துப்
பிறிந்தில னுகிக் காமப் பித்தினிற் பெரிய னுனன். 37

இன்பமுஞ் சுமதி தன்பா லின்பமுஞ் சமமாக் கொண்டும்
பொன்பல வணியு மற்றும் புகழொடு மறிவி னேடுந்
தன்பர மாக்கிக் கொண்டு தபனிய மில்லா ரென்மாட்
டன்பின ராயி னென்னு மகல்கென்றுள் வளரே மாங்கி. 38

இளமையே கவினே கீர்த்தி பெறும்கலை யிங்கி தத்தின்
வளமையே யன்பே நல்ல வருணமே யேக போகம்
விளைவுசெய் திறனே மற்று மிக்குள ரேனும் பொன்னில்
தளர்வின ராயி னஞ்சே யிருமனத் தைய லார்க்கு. 39

"மயிலடி கொங்கை பொறிப்ப மணிகள் கவுட்கிடத்த, பயிலிதழ் மூடிகஞ் சேர்த்த வெரி நூற் பலம்வரிப்ப" எனக் களவுப்படலத்தும்; "பற்குறி நகக்குறிகள் பாணிகொடு தட்டல், நற்கமிழ்து துய்த்தல் களி நன்றெழ வணைத்தல், அற்கு கரணங்கள்" எனத் திருநகரப்படலத்தும் இந்நூலாசிரியர் கூறியமை காண்க. "பற்குறியும் நகக்குறியும் பாணிகொடு தட்டுதலும், ஓற்கமற வணைத்திடலும் உறுகளியிற் சுவைத்திடலும், அற்குகரணம் பிறவும்" (திருக்குடந்தைப் புராணம்)

37. தன்னைத் தெரிந்தோர் இல்லாத அயல் நகரமாதலின் நாணத்தை இழந்து, செய்கின்ற பலவகைப்பட்ட நல்லொழுக்கங்களையும் கைவிட்டு, ஒரு உண்கலத்தில் இருவரும் ஒருசேரவுண்டு, அவளைச் சிறிதுநேரமும் பிரிந்திருக்க இயலாதவனுய்ப் பெருங் காமப்பித்திலே திளைத்திருந்தான்.

பறிந்திட - பறிபோக. கலம் - பாத்திரம். துய்த்து - உண்டு.

38. இன்பம் அநுபவிக்குங்காலத்தில் தன்பால் இன்பம் சமமாகக்கொடுத்தும் சுமதிபால் இன்பம் சமமாகப் பெற்றும், பொன்னும் பல அணிகலன்களும், புகழும் அறிவுமாகிய எல்லாப் பொருள்களையும் தனதாக்கிக்கொண்டாள்; பின்பு பொருளில்லாதோர் என்னிடத்து அன்புடையவராய் ஒழுகுவதனுல் யாது பயன்? நீ அகல்வாய் என்றுள் ஏமாங்கி.

தன்பரமாக்குதல் - தனதாக்கிக்கொள்ளல். தபனியம் - பொன்.

"இன்பசுக முதலூட்டி யெப்பொருளு முறக்கவரும், வன்பமையும் குணம் பொதுநீர் மங்கையருக்கு இயல்பு" (குடந்தைப் புராணம்)

39. இளமை அழகு கீர்த்தி வலிமை கல்வி குறிப்பறிதல் அன்பு மரபு ஏக போக விளைவு முதலிய இன்னேரன்ன மிகுதிப்பாடுடையராயினும் பொன்னில்லாமல் வறுமைப்படுவராயின் இருமனப்பெண்டிராகிய பொதுமகளிருக்கு அது நஞ்சேயாம்.

இருமனப் பெண்டுங் கள்ளு மேமமாந் திருவை நீக்குங்
கருவியென் றறிஞ ரஞ்சக் கலங்கஞர் சுமதி யெய்திப்
பொருவிறன் றுதை யானேன் புரோகித வுரிமை பூண்ட
வெருளறு காசு மீர கண்டத்து வேந்தைச் சார்ந்தான். 40

தெரிவுறு குரவன் மைந்தன் றேம்பிய வறுமை நோக்கி
எரிமணிக் கலனுந் தூசு மிரணியக் குவையு நல்கி
உரிமைசெய் தரைய னேவ வொய்யென மீண்டு காளை
வரிசையி னெடுமே மாங்கி வளமனை யகத்துப் புக்கான். 41

என்னுயிர் வந்த தோவென் றெதிர்கொடு வணங்கி யென்னே
முன்னர்யா னசதி யாட மொய்பொருட் கேக லாமோ
வன்னதுங் கவலை யின்றி யாடுதற் கேது வென்றே
பின்னுறத் தடாமை நின்றேன் பெருமவந் தனையே யென்றாள். 42

எறுழ் - வலி. கலை - கல்வி. இங்கிதம் - குறிப்பு. இருமனப்பெண்டிர் - பொதுமகளிர். "ஆணமில் நெஞ்சத் தணிநீலக் கண்ணார்க்குக், காணமில் லாதார் கடுவனையர்" (நாலடி நானூறு - 374). "இருமனம் - ஒருவனோடு புணர்தலும் புணராமையும் ஒருகாலத்தே யுடையமனம்". "பொருட்பெண்டிர் - கொடுப்பாரை விரும்பாது பொருளையே விரும்பும் பொதுமகளிர்". (திருக்குறள் பரிமேலழகர் உரை)

40. இருமனப்பெண்டிராகிய பொதுமகளிரும். கட்குடித்தலும், பாது காவலாகிய செல்வத்தை அழிக்கும் கருவியாகுமென்று அறிவுடையோர் அஞ்சும் படியாகச் சுமதியானவன் கலங்கும் துன்பத்தை யடைந்து தன் தந்தைக்குப் புரோகித உரிமையுள்ள காச்மீரதேசத்து அரசனைச் சென்று சேர்ந்தான்.

ஏமம் - பாதுகாவல். அஞர் - துன்பம். இருமனப்பெண்டிர் - கவர்த்த மனத்தினையுடைய மகளிர். "இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும், திருநீக்கப் பட்டார் தொடர்பு" (குறள் - 920)

41. ஆராய்ச்சி மிக்க தங் குரவனுடைய புதல்வன் அவதிப்படும் தரித்திர நிலையை நோக்கி, இரத்தினபரணங்களும் பட்டும் தூசும் பொற்குவியலும் அவனுக்குக் கொடுத்து அன்புசெய்து அரசன் போகவிட்டான். சுமதியும் விரைந்து மீண்டு மிக்க சிறப்புடனே ஏமாங்கியின் வீட்டையடைந்தான்.

குரவன் - ஆசிரியன். தேம்பிய - துன்புற்ற. இரணியம் - பொன். அரையன் - காச்மீர தேசத்தரசன். ஒய்யென - விரைந்து.

42. வரிசை பல கொண்டு மீண்டுவந்த சுமதியைக் கண்டவுடன் ஏமாங்கி என்னுடைய உயிரானது வந்ததோ என்று எதிர்சென்று வணங்கி, என்னே! முன்பு நான் விளையாட்டாகச் சொல்ல நீர் பொருள் தேடிக்கொண்டு வரும்

நகையினு னல்ல வல்ல நவிற்றினும் பெரியோர் மாட்டுத்
தொகைபடு மின்ன னம்பாற் சூழ்வதொன் றன்றே வென்று
தகையெழில் வாடு வேற்குன் ருமரை முகத்தைக் காட்டி
மிகைவள மளித்தா யுய்ந்தே னென்றனள் விழிநீர் வாக்கி. 43

பருகுவ தன்ன காமர்ப் பைந்தொடி பொய்மெய் யாக
உருகினன் வருந்த லென்னு வோடரித் தடங்க ணின்றும்
பெருகிய புனலேத் தானைப் பெட்பொடுங் கரங்கொண் டொற்றி
முருகிய கூந்தல் பின்னி முன்புபோ லிருந்தான் சின்னுள். 44

பூவிரைச் சாந்த மாதிப் பொருள்கொளா தொழிது மேனும்
ஆவியி னன்ன காளா யமுதுணு திருத்த லாமோ
நீவிரைந் தளித்த யாவு நீங்கின வென்றே மாங்கி
ஓவியம் வாய்விண் டென்ன வுரைத்தனள் சுமதி கேட்டான். 45

பொருட்டுச் செல்லலாமோ? அதுவும் நாமிருவரும் கவலேயின்றிக் கூடியிருத்தற்குக் காரணமாயிற்று அன்றே என்று நான் உம்மைத் தடைசெய்யாமல் வாளாவிருந்தேன். பெருமையுடையீரே! நீர் மனம் வேறுபடாமல் மீண்டும் வந்தீரே என்ருள்.

அசதி - பரிகாசம். ஆடுதல் - கூடுதல்.

43. பெரியோரிடத்துப் பரிகசித்துப் பொல்லாதவற்றைச் சொல்லினும், அதன் பயனுக நம்மிடத்து மிக்க துன்பம் வந்து சூழ்ந்து கொள்ளுமன்றே என்று மனவாட்டம் அடைந்திருந்த எனக்கு உம்முடைய தாமரை மலரைப் போன்ற முகத்தைக் காட்டி, மிக்க வளப்பத்தையும் அளித்தீர் என்று கண்ணீரொழுக்கிக் கூறினள்.

நல்ல அல்ல - பொல்லாதன. தகை எழில் - சிறந்த அழகு. வாடுவேற்கு - வினையாலணையும் பெயர். வாக்கி - ஒழுகச்செய்து.

44. வாரியுண்பதுபோன்ற அழகுடைய அவள் பொய்யை, மெய்யாகவே கொண்டு சுமதி மனமுருகி, நீ வருந்தற்க என்று கண்ணீரைத் தன் ஆடையால் விருப்புடன் ஒற்றி எடுத்து, கூந்தலேப் பின்னி மகிழ்ச்சி உண்டாகச் சில நாட்கள் முன்பு போலவே இன்பம் நுகர்ந்திருந்தான்.

காமர் - அழகு. மிக அழகியதான பொருளின் மேல் வாரியுண்ணலாம் படியான விருப்பம் உண்டாதல் இயற்கையாதலால், 'பருகுவதன்னகாமர்' எனப் பட்டது. பைந்தொடி - அன்மொழித்தொகை. ''உண்டற்குரிய வல்லாப் பொருளே உண்டன போலக் கூறலு மரபே'' என்றது காண்க.

45. மலர், மணமுறு சந்தனம் முதலிய பொருள்களே விரும்பாவிடினும் உயிரை யொத்த நாயகமே! அமுது செய்யாதிருக்கலாமோ? நீர் கொண்டு வந்து அன்புடனளித்த பொருள்களெல்லாம் ஒழிந்தன என்று ஏமாங்கி சித்திரப்

கரவிலர் தம்மைச் சார்ந்து காஞ்சன மிரந்து நல்கி
விரவினன் சின்னாட் பின்னர் விடலைய ரோடுஞ் சென்று
பரவுமுற் கலதே யத்திற் பகர்பர்க்க தேவ னில்லின்
இரவிடைப் புகுந்து செம்பொ னாதிக ளெடுத்தா னன்றே. 46

எடுத்திடு மரவங் காதி னெய்தலும் விழித்துப் பார்ப்பான்
அடுத்தனர் கள்ளர் கூவென் றகத்திடைத் துயில்கின் றாரைப்
புடைத்தன னெழுப்ப வல்லே பூசுரன் றலையை வெட்டி
மடுத்தபல் பொருளி னோடு மீண்டவண் மனையைச் சார்ந்தான். 47

உடங்குபோய் மீண்ட தூர்த்த ருயிர்க்கொலை புரிந்து பாவந்
தொடங்கிய சுமதிக் கன்று துராசார னெனும்பேர் நாட்டி
விடங்கனி விழியி னாட்கும் வெங்கொலை கூற வன்னாள்
குடங்கையிற் செவிகள் பொத்திக் குழைந்துளத் திதனைக் கொண்டாள். 48

பிரதிமை வாய்திறந்து பேசினாற்போலக் கூறினாள். சுமதி அவள் சொல்லைச் செவி மடுத்தான்.

விரை - வாசனை. அளித்த - அளித்தனவாகிய பொருள்கள். ஓவியம் - சித்திரம்.

46. இரவலர்கட்கு ஒளியாமல் கொடுக்கும் புரவலர்களை அடைந்து யாசித்துக் கொண்டுவந்த பொருள்களை ஏமாங்கியிடத்திலே தந்து அவளோடு சுகித்திருந்தான். சிலநாட்களாயின. பின்பு சில காமுகர்களோடு கூடி முற்கல தேசத்திற்குச் சென்று அங்கே பர்க்கதேவன் வீட்டில் இராக்காலத்திலே புகுந்து செம்பொன் முதலியவைகளைத் திருடினான்.

கரவிலர் - ஒளியாமல் (இரவலருக்குக்) கொடுப்போர். காஞ்சனம்-பொன். விடலை - தூர்த்தர்.

47. திருடுங்காலத்திலே உண்டாகிய சத்தம் காதிற்கேட்டலும் விழித்துப் பார்க்கும்பொருட்டுச் சென்றான். 'கள்ளர்கள் வந்தனர் கூ கூ' என்று வீட்டில் தூங்குகின்றவர்களைத் தட்டி எழுப்பினான் பர்க்கதேவன். விரைந்து அவன் தலையைவெட்டி, கிடைத்த பொருள்களை யெல்லாம் எடுத்துக்கொண்டு சுமதி ஏமாங்கியின் வீட்டையடைந்தான்.

அரவம் - ஒலி. பார்ப்பான் - பார்க்கும்பொருட்டு: பானீற்று வினையெச்சம். பூசுரன் - பர்க்கதேவனாகிய பிராமணன்.

48. உடன் சென்று திரும்பிய தூர்த்தர், உயிரைக்கொன்று பாவத்தைச் சுமந்த சுமதிக்கு அன்றுமுதல் துராசாரன் என்னும் பெயரிட்டழைத்தனர். ஏமாங்கிக்கும் முற்கல தேசத்தில் நடந்த கொலைச்செய்தியைக் கூறினர். அவள் கைகளால் காதைப்பொத்திக்கொண்டாள். இரங்கி மனத்திலே இதனைக்கருதுவாளாயினள்.

வேறு

கைதவ மிழைத்தலுங் களவு செய்தலும்
ஐதுயிர் கோறலு மறத்தைக் கோறலும்
பொய்தவ வுரைத்தலும் பொருளி ழத்தலும்
எய்திய காமத்தி னன்றி யில்லையே. 49

நன்றியைக் கோறலும் நலனைக் கோறலும்
வென்றியைக் கோறலும் விவேகங் கோறலுந்
துன்றிய வொக்கலைத் துறந்து நிற்றலுங்
கன்றிய காமத்தி னன்றி யில்லையே. 50

பகையினை யாக்கலும் பாவ மாக்கலும்
நகையினை யாக்கலு நவையை யாக்கலுந்
திகைமன மாக்கலுஞ் சிறுமை யாக்கலும்
அகைதரு காமத்தி னன்றி யில்லையே. 51

உடங்குபோய் - உடன்சென்று. விடம்கனிவிழி - நஞ்சின்தன்மைமுதிர்ந்த கண்.

49. வஞ்சகம் செய்தலும், திருடுதலும், உயிர்க்கொலை செய்தலும், தருமத்தை அழித்தலும், பொய்மிகுத்துச் சொல்லுதலும், பொருளையிழத்தலும் இவைகளெல்லாம் பொருந்திய காமத்தின் பற்றுக்கோட்டாலன்றி நிகழாவன்றே!

கைதவம் - வஞ்சகம். ஐது உயிர்: ஐது - அழகிதாகிய. கோறல் - கொல்லுதல். தவ - மிகுதியுணர்த்தும் உரிச்சொல்.

50. செய்ந்நன்றியைக் கொல்லுதலும், ஒருவர்செய்த நன்மையை அழித்தலும், வெற்றியைக் கெடச்செய்தலும், அறிவைக் கொல்லுதலும், நெருங்கிய சுற்றத்தாரை நீங்கியிருத்தலும் வருத்தும் காமத்தினாலல்லாமல் வேறொன்றாலு மன்றே!

நன்றி - உபகாரம். நலன் - நன்மை. ஒக்கல் - சுற்றத்தார். கன்றிய - வெதுப்பிய.

51. பகையினை யுண்டாக்கலும், பாவத்தை யுண்டாக்கலும், கண்டோர் இகழ்ந்து சிரிக்கப்பண்ணுதலும், குற்றங்களை யுண்டாக்கலும், மனமயக்கத்தைச் செய்தலும், இழிந்த நிலையைச்செய்தலும் கொழுந்துவிட்டெரியும் காமத்தினாலன்றி வேறொன்றால் தோன்றாதன்றே!

"பகைபாவ மச்சம் பழியென நான்கும்" என்றவற்றுள் பகையும் பாவமும் பழியும் கூறப்பட்டன. நகை - இகழ்வாகச் சிரித்தல். நவை - குற்றம்: கொலை,

பிணிபல துறுத்தலும் பேது செய்தலுந்
துணிதரு பெரியவர் தொடர்பு நீங்கலுந்
தணிதரு சிறியவர் சார்புண் டாகலும்
அணிதரு காமத்தி னன்றி யில்லையே. 52

உயிரினு மோம்பிடத் தகுவ யாவையும்
அயர்வுசெய் தயர்வுசெய் தொழிக்கத் தக்கதாய்ச்
செயிரின யாவையுஞ் செறிக்க வல்லதாய்ப்
பயிலிய காமநோ யஞ்சற் பாலதே. 53

வருணமு மொழுக்கமு மல்லற் கற்பொடும்
ஒருவியன் பனைச்செகுத் துலப்பி நீங்குமுன்
மருவின மின்னுநம் மாட்டு ளாரினும்
வெருவுறு கொலைப்பழி மேவற் பாலதோ. 54

கொலையையன்றிப் பழி வேறின்மை காண்க. கொலை செய்வதன் முன்னும் கொலை செய்த பின்னும் அப்பாவம் சூழ்தலின் மனமயக்கத்துக்குக் காரணமாயிற்று.

அகைதரல் - கொழுந்துவிட்டெரிதல்.

52. நோய்கள் பல பற்றுதலும், அறிவின்மையைச் செய்தலும், சான்றோருடைய தொடர்பை அழித்தலும், சிற்றினத் தொடக்கை யுண்டாக்கலும் காமத்தால் விளைவனவன்றி மற்றென்றால் விளைவனவோ ?

துறுத்தல் - செறித்தல், நெருக்கல். பேது=பேதைமை - யாதும் அறியாமை. பேதைமை - பண்புப்பெயர்; இதனை முழுமூடத்தனம் என்பர்.

53. உயிரைவிடப் பாதுகாக்கத்தகுவன எல்லாவற்றையும் மறந்து மறந்து ஒழிக்கத்தக்கதாக, குற்றம் பொருந்துவன எல்லாவற்றையும் செய்து நிறைக்கத் தக்கதாகச் செய்வது இடைவிடாது பற்றித் தொடரும் காமநோயே ஆகலின், அந்நோய் எல்லா நோயினும் அஞ்சத்தக்கதாம்.

உயிரினும் ஓம்பிடத்தகுவ : "உயிரிற் சிறந்தன்று நாணே நாணினும், செயிர்தீர் கற்புச் சிறந்தன்று" என்றாராகலின். அயர்வு - மறதி; சோம்பு எனினுமாம். செயிர் - குற்றம். செறிக்க - நிறைக்க. பயிலிய - இடைவிடாமற் பழகிய.

54. மரபும், மரபொழுக்கமும், வலிய கற்பும் நீங்கப் பெற்றுக் கணவனைக் கொன்று, கேடில்லாத தீமைகள் பலவற்றையும் முன்னே பொருந்தினேம். இன்னும் நம்மிடத்து உள்ளாரானும் அஞ்சத்தக்க கொலைப்பாவம் பொருந்த வேண்டுமோ?

மல்லல் - வளப்பம். ஒருவி - நீங்கி. அன்பன் - கணவன். செகுத்து - கொன்று. உலப்பில் - கேடில்லாத. மேவுதல் - வந்து பொருந்துதல்.

என்றுளத் தெண்ணியே மாங்கி யன்புமிக்
கொன்றிய சுமதியை யொழிப்ப மற்றவன்
துன்றிய பெருநிதித் தோற்றங் காட்டினிம்
மன்றலங் குழல்வய மாமென் றெண்ணினன். 55

தேங்குநீர் மாளவ தேயத் தெய்தினன்
ஆங்குமோ ரந்தண னுவி மாற்றினன்
வீங்கிய பொருளொடு மீண்டு சென்றுவிண்
ஓங்குமே மாங்கிவா ழுறையு ளண்ணினன். 56

தேவரும் விழைதகுந் திருவன் னாளிவன்
நீவவு நீங்கல னீண்ட விந்நகர்
பாவியின் பொருட்டுநாம் பற்றி யப்புறம்
போவதே கடனெனப் போயி னாளரோ. 57

பிரிவுறு மன்றிலிற் பேதுற் றன்னவன்
தெரிவையைக் காணுவான் றேடிச் செல்வுழிக்
கரிபல திரியுந்தென் கயிலை யெல்லையின்
விரியிணர்க் கானிடை விழுந்து மாய்ந்தனன். 58

---

55. என்று மனத்திலே எண்ணி ஏமாங்கியானவள் அன்பு மிக்கிருந்தவனாகிய சுமதியை நீக்கிவிட, அவன் மற்றும் பெருநிதிக்குவியலைக் கொண்டுவரின் இவள் நமக்கு வசமாவாள் என்று நினைந்தாள்.

வயமாம் - வசப்படும்.

56. நினைந்த சுமதி மாளவதேசத்தை யடைந்தான். அங்கும் ஓர் அந்தணனைக்கொன்றான். இகப்பரு மிகப்பெரும் பொருளை வாரிக்கொண்டு மீண்டான். ஏமாங்கியின் உறையுளை அடைந்தான்.

உறையுள் - வீடு.

57. தேவரும் விரும்பும் திருமகளையொத்த ஏமாங்கி இவனைக்கண்டு, இவனை நீக்கியும் இவன் நீங்கான். இப்பாவியின் பொருட்டு இந்நகரைவிட்டு வேறிடம் செல்வதே கடன் என உறுதிபூண்டு அந்நகரைவிட்டு அகன்றாள்.

விழைதகும் - விரும்பும். திரு - இலக்குமிதேவி. நீவவும் - நீக்கவும்.

58. ஒன்றையொன்று விட்டு நீங்கும் அன்றிற் பறவையைப்போல, மயங்கி, சுமதி ஏமாங்கியைக் காணும்பொருட்டுத் தேடிச்செல்லுங் காலத்து யானைகள் பல திரியும் தென்கயிலையாகிய பேரூர் எல்லையில் விரிந்த பூங்கொத்துக்களையுடைய காட்டில் விழுந்து இறந்தான்.

அன்றில் - ஒருவகைப்பறவை. ஆணும் பெண்ணும் சேர்ந்தே வாழும் இயல்பினது. ஒன்றையொன்று சிறுகணம் பிரியினும் கூச்சலிட்டு மாளும் என்பர்.

பருப்பதந் தாழ்ந்தவப் பரிசின் வெள்ளியம்
பொருப்பய லிறந்தவன் புலாலு டம்பினை
விருப்பொடு நாய்நரி மிசைய வீர்த்துப்போய்த்
திருப்பொலி காஞ்சியந் தீர்த்தத் திட்டவே. 59

ஆதியம் புரத்திடை யாக்கை வீழ்ந்ததும்
போதிவர் காஞ்சியம் புனலிற் றேய்ந்ததுங்
கோதினை முழுவதுங் குமைத்தச் செம்மலைச்
சோதிதன் சிவபுரச் சூழல் சேர்த்தவே. 60

வேண்டிய போகங்கள் வேண்டி யாங்குறீஇ
ஆண்டகைச் சுமதியங் கமர்ந்து வாழ்ந்தனன்
ஈண்டிய தீவினை யிடைவி லங்கினு
மாண்டநல் வினையினர் வரத்திற் றாழ்வரோ. 61

வசுகுந்தப் பகைஞரை மறுக்கும் வாயுறீஇப்
பசுகுந்தங் காத்தொசித் திட்ட பண்ணவன்
சிசுகுந்த விழியினர்க் கென்னுந் தேசுற
முசுகுந்த னென்பவன் முறையிற் பூசித்தான். 62

---

59. திருப்பருப்பதமாகிய மல்லிகார்ச்சுனத்தை வழிபட்டுப் பேரூரில் வெள்ளி மலையின் அயலாக விழுந்து இறந்த சுமதியின் பிணத்தை நாய் நரிகள் உண்ணும் பொருட்டு இழுத்துச்சென்று அழகுமிக்க காஞ்சிநதி யென்னும் தீர்த்தத்தில் இட்டன.

பருப்பதம் - மல்லிகார்ச்சுனம். மிசைய - உண்ண.

60. ஆதிபுரத்தில் அவ்வுடம்பு விழுந்ததும், காஞ்சி தீர்த்தத்தில் நனைக்கப் பெற்றதும் ஆகிய சிவபுண்ணியம் அவன் செய்துள்ள பாதகங்களை யெல்லாம் அழியச்செய்து அவ்வந்தணனைச் சிவபெருமானது சிவபுரத்தை அடைவித்தது.

யாக்கை - உடம்பு. போது இவர் - பூக்கள் பொருந்திய. கோது - குற்றம்; மகாபாதகம். குமைத்து - பதனழியச் செய்து. அச்செம்மலை - சுமதியை. சூழல்-பக்கம்.

61. விரும்பிய போகங்களையெல்லாம் விரும்பியபடியே பெற்றுச் சிறந்த சுமதி அங்கே பொருந்தித்துய்த்திருந்தான். மிக்க தீவினைகள் இடையிலே நின்று தடைசெய்யினும் பெருமை பொருந்திய நல்வினையையுடையவர்கள் மேன்மையில் தாழ்வார்களோ? தாழார்.

உறீஇ - உற்று. ஈண்டிய - நெருங்கிய, செறிந்த. விலங்கினும் - தடைப் படுத்தினும். மாண்ட - மாட்சிமைப்பட்ட. வரத்தில் - தமது மேன்மையில்.

62. வசுதேவனுடைய புத்திரராகத் தோன்றிப் பகைவரையழிக்கும் வழியை மேற்கொண்டு பசிய குருந்த மரத்தை ஒடித்துச் சாய்த்த கண்ணபிரானாகிய

அவையகத் துறுபழி யகற்ற வேண்டினு
நவைபயில் தீவினை நசிக்க வேண்டினும்
எவையெவை வேண்டினு மீய வல்லதே
கவைபயில் போதிசூழ் கயிலை மாநகர். 63

என்றுரை கிளத்தலு மிறைஞ்சி மாதவர்
கொன்றையஞ் சடைமுடிக் குழகற் கன்புசெய்
நன்றுயர் முசுகுந்த னடையெ லாம்விரித்
தொன்றுற வுரையென வுரைக்குஞ் சூதனே. 64

சுமதி கதிபெறுபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1134

விஷ்ணு மூர்த்தியின் மகனாகிய மன்மதன் அழகும், நெருப்புக் கண்ணையுடைய சிவபெருமான் எரித்தொழிப்பதன் முன்னே சிறிதளவு என்று சொல்லும்படி மிக்க அழகு பொருந்த முசுகுந்தன் என்பவன் விதிப்படி பூசித்தான்.

பசுக்காத்துக் குந்தம் ஓசித்திட்ட: ஓசித்தல் - ஒடித்தல். குந்தம் - குருந்தம்; இடைக்குறை. (திருவரங்கத்தந்நாதி 62, 80; குலோத்துங்க - உலா 370.)

வசுகுந்து - வசுபுத்திரன் : வசு - வசுதேவன். குந்து=குருத்து : மகன் என்க. அப்பகைஞரை : பகைஞர் - கிருஷ்ணனைக் கொல்லும் பொருட்டுக் கம்சனால் ஏவப்பட்ட அசுரர்களில் ஒருவன் குருந்தமரமாயிருந்து அழிக்க நினைத் தான். மற்றும், கபித்தாசுரன் விளாமர வடிவாகவும், வத்ஸாசுரன் பசுங்கன்று வடி வாகவுமிருந்தனர்;கேசி குதிரை வடிவாகவந்தான் ; சகடாசுரன், பூதனை(அரக்கி) முதலிய பகைவர்கள். வாய் - வாயில். பண்ணவன் - கடவுள்: திருமால். குந்த விழி - நெருப்புக்கண். என்னும் - சிறிதளவாக. சிசு - மன்மதன். தேசு-ஒளி, புகழ்.

63. அழகிய நிலவுலகத்திலுள்ள பழியை நீக்க வேண்டினும், குற்றம் பொருந்திய தீயவினைகள் அழியவேண்டினும், யாது யாது வேண்டினும் அரச வனம் சூழ்ந்திருக்கும் கைலை நகரமாகிய பேரூர் என்னும் தலம் கொடுத்தருள வல்லதாம்.

அ - அழகு. வையகம் - நிலவுலகம. நவை - குற்றம். கவை - கிளை. போதி - அரசமரம். கைலை - கயிலாயம் என்னும் பேரூர்.

64. என்று சூதமுனிவர் சொல்ல நைமிச முனிவர்கள் வணங்கி, சிவபெரு மானுக்கு அன்பு செய்த மிகவுயர்ந்த முசுகுந்தன் வரலாறுகளையெல்லாம் முற்ற விரித்துரைத்தருள்க எனச் சூதமுனிவர் மேலும் சொல்லத்தொடங்கினர்.

கிளத்தல் - சொல்லல். குழகன் - சிவபெருமான். கொன்றைமலர்மாலையை யணிந்த சடைமுடியினையுடைய குழகர் என்க. நடை - வாலாறு.

பதினறுவது

முசுகுந்தன் முகம்பெறுபடலம்

வள்ளவாய் நறுங்கமல மதுவுண்ட களிவண்டின்
தெள்ளுதிஞ் சுவைப்பாட றிசைதிசையு மெழும்பொய்கை
கள்ளாுப் பொழில்புடைசூழ் கலிங்கதே யத்தொருவன்
துள்ளுமான் மறிக்கரத்தார் துணையடிப்பூ சனைபுரிவான். 1

மறைமுழுதும் பயின்றுணர்ந்து மறைமுடிவுக் கெட்டாத
பிறைவளருஞ் சடைமுடியார் பெய்கழற்சே வடிமறவா
நிறைதருகா தலின்மறையோ னெடுந்தவத்தா லொருபுதல்வி
அறைதருமற் றவன்மனைவி யகட்டிடைவந் தவதரித்தாள். 2

சடங்கனைத்தும் விதியாற்றுற் றகத்தாதை யிதத்தொழிலே
தொடங்கவரு மகட்கியற்றிச் சுகுமாரி யென்றழைத்தான்
அடங்கவரு நல்வினையி னங்குரம்போல் வளர்காலை
மடங்கமுவும் பண்டுபுரி மாதவத்தின் பயனணைய. 3

---

1. தாமரை மலர்களிலுள்ள தேனையுண்டு களித்த வண்டுகளின் இசைப் பாடல்கள் மிக்க சுவையுடன் திசைதோறும் உண்டாகின்ற பொய்கைகளும், சோலைகளும் சூழ்ந்துள்ள கலிங்கநாட்டிலே ஒருவன் சிவபெருமானுடைய திருவடிகளில் பூசைசெய்து வந்தான்.

வள்ளவாய் - கிண்ணம்போன்ற வாய். மது - தேன். களிவண்டு - களிப்பையுடைய வண்டுகள். பொழில் - சோலை. துள்ளும் மான்மறிக் கரத்தார் - சிவபெருமான்.

2. வேத முழுவதையும் நன்கு பயின்று உணர்ந்து உபநிடதங்களாகிய வேதாந்தத்தாலும் அறியமுடியாத சிவபெருமானுடைய திருவடித்தாமரைகளை மறவாத நிறைந்த பத்தியுடன் விளங்கும் அந்த அந்தணனுடைய மிக்க தவத்தால் அவன் மனைவியின் வயிற்றில் ஒரு புதல்வி அவதரித்தாள்.

மறைமுடிவு - வேதாந்தம். அகட்டிடை - வயிற்றில்.

3. தன் மகளுக்குச் செய்யவேண்டிய எல்லாச் சடங்குகளையும் தந்தை செய்து முடித்தான். சுகுமாரி எனவும் நாமகரணம் செய்தான். உள்ளடங்கியிருக்கும் நல்வினையின் முளைபோலச் சுகுமாரி வளர்ந்துவருங் காலத்தில் அறியாமையை ஒழிக்கும் தன்மை முன்னைப் பிறவிகளிற் செய்த நல்வினையின் பயனாக அவளுக்கு வந்து பொருந்த.

தகுமாறி தன்றெனவே சகத்தினர்தம் வாழ்க்கையினை
நகுமாறி ராறிரட்டி நவைவளர்தத் துவமயக்க
முகுமாறி யானையுரித் தவரடிப்பூ சனைபுரியச்
சுகுமாரி தாதைகழல் தொழுதிரந்தா ளவன்மகிழா. 4

திரும்பியளற் றழுந்தாமந் திரவதிகா ரங்கொடுத்துக்
கரும்புநுனி தொடுத்தருந்துங் கடப்பாட்டி னினித்ததற்பின்
விரும்புமருச் சனையதிகா ரங்கொடுத்தான் விழைந்தேற்றுச்
சுரும்புளரு நறுங்கோதைச் சுகுமாரி பணிபுரிவாள். 5

சடங்கு - கிரியைகள்; சாதகன்மம் முதலியன. சாதகன்மமாவது: அத்திர மந்திரத்தால் நூறு ஓமம்செய்து, வாமமந்திரத்தால் குழந்தை முகத்தை எதிர் நோக்கி, பஞ்சப்பிரம மந்திரங்களை உச்சரித்து உச்சியை மோந்து, புருட மந்திரத்தை வலக்காதில் செலுத்தல். அனைத்தும் என்றது உத்தாபனத்தை. அஃதாவது அசுத்தமாகிய அறைவீட்டினின்றும் சுத்தமாகிய உயர்ந்த இடத்தில் குழந்தையைச் சேர்ப்பிக்கும் கிரியை. உத்தாபனத்துக்குப்பின் நாமகரணமாதலால், நாமம் சுகுமாரி என்றார். நாமகரணமாவது பேரிடுதலிற் செய்யுங்கிரியை. நான்காம் மாதத்தில் சந்தி மிதித்தலாகிய பிரவாசக் கிரியை செய்து, ஆறும் மாதத்தில் அன்னப்பிராசனக் கிரியை முடித்தல் முதலியன.

பிரவாசமாவது - குழந்தையை எடுத்துக்கொண்டு ஆலயத்துக்குச் செல்லும் கிரியை. மடம் கழுவும் - அறியாமையைப் போக்கும்.

4. தக்கவகை இதுவல்ல என்று உலகமக்கள் வாழ்க்கையைப் பரிகசிப்பது போல இருபத்துநான்கு என்னும் குற்றம் பொருந்திய தத்துவங்களின் மயக்கம் கெடுமாறு யானையை உரித்துப் போர்த்த சிவபெருமானுடைய திருவடிப்பூசை புரியும்படி தனக்குள்ள விருப்பத்தைச் சுகுமாரி தந்தைக்கு வணக்கமுடன் தெரிவித்தாள். அவன் மகிழ்ந்து.

நகுமாறு - பரிகாசம் செய்வதுபோல். இராறு இரட்டி என்றது ஆன்ம தத்துவம் இருபத்து நான்கினையும். நவை - குற்றம், மயக்கம் உகுமாறு.

5. மறுபடியும் பிறப்பாகிய சேற்றில் அழுந்தாத மந்திர அதிகாரத்தைக் கொடுத்து, நுனியிலிருந்து அடிவரையில் உண்ணும் கரும்பின் சுவை மேலும் மேலும் இனிப்பதுபோல அதிலே சுகுமாரிக்கு உளதாகிய பத்தி சிரத்தை விசுவாசங்களையும் சோதித்து அருச்சனுதிகாரமும் கொடுத்தான். தந்தை யுபதேசத்தைக் கடைப்பிடித்து விருப்புடன் ஏற்றுச் சிவப்பணிசெய்து வருவாளாயினள்.

மந்திராதிகாரம் - சமயதீக்கை செய்து ஆசிரியன் பஞ்சப்பிரம மந்திரம் சடங்க மந்திரங்களையும் சிவமூலமந்திரத்தையும் உபதேசித்தல். பின்னர் விசேட தீக்கை செய்து பிரணவம், பீசம் முதலியவைகளுடன கூடிய மந்திரங்களைத் தந்து க்ஷணிகலிங்க பூசை முதலியன செய்துவரப் பணித்தல்.

வேறு

கனைகடன் முகட்டிற் கதிரவ னெழுமுன் கடிகையோ ரைந்தென விழித்துத்
துணையமெய்ச் சுத்தி கூடிய தியற்றித் தூயவெண் ணீறுநன் கணிந்து
வினைமுழு தகற்றுஞ் சதாசிவ னுருவம் விளங்கவுள் ளத்திடை நினைந்து
மனையதன் புறம்போ யியக்கமோ ரிரண்டு மரபுளி யொருவிக்கோ றின்று. 6

கந்தமிக் கரும்பு மலர்த்தடம் படிந்து கமழ்ந்தவெண் ணீறுடல் வயக்கிச்
சுந்தர மிகுந்த நந்தன வனத்துத் தூத்தகு பிடகைகொண் டேகி
நந்தியா வட்ட மலரிமந் தார ஞாழனு கம்வழை வகுளங்
கொந்தவிழ் செருந்தி பிண்டிபா திரிகூ தாளஞ்சம் பகங்கன்னி காரம். 7

பொன்னிணர்க் கடுக்கை செம்மலர்க் கொன்றை புன்னைவெட் பாலைசெவ்
நன்னிற வேங்கை கொக்குமந் தாரை நறியபொன் னுவிரை வெட்சி [வகத்தி
பன்னுபன் மத்த மாதுளை பட்டி பருத்திசெவ் வரத்தைபொற் காஞ்சி
துன்னிய புரசு கடம்பெருக் கழிஞ்சி றும்பைபன் னீர்திரு வாத்தி. 8

மராமலர் கரிய செம்பைவெண் டிலோத்தம் வழுதுணை கண்டங்கத் திரிமா
குராமலர் தாளி கூத்தனற் குதம்பை கோட்டம்பூ கஞ்சத குப்பை
அராவணைக் கடவுள் காந்திசே வகன்பூ வாத்திகூ விளம்வன்னி யறுகு
பராவுசெவ் வந்தி நாவல்பூந் துளசி பச்சைவெண் காக்கணம் பூளை. 9

கருவிளை வெள்ளைக் காசைபைந் தருப்பை காரைசெங் கீரைநீர் முள்ளி
மருதிரு வேலி வேரிலா மிச்ச வேர்வெட்டி வேர்மஞ்ச ணத்தி
பருதியின் காந்தி யெலுமிச்சை நரந்தம் பாரிசா தகம்புலி தொடக்கி
தருவளர் வல்லி சாதகஞ் சங்க வர்த்தனஞ் சந்தனங் கிளுவை. 10

---

6 — 12. சூரியன் உதிக்க ஐந்து நாழிகை என்னும் அளவில் நித்திரை விட்டெழுந்து. சதாசிவ மூர்த்தியை தியானித்து, சௌசம் தந்தசுத்தி ஸ்நானம் அநுட்டானங்களை முடித்து, நந்தவனத்துக்குச் சென்று பூக்குடலையில் நந்தியா வட்டம் அலரி மந்தாரம் ஞாழல் நாகம் வழை வகுளம் செருந்தி பிண்டி பாதிரி கூதாளம் சம்பகம் கன்னிகாரம் கொன்றை புன்னை வெட்பாலை செவ்வகத்தி வேங்கை கொக்குமந்தாரை பொன்னுவிரை வெட்சி மாதுளை பட்டி பருத்தி செவ்வரத்தை பொற்காஞ்சி புரசு அழிஞ்சில் தும்பை பன்னீர் திருவாத்தி மரா கருஞ்செம்பை திலோத்தம் வழுதுணை கண்டங்கத்திரி மா குராமலர் தாளி கூத்தன் குதம்பை கோட்டம் பாக்கு சதகுப்பை விஷ்ணுகாந்தி சேவகன் பூவாத்தி வில்வம் வன்னி அறுகு செவ்வந்தி நாவல் பூந்துளசி பச்சை வெள்ளைக்காக்கணம் பூளை கருவிளை வெள்ளைக்காசை பசியதருப்பை காரை செங்கீரை நீர்முள்ளி மருது இருவேலிவேர் இலாமிச்சவேர் வெட்டிவேர் மஞ்சணத்தி சூரியகாந்தி எலுமிச்சை நரந்தம் பாரிசாதம் புலிதொடக்கி வல்லி சாதகம் சங்கவர்த்தனம் கிளுவை விளா மாவிலிங்கை ஒரிதழ்த்தாமரை நாணல் நாயுருவி எட்பூ கொட்டைக்கரந்தை நல்ல

வெள்ளின்மா விலிங்கை யோரிதழ்க் கஞ்சம் வெண்மலர் நாணனு யுருவி
எள்ளலர் கொட்டைக் கரந்தைநற் கரந்தை யிலந்தைதண் ணீர்மிட்டா
ஒள்ளிய நொச்சி கேதகை வாகை யுச்சிப்புல் குச்சிப்புல் காந்தள் [னெல்லி
தள்ளருஞ் சாலிப் பயிர்கருங் காலி தான்றிபூங் குருந்துதாம் பூலம். 11

மருமருக் கொழுந்து மாதவி மௌவன் மல்லிகை மாலதி மயிலை
முருகவிழ் குளவி குமுதமென் குவளை முண்டக நெய்தலும் பிறவுங்
குருமணிக் குழையின் பாங்கிய ரோடு கொய்துமீண் டகன்மனை குறுகி
அருவுரு வகன்ற சிவபரம் பொருளை யருச்சனை புரியுநா ளொருநாள். 12

வேறு

தாது கமழுந் திருப்பள்ளித் தாமங் கொய்ய முன்புபோற்
போது விரியு முய்யானம் புகுங்காற் சுகுமா ரியைக்கண்டு
காது மநங்கன் கணையலைப்பக் காதன் மிகுந்து விதூமனென
ஓது பெயரான் காந்தருவ னொருவ னவள்பா லடுத்துரைப்பான். 13

பொன்னு னியன்ற வோவியமே போதா னியன்ற மாலிகையே
மின்னு னியன்ற பாவையே வேலை யெழுந்த சுவையமிழ்தே
என்னு ருயிரே நினையடுத்தே னெனக்கு மனைவாழ்க் கையளாகில்
நின்னால் விழையப் படுபொருள்க ணிரப்பிப் பணிசெய் குவலென்றான். 14

கரந்தை இலந்தை தண்ணீர்மிட்டான் நெல்லி நொச்சி தாழை வாகை உச்சிப்புல் குச்சிப்புல் காந்தள் சாலிப்பயிர் கருங்காலி தான்றி குருந்து தாம்பூலம் மருமருக்கொழுந்து மாதவி மௌவல் மல்லிகை மாலதி குளவி குமுதம் குவளை தாமரை நெய்தல் குருமணிக்குழை இவைகளைத் தோழிமாரோடு கொய்து எடுத்து வந்து சுத்தப்படுத்திச் சிவலிங்கமூர்த்தியைப் பூசித்துவரும் நாள்களுள் ஒருநாள்;

இப்பாடல்களில் பூசனைக்குரிய பூக்களும் பத்திரவகைகளும் கூறப்பட்டன. விரிக்கிற் பெருகும், புட்பவிதியுட் காண்க.

13. மகரந்தப் பொடிகளுடன் மணங்கமழும் பூசனைக்குரிய மலர்வகைகளைக் கொய்யும் பொருட்டு வழக்கம் போல் நந்தவனத்தை யடையுங்காலத்துச் சுகுமாரியைக் கண்டு போர் மதன் அம்புகள் வருத்தக் காம மிக்குடையனாய் விதூமன் என்னும் கந்தருவனொருவன் அவளிடத்துச்சென்று சொல்லுவானாயினன்.

தாது - மகரந்தப்பொடி, தேனுமாம். திருப்பள்ளித்தாமம் என்பது சைவ சம்பிரதாயச்சொல்; மலர். போது - மலரும் பருவத்தரும்பு. உய்யானம் - நந்தவனம். காதும் - போர்செய்யும். அனங்கன் - மன்மதன். அலைப்ப - வருத்த.

14. பொற்பாவாய்! மலர்மாலையே! மின்னற்கொடியே! கடலமுதே! ஆருயிரே! உன்னை வந்தடுத்தேன். நீ என்னுடைய வாழ்க்கைத் துணைவியாயின் நீ விரும்பும் பொருள்களை யெல்லாம் கொடுத்துப் பணிவிடைசெய்வேனென்றான்.

கன்னி யுரைப்பாள் காந்தருவக் காளாய் போகத் திடையார்வம்
என்னு மிலன்முப் புரமெரித்த விறைவ னடிப்பூ சனைப்பத்தி
மன்னு முடையே னுதலினின் மனையா ளாதற் கிசைகல்லேன்
நன்னர் வனத்துட் புகுந்ததுந்தேர் நம்பற் கலர்கொய் வான்பொருட்டே. 15

தூயை யெனினீ யெனையிங்குத் தொடரா துனது பதிச்சென்மோ
மாயை தொடராப் பரம்பொருட்கு மலர்கள் பறிப்பச் சேறுமென
வேயை நிகர்த்த தடந்தோளாய் விழிவே லேவி யுயிர்வௌவித்
தீயை நிகர்த்த நெடுங்காமஞ் செறித்தாய் செறித்தாய் செறித்தாயால். 16

வாளா தேகல் வழக்கேயோ மருந்தா யளிக்கு மொருநீநின்
ஆளா யொழிந்தே னெனக்கிரங்கா யணங்கே யென்றுவி டூமனெதிர்
மீளான் மீட்டு மிரந்தானை வெய்து விழித்துச் சுகுமாரி
காளாய் கவிபோற் பிடிவிடாய் கவியே யாதி யெனச்சபித்தாள். 17

ஓவியம் - சித்திரப்பாவை; பிரதிமை என்னும் பொருள்தந்து நின்றது. மாலிகை - மாலை. "தெய்வ மருவளர் மாலையோர் வல்லியி னெல்கி" (திருக்கோவையார் - 1). வேலை - கடல்.

15. கன்னிப் பருவத்தையுடைய சுகுமாரி கூறுவாள்: கந்தருவக் காளையே! போகம் நுகருங் கருத்துச் சிறிதும் எனக்கில்லை. சிவபெருமான் திருவடிப் பூசையிலே அன்புமிக்குள்ளேன். ஆதலின், நின் மனைவியாதற்கு நான்விரும்பிலேன். நந்தவனத்திடையே நான் வந்ததும் சிவபூசைக்குப் பூக்கொய்யும் பொருட்டேயாகும்.

ஆர்வம் - விருப்பம். என்னும் - சிறிதேனும். நம்பன் - சிவபெருமான்.

16. நீ பரிசுத்தமுடையவனுனல் என்னை இங்கே தொடராமல் உன் இடத்திற்குச்செல். மாயாரகிதராகிய சிவபெருமானுக்குப் பூசைசெய்யும் பொருட்டு மலர்கள் கொய்யச் செல்வேன் என்று சுகுமாரி சொல்ல, பசிய மூங்கிலையொத்த தோள்களையுடையவளே! உன்னுடைய கண்ணம்புகளைச் செலுத்தி என் உயிரைக் கொள்ளைகொண்டு நெருப்பை யொத்த மிக்க காமத்தை நிறைவித்தாய் என்று அவன் மூன்றுமுறை கூறி;

சென்மோ - செல்: மோ என்பது முன்னிலையசை. மாயை தொடராப் பரம்பொருள் - சிவபெருமான். சேறும் - செல்லுதும். வேய் - பசுமூங்கில். தீயை நிகர்த்த நெடுங்காமம்: "ஊருள் எழுந்த உருகெழு செந்தீக்கு, நீருட் குளித்து முயலாகும் - நீருட், குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி, யொளிப்பினும் காமஞ் சுடும்." (நாலடி 90) இதனல் காமத்தீயின் கொடுமை காண்க.

17. ஒன்றும் பேசாமல் செல்லுதல் தக்கதாகுமோ? நோயை நீக்கும் மருந்துபோல்வாளாகிய நீ.தெய்வப்பெண்ணே! நினக்கு ஆட்பட்டேன்என்பால் இரக்கஞ்செய்யாய், என்று சொல்லி தன்னைவிட்டு மீளாதவனும் இரக்கின்றவனைக்

தீய பாலை யார்தடுப்பார் தெய்வ மகளிர் மனங்கவருங்
காய வாழ்க்கைக் காந்தருவன் கலையாய் வரைதோ றுழிதருங்கால்
தூய தான விமையவரைச் சூழ லணுகி வதிகின்றான்
ஆய காலை யொருவைக லமலன் வில்லத் தடியமர்ந்தான். 18

வேறு

மைம்மெழுகி யன்னமுக மாமுசு வெழுந்து
கைம்மிளிர் கனற்கடவுள் காமுற விருந்த
வைம்முளணி கூவிளம ரத்துகள வல்லே
பைம்மிளிரி லைச்சருகு பல்லவ முதிர்ந்த. 19

உதிர்ந்தசரு கண்ணலுரு வத்தினை மறைப்ப
வதிர்ந்திட மிருந்தவ ளழன்றதனை நோக்கி
எதிர்ந்தவர்க ளுய்தலறி யாவிறைவன் மெய்யின்
முதிர்ந்தசரு கார்த்தமுசு வுக்கிது கிளந்தாள். 20

கடுமையாகப்பார்த்துச் சுகுமாரி காளைப்பருவமுடையவனே! குரங்குப்பிடிபோல விடாத உள்ளமுடையை ஆதலின், நீ குரங்குச் சன்மமாவாய் என்று சபித்தாள்.

இரந்தானை - வினையாலணையும் பெயர். கவி - குரங்கு. ஆதி - ஆவாய்.

18. தீயூழை யாரே தடுப்பவர். தெய்வப்பெண்களின் மனத்தைக் கவரும் அழகுடையவனாகிய கந்தருவன் ஆண்குரங்காக மாறி, மலைகள்தோறும் திரியுங் காலத்தில் தூய்மையுடைய இமயமலைச்சாரலைச் சார்ந்து வசித்துவந்தான். அக் காலத்து ஒருநாள் சிவபெருமான் வில்வமரத்தின் அடியில் எழுந்தருளியிருந்தார்.

தீய பால் - தீயூழ். "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினும் தான்முந் துறும்" (குறள்). காயம் - உடம்பு. கலை - ஆண்குரங்கு. உழிதருங்கால்: உழிதரல் - திரிதல். வைகல் - நாள். அமலன் - சிவபெருமான்.

19. கரிய முகத்தையுடைய குரங்கு எழுந்து, சிவபெருமான் விரும்பியெழுந் தருளியிருந்த வில்வமரத்தின்மேல் தாவ, வில்வமரத்திலுள்ள இலை சருகு தளிர் முதலியன உதிர்ந்தன.

மைமெழுகி யன்ன முகம் - மையினால் பூசப்பட்டாற்போன்ற முகம்: 'கருமுக மந்தி' என்க. முசு - குரங்கு. கை மிளிர் கனல் - கையிலே விளங்கும் மழு. வை முள் - கூர்மையான முள்ளினையுடைய. அணி - அழகு. கூவிளம் - வில்வம். பல்லவம் - தளிர்.

20. அவ்வாறு மரத்திலிருந்து உதிர்ந்த சருகு முதலியன சிவபெருமா னுடைய திருமேனியை மறைக்க, பக்கத்திலிருந்த உமாதேவியார் அஞ்சிக்

மாதுபுரி சாபமு மறந்துலக நாதன்
சோதியுரு விற்சருகு துன்னவினை செய்தாய்
நீதிகொடு சாபமிது நீங்கவரு போது
மோதுமுசு வின்முக முனக்கமைக வென்றாள். 21

வண்ணவுரை கேட்டுமணி கண்டனருள் செய்வான்
பெண்ணரசி யாரையிது பேசிமுனி கின்றாய்
எண்ணரிய தீவினையு மிறுசெயும் வில்ல
நண்ணவெம தின்னுருவ நல்வினைசெய் தன்றே. 22

அன்னதொரு நல்வினை யடுத்ததிற னோக்கி
இன்னமுசு வுக்கிறைமை யீந்துலக மெல்லா ந்
தன்னிகரி லாதவொரு சக்கர நடாத்த
மன்னிய வரம்பல வழங்கவிசை வுற்றாம். 23

கோபித்து அக்குரங்கை நோக்கிப் பகைவர் உய்வதறியாத இறைவர் திருமேனியில் சருகுகளை நிறைத்தமைக்குக் கூறுவாளாயினள்.

அழன்று - கோபித்து. கிளந்தாள் - சொன்னாள்.

21. சுகுமாரி இட்ட சாபமும் மறந்து உலகநாதன் ஒளியுருவில் சருகு நிறையும்படி குறும்பு செய்தாய். இச்சாபம் நீங்கும் எல்லையிலும் குரங்குமுகம் உனக்கு உண்டாவதாகுக என்று (உமாதேவியார்) கூறினள்.

மாது - சுகுமாரி. சாபம் - குரங்கு உருக்கொள்க என்றது.

22. உமாதேவியார் கூறிய மொழியைக் கேட்டு நீலகண்டமுடைய சிவபெருமான், பெண்ணே! நீ யாரைக் கோபிக்கின்றாய்? அளவில்லாத தீவினைகளையெல்லாம் வில்வம் நீறுபடுத்தும். அவ்வில்வம் எமது திருமேனியிலே பொருந்த அது நல்வினை செய்ததன்றோ!

மணிகண்டன் - நீலகண்டத்தையுடைய சிவபெருமான். பெண்ணரசி - விளி, தையலாயகி என்க. முனிகின்றாய் - கோபிக்கின்றாய். வில்லம் - வில்வம். எமது இன்னுருவம் நண்ண.

23. அப்படிப்பட்ட ஒரு சிவபுண்ணியம் வந்து பொருந்திய தன்மையை நோக்கி, இக்குரங்குக்கு அரசுத்தன்மை கொடுத்து, உலக முழுவதையும் ஒப்பற்ற ஆணையினால் நடத்துமாறு நிலைபெற்ற வரங்கள் பலவற்றையும் கொடுக்க நாம் திருவுளங்கொண்டோம்.

நல்வினை - சிவபுண்ணியம்; இது அபுத்திபூர்வமாக வந்தது. இன்னமுசு - சிவபுண்ணிய முதிர்ந்த இக்குரங்கு. இறைமை - அரசுரிமை. சக்கரம் - ஆக்ஞா சக்கரம்: ஆணை.

வேட்டைபுரி வேடனெழு வேங்கையினை யஞ்சி
நாட்டமய ராதுநனி வில்லநம துச்சி
போட்டுயர் கதிக்கணவன் புக்கதறி யாய்கொல்
ஏட்டையுற நீவெகுள லென்றுகை யமைத்தான். 24

மங்கையுமை கேட்டுமகிழ் கூர்ந்தருள் வழங்க
அங்கணரும் வம்மென வழைத்துலக மெல்லாந்
துங்கமுசு குந்தனெனத் தோன்றியர சாள்கென்
றொங்குவர நல்கியுமை யோடவண் மறைந்தான். 25

வேறு

பசுவு யர்த்திய பரமனு ரருளிய வரத்தால்
விசுவம் யாவையும் வெண்குடை நிழலிற் குளிர்ப்ப
முசுமு கத்துடன் முறைபுரி யரையர்தங் குலத்துள்
அசுவ மேதநூ றுற்றினே னஞர்கெட வுதித்தான். 26

---

24. வேட்டையாடும் நிமித்தமாக வந்த ஒருவேடன் வேங்கைப்புலிக்குப் பயந்து, கண் இமைகொட்டாமல், நன்ருக வில்வபத்திரத்தை நமது சிரத்திலிட்டு உயர்ந்த சிவசாயுச்சியம் பெற்றமை நீ அறியாயோ? துன்பமுற நீ கோபியாதே யென்று அபயகரமளித்தார்.

நாட்டம் - கண். கதி - முத்தியின்பம். ஏட்டை - துன்பம்.

25. உமாதேவியார் சிவபெருமான் அருளிச்செய்தமையைக் கேட்டு மகிழ்ச்சிமிக்கு அருள்செய்யச் சிவபெருமானும் அக்குரங்கை வருக என அழைத்து முசுகுந்தன் என்னும் பெயர்பெற்றுத் தோன்றி உலகமுழுவதையும் ஆட்சிபுரிக என்று உயர்ந்த வரத்தை யளித்து உமாதேவியாருடன் மறைந்தார்.

அங்கணர் - சிவபெருமான். துங்கம் - பரிசுத்தம். ஓங்கு = ஒருங்கு: ஓங்குவரம் எனினுமாம்: விகாரம்.

26. இடபக் கொடியையுயர்த்து விளங்கும் சிவபெருமான் அருளிய வர பலத்தால் உலக முழுவதையும் வெண்கொற்றக் குடையின் நிழலில் நீதியுடன் இருந்து அரசுபுரியும் அரசர் குலத்திலே இந்திரன் துன்பங்கெட, குரங்கு முகத்துடன் தோன்றினன் (அக்கந்தருவன்).

பசு - இடபம். விசுவம் - உலகம். முறை - நீதி. அசுவமேதம் நூறு இயற்றினேன் - நூறு அசுவமேத யாகங்களைச் செய்துமுடித்த இந்திரன். அஞர் - துன்பம்.

வளர்ந்து பல்வகைக் கலைகளு மறைகளு மற்றும்
அளந்து மல்கிய வைம்பெருஞ் சுற்றமுங் குழுவுந்
தளர்ந்தி டாதபல் லுறுப்புமே வரத்தழீஇக் கலியைப்
பிளந்து நீதியின் முசுகுந்தன் பேருல காண்டான். 27

ஆளு நாள்களி னகிதவுட் டிரனெனு மவுணன்
நீளு மாண்மையி னெடுவிசும் பமரரை யுழக்கித்
தோளி னாற்றலால் வலாரியைப் புறங்கண்டு துறக்க
மூளு மாசிடை முழுகுறத் தாட்படுத் திருந்தான். 28

அகித வுட்டிர னுலர சிழந்தவச் சிரத்தோன்
துகிலி கைக்குல மாட்டயர் துறக்கநா டொழிந்து
விகிர்த னுக்கொரு மாமனும் விலங்கலி னொருசார்
நெகிழு ளத்தினன் மறைந்துவாழ் நீர்மைய னொருநாள். 29

---

27. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, பல வகையான கலைகளும் பயின்று, வேதங்களும், ஐம்பெருஞ் சுற்றமும், குழுவும், தளர்ச்சியடையாத பலவகைப்பட்ட உறுப்புக்களும் பொருந்தத் தழுவிக்கொண்டு கலித்துன்பத்தை மாற்றி நீதியுடன் முசுகுந்தன் பெரிய உலகத்தை அரசுபுரிந் திருந்தான்.

பல்வகைக் கலைகள்: அறுபத்துநான்கு கலைகள். ஐம்பெருஞ் சுற்றம்: "அமைச்சர் புரோகிதர், சேனாபதியர், தவாத்தொழிற் றூதுவர் சாரண ரென்றிவர் பார்த்திபர்க் கைம்பெருங் குழுவெனப் படுமே" எனுமிவர்: ஐம்பெருங்குழு எனவும் இச்சுற்றத்தார் பேசப்படுவர். குழு என்றது எண்பேராயத்தை: "கரணத் தியல வர் கரும காரர், கனகச் சுற்றம் கடைகாப் பாளர், நகர மாந்தர் நளிபடைத் தலைவர், யானை வீரர் இவுளி மறவர், இனையர் எண்பே ராய மென்ப". குழு, ஆயம் என்பன ஒருபொருட் சொற்கள். (சிலப்பதி - இந்திர: அடியார்க்கு நல்லார்) "ஐம்பெருங் குழுவும் எண்பே ராயமும்". மேவர - பொருந்த.

28. இவ்வாறு முசுகுந்தன் நீதியோடு அரசுபுரியும் காலத்தில் அகித உட்டிரன் என்னும் ஓர் அசுரன் தனது வலிமையினால் தேவர்களைக் கலக்கித் தோள்வலியால் இந்திரனைப் புறமுதுகிட்டு ஓடச்செய்து விண்ணுலகம் குற்றத் திலே முழுகும்படி அடிப்படுத்தியிருந்தான்.

விசும்பு - ஆகாயம். அமரர் - தேவர். உழக்கி - கலக்கி. வலாரி - இந்தி ரன். மூளும் ஆசிடை - அதிகரித்த குற்றத்தில்.

29. அகித உட்டிரனால் தன் அரசை இழந்த இந்திரன் விண்ணுலகத்தை விட்டு நீங்கி இமயமலைச் சாரலின் ஓர்பால் உருகிய மனத்தையுடையனாய் ஒளிந்து வாழ்கின்ற தன்மையையுடையான் ஒருநாள்.

வச்சிரத்தோன் - இந்திரன். துகிலிகை - சித்திரம், பெருங்கொடி. துறக் கம் - விண்ணாடு. விகிர்தன் - சிவபெருமான். விலங்கல் - மலை.

முருகு பூம்பொழின் முதிர்ந்தவத் திருவரைச் சாரற்
பெருகு மாதவ மிழைத்திடும் பிருகுமா முனிவன்
தருகு மாரியைக் கண்டனன் றகையணங் குறுத்த
அருகு போந்துகைப் பற்றியீர்த் தனனறந் துளங்க. 30

வேத மெய்ப்பொரு டெள்ளிய விழுத்தவ னறிந்து
மாதர் தங்களை வன்மையிற் பற்றுத லரக்கர்
நீதி யன்னது நிகழ்த்தலி னரக்கனு குதியென்
றோதி விட்டன னும்பர்கோ னரக்கனு யுழன்றான். 31

அரசி ழந்தன னரக்கனு யுழன்றனன் வலாரி
விரசு தீவினை விளைந்தவா றென்னென விம்மிப்
பரசு பொன்னெடு தேவரும் பாரகத் திழிந்து
முரசு கண்படா முசுகுந்தன் பேரவை யடுத்தார். 32

ஆசி கூறினர் முகமனு மியம்பின ரவுணர்
பாசி போன்றுநின் றுடற்றலிற் பாணிவச் சிரத்தோன்
கூசி நீத்தது மரக்கனு யுழன்றதுங் குழைந்து
பேசி வானகங் காவெனப் பெரிதிரந் தனரால். 33

---

30. தேனொழுகும் மலர்ச்சோலைகளையுடைய அவ்விமயமலைச் சாரலில் பெருந்தவத்தைச் செய்திருக்கும் பிருகுமுனிவருடைய புத்திரியைக் கண்டான். அவள் அழகு இவனைத் துன்புறுத்தக் கிட்டித் தருமம் கலங்கும்படி அவள் கரத்தைப்பற்றி இழுத்தான்.

முருகு - தேன், வாசனை. அணங்கு - துன்பம். தகை - அழகு. துளங்க - கலங்க.

31. வேதத்தின் உட்பொருளைத் தெளிந்த சிறந்த தவசியாகிய பிருகு முனிவர் அறிந்து, பெண்களை வலிந்து பற்றி இழுத்தல் அரக்கர் தன்மையாம். ஆதலின் நீ அரக்கனுவாய் எனச்சபித்தார். இந்திரன் அரக்கனுய்த் துன்புற்றான்.

உம்பர்கோன் - இந்திரன்.

32. தேவருலகத்து அரசை யிழந்தவன் அரக்கனுய்த் திரிந்தான். இந்திரனுக்கு இவ்வாறு தீவினை நிகழ்ந்தவாறு என்? என்று வியந்து வியாழ பகவானோடு தேவர்களும் நிலவுலகத்தை வந்தடைந்து முரசவாத்தியத்தின் முழக்கம் நீங்காத முசுகுந்தச் சக்கரவர்த்தியின் பேரவையைச் சேர்ந்தனர்.

விம்மி - ஆச்சரியப்பட்டு. பரசுதல் - துதித்தல். பொன் - வியாழபகவான். கண்படா - தூங்காத. முரசு - மண முரசு, கொடைமுரசு, போர்முரசுகள்.

33. ஆசிகூறினர்கள். உபசார வார்த்தைகளும் சொன்னர்கள். அவுணர்கள் பாசிபோலப்பரவி இடைவிடாதிருந்து துன்புறுத்தலினல் இந்திரன் நாணித்

தேவர் தம்மிடர் தீர்த்திடே னுயினிச் செனனத்
தாவ தென்னையென் றமரர்க ளுடன்விசும் பேகித்
தாவ ரும்படை யகிதவுட் டிரனுயிர் சாடிப்
பூவர் கற்பகப் பொழில்முசு குந்தன்காத் தனனல். 34

வேறு

இந்திரன் வலியிழந் தின்னல் கோட்படக்
கந்தற நின்றுளங் கலங்கு மெங்களை
வந்தனை புரந்தனை மன்ன விங்கிருந்
தந்தமி லரசுசெய் தருளென் றூர்சுரர். 35

கடவுளர் மொழிகட வாமை மன்னவன்
அடலரி யாதனத் தாங்கு வைகுபு
புடவியு மேனைய பொழிலுங் காத்தனன்
இடர்முழு தொழிந்தன வுலகி ரேழுமே. 36

துறக்க நாட்டைத் துறந்ததும், அரக்கனைத் திரிகின்றமையும் இரங்கிக் கூறினர்கள். விண்ணுலகத்தைப் பாதுகாத்தல் வேண்டும் என்று இரந்தார்கள்.

முகமன் - உபசாரவார்த்தை. உடற்றலின் - வருத்துதலினல். பாணி - கை. கூசுதல் - அரக்கர் உயர்வும் தன் தாழ்வுங் கருதி மனத்தில் தாழ்தல்.

34. தேவர்களுடைய துன்பத்தை நீக்காமற் போவேனுயின் இப்பிறப்பினல் ஆவதென்ன என்று தேவர்களுடன் விண்ணுலகத்தை அடைந்து நீங்குதலில்லாதபடைகளையுடைய அகிதவுட்டிரனைக்கொன்று கற்பகநாட்டை முசுகுந்தன் பாதுகாத்தான்.

தா அரும் - நீங்குதற்கரிய. உயிர்சாடி - உயிரைப்போக்கி. கற்பகப் பொழில் - கற்பகநாடு.

35. இந்திரன் வலிமையிழந்து துன்பத்துக்காளாகப் பற்றுக்கோடின்றி உள்ளங் கலங்கும் எங்களை வந்து பாதுகாத்தாய். அரசே! நீ இங்கிருந்து அரசு புரிக என்று தேவர்கள் முசுகுந்தனை வேண்டினர்.

இன்னல் கோட்பட - துன்பத்தால் கொள்ளப்பட. கந்து - பற்றுக்கோடு.

36. தேவர்கள் கூறியபடியே முசுகுந்தன் சிங்காதனத்திலேறி விண்ணுலகத்திலிருந்து நிலவுலகத்தையும் ஏனைய உலகங்களையும் பாதுகாத்தான். பதினுலகமும் துன்பமுழுவதும் ஒழிந்தன.

கடவுளர் - தேவர்கள். அடல் - வலிமை. அரியாதனம் - சிங்காதனம். புடவி - பூமி. பொழில் - உலகம்.

இன்னண மரசுசெய் திருக்குங் காலத்து
மன்னவ னொருதின மாகர் சூழ்தரப்
பொன்னணை மீமிசைப் பொலிய வைகின
னென்னரு மவரவர் பணியி யற்றினர். 37

நாடக மகளிர்க ணடிக்கப் புக்கனர்
பாடகத் தளிரடிப் பாவை மார்களுள்
ஆடகச் சிலம்பணி யரம்பை நோக்கினள்
பீடக மன்னவன் வதனப் பெற்றியே. 38

பாங்குறு மாதரைப் பார்த்துப் பையவே
ஈங்கிவன் முசுகொலோ வென்று நக்கனள்
ஆங்கது குறிப்பின லறிந்து மன்னவன்
வீங்கிய சமழ்ப்புள மேவி னனரோ. 39

வள்ளலாய் வீரனய் வாய்மை யாளனய்த்
தெள்ளிய நூலனய்ச் செல்வச் செம்மலாய்
ஒள்ளிய பலகுண முடைய னயினும்
எள்ளிய நகையின லிறைமை நீத்தனன். 40

---

37. இவ்வாறு முசுகுந்தச் சக்கரவர்த்தி அரசுபுரியுங்காலத்தில் ஒரு நாள் தேவர்கள் புடைசூழப் பொற்றவிசில் வீற்றிருந்தான். யாவரும் அவரவர் பணிகளைச் செய்தனர்.

மாகர் - தேவர். என்னரும் - யாவரும்.

38. அரமகளிர் நடித்தனர். அவர்களுள் அரம்பை என்பவள் முசுகுந்தன் முகத்தின் தன்மையை நோக்கினள்.

பாடகம் - 'பாதசாலம், சிலம்பு, சதங்கை, காற்சரி' முதலியனபோலக் காலிலணியும் ஆபரணங்களுள் ஒன்று. ஆடகம் - பொன். வதனம் - முகம்.

39. பக்கத்திலுள்ள பெண்களைப் பார்த்து மெல்ல இவன் குரங்கோஎன்று கூறிச் சிரித்தாள். அதனைக் குறிப்பாலறிந்து மன்னவன் மனத்திலே மிக்கநாணங் கொண்டான்.

முசு - குரங்கு. சமழ்ப்பு - நாணம்.

40. கொடைக் குணமுடையவனய், வீரமகனய், மெய்யனய், தெளிந்த நூற்கேள்வியுடையவனய், செல்வச்சிறப்புடையவனய்ச் சிறந்த பல குணங்களை யுடையவனயினும் இகழ்ந்த சிரிப்பினல் அவன் தன்னுடைய அரசைத் துறந்தான்.

வாய்மை - உண்மை. எள்ளிய - இகழ்ந்த.

இழித்தகு முசுமுக மிகந்து மாநுடச்
செழித்தநன் முகனுறச் சிந்தை செய்தனன்
சுழித்தெழுங் கொழுந்தழ லுறுத்தி டுங்குண்டத்
துழித்திரள் வச்சிரத் தூணு றுத்தினன். 41

நேரிய மதலையி னிவர்ந்து நின்றுதன்
சீரிய குலம்வளர் தேவ னாகிய
சூரியன் றனையுளந் தொழுது நோற்றனன்
வீரிய முசுகுந்த னென்னும் வேந்தனே. 42

வழிபடு பரிதிமுன் வந்து சொல்லுமால்
விழிசிவந் துமைமகள் விளைத்த சாபமீ
தொழிவகை புரிதவ மொன்று மில்லைகாண்
அழிவறு சிவபிரா னடித்தொண் டல்லதே. 43

கங்கையஞ் சடைமுடிக் கலைவெண் டிங்களார்
தங்கிய தலந்தொறுஞ் சார்ந்து போற்றுறிற்
பங்கமி லாநநம் பணிக்கு மென்றலும்
அங்குறு தவத்தினை யகன்று மன்னவன். 44

---

41. கீழ்மையையுடைய குரங்கு முகத்தை நீங்கி மனிதனுடைய சிறந்தமுகத்தைப்பெற எண்ணினன். சுழித்தெழுந்து கொழுந்துவிடும் தீக்குழியில் திரண்ட வச்சிரத்தூணை நட்டான்.

குண்டத்துழி: உழி - ஏழனுருபு.

42. சிறந்த அந்த வச்சிரத்தூணின் உச்சியில் நின்று தன் குலத்தலைவனாகிய சூரியனை மனத்தால் வணங்கித் தவங்கிடந்தான் அம்முசுகுந்த வேந்தன்.

மதலை - உச்சி. இவர்ந்து - ஏறிச்சென்று.

43. முசுகுந்தன் தவத்துக்கிரங்கிய சூரியன் அவனை நோக்கி உமாதேவியார் கோபித்துக்கொடுத்த சாபம் இதுவாகும். சிவபெருமானுடைய திருவடித் தொண்டையன்றி, இது ஒழியத்தக்க தவம் வேறு ஒன்றுமில்லை.

பரிதி - சூரியன்.

44. கங்காநதி பொருந்திய சடைமுடியிலே வெள்ளிய இளம்பிறைச் சந்திரனையணிந்த சிவபெருமான் வீற்றிருந்தருளும் தலந்தோறும்சென்று வணங்கினல் குற்றமற்ற முகத்தைத் தந்தருளுவார் என்றான். முசுகுந்தன் அங்கே செய்த தவத்தை விட்டு நீங்கி.

கலை வெண் திங்கள் ஆர் - ஒரு கலையையுடைய சந்திரனைத் தரித்த சிவபெருமான். ஆனனம் - முகம்.

திரைதவழ் தீர்த்தங்கள் பலவுஞ் சென்றுதோய்ந்
தரையர வசைத்தெரி யாடு மண்ணலார்
தரைவளர் தலந்தொறுஞ் சார்ந்து போற்றினன்
வரைவளர் முசுமுக மாறக் கண்டிலான். 45

கவலையுற் றென்னினிக் கைக்கொள் வாமெனச்
சவலைய மனத்தனைத் தளரு மேல்வையின்
அவலமுற் றழியலென் றடுத்து நாரதன்
குவலயத் தானுளங் குளிர்ப்ப வோதுவான். 46

வேறு

நீரூர் கலிகன்ம நாசினி யென்றொரு நீணதிசேர்
பேரூ ரெனுந்தலத் தேகுகண் டாய்பிழை யாதுவரம்
பாரூர் பலவுந் தொழும்பட்டி நாதர் பணித்தருள்வார்
காரூர் கொடைக்கரத் தாயென்று கூறிக் கரந்தனனே. 47

ஊனூற்றும் வேற்கை நரபதி யாங்குவந் தேகிநறுந்
தேனூற்றும் பூநதிக் காஞ்சியி னாடிச் செழுங்கருங்கார்
வானூற்றும் போதி வனத்தாதி நாதர் மலரடியிற்
கானூற்றும் போதுக டூஉய்ப்பணிந் தாடிக் கசிந்தனனே. 48

---

45. பலப்பல தீர்த்தங்களிற் சென்று நீராடி இடையில் அராக்கச்சையை யணிந்து அக்கினியில் நடம் செய்யும் சிவபெருமான் எழுந்தருளிய தலந்தோறும் சென்று சென்று போற்றினன். எனினும் முசுவின் முகம் மாறக்கண்டிலான்.

தோய்ந்து - நீராடி; முழுகி.

46. கவலையடைந்து இனி நாம் கைக்கொள்ளுவதென்னை? என்று இளைத்த மனமுடையவனைச் சோர்வுறுஞ்சமயத்தில் நாரதர் அவனை அணுகித் துன்புற்று மனம் வருந்தாதே என்று மனங்குளிரச் சொல்வாராயினர்.

சவலைய - இளைத்த. ஏல்வை - சமயம். அவலம் - துன்பம்.

47. நீர்மையையுடைய ஒலிமிக்க கன்மநாசினி என்று ஒரு நீண்ட ஆறு பொருந்திய பேரூர் என்னும் தலத்துக்குச் செல்வாய். உலகமெல்லாம் வணங்கும் பட்டீசர் தப்பாமல் வரந்தந்தருள்வார் என்று சொல்லி மறைந்தார்.

கலி - ஒலி. கன்மநாசினி - ஒரு தீர்த்தம்.

48. வேலாயுதத்தை ஏந்திய கையையுடைய முசுகுந்தன் நாரதர் கூறியவாறே அவ்விடத்து மகிழ்ச்சியுடன் சென்று காஞ்சிநதியிலே முழுகி அரசவனத்திலுள்ள ஆதிநாதர் திருவடிகளில் மலர்களையிட்டு அருச்சித்து வணங்கிக் கூத்தாடி உருகினன்.

வழிநாட் கலிகன்ம நாசினி தீரத்து மாமறையோர்
பழிதீர நாடும் விதியா லிலிங்கப் பதிட்டைசெய்து
கழிகா தலின்மிகப் பூசனை யாற்றிக் களித்திருந்தான்
சுழிநீர் நதியிற் பின்னாளும் வழிபடத் தோய்ந்தனனே. 49

இருகால் விளைந்த வெறுழ்வலிச் சாப மிரண்டுவைகல்
வருநீர் படிய மடிந்துமற் றோர்வைகன் மூழ்குதலால்
ஒருவா முசுமுக நன்முக மாக வுவந்தரையன்
அருளார் மறையவர்க் கார்த்தினன் செம்பொனு மாடையுமே. 50

அணிகலந் தூசு முதலாம் பொருளம லற்களித்துப்
பணிபல வாற்றி விழாப்பங் குனிமதி யத்தெடுத்து
மணிமருள் கண்டரைத் தென்கயி லாயம் வடகயிலைத்
தனிவறு வைப்பினும் பூசனை சாலவி யற்றினனே. 51

ஊன் - மாமிசம். நரபதி - அரசன். போதிவனம் - அரசவனம். கருங்கார் - கரிய மேகம். கான் - வாசனை.

49. பின்வரும் நாட்களினும் கன்மநாசினி தீர்த்தக்கரையில் சிறந்த அந்தணர்கள் பழிநீங்கும் வகையால் ஆராய்ந்து சிவலிங்கப் பிரதிட்டைசெய்து மிக்க அன்புடன் பூசித்து மகிழ்ந்திருந்தான். அந்தக் காஞ்சிநதியிலே வழிபாடு செய்யும்பொருட்டு மறுநாளும் நீராடினன்.

வழிநாள் - பின்னாள். பதிட்டை - பிரதிட்டை.

50. இரண்டு முறைகளில் வந்து பெருகிய மிக்க வலிமையையுடைய சாபங்கள் இரண்டுதினங்கள் தீர்த்தத்திலே நீராட அழிந்து மற்றைநாளும் மூழ்குதலால் நீங்காத குரங்குமுகம் நல்ல முகமாக மாறியது. மகிழ்ந்து அரசன் பிராமணர்களுக்குச் செம்பொன்னும் ஆடையும் நிறையக் கொடுத்தான்.

இருகால் - இரண்டு தடவை. எறுழ்வலி - மிக்கவலிமை. மடிந்து - அழிந்து. வைகல் - நாள். ஆர்த்தினன் - வழங்கினன்.

51. திருவாபரணம், பரிவட்டம் முதலிய பொருள்களை யெல்லாம் சிவபெருமானுக்குக் கொடுத்துப் பல திருப்பணிகளைச் செய்து பங்குனி மாதத்திலே விழா எடுத்து நீலகண்டராகிய சிவபெருமானுக்குத் தென்கயிலாயம் வடகயிலாயம் என்னும் இடங்களினும் மிகுதியாகப் பூசனைகளைச் செய்தான்.

தூசு - ஆடை. அணிகலம் - ஆபரணம். அமலன் - சிவபெருமான். பணி - தொண்டு. மணி - நீலமணி. வைப்பு - இடம்.

தீர்த்தம் பலவும் படிந்தாடித் தீர்த்தன் றளிபலவும்
பார்த்து வணங்கி மருதோங் கியபனி மால்வரைபோய்க்
கூர்த்த நுதிவடி வேற்கரத் தானைக் குழைந்திறைஞ்சி
ஆர்த்தி வளம்பொரு டன்பதி புக்குல காண்டனனே. 52

முருகார் கலிகன்ம நாசினி மூழ்கி முசுகுந்தனுக்
கருளாங் கருள்சிவ லிங்கங்கண் டேத்தின ராக்கையிடை
வெருளார் பிணிமுத லானவை தீர்ந்துவிண் ணோர்வியப்பப்
பொருளார்ந் திரும்புக ழீட்டிமண் ணாண்டின்பம் பூணுவரே. 53

வேறு

என்று கூறிய சூதனை மாதவ ரேத்தினர்
நன்று கூறினை நாக மிழந்த வலாரிதான்
அன்ற ரக்க வுருக்கொ டலைந்தன னென்றனை
பின்றை யுற்றதும் பேசெனப் பேசுவன் சூதனே. 54

முசுகுந்தன் முகம்பெறுபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1188

---

52. பலதீர்த்தங்களில் தோய்ந்து நீராடி, சிவதலம் பலவற்றையும் தரிசித்து வணங்கி, மருதமரம் உயர்ந்து விளங்கும் மருதமலையை அடைந்து வேற்படையையுடைய முருகவேளை மனமுருகிப் போற்றித் தன்பதியை அடைந்து ஆட்சி புரிந்தான்.

தீர்த்தன் - சிவபெருமான். நுதி - நுனி.

53. வாசனைவீசும் மிக்க முழக்கத்தையுடைய கன்மநாசினி தீர்த்தத்திலே முழுகி, முசுகுந்தனுக்கு அருள்புரிந்த சிவலிங்கத்தைத் தரிசனம் செய்தோர் உடற்பிணி முதலியன நீங்கப்பெற்று, தேவரும் வியப்படையப் பொருட்செல்வம் மிகப்பெற்று, பெரிய புகழையடைந்து நிலவுலகத்தை அரசுபுரிந்து இன்பம் பெற்று வாழ்வார்.

ஆர்கலி - மிக்க ஒலி. ஆக்கை – உடம்பு. வெருள் - அச்சம்.

54. என்று உபதேசம் செய்தருளிய சூதமகாமுனிவரை நைமிசாரணிய வாசிகள் வணங்கி, நன்று கூறினீர். விண்ணுலகத்தைவிட்டு நீங்கிய இந்திரன் அரக்கன் வடிவம் பெற்று அலைந்தான் என்றீர். அவன் பின் அடைந்த பேற்றையும் சொல்லியருளுக என்று இரந்தனர். சூதரும் சொல்லத்தொடங்கினர்.

நாகம் - தேவருலகம். பின்றை – பின்மை.

பதினேழாவது

இந்திரன் சாபந்தீர்ந்தபடலம்

தாயி லாத தனிமக வென்னவுந் தண்ணிய
தோய நீங்கு சுருள்விரி பைம்பயி ரென்னவு
மேய வாருயிர் நீங்குட லென்னவும் விண்ணெலாந்
தூய வேந்த னிலாமை வனப்புத் துறந்தவே. 1

விலாழி மும்மத நான்மருப் பேழுயர் வேழமூர்
வலாரி நீங்கினன் மானவன் மாமுசு குந்தனுஞ்
சுலாவு நாண்கொடு போயின னென்னினிச் சூழ்வெனக்
குலால னேமியி னெஞ்சுகொண் டும்பர் குழைந்தனர். 2

ஆய காலையி னுரத னங்க ணடுத்தனன்
நீயி ராகுலம் விட்டுதிர் நீண்முடி வேந்தனைப்
போய னுவிப் புணர்ந்த வரக்க வருத்தனைச்
சாய நீவித் தருவலென் றவ்வயி னீங்கினன். 3

---

1. தாயில்லாக் குழவியைப் போலவும், நீரில்லாத பயிரைப்போலவும், உயிர்நீங்கிய உடலைப்போலவும் விண்ணுலகம் முழுதும் இந்திரன் இல்லாமையால் அழகையிழந்தது.

தோயம் - நீர். சுருள்விரி பைம்பயிர் - இளம்பயிர். வேந்தன் - இந்திரன்: "வேந்தன் மேய தீம்புன லுலகமும்" (தொல்). வனப்பு - அழகு.

2. துதிக்கையினின்று உமிழ்கின்ற நீரும், கன்னமதம் கபோலமதம் கோசமதம் என்னும் மும்மதங்களும், கால் நான்கும் வாலொன்றும் கையொன்றும் கோசமொன்றும் நிலத்திற் படியுமாறுள்ளதுமான ஏழுறுப்புக்கள் உயர்ந்ததும், நான்கு தந்தங்களுடையதுமாகிய ஐராவதயானையின்மேல் ஊர்ந்துசெல்லும் இந்திரன் அரசினின்று நீங்கினன். மனிதவுடம்போடுகூடிய சிறந்த முசுகுந்தனும் நாணத்துடன் விண்ணுலகைவிட்டுச் சென்றான். இனி என்னசெய்வது? என்று குயவனது சக்கரம்போல மனஞ்சுழன்று தேவர்கள் மனங்கரைந்தனர்.

விலாழி - யானைத் துதிக்கையினின்று உமிழும்நீர். ஏழ் உயர்வேழம் - ஏழு உறுப்புக்கள் நீண்டவேழம்; ஏழுமுழம் உயர்ந்த யானை எனினுமாம். அஃது உத்தம கஜலட்சணம் என்பர். மானவன் - மனிதன், மானத்தையுடையவன்; மனுகுலத்தில் உதித்தவன் எனலுமாம். சூழ்வு - ஆராய்ச்சி. குலாலன் - குயவன். நேமி - சக்கரம்.

3. அப்போது நாரதமுனிவர் அவ்விடத்தையடைந்தார். நீங்கள் வருந்தாதீர்கள். நான் இந்திரன்பால் சென்று அரக்கவுருவை நீக்குவித்துச் சேர்ப்பேன் என்று கூறி அவ்விடம்விட்டு நீங்கினர்.

மாலை வெள்ளரு வித்திர டுங்க மதுமலர்ச்
சோலை சூழ்ந்த பனிவரைச் சாரலைத் துன்னினுன்
காலை மாலையும் யாமமுங் கான்முக மேல்கறங்
கோலை போலுழி தந்த வரக்கனை யுற்றனன். 4

இடர்ப்ப டுந்தனக் கின்னுண வெய்திய தாமென
வடர்ப்ப மேல்வரு மிந்திர னுநனத் தங்கைசேர்
கடத்து நீரொரு கையிடை வாங்கி யெறிந்தனன்
மடத்தை நீற்று மனுவெனு மைந்தெழுத் தோதியே. 5

ஐந்தெ ழுத்து நவின்றற லாநனத் தெற்றலு
முந்து றுத்த முரணடி பிந்துற வாங்கினுன்
மைந்து கொண்ட மயக்கம் வறிது தணந்தனன்
இந்தி ரன்செயல் கண்டன னீர்ஞ்சடை நாரதன். 6

ஆகுலம் - வருத்தம். அணுவி - அணுகி. சாய - அழிய. நீவி - போக்கி; நீவுவித்து என்க. வீட்டுதிர் - நீக்குங்கள்.

4. வெள்ளிய அருவிக்கூட்டம் மாலைபோல ஒழுக, தேனெழுகும் மலர்ச் சோலைகளால் சூழப்பெற்ற இமயமலைச் சாரலை நாரதர் அடைந்தார். காலை மாலை யாமம் முதலிய காலங்களிலும் காற்றினுற் சுழலும் காற்றுடிபோலத் திரியும் அவ் வரக்கனை அணுகினர்.

கால்முகமேல் - காற்றினிடத்து. கால் - காற்று. கறங்கு ஓலை - காற்றுடி.

5. துன்புறும் தனக்கு இனிய உணவு கிடைத்ததென எண்ணிக் கொல்ல எதிராகவரும் அரக்கனுகிய இந்திரன் முகத்தில் திருவைந்தெழுத்தைச் செபித்துக் கமண்டல சலத்தை ஒரு கையிலே வாங்கி எறிந்தார்.

அடர்ப்ப - கொல்ல. ஆனனம் - முகம். அங்கைசேர் கடம் - கையிலுள்ள கமண்டலம். மடத்தை நீற்றும் - அறியாமையைச் சாம்பராக்கும்.

6. பஞ்சாக்கர மந்திரத்தைச் செபித்து, சலத்தினுல் முகத்தில் வீசி அடித் ததும் முன்னே மாறுபட்ட எண்ணத்துடன் வைத்த காலடியைப் பிற்படவைத் தான். வலிமைகொண்ட மயக்கம் சிறிது நீங்கினுன். நாரதமுனிவர் இந்திரன் செயலைக்கண்டார்.

அறல் - நீர். எற்றுதல் - வீசுதல். முரண் - மாறுபாடு; வலிமை எனலுமாம். மைந்து - வலிமை. வறிது - சிறிது; 'வறிது சிறிதாகும்' (தொல்). தணந்தனன் - நீங்கினுன்.

வருக வென்று நடந்தனன் வேதியன் மன்னனும்
பருகு பாற்பசு வைத்தொடர் கன்றிற் படர்ந்தனன்
பொருவின் மேலைச் சிதம்பரத் தெல்லை புகுந்தனன்
வெருவின் மாதவன் வேந்தனவ் வெல்லை மிதித்திலன். 7

கண்டு நாரத னெந்தினிப் போக்கெனக் கையினல்
அண்டர் கோன்கரம் பற்றின னீர்த்தரி தேகிநீர்
மண்டு காஞ்சி நதியி னழுத்தினன் மன்னவன்
கொண்ட சாப வரக்க வுருக்குலைந் தோடிற்றே. 8

வேறு

உறங்கிக் கண்விழித் தாலென வும்பர்கோன்
மறங்கி டந்த வடிவது நீங்கலும்
பிறங்கு முன்னெழின் மேனியும் பெற்றியும்
அறங்கி ளர்ந்த வறிவொடு மெய்தினன். 9

இருந்த தெவ்வுழி யெவ்வுழி நின்றனம்
பொருந்து செய்தியென் னேவெனப் புந்தியின்
மருண்டு வார்சடை மாதவன் ருண்மலர்
தெருண்ட சிந்தையி னன்சிரந் திட்டினன். 10

---

7. நாரதமுனிவர் வருக என்றழைத்து முன்னே சென்ருர். இந்திரனும் பசுவைத் தொடர்ந்து செல்லும் கன்றைப்போன்று பின்னே சென்ருன். ஒப்பில்லாத மேலைச் சிதம்பரத்தின் எல்லையை நாரதர் அடைந்தார். இந்திரன் அவ் வெல்லையிற் சென்றிலன்.

வேதியன் - நாரதமுனிவர். வெருவு இல் - அச்சமில்லாத.

8. நாரதர் அதனைப்பார்த்து இனிப்போதல் எங்கே? என்று இந்திரன் கரத்தைப்பிடித்து இழுத்து அரிதாகச் சென்று நீர் நிறைந்த காஞ்சி நதியிலே அழுத்தினர். இந்திரன் பெற்ற சாபத்தால் கொண்டுள்ள அரக்கவுரு அழிந்தது.

எந்து - எங்கே; என்ன எனினுமாம். அரிது ஏகி - மிக முயற்சியுடன் சென்று. அரக்க உரு - அரக்கன் வடிவம்.

9. தூங்கிக் கண்விழித்தாற்போல இந்திரன் பாவவடிவாகிய அரக்க உரு நீங்கியபின் விளங்கும் முன்னைய அழகிய வடிவும், பெருமையும் அறம் பொருந்திய அறிவுடன் பெரிதும் சிறந்தான்.

மறம் - பாவம். பெற்றி - தன்மை; பெருமை. அறம் - தருமம்.

10. எங்கே இருந்தோம், எவ்விடத்து நின்ருேம், இங்கே வரக்காரணமென்ன? என்று மனமயங்கி நாரதமுனிவர் திருவடிகளில் தெளிவடைந்த மனமுடைய இந்திரன் விழுந்து வணங்கினன்.

மகதி வீணை வடித்திசை தேக்குகைப்
பகவ வீங்குப் படர்ந்ததென் னேதென
நகைமு கத்தொடு நாரதன் முனவர்
பகைஞ கேளெனப் பட்டது கூறுவான். 11

அகித வுட்டிர னுலலைப் புண்டுநீ
புகலி டமின்றிப் பொன்னிமை யம்புகுந்
திகழின் வைகுழி யெய்து பிருகுவின்
மகளைக் காமுற்று வண்கரம் பற்றினாய். 12

சுரக்குங் கோபத்துத் தொன்முனி சீறலும்
அரக்க னுயினை யைய ரதுதெரிந்
திரக்க மாமுசு குந்தன்விண் ணெய்தினன்
கரக்கக் காதினன் காழ்த்த வவுணரை. 13

எவ்வுழி - எவ்விடம். மருண்டு - மயங்கி. மாதவன் - நாரதமுனிவர். தெருண்ட - தெளிவடைந்த. சிரம்திட்டினன் - வணங்கினன்.

11. மகதி என்னும் வீணையினால் இசை நிறைக்கும் கரத்தையுடைய பகவானே! இங்கே வரக்காரணம் என்ன? சொல்லியருளுக என்று இந்திரன் கேட்க, சிரித்த முகத்துடன் நாரதமுனிவர், அரக்கர் பகைவனே! கேள் என்று நடந்த செய்தியைக் கூறுவாராயினர்.

மகதி - நாரதமுனிவருடைய வீணை.

12. நீ அகிதவுட்டிரன் என்னும் அசுரனால் துன்புற்றுத் திக்கில்லாமல் இமயமலையை அடைந்து இழிந்தநிலையில் தங்கியிருந்த காலத்துப் பிருகுமுனிவருடைய மகளை விரும்பி அவள் கையைப் பிடித்திழுத்தாய்.

புகல் - பற்றுக்கோடு. வைகுழி - தங்குமிடத்து; உழி காலமிடமாயிற்று.

13. மிக்க கோபத்தால் பிருகுமுனிவர் சபிக்க, நீ அரக்கன் உருக்கொண்டாய். வியாழபகவான் அது தெரிந்து சென்று இரக்க, முசுகுந்தன் விண்ணுலகத்தை அடைந்தவனாய் வயிரம்பற்றிய அவுணரை அழித்தான்.

தொன்முனி - பிருகுமுனிவர். ஐயர் - குரு. எய்தினன் - அடைந்தவனாகி. காழ்த்த - பகைமுதிர்ந்த.

வள்ள லங்கு வதிவுழி மாதராள்
எள்ள விண்ண மிகந்தித் தடநதித்
தெள்ளு நீரிற் படிந்த சிறப்பினல்
நள்ளு மாநுட நன்முகங் கொண்டனன். 14

விசும்பு தவ்வென வேந்தநிற் பற்றியா
னிசும்பு மால்வரை கானகம் யாவுநீத்
தசும்பு பைம்பொ னவிருமிக் காஞ்சியின்
பசும்பு னற்படி வித்தனன் காண்டியால். 15

அரக்க ணகிய சாபம கன்றது
புரக்கு நின்னுருப் பூண்டனை யென்றலும்
பரக்கு மோகைப் பரவை படிந்தனன்
கரக்குன் றூருங் கடவுளர் வேந்தனே. 16

பொறியி லேனைப் பொருட்படுத் தாய்க்கும்விண்
நெறியின் வைத்த நிருபற்கும் யான்செயுங்
குறியெ திர்ப்பை குறித்திடி னில்லையால்
அறிவ வென்றடி மீட்டும் வணங்கினன். 17

---

14. முசுகுந்தன் விண்ணுலகத்தில் வசித்தகாலத்தில் அரம்பை இகழத் தேவருலகத்தைவிட்டு நீங்கி, இந்த நதி தீர்த்தத்தில் முழுகிய புண்ணியத்தால் மனிதமுகத்தைப் பெற்று அவன் மகிழ்ந்தான்.

வதிவுழி - வசித்தகாலத்தில். எள்ள - இகழ. இகந்து - நீங்கி. இத்தடநதி - காஞ்சிமாநதி. நள்ளும் - விரும்பும்.

15. விண்ணுலகம் வெச்சென்றிருப்ப, இந்திரனே! உன்னைப் பிடித்துக் கொண்டு மலை காடு முதலியவற்றைக் கடந்து இக் காஞ்சிநதியிலே வந்து மூழ்குவித்தேன்.

விசும்பு - விண்ணுடு. தவ்வென - ஒளி மழுங்கியிருக்க. இசும்பு - ஏற்றிழிவு. அசும்பு - துளி. அவிரும் - விளங்கும். படிவித்தல் - மூழ்குவித்தல்.

16. பிருகுமுனிவரால் நேரிட்ட அரக்கவுருப்பெற்றுள்ள சாபம் நீங்கியது. விண்ணுலகத்தை ஆட்சிசெய்யும் இந்திர வடிவத்தைப் பெற்ருய் என்று நாரத முனிவர் கூற ஐராவதயானையை ஏறிச்செலுத்தும் தேவேந்திரன் மகிழ்ச்சியாகிய கடலில் மூழ்கினன்.

புரக்கும் நின் உரு - புரந்தரன்வடிவம். ஓகை - உவகை. பரவை - கடல். கரக்குன்று - கைம்மலை; யானை.

17. அறிவிலாத என்னையும் ஒருபொருளாக மதித்துச்செய்த உபகாரத்தை யுடைய உமக்கும், விண்ணுலகத்தை மீட்டும் முன்புபோல வைத்த உபகாரத்தை யுடைய முசுகுந்தனுக்கும் யான் செய்யும் பிரதியுபகாரம் யாதொன்றுமின்று.

கம்ப மீருங் கலிகன்ம நாசினி
வம்பு லாவு புனலின் மறுவலும்
பம்பு வேத முறையாற் படிந்தனன்
தம்பி ரானடி சார்ந்து வணங்குவான். 18

வேறு

மாடகத் திவவு நல்யாழ் மாதவ னோடு சென்று
பாடகத் தளிர்மென் பாதப் பைங்கொடி காண மன்றுள்
நாடக நவிற்று முக்க ணம்பனு ரடியிற் செந்தேன்
ரேடகம் பொதிந்த போது தூய்ப்பணிந் தாடி னனே. 19

ஞானியே! என்று கூறி மறுபடியும் நாரதமுனிவர் திருவடிகளில் விழுந்து வணங்கினன்.

பொறி - அறிவு. நிருபன் - முசுகுந்தன். குறியெதிர்ப்பு - பிரதியுபகாரம். குறித்திடின் - நினைந்தால். அறிவ - விளி; முனிவனே.

18. நடுக்கந் தொலைக்கும் ஒலியையுடைய கன்மநாசினி என்னும் தீர்த்தத்திலே மறுபடியும் இந்திரன் வேதவிதிப்படி மூழ்கினவனுகிச் சிவபெருமானுடைய திருவடிகளைச் சேர்ந்து வணங்குவானுயினன்.

கம்பம் - நடுக்கம். ஈரும் - போக்கும். கலி - மிக்க ஒலி. வம்பு - வாசனை. மறுவலும் - மறுபடியும். தம்பிரான் - தனக்குத் தானே பிரானுயுள்ளவன்; சிவபெருமான்.

19. நாரதமுனிவரோடு (இந்திரன்) சென்று, உமாதேவியார் காணும்படியாக வெள்ளிமன்றில் ஐந்தொழில் நடனம் செய்தருளும் சிவபெருமானுடைய திருவடிகளிலே செந்தேனொழுகும் மலர்களைத் தூவி வணங்கி, ஆனந்தக் கூத்தாடினன்.

யாழ்மாதவன் - நாரதமுனிவர். அவருடைய யாழ் மகதி என்பது. நாரதமுனிவர் சிவபெருமான் செய்தருளும் திருக்கூத்துக்கிசைய மகிழ்ந்து இசைபாடும் தத்துவஞானியாதலின் இந்திரனை அழைத்துச்சென்று நாடகம்நவிற்றும் முக்கண் நம்பனுரைத் தரிசிப்பித்தார் என்க. நாரதர் சிவபெருமான் கூத்துக்கிசைய இசை பாடுதல் ''மான்புரிந்த திருக்கரத்து மதியிருந்த நதிவேணி மங்கைபாகன், தான் புரிந்த திருக்கூத்துக் கிசைய மகிழ்ந் திசைபாடும் தத்துவஞானி'' (வில்லிபாரதம்-இராய.). பைங்கொடி காண-உமாதேவியார் தரிசிக்க: ''பங்கேந்தும் பெருமாட்டி விழிகளிப்ப இருமுனிவர் பணிந்து போற்றக், கொங்கேந்து மணிமன்றுட் குனித்தருளும் பெருவாழ்வைக் குறித்துவாழ்வாம்'' (காஞ்சிப்பு.); ''இளங்குழவிப்பிணிக்கின்ற தாய்மருந்து நுகர்வதுபோ லிருளின் மாண்ட, களங்குலவு மலமுயிர்கட் கொழியவரு ணடங்காணுங் கடன்மீக் கொண்டு, வளங்குலவு தனதுபெருங் கற்பு மொரு கணவரிறை மாண்புந் தோன்ற, விளங்குமிர ணியமன்றில் நின்றருளு மணிவிளக்கை விளம்பி வாழ்வாம்'' (திருவானைக்காப். கடவுள் - 7).

கள்ளகந் துறுத்த பல்வி கமழ்நறும் பன்னீர் நீழல்
உள்ளகந் தூய வன்ப ருறுபணி யியற்ற வைகுந்
துள்ளிய மறிமா னங்கைத் துணைவனை யுமையா ளோடு
மள்ளிலைக் குலிச வேற்கை யமரனன் பாரத் தாழ்ந்தான். 20

தமனிய வுலகில் வாழுந் தச்சனைக் கூவிப் பேரூர்
அமலனுக் குவகை யார வாலயப் பணியு மற்றுங்
குமரிவல் லிருள்கால் சிக்குங் குருமணித் திரளிற் செய்வித்
திமவரை மருகன் வைகுந் தளியெலா மிறைஞ்சி னனே. 21

நறையிதழ்க் கமலச் சேக்கை நான்முகன் குண்டத் தியாக
முறையுளி யாற்றி விண்ணோர் முகந்துண வவிக னல்கிப்
பிறைவளர் சடையான் மாட்டுப் பெருவரம் பலவும் பெற்று
நிறைவளந் தழைய விண்போய் நெடிதர சியற்றி வாழ்ந்தான். 22

---

20. தேன் நிறைந்த பல மலர்கள், மணம் வீசும் நல்ல பன்னீர்கொண்டு மனந்தூயராகிய அடியார்கள் அவரவர்கட்குரிய தொண்டுகளைச் செய்யும்படி மானேந்திய திருக்கரத்தையுடைய சிவபெருமானை உமாதேவியாரோடு இந்திரன் அன்புமிக வணங்கினன்.

கள் - தேன். அகம் துறுத்த - உள்ளே நிறைந்த. வி - மலர். பல்வி - பல வகைப்பட்ட மலர். பணி - பணிவிடை. துணைவன்: "அருந்துணையை அடியார் தம் அல்லல்தீர்க்கும் அருமருந்தை"; "தோன்றுத்துணை" (தேவா); குலிசவேல் - வச்சிராயுதம்.

21. பொன்னுலகில் வாழும் தெய்வத்தச்சனை அழைத்துப் பேரூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு மகிழ்வுமிக ஆலயப்பணியும் மற்றுள்ளனவும் குமரியிருட்டை அழிக்கும் நிறம் பொருந்திய மணிகளின் கூட்டங்களால் செய்வித்து, இமயமலையரையன் மருகராகிய சிவபெருமான் வீற்றிருக்கும் கோயில்களை யெல்லாம் சென்று வணங்கினன்.

தமனியம் - பொன். தச்சன் - விசுவகம்மியன். குமரி வல் இருள் - நிறைந்த இருட்டு. கால்சீத்தல் - அவ்விடத்தினின்று சுடர் போக்குதல். சீத்தல் - விலக்குதல். குரு - நிறம். தளி - கோயில்.

22. பிரமதேவர் அமைத்த குண்டத்திலே விதிப்படி யாகத்தைச்செய்து, தேவர்களெல்லோரும் அவிப்பாகத்தை உண்ணும்படி கொடுத்து, சிவபெருமானிடத்திலே பல வரங்களையும் வேண்டிப் பெற்று நிறைந்த வளப்பமிக விண்ணுலகுக்குப்போய் இந்திரன் அரசுசெய்து வாழ்ந்திருந்தான்.

நறை - வாசனை; தேன். கமலச்சேக்கை - தாமரைப்பீடம். முறையுளி - விதிப்படி.

இந்திரன் சாபந் தீர்ந்த வீர்ந்துறை கரிகாற் சோழ
மைந்தினன் றுறைக்கு மேல்பால் வயங்குமற் றங்குச் செம்பொன்
சுந்தர வெள்ளி கன்னி துகில்கல னன்ன மற்றுஞ்
சிந்தையின் மகிழ்ந்து தானஞ் செய்பவர் துறக்க மாள்வார். 23

அத்துறை நறுநீ ராடி யாலயம் புகுந்து தாழ்ந்து
வித்தகன் றிருமு னெய் விளக்கிடு வோர்கள் சுற்றக்
கொத்தொடு மிருளி னீங்கிக் குருமணி விமானத் தேகி
உத்தம சிவலோ கத்தி னுலப்பறு கற்பம் வாழ்வார். 24

உரைத்தவத் துறைநீ ராடி யுமைமண வாளர்க் கன்பான்
விரைத்தபூச் சாந்தஞ் செம்பொன் வெள்ளிமற் றுலோக மாடை
திரைத்தவெள் ளிலைக்கா யன்னஞ் செய்கரி புரவி கன்னி
தரைத்தலை யிவற்று ளொன்று சார்த்துவோர் பயன்சொல் வாரார்.

---

23. இந்திரன் சாபம் போக்கிய நீர்த்துறையானது கரிகாற்சோழன் துறைக்கு மேல்பால் விளங்கும். அத்தீர்த்தக்கரையில் பொன், வெள்ளி, கன்னி, ஆடை, ஆபரணம், அன்னம் மற்றும் பொருள்களையெல்லாம் மகிழ்ச்சியுடன் தானங்கொடுப்போர் விண்ணுலகத்தை ஆளுவார்.

ஈர்ந்துறை - குளிர்ந்த நீர்த்துறை. மைந்தின் - வன்மையுடைய. துகில் - ஆடை. றக்கம் - சுவர்க்கம்.

24. அந்தத் துறையிலே முழுகி, ஆலயத்துள் புகுந்து, சிவபெருமான் சந்நிதியிலே நெய்விளக்கு இடுவோர் சுற்றம் முழுவதும் அறியாமையினீங்கி இரத்தின விமானத்தில் ஏறிச்சென்று மேலான சிவலோகத்தில் எல்லையில்லாத கற்பங்கள் வாழ்வார்.

தாழ்ந்து - வணங்கி. வித்தகன் - சிவபெருமான். இருள் - அஞ்ஞானம். உலப்பறு - எல்லையற்ற; முடிவில்லாத.

25. மேலே சொல்லிய அந்தத் துறையிலே முழுகி, உமாதேவியாரை ஒரு பாகத்திலேயுடைய சிவபெருமானுக்கு அன்பினலே மணமலர்களும் சந்தனமும் பொன்னும் வெள்ளியும் மற்றுள்ள உலோகமும் ஆடையும் தாம்பூலமும் அன்னமும் பூமியும் யானை குதிரை பெண் ஆகியவைகளும் ஆகியவற்றுள் ஒன்றைக் கொடுப்போர் பெறும் பயனை யாவரே கூறுவார்.

விரைத்த - மணமுடைய. வெள்ளிலை - வெற்றிலை. காய் - பாக்குக்காய். சார்த்துவோர் - கொடுப்போர்.

எனவகுத் துரைத்த சூத னிணையடி முனிவர் தாழ்ந்திட்
டனகனே கரிகாற் சோழ வரையனற் றுறையொன் றுங்குப்
புனனதி யிடத்துண் டென்னப் புகன்றனை யனைய சோழன்
தனதுறு சரிதந் தன்னைச் சாற்றெனச் சாற்றுஞ் சூதன். 26

இந்திரன் சாபந்தீர்ந்தபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1214

---

26. என்று விரித்துச் சொல்லிய சூதமுனிவருடைய திருவடிகளை நைமிசாரணிய முனிவர்கள் வணங்கி, பரிசுத்தமானவரே! கரிகாற்சோழனுடைய துறை ஒன்று அக்காஞ்சிநதியில் உண்டு என்று கூறியருளினீர். அந்தச் சோழனுடைய வரலாற்றையும் சொல்லி அருள்வீராக என்று விண்ணப்பிக்கச் சூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

அநகன் - பரிசுத்தன்.

பதினெட்டாவது

கரிகாற்சோழன் கொலைப்பழி தீர்ந்தபடலம்

பொன்னி மாநதி புரக்கும் பூம்பணை
நன்னர் நாட்டினை நன்று காத்துவாழ்
மன்னர் தங்குலம் வந்து தோன்றினன்
தென்ன ரஞ்சுவிக் கிரம சிங்கனே. 1

அனைய மன்னவ னறத்தின் பேற்றினாற்
கனைக டற்புவி கலியி னீங்குற
இனைத லில்கலி கால னென்பவன்
தனைய னுயவன் சார்பிற் றோன்றினன். 2

மகமி யற்றிய மதலை யெண்ணில
புகரில் கல்வியிற் பொருது வென்றுவென்
றிகல்செய் வேலினா னெளிதி னாட்டிய
புகழ்செய் தம்பமும் புகலொ ணாதவே. 3

---

1. பாண்டியகுல மன்னர்கள் அஞ்சுதற்குக் காரணமாகிய விக்கிரமசிங்கன் என்பவன் காவிரியாறு வளம் கொழித்தலால் வயல்கள்மிக்க சோழநாட்டை நன்றாகப் பாதுகாத்து வரும் சோழ அரசர் குலத்திலே தோன்றினன்.

பொன்னி - காவிரிநதி. பூம்பணை - அழகிய வயல்கள். தென்னர் - பாண்டியர்.

2. அந்த அரசன் செய்த தவப்பேற்றினால் கடல் சூழ்ந்த உலகம் துன்பந் தீர வருந்துதலில்லாத புத்திரனாகக் கலிகாலன் என்பவன் அக்குலத்தில் தோன்றினன்.

கலி - துன்பம். இனைதல் இல் - வருந்துதலில்லாத. தனயன் - புத்திரன். கலிகாலன் - துன்பத்துக்கு இயமன்போன்றவன்; எனவே துன்பத்தைப்போக்கு பவன் என்றபடி.

3. யாகங்களைச்செய்தவன். குற்றமில்லாத கல்வி அறிவுள்ளான். போர் செய்து வென்று வென்று வலிபெற்றுள்ளான். எளிதாகப்பல புகழ்த் தம்பங்களை யும் நாட்டினவன் ஆவான். அவை சொல்லொணாதன.

வேங்கை வார்கொடி மேரு மால்வரை
தாங்க வேற்றினன் சகமெ லாந்தொழூந்
தீங்கில் காஞ்சிமா நகர்செ றிந்தகான்
நீங்க நற்குடி நிறுவி னனரோ. 4

ஆறி லொன்றுகொள் கடமை யன்றினர்
விற வென்றுகொள் வெறுக்கை யுல்கினல்
ஏறு வண்பொரு ளெய்தி டும்பொருள்
கூறு நான்கினு மறங்கள் கூர்த்துளான். 5

ஆக்க மில்குடிக் காறி லொன்றையுந்
தேக்கி வையகஞ் செகிற்ப ரித்தனன்
காக்கு நாளையிற் கானிற் பல்விலங்
கூக்க நோக்குபு வேட்டைக் குன்னினன். 6

மகம் - யாகம். புகர்இல் - குற்றமில்லாத. இகல் - பகை, வலி. புகழ் செய் தம்பம் - செயத்தம்பம்.

4. மகாமேருமலையில் வேங்கைக்கொடியை ஏற்றி உலகமெல்லாம் வணங்கும் தீமையில்லாத காஞ்சிமாநகரைக் காடுகெடுத்து உண்டாக்கி, சோழநாட்டினின்று தெரிந்தெடுத்த நற்குடி நாற்பத்தெண்ணாயிரவரைக் கொண்டுபோய்க் குடிபுகச்செய்தான்.

வேங்கை - புலி: புலிக்கொடி சோழருக்குரித்து. சகம் - உலகம். செறிந்த கான் நீங்கக் காஞ்சி மாநகர் நற்குடி நிறுவினன். நிறுவினன் - குடியேற்றினன்.

5. ஆறிலொரு கடமையும், செருக்குற்ற பகைவரைவென்று கொள்ளும் பொருளும், சுங்கத்தினல் வருபொருளும், உறுபொருளும் ஆகிய நான்கினலும் அறங்களைப் பெருகச் செய்தான்.

[1] ஆறிலொன்ருய் வருதலாவது: தாம் குடிகள் மாட்டுச் செய்யும் அருளோடும், அவர் தம்மாட்டுச் செய்யும் அன்போடும் கூடிவருபொருள்; அவ்வாறு வாராத பொருளிட்டம் பசுமட்கலத்துள் நீர்போலச் செய்தாரையுங் கொண்டிறக்கும். [2] கப்பம்: பகைவரிடத்துத் திறையாகக்கொள்ளும் பொருள். [3] சுங்கம்: கலத்தினும் காலினும் வரும் பண்டங்கட்கு இறையாயது. [4] உறுபொருள்: வைத்தார் இறந்துபோக நெடுங்காலம் நிலத்தின்கட்கிடந்து பின் கண்டெடுத்த பொருள். திருக்குறள் : 755, 756 காண்க.

அன்றினர் - பகைவர். விற - செருக்குக்கொள்ள. வெறுக்கை - பொருள். உல்கு - சுங்கம். எய்திடும் பொருள் - உறுபொருள், புதைபொருள். கூர்த்தல் - பெருக்குதல்.

6. வறுமையுடைய குடிமக்கட்கு ஆறிலொரு கடமையாகக் கொண்ட பொருளையும் செலவிட்டு உலகத்தைத் தோள்வலிமையால் தாங்கிப்பாதுகாக்கும்

வேறு

தெள்ளிய மணிப்புனல் சென்று தோய்ந்தனன்
ஒள்ளிய செய்கட னூழி னாற்றினன்
அள்ளொளிப் பொற்கலத் தமுதந் துய்த்தனன்
கொள்ளரு விலைக்கலன் கொண்ட ணிந்தனன். 7

உடுப்புவன் கவயங்கொண் டுடலம் போர்த்தனன்
தொடுப்புறு கழல்கழற் றுலங்க யாத்தனன்
தடுப்பரும் படைஞரும் வலையுந் தன்புடை
அடுப்பவைங் கதிப்பரி மேல்கொண் டூர்ந்தனன். 8

காலத்தில் காட்டிலுள்ள பலவிலங்குகளின் கொடுமையை நோக்கி வேட்டையாட நினைந்தான்.

ஆக்கம் - செல்வம். தேக்கி - நிறைவித்து. வையகம் - உலகம். செகில் - தோள்.

7. காலையில் நீராடி நாட்கடன்களை முறைமையாற்செய்து அமுதுண்டு விலையுயர்ந்த அணிகலன்களை அணிந்தான்.

தெள்ளிய மணி - தெளிவாகிய நீலமணி போன்ற. செய்கடன் - நித்திய கன்மங்கள். ஊழின் - விதிப்படி. கலம் - பாத்திரம். அருவிலைக் கலன் - விலை உயர்ந்த ஆபரணம்.

8. உடம்பு முழுவதையும் ஆடைகளாலும் கவசங்களாலும் மூடினான். கழலைக் காலில் அணிந்து நீங்காத படைவீரரும் வலைகளும் தன் பக்கத்திலே பொருந்திவர ஐந்து கதிகளையுடைய குதிரையின்மீது ஏறிச் செலுத்தினான்.

தொடுப்புறு கழல் - வீரக்கழல். கழல் துலங்க: கழல் - கால். கவசம் - மெய்யுறை, சாலிகை. படைஞர் - ஈண்டு வேட்டையாடும் பொருட்டுச் செல்லும் படைவீரர். பரி - குதிரை. ஐங்கதி – சிம்மகதி, மயூரகதி, வானரகதி, வியாக்கிர கதி, குஞ்சரகதி என்பன. இவ்வாறன்றி நிச்சலமாக அதிவேகமும் அதிமந்தமும் ஆகாமல் சமமான கதி - ஆஸ்கந்திகம்; அதைக்காட்டிலும் அதிகமாய்ச் சதுர மான கதி - தோரிதகம்; தாளகதியுடன் வட்டமிட்டகதி - ரேசிதம்; வேகத்தினாலே முன்னங்காலைத் தூக்கிவரும் நடை - வல்கிதம்; அவ்வளவு வேகமாகவும் சமமாக வும் போகுகை - புலுதம் என்பர். இனி, ''விக்கிதம் வற்கிதம் வெல்லுமுப கண்டம், மத்திமம் சாரியோ டைந்து'' எனவும் கூறுவர். இன்னும் வல்க்கம், சங்கிரவல்க் கம், தாடி, மண்டல வத்ப பிரமம், மந்தம் என்பன. மல்லகதி, மயூரகதி, வானர கதி, வல்லிய கதி, சரகதி எனலுமாம். இவற்றுள் திவாகரர் வல்லியகதி நீக்கிச் சசகதி கொள்வர். பிங்கலர் சரகதி நீக்கி விடைக்கதி கொள்வர். பிறவாறுங் கூறுவர்.

கானக மடுத்தனன் கதழ்ந்து வேயினர்
மானம ரிடந்துரீஇ வந்து சொற்றனர்
ஊனமில் வலைவளா யொடியெ றிந்தனர்
வேனவி ரேளினன் வியங்கொ ளாளரே. 9

செருக்கள மெனப்பறை தெழிக்க வெங்கணும்
முருக்குவன் ஞமலியை முடுக்கி விட்டனர்
மருக்கிளர் மலர்ப்புதல் வார்ந்த தண்டினல்
எருக்கின ரார்த்தன ரெறுழ்ப்பு யத்தினர். 10

வேறு

முழங்கி வன்கொலை வேங்கை பாய்ந்தன மும்ம தக்கரி பாய்ந்தன
தழங்கி யேனமொ டெண்கு பாய்ந்தன தாவு மான்கலை பாய்ந்தன
பழங்க ணுற்றரி யேறு பாய்ந்தன பல்கும் யாளிகள் பாய்ந்தன
வழங்கு மத்திர மன்ன முள்ளுடன் மல்கு மெய்யினம் பாய்ந்தன. 11

---

9. காட்டைச் சேர்ந்தான்; ஒற்றர்கள் வேகத்துடன் விலங்குகள் இருக்கும் இடத்தைத் துருவித் தேடிவந்து சொன்னர்கள். வலைகளைக் கலந்து உடம்பை வளைத்து ஏவலாளர் விசினர்.

கதழ்ந்து - ஓடி: கதழ்வு - வேகம். வேயினர் - ஒற்றர். மான் - விலங்கு. துரீஇ - துருவி. வளாய்=அளவளாய் - கலந்து. ஒடியெறிதல் - உடலை வளைத்து முறித்து விசுதல். வியங்கொளாளர் - ஏவலாளர்கள்.

10. போர்க்களம் என்னும்படி பறைகள் ஒலிக்க, எல்லாவிடங்களிலும் வேட்டை நாய்களை வேகமாகச் செல்லவிட்டார்கள். புதல்களையெல்லாம் நீண்ட தடிகளைக்கொண்டு அடித்தார்கள். வலிய தோள்களையுடைய ஏவலாளர் ஆரவாரம் செய்தனர்.

செருக்களம் - போர்க்களம். தெழிக்க - ஒலிக்க. முருக்கு வன் ஞமலி: முருக்தும் - அழிக்கும். ஞமலி - நாய். வார்ந்த - நீண்ட. எருக்கினர் - அடித்தனர். எறுழ் - வலி.

11. குமுறிக்கொண்டு மிக்க கொல்லும் தன்மையுள்ள புலிகள் பாய்ந்தன. யானைகள் பாய்ந்தன. பெரிய ஒலிசெய்து கொண்டு பன்றிகளுடன் கரடிகள் பாய்ந்தன. தாவிச் செல்லும் இயல்பினையுடைய ஆண்மான்கள் பாய்ந்தன. துன்புற்று ஆண்சிங்கங்கள் பாய்ந்தன. நிறைந்த யாளிகளும் பாய்ந்தன. செலுத்தும் அம்புகளையொத்த முள்ளுடன் நிறைந்த முள்ளம்பன்றிகள் பாய்ந்தன.

தழங்கி - பேரொலிசெய்து. ஏனம் - பன்றி. எண்கு - கரடி. கலை - ஆண்மான். பழங்கண் - துன்பம். அரி ஏறு - ஆண்சிங்கம். அத்திரம் - அம்பு. எய் - முள்ளம்பன்றி.

வேல்வ ழங்கின ரீட்டி விட்டனர் வெய்ய கப்பண முந்தினர்
கோல்வ ழங்கினர் பிண்டி பாலமுங் குந்த முஞ்சில ரேவினர்
பால்வ ளந்தொளிர் நா ந்த கம்பரு வச்சி ரத்தடி யோச்சினர்
கால்வ ழக்க மறக்க னன்றுகைப் பாசம் வீசினர் கண்ணிலார். 12

தலேது மிப்பன வால றுப்பன தாளி றுப்பன வாருடல்
நிலேகு ளிப்பன சோரி விழ்ப்பன நீள்கு டர்சரி விப்பன
வலேவி ழித்துணே சூன்று குப்பன வைது மார்பு பிளப்பன
கொலேமு கத்தவர் மானின் மீது குறித்து றுத்த படைக்கலம். 13

இரிந்து வீழ்வன காது வார்களே யெற்றி விழ்வன வென்புகண்
முரிந்து வீழ்வன வொன்றை யொன்றெதிர் முட்டி வீழ்வன வன்றலே
திரிந்து வீழ்வன கூவி வீழ்வன சீறி வீழ்வன மீளியர்
சொரிந்த வாய்த மனேத்தும் வெய்து தொடர்ந்து சாடிய மான்களே. 14

---

12. சிறிதும் தாட்சணியம் இல்லாதவர்களாய்வேட்டஞ்செய்யும் ஏவலாளர் சிலர் வேல், ஈட்டி, கப்பணம், அம்புகள், பிண்டி, பாலம், குந்தம் முதலிய ஆயுதங்களே வேறு வேறு செலுத்தினர். பக்கத்திலே வளேந்து பிரகாசிக்கும் வாள், பெரிய வச்சிரத்தடிகள் முதலியவற்றைச் சிலர் வீசினர். ஓடுதற்கு இயலாதபடி கோபித்துக் கையிலுள்ள பாசத்தைச் சிலர் வீசினர்.

கப்பணம் - இரும்பினுல் செய்த யானே நெருஞ்சிமுள். கோல் - அம்பு. பிண்டிபாலம் - எறியும் ஆயுதம்; பீலித்தண்டு, எஃகு. குந்தம் - பெருஞ்சவளம், சிறுசவளங்கள். நாந்தகம் - வாள். வச்சிரத்தடி - வச்சிரத்தண்டு. கால் வழக்கம் அற - காலால் ஓடிச்செல்லாதபடி. கனன்று - கோபித்து. வழக்கம் - வழங்குதல்; செல்லுதல்.

13. வேட்டையாடும் வீரர்கள் விலங்குகளின்மீது குறித்துச் செலுத்திய ஆயுதங்கள் அவ்விலங்குகளின் தலேயை அறுப்பன, வாலேயறுப்பன, கால்களே வெட்டுவன, உடலிலே தைப்பன, இரத்தத்தைப்பெருக ஒழுகவிடுவன, நீண்ட குடலேச் சரிந்து வீழச்செய்வன, கண்களேத்தோண்டிச் சிந்துவன, மார்பைப் பிளப்பனவாம்.

துமிப்பன - அறுத்துவீழ்த்துவன. சோரி - குருதி. சூன்று உகுப்பன - தோண்டி வீழ்த்துவன. ஐது - அழகிதான. படைக்கலம் - ஆயுதங்கள். உறுத்த - செலுத்திய.

14. வேடர்களாகிய வீரர்கள் செலுத்திய ஆயுதங்களெல்லாம் கொடுமையுடையனவாய்த் தொடர்ந்து அடித்தவிலங்குகள் கெட்டோடி வீழ்வன. வேட்டையாடுபவர்களே மோதிச்சென்று வீழ்வன. எலும்புகள் முறிதலால் கீழே வீழ்வன. ஒன்ருேடொன்று ஓடுவதால் தாக்கப்பட்டு வீழ்வன. தலேகொய்யப்பட்டு வீழ்வன. அலறிக்கொண்டு வீழ்வன. கோபித்துச் சீறிக்கொண்டுபோய் வீழ்வனவாம். இரிந்து - கெட்டோடி. காதுவார் - கொல்லுவோர். எற்றி - மோதி. மீளியர் - வீரர். சாடிய - அடித்த.

மடைவ யிர்க்குல மெங்கு மேங்கின மாடு பம்பை யிசைத்தன
தடைப டுத்துளர் நாய்கு ரைத்தன சார்ந்து மள்ளர் தெழித்தனர்
மிடைவ லைத்திரள் சூழ்ந்த சூழல் விறந்து மான்பல விந்தன
அடைய லர்க்குரு மேற னன்பல வாளி யாளி யடர்த்தனன். 15

இளமை மான்க ளலைத்தி லார்பிணி யெய்து மான்க டொடர்ந்திலார்
வளமை மிக்கதோர் சூலு டைப்பெண் வருத்தி லார்வளர் மூப்பினுல்
தளர்வி லங்குகள் சாடி லாரிவை தப்ப மற்றைய மானெலாம்
வெளிறில் கேள்வியர் கைப்ப டைக்கலம் வேறு வேறட மாண்டவே. 16

வேறு

வேட்டைத்தலை நீங்கினன் மீளியர் பாங்கு போதக்
காட்டிற்கரி கால்வள வன்கடி தேகு வானேர்
தோட்டுக்கம லங்கள் விரிந்து சுகந்தம் வீசுஞ்
சேட்டுக்கதிர் மாமணி யோடைகண் டாங்குச் சென்ருன். 17

---

15. மூட்டுக்களுடன் கூடிய ஊதுகொம்புகள் பல ஒலித்தன. பம்பைகள் சத்தித்தன. விலங்குகளை ஓடாமல் தடைசெய்து நாய்கள் குரைத்தன. வீரர்கள் ஆரவாரித்தனர். நெருங்கிய வலைகளால் சூழப்பட்டுள்ள சூழலிலகப்பட்டுப் பல விலங்குகள் இறந்தன. பகைவர்களுக்கு இடியேறு போன்ற கரிகால்சோழன் பல அம்புகளால் யாளிகளைக்கொன்ருன்.

மடை - மூட்டு. வயிர் - ஊதுகொம்பு. மிடை - நெருங்கின. சூழல் - பக்கம். விறந்து - அகப்பட்டு, அஞ்சி. அடையலர் - பகைவர். உரும் - இடி. வாளி - அம்பு.

16. விலங்கு வேட்டையாடுவோர் அங்கேயுள்ள மான்கன்றுகளை வருத்திலர். நோயுற்ற விலங்குகளைத் தொடர்ந்து சென்றிலர். கருக்கொண்ட பெண் விலங்குகளை வருத்திலர். மூப்புற்றுத் தளர்ந்த விலங்குகளையும் கொன்றிலர். இவைகளையன்றி ஏனைய விலங்குகளெல்லாம் வேட்டஞ் செய்வோர் கையிலுள்ள ஆயுதங்கள் வேறு வேருகச் சென்று கொல்லுதலால் இறந்தொழிந்தன.

அலைத்தல் - வருத்தல். சூல் - கருப்பம். வெளிறு - அறியாமை.

17. காட்டிலே வேட்டையாடுமிடத்தினின்று நீங்கி, வீரர்கள் பக்கத்திலே சூழ்ந்துவரக் கரிகாற்சோழன் விரைந்து செல்வானுய் ஒரு மலர்வாவியைக்கண்டு அங்கே சென்ருன்.

வேட்டைத்தலை: தலை - ஏழனுருபு. மீளியர் - வீரர். தோடு - பூவிதழ். கமலம் - தாமரை. சேட்டு - உயர்ந்த.

புடைமாண்ட வளம்பல நோக்குபு பூத்த பல்வீ
இடைமாண்ட நிழற்கய நோக்கியங் கெய்து முன்னர்
நடைமாண்டொரு கேழ லடுத்து நன்னீர் குடிப்பத்
தொடைமாண்ட வில்விற்கணை யொன்று தொடுத்து விட்டான். 18

பட்டூடுரு விக்கணை பன்றி பதைத்து வீழக்
கெட்டேனொரு பூத மெழுந்து கிளக்க லுற்ற
தொட்டார்க்குரு மேறனை யாயொரு பன்றி யாமென்
றட்டாயெனை யந்தண னுன்வர லாறு கேட்டி. 19

தொல்லைத்தவத் தால்வினை நல்லன சூழ்ந்த வென்னைச்
சொல்லிப்புவி யோர்கள் சுவிர்த்தி யெனத்து திப்பார்
வல்லைத்தெறு பூண்முலை மாதுடன் வாழு நாளில்
இல்லத்தற நீத்து வனத்தற மெய்தி னேனால். 20

மனைமாதொடு சுற்றமு மென்னை வனத்தி னூடும்
வினைபோற்றொடர் வுற்றனர் வெய்து வெகுண்டு நீவார்
தனைநாடியோர் பன்றி யுருக்கொடு தம்மை வஞ்சித்
தெனையாவருங் காண்டலு ருதிங் கிருந்து ளேனால். 21

---

18. பக்கத்திலேயுள்ள பல வளங்களையும் பார்த்து, அந்த வாவியை அடையுமுன்னே ஒரு பன்றி அங்கே தண்ணீர் குடிக்கக்கண்டு, வில்லிலே அம்பு ஒன்றைப் பூட்டித் தொடுத்துவிட்டான்.

மாண்ட - மாட்சிமைப்பட்ட. வீ - மலர். நடைமாண்டு - நடை தளர்ந்து. கேழல் - பன்றி. தொடை மாண்ட - தொடுத்தலிற் சிறந்த. கணை - அம்பு.

19. அவன் தொடுத்துவிட்ட அம்புபட்டு ஊடுருவிச் சென்று பன்றி பதை பதைத்துக் கீழேவிழ, ஒரு பூதம் எழுந்து சொல்லலுற்றது. பகைவருக்கு இடி போன்றவனே! என்னை ஒரு பன்றியென நினைந்து கொன்றாய். நான் அந் தணன், என் வரலாற்றைக் கேட்பாயாக. ஒட்டார் - பகைவர். அட்டாய் - கொன்றாய்.

20. முன்னே நான் செய்த தவத்தினால் நல்ல செயல்களெல்லாம் பொருந் தின. உலகத்தோர் என்னைச் சுவிர்த்தி எனப் போற்றுவார். மனைவியுடன் இல்லறத்தை நடத்தி வருங்காலத்து இல்லறத்தை நீங்கி, வானப்பிரத்த ஆசிர மத்தை அடைந்தேன்.

சுவிர்த்தி - நற்செயலுடையான். வல் - சூதாடு கருவி. தெறு - கோபிக்கும். பூண் - ஆபரணம். இல்லத்து அறம் - கிருகத்தாச்சிரமம். வனத்து அறம் - வானப்பிரத்தம்.

21. நான் வனத்திலே சென்றிருந்தும் மனைவியும் சுற்றத்தாரும் வினை போல அங்கும் வந்து சூழ்ந்தனர். அதனால் மிக்க கோபத்தையடைந்து தவசியை

அரிதாகிய விவ்வுட னீங்குதற் கோவ றியேன்
பெரிதாகிய தாக முடற்றப் பெயர்ந்து போந்தேன்
கரிகால் வளவா வெனையட்டனை காவல் பூண்ட
உரிதாகிய நாடு முனக்கில தாகு மன்றே. 22

இப்பூத வுருக்கொடு நீயெவ ணுற்றி யேனும்
அப்பாலு நினைத்தொடர் வேனக லேன்மன் யானென்
றுப்பூத மடுத்தெதிர் தட்கு முளர்ந்து கொட்குந்
தப்பாதுகை யெற்று மதிர்ந்து தணக்கு மீளும். 23

நன்றுஞ்செய லுன்னு மனத்தை நடுக்கு நல்ல
குன்றுவினை செய்திடின் வெய்து குலைக்கு நன்மை
பொன்றுத்துதி செய்திடி னுப்பெய ராமை பூட்டும்
ஒன்றுத கொலைப்பழி நோக்கி யுலைந்து மன்னன். 24

யுற்று ஒரு பன்றியுருவம் பெற்று, அவரை வஞ்சித்து என்னை யாவரும் அறியா வண்ணம் இங்கிருந்தேன்.

வெய்து வெகுண்டு - மிகச் சினங்கொண்டு. நீவார் - நீத்தார்; துறவிகள்; தவசிகள் என்றபடி.

22. அரிதாகப்பெற்ற இப்பன்றியுடலை நீக்கிக்கொள்ளும் வகையறியேன். மிக்க தாகம் என்னை வருத்த இங்கே வந்து சேர்ந்தேன். கரிகால்வளவனே! நீ என்னைக் கொன்றாய். நீ பாதுகாத்துவரும் உரிமை பூண்ட நாடும் உனக்கு இல்லாமற்போம்.

23. நீ எங்கே சென்றாலும் இப் பூதவுருவுடனே உன்னைத்தப்பாமல் அப் பாலும் தொடர்ந்து வருவேன், யான் நீங்கேன் என்று அப்பூதம் நெருங்கி எதிரே நின்று தடை செய்யும், அலறிக்கொண்டு சுழலும், தவறாமல் கைகளை ஒன்றோ டொன்று புடைக்கும், அதிரும்படி செய்து நீங்கும், மறுபடியும் வந்து தொடரும்.

அடுத்து - நெருங்கி. தட்கும் - தடைசெய்யும். கொட்கும்-சுழலும். எற்றும்- புடைக்கும். தணக்கும் - நீங்கும்.

24. நற்செயலைச் சிந்திக்கும் மனத்தை நடுங்கச் செய்யும். நல்ல செயல் களைச் செய்யுமிடத்துப் பெரிதும் அழிக்கும். நல்ல தோத்திரங்களைச் சொல்லுங் காலத்து நா எழாமல் அழுத்தும். நீங்காத இக்கொலைப் பாவத்தை நோக்கி மனம் வருந்தி மன்னன்.

வெய்து - மிகுதியாக. பொன்று - நீங்காத. பூட்டும் - அழுத்தும், மூடும். ஒன்றுத - நீங்காத, பொருந்தாத.

மறையோர்தமைக் கூவியிவ் வல்வினைத் தீர்வு சொன்மின்
அறைபோயதெ னுள்ள மெனத்தொழ வந்த ணாளர்
பிறைநீரொடு வேணி முடித்த பெம்மான் றலங்கள்
நிறைகாதலிற் சென்று வணங்குதி நீங்கு மென்றார். 25

அரையன்மகிழ் வுற்றர னார்நட மாடு தில்லை
விரைபொங்கிய சோலை விராவு குடந்தை யாரூர்
வரையென் றயிர் மாட நிலாவுவண் காஞ்சி காசி
புரையின்றுயர் சேது முதற்பல போற்றச் சென்றான். 26

வேறு

அன்ன செவ்வி யறிந்தொரு தானவ னாண்மையான்
கன்ன சூல னெனக்கரை யப்படு நாமத்தான்
வன்னி யோம்பி மனுக்கணித் தந்தணர் மல்கிய
பொன்னி நாடுதன் றாட்படுத் தாணை புதுக்கினான். 27

---

25. பிராமணர்களை அழைத்து இந்தக்கொடிய பிரமக்கொலை நீங்கும்படி கழுவாய் கூறுவீராக. என் மனம் பாழ்பட்டது என்று வணங்கிச் சொல்ல, பிராமணர்கள் சிவத்தலங்கள் தோறும் சென்று நிறைந்த அன்புடனே நீ வழி பட்டு வருவாய்; இப்பழி நீங்கும் என்றார்கள்.

இவ்வல்வினை - இந்தப் பார்ப்பனக் கொலைப்பாவம். தீர்வு - கழுவாய். அறைபோதல் - அழிதல், கீழறுதல். பிறைநீரொடு வேணிமுடித்த பெம்மான் - இளம்பிறைச் சந்திரனைக் கங்காநதியுடன் தமது சடாபாரத்தில் தரித்து விளங்கும் சிவபெருமான்.

26. அரசன் மகிழ்ச்சியடைந்து சிவபெருமான் பரமானந்த தாண்டவஞ் செய்யும் தில்லை, குடமூக்கு, திருவாரூர், காஞ்சிபுரம், காசி, சேது முதலிய பல சிவத்தலங்களையும் வழிபடச்சென்றான்.

விரை - வாசனை. அயிர் - அயிர்க்கும் முதனிலைத் தொழிற்பெயர். புரை - குற்றம்.

27. அச்சமயமறிந்து கன்னசூலன் என்னும் பெயரையுடைய வலிய அசுர னொருவன், மந்திரங்களை ஓதி வேள்விகளைச் செய்து பாதுகாக்கும் அந்தணர் நிறைந்த சோழநாட்டைத் தனதாகக்கொண்டு தன் ஆணை செலுத்தினான்.

செவ்வி - பருவம். தானவன் - அசுரன். வன்னி ஓம்பி - யாகாக்கினியைப் பாதுகாத்து. வன்னி - அக்கினி. மனு - மந்திரம். கணித்து - சொல்லி. பொன்னி நாடு - சோழநாடு; பொன்னி - காவிரி: காவிரியாறு வளம்பெருக்கலின் பொன்னி நாடெனப்பட்டது. தாட்படுத்து - அடக்கி.

இனைய செய்கை நிகழ்ந்துழி யீர்ம்பனி மால்வரைத்
தனையை யம்மலைச் சாரலிற் றன்னுயிர் நாயகன்
புனைபு கழ்க்கழற் பூசனை யாற்றுந ளேவல்செய்
நனைம லர்க்குழ லாரொரு நால்வரு மூவரும். 28

மாத ரன்னவ ரோர்தினம் வைகறை வார்மதுப்
போது கொய்யப் புகுந்தனர் நந்தவ னத்திடை
ஓத ருங்கவி னுற்றவன் காந்தரு வன்புகக்
காதல் கொண்டு கலங்கினர் மாத ரெழுவரும். 29

நெடிது போது கலங்கிய நெஞ்ச நிறுத்தினர்
கடிவி ராவிய பன்மலர் கொய்து கடுகினர்
வடிகொள் சூலத்தர் பூசைசெய் காலம் வழுக்கலில்
தொடியி னர்செயல் யாதெனப் பார்ப்பதி சூழ்ந்தனள். 30

நெகிழ்ந்த வுள்ளத்த ராகிமுன் னேர்ந்த வொருத்தனை
மகிழ்ந்து காமுற்று மாழ்கின ரென்று மதித்தனள்
முகிழ்ந்த பூண்முலை யீர்முதல் வன்பணி தாழ்த்தினிர்
தெகிழ்ந்த காமத்துச் சிந்தனை செய்தனி ராதலான். 31

---

28. இச்செயல் நிகழ்ந்த காலத்தில் இமயமலையரசன் புத்திரியாகிய பார்வதிதேவியார் அந்த இமயமலைச் சாரலில் தன்னுயிர் நாயகராகிய சிவபெருமானது பூசை புரிகின்றவளுடைய தொண்டுகளைச் செய்யும் மாதர்கள் எழுவரும். ஈர் - குளிர்ச்சி. பனிவரை - இமயமலை. தனையை - புத்திரி. உயிர் நாயகன் - சிவபெருமான். கழல் - திருவடி. நனை - தேன், பூவரும்பு எனினுமாம்.

29. அந்த ஏவல் மகளிர் எழுவரும் ஒருநாள் விடியற்காலத்திலே அன்றலர்ந்த மலர்களைக் கொய்யும்பொருட்டு நந்தவனத்திலே புகுந்தார்கள். அப்போது சொல்லுதற்கரிய அழகுடையவனாகிய கந்தருவன் ஒருவன் வரக்கண்டு காதல் கொண்டு எழுவரும் மனங்கலங்கினர்.

வைகறை - விடியற்காலம். வார்மது - மிக்கதேன்பொருந்திய. போது - மலரும் பருவத்தரும்பு. கவின் - அழகு.

30. நெடுநேரம் கலங்கிய நெஞ்சை ஒருவழிப்படுத்திப் பின்பு வாசனை பொருந்திய பல மலர்களையும் கொய்து எடுத்துக்கொண்டு விரைந்து சென்றனர். சிவபூசை செய்தற்குக் காலம் தாழ்த்தலின் அம்மகளிரின் செயல் யாது எனப் பார்வதிதேவியார் ஆராய்ந்தார்.

போது - காலம். கடி - வாசனை. வடி - கூர்மை. காலம் வழுக்கல் - உரிய காலத்திற் செய்யாமல் குற்றப்படல். வழுக்கு - குற்றம். தொடி - வளையல். சூழ்தல் - ஆராய்தல்.

31. பறிகொடுத்த மனத்தை யுடையவராய் எதிர்ப்பட்ட ஒரு ஆடவனை விரும்பிக் காமவசத்தராய் அழிந்தனர் என்று துணிந்தாள். மகளிரே ! நீங்கள்

தோற்றி மானுட மாதர்க ளாய்த்தொகு கற்புநூல்
ஆற்றி னீங்கி யநங்கன் பதாகையன் னீர்நுமக்
கேற்ற வாறு நடக்குக வென்று சபித்தனள்
கோற்றொ டிக்கைக் குவிமுலைக் கூர்விழிப் பார்ப்பதி. 32

அஞ்சி லோதியம் மேநின தேவன்மிக் காற்றினேம்
வஞ்ச மானுட ராகி மயங்குது மோவெனக்
கஞ்ச நேர்பதங் கையிணை கூப்பி யிறைஞ்சினர்
நெஞ்சு துட்கென வஞ்சுபு நேரிழை மாதரார். 33

வேறு

ஆர்ங்க டித்துணை ரணிந்தவ ரிடப்பா
லமர்ந்த நாயகி திருவருள் வழங்கிப்
பீர்ங்கொ டிப்புது மலர்நிகர் நிறத்தீர்
பேதுற் றஞ்சலிர் சீரங்க வரைப்பிற்
சார்ங்க பாணியை வழிபடு மறையோன்
சார்ங்க நன்முனி யெனும்பெய ருடையாற்
கீர்ங்க ளோதியள் சந்திர வதியென்
றியம்பு மாதரா ளில்லறம் பூண்டாள். 34

முழுமுதற்கடவுட்குச் செய்யும் தொண்டில் தாமதித்தீர்கள்; காமத்திலே கருத்தைச் செலுத்தினீர்கள். ஆதலால்,

நெகிழ்ந்த - கட்டுவிட்ட. மாழ்கினர் - வருந்தினர். தெகிழ்ந்த - பெருகிய.

32. மன்மதனுடைய கொடிபோலும் பெண்களே! நீங்கள் அனைவரும் மனிதப் பெண்களாகப் பிறந்து, கற்புநூல் வழியினை நீங்கி, உமக்கு ஏற்றபடி நடக்கக்கடவீர்கள் என்று பார்வதியம்மையார் சபித்தாள்.

ஆற்றின் - வழியில். அனங்கன் - மன்மதன். பதாகை - கொடி. கோல் தொடி - வளைந்த வளையல்.

33. அந்த ஏவல்மகளிர் எழுவரும் மனம் திடுக்கிட்டு அஞ்சினவர்களாய்ப் பார்வதி தேவியாரை நோக்கி, அம்மே! உன்னுடைய ஏவல்களை மிகவும் செய்திருந்தோம். அவ்வாறுள்ள நாங்கள் வஞ்சகத்தன்மையுடைய மானிடப் பிறப்பிலே தோன்றி மயங்கவும் வேண்டுமோ? என்று தாமரைமலர் போலும் திருவடிகளில் தங்கள் கைகளைக் குவித்து வணங்கினர்கள்.

கஞ்சம் நேர் பதம்: கஞ்சம் - தாமரைமலர். பதம் - திருவடிகள். துட்கென - திடுக்கிட்டு. அஞ்சுபு - அஞ்சி.

34. ஆத்தியின் மலர்க்கொத்துக்களை யணிந்த சிவபெருமானுடைய இடப் பாகத்திலே எழுந்தருளிய உமாதேவியார் கருணைசெய்து, பீர்க்கம்பூப்போன்ற

நீயிர் போயவண் மக்களா யுதித்து நிறைந்த போகங்க ணுகர்ந்திடு நாளிற்
காயி லைக்கதிர் வேலுடைக் கரிகாற் காவ லன்கொலைப் பழிதனைக் கழுவ
மாயி ரும்புவி முழுவது முய்ய வயங்கு வெள்ளியம் பலத்துணின் ருடுந்
தீயி னன்னசெம் மேனியர் பேரூர் செல்லு வானும திரும்பதி வருமால். 35

வந்த கோமக னுடனவ ணேகி வார்ந்த பூம்புனற் காஞ்சிமா நதியின்
அந்த மாதியு மில்லவர் பாத மகத்து ணுடிநன் காடிமா னுடமாம்
பந்த நீங்கியிண் டுறுகவென் றருளப் பசும்பொற் பூண்முலை மாதரவ் வாறே
கந்த மார்பொழிற் சிரங்க வரைப்பிற் கலந்து மன்னவன் வரவுபார்த்
[திருந்தார். 36

வேறு

அந்தணர் விதியாற்று னலைதவழ் பலதீர்த்த
மந்திர நவின்ருடி வளம்பயி றலந்தோறுஞ்
சுந்தர வெண்ணீறு துலங்கிய திருமேனி
எந்தையை வழிபட்டா னிலங்கயிற் கரிகாலன். 37

பசந்த நிறத்தையுடையீர்! நீங்கள் அறிவு திரிந்து அஞ்சாதீர்கள். சிரங்கம் என்னுமிடத்தில் சார்ங்கம் என்றவில்லைத் தரித்த திருமாலை வழிபடும் அந்தணன் ஒருவன் சார்ங்கமுனியென்னும் பெயரையுடையானுக்குச் சந்திரவதி என்பவள் மனைவியாகவுள்ளாள்.

ஆர் - ஆத்தி. கடி - வாசனை. துணர் - பூங்கொத்து. பீர்ங்கொடிப் புது மலர் - பீர்க்கம்பூ: பசலைக்குப் பீர்க்கின்மலர் உவமம். பேதுற்று - அறிவுதிரிந்து. வரைப்பு - இடம்; தலம். ஈர் கள் ஓதியள் : ஓதி - கூந்தல்.

35. நீங்கள் அங்கே சென்று அவள் மக்களாய்ப் பிறந்து நிறைந்த போகங்களை அனுபவித்திருக்கும் காலத்தில் கரிகாற்சோழன் என்பவன் தன்னுடைய கொலைப்பாவத்தைப் போக்கிக்கொள்ளும்பொருட்டு உலக முழுவதும் உய்யுமாறு வெள்ளியம்பலத்திலே பரமானந்தக் கூத்தினைச் செய்தருளும் சிவபெருமானுடைய பேரூரைத் தரிசிக்கச் செல்லும் வழியில் உங்கள் ஊரை வந்தடைவான்.

கழுவ - போக்கிக்கொள்ள. செம்மேனியர் - சிவபெருமான். செல்லுவான்- வானீற்று வினையெச்சம். நும்பதி - சிரங்கம்.

36. வந்த அவ்வரசனுடன் அவ்விடத்துக்குச் சென்று நிறைந்த நீரையுடைய காஞ்சிநதி தீர்த்தத்தில் சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித்து நன்கு முழுகி, மானுடவுடம்பு நீங்கப்பெற்று, இங்கு வருக என்று அருள்செய்ய, அவ்வாறே ஏழு மகளிரும் சிரங்கதலத்தில் பிறந்து மன்னன் வரவு பார்த்திருந்தனர். அகத்துள் நாடி - மனத்தில் தியானித்து. ஆடி - முழுகி. பந்தம் - கட்டு.

37. பிராமணர்கள் கூறிய விதிப்படியே பல தீர்த்தங்களிலும் மந்திரங்களை உச்சரித்து முழுகி, தலங்கள்தோறும் சிவபெருமானைக் கரிகாலன் வணங்கி வழிபட்டான்.

குலவிய தலந்தோறுங் குறுகினன் வழிபட்டு
மலமரு துயர்செய்யு மரும்பழி கழியாமே
கலதிசெய் திடவுள்ளங் கவலையங் கடலாழ்ந்து
நலனொடு புணர்நாளு நணுகுங்கொ லெனநைந்தான். 38

நலிகெழு துயர்தேர்ந்து நாரத முனிசென்றான்
வலிகெழு திரடிண்டோள் மன்னவன் கரிகால்ன்
ஒலிகெழு துதிசெப்பி யொண்சரண் முடிதாழ்த்தான்
கலிகெழு மறைநாவன் கரிசற மொழிகிற்பான். 39

மன்னவர் திறைவாங்கு மானவ கரிகால
நின்னுளம் வெருவற்க நீடிய துயர்நீவி
நன்னெறி தருசூழ்ச்சி நவிலுது மினிக்கேண்மோ
என்னுள மகலாத விருந்தல மொன்றுண்டால். 40

பிப்பில வனமென்றும் பேசுமப் பேரூரின்
ஒப்பறு நதிக்காஞ்சி யொழுகுவ தந்நீரின்
முப்புரி மணிமார்பர் மொழிமறை யுளியாடி
அப்பணி சடையார்தம் மடிதொழு கெனப்போனான். 41

சுந்தரம் - அழகு. சுந்தர வெண்ணீறு: "சுந்தரமாவது நீறு" (தேவா). அயில் - வேல்.

38. விளங்கும் சிவத்தலங்கள் தோறும் சென்று வழிபாடுசெய்தும், மனஞ் சுழலும்படி துன்பத்தைச் செய்யும் கொலைப் பாவம் நீங்காமல், கலக்கம் செய்யக் கவலையாகிய கடலில் மூழ்கி, நான் நன்மையைப்பெறும் நாளும் உளதாமோ? என மனம் நைந்தான்.

அலமரும் - சுழலும்: "அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி". கலதி - கலக்கம். நணுகும் கொல் - கிட்டுமோ.

39. மெலிவுமிக்க அவன் துன்பத்தை யறிந்து நாரதமுனிவர் அவன்பாற் செல்ல, கரிகால்சோழன் துதித்துத் திருவடிகளில் வணங்கி நின்றான். அவன் துன்பம் தீர முனிவர் சொல்லுவாராயினர்.

நலிதல் - மெலிதல். கலிகெழு மறை - ஒலிமிக்க வேதம். மறைநாவன் - நாரதமுனிவர். கரிசு அற - குற்றம் நீங்க.

40. மனு குலத்திலுதித்த கரிகாலனே! உன்னுடைய மனம் அஞ்சாதிரு. மிக்க துன்பத்தைப் போக்கி நீ நல்வழியையடையும் ஆலோசனை ஒன்று சொல்லுவோம் கேட்பாயாக. என் மனத்தைவிட்டு நீங்காத தலமொன்று உண்டு. மானவன் - மனுகுலத்துதித்தவன், மானத்தையுடையவன்; "அறனிழுக்கா, மான முடைய தரசு" (குறள்-384). சூழ்ச்சி - ஆலோசனை.

41. பிப்பிலவனம் என்று சொல்லப்படும் அப்பேரூரில் ஒப்பற்ற காஞ்சி நதி என்னும் தீர்த்தமொன்று உள்ளது. அத்தீர்த்தத்திலே அந்தணர் கூறும்

முனிவர னருள்செய்த மொழியுறு தியிற்பற்றி
வனிதையர் மயல்கூரும் வனப்புடைக் கரிகாலன்
புனிதமங் கலமல்கப் பூம்பணைப் பேரூரிற்
கனிமொழி யுமைபாகன் கழறொழ வழிக்கொண்டான். 42

சந்தனக் குறடுந்தித் தபனியப் பொடிசிந்திக்
கொந்தலர் மலர்வாரிக் குளிர்நிறை காவேரி
வந்திரு புடையுந்தண் வார்கழ றெழுநீலக்
கந்தரத் தினரானைக் காவினைத் தொழப்புக்கான். 43

மன்னவன் கரிகாலன் வரவினை யினிதோரா
இன்னகைத் துவர்ச்செவ்வா யிடுகிடை யெழுமாதர்
முன்னினர் தஞ்செய்கை மொழிந்தன ரிதுவோநம்
அன்னைய தருளென்று வகமகிழ் வினனானான். 44

வேதவிதிப்படி முழுகிச் சிவபெருமானுடைய திருவடிகளைத் துதித்து வணங்குவாயாக என்று சொல்லி நாரதர் சென்றார்.

பிப்பிலம் - அரசு. அப்பு - கங்கை நீர்.

42. நாரத முனிவர் அருளிச்செய்த செய்தியைக் கரிகாலன் உறுதியாகக் கடைப்பிடித்துத் தூயமங்கலங்கள் நிறையும்படி அழகிய வயல்களால் சூழப்பெற்ற பேரூரிலே உமாதேவியாரை ஒருகூறாகவுடைய சிவபெருமான் திருவடிகளைத் தரிசித்து வணங்குதற்பொருட்டுப் பயணமானான்.

வனிதையர் - மகளிர். மயல் கூரும் - காமமயக்கம் மிகுதற்கு ஏதுவான. வனப்பு - அழகு. பணை - வயல். வழிக்கொண்டான் - சென்றான்.

43. சந்தனக் கட்டைகளைத் தள்ளிக்கொண்டு, பொன்துகளைச்சிந்தி, கொத்துக்களோடு மலர்களை வாரி, குளிர்ச்சிமிக்க காவேரியாறனது இரண்டு பக்கங்களிலும் ஒழுகப்பெற்ற திருநீலகண்டராகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருவானைக்காவை வணங்கச் சென்றான்.

குறடு - கட்டை. தபனியம் - பொன். காவேரி - கவேரமுனிவனுடைய புத்திரி. புடை - பக்கம். நீலகந்தரத்தினர் - நீலகண்டத்தையுடையவர்.

44. கரிகாற் சோழனுடைய வரவையறிந்து முன்னமே அம்மையாரால் சபிக்கப்பட்டுச் சீரங்கத்திலே தோன்றிய மாதரெழுவரும் அவன் முன்பு சென்று தமது வரலாற்றைக் கூறினர். கரிகாலனும் நம்முடைய உலகமாதாவாகிய உமாதேவியாருடைய திருவருள் இருந்தபடி இது என்று மனமகிழ்ச்சியுடையவனானான்.

ஓரா - ஆராய்ந்தறிந்து. நகையையுடைய செவ்வாயையும் இடுகிடையையுமுடைய மாதர்: இடுகு இடை - ஒடுங்கிய இடுப்பு. நகை - பற்கள்; சிரித்தலுமாம். துவர் - சிவப்பு. முன்னினர் - கருதியவர்களாய். முன்னினர் மொழிந்தனர்.

மாதவ னமக்குய்த்த வண்மொழிக் கிழுக்கில்லை
மாதவன் வலமேய வரதர்தம் மிட நீங்கா
மாதவ ளருள்செய்த வகையிது வெனவெழுவர்
மாதர்சொற் றலினென்னு மகிழ்வுறு கரிகாலன். 45

சிவிகைக ளெழுவர்க்குஞ் சேர்த்தினன் கொடுபோந்து
கவியொடு முசுவுகளக் கனியுகு பூஞ்சோலைக்
கவிழிணர் மலர்வாசங் காவதம் பலகமழும்
அவிர்மணி நெடுமாடத் தாதியம் புரிசேர்ந்தான். 46

கழுமல்செய் கொலைச்சாயை கழிகெனச் சங்கற்பஞ்
செழுமறை முறையாற்றுற் செய்துயர் கரிகாலன்
ஒழுகுதண் புனற்காஞ்சி யுந்தியிற் படிவுற்றான்
முழுகினர் வருசாப மூடிகென வெழுவோரும். 47

ஆர்த்தினர் மணிசெம்பொன் னுடைகள் கதிர்ப்பைம்பூண்
தூர்த்தனர் குருச்செங்கட் சுரபிகள் னியர்மற்றும்
பார்த்தலை யிரப்போர்க்கும் பரமர்த மடியார்க்கும்
ஓர்த்துணர் மறையோர்க்கு முரைத்தவெண் மருமாதோ. 48

---

45. நாரதமுனிவர் நமக்குச் சொல்லிய அறிவுரை கேடில்லாததாம். இலக்குமி கணவனுகிய திருமாலைத் தமது வலப்பாகத்திலே பொருந்தப்பெற்ற சிவபெருமானுடைய இடப்பாகத்தைவிட்டு நீங்காத உமாதேவியார் அருளியபடி இதுவாம் என்று ஏழு மாதர்களும் சொல்லியபடியால் மகிழ்ந்த கரிகாலன்.

மாதவன் - நாரதமுனிவர். மா தவன் - இலக்குமி கணவராகிய திருமால். இழுக்கு - கேடு. உய்த்த - செலுத்திய. வண்மொழி - உறுதிபயக்கும் சொல். வரதர் - வரத்தைக் கொடுப்பவர். மாது அவள் - உமாதேவியார்.

46. அம்மாதர் எழுவரையும் சிவிகையில் ஊர்ந்துவரச் செய்து, உடன் அழைத்துப்போய், ஆண் குரங்குகளோடு பெண் குரங்குகளும் தாவிச்செல்லுதலால் பழங்கள் உதிர்கின்ற அழகிய சோலைகளில் உள்ள மலர்கள் காததூரம் மணத்தை வீசும் மணிகள் இழைக்கப்பெற்று விளங்கும் நீண்ட மாடங்களையுடைய ஆதிபுரியைச் சேர்ந்தான். கவி - குரங்கு; ஈண்டுப் பெண். முசு - ஆண் குரங்கு. உகள - தாவித் திரிதலால். இணர் - பூங்கொத்து.

47. மயக்கத்தைச் செய்யும் கொலைப்பாதகத்தால் உண்டாகிய பிரமச் சாயை ஒழிக என்று வேதவிதிப்படி சங்கற்பஞ்செய்து உயர்ந்த கரிகாலன் காஞ்சி நதியில் முழுகினன். உமாதேவியாரால் நேரிட்ட சாபம் நீங்குக என்று ஏழு மகளிரும் அந்நதியிலே முழுகினர். கழுமல் - மயக்கம், பற்றுதல்; துன்பமெனினுமாம். உந்தி - நீர்.

48. நிலவுலகத்திலே யாசிப்போருக்கும், சிவபெருமானுடைய அடியார்கட்கும், வேதங்களை ஓதியுணர்ந்த பிராமணர்கட்கும் இரத்தினங்கள் செம்பொன்

கோயிலை யெண்மர்களுங் குறுகினர் பலநல்கிப்
பாயின கலையல்குற் பசுமர கதவல்லி
பேயினள் பிரியாத விகிர்தனை யடியார்க்குத்
தாயினு மினியானைச் சயசய வெனத்தாழ்ந்தார். 49

அகன்றது கொலைச்சாயை யரையனுக் கெழுமாதர்க்
ககன்றது வருசாப மரமக ளிர்களானர்
அகன்றழை மகிழ்பொங்க வாடினர் பலபாடி
அகன்றரை யரசாளு மண்ணலு மடவாரும். 50

அத்தின முணவோம்பி யடுதுமி லிரவெள்ளித்
தத்தலை நெடுவேலைத் தழற்கதி ரெழுகாலைப்
பைத்தெழு நதியாடிப் பவமது வாராமே
நித்திய னருள்பெறுமா நினைந்தன ரிதுசெய்தார். 51

ஆடைகள் ஆபரணங்கள் பசுக்கள் கன்னியர் மற்றுமுள்ள பொருள்களெல்லாம் மாதர் எழுவரும் கரிகாலனும் மகிழ்வோடு கொடுத்தனர்.

பூண் - ஆபரணம். குரு - நிறம். சுரபி - பசு. பார்த்தலை: பார் - பூமி. தலை - ஏழனுருபு. ஓர்த்து உணர் - ஆராய்ந்தறிந்த. உரைத்த - மேற்செய்யுளிற் கூறிய.

49. எண்மரும் கோயிலை அடைந்தனர்; பலவகையான உபகரணங்களை யும் கொடுத்தனர்; மரகதவல்லி அம்மையாரையும் பட்டீசரையும் வணங்கிப் போற்றினர்; அடியார்கட்குத் தாயினும் இனிமையுடையவரே! சய சய என்று துதித்தனர்.

பல - பலவகையான உபகரணங்கள். பாயின - பரவியுள்ள. கலை - ஆடை. விகிர்தன் - சிவபெருமான்.

50. கரிகால்சோழனுக்குப் பிரமகத்தி தோஷம் நீங்கியது. ஏழு மாதர் கட்கும் சாபம் அகன்றது; தேவமகளிர் ஆனர். மனத்திலே பெருகிய மகிழ்ச்சி அதிகரிக்க கரிகாலனும் மகளிரும் பாடியாடினர்.

அரையன் - அரசன். அரமகளிர் - தெய்வமகளிர். அகன் - அகம்: இறுதிப் போலி. அகன் தரை - பெரிய பூமி.

51. அந்த தினத்தில் உணவின்றி, இரவில் துயிலொழிந்து, மறுநாள் உதயகாலத்தில் காஞ்சிநதியில் நீராடிப் பிறப்பு நீங்கும்படி சிவபெருமானுடைய திருவருளைப் பெற வேண்டுமென்று எண்ணி இதனைச் செய்தனர்.

ஓம்பி - பாதுகாத்து. இரவு எள்ளி; எள்ளி - இகழ்ந்து. துயில் - தூக்கம். நெடு வேலை - நெடுங்கடல். பவம் - பிறப்பு.

மண்டப நிருமித்து மண்டில மெழிற்குண்டங்
கண்டழல் வளர்வித்துக் காவலன் மடவாருங்
கொண்டிரு சிவலிங்கங் குரைபுன னதிப்பாங்கர்
எண்டிசை களுமுய்ய விருத்தினர் பூசித்தார். 52

மருக்கிளர் மலர்சாந்த மஞ்சன மொளிதூபந்
திருக்கிளர் கலனுடை திருவமு திவைமற்றும்
ஒருக்கிய மனத்தானுய்த் துறுமுறை பூசிப்ப
எருக்கணி பெருமானு ரெதிரவர்க் கெளிவந்தார். 53

மான்மழுக் கரம்வைக வார்சடை மிளிர்கிற்பக்
கான்மரு வியகூந்தற் காரிகை யிடமாக
வான்முது கிடைத்தோற்று மமலனை யெதிர்நோக்கி
வேன்மருள் விழிமாதர் வேந்தனொ டடிவீழ்ந்தார். 54

வேண்டிய வரமென்னே விளம்புதி ரெனமுன்வந்
தாண்டருள் பெருமானு ரருளலு மவர்விள்வார்
மாண்டவல் வினைத்துன்பம் வருவது பிறவியினு
மீண்டினிப் பிறவாத நெறியெமக் கருளென்றார். 55

---

52. மண்டபத்தைச்செய்து வட்டமாகிய அழகிய குண்டத்திலே தழலை வளர்த்து அரசனும் அவ்வெழுமகளிரும் வேள்விசெய்து காஞ்சிநதியின் பக்கத்திலே இரண்டு சிவலிங்கப்பதிட்டைசெய்து எட்டுத்திக்கிலுள்ளோரும் உய்யுமாறு பூசித்தனர்.

மண்டிலம் - வட்டம். அழல் - அக்கினி. குண்டம் - யாககுண்டம். இருத்தினர் - பதிட்டை செய்தவர்களாய்; முற்றெச்சம்.

53. மணம்பொருந்திய மலர் சந்தனம் திருமஞ்சனம் தீபம் தூபம் அழகிய திருவாபரணம் பரிவட்டம் திருவமுது இவை முதலியவற்றை ஒன்றிய மனத்துடன் வைத்து விதிப்படி பூசனைசெய்ய எருக்கமலர் மாலையையணிந்த சிவபெருமான் அவர்களுக்கு எளிதாகக் காட்சி தந்தருளினர்.

மரு - வாசனை. ஒளி - தீபம். கலன் - ஆபரணம். ஒருக்கிய மனம் - ஒருநெறிய மனம். ஒருக்கிய - ஒன்றிய. "ஒருக்கும் மனத்தன்பருள்ளீர்" (தேவா). உறு முறை - சிவாகம விதிப்படி. எளிவந்தார் - எளிதாகத் தோன்றினர்.

54. மானையும் மழுவையும் கரத்திலே தரித்தவராய், நீண்ட சடைவிளங்க, உமாதேவியார் இடதுபக்கத்திலே தங்க, இடபவாகனத்திலே காட்சிதந்தருளும் சிவபெருமானை எதிரே தரிசித்து வணங்கி ஏழுமாதரும் கரிகால் வேந்தனும் திருவடிகளில் வீழ்ந்தனர். கான் - வாசனை. ஆன்-இடபம். அமலன் - சிவபெருமான்.

55. ஆட்கொண்டருளும் சிவபெருமான் வேண்டிய வரம் யாது கூறுங்கள் என்றருளக் கேட்ட அவர்கள், இகப்பரு மிகப் பெரிய வலிய வினையாகிய துன்பம்

அந்தியின் மதிவேய்ந்த வழகரங் கருள்செய்வார்
இந்தவைப் பிடையெம்மை யேத்துநர் பிறவார்கள்
நுந்தரத் தினுமந்த நோன்மைகொள் வரஞ்சாலத்
தந்தன மிதற்கான சான்றுமிங் குளவன்றே. 56

வித்தது முளையாத மேதகு புளியொன்றொன்
றத்தகு சித்தேச மரமவை முறையானே
உத்தர கயிலையினு மோங்குநம் மாலயத்தும்
உத்தம நெறிநின்றி ரோங்கின வறிகென்றார். 57

அருளிய வரம்பெற்றங் கருட்பணி பலவாற்றி
முருகுயிர் மலர்க்கொன்றை முடியவர் விடைபெற்றார்
ஒருவிய வுமைதன்பா லுற்றெழு மாதர்களுந்
திருவிய லவளேவல் செய்தனர் வாழ்கின்றார். 58

பிறப்பினால் வருவதாம். ஆகலின், எமக்குப் பிறவாத நெறியைத் தந்தருள வேண்டும் என்று இரந்தனர்.

விள்வார் - சொல்லுவார். மாண்ட - மாட்சிமைப்பட்ட: மாட்சிமையாவது துன்பத்தின் பெருமை.

56. மாலைக்காலத்தே தோன்றும் பிறைச்சந்திரனைச் சடையிலே தரித்து விளங்கும் சிவபெருமான் இத்தலத்தையடைந்து இவ்விடத்திலே நம்மைப் பூசிப்போர் பிறவார்கள். ஆகலின், உமக்கும் அந்தச் சிறந்த வரத்தை மிகுதியும் அருளினோம். இதற்குரிய சான்றும் இங்குள்ளது.

அந்தி - மாலைக்காலம். வைப்பு - தலம், இடம். உம் தரத்தினும் - உம்முடைய விஷயத்தினும். நோன்மை - வலிமை. சான்று - சாட்சி.

57. விதைப்பினும் முளையாத சிறந்த புளியமரம் ஒன்று உண்டு. அத்தகைய சித்தியினையுடைய மரம் முறையே வடகயிலாயத்தினும், உயர்ந்த நமது ஆலயத்தினும் விளங்குவனவாம் என்று. நன்னெறியில் நிற்பவர்களாகிய நீங்கள் அறியக் கடவீர் என்று அருள்செய்தார்.

மேதகு - மேம்பட்ட. புளி ஒன்று - சித்தேச மரமொன்று என்க.

58. சிவபெருமான் அருளிய வரங்கள் பலவற்றையும் பெற்று, அந்தத் தலத்திலே திருவருளுக்குரிய பணிகள் பலவற்றைச்செய்து, சிவபெருமானிடத்துப் பிரியாத விடையைப் பெற்று, நீங்கிய ஏழு மாதர்களும் உமாதேவியாருடைய சந்நிதியை அடைந்து தொண்டுகள்செய்து முன்பு போலவே வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

பரிசனம் பலசூழப் படைபல புடைசூழ
உரியத னுடெய்தி யொன்னலன் முடிவீட்டிக்
கரிசறு செங்கோலிற் கடலுல களித்திட்டான்
வரிகழற் கழன்மன்னர் மன்னவன் கரிகாலன். 59

வேறு

அறமா தரிக்குங் கரிகால வரையன் றனக்கு மாதருக்கும்
பிறவா நெறிதந் தருளுதலாற் பெருநீர்க் காஞ்சி நதிதனக்கும்
உறவா யுயிர்கட் கருள்சுரக்கு முமையாள் கொழுநன் பேரூர்க்கு
மறவா துரைக்கு மூவுலகும் வழங்கும் பிறவா நெறிநாமம். 60

கள்ளு மறுகாற் புள்ளினமுங் கஞலு மலரு நவமணியுந்
தெள்ளு நிறைநீர் நதிக்காஞ்சித் தீர்த்தத் திடையே கரிகால
வள்ளல் படிந்த துறைதனக்கு வழங்கு நாம மனத்தகத்துத்
தொல்லை யகன்ற வையகத்தோர் சோழன் றுறையென் றுரைப்பாரால். 61

முருகு - தேன், வாசனை. ஒருவிய - நீங்கிய. திரு இயல் அவள் - முத்தித் திருவைத் தரும் உமாதேவியார். ஏவல் - பணிவிடை.

59. பரிசனங்கள் பலவும் சூழ்ந்துவர, பல படைகளும் பக்கங்களிலே சூழ, தனக்குரிய பொன்னி நாட்டை அடைந்து, பகைவனுடைய தலையைப் போக்கிக் குற்றமற்ற செங்கோலினனாய் உலகத்தை அரசுபுரிபவனானான் கரிகாலன்.

ஒன்னலன் - பகைவன். வீட்டி - அழித்து; வீழ்த்தி என்க. கரிசு அறு - குற்றமற்ற. வரி கழல் - கட்டப்பட்ட வீரக்கழல். கழல் - பாதம்.

60. தருமத்தைப் பாதுகாக்கும் கரிகாலனுக்கும், ஏழு மகளிருக்கும் பிறவா நெறியைத் தந்தருளிய காரணத்தால் மிக்க நீரையுடைய காஞ்சிநதிக்கும், அன்புடனே உயிர்களுக்கு அருளைச்செய்யும் உமாதேவியாருடைய நாயகராகிய சிவபெருமான் வீற்றிருக்கும் பேரூர் என்னும் தலத்துக்கும் பிறவாநெறி என்று மூவுலகமும் மறவாமற் கூறும் பெயர் வழங்கும்.

உறவு - அன்பு, பற்றுக்கோடு.

61. தேனும், வண்டினமும், நெருங்கும் மலர்களும், நவமணிகளும் கொழிக்கும் காஞ்சித் தீர்த்தத்தில் கரிகாலன் முழுகிய நீர்த்துறைக்கு உலகத்தார் சோழன்துறை என்று சொல்லுவார்கள்.

கள் - தேன். அறுகாற் புள்-வண்டுகள். கஞலும்-நெருங்கும். தெள்ளும் - கொழிக்கும். தொல்லை - துன்பம். வையகம் - உலகம்.

பிறவா நெறியிற் படிந்திருக்கும் பேரன் புடையார்க் கேயன்றிப்
பிறவா நெறியென் றுரைத்தவர்க்கும் பிறவா நெறிதந் தருளுமெனப்
பிறவா நெறியின் றிறந்தெரித்துப் பிறங்கு சூதன் முனிவரர்க்குப்
பிறவா நெறியார் பள்ளனுமாம் பெற்றி தெரிய வகுத்துரைப்பான். 62

கரிகாற்சோழன் கொலைப்பழிதீர்ந்தபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1276

---

62. பிறவாததன்மையாம் சன்மார்க்கத்தில் ஒழுகும் ஞானிகளுக்கேயன்றி, பிறவாநெறி என்று சொன்னவர்கட்கும் பிறவாத நெறியைத் தந்தருளும் என்று பிறவாநெறியின் தன்மையைத் தெளியச்சொல்லிப் பின்னும் சூதமுனிவர் நைமிச முனிவர்களுக்குப் பிறவாநெறியார் பள்ளனுமாம் தன்மையை விளங்க எடுத்துச் சொல்லுவாராயினர்.

திறம் - மேன்மை.

பத்தொன்பதாவது

பள்ளூப்படலம்

கயிலை நாயகன் காமரு தன்னுருப்
பயிலு மாடியிற் பார்த்தங் கழைத்தலும்
வெயில்செய் வெங்கதிர் கோடி விராயெனச்
செயிரி லாதமெய்த் தேசொடுந் தோன்றினன். 1

அன்ன சுந்தரற் காலால மாழியின்
முன்ன முன்னவ னுண்ணமற் றன்னதைத்
தன்ன கங்கைத் தழீஇக்கொடு நல்கலால்
துன்னு மாலால சுந்தர நாமமே. 2

ஏழை பாகற் கினியநற் றொண்டுகள்
சூழு மாலால சுந்தர னோர்தினந்
தாழி ணர்க்கடித் தண்மலர் கொய்திட
வாழி நந்த வனத்திடை நண்ணினன். 3

---

1. திருக்கயிலாயத்திலே வீற்றிருந்தருளும் சிவபெருமான் தமது அழகிய வடிவத்தைக் கண்ணாடியிலே பார்த்து அப்போது அழைக்கக் கோடி சூரியர் ஒருசேரக்கூடினாற்போலக் குற்றமில்லாத திருமேனி ஒளியுடன் தோன்றியருளினர்.

காமரு - விரும்பத்தக்க, அழகிய. வெயில் - கிரணம். கதிர் - சூரியன். வெம் - வெப்பத்தைத் தரும். விராய் என - கலந்தாற்போல. செயிர் - குற்றம்.

2. அத்தகைய சுந்தரருக்கு, முன்னே திருப்பாற் கடலிலே தோன்றிய ஆல கால விடத்தை முழுமுதற் கடவுள் உண்ணுதற்பொருட்டுத் தன்கையிலே ஏற்றுக் கொண்டுவந்து கொடுத்தமையால் ஆலாலசுந்தரர் என்னும் திருநாமம் வந்து பொருந்தியது.

ஆழி - பாற்கடல். தழீஇக்கொடு - எடுத்து வந்து. துன்னும் - பொருந்தும்.

3. சிவபெருமானுக்குரிய திருத்தொண்டுகளைச் செய்துவரும் ஆலால சுந்தரர் ஓர்நாள் மணம் பொருந்திய மலர்களைக் கொய்யும்பொருட்டு நந்தவனத் துக்குச் சென்றார்.

ஏழை பாகன் - சிவபெருமான். சூழும் - ஆராய்ந்துசெய்யும். இணர் - பூங் கொத்து. கடி - வாசனை.

வாம பாகத்து நாயகி வார்குழற்
காம லர்த்திரள் கொய்ய வனிந்திதை
காமர் மல்குங் கமலினி மற்றிவர்
தாமு மவ்வுழிச் சார்ந்தன ரென்பவே. 4

இருவர் மாதர் வனப்பு மெழினடை
ஒருவர் நோக்க ஒருவர் வனப்பெலாம்
இருவர் மாதரு நோக்கினர் மற்றிவர்க்
கொருவி லைங்கணை மார னுறுத்தினன். 5

நகுமு கத்தொடு நம்பி யகன்றனன்
புகுமு கம்புரி பூவையர் தாங்களும்
நெகும னத்தொடு நீங்கினர் தம்பிரான்
தகுதி நோக்கிப் பவத்திடைச் சார்த்தினன். 6

வேறு

நாவலூர்ச் சடைய னரா நான்மறைக் கிழவர் மாட்டுத்
தேவரு மிறைஞ்சு நம்பி திருவவ தாரஞ் செய்திட்
டேவரும் புகழா ரூர ரெனும்பெயர் பற்றி னாற்
பூவரில் கொண்ட கூந்தற் பூவைய ரிருவர் தம்முள். 7

---

4. இடப்பாகத்தில் எழுந்தருளியுள்ள உமாதேவியாருடைய கூந்தலுக்காகும் மலர்களைக் கொய்யும் பொருட்டு அனிந்திதை, கமலினி என்னும் இரு தோழியரும் அந்த நந்தவனத்தைச் சார்ந்தனர். அவ்வுழி - அவ்விடத்தை.

5. இரண்டு மகளிருடைய அழகையும் அழகிய நல்லொழுக்கமுடைய ஒப்பற்ற ஆலாலசுந்தரர் நோக்க, அந்த ஒப்பற்றவர் அழகையெல்லாம் இரண்டு மாதர்களும் நோக்கினர். இவர்களுக்கு ஒப்பற்ற கரும்புவில்லையும் ஐந்து மலரம்புகளையும் உடைய மன்மதன் உள்ளத்தைச் செலுத்துவித்தான்.

ஒருவில் ஐங்கணை மாரன்: ஒருவில் - ஒப்பற்றவில்; நீங்குதலில்லாத எனப் பொருள் கொள்ளினுமாம்: ஒருவு இல் என்க. இவர்க்கு - உருபு மயக்கம். உறுத்தினன் - மனம் போக்குவித்தான்.

6. விளங்கும் முகத்துடனே ஆலாலசுந்தரர் அவ்விடத்தை விட்டகன்றார். அவரை நோக்கி முகஞ்செய்த மகளிரும் உருகிய உள்ளத்தோடு நீங்கினார்கள். சிவபெருமான் அவர்களுடைய தன்மையைக்கண்டு பிறப்பிலே செல்லவிடுத்தார். நகுமுகம் - சிரித்தமுகம். புகுமுகம் - பிறர்மனம் புகுதற்கு ஏதுவாகிய முகம். நெகு மனம் - சிதறிய மனம். தம்பிரான் - சிவபெருமான்.

7. திருநாவலூரிலுள்ள சடையனார் என்னும் அந்தணரிடத்துத் தேவர்களும் வணங்கும்படியான நம்பி திருவவதாரம்செய்து எல்லோரும்புகழும் ஆரூரர் என்னும் பெயர் சூட்டப்பெற்றார். முற்கூறிய இருமகளிரில்.

கமலினி யென்னு மாது காமர்சோ ணாட்டிற் பைந்தேன்
உமிழ்மலர்ச் சோலை யாரூ ருருத்திர கணிகை யார்பால்
அமரரும் வியக்குங் கற்பி னாரணங் கென்னத் தோன்றித்
தமர்பிறர் பரவை யென்று சாற்றிடும் பெயர்பெற் றுளாள். 8

அனிந்திதை யென்னுந் தைய லமர்பெருந் தொண்டை நாட்டில்
நனந்தலைப் பழனஞ் சூழ்ந்த ஞாயிறென் றுரைக்கும் வைப்பின்
இனந்தழை தரும்வே ளாளர் குலத்திடை யினிது தோன்றிச்
சனந்தழை யுலகு போற்றுஞ் சங்கிலி நாமம் பெற்றாள். 9

வளர்ந்திடு நாளா ரூரர் மறைபல திருந்த வோதி
அளந்துபல் கலைகண் மன்ற லாற்றுநற் பருவஞ் சார
உளந்தழைத் தீன்ற தாதை யொருமகட் பேசி யோகை
கிளர்ந்தெழு சுற்ற மெல்லாங் கெழீஇப்புரி வதுவை நாப்பண். 10

நான்மறைக்கிழவர் - சிவப்பிராமணர். நம்பி - குணபூரணராகிய ஆலால சுந்தரர்.

8. கமலினி என்னும் பெண், அழகிய சோழநாட்டில் சோலை சூழ்ந்த திருவாரூரில் உருத்திரகணிகையர் குலத்திலே தேவரும் வியக்கத்தக்க கற்பினை யுடைய பரவையார் என்னும் பெயருடையவராகத் தோன்றினர்.

காமர் - அழகு. ஆரணங்கு - தெய்வப்பெண். தமர் - சுற்றத்தார்.

9. அனிந்திதை என்னும் பெண் தொண்டைநாட்டிலே நடுவண் அமைந்துள்ள ஞாயிறு என்னும் ஊரில் மரபு தழைத்த வேளாளர் குலத்திலே இனிது தோன்றிச் சங்கிலியார் என்னும் பெயருடையவரானர்.

நனந்தலை - நடுவிடம். பழனம் - வயல். வைப்பு - ஊர், இடம். சனம் - மக்கள்.

10. ஆரூரர் வளர்ந்து வேதங்களை நன்றாக அத்தியயனம் செய்து, பல கலைகளிலும் வல்லராய், மணப்பருவம் சார்ந்தார். அவருக்குத் தந்தையார் ஒரு பெண்ணை மணஞ்செய்விக்குமாறு மகட்பேசி, மிகமகிழ்வுடன் சுற்றத்தாரெல்லா ருங்கூடிக் கல்யாணம் செய்யும் காலத்தில்.

மறை பல - பல சாகைகளையுடைவேதம்; ஆயிரம் சாகை என்பர். மன்றல் - மணச்சடங்கு. தாதை - தந்தையார். ஈன்ற தாதை என்றார், வளர்த்த தாதையாகிய நரசிங்கமுனையர் இருத்தலின். ஓகை - உவகை, மகிழ்ச்சி. கெழீஇ - கூடி. வதுவை - திருமணம். நாப்பண் - மத்தியில்.

கண்ணுதற் கரந்து பெம்மான் காவணத் திடையே புக்கு
மண்ணவர் மருளச் சால வழக்கிட்டுத் தடுத்தாட் கொள்ள
வெண்ணெய்நல் லூரின் மேய விகிர்தனைத் தொடர்ந்து முன்னர்ப்
புண்ணியப் பொருளா யுள்ளார் பித்தனென் றெடுத்துப் போற்றி. 11

நாவலூர் புகுந்து பாடி நற்றவ நெறிதா வென்று
தேவர்க டேவற் போற்றித் திருத்துறை யூரிற் பெற்றுத்
தீவண மேனி யார்தாந் திருவதி கையின்பாற் கங்குற்
சேவடி சென்னி சூட்டத் திருவருள் போற்றிப் போந்து. 12

வேறு

திருமாணி குழிவழுத்தித் தினைநகரைப் பரசிப்போய்க்
கருமாளத் திருத்தில்லைக் கனகசபை யிடைநவிற்றும்
பெருமான்மெய்த் திருநடனம் பேரார்வத் தொடும்பழிச்சி
மருவாரும் பொழிற்புகலி மாநகரந் தொழப்புக்கார். 13

---

11. நெற்றிக்கண்ணை மறைத்து, சிவபெருமான் காவணத்தின் இடையே சென்று உலகத்தவர் மருட்சியடையும்படி மிகுதியும் வழக்குச்செய்து ஆரூரரைத் தடுத்தாட்கொள்ளத் திருவெண்ணெய்நல்லூரில் வீற்றிருந்தருளும் சிவபெருமானைத் தொடர்ந்துசென்று முன்னைப் புண்ணியப்பொருளாயுள்ள நம்பியாரூரர் பித்தன் என்று தொடங்கும் பதிகத்தைப் பாடித் தோத்திரம்செய்து.

கண்ணுதல் - நுதற்கண். நுதல் - நெற்றி. காவணம் - பந்தர். விகிர்தன் - சிவபெருமான்.

12. திருநாவலூரை அடைந்து, பதிகமோதித் 'தவநெறிதா' என்று இரந்து வணங்கித் திருத்துறையூரென்னும் தலத்திலே பெற்றுத் தீவண்ணராகிய சிவபெருமானுடைய திருவதிகையைச் சார்ந்து, இரவிலே இறைவர் திருவடியைச் சூட்டத் திருவருளைத் துதித்துப் போய்.

'தவநெறிதா' எனவேண்டியது திருத்துறையூரில். திருவடி சூட்டப்பெற்றது திருவதிகைப்புறத்துள்ள சித்தவட மடத்தில் என்க.

13. திருமாணிகுழி, திருத்தினைநகர் முதலிய தலங்களைத் தரிசித்து, பிறவி நீங்கும்படி தில்லைக் கனகசபையிலே திருநடனம் செய்தருளும் இறைவரை மிக்க ஆர்வத்தோடு துதித்துத் தரிசித்து வணங்கிச் சீகாழிப்பதியைத் தரிசிக்கும் பொருட்டுச் சென்றார்.

வழுத்தி, பரசி, பழிச்சி என்பன ஒரு பொருட்சொற்கள். கனகசபை - பொன்னம்பலம். கரு மாள - பிறவி தொலைய: "இன்னம்பல பலயோனியில் எய்தாநெறி பெறவே, முன்னம்பல ரடிதேடவு முடிதேடவு மெட்டா, அன்னம்பல பயில்வார்புன லணிதில்லையு ளாடும், பொன்னம்பல நாதன்கழல் பொற்போடு பணிந்தான்" என்றார் பிறரும்.

அங்கணர்தாங் கயிலைவரை வீற்றிருக்கு மருட்காட்சி
அங்கெதிரே கொடுத்தருள வதுகண்டு போற்றிசைத்துச்
செங்கண்வரா லுகள்பொய்கைத் திருக்கோலக் காவிறைஞ்சித்
தெங்குமலி நறும்பழனத் திருப்புன்கூர் பாடினர். 14

மயிலாடு துறையும்பொன் மாகாளம் புகலூரும்
பயில்வாய்மை யொடும்பாடிப் பணிந்துதிரு வாரூர்புக்
கெயில்வேவ நகைத்தாரை யின்றமிழ்ச்செந் தொடைபாடித்
துயிலாமுக் கண்ணர்தாந் தோழரா மருள்பெற்றார். 15

புற்றிடங்கொண் டவரருளாற் பூங்கோதைப் பரவையார்
முற்றிழைமென் முலைமன்றன் முறைமையாற் கலந்தருளிப்
பற்றுமணக் கோலத்திற் பயிலுநாள் விறன்மிண்டர்
செற்றமிகத் திருத்தொண்டத் தொகையருளி வழிபட்டார். 16

தடுத்தாட்கொண்ட புராணம் 91 முதல் 108 வரையிலுள்ள பாடல்கள் சிந்திக்கத்தக்கன. புகலி - சீகாழி.

14. சிவபெருமான் திருக்கயிலாயத்திலே வீற்றிருந்தருளும் காட்சியை எதிரிலே கொடுத்தருள, அதனைத் தரிசித்து வணங்கித் துதித்துத் திருக்கோலக்காவையும் வணங்கினவராய்த் திருப்புன்கூரையும் தரிசித்துத் திருப்பதிகம் பாடினர்.

அங்கணர் - சிவபெருமான். பழனம் - வயல்.

15. திருமயிலாடுதுறை, அம்பர்மாகாளம், திருப்புகலூர் முதலிய திருத்தலங்களைத் தரிசித்துப் பதிகங்களையும் அருளிச்செய்து வணங்கித் திருவாரூரை அடைந்து திரிபுரங்களையும் பொடிபடச் சிரித்தவராகிய சிவபரம்பொருளை இனிய தமிழ்ப் பாடல்களால் பாடித் தம்பிரான்தோழர் எனவும் அருள்பெற்றார்.

திருமயிலாடுதுறை - மாயூரம். எயில் - மதில்; என்றது திரிபுரத்தை.

16. புற்றிடங்கொண்டநாதர் திருவருளால் பரவை நாச்சியாரை விதிப்படி மணந்து மணக்கோலத்துடனேயே பணிசெய்து வருங்காலத்து, விறல்மிண்ட நாயனர் கோபிக்கத் திருத்தொண்டத் தொகையை அருளிச்செய்து வழிபட்டார்.

புற்றிடங்கொண்டவர் - வன்மீகநாதர். பூங்கோதை - மலர்மாலை, மகளிரை மாலைபோல்வார் எனல் மரபு. முற்றிழை - திருந்திய ஆபரணம். மன்றல்முறைமையால் - கல்யாணச் சடங்குகளால். செற்றம் - கோபம்.

குண்டையூர்க் கிழவர்மனக் குறைவறுக்க நெற்றந்த
அண்டநா யகரந்த நென்மலையை யாரூரின்
வண்டுவாழ் குழற்பரவை மனையட்டித் தரவருளான்
மிண்டுபூ தரைவிடுப்பக் கோளிலியிற் பாடினர். 17

கோட்புலியார் நாட்டியத்தான் குடியதனில் வழிபட்டு
வேட்டருள்வி ரெனப்பயந்த மென்கொடியா ரைக்கொடுப்பச்
சேட்டெழிலார் தமைமகண்மை கொண்டருளித் திருப்பாட்டில்
நாட்டிவலி வலத்துப்போய் நாதர்தமைப் பாடினர். 18

வேறு

இறைவர் புகலூ ரிட்டிகைக ளீழ மாக்கித் தரப்பாடி
நிறையு மகிழ்வாற் றிருப்பனையூர் நிமலர் நிருத்தந் தரப்போற்றி
நறைமென் கமலத் தடஞ்சூழ்நன் னிலமும் விழி மிழலையு
மறவர் திருவாஞ் சியமரிசிற் கரைப்புத் தூரும் பாடினர். 19

---

17. குண்டையூர்கிழார் மனக்கவலை தீரும்படி நெல்மலை அருளிய சிவ பெருமான், அந்த நெல்மலையை ஆரூரிலே பரவையார் மனையிலே கொண்டுசேர்க்கும்படி பூதகணங்களை விடுக்குமாறு திருக்கோளிலியிலே திருப்பதிகம்பாடினர்.

மனக்குறைவு அறுக்க - சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு அனுப்புதற்குக் குறைவாகவன்றோ நெல் உள்ளது என்ற கவலை நீங்கும்பொருட்டு. அட்டித்தரப் பாடியமை: "குண்டையூர்ச் சில நெல்லுப் பெற்றேன், ஆளிலை எம்பெருமான் அவை அட்டித்தரப் பணியே" என்றது. அண்டநாயகர் - உலகநாயகர். அட்டித் தரல் - கொண்டுவந்து தருதல். மிண்டு - வலிமை.

18. கோட்புலிநாயனர் திருநாட்டியத்தான்குடியிலே வழிபாடுசெய்து, தமது புத்திரிகளாகிய சிங்கடியார் வனப்பகையார் என்னும் இருவரையும் மணந்து கொள்ளும்படி வேண்ட, அவ்விருவரையும் புத்திரிகளாக அங்கிகரித்தருளிச் 'சிங்கடியப்பன்' 'வனப்பகையப்பன்' எனத் திருப்பாட்டில் நாட்டி, வலிவலம் என்னும் தலத்துக்குச்சென்று அவர் சிவபெருமானைப் பாடினர்.

வேட்டல் - மணம்புரிதல். பயந்த - பெற்ற. சேட்டெழிலார் - மிக்க அழகு உடைய அப்பெண்கள். சேடு - பெருமை. மகண்மை - மகளாந்தன்மை.

19. திருப்புகலூரிலே இறைவரைத் தரிசித்துக் கோயில் முன்றிலிலே செங்கற்களைத் தலையணையாகக் கொண்டு நித்திரைசெய்ய அக்கற்கள் பொற் கல்லாகத் தரப்பெற்றுப் பதிகம்பாடித் திருப்பனையூர் செல்ல, இறைவர் திருக் கூத்துத் தரிசனங்கண்டு வணங்கி, நன்னிலம் திருவிழிமிழலை திருவாஞ்சியம் அரிசிற்கரைப்புத்தூர் என்னும் தலங்களையும் தரிசித்துப் பதிகம் பாடினர்.

இட்டிகை - செங்கல். ஈழம் - பொன். நிருத்தம் - திருக்கூத்து. நறை - தேன், வாசனை. அறவர் - சிவபெருமான். அரிசில் - அரிசிலாறு.

வேறு

ஆவடு துறைசை யிடைமரு தான்ற திருநாகேச் சுரஞ்சிவ புரஞ்சீர்
மேவிய குடமூக் கிறைவலஞ் சுழிநல் லூர்சோற்றுத் துறைவிரி மலர்ப்பைங்
காவளர் கண்டி யூருமை யாறுங் கவின்றபூந் துருத்தியும் வினையின்
ருவறு திருவா லம்பொழி லென்னுந் தலமழ பாடியுந் துதித்தார். 20

சீர்வள ரானைக் காவினைப் பரசித் திருப்பாச்சி லாச்சிரா மத்துக்
கார்வளர் கண்டர் பொன்றரப் பாடிக் கைக்கொண்டு திருப்பைஞ்ஞீ லியின்
கூர்வளர் சூலப் படையரைப் புகழ்ந்து குலவுபல் பதிகளும் வணங்கி [வன்
ஏர்வளர் கொங்கிற் கொடுமுடி வழுத்தி யெய்தினர் காஞ்சிவாய்ப் பேரூர். 21

ஆரண முழக்க மருதபே ரூரி னமர்ந்துவா ழடியவ ரெல்லாந்
தாரணி கூந்தல் பாகனுர் தோழர் சார்ந்தன ரெனப்பெருங் களிப்பால்
தோரணம் வாழை காவண முறுத்திச் சுடர்நிறை கும்பங்க ணிறுவிச்
சீரணி வீதி யலங்கரித் தெதிரே சென்றடி தொழவெதிர் தொழுதார். 22

---

20. திருவாவடுதுறை, திருவிடைமருதூர், திருநாகேச்சுரம், சிவபுரம், குடமூக்கு, திருவலஞ்சுழி, நல்லூர், சோற்றுத்துறை, கண்டியூர், திருவையாறு, திருப்பூந்துருத்தி, திருவாலம்பொழில், மழபாடி முதலிய தலங்களைத் தரிசித்துத் துதித்தார்.

ஆன்ற - அகன்ற. சீர்மேவிய குடமூக்கு: சீர்மேவுதலாவது மகாமக தீர்த்த விசேடமுண்மையால். கவின்ற - அழகினைச் செய்கின்ற. வினையின்ரு அறு - வினைகள் இல்லாமல் தொலைக்கும். இன்ரு: ஈறு கெட்டது. வினையின் தா அறு - வினைகளால் உண்டாகும் குற்றம் போக்கும்: தா - குற்றம்.

21. சிறப்புமிக்க திருவானைக்காவைத் துதித்துத் திருப்பாச்சிலாச்சிர மத்துத் திருநீலகண்டமுடைய இறைவரைப் பாடிப் பொன்தரப் பெற்று, திருப் பைஞ்ஞீலிச் சிவபெருமானைப் புகழ்ந்து, மற்றும் பல தலங்களையும் சென்று தரிசித்துக் கொங்குநாட்டை அடைந்து திருப்பாண்டிக் கொடுமுடிக்குப் போய் நமச்சிவாயப்பதிகம் பாடி, காஞ்சி நதியையுடைய பேரூரை அடைந்தார்.

கார் வளர் கண்டர் - கரிய கண்டத்தையுடையவர்.

22. வேதம் முழங்குதல் நீங்காத பேரூரிலே வாழும் அடியார்களெல்லாம் உமையொருபாகருடைய தோழர் எழுந்தருளினர் என்று மிக்க மகிழ்ச்சியால் தோரணம் வாழை முதலியவற்ருல் அலங்கரிக்கப்பெற்ற காவணத்தை அமைத்து, பூரண கும்பங்கள் நிறுத்தி, அழகிய வீதிகளைச் சிறப்புறச்செய்து, எதிரே சென்று திருவடிகளில் விழுந்து வணங்க, அவரும் எதிரே தொழுதார்.

தார் அணிகூந்தல் - உமாதேவியார்; அன்மொழித்தொகை.

வந்தமெய் யடியா ருடனள வளாவி மகிழ்கொடு போதுவா ரகிலுஞ்
சந்தனக் குறடும் பிலியு மரியுந் தபனியப் பொடிகளுந் திரையின்
உந்திவந் தொழுகுங் காஞ்சிமா நதியி னுற்றுநீர் படிந்தன ரேகிச்
சுந்தர மிகுந்த கோயின்முன் வணங்கித் தொழுதகம் புகுந்தனர் தொண்டர்.

உயர்ந்தவுந் தாமே யிழிந்தவுந் தாமே யெனமறை யோலமிட் டுரைக்கும்
வியந்ததஞ் செய்கை யிரண்டனு ளொன்று வேதிய னாகிமுன் காட்டிப்
பயந்தரு மிறைவர் மற்றதுங் காட்டப் பள்ளனய்த் திருவிளை யாட்டால்
நயந்தபூம் பணையின் வினைசெய வன்பர் நண்ணுமு னண்ணின ரம்மா. 24

புலியதள் கழுவாக் காழக வுடையாய்ப் பொலியநால் வாய்க்கரி யுரிவை
ஒலிமயிர் நூற்ற படாமென வயங்க வொளிர்சடை தலைச்சுற்ருய் மிளிர
வலியரித் துவக்குப் பக்கறை யாக வாளரா வதன்கயி ருகக்
கலிகெழு மறையா கமங்கழ லாகக் கண்ணுதல் பள்ளனு தலுமே. 25

---

23. எதிர்வந்து அழைத்த மெய்யடியாருடன் அளவளாவி மகிழ்ச்சியோடு செல்கின்ற சுந்தரமூர்த்தி நாயனர் அகிற்கட்டைகளும், சந்தனமரத்துண்டுகளும், மயிற்பிலியும், இரத்தினங்களும், பொன்பொடிகளும் அலைகளிலே தள்ளிக் கொண்டுவரும் காஞ்சி நதியை யடைந்து நீராடிச் சென்று அழகிய கோயிலின் முன் வணங்கித் தொழுது உள்ளே புகுந்தார்.

குறடு - கட்டை. பிலி - மயில்தோகை. தபனியம் - பொன். உந்திவந்து - தள்ளிக்கொண்டுவந்து.

24. உயர்ந்த பொருள்களும், இழிந்த பொருள்களும் ஆகிய எல்லாம் தாமே என்று வேதங்கள் முழங்கும் வியப்படையத்தக்க தமதுசெயல்கள் இரண்டனுள், ஒன்று அந்தணர் கோலமாகி முன்னே தரிசிப்பித்து, பயனைத்தரும் சிவபெருமான் இழிந்த பொருளும் தாமே எனக் காட்டப் பள்ளனுகியத் திருவிளையாட்டால் அழகிய வயலிலே மள்ளர் தொழிலைச்செய்யச் சுந்தரர் செல்லுவதற்கு முன்னமே பொருந்தினர்.

பயம் - பிரயோசனம். நயந்த - யாவரானும் விரும்பப்பட்ட. பூம்பணை - அழகிய வயல். வினைசெய - தொழில்செய்ய. தொழிலாவது - கொத்தல் எரு விடுதல் களைகட்டல் நிர்ப்பாய்ச்சுதல் முதலியன.

25. புலித்தோல் சுத்தஞ்செய்யப்படாதகரிய ஆடையாக விளங்க, யானைத் தோல் தழைத்த கம்பளப் போர்வையாக விளங்க, ஒளிசெய்யும் சடையானது தலையிலே சுற்றும் பாகைபோல் விளங்க, வலிய சிங்கத்தின் உரியானது கிழ்க் கட்டாக (கோவணம்) விளங்க, அராக்கச்சு அரைஞாணுகப் பொருந்த, ஒலி மிகுந்த வேதாகமங்கள் காப்பாகக்கொண்டு சிவபெருமான் பள்ளன் வடிவங் கொண்டருளினர்.

அதள் - தோல். காழகம் - கரிய உடை. நால்வாய் - தொங்குகின்ற வாயை யுடைய. உரிவை - தோல். மயிர்நூற்ற படாம் - கம்பள ஆடை. தலைச்சுற்று -

பட்டிநா யகர்தம் மிடம்பிரி யாத பச்சைநா யகிபள்ளி யாகி
முட்டிலா தழலி னந்தண ருகுக்கு மூரியா னூன்கனே யூனு
வட்டும்வா ரிழுதே யரியலா வங்க ணளித்திடு முணவெலா முணவா
விட்டுநா யகர்கைத் தலைக்கலத் தூட்டி யெழில்வயல் வினைசெய்வா னின்ருள்.

கடலிடைத் துளபக் கமடமுன் பிடித்த கய முகக் கடவுளு மீனின்
தடமுலைச் சுவைப்பால் பருகிய மணிவேற் சாமியும் பள்ளநற் சிருராய்
இடனகல் வயலிற் கமடமு மீனு மெடுத்தெடுத் திரும்பணைப் புறத்துத்
திடரிடத் துறுத்திக் குறுகுறு நடந்து சிறுவிளை யாட்டயர்ந் தனரால். 27

தலைக்கட்டு; முண்டாசு என வழங்கும்; தலைச்சிலை, தலைப்பாகை. அரித் துவக்கு - சிங்கத்தின் தோல். பக்கறை - கோவணம். கயிறு - அரைஞாண். கழல் - காலணி; காப்பு.

26. பட்டிநாயகருடைய இடப்பாகத்தை விட்டுப்பிரியாத பச்சைநாயகி பள்ளியாகி அந்தணர் தடையின்றி அக்கினியிலே சொரியும் வலிய பசுக்களின் ஊனே ஊனாக அமைத்தும் மிக்க நெய்யே திருமாலல்லாது அந்த யாகத்திலே கொடுக்கும் உணவெல்லாம் உணவாக இட்டு நாயகர் கைத்தலத்திலேயுள்ள பாத்திரத்திலே உண்பித்து அழகியவயலிலே தொழில் புரியும்பொருட்டு நின்ருள்.

பள்ளி - பெண்பால். "எத்திறம் நின்ருன்ஈசன் அத்திறம் அவளும்நிற்பள்" ஆதலால் இறைவர் பள்ளன் ஆகலின் அம்மையார் பள்ளியானுள் என்க. வார் இழுது - மிக்கநெய். நாயகர்கைத் தலைக்கலத்து - நாயகர் கையிலுள்ள தலை யாகிய பாத்திரத்தில் எனவும் பொருள்தந்து நிற்றல் காண்க.

27. திருப்பாற்கடலிலே திருத்துழாய் மாலையை யணிந்த திருமாலாகிய ஆமையைமுன்பு பிடித்துக்கொண்டுவந்து இறைவர்பால் சேர்ப்பித்த யானைமுகக் கடவுளும், கார்த்திகைத் தையல் அறுவர் கொடுத்த சுவையுடைய பாலைப் பருகிய வேற்கரத்தையுடைய முருகக்கடவுளும் பள்ளருடைய நல்ல மக்களாய் இடமகன்ற வயலிலேயுள்ள ஆமைகளையும் மீன்களையும் எடுத்தெடுத்து வயற்புறத்தும் திடற் புறத்தும் வீசிக் குறுகுறு என நடந்து சென்று சிறு குறும்பாக விளையாடல் செய்தனர்.

கமடம் - ஆமை: தேவர்களும் அசுரர்களும் கூடித் திருப்பாற்கடலைக் கடைந்தபொழுது திருமால் கூர்ம வடிவேற்று மத்தாகிய மந்தரகிரியைத் தாங்கி நின்று, அப்பொழுது தோன்றிய அமுதைத் தேவர்கட்கு அளித்து, அதனல் இறுமாப்படைந்து கடல்கள் ஏழையும் கலக்கித் திரிவதைக் கண்ட தேவர்கள் அதனைச் சிவபெருமானிடத்து முறையிட, சிவபெருமான் விருப்பின்படி விநாயகக் கடவுள் பாற்கடலையடைந்து ஆமையாக நின்ற மாயோனது ஓட்டினைப் பறித்துக் கயிலையை யடைந்து கண்ணுதலிடங் கொடுப்ப அவர் அதனை மார்பகத்து அணிந்தனர் என்பது வரலாறு. கயமுகக்கடவுள் - விநாயகர். மீன் - கார்த்திகை நாள். மணி வேற்சாமி - முருகவேள். பணை - வயல். அயர்ந்தனர் - செய்தனர்.

இந்திரன் பிரம னரணன் முதலா மிமையவர் நுகமல மேழி
வெந்திறற் கொழுவார் கயிறுகோல் பகடு வித்துநா றனைத்துமா யங்கு
வந்தனர் பயில வன்கண நாத ரேவல்செய் மள்ளராய் விரவி
முந்துறும் பட்டிப் பள்ளனை யடுத்து மொழிவழி வினைதொடங் கினரால். 28

உழுகுந ரொருபா லுழுதசே றழுந்த வொண்புனல் பாய்த்துந ரொருபான்
முழுவரப் பருகு சிக்குந ரொருபான் மொய்மரம் படுக்குந ரொருபாற்
செழுமணிப் பகடு பூட்டுவிட் டோப்பிச் செறிபுனன் மண்ணுந ரொருபால்
விழுமிய நாறு வார்க்குந ரொருபால் வித்துந ரொருபுற மானர். 29

திருமகள் வாணி சசிமுத லான தேவியர் பள்ளிய ராகி
இருகையி லணிந்த குருகினந் தெழிப்ப விட்டிடை வருந்தவார் செவியின்
மருவிய தோடு நாலவார் கூந்தன் மல்கிய தோளின்விழ்ந் தலைய
உருகெழு பச்சைப் பள்ளியோ டயர்ந்திட் டொண்முடி நாறுநட் டனரால்.

---

28. இந்திரன் பிரமன் திருமால் முதலாகவுள்ள தேவர்கள் நுகமும், கலப்பையும், மேழியும், கொழுவும், வாரும், கயிறும், கோலும், கடாவும், வித்தும், நாறும் ஆகிய எல்லாமாகி வந்தார்கள். சிவகணநாதர்கள் ஏவல்செய்கின்ற பள்ளர்களாய், முன்னே சிவபெருமானாகிய பட்டிப்பள்ளரை அடுத்து ஏவலின் படியே தொழில் செய்யத்தொடங்கினர்.

அலம் - கலப்பை. கோல் - தாற்றுக்கோல். பகடு - எருமைக்கடாக்கள்; இடபமுமாம். மொழிவழி - சொல்லின்வழியே.

29. உழுகின்றவர் ஒருபாலும், நீர்பாய்ச்சுகின்றவர் ஒருபாலும், வரப்பின் அருகிலே சிக்கின்றவர் ஒருபாலும், பரம்படிக்கின்றவர் ஒருபாலும், நாற்று நடுகின்றவர் ஒருபாலும், விதைக்கின்றவர் ஒருபாலும், நிறைந்த கலப்பைகளைச் சார்த்திவைக்கின்றவர் ஒருபாலும், எருமைக்கடாக்களை ஏரினின்று பூட்டை அவிழ்த்துவிட்டு ஓட்டிச்சென்று நீரிலே கழுவுகின்றவர் ஒருபாலுமாக உழவுத் தொழிலுக்குரியவற்றைச் செய்பவராயினர்.

வரப்பு அருகு - வரம்பின் பக்கம்: கங்கு என்பதும் அது. மணிப்பகடு - கரிய எருமை. ஒப்பி - ஓட்டி. மண்ணுநர் - கழுவுவோர். நாறு - நாற்று; முளையினின்று தோன்றுதலின் நாறு எனப்பட்டது. வார்க்குதல் - நடுதல். வித்துதல் - விதை தெளித்தல்.

30. இலக்குமி சரசுவதி இந்திராணி முதலாயினோர் பள்ளிகளாய், கை வளையல்கள் ஒலிப்ப, சிற்றிடை நோவ, காதோலை நழுவ, நீண்ட கூந்தல் தோளிலே விழுந்து அசைய அழகிய உமாதேவியாராகிய பச்சைப்பள்ளியோடு சேர்ந்து நாற்று நட்டனர்.

சசி - இந்திராணி. குருகு இனம் - வளையல்களின் ஈட்டம். தெழிப்ப - ஒலிக்க. இட்டிடை - ஒடுங்கிய இடுப்பு. நால - தொங்க. அயர்ந்திட்டு - சோர்ந்து.

இன்னண மிவர்கள் வயல்வினை யியற்றி யிருந்தன ராகவா லயத்து
முன்னிய நாவ லூர்வரு மன்பர் முதல்வனார் தமையெதிர் காணார்
மன்னிமி லேற்றை வினயின ரேறு வன்றொண்டர்க் குரையலென் றிறைவர்
சொன்னமை குறித்து விழியினா லுணர்த்தத் தொடர்ந்தனர் வயலிடந் துருவி.

வேதநா டரிய விழுப்பெரும் பொருளாய் விளங்கிய பட்டிநா யகருஞ்
சீதவாண் முகத்து மரகத மயிலுந் தேவர்பூ தர்கள்புடை நெருங்கப்
பாததா மரைகள் சேதகத் தலரப் பயிறிரு விழாவினைத் தொண்டர்
காதன்மீக் கூரச் சேயிடை நோக்கிக் களிப்பொடு மெதிர்பணிந் தெழுந்தார்.

மாசுதீர் தவத்து மாதவன் முதலோர் மணிநெடு மோலிக டீண்டக்
கூசுதாட் கமல முறவியுங் கயலுங் கூர்மமுங் கீடமு முதலாப்
பேசுமா ருயிர்க டீண்டுதற் கான பெருந்தவந் திருந்திய பேரூர்க்
காசுதீர் வரைப்பிற் களித்துவாழ்ந் ததுவே யாமெனக் கருத்துட்கொண்
[டடுத்தார். 33

---

1. இவ்வாறு இவர்கள் வயலில் தொழில்செய்துகொண்டிருக்கும் சமயத்தில், ஆலயத்துமுற்பட நாவலூரர் பெருமான் முழுமுதற்கடவுளை எதிரே தரிசிக்கப் பெறுமல் இடபதேவரை வினவினர். அதற்கு இடபதேவர் வன்றொண்டனுக்கு ஒன்றும் சொல்லவேண்டாமென்று சிவபிரான் ஆஞ்ஞாபித்தபடியால், கண்ணினாற்காட்ட, அக்குறிப்பின் வழியே நாயனர் வயலிடத்தே ஆராய்ந்து வந்தார்.

முன்னிய - முற்பட்ட. எதிர் - எதிராக; சந்நிதியில். இமில் - கொண்டை; திமில். ஏறு - இடபம். உரையல் - சொல்லற்க. துருவி - ஆராய்ந்து.

32. வேதங்களாலும் ஆராய்ந்து அறிய முடியாத மிகவும் மேம்பட்ட மகாவாக்கியப் பொருளாய் விளங்கிய பட்டிநாதரும், குளிர்ந்த திருமுகத்தையுடைய மரகதவல்லியும் தேவர்களும் பூதகணங்களும் பக்கலிலே நெருங்க, திருவடித் தாமரைகள் சேற்றிலே மலரும்படி பொருந்திய திருவிழாவை, சுந்தரமூர்த்தி நாயனர் பேரன்பு பொருந்தத் தூரத்திலே தரிசித்து, மகிழ்ச்சியோடு சென்று எதிரிலே விழுந்து வணங்கி எழுந்தார்.

பெரும்பொருள் - மகாவாக்கியப் பொருள்; "பெரும் பெயரே பெயராக வந்த, ஒருவாய்மைதன்னை நினையினு முள்ள முருகுவதே" (பஞ்சாக்கர தேசிகரந்தாதி). சேதகத்து - சேற்றினிடத்து. அலர - மலர. தாமரைகள் சேதகத்தலர என்றது நயம்; பங்கசம் என்னும் பெயருண்மையின்.

33. குற்றம் தீர்ந்த தவத்தையுடைய திருமால் முதலியோரது இரத்தினங்கள் பதித்த நீண்டகிரீடங்கள் தீண்டக்கூசுகின்ற திருவடிக்கமலங்கள் எறும்பும் கயல்மீன்களும் ஆமையும் புழுக்களும் முதலாகச் சொல்லப்படும் உயிர்வருக்கங்கள் தீண்டுதற்குரிய பெருந்தவமானது குற்றமற்ற பேரூர்த்தலத்தில் மகிழ்வோடு வாழ்ந்ததுவேயாம் என்று எண்ணி அங்கே வந்து பொருந்தினர்.

மாதவன் - பெரிய தவத்தையுடையோன்; இலக்குமி கணவன். மோலி= மவுலி - கிரீடம். மோலிகள் தீண்டக்கூசும் பாததாமரைகள்; திருவடியின்

அராவணி சடிலப் பள்ளனர் தோழ ரடுக்கவந் தமையறி யார்போற்
பராமுகத் தினராய்ப் பள்ளிகள் பள்ளர் தம்மொடும் பயின்றிருந் தொழிலின்
உராவுநீர்ப் பணையி னுழிதர நோக்கி யுறப்பணிந் தெழுந்துதோ ழமையால்
விராவிய வன்பர் மகிழ்ச்சிமிக் கிளைப்ப வியப்பொடு மசதியா டுவரால். 34

மறையவ னரசன் செட்டிதன் றாதை வயங்குநூற் சூத்திரன் புவனம்
பறைதரு நல்ல சங்கரன் வேடன் பணிசிவன் விளங்குமுக் கணக்கன்
அறைசெயம் பட்ட னகமது புறத்தே காலியாட் டரவமா ரிடையன்
பறையனு முன்ன ரானநீ யின்று பள்ளனு னமைதெரிந் தேன்யான். 35

இறையவன் வள்ள லெனப்புகன் றெடுத்த வெனக்குநீ பள்ளனய்ப் பயந்
மறையவ னுகப் பள்ளனுஞ் செய்கை வனப்பிது நிற்கநின் றனக்கு [தாய்
நிறையுண வாலங் கயமுகப் பிள்ளை நினைத்தவர் குறைமுடித் துண்ணும்
கறைகெழு வேற்கைப் பிள்ளையோ செட்டி கழனிநெல் விளைப்பதிங் கார்க்கே.

பெருமையும் முடியின் சிறுமையும் கருதி மனந்தாழ்தல். காசு - குற்றம். திண்டு தற்கான பெருந்தவம் பேரூரில் வசித்த காரணத்தால் விளைந்தது என்க.

34. பாம்பையணிந்த திருச்சடையையுடைய பள்ளராகிய சிவபெருமான் தம்முடைய தோழராகிய சுந்தரர் சமீபத்தில் வந்தமையை அறியாதவர்போலப் பராமுகமுடையவராய், பள்ளர்பள்ளிகளுடன் கலந்து வயல்வேலையில் ஈடுபட்டுத் திரிதலைப்பார்த்துத் தோழர் உரிமையால் மகிழ்ச்சிமிக ஆச்சரியத்துடன் பரிகாசம் செய்தார்.

சடிலம் - சடை. அடுக்க - சமீபிக்க. பராமுகம் - பார்த்தும் பாராமை. நீர்ப்பணை - நீரையுடைய வயல். உழிதரல் - திரிதல். அசதியாடுதல் - பரிகாசம் செய்தல். பள்ளர் ஆண்பால், பள்ளி பெண்பால்.

35. அந்தணன், அரசன், வணிகன், வேளாளன், உலகமெல்லாம் சொல்லும் சங்கரன், வேடன், அம்பட்டன், ஏகாலி, இடையன், பாம்பாட்டி, பறையன் என்று இன்ன தன்மையனாய் முன்னமிருந்த நீ இன்று பள்ளன் ஆயினமையும் நான் அறிந்தேன்.

செட்டிதன்தாதை - முருகவேட்குத்தந்தை. நூற்சூத்திரன் - நூலினுள்ள சூத்திரத்தையுடையான். சங்கரன் - சுகத்தைச் செய்பவன், சங்கரசாதி, சங்கரன் வேடத்தையுடையான். வேடன் - வேட்டுவக்குலத்தோன். நக்கன் - நிருவாணி. அம் பட்டன் - அழகிய பட்டையுடையான். அறைசெய் - சொல்லும். காலி - பசுக்கள். ஆட்டு அரவம் ஆர் இடையன் - ஆடுகளையோட்டும் ஒலிமிக்க இடைச் சாதியுள்ளான்.

36. கடவுள் வள்ளல் என்று விரும்பித் துதித்த எனக்கு நீ பள்ளனாகக் காட்சியளித்தாய். அந்தணனாகட்டும் பள்ளனாகிய செயல் அழகிதாம். இது நிற்க, உமக்கு நிறைந்த உணவு விடமாம். மூத்த பிள்ளையாரோ தம்மை நினைத்தவர் குறையை முடித்து உண்ணுவார். வேற்கைப் பிள்ளையோ செட்டி யாவார். வயலிலே நெல்லை விளைவிப்பது யாவர் பொருட்டாம்?

மரகத வல்லி யன்னபூ ரணியை வரவுயிர்த் தமரரா தியர்க்கு
விரவிய பசிமுன் கெடுத்தலி னவட்கு விளைத்துநீ சோறிடல் வேண்டா
பரவிவந் தெனைப்போ லடுத்தவர்க் குவந்து பரிசிலாப் பைம்பொனு திகளைத்
தரவிதின் முயன்று வருந்துதல் வேண்டா தனதனிற் சார்ந்தநற் றோழன்.

அல்லதூஉ மொருவர் சார்பினுற் பிழைத்த லடாதெனத் திருவுளத் துளதேல்
வல்லவா றதற்கே பிறந்தவே ளாளர் வழிவழி யடிமையா யுள்ளார்
நெல்லெலாம் விளைத்துத் தருகுவ ரதனு னிரம்புறு தெனிற்குண்டை யூரில்
நல்லவே ளாள னொருவனுக் களித்த நற்றிற முள்ளதே போலும். 38

அராப்பள்ளி யாற்கருளு நேமிப் பள்ளி
யறப்பள்ளி யகத்தியான் பள்ளி யான்ற
சிராப்பள்ளி நனிபள்ளி செம்பொன் பள்ளி
திருக்காட்டுப் பள்ளிகர வீரங் காட்டுள்

வனப்பு - அழகு. ஆலம் - ஆலகாலம். குறை முடித்தல் - இடையூறின்றி முடித்துத்தரல். செட்டி - வாணிகர்.

37. மரகதவல்லியாகிய உமாதேவியார் அன்னபூரணியைத் தோற்றுவித்துத் தேவர் முதலியவர்கட்குண்டாகிய பசியை முன்னமே கெடுத்தமையால் அவ்வம்மையாருக்கு நெல்விளையச் செய்து நீர் சோறிடுதல் வேண்டா. பரவி வந்து என்னைப்போல அடுத்தவர்கட்குக் கொடைப் பொருளாகப் பசிய பொன் முதலியவற்றைத் தரும்பொருட்டு இவ்வயல்வேலையில் முயற்சிசெய்து துன்புறுதல் வேண்டா; குபேரன் உன்னைச் சார்ந்த தோழனுக இருத்தலினுல்.

உமாதேவியார் அன்னபூரணியைத் தோற்றுவித்தமை: நிருத்தப்படலம் 89 காண்க. அடுத்தவர்க்கு உவந்து. பரிசில் - கொடைப்பொருள். தனதன் - குபேரன்.

38. அல்லாமலும் ஒருவரைப் பற்றுக்கோடாகக் கொண்டு பிழைப்பது பொருந்தாதது என்று திருவுளங் கொண்டீராயின் பொருந்து மாற்ருன் வேளாண்மை செய்தற்பொருட்டே தோன்றிய வேளாளர்கள் வழிவழியாகவே உமக்கு அடிமைபூண்டொழுகுபவர்; நெல் முழுதும் விளைவித்துத் தருவார். அதனுல் நமக்கு நிறைவுறுதென்பீராயின் குண்டையூரிலே சிறந்த வேளாளன் ஒருவனுக்கு அளித்த நென்மலையுள்ளதே போதியதாகும்.

சார்பு-பற்றுக்கோடு. அடாது-பொருந்தாது. வேளாளர்: வேளாண்மை-உபகாரம். வேள் - பூமி; பூமியை உழுது பயிர்செய்து அதனை ஆள்பவர். வழிவழி - பரம்பரையாக. அடிமை - தொண்டு. நற்றிறம் என்றது அவருக்கு அளித்த நெல்மலையை.

ஒராப்பள்ளி மகேந்திரப் பள்ளி நன்மை
யுற்றசிறப் பள்ளியிடைப் பள்ளி யெல்லா
மராப்பள்ளி யில்லாம லாண்டு கண்டோ
வயற்பேரூர்ப் பள்ளிகளை யாளா நின்றீர். 39

விண்ணின்மழை மறுத்திடினுங் கங்கை யுண்டு
விடையுண்டு பட்டியிட விடப்பாற் கண்ணே
வண்ணநெடும் பயிர்வளர்ப்ப துலகை நட்டு
மலக்களைதி ரிடப்பள்ளி வல்லி வல்லள்
பண்ணை நட்டுக் களைபறிப்ப மிருகங் காப்பப்
பசுந்துழாய்ப் பன்றியொரு கோடு வாங்குந்
திண்ணியசே யுளனரசும் வேறன் றென்றே
திருவுளஞ்செய் திருழவு செய்தற் கென்றார். 40

வேளாள னெனநம்மை யடுத்த தோழன்
வியனெடும்பண் ணையிற்பள்ள னாகி நின்று
தாளாண்மை யியற்றிடினும் விட்டுப் போகான்
றனக்குவப்பச் செய்துமெனத் தம்பி ரானார்

---

39. ஆதிசேடனைப் பாயலாகவுடைய திருமாலுக்குத் திருவருள் புரிந்த சக்கரப்பள்ளி, அறப்பள்ளி, அகத்தியான்பள்ளி, சிராப்பள்ளி, நனிபள்ளி, செம்பொன்பள்ளி, திருக்காட்டுப்பள்ளி, கரவிரங்காட்டுள்ளே நீங்காதபள்ளி, மகேந்திரப்பள்ளி, நலம்பொருந்திய சிறப்பள்ளி, இடைப்பள்ளி எல்லாம் வேண்டா வெறுப்பில்லாமல் ஆண்டுகண்ட அநுபவத்தை மேற்கொண்டோ பேரூர்ப்பள்ளிகளையும் ஆட்கொண்டருளினீர்.

நேமிப்பள்ளி - சக்கரப்பள்ளி. அராப்பள்ளி - வேண்டா வெறுப்பு.

40. மேகங்கள் மழைபொழிவதை யொழிந்தாலும், உமது திருமுடியிலே கங்காநதி உள்ளது. ஊர்தியாக இடபமுண்டு பட்டியிலிடுதற்கு. இடப்பாகத்தில் அழகிய நீண்ட பயிரை வளர்ப்பது உலகை நட்டு மலமாகிய களைகளைக் களையப் பள்ளியாகிய மரகதவல்லி வல்லவள். வயலிலே நட்டுக் களையைப் பறித்தற்கும், மிருகங்களைக் காப்பதற்கும் பசிய திருத்துழாய் மாலையை அணிந்த பன்றியின் ஒரு கொம்பைப் பறித்த வலிய முருகவேள் உள்ளார். அரசும் வேறல்ல என்றே உழவு செய்தற்குத் திருவுளங்கொண்டருளினீர் என்றார்.

விண் - மேகம். பட்டி - ஆட்டுப்பட்டி, மாட்டுப்பட்டி என்பன; தொழு. மலக்களை - பண்புத்தொகை. திரிட - களைய. பண்ணை - வயல். கோடு - கொம்பு. திண்ணிய சேய் - முருகவேள்.

கேளாகி வினைபுரிந்தா ருடங்கு போதக்
கிளர்மணிநீள் வரப்பேறிச் சென்று செம்பொன்
தோளாத மணிகொழிக்குங் காஞ்சி யாடிச்
சுடர்மணிக்கோ யிலிற்புகுந்தார் தோழ ரோடும். 41

வேறு

பண்ணையி லேரிற் பூட்டிப் பகட்டொடு முழாது வைத்தால்
நண்ணரிய தொண்டர்க் குண்மை நவிற்றுரு திருப்பை கொல்லென்
றண்ணல்வெள் விடையைச் சீறி யானனஞ் சரிந்து விழ
மண்ணகழ் கருவி தன்னுல் வள்ளலார் துணித்திட் டாரால். 42

கடல்விடம் பருகு நீல கண்டனுர் துணித்த லோடுஞ்
சுடரொளி நெய்த்தோர் பாயத் துண்ணென நடுங்கிப் புல்லம்
அடியனேன் பிழைத்த திந்த முறையினு மழியா தேனும்
உடையவ பொறுத்தி யென்னு வொண்பத மிறைஞ்சிப் போற்றி. 43

---

41. உபகாரி என்று நம்மையடுத்த சுந்தரமூர்த்தி நாயனுர் அழகிய நீண்ட வயலிலே பள்ளனுகக் கோலங்கொண்டுநின்று முயற்சி செய்தாலும் நம்மைவிட்டு நீங்கான். ஆதலால், அவனுக்கு மனமுவப்பன செய்வோம் என்று சிவபெருமான் சுற்றத்தாராகத் தொடர்ந்து நின்று பண்ணைவேலை செய்கின்றவர்களும் உடன் வர, விளங்கும் அழகிய நீண்ட வரப்பில் ஏறிச்சென்று, பொன்னையும் துளையிடப் படாத இரத்தினங்களையும் வாரி வீசும் காஞ்சி நதியிலே முழுகித் தோழரோடும் இரத்தினகசிதமான கோயிலில் புகுந்தருளினர்.

வேளாளன் - உபகாரி. தாளாண்மை - முயற்சி. கேள் - சுற்றம். உடங்கு போத - உடன் வர. தோளாத - தொளைசெய்யாத.

42. வயலிலே ஏரைப்பூட்டி எருமைக்கடாக்களோடு உழவு செய்யாதிருப் பின் அணுகிய திருத்தொண்டர்களுக்கு உண்மையைச் சொல்லாதிருப்பாயோ? என்று சிவபெருமான் இடபதேவரைக் கோபித்து முகம் சரிந்து விழும்படி மண் வெட்டியால் வெட்டினர்.

பண்ணை - வயல். பகடு - எருமைக்கடா. அண்ணல் வெள்விடை - பெருமை பொருந்திய இடபதேவர். அண்ணல் - பெருமை பொருந்திய. வள்ளலார் - சிவ பெருமான். ஆனனம் - முகம்.

43. பாற்கடலிலே தோன்றிய ஆலகால விடத்தை அமுதுசெய்தருளிய நீலகண்டத்தையுடைய சிவபெருமான் வெட்டிவீழ்த்த இரத்தம்பெருகியது. திடுக் கிட்டு நடுநடுங்கி இடபதேவர் உடைய நாயகரே! அடியேன் செய்தபிழை இத் தண்டம் செய்து ஒறுப்பினும் ஒழியாது ஆயினும், பொறுத்து அருள் புரிக என்று திருவடிகளில் வணங்கித் துதித்து.

துணித்தல் - துண்டுபண்ணல். நெய்த்தோர் - இரத்தம். புல்லம் - இடபம். பிழைத்தது - பிழைசெய்தது. இந்த முறையினும் - இந்தத் தண்டத்தாலும்.

தன்பெயர் விளங்கத் தீர்த்தத் தடமொன்று தொட்டுக் கோட்டின்
இன்பரு ளிலிங்க மொன்றுங் கிருத்திநற் பூசை யாற்றி
வன்பிழை தவிர்ந்த தன்று மழவிடை முகத்தை விழ்த்த
பின்புயர் மன்றி னெய்திப் பிஞ்ஞகர் நடிக்க லுற்றார். 44

திரையெறி கங்கை யூடு திங்களு மரவு மாட
விரைகமழ் கொன்றைவேணி வெரிந்புறம் வருடி நாலக்
கரையறு கருணை வெள்ளங் கட்கடை யெழுந்து பாய
அரையுடைப் புலித்தோல் பொங்க வரிபெய் நூ புரங்க ளார்ப்ப. 45

கோமுக முனியும் பட்டி முனிவனுங் குறுகி யேத்த
ஏமுறு பூத நாத ரிடனறத் துவன்றிப் போற்றக்
காமுறு விசும்பிற் றேவர் கடிமலர் மாரி தூர்ப்பத்
தீமுழங் கங்கை வள்ளற் றிருநட நவிற்ற லோடும். 46

---

44. தன்னுடைய பெயர் விளங்குமாறு கொம்பினாலே தீர்த்தமொன்று உண்டாக்கி, இன்பத்தைத்தரும் சிவலிங்கமூர்த்தியைத் தாபித்து, சிறந்த பூசைகளைச்செய்து குற்றத்தினின்று நீங்கப்பெற்றது. அன்று இடபதேவருடைய முகத்தை விழ்த்திய பின்பு உயர்ந்த வெள்ளியம்பலத்தை அடைந்து சிவபெருமான் திருநடனம் செய்தார்.

கோட்டின் தொட்டு - கொம்பினாலே அகழ்ந்து. தொடுதல் - தோண்டுதல். கோடு - கொம்பு, கரை. கோட்டின் இலிங்கம் ஒன்று இருத்தி: கோட்டின் - கரையில். ஆங்கு - அவ்விடத்தில்; என்றது இடபதீர்த்தக்கரையில். இன்பம் - பேரின்பம்; இம்மை மறுமையின்பங்களையும் முத்தியின்பத்தையும் எனினுமாம்.

45. அலைகளை வீசும் கங்காநதியிலே சந்திரனும் பாம்பும் விளையாட, மணந்தங்கிய கொன்றைமலர் மாலையை யணிந்த சடை முதுகு புறத்தைத் தடவிக் கொண்டு தொங்க, அளவிறந்த அருள்வெள்ளம் கடைக்கண்ணில் குதித்துப் பெருக, அரையிலே உடுத்துள்ள புலித்தோல் விளங்க, பரல்களாகிய பருக்கைக் கற்களையுடைய சிலம்புகள் ஆரவாரிக்க.

திரை - அலை. ஆட - விளையாட. வேணி - சடை. வெரிந் புறம் - புற முதுகு. கட்கடை - கடைக்கண். அரையுடை - இடையிலேயுடைய. அரி - பரல். நூபுரம் - சிலம்பு.

46. கோமுனிவரும் பட்டிமுனிவரும் அணுகித் துதிக்க, பாதுகாவலாகப் பொருந்திய பூதகணத் தலைவர்கள் இடமின்றி நெருங்கிநின்று வணங்க, விண்ணுலகத்திலுள்ள தேவர்கள் மணம் பொருந்திய கற்பகப் பூமழை பொழிய, அங்கியை ஏந்திய திருக்கரத்தையுடைய சிவபெருமான் திருநடனம் செய்தருள.

ஏம்=ஏமம் - காவல். துவன்றி - நெருங்கி.

வேறு

கருணையே நோக்கி யுள்ளகங் கசியக் கண்கணீ ரருவியிற் பாய
இருகையுஞ் சிரமேற் குவிதரப் புளக மெழவுடன் முழுதுங்கம் பிப்ப
அருணட நோக்கி நெடிதுபோ தவச மாகநின் றானந்தந் திளைத்துப்
பருகிய மதுவண் டெனப்பெருங் களிப்பாற் பாடினர் பரவையார் கொழுநர்.

பாடிய தொண்டர் பைம்பொன்வேட் டிரப்பப் பதம்பெரு திருந்திருந் தெய்த்
காடுத லொழிவ ரோவன வரத தாண்டவ ரெனவரு ணடன [திங்
நீடிய விடையே பொன்றர விரந்தார் நிமலனார் குறுநகை காட்டி
நாடிமுன் னாண்டு தோழமை கொடுத்த நாவலா ரூரருக் குரைப்பார். 48

பாடிய நினது பாட்டையே பெரிதாப் படர்ந்தெமைப் பரிசிலிங் கிரந்தாய்
நீடிய வரியும் பிரமனு மறையு நெடுந்தவ மாற்றியுங் காணாப்
பீடிய னமது திருநட மதனைப் பெரிதென மதித்திலை போலும்
ஆடிய நடனம் பாடிய பாட்டுக் கருளிய பரிசிலே யாமால். 49

---

47. பரவை நாச்சியாருடைய கணவராகிய சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானது கருணையையே சிந்தித்து, மனமுருகக் கண்ணீர் அருவிபோற் பெருக, கைகளிரண்டும் தலைமேற் குவிய, மயிர்க்குச்செறிய, உடல் முழுதும் நடுங்க, அருணடத்தைத் தரிசித்து, நீண்டநேரம் தன்வசமிழந்து நின்று, ஆனந்தத்தில் முழுகி, தேனைக் குடித்த வண்டுபோல் களிப்புமிகப் பாடினர்.

கம்பிப்ப - நடுக்கம்கொள்ள. கொழுநர் - கணவர்.

48. பாடிய திருத்தொண்டராகிய தம்பிரான் தோழர் பொன்னை விரும்பி யாசிக்க, திருவடி இன்பத்தைப் பெருதிருந்து இளைத்தாராயினும் ஆட்டந்தவிர் வாரோ? தவிரார் அனவரத தாண்டவமுடையார் என அருள்நடனம் செய்ய, நீண்டகாலம் பொன்தருமாறு இரந்தார். சிவபெருமான் புன்னகைசெய்து விரும்பி முன்னே ஆட்கொண்டு தோழராந் தன்மையை அளித்த நாவலூராளிக்குச் சொல்லுவார்.

வேட்டு - விரும்பி. எய்த்து - இளைத்து. அனவரதம் - எப்போதும். நீடிய இடை: இடை - காலத்து.

49. ஆரூர! பாடிய உனது பாட்டையே பெரிதாக மதித்து இப்போது எம்மிடத்துப் பரிசிலைவேண்டி இரந்தாய், திருமால் பிரமன் வேதம் முழுதும் பெருந்தவஞ்செய்தும் காண இயலாத பெருமைதங்கிய நமது திருநடனத்தைப் பெரிதாக நீ மதித்திலை. நாம் செய்த திருநடமே உன் பாட்டுக்குரிய பரிசிலாம் என்றறிக.

படர்ந்து - மதித்து. பீடு - பெருமை.

அறம்பொரு ளின்ப மூன்றையும் வெறுத்தோர்க் கானந்தத் திருநடங் காட்டித்
திறம்பயின் முத்தி யளிக்குமித் தலத்திற் செம்பொனீ வதுமுறை யன்று
மறம்பயில் பொறிக ளடக்கியிங் கடுத்த வானவ ரான்படைப் பெய்தப்
புறம்பயில் வஞ்சு ளாரணி யத்துப் பொற்புற வளித்தனங் காண்டி. 50

வேட்டவேட் டாங்கெம் பதியினுங் காங்கு விழுப்பொரு ணல்கின மன்றி
ஏட்டைநீ பொருந்தப் பார்த்திருந் திலமே யிப்பதி யொழியவாங் காங்குன்
பாட்டினுக் குவந்து செம்பொரு ளின்னும் பல்குறக் கொடுத்துமீ தன்றித்
தீட்டிய புகழான் சேரமான் றனக்குன் செய்திமுன் பேதெரித் தனமால். 51

ஆங்கவன் சோழ நாட்டுவந் துன்னை யன்பினு லுடன்கொடு போந்து
விங்கிய பொருள்க ணல்குவ னறிக வென்றனர் கேட்டுமெய்த் தொண்டர்
ஓங்கிய மகிழ்வா னுண்டதம் பெருமா னெண்கழன் மறுவலும் வணங்கிப்
பாங்குறச் சிலநாட் பயின்றுபல் பதியும் பாடுவார் விடைகொடு போந்தார். 52

---

50. தருமார்த்த காமங்களாகிய மூன்றையும் வெறுத்தவர்கட்கு ஆனந்த நடனத்தை அருளித் தரிசிப்பித்து முத்திப்பேற்றை அளிக்கும் இத்தலத்திலே நீ விரும்பியபடி பொன்னைத் தருதல் முறையன்றும். பாவச்செயல்களையுடைய பொறிபுலன்களை அடக்கி இங்குவந்து அடுத்த தெய்வப்பசு படைத்தற்றொழிலைப் பெறுமாறு வஞ்சி என்னும் கருவூரிலே அனுக்கிரகம் செய்தோம்.

மறம் - பாவம். வானவர்ஆன் - தெய்வப்பசு, காமதேனு.

51. விரும்பிய விரும்பியபடியே எமது தலங்களில் அங்கங்கே சிறந்த பொருள்களை அளித்தோம். அல்லாமல் நீ தளர்வடையப் பார்த்திருந்தோமல்லேம். இத்தலத்தையன்றி ஆங்காங்கு உன்னுடைய பாட்டுக்கு மகிழ்ச்சியடைந்து செம்பொன் இன்னும் மிகக் கொடுப்போம். இதுவன்றியும், மிக்க புகழையுடைய சேரமான்பெருமாள் நாயனுருக்கு உனது செயல்களை முன்னமே தெரிவித்துள்ளோம்.

வேட்ட - விரும்பிய. ஏட்டை - தளர்வு, துன்பம், வறுமை. பல்குற - தழைய.

52. அச்சேரமான்பெருமாள் சோழநாட்டுக்கு வந்து உன்னை அன்புடன் அழைத்துக்கொண்டு போய் மிக்க பொருளை உனக்கு வழங்குவான் என்பதை அறிவாய் என்று அருள்செய்தார். சுந்தரமூர்த்திநாயனர் அதனைக் கேட்டு மிக்க மகிழ்வால் தம்மை ஆட்கொண்டருளிய சிவபெருமானுடைய திருவடிகளை மறுபடியும் வணங்கிச் சில நாட்கள் அத்தலத்திலிருந்து தரிசித்து, பல தலங்களிலும் சென்று தரிசித்துப் பாடும்பொருட்டு விடைபெற்றுச் சென்றுர்.

விங்கிய - மிகுதியான. மறுவலும் - மீட்டும்.

வெஞ்சமாக் கூடல் கற்குடி யாறை மேற்றளி யின்னம்பர் பிறவி
வஞ்சநோ யனுக்கும் புறம்பயங் கமல வாவிசூழ் கூடலை யாற்றூர்
நஞ்சமார் மிடற்று நாதரைப் பாடி நயந்துபோய் முதுகுன்ற மேத்தி
எஞ்சுரு திறைவ ரளித்தபொன் னுற்றி லிட்டுப்போந் தனர்கடம் பூரில். 53

அப்பதி வழுத்தித் தில்லைமூ தூரை யடுத்தரு ணடங்கண்டு தொழுவார்
எப்பொரு ளாயு மிருந்தரு ளிறைவ ரெறிதிரைக் காஞ்சிவாய்ப் பேரூர்
ஒப்பறு வெள்ளி மன்றிடைத் தெரித்த வுறுசுவை யானந்த நடனந்
துப்புறக் காட்ட விம்மித மெய்தித் துளும்புகண் ணீருர நனைப்ப. 54

வேறு

சீரூர மடித்தாடு மெனவெடுத்து விளம்புதிருப் பதிகந் தன்னுட்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே பெற்று மென்று
பாரூர்பல் லவற்றுள்ளும் பேரூரே யிறைக்குரிய பதியா மாறு
நாரூரு முளத்தினுற் சிறப்பித்துப் பாடினர் நாவ லூரார். 55

---

53. வெஞ்சமாக்கூடல், கற்குடி, பழையாறை, மேற்றளி, இன்னம்பர், திருப்புறம்பயம், கூடலையாற்றூர் முதலிய தலங்களைத் தரிசித்துப் பதிகம் பாடியருளித் திருமுதுகுன்றத்தை வணங்கித் துதித்து, சிவபெருமான் அருளிய பன்னிராயிரம் பொன்னையும் மணிமுத்தா நதியிலே போட்டுவிட்டு, (திருவாரூரிலே குளத்தில் எடுத்துக்கொள்வோம் என்று எண்ணி) கடம்பூரை அடைந்தார்.

ஆறை - பழையாறை. அனுக்கும் - கெடச் செய்யும். வாவி - குளம். எஞ்சுருது - குறையாமல்; என்றது பன்னீராயிரம் பொன்னையும்.

54. அத்தலத்தைத் துதித்துத் தில்லைமூதூரைச் சார்ந்து அருள்நாடகமாகிய ஐந்தொழில் நடனத்தைத் தரிசித்து வணங்குகின்றவர் எப்பொருளுமாய் நின்றவராகிய சிவபெருமான் அலைகளைவீசும் காஞ்சிநதிக்கரையிலுள்ள பேரூரில் ஒப்பற்ற வெள்ளி மன்றத்தில் காட்டிய ஆனந்த நடனத்தைத் தில்லையிலுங் காட்டக் கண்டு ஆச்சரியமடைந்து துளும்பிய ஆனந்தக்கண்ணீர் மார்பை நனைக்க.

அருள் நடம் - பஞ்சகிருத்திய தாண்டவம். தெரித்த - காட்டிய. விம்மிதம்- ஆச்சரியம். உரம் - மார்பு.

55. திருநாவலூரராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிறப்புப் பொருந்த 'மடித்தாடும்' எனத் திருப்பதிகத்தைத் தொடங்கி, அப்பதிகத்தின் திருக்கடைக் காப்பிலே 'பேரூர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே பெற்றும்' என்று உலகிலுள்ள தலங்களிலெல்லாம் இறைவர் வீற்றிருக்கும் தலம் பேரூர் ஆமாறு அன்பு மிக்க மனத்தால் சிறப்பித்துப் பாடியருளினர்.

'மடித்தாடும்' என்னும் முதற்குறிப்புடைய பதிகம் கோயிலுக்கு உரியது. பண் - குறிஞ்சி. கோயில் - சிதம்பரம். அப்பதிகத்தின் பத்தாம் திருப்பாட்டில் "ஆரூரன் தம்பிரானுரூரன் மீகொங்கி லணிகாஞ்சிவாய்ப், பேரூரர் பெருமானைப்

அங்ககன்று புறத்தமரும் பதிபலவும் பாடிப்போ யாரூர் நண்ணித்
திங்களணி முடியார்தந் திருவருளா லாற்றிலிடுஞ் செம்பொ னெல்லாம்[லைத்
பொங்குபுனற் குளத்தெடுத்துப் பரவையார்க் கினிதளித்துப் புனனாட் டெல்
தங்குபல பதிபாடி நடுநாட்டிற் பலபதிக டாழ்ந்து போகி. 56

தொண்டைநாட் டிற்பதிகள் பலபாடிக் காஞ்சியெனுந் தொல்லை மூதூர்
வண்டுவார் குழலுமையாள் வழிபட்ட வேகம்பம் வணங்கி யேத்தி
அண்டர்நா யகரமரு மப்பதியிற் பலபதிக ளன்பிற் போற்றிக்
கொண்டல்சூழ் நெடுமாடத் தோணகாந் தன்றளியைக் குறுகி னூரால். 57

அந்தளியிற் பெருமானர் பாட்டுவந்து செழுநிதிமிக் களிப்ப வாங்கி
மெத்தியவன் பொடுபுறம்போய்ப் பலபதியும் பணிந்தேத்தி விரிநீர் வேலை
முத்தினெடு மணிபவளங் கரையேற்று மொற்றியூர் முதல்வற் போற்றி
உத்தலத்திற் சிவபெருமான் றிருவருளாற் சங்கிலிதோ ளுவந்து வாழ்ந்தார்.

புலியூர்ச்சிற் றம்பலத்தே பெற்றுமன்றே" என்பது இறுதிப்பகுதி. அந்த நாலாம் அடியை அப்படியே வைத்து இப்பாடலில் ஆசிரியர் கூறியுள்ளமை காண்க.

நார் - அன்பு.

56. சிதம்பரத்தைத் தரிசித்து அத்தலத்தினின்று நீங்கிப் புறத்திலேயுள்ள பல தலங்களையும் தரிசித்துத் திருப்பதிகம் பாடிப்போய்த் திருவாரூரை அடைந்து சிவபெருமானுடைய திருவருளால் மணிமுத்தா நதியிலே போட்ட பன்னீராயிரம் பொன்னையும் கமலாலயம் என்னும் திருக்குளத்திலிருந்து எடுத்துப் பரவையார் மனமகிழத் தந்து சோழநாட்டிலுள்ள பல தலங்களையும் வணங்கிப்பாடி நடு நாட்டை அடைந்து பல தலங்களையும் தரிசித்துப்போய்.

புனல்நாடு - சோழநாடு. தாழ்ந்து - வணங்கி.

57. தொண்டை நாட்டிலுள்ள தலங்களைத் தரிசித்துப் பதிகம் அருளிச் செய்து, காஞ்சி என்னும் பழைய நகரத்திலே உமாதேவியார் வழிபட்ட திருவேகம்பத்தை வணங்கித்துதித்து, சிவபெருமான் விற்றிருக்கும் அக்காஞ்சி புரத்திலுள்ள பலதலங்களையும் அன்பினுல் வணங்கி மேகஞ்சூழ்ந்த நீண்ட மாடங்களையுடைய திருவோணகாந்தன்தளியைச் சார்ந்தார்.

தொல்லை மூதூர் - மிகப் பழைய நகரம். காஞ்சிபுரத்தில் உள்ள பலபதிகள்:- கச்சியேகம்பம், கச்சிமயானம், ஓணகாந்தன்தளி, கச்சி அனேகதங்காவதம், காரோணம், திருமேற்றளி, கச்சபேசம், கச்சித்திருநெறிக்காரைக்காடு முதலியன. ஓணன், காந்தன் என்னும் இருவரால் பூசிக்கப்பட்ட தலம் ஓணகாந்தன்தளி என்பது.

58. அத்தளியிலே விற்றிருந்தருளும் சிவபெருமான் சுந்தரமூர்த்திசுவாமிகளின் திருப்பாட்டைக்கேட்டு மகிழ்ந்து சிறந்தநிதிகளை மிகுதியாகக்கொடுத்தருள மிகுந்த அன்புடன் பெற்றுக்கொண்டு புறத்திலே சென்று பல தலங்களையும்

சிலபகலங் குறக்களித்துப் பலபதியும் பணிந்தேத்தித் திருவா ரூர்புக்
கலகிலொளிப் பூங்கோயி லமர்ந்தபிரான் பரவைமனத் தான்ற வூடற்
புலவியது தணிபாக்குத் தூதுசெலப் பலபாடிப் புணர்ந்தவ் வூரின்
விலகில்பல பொருணைகைக் காரோணத் தினிதேற்று மீண்டு வாழ்நாள். 59

சேரர்கடம் பெருமானர் தில்லைமணி மன்ருடல் சென்று போற்றி
வாரமுறு மாரூரின் வந்திறைஞ்ச வளவளாய் மகிழ்ந்து பின்னர்ப்
பாரமரும் பலபதியும் பணிந்தேத்தி மலைநாட்டிற் பணியச் செல்வார்
சீரமரு மையாற்றி னதிதடுத்துப் பணிந்தேத்தித் திரும்பிப் போந்தார். 60

கொங்குநா டடுத்தகன்று திருவஞ்சைக் களங்குறுகிக் குருகா ரூட்குந்
துங்கவேற் சேரலனர் பணிபுரியச் சிலவைக ளுலைய வைகிப்
பொங்குவா னிதிபெருகப் பெற்றகன்று திருமுருகன் பூண்டி சேரத்
தங்குகா னடவையிடை நிதிபரிப்பார் முன்செல்லப் பின்பு சார்ந்தார். 61

பணிந்து துதித்துத் திருவொற்றியூரை அடைந்து சிவபெருமானை வணங்கிப் போற்றி அத்தலத்திலே சிவபிரான் திருவருளால் சங்கிலிநாச்சியாருடைய தோளை மகிழ்ந்து அணைந்து வசித்திருந்தார்.

தளி - கோயில். வேலை - கடல். ஒற்றியூர் - திருவொற்றியூர்.

59. சிலநாட்கள் அங்கே மிக மகிழ்வுடன் தங்கியிருந்து பின்பு வழியிலே உள்ள பல திருப்பதிகளையும் பணிந்து துதித்துத் திருவாரூருக்குச் சென்று பூங்கோயிலிலே எழுந்தருளிய பெருமான் பரவைநாச்சியாருடைய மிக்க ஊடலைத் தணிக்கும் பொருட்டுத் தூது செல்லும்படி பல திருப்பாட்டுக்களைப் பாடி ஊடலை நீக்கி அவருடன்கூடியிருந்து பின்னர் நாகைக்காரோணத்து இறைவரைப்பாடிப் பல பொருள்களையும் பெற்றுத் திரும்பித் திருவாரூரிலே தங்கியிருக்கும் நாட்களில்.

அலகு இல் - அளவில்லாத. பூங்கோயில் என்பது வன்மிகநாதர் வீற்றிருக்குங் கோயில். ஆன்ற - அகன்ற; மிகுதிப்பொருட்டு. ஊடற்புலவி - கலவிக் காலத்து மகளிர்பால் தோன்றும் சிறு பிணக்கு. தணிபாக்கு: பாக்கு - வினையெச்சம். விலகு இல் - விலகுதல் இல்லாத; நீங்காத என்றபடி.

60. சேரமான்பெருமாள்நாயனர் தில்லைச்சிற்றம்பலத்திலே நடராசப் பெருமானைப் போய் வணங்கி, அன்புமிக்க திருவாரூரிலே வந்துவணங்க, அளவளாவி மகிழ்ந்து பின்னர்ப் பலதலங்களிலும் சென்று சிவபெருமானை வணங்கித் துதித்து மலைநாட்டிலே வணங்குதற்குச் செல்லுகின்றவராய்த் திருவையாற்றிலே காவிரி பெருக, நீரைத் தடுத்துச்சென்று இறைவரை வணங்கித் திரும்பினர்.

வாரம் - அன்பு. "பரவும் பரசொன் றறியேன் நான்" என்னும் முதற் குறிப்புடைய பாடற்பதிகம் பாடியருளப் பொன்னிமா நதியும் வெள்ளம் நீங்கி நெறி காட்டியது.

61. பஞ்சநதிவாணரைப் பணிந்தேத்திய இருவரும் கொங்குநாட்டினை அடைந்து திருவஞ்சைக் களத்தைக் குறுகினர். சேரர் பெருமான் திருத்தொண்டு

ஆதிபுரத் திரசதமன் றிடைநடிக்கும் பிரான்முன்முன் னருளிச் செய்த
நீதியினை யுணர்ந்தடுத்துப் பெற்றபரி சுரையாமை நீங்கல் கண்டோ
பூதர்தமை விடவேட ராய்க்கவர்ந்தன் னவர்மறையப் பொருள்க ளெல்லாங்
காதலொடுந் திருமுருகன் பூண்டியிற்பெற் ருரூர்போய்க் கலந்து வாழ்ந்தார்.

மறுவலுஞ்சே ரலர்பெருமான் மலைநாட்டுக் கேகுவார் வளமார் கொங்கின்
நறுவிரைத்தண் மலர்ப்பொய்கை மருங்குடுத்த புக்கொளியூர் மணிப்பொன்
உறுமளவி னொருமனைமங் கலமுமொரு மனையிலழு கையுமங் காகப் [வீதி
பெறுமிவையென் னெனவினவி னர்வினவி னர்க்கறிந்தோர் பேசலுற்றார்.63

கள் செய்யச் சில நாட்கள் அங்கே தங்கியிருந்தார். அங்கே சேரர்பெருமானால் கொடுக்கப்பெற்ற மிக்க நிதியைப் பெற்றுத் திருமுருகன் பூண்டியைச் சேரக் காட்டுவழியிலே செல்லும்போது நிதியைச் சுமந்துசெல்வோர் முன்னேபோகச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பின்னே சென்றார்.

குறுகார் உட்கும் - பகைவர் அஞ்சுதற்குக் காரணமான. பணி - திருத்தொண்டு; பணிவிடை. வைகல் - நாட்கள். வைகி - தங்கியிருந்து. பொங்குவான் நிதி பெருகப்பெற்று -அதிகரிக்கின்ற சிறந்த நிதிகளை மிகுதியாகப் பெற்று. கான் நடவையிடை - காட்டுவழியிலே; கால் நடவையிடை - காலால் நடந்து செல்லுமிடத்து எனவும் இரட்டுற மொழிந்துகொள்க. பரிப்பார் - சுமந்துசெல்லும் வேலையாட்கள்.

62. ஆதிபுரியிலுள்ள வெள்ளி மன்றத்தில் நடனம் செய்தருளும் சிவபெருமான் முன்னே அருளிச்செய்த முறைமையை உணர்ந்து, சேரமான் பெருமாள் நாயனார் கொடுக்கப்பெற்ற பெருநிதிக் குவியலை இறைவரிடத்துச் சொல்லாமல் செல்லும் தன்மையைக் கண்டோ, பூதர்களைவிடுப்ப, அவர்கள் வேடராய்ச்சென்று நிதிக்குவை முழுவதையும் கவர்ந்துகொண்டு மறைந்துவிட, இழந்த பொருட்குவியல் முழுவதையும் திருமுருகன் பூண்டியிலே பெற்றுத் திருவாரூருக்குப் போய்ப் பரவையாருடன் கலந்து வாழ்ந்திருந்தார்.

இரசதமன்று - வெள்ளியம்பலம். முன் அருளிச்செய்த நீதி: பள்ளுப் படலம் 49, 50, 51 செய்யுட்களிற் காண்க. வேடராய் - வேடர்களாய்; என்றது ஆறலை கள்வரை. அன்னவர் - பூதர்கள்; வேடர் எனினுமாம்.

63. மறுபடியும் சேரமான்பெருமாள் நாயனார் எழுந்தருளியுள்ள மலைநாட்டுக்குச் செல்லுவாராய், வளப்ப மிக்க தேனொழுகும் மலர்களையுடைய பொய்கைகள் பக்கத்திலே பொருந்தும் திருப்புக்கொளியூர்த் திருவீதியிலே செல்லுங் காலத்து ஒருமனையில் மங்கல ஒலியும் ஒருமனையில் அழுகையொலியும் கேட்கப் பெறுதலும் சுந்தரமூர்த்தி நாயனார் என்ன காரணம் என வினவியருளினர். அக் காரணத்தை யறிந்தோர் கேட்ட அவருக்குக் கூறத்தொடங்கினர்.

மறுவலும் - மறுபடியும். கொங்கின் நறுவிரை: கொங்கு - தேன். விரை - வாசனை. மருங்கு - பக்கம். வினவினர்க்கு - கேட்டவராகிய சுந்தரருக்கு: வினையாலணையும் பெயர்.

வேறு

இருவர் மங்கையர் மாலினி சுமாலினி யென்பார்
கருணை நாயகி கமலநாண் மலர்ப்பதம் பரசி
ஒருதி னந்தனி லிருவரு முயர்மகப் பயந்தார்
மருவி யத்தகு மகாருட னுட்டயர் வேலை. 64

வராலி னஞ்சுழன் மலர்ப்பெருங் குளத்தொரு வனைவன்
கராங்க வர்ந்துணப் பிழைத்தமற் றொருவற்குக் காலம்
விராவ நல்லுப நயனஞ்செய் மனையது விளிந்தோற்
கராவு மின்னலுற் றழுபவர் மனையிஃ தென்பார். 65

அன்ன செவ்வியி னழுகைதீர்ந் திருமுது குரவர்
வன்னி கூவிள மலைத்தவ ராண்டவன் றொண்டர்
முன்னி னுரெனக் கேட்டுமுன் வந்தடி பணிந்தார்
இன்ன லன்னவர்க் கொழிதர வின்மக வளித்தார். 66

---

64. மாலினி, சுமாலினி என்னும் இரண்டு மகளிர் உளர். அவர்கள் கருணை நாயகி என்னும் அம்மையாரை வழிபட்டுக் கருக்கொண்டவராய் ஒரு நாளிலே அவ்விருவரும் ஆண்மகவைப்பெற்றெடுத்தனர். அந்த மக்களுடன் பொருந்திப் பாராட்டி வளர்த்து வருங்காலத்தில்.

பரசி - துதித்து, வழிபட்டு. மகப்பயந்தார் - புத்திரனைப்பெற்றூர். மகார் - பிள்ளைகள். ஆட்டு அயர்வேலை - கொஞ்சிவிளையாடுங்காலத்தில்.

65. வரால்மீன்கள் சுற்றும் மலரையுடைய அப்பெரிய பொய்கையில் ஒரு பிள்ளையை வலிய முதலை பிடித்து உண்ண, பிழைத்த மற்றொரு பிள்ளைக்கு உபநயனம் செய்தற்குரிய பிராயம் வந்து பொருந்த அவனுக்குப் பூணூற்சடங்கு செய்யும்மனை அது. இறந்த அப்பிள்ளைக்காகத் துன்புற்று அழுகின்றவர் மனை இதுவாம் என்றனர்.

பெருங்குளம் - பொய்கை. கராம் - முதலை. உபநயனம் - பூணுநூற்சடங்கு. விளிந்தோற்கு - இறந்த அப்பிள்ளைக்கு. இன்னல் - துன்பம்.

66. அப்போது அழுகையினின்று நீங்கிப் பெற்றோர் இருவரும் வன்னி வில்வம் முதலியவற்றைத் தமது முடியிலே தரித்த சிவபெருமானல் தடுத்து ஆட்கொள்ளப்பட்ட வன்றொண்டர் வந்தருளினர் என்று கேட்டு எதிரேவந்து அவர் திருவடிகளில் விழுந்து வணங்கினர். அவர்களுக்குத் துன்பம் நீங்கும்படி இனிய புத்திரனை அழைத்துக்கொடுத்தருளினர்.

செவ்வி - பொழுது, காலம். இருமுது குரவர் - தாய் தந்தையர். கூவிளம் - வில்வம். மலைத்தல் - சூடிக்கொள்ளுதல். முன்னினர் - வந்தடுத்தார்.

இடங்கர் வாயிடை யிறந்தநாள் வளர்ச்சியு மிணங்கத்
தடங்கு ளத்தினின் றழைத்தரு ளியதனித் தொண்டர்
அடங்க லார்புர மழற்றின ரடிபணிந் தேகி
நடங்கு யிற்றுவார் திருவஞ்சைக் களத்தைநண் ணினரால். 67

அங்கு நாள்சில கழிதர வாண்டவ ரருளால்
துங்க நான்மருப் பிபம்வரத் தொல்லைவான் கயிலை
தங்கி னாரிரு மாதரு முன்புபோற் றலைவர்
பங்கி னாள்பணி புரிந்தனர் கயிலையிற் படர்ந்து. 68

போதி யம்பலத் தாடுவார் பள்ளனாய்ப் புகுந்து
கோதி லாததந் தோழர்க்குக் கொழும்பொரு ளாங்காங்
கீது மென்றவா றிந்தது தெரித்துநற் சூதன்
ஓது தில்லையந் தணர்வழி படலினி யுரைப்பான். 69

பள்ளுப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1345

---

67. முதலைவாய்ப்பட்டு இறந்தநாள் முதலாகவுள்ள வளர்ச்சியும் பொருந்த அப்பொய்கையினின்று அழைத்தருளிய ஒப்பற்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் பகைவருடைய திரிபுரத்தையும் சிரித்தெரித்தவராகிய சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கிச்சென்று திருக்கூத்தினைச் செய்தருள்பவராகிய சிவபிரான் எழுந்தருளியுள்ள திருவஞ்சைக்களத்தை யடைந்தார்.

இடங்கர் - முதலை. இணங்க - பொருந்த. அடங்கலார் - பகைவர். அழற்றினர் - அழலெழச் செய்தவர். நடம் குயிற்றுவார் - திருக்கூத்தைச் செய்தருளுபவர்; குயிற்றுதல் - செய்தல்.

68. சிலநாட்கள் திருவஞ்சைக்களத்திலே தங்கியிருந்தருளச் சிவபெருமான் அருளால் தூய நான்கு தந்தங்களையுடைய வெள்ளானை வர முன்புபோலவே திருக்கயிலாய மலையை அடைந்து திருத்தொண்டு செய்திருந்தார். அனிந்திதை, கமலினி என்னும் இருமகளிரும் சென்று முன்புபோலவே கயிலாயத்தில் உமாதேவியாருடைய பணிவிடையைச் செய்திருந்தனர்.

ஆண்டவர் - சிவபெருமான். மருப்பு - தந்தம். இபம் - யானை. இருமாதர் - பரவையார், சங்கிலியார் என்பவர் அனிந்திதை, கமலினிகளாய்ப் பணிபுரிந்தனர். பங்கினாள் - பாதித்திருமேனியிலுடையாள்; பார்வதி.

69. போதியம்பலத்திலே திருநடனம் செய்தருளும் சிவபெருமான் பள்ளனாகக் கோலங்கொண்டு குற்றமில்லாத தமது தோழராகிய சுந்தரமூர்த்தி நாயனாருக்குச் செழிப்பான பொருளை ஆங்காங்கே உமக்குத் தந்தருளுவோம் என்று ஆஞ்ஞாபித்தபடி அருளிய செய்தியைச் சொன்னோம் என்று சூதமுனிவர் கூறியருளித் தில்லையில் மூவாயிரவர் என சிறப்பித்துச் சொல்லப்படும் அந்தணர்கள் வழிபடுதலை இனிச் சொல்லுவாராயினர்.

இருபதாவது
அழகிய
திருச்சிற்றம்பலப்படலம்

ஆரூரர் பேரூரை யணைந்திறைஞ்சிப் போய்த்தில்லை
நீரூருஞ் சடையாரை நேர்வழுத்தும் பதிகத்திற்
பேரூரர் பெருமானைப் பெற்றுமென் றிசைத்ததமிழ்
சீரூருந் தில்லைவா ழந்தணர்தஞ் செவிக்கேட்டார். 1

தம்பிரான் றோழரவர் தமைநோக்கி வினவுவார்
எம்பிரா னமர்தில்லை யித்தலம்போ லொருதலமும்
உம்பரார் தொழுமுலகி லுயர்ந்திருப்ப திலையன்றே
நம்பிபே ரூர்சிறப்ப நயந்தெடுத்த தென்னென்றார். 2

---

1. நம்பியாரூரர் திருப்பேரூரை அடைந்து வணங்கிச்சென்று தில்லையில் எழுந்தருளியுள்ள கங்காநதியைத் தரித்த சடையையுடைய சிவபெருமானை நேரே துதித்தருளும் திருப்பதிகத்திலே 'பேரூரர் பெருமானைப் பெற்றா மன்றே' என்று வைத்துப் போற்றிய திருப் பாட்டைச் சிறப்புமிக்க தில்லைவாழந்தணர்கள் கேட்டார்கள்.

நீர் - கங்கைநீர். நேர்வழுத்தும் பதிகம் என்பது ''மடித்தாடும் அடிமைக் கண் அன்றியே'' என்னும் முதற்குறிப்புடைய திருப்பாட்டுடையது. தில்லையில் கூத்தப்பெருமானது திருக்கூத்தினை வணங்கப்பெற்ற பேற்றின் அருமையை நினைந்து உருகி இது நெஞ்சொடு கிளத்தலாக அருளிச் செய்யப்பட்டது என்க. ''மீகொங்கில் அணிகாஞ்சிவாய்ப், பேரூரர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றா மன்றே'' என்னும் பத்தாந்திருப்பாட்டு. தனித் திருப்பதிகம் இல்லா திருப்பினும், வைப்புத்தலமாகச் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் வைத்துப் போற்றப் பெற்றது. ஊர்த்தொகையில் ''பேரூர் உறைவாய் பட்டிப் பெருமான் பிறவா நெறியானே'' எனவும்; திருக்கச்சியனேகதங்காவதம் திருப்பதிகத்தில் ''வேறு படக் குடகத் தில்லையம்பல வாணனின் றூடல் விரும்புமிடம்'' எனவும் வைத்துப் போற்றியமையும் காண்க.

2. தம்பிரான் தோழராகிய சுந்தரரைத் தில்லைவாழந்தணர்கள் நோக்கி வினவுவாராயினர்: எமது நடராசப்பெருமான் அமர்ந்துவிளங்கும் தில்லையாகிய இத்தலம்போல் ஒரு தலமும் உலகில் உயர்ந்திருப்பதில்லை ஆகலின், நம்பியா ரூரரே! பேரூரைச் சிறப்புடையதாக விரும்பியெடுத்துப் பதிகத்திலே போற்றிய காரணம் யாது? என்றனர். உம்பர் - தேவர். நயந்து - விரும்பி.

மாண்டகுணத் தந்தணர்கள் வினவுதலும் வன்றொண்டர்
நீண்டமகிழ் வினராகி நிலைமையவர்க் கருள்செய்வார்
ஈண்டுநடம் புரிவதுபோ லெம்பிரான் போதிவனத்
தாண்டுமன வரதமுநல் லானந்த நடம்புரியும். 3

ஆதிசிதம் பரமேலைச் சிதம்பரமென் றறைகிற்குஞ்
சோதிவள ரத்தலத்திற் சுகவிடு தரலன்றி
ஓதறமா திகண்மூன்று முறுத்துவதில் லதன்பெருமை
மாதொருபா லுடையபிராற் கல்லாது மதிப்பரிதாம். 4

எனவுரைத்த வன்றொண்டர் தமைப்பழிச்சி யெழிற்றில்லை
அநகநடங் கண்டுவந்தா மாதிசிதம் பரநடமும்
இனியுவந்து காண்டுமென வெண்ணரியுயர் தில்லைநகர்ப்
பனவருளக் களிப்பினராய்ப் படர்ந்தனர்தம் பதிதணந்து. 5

---

3. மாட்சிமைமிக்க குணநலமுடைய தில்லைவாழந்தணர்கள் கேட்டவுடன் வன்றொண்டர் மிக்க மகிழ்ச்சியுடையவராய் இங்கே திருநடனம் செய்தருளுவது போல எம்பெருமான் போதிவனத்திலே அவ்விடத்து எப்பொழுதும் சிறந்த ஆனந்த நடனம் செய்தருளுவார் என்று கூறினர்.

மாண்ட - மாட்சிமைப்பட்ட. போதி - அரசு. போதிவனம் - அரசவனம். அனவரதமும் - எப்பொழுதும். ஆனந்த நடம் - ஆனந்தக்கூத்து.

4. ஆதி சிதம்பரமென்றும் மேலைச்சிதம்பரம் என்றும் சொல்லப்படும், சிவபெருமான் எழுந்தருளியுள்ள அத்தலத்தில் பேரின்ப முத்தியைக் கொடுத்தருளுவதை அன்றித் தருமம் முதலிய மூன்றையும் கொடுப்பதன்று. அதன் பெருமை உமையொருகூறுடைய சிவபிரானுக்கல்லாது மதிப்பதற்கு அருமையுடையதாம்.

அறைகிற்கும் - சொல்லும்; கில் ஆற்றல் தருவதோர் இடைச்சொல். சோதி - பேரொளி. சுகவிடு - இன்பமுத்தி. உறுத்துவது - கொடுத்தருள்வது.

5. என்றுகூறிய வன்றொண்டரைத் துதித்து, அழகிய தில்லையில் தூய திருநடனத்தைத் தரிசித்துவந்தோம், ஆதிசிதம்பரத்தில் இறைவர் செய்தருளும் திருக்கூத்தையும் இனி மகிழ்ந்து காண்போம் என எண்ணி உயர்ந்த தில்லைவாழ் அந்தணர் மகிழ்ச்சியுடன் தம்முடைய தில்லைப்பதியை நீங்கிச்சென்றனர்.

பழிச்சி - துதித்து. அநகநடம்; அநகம் - பரிசுத்தம். கண்டுவந்தாம், கண்டு உவந்தாம் எனவும் பிரித்துப் பொருள்காண்க. தில்லைநகர்ப்பனவர்: பனவர் - அந்தணர். தணந்து - நீங்கி.

தீம்புனனா டதுகடந்து செறிவனமுங் கற்சுரமுந்
தாம்பலவுங் கடந்துபோய்த் தகட்டுவரா லுடறுமிய
ஓம்பலத்தின் பகட்டுழவ ருழுபணைப்பாட் டொலிபரக்குங்
கூம்பவிழ்பங் கயவாவிக் கொங்குநாட் டினையடுத்தார். 6

வாரத்தால் வணங்குநர்தம் வல்வினைவே ரகழ்ந்தருளு
மாரத்தார் மதிமுடியா ரானவிர சதவரையைத்
தூரத்தே யெதிர்நோக்கித் தொழுதிறைஞ்சி யீசர்க்குப்
பேரத்தா ணியினமர்ந்த பேரூர்புக் கிறைஞ்சினர். 7

வேரனரன் றுகுமணியும் வேழமருப் பினமணியுங்
காரகிலுஞ் சந்தனமுங் கையரிக்கொண் டலையெறிந்து
பேரரவத் தொடுபெயரும் பேரூர்வைப் பிடைக்காஞ்சித்
தீரமெதிர் கண்டிறைஞ்சிச் செழும்புனல்புக் காடினர். 8

---

6. சோழநாட்டைக் கடந்து, அடர்ந்த காடும் பருக்கைக்கற்கள்செறி பாலை வனமும் ஆகிய இவற்றையும் கடந்துபோய்த் தகட்டுவடிவாகிய வரால் மீன்களுடைய உடல்கிழிய, கலப்பையினுல் பெருமை பொருந்தும் உழவர்கள் உழுகின்ற வயல்களில் பாட்டுப்பாடும் ஓலிபரவுகின்ற, மொட்டுக்கள் விரிந்த தாமரைத் தடாகங்களையுடைய கொங்குநாட்டைச் சேர்ந்தார்கள்.

புனல்நாடு - சோழநாடு. கற்சுரம் - பருக்கைக்கற்கள் நிறைந்த பாலை வனம். துமிய - கிழிய. ஓம்பு அலத்தின்: அலம் - கலப்பை. பகடு - எருமைக்கடா, யானை, பெருமை. இடபம்: இங்கே பெருமை குறித்தது. உழு பண்ணைப்பாட்டு: ''மணியின், வண்ண வன்கடா நிரை நிரை யாத்து வன்படையாற், பண்ணை தோறு நின்றுழுநர் கம்பலைகளே யெங்கும்'' (காஞ்சிப் - திருநாட்டுப் - 71). கூம்பு - மொட்டு. கூம்பு அவிழ் - கூம்புதல் அவிழ்ந்த என்க.

7. அன்பினுல் தம்மை வணங்கும் மெய்யன்பர்களுடைய வலிய வினையை வேரோடு அகழ்ந்துபோக்கும் ஆத்திமாலையை அணிந்தவரும் பிறைச்சந்திரனைத் தரித்தவருமாகிய சிவபிரான் எழுந்தருளியுள்ள வெள்ளிமலையைத் தூரத்திலேயே கண்டு கரங்களால் தொழுது வணங்கி, இறைவருக்குப் பெரிய கொலுமண்டபம் போல விருப்பமிகும் பேருரையடைந்து வணங்கினர்கள்.

வாரம் - அன்பு. அகழ்தல் - தோண்டுதல். ஆர் அ தார் - ஆத்தியாகிய அழகிய மாலை. இரசதவரை - வெள்ளிமலை. அத்தாணியின் - அரசிருக்கை மண்டபம்போன்று. இன் - ஐந்தாவது ஒப்பின்கண் வந்தது. அமர்ந்த - விருப்பமுடைய.

8. மூங்கில்கள் ஒலித்துச் சிந்துகின்ற முத்துக்களையும், யானைத்தந்தங் களிலே தோன்றும் முத்துக்களையும், கரிய அகிற்றுணிகளையும் சந்தனத்துண்டு களையும் வாரிக்கொண்டு அலைகளை வீசி, மிக்க ஒலியுடன் பெயர்ந்து செல்லும் பேருரிலுள்ள காஞ்சிநதியை எதிரேகண்டு வணங்கி நீரிலேசென்று மூழ்கினர்.

வெண்ணிறுங் கண்மணியு மெய்முழுது மணிந்தொளிர
விண்ணிடு மெழிற்புரிசை வியத்தருகோ யிலைச்சார்ந்தங்
கெண்ணிடு முறுப்பினுமைந் தினுமார வெதிர்வணங்கிக்
கண்ணிடு நுதலார்தங் காமருசே வடிதொழுதார். 9

வலம்வந்து போற்றிசைத்து மரகதவல் லியைப்பணிந்திட்
டலமந்த பிறவிதப வணியரசம் பலத்தாடுஞ்
சலமந்தி நிறச்சடிலந் தாங்கினர் தமையேத்திப்
புலமந்தித் திடுமின்பப் புணரியிடை யழுந்தினர். 10

சிலமிக வழிநாளாற் செழும்புனற்றீர்த் தம்படிந்து
காலவனீச் சரந்தனக்குக் கனற்றிசையி னேரிலிங்கஞ்
சாலுமுறை யாற்பதிட்டை சமைத்துவழி பாடியற்றி
ஞாலமிடர் முழுதகல நாடொறும்பூ சித்திருந்தார். 11

வேரல் - மூங்கில். நரன்று - ஒலித்து. உகும் - சிந்தும். வேழ மருப்பு - யானைத்தந்தம். கையரிக்கொண்டு - கைகளால் வாரிக்கொண்டு; "காடு கையரிக் கொண்டு கவர்ந்துபோய்" (சிவக. 38); "வேழ வெண்மருப் பெறிந்துவெண் ணித்திலம் வரன்றிக், காழ கிற்றுணி சந்தொடு கையரிக் கொண்டு" (நைடதம் நாட்டு 4). முத்துப் பிறக்குமிடங்கள் இருபது; அவற்றுள் மூங்கில் யானைத்தந்தம் என்பனவுமாம்.

9. வெள்ளிய திருநீறும் உருத்திராக்கமணியும் உடம்பு முழுவதும் தரித்து விளங்க, ஆகாயத்தையளாவிய அழகுமிக்க மதில்களையுடைய சிறந்த கோயிலை அடைந்து, அங்கே அட்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்களைச் செய்து நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானின் சிவந்த மலர்போன்ற திருவடிகளைவணங்கினர்.

புரிசை - மதில். எண் நீடும் உறுப்பு - எட்டுறுப்பு. ஐந்து - ஐந்துறுப்புக்கள்.

10. பிரதட்சிணம் வந்து வணங்கித் துதித்து, மரகதவல்லியம்மையாரை வணங்கி, மாறி மாறி வரும் பிறவிப்பிணி நீங்க அழகிய அரசம்பலத்திலே திருக் கூத்துச் செய்தருளும் கங்காநதியைச் சிவந்த சடையிலே தரித்த சிவபெருமானைத் துதித்துப் புலன்கள் கெட்டொழியும் பேரின்பக் கடலிலே மூழ்கினர்.

வலம் வரல் - பிரதட்சிணம் செய்தல். அலமந்த பிறவி தப - காற்றாடி போலச் சுழலும் பிறப் பிறப்புக்கள் நீங்க. அலமரல் - சுழலல். சலம் - கங்கைநீர். சடிலம் - சடை. புலம் மந்தித்திடும் - புலன்கள் தொழிலற்று இருக்கும். புலம் அந்தித்திடும்: அந்தித்திடும் - கெடும். "வென்றுளே புலன் களைதல்" என்பதாம். புணரி - கடல்.

11. நல்லொழுக்கம் மிக மற்றைநாட்களிலும் அந்தக்காஞ்சித் தீர்த்தத் திலே முழுகி, காலவனீச்சரத்துக்கு அக்கினி திக்கிலே ஒரு சிவலிங்கத்தைச் சிவாகமவிதியாற் பதிட்டைசெய்து வழிபட்டு உலக முழுவதும் துன்பத்தினின்று நீங்குமாறு நாடோறும் பூசைசெய்திருந்தனர். வழிநாள் - பின்வரும் நாட்கள். கனல்திசை - அக்கினிதிக்கு. ஞாலம் - உலகம்.

வேறு

கள்ளவைம் பொறியைக் கடந்துபூ சனையின் கடன்புரி தில்லையந் தணர்க்கு
வெள்ளியம் பலத்து நாதனுர் நடனம் வியப்புறக் காட்டினுர் கண்டு
தெள்ளிய வின்ப முள்ளகந் திளைப்பச் செறிமயிர் பொடிப்பக்கண் டுளிப்ப
உள்ளிய வுயிருஞ் சிவமுமொன் ருக வுளமழிந் தவசமாய் நின்ருர். 12

கமழ்புனற் காஞ்சித் தீர்த்தமாய்ப் பேரூர்க் கடிவரைப் பாய்வெள்ளி வரை
அமரரும் வியக்கும் வெள்ளியம் பலமா யதனிடை மூர்த்தியு மாகி [யாய்
உமையவள் காண நடநவின் றருளு மொருவனே சயசய போற்றி
விமலவாழ் வருளும் போதியங் கானின் வித்தக போற்றியென் றிசைத்தார்.

இரசத வரையின் மன்றமும் போற்றி யெழில்வளர் மருதமால் வரையின்
வரதனை வணங்கி மற்றுமப் பேரூர் வரைப்பிடைச் சிவாலயம் பலவுங்
கரவறு முள்ளங் கசிதரப் பணிந்து கடவுணு யகர்விடை பெற்றுப்
பரவுறு கீழைச் சிதம்பரம் புகுந்து பண்டுபோல் வாழ்ந்தன ரம்மா. 14

---

12. வஞ்சகத்தன்மை பொருந்திய ஐந்து பொறிகளையும் அடக்கிப் பூசையைச்செய்துவரும் தில்லைவாழந்தணர்களுக்கு வெள்ளியம்பலத்திலே வீற்றிருந்தருளும் சிவபெருமான் திருக்கூத்துத் தரிசனத்தைக் காட்டக்கண்டு மனம்தெளிந்த இன்பத்தில் திளைக்க, மெய்ம்மயிர் சிலிர்ப்ப, கண்கள் நீர்பொழிய, நினைந்த உயிரும் சிவமும் இரண்டற்ற நிலையை அடைய மனமழிந்து வசமிழந்து நின்ருர். கள்ளம் - வஞ்சகம். கடந்து - வென்று. உள்ளகம் - மனம். உள்ளிய - நினைந்த. உளம் - மனம். உளம் அழிந்து - சீவத்தன்மை கெட்டு.

13. மணம்வீசும் காஞ்சிதீர்த்தமாய், பேரூர்த்தலமாய், வெள்ளிமலையாய், தேவரும் வியப்படையும் வெள்ளியம்பலமாய், அந்த அம்பலத்திலேயுள்ள மூர்த்தியும் ஆகி, உமாதேவியார் காணும்படி திருக்கூத்தைச் செய்தருளும் ஒப்பற்றவரே! சய சய போற்றி, குற்றமற்ற சிவவாழ்வை அருளுகின்ற போதிவனத்தில் எழுந்தருளிய வித்தகரே! போற்றி என்று துதித்தனர்.

மூர்த்தி தலம் தீர்த்தமாக நின்று இறைவர் ஆன்மாக்கள் உய்யும் வண்ணம் அநுக்கிரகம் செய்தருளுகின்ருர் என்பது.

ஒருவன் - ஒப்பற்றவன். விமலவாழ்வு - குற்றமற்ற சிவமாந்தன்மைப் பெருவாழ்வு.

14. வெள்ளிமலையிலுள்ள இரசத சபையையும் வணங்கி, அழகுவளரும் மருதமலையின்கண் உள்ள வரதரையும் வணங்கி, மற்றும் அப் பேரூரின்கண் விளங்கும் பல சிவாலயங்களையும் வஞ்சமற்ற நெஞ்சம் உருகப் பணிந்து, சிவபெருமானிடத்து விடைபெற்றுத் தாங்கள் பூசித்துவந்த கீழைச்சிதம்பரத்தை அடைந்து முன்போலவே வாழ்ந்திருந்தனர்.

இரசதவரை - வெள்ளிமலை. மன்றம் - வெள்ளிசபை. மருதவரைவரதன் - முருகவேள். வரைப்பு - இடம். கரவு அறும் உள்ளம்: கரவு - வஞ்சகம். கசிதர - நெகிழ, கசிய. கடவுள் நாயகர் - தேவதேவர்.

அழகிய கீழைச் சிதம்பர வரைப்பி னந்தணர் பூசைகொண் டருள்வார்
அழகிய திருச்சிற் றம்பல முடையா ராதலி னவர்கள்பூ சிப்ப
அழகிய மேலைச் சிதம்பர வரைப்பி னமர்ந்தரு ளமலநா யகர்க்கும்
அழகிய திருச்சிற் றம்பல முடையா ரெனும்பெய ராயது மாதோ. 15

விழவறா வீதிக் குணசிதம் பரத்து மேவினோர்க் கரும்பய னளிப்பார்
அழகிய திருச்சிற் றம்பல முடையா ரொருவரே குடசிதம் பரத்துப்
பழகுநர்க் களிப்பா ரிரசத மன்றிற் பரதஞ்செய் பேரைநா யகரோ
டழகிய திருச்சிற் றம்பல முடையா ரிருவரு மறிமின்கண் முனிவீர். 16

என்றுமா தவத்துச் சூதமா முனிவ னிறைஞ்சிய நைமிச வனத்தோர்க்
கொன்றிய பேரூ ரழகிய திருச்சிற் றம்பல முடையவர் பெருமை
நன்றுறத் தெளித்துப் போக்கியவ் வாதி நகர்வயி னுலகெலாம் படியத்
துன்றிய தீர்த்த மான்மிய மவர்க்குச் சுவையமிழ் தெனத்தெருட் டுவனால். 17

அழகிய திருச்சிற்றம்பலப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1362

---

15. அழகையுடைய கீழைச்சிதம்பரம் என்னும் தலத்திலே மூவாயிரம் அந்தணர்களுடைய பூசையைக் கொண்டருளுபவர் அழகிய திருச்சிற்றம்பலம் உடையவராகலின் அவர்கள் பூசைசெய்ய அழகிய மேலைச்சிதம்பரத்தலத்தின் வீற்றிருந்தருளும் மலரகிதராகிய சிவபிரானுக்கும் அழகிய திருச்சிற்றம்பல முடையார் என்னும் பெயர் உண்டாகியது.

16. திருவிழாக்கள் நீங்காத கீழைச்சிதம்பரத்தைச் சேர்ந்தோருக்கு அரியபயனைத் தந்தருளுபவர் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் ஒருவரே. மேலைச்சிதம்பரத்தைச் சேர்ந்தோருக்குப் பயனளித்தருள்பவர் வெள்ளிமன்றத்தில் நடனஞ் செய்தருளும் பேரைநாயகரோடு அழகிய திருச்சிற்றம்பலமுடையாரும் ஆகிய இருவரும் ஆவர் என்று, முனிவர்களே! நீங்கள் அறிவீராக.

விழவு - திருவிழா. குணசிதம்பரம் - தில்லை. குட சிதம்பரம் - பேரூர். குணக்கு - கிழக்கு. குடக்கு - மேற்கு. பரதம் - நடனம்.

17. என்று பெரிய தவத்தையுடைய சூதமகாமுனிவர், வணங்கிய நைமிச வன முனிவர்கட்குப் பேரூரிலே பொருந்தும் அழகிய திருச்சிற்றம்பலமுடைய நாயகர் பெருமையை நன்றாக எடுத்துக்கூறித் தெளிவித்து அந்த ஆதிபுரத்திலே யுள்ள தீர்த்தங்களின் பெருமையை அம்முனிவர்கட்கு இனிய அமுதம்போன்று தெளிவாகக் கூறத்தொடங்கினர்.

ஒன்றிய - பொருந்திய. தெளித்து - தெளிவித்து. வயின் - இடம். படிய - முழுக. துன்றிய - நெருங்கியுள்ள.

இருபத்தொன்றாவது

தீர்த்தப்படலம்

திசைதிசைமூன் றியோசனையி னளவையுறு மாதிநகர்த் தேத்து வானோர்
அசுரர்முத லோர்பூசை யாற்றுசிவ லிங்கமள வில்லை யாங்காங் [மேலாய்
கிசைமுரல்வண் டினம்படர்பூந் தீர்த்தமுமெண் ணிலபயின்ற விவற்றுண்
வசையறுவண் பயன்விரைய வழங்குவன பலவிவற்றை வகுத்து மாதோ. 1

திரைதவழ்பூங் காஞ்சிநதி காலவதீர்த் தம்பிரம தீர்த்தஞ் செங்கண்
அரிதொடுசக் கரதீர்த்தந் தேவதீர்த் தம்பகலோ னகழ்ந்த தீர்த்தம்
வரைதுளைத்தோன் மகிழ்கந்த தீர்த்தங்கன் னிகைதீர்த்த மாதர் தீர்த்தந்
துரிசறுமிந் திரதீர்த்த முசுகுந்த தீர்த்தமொடு சோழ தீர்த்தம். 2

அங்கிரதீர்த் தந்துர்க்கை தீர்த்தமகத் தியதீர்த்தங் காளி தீர்த்தஞ்
சிங்கதீர்த் தம்வசிட்ட தீர்த்தம்பார்க் கவதீர்த்தந் தேனு தீர்த்தந்
தங்குநா ரததீர்த்த நச்சுத்தீர்த் தந்தகைசான் மருத வோங்கற்
பொங்குமருச் சுனதீர்த்தங் கன்னியர்தீர்த் தம்பொலிந்த கந்த தீர்த்தம். 3

---

1. ஆதிநகராகிய திருப்பேரூர்ப்பட்டீச்சரத்தைச் சுற்றிலும் மும்மூன்று யோசனையுள்ளது இத்தலம். இத்தலத்திலே தேவர் அசுரர் முதலியோர் பூசித்த சிவலிங்கங்களுக்கு அளவில்லை. அங்கங்கே உள்ள தீர்த்தங்களும் அளவில வாகும். அத்தீர்த்தங்களுக்குள்ளே மிகமேலாகக் குற்றமற்ற பயனை விரைவில் வழங்குவன பல தீர்த்தங்கள். அவற்றை வகுத்துச்சொல்லுவோம்.

அளவை - அளவு, தூரம். தேத்து - இடத்தில். முரல் - ஒலிக்கும். பயின்ற - உள்ளன. வண்பயன் - வளப்பமுள்ள பலன். விரைய - சீக்கிரமாக.

2. அலைகளை வீசும் காஞ்சிநதி, காலவதீர்த்தம், பிரமதீர்த்தம், திருமாலால் உண்டாக்கப்பட்ட சக்கரதீர்த்தம், தேவதீர்த்தம், சூரியதீர்த்தம், கந்ததீர்த்தம், கன்னிகைதீர்த்தம், மாதர்தீர்த்தம், இந்திரதீர்த்தம், முசுகுந்ததீர்த்தம், சோழ தீர்த்தம்.

திரை - அலை. செங்கண் அரி - சிவந்த கண்ணையுடைய திருமால். பகலோன்- சூரியன். வரைதுளைத்தோன் - கிரவுஞ்சமலையைத் துளைத்த முருகவேள். துரிசு அறும் - குற்றமற்ற.

3. அங்கிரதீர்த்தம், துர்க்கைதீர்த்தம், அகத்தியதீர்த்தம், காளிதீர்த்தம், சிங்கதீர்த்தம், வசிட்டதீர்த்தம், பார்க்கவதீர்த்தம், தேனுதீர்த்தம், நாரததீர்த்தம், நச்சுதீர்த்தம், தகுதிசான்ற மருதமலையிலுள்ள அருச்சுனதீர்த்தம், கன்னியர் தீர்த்தம், கந்ததீர்த்தம்.

அவ்வரையின் வளரனும தீர்த்தமயன் வரைப்பிரம தீர்த்த மாழி
தெவ்வியகை விண்டுவரைத் திகழ்விண்டு தீர்த்தமெனத் தெரிந்த வற்றுட்
கௌவைநெடும் புனற்காஞ்சி கந்ததீர்த் தம்பிரம தீர்த்தம் வையத்
தெவ்வெவரும் புகழ்விண்டு தீர்த்தமுயர்ந் தனவிவற்று ளேற்றங் காஞ்சி. 4

விதந்தவுயர் தீர்த்தங்க ளிவற்றுள்ளும் விதவாத தீர்த்தத் துள்ளும்
இதங்கருது மனத்தினர்க்குத் தெரிதருமா சிஃறீர்த்தத் தியல்பு சோறுங்
கதந்தருவல் வினைத்திருக்கைக் கடிந்துமல மாயைகன்மக் கலக்கந் தம்மை
அதப்புரியுஞ் சிவபெருமான் மான்மியமே விழைதக்க வந்த ணாளிர். 5

வேறு

முந்திய பரார்த்தந் தன்னின் முளரிநாண் மலரின் மேலான்
சுந்தர வுலக மாக்குந் தொழிறனக் கெய்தல் வேண்டி
அந்தியின் மதியஞ் சூடி யம்பலத் தாடா நிற்கும்
எந்தையை வழிபா டாற்றி யிருந்தவத் திருந்த வேலை. 6

---

4. மற்றும் மருதமலையிலுள்ள அனுமதீர்த்தம், அயன்மலையிலுள்ள பிரம தீர்த்தம், திருமால்மலையிலுள்ள விண்டுதீர்த்தம் என ஆராய்ந்த அவற்றுள்ளே ஒலியுடன்கூடிய மிக்கநீரையுடைய காஞ்சிதீர்த்தம், பிரமதீர்த்தம், விண்டுதீர்த்தம் என்பன உயர்ந்தனவாகும். இவற்றுள் காஞ்சிதீர்த்தமே மிகமேலானது.

அயன் - பிரமதேவன். ஆழி தெவ்விய கை-சுதர்சனம் என்னும் சக்கரத்தை ஏந்திய திருக்கரம். கௌவை - ஒலி. வையத்து - உலகத்தில்.

5. வேறுபடுத்திச் சொன்ன இந்த மேலான தீர்த்தங்களிலும், பிரித்துச் சொல்லாத தீர்த்தங்களிலும் நன்மையை எண்ணும் மனத்தையுடையவர்கட்குக் குற்றமற்ற தீர்த்தத்தின் தன்மையைச் சொல்லுவோம். சினந்தங்கிய வலியவினைகளின் மாறுபாட்டைப் போக்கி, ஆணவம் மாயை கன்மமலங்களால் உண்டாகும் கலக்கங்களை நாசம்பண்ணுகின்ற சிவபெருமானுடைய மகத்துவங்களையே விரும்பும் நைமிசவனத்து முனிவர்களே! கேட்பீராக.

விதந்த - வேறுபிரித்துச் சொன்ன. இதம் - நன்மையையே. ஆசு இல் - குற்றமில்லாத. சோறும் - சொல்லுவோம்; சொல்தும்; ஆதி நீண்டது. கதம் - கோபம். வல்வினை - வலிய நல்வினை தீவினைகள். திருக்கு - மாறுபாடு. வினைத் திருக்கு - பண்புத்தொகை. அதம்புரியும் - கெடுக்கும்.

6. முந்திய பரார்த்தத்திலே பிரமதேவர் உலகைப்படைக்கும் தொழிலைப் பெறும்பொருட்டு, பிறைச்சந்திரனை அணிந்து அம்பலத்திலே திருக்கூத்தைச் செய்தருளும் சிவபெருமானை வழிபட்டுத் தவத்திலிருந்த காலத்தில்.

முந்திய பரார்த்தம் - பிரமகற்பத்தின் முற்பகுதியில். பரார்த்தம் - ஆயிரங் கோடி; கோடானுகோடி. முளரி - தாமரை. நாண்மலர் - அன்றலர்ந்த மலர். அந்தியின்மதி - மாலைக்காலத்திலே தோன்றும் பிறைச்சந்திரன். தவம் - சரியை கிரியாயோகங்கள். வேலை - சமயம், காலம்.

இனையநான் முகற்கு முன்ன ரிருந்ததி காரஞ் செய்த
நனைமலர்த் தவிசி னேரு நாரணர் தாமும் பொல்லா
வினைதபு முனிவர் யோகர் விண்ணவ ரநேக ரீண்டித்
தனைநிகர் விடு நாடித் தவம்பல வுழந்தா ராக. 7

அன்பினுக் கெளிய ஞகு மானந்த நடனத் தண்ணல்
முன்பவர்க் கருளல் வேண்டி மூரியங் கிரியாய் நின்ற
தன்பெரு வடிவு தன்னிற் ருண்டவ மியற்ரு நின்ருன்
பொன்பெயர்க் கிரியாய் நின்ற பூங்கொடி மகிழ்ந்து காண. 8

அனைவருங் கண்டு கும்பிட் டானந்தந் திளைக்கு மெல்லைக்
கனைகதிர் மணித்திண் சூட்டுக் கட்செவி யார மாற்ரு
தினைவன நஞ்சு கால வெனைவரும் வேகந் தாக்கி
முனைவனே காத்தி யென்ன முறைமுறை பணிந்து நைந்தார். 9

கடற்றலைப் பிறந்து சீந்துங் காளகூ டத்திற் சீர்த்த
மிடற்றவ ரவர்கட் கந்நாள் வேகமுந் தணித்தல் வேண்டித்
தடற்றுறை வாட்கட் கங்கை தலையிருந் தவளை நோக்கி
உடற்றுமிவ் விடவே கந்தா னெழிதர வொழுகு கென்ருர். 10

---

7. இந்த நான்முகக் கடவுளுக்கு முன்னேயிருந்து அதிகாரம் பண்ணின பிரமரும் நாரணரும் முனிவர்களும் யோகிகளும் கூடித் தனக்குத்தானே ஒப்பாக வுள்ள வீட்டின்பத்தை விரும்பித் தவங்கள் பலவற்றையும் செய்தார்கள்.

நனை மலர் தவிசினேர்: நனை - அரும்பு. மலர்த்தவிசு - தாமரைமலர்ப் பீடம். ஈண்டி - நெருங்கி. உழந்தார் - வருந்திச் செய்தார்.

8. அன்புக்கு எளிவந்தருளும் ஆனந்தக் கூத்தையுடைய பரமசிவன் முற்பட அவர்கட்கு அருள்செய்யும் பொருட்டு, வலிய அந்த மலையாகவுள்ள தம்முடைய பெரிய வடிவில் தாண்டவம் இயற்றியருளினர்; பார்வதிதேவியார் அந்த நடனத்தைக் காணும்படியாக.

மூரி - வலிமை. கிரி - வெள்ளிமலை. பூங்கொடி - உமாதேவியார்.

9. எல்லோரும் தரிசித்து வணங்கி இன்புற்றிருக்கும் காலத்தில் சிவபெருமான் திருமேனியில் ஆபரணமாக அணிந்துள்ள பாம்புகள் அத்திருக் கூத்தின் வேகத்தைப் பொறுக்கலாற்ருது வருந்தி நஞ்சைக் கக்கின. அங்குள்ளாரனைவரும் அந்த நஞ்சின் வேகந் தாக்கிய காரணத்தால் முழுமுதற்கடவுளே! பாது காத்தருள்க என்று முறைமுறையாக வணங்கித் துன்புற்றுத் துதித்தனர்.

கனைகதிர் - மிக்கஒளி. சூட்டு - உச்சிக் கொண்டை. கட்செவி - பாம்பு. இனைதல் - வருந்துதல். கால - கக்க.

10. திருப்பாற்கடலிலே தோன்றி வருத்திய ஆலகாலவிடத்தால் அழகு விளங்கும் கண்டத்தையுடைய சிவபெருமான், தேவர் முதலியோருக்கு அப்போது உண்டாகிய விடவேகத்தையும் தணித்தருள விரும்பித் தமது திருச்சடையில்

உமைமண வாளர் கூற வொலிபுனற் கங்கை சொல்வாள்
இமையவர் முதலோர்க் காக வேவிய வாறு செல்வல்
சிமையமால் வரையா மிந்தத் திருவுரு வாயே யையன்
அமைதரல் வேண்டு மென்று மடியனேன் றணவா வண்ணம். 11

சரியைமுன் னான்குஞ் சாலச் சாதித்த தவத்தோர்க் கெய்தும்
உரியநன் முத்தி நான்கு முரைத்தபா தகங்கண் மூன்றும்
விரிசெயு மிழிஞ ராக மேவியெற் பரிசித் தார்க்கு
வரிசையி னடியே வல்க வரமுமிங் கருளல் வேண்டும். 12

என்றெதிர் தாழக் கங்கைக் கெம்பிரான் வரங்க ணல்கி
ஒன்றிய முறைமை யொன்றங் குவப்புட னருளிச் செய்யு
மன்றமா மறைகள் வன்னி மரம்வன்னி மயமா மென்றுந்
துன்றமு லிடத்துத் தோயந் தோன்றுவ தென்றுங் கூறும். 13

இருந்த கங்காதேவியைப் பார்த்து இவர்களை வருத்தும் விடவேகம் நீங்கும் பொருட்டு நடப்பாயாக என்றருளினர்.

கடற்றலை; தலை - ஏழனுருபு. சிந்தும் - வருத்தும். காளகூடம் - ஆலகால விடம். காளகூடத்திற் சேர்த்தமிடற்றவர்: "கறைநிறுத்திய கந்தரசுந்தரக்கடவுள்" (திருவிளையாடல்). தடறு உறைவாள் - உறையினுள்ளே பொருந்திய வாள். தடறு - ஆயுத உறை. உடற்றும் - வருத்தும். ஒழுகுக - செல்வாயாக.

11. உமாதேவியாரை ஒருகூறுகவுடைய சிவபெருமான் கட்டளையிட்டருளப் புனல் வடிவாயுள்ள கங்காதேவி தேவர் முதலியோர் பொருட்டுத் தேவரீர் கட்டளையிட்டவாறே செல்வேன். சிகரத்தையுடைய மலையாகிய இந்த வடிவமாகவே, ஐயனே! எப்போதும் அடியேன் நீங்காதவண்ணம் பொருந்தியிருத்தல்வேண்டும். மணவாளர் - நாயகர். சிமையம் - மலையினுச்சி. தணத்தல் - நீங்குதல்.

12. சரியை முதலாகவுள்ள நான்கு நெறிகளையும் நன்குகச் செய்துமுடித்த தவத்தினையுடையோர்கட்கு முறையே பொருந்தும் உரிய நல்ல பதமுத்திகளாகிய நான்கும்; பாதகம், அதிபாதகம், மகாபாதகம் ஆகிய மூன்றனையுமுடைய இழிசெயலினர் யாவராயினும் என்னைப் பரிசித்தால் அவர்கட்கு அந்த முத்தியைத்தர வரமும் எனக்கு அருளல்வேண்டும்.

சரியை முன்னான்கு - சரியை கிரியா யோகம் ஞானம் என்பன. முன் - முதலாகவுள்ள. உரிய நன்முத்தி நான்கு - சரியையாளருக்குச் சாலோகபதமும், கிரியையாளருக்குச் சாமீபபதமும், யோகிகளுக்குச் சாரூபபதமுமாகிய பதமுத்திகளும்; ஞானிகளுக்குச் சாயுச்சியமாகிய பரமுத்தியும் என்க. பாதகம் அதிபாதகம் மகாபாதகங்கள் தூல சூக்கும அதிசூக்குமமாக உள்ளன.

இழிஞர் - இழிந்தோர். பரிசித்தல் - தொடுதல். வரிசையின் - முறையே.

13. என்று விண்ணப்பித்து எதிரிலே வணங்க, கங்காதேவிக்குச் சிவபெருமான் அந்த வரங்களை அருளிப் பொருந்திய விதியொன்றையும் மகிழ்வோடு

ஆதலா னமது மெய்யே யாகிய கிரிவ லப்பாற்
காதடி யுரோம மான காமரு வன்னி மூலத்
தேதமெவ் வுலகுந் தீர வெழுந்துசென் றொழுகு கென்றான்
தீதற வுரைத்தாற் கவ்வா றெழுந்தது தெய்வக் கங்கை. 14

வேதங்க ளெனைத்துந் தேரு விழுப்பொருண் முடியிற் றங்குஞ்
சீதளக் கங்கை நீத்தஞ் செவியடி வன்னி மூலம்
ஆதரித் தெழுந்த தாங்கே யைதெனப் பிடரிற் சூழ்ந்து
மாதர்வா ளிடத்தோ ளின்று மாலையிற் றாழ்ந்த தம்மா. 15

வேறு

வரைமகட் கிடம்வல மாயற் காக்கிய
புரையிலி நடுவுருப் புணர நல்கலுங்
கரையழி காதலிற் கலந்திட் டாலெனக்
குரைபுனற் கங்கைகூர்ந் துரத்திற் பாய்ந்ததே. 16

கொடுத்தருளினர். மிகுதியும் வேதங்கள் 'வன்னிமரம் - வன்னிமயமாம். வன்னி என்னும் அக்கினியினிடத்தே அப்புத்தோன்றும்' என்று கூறுவனவாம்.

மன்ற - மிகுதியாக. வன்னி - வன்னிமரம், அக்கினி. அழல் - அக்கினி. தோயம் - நீர்.

14. ஆதலால் நமது திருமேனியே வடிவாகிய மலையின் வலப்பக்கத்திலே காதடியிலுள்ள உரோமமான அழகிய வன்னி மூலத்திலே எவ்வுலகமும் துன்பம் நீங்க எழுந்து சென்று ஒழுகுவாயாக என்றருள்செய்தார். தெய்வக்கங்கை நதியானது அக்கட்டளைப்படியே சென்றது.

கிரி - மலை. காமரு - அழகிய. வன்னிமூலம் - வன்னிமரத்தினடி. ஏதம் - துன்பம்.

15. வேதங்களால் சிறிதும் தெளியமுடியாத சிவபரம்பொருளின் திருமுடியிலே தங்கியுள்ள குளிர்ந்த கங்கை நதியானது காதினடியாகவுள்ள வன்னிமூலத்திலே விருப்புடன் எழுந்தது. அவ்வாறே அழகிதாகப் பிடரியிலே சூழ்ந்து உமாதேவியாருடைய இடத்தோளினின்று மாலைபோல ஒழுகியது.

எனைத்தும் - எவ்வளவும்; சிறிதும் என்றபடி. நீத்தம் - வெள்ளம். ஆதரித்து - விரும்பி. ஐது - அழகிது. மாதர் - அழகிய; இடப்பாகம் உமைகூறு ஆதலின், மாதர் என்றதற்கு உமாதேவியார் எனப் பொருள் கூறப்பட்டது.

16. மலைமகளாகிய உமாதேவியாருக்கு இடப்பாகமும், மாயனுக்கு வலப் பாகமும் கொடுத்தருளிய குற்றமற்ற சிவபெருமானுடைய மத்திய வடிவத்தைப் பொருந்த அளவற்ற விருப்புடன் கூடினாற்போல ஒலியையுடைய நீர்வடிவாகிய கங்கை மார்பிலே வேகமாகப் பாய்ந்தது.

சந்தன மலர்மணி தபனி யப்பொடி
செந்தளிர் தன துருத் திகழக் கொண்டது
மைந்துடைக் கணவனர் மார்பந் தோய்தரச்
சுந்தர மிகவணி யணிந்த தோற்றம்போல். 17

உரகமு மதள்களு முருத்தி ராக்கமும்
பரவைவெண் டிரைகளிற் பாங்கர் வீசிய
தரனுர முயங்குத னுகத் தன்னவை
விரவுவ வலவென விலக்கி னலென. 18

சிலம்பொடு கிங்கிணி செறிந்த மேகலை
அலம்பிய வொலியென வதிர்த்து மேற்றவழ்
சலம்பரு கியமுகிற் கூந்த ருழ்தர
நலம்புரி கலவியி னுடக்க நண்ணிற்றே. 19

பயிலுறு கலவியிற் பாறிப் பற்பல
வெயிலுமி ழணித்திரள் விலகி னலென
வயிரமுந் தரளமு மலரும் வேகங்கொள்
செயலினுற் புடையெலாந் தெறித்து விழ்ந்தன. 20

வரை மகள் - இமயமலையரையன் மகள். மாயன் - திருமால். பார்வதி, துர்க்கை, காடுகிழாள், விட்டுணு என்பவர் சிவபெருமானுடைய நான்குசத்திகள். உரம் - மார்பு.

17. சந்தனத்தையும் மலர்களையும் இரத்தினங்களையும் பொன் துகளையும் சிவந்த தளிர் முதலியுவற்றையும் தனது வடிவத்திலே பொருந்தக்கொண்டது எதனைப்போலும் என்னில், வலிய தங் கணவருடைய மார்பிலே புல்லும்பொருட்டு அழகு மிகும்படி அணி முதலியவற்றை யணிந்த தோற்றத்தைப் போன்றது. உரு - வடிவம். மைந்து - வலிமை. தோய்தர - அணைய. அணி - அணிகலன்.

18. பாம்பும் தோல்களும் உருத்திராக்க மணியும் பரவிய வெண்மையான அலைகளில் பக்கத்திலே வீசியதன்மை, மார்பிலே அணைந்து புல்லுகின்ற தன் உடம்பிலே அவை பொருந்துவனவல்ல என்று விலக்கியமை போலும்.

உரகம் - பாம்பு. அதள் - தோல்: யானைத்தோல், புலித்தோல், சிங்கத்தின் தோல் என்பவை. பரவு ஐ - பரவுகின்ற அழகிய. பாங்கர் - பக்கம். உரம் - மார்பு. முயங்குதல் - அணைதல். ஆகம் - உடம்பு. விரவுவ - பொருந்துவன.

19. சிலம்பு கிங்கிணி நெருங்கிய மேகலை முதலிய சத்திக்கும் ஒலிபோன்று சத்தித்து, மேலே தவழ்கின்ற நீரை உண்ணும் மேகமாகிய கூந்தல் தொங்க, நன்மையைச் செய்யும் கலவியை யொக்கச் சென்றது. அலம்புதல் - சத்தித்தல். முகில் - மேகம்.

20. நான் செய்யும் கலவித் தொழிலிலே கழன்று ஒளியைவீசும் பல அணி கலன்கள் விலகினற்போல வயிரங்களும் முத்துக்களும் மலர்களும் வேகமாக ஓடிச்செல்லும் செய்கையினல் பக்கங்களிலெல்லாம் தெறித்து விழ்ந்தன.

வெள்ளிய தூசணி விலக்கி ஞலென
ஒள்ளிய நுரைத்திரள் புடையொ துங்கின
வள்ளியை வெயர்த்துளி வயங்கி ஞலெனத்
தெள்ளிய திவலேகள் செறிந்த வெங்கணும். 21

கலவியைக் கண்ணுறக் காஞெ ஞதென
விலகுவ போன்றுவெவ் வேறு புட்களும்
அலகில்பன் மிருகமு மதிர்ப்புக் கஞ்சுபு
பலபல திசைதொறும் பறைத லுற்றன. 22

கணவர்த மார்புமுன் கலத்த லின்மையின்
அணவிய விளர்ப்பெலா மாகந் தோய்தலும்
தணவல்பெற் ருலெனத் தமனி யப்பொடி
மணமலர் தாதுவின் வயக்க மாண்டதே. 23

கையிணே யாமெனக் காந்த ளும்புய
மெய்யிணே யாமென வேர லுங்கவின்
செய்யிணே முலேவளர் சுணங்கிற் சிரிதென்
றையிணர் வேங்கையு மடர்த்துச் சென்றதே. 24

பாறி - அடிப்பறிந்து. வெயில் - கிரணம். அணித்திரள் - அணிகலங்களின் கூட்டம். தரளம் - முத்து. புடை - பக்கம்.

21. வெண்மையுடைய ஆடை அணிந்திருப்பது நீங்கிஞற்போலத் தூய நுரைகளின் கூட்டம் பக்கங்களிலே ஒதுங்கின. கூரிய வெயர்வைத்துளிகள் தோன்றிஞற்போன்று தெளிந்த நீர்த்திவலேகள் எவ்விடத்தும் நிறைந்தன.

தூசு - ஆடை. தூசுஅணி - பண்புத்தொகை. புடை - பக்கம். வள் - கூர்மை: என்றது மயிர்க்கால்களில் தோன்றும் புள்ளிபோலும் வியர்வை நீரை.

22. கலவித் தொழிலேக் கண்ணிஞல் காணுதல் கூடாதென்று விலகிச் செல்லுதலேப் போன்று வெவ்வேறு பறவைகளும், அளவில்லாத பலவகைப்பட்ட விலங்குகளும் நீர் செல்லுதலால் உண்டாகும் அதிர்ச்சிக்கு அஞ்சிப் பலதிசைகளிலும் செல்லத்தொடங்கின. அதிர்ப்பு - பேரொலி. பறைதல் - செல்லுதல்.

23. கணவருடைய மார்பை முன்பு தழுவாத காரணத்தால் பொருந்திய விளர்த்தல் உடம்பிலே தோய்ந்துபடிந்த செயலும் நீங்கிஞற்போல, பொன்துகள் மணம் வீசும் மலர்களிலுள்ள மகரந்தப்பொடியைப்போன்று விளங்கச்செய்ய அவ் வெளுப்பு அழிந்தது.

அணவிய - பொருந்திய. விளர்ப்பு - வெளுபபு. ஆகம் - உடம்பு. தணவல் - நீங்குதல். தமனியம் - பொன். தாதுவின் - மகரந்தப்பொடிபோல.

24. கைகளுக்கு ஒப்பாவோம் யாங்கள் என்று காந்தள் மலர்களும், தோளுக்கு மெய்யாகவே நாங்கள் ஒப்பாவோம் என்று பசுமூங்கிலும், அழகைச்

துணிகதிர்ப் பூண்முலை துணைவ தாமென
மணிவரைக் குவட்டினை மறியத் தள்ளியுந்
திணிவளர் வேழத்தின் மருப்புஞ் செத்ததென்
றணிவள ரலையிடை யலைத்துஞ் சென்றதே. 25

கண்ணொடு நிகர்வன வென்று கற்சுனை
நண்ணிய கயல்களு நறிய நீலமும்
எண்ணில வாரியங் கெற்றிச் சொன்னிகர்
வண்ணவொண் கனிகளும் வௌவி யெற்றிற்றே. 26

கொன்றையுங் கூவிள முறியும் வன்னியுந்
துன்றிய வாத்தியுந் தோய்ந்த நாயகன்
தன்றிரு வுருவிடைத் ததைந்த மாலையென்
றென்றுற வவையெலா முடன்கொண் டேகிற்றே. 27

செய்யும் துணைத்த நகில்களிலே பூத்த பசலையினும் சிறந்தது என்று அழகிய பூங்கொத்துக்களையுடைய வேங்கையும் அடியோடு களைதலால் சென்றன.

மெய் - உண்மை. வேரல் - மூங்கில். சுணங்கு - தேமல், பசலைநிறம். ஐ இணர் - அழகிய பூங்கொத்துக்கள். அடர்த்து - களைந்து, கொன்று.

25. விளங்கும் ஆபரணங்களையணிந்த நகில்கள் ஒப்பாவது என்று துணிந்த அழகிய மலையின் சிகரத்தை மறித்துத் தள்ளியும், வலிய யானைகளின் தந்தமும் அழிந்தது என்று அழகிய அலையினிடத்து வருத்தியும் அந்த நீத்தம் சென்றது.

துணி - உறுதிகொண்ட. துணைவது - ஒப்பாவது. குவடு - சிகரம். மறிய - குறுக்காக. செத்தது - அழிந்தது. அலைத்தும் - வருத்தியும், அலையச்செய்தும். வேழம் - யானை. மருப்பும் - தந்தமும்.

26. கண்களோடு ஒப்பன என்று மலையிலுள்ள சுனைகளில் பொருந்திய கயல்மீன்களையும், மணம் தங்கிய நீலமலரையும் அளவிறந்து வாரிவீசி, நெல்லை யொத்த நிறத்தையுடைய ஒள்ளிய கனிகளையும் பற்றி விசியது.

கல் சுனை - மலைச்சுனை. சொல் - செந்நெல். வண்ணம் - அழகு, நிறம். எற்றியது - விசியது.

27. கொன்றையும், வில்வத்தளிரும், வன்னியும், நெருங்கிய ஆத்திமலரும், தன்னிடத்திலே வந்து தோய்ந்த நாயகனுடைய வடிவத்திலே நெருங்கிய மாலை என்று பொருந்துமாறு அவைகளையெல்லாம் உடன் கொண்டுசென்றது.

கொன்றை - கொன்றைமலர். கூவிளமுறி - வில்வத்தளிர். வன்னி - வன்னி இலை. ஆத்தி - ஆத்திப்பூ. உரு - வடிவம். ததைந்த - நெருங்கிய.

நருவுணத் தக்கதோ நல்ல வர்க்கென
இருலினை யிடந்தொறு மெறிந்து போந்துகான்
மருநறும் பானனி மாந்தி யூர்தொறும்
அருமலர்ப் பண்ணையாட் டயர்ந்து ராயதே. 28

புணர்ந்தவர் பூம்புன லாட றக்கதென்
றுணர்ந்துநெய் நெல்லியொண் விரையுங் கானிடை
மணந்துகொண் டகன்பணை மரீஇய கங்கைநீர்
தணந்திடா தாழியைச் சார்ந்து தோய்ந்ததே. 29

இடையிடை தனக்குநே ரெதிர்ந்த தீர்த்தங்கள்
அடையவங் களவளா யழைத்துக் கொண்டுபோய்
முடைபயில் கடலுமொய் தீர்த்த மாம்படி
தடையறப் பாய்ந்தது தழங்கு கங்கைநீர். 30

---

28. நல்லவர்களுக்கு கள் உண்ணத்தக்கதாமோ என்று தேனிருல்களை இடங்கள்தோறும் வீசிப்போய், காட்டிலேயுள்ள மறுக்கக்கூடாத பசுப்பாலை நன்ருகக் குடித்து, ஊர்கள்தோறும் மலர்கள் நீங்கப்பெருத வயல்களில் விளையாட்டைச் செய்து பொருந்தியது.

நரு - தேன், கள். இருல் - தேன்கூடு. இவை மலைசார்ந்த இடத்துள்ளன. கான் - முல்லைநிலம். மாந்தி - குடித்து. ஊர் - மருதநிலம். பண்ணை - வயல். ஆட்டு அயர்தல் - விளையாடுதல்.

29. புணர்ச்சி செய்தவர்கள் அழகிய நீரிலே முழுகுதல் தக்கதாம் என்று உணர்ந்து நெய்யும் நெல்லியும் ஒள்ளிய வாசனைப்பொருளும் காட்டிலே கலந்து எடுத்துக்கொண்டு அகன்ற மருதநிலத்திலே பொருந்திய கங்கைநீர் நீங்காது கடலையடைந்து பொருந்தியது.

புனலாடல் - நீரிலே முழுகுதல். கானிடை - முல்லைநிலத்தில். பணை - வயல். தணந்திடாது - நீங்காமல். ஆழி - கடல். தோய்ந்தது - கலந்தது.

30. இடங்கள்தோறும் இடங்கள்தோறும் தனக்கு நேரே எதிர்ப்பட்ட தீர்த்தங்கள் முழுவதையும் அளவளாவிக் கலந்து, அழைத்துக்கொண்டு சென்று முடைநாற்றம் வீசும் கடலும் நிறைந்த தீர்த்தமாகும்படி தடையின்றிச் சென்று ஒலிமிக்க கங்கைநீர் பாய்ந்தது.

இடையிடை-இடங்கள்தோறும் இடங்கள்தோறும். எதிர்ந்த - எதிர்ப்பட்ட. அடைய - முழுவதும். முடைபயில்கடல் - முடைநாற்றம் வீசும்கடல்: மீன் முதலிய வற்றின் நாற்றம். தழங்கு - ஒலிக்கும்.

கதிதரு காவிரி கடிகொ ளாம்பரா
வதிமுத லானவார் நதிகள் யாவுமிந்
நதியோடு தலையுறிஇ நரலை சென்றவே
பதிபல நதிகட்கும் பண்டி துண்மையால். 31

வேறு

பறம்பின துருவாய் நின்ற பண்ணவர் பெருமா னார்தம்
நிறம்புணர் மூலைக டோய நிகழ்த்திய கலவிக் கங்கை
திறம்புரு துலகமெல்லாஞ் சென்றுசென் றணைத்துக்கொள்ள
அறம்பொரு ளின்பம் விடென் றருமகப் பயக்கு நாளும். 32

இத்தகு கங்கை நீத்த மெழுதலும் விடவே கத்தின்
மொத்துணு மமரர் சான்ற முனிவரர் முதலா னோர்கண்
மெத்திய தாக சோகம் விளிதரப் பருகி யாடி
முத்தியு மெளிதிற் பெற்றார் மும்மல மிரியல் போக. 33

---

31. (தம்பால் ஆடினோருக்கு) முத்தியைக் கொடுக்கும் தன்மையுள்ள காவிரிநதியும், மணம்பொருந்திய ஆம்பராவதி நதியும் முதலாகவுள்ள நீண்ட நதிகளெல்லாம் இந்த நதியோடு தலைக்கூடிக் கடலைச்சென்றடைந்தன; ஏனெனில், நதிகள் பலவற்றிற்கும் நாயகன் கடல் என்பது தொன்றுதொட்டு வழங்கி வருதல் உண்மை என்ற காரணத்தால்.

கதி - முத்தி. வார் - நீண்ட, பெரிய என்க. நரலை - கடல். பதி - நாயகன். பண்டுஇது உண்மை. நதிகளுக்கு நாயகன் கடல் என்பது பெருவழக்கு.

32. மலையினது உருவாய்நின்ற தேவதேவராகிய சிவபெருமானது மார்பைத் துணைநகில்கள் நன்றாக நெருங்கும்படி புல்லிய கங்காநதி மாறுபடாமல் உலகமுழுவதும்சென்று அணைத்துக்கொள்ள அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள்களாம் மக்களை என்றென்றும் பெறுவதாகும்.

பறம்பு - மலை. பண்ணவர் - தேவர். நிறம் - மார்பு. திறம்புருது - தன் தன்மை கெடாமல். அணைத்தல் - தழுவுதல்; என்றது செழிக்கப்பண்ணுதலை.

33. இப்படிப்பட்ட கங்கைவெள்ளம் எழுந்தமையால் நஞ்சின் வேகத்தினாலே மொத்துண்ட தேவர்கள் முனிவர்கள் முதலாயினோர் நிறைந்த தாகமும் சோர்வும் கெட, உண்டு முழுகி மும்மலங்களும் கெட்டோட முத்திப்பேற்றையும் எளிதிலே பெற்றார்கள்.

நீத்தம் - வெள்ளம், பெருக்கு. மொத்துணல் - மோதுண்டல். விளிதர - கெட. மும்மலம் - ஆணவம் கன்மம் மாயைகள். இரிதல் - கெட்டோடுதல்.

சிவபிரா னுருவி னின்றுந் திகழ்ந்தெழுந் தொழுகு மாற்றாற்
சிவநதி விடவே கத்தைத் தீர்த்தலா னமுத வுந்தி
தவழ்வட கங்கை நோக்கித் தக்கிண கங்கை யந்த
அவமறு கங்கைக் காதி யாதலா லாதி கங்கை. 34

ஒப்பறு முத்தி தன்னை யுதவலான் ஞான தோயை
பிப்பில வனத்தி னூடு பெயர்ந்துசென் றொழுகு மாற்றாற்
பிப்பில நதிபுக் காடும் பெற்றியோர் பிறவா மார்க்கந்
துப்புறப் பெறலாற் சொல்வர் சூழ்பிற வாநெ றிப்பேர். 35

காஞ்சனம் பயக்கு நீராற் காஞ்சிமா நதியென் றாகும்
பூஞ்சினைக் காஞ்சி நீழற் பொற்புறத் தவழ்த லானும்
வாஞ்சையி னப்பேர் சால வழங்குமக் காஞ்சி யுந்தி
ஆஞ்சிறி துண்டோர் தாமு மமரராய் முத்தி சேர்வார். 36

---

34. சிவபெருமானுடைய வடிவத்தினின்றும் விளங்கித்தோன்றிப் பெருகியோடும் காரணத்தால் சிவநதியானது; விடவேகத்தை நீக்குதலால் அமுதகங்கையாயிற்று; வடக்குத்திக்கிலே செல்லும் கங்காநதி ஒன்றுள்ளதனல் இது தட்சிணகங்கை என்னும் பெயர் பெற்றது; நிறைந்த பயனைத்தரும் கங்காநதிக்கு ஆதியில் தோன்றினமையால் ஆதிகங்கை எனப்பெற்றது.

உந்தி - நீர், ஆறு. அமுதவுந்தி - அமுதநதி. தக்கிணம் - தெற்கு. அவம் - வீண், பயனின்மை. அறு - நீங்கிய.

35. ஒப்பற்ற முத்தியின்பத்தைக் கொடுத்தலால் ஞானகங்கையாம். அரசவனத்திலே நுழைந்து ஓடுதலால் பிப்பிலநதி எனவும், அத்தீர்த்தத்திலே போய் முழுகுவோர் பிறவாததன்மையை நன்கு பெறுதலால் பிறவாநெறி எனவும் பெயர் கூறுவர்.

ஞானதோயை - ஞானதீர்த்தம்; தோயம் - நீர். பிப்பிலம் - போதி. துப்புற - வலிமைபொருந்த.

36. பொன்னைக்கொழித்துவரும் தன்மையால் காஞ்சிநதி என்று சொல்லப்படும். அழகிய கிளைகளையுடைய காஞ்சிமர நீழலிலே அழகுபொருந்தத் தவழ்ந்து செல்லுதலாலும் விருப்பமுடன் அந்தப் பெயர் மிகுதியாக வழங்கப்பெறும். அக்காஞ்சிநதி நீரைச் சிறிதளவு குடித்தோரும் தேவர்களாய்ப் பின்பு முத்தியை அடைவார்கள்.

காஞ்சனம் - பொன். சினை - கிளை. வாஞ்சை - விருப்பம். சால - மிக. உந்தி - நீர், ஆறு. ஆம் சிறிது - இயன்ற அளவு சிறிதாக. அமரர் - தேவர்.

கலியிடைக் கன்ம முற்றுங் காதிநா சஞ்செய் மாண்பாற்
கலிகன்ம நாசி னிப்பேர் கைக்கொளு மனைய காஞ்சி
ஒலிநதி விருத்த கங்கை யுறுபிர யாகை யென்னப்
பலபரி யாயப் பேரும் பற்றுமா லுலகம் போற்ற. 37

நிவந்தெழு புனற்பூங் காஞ்சி நெடுங்கரை மருங்கு நண்ணித்
தவஞ்செபந் தியானம் யோகந் தனிமகந் தரும மாற்றின்
அவந்தெறும் பயனெ ரோவொன் றனந்தமாய் விளையு மந்தப்
பவந்தெறு காஞ்சி மேன்மை பகரலாந் தகைமைத் தன்றே. 38

வடகயி லாயத் தெல்லை வயங்கிய பிரம தீர்த்தங்
கடன்முறை மூன்று பக்கங் காதலி னுடி யுள்ளும்
படர்தரப் பருகி னேர்க்குப் பகர்ந்தநான் மலடு நீங்கும்
அடர்தரு பூத மண்ணை யாதியி னலைப்புந் தீரும். 39

---

37. கலிகாலத்திலே தீயகர்மங்களையெல்லாம் அழித்து நாசம்பண்ணுகின்ற தன்மையால் 'கலிகன்மநாசினி' என்னும் பெயரை அக்காஞ்சிநதிபெற்றுவிளங்கும். அது உலகம் போற்றுமாறு ஒலிநதி, விருத்தகங்கை, பிரயாகை என்னும் பரியாயப் பெயர்கள் பலவற்றையும் பெறுவதாகும்.

கலி - கலிகாலம். கன்மம் முற்றும் - பாவங்கள் முழுமையும். காதி - தொலைத்து. பரியாயப்பெயர் - ஒரு பொருள் குறித்த மறுபெயர்.

38. ஓங்கியெழுகின்ற நீரையுடைய காஞ்சிநதியின் நீண்ட கரையின் பக்கத்திலே பொருந்தித் தவம் செபம் தியானம் யோகம் ஒப்பற்ற வேள்வி தருமம் முதலியவற்றைச் செய்யின் பாவத்தை அழிக்கும். செயல் ஒன்று செய்யின் பயன் மிகப்பலவாய் விளையும். அந்தப் பிறப்பைப் போக்கும் காஞ்சிநதியின் பெருமை சொல்லுந்தர முடையதன்று.

நிவந்து - ஓங்கி. மகம் - வேள்வி. அவம் - பாவம். அனந்தம் - பல. பவம் தெறும் - பிறவியைப் போக்கும்.

39. வடகயிலாயத்தின் எல்லையிலே விளங்கும் பிரமதீர்த்தத்திலே விதிப்படி மூன்றுபக்கம் (ஒரு மண்டலம்) விருப்பத்துடன் முழுகி, அந்த நீரைப் பருகினேருக்குச் சொல்லப்பட்ட மலடுகள் நீங்கும். வருத்துகின்ற பூதம் பேய் முதலியவற்றினுல் நேரும் துன்பங்களும் தீரும்.

பக்கம் - பதினைந்து நாட்கள். நால்வகை மலடு: பிள்ளை பெருமை, சாப் பிள்ளை பெறுதல், ஒருமகப் பெறுதல், கருவினுள் அழிதல் என்பன. மண்ணை - பேய். அலைப்பு - துன்பம்.

"பேயடையா பிறிவெய்தும் பிள்ளையினே டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாம் தீவினையே."

என்னும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் அருளிச்செய்த தேவாரப்பாடலை இப்பாடல் நினைக்கச்செய்வது.

குட்டநோய் பெருநோய் வாதங் குன்மநோய் தொழுநோய் காசம்
முட்டிய சலநோய் கண்ணோய் முயலகன் முடநோய் மற்றுங்
கட்டழற் கதிய பஞ்சிற் கணத்திடை யனுங்குஞ் சால
இட்டகா மியங்க ளெல்லா மெளிதின்வந் தீண்டு மன்றே. 40

சமன்றனை யுருட்டுஞ் செய்ய தாளின ரருளா னீற்றின்
அமர்ந்துவிண் ணவரு நோற்கு மயன்பத மெய்து மந்தக்
கமண்டல தீர்த்தக் கீழ்சார் காலவ தீர்த்த மாடிற்
சுமந்தவன் பிறவி யோட்டித் தூயவீ டெளிதி னெய்தும். 41

பட்டிநா யகற்குக் கீழ்பாற் பரிதிவா னவன்வ லாரி
தொட்டதீர்த் தங்கள் வைகுஞ் சூரிய தீர்த்தங் கண்கட்
கட்டொளி யீந்தந் தத்தி லவன்பதந் தருமற் றென்றிங்
கிட்டமார் செல்வ நல்கி யிந்திரன் பதம்பின் சேர்க்கும். 42

---

40. குட்டநோய், பெருவியாதி, வாதம், குன்மம், தொழுநோய், காசம், நீர்ரோகம், கண்ணிலுண்டாகும் நோய், முயலகன், முடக்கு நோய் முதலிய நோய்கள் யாவும் நிறைந்த நெருப்பிலிட்ட பஞ்சுப்பொதி போன்று கணப்பொழுதில் கெட்டொழியும், மிகுதியும் இட்டகாமியப் பொருள்கள் எல்லாம் எளிதாக வந்துபொருந்தும்.

மேற்கூறிய நோய்களெல்லாம் ஒவ்வொன்றும் பலதிறப்படும்; விரிந்த நூல்களிற் காண்க.

41. இயமனை உதைத்து உருட்டிய சிவந்த திருவடியையுடைய சிவபெருமான் அருளால் இறுதிக் காலத்தில், விரும்பி விண்ணோரும் தவஞ்செய்யும் பிரமதேவர் பதத்தையடையும் அந்தக் கமண்டல தீர்த்தத்தின் கீழ்ப்புறத்துள்ள காலவ தீர்த்தத்தில் முழுகின் நீண்ட காலம் சுமந்து வந்த வலிய பிறவி நோய் தொலைந்து தூய முத்தியின்பம் எளிதாக வந்து பொருந்துவதாகும்.

சமன் - இயமன்.

42. பட்டிநாயகருக்குக் கிழக்குத்திசையிலே சூரியன், இந்திரன் முதலியோர் நிருமித்த தீர்த்தங்கள் உள்ளன. சூரியதீர்த்தத்திலே முழுகினால் கண்ணொளியைத் தந்து, இறுதியில் சூரியனுடைய உலகத்திலே சேர்க்கும். இந்திர தீர்த்தத்திலே முழுகின் விரும்பிய செல்வப்பொருளைத்தந்து பின்பு இந்திர பதவியில் சேர்க்கும்.

பரிதி வானவன் - சூரியதேவன். வலாரி - இந்திரன். தொட்ட - தோண்டிய, அகழ்ந்த.

விமலனர் தமக்கீ சான விதிக்கிற்சண் முகதீர்த் தந்தான்
இமிழ்தரு மன்பிற் றேய்ந்தோர்க் கிடர்செயு மலகை பூதம்
அமரரி னுகு மின்ன லனைத்தையு மொருவிச் செல்வஞ்
சமர்நல வலிமெய்ஞ் ஞான நீ தக்கவி டனைத்தும் விசும். 43

குறுமுனி வரைக்குக் கீழ்சார் குறுமுனி தீர்த்தம் வாசஞ்
செறிமலர் யோகி தீர்த்தஞ் சித்ததீர்த் தமும்வை குற்ற
அறைதரு மவற்று ளொன்றி னுடினு மாடி னேர்க்கு
முறைமுறை வேட்ட வெல்லா முன்னுற்று நிற்கு நாளும். 44

உம்பர்சூழ் பட்டி நாதர்க் குதீசியி னச்சுப் பொய்கை
இம்பரிற் பருகி னேர்க ளிறந்துநற் கதியைச் சேர்வர்
நம்பிய சித்தர்க் கெய்தி னவையுறு முலோகந் தன்னைச்
செம்பொனு மாக்கிக் கொள்வர் திப்பியம் பலவுஞ் செய்வர். 45

வார்புனற் காஞ்சி யுந்தி வடாதுசார் வசிட்ட தீர்த்தஞ்
சீர்வளர் வாம தேவ தீர்த்தம்பார்க் கவதீர்த் தந்திண்
பார்தனி லிரணந் தீர்க்கும் பைம்பொனற் றீர்த்த நான்கும்
ஆர்தரு மவற்றுட் டோய்ந்தோர்க் கரும்பயன் பலவு மெய்தும். 46

---

43. பட்டீசருக்கு ஈசான திக்கில் சண்முக தீர்த்தம் (கந்த தீர்த்தம்) உள்ளது. அத்தீர்த்தத்திலே அன்புடன் முழுகினேருக்குத் துன்பஞ் செய்யும் பேய் பூதம் முதலியவற்றுல் உண்டாகும் இன்னலும், தேவர்களால் உண்டாகும் இன்னல்களும் ஆகிய அனைத்தும் நீங்கிச் செல்வமும், போர் வலிமையும், மெய்ஞ் ஞானமும், விடுபேறும் உண்டாகும்.

விமலனர் - பட்டீசர். சண்முகதீர்த்தம் - கந்ததீர்த்தம். அலகை - பேய். அமரர் - தேவர். இன்னல் - துன்பம். ஒருவி - நீங்கி. சமர் - யுத்தம்.

44. அகத்தியமுனிவர் மலைக்குக்கீழ்பால் அகத்திய தீர்த்தம், யோகி தீர்த்தம், சித்த தீர்த்தங்கள் உள்ளன. சொல்லப்பெற்ற அத்தீர்த்தங்களுள்ளே ஏதாவதொரு தீர்த்தத்தில் முழுகினலும் முறையாக வேண்டிய வேண்டியாங்கு சித்திக்கப்பெறும். குறுமுனி - அகத்தியர். முன்னுற்று - எதிர்ப்பட்டு.

45. தேவர்கள் சூழ்ந்திருக்கப்பெற்ற பட்டிநாதருக்கு வடக்குத்திக்கில் உள்ள நச்சுப்பொய்கை நீரை அள்ளியுண்போர் இறந்து பின்பு முத்தியுலகம் பெறுவர். நம்பிக்கையுடன் சித்தர்கள் கைப்படின் குற்றமுள்ள தாமிரம் முதலிய உலோகங்களைப் பொன்னகச் செய்வதுடன் பற்பல அற்புதங்களையும் செய்வர்.

உம்பர் - தேவர். உதீசி - வடக்கு. இம்பர் - இவ்வுலகம். நவையுறும் உலோகம் - செம்பு முதலியன. நவை - களிம்பு முதலிய குற்றம். திப்பியம் - அற்புதம்.

46. மிக்க நீரையுடைய காஞ்சிநதியின் வடக்குக்கரையில் வசிட்டதீர்த்தம், வாமதேவதீர்த்தம், பார்க்கவதீர்த்தம், உலகத்திலே கடன்முதலிய தொல்லைகளைப்

வயிரவர்க் கெதிரே சிங்க தீர்த்தம்வா மூமையாண் முன்னர்ப்
பயிலுறுந் துர்க்கை தீர்த்தங் கேத்திர பால தீர்த்தம்
நயனுறு மமுத லிங்க நாதர்தந் தெனுது வைப்பிற்
சயமுறு காளி தீர்த்தஞ் சக்கர தீர்த்தம் வாழும். 47

வேறு

அண்ணலார் தமக்குத் தென்கிழக் கெல்லை யமர்குல சேகர தீர்த்தம்
நண்ணுநந் தீச தீர்த்தமங் கியினற் றீர்த்தநன் றருளேம தீர்த்தந்
தண்ணிய வியக்க தீர்த்தஞ்சண் டேசர் தமக்குவா யுத்திசை தன்னில்
எண்ணிய தருள்சண் டேசுர தீர்த்தஞ் சோமதீர்த் தமுமிலங் கினவால். 48

மரகத வல்லிக் கடுத்தவா யுவினில் வளர்பிர மதகண தீர்த்தம்
பரசுறும் பட்டி தனக்குவா யுவினிற் பகர்சத்த மாதர்க டீர்த்தம்
விரவுறு மேல்பால் விளங்குறும் பால தீர்த்தமவ் வியத்தகு தீர்த்தம்
உரிமையி னுடி னரைதிரை மூப்பங் கொழிதர வாலர்க ளாவார். 49

போக்கும் வியாழதீர்த்தம் என்னும் நான்கு தீர்த்தங்கள் உள்ளன. அவற்றுள் முழுகினோர்க்குப் பெரும்பயன் உண்டாகும்.

காஞ்சி உந்தி - காஞ்சிநதி. உந்தி - நீர். இரணம் - கடன். பொன் - வியாழபகவான். பார்க்கவம் - பிருகுசம்பந்தம்: அவரால் உண்டாக்கப்பெற்ற தீர்த்தம்.

47. வயிரவக்கடவுளுக்கு எதிரேயுள்ள சிங்கக்கிணருகிய சிங்கதீர்த்தமும், உமாதேவியார் சந்நிதியிலே உள்ள துர்க்கைதீர்த்தமும், க்ஷேத்திரபாலதீர்த்தமும், அமுதலிங்கேசர் ஆலயத்துக்குத் தென்திசையில் காளிதீர்த்தமும், சக்கர தீர்த்தமும் உள்ளன.

தெனுதுவைப்பு - தெற்குத்திசை.

48. தென்கிழக்கு எல்லையில் குலசேகரதீர்த்தமும், நந்தீசதீர்த்தமும், அக்கினிதீர்த்தமும், ஏமதீர்த்தமும், இயக்கதீர்த்தமும், சண்டேசர் ஆலயத்துக்கு வாயுதிசையில் எண்ணியவற்றை அருள்செய்யும் சண்டேசுரதீர்த்தமும் பொருந்தியுள்ளன.

அங்கி - அக்கினி. சோமன் - சந்திரன்.

49. மரகதவல்லியம்மையார் ஆலயத்துக்கு வாயு திக்கில் பிரமதகண தீர்த்தமும், பட்டீச்சுரத்திற்கு வாயு திக்கில் சத்தமாதர் தீர்த்தமும் விளங்கும். மேல்பாகம் விளங்கும் பாலதீர்த்தத்தில் முழுகினல் நரை திரை மூப்புக்கள் நீங்கும்; பாலியபருவத்தை அடைவர்.

சுந்தர மளிக்கு முசுகுந்த தீர்த்தந் துலங்கிய வங்கிர தீர்த்தம்
இந்திர தீர்த்தஞ் சோழதீர்த் தஞ்சீ ரிடுங்காம தேனுவின் தீர்த்தம்
பந்தமுற் றிரிக்குங் கன்னிகை தீர்த்தம் பலவுநற் காஞ்சிமா நதியின்
அந்தின்மேற் கிருந்து வரிசையிற் கீழ்சா ரவதியும் பயின்றன மாதோ. 50

உரைத்தன தீர்த்தந் தம்முளொன் றேனு முவப்புட னுடுவோர் தமக்குத்
தரைத்தலை வெறுக்கை விண்ணிடைப் போகஞ் சாரும்பின் முத்தியு மெய்தும்
புரைத்தவல் வினையைப் புரட்டுமா தவத்தீர் புகழ்தகு தீர்த்தங்கள் புகன்றும்
நிரைத்துவைத் தனைய விம்மிதங்கேண்மினிகழ்த்துதுமெனச்சொலுஞ்சூதன்.

தீர்த்தப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — *1413*

---

50. அழகைத்தரும் முசுகுந்த தீர்த்தம், அங்கிரதீர்த்தம், இந்திரதீர்த்தம், சோழதீர்த்தம், காமதேனுவின் தீர்த்தம், கன்னிகை தீர்த்தம் என்பனவும் ஸ்ரீ காஞ்சிநதியின் மேற்குத்திசையிலிருந்து கீழைத்திசை வரையும் உள்ளன.

சுந்தரம் - அழகு. பந்தம் முற்று இரிக்கும் - பந்தம் முழுவதையும் கெட்டு ஓடச் செய்யும். அந்தில் - அசை. அவதி - முடிவு.

51. மேற்கூறிய தீர்த்தங்களுள் ஒன்றிலேனும் மகிழ்வோடு முழுகினல் அவருக்குநிலவுலகத்திலே செல்வமும், விண்ணுலகத்தில் போகமும் உண்டாகும். பின்பு அவர்கட்கு முத்தியும் சித்திக்கும். குற்றம் பொருந்தும் வலிய வினைகளைப் போக்கும் சிறந்த தவத்தையுடைய முனிவர்களே! இதுவரையில் புகழையுடைய தீர்த்தங்களின் பெருமையைக் கூறினேம். இனி இத்தலத்துள்ள விம்மிதங்களையும் கூறக் கேட்பீராக என்று சூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

வெறுக்கை - செல்வம். விண் - தேவருலகம். புரைத்த - குற்றம்பொருந்திய. புரட்டும் - மாறுபடுத்தும். நிரைத்து - வரிசைப்படுத்தி. விம்மிதம் - ஆச்சரியம்.

இருபத்திரண்டாவது

விம்மிதப்படலம்

எம்மை யாளு மிரசத மால்வரை
மும்மை வையக முந்தொழு மூன்றுகட்
செம்ம லார்தந் திருவுரு வாதலால்
விம்மி தங்கள் விறந்தன வாங்கரோ. 1

வேறு

பிறர்விழிக்குத் தணையடுத்தோர் தமைக்காட்டாத் திவ்வியாஞ் சனப்பேர்த்
நிறுவிடிற்பா துகைகாலி னெடுவிசும்பிற் கொண்டேகு நீண்ட தாரு [தாரு
உறுபசிதா கந்தீர்க்குந் தாருநரை திரைமூப்பை யொழிக்குந் தாரு
மறுவில்சிரஞ் சீவிதரும் தாருசதா னந்தம்வளர் விக்குந் தாரு. 2

காயசித்தி தருந்தாரு வரோககர தாருதிரி கால ஞானம்
ஏயும்வகை தருந்தாரு யோகசித்தித் தருவிருநாற் சித்தித் தாரு
மேயசர் வஞ்ஞசித்தி கலைஞான சித்தியிவை விளைக்குந் தாரு
தோயமழல் வளிவிடம்வெவ் வேறுதம்பஞ் செயுந்தருவுந் துவன்று மெங்கும்.

---

1. எம்மை அடிமையாகக்கொண்டு ஆளுகின்ற வெள்ளிமலையானது, மூன்று உகத்தாராலும் வணங்கப்படும் சோமசூரியாக்கினி என்னும் மூன்று கண்களையுடைய சிவபெருமான் திருவுருவம். ஆதலால் அங்கு ஆச்சரியப்படத்தக்க செய்திகள் அளவிறந்தனவாம்.

இரசதம் - வெள்ளி. மும்மை - மூன்று. வையகம் - உலகம். விம்மிதம் - வியப்புடைய செய்திகள். விறந்தன - அளவில்லாதன.

2. பிறருடைய கண்களுக்குத் தம்பால்வந்து பொருந்தியவரைக்காட்டாத திவ்வியமான அஞ்சனதாரு (திவ்யாஞ்சனதாரு), காலிலே பாதுகையாகத் தரித்தால் நீண்ட ஆகாயத்தில் கொண்டுசெல்லும் தாரு, மிக்கபசியையும் தாகத்தையும் போக்கும்தாரு, நரைதிரை மூப்புக்களைப்போக்கும்தாரு, குற்றமில்லாத சிரஞ்சீவித் தன்மையைத் தரும்தாரு, எப்போதும் ஆனந்தத்தைத் தரும் தாரு.

அடுத்தோர் - பொருந்தியவர். திவ்யாஞ்சனம் - தெய்வத்தன்மையுடையமை. பாதுகை - பாதக்குறடு. நிறுவிடில் - தரித்தால். தாரு - மரம்.

3. காயசித்தியைத்தரும் தாரு, நோயை நீங்கச்செய்யும் தாரு, முக்கால உணர்ச்சியையும் உண்டாக்கும் தாரு, யோகசித்தியைத்தரும் தாரு, அட்டமா

கோடியினுளுஞ் செடியினுளுங் கூறியவிம் மிதம்விளைப்ப குணிக்க வொண்ணு
அடர்தருமாங் கிசபேதி யயபேதி சிலாபேதி யன்ன பேதி
சுடருமிழு முலோகபே திகளும்வசி யாதியெனச் சொல்லு மாறும்
படவழங்கு வனவுமொளி தருவனவுங் கொடிசெடிபா தவத்த னேகம். 4

மிருதசஞ்சி வியுமுளதங் கயக்காந்த மதிக்காந்தம் வெய்யோன் காந்த
மருவினநாற் கோட்டிபங்கள் பலமலிந்த நவமணிகண் மலிந்த வந்தப்
பொருவின்மணி விளைநிலமும் பலவுளசத் துருகதிநீர் புலிங்கத் தீகால்
திருகுவிலங் கிவைதம்பஞ் செயுமணியு மனந்தமவட் செறிந்த வாகும். 5

சித்திகளையும் தரும்தாரு, பொருந்திய முற்றுணர்வு கலைஞானங்களைத்தரும்தாரு, நீர் நெருப்பு காற்று நஞ்சு முதலியவைகளை வெவ்வேறு நிலைகளில் தடைசெய்யும் தருக்கள் ஆகிய இவைகள் எங்கும் அம்மலையில் நெருங்கியுள்ளனவாம்.

அரோகககரம் - நோயின்மையைச் செய்தல். சர்வஞ்ஞம் - முற்றுணர்வு. தோயம் - நீர். வளி - காற்று. தம்பம் - ஸ்தம்பனம்; ஸ்தம்பிக்கச் செய்தல், அஃதாவது அவற்றின் வலிமைகளைத் தடைசெய்தலாம்; வலிமை செயற்படாமல் நிறுத்துதல். துவன்றும் - நெருங்கும்.

4. கொடிகளிலும் செடிகளிலும் மேலே கூறிய மரங்களையல்லாமல் ஆச்சரியத்தை விளைவிப்பன அளவிறந்தன. மாங்கிசபேதி அயபேதி சிலாபேதி அன்ன பேதி உலோகபேதிகளும், வசியம் மோகனம் தம்பனம் ஆகருடணம் உச்சாடனம் பேதனம் வித்துவேஷணம் மாரணம் என்னும் அட்டகருமத்துள்ளே வித்துவேஷணம் மாரணம் நீக்கி ஷட்கருமம் என்னும் ஆறனையும் தொடுதலால் உண்டாக்குவனவும், ஒளியைச் செய்வனவுமாக உள்ள கொடிகளும் செடிகளும் மரங்களும் அநேகமுள.

குணிக்க - கணக்கிட. மாங்கிசம் - தசை. அயம் - இரும்பு. சிலை - கல். உலோகபேதி - உலோகங்களைப் பேதித்தல். பட வழங்குவன - தொடுதலால் உண்டாவன. இவைகளைச் சித்தர்கள் செயற்படுத்துவர். ஒளிதருங்கொடி ஜோதிர்லதை என்றும், ஜோதிர்விருக்ஷம் என்றும் கூறப்படும்.

5. இறந்தவர்களையெழுப்பும் மருந்தும் அங்குளது. அன்றியும் அயக்காந்தம் சந்திரகாந்தம் சூரியகாந்தம் முதலிய கற்களும் பொருந்துவன. நான்கு தந்தங்களையுடைய யானைகளும் பல நிறைந்துள. நவமணிகளும் அவை விளைகின்ற நிலப்பரப்பும் பல உள்ளன. சத்துருகதிநீரும், புலிங்கத்தீ கால்திருகு விலங்குகளும் இவைகளைத் தடைசெய்யும் மணிகளும் அங்கே நிறைந்துள.

மிருதசஞ்சீவி - இறந்தவரை எழுப்பும் மருந்து. மதி - சந்திரன். வெய்யோன் - சூரியன். இபம் - யானை. பொரு இல் - ஒப்பில்லாத. புலிங்கம் - தீப்பொறி. தம்பம் செயும் - தடைசெய்யும், நிறுத்தும். செறிந்த - நிறைந்துள.

இரசமணிக் கிணறமுத கிணறெளிர்கந் தகமடுவென் றிவையுமுள்ள
பரசுறுமற் புதமான குகையனந்த முளவன்னம் பரம மாதி
விரசுசர சுகள்பல்ல வுள்ளனவிவ் வதிசயத்தின் விளங்கா நின்ற
இரசதமால் வரைத்தென்பா லேமவரை யதிலேம புரமொன் றுண்டால். 6

ஏமவரை மேற்புறத்தி லிடனகன்ற விடரகமொன் றிருக்கு மங்கண்
தாமரைமல் கியவோடை யொன்றுளது சருவசித்தி தருவ தாகுஞ்
சேமமுறு மவ்வரைத்தென் பாலுறுபாற் கிணறுளது தெவ்வி யுண்டாற்
பூமருவு மானுடருக் காறுதிங்கள் பசிதாகம் புணரா வாகும். 7

ஓதலுறும் பாற்கிணற்றுக் கீழ்திசையி லோசனைமூன் றளவிற் காணுஞ்
சோதிமர முளதாங்குச் சருக்கரைமா நதியந்தச் சூழன் மேல்பால்
தீதகலு மனேகநதி யுளவந்தத் தீரத்திற் செறியா நின்றோர்
கோதகலுஞ் சித்தர்சாத் தியரனந்தர் போற்றுநர்க்குக் கொடுப்பர் சித்தி. 8

---

6. இரசமணிக்கிணறு, அமுதகிணறு, விளங்கும் கந்தமடு என்ற இவையுமுள்ளன. துதிப்பதற்கரிய அற்புதமான குகைகள் பல உள்ளன. அன்னம் சர்க்கரை முதலிய மேன்மையுடைய பொய்கைகள் பல உள்ளன. இந்த அதிசயங்கள் பொருந்திய வெள்ளிமலையின் தென்பால் ஏமவரையும் அதிலே ஏமபுரமும் உண்டு.

இரசமணி - இரசத்தால் கட்டியமணி. பரமம் - சர்க்கரை. விரசு - பொருந்தும். சரசு - பொய்கை.

7. ஏமவரையின் மேல்புறத்திலே விசாலமான (காடு) மலைப் பிளப்புண்டு. அங்கே தாமரை நிறைந்த ஓடையொன்று உளது. அஃது எல்லாச் சித்திகளையும் தரும். பாதுகாப்புடைய அந்த மலையின் தெற்குப்பக்கத்திலே மிக்க பாற்கிணறு உள்ளது. அதனை எடுத்துண்டால் பூமியிலுள்ள மனிதருக்கு ஆறுமாத காலம் பசி தாகம் உண்டாகமாட்டா.

விடரகம் - மலைப்பிளப்பு, காடு. சருவசித்தி - எவ்வகைப்பட்ட சித்தியும். சேமம் - பாதுகாப்பு. தெவ்வி - அள்ளியெடுத்து. திங்கள் - மாதம்.

8. மேலே சொல்லிய பாற்கிணற்றுக்குக் கிழக்குத் திசையில் மூன்று யோசனை தூரத்தில் சோதி மரம் உள்ளது. அங்கே சருக்கரை நதியுண்டு. அந்தச் சூழலின் மேல்பால் தீங்குகள் நீங்கும் அநேக நதிகள் உள்ளன. அந்த நதிதீரத்தில் நிறைந்துள்ளோர் குற்றமற்ற சித்தர், சாத்தியர் முதலிய அளவற்றவர்கள். அவர்கள் தம்மிடத்துப் பத்திபூண்டு வணங்கியொழுகுவோருக்குச் சித்திகளை அருளுவர்.

கோது - குற்றம். சித்தர் - சித்திகளையுடையவர். சாத்தியர் - சாதனத்தால் உறுதியுடையோர்; சாதிக்கத்தக்கவர்.

சருக்கரையா நதிமேல்பாற் றேவவுதும் பரப்பொதும்பர் ததையு மாங்குத்
திருக்கறுசிந் தையினமரர் முனிவர்முத லோர்தவஞ்செய் திருப்பர் பாங்கர்
உருக்கிளர்தா மரையோடை யுளததற்குச் சிலாநதியென் றுரைப்ப ரந்த
மருக்கிளர்நீர் படிந்தபொருள் யாவையுமக் கணைஞ்சிலையாய் வயங்கா நிற்கும்.

உரைத்தசிலா நதிக்கரையி னினைத்தவுடன் மரணமுமொண் கதியு நல்கும்
விரைத்தமருந் துகளனந்த முளவந்த விழுநதிக்கு வடாது வைகுந்
தரைத்தலையோர் புகழ்தேவ குங்கிலிய மரமதன்பா றனிலோர் விந்து
கரத்தெடுத்துப் பருகினோர் நரைதிரைமூப் பறக்கலப்பர் காய சித்தி. 10

வேறு

அத்தருப்பா லொருதொடியு மூன்றுதொடிச் செம்பு
மறைந்தசெம்பி னைந்துளொரு கூறுபொன்னுங் கூட்டி
மெத்தெரியில் வைத்தெடுக்கின் மேருவரை போல
விளங்குறுமா யிரத்தெட்டு மாற்றுறுசெம் பொன்னுங்
கொத்துறுமத் தருவிற்கீ சானதிக்கி னிரவி
கோடியுதித் தெனவொளிருங் குருப்பளிக்கு வரையுண்
டுத்தமநற் சிவலிங்க மதினியற்றிப் பூசை
யுஞற்றினவ ரெதிரிறைவ ருற்றருள்வர் விரைவின். 11

---

9. சருக்கரை நதியின் மேற்கில் தெய்வத்தன்மையுடைய அத்திமரச்சோலை நெருங்கியிருக்கும். அங்கே மாறுபாடில்லாத மனத்தோடு தேவர்களும் முனிவர்களும் தவஞ்செய்திருப்பார்கள். அதன் பக்கத்திலே அழகுமிக்க தாமரையோடையுள்ளது; அதற்குச் சிலாநதி என்று பேர்சொல்லுவார். அந்த நீரில் தோய்ந்த பொருள்கள் யாவையும் அப்போழுதே சிலைவடிவாகப் பொருந்துவனவாம்.

உதும்பரம் - அத்தி. எருக்கு, செவ்வகத்தி எனவும் பொருள்படும். பொதும்பர் - சோலை. ததையும் - நெருங்கும். திருக்கு - மாறுபாடு.

10. மேலே சொல்லப்பட்ட சிலாநதிக்கரையிலே நினைத்தவுடன் மரணமும் முத்தியும் சித்திக்கும். மணம் பொருந்திய மருந்துகள் (மூலிகை) அனேகம் உள்ளன. அந்த மேம்பட்ட நதிக்கு வடக்குப் பக்கத்தில் தரையில் உள்ளோர் புகழும் தேவகுங்குலிய மரம் உள்ளது. அக்குங்குலியமரப்பாலில் ஒரு துளி பருகினோர் நரை திரை மூப்பகன்று காயசித்தி பெறுவர்.

கதி - முத்தி. தரைத்தலை: தலை - ஏழனுருபு. விந்து - துளி.

11. அந்தத் தேவகுங்குலிய மரப்பால் ஒரு தொடியும், செம்பு மூன்று தொடியும், செம்பில் ஐந்திலொருகூறு பொன்னும் கூட்டி மிதமான அக்கினியில் வைத்தெடுக்கின் மகாமேரு மலைபோல ஆயிரத்தெட்டு மாற்றுப் பொன்னும். கொத்தாகவுள்ள அம்மரத்தின் ஈசானதிக்கில் கோடிசூரியர் உதித்தாற்போன்று ஒளிசெய்யும் சிறந்த நிறம்பொருந்திய பளிங்குமலையுண்டு. அப்பளிங்கினாலே

பத்தியோ சனையாழங் கிழக்குமேற் கெல்லை
பதிற்றுப்பத் துத்தரந்தெற் கெல்லைமுப்பா னளவை
ஒத்தகுகை யொன்றுரைத்த படிகவரை வடபா
லுளததனுக் கடுப்பயோ சனையொன்றி னகன்ற
தத்துதிரைப் பாரதநற் சரசுளதச் சரசின்
றடங்கரையி னொருகோடி தூணினொடு தயங்கும்
எத்திசையும் புகழ்கனக மண்டபமுண் டதனி
லெம்பெருமான் சிவலிங்க வடிவொடும்வீற் றிருப்பன். 12

நாரணர்நான் முகரைங்கைப் புத்தேளிர் வடிவே
னவின்றவலக் கரத்திறைவர் முதலோர நேகர்
காரணியு மிடற்றிறைவர் கழலொழுதங் கிருப்பர்
காலங்க டொறுமாங்குக் கறங்கிசைத்துந் துபியின்
சீரணிநல் லொலிமுத்தி யருகருக்கல் லாது
செவியிலுறு தக்கனக மயமாமண் டபத்துக்
கேரணியும் வடமேல்பாற் றென்மேல்பா லொரோவொன்
றெறிதிரைநீர் மலரோடை யுளவவற்றின் கரையின். 13

சிவலிங்கமூர்த்தியை நன்குசெய்து பூசைசெய்தவர்களின் முன்பு விரைவிலே சிவபெருமான் தோன்றியருள்புரிவார்.

தொடி - ஒருபலம். மெத்து எரியில் - மெத்தனமான நெருப்பில். இரவி - சூரியன். குரு - நிறம். உஊற்றுதல் - செய்தல்.

12. பத்து யோசனை ஆழமும், கிழக்கு மேற்கு எல்லை நூறு யோசனையும், வடக்குத் தெற்கு எல்லை முப்பது யோசனையும் உள்ள குகையொன்று படிகமலையின் வடபால் உள்ளது. அதனையடுத்து ஒருயோசனை தூரத்தில் அலைகளையுடைய அகன்ற பாரத சரசு உள்ளது. அந்தச்சரசின் விசாலமான கரையில் ஒருகோடி தூண்களையுடையதாய் விளங்கும் பொன்மண்டபம் ஒன்றுண்டு. அம்மண்டபத்தில் சிவபெருமான் சிவலிங்க வடிவமாக எழுந்தருளியிருப்பர்.

யோசனை - நாற்காத எல்லை; ''ஒரு நாவிகலந்தோசனை கமழுமே'' (சீவகசிந்தா 1901) ''ஓசனை கமழும்'' என்றதற்கு நச்சினார்க்கினியர் 'நாற்காத வெல்லை நாறும்' என உரைத்தமை காண்க. காதம் - ஏழரை நாழிகை வழி. எனவே காதத்தினும் யோசனை பெரியது என்பதாகக் கொள்க. பதிற்றுப்பத்து - நூறு. உத்தரம் - வடக்கு. தயங்கும் - விளங்கும்.

13. அங்கே நாரணர்கள் பிரமர்கள் விநாயகர் முருகவேள் முதலாகவுள்ள பலரும் கரிய கண்டத்தையுடைய சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி இருப்பார்கள். காலங்கள்தோறும் அங்கே முழங்கும் துந்துபி வாத்தியங்களின் ஒலி முத்தி யோக்கியருக்கன்றி காதில் பொருந்தாது. அந்தப் பொன்மண்டபத்தின் வடமேற்கிலும் தென்மேற்கிலும் ஒவ்வொரு மலரோடையுள்ளன. அவற்றின் கரையில்.

சந்தான கரணிசௌ பாக்கியநற் கரணி
சஞ்சீவ கரணிசல் லியகரணி யோடு
நந்தாத சித்தியெலாந் தருமருந்து பலவு
நலக்கவுள வெரிமணிச்சூட் டைந்தலையி னுகை
மைந்தாரு மெழுதலையி னுகமுஞ்சந் தனத்தண்
மரச்செறிவி னுங்கியங்கு மற்றயன்றன் வரையிற்
சிந்தாத வளமுடைத்தாய் மேற்றிசையி னுளது
சிலாநதியந் நதிபடிந்த திரணமுங்கல் லாகும். 14

மண்டலமொன் றினிலெவையுஞ் சிலையாக்கு மந்த
வார்நதியின் கரைப்பஞ்ச வன்னத்தும் வேறு
கொண்டொளிர்சித் திரமூலங் கருமைவெண்மை சிவப்பிற்
குலாவலுறு குன்றிபட்டுச் சிலம்பிகளு முளவால்
விண்டுவரை யிடைவிண்டு தீர்த்தமருங் கேல
மிலாமிச்சை கச்சோலஞ் சாதிக்கா யாதி
எண்டிசையும் வியப்பவுள மருதவரை மேலா
லெந்நாளும் பயின்றுறையு மெழிற்காம தேனு. 15

ஐங்கைப் புத்தேள் - விநாயகர். நவின்ற - பொருந்திய. கார் அணியும் மிடறு - கருமையை அழகு படுத்துமிடறு. மிடறு - கழுத்து. கறங்கு இசை - ஒலியைச் செய்யும். முத்தியருகர் - முத்திபெறுதற்கு யோக்கியமுடையார்.

14. சந்நானகரணி, சௌபாக்கியகரணி, சஞ்சீவகரணி, சல்லியகரணி முதலியவற்றுடன் கெடாத சித்திகளையெல்லாம் கொடுக்கும் மூலிகைகள் பல மிகுதியுமுள்ளன. ஒளிவீசும் இரத்தினச்சூட்டினையுடைய ஐந்துதலைகளையுடைய பாம்பும், பஞ்சதருக்களும், ஏழு தலைகளையுடைய நாகமும் சந்தனமரக் காட்டிலே பொருந்துவனவாம். மற்றும் பிரமன்மலையில் அழியாத வளப்பம் பொருந்திய சிலாநதி மேற்குத்திக்கிலுள்ளது. அந்த நதியிலே தோய்ந்த துரும்பும் கல்லாகும்.

சந்நானகரணி - முறிந்த உறுப்புக்களைப் பொருந்தச்செய்யும் மருந்து. சஞ்சீவகரணி - மூர்ச்சைதீர்த்து உயிர்தருமருந்து. சல்லியகரணி - வேல்தைத்த இரணம் மாற்றுமருந்து. சௌபாக்கியகரணி - நித்தியபோகத்தைத் தருமருந்து. திரணம் - புல்.

15. ஒருமண்டல கால எல்லையில் எவற்றையும் கல்லாக்கும் அந்தச் சிலா நதிக்கரையிலே பஞ்சவன்னத்திலும் வேருகவுள்ள ஒளிபொருந்திய சித்திரமூலம், கருமை வெண்மை சிவப்பு நிறமுடைய குன்றிமணிகள், பட்டுப்பூச்சிகள் உள்ளன. விண்டுமலையிலுள்ள விண்டுதீர்த்தத்தின் பக்கத்திலே ஏலம், இலாமிச்சை, கச்சோலம், சாதிக்காய் முதலியன எட்டுத்திக்கிலுள்ளாரும் வியக்குமாறு உள்ளன. மருதவரையின்மேல் எக்காலமும் காமதேனு பொருந்தும்.

மண்டலம் - நாற்பத்தைந்துநாள். கச்சோலம் - மாஞ்சில்.

வடகயிலைச் சூழலிற வாப்பனையும் பிறவா
　　வாய்மையுறு புளியுமுள விறவாது பிறவா
தடர்குழைய சித்தேச மரமாதி லிங்கத்
　　தருகுளது சித்தேச ராகியிறை யவனர்
கடவுளர்க டொழவதன்கீழ்ச் சித்துமுனம் புரிந்த
　　காரணத்தி னுனுமதற் கப்பெயர்கட் டுரைப்பர்
தடவரைத்தெய் வதக்காஞ்சி மரமுளதங் கதன்கீழ்த்
　　தவழ்தலினு னதிகாஞ்சி நதியெனத்தக் கதுவே. 16

ஆதிநக ரெல்லையிடை யுரைத்தனவே யன்றி
　　யனேகவதி சயமுளவா லனைத்தினையும் வரைந்திட்
டோதலுறு மாலையர்மூன் றுலகிடத்து மில்லை
　　யுமைபாகர் தமையன்றி யுதுநிற்க முனிவீர்
தீதகன்ற வியாதமுனி பரம்பிரமந் தெரிக்கிற்
　　றிருமாலென் றஞ்சாது செங்கைமிசை யுயர்த்த
ஏதமுறும் பழிபாவங் கழியவழி பட்ட
　　தினியியம்பக் கேண்மினென வினிதருளுஞ் சூதன். 17

விம்மிதப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1430

---

16. வடகயிலைச் சூழலிலே இறவாப்பனையும் பிறவாப்புளியும் உள்ளன. இறவாமல் பிறவாமல் அடர்ந்த தழைகளையுடைய சித்தேசமரம் ஆதிலிங்கத்தின் அருகில் உள்ளது. சிவபெருமான் முன்பு ஒருகாலத்திலே தேவர்கள் வணங்க அதன் கிழிருந்து சித்துக்களைச் செய்த காரணத்தால் அதற்குச் சித்தேசமரம் என்னும் பெயர் வழங்குவதாயிற்று. அப்பெரிய மலையிலே தெய்வத்தன்மையுள்ள காஞ்சிமரம் உள்ளது. அதன் கீழே பொருந்தி அந்நதி ஓடுவதால் காஞ்சிநதி என்னும் பேர்பெற்றதாம்.

17. ஆதிநகர் எல்லையில் சொல்லப்பட்டனவேயல்லாமல் இன்னும் பல அதிசயங்கள் உள்ளன. எல்லாவற்றையும் வரையறை செய்து சொல்லவல்லவர் சிவபெருமானையல்லாமல் மூன்றுலகத்துமில்லை. இதுநிற்க, முனிவர்களே! குற்றமற்ற வியாசமுனிவர் திருமாலே பரப்பிரமம் என்று அஞ்சாமல் தமது திருக்கரத்தை மேலே எடுத்துக் கூற, குற்றம் பொருந்தும் அப்பழிபாவம் கழியுமாறு வழிபட்ட செய்தியை இனிச் சொல்லக் கேட்பீராக என்று சூதமுனிவர் சொல்லத் தொடங்கினர்.

இருபத்துமூன்ருவது

வியாதன் கழுவாய்ப்படலம்

தெள்ளொளி மணியும் பொன்னுந் திரைகளிற் கொணர்ந்து வீசும்
ஒள்ளிய கங்கை சூழ்ந்த வுயர்புகழ்க் காசி வைப்பிற்
கள்ளவிழ் கடுக்கை வேணிக் கடவுளார் பாதம் போற்றி
எள்ளருந் தவங்க ளாற்றி யிருந்தனர் முனிவர் பல்லோர். 1

பயிலுநா ளொருநா ளன்னோர் பகர்மறை முடிவு தேரார்
உயர்பரம் பிரம மாய னுருத்திர னென்னத் தம்முள்
வியனில மயிர்ப்பச் சால விதியொடுங் கலாய்த்துப் பின்னர்
மயரற வியாதன் றன்னை மரபுளி வினவி னுரால். 2

வினவிய முனிவர் முன்னர் வியாதனங் கிறுக்க லுற்றான்
பனவிர்காண் மறைக ளெல்லாம் பகர்பரம் பிரம மாயன்
கனமுறழ் மிடற்று முக்கட் கடவுளன் றறிமி னென்றான்
வனமணி மாயன் சார்பின் மாதவர் மகிழ்ச்சி கொண்டார். 3

---

1. தெளிந்த ஒளியுடைய இரத்தினங்களையும் பொன்னையும் அலைகளால் கொணர்ந்து வீசுகின்ற ஒலிபொருந்திய கங்காநதியால் சூழப்பெற்ற உயர்ந்த காசிப்பதியில் தேன் பொருந்திய கொன்றை மலர்மாலையை அணிந்த சடையை உடைய சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கிப் பல முனிவர்கள் இகழ்தல் இல்லாத தவங்களைச் செய்திருந்தனர்.

கள் - தேன். கடுக்கை - கொன்றை. வேணி - சடை. எள்அரும் - இகழ்தல் இல்லாத.

2. தவஞ்செய்திருந்த காலத்திலே அவர்கள் வேதங்களின் முடிபைத் தெளியாதவர்களாய்ப் பிரமன் திருமால் உருத்திரன் என்பவர்களே பரப்பிரமப் பொருள் என்று தத்தமக்குத் தோற்றியவாறு சொல்லி உலகத்தார் சந்தேகங் கொள்ளுமாறு கலகம் விளைத்துப் பின்பு அம்மயக்கந்தீர வியாசமுனிவரிடம் சென்று நமது ஐயுறவைச் சொல்லி விதிப்படி வினவினர்கள்.

மறைமுடிவு-வேதாந்தப்பொருள். அயிர்ப்ப-சந்தேகங்கொள்ள. கலாய்த்து-கலகம் செய்து. மயர் - மயக்கம். மரபுளி - விதிப்படி.

3. கேட்ட அம்முனிவர்கட்கு வியாசமுனிவர் சொல்லத்தொடங்கினர். 'பிராமணர்களே! வேதங்களெல்லாம் சொல்லும் பரப்பிரமப் பொருள் திருமாலே, நீலகண்டத்தையுடைய சிவபெருமான் அல்லர் என்று நீங்கள் நன்று தெளிவீர்களாக' என்று கூறினர். திருத்துழாய் மாலையையணிந்த திருமால் அடியவர்களாகிய முனிவர்கள் மகிழ்ச்சிகொண்டார்கள்.

உருத்திரன் பிரம மென்ன வுரைத்தமா தவர்க ளெல்லாங்
கருத்துறத் தெளித லின்றிக் கரைந்தன னிவனென் றெண்ணித்
திருத்தகு முலக மெல்லாஞ் சிவன்பர மென்று தேற
விருத்தம தாகச் சொன்ன வியாதனுக் கிதனைச் சொன்னார். 4

விச்சுவ நாதர் முன்னர் மேவியிங் குரைத்தவாறே
நச்சிநீ யுரைத்தா யாகி னுமது கோடு மென்றார்
எச்சமின் மறைக ளெல்லா மினிதுதேர் வியாதன் கேளா
அச்சமொன் றானு மின்றி யதுசெய்வே னென்று போந்தான். 5

வெறிகமழ் கங்கை யாடி விச்சுவ நாதர் முன்போய்ச்
செறியிதழ்க் கமலை மார்பன் றிகழ்பரம் பிரம மேயாம்
அறிமின்க ளென்று செங்கை யந்தரத் துயர்த்திச் சொன்னான்
பிறிவில்வல் வினையை யாரே பேதுசெய் தொழிக்கு நீரார். 6

இறுத்தல் - சொல்லுதல். பனவர் - பிராமணர்; பனவிர் - விளி. கனம் உறழ் - மேகத்தையொத்த. வனம் - திருத்துழாய்.

4. உருத்திரனே பரப்பிரமம் என்று கூறிய முனிவர்கள் எல்லோரும், மனத்திலே தெளிவில்லாமல் வியாசமுனிவர் கூறினர் என்றுகருதி, உலகமெல்லாம் சிவபெருமானே பரப்பிரமப் பொருளாவாரென்று நன்று தெளிந்திருக்க அதனோடு மாறுபட்டுக் கூறிய வியாசமுனிவரை நோக்கி இதனைச் சொல்வாராயினர்.

கருத்து உற: உற - பொருந்த. கரைந்தனன் - பிதற்றினான். தேற - தெளிய. விருத்தம் - மாறுபாடு.

5. ஸ்ரீ விசுவநாதர் சந்நிதியை அடைந்து இங்குச் சொல்லியவாறே நீர் விரும்பிச் சொல்லுவீராயின் நாங்கள் அதனை ஏற்றுக்கொள்ளுவோம் என்றனர். குறைவில்லாமல் வேதங்களையெல்லாம் இனிதாக ஆராய்ந்த வியாசமுனிவர் அதனைக்கேட்டு அச்சம் சிறிதுமில்லாமல் அவ்வாறே செய்வேன் என்று அங்கே சென்றார்.

6. மணம் வீசும் கங்காநதியிலே முழுகி, ஸ்ரீ விசுவநாதர் திருமுன்னர்ச் சென்று, இலக்குமியை மார்பிலே தரித்து விளங்கும் திருமாலே பரப்பிரமப் பொருளாவார் என்று முனிவர்களே! நீவிர் அறிவிர்களாக என்று தமது கரத்தை உயரத்தூக்கிச் சொன்னார் (வியாசமுனிவர்). நீக்கமுடியாத வலிய வினையை யாவரே பேதித்து ஒழிக்கும் தன்மையுடையவர்?

வெறி - வாசனை. செறி - நெருங்கிய. கமலை - இலக்குமி. அந்தரத்து- ஆகாயத்தில்; உயர்த்தி என்க. பிறிவு இல் - நீங்காத. பேதுசெய்தல் - பேதித்தல், மாற்றுதல்.

நந்தியெம் பெருமான் கேட்டு நன்றிவன் சூளி தென்னுச்
சந்தவொள் எழல்கண் காலச் சபித்தனன் சபித்த லோடும்
அந்தின்மேக் குயர்த்த வார்கை யறைந்தநா வொடுந்தம் பிப்ப
எந்தையார் திருமுன் வெற்றித் தம்பமொத் திருந்தா னன்றே. 7

மாயனைப் பிரம மென்று மதித்திடு மதத்தா ரன்றி
மேயபன் மதத்து ளாரும் விச்சுவ நாத ரன்றி
ஆயின்மெய்ப் பிரமம் வேறின் றுமென வறிவு கொண்டார்
தூயமெய்த் தவத்தோ ரெல்லாந் தொடர்ந்தெழு மைய நீத்தார். 8

சகமெலா மின்ப மெய்தத் தானொரு வனுமே துன்பம்
இகழுடன் பிணைய வல்லே யெய்திச்சூ ளுற்று நின்றோன்
அகனுற வரியை புன்னி யடியிணை தொழுதா னன்னோன்
முகனெதிர் தோன்றி யங்கு முகுந்தன்மற் றிதனைக் கூறும். 9

---

7. (வியாசமுனிவர் கூறிய பொய்ச்சத்தியத்தைத்) திருநந்திதேவர் கேட்டு இவன் கூறிய சத்தியம் நன்று என்று கண்களினின்றும் தீப்பொறிச் சிதறச் சபித்தருளினர். அவ்வாறு சபித்தவுடன் மேலே உயர்த்திய கையானது (பொய்) கூறிய நாக்குடனே தம்பித்துப்போகச் சிவபெருமான் சந்நிதியிலே நாட்டப் பெற்ற செயத்தம்பத்தை ஒத்து விளங்கினர்.

"ஐயிரு புராண நூ லமலற் கோதியுஞ், செய்யபன் மறைகளுந் தெரிந்து மாயையால், மெய்யறு சூள்புகல் வியாத னீட்டிய, கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம்." (கந்தபு - கடவுள் - 19). "நந்தி யெம்பிரான் வெகுண்டுநாண் மலர்க்கர மெடுத்த, வந்த வண்ணமே யசைவற நிற்குமா சபிப்ப, மந்த னுயிர னிமிர்த்தகை மடக்கவல் லாமை, நிந்தை யாற்சிலைத் தூணமொத் தசைவற நின்றான்" (காஞ்சிப் - சார்ந்தாசயப் - 13).

சூள் - சபதம், சத்தியம். சந்தம் - அழகு. கண் ஒள் அழல் கால என்க. அந்தில் - அசை. மேக்கு - மேலே. தம்பிப்ப - அசைவின்றியிருக்க.

8. திருமாலைப் பிரமப்பொருள் என்று மதிக்கும் வைணவ சமயத்தாரை யன்றி, பொருந்திய பல சமயத்தவரும் ஸ்ரீ விசுவநாதரை யல்லாமல் ஆராயு மிடத்து உண்மையாகப்பிரமப்பொருள் வேறில்லை என்று அறிந்தார்கள். பரிசுத்த மாகிய உண்மைத்தவமுடையோர் எல்லாம் தொடர்ந்து மனத்திலெழுந்த சந்தேகத்தை நீக்கினர்கள்.

மாயன் - திருமால். மதத்தார்-கொள்கையையுடையார். ஆய்தல் - ஆராய்தல். நீத்தார் - விட்டுநீங்கினர்.

9. உலகமெல்லாம் இன்பத்தையடையத் தாம் ஒருவரே துன்பத்தை இகழ்ச் சியுடன் சூழ்ந்து கொள்ளுமாறு விரைந்துசென்று பொய்ச்சத்தியம் செய்து (தம்பம்போல) நின்றுகொண்டிருப்பவராகிய வியாசமுனிவர் மனத்தில்பொருந்த

என்னையுங் கெடுப்ப மற்றிங் கென்னகா ரியத்தைச் செய்தாய்
முன்னவன் சத்தி யெங்கு மொய்த்தலான் மறைக ளெல்லாம்
வன்னியை யென்னை யாதி வானவர் தமையு மன்றே
தன்னிகர் பிரம மென்னுந் தானது முகம னன்றே. 10

நிறைதரு மின்ப வீட்டி னிச்சலும் வாழ்தல் வேட்டோர்
அறைதரு தேவ ரென்னும் பிறரெலா மகலப் போக்கிச்
சிறைசெய் நீர் வேணிச் செம்ம றென்முகத் திறைஞ்சு கென்ன
மறைமுடி யெடுத்துக் கூறும் வாய்மையே வாய்மை கண்டாய். 11

விஷ்ணுமூர்த்தியைத் தியானித்துத் திருவடிகள் இரண்டையும் வணங்கினர். திருமால் வியாசர் முன்பு தோன்றி இவ்வாறு கூறத்தொடங்கினர்.

''தெற்றற் செஞ்சடை யெம்பிரான் றிருமுன்பு நாட்டும்
வெற்றித் தம்பமொத் திலகிவல் லிடும்பைகூர் வியாதன்
பற்றிச் சிந்தையி னெடியமா லிணையடி பரவ
அற்றைப் போதுமுன் றோன்றிநின் றச்சுத னறைவான்.''

(காஞ்சிப்புரா - சார்ந்தாசயப் - 14).

சகம் - உலகம். பிணைய - சூழ்ந்துகொள்ள. சூள் - சபதவார்த்தை. நின்றோன் - வினையாலணையும்பெயர். வல்லே - விரைந்து. அகன் - மனம். முகுந்தன் - திருமால்.

10. என்னையுங் கெடுத்தற் பொருட்டாக இப்பொழுது நீ என்ன காரியத்தைச்செய்தாய்? முழுமுதற் கடவுளுடைய சத்தி எங்கும் நிறைந்திருத்தலால் வேதங்களெல்லாம் அக்கினியையும், என்னையும் முதலாகவுள்ள தேவர்களையும் தன்னையொத்த பிரமம் என்றுகூறும். அது முகமனேயாகும்.

வன்னி - அக்கினி. முகமன் - உபசாரம்.

11. நிறைந்த இன்பவடிவாகிய முத்தியிலே எப்பொழுதும் வாழ விரும்பினோர் சொல்லப்படும் தேவர் என்னும் பிறரையெல்லாம் விட்டு நீக்கிச் சடாமுடியிலே கங்கையைத் தரித்த சிவபெருமானைத் தெற்குமுகத்தில் (அகோரமுகம்) வணங்குக என்று உபநிடதங்கள் எடுத்துச்சொல்லும் உண்மையே உண்மையாகும்.

இன்ப வீடு - இன்ப வடிவாகிய முத்தி. நிச்சலும் - எப்பொழுதும். வேட்டோர் - விரும்பினோர். சிறைசெய் நீர் - செருக்கு அடக்கப்பெற்ற கங்கை. சிறைசெய்தல் - தடுத்தல். வேணி - சடை. தென்முகம் - தெற்குத் திக்கிலுள்ள திருமுகம்; அது அகோரமுகம். மறைமுடி - வேதாந்தமாகிய உபநிடதம்.

தென்முகம்: ''உச்சிமுக மீசான மொளிதெளியப் பளிங்கே உத்தரபூருவதிசையை நோக்கியுறு முகந்தே. நிச்சயித்த முகத்தின்கீழ்ப் பூர்வதிசை நோக்கி நிகழுமுகந் தற்புருடங் கோங்கலர்போ னிறமே, அச்சுறுத்து மகோரமுக மறக்கரிது கராள மவிழ்தாடி வலத்தோளிற் றென்னோக்கி யமரும், செச்சைநிறத்

அன்னதோ ருண்மை நாடா தறைந்தனை யுய்தல் வேண்டின்
முன்னவன் சரணப் போதை முன்னுகென் றுரைத்து வாசக்
கன்னியந் துளவன் போகக் கரிசுறு வியாதன் கேளாப்
பன்னகத் தொடையன் மார்பிற் பரமனைப் போற்றி நின்றான். 12

புடைபல கணங்கள் சூழப் பூமழை பொழிய வானோர்
படைநவி லயனு மாலும் பாதுகை யிருபாற் றாங்க
விடையெதி ரூர்ந்து காசி விச்சுவ நாதர் நின்றங்
குடையவ காத்தி யென்னும் வியாதனுக் குரைக்க லுற்றார். 13

எவன்றனை முதல்வ னாக வெண்ணியெம் வயிற்சூ ளுற்றாய்
அவனிதோ காண்டி நந்த மகம்படித் தொழிற்க ணின்றான்
சவலைநெஞ் சுடையை நந்தந் தன்மையிற் சிறிது மெய்யாய்
கவலையங் கடலிற் றாழ்ந்தாய் கையொடு நாவுந் தோற்றாய். 14

தெரிவைமுக மிடத்தோண்மேல் வாமஞ் சிறுபுறத்தின் முகஞ்சத்தி யோசாதந் திகழ்வால்". (சிவதருமோத்தரம்).

12. அத்தகைய மெய்ம்மையை ஆராயாமல் நீ பொய்ம்மொழி புகன்றாய். நீ உஜ்ஜீவிக்க விரும்பினாயாயின், முழுமுதற் கடவுளின் திருவடித் தாமரைகளைத் தியானிப்பாயாக என்று கூறியருளி மணம்வீசும் திருத்துழாய் மாலையை அணிந்த திருமால் செல்ல, குற்றமுடைய வியாசமுனிவர் கேட்டு, பாம்புகளை ஆபரண மாகத் தரித்த மார்பினையுடைய சிவபெருமானைத் துதித்து நின்றார்.

நாடாது - ஆராயாமல். முன்னுக - தியானிப்பாயாக. துளவன் - திருமால். கரிசு - குற்றம். பன்னகத் தொடையல் - பாம்புமாலை.

13. பக்கத்திலே பூதகணங்கள் சூழ, தேவர்கள் பூமழைபொழிய, பிரம தேவரும் விஷ்ணுமூர்த்தியும் இரண்டு பக்கங்களிலும் பாதுகைகளைத்தாங்க, இடப வாகனத்திலே ஊர்ந்து, ஸ்ரீகாசி விச்சுவநாதர் எதிரேதோன்றி, எல்லாமுடைய நாயகரே காத்தருளுக என்று கூறிப்போற்றும் வியாசமுனிவருக்குச் சொல்லுவா ராயினர்.

பாதுகை - திருவடிநிலை.

14. எவனை முழுமுதற் கடவுளாக நினைந்து எமது சந்நிதியில் பொய்ச் சத்தியம் செய்தாய்? அவனை இதோ காண்பாய், அவன் நம்முடைய அகம்படித் தொழில் செய்கின்றான், எய்த்த மனமுடையாய்! நம்முடைய தன்மையில் சிறிதும் அறியமாட்டாய், கவலையாகிய கடலிலே மூழ்கினாய், கையுடனே நாவை யும் இழந்தாய்.

ஈங்குநீ யிழைத்த குற்ற மிவ்வயிற் றீர்த லின்றும்
பாங்குற நெஞ்சி னெம்மைப் படர்ந்தனை யாத லாலே
ஓங்கிய கொங்கு நாட்டி னொளிர்தரு வெள்ளி வெற்பின்
நீங்குமங் கேகு கென்று நிகழ்த்தினர் மறைந்தா ரையர். 15

கடனிகர் கருணை நாதர் கண்ணளித் தருள லோடும்
அடரும்வல் வினைக்கோட் பட்ட வருந்தவ வியாதன் ருழ்ந்து
மடமையி னென்ன செய்தா மெனமனத் தச்ச மெய்திப்
படர்திரைக் கங்கை யாடிப் படர்ந்தனன் றென்பா னோக்கி. 16

வேறு

நெறிவயிற் செல்பவ னேர்ந்த தீர்த்தமும்
மறிமழுக் கரத்தவர் வதியுங் கோயிலும்
முறுகிய வன்பினன் முழுகித் தாழ்ந்துபோய்ச்
செறிவயற் கொங்குநாட் டெல்லை சேர்ந்தனன். 17

முதல்வன் - பரப்பிரமப்பொருள். வயின் - இடம். சூள் - அசத்தியம். காண்டி - காண்பாய். அகம்படித்தொழில் - உள்ளிடத்துச்செய்யும் ஏவற்றொழில். 'அங்கணன் கைலை காக்கும் அகம்படித் தொழின்மை பூண்டு' (காஞ்சிப்புராணம்). எய்யாய் - அறியாய்.

15. இங்கே நீ செய்தகுற்றம் இவ்விடத்தில் நீங்குதலின்று. மனத்திலே நீ எம்மை நன்கு தியானம்செய்தாய் ஆதலால், உயர்ந்த கொங்கு நாட்டிலே விளங்கும் வெள்ளிமலையிலே இக்குற்றம் தீரும். நீ அங்கே செல்வாய் என்று அருளிச்செய்து இறைவர் மறைந்தார்.

இழைத்த - செய்த. படர்ந்தனை - வழிபட்டாய்.

16. கடலையொத்த கருணையையுடைய சிவபெருமான் திருக்கணோக்கம் செய்தருளலும், வருத்தும் வலிய சிவத்துரோகத்தால் விழுங்கப்பட்ட வியாசமுனிவர் வணங்கி, அறியாமையால் என்ன காரியத்தைச் செய்துவிட்டோம் என்று மனத்தில் அச்சங்கொண்டு, கங்கையில் முழுகிப் பின்பு தெற்குத்திக்கை நோக்கிச் செல்வாராயினர்.

கண்ணளித்தல் - கடைக்கணோக்கம் செய்தல். அடரும் - வருத்தும். கோட்பட்ட - கொள்ளப்பட்ட. மடமை - அறியாமை. தென்பால் - தெற்குத் திக்கு.

17. வழிக்கொண்டு செல்கின்ற வியாசமுனிவர் எதிர்ப்பட்ட தீர்த்தங்களில் எல்லாம் முழுகி, மான் மழுவேந்திய கரத்தையுடைய சிவபெருமான் வீற்றிருக்கும் தலங்களைத் தரிசித்து, நிறைந்த அன்புடன் வயல்கள் சூழ்ந்த கொங்குநாட்டின் எல்லையை அடைந்தார்.

முறுகிய அன்பு - முதிர்ந்த அன்பு.

நிண்டவ னறிகலா நீர்மைத் தாகிய
மாண்டவெள் ளியங்கிரி மலர்க்க ணேக்கினன்
ஆண்டெதிர் வணங்கின னன்பு பொங்கமெய்
ஈண்டிய துதிபல வியம்பி நண்ணினன். 18

இழிந்திட வல்வினை யேறி மால்வரை
பொழிந்துதே னெழுக்கருப் பொதும்பெ லாங்கடந்
தழிந்தவர்க் கருளெனு மாக்க நல்குறுஞ்
செழுந்திரைக் காஞ்சியிற் சென்று தோய்ந்தனன். 19

குடுமிமால் வரைதனைக் குறுகி யண்ணலைப்
படுகளி மனத்தனுய்ப் பரவிப் போற்றினன்
நெடுகிமே னிவந்தகை நிலத்தை நோக்கின
புடைபெயர்ந் ததுமறை புகன்ற நாவரோ. 20

---

18. நெடிய திருமாலும் அறியாத தன்மையையுடைய மாட்சிமைப்பட்ட வெள்ளிமலையைக் கண்டார். எதிரே வணங்கினர். அன்புமிக உண்மையான பல துதிகளைச் செய்துகொண்டு சமீபித்தார்.

நீர்மைத்து - தன்மையை உடையது. பொங்க - மிக. மெய் ஈண்டிய - மெய்ம்மை நிறைந்த.

19. கொடிய சிவத்துரோகம் கெட்டொழியுமாறு சிறந்த வெள்ளிமலையின் மேலேறி, தேனொழுகுதல் நீங்காத சோலைகளையெல்லாம் கடந்து, மனமழிந்து துன்புற்றோருக்குக் கருணையென்னும் செல்வத்தைக் கொடுக்கும் காஞ்சிநதியிலே போய் முழுகினர்.

பொதும்பு - சோலை. ஆக்கம் - செல்வம்.

20. சிகரத்தையுடைய பெரிய வெள்ளிமலையைக் கிட்டிச் சிவபெருமானைக் களிப்போடுகூடிய மனத்தையுடையவராய்த் துதித்து வணங்கினர். மேலே உயர்ந்து அசையாமல் நின்ற கை நிலத்தை நோக்கிக் கீழே இறங்கியது. வேத அத்தியயனஞ்செய்து நன்கு ஆராய்ந்த நாபுடைபெயர்ந்துபேசும் திறமையைப் பெற்றது.

குடுமி - சிகரம். நிவந்த - உயர்ந்த. நிலத்தை நோக்குதல் - தாழத்தொங்க விடுதல்.

ஆடினன் பலமுறை யாடித் தட்டமிட்
டோடினன் பலமுறை யோடி முன்னுறக்
கூடினன் றிருவுருக் கோல நோக்கியே
நீடினு னனந்த நிலையில் வேறற. 21

வழங்குநா வின்றுகொன் மருவி னுமென
முழங்குறத் துதிபல முழக்கி யன்பினுற்
செழுங்கர மின்றுகொல் சேர்ந்து ளாமென
ஒழுங்கிய பூசனை யுஞற்றி னனரோ. 22

பலபகல் கழிவுறப் பயிற்றிப் பூசனை
அலரொளி வெள்ளியம் பலமுந் தாழ்ந்துபோய்
இலகிய பிப்பில வனத்தி லெம்பிரான்
மலரடி போற்றினன் வாழ்ந்து போந்தனன். 23

தீங்கறு நூல்பல தெளிந்து மாணவம்
நீங்குமோ நின்மல ஞான மில்லவர்க்
கோங்கிய வியாதனே யுண்மை தேர்கலான்
தூங்குகை நிமிர்த்துறு துரிசி னனெனின். 24

---

21. வியாச முனிவர் ஆனந்தமேலிட்டுப் பலமுறை ஓடி முன்னே பொருந்தினர். சிவபெருமான் திருவுருவின் அழகைநோக்கி ஆனந்த நிலையிலே வேறற நெடுநேரம் நின்றார்.

தட்டமிடுதல் - நிலைகுலைதல்; "கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித்திரியே" (சித்தி - 12. சூ - 1.) ; கைகொட்டல் என்பாருமுளர். முன்னுற - சந்நிதியிற் பொருந்த. திருவுருக்கோலம் - திருமேனியினழகு. நீடுதல் - நெடுநேரமிருத்தல்.

22. இன்று தான் நா வழங்கப்பெற்றோம் என்று நாவின் பயனாக அன்பினால் பல தோத்திரங்களைச் செய்து, நல்ல கரத்தை இன்றுதான் சேரப்பெற்றோம் என்று அன்பினால் சிறந்தமுறை வழுவாமல் பூசனைசெய்தார்.

அன்பினால் துதிபல முழக்கி, அன்பினால் பூசனை உஞற்றினர் என்க. அன்பினால் என்பது இடைநிலைத்தீவகம். உஞற்றுதல் - செய்தல்.

23. பலநாட்கள் அவ்விடத்திலே பூசைசெய்து கழிய, ஒளிவிளங்கும் வெள்ளியம்பலத்தையும் வணங்கி, அரசவனத்திலே வீற்றிருக்கும் சிவபெருமானுடைய திருவடித்தாமரைகளையும் வணங்கிப் போற்றி வாழ்ந்திருந்தார்.

பிப்பிலவனம் - அரசவனம்.

24. குற்றமற்ற நூல்கள் பலவற்றைத் தெளிந்திருந்தும் நின்மலமான சிவஞானம் வந்து கூடப்பெறாதோருக்கு ஆணவமலம் நீங்கப்பெறுமோ? உயர்ந்த வியாசமுனிவரே உண்மை தெளியாதவராய்க் கையை உயர்த்துப் பொய்சூள் புகன்று குற்றமெய்தினரெனில்.

பொச்சமில் வியாதன்பூ சித்த தோதினும்
விச்சுவா மித்திரன் வரங்கள் வேட்டது
நச்சியிங் குரைத்துநன் றறிமி னென்றுடல்
துச்சினீத் திடுந்தவர்க் கியம்புஞ் சூதனே. 25

வியாதன் கழுவாய்ப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1455

"விச்சு வேசன்முன் னின்றிரு கரமிசை நிமிர்த்தாங், கச்ச மின்றிமுன் புகன்றதே புகன்றன னந்தோ, விச்சை நூல்பல கற்பினுஞ் சிவனருள் விரவாக், கொச்சையோர்தமை விடுவதோ கொடுமலச் செருக்கு." (காஞ்சிப் - சார்ந். 11).

நின்மலஞானம் - தூய சிவஞானம். தூங்குகை - தொங்கிய கை.

25. பொய்ம்மையில்லாத வியாசமுனிவர் பூசித்துப் பேறுபெற்றமையையும் (சிவத்துரோகம் நீங்கப்பெற்றமையையும்) சொன்னோம். இனி, விசுவாமித்திர முனிவர் வரங்கள் விரும்பியமையையும் விரும்பிச் சொல்லுவோம். அதனை நன்றாக அறிவீர்கள் என்று உடம்பாகிய குடிலைப் போக்குகின்ற தவத்தினையுடைய நைமிசாரணிய முனிவர்களுக்குச் சூதமுனிவர் சொல்வாராயினர்.

பொச்சம் - பொய். நச்சி - விரும்பி. துச்சில் - சிறுகுடில். தவர் - தவத்தை உடையவர்.

இருபத்துநான்காவது

விசுவாமித்திரன் வரம்பெறுபடலம்

உலக முண்ட வொளிமணி வண்ணனும்
மலரின் மேய வரதனு மாறுகொண்
டிலகும் யான்முதல் யான்முத லென்றுரைத்
தலகில் காலங் கலாய்த்தன ரவ்வுழி. 1

கலாம றுப்பக் கனலுறழ் வேணியின்
நிலாவ ணிந்த நிமலர்முன் றோன்றினர்
புலான்மி டைந்த பொருபடை நேமியான்
சுலாவு நெஞ்சிற் றுணுக்கென் றிரிந்தனன். 2

அச்ச மின்றி யலர்ந்தவெண் கண்ணினன்
எச்ச மிங்கண் வருவதென் றெள்ளினன்
விச்ச தின்றி விளைவுசெய் வள்ளலார்
நச்செ னச்சிவந் தார்நய னங்களே. 3

---

1. பிரளயகாலத்திலே உலகத்தையுண்டு தமது திருவயிற்றிலடக்கிய நீல மணிபோன்ற நிறத்தையுடைய விஷ்ணுமூர்த்தியும், திருமால் உந்தித்தாமரை யிலே தோன்றிய பிரமதேவரும் தங்களுக்குள்ளே யானேமுதல்வன் யானேமுதல் வன் என்று செருக்கினல் அளவற்ற காலம் கலாம்விளைத்தனர்.

மணி - நீலமணி. மாறுகொண்டு - பிணக்குற்று. கலாய்த்தனர் - போர் செய்தனர்.

2. அவ்விருவரும் செய்தபோரை விலக்கும் பொருட்டுத் தீயையொத்த சிவந்த சடையில் பிறைச்சந்திரனையணிந்த நிமலராகிய சிவபெருமான் அவர்கள் முன்னே தோன்றினர். சக்கரப்படையை உடைய திருமால் மனத்திலே அச்சங் கொண்டு நீங்கினர்.

கலாம் - போர். உறழ் - ஒத்த. நிமலர் - மலரகிதர். புலால் மிடைந்த - புலால்நாற்றம் நிறைந்த. நேமி - சக்கரம். துணுக்கென்று - திடுக்கிட்டு.

3. அச்சம் சிறிதுமில்லாமல் எட்டுக்கண்களையுடைய பிரமதேவர் (யாக தேவன்) புத்திரன் இவ்விடம் வருகின்றான் என்று இகழ்ந்தான். விச்சில்லாமல் விளைவிக்கும் வள்ளலார் கண்கள் நஞ்சு என்னுமாறு சிவப்புற்றார்.

சுடுநெ ருப்பெனத் தோற்றிய கோபத்து
வடுகன் வந்து பழித்த மலரவன்
நெடுமு டித்தலை நீளுகி ரிற்கொய்து
படும தங்களைந் தீந்தனன் பண்பரோ. 4

திருவி ளுயக ளுதிநற் றேவர்தங்
குருதி வாங்கியன் ளுருளக் கோதொரீஇப்
பொருவி லாத புகழ்ப்பெருங் காசியின்
மருவு காவலும் வண்மையிற் பெற்றனன். 5

அங்கண் வாழ்தரு மாருயிர் செய்திடும்
பொங்கு பாவம் புயத்தவிர் சூலத்தில்
தங்க விட்டுத் திரித்துத் தவிர்த்திடுந்
துங்க மான தொழிலும் பரித்தனன். 6

எச்சம் - புத்திரன். விச்சு - வித்து. நயனம் - கண். சிவத்தல் - கோபித்தல்: "கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள" (தொல்). "விச்ச தின்றியே விளைவு செய்குவாய்" (திருவாசகம்). விச்சின்றி விளைவு செய்தலாவது: ஆணவ மல மாத்திரையேயாய்க் கேவலப்பட்டுக்கிடந்த உயிர் அதன்பின் முறையே காரண கஞ்சுகங்களாய உடல்களைச்சார்ந்து முறையே அறிவு இச்சை செயல்கள் பொதுவகையால் சமட்டிவடிவாய் விளங்குதலும், பின் வியட்டிவடிவாய்ப் பிரிந்து தோன்றிச் சிறப்புவகையான் விளங்குதலும்பற்றி ஏனை உடல் மூன்றினும் விளங்குமாறு கருணைசெய்பவர் கேவலக்கிடையினும் விட்டு நீங்காது உடனாய் நின்று உபகரிக்கும் சிவபெருமானே ஆகலின், அப்பெருமானுடைய கருணைநோக்கின் அடிப்பாடே விளைவு என்பார் விளைவிக்கும் வள்ளல் என்றார். 'நுகமின்றி விளாக் கைத்து' (திருவாச - அதிசய - 8) என்பதும் அது.

4. சுடுகின்ற தீப்போலத் தோன்றிய கோபத்தினிடமாக வைரவக்கடவுள் தோன்றி நிந்தித்த பிரமதேவனுடைய தலையை நகத்தாற்கிள்ளி அவன்செருக்கை அகற்றினர்.

வடுகன் - வைரவக்கடவுள். மதம் - செருக்கு. இவ்வரலாறு காசிகண்டம் வயிரவன் தோன்றிய அத்தியாயத்துக் காண்க.

5. விஷ்ணுமூர்த்தி முதலிய தேவர்களது இரத்தத்தைப் பிரம கபாலத்தில் ஏற்று, அவர்களுடைய மனக்குற்றத்தை நீக்கி, ஒப்பற்ற புகழையுடைய காசிப் பதியிலே பொருந்திய காவலும், வள்ளற்றன்மையால் பெற்றுவிளங்கினர்.

திரு - இலக்குமி. குருதி - இரத்தம். கோது - குற்றம்.

6. அக்காசிப்பதியில் வசிக்கும் உயிர்கள் செய்யும் மிக்கபாவங்களைத்தமது தோளிலே சார்த்திய சூலப்படையாற் குத்தித்திரித்துப் போக்கும் தூயதொழிலையும் பெற்றார்.

இன்ன வாறிய மன்விரை யாக்கலி
அன்ன மாநக ருக்கற னேக்குபு
மின்னு மாதவ விச்சுவா மித்திரன்
இன்ன வைப்புக் கிணையில்லை யென்றுறீஇ. 7

வேத மோதி விளங்கிய விச்சுவ
நாதர் பாதநன் றேத்தி வதிந்துநன்
மாத வங்கண் மரபி னியற்றுநாட்
காதல் யோகத்துக் காட்சியொன் றெய்தினன். 8

வேறு

தெள்ளுந் தரங்கப் புனல்சுமக்குஞ் சிவனர் போதி வனத்தெழுந்த
வெள்ளி மயமாஞ் சபையினடம் விளங்கக் காட்டி யவ்வரைப்பின்
உள்ள வுயிர்கள் செயும்பாவந் தண்ட மொன்று முறுத்தாமே
விள்ள வருளி மேலான வீடும் வழங்குந் திறந்தெரித்தார். 9

அவிர் - விளங்கும். திரித்து - சுழற்றி. தங்கவிடுதல் - குத்திச் சுமத்தல். துங்கம் - பரிசுத்தம். பரித்தல் - தாங்குதல்.

7. இவ்வாருக, இயமதருமனுடைய ஆணையானது அந்தக் காசிநகருக்கு இல்லாமையை நோக்கி, விசுவாமித்திர முனிவர் இந்த இடத்துக்கு எவ்விடமும் ஒப்பாகா என்று பொருந்தி.

விரையாக்கலி - ஆணை. அறல் நோக்குபு - இல்லாமையை நோக்கி. வைப்பு - இடம். உறீஇ - உற்று.

8. வேதமந்திரங்களைச் சொல்லி, ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி திருவடிகளை வணங்கித் துதித்து, அக்காசிப்பதியிலே தங்கி, சிறந்த தவங்களை விதிப்படிசெய்து வருங்காலத்திலே விருப்பமுறும் யோகக்காட்சியொன்றைக் கண்ணுற்ருர்.

வதிந்து - வசித்து.

9. தெளிந்த அலைகளையுடைய கங்காசலத்தைச் சுமந்திருக்கும் சிவபெருமான் அரசவனத்திலுள்ள வெள்ளியம்பலத்தில் திருநடனத்தைத் தரிசிப்பித்து, அந்தத் தலத்தில் உள்ள உயிர்கள் செய்யும் பாவத்துக்குத் தண்டனை யொன்றும் செய்வியாமல் அருள் செய்து மேலான வீட்டின்பத்தையும் வழங்கும் தன்மையைத் தெரிவித்தார்.

தரங்கம் - அலை. தண்டம் - தண்டனை, கழுவாய்.

இனைய காட்சி யோகத்தி னெய்தக் கண்ட மாமுனிவன்
அனைய தோநம் பேரூரென் றகத்தி னெழுந்த விம்மிதனாய்க்
கனைவெண் டரங்கக் கங்கைநதி கலவுங் காசி கையகன்று
வினைக ளிரியுங் காஞ்சிநதி விரவும் பேரூர் மருங்கடுத்தான். 10

நகரத் தெல்லை யெதிர்வணங்கி நண்ணிக் காஞ்சி நதிபடிந்து
சிகரக் கோயிற் றிருமுன்னர்ச் சென்று பணிந்தங் குட்புகுந்து
மகரத் துவச னுடல்பொடித்த வரதர் பாதந் தொழுதேத்தித்
தகரக் குழன்மா துமைபாதந் தாழ்ந்து சபையுந் தரிசித்தான். 11

அற்றை யிரவு புலர்காலை யணிநீர்க் காஞ்சி நதியாடி
முற்று மருளுஞ் சிவலிங்க முறையி னிறுவிப் பூசித்துப்
பற்றும் பொறிக ளகத்தடக்கிப் பயிலும் யோகத் திருக்குநாட்
பெற்ற முயர்த்த பெருமானார் பெருவா னிடையே வெளிநின்றார். 12

---

10. இப்படிப்பட்ட காட்சியை யோகத்தினிடமாகப் பொருந்துதலைக்கண்ட விசுவாமித்திரர் அத்தன்மையையுடையதோ நம்முடைய பேரூர் என்று மனத்திலே எழுந்த வியப்புடையவராய்க் காசிப்பதியை விட்டு நீங்கி, வினைகளெல்லாம் கெட்டோடும் காஞ்சிநதி பொருந்திய பேரூரைச் சார்ந்தார்.

கனை வெண் தரங்கம்: கனை - ஒலிக்கும். கலவும் - கலக்கும். கையகன்று - நீங்கி; கை உபசர்க்கம்.

11. பேரூர் நகரத்து எல்லையை எதிரே வணங்கி, நகரத்தினுள்ளே போய் காஞ்சிநதியில் முழுகி, சிகரங்களையுடைய கோயிலின் முன்னேசென்று பணிந்து, கோயிலினுட்சென்று மன்மதன் உடம்பைப் பொடிசெய்த சிவபெருமான் திருவடிகளை வணங்கித் துதித்து, உமாதேவியாருடைய திருவடிகளையும் வணங்கி, வெள்ளி மன்றத்தையும் தரிசித்தார்.

மகரத்துவசன் - மன்மதன்; மீனக்கொடியோன். தகரம் - மயிர்ச்சாந்து.

12. அன்று இரவுசெல்ல விடியற்காலத்திலே காஞ்சிநதியிலே நீராடி, முழுவதையும் கொடுத்தருளும் சிவலிங்க மூர்த்தியை விதிப்படி பதிட்டைசெய்து பூசித்து, ஐம்பொறிகளையும் அகத்தடக்கி யோகத்திலேயிருக்கும் நாளில் இடபக் கொடியையுயர்த்த சிவபெருமான் ஆகாயத்திலே காட்சிகொடுத்தருளினார்.

புலர்காலை - விடியற்காலம். "பெரும்புலர் காலைமூழ்கிப் பித்தர்க்குப் பத்த ராகி" (திருநாவு - தேவா). பற்றும் பொறிக ளகத்தடக்கி; "அகல் ஞாலத் தகத்துள் தோன்றி, வருந்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு வான் புலன்கள் அகத்தடக்கி" (திருநாவு - தேவா). பெற்றம் - இடபம். பெரு வான் - ஆகாயம்: எல்லாப்பூதங்களும் தன்னிடத்தே வந்தொடுங்க இடங்கொடுத்து நிற்றலின் பெருவான் என்றார்.

கண்டு முனிவன் சடைமுடிமேற் கரங்க ளெழவொய் யெனவெழுந்து
மண்டு புளக முடல்போர்ப்ப மலர்க்கண் பொழிய வெதிர்வணங்கிக்
கொண்ட லென நான் மறைமுழக்கிக் குடந்தம் பட்டு மொழிகுழற
அண்டர் பெருமா னருளுேக்கி யழுது வரங்க ளிரக்கின்ருன். 13

வேறு

பொன்னை வென்ற புரிசடை வேதியா
நின்ன டித்துணைப் பத்திமை நிச்சலும்
மன்ன நாயடி யேற்கு வழங்குதி
கொன்னும் வல்வினை கூட்டொடு மாயவே. 14

முத்தி நல்குத லேமுறை யாகிய
இத்த லத்திடை யாவர்க்கு மற்றினி
அத்த வேட்ட வறம்பொருளின்பமுங்
கைத்த லக்கனி போல வழங்குதி. 15

---

13. இறைவர் ஆகாயத்திலே தோன்றிக் காட்சியருள அதனைக் கண்டு விசுவாமித்திர முனிவர் தமது சடைமுடியிலே கரங்களைக் குவித்து, விரைந்து எழுந்து, நிறைந்த உரோமாஞ்சம் உடம்பிலேகொள்ளக் கண்களில் அருவிபோல் நீர்பொழிய எதிரே வணங்கி, வேதமந்திரங்களை நன்ருக உரத்துக்கூறிக் கை குவித்து வணங்கி நாக்குழறத் தழுதழுத்துச் சிவபெருமான் திருவருளை நோக்கி அழுது வரங்களை இரப்பாராயினர்.

ஒய்யென - விரைய; ''ஒக்க நீள்விசும் பூடறுத்தொய்யென'' (சிந்தா-866). ''ஐயவி புகைப்பவும் தாங்கா தொய்யென, வுறுமுறை மரபிற் புறநின் றுய்க்கும்'' (புறநா. 98). புளகம் உடல் போர்ப்ப - மெய்ம்மயிர் பொடிப்ப. கொண்டல் - மேகம். குடந்தம்பட்டு - வழிபட்டு; வணக்கம்பட்டு என்றும் உரைப்பர். குடந்த மாவது: ''நால்விரன் முடக்கிப் பெருவிர னிறுத்தி - நெஞ்சிடை வைப்பது குடந்தமாகும்.'' (திருமுருகு: நச்சி).

14. பொன்னையும் வென்ற சிவந்த சடையையுடைய சிவபெருமானே! தேவரீருடைய திருவடிகளில் எப்பொழுதும் பத்திநிலைபெற நாய்போலும் இழிந்த அடியேனுக்கும் அச்சத்தைத்தரும் வலிய வினைக்கூட்டங்கள் அடியோடு கெடும் படியாக கொடுத்தருளுக.

நிச்சலும் - எப்போதும். கொன் - அச்சம். கூட்டோடு - அடியோடு.

15. வீடுபேற்றை அருளுதலாகிய முறைமையினையுடைய இத்தலத்தில் ஐயனே! எல்லோருக்கும் இனிமேல் விரும்பிய அறம் பொருள் இன்பங்களையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளக்கமாகக் கொடுத்தருளவேண்டும்.

மற்று - வினைமாற்றுப் பொருளில் வந்தது. கைத்தலக்கனி - உள்ளங்கை நெல்லிக்கனி.

கோதி லாக்குருக் கேத்திரங் காசியே
ஆதி நல்கு மரும்பய னுயிரம்
போத நல்கிப் புகல்குருக் கேத்திரத்
தீதி னமந் திகழ்கவிம் மா நகர். 16

பண்பின் முத்தில பாத்திரம் வைகலும்
எண்ப யின்றநற் காசியி னிந்திடும்
வண்ப யனெரு வைகலிங் கொன்றது
நண்ப விந்தவர் நண்ணுதல் வேண்டுமே. 17

அன்ன தானமொ ராயிரங் காசியின்
மன்ன நாளும் வழங்கும் பெரும்பயன்
இன்ன மாநக ரீந்திடும் பிச்சையால்
என்னை யாளுடை யாயெய்தல் வேண்டுமால். 18

என்று பற்பல் வரங்களும் வேட்டனன்
ஒன்று மன்பி னுறுதவ னின்புறக்
கொன்றை மாலைக் குழகன் முறுவலின்
அன்று நோக்கி யருளி னவிற்றுமால். 19

---

16. குற்றம் இல்லாத குருக்ஷேத்திரம் காசிப்பதியேயாம். ஆதியிலே கொடுக்கும் அருமையானபலன்கள் ஆயிரமும் மிகுதியாகக் கொடுத்துச்சொல்லப் படும் குருக்ஷேத்திரமாகிய குற்றமற்ற பெயர் இந்த நகரத்துக்கும் உண்டாகுக.

காசியே யாதி நல்கும் அரும்பயன் ஆயிரம் போதநல்கி - காசிமுதலாக உள்ள க்ஷேத்திரங்கள் தரும் அரியபலன்கள் ஆயிரத்தையும் மிகுதியாகக்கொடுத்து. ஆயிரமும் - உம்மை தொக்கது, ஆயிரம் மிகுதிப்பொருட்டு. போத - மிகுதியாக. ஆயிரமும் போதமும் நல்கி எனலுமாம்; உம்மைகள் தொக்கன.

17. விதிப்படி திலதருப்பணம் நாடோறும் மதிக்கத்தக்க காசிப்பதியில் கொடுக்கும் சிறந்த பயன் இந்தத் தலத்திலே ஒருநாள் ஒருமுறை அன்புடன் செய்தவர்களும் அடைதல்வேண்டும்.

நண்ப - அன்புடன்.

18. காசிப்பதியிலே ஆயிரம் அன்னதானம் நிலைபெற வழங்கும் பெரும் பயன், இப்பேரூரிலே கொடுக்கும் பிச்சையால், என்னையாளுடைய எம்பிரானே எவருக்கும் சித்தித்தல்வேண்டும்.

19. என்று பலப்பல வரங்களையும் விரும்பிக்கேட்டார். அன்பு பொருந்திய மிக்க தவத்தையுடைய விசுவாமித்திரர் மகிழ்ச்சியடையச் சிவபிரான் புன்முறுவல் செய்து கருணையோடு சொல்லுவாராயினர்

எண்ணி லாத வுயிருமின் பத்தினை
நண்ண விந்த நகரம் வரமெலாம்
பண்ண முன்பே பணித்தன மற்றது
புண்ணி யர்க்குப் புலப்பட நின்றதே. 20

இன்று நீயிரந் திட்டமை யாலினித்
துன்று வையகத் தொல்லுயிர் யாவையும்
மன்ற வோர்ந்து மதித்த வரங்களை
நன்று பெற்று நவையற வாழிய. 21

வேட்ட வேட்ட வரத்தினை மேவினு
நாட்ட நம்மிடை வைத்த கருத்தராய்
வீட்டை யேபின்பு மேவுக வென்றருள்
காட்டி யீசர் கரந்தன ரென்பவே. 22

விளைத்த மெய்த்தவ விச்சுவா மித்திரன்
வளைத்த வன்பின் வரதனைப் போற்றினன்
திளைத்த மெய்ச்சிவ யோகந் தினம்பயின்
றிளைத்த லின்றி யிருந்தன னங்கரோ. 23

வேட்டனன் - விரும்பினன். உறு தவன் - மிக்க தவத்தையுடையோன். நவிற்றும் - சொல்லும்.

20. அளவில்லாத உயிர் வருக்கங்களும் இன்பத்தைப் பொருந்த இந்த நகரத்திலே எல்லா வரங்களும் முன்னமே அருள் செய்திருக்கின்றோம். அது சிவ புண்ணியமுடையவர்களுக்கே புலப்படும்படியாக உள்ளது.

21. இன்று நீ வேண்டினமையால் இனி உலகத்துயிர்கள் யாவையும் மிகுதியாக ஆராய்ந்து வேண்டிய வரங்களை நன்றாகப்பெற்றுக் குற்றமற வாழக் கடவன.

22. விரும்பிய விரும்பிய வரங்களைப்பெற்றாராயினும் நம்மிடத்தே பொருந்திய கருத்துடையவராய் வீட்டின்பத்தைப் பின்பு பொருந்தக்கடவர் என்று அருளிச் செய்து இறைவர் மறைந்தார்.

23. உண்மைத் தவத்தையுடைய விசுவாமித்திரமுனிவர் சூழ்ந்த அன்பினால் சிவபெருமானை வழிபட்டவராய் உண்மைச் சிவயோகத்தை நாடோறும் பயின்று அங்கே வசித்திருந்தார்.

இற்று விச்சுவா மித்திர னின்வரம்
பெற்ற தந்தகன் பேணி வரம்பெரி
துற்ற வாறினிக் கேண்மினென் றேதுமாற்
கற்ற சூதன் கலந்த தவர்க்கரோ. 24

விசுவாமித்திரன் வரம்பெறுபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1479

---

24. இது விசுவாமித்திரமுனிவர் வரம் பெற்ற வரலாறாகும். அந்தகன் என்பவன் வழிபட்டுப் பெரிதும் வரங்களைப் பெற்ற வரலாற்றையும் கேட்பீராக என்று சூதமுனிவர் நைமிச முனிவர்கட்குக் கூறுவாராயினர்.

இருபத்தைந்தாவது

அந்தகனரசுபெறுபடலம்

வருங்கிரே தாவில் விச்சுவ நாதர் வளர்திரே தாயுக மதனிற்
பொருந்திய வமுத லிங்கநா யகரே போற்றிய துவாபர யுகத்தில்
திருந்திய தரும நாதர்பின் கலியிற் றிகழ்ந்தகோட் டீச்சுர ரென்னப்
பெருந்திரு வளிக்கும் பெயர்பெரி தணிந்த பிஞ்ஞகர் வழங்கிய வரத்தால். 1

அரியமா தவங்க ளுழந்தமூ தறிவி னான்றவர் தாங்களே யன்றிப்
பெரியபா தகங்க ளுழந்தவர் தாமும் பிறங்கிய வாதிமா நகரை
உரிமையால் வழிபட் டும்பரார் கதியி னுற்றுமேல் வீட்டினை யடைய
எரிகுலா நிரய நீந்துவா ரின்றி யமநகர் வறுமைகூர்ந் ததுவே. 2

பனைவகிர்ந் தனைய படர்மருப் பெருமைப் பாகன்மற் றனையது நோக்கி
வினையிலி கொடுத்த வெனததி காரம் வீழ்தர வுயிர்க்கெலா மேன்மை
தனையளிக் கின்ற தாதிமா நகரந் தானலா விலையத னிடத்தே
முனைவன தருளாற் பெறுவலென் றுன்னி முன்னினு னத்தகு பேரூர். 3

---

1. பேரூரிலே எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் கிரேதாயுகத்தில் விசுவ நாதர் என்றும், திரேதாயுகத்தில் அமுதலிங்கேசர் என்றும். துவாபரயுகத்தில் தருமநாதர் என்றும், கலியுகத்தில் கோட்டீச்சுரர் என்றும் முன்பு விசுவாமித்திர முனிவருக்கு வழங்கிய வரத்தால் பெருஞ்செல்வத்தை அளிக்கும் பெயரைப்பெற்று விளங்குவார்.

பெருந்திரு - மிக்க செல்வம்; முத்தித்திரு எனினுமாம்.

2. செய்து முடித்தற்கு அருமையான தவங்களை வருந்திச்செய்த பேரறிஞரே யன்றி, பெரிய பாதகங்களை வருந்துமாறு செய்த பாவிகளும் விளங்கும் ஆதிபுரியை யடைந்து வழிபட்டுத் தேவருலகை யடைந்து, பின்பு மேம்பட்ட வீட்டுலகத்தை அடையுங்காரணத்தால் அக்கினிநரகம், கும்பிபாகம், தப்தகும்பம் முதலிய நரகங் களில் சென்று அழுந்துவாரின்றி இயமனுடைய நகரம் பாழடைந்தது.

உழத்தல் - வருந்திச்செய்தல். மூதறிவு - பேரறிவு. ஆன்றவர் - அகன்றவர், விசாலமுடையார். உம்பர் - தேவர்கள். எரிகுலாம் நிரயம் - அக்கினி நரகம்; தப்த கும்பம்.

3. பனைமரத்தைப் பிளந்தாற்போன்று படர்ந்து விளங்கும் கொம்புகளை உடைய எருமைக்கிடா வாகனத்தைச் செலுத்தும் இயமன் பாழடைந்த தன் செயலைப் பார்த்துச் சிவபெருமான் எனக்கு அருளிய அதிகாரம் கீழாக, உயிர்கட் கெல்லாம் மேன்மையை அளிப்பது ஆதிபுரியையல்லாது வேறில்லை. ஆகலின்,

வேறு

தக்கிண கங்கையின் றிரஞ் சார்ந்தனன்
பொக்கமி லன்பொடும் புனலிற் றோய்ந்தனன்
அக்கமும் பூதியு மணிந்து மெய்யெலாம்
நக்கனர் கோயின்மு னண்ணித் தாழ்ந்தனன். 4

மணிமலி கோயிலை வலம்வந் துள்புகுந்
தணிமலி பட்டி நா யகரை யண்ணினர்
பிணிமலி பெரும்பவம் பெயர்க்குஞ் செம்மலைப்
பணிமலி யன்பினற் பரசிப் போற்றினன். 5

மரகத வல்லியின் மலர்ப்ப தங்களைச்
சிரமிசை யணிந்துளந் தேனித் தங்ககன்
றிரசத மன்றமு மிறைஞ்சிப் பாங்குபோய்ப்
பரகுமைந் தெழுத்தையு முறையிற் பன்னினன். 6

அந்தகு பேருரையடைந்து சிவபெருமானருளால் மீண்டும் என் அதிகாரத்தைப் பயனுடையதாக்கச் செல்வேன் என்று எண்ணினன்.

வகிர்ந்தனைய - பிளந்தாற்போன்று. மருப்பு - கொம்பு. எருமைப்பாகன் - இயமன். வினையிலி - சிவபெருமான். விழ்தர - கெட. முனைவன் - முழுமுதற்கடவுள். முன்னினன் - நினைந்தான்.

4. தட்சிணகங்கையாகிய காஞ்சிநதி தீரத்தையடைந்தான்; பொய்ம்மை இல்லாத மெய்யன்புடனே அதில் முழுகினன்; உடம்பு முழுதும் விபூதியும் உருத்திராக்கமுமணிந்து சிவபிரான் கோயிலையடைந்து சந்நிதியில் வணங்கினன்.

பொக்கம் - பொய். நக்கன் - சிவபிரான்.

5. அழகுநிறைந்த கோயிலை வலமாக வந்து, உள்ளே புகுந்து, அடைந்தோர் நோய்நிறைந்த மிக்க பிறப்பை அழிக்கும் அழகு மிக்க பட்டிநாயகராகிய சிவபெருமானை வணக்கமிக்க அன்பினல் துதித்து வணங்கினன்.

மணி - அழகு, இரத்தினம். அண்ணினர் - அணுகினேருடைய. டவம் - பிறப்பு. பணிதல் மலிந்த அன்பு என்றது தாழ்வெனுந் தன்மையுடன் கூடிய அன்பினை. பரசி - துதித்து.

6. மரகதவல்லியம்மையின் மலர்போன்ற திருவடிகளைச் சென்னியிற்சூடி, மனம் இன்புற்று, அவ்விடத்தைவிட்டு நீங்கி, வெள்ளியம்பலத்தையும் வணங்கிப் பக்கத்திலேசென்று யாவரானும் துதிக்கப்படும் திருவைந்தெழுத்தையும் விதிப்படி கணித்தான்.

தேனித்து - இன்புற்று. முறையின் - விதிப்படி.

அற்றைநா ளொழிதர வலரி கீழ்த்திசை
உற்றெழு மற்றைநா ளுஞற்று நாட்கடன்
முற்றுவித் தருட்குறி முறையிற் றாபியாப்
பொற்றபூ சனையெலாம் பொருந்தச் செய்தனன். 7

பன்னெடுங் காலங்கள் பரவிப் பூசனை
இன்னருட் குரியனா யியற்றுந் தென்றிசை
மன்னவன் மகிழ்கொள மழவெள் ளேற்றின்மேல்
என்னையா ளுடையவ னெதிர்நின் றானரோ. 8

கண்டனன் றென்றிசை காவல் பூண்டவன்
தண்டென விழுந்தனன் தழுத ழுப்பநா
விண்டனன் றுதிபல விழியி னீருகுத்
தண்டனே சயசய சயவென் றார்த்தனன். 9

---

7. அன்றையதினம் செல்ல, மறுநாள் உதயகாலத்தில் செய்யவேண்டிய நாட்கடன்களைச் செய்துமுடித்து, சிவலிங்கமூர்த்தியைத் தாபித்து, அழகிய பூசனைகளையெல்லாம் விதிப்படியே செய்தான்.

அலரி - சூரியன். உஞற்றும் - செய்யும். நாட்கடன் - நித்தநியமங்கள். அருட்குறி - சிவலிங்கமூர்த்தி. முறையில் தாபித்து - சிவாகம விதிப்படி பதிட்டை செய்து. பொற்ற - அழகான.

8. பலகாலங்கள் துதித்துப் பூசித்துத் திருவருளுக்குப் பாத்திர முடையவனாகிய இயமன் மகிழ்ச்சியையடைய இடபவாகனத்தின்மேல் என்னையாளுடைய சிவபெருமான் காட்சி தந்தருளினர்.

பூசனையின் - பூசைசெய்தலால். மழவெள்ளேறு - இளமையையுடைய வெள்ளிய இடபம். "மழவுங் குழவும் இளமைப் பொருள" (தொல்).

9. தெற்குத்திக்குப் பாலகனாகிய இயமன் சிவபெருமான் காட்சிதந்தருளியமையைக்கண்டு, தண்டுபோலக் கீழே விழுந்து வணங்கியெழுந்து நின்று, நாத்தழுதழுப்பத் துதிகள்பலவற்றையும்சொல்லி, கண்களில் ஆனந்தக்கண்ணீர் வாரச் சிவபரம்பொருளே! சய சய சய என்று பலமுறைகூறி ஆரவாரித்தான்.

விழுந்தனன், விண்டனன் - முற்றெச்சங்கள்.

அன்புசெய் தருமனை யறவெள் ளேற்றினான்
இன்புற நோக்கிநீ யெண்ணுங் காரியம்
என்புக லாயென விறைஞ்சி யந்தகன்
தன்படர் கருத்தினைச் சாற்றன் மேயினான். 10

வேறு

அறத்தி னீடிய விச்சுவா மித்திர னடிமைத்
திறத்தின் வாங்கிய வரத்தினாற் செறிந்தநா னிலத்து
மறத்தி னீடிய பாதக வுயிரும்வந் தடுத்துப்
பிறத்தன் மேவுறாக் கதிபெறு கின்றன வதனால். 11

அடிகண் முன்னெனக் கருளினா லருளிய வரசு
விடுதி பெற்றிட மிடியிடைப் பட்டுவந் தடைந்தேன்
கடிமலர்க் கொன்றைக் கண்ணியாய் கருணையா லதனை
முடிய வுய்க்குமா றருளென முறைமுறை பணிந்தான். 12

---

10. தன்பால் அன்பைச் செய்யும் இயமதருமனைத் தருமமாகிய வெள்ளிய இடபவாகனத்தையுடைய சிவபெருமான் இன்பமுண்டாகுமாறு கடைக்கணித்து, நீ நினைந்த செயல் யாது சொல்வாய் என்று அருள்செய்ய அந்தகன் வணங்கித் தான்வந்த செய்தியைச் சொல்லத் தொடங்கினான்.

அறவெள் ஏறு: அறம் - தருமம். சிவபெருமானுக்குத் தருமதேவதை ஒரு இடபவடிவாய் வாகனமாயிற்று; திருமால் ஒரு விடைவடிவாய்த் தாங்கினார்; இங்கே தருமவிடையைக் கூறிற்று. தருமம் வெண்ணிறம். அந்தகன் - இயமன். படர் கருத்து - வந்த எண்ணம்.

11. தருமநெறி மிக்க விசுவாமித்திரமுனிவர் செய்த தொண்டின் வன்மையால், பெற்ற வரத்தின் காரணமாக நிறைந்த உலகத்துப் பொருந்தும் முதிர்ந்த பாவச் செயல்களையுடைய உயிர்களும் வந்து அடுத்துப் பிறவாதநெறியையுடைய முத்தியைப் பெறுகின்றன. அதனால்,

அடிமைத்திறம் - தொண்டின் பெருமை. மறம் - பாவம். கதி - முத்தி.

12. தேவரீர் முன்பு எனக்குக் கருணையினால் கொடுத்த அரசு ஒய்வுபெற வறுமைப்பட்டு இங்கு வந்தடைந்தேன். கொன்றைமலர்க் கண்ணியை யணிந்த சிவபெருமானே! கருணையால் அவ்வரசு முடியச் செலுத்துமாறு அருளுக என்று விண்ணப்பித்துப் பலமுறை வணங்கினான்.

அடிகள் - சுவாமி.

செய்ய கோல்கொடு தென்புலத் தரசுசெ யியமன்
நைய வுள்ளக நவிற்றிய முறையினைக் கேளா
உய்ய வானவ ரொலிகடல் விடமிடற் றடக்கும்
ஐய னாங்கவன் மகிழ்கொள வருளினீ தறையும். 13

யாங்கு நல்வினை யியற்றினு மியற்றினர் தம்பால்
ஓங்கு நின்விரை யாக்கலி யுறுவதோ வன்றே
தீங்கு நீங்கநல் வினைபுரி செம்மையி னாரே
ஈங்கு நம்வயி னன்பரா யிருங்கதி யடைவார். 1

தீவி னைத்திறஞ் செய்குந ரிற்றைநாண் முதலா
மேவு மிந்நக ரிடத்துறு விழைவில ராகி
ஓவி நின்விரை யாக்கலிக் குட்படு வார்கள்
தாவி லாதநின் னரசினைச் சார்மதி யென்றான். 15

இறைவ னின்னண மருளியங் கிலிங்கத்தின் மறைய
நிறைம கிழ்ச்சியி னேரெதிர் வணங்கிநீ டியமன்
மிறைசெ யள்ளல்கண் மிடைதரு தன்னகர் மேவி
முறைசெய் தாருயிர்க் குறுதிசெய் திருந்துவாழ்ந் தனனால். 16

---

13. செங்கோல் ஏந்தித் தென்புலத்திலே அரசு செய்திருக்கும் இயமன் மனம்வருந்திச் சொல்லிய நீதியைக்கேட்டுக் கடல் விடத்தைக் கண்டத்திலடக்கிய சிவபெருமான் அவன் மகிழும்படி அருளினால் இதனைச் சொல்வார்.

செய்யகோல் - செங்கோல், நீதி. முறை - நீதி, தன்மை.

14. எந்தவிடத்தில் நல்வினை செய்யினும் அந்த நல்வினையாளரிடத்து உன்னுடைய உயர்ந்த ஆணை செல்லக்கடவதாமோ? தீமைகள் நீங்க நல்வினை செய்யும் சிறந்த உயிர்களே இங்கு நம்மிடத்து அன்புபூண்டொழுகி முத்திப் பேற்றை அடைவன.

யாங்கு - எவ்விடத்து. நல்வினை - சிவபுண்ணியம். விரையாக்கலி - ஆணை. செம்மையினார் - சிறந்தோர்கள்.

15. தீய செயல்களைச் செய்யும் உயிர்கள் இன்று முதலாக இந்த நகரத்தை அடையும் விருப்பிலராய் நீங்கி, நுன் ஆணைக்குட்படுவார்கள். ஆகலின், நீ நீங்காத உன் அரசினை நடத்தும் பொருட்டுச் செல்வாய் என்று அருள் செய்தார்.

விழைவு - விருப்பம். ஓவி - நீங்கி. தா இலாத - கெடாத.

16. சிவபெருமான் இவ்வாறு இயமனுக்கு அருள் செய்து அவ்விடத்து இலிங்கத்திலே மறைய, நிறைந்த மகிழ்ச்சியோடு நேராக வணங்கி, இயமன் துன்பத்தைச் செய்யும் நரகங்கள் நெருங்கிய தன்னுடைய நகரத்திற் பொருந்தி நீதி செலுத்தியிருந்து உயிர்களுக்கு உறுதியை யுண்டுபண்ணி வாழ்ந்திருந்தான்.

என்ற சூதனை முனிவரர் வினவுவார் பாவ
நன்று செய்குந ராதிமா நகர்நய வாமே
ஒன்று தென்புலத் துறுவரே லபுத்தியாற் றலங்கள்
வென்று தீவினை கதிதரு மென்பது விணே. 17

ஆத லாலறிந் துறுதியால் வழிபடுந் தவரே
மேத குங்கதி விரவுவ ரென்பது தகுமோ
சூத மாதவ வென்றலுஞ் சூதன்மா தவர்கட்
கேத நீங்குறக் கடாவினுக் கெதிர்விடை கொடுப்பான். 18

புண்ணி யம்புரி வார்பிற வாநெறி புக்கான்
மண்ணின் மீட்டும்வந் துருருடன் வான்கதி பெறுவார்
நண்ணு தீவினை யுடையவர் நணுகின்மற் றவர்போல்
எண்ணு முத்தியிற் கலப்புறு மியல்புற மாட்டார். 19

மிறை செய் அள்ளல் - துன்பஞ்செய்யும் நரகம். மிடைதரு - நெருங்கிய. அள்ளல்கள் மிடைதரு - இருபத்தெட்டுகோடி நரகங்கள் நெருங்கிய என்க. அவை கும்பிபாகம் முதலியன.

17. என்றுகூறிய சூதமுனிவரை நைமிசாரணிய முனிவர்கள் கேட்பார்கள்: பாவத்தை மிகுதியும் செய்கின்றவர் ஆதிபுரத்தை விரும்பாமல் பொருந்திய இயம புரத்துக்குச் செல்வாராயின் அபுத்தி பூர்வமாகத் தலங்கள் தீவினைகளைப் போக்கி முத்தியைக் கொடுக்கும் என்பது வீண்தானே?

அபுத்தி பூருவம் - நினையாமல் வருவது. புத்திபூருவம் - நினைந்துவருவது.

18. ஆகையால் தெரிந்து உறுதிப்பாட்டினல் வழிபாடுசெய்யும் தவசிகளே மேம்பட்ட முத்தியை யடைவார் என்பது தக்கதாமோ? என்று கேட்டவுடன் சூதமுனிவர் அவர்கள் துன்பம் நீங்கும்படி வினவுக்குரிய விடையைச் சொல்வாராயினர்.

அறிந்து - புத்திபூர்வத்தால்.

19. சிவபுண்ணியம் செய்பவர்கள் பிறவா நெறியை அடைந்தால் பூமியில் மறுபடியும்வந்து பிறவாராய் உடனே சிறந்த விட்டுலகத்தை அடைவார். தீவினையைச் செய்தவர்கள் அங்கே சேர்ந்தால் முற்கூறியவர்களைப்போல முத்தியிலே கலக்கும் தன்மையை அடையமாட்டார்.

போதி மாநகர் புகுந்திடும் புண்ணியத் திறத்தால்
தீது தான்பெரி தொழிதர வெஞ்சுதீ வினையைக்
காது கூற்றிடைக் கழீஇமறு பிறப்பிற்பே ரூர்புக்
கேத நீங்கவான் முத்தியி லிரண்டறக் கலப்பார். 20

அல்ல தூஉமறன் கடைபுரி வார்தொல்லை யறத்தான்
நல்ல நெஞ்சின ராயறன் கடையினை நடுங்கி
ஒல்லை யாதிமா நகர்புகுந் தொழுக்கொடும் பணியின்
வல்லை நீத்திருள் வினையினை வரம்பிலின் புறுவார். 21

ஈது தீவினை யாளர்பே ரூர்வயி னெய்துங்
கோதி லாதநற் பயன்பய னின்மைகூ றிலமற்
ருதி நாயக ரயன்றனக் கருளுமந் நகரின்
மூது மான்மியங் கேட்கென மொழிகுவன் சூதன். 22

அந்தகனரசுபெறுபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1501

---

20. அரசவனத்திலே செல்லும் புண்ணியத்தன்மையால் தீமை மிகுதியும் அவரைவிட்டுநீங்க, மிகுதியான தீவினையை இயமலோகத்திலேசென்று அதற்குத் தக்கபடி தண்டனையை அனுபவித்துத் தொலைத்து, மறு பிறவியில் பேரூரை அடைந்து குற்றம் நீங்கச் சிறந்த முத்தியில் இரண்டறக் கலப்பார்.

எஞ்சு - மிகுதியான. ஏதம் - குற்றம்.

21. அஃதன்றியும், பாவத்தொழில் செய்வோர் முன்புசெய்த நல்வினையால் நல்ல மனத்தை உடையவராய்ப் பாவம் செய்தற்கு நடுநடுங்கி, விரைந்து ஆதி புரியை அடைந்து, நல்லொழுக்கம் உடையராய்த் திருத்தொண்டு செய்திருந்து, தீவினையை விரைவிற்போக்கி, எல்லையில்லாத இன்பத்தை அடைவார்கள்.

அறன்கடை - பாவத்தொழில். தொல்லை - முன்பு. ஒல்லை - விரைவு. பணி - திருத்தொண்டு. இருள் வினை - தீவினை.

22. தீவினைபுரிவோர் பேரூர்த் தலத்துக்குச் செல்லும் குற்றமற்ற நல்ல பயன் இதுவாகும். பயனில்லாமையை நாம் கூறேம். ஆதிநாயகர் பிரமதேவருக்கு அருள் செய்த அந்த நகரத்தின் பழைய பெருமைகளைக் கேட்பீர்களாக என்று சூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

இருபத்தாருவது
தலவிசேடப்படலம்

பொற்பங் கயப்பூம் பொகுட்டணையிற் புலவ னிறைவ னருளாலோர்
கற்பந் தனிற்பல் லுயிருலகங் கண்டு பரம னூர்தலங்கள்
சிற்பந் திகழப் பலசமைத்துத் தீர்த்தம் பலவு மினிதுறீஇ
அற்ப வுணர்வா லிறுமாப்புண் டமர்ந்தா னந்த வமையத்தில். 1

பின்னற் சடிலத் தெம்பெருமான் பேரூர் வரைப்பு மந்நகரின்
மின்னற் கனக மணிகொழிக்கும் விரைநீர்க் காஞ்சித் தடநதியும்
நின்னிற் படைக்கப் பட்டனவோ நினையா யென்று நெடுவிசும்பின்
மன்னிப் பொலிந்தங் கொருவாக்கு வயங்க வதனைக் கேட்டெழுந்தான். 2

நினைத்தார்க் கினிக்கும் பேரூரி னீடும் பெருமை வினையறிவான்
தனைத்தா ழமரர் முனிவருடன் சார விமைய மால்வரைப்பால்
நனைத்தா துகுக்கும் பொழிற்கயிலை நண்ணித் துதிகள் பலநவின்று
வினைத்தா ளறுக்கும் பெருமானை விரையார் பாதம் பணிந்திரந்தான். 3

---

1. தாமரை மலராதனத்தையுடைய பிரமதேவன், சிவபெருமான் அருளால் ஒருகற்பத்திலே பலவகைப்பட்ட உயிர்களையும் உடைய உலகத்தைப்படைத்து, சிவபெருமான் வீற்றிருந்தருளும் தலங்கள் பலவற்றையும் அழகு விளங்க ஆக்கி, தீர்த்தங்கள் பலவும் நிருமித்துச்சிற்றறிவால்செருக்குற்றிருந்தான். அச்சமயத்தில்;

பொற்பங்கயம்-பொற்றாமரை. பூம்பொகுட்டணை-தாமரைப் பூங்கொட்டையாகிய பீடம். புலவன் - தேவன்; பிரமன். அற்பவுணர்வு - சிற்றறிவு. இறுமாப்பு - செருக்கு.

2. முறுக்கிவிட்ட சடையினையுடைய சிவபெருமானுடைய பேரூர்த்தலமும், அந்நகரில் விளங்கும் காஞ்சிநதியும் உன்னாற் படைக்கப்பட்டனவோ? அதனை எண்ணுக என்று ஆகாயவாணி கூறக்கேட்டு எழுந்தான்.

பின்னற் சடிலம் - பின்னிவிட்டசடை. மின்னல் - ஒளி. நெடுவிசும்பின் ஒருவாக்கு - பெரிய ஆகாயத்தில் தோன்றிய ஒருசொல்.

3. எண்ணினேருக்கு இன்பந்தரும் பேரூரின் சிறந்த மகிமைகளைக்கேட்டு அறியும் பொருட்டுத்தன்னை வழிபடும் தேவர் முனிவர்களுடன் கூடி இமயமலைச் சாரலில் உள்ள சோலைகள் சூழ்ந்த கயிலாயத்தை அடைந்து பலதுதிகளைச்செய்து வினைகளை வேரோடு கெடுத்தருளும் சிவபெருமான் திருவடித் தாமரைகளை வணங்கி இரந்தான்.

ஆதி புரியு மந்நகரி னறல்வார்த் தோழுகுந் தடநதியும்
ஏத மனுக்கும் பொருள்பலவு மென்னு லியன்ற வல்லவென
ஓது நெடுவான் மொழிகேளா வுண்மை யுணர்ந்திங் கதன்பெருமை
வேத முதல்வா நின்பாங்கர் வேட்டேன் கேட்க வெனத்தாழ்ந்தான். 4

ஊற்றும் விழிநீர் மணிமார்பத் தொழுக வென்பு நெகவன்பு
தோற்றும் பணிமென் மொழிகுழறத் தொழுது குடந்தம் பட்டெதிரே
போற்று மலரோன் வழிபாட்டின் பொலிவு நோக்கிப் புரமூன்று
நீற்றுந் தவள நீற்றழகர் நிகழ்பே ரருளா லருள்செய்வார். 5

வண்டு முரலத் தேன்றுளிக்கும் வனசப் பொகுட்டு நான்முகத்தோய்
பண்டு பூர்வ பரார்த்தத்துப் படைக்கு மாற்றல் பெறுபாக்குத்
தொண்டு புரிந்தெம் மடிப்பூசை சூழ்ந்தா யந்நா ளாதிநகர்
அண்டர் வியப்ப நாந்தாமே யாக்கி நடனம் புரிந்தேமால். 6

வினய் - வினவி. அறிவான்: வானீற்று வினையெச்சம். வரைப்பால் - மலைச் சாரல். நனை - அரும்பு. தாது-மகரந்தப்பொடி. உகுக்கும்-சிந்தும். வினைத்தாள் - வினைகளின்வேர்.

4. ஆதிபுரியும், அந்த நகரிடத்து நீர் நிறைந்து ஓடும் நதியும், துன்பங் களைக் கெடுக்கும் பல பொருள்களும் என்னுல் படைக்கப்பட்டன அல்ல எனக் கூறிய ஆகாயவாணியின் உண்மையை உணர்ந்து அதன் பெருமையை வேத முதல்வரே! தேவரீர் இடத்திலே கேட்க விரும்பினேன் என்று வணங்கினுன்.

அறல் - நீர். ஏதம் அனுக்கும் - துன்பத்தை அழிக்கும். வான்மொழி - ஆகாயவாணி. நின்பாங்கர் - நின்னிடத்து.

5. அழகிய மார்பிலே கண்ணீரொழுக, என்பு நெக்குருக, அன்பினுல் வெளிப்படும் மொழி தழுதழுக்கத் தொழுது வணங்கித் துதிக்கும் பிரமன் வழி பாட்டின் தன்மையைப் பார்த்துத் திரிபுரத்தை நீருக்கிய சிவபெருமான் கருணை யுடன் அருள்செய்வாராயினர்.

விழிநீர் - கண்ணீர். குடந்தம்படுதல் - வணங்குதல். நீற்றும் - பொடி செய்யும். தவளநீறு - வெண்ணிற விபூதி.

6. வண்டுகள் ஒலிக்கத் தேனைத் துளிக்கின்ற மலர்ப் பீடத்தையுடைய நான்முகனே! முன்னே பூர்வபரார்த்தத்திலே படைக்கும் வலிமையைப் பெறும் பொருட்டுத் தொண்டுசெய்து எம்முடைய திருவடியிற் பூசைபுரிந்தாய். அக்காலத் திலே தேவர்கள் வியப்படைய நாமே ஆதிபுரியை உண்டாக்கி அங்கே நடனம் செய்தோம்.

முரல - ஒலிக்க. வனசம் - தாமரை. பெறுபாக்கு: பாக்கு வினையெச்ச விகுதி; எதிர்காலம் காட்டியது. ''வான்பான் பாக்கென்பன அவ்வெச்சவிகுதிய வாகிய மொழிகளையுணர்த்தி நின்ற குறிப்புச்சொல்'' என்ருர் சங்கரநமச்சிவாயர்.

அன்று தொடங்கிப் பலவுயிரு மருளிற் கலப்பச் சதாகாலம்
நின்று நடனம் புரிகின்ரு நெடிய வெள்ளி வரையாயுந்
துன்று வளத்தி ஞங்கெழுந்தாந் தூய நமது முடிக்கங்கை
என்று மொழுகுங் காஞ்சிநதி யென்னத் தழங்கித் தவழுமால். 7

வரியா ரளிமென் மலருழக்கும் வயல்கள் புரக்குங் காஞ்சிநதி
பிரியா திருக்க வெனநம்மைப் பெரிது மிரந்து கொளும்வரத்தால்
விரிநீள் சினைப்பிப் பிலவனமே விளங்கும் பேரத் தாணியென
வரிவாட் டடங்க ணுமையோடு மகிலந் தொழவிற் றிருக்கின்ரும். 8

அறவா ணர்கள்போற் றிடும்பேரு ரழியா வெமக்கோ ரிடமாகி
உறவா மதனு லெமைப்போல வுலவா ததனுக் கொருசான்றங்
கிறவாப் பனையொன் றுளதன்றி யின்னு மநேக விம்மிதங்கள்
சிறவா நின்ற வதற்கொப்புச் செப்பி னெமக்து மொப்புளதாம். 9

---

7. அன்றுமுதலாகப் பல உயிர்களும் அருளிலே கலக்கும்படியாக அனவரதமும் நடனம் செய்கின்ரேம். வெள்ளிமலையாகவும் மிக்க வளப்பத்துடனேகூடி விளங்குகின்ரேம். பரிசுத்தமாகிய நமது முடியிலேயுள்ள கங்கையானது என்றும் பெருக்கெடுத்து ஓடும் காஞ்சிநதியென்னும் பெயருடனே ஒலித்துத் தவழ்ந்து செல்லும்.

சதாகாலம் - அனவரதமும். தழங்கி - ஒலித்து.

8. வயல்களைப் பாதுகாக்கும் காஞ்சிநதியானது பிரியாதிருக்க வேண்டும் என்று மிகவும் இரந்து பெற்ற வரத்தினுல் அரசவனமே நமது அத்தாணி மண்டபம் என்று சொல்லும்படி உமாதேவியோடு உலகமெல்லாம் வணங்கும்படி அங்கே விற்றிருக்கின்ரேம்.

வரி ஆர் அளி - ரேகைகளையுடைய வண்டுகள். உழக்கும் - கிண்டும். சினை - கிளைகளையுடைய. அத்தாணி - அரசிருக்கை. அரி வாள் தடங்கண்: செவ்வரி பரந்த ஒளிபொருந்திய பெரிய கண்கள். அகிலம் - உலகம்.

9. தவசிகள் வணங்கும் பேரூர் விட்டு நீங்காத ஒரு இடமாகிப் பொருந்தும். அதனுல் நம்மைப்போலவே அழிதலில்லாத அவ்விடத்துக்குச் சான்ருக இறவாப் பனையொன்று உள்ளது. அல்லாமல் இன்னும் பல ஆச்சரியங்கள் சிறப்பாக உள்ளன. அந்தலத்துக்கு உவமையொன்று சொல்லின் எமக்கும் உவமை ஒன்று உள்ளதாகும்.

அறவாணர் - தவசிகள். உறவு - பற்று. உலவாத - கெடாத, அழியாத.

இறவா மையையவேட் டவரெல்லா மெறிநீர்க் காஞ்சி மருங்குடுத்த
பிறவா நெறியென் றுலகேத்தும் பேரூ ரெல்லை யினிதடுத்து
மறவா தெம்மை வழிபட்டு மரியா வுடலின் வசிக்கின்ருர்
பிறவா மையைப்பெற் றவர்தாமும் பேசி னலகி லடங்காரால். 10

வேறு

விச்சுவா மித்திர னென்னு மெய்த்தவன்
பொச்சமி றவம்பல புரிந்தி யாவர்க்குங்
கைச்செழுங் கனியெனக் கதிகி டைக்குமா
றெச்சமில் வரம்பல விரந்தங் கேற்றபின். 11

உத்தம வசிட்டனே டுடன்று விச்சுவா
மித்திரன் வேதிய முனிவ ஞகுமா
றத்தலத் தருந்தவ மாற்று நாளையில்
வைத்தனன் றிரிசங்கை வானத் தின்புற. 12

ஆதலா லத்தலத் தருந்த வஞ்செயின்
மேதகு பயனெலாம் விரைவி னெய்துறும்
போதினுய் திரிசங்கு புலவர் நாடுறுங்
காதையுங் கேளெனக் கரை தன் மேயினுர். 13

---

10. சாவாத்தன்மையை விரும்பினேர் யாவரும் அலைவீசும் காஞ்சிநதியை அடுத்துள்ள பிறவாநெறியென்று உலகத்தோர் துதிக்கும் பேரூரைப்பொருந்தி, மறவாமல் எம்மைப்பூசித்து அழியாத உடம்புடன் வசிக்கின்றனர். அன்றியும், பிறவாத்தன்மையைப் பெற்ருேரும் அளவிடப்படாதவராவார்.

வேட்டவர் - விரும்பியவர். மரியா - இறவாத.மரியாவுடல் - சாவா உடம்பு. அலகு - கணக்கு.

11. விசுவாமித்திர முனிவர் பொய்ம்மையில்லாத பல தவங்களைச்செய்து எல்லோருக்கும் உள்ளங்கை நெல்லிக்கனிபோன்று முத்தி கிடைக்கும்படியாக குறைவில்லாத பலவரங்களை வேண்டிப் பெற்றபின்பு.

பொச்சம் - பொய். எச்சம் இல் - குறைவில்லாத.

12. உத்தமராகிய வசிட்ட முனிவரோடு மாறுபட்டு விசுவாமித்திர முனிவன் பிராமணஇருடி ஆகுமாறு அந்தத்தலத்திலே மிக அரிய தவத்தைச் செய்திருக்கும்காலத்தில் திரிசங்கு என்னும் அரசனைவிண்ணுலகில்(சுவர்க்கத்தில்) இன்பமடையவைத்தான்.

உடன்று - மாறுபட்டு. வேதியமுனிவர் - பிரமருஷி.

13. ஆதலால் அந்தத்தலத்திலே அரிய தவத்தைச் செய்தால் விரைவிலே மேலான பயன்கள் கைகூடும், மலரவனே! தேவர்களும் விரும்பும் திரிசங்குவின் வரலாற்றையும் கேள் எனக் கூறினர்.

வேறு

கொங்கா தரிக்கு மாலைநெடுங் குடைக்கீ ழயோத்தி நகரிருந்து
செங்கோல் செலுத்து நாளந்தத் திரிசங் கென்னும் பெருவேந்தன்
நுங்கா விசும்பிற் கதியடைத னுதலு மனத்தா னரசொரீஇ
மங்கா விழைவிற் குருவான வசிட்ட முனிவன் மருங்கடுத்தான். 14

குளிர்மென் கமல மலர்மருட்டுங் குரவன் பாத முறவணங்கி
அளிமிக் கனைந்த மென்மொழியா லறைவான் பெரிய மாதவத்தோய்
இளிவந் திடுமண் ணரசிருக்கை யெனக்கு வெறுத்த தாதலினல்
ஒளிவந் திடும்விண் ணவர்வாழ்வி னுறுத்தென் றிரந்து பலதுதித்தான். 15

எடுத்த வுடலோ டிருந்துறக்க மெய்த விழைந்து தன்பாங்கர்
அடுத்த திரிசங் கெனுமரைய னார்வ நோக்கி வசிட்டமுனி
விடுத்து மொழிவா னதற்கேற்ற பருவம் விளைந்த திலைநினக்குத்
தொடுத்த கரும மினிச்சிலநா டொலையி னறிது மெனமறுத்தான். 16

போது - மலர். புலவர் - தேவர், அறிவுடையோர்.

14. வாசனை தங்கிய மாலைகளையுடைய பெரிய வெண்கொற்றக்குடை நிழலில் அயோத்தியாபுரியிலிருந்து அரசு செலுத்துங் காலத்தில் திரிசங்கு என்னும் பேரரசன் உம்முடைய கற்பகச் சோலைகளையுடைய விண்ணுலகத்திலே (மனித உடம்புடன்) தங்கும் கருத்துடையனாய் அரசாட்சியை விட்டு நீங்கிக் குறையாத விருப்பத்தையுடைய குருவாகிய வசிட்ட முனிவரைச் சென்று சேர்ந்தான்.

கொங்கு - வாசனை, தேன். நெடுங்குடை - வெண்கொற்றக்குடை. நும் கா விசும்பு; நுங்கா விசும்பு - அழியாத விண்ணுலகம் என்றும் கொள்ளலாம்.

15. தாமரை மலரையும் கெடச் செய்யும் வசிட்டமுனிவரது திருவடிகளில் விழுந்து வணங்கி, அன்பு நிறைந்த மென்மையான சொற்களால் சொல்லலாயினன். பெரியதவத்தையுடைய குருவே! இழிந்த மண்ணுலகத்தில் அரசுபுரிதல் எனக்கு வெறுப்பை விளைத்தது. ஆதலினல் ஒளிபொருந்திய தேவர் வாழ்விலே என்னைச் செலுத்துவீராக என்று வேண்டிப் பலபடியாகத் துதித்தான்.

மருட்டும்-மயங்கச்செய்யும். அளிமிக்கு அனைந்த-மிகுந்த அன்புபொருந்திய. இளி வந்திடும் - தாழ்வுடைய. ஒளி - தேஜஸ், புகழ். உறுத்துக - செல்விப்பீராக.

16. எடுத்த இந்த உடம்புடனே பெரிய விண்ணுலகத்தையடைய விரும்பித் தன்னையடுத்த திரிசங்குவின் ஆர்வத்தை நினைந்து வசிட்டமுனிவர் அவனை நோக்கி உனக்கு அங்கே செல்லுதற்கேற்ற பருவகாலம் வரவில்லை. உனக்கு நியதி செய்யப்பட்ட கன்மங்கள் சிலகாலம் அனுபவித்தொழியின் பிறகு அதனை ஆராய்வோம் என மறுத்துரைத்தார்.

அடங்காக் காதன் மனந்துரப்ப வனைய வசிட்டன் மைந்தர்தமை
மடங்கா முறையின் வழிபட்டு வரவு கூற மற்றவருந்
தொடங்காக் கரும மிதுவென்று துணிந்து தந்தை போன்மறுத்தார்
தடங்கா சினியா டிரிசங்கு தளர்ந்தன் னவர்மு னிதுகிளந்தான். 17

எந்தங் குடியி லடுக்கின்ரு ரெவர்க்கு மருளுங் குரவனென
நுந்தை சரணஞ் சரணடைந்தே னேக்கம் வழங்கா தொழித்திட்டான்
அந்த ணளிர் நுமையடுத்தேற் கவன்போல் வாளா தொழித்திட்டீர்
புந்தி விழைந்த வொருகுருவைப் புகல்கொண் டடைவல் கதியென்ருன். 18

பண்டு தொடங்கி வருங்குருவாற் பயனென் றிலையென் றவமதித்துத்
தொண்டு வேறு குருவின்பாற் ருெக்க விழைந்தா யாதலினுன்
மிண்டு நீச னுதியென விளைத்தார் சாப மதுவேற்றுக்
கொண்டு விசுவா மித்திரனைக் குறுகி விளைந்த பரிசுரைத்தான். 19

துறக்கம் - விண்ணுலகம். அரையன் - அரசன். பருவம் - பக்குவகாலம். தொடுத்த கருமம் - நியதி செய்யப்பட்ட கருமங்கள்; என்றது இந்த உடம்பிலே அனுபவிக்கவேண்டிய பிராரத்தகன்மத்தை. பிராரத்தம் அனுபவித்துத்தொலைக்க வேண்டுதலின் அவ்வாறு கூறினர்.

17. அடக்கமுடியாத ஆசை மனத்தைச் செலுத்துதலினல் அந்த வசிட்ட முனிவருடைய புத்திரர்களை விதிப்படி வழிபட்டுத் துதித்து, வந்த காரியத்தைச் சொல்ல, அப்புத்திரரும் இஃது இப்போது தொடங்குதற்குரிய செயலன்று என நிச்சயித்துத் தம்முடைய பிதாவைப்போலவே மறுத்துக் கூறினர். நிலவுலகத்தை ஆளும் திரிசங்கு மனந்தளர்ந்தவனய் அவரெதிரே இதனைச் சொன்னன்.

மனம் துரப்ப - மனத்தைச் செலுத்த; துரப்ப - தள்ள. காசினி - பூமி. கிளந்தான் - சொன்னன்.

18. எம்முடைய குலத்திலே தோன்றிய யாவருக்கும் திருவருளைப்புரியும் குலகுரு என்று மனத்துட் கொண்டு உம்முடைய தந்தையாகிய வசிட்ட முனிவருடைய திருவடிகளை அடைக்கலமாகப் புகுந்தேன். அவர் திருவருள் நோக்கம் செய்யாமல் புறக்கணித்துவிட்டார். பிராமணேத்தமர்களாகிய உங்களை வந்தடுத்தவனுகிய எனக்கு அருள்வழங்காமல் உமது தந்தையைப்போலவே சும்மா போக விட்டீர். ஆதலினல், என்மனம் விரும்பிய ஒரு குருவை அடைக்கலமாக அடைந்து விண்ணுலகத்தைப் பெறுவேன் என்ருன்.

குடி - குலம். அருளுங்குரவன் - அருட்குரு; குலகுரு. வாளாது - சும்மா. புகல் - அடைக்கலம்.

19. தொன்றுதொட்டு வருங்குருவால் பயன் சிறிதுமின்று என்று அவமதித்து வேறு குரவனிடத்திலே சென்று நீ தொண்டு செய்யவிரும்பிஞய் ஆதலினுல் நீசத்தன்மை அடைவாயாக என்று சபித்தனர். அச்சாபமொழியை ஏற்றுக்

அச்ச மகறி நீவேட்ட வரிய கதிதந் தனநாமென்
றெச்ச மறுங்கண் ணருள்வழங்கி யெச்ச மாங்கொன் றினிதியற்றி
வெச்சென் றமர ருளந்துளங்க விண்ணு ளரசன் சபையேற
நச்சு மணிவேற் றிரிசங்கை விடுத்தா னவையி லருந்தவத்தோன். 20

அசும்புங் கிரண மணிமோலி யமரர் பெருமான் சபைநாப்பண்
விசும்பி னெழுந்து திரிசங்கு மேவி யிருந்தா னிருத்தலொடுந்
தசும்பு நிகர்த்த முலைச்சசிதன் றலைவன் வெகுண்டு நீசனிவன்
பசும்பொன் னுலகில் வருவதே யென்று பாரி னுகமறித்தான். 21

வேறு

மறிந்து விழ்பவன் மாதவத் தலைவனை நோக்கி
அறிந்த விச்சுவா மித்திர வோலமிங் கடியேன்
செறிந்த விண்ணவர் தள்ளலிற் றிகைத்துவிழ் கின்றேன்
இறந்து ருவகை காத்திநீ யோலமென் றிசைத்தான். 22

கொண்டு விசுவாமித்திர முனிவரைத் திரிசங்கு சென்று அடைக்கலம்புக்கு நடந்த செய்திகளையறிவித்தான்.

ஒன்று - சிறிதும். தொண்டு - பணிவிடை. நீசன் - கீழ்மகன்; சண்டாளன். பரிசு - தன்மை.

20. அச்சம் சிறிதுமின்றி நீங்துக. நீ விரும்பிய அருமையான விண்ணுலகத்தை இவ்வுடம்புடன் சென்றடையச் செய்வேன் என்று குற்றமற்ற திருக்கண்ணோக்கம் செய்து, வேள்வியொன்றைச் சிறப்பாக இயற்றித் தேவர்கள் மனம் திடுக்கிடுமாறு இந்திரசபையை அடைய விரும்பும் திரிசங்குவை அரியதவத்தையுடைய விசுவாமித்திரர் அங்கே விடுத்தார்.

எச்சம்அறும் - குறைவற்ற. எச்சம்=எக்ஞம் - வேள்வி. துளங்க - கலங்க. நவை இல் - குற்றமில்லாத.

21. ஒளி துளும்பும் இரத்தின கிரீடத்தையுடைய இந்திரனுடையசபையின் நடுவில் ஆகாயவழிச் சென்று திரிசங்கு பொருந்தியிருந்தான். அவன் சபை நடுவில் இருந்த அளவில் தேவேந்திரன் கோபித்து நீசனாகிய இவன் பொன்னுலகத்துக்கு வருதல் ஒல்லுமோ என்று பூமியில்விழுமாறு அவனைத் தள்ளிவிட்டான்.

அசும்பும் - துளும்பும். மோலி - கிரீடம். நாப்பண் - நடுவிடம். தசும்பு - பொற்குடம். சசி - இந்திராணி. பொன்னுலகு - தேவருலகம். உக - விழும்படி.

22. தலைகீழாகப் பூமியை நோக்கிவிழும் திரிசங்கு விசுவாமித்திர முனிவரைப் பார்த்து யாவையு முணர்ந்த பெரியீரே! ஓலம். இங்கே தேவர்கள் என்னைத் தள்ளிவிட நான்திகைத்து விழுகின்றேன், அழிந்துவிடாதபடி என்னைப்பாது காத்தருள்க ஓலம் என்று கூறினன். மறிந்து - தலைகீழாக.

அஞ்ச னீயிது பற்றியந் தரத்திரு வென்று
விஞ்சு மாதவ விச்சுவா மித்திர னறுநெய்
எஞ்சு ருதுதூஞ் சுருக்கினை யெடுத்தெதிர் விடுத்தான்
தஞ்ச முற்றவ னதுதழீஇத் தங்கின னிடைவான். 23

அடைக்க லம்புகுந் தவற்கியா னருங்கதி கொடுப்ப
விடைக்க விண்ணவர் செய்வரே யென நனி வெகுண்டு
புடைக்க ணேசில வுடுக்களைப் பெயர்த்துறு புவனம்
படைக்க லுற்றனன் பண்ணவ ரனைவரும் பணிந்தார். 24

அந்த ரத்தவ னிருந்தவா றிருந்தரும் போகம்
எந்த வைகலுந் துய்த்திடத் துறக்கமாங் கியற்றித்
தந்த னன்பிரா மணமுனி யெனுந்தனிச் சிறப்பு
மைந்து கொண்டவம் மாதவன் பெற்றனன் மாதோ. 25

---

23. இதைப்பற்றி நீ அஞ்சாதே. அந்தரத்திலிருப்பாய் என்று மேம்பட்ட தவத்தையுடைய விசுவாமித்திர முனிவர் நல்ல நெய்யைக் குறைவின்றித் தூவும் சிருக்கை எடுத்து எதிரே விட்டார். அடைக்கலம் என்று வந்தவனாகிய திரிசங்கு அதனைத் தழுவிக்கொண்டு ஆகாய மத்தியில் தங்கினன்.

விஞ்சு மாதவம் - மேம்பட்ட சிறந்த தவத்தையுடைய. எஞ்சுறுது - குறைவின்றி.

24. அடைக்கலம் புகுந்தவனாகிய திரிசங்குவுக்கு நான் விண்ணுலக வாழ்வைத்தர அதனை விண்ணவர் தடுப்பரே என்று மிகச்சினந்து பக்கத்திலே சில விண்மீன்களைப் பெயர்த்தெடுத்து ஒரு உலகத்தைப் படைக்கத் தொடங்கினர். அதனைக் கண்டு தேவர்கள் யாவரும் வணங்கினர்.

இடைக்க - தடுக்க. உடு - விண்மீன். பண்ணவர் - தேவர்.

25. (விண்ணுலகிலிருந்து தலைகீழாக விழுந்த) திரிசங்கு அந்தரத்திலே இருந்தபடியே இருந்து எப்போதும் அரிய சுவர்க்க இன்பத்தை அனுபவிக்கும்படி விண்ணுலகத்தை அங்கே சிருட்டித்து (விசுவாமித்திர சிருட்டி) அளித்தவராகிப் பிராமண முனிவரென்ற தனிச்சிறப்பையும் வலியதவத்தையுடைய விசுவாமித்திரர் பெற்றார்.

அந்தரம் - ஆகாயம். எந்த வைகலும் - எப்போதும். துறக்கம் - சுவர்க்க லோகம்; அந்தரசுவர்க்கம். பிராமண முனி - பிரம இருடி. மைந்து - வலிமை.

58

இன்ன வாறெலாந் தவப்பய னினிதுமுற் றுதலின்
அன்ன வைப்பினைத் தவசித்தி புரவென வறைவர்
மன்னு மென்மலர் வாழ்க்கையோய் மற்றுமந் நகர்க்குப்
பன்னு பல்வகை நாமமும் பகருதுங் கேட்டி. 26

வேறு

அச்சுதன் முதலோர் காணு தமர்பர வெளிய தாய்நாஞ்
சச்சிதா னந்த மான தாண்டவ மியற்ரு நிற்ப
நிச்சலு மேல்பா லோங்கி நிற்றலாற் புலவ ரெல்லாம்
மெச்சுமந் நகர மேலைச் சிதம்பர மாய தன்றே. 27

எண்ணில்பல் வரைக்கும் வேந்தா மிமவரை யாதி போலா
வண்ண நம் வடிவாம் வெள்ளி மலையகத் திருத்த லானுந்
திண்ணிய பாத கங்கள் சீத்துவி டளித்த லானும்
நண்ணுமந் நகர்க்குத் தேர்ந்தோர் நாட்டுவர் பேரூர் நாமம். 28

---

26. இப்படியெல்லாம் தவத்தின் பயன் இனிது முதிர்தலால் அந்த இடத்தினைத் தவசித்திபுரம் என்று சொல்லுவார்கள். மலரவனே! மற்றும் அந்த நகரத்துக்குரிய பல பெயர்களையும் கூறுவோம் கேட்பாயாக.

முற்றுதலின் - முதிர்தலால்.

27. திருமால் முதலியோரால் காணப்படாமல் பரவெளியாய் நாம் சச்சிதானந்தமாகிய தாண்டவத்தைச் செய்வோம். நித்தியமாய் மேற்றிசையில் உயர்ந்து விளங்குவதால் தேவர்கள் யாவரும் புகழும் அந்த நகரம் 'மேலைச் சிதம்பரம்' என்னும் பெயர் பெற்றது.

அச்சுதன் - திருமால். சத்துச் சித்து ஆனந்தம் - சச்சிதானந்தம்; அநாதி நித்த மலபந்த ஆன்மாக்களைப்போல ஆக்கக் கேடுகளின்றி நிலைபேறுடைய அநாதி சுத்த முத்தத்தன்மையுடைமையால் சத்து எனவும், ஆன்மாக்களிடத்தில் வியஞ்சகமாய் நின்று உணர்த்துமாறுபோல் தனக்கோர் வியஞ்சகம் வேண்டாது விளங்கியும் விளக்கஞ்செய்தும் இயற்கையுணர்வினனாய் நிற்றலின் சித்து எனவும், மலபோதத்தால் ஆன்மாக்கள் மலைவுற்றுச் சிற்றறிவால் அனுபவிக்கும் சிற்றின்பங்கள் போலாது அன்னோர்க்கு முத்தியின்கண் பேரின்பமளிக்கும் வரம்பில் இன்பமுடையனாய் நிற்றலின் ஆனந்தம் எனவும் கூறினர். புலவர் - தேவர், ஞானிகள்.

28. அளவில்லாத பல மலைகளுக்கும் அரசனாக உள்ள இமயமலை முதலியவற்றைப் போலாது அழகிய நமது வடிவமாகும் வெள்ளிமலையினிடத்து இருத்தலானும், வலிய பாதகங்களை அழித்து வீட்டின்பத்தைத் தருதலானும், பொருந்திய அந்த நகரத்துக்கு அறிஞர் 'பேரூர்' என்னும் பெயரை நிலைப்படுத்துவர்.

வேந்து - அரசு; உயர்திணைப் பொருள்தரும் அஃறிணைச்சொல்; தூது என்பதும் அது. இமவரை - பனிமலை. மலையகம்; அகம் - ஏழனுருபு.

உத்தம நகரமீதென் றும்பர்கண் முதலா னேர்கள்
பத்தியிற் பணித லானும் பத்தியில் லாரு மங்கு
வைத்ததங் கரும முற்ற வைகினு மவர்க்கும் பத்தி
மெத்துத லானும் பத்தி புரியென விளக்கஞ் சாலும். 29

வந்தனர் பணிகின் றூர்க்கு வரம்பிலா னந்த மாங்கே
தந்திட லானு மோங்கற் றையலோ டெமக்குச் சால
வந்தில்வாழ்ந் திருக்கை தன்னி லானந்தம் விளைத லானும்
புந்தமிக் கருளு மந்தப் புரம்பரம் புரமென் றுமால். 30

மருவிய பாவ நீக்கி மனம்வெளிப் படுத்த லானுந்
துருவரு மேலா முத்திச் சுகமெனும் வெளிசார்ந் தோர்க்குத்
தருதலி னுனும் விண்ணோர் தகுதியின் வசித்த லானுங்
கருதிய தருள்பேரூரைக் ககனமா புரியென் பாரால். 31

எதனைமற் றெவர்கள் வேட்டங் கெய்தினு மதனை யன்னோர்
மதவுறப் பெறுத லானும் வளவிய வாசை யாதி
கதுமெனக் களைத லானுங் கண்ணு நர்க் கின்ப வெள்ளம்
புதுவதி னியலும் போத புரமெனப் படுமப் பேரூர். 32

---

29. மேலான நகரம் இதுவாகும் என்று தேவர்கள் முதலாயினேர் பேரன்புடன் வணங்குதலானும், அன்பு இல்லாதோரும் அவ்விடத்திலே தம்முடைய காரியங்கள் முடியும்பொருட்டுத் தங்கினுலும் அவருக்கும் பத்திபொருந்துதலானும் 'பத்திபுரி' என்னும் பெயர் பொருந்துவதாம்.

கருமம் - காரியம். முற்ற - முடியும்படி.

30. வந்து வணங்குகின்றவர்கட்கு அளவற்ற ஆனந்தம் அங்கே கொடுத்தலானும், பார்வதிதேவியாரோடு மிகவும் பொருந்தியிருத்தல் நமக்கு ஆனந்தத்தை விளைவித்தலானும், புத்தியை மிகுதியாகக்கொடுக்கும் அந்நகர் 'பரம்புரம்' என்று கூறுவர்.

ஓங்கல் - மலை. ஓங்கற்றையல் - பருவதராசகுமாரியாகிய பார்வதிதேவியார். அந்தில் - அசை.

31. பொருந்திய பாவங்களைப் போக்கி மனத்தை வெட்டவெளியாகச் செய்தலானும், ஆராய்ந்து காணமுடியாத மேலாகிய முத்திச்சுகம் என்னும் வெளி பொருந்தினேருக்குக் கொடுத்தலினுலும், தேவர்கள் அங்கே தகுதியுடன் வாழ்தலினுலும் அப்பேரூரைக் 'ககனபுரி' என்று கூறுவர்.

வெளிப்படுத்தல் - வெட்டவெளியாகச் செய்தல். துருவ அரும் - ஆராய்தற்கு அருமையான. ககனம் - ஆகாயம், வெளி.

32. யாதொன்றை யாரொருவர் விரும்பி அங்கே சென்றுலும் அதனை அவர்கள் மிகுதியும் பெறுதலானும், மிகுந்த ஆசை முதலிய குணங்களை விரைந்து

பெருகிய செல்வ மன்னிப் பேதுசெ யழுக்கா ருதி
திருகிய குற்ற நீக்கிச் செறிந்திடு மனைக டோறும்
மருவிய சிருங்கா ரத்தின் வண்குண நடித்த லாலே
பொருவினட் டியபு ரப்பேர் பூண்டது பேரூர் வைப்பு. 33

எவ்வகைத் திருவும் வேட்டோர்க் கியைக்குங்கா ரணத்தி னானும்
எவ்வகைத் திருவி னோடு மிருநிதி கூட லானும்
அவ்விய மனுக்கு மாதி தாண்டவ மாட லானும்
அவ்வியற் பேரு ராதி புரியென வகிலத் தோங்கும். 34

விண்ணவர் வியக்குஞ் செம்பொன் மேருமால் வரைபோந் தாங்கு
வண்ணநம் முருவ முற்றும் வன்மீக வுருவாய் மூடி
நண்ணலா லனைய பேரூர் வன்மீக நகர மென்றுந்
திண்ணிய செம்பொன் மேரு நகரென்றுந் திகழ்வ தாகும். 35

நீக்குதலானும், தியானிப்போருக்கு இன்பப்பெருக்கு புதுவதாகத் தோன்றுதலானும் அப்பேரூர் 'போதபுரம்' என்று சொல்லப்படும்.

மதவுற - மிகுதியாக. வளவிய - பெருக்கமுடைய. கதுமென - விரைவாக. கண்ணுநர்க்கு - தியானிப்போருக்கு. புதுவதின் - புதிதாக. போத - மிகுதியாக. போதல் - அழிதல். போதரல் - வருதல்.

33. மிக்கசெல்வம் நிலைபெற்று, மதிமயக்கத்தைச் செய்யும் பொறாமை முதலிய மாறுபட்ட குற்றங்களைப் போக்கி, நிறைந்த மனைகளிலெல்லாம் அன்பாகிய சிறந்த குணம் நடிக்கும் காரணத்தால் ஒப்பற்ற 'நாட்டியபுரம்' என்னும் பெயரைப் பேரூர் பெற்றுள்ளது.

நாட்டுதல் - நிலைபெறுத்தல். நாட்டம் - வாள், அசைவு. நாட்டியம்-கூத்து. பேது - மதிமயக்கம். அழுக்காறு - பொறாமை. சிருங்காரம் - அன்பு.

34. எத்தகைய செல்வத்தையும் விரும்பினோருக்குப் பொருந்தச் செய்யும் காரணத்தாலும், எப்படிப்பட்ட செல்வத்துடனும் மிக்க செல்வம் (சங்கநிதி பற்பநிதி) கூடுவதனாலும், பொறாமையைக் கெடச் செய்யும் ஆதிசத்தி நடனஞ் செய்தலினாலும் பேரூரானது ஆதிபுரி என்று உலகத்திலே மிக்குவிளங்கும்.

திரு - செல்வம். இருநிதி - சங்கநிதி பற்மநிதிகள். அவ்வியம் அனுக்கும் - பொறாமையை அழிக்கும்.

35. தேவர்கள் வியப்படையும் பொன்மேருமலை வந்தாற்போன்றுஅழகிய நமது வடிவ முழுவதும் புற்றுக மூடியிருத்தலால் அப்பேரூர் வன்மீக நகரம் என்றும், மேரு நகரமென்றும் பெயர் விளங்குவதாகும்.

வண்ணம் - அழகு. வன்மீகம் - புற்று.

துலங்கிய போக மெல்லா ந் துவன்றிவிண் ணமுதின் மேலாம்
இலங்கிரு நிதியி னீடி யுலோபரை யெய்த லின்றி
நலங்கிளர் மேருப் போன்ற நன்மையி னுனு மவ்வூர்
புலங்கெழு செம்பொன் மேரு புரியெனு மப்பேர் பூணும். 36

கலித்தவஞ் ஞானம் பெற்ருேர் கலாவுத லின்மை யானும்
ஒலித்தவிஞ் ஞானம் பெற்ருே ருறவுகொண் டேத்த லானும்
நலித்தஞர் யாகஞ் செய்வோர் ஞானிக ளாத லானுந்
தலத்துயர் பேரூர் ஞான புரமெனத் தக்க தாகும். 37

வேரொடு வினையைக் கீழ்ந்திட் டின்பங்கள் விளையா நிற்குஞ்
சீரொடு மெனதியா னென்னுஞ் செருக்கிலார்க் கிருக்கை யாகிப்
பேரொடு நிற்ற லாலே பிரமமா நகர மாகும்
பாரொடு வான நாளும் பணிதவ சித்தி வைப்பு. 38

---

36. விளங்குகின்ற போகமுழுதும் தோன்றி, விண்ணோர் அமுதத்தின் மேலாகிய இருநிதிபோலமிக்கு, உலோபத்தன்மை உடையாரை அடைதலின்றி நன்மையைப் பெருக்கும் மேருமலை போன்ற நன்மையையுடைமையானும் அப்பேரூர் நகர்களின் மிக்க 'மேருபுரி' என்னும் பெயரையுடையதாயிற்று.

துவன்றி - தோன்றி; நெருங்கி. இரு நிதியின் - இரு நிதிபோல; இன் ஐந்தனுருபு ஒப்பின் வந்தது, எல்லைப் பொருளெனினுமாம். நீடி - மிகுத்து. என்றது எடுக்க எடுக்கக் குறைவில்லாததாய் என்க. மேருபோன்ற நன்மை - மேருமலைபோலும் எவருக்கும் விளக்கமாய்த் தெரியும் நன்மை. புலம் கெழு - நகரங்களின் மிக்க; புலம் - இடம்.

37. தழைத்த அறியாமையுள்ளோர் ஆரவாரம் இல்லாமையாலும், ஞானமுடையோர் நட்புக்கொண்டு துதித்தலாலும், துன்பத்தைக் கெடச்செய்யும் யாகம் செய்வோர் ஞானிகளாக இருத்தலாலும் தலங்களிலே மேம்பாடுற்ற பேரூர் 'ஞானபுரம்' என்று சொல்லத்தக்கதாம்.

கலித்த - தழைத்த. அஞ்ஞானம் - அறியாமை. கலாவுதல் - பகை, கோபம் முதலியவற்ருல் ஆரவாரம் பண்ணுதல். உறவு - அன்பு. அஞர் நலித்த யாகம் - துன்பத்தைப்போக்கும் வேள்வி; ''கற்ருங்கெரியோம்பிக் கலியை வாராமே, செற்ருர் வாழ்தில்லைச் சிற்றம்பலம்...'' (சம்பந் - தேவா); '' அஞ்சிப்போய்க் கலி மெலிய அழலோம்பும் அப்பூதி, குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே.'' (திருநாவுக் - தேவா).

38. வினைகளையெல்லாம் வேரோடு அகழ்ந்திட்டு இன்பங்களையெல்லாம் விளைவிக்கும் யான் எனது என்னும் அகங்கார மமகாரமாகிய செருக்கற்ற பெருமக்களுக்கு இருப்பிடமாகிக் கீர்த்தியோடு நிலைபெற்றிருத்தலால் அப்பேரூர் பிரமமா

ஒன்னல ராவி மாய்க்கு முயர்மனு மறையோர் தம்மால்
துன்னுபா தகமாந் தெவ்வைத் தொலைத்திடப் பட்டோர் நாளும்
மன்னினர் போற்று மாற்ருன் வளர்குட சிதம்ப ரந்தான்
கொன்னவில் பெருமை சாலக் கொளுங்குருக் கேத்தி ரப்பேர். 39

மண்டிய மூலங் கன்ம மாயையென் றுரைக்கப் பட்ட
விண்டிடற் கரிய பாசம் விலகிநற் பசுக்க ளாங்குக்
கண்டரு பதியா நம்மைக் கண்டுகொண் டிருக்கு மாற்ருற்
பண்டெனப் படுமப் பேரூர் பசுபதி புரமென் ருகும். 40

நகர் என்று சொல்லப்பெறும்; மற்றும், நிலவுலகத்துடன் வானுலகமும் வணங்கும் தவசித்தித் தலமுமாம்.

வினை - நல்வினை தீவினைகள். கிழ்தல் - அகழ்தல். எனது யான் என்னும் செருக்கு - அகங்கார மமகாரங்கள்.

39. பகைவர் உயிரைப் போக்கும் உயர்ந்த மந்திர வித்துக்களாகிய பிராமணர்கள், நிறைந்த பாதகங்களாகிய பகைவரைத் தொலைத்திடப்பட்டோர் எப்போதும் நிலைபெற வணங்கும் காரணத்தால் மேலைச்சிதம்பரம் பெருஞ்சிறப்புக்கள் மிகுதியாகப் பெற்றுக் ‘குருக்ஷேத்திரம்’ என்று பெயர்பெறும்.

ஒன்னலர் - பகைவர். மனு - மந்திரம். தெவ் - பகை. குடசிதம்பரம் - மேலைச் சிதம்பரம்.

40. நிறைந்த ஆணவம் கன்மம் மாயை என்று சொல்லப்படும் போக்குதற்கரிய மும்மலங்களையும் போக்கி, நல்ல ஆன்மாக்கள் கண்ணொளிபோலப் பிறிவரிய அத்துவிதக் கலப்புடைய பதியாகிய நம்மைத் தரிசித்திருக்கும் காரணத்தினல் மூதூர் என்று சொல்லப்படும் பேரூர் பசுபதிபுரமென்னும் பெயரைப்பொருந்தும்.

மும்மலங்களுள் சுகதுக்கமாகிய காரியத்திற்குக் கன்மமலம் முதற்காரணமும் மாயாமலம் துணைக்காரணமும் ஆணவமலம் நிமித்த காரணமுமாம். எவ்வாறெனின்? முளைத்தற்சத்தி முளையைத் தோற்றுவிக்குமாறுபோலக் கன்மமலம் சுகதுக்கங்களைத் தோற்றுவித்தலான் அது முதற்காரணம். முளைத்தற்கு அனுகூலம் செய்து அரிசியுடன் நிற்கும் தவிடுபோல உயிரினிடத்துச் சுகதுக்கங்கள் தோன்றுதற்குத் துணையாய் அவ்வுயிரோடு மாயா காரியமாகிய தனுகரணதிகள் கூடி நிற்றலின் மாயை துணைக்காரணம். முளை அரிசியினிடத்துத் தோன்றுதற்கு நிமித்தமாய் நிற்கும் உமிபோல, சுகதுக்கங்கள் உயிரினிடத்துத் தோன்றுதற்கு அச்சுகதுக்கங்களை முளைத்து நிற்கச்செய்து அவற்றை உயிர் அனுபவிக்குமாறு செய்வது ஆணவமாதலின் அது நிமித்தகாரணமாம் என்க.

ஆணவமலம் உயிரோடு கலந்துநின்று அறிவு இச்சை செயல்களைத் தடுத்தலால் பிரதிபந்தம். கன்மமலம் உயிர் செல்லுமிடமெல்லாம் தொடர்ந்து சென்று

மல்குமா மகிமைப் பேற்ருன் மாபுர மென்றுந் தேசு
பில்கிர சதவெற் பான பெற்றியே நடித்த லானு
மல்கிர சதமன் ருடற் கமைந்திட லானு மாய்ந்தோர்
பல்கிர சதமன் றென்றும் பசுபதி புரத்தைச் சொல்வார். 41

ஒற்கமுற் றிரிய வேட்டோர்க் கோங்குபூ தான மென்னும்
அற்கிய செல்வ நல்க லாற்குந்த கான மென்று
நற்சபை யிறைஞ்சி னோர்க்கு ஞானமங் குறுத்து மாற்ருற்
சிற்சபை யென்று மேலைச் சிதம்பரம் பெயர்பூண் டன்றே. 42

தொடிபொலி தடக்கை வேற்கட் டுணைமுலைக் கவுரிக் காங்குக்
கடிவினை நிகழ்ந்த வாற்ருற் கலியாண புரம தாகும்
நெடுகிய போதிக் கான நிரந்தரித் தலினுற் போதி
வடுவறு கான மாகு மாபுர மென்னும் வைப்பு. 43

சுகதுக்கங்களைக் கூட்டுதலால் அநுபந்தம்; அநு - தொடர்ச்சி. மாயாமலம் உயிரோடு கூடித் தனுகரண முதலியனவாய் நிற்றலால் சம்பந்தம் என அறிக.

41. நிறைந்த பெருமையைப் பெறுதலால் மாபுரம் என்றும்; ஒளி பொருந்திய வெள்ளிமலையான தன்மையோடு கூடி நடித்தலானும், நிறைந்த வெள்ளியம்பலம் நடனம் செய்தற்குப் பொருந்துதலானும், அறிஞர் இரசதமன்று என்றும் பசுபதிபுரத்தைக் கூறுவர்.

பில்கு - துளிக்கும், துளும்பும்.

42. வறுமை முழுவதும் கெட்டோடும்படி விரும்பினவர்களுக்கு உயர்ந்த பூதானம் என்னும் நிலைத்த செல்வத்தைக் கொடுத்தலால் குந்தகானம் என்றும், நல்ல வெள்ளியம்பலத்தை வணங்கினேருக்கு ஞானம் விளைவிக்குந்தன்மையால் சிற்சபை என்றும் மேலைச் சிதம்பரம் பெயர் பூண்டு விளங்குவதாம்.

குந்தம் - குபேரனுடைய நவநிதியினென்று. சித் - ஞானம்.

43. கவுரி என்னும் உமாதேவியாருக்கு அவ்விடத்தில் கல்யாணம் நிகழ்ந்த காரணத்தினுல் கலியாணபுரம் என்னும் பெயர்பெறும். நீண்ட அரசமரங்கள் நிலை பெற்றிருத்தலினுல் போதிவனம் என்று மாபுரம் வழங்கப்படும்.

கையும் கண்ணும் நகிலும் பொருந்தியகவுரி. தொடி - வளையல். கடிவினை - கல்யாணம். போதி - அரசு. நிரந்தரித்தல் - நிலைபெற்றிருத்தல்.

தேனுமெய்த் தவங்க ளாற்றிச் சிருட்டிபெற் றேகு மாற்ருல்
தேனுநற் புரமென் ருகுந் திகழ்பிற வாநெ றிக்கண்
மானுடர் தமையு முய்க்கும் வாய்மையாற் குந்த கானந்
தானது படைத்த தாகுந் தகும்பிற வாநெ றிப்பேர். 44

இன்னுமத் தலத்துக் கெய்து மிரும்பெயர் பல்ல வுள்ள
அன்னமேக் குயர்த்தோய் காணென் றறைந்தன ரமல நாதர்
தன்னிக ரில்லா வின்பந் தலைசிறந் தலரின் மேலான்
பொன்னடித் தலத்திற் ருழ்ந்து புறவிடை கொண்டு போந்தான். 45

எறிதிரைக் காஞ்சி யாடி யெழுந்துசூழ் போதிக் கானத்
தறிவக லறிவ தான வாதிலிங் கத்தைப் போற்றி
மறிவிழி மருட்டும் வாட்கண் மரகத மயிலைத் தாழ்ந்து
வெறிகமழ் வெள்ளி மன்றும் விலங்கலுந் தரிசித் தானல். 46

---

44. காமதேனு என்னும் தெய்வப்பசு உண்மைத்தவம் செய்து சிருட்டித் தொழிலைப் பெற்றுச் சென்ற காரணத்தால் தேனுபுரம் என்னும் பெயரைப்பெறும். விளங்கும் பிறவாநெறியிலே மக்களைச் செலுத்துதலால் குந்தகானம் பிறவாநெறி என்னும் நாமத்தைப் பெறுவதாம்.

தேனு - காமதேனு. பிறவாநெறி - பிறவாத சன்மார்க்கம். வாய்மை - உண்மை.

45. மற்றும் அத்தலத்துக்குப் பொருந்தும் பெயர்கள் பல உள்ளன. அன்னத்தை எழுதிக்கட்டிய கொடியையுயர்த்தவனே! இதனை அறிவாயாக என்று சிவபெருமான் அருள் செய்தார். பிரமதேவன் ஒப்பில்லாத இன்பத்துடன் சிவ பெருமானின் திருவடிகளில் வணங்கிப் புறத்திலே விடைபெற்றுச் (பிரியாவிடை) சென்ருன்.

பல்ல - பல: விரித்தல் விகாரம். அன்னம் - அன்னப்பறவை. மேக்கு - மேலே. புறவிடை - அகந்திற்பிரியாமல் புறத்திலே பெற்றுச் செல்லும் விடை; விடை - உத்தரவு.

46. அலைகளை வீசுகின்ற காஞ்சிநதியில் முழுகியெழுந்து போதிவனத்தில் எழுந்தருளியுள்ள ஆதிலிங்கத்தை வணங்கி, மரகதவல்லியம்மையைத் துதித்து, வெள்ளியம்பலத்தையும், வெள்ளிமலையையும் (பிரமதேவன்) தரிசித்தான்.

அறிவு அகல் அறிவு - பசுபாசஞானங்களால் அறியப்படாத சிவஞானம்; இறைவர் ஞானமே வடிவாகவுள்ளார். 'ஞானத்தாய் நின்னை நானும்தொழுவனே' (திருநாவு; தேவா). மறி - பெண்மான். மருட்டும் - மயங்கச்செய்யும். வெறி - வாசனை. விலங்கல் - மலை; ஈண்டு வெள்ளிமலை.

சிலபகல் கழிய வாங்குச் சிவணிவாழ்ந் தினிது போற்றி
இலகிய பேரூர் வைப்பி னிடந்தொறும் விளங்கா நின்ற
பலதளி களினு முக்கட் பனவனைப் பரசிப் போற்றி
நிலவுதன் னுலகம் புக்கு நெடிதுவாழ்ந் திருந்தா னன்றே. 47

தலவிசே டத்தை முக்கட் டம்பிரான் கருணை கூர்ந்து
மலரவன் றெரியக் கூறு மரபினைத் தெரித்துப் போக்கிக்
கலதிசெ யங்கி ரப்பேர் கைக்கொளு மொருவ னெய்து
நலனுறு முனிவர் தேர நவிற்றுவன் சூத னென்போன். 48

தலவிசேடப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1549

---

47. சிலகாலம் அங்கே தங்கியிருந்து இனிமையாக வணங்கிப் பேரூர்த் தலத்திலே ஆங்காங்கே விளங்கும் பல கோயில்களிலும் சென்று சிவபெருமானைப் போற்றித் துதித்துப் பின்தன் உலகத்தையடைந்து நீண்டகாலம் வாழ்ந்திருந்தான்.

சிவணி - பொருந்தி. தளி - கோயில். தன் உலகம் - சத்தியவுலகம்.

48. சிவபெருமான் கருணைமிகுத்துப் பிரமதேவனுக்குத் தலவிசேடத்தை அறியும்படி கூறியருளினமையைச் சொல்லி, அறியாமையையுடைய அங்கிரன் என்பவன் கதிபெற்றமையைச் சூதமுனிவர் நைமிசாரணியமுனிவர்கள் அறியும்படி கூறத்தொடங்கினர்.

இருபத்தேழாவது

அங்கிரன் கதிபெறுபடலம்

பங்க யப்பெரும் பண்ணை மடைதொறுஞ்
சங்கி னங்க டவழ்ந்துயிர் நித்திலங்
கங்கு லும்பக லென்னக் கதிர்பொழி
வங்க மென்றொரு தேயம் வயங்குமால். 1

வங்க தேய வரைப்பி னொருசிறைப்
பொங்கு கானிடைப் புல்லிய வாழ்க்கையன்
வெங்கண் வேடன் வெருவரு காட்சியன்
அங்கி ரன்னென் றறைதரு நாமத்தான். 2

தக்க காதன் மனைவியர் தாம்பலர்
மக்கள் பற்பலர் மன்னு முரிமையின்
ஒக்க லாரும் பலருடங் கண்முறத்
தொக்க செல்வந் துவன்றுற வைகினன். 3

---

1. தாமரைகளையுடைய பெரிய வயல்கள்தோறுமுள்ள மடைகளில் சங்குக் கூட்டங்கள் தவழ்ந்து சென்று ஈனும் முத்துக்கள் இராத்திரி காலமும் பகற்காலம் என்று சொல்லும்படி கிரணங்களைச் செய்யும் வங்கம் என்று ஒருதேசம் விளங்குவதாம்.

பங்கயம் - தாமரை. பண்ணை - கழனி. உயிர் - ஈனும்; உயிர்க்கும் என்றது பகுதிமாத்திரையாய் நின்றது. நித்திலம் - முத்து. முதலிரண்டடி: "பண்ணை வாய்த்தவழ் பணிலங்கள் உயிர்த்தவெண் முத்தும்" (நைடதம்). கங்குல் - இரவு. கதிர் - கிரணம்.

2. வங்கதேசத்தின் ஒருபக்கத்தில் விளங்கும் காட்டிலே பொருந்திய வாழ்க்கையையுடையவன், கொடிய வேடன், அஞ்சத்தக்க காட்சியையுடையான், அங்கிரன் என்னும் பெயரையுடையான்.

சிறை - பக்கம். புல்லிய - பொருந்திய; புல்லியவாழ்க்கை - அற்பவாழ்க்கை. புன்மை - கீழ்மை.

3. அவனுக்கு விருப்பத்தைச் செய்யும் மனைவியர் பலர் உளர், மக்களும் மிகப்பலர், நிலைபெற்ற உரிமையையுடைய சுற்றத்தாரும் பலர் ஒருசேர நெருங்கி வசிக்க, மிகுதியான செல்வமும் விளங்குமாறு இருந்தான்.

அடைய லார்க்கரி யேறுற ழன்னவன்
படைக ளேந்திப் பலர்தனைச் சூழ்தர
நடைவ யிற்செலு மாந்தர்க ணன்பொருள்
அடைய வெளவிக்கொண் டங்ஙனம் வாழுநாள். 4

கூர்த்த செல்வங் கொழித்திடு மாமக
தீர்த்த மாடவு மன்றல்கள் செய்யவும்
ஓர்த்த சுற்றமொ டொள்ளிய வந்தணர்
போர்த்த வோகையி னூற்றிடைப் போதுவார். 5

சுடர்ம ணிக்கல னுந்தொகு மாடையும்
படர்ப றிக்குல மும்பகட் டேற்றின்மேல்
இடுபொ ருட்பல மூடையு மீண்டுற
வடவி புக்குமு டுக்க ரடுத்தனர். 6

காதல் - விருப்பம். ஒக்கலார் - சுற்றத்தார். உடங்கு அண்முற - ஒருசேர நெருங்கி வசிக்க; அண்முதல் - நெருங்குதல். துவன்றுற - விளங்கும்படி.

4. பகைவர்களுக்கு ஆண் சிங்கத்தையொத்தவன் படைக்கலங்களைக் கையிலேந்திப் பலவீரர்கள் தன்னைச் சூழ்ந்துவர வழிச்செல்லுவோருடைய நல்ல பொருள்களையெல்லாம் முழுவதும் பறித்துக்கொண்டு வாழ்கின்ற காலத்தில்.

அடையலார் - பகைவர். அரி ஏறு - ஆண்சிங்கம். நடைவயிற் செலும் மாந்தர்கள் நன்பொருள் அடையவெளவி-ஆறலைத்துப்பறித்து. அடைய - முழுவதும் சூறையாடி என்க.

5. மிக்க செல்வங் கொழிக்கின்ற மாமகதீர்த்தம் ஆடக்கருதியும், கலியாணங்களைச் செய்யவும் சிறந்த அந்தணர்கள் ஆராய்ந்த நல்ல சுற்றத்தாரோடு மிக்க மகிழ்வுடனே வழிச்செல்வார்.

கூர்த்த - மிக்க. கொழித்திடும் - தெள்ளும். மன்றல் - கலியாணம்; விழா எனினுமாம். ஒள்ளிய - சிறந்த; என்றது வேதமும் ஒழுக்கமுமிக்கவர் என்றபடி. ஓகை=உவகை - மகிழ்ச்சி.

6. ஒளிவீசும் இரத்தினபரணங்களும், மிக்க ஆடைகளும், பொன்னும், எருதுகளின் மேலே பல பொருள்கள் செறிந்த மூடையும் நெருங்க அக்காட்டு வழியிலே சென்று ஒரு மூலையிற் பொருந்தினர்.

மணிக்கலன் - இரத்தினபரணம். பறி - பொன். ஈண்டுற - நெருங்க, செறிய. அடவி - காடு. முடுக்கர் - மூலை.

செவ்வி யிதெனத் தேர்ந்தடுத் தங்கிரன்
இவ்வெ லாங்கவர் தற்கிது வாமென
வெளவி யம்புரிந் தியாரையு மாய்த்தெலாம்
வெளவி யேகித்தன் வாழ்பதி நண்ணினன். 7

மக்க ளொக்க லறிந்து மலிபொருள்
தக்க தன்று நமக்குத் தகினுமிம்
மிக்க செல்வங் கவர்ந்து விடாதெலா
மொக்க வாவி யொழித்தன னாதலான். 8

வேந்தர் தேர்ந்து விழுக்குலத் தோடெமைச்
சிந்தி மாய்ப்ப ரெனத்தெருண் டொய்யெனக்
காந்து கண்ணின ராகிக் கழற்றினர்
சாந்த மில்லாத் தறுகணி னன்றனை. 9

---

7. இதுவே தக்கசமயமென அறிந்து அங்கேசென்று அங்கிரன் இவற்றை எல்லாம் கொள்ளை கொள்ளவேண்டிப் பொருத மனமுடையவனாய் எல்லோரையும் கொன்று, எல்லாப் பொருள்களையும் கொள்ளையிட்டுச் சென்று தன் வீட்டை அடைந்தான்.

செவ்வி - காலம். இவ்வெலாம் - இந்த எல்லாப் பொருள்களையும். இது ஆம் - இதுவே தக்கது. ஔவியம் - பொறாமை; மனம் பொறாமல். மாய்த்து - கொன்று. வெளவி - கொள்ளையிட்டு.

8. (அங்கிரனுடைய) மக்களும் சுற்றத்தாரும் இதனைத் தெரிந்து நிறைந்த பொருள் நமக்குத் தக்கதன்று. தக்கதாயினும் இந்த மிகுதியான செல்வத்தைக் கவர்ந்து கொண்டுவராமல் ஒருமிக்க எல்லோருடைய உயிரையும் இவன் அழிந்து விட்டான். ஆதலால்,

ஒக்கல் - சுற்றம். தகினும் - தக்கதாயினும். ஒக்க - ஒருசேர. ஆவி - உயிர். ஆவி ஒழித்தனன் - உயிரைக்கொலை செய்தான்.

9. அரசர் இதனை ஆராய்ந்து குலத்தோடு நம்மையெல்லாம் பிடித்துக் கொல்லுவார் எனத்தெளிந்து விரைந்து கோபமுடைய கண்களையுடையவராய் அடக்கமில்லாத அஞ்சாத பாவியைத் துரத்திவிட்டனர்.

தேர்ந்து - விசாரித்து அறிந்து. சிந்தி - பிடித்து. தெருண்டு - தெளிந்து. ஒய்யென - விரைவாக. காந்து - கோபத்தாற் சிவந்த. தறுகண் - அஞ்சாமை.

ஈது செய்குவ ரேயென வங்கிரன்
போது வைகிய பொங்கிருள் யாமத்துக்
காதி யாருயிர் காற்றினன் மக்களை
மூது சுற்றத் தவரொடு முற்றவே. 10

வாழ்ந்த வைப்பினை விட்டு வனந்தொறுஞ்
சார்ந்து தன்றொழி றண்டா தியற்றுவான்
போந்து தென்கயி லைப்புற நண்ணினன்
ஆர்ந்த வண்மைகண் டாங்கசைந் தானரோ. 11

இயம தூதர்க ளெண்ணில ரோருருப்
பயிறல் கொண்டு படர்ந்தன தோற்றத்தான்
உயர்வி லங்குமொண் புட்களு நிச்சமும்
வயிற டங்க வதைத்துண லாயினன். 12

மிருக மற்ற விகங்கமு மற்றன
துருவி யாறலைத் துத்துயர் செய்வதோர்ந்
தொருவ ரும்பட ராமை யொழிதலின்
மருவு நீணெறி மாய்ந்தன மாடெலாம். 13

---

10. இவ்வாறு மக்களும் சுற்றத்தாரும் செய்வார்களோ என்று அங்கிரன் பொழுதுபோனவுடன் இருள் மிக்க யாமத்திலே பழமையான சுற்றத்தாருடன் மக்களை முழுவதும் கொன்று உயிரைப் போக்கினன்.

போதுவைகுதல்-பொழுதுபோதல். பொங்கு இருள் யாமம்-மிக்கஇருட்டை யுடைய நள்ளிரவு. காதி - கொன்று. காற்றினன் - போக்கினன். முற்ற - முழுமையும்.

11. தான்வாழ்ந்திருந்த இடத்தைவிட்டிட்டுக் காடுகள்தோறும் போய்த் தன்னுடைய வழிபறித்தல் தொழிலை நீங்காமற் செய்யும் பொருட்டுச் சென்று தென்கயிலையின் புறத்தைச்சார்ந்தான்; நிறைந்த செழிப்பான தன்மையைக்கண்டு அங்கே தங்கினன்.

வைப்பு - இடம். தண்டாது - நீங்காமல். ஆர்ந்த வண்மை - நிறைந்த செழிப்பு. அசைந்தான் - தங்கினன்.

12. அளவிறந்த இயமதூதுவர் ஒருவடிவங்கொண்டு சென்றதோற்றத்தை உடையவனய் உயர்ந்த விலங்குகளையும் பறவைகளையும் நாடோறும் வயிறரக் கொன்று தின்றான்.

எண் இலர் - அளவில்லாதோர். படர்ந்தன - படர்ந்தாலன்ன. நிச்சமும் - நித்தமும். வதைத்து - கொன்று.

13. மிருகம் பறவை முதலிய இல்லாதொழிந்தன. ஆறலை துன்பம் செய்தலை யும் நன்கறிந்து ஒருவரும் அவ்வழியில் செல்லாமல் நீங்குதலினல் பக்கங்களில் எல்லாம் செல்லும் வழி மறைந்தன.

ஆய காலையோ ரந்தண னவ்வுழித்
தாய மாகிய தாரமோ டண்ணினன்
மேய வேதிய னுவியை விட்டினன்
தீயன் பார்ப்பனி யைத்தெவ்வி யேகினன். 14

தனதி ருக்கையைச் சார்ந்துயர் பார்ப்பனி
இனிது தன்வழி யேவ லியற்றுற
நனியொ றுத்தச் சுறுத்தின்ப நண்ணினன்
அனைய வங்கிர னுங்கொரு நாள்வயின். 15

வேட்டை யாட விழைந்து தனுவொடு
காட்டி னேகிக் கதழ்ந்து திரிதலான்
வாட்டு தாகமும் வன்பசி யிட்டமுங்
கோட்டி கொள்ளக் குழைந்துள மீட்டனன். 16

விகங்கம் -பறவை. ஆறலைத்து-வழியிலே வருத்தி. படராமை-செல்லாமல். மாடு - பக்கம். மாய்ந்தன - மறைந்தன.

14. அப்போது ஒரு பிராமணன் அவ்விடத்திலே உரிய மனைவியோடு சென்றான். பொருந்திய அப்பார்ப்பானுடைய உயிரைப்போக்கினனாகி அந்தக் கொடியோன் பார்ப்பனியை எற்றிக்கொண்டு போனான்.

அவ்வுழி - அவ்விடம்: உழி: ஏழனுருபு. தாயம் - உரிமை. தாரம் - மனைவி. தெவ்வி - எற்றிக்கொண்டு.

15. தன் இருப்பிடத்தையடைந்து அப்பார்ப்பனியை அவள் தன் வழி ஏவல் செய்ய வசஞ்செய்து நன்றாகப்புடைத்து அச்சங்கொள்ளுமாறு செய்து இன்பத்தை நுகர்ந்தான். அந்த அங்கிரன் ஒருநாள்.

ஒறுத்தல் - புடைத்தல். இன்பம் நண்ணினன் - இன்பத்தை அநுபவித்தான்.

16. வேட்டையாட விரும்பி வில்லோடு காட்டிலே சென்று சினந்து திரிந்தமையால் மிக்க தாகமும் கொடிய பசியும் வருத்துதலால் மனங்கலங்கித் திரும்பினன்.

தனு - வில். கதழ்ந்து - கோபமிக்கு. கோட்டிகொள்ள-வருத்த. குழைந்து-வாடி. உளம் மீட்டனன் - மனத்தைத்திருப்பினன்.

இருக்கை நாடிக்கொண் டேகுகின் றுனிடை
வருக்கை மென்கனி மந்தி வகிர்ந்துணுத்
தருக்கு நீள்பொழி லூடு தவழ்ந்துசெல்
உருக்கொள் காஞ்சி யொலிநதி கண்டனன். 17

வேறு

உய்ந்து ளேனென வோகை துள்ளுற
முந்து கண்டவம் முழங்கு காஞ்சிபுக்
கந்தி னீர்மடுத் தயர்வு யிர்த்தலர்
சிந்து வார்கரை செல்ல வேறினன். 18

அங்கண் வைகுமோ ரராவெ ழுந்தவன்
செங்க ழற்பதஞ் சினந்தெ றிந்தது
தங்கு கார்முகந் தன்னின் மாட்டினன்
நுங்கிற் றவ்வரா நூறு பட்டரோ. 19

பரிந்து பாப்புயிர் பாறு முன்னரே
விரைந்த வேகத்தின் விடந்த லைக்கொள
வரிந்த திண்சிலை வாகு வேட்டுவன்
கரிந்து மெய்யுயிர் கைய கன்றதே. 20

---

17. இருப்பிடத்தைக் குறிக்கொண்டு செல்லுகின்றவன் இடையிலே பலாப் பழத்தைப் பெண்குரங்கு கீறியுண்டு செருக்கும் நீண்ட சோலையினிடையே ஒடுகின்ற அழகிய காஞ்சிநதியைக் கண்ணுற்றான்.

வருக்கை - பலா. மந்தி - பெண்குரங்கு. வகிர்ந்து - பிளந்து.

18. நான் பிழைத்தேன் என்று மகிழ்ச்சிமிக்கு, எதிரே கண்ட காஞ்சி நதியை அடைந்து நீரைக் குடித்து அயர்ச்சி நீங்கி, கரைக்குச் செல்ல ஏறினன்.

ஓகை - உவகை. அந்தில்: அசை. அயர்வுயிர்த்தல் - களைப்பு நீங்குதல்.

19. அங்கே தங்கியிருந்த பாம்பொன்று சீறியெழுந்து அவன் காலில் சினத்தோடு கடித்தது. அவன் தன் கையிலிருந்த வில்லால் அடித்தான். அப் பாம்பு சிதறி இறந்தது.

எறிந்தது-கடித்தது. கார்முகம்-வில். மாட்டினன்-அடித்தான். நுங்கிற்று- இறந்தது. நூறுபட்டு - நொறுங்கி.

20. பாம்பு இரங்கி இறக்குமுன்பே விரைந்து ஏறிய விடவேகம் தலைக் கொண்டு அவ்வேடன் உடல் கருகி உயிர் நீங்கினன்.

பாறுதல் - அழிதல், இறத்தல். கையகன்றது - நீங்கியது.

இறந்த வேடனை யியம தூதர்கள்
விறந்து முற்றினர் வெருவத் தாக்கினர்
மறிந்து நெஞ்சுக வலிதிற் கட்டினர்
நிறைந்த செல்லல்செய் நெறிகொண் டேகினர். 21

தெரிந்து மற்றது சிவக ணங்கள்போய்
எரிந்த குஞ்சியி னியம தூதரை
முரிந்து விழவு முடங்க ளாகவும்
இரிந்து போகவு மெருக்கி மீட்டன. 22

மீட்ட வங்கிரன் விண்ணின் மாதரார்
நாட்ட மெய்க்கவி னல்வி ருந்துண
வேட்டை தீர்ந்தெழில் விமான மேறிப்போய்ச்
சேட்டி ருங்கயி லாயஞ் சேர்ந்தனன். 23

21. இறந்துபோன அந்த வேடனை இயமதூதர்கள் நெருங்கிக்கிட்டி, அஞ்சுமாறு அடித்து, மனம் சிதற வலிமையாகப் பிணித்து, மிக்க துன்பத்தைச் செய்யும்வழியிலே கொண்டுசென்றனர்.

விறந்து - நெருங்கி. முற்றினர், தாக்கினர், கட்டினர் : முற்றெச்சங்கள். செல்லல் - துன்பம். நெறி - வழி. ஏகினர்: முற்று.

22. அதனைத்தெரிந்து சிவகணங்கள் சென்று சிவந்த மயிரையுடைய இயமதூதர்களை இற்றுவிழவும், முடத்தன்மையடையவும், கெட்டோடவும் அடித்து அவ்வேடனுயிரை மீட்டன.

குஞ்சி - ஆண்மயிர். இரிதல் - கெட்டோடல். எருக்கி - அடித்து, தாக்கி.

23. சிவகணங்களால் இயமதூதரிடமிருந்து மீட்கப்பட்ட அங்கிரன் விண்ணரமகளிர் கண்கள் சரீரத்தின் அழகை விருந்தாக அநுபவிக்க, துன்பம் நீங்கி, அழகிய விமானத்தில் ஏறிச்சென்று மிகவுயர்ந்த கயிலாயத்தை அடைந்தான்.

மீட்ட-மீட்கப்பட்ட. விண்ணின் மாதரார்-தெய்வ அரம்பையர்; மேனகை, திலோத்தமை, ஊர்வசி, அரம்பை முதலியோர். நாட்டம் - கண். மெய்க்கவின்- உடலழகு. விருந்துஉண - புதிதாக நுகர. ஏட்டை - துன்பம். சேட்டு இரும்- மிகவுயர்ந்த.

இரிந்த தூதுவ ரெரிசெய் குஞ்சிமண்
விரிந்த சென்னியின் வெய்து முன்னுறீஇ
வரிந்த திண்கழன் மன்னன் சேவடி
புரிந்து போற்றினர் புகறன் மேயினர். 24

வேறு

வாழி வாழிநின் னரசியல் வாழிநின் செங்கோல்
ஊழி யூழியும் வாழிய வுருட்டுநின் றிகிரி
ஆழி வையகத் தங்கிர னென்றொரு பதகன்
பாழி யாக்கையைப் பாற்றியா ருயிர்கொடு மீண்டாம். 25

விலங்கி வண்சிவ கணமெமை வீற்றுவீற் றதுக்கி
உலங்கொ டோளினன் றனைக்கொடு கயிலையுற் றதனற்
கலங்கி மாய்ந்தவ ரொழிதரக் கால்விரைந் திரிந்தே
மலங்கன் மார்பினய் நின்சபை யடுத்தன மென்றார். 26

---

24. கெட்டோடிய தூதுவர்கள் சிவந்த தலைமயிரையுடைய சென்னியில் மண்புரளப் பெரிதும் உற்றுத் தருமராசன் திருவடிகளை வணங்கிச் சொல்லத் தொடங்கினர்.

இரிந்த - கெட்டோடிய. எரி செய் குஞ்சி - சிவந்த தலைமயிர். புரிந்து - விரும்பி. போற்றினர்: முற்றெச்சம்.

25. வாழ்க வாழ்க நின் அரசாட்சி வாழ்க. உன்னுடைய செங்கோல் ஊழிதோறூழி வாழ்வதாகுக. உன்னுடைய ஆணையால் நிலவுலகத்திலே அங்கிரன் என்னும் பாதகன் உடலினின்றும் உயிரை வேறு பிரித்து அவ்வுயிரைக் கொண்டு மீண்டுவந்தோம்.

திகிரிஆழி - ஆஞ்ஞாசக்கரம். வையகம் - பூமி.

26. மாலையையணிந்த மார்பினையுடைய இயமதருமராசனே! செழுமையான சிவகணங்கள் எங்களை விலக்கி, வேறு வேறாகப் போக்கித் திரண்ட கல்லை யொத்த தோள்களையுடைய அங்கிரனை அழைத்துக்கொண்டு கயிலாய மலைக்குச் சென்றகாரணத்தால் நாங்கள் கலங்கி, இறந்தவரொழிய எஞ்சினோர் காற்றினுங் கடுகிக் கெட்டோடி உம்முடைய சபையை வந்தடைந்தோம் என (தூதுவர்) விண்ணப்பித்தனர்.

விலங்கி-விலக்கி. வீற்று வீற்று-வேறு வேறாக. அதுக்கி-நசுக்கி. உலம்-திரண்ட கல். மாய்ந்தவர் - இறந்தவர். கால் விரைந்து: கால் - காற்று; பாதம் எனினுமாம். இரிந்து - கெட்டோடி.

கைப்ப வஞ்செவி காலர்க ளுரைத்தமை கேளா
வெப்பி னுள்ளகம் விரவுற வேந்தனீ தெண்ணும்
எப்பெ ருந்தவ மிழைத்தவ ராயினு மிறுங்கால்
நப்பு ணர்ந்தலா தேகுரர் நாட்டுமேற் கதியில். 27

தீய பாதகஞ் செய்தவன் றனைச்சிவ கணங்கள்
காய வாணரு நாடருங் கயிலையில் விடுதற்
கேயு மேயிஃ தென்னெனச் சித்திர குத்தன்
ஆய வான்கணக் கறிஞனை வியவரி னழைத்தான். 28

வந்து வந்தனை புரிந்தெதிர் வைகியக் கணக்கன்
வெந்தி றற்பெரு மானெனை விளித்ததென் னென்ன
வந்த வங்கிர னுற்றுபுண் ணியமுள தாயிற்
புந்தி யாலுணர்ந் துரையெனப் புலவுவேற் றருமன். 29

---

27. இயமலோகத்துக்கு அதிபதியாகிய இயமன், காலர்கள் கூறியவைகளைச் செவி வெறுக்குமாறு கேட்டு, மனம் வெதும்ப இதனை எண்ணுவானாயினன். எவ்வளவு பெரிய தவத்தைச் செய்தவராயினும் இறக்கும்போது நம்மை வந்து அடையாமல் சிறந்த விட்டுலகத்தைச் சேரார்.

கைப்ப-பொருதாக; வெறுக்க என்றபடி: "செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்" (குறள்-389). இறுதல்-சாதல். நப்புணர்ந்து-நம்மிடத்தில் வந்துபொருந்தி. மேற்கதி - சிறந்தமுத்தி. காலன் - கூற்றத்திற்கு ஏவல் செய்யும் அவன்.

28. கொடிய பாதகத்தைச் செய்தவனைச் சிவகணங்கள் தேவர்களும் நாடு தற்கரிய கயிலாயமலையிற்கொண்டு செல்லுவதேன்? காரணம்யாது? என்று சித்திர குத்தனுகிய சிறந்த கணிதவல்லவனை ஏவலாளரால் அழைத்தான்.

காயவாணர் - விண்ணுலக வாசிகள்: காயம் - ஆகாயம். வான் - சிறந்த; தெய்வத்தன்மையுள்ள. வியவர் - ஏவலாளர்.

29. அக்கணக்கன் வந்து வணங்கி, எதிரிலிருந்து, மிக்க வலியபெருமானே! என்னை அழைத்ததன் காரணம் யாது? என்று கேட்க, அந்த அங்கிரன் செய்துள்ள புண்ணியம் உளதாயின் அறிவினல் தெளிந்து கூறுக என்று இயமதருமன் சொல்ல.

பெருமான்: அண்மைவிளி. புந்தி - அறிவு; ஞானதிட்டி. புலவுவேல் - புலால்நாற்றம் வீசும் வேலாயுதம்.

உருத்த நாண்முத லுலந்தநாள் காறும்பா தகமே
விருத்தி யாவினைத் திட்டதே யன்றிநல் வினையைக்
கருத்தி னுனுமெண் ணிலனெனக் கணக்கனோர்ந் துரைப்பக்
குருத்து மீமிசைக் கொழுந்தெழுங் கோபங்கொண் டியமன். 30

இந்த மாணின்மை யியன்றபின் னிவ்வர சாட்சி
தந்த நாயகன் றாள்வயிற் சார்த்தலே யன்றி
முந்தை நாளென முறைசெயற் பாலதன் றென்னு
மைந்து நீடிய வன்கடாக் கடாய்வழிக் கொண்டான். 31

ஆயி ரத்தொரு நூற்றினை யடுத்தபன் னிரண்டென்
றுய வெண்ணினை நாற்றிய வரும்பெரு நோயும்
பாய பல்பரி சனமும்பின் றொடர்தரப் படர்ந்தோன்
தூய வெள்ளியங் கிரியினை மேயினன் றுனைந்து. 32

---

30. கணக்கனுகிய சித்திரகுத்தன் ஆராய்ந்து அங்கிரன் உருவெடுத்த காலமுதல் இறந்தநாள் வரையில் பாதகங்களையே பெருக்கமாகச் செய்துவந்ததே யன்றி, நல்வினையைச் செய்ய மனத்தினுலும் நினைத்திலன் என்று விடைகூற மேன்மேலும் வளரும் கோபத்தையுடையவனுய் இயமன்;

உருத்த - உருவெடுத்த; பிறந்த. உலந்த நாள் - சாம்நாள். ஓர்ந்து - ஆராய்ந்து. குருத்து மீமிசைக் கொழுந்து எழும் - தோன்றி மேலும் மேலும் கொழுந்துவிட்டெழும்பும்.

31. இந்தத் தகுதியற்ற செயல் உண்டாகிய பின்பு இந்த அரசாட்சியை எனக்குக் கொடுத்தருளிய சிவபெருமான் திருவடிகளில் சென்று சேர்த்து விண்ணப்பித்தலையன்றி, முன்புபோல நீதி செலுத்துதல் ஒண்ணுது என்று வலிமிக்க எருமைக்கடாவின் மேலேறிச் செலுத்திச் செல்லத்தொடங்கினுன்.

மாணின்மை - மாட்சிமையில்லாத அத்தீயசெயல்; பாவம்என்ற பொருளில் வந்தது. "தெளிந்தாரிற், றீமை புரிந்தொழுகு வார்" (குறள் - 143) என்பதில் 'தீமை' என்றதுபோல. தாள் - திருவடி; அதுவே புகலிடமாம். வயின் - இடம். முந்தைநாள் - முற்பட்டகாலம். முறை - நீதி. மைந்து - வலிமை. கடாக் கடாய் - கடாவைச் செலுத்தி.

32. ஆயிரத்து நூற்றுப்பன்னிரண்டு என்னும் எண்ணினையுடைய அரிய பெரிய நோய்களும், பரந்த பல பரிசனங்களும் பின்னே தொடர்ந்துவரச் சென்ற இயமன் பரிசுத்தமான கயிலாயத்தை விரைந்து அடைந்தான்.

பாய - பரவிய. பரிசனம் - சேனைகள். படர்ந்தோனுகி மேயினன் என்க; முற்றெச்சம். துனைந்து - விரைந்து. வெள்ளியங்கிரி - கயிலாயமலை.

அங்க ணெம்பிரான் றிருமுன்ன ரடல்விடை மருங்கே
அங்கி ரப்பெய ராணிறு மாப்பொடு மமர்ந்தோன்
அங்கை கூப்பிலன் மதித்திலன் சிரித்தன னேக்கி
அங்கி நீள்விழி காலநா யகன்புடை யடுத்தான். 33

எட்டு றுப்பினு மைந்துறுப் பினுமெதிர் வணங்கித்
தட்ட மிட்டன னடித்தனன் சதுமறைப் பொருளே
கட்டு செஞ்சடைக் கடவுளே யிறைவனே யென்று
முட்டி லாதுபல் துதிகளை முழக்கியி தறைவான். 34

அளவில் பாதக மாற்றிய வங்கிரச் சிதடன்
வளநி லாவுநின் சந்நிதி வரத்தகு மானுற்
களைக ணேயெனக் கருளதி காரமென் னாகும்
எளிய னேற்குவேண் டாவினி யென்றிது புரிந்தான். 35

---

33. அவ்விடத்திலே சிவபெருமான் சந்நிதியிலே வலிய இடபதேவர் பக்கத்தில் அங்கிரன் செருக்குடன் இருப்பவனைப், கரங்களைக் குவித்து வணங்காமல், மதியாதவனைச் சிரித்தவனை இருக்கின்ற செயலைப் பார்த்துக் கண்களில் தீப்பொறி பறக்கச் சிவபெருமான் பக்கத்திலே சென்றான்.

விடை - இடபதேவர். இறுமாப்பு - செருக்கு. அங்கி - நெருப்பு.

34. சிவபெருமான் பக்கத்திலே சென்ற இயமன் அட்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்களைச் செய்து, கைகொட்டி, ஆனந்தக்கூத்தாடி வேதப்பொருளாய் உள்ளவரே! சிவந்த சடாபாரத்தையுடைய கடவுளே! எப்பொருளினும் தங்குபவரே! என்று பலப்பல தோத்திரங்களைச் சொல்லித் துதித்துப் பின் இதனைக் கூறத் தொடங்கினன்.

தட்டமிடல் - கைகொட்டுதல். முட்டிலாது - தடையில்லாமல். முட்டு - தடை.

35. எல்லையில்லாத பாதகங்களைப் பண்ணிய அங்கிரனாகிய அறிவில்லான் வளப்பமிக்க தேவரீருடைய திருமுன்னர் வரத்தக்கதானல், பற்றுக்கோடாக உள்ளவரே! அடியேனுக்குத் தேவரீர் அருளிய அதிகாரம் என்ன பயனைத்தரும்? அடியனேனுக்கு இனி இந்த அதிகாரம் வேண்டா என்று விண்ணப்பம் செய்து இதனை இயற்றினன்.

சிதடன் - அறிவில்லாதவன்; 'சிதடரொடுந் திரிவேனை' (திருவாசகம்). களைகண் - பற்றுக்கோடு.

மிறைசெ யங்கிரன் விளைத்தபா தகப்பெருங் கணக்கு
முறைசெய் தண்டமு முதிர்புகழ் வளர்க்குஞ்செங் கோலும்
இறைவ கண்டுகொ ளென்றுசே வடிதனக் கடுப்ப
நிறையு மன்பொடு மிட்டனன் வணங்கின னின்றான். 36

நறுவி ரைச்செழுங் கடுக்கைநாண் மதிமுடிச் சடையோன்
முறுவ லித்தெறுழ் மறலிதன் முகத்தினை நோக்கித்
தெறுவ லிச்சிறு காலகே டிறம்பிய முறைமை
நிறுவல் செய்திலர் கணத்தவ ரெனவுண்மை நிகழ்த்தும். 37

பாத கம்புரி வாரெலாம் பதைபதைத் தஞ்சும்
பாத கம்பல கோடிகள் பயிற்றினு னேனு
மாத வம்புரி விரதரு மனதழுக் கறுப்ப
மாத வம்பெரி தியற்றிய வாய்மைய னனையான். 38

---

36. பாவத்தொழில் செய்த அங்கிரன் இயற்றியுள்ள அதிபாதகங்களின் கணக்கு மிகுதியும், அதற்குரிய நீதி செலுத்தும் தண்டாயுதமும், மிக்கபுகழை அதிகரிக்கச்செய்யும் செங்கோலும் இறைவரே! இங்குள்ளன. அங்கீகரித்தருளும் என்று சிவந்த திருவடிகளை அடுத்து மிக்க அன்புடன் ஒப்புவித்து வணங்கி நின்றான்.

மிறை - பாவம், தீமை. முறை - நீதி. கண்டுகொள் - அங்கீகரித்தருளுக; "உடையாய் என்னைக் கண்டுகொள்ளே" (திருவாசகம்). இட்டனன், வணங்கினன்: முற்றெச்சங்கள்.

37. நல்ல மணம்வீசும் கொன்றை மலர்மாலையையும் இளம்பிறைச் சந்திரனாகிய கண்ணியையும் தரித்த சடையையுடைய சிவபெருமான் புன்முறுவல்செய்து வலிய இயமன் முகத்தைப் பார்த்து, கோபிக்கும் வன்மையையுடைய எளிய காலனே! கேட்பாய். சிவகணங்கள் மாறுபட்ட தன்மையொன்றும் செய்திலர் என்று உண்மையை அருளுவாராயினர்.

விரை - வாசனை. கடுக்கை - கொன்றை. நாண்மதி - பிறைச்சந்திரன். எறுழ் - வலி. மறலி - இயமன். தெறு - கோபிக்கும். சிறுகால - எளிமையுடைய காலனே; விளி. எளிமையாவது இன்னதென நுனித்தறியாத சிற்றறிவுடைய தன்மை. திறம்பிய முறைமை - நீதிமாறுபட்டமை: முறை திரும்பியமை. நிறுவல் செய்திலர் - நிலைப்படுத்திலர். கணத்தவர் நீதி மாறுபட்டிலர் என்பது கருத்து.

38. பாதகங்களைச் செய்யும் கொடியோரெல்லாம் நடுநடுங்கி அச்சங் கொள்ளும் பாதகங்களைப் பல கோடிக்கணக்காக அங்கிரன் செய்தானேனும் சிறந்த தவத்தையுடைய முனிவரர்களும் மனத்திலே பொறாமை கொள்ளுமாறு சிறந்த தவத்தை மிகுதியாகச் செய்த மெய்ம்மையை உடையவனாவான்.

பதைபதைத்து - நடுநடுங்கி. பயிற்றுதல் - இடைவிடாமற் செய்தல். அழுக் கறுப்ப - அழுக்காறுகொள்ள; அழுக்காறு - பொறாமை. வாய்மை - மெய்ம்மை.

அன்ன மாதவம் யாதென வயிர்த்தகத் தழுங்கல்
பன்னு கின்றனங் கேள்பகட் டூர்தியங் கடவுள்
மின்னு நம்முரு வாகிய வெள்ளியங் கிரியைத்
துன்னி வைகினன் சுடர்வரை நோக்கின னிச்சம். 39

இறுதி வந்துழி யெறிதிரைக் காஞ்சியம் புனல்வாய்
முறுகு காதலின் மடுத்தனன் மூரியங் கரைநின்
றறுதி யாக்கைவிழ்ந் துருண்டதி னழுந்திய திகலன்
மறுவி னீற்றுமேட் டவன்றலை வாங்கியிட் டனவே. 40

இன்ன மாதவந் தனக்கெதிர் மாதவ முளதோ
அன்ன தாதலிற் பாதக னவனென நினையன்
மன்னி நாம்பயில் கயிலையின் மற்றவன் வருமே
துன்னு பாதகத் தொடர்புடை யானெனிற் சூழ்தி. 41

39. அத்தகைய சிறந்த தவம் யாது என்று ஐயங்கொண்டு மனம் வருந்தாதே. சொல்லுவோம் கேள். எருமைக்கடாவை ஏறிச் செலுத்துபவனே! நம்முடைய வடிவமாகிய வெள்ளிமலையை அடைந்து அவன் தங்கியிருந்தான்; நாடோறும் ஒளிபொருந்திய அந்த மலையைத் தரிசித்தான்.

அயிர்த்து - சந்தேகமுற்று. அழுங்கல் - வருந்தாதே. கடவுள்: அண்மை விளி. துன்னி - நெருங்கி. நிச்சம் - நாடோறும்.

40. முடிவுகாலம் வந்தபோது காஞ்சிநதியின் நீரை விரும்பிக் குடித்தான். காஞ்சிநதிக்கரையில் ஏறும்போது உயிர் உடலைவிட்டு நீங்கியது. உடம்பு காஞ்சி நதியில் உருண்டுபோய் விழ்ந்து அழுந்தியது. அவன் தலையை நரிகள் குற்றமில்லாத நீற்றுமேட்டிலே கொண்டுபோய்ப் போட்டன.

இறுதி-சாவு. வாய்மடுத்தனன்-உண்டான். மூரி-வலிமை. இகலன்-நரி.

41. இப்பெருந் தவத்துக்கு எதிராக வேறு பெருந்தவம் யாதேனும் உள்ளதோ? அதனால் அங்கிரனைப் பாதகன் என்று நீ நினையாதே. நிலைபெற நாம் விற்றிருக்கும் கயிலாயமலைக்கு அவன் நிறைந்த பாதகத் தொடக்குடையவனயின் வருவானே? ஆராய்ந்து பார்.

நினையல் - நினையாதே: வியங்கோள். "வகுத்துரை யாதவும் வகுத்தனர் கொளலே" (257 சூ) என அல்லீற்று வியங்கோளும் உடன்பட்டுப் புணர்த்தமையால் எடுத்தோதாத பிற ஈற்றவாய் இருதிணை ஐம்பால் மூவிடங்களினும் வாழ்த்து முதலிய ஏவற் பொருளவாய்ச் சென்றனவுளவேல் அவை, 'புதியன புகுதலும் வழுவல' என்னும் வழுவமைதியாய் வந்த வியங்கோள் என்பதூஉம் பெற்றும். "பயனில் சொற் பாராட்டு வானை மகனெனல், மக்கட் பதடி யெனல்" என்புழிப் பதடி எனல் என்பது வியங்கோள்: மகனெனல் என்பது எதிர்மறையொருமை யேவல்" என்றார் (நன் - 338) சங்கரநமச்சிவாயர்; ஸ்ரீ சுவாமிகள்.

உறுதி யின்னுமொன் றுரைத்திடக் கேட்டிபே ரூரின்
இறுதி யுற்றவர் வசித்தவ ருடலினை யெடுத்தோர்
மறுவில் வெள்ளிமால் வரையினைக் கண்டவர் காஞ்சி
முறையிற் றோய்ந்தவர் குண்டநீ றணிந்தவர் முதலோர். 42

தணிப்பில் பாதகம் பற்பல சமைத்தன ரேனும்
இணர்க்க னற்கொழுந் தட்டபஞ் செனவவை யிறப்ப
மணப்ப சும்பொழில் வாங்குமிம் மால்வரை யடுப்பர்
பணைத்த பாவரென் றவர்தமைப் பற்றநீ முயலல். 43

ஆதி யம்புரி யெல்லையி னன்றியா ரேனுந்
தீது செய்திடி னவர்தமைச் சிக்கயாப் புறுத்துக்
கோத னுங்குமா முறைபுரி கொண்டதி காரம்
போதி யென்றனன் புரம்பொடித் தருளிய புனிதன். 44

---

42. உறுதி பயக்கும் மற்றொரு செய்தியைக்கேட்பாய். பேரூரில் இறந்தவர் வசித்தவர் பிறந்தவர் குற்றமற்ற வெள்ளிமலையைத் தரிசித்தோர் காஞ்சிநதியிலே விதிப்படி மூழ்கினோர் பிரமகுண்டத்தின் விபூதியை அணிந்தவர்கள் முதலியோர்,

இறுதி - முடிவு. கண்டவர் - தரிசித்தோர்.

43. நீங்குதற்கு அருமையான பலப்பல பாதகங்களைச் செய்தாராயினும், பிழம்பாகவுள்ள அக்கினிக் கொழுந்திலே அகப்பட்டு அழிந்த பஞ்சினைப்போன்று அவை தொலைய, மணம் பொருந்திய சோலையால் சூழப்பெற்ற இந்த மலையினை வந்து பொருந்துவார்; பெரிய பாவமுடையோர் என்று அவர்கள் உயிரைக் கவர்ந்துபோக நீ முயலற்க.

தணிப்பு இல் - குறைதலில்லாத. இணர் - கொத்து, பிழம்பு. கனல் கொழுந்து - அக்கினிச்சுவாலை. அட்ட - கொன்ற, அழித்த. இறப்ப - நீங்க. வாங்கும் - வளைந்த, சூழ்ந்த. முயலல்: அல், வியங்கோள் விகுதி.

44. ஆதிபுரியெல்லையில் அல்லாமல் எவராயினும் தீது செய்வாராயின் அவர்களை நன்றாகப்பிணித்து, அவர்கள் குற்றம் நீங்கும்படி நீதியைச் செலுத்துவாயாக. அதிகாரத்தைப் பெற்றுப் போவாய் என்று சிவபெருமான் அருள் புரிந்தனர்.

சிக்க-அகப்பட்டுக்கொள்ளும்படி. யாப்புறுத்து-கட்டி, பிணித்து. அனுங்குமாறு - கெடும்படி. முறை - நீதி, அதிகாரம் கொண்டுபோதி.

மடந்தை பாகனி தருளலு மறலிநெஞ் சுருகி
மடந்த வாதவென் பிழைபொறுத் தருளென வணங்கி
இடந்து மாலறி யாப்பதத் தன்பிடை விடாமற்
படர்ந்து தன்பதி பயின்றதி காரஞ்செய் திருந்தான். 45

துறந்து மேதைய ராயினுந் தோகையர் துணைத்தோள்
மறந்தி டாதவ ராயினும் வழியிலா வழியின்
இறந்த தீமைய ராயினு மிருங்கதி வேட்பின்
உறந்த போதியங் காடலா லுறுத்துவ துளதோ. 46

வென்ற வைம்பொறி விரதமா தவத்தினீ ரறத்தைக்
கொன்ற வங்கிரன் கதியினைக் குறுகிய துறைத்தாங்
கன்ற லம்பிய கைத்துணைக் கவுரிதன் றவத்தை
நன்றி யம்புது மறிகென நவிற்றுவன் சூதன். 47

அங்கிரன் கதிபெறுபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1596

---

45. உமாதேவியாரை ஒருகூறுகவுடைய சிவபெருமான் இவ்வாறு அருள் செய்ய, இயமன் மனம்உருகி, அறியாமை நீங்காத அடியேனுடைய குற்றத்தைப் பொறுத்தருளுக என்று வணங்கி, திருமால் பன்றிவடிவாகிக் கிண்டிச்சென்றும் காணமுடியாத திருவடிகளிலே இடையறாத அன்புகொண்டு தன்னுடைய நகரத்தையடைந்து தன் அதிகாரத்தைச் செலுத்தியிருந்தான்.

மடந்தை பாகன் - சிவபெருமான். மறலி - இயமன். மடம் - அறியாமை. தவாத - நீங்காத. இடந்து - கிண்டி, கொம்பால் உழுது.

46. துறவறத்தை மேற்கொண்டு பேரறிஞராக விளங்கினராயினும், பெண்களுடைய தோள்களிலே அணைவதற்கு மறவாத பற்றுடையவராயினும், சன்மார்க்க ஒழுங்கிலே செல்லாமல் ஒழுக்கமின்றி மிக்க தீமையையுடையவராயினும், பெருமை பொருந்திய வீட்டின்பத்தை விரும்புவராயின் நிறைந்த அரசவனத்தை அல்லாமல் செலுத்துவது வேறு உளதோ? இல்லை என்றபடி.

மேதையர் - அறிவுடையோர், ஞானிகள். இறந்த தீமை - மிகுந்த தீமை.

47. ஐம்புலன்களையும் வென்ற சிறந்த தவமுனிவர்களே! தருமத்தை அழியச்செய்த அங்கிரன் முத்தியடைந்த செய்தியைச் சொன்னேம். கௌரி தவம் செய்த செய்தியை நன்கு சொல்லக் கேட்பீர் என்று சூதமுனிவர் சொல்லத் தொடங்கினர்.

இருபத்தெட்டாவது

கௌரி தவம்புரிபடலம்

வண்டு முரலு மலர்க்கடவுள் வரத்தி னுயிர்த்த சிறுவிதிதான்
பண்டு பரனை வழிபட்டுப் பயின்மூ வுலகுந் தாட்படுத்துக்
கொண்டு மகிழு மந்நாளிற் குறைவி றவத்தா னுமையாண்மற்
றண்டர் வியப்பச் சதிதேவி யென்ன வவற்கு மகளானாள். 1

வளரு மகளுக் காறிரட்டி வருட மடுத்த பருவத்தின்
அளவி றவத்துச்சிறுவிதிநஞ் சயின்று மிடற்றிற் கணியாக்கித்
தளரு மமரர் மடமாதர் தங்கண் மிடற்றுக் கணிநிறுவு
மிளிர்பொற் சடில வேதியர்க்கு விதியிற் புனல்வார்த் தளித்திட்டான். 2

---

1. வண்டுகள் ஒலிக்கும் தாமரைமலர்ப் பீடத்தையுடைய பிரமதேவர் வரத்தினால் தோன்றிய தக்கன், முன்பு சிவபெருமானை வழிபாடு செய்து மூன்றுலகங்களும் தன் அடியின்கீழ் ஒதுங்கி ஆணையின்கீழ் நடக்க மகிழ்வுடன் வீற்றிருக்கும் காலத்தில் குறைவில்லாத தவப்பெருமையால் உமாதேவியார், தேவர்கள் எல்லோரும் வியப்படையுமாறு சதிதேவி என்னும் பெயருடன் அவனுக்கு மகளாக வந்து தோன்றினாள்.

முரலும்-ஒலிக்கும். மலர்க் கடவுள்-பிரமதேவர். சிறுவிதி - தக்கன்; தக்ஷப் பிரசாபதி. தாட்படுத்து - அடிப்படுத்தி ; என்றது ஏவல்வழிநிற்றலை. அவற்கு - தக்கனுக்கு.

2. தக்கனிடத்துத் தோன்றி வளரும் மகளுக்குப் பன்னிரண்டு பிராயம் வந்து பொருந்திய காலத்தில் அளவில்லாத தவத்தையுடைய தக்கன் ஆலகால விடத்தையுண்டு தமது கண்டத்திற்கு ஒரு அழகுபெறச் செய்து தளர்ச்சியடைந்த தேவர்களுடைய மனைவிமார்களின் கழுத்திலே தாலியாகிய அணிகலம் நிலை பெறச் செய்து விளங்கும் பொன்போன்ற சடையினையுடைய சிவபெருமானுக்கு வேத விதிப்படி தாரை வார்த்து மகளை மணம் செய்வித்தான்.

ஆறிரட்டி - பன்னிரண்டு. அயின்று - உண்டு. மிடறு - கழுத்து. அணி - அழகு : நஞ்சு கண்டத்திற்கு அழகுசெய்தல் : "கறைநிறுத்திய கந்தர சுந்தரக் கடவுள்" (பரஞ்சோதி திருவிளை). மாதர் மிடற்றுக்கு அணி தாலி நிலைபெறுதல் ஒன்றேயாம். சடிலம் - சடை. வேதியர் - வேதத்தினுட் பொருளாயுள்ளார் : தேவர்களுட் பிராமணர் தேவதேவராகிய சிவபெருமான் ஒருவரே. புனல் வார்த்தல் - தாராதத்தம் செய்து கொடுத்தல்.

தள்ளாச் சிறப்பின் மகமொன்று சமைக்க முயன்று பின்னொருநாள்
நள்ளார் புரங்க ளொருநொடியி னகையிற் பொடித்த மருகனுக்குங்
கள்ளார்ந் தொழுகு மலர்க்கூந்தற் கயற்கண் மகட்கு மறிவிப்ப
விள்ளா விருப்பின் கயிலாய விலங்க லடுத்தங் கெதிர்போந்தான். 3

வற்றற் றலைமா லிகைப்பெருமான் வாளா திருந்தா னதுநோக்கி
எற்றுக் கிவண்வந் தனஞ்சூலி யிடுகாட் டாடி யெரியேந்தி
கற்றைச் சடிலி கங்காளி கபாலி யிவன்சீ ரறியாமே
உற்று மகளைக் கொடுத்தாமென் றுளைந்து வெகுட்சி யொடுமீண்டான். 4

விடமுண் டிரந்துண் டெருதேறி வியாள மதளென் பறலணிந்து
துடிமிக் குரப்பி யுழைபரசு சுடரு மருப்பா திகள்சுமக்கும்
அடலை யுருவத் தாற்களித்த வன்றே மகளை யிழந்தாமென்
றுடலை மனத்தி லிருவரையும் வெறுத்தா னுறவு பகையோரான். 5

---

3. தக்கன் நீங்காத பெருஞ்சிறப்பினையுடைய வேள்வியொன்றைச் செய்யத் தொடங்கிப் பின்னொருநாள் சிவபெருமானுக்கும் மகளாகிய தாட்சாயணிக்கும் தெரிவிக்க நீங்காத விருப்பத்துடன் கயிலாயமலைக்குச்சென்று இறைவர் சந்நிதியை அடைந்தான்.

தள்ளா - நீங்காத. மகம் - யாகம். நள்ளார் - பகைவர். பொடித்த - நீறு செய்த. கள் ஆர்ந்து - தேன்நிறைந்து. விள்ளாவிருப்பின் - சொல்லொணாத விருப்பத்துடன். விலங்கல் - மலை.

4. சிவபெருமான் சும்மா இருந்தார். அதனைக்கண்ட தக்கன் எதற்காக நாம் இங்கே வந்தோம். சூலாயுதத்தை யுடையோன், சுடுகாட்டில் ஆடுவோன், எரியகலை ஏந்துபவன், கற்றைச்சடையான், முழுஎலும்பையணிந்தோன், பிரமன் மண்டையோட்டைக் கரத்தில் ஏந்தியவன் ஆகிய இவனுடைய தன்மைகளை அறிந்துகொள்ளாமல் நம்முடைய மகளை மணஞ்செய்து கொடுத்தோம் என்று வருந்திச் சினத்துடனே திரும்பினன்.

வற்றல்தலைமாலிகை - உலர்ந்த தலைமாலை. வாளாது - சும்மா. இடுகாடு - சுடுகாடு. சடிலம் - சடை. கங்காளம் - முழுவெலும்பு. சீர் - தன்மை. உளைந்து - வருந்தி. வெகுட்சி - கோபம்.

5. நஞ்சையுண்டு, பிச்சையேற்றுப்புசித்து, மாட்டின்மேல் ஏறிக்கொண்டு, யானை புலி இவற்றின் தோல் எலும்பு நீர் இவற்றைச் சுமந்து, உடுக்கை ஒலியை மிக எழுப்பி, மான் பரசு கொம்புகள் முதலியவற்றையும் சுமந்து, சாம்பலைப் பூசி உழலும் இவனுக்குக் கொடுத்த அன்றே மகளை இழந்துவிட்டோம் என்று மாறுபட்ட மனத்திலே சிவபெருமானையும் உமாதேவியாரையும் விருப்பு வெறுப்புக்களால் உண்டாகும் பயனை ஆராய்ந்தறியாதவனைப் பகைத்தான்.

மகத்தி னளிக்கு மவிப்பாகம் வடிகொள் சூலப் படையானுக்
ககற்றி யேனை யோர்க்கெல்லா மளிப்ப லவன்பா கமுமும்மைச்
சகத்தை யளிக்கு மரிக்களிப்ப லென்று தடுத்தும் பிடிவிடான்
மிகத்தன் மருங்கு விண்ணவர்கண் மிடைய வேள்வி தொடங்கினன். 6

வேறு

கரும்புரு வரித்ததோட் கரிய கூந்தலாள்
இரும்புகழ்த் தாதையங் கியற்றும் வேள்வியை
விரும்பினள் காணவெள் விடையி னுனெதிர்
அரும்பிய வன்பினு லடிவ ணங்கினுள். 7

யாதுநின் விழைவென விறைவி னுதலும்
மாதவண் மொழிகுவாள் வானின் மங்கையர்
பூதல மடந்தையர் குழுமிப் பொற்புறுங்
காதலன் வேள்வியான் காண்க வென்றனள். 8

வியாளம் - யானை, புலி. அதள் - தோல். அறல் - நீர். துடி - உடுக்கை. உரப்பி - ஒலிப்பித்து. உழை - மான். பரசு - கோடாலி, மழு. மருப்பு - கொம்பு. அடலை உருவம் - சாம்பல் பூசிய வடிவம். உடலும் - மாறுபடும். ஓரான் - ஆராய்ந்தறியாதவனாய்.

6. நாம் செய்யும் பிரமவேள்வியில் கொடுக்கும் அவிப்பாகத்தைச் சிவபெருமானுக்குக் கொடாமல் நீக்கி, ஏனைத்தேவர்களுக்கெல்லாம் நன்று கொடுப்பேம்; அவனுடைய பாகத்தையும் மூவுலகத்தையும் காப்பாற்றும் விஷ்ணுமூர்த்திக்கே கொடுப்பேம் என்று உறுதிபூண்டு, சிறந்த முனிவர்கள் தடுத்துக்கூறிய சொல்லையும் கேளாதவனாய்த் தன்னுடைய பிடிவாதத்தை விடாமல் தன்னை நெருங்கிச் சூழ்ந்துள்ள தேவர்களுடன் வேள்வியை இயற்றத் தொடங்கினன்.

மகம் - யாகம். வடி - கூர்மை. மும்மைச் சகம் - மூன்றாகிய உலகம். மருங்கு - பக்கம். மிடைய - நெருங்க.

7. உமாதேவியார், தமது தாதையாகிய தக்கன் செய்யும் வேள்வியைக் காண விரும்பினவளாகி வெள்ளிய இடபவாகனத்தையுடைய சிவபெருமான் எதிரிலே சென்று அன்புடன் திருவடிகளில் வணங்கினுள்.

வெள்விடை - வெள்ளிய இடபம். அரும்பிய - முகிழ்த்த, தோன்றிய.

8. உன் விருப்பம் யாது என்று இறைவர் கேட்க, உமாதேவியார் கூறுவாள்:- விண்ணரமகளிர், மண்ணுலக மகளிர் முதலியோர் சூழ அழகுறும் தந்தையின் வேள்வியை யான் காண விரும்பினேன் என்றாள்.

விழைவு - விருப்பம். இறை - சிவபெருமான். குழுமி - கூடி. காதலன் என்றது விருப்பத்தையுடைய தாதையை என்க.

நினக்கவன் ருதைையே யானு நீள்குழால்
எனக்கவன் பகைத்தன னின்ன தாதலால்
தமக்கெனக் குரியந தானுந் தெவ்வென
மனக்கொளு மெனமறுத் தமலன் கூறினன். 9

தக்கனர் பெருந்தவந் தவிரும் பாணியுந்
தொக்கபல் வரைக்கெலாந் தோன்றல் செய்தவ
மிக்குறு பாணியும் விளைந்த நீர்மையான்
மைக்குழல் விழைவினை மாற்று கின்றிலள். 10

அவாவுநின் னுள்ளக மமைந்த தில்லெனின்
உவாநெடுங் கரத்தினை யொறுத்துத் தள்ளிய
கவானுடைக் காரிகை கதழ்ந்து செல்கெனத்
தவாததொல் லுருவினன் சாற்றி விட்டனன். 11

உடம்படல் போன்றிறை மறுத்த தோர்ந்துமவ்
உடம்பிடித் தடங்கண லுகைக்குங் காதலால்
உடம்புமென் கொடியென வொசிய மீட்டுந்தாழ்ந்
துடங்குதன் பரிசன முறவங் கேகினள். 12

---

9. நினக்கு அவன் தந்தையேயாயினும், என்னை அவன் மிகப் பகைத்துள்ளான்; ஆதலால் எனக்கு மனைவியாகிய நீயும் தனக்குப் பகைமையுடையாள் என்று அவன் கருத்தில் கொள்வான் என மறுத்துச் சிவபெருமான் கூறினர்.

தாதை - தமப்பன். குழால்: விளி. எனக்கு : உருபு மயக்கம். தெவ் - பகை. மனக்கொள்ளும் - மனத்துட்கொள்ளுவான்.

10. தக்கனுடைய பெரிய தவம் நீங்கும் பருவமும், மலைகளுக்கெல்லாம் அரசனாகிய இமவான் செய்த தவத்தின் மிகுதியாகிய பருவமும் பயன் தருவதற்குரிய செவ்வித்தாகலின் உமாதேவியார் தான் கொண்ட விருப்பத்தை மாற்றிக் கொண்டிலள்.

தவிரும் பாணி - நீங்கும் காலம். தோன்றல் - தலைவன். மிக்குறும் பாணி - மிகுதியாகுங் காலம்: பாணி - காலம். நீர்மை - தன்மை. விழைவு - விருப்பம்.

11. உன் மனத்திலுள்ள விருப்பம் தணியாவிடில், உமாதேவியே! நீ செல்க என்று கோபத்துடன் சிவபெருமான் கூறியருளினர்.

அவா - ஆசை. அமைந்தது இல் எனில் - தணிந்திலதாயின். உவா - யானை. நெடுங்கரம் - தும்பிக்கை. கவான் - துடை. கதழ்ந்து - கோபித்து. தவாத - நீங்காத தொல் உரு - பழைய வடிவம்.

12. உடன்பட்டுச் சொல்லுவது போல இறைவர் மறுத்துச் சொல்லிய சொல்லை நன்கு அறிந்து வைத்தும் உமாதேவியார், பிடித்துச் செலுத்தும்

வந்தனள் சதியென வழங்கு தூதுவர்
முந்துபுக் குரைப்பமுன் முகத்துச் சென்றனள்
தந்தைவம் மென்றிலன் றன்னைத் தேர்ந்தவன்
சுந்தர மனைவியுஞ் சொல்லொன் றுடிலள். 13

மக்களும் பேசிலர் மருங்கு துன்றிய
ஒக்கலு முவந்தில ரொரும ருங்குபோய்
இக்களத் தின்னுமென் விளையு மன்னது
மிக்கறி வாமென விருத்தன் மேயினள். 14

உருத்திரச் செம்மலுக் குதவும் பாகமற்
றருத்தியின் மாயனுக் களித்திட் டானவன்
மருத்திகழ் பூங்குழல் வனச மென்முகைத்
திருத்திகழ் முலையவ ளேக்கிச் சிந்திப்பாள். 15

விருப்பத்தால் மென்மையான உடல் கொடிபோல நுடங்க மறுபடியும் வணங்கித் தன்பக்கலில் உள்ள பரிசனங்கள் தன்னைச் சூழ்ந்துவர அங்கே சென்றாள்.

ஓர்ந்து - ஆராய்ந்து வைத்தும். உடம்பிடி - வேல். உகைக்கும் - செலுத்தும். ஓசிய - துவள. உடங்கு - தன்னுடனே. பரிசனம் - ஏவல் மகளிர் முதலியோர்.

13. உம்முடைய மகளாகிய சதிதேவி வந்திருக்கின்றாளென்று தூதுவர்கள் முன்னமே ஓடிச்சென்று தக்கன்பால் விண்ணப்பிக்கச் சாலை முகப்பிலே சென்றாள். தந்தை வருக என்று முகங்கொடுத்திலன். அவன் மனைவியும் ஒன்றும் பேசிலள்.

முந்து புக்கு - முன்னரே சென்று. ஆடிலள் - பேசிலள்: ஆடல் - வார்த்தை.

14. ஏனைய அவனுடைய மக்களும் பேசிலர். பக்கத்திலே நெருங்கியுள்ள சுற்றத்தாரும் மகிழ்ந்திலர். அதனைக்கண்ட சதி பக்கத்திலே சென்றிருந்து இவ் வேள்விக்களத்திலே இன்னும் என்ன விளையுமோ? அதனையும் அறிவோம் என்று நினைத்திருந்தாள்.

மருங்கு துன்றிய - பக்கத்தில் நெருங்கிய. ஒக்கல் - சுற்றம். களம் - இடம். மிக்கு அறிவாம் - மேலும் தெரிந்துகொள்ளுவோம்.

15 .அத் தக்கன் செய்யும் வேள்வியிலே உருத்திரமூர்த்திக்குக் கொடுக்கும் அவிப்பாகத்தை மிகவிருப்புடன் திருமாலுக்குக் கொடுத்தான். அதைக்கண்ணுற்று உமாதேவியார் சிந்திப்பாளாயினள்.

பாகம் - அவிப்பாகம். அருத்தியின் - விருப்பத்துடன். மாயன் - திருமால். மரு - வாசனை. வனசம் - தாமரை. முகை - அரும்பு. அவள் நோக்கி.

வள்ளலா ரருளினை மறுத்துப் போந்தனந்
தெள்ளிய வுணர்விலஞ் சிதம்புத் தக்கனும்
எள்ளின னிறையையு மிவன்ம கண்மையைத்
தள்ளுதன் முறையெனத் தழலின் மூழ்கினாள். 16

துவன்றிய முனிவருஞ் சுரரும் யாவருங்
கவன்றனர் துடித்தனர் கலுழ்ந்து தக்கனும்
இவன்றனக் கிப்பழி யெய்திற் றம்மவோ
பவன்றனை யெள்ளிய பான்மைத் தாலெனார். 17

அழுங்கிய சோடைகொண் டடுத்து ளார்விடம்
விழுங்கிய தெனமதி வேறு பட்டனர்
ஒழுங்கிலாத் தக்கனும் வெற்று டம்பனாய்
எழுங்கனன் மகத்தொழி லியற்றி நின்றனன். 18

---

16. சிவபெருமானுடைய அருட்குறிப்பை மறுத்து இங்குவந்தடைந்தோம், தெளிந்த அறிவிலேம், அறிவில்லாத தக்கனும் சிவபெருமானையும் இகழ்ந்தான், இவனுக்கு மகள்முறையை விட்டு நீங்குதலே தக்கதாம் எனக்கருதி உமாதேவியார் அக்கினியிலே மூழ்கினாள்.

சிதம்பு - அறிவின்மை, குறும்பு. எள்ளினன் - இகழ்ந்தான். மகண்மை - மகளாந்தன்மை. தள்ளுதல் - நீக்குதல்.

17. வேள்விக் களத்திலே நெருங்கியுள்ள முனிவர்களும், தேவர்களும் கவலை அடைந்து மனந்துடித்தனர். இரங்கிப் புலம்பித் தக்கனாகிய இவனுக்கு ஐயோ! இந்தப்பழி வந்து சூழ்ந்ததே. இதற்குக்காரணம் சிவபெருமானை இகழ்ந்தமையேயாம் என்று கூறினர்.

துவன்றிய - நெருங்கிய, கூடியுள்ள. சுரர் - தேவர். கவன்றனர் - கவலையடைந்து: முற்றெச்சம். கலுழ்ந்து - கலங்கி. அம்ம ஓ: இரக்கக்குறிப்பு. பவன் - எல்லாம் பிறத்தற்குக் காரணமானவன்: "பவன் பிரம சாரியாகும் பான்மொழி கன்னி யாகும்" (சித்தி). "பவனெனும் நாமம் பிடித்துத் திரிந்து பன்னாளழைத் தால்" (தேவா).

18. வருந்திய சோர்வுடன் கிட்டியவரை விடமானது விழுங்கிவிட்டாற் போல, அறிவு வேறுபட்டார்கள். நீதியற்ற தக்கனும் உயிரில்லாத உடம்புபோல யாகத்தொழிலை நடத்தினான்.

அழுங்கிய - வருந்திய. சோடை - சோர்வு. மதி - அறிவு. ஒழுங்கு - நீதி. வெற்றுடம்பு - பிணம். எழுங் கனல்மகம் - சுவாலித்தெரியும் அக்கினியையுடைய யாகம்.

வேள்வியந் தீயிடை மேவி னூர்க்கெலாம்
வாழ்வினை யளிப்பவண் மாய்ந்த வண்ணமோர்ந்
தாழ்வினை விடமிடற் றடக்கி கோபியாத்
தாழ்வினைச் சடையொன்று தரையி னெற்றினன். 19

எற்றிய சடையினின் றெரிபொன் வேணியும்
நெற்றியின் விழியுநீ டலையின் கோவைகண்
முற்றிய வுரமுமொய் படைகை யேந்திய
வெற்றியும் விளங்குற வீரன் தோன்றினன். 20

வணங்கின னிறைவனை மலர்க்கை வாய்புதைத்
திணங்கலர்க் கிரும்படை யெடுப்ப நேர்கலா
துணங்குறத் திருவுளத் துன்னுஞ் சேவக
வணங்கரும் பணியெனக் கருள்க வென்றனன். 21

---

19. யாகாக்கினியிடத்தே பொருந்தினவர்களுக் கெல்லாம் நல்வாழ்வை யருளும் உமாதேவியார் மறைந்தமையை ஆராய்ந்து, நஞ்சைக் கண்டத்திலடக்கிய சிவபெருமான் சினந்து, தாழ்ந்து தொங்கும்சடையிலொன்றை வாங்கித் தரையில் ஓங்கியடித்தார்.

வாழ்வினை அளிப்பவள் - அருள்செய்கின்றவள். மாய்ந்த - மறைந்த. விடம் மிடற்று அடக்கி: அடக்கி: பெயர். எற்றினன் - அறைந்தார்.

20. சிவபெருமான் வாங்கியடித்த சடையிலிருந்து, நெருப்பிலிட்ட பொன் போன்ற சடையும், நெற்றிக்கண்ணும், தலைமாலையின் நீண்டகோவை தொங்க விட்ட மார்பும், சூலப்படையைக் கையிலேந்திய வெற்றியுமுடையராய் வீரபத்திரக் கடவுள் தோன்றினர்.

எற்றிய - அறைந்த. வேணி - சடை. நீள் தலையின்கோவை - தலைமாலை. உரம் - மார்பு. மொய்படை - சூலாயுதம். வீரன் - வீரபத்திரக் கடவுள்.

21. தோன்றிய வீரன் சிவபெருமானை வணங்கி, வாய்புதைத்து நின்று, பகைவர்களைப் படைக்கலங்களை எடுத்தலும் செய்யாது வாடும்படி திருவுளத்திற் கொண்டருளும் ஐயனே! அடியேனுக்குத் துன்பமில்லாத பணி யாது? அதனை அருளுக என்று வேண்டி நின்றார்.

வணங்கினன்: முற்றெச்சம். வாய்புதைத்தல்-கைகளால் வாயைப்பொத்திக் கொள்ளுதல். இணங்கலர் - பகைவர். நேர்கலாது - சந்தர்ப்பம் இல்லாதபடி. உணங்குற - வாட. அணங்கு அரும் - துன்பமில்லாத.

மாறுகொண் டொருமகம் வளர்க்குந் தக்கனைக்
கூறுசெய் தவ்வுழிக் குழுமி னூர்க்கெலாம்
விறுசெய் தண்டங்கள் விளைத்திட் டம்மகம்
நீறுசெய் தமர்கென நிமல னேவினன். 22

வேறு

நிழன்றவொரு வெண்கவிகை நீடுமர சாட்சி
கழன்றுவளர் தக்கனுயிர் கையகல வீரன்
தழன்றுபல சாரதர் கடற்புறம் வளாவ
வழன்றின்மகள் பின்றொடர வைதவ ணடுத்தான். 23

சிற்சில கணங்கடிசை தோறும்வழி காப்பப்
பற்பல கணங்களொடு பாழிமக மாற்றும்
பொற்புறு களம்புனித வீரனுற லோடு
மற்பவுணர் வாளரனை வோருமஞர் கூர்ந்தார். 24

---

22. பகைத்து ஒரு வேள்வியை யாற்றும் தக்கனைக் கூறுபடுத்தி. அவ் வேள்விக் களத்தில் கூடியிருக்கும் யாவருக்கும் தக்க தண்டனைகளைச் செய்து, அந்த வேள்வியை நீறுபடுத்தி அமர்வாய் என்று சிவபெருமான் கட்டளையிட்டு அனுப்பினர்.

மாறு - பகை. மகம் - பிரமயாகம். உழி: ஏழனுருபு. விறு - மேம்பட்ட. தண்டம் - தண்டனை. நிமலன் - சிவபெருமான்.

23. நிழலைச் செய்யும் ஒப்பற்ற வெண்கொற்றக் குடையினையுடைய பெரிய அரசாட்சி நீங்க, வீரபத்திரக்கடவுள் கோபித்துப் பூதகணங்கள் கடலின் புறத்துச் சென்று கலக்கும்படி பிணத்தைத் தின்னும் காளியும் பின்னே தொடர்ந்துவர வைதுகொண்டு அவ்வேள்விக்களத்தை அணுகினர்.

நிழன்ற - நிழலைச் செய்கின்ற. கழன்று - நீங்க: செய்து என்னும் வாய் பாட்டைச்செய எனத் திரிக்க. தழன்று-கோபித்து: கோபாக்கினியைச்சொரிந்து என்க. சாரதர் - பூதர். வளாவ - கலக்க. அழன் - பிணம்.

24. சில சில பூதகணங்கள் திசைகளிலெல்லாம் உள்ள வழிகளைப் பாது காவல் செய்யப் பலப்பல பூதகணங்களோடு வன்மையான வேள்வியைச் செய்யும் அவ்வேள்விச்சாலையைத் தூய வீரபத்திரக் கடவுள் சென்றடைந்த காலத்துச் சிற்றறிவுடைய தேவர் முதலிய யாவரும் துன்பம் மிகுந்தனர்.

பாழி-வலிமை. மகம் - யாகம். வீரன் - வீரபத்திரக்கடவுள். அற்பவுணர்வு - சிற்றறிவு. அஞர் - துன்பம்.

தக்கன்முடி யெச்சன்முடி யீர்ந்துதழ லிட்டான்
தொக்கவழ லங்கையொடு நாத்திர டுணித்தான்
புக்கபகன் வாள்விழி புயந்துபக லோன்பல்
ஒக்கவுக வெற்றியொரு வீரன்மதி தேய்த்தான். 25

நாசியொடு மாதர்க ணகிற்றுணை யிழந்தார்
பேசும்வகை யென்னைபெறு வானவர் திறத்தத்
தேசினுடல் பற்பலர் சிதைந்துயி ரிறந்தார்
கூசியுயிர் கொண்டுபலர் கொம்மென விரிந்தார். 26

---

25. தக்கனுடைய தலையையும்; எச்சனுடைய தலையையும் அறுத்து வேள்வித்தழலில் போட்டார், தொகுதியாகவுள்ள அக்கினிதேவனுடைய கைகளையும், நாக்குகளின் தொகுதியையும் அறுத்தெறிந்தார். வேள்விச்சாலையினுள்ளே உண்ணப் புகுந்திருந்த பகன் என்னும் சூரியனுடைய ஒளி நிறைந்த விழியைப் பறித்தும், பூஷன் என்னும் சூரியனுடைய கன்னத்திலடித்தமையால் பற்கள் முழுவதும் நொறுங்கி விழச்செய்தும் வெற்றியையுடைய வீரன் சந்திரனைக் காலாலே தேய்த்தருளினர்.

எச்சன் - வேள்வித்தெய்வம்; வேள்வி. ''வெஞ்சின வேள்வி வியாத்திரனார்தலை, துஞ்சிய வாபாடி உந்தீபற; தொடர்ந்த பிறப்பற உந்தீபற''. புக்க பகன் வாள்விழி புயந்து: ''உண்ணப் புகுந்த பகனொளித் தோடாமே, கண்ணைப் பறித்தவா றுந்தீபற, கருக்கெட நாமெலாம் உந்தீபற'' (திருவாசகம்). தொக்க அழ லங்கையொடு நாத்திரள் துணித்தமை: ''எரியதொரு கைதறித்த விறைவர்'' (தேவா). ''செந்தீக் கடவுடன் கரதலஞ் செற்றும்'' (கோபப்பிரசாதம் - 31). ''வன்னி நாவினோ டெழுகரந் துணித்து'' (காஞ்சிப் - தக்கீச - 37). அக்கினி தேவனுக்குக் கைகள் ஏழென்பது வேதத்திற் கண்டது. மற்றும், ''எச்சன் நிணத் தலைகொண்டார் பகன்கண் கொண்டார் இரவிகளி லொருவன்பல் லிறுத்துக் கொண்டார், மெச்சன் வியாத் திரன்தலையும் வேருக் கொண்டார் விறலங்கி கரங் கொண்டார் வேள்வி காத்து, உச்சநமன் தாளறுத்தார் சந்திரனை யுதைத்தார் உணர்விலாத் தக்கன்றன் வேள்வி யெல்லாம், அச்சமெழ அழித்துக்கொண் டருளுஞ் செய்தார் அடியேனை யாட்கொண்ட அமலர் தாமே.'' (திருநாவு - திருத்தாண்டகம்).

26. மாதர்கள் மூக்குடனே நகில்களையும் இழந்தனர். இனிச் சொல்வது தான் யாது தேவர்கள் வகையிலே, அவர்கள் ஒளிமிக்க உடலை இழந்து உயிர் நீங்கினர். அன்றியும் நாணத்துடனே உயிரைப் பிடித்துக்கொண்டு விரைந்து பலர் கெட்டோடினர்.

மாதர்கள் - காயத்திரி, சாவித்திரி, பிரமாணி, இவர்கள் மூக்கும் முலையும் அறுபட்டனர் என்பது சிவரகசியம். நாமகள் - கலைமகள்; 'நாமகள்' என்றதனைப் பிரமாணி எனச் சிவரகசியம் கூறும். கலைமகளுடைய நாசியை அரிந்ததாகக் கூறப்படும் செய்தியைத் தக்கயாகப் பரணியில் ஒட்டக்கூத்தர் கூறிலர். தேசு - ஒளி. கொம்மென - விரைவாக.

வேள்விவளர் சாலையழன் மேவவினி தூட்டித்
தாள்வினையி னேர்ந்துசம ராடுமுவ ணத்தோன்
வாள்விடு கனற்பரிதி மாயவலி காற்றி
மீள்வினை புரிந்தருளி னுனிகரில் விரன். 27

அன்றுவரு விரனரி யேறென விருப்பத்
தொன்றுவரு மாயன்முத லாஞ்சுரர்க ளெல்லா
மன்றவழு வைத்தொகுதி மானுவர்க ளென்றால்
வென்றிவிடை யான்வலியின் மேன்மையறி வாரார். 28

வேறு

வன்னியின் முழுகித் தக்கன் மகளெனு முறைமை நீத்த
கன்னிகல் வரைகட் கெல்லாங் காவலன் மகளாய் வைகி
மின்னவிர் சடில மோலி வேதியன் வதுவை யாற்றத்
தன்னுளத் தினிது முன்னித் தவம்பல புரியா நின்றாள். 29

---

27. வேள்விச் சாலையிலே அக்கினி மிகப்பொருந்த இனிமையாக உண்பித்து, முயற்சியுடன் போரில் எதிர்த்துப் போர்செய்யும் கருடக்கொடியையுயர்த்த திருமாலின் ஒளி பொருந்திய அக்கினியைக் கக்கும் சக்கரப்படை அழியுமாறு வலியைப் போக்கி விரபத்திரக்கடவுள் திரும்பிச் செல்லவிடுத்தார்.

அழல் - நெருப்பு. தாள்வினையின் - முயற்சியோடு. நேர்ந்து - எதிர்த்து. சமர் - போர். உவணம் - கருடன். பரிதி - சக்கராயுதம். காற்றி - போக்கி.

"ஆவா திருமால் அவிப்பாகம் கொண்டன்று, சாவா திருந்தானென் றுந்தீபற, சதுர்முகன் தாதையென் றுந்தீபற." (திருவாசகம்). சாகவேண்டியவன் சாகாதிருந்தான் என்க. "தக்கன் முதலியோர் இறந்தமை அறிந்த திருமால், விரபத்திரரோடு போர் செய்துகொண்டிருக்கையில், வீரபத்திரர் திருமாலைக் கொல்ல நினைந்து உங்காரம் செய்கையிலே "போரை நிறுத்துக" என ஒரு வானுரை எழும்பியது. ஆகலின், அவர் திருமாலைக் கொல்லாது விடுத்தார்" என்பது சிவரகசியம். இறைவனுக்குத் திருமால் ஒரு சத்தியாதலின், அச்சத்தியை அழிப்பது அவருக்கு ஒல்லாதுபோலும்.

28. அன்று தக்கன் வேள்விச் சாலையில் வந்த விரபத்திரக்கடவுள் ஆண் சிங்கம்போலத் தங்கியிருக்கப் பழமையாக முன்னே வந்துள்ள திருமால் முதலிய தேவர்கள் எல்லோரும் மிகுதியும் யானைக் கூட்டத்தை ஒத்துள்ளார்கள் என்னில், சயம் பொருந்திய இடத்தையுடைய சிவபெருமானுடைய வலிமையின் சிறப்பை யாவரே அறிவார்? ஒருவருமிலர் என்க.

அரி ஏறு - ஆண்சிங்கம். இறுப்ப - தங்க. மன்ற - மிகுதியும், பெரிதும், உறுதியாக. வழுவை - யானை. மானுவர் - ஒப்பார்.

29. நெருப்பிலே மூழ்கித் தக்கன் மகள் என்னும் தாட்சாயணிப்பெயரைப் போக்கிய உமாதேவியார் மலைகளுக்கெல்லாம் அரசனாகிய இமவான் மகளாகப்

ஆரண முறையிட் டின்னு மளவிடற் கரிய முக்கட்
பூரண ரருளால் வீணைப் புனிதமா முனிவன் போந்து
போரணி மதவே லுண்கட் புணர்முலை யுமையாள் செய்ய
தாரணி பாதந் தாழ்ந்தித் தவஞ்செய லெற்றுக் கென்றான். 30

வாயினுன் மனத்தா னீண்ட வடிவினு லெட்ட வொண்ணுத்
தாயிலாத் தாயன் ருனைச் சார்வது குறித்த தென்று
வேயினுற் புரிந்தா லன்ன வீங்குதோ ளிறைவி விள்ள
வாயினீ தமலை கேளென் றறைகுவன் வீணைச் செல்வன். 31

பொருந்திச் சிவபெருமானை மணஞ்செய்துகொள்ளத் தன் மனத்திலே நினைந்து தவங்களைச் செய்தாள்.

வன்னி - அக்கினி. காவலன் - அரசன். மின்அவிர் சடில மோலி வேதியன்: அவிர் - விளங்கும். மின் அவிர் சடிலம் : "மின்னார் செஞ்சடைமேல்" (தேவா). சடிலம் - சடை. மோலி - கிரீடம். சடில மோலி வேதியன் : "பிராமண னீயே கடவுளர் தம்முட் பிஞ்ஞகா" (காஞ்சிப்புரா - காயாரோகண - 9 செய்). வதுவை- கலியாணம். முன்னி - கருதி.

30. வேதங்கள் முறையிட்டு இன்னமும் அளவிட்டறிதற்கு அருமையான சிவபெருமானுடைய திருவருளால் நாரதமுனிவர் அவ்விடத்தையடைந்து, உமா தேவியாரின் திருவடிகளை வணங்கி, இவ்வாறு தவஞ்செய்தல் எதன் பொருட்டு என்று கேட்டார்.

ஆரண முறையிட் டின்னும் அளவிடற் கரிய : "வேதங்கள் ஐயா வென வோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" (திருவாசகம்). "அல்லையீதென அல்லை யீதென மறைகளும் அன்மைச், சொல்லி னால்துதித் திளைத்திடுமிச் சுந்தரன்" (பரஞ்சோதி - திருவி). முக்கட்பூரணர் - சிவபெருமான். பூரணர் - நிறைந் தவர். வீணை ... முனிவன் - மகதி என்னும் வீணைக்குத் தலைவராகிய நாரதர். உண்கண் - மைபூசப்பெற்ற கண்கள்.

31. வாயினாலும் மனத்தினாலும் காயத்தினாலும் அளந்தறிதற்கு இயலாத வரும், தனக்கொரு தாயின்றி எல்லாருக்கும் தாயுமாயிருப்போரும் ஆகிய சிவ பெருமானை அடையவேண்டித் தவமியற்றுகிறேன் என்று உமாதேவியார் அருள நாரதமுனிவர், அம்மையே! இதனை உண்மையாகக் கேள் என்று சொல்லுவா ராயினர்.

வாயினான் மனத்தான் நீண்ட வடிவினல் எட்டவொண்ணு: "மறையினா லயனான் மாலான் மனத்தினல் வாக்கான் மற்றும், குறைவிலா வளவி னாலும் கூறொணா தாகி நின்ற, இறைவனார்" (சித்தி). நீண்டவடிவு-காயம். வேய்-மூங்கில். விள்ள - சொல்ல. வாயின் - வாய்மையின்.

எவ்வயின் வதிந்து நீமற் றிருந்தவம் புரிந்தா யேனும்
அவ்வயி னிறைவன் மன்ற லாற்றினு னின்னைச் சேருஞ்
செவ்வி நீட் டிக்கு மாற்றாற் சிறுவரை வதுவை முற்ற
ஒவ்வரும் பேரூர் வைப்பி னுஞற்றுதல் கரும மென்றான். 32

அங்ஙன மாக வென்னு வருந்தவ முனியைப் போக்கி
உங்ஙனந் தவங்க ளாற்று முமைமட மாது மேனைக்
கிங்ஙனந் தீர்ந்து பேரூர்க் கெய்துவ றவத்துக் கென்றாள்
எங்ஙன நின்னைப் போக்கி யிருத்துமென் றன்னை நைந்தாள். 33

அருகுறு பாங்கி மார்க ளன்னையை வணங்கி நந்த
மருமலர்க் கூந்த லாட்கு மாடகத் திவவு நல்யாழ்ப்
பொருவறு முனிவன் வந்து புகன்றனன் பேரூர் வைப்பிற்
கருதிய முக்கட் பெம்மான் கடியயர்ந் திடுவ னென்னு. 34

---

32. எந்த இடத்திலிருந்து நீ சிறந்த தவத்தைச் செய்தாயாயினும் அந்த இடத்திலே சிவபெருமான் கலியாணம் விதிப்படி செய்து உன்னைக் கூடுவதற்குரிய காலம் நீடிக்கும். ஆதலால், சிறிதுகாலத்தினுள் திருமணம் முடியுமாற்றால் ஒப்பில்லாத பேரூர்த்தலத்தில் தவத்தைச் செய்தல் தக்கதாம் என்றார்.

வயின் - இடம். வதிந்து - தங்கி. மன்றல் ஆற்றினுல் - கலியாணம் செய்து கொள்ளும் முறைப்படி. செவ்வி - காலம். நீட்டிக்கும் - தாமதிக்கும். சிறுவரை - சிறிதுகாலம். வதுவை - கலியாணம். ஒவ்வ அரும் : தொகுத்தல். உஞற்றுதல் - செய்தல். கருமம் - காரியம்.

33. அவ்வாறே ஆகட்டும் என்று நாரதமுனிவரை அனுப்பிவிட்டு அங்கே தவத்தைச்செய்யும் உமாதேவியார், தாயாகிய மேனையை நோக்கி இவ்விடத்தை அகன்று தவஞ்செய்தற்குப் பேரூரை அடைவேன் என்றாள். அன்னை உமையைப் பார்த்து எவ்வாறு உன்னைப் பிரிந்து இங்கே இருப்பேம் என்று வருந்தினுள்.

மேனை - இமவான் மனைவி. போக்கி - அனுப்பிவிட்டு.

34. பக்கத்திலேயிருந்த தோழிகள் மேனையை வணங்கி, நம்முடைய பெண்ணுக்கு நாரதமுனிவர் வந்து பேரூரிலே சென்று தவம்புரியின் உன்னால் கருதப்பட்ட சிவபெருமான் திருமணம் புரிந்தருளுவார் என்று கூறிச்சென்றார் என உரைத்தனர்.

மாடகம் - முறுக்காணி. திவவு - நரம்புக்கட்டு. யாழ்முனிவன் - நாரதர். கடி அயர்ந்திடுவன் - கலியாணத்தைச் செய்துகொண்டருளுவார்.

ஆதலால் வதுவைக் கேகு மதுதனை விலக்க வொண்ணு
போதுக வென்ப தன்றே பொருத்தமென் றுரைப்ப வன்னை
காதலின் மகளை வல்லே கைகளா லணைத்து மோந்து
நீதியிற் கணவ னுர்க்கு நிகழ்ந்தது நிகழ்த்தி னுளே. 35

அருந்தவப் பேறு வாய்ந்த வாரணங் கென்னை யற்றேல்
வருந்துத லில்லை யென்னு மனத்திடை மகிழ்ச்சி கூர்ந்து
திருந்திய விமைய வெற்பன் றேவியங் குவப்பக் கூறி
முருந்திள முறுவற் செவ்வாய் மொய்குழன் மகளை நோக்கி. 36

தேவரும் பரசு மேலைச் சிதம்பர நகரம் புக்கான்
மூவரு மிறைஞ்சு முக்கண் மூர்த்தியார் விரைந்து மன்றல்
ஆவது செய்யு மாயி னவ்வயி னின்னே யன்னுய்
போவது கரும மாகு மெனப்புகன் றுரைத்துப் பின்னர். 37

அணிகல னமைத்த பேழை யவிரிழைத் துகில்பெய் பேழை
தணிபெறு பனிநீர்ச் செப்பு தண்ணிய சாந்துச் செப்பு
மணமலி விரையின் செப்பு மான்மதச் செப்பு மற்றும்
இணர்மலர்க் குழலி னுளுக் கெண்ணில கொடுத்துப் பின்னர். 38

---

35. ஆதலால் கலியாணம் செய்துகொள்ளும் பொருட்டுச் செல்லுவதை விலக்குதல் கூடாது. செல்வாய் என்று சொல்லி விடுத்தலே பொருத்தமாகும் என்று கூறினர். அன்னையாகிய மேனை ஆசையால் மகளை அணைத்துப் புல்லி உச்சியை மோந்து தன் கணவனுகிய மலையரசனுக்கு நிகழ்ந்த செய்திகளைக் கூறினுள். வதுவை - திருமணம். வல்லே - விரைவாக.

36. முடித்தற்கரிய தவத்தைச் செய்ததன் பயனைப் பெற்ற பெண்ணே! என்ன! அவ்வாருயின் வருத்தமின்று என்று மனத்திலே மகிழ்ச்சி மிக்கு இமய மலையரையன் மனைவி உவப்பை அடையும்படி சொல்லி உமாதேவியாராகிய மகளைப் பார்த்து;

அணங்கு-தெய்வப்பெண். முருந்து-மயில் இறகடிக்குருத்து. முறுவல்-பல்.

37. தேவர்களும் வணங்கித் துதிக்கும் மேலைச்சிதம்பர தலத்தை யடைந்தால் சிவபெருமான் விரைவில் திருமணம் செய்துகொள்ளுவாராயின் இப்போதே அங்கே செல்லுதல் நல்லது என்று விரும்பிச் சொல்லிப் பின்பு;

பரசும் - துதிக்கும். மூவர் - பிரமன், விஷ்ணு, உருத்திரன் ஆகியோர். முக்கண்மூர்த்தி - சிவபெருமான். மன்றல் - கலியாணம். அவ்வயின் - அவ்விடத்துக்கு. இன்னே - இப்பொழுதே. கருமம் - செயல். புகன்று - விரும்பி.

38. ஆபரணப்பெட்டி, ஆடைகள் வைக்கும்பெட்டி, குளிர்ந்த பனிநீர்ச் செப்பு, சாந்துச்செப்பு, மணமிக்க வாசனைப்பொருளின் செப்பு, கத்தூரிச்செப்பு

பாங்கியர் தங்கட் கெல்லாம் பலவகைச் சிறப்பு நல்கி
ஓங்கிய படைஞர்க் கூவி யொண்டொடி முன்கை மாது
திங்கறு பேரூர்க் கின்று செல்லுவா ளுடங்கு போந்திட்
டிங்குவந் துறுக வென்று னெழுந்தன ரவர்க டாழ்ந்து. 39

புரசைவெங் களிறுந் தேரும் புரவியுந் தானை யோடு
விரசின கடைமுன் னால மிடைந்துதுந் துபிக ளார்ப்பப்
பரசுநர் பாங்கர்ப் போதப் பலசனம் விலக்கி முன்னே
கரிசில்கஞ் சுகியோர் செல்லக் கண்டவர் வியந்து நிற்ப. 40

குறளொடு சிந்து முன்னே குறுகுறு நடந்து செல்ல
மறமலி வாள்கை யேந்தி யாணுடை மாணத் தாங்குந்
திறனுறு பேடி மார்க ளண்மையிற் றிரண்டு சூழ
நறைமலி கூந்தற் செவ்வாய் நாடக மகளி ராட. 41

முதலியவைகளையும் மற்றுமுள்ள பொருள்களையும் தன் மகளுக்கு மிகுதியாகக் கொடுத்து மறுபடியும்;

அணிகலம்-ஆபரணம். பேழை - பெட்டி. துகில் - மெல்லிய ஆடை. செப்பு - சிமிழ். மான்மதம் - கத்தூரி. இணர் - பூங்கொத்து. எண் இல - அளவில்லாதன.

39. தோழிமார்களுக்கெல்லாம் பலவகையான சிறப்புக்களைச் செய்து, சிறந்த சேனைவீரர்களை அழைத்து, உமாதேவியார் பேரூருக்கு இன்று செல்லுவாள் உடன்சென்று அங்கே அவளை விட்டிட்டு இங்குவருக என்று உத்தரவிட்டான். சேனைவீரர் வணங்கியெழுந்து;

பாங்கி - தோழி. படைஞர் - சேனைவீரர். உடங்கு - ஒருங்கு, ஒன்றிச்சென்று.

40. கழுத்திற் கட்டுங் கயிற்றையுடைய யானைப்படையும் தேர்ப்படையும் குதிரைப்படையும் காலாட்படையும் கலந்து செல்ல, ஆலவட்டங்கள் நெருங்க, துந்துபி வாத்தியங்கள் ஆரவாரிக்க, துதிபாடுவோர் பக்கத்திலே செல்ல, பல வகைப்பட்ட சனங்களையும் விலக்கிக்கொண்டு முன்னே வழிவிடுமாறு சொல்லிக் குற்றமற்ற மெய்காப்பாளர்கள் செல்லக்கண்டோர் ஆச்சரியப்பட்டு நிற்க;

புரசை - யானையின் கழுத்திற்கட்டுங் கயிறு; புரோசை எனவும் வழங்கும். புரவி - குதிரை. விரசின - கலந்தனவாய். ஆலம் - ஆலவட்டம். மிடைந்து - நெருங்கி. பரசுநர் - துதிப்போர். கரிசு இல் - குற்றமில்லாத. கஞ்சுகி - மெய்காப்பாளர்.

41. குறளர்களும் சிந்துக்களும் முற்படக் குறுகக் குறுக நடந்துசெல்ல, வீரம் நிறைந்த வாளைக்கையிலே ஏந்திக்கொண்டு ஆடவர் அணியும் உடைகளை யணிந்து சிறந்த பேடிமார்கள் நெருங்கிச் சூழ்ந்துசெல்ல, ஆடல்மகளிர் ஆடல்களைச் செய்துவர;

கவரிகண் மருங்கு துள்ளக் கவிகைமே னிழற்றிச் சீர்ப்ப
அவிர்மணி வடங்கள் சுற்றி னமைத்தசாந் தாற்றி பம்பத்
தவிரருங் காதல் பூண்ட தந்தைதாய் விடைபெற் றம்பொற்
சிவிகையி னிவர்ந்து சென்று டெள்ளியோர் மனத்துச் சென்றாள். 42

நரன்றுவே யுக்க முத்து நாகத்தின் மருப்பின் முத்தும்
வரன்றுவெள் ளருவி தூங்கு மருங்கெலாம் வேட ரீண்டி
முரன்றுதே னெழுந்து மொய்க்கு முதிரிரு லழித்து முக்கட்
பரன் றனிக் குமரற் போற்றும் பலவரை கடந்து சென்றாள். 43

குறுகுறு நடந்து - குறுகக்குறுக நடந்து: "குறுகுறுநடந்து சிறுகைநீட்டி" (புறநானூறு 188). குறள் - மிகக் குறுகிய வடிவமுடையது: "கூனுங் குறளும் மாணிழை மகளிரும்" (பெருங்கதை 1, 38, 178). "கூன்களும் குறளும்" (சீவக. 764). சிந்து - குறள் வடிவத்திற் சற்று உயர்ந்தவடிவம். "கொட்டுப் பிடிபோலுங் கூனுங் குறளாமை, விட்டு நடப்பனபோற் சிந்தும்" (சிந்தா - 2798). 'ஆமைகைவீசி நடக்குமாறுபோலும் சிந்தரும்' என்பர் நச்சினார்க்கினியர். மறம் - வீரம். மாண - சிறக்க. பேடிமார் ஆணுடை அணிந்து சென்றனர் என்க. பேடிமார்கள் - ஆண் தன்மை குறைந்து பெண்தன்மை மிகுந்த நபும்சக முடையோர்; "பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ" (நாலடி - 251). 'வீணபதியென்னும்பேடி'(சிந்தா). "பெண்மைவிட்டாணவாவுவ பேடாண்பால், ஆண்மைவிட் டல்ல தவாவுவ பெண்பால், இருமையு மஃறிணை யன்னவு மாகும்" (நன்னூ - 264).

42. சாமரங்கள் இரண்டுபக்கங்களிலும் மாறிமாறி அசைய, கொற்றக் குடைகள்மேலே நிழலைச்செய்து சிறக்க, இரத்தினமாலைகள் சுற்றிலே பொருந்திய சாந்தாற்றிகள் நெருங்க, தாய் தந்தையர்பால் விடைபெற்றுக்கொண்டு அழகிய பொன் விமானத்திலே ஏறித் தெளிந்த அறிவுடையோர் மனத்திலே செல்லும் உமாதேவியார் ஊர்ந்து சென்றாள்.

கவரி - சாமரம். கவிகை - குடை. பம்ப - நெருங்க. தவிர் அரும் - நீங்காத. தெள்ளியோர் - தெளிந்த அறிஞர்.

43. ஒலித்து மூங்கில்களிலிருந்து உதிர்ந்த முத்துக்களையும், யானைத்தந்தங் களிலே தோன்றிய முத்துக்களையும், வாரிக்கொண்டுவரும் வெள்ளிய அருவிகள் வீழ்கின்ற பக்கங்களிலெல்லாம் வேடர்கள் நெருங்கி, ஒலித்து வண்டுகள் மேலே எழுந்து மொய்க்கின்ற முதிர்ந்த தேனிருலை அழித்துச் சிவபிரானுடைய ஒப்பற்ற குமரனை வணங்குகின்ற பல மலைகளையும் கடந்துசென்றாள்.

நரன்று - ஒலித்து. வேய் - மூங்கில். உக்க - உதிர்ந்த. நாகம் - யானை. வரன்று - வாரிக்கொண்டு. தூங்கும் - ஒழுகும். முரன்று - சத்தித்து. முதிர் இருல் - முதிர்ந்த தேன்கூடு. முக்கட்பரன் - சிவபெருமான். பலவரை - பல மலைகளை.

பரம்பரன் றன்னை யெண்ணார் படர்பெருங் கும்பி போல
நிரம்பிய விடும்பை நல்கு நெறிவயி னியங்கு வோரை
அரம்புசெய் யெயினச் சாதி யமர்ந்தபன் முரம்பு சூழ்ந்த
சுரம்பல கடந்து சென்று துவந்துவங் கடந்து சென்றாள். 44

நிரைமணி யோதை யாயர் நிகழ்த்துவேய்ங் குழலி னோசை
நுரைதயிர் கடையுஞ் சும்மை நுடங்குமென் கொடியின் முல்லை
விரைமலர் வண்டி னார்வம் வேறுவே றிசைப்பக் கேளாப்
பரையெனும் பசும்பொற் பாவை பலவனங் கடந்து சென்றாள். 45

முண்டக முறுக்கு விட்டு முகமலர்ந் திருப்பச் செந்தேன்
கொண்டுபைந் தாது பில்குங் குவளைகண் விழித்துக் காண
விண்டுபைந் தேறல் காலும் விரைக்கயி ரவம்வாய் விள்ளக்
கண்டுகண் டினிது சென்றாள் கழனிகள் பலவு மாதோ. 46

---

44. பந்தங்களை நீங்கிச் சென்றவளாகிய உமாதேவியார், சிவபெருமானை எண்ணாதவர்கள் செல்லும் கும்பிபாகம் முதலிய நரகங்களைப் போன்று மிக்க துன்பத்தைத் தரும் வழியிலே செல்லுவோரை வருத்திப் பொருளைக் கவரும் வேட்டுவக்குலத்தோர் பொருந்தும் பருக்கைக் கற்களாலாகிய மேடுகளையுடைய பல சுரங்களையும் கடந்துசென்றாள்.

பரம்பரன் - மிகமேலானவன்: சிவபெருமான். கும்பி - கும்பிபாகம்; நரக விசேடம். இடும்பை - துன்பம். நெறிவயின் இயங்குவோரை அரம்புசெய் எயினச் சாதி - ஆறலைகள்வர். இயங்குவோர் - செல்லுவோர். அரம்பு - குறும்பு. எயினர் - வேடுவர். முரம்பு - பருக்கைக் கற்களினாலாகிய மேடு. சுரம் - பாலைநிலம். துவந்துவம் - பந்தம், பற்று.

45. பசுக்களின் கழுத்திலே கட்டியுள்ள மணியோசையும், இடையர்கள் ஊதும் வேய்ங்குழலோசையும், நுரையோடுகூடிய தயிரைக் கடையும் ஓசையும், அசையும் மென்மையான கொடி முல்லை மலர்களில் மொய்க்கும் வண்டுகளின் ஓசையும் வேறுவேறாக ஒலிக்கக் கேட்டுப் பரை என்னும் பொற்பாவை போன்ற அம்மையார் பல காடுகளையும் கடந்து செல்வாளாயினள்.

நிரை - பசு. ஆயர் - இடையர். வேய்ங்குழல் - புல்லாங்குழல். நுடங்கும் - அசையும். ஓதை, ஓசை, சும்மை, ஆர்வம் முதலியன ஒரு பொருட்சொற்கள். பரை - பராசத்தி. பாவை - பிரதிமை. வனம் - முல்லைநிலம்; காடும் காடுசார்ந்த இடமும்.

46. தாமரைமலர்கள் கட்டுவிட்டு முகமலர்ச்சியோடு இருக்க, செவ்விய தேனைக்கலந்து பசிய மகரந்தப் பொடிகள் சிந்தும் குவளைமலர்கள் கண்களை விழித்துக்காண, உடைந்து பசியதேனை வெளிப்படுத்தும் மணம் பொருந்திய செவ்வாம்பல் வாய்திறக்க, மருதநிலத்திலேயுள்ள கழனிகள் பலவற்றையும் நோக்கி நோக்கிச் சென்றாள்.

தாந்திரை கொணர்ந்து விசுந் தரளமுந் துவரு மூழ்கப்
பூந்துணர்த் தாது போர்க்கும் புன்னையங் கான மெல்லாந்
தேந்துளி துளித்து வாசஞ் செறித்துமென் மலர்கண் முன்னர்
ஏந்துதண் கடல்சூழ் வைப்பி னிடம்பல கடந்து சென்றாள். 47

வேறு

பண்டு பரமன் முடிதேடிப் பரிந்த தெண்க ணோதிமமற்
றண்டர் பெருமான் மனைவியிவ ளடியு முடியு மறிந்துநலங்
கொண்டு மகிழ்வா மெனவெங்குங் குழுமுற் றெனநீர் நிலைதோறும்
மண்டு சிறக ரோதிமங்கண் மகிழ்கூர் கொங்கு நாடடுத்தாள். 48

அரும்பு விரிந்த மலர்த்தேனு மாலை படுத்துக் களமர்தெறுங்
கரும்பு சொரிந்த நறுஞ்சாறுங் கலந்து கால்க ளெனவொழுகிச்
சுரும்ப ருழக்கு மலர்ப்பண்ணைத் தொகுபைஞ் சாலி தனையோம்பப்
பெரும்பை திரநித் தலும்போற்றும் பேரூ ரெல்லை நண்ணினாள். 49

முண்டகம் - தாமரை. முறுக்கு - கட்டு. தாது - மகரந்தப்பொடி. பில்கும் - சிந்தும், துளிக்கும். தேறல் - தேன். காலும் - கக்கும். விரை - வாசனை. கயிரவம் - செவ்வாம்பல். முண்டகம் முகம், குவளைகண், கயிரவம் வாய் போன்றவைகள்.

47. தாவுகின்ற அலைகள் கொண்டுவந்து எறிகின்ற முத்துக்களும், பவளங்களும் முழுகும்படி அழகிய பூங்கொத்துக்களின் மகரந்தப்பொடிகள் போர்த்துக்கொள்ளும் புன்னைமரங்கள் பொருந்தும் கானமுழுதும் தேன்துளிகள் சிந்தி மணம் நிறைந்து மென்மையான மலர்கள் எதிரில் ஏந்திக்கொண்டு இருக்கும் கடலாற் சூழ்ந்த இடங்கள் பலவற்றையும் கடந்துசென்றாள்.

தாம் - தாவும். தரளம் - முத்து. துவர் - பவளம். கடல் சூழ் வைப்பு - நெய்தல்நிலம்.

48. எட்டுக்கண்களையுடைய பிரமதேவராகிய அன்னப்பறவை முன்னொரு காலத்திலே சிவபெருமானுடைய திருமுடியை நாடித்துன்புற்றது. தேவதேவராக விளங்கும் சிவபெருமானுடைய மனைவியாகிய இவள் அடியையும் முடியையும் அறிந்து நலம்பெற்று மகிழ்வோம் என்று எவ்விடத்தும் வந்து கூடினாற்போல நீர்நிலைகளிலெல்லாம் நிறைந்த சிறகுகளையுடைய அன்னப்புட்கள் மகிழ்ச்சிமிகும் கொங்கு நாட்டை வந்து (உமாதேவியார்) சேர்ந்தாள்.

எண்கண் ஓதிமம் - பிரமதேவராகிய அன்னம். பரிந்தது - துன்புற்றது. குழுமுற்று - கூடி. குழுமுற்ற என: தொகுத்தல்.

49. அரும்புகள் விரிந்த மலர்களிலுள்ள தேனும், ஆலையிலே கொடுத்து உழவர்கள் கொல்லும் கருப்பஞ்சாறும் ஒன்றாகக் கலந்து வாய்க்கால்போல ஓடிச் சென்று, வண்டுகள் கிண்டும் மலர்களையுடைய வயல்களில் நிறைந்த பசிய நெற் பயிர்களை வளர்க்க மிக்க பசித்துன்பத்தை நாடோறும் நீக்கிப் பாதுகாக்கும் பேரூர் ஆகிய தலத்தை அடைந்தாள்.

வேறு

திருநக ரெல்லை தாழ்ந்து செழும்புனற் காஞ்சி தோய்ந்து
மருமலி மன்றம் போற்றி வளரிர சதவெற் பேத்தி
அருவுரு வென்ன நின்ற வாதிலிங் கத்திற் பூசை
பெருகிய வன்பி னாற்றிப் பெருந்தவ மியற்றா நின்றாள். 50

உடங்குசென் றிருத்த சேனை யொள்ளிய கழற்கால்வீரர்
அடங்கரு மகிழ்ச்சி பொங்க வாதிலிங் கத்தைப் போற்றித்
தொடங்கிய தவத்தி னாளைத் தொழுதருள் விடைபெற் றேகித்
நடங்கைவே ழங்கள் சூழுந் தண்பனி வரையின் வாழ்ந்தார். 51

காலங்க டோறுங் காஞ்சிக் கடிபுன லேய்ந்து வேத
சீலங்கொண் டிமைய மாது செய்திடுந் தவத்தின் பேறு
ஞாலங்கண் டுய்யச் செய்வா னதிமதி பொதியும் வேணி
ஆலங்கொண் மிடற்றி னானோ ரந்தணக் கிழவ னானான். 52

ஆலை - கரும்பாலை. களமர் - உழவர். தெறும் - வருத்தும்; என்றது ஆலையிற் கொண்டு ஆட்டுதலாம். கால் - வாய்க்கால். சாலி - செந்நெற்பயிர். பைதிரம் - துன்பம்; என்றது பசித்துன்பத்தை.

50. அழகிய அப்பேரூராகிய நகரத்தின் எல்லையை வணங்கி, காஞ்சி நதியிலே நீராடி, மணம் நிறைந்த வெள்ளியம்பலத்தைத் துதித்து வணங்கி, வெள்ளிமலையைத் துதித்து, அருவுருவாகிய ஆதிலிங்கத்தை மிக்க அன்புடன் பூசித்துப் பெரியதவத்தைச் செய்தாள்.

மன்றம் - வெள்ளியம்பலம். இரசதவெற்பு - வெள்ளிமலை. பூசை ஆற்றி - பூசைசெய்து.

51. துணையாக உடன்சென்று தங்கிய சேனைகளும், விரர்களும் அளவற்ற மகிழ்ச்சிமிக ஆதிலிங்கத்தை வணங்கி, தவத்திலிருக்கத் தொடங்கிய அம்மையாரை வணங்கி, அவளிடத்து அருளோடுகூடிய விடை பெற்றுக்கொண்டு சென்று, நீண்ட துதிக்கைகளையுடைய யானைகள் சூழ்ந்துள்ள இமயமலையில் வாழ்ந்திருந்தனர்.

உடங்கு - ஒருசேர; துணையாக. இருத்த - தங்கிய. தொடங்கிய தவத்தினாள் - தவஞ்செய்யத்தொடங்கிய உமாதேவியார். வேழம் - யானை. பனிவரை - இமயமலை.

52. ஒவ்வொரு காலங்களிலும் காஞ்சி நதியிற் சென்று நீராடி, வேத ஒழுங்கை மேற்கொண்டு இமயமலையரையன் புத்திரி (மலைமகள்) செய்யும் தவத்தின் பயனை உலகத்திலுள்ளோர் கண்டு பயன் பெறும்பொருட்டு நதியையும் மதியையும் பொதிந்து வைத்துள்ள சடையையும் நஞ்சக்கறைக் கண்டத்தையும் உடைய சிவபெருமான் கிழப்பிராமண வடிவங்கொண்டு எழுந்தருளினர்.

வேறு

திங்களுமிழ் வெண்சுதை திமிர்ந்தொளிர்வ தென்னத்
தங்குதலை வெண்ணரை தயங்கமதி யேபோல்
அங்கண்வளர் வெண்சிகை முடிந்ததமை வெய்தப்
பொங்குபொடி யென்னவுடல் போர்த்தநரை சீர்ப்ப. 53

மடங்கலுரி மாறியது போன்றுமணி மார்பில்
நுடங்குபுரி நூல்குலவ நோன்மைவளர் தோண்மேற்
படங்கழுவு ருததுபகட்டுரிமெய் வேருய்
அடங்கியது போன்மென வமைந்துசரி கிற்ப. 54

துவ்வமிழ்த மன்னதுவர் வாய்மொழி மடந்தை
இவ்வுருவி னேகலுறின் யாதுமிசை யாளென்
றவ்வரையி ஞர்த்ததுகி லேதிடைவி லக்குஞ்
செவ்வியி னெகிழ்ந்துதிகழ் வுற்றது சழங்க. 55

வேதசீலம் - வேதவொழுக்கம்; வேதம் என்பது சிவாகமமுமாம். ஆலம் - ஆலகாலவிடம்.

53. சந்திரன் தரும் வெண்மையான நிலாவமுதம் செறிந்து விளங்குதல் போலத் தலையிலே வெள்ளிய நரைமயிர் விளங்க, சந்திரனைப்போல அவ்விடத்து வளரும் வெள்ளிய சிகை முடிந்து பொருந்த, மிக்க விபூதி சண்ணித்தாற்போல உடம்பிலே நரைமயிர் சிறப்பைச் செய்ய;

வெண்சுதை - வெண்ணிலவு, அமுதம். திமிர்ந்து - செறிந்து, பூசி. தயங்க - விளங்க. சிகை - முடிமயிர். பொடி - விபூதி.

54. சிங்கத்தின் தோலாகிய ஏகாசம் மாறியதைப்போல அழகிய மார்பி னிடத்துப் பூணுநூல் விளங்க, வலியதோளிலே ஆடைதோயாதது யானைத்தோல் வேறுநிறமாகப் பொருந்தியதுபோல அமைந்து நழுவ;

மடங்கல் - சிங்கம்: உரி என்றது நரசிங்கத்தின் தோலை: அஃது உத்தரா சங்கம். புரிநூல் - முப்புரிநூல், பூணுநூல். நோன்மை - வலிமை. படம் - வஸ்திரம். பகட்டுரி - யானைத்தோல். மெய்யின்கண் வேருய் அடங்கியது என்க.

55. உண்ணும் அமுதத்தையொத்த சொற்களையுடைய உமாதேவியார் இவ்வடிவத்திலே சென்ருல் சிறிதும் இசையமாட்டாள் என்று அழகிய இடையில் கட்டியுள்ள மெல்லிய ஆடை இடையே நீங்கித் தளரும் பருவத்தில் நெகிழச் செய்து விளங்க;

து - உணவு. துவர்வாய் - சிவந்தவாய், அமிழ்தமன்னமொழி. யாதும் - சிறிதும். அ அரை - அழகிய இடுப்பு. நெகிழ்ந்து - நழுவி. ஐது இடை - அழகிய இடை.

திரைந்துதசை மெய்முழுதுஞ் சென்னிகை குலைப்ப
விரைந்துவளி நாசியின் விராவவிமை நால
நிரைந்தெழ நரம்புநெடு கித்தசைக டுங்க
வரைந்தறியொ ணுதமொழி வாயிடை வழங்க. 56

அண்மையி னடுத்தவரை நோக்கவும கங்கைத்
திண்மைகொடு நான்றவிமை செவ்விதி னுயர்த்த
வண்மையுரை கேட்டிலது போன்றுவளர் காதின்
ஒண்மைமக ரக்குழை யொளிர்ந்துகதிர் வீச. 57

நேடிநெடி யோனெடி துலந்துமறி யாத
பீடுவளர் சேவடிகள் பேணுமவ ளில்லாஞ்
சேடுவளர் பாரினுறல் செவ்வியல தென்றுப்
பாடுமறை யின்கழல்கள் பாதமலர் சூட. 58

---

56. உடல் முழுவதும் தசைகள் திரைந்து, தலையும் கைகளும் நடுக்கங் கொள்ள, மூச்சு விரைந்து உலாவ, இமைகள் தொங்க, நரம்புகள் நீண்டு வரிசை யாக மேலெழும்ப, தசைகள் தொங்க, வாயிலிருந்து வருஞ்சொற்கள் இன்னதென வரையறுத்துத் தெரிந்துகொள்ள முடியாதபடி;

திரைந்து - மடிப்புகள் விழுந்து; தளர்ந்து. குலைப்ப - நடுங்க. வளி - காற்று; மூச்சு. நால - தொங்க. தூங்க - தொங்க. வரைந்து - வரையறை செய்து. வாயிடை - வாயினிடத்து. வழங்க - சொல்ல.

57. சமீபத்திலே வந்தோரை அறியவும் கைவலிமை கொண்டு தொங்கிய இமைகளை மேலே நன்றாக உயர்த்த, பிறர் கூறும் சொற்கள் கேளாதது போலக் காதிலே ஒளிபொருந்தும் மகரக்குழை பிரகாசித்துக் கிரணங்களை வீச;

அண்மை - சமீபம். நான்ற - தொங்கிய. மகரக்குழை - மகர வடிவாகச் செய்யப்பட்ட குழை என்னும் அணிகலம்.

58. நிலங்கடந்த நெடுமுடி யண்ணலாகிய திருமால் முன்பு வராகவுருக் கொண்டு தேடிவருந்தியும் அறியப்படாத பெருமை பொருந்திய சிவந்த திருவடி கள் அத்திருமாலின் மனைவியாகிய பூமிதேவியின்மேற் படிதல் தக்கதன்று என்று புலம்பும் வேதங்களாகிய சிலம்புகளைத் திருவடித் தாமரைகள் அணிய;

நெடியோன் - திருமால். நேடி - தேடி. உலந்தும் - வருந்தியும். பீடு - பெருமை. பேணும் - விரும்பும். இல் - இல்லாள். செவ்வியலது-பக்குவமல்லாதது எனினுமாம்.

நாளுமினி தாக்குபுகழ் நன்றிசெய வோங்கித்
தாளொடு வளைந்தனைய தண்குடை நிழற்ற
மீளியர் வெருக்கொள்வடி சூலமொரு கோலாக்
கோளிகுக ரங்கொடு குறித்தியவை சென்றான். 59

வில்லென வளைந்தவுட லாதரவு வீக்கும்
வல்லநெடு நாணென வயங்குதடி யின்பாற்
புல்லவெதிர் நின்றுவிடு பூசுரனை நோக்கி
நல்லவடி யாரென நயந்துமை பணிந்தாள். 60

வேறு

பணிந்த பார்ப்பதி
அணங்குக் கண்ணலார்
மணங்கொண் மங்கலம்
இணங்கு கென்றனர். 61

---

59. எப்போதும் இனிமையைச் செய்யும் புகழ் நன்றியைச் செய்தற்காக உயர்ந்து காலோடு வளைந்தாற்போல, குடை குளிர்ந்த நிழலைச் செய்யத் திண்மையாளரும் அஞ்சுவதற்குக் காரணமான கூரிய சூலாயுதமே ஒரு ஊன்றுகோலாக வலியற்ற கரத்திலே கொண்டு வழிச் சென்றார்.

ஓங்கி - உயர்ந்து. மீளியர் - வீரர். வடி - கூர்மை. கோள் இகு - வலியற்ற. இயவை - வழி. குறித்து - குறிக்கொண்டு என்றது நிதானமாக என்றபடி.

60. வில்லைப்போன்று வளைந்த உடம்பை ஆதரவாகக் கட்டப்பட்ட வலிய நீண்ட நாணி என்று சொல்லும்படி விளங்கும் ஊன்றுகோலினிடத்துப் பொருந்த எதிரே நின்றுவிட்ட அந்தணரை நோக்கி, இவர் நல்ல திருத்தொண்டர் என்று விரும்பி உமாதேவியார் வணங்கினாள்.

ஆதரவு - பற்றுக்கோடு. வீக்கும் - கட்டப்பட்ட. வல்ல - வலிமையுள்ள. நாண் - நாணி. தடி - ஊன்றுகோல். புல்ல - பொருந்த. பூசுரன் - பிராமணன். நயந்து - விரும்பி.

61. வணங்கிநின்ற பார்வதி தேவியாருக்கு அந்தணர் கோலங்கொண்டு வந்த சிவபெருமான் மணஞ்செய்து கொள்ளும் மங்கல காரியத்திற்கு உடன்படுவாயாக என்றருளினர்.

மணம் - கலியாணம். மங்கலம் - சுபகாரியம். இணங்குக என்றனர்: தொகுத்தல்.

ஏந்தல் யாண்டையை
போந்த புந்தியென்
ஈந்து வப்பல்யான்
கூர்ந்து கூறென்றாள். 62

வேறு

மாசை யன்னநன் மாமை யாயென
தாசை விசுகே னென்றி யாதலாற்
றேச மோடுமென் செய்தி யாவையும்
பேசு கேனெனப் பேசும் பூசுரன். 63

வெள்ளி மால்வரை மேவும் வாழ்க்கையேம்
எள்ளு ருதவெம் மில்லின் வாழ்க்கையாள்
உள்ள மேயலா லுருவு மொன்றெனக்
கொள்ளு மன்பினள் குறைவில் செல்வத்தாள். 64

என்ன வாறுநா மியைந்து நின்றனம்
அன்ன வாறெலா மமையு மாற்றலாள்
கன்னி வாகனங் காமுற் றூரினுந்
தன்னை யன்றிநாந் தமிய மாகலம். 65

---

62. பெரியீரே! யாண்டுள்ளீர்? இங்கே வந்த கருத்து யாது? (தெரிந்தால்) அதனைக் கொடுத்து யான் மகிழ்வேன். நுண்ணிதாகக் கூறியருளுக என்றாள்.

புந்தி - கருத்து.

63. பொன்னை யொத்துப் பரவியுள்ள (தேமலை) பசலை நிறத்தை யுடையாய்! என் விருப்பத்தை அறிந்து கொடுப்பேன் என்று கூறினாய். என் இருக்கையுடன் என் செயல் யாது என்பதையும் சொல்லுவேன் கேள் என்றார் பிராமணர்.

மாசை - பொன். மாமை - பசலைநிறம். என்றி - என்று சொன்னாய். தேசம் - இருக்கை. செய்தி - செயல்.

64. வெள்ளி மலையிலே வாழும் வாழ்க்கையுடையேன். இகழ்தலில்லாத எம்முடைய இல்வாழ்க்கைத் துணைவி உள்ளம் ஒன்று என்பதன்றி உருவமும் ஒன்று என்று கொள்ளும் அன்பினையுடையவள். குறைவில்லாத செல்வத்தை உடையவள். எள்ளுருத - இகழ்தலில்லாத.

65. எவ்வாறு நாம் பொருந்தியிருந்தோம். அவள் அவ்வாறெல்லாம் பொருந்தும் ஆற்றலுடையாள், கன்னிப்பருவத்தள், நாம் வாகனத்திலேறி ஊர்ந்து சென்றாலும் அவளையன்றித் தனியே சென்றேமல்லேம்.

" எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள் " எனவும், " பவன் பிரமசாரி யாகும் பான்மொழி கன்னி யாகும் " எனவும் (சித்தி.) வருதல் காண்க.

இரந்து செல்வதெம் மியற்கை யாயினும்
பரந்து வந்திடும் பண்பி னர்க்கெலாஞ்
சுரந்த காதலிற் றுறுத்துப் பல்பொருள்
புரந்து நிற்குமப் பொலிவி னீங்கிலள். 66

பகைய டுத்திடிற் பாரித் தெங்கர
மிகைசெய் தூணியின் விசிகம் பற்றுமுன்
நகைம ணிக்கொடி யன்ன நாயகி
தகைகொ டன்கரந் தனுவெ டுக்குமே. 67

இயவை நீந்துத லெய்து மாயிடிற்
பயிறல் கொண்டொரு பாலு டங்குறுஞ்
செயலிற் றீர்ந்துபின் செல்லு வாளலண்
முயறல் கொண்டுதான் முந்த வுஞ்செயாள். 68

---

66. பிச்சையெடுத்துத் திரிவது நம்முடைய இயல்பாக இருப்பினும் பரவி வரும் தக்கோர்க்கெல்லாம் அன்பு மிக்குப் பல பொருள்களையும் செறித்துப் பாது காத்துவரும் அப்பண்பினின்றும் நீங்காதவள்.

இயற்கை - இயல்பு. இரந்து செல்லுதல் - பத்திப் பிச்சையை விரும்பிச் செல்லுதல். பரந்து - நிறைந்து. துறுத்து - செறித்து. பொலிவு - விளக்கம்.

67. பகைவர் வந்தெதிர்த்தாராயின் பெரிதும் எமது கை அம்பறாத்தூணியி னின்றும் அம்பை எடுக்குமுன்னமே கொடிபோலும் நாயகியின் சிறந்த கரம் வில்லை எடுக்கும்.

பாரித்து - மிக்கு. தூணி - அம்புக்கூடு. விசிகம் - அம்பு. தகைகொள் தன் கரம்: தகை - மேன்மை. தனு - வில்.

68. வழிச் செல்லுதலைச் செய்யுமாயின் தானும் ஒருசேர இடைவிடாமல் ஒரு பக்கத்திலே பொருந்தும். தன் செய்கையினின்று அவள் நீங்கிப் பின்னே செல்வாளல்லள். முயற்சிகொண்டு தான் முந்திப் போகவும்மாட்டாள்.

இயவை - வழி. பயிறல் - இடைவிடாது செய்தல். பால் - பக்கம். உடங்கு - ஒருசேர. செயல் - தன் செய்கை. முந்தவும் - முற்படவும். ''எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்'' என்பது காண்க.

அருளிச் செய்யினு மறிந்து ளோருமெம்
மருளில் கண்சுடும் வன்க ணென்பர்கள்
வெருவக் காயினு மவள்வி யன்கணைப்
பொருவில் சீதளப் பூங்க ணென்பரால். 69

சுணங்கு பூத்தவிர் தொய்யின் மென்முலை
இணங்கி வைகலு மின்ப நல்கினும்
அணங்கு மற்றவ ளார்வ மென்சொல்கேம்
அணங்கு மெய்ப்பசப் பகல்வ தில்லையே. 70

கொழுந னையலாற் றெய்வங் கொள்கலா
விழுமங் கற்பனை விற்று மாதர்க்குத்
தொழும வட்கெனைத் தெய்வஞ் சொல்லுதல்
எழுபி றப்பினு மியற்கைத் தென்பவே. 71

---

69. நாம் கருணைகொண்டு ஒன்றைச் செய்தாலும் அறிவுடையோரும் எம்முடைய அருளில்லாத கண் வெதுப்பும் வன்மையுடையது என்பார்கள். அஞ்சுமாறு கோபித்தாலும் அவளுடைய அழகிய அம்புபோன்ற கண் ஒப்பற்ற குளிர்ந்த கண் என்று கூறுவர்.

அருளில் - அருள்செய்யும் காலத்தும். அருள் இல் - கருணையில்லாத. வன்கண் - வலியகண், கொடுமை. வெருவ காயினும் - அஞ்சுமாறு கோபித்தாலும். வியன் - பெருமை. கணை - அம்பு. சீதளம் - குளிர்ச்சி.

70. தேமல் பூத்து விளங்கும் கோலமெழுதிய மென்மையான நகில்கள் நன்கு பொருந்தி நாடோறும் இன்பத்தைக் கொடுத்தாலும் தெய்வப்பெண்ணாகிய அவளுடைய மிக்க காதலை யாதென்றெடுத்துச் சொல்லுவேம். பொருந்திய அவள் மேனியில் உள்ள பசப்பு நீங்குவதில்லை.

சுணங்கு - தேமல். தொய்யில் - சந்தன லேபனத்தால் நகில்களிலும் தோள்களிலும் கோலம் எழுதுதல். இணங்கி - நெருங்கி. வைகலும் - நாள்கடோறும். மெய்ப்பசப்பு - உடம்பிலுண்டாகும் பசலை நிறம்.

71. கணவனை அல்லாமல் வேறு தெய்வங்களைத் தொழுதலில்லாத துன்பம் வேறு மாதர்கட்குக் கற்பனையாம். யாவராலும் தொழப்படும் அவட்கு என்னைத் தெய்வமாகச் சொல்லுதல் ஏழு பிறப்புக்களிலும் இயற்கையாமென்று சொல்லுவர்.

கொழுநன் - கணவன்: கொழுகொம்பு போல்பவன். இயற்கைத்து - இயல்பாகவுடையது. "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை" என்னும் குறளைத் தழுவியது. எழுபிறப்பும் தொடர்ந்த அன்பு - உழுவலன்பு.

மன்னு மக்களை வாய்ப்ப நல்கியுங்
கன்னி யென்னுமக் கவின்ப டைத்துளாள்
துன்னு வையக முழுதுந் தாடொழு
தன்னை யென்றுசொல் லருளி னெல்லையாள். 72

தாயுந் தந்தையுஞ் சகோத ரங்களும்
ஆய சுற்றமு மமைந்தி லேநமக்
கேயு நன்மனை யாளின் யாவையும்
மேய வாழ்க்கையே வீங்கு தோளினாய். 73

வேறு

பலவி ளம்புவ தென்னையெம் பலகுண மெல்லாங்
கலவு மன்னவ ளில்லையே லில்லையவள் கழியச்
சுலவி யெங்கணுந் தொலைவரு மோகத்தால் வேறாய்
மலிந ரைதிரை மூப்பெமை மருவிய தணங்கே. 74

---

72. நிலைபெற்ற மக்களைப் பொருந்தப் பெற்றும் கன்னியென்று சொல்லும் அழகைப் படைத்துள்ளவள். உலகமுழுவதும் பாதங்களை வணங்கித் தமதன்னை யென்று சொல்லப்பட்டு விளங்கும் கருணைக்கு ஓர் எல்லையாக விளங்குபவள்.

''பெற்றுள்சக தண்டங்க ளனைத்துமவை பெற்றும் முற்றுமுகிழ் முலையா ளொடும்'' என்பது வில்லிபாரதம். ''சிவஞ்சத்தி தன்னை யீன்றும் சத்திதான் சிவத்தை யீன்றும், உவந்திரு வரும்பு ணர்ந்திங் குலகுயி ரெல்லாமீன்றும், பவன் பிரமசாரியாகும் பான்மொழி கன்னியாகும்'' என்னும் சிவஞான சித்தித் திருவிருத் தத்தாலுணர்க.

அருளின் எல்லை - கருணையினளவு.

73. தாய் தந்தை உடன்பிறந்தார் சுற்றத்தார் முதலியோர் நமக்கு இயல் பாகவே இல்லை. நமக்குப் பொருந்திய நல்ல மனைவியினாலே எல்லாவற்றையும் பொருந்தும் வாழ்க்கையினையுடையோம்; பெருத்த தோள்களையுடையாய்!

சகோதரர் - உடன்பிறந்தார். மனையாளின் - மனைவியினால்: இன் உருபு மயக்கம்.

74. பெண்ணே! பல சொல்லுவதென்ன. எம்முடைய குணங்கள் பலவும் அவள் எம்மைக் கலந்திருந்ததனால் உள்ளன. அவள் இல்லையாயின் எமக்கு ஒன்றுமில்லை. அவள் நீங்க எங்கணும் சுற்றி அலைந்து நீங்குதற்கரிய மோகத்தி னால் வேறாக, நரை திரை மூப்புகள் எம்மை வந்தடைந்தன.

கலவும் - கலக்கும். சுலவி - சூழ்ந்து, சுற்றி.

கல்ல ரத்தமெய் யூட்டிய காழக முடுத்து
வில்ல டுத்தபல் வார்சடை விளங்குற முடித்து
நல்ல டுத்தமெய்த் தவம்பல நாள்கழி வெய்த
வில்ல டுத்தவம் மாதுற வியற்றின மதனல். 75

அனைய மாதுகொ லவளெழிற் சாயைகொ லென்ன
நினைய நின்றிடு நின்வயி னடுத்தன மினிமேல்
இனைவ தொன்றிலை யின்பமே யெமக்கடுப் பனவாம்
புனைமொ ழித்திற மன்றிது பூங்குழற் கோதாய். 76

பெண்மை பெற்றவர் தமக்கெலாம் பெருமகிழ் வளிக்குந்
திண்மை பெற்றதோட் கணவர்தங் கலவியிற் றிளைத்தல்
ஒண்மை மற்றஃ தொழிதர வனத்திடை யுணங்கி
வண்மை சிந்துற வருந்துவ தோவியன் மடவாய். 77

---

75. கல்லாடை புனைந்து ஒளிவீசும் சடைகளை முடித்துவிட்டு நல்ல தவத்தால் பல நாட்கள் கழிய இல்லாளாகப் பொருந்திய அந்த மாது வந்து பொருந்தச் செய்து முடித்தோம்; அக்காரணத்தால்.

கல் - காவிக்கல். அரத்தம் - சிவப்பு. காழகம் - ஆடை. வில் - ஒளி. மெய்த்தவம் - உண்மையான தவம்.

76. அத்தகைய மாதுதானே? அவள் அழகின் சாயைதானே? என நின்ற நின்னை வந்தடுத்தோம். இனிமேல் வருந்தவேண்டுவதில்லை, இன்பமே நமக்கு வந்து பொருந்துவனவாம். அழகிய கோதையே! இது புனைந்து சொல்லும் திறமன்று.

வயின் - இடம். இனைவது - துன்பப்படுவது. ஒன்று இலை: ஒன்று - சிறிது. புனைமொழித்திறம் - கட்டிச்சொல்லும் சொல்லின்வன்மை.

77. பெண் தன்மையைப் பெற்றவர்கட்கெல்லாம் வலியதோள்களையுடைய கணவரது கலவியிலே திளைத்தல் என்பது பெருமகிழ்ச்சியையே தரும். புகழும் அதுவேயாம். ஒளியுடைய தன்மை நீங்கும்படி வனத்திலே சென்று வாட்டமுற்று உன்னுடைய வளமைத்தன்மை சிதற அழகிய பெண்ணே! வருந்துதலாகுமோ?

பெண்மை - பெண்தன்மை. ஒண்மை - ஒள்ளிய தன்மை, பிரகாசம்; புகழுமாம். உணங்கி - வாடி.

வாச நெய்த்தலை யுரைத்துவண் சீப்பினு னீவிப்
பூசு தண்கடிக் காசறை பொழிந்தல ரணிந்து
தேசி ருட்குழன் மகிழ்நற்குப் பாயல்செய் யாமை
ஊச லஞ்செவி யாய்சடை யுறுத்துத லழகோ. 78

குவவு வாணுதல் குங்குமத் திலகமேற் பொறித்துக்
கவவு மாமணி யிலம்பகங் கவினக்கால் யாத்திட்
டவவு நாயக னங்கைநீ வுதல்படுத் தாதே
உவவு மாமதி முகத்தினு யடலையூட் டுவதோ. 79

அரிப ரந்தவாட் டடங்கணஞ் சனந்தக வெழுதி
உரிப ரந்தநா யகனுரு வுவப்புறக் காணு
தெரிப ரந்தவென் றூழெதி ரேறவார் புருவ
முரிப ரந்துற விடுத்துநீ முயறலுந் தகுமோ. 80

---

78. மணம்பொருந்திய நெய்யைக் கூந்தலிலே தடவி வளம்பெற்ற சீப்பினுல் மயிரைச் சீவிமுடித்து, பூசுதற்குரிய குளிர்ந்த மணம் வீசும் மயிர்ச்சாந்தைக் கொட்டி, மலர்களை வரிசைப்படுத்தி அணிந்து மகளிர் தங்கள் கொழுநருக்குப் படுக்கையை விரியாமை ஊசலாடுங்காதினையுடையவளே! சடையிடும்படி கூந்தலை அழகுசெய்யாமல் விடுத்தது அழகாகுமோ?

தலை உரைத்து: உரைதது-தேய்த்து. நீவி - தடவி : என்றது சீவி விடுதலை. கடி - மணம். காசறை - மயிர்ச்சாந்து. தேசு இருட்குழல்: அன்மொழித்தொகை: விளி. மகிழ்நன் - கணவன். பாயல் செய்யாமை - படுக்கையை அழகுபடுத்தாமை.

79. நிறைந்த கலைகளையுடைய சந்திரன்போன்ற முகத்தையுடையவளே! நெற்றியிலே குங்குமச்சாந்தின் பொட்டிட்டு, சிறந்த இரத்தினங்கள் பதித்தநெற்றிச்சுட்டியாகிய நுதலணிமாலையைத் தொங்கவிட்டு, விருப்ப மிக்க நாயகனுடைய கையைத் தொடாமல் வருத்தத்தைச் செய்விக்கலாமா?

குவவு - குவிந்த. வாள்நுதல் - ஒளி பொருந்திய நெற்றி. திலகம்-பொட்டு. கவவு - திரண்ட; எனவே முழுத்த மாணிக்கம் என்க. இலம்பகம் - நுதலணி மாலை. கால்யாத்திட்டு - தொங்கவிட்டு. அவவு = அவாவு - விரும்பும், அவாவு = அவவு: "அவவுக்கோளினர்" தணிகைப் - 209. விகாரம். நீவுதல் - தடவுதல், பிடித்தல். உவவு - உவாக்காலத்துண்டாகிய நிறைமதி. அடலை - துன்பம், வருத்தம். கவவு - அகத்திடுதல்: "கவவுக்கை ஞெகிழாமல்" சிலப்பதி: மங்கல வாழ்த்து.

80. கருவரி செவ்வரி பரந்து விளங்கும் வாட்படைபோன்ற கண்களுக்கு மையை விளக்கமுறும்படி பூசி உரிய நாயகனுடைய வடிவத்தை விரும்புமாறு காணுமல் நெருப்பை வீசும் சூரியனெதிரிலே ஏற நீண்ட புருவங்கள் முரிந்துபடும்படி செலுத்தித் தவத்திலே முயற்சித்தல் தகுதியுடையதாகுமோ?

நறுவி ரைத்தகா லேகமு நனைமது கரங்கள்
பெறும லர்ச்செழுந் தொங்கலும் பேணிய காந்தன்
முறுகு மெய்க்கடி மோந்துமோந் தின்புற லன்றி
வறுமை நாசியி னிறுவுத லாகுமோ மடந்தாய். 81

திருந்து வாசனை செறித்தபா கடைநனி தின்று
முருந்து வென்றொளிர் முறுவலாய் செழுந்துவர்ச் செவ்வாய்
விருந்துண் டன்பனர் வியப்பமிக் கமிழ்தரு ளாதே
வருந்த மந்திரங் கணித்துணங் குதல்வழக் காமே. 82

மகர வாய்க்குழை யணிந்தருண் மவுணர்வாய் மொழியுந்
தகர வார்குழா லவருழை யார்வந்து சாற்றும்
புகரி லாதமென் றிஞ்சொலும் புகாமைவிழ் செவிகள்
பகரு நீள்வனத் துழனியுங் கேட்பது பண்போ. 83

அரி - கருவரி செவ்வரிகள். அஞ்சனம் - மை. உரிபரந்த நாயகன் - உரிமை மிக்க கணவன்; உரிமை: மைவிகுதி தொக்கது. எரி - நெருப்பு: இங்கே வெப்ப மிக்க என்க. என்றூழ் - சூரியன். முயறல் - (தவத்திலே) முயற்சிசெய்தல்.

81. நறுமணம் பொருந்திய மயிர்ச்சாந்தும், வண்டுகள் கிண்டும் மலரும் பருவத்தரும்புகளைத் தொடுத்துவிட்ட மாலைகளும் விரும்பிய கணவன் உடம்பின் மணமிகுதியை மோந்து இன்பத்தையடையாமல் மூக்கை வறிதேவிடுதல் நன்மை யாமோ? ஏ பெண்ணே!

விரைத்த - மணத்தையுடைய. காலேகம் - மயிர்ச்சாந்து. நனை - அரும்பு. மதுகரம் - வண்டு. தொங்கல் - மாலை. காந்தன் - கணவன். பேணிய - விரும்பிய. மெய்க்கடி - உடம்பின்வாசனை. உத்தம மகளிராகிய பத்மினி சாதிப்பெண்களின் உடம்பும், மூச்சுக்காற்றும் ஆகிய இவைகள் பத்மகந்தம் வீசும் என்பர். மோந்து மோந்து - அடிக்கடி மோந்து. மடந்தை: மடந்தாய்; விளி.

82. நன்ருகச்செய்யப்பட்டு வாசனை நிறைந்த வெற்றிலைபாக்கை நன்ருக மென்று தின்று, மிகச் சிவந்த வாயமுதத்தை உண்டு நாயகன் மகிழும்படி மிகுந்த அமுதத்தைக்கொடாமல் வருத்தமுறும்படி மந்திரங்களைச் செபித்து உடம்பை வாட்டுதல் உனக்குப் பொருந்துமோ?

செறித்த - நிறைத்த. பாகடை - வெற்றிலைபாக்கு. முருந்து - மயிலிறகின் அடிக்குருத்து. முறுவல் - பற்கள். செவ்வாய் விருந்து - சிவந்த வாயினின்று உண்டாகும் புத்தமிழ்தம். அன்பனர் - கணவன். வருவாயமிர்தம் அருளாமல். அமிர்தமுண்டலாவது - அதரபானம் பண்ணுதல். கலவிக்காலத்துக் காமமயக் கத்தால் சுவைத்தல் எச்சிலாகாது அமுதம் போன்றதாம். உணங்குதல்-வாடுதல்.

83. மகரமின்வாயைப் போன்று பண்ணிய குழை என்னும் ஆபரணத்தை யணிந்த மவுணருடைய வாய்மொழியும், அவர் பக்கலில் உள்ளார் வந்து சொல் லும் குற்றமற்ற மிக இனிய சொற்களும் புகாத வண்ணமுள்ள உன்னுடைய

துன்பெ லாந்தபத் துணைவனுர் கலவியின் சுவையும்
அன்பி னுலவர் புரியுமா தரவுமுள் ளகங்கொண்
டின்ப மார்ந்தெழின் முகமல ராதிருந் தியான
வன்பி னல்கிய வுளத்தொடுங் குவிவதோ வனிதாய். 84

பூக மொத்தொளிர் மிடறுமங் கலியநாண் புணர்ந்து
போக மொத்தெழப் புட்குரல் பயிற்றுபு காம
தாக மிக்கறத் தலைவனுர்க் கமுதளி யாதே
வேக முற்றழல் வறல்செய மெலிவதோ தோகாய். 85

அங்க தங்களு மவிர்மணிக் குருகும்பொற் ெருடியுங்
கங்க ணங்களுங் கதிர்பொழி யாழியுஞ் செறித்து
மங்க லந்திகழ் கேள்வனு ருடல்வளைத் தணைத்துத்
தங்கு கிற்றிலா திருப்பதோ தடங்கரந் தையால். 86

செவிகள், மயிர்ச்சாந்தையணிந்த நீண்ட கூந்தலையுடைய பெண்ணே ! பெரிய காட்டிலேயுள்ள பேரொலிகளைக் கேட்டிருப்பதும் நல்ல பண்பாகுமோ ?

மகர வாய்க்குழை - மகரமீனின் அங்காந்த வாய்போலும் வடிவினையுடைய காதணி. மவுணர் (?) மகிணர் என்பது அவ்வாறு திரிந்ததெனக்கொளினுமாம். மவுனர் - மோனர் எனவும் கொள்ளலாம்: நன்குபுலனுகவில்லை. தகரம் - மயிர்ச் சாந்து. குழாஅல்: விளி. உழையார் - பக்கத்திலுள்ளார். புகர் இலாத - குற்றம் இல்லாத. வனத்துழனி: துழனி - பேரொலி.

84. துன்பங்களெல்லாம் நீங்கும்படி கணவருடன் கூடிமகிழும் இன்பமும், அன்பினுலே அவர் செய்யும் ஆதரவும் மனத்திலேகொண்டு இன்பம் மிக்கு அழகிய முகம் மலர்ச்சிபெருதிருந்து, பெரிய தியான உறுதிப்பாட்டிலே தங்கிய மனத்தோடும் முகம் வாட்டமுற்றிருத்தலாமோ? பெண்ணே!

தப - நீங்க. துணைவனுர் - கணவர். ஆர்ந்து - நிறைந்து. எழில் - அழகு. இரும் தியான வன்பின். அல்கிய - தங்கிய. வனிதை - பெண்.

85. கமுக மரத்தின் கழுத்தையொத்து விளங்கும் உன்னுடைய கழுத்திலே மங்கலியக்கயிறு சேர்ந்து கலவிக்காலத்திலே போகம் ஒத்துநடத்தற்குரிய புட்களின் ஒலியை எழுப்பி, காம விருப்பம் மிகுதியும் தணியத் தலைவனுக்கு வாயமுதம் வழங்காமல் தீயிடையே தவஞ்செய்து மெலிதல் கூடுமோ? தோகையே!

பூகம் - பாக்குமரம். மிடறு - கழுத்து. புட்குரல் - புட்களின்குரல்போல் ஒலியெழுப்புதல். பயிற்றுபு - பயிற்றி. காமதாகம் - காமவேட்கை. அமுது - அதரபானமுதலியன. அழல் - அக்கினி. வறல்செய - வாட்ட. தோகாய்: விளி: மயில்போன்ற சாயலையுடையவளே.

86. அழகியபெண்ணே ! அங்கதம் என்னும் ஆபரணமும், விளங்கும் மணிகள் பதித்த வளையல்களும், பொன்னுலாகிய தொடி என்னும் ஆபரணமும்,

களப மங்கையிற் கொட்டியுங் கமழ்நறுந் தாது
வளர வட்டியும் வரித்துமா மணிவட மணிந்தும்
இளகி நண்பனை ரிறுகுறத் தழுவியின் புருமே
விளர்தி றந்தகு மோமுலே மென்கொடிப் பாவாய். 87

மணிவி ரிச்சிகை பருமம்வண் கலாபமே கலையு
மணிசெய் காஞ்சியும் பட்டுமிட் டழகுசெய் யாமே
பணிவி ரித்தபை பாற்றிய நிதம்பம்வெண் டுசிற்
பிணிப டுத்தமை பிழையலா தழகுகொல் பேதாய். 88

கங்கணங்களும், ஒளியை மிக்கு வீசும் மோதிரங்களும் செறிந்துவிளங்கும் உன்னுடைய கைகள் மங்கலம் நிறைந்தகணவருடைய உடம்பைவளைத்து அணைத்துக் கொண்டு பொருந்தாமல் இருக்கலாமோ?

அங்கதம் - கையில் அணிவதோர் ஆபரணவிசேடம். குருகு - வளையல். தொடி, கங்கணம் என்பனவும் கையில் அணிவனவே. ஆழி-மோதிரம். கேள்வன்-கணவன்.

87. மென்மையான பூங்கொடி போன்ற பெண்ணே! சந்தனக்கலவைக் குழம்பைக் கைகளால் எடுத்துக் கொட்டியும், மணம்வீசும் நல்ல மகரந்தங்களை நிறைய அப்பியும், சிறந்த மணிவடங்களை அணிந்தும் மென்மைபொருந்தக் கணவரை இறுகத் தழுவி இன்பத்தையடையாமல் உன்னுடைய நகில்கள் வெளுத்திருத்தல் தக்கதாமோ?

களபம் - கலவைச்சந்தனம். தாது - மகரந்தப்பொடி. ஈரம்புலர்வதற்கு முன்னே நுண்ணிய மகரந்தப் பொடிகளை அதன்மேல் அப்புதல் மரபு. நண்பன்-காதலன்.

88. பேதையே! பருமுத்துக்கோவை முப்பத்திரண்டாற் செய்த விரிசிகையும், பதினெட்டுக் கோவையையுடைய பருமமும், பதினாறு கோவையையுடைய கலாபமும், பவளக்கோவை எட்டினாற்செய்த மேகலையும், ஏழு கோவையாலான காஞ்சியும் ஆகிய இவைகளையும் பட்டாடையையும் கொண்டு அழகு படுத்தாமல் பாம்பினது படத்தையொத்த நிதம்பத்தை வெண்மையான ஆடையால் கட்டி வைத்த செயல் பிழையேயல்லது அழகுடையதாமோ?

"எண்கோவை மேகலை காஞ்சி யெழுகோவை, பண்கொள் கலாபம் பதினாறு - கண்கொள், பருமம் பதினெட்டு முப்பத்திரண்டு, விரிசிகை என்றுணரற் பாற்று" என்பதனால் அறிக. விரிச்சிகை: விரித்தல் விகாரம். பணி-பாம்பு. பை படம். பாற்றிய - கெடச்செய்த. தூசு - ஆடை. முப்பத்திரண்டு வடத்தினாற் செய்த விரிசிகை பூந்துகிலினுள் கட்டப்படுவது.

சிலம்பு கிண்கிணி பரியக மலத்தகந் திருத்தி
அலம்ப வன்பனுர் கலவியி னுடிமென் மலர்த்தாள்
புலம்பு வந்துழிப் புலந்தவர் சென்னியிற் பொறியா
திலம்ப டத்தவிர் விப்பதோ விளிமொழிப் பாவாய். 89

சொன்ன பல்வகை யுறுப்புடைத் தொழிலெலாந் துலங்கப்
பின்ன ரன்பரோ டாடுது மெனப்பெரி திருப்பிற்
கன்னி யித்தகு மிளமையுங் கழிதரா திருக்கும்
என்ன வெப்பெரு நூல்களு மியம்பிய திலேயே. 90

வாய்ந்த நுண்ணறி வுடையரே யாயினும் வளர்நூல்
ஆய்ந்த கல்விய ராயினு மறிவிலார் மடவார்
தேய்ந்த மெல்லிடை யாய்திகழ் கவினலம் வாடச்
சாய்ந்து வேறுறத் தவம்விளேக் கின்றனே யதனுல். 91

---

89. பண்ணிசை போன்ற மொழியினையுடைய பாவையே! சிலம்பு கிண் கிணி பரியகம் செம்பஞ்சுக்குழம்பு முதலியவற்றை நன்ருகத் திருத்தியமைத்தலால் ஓலிக்கும்படி கணவருடன் கலவியிற்கூடியிருந்து பின்பு ஊடற்காலத்திலே ஊடி அவர் சிரத்தில் மெல்லிய மலர்போன்ற தாளினுல் அழுத்தாமல் துன்புறும்படி தவிர்ந்திருத்தல் கூடுமோ?

சிலம்பு, கிண்கிணி, பரியகம் என்பன காலணிகள். அலத்தகம்-செம்பஞ்சுக் குழம்பு; அரத்தகம் எனவும் கூறுவர். பரியகம் - காற்சவடி.

90. கன்னியே! மேலே கூறிய பலவகை உறுப்புக்களினுற்செய்யப்படும் தொழில்களெல்லாம் விளங்கும்படி பின்பு கணவருடனே கூடியிருப்போம் என்று பெரிதும் தாமதித்திருப்பின் இப்படிப்பட்ட இளமைப்பருவமும் நீங்காமல் என்றும் உளதாம் என்று எவ்வகைப்பட்ட பெரிய நூல்களும் சொல்லியதில்லே.

பல்வகை உறுப்பு என்றது 78-ஆம் பாடல் முதல் கூறியவை காண்க. ஆடுதும் - கூடுவோம். கன்னி: அண்மைவிளி. 'இளமை நிலேயாமையை எண்ணுக' என்ருர்.

91. தேய்ந்து விளங்கும் நுண்ணிய நுசுப்பினையுடையவளே! விளங்கு கின்ற அழகினுல் உண்டாகும் நலங்களெல்லாம் சாம்ப, ஒதுங்கி வேறுபட்ட தவத்தைச் செய்கின்ருய் ஆகலின், சிறந்த நுண்ணறிவுடையோராயினும், சிறந்த நூல்களே ஆராய்ந்தறிந்த கல்வியையுடையராயினும் பெண்கள் அறிவில்லாத வரேயாவார்.

"பேதைமை என்பது மாதர்க்கணிகலம்" ஆகலின் நுண்ணறிவும், நுணங் கிய நூற்கேள்வியும் மிக்கிருப்பினும் பெண்களுக்கு உணர்ந்து செய்தல் கூடாது ஆகலின் உன் அழகின் நலத்தைப் பாழ்படுத்திஙய் என்க.

வனப்பி ழக்கினு மிழக்குக வவாவினை யுரைத்தால்
தனைக்கொ டுப்பலென் றுய்மட வாய்நினைத் தழுவ
நினைத்த டுத்தன னியஃது இசைந்திலை யாயின்
மனத்து வாய்மையி னிழந்தனை மாதவம் விளைத்தென். 92

உறுக ணத்துநின் கண்ணரு ளுதவுறு தொழியின்
மறுக ணத்தினிவ் வடிவெமக் குதவுறு மாயுந்
தெறுகொ லைப்பழி தேமொழி சிவணுநிற் சிவணிற்
பெறுத வப்பய னளித்திடுந் தேவரார் பேசாய். 93

வேற்று நீடுரு வெடுத்துறும் விண்ணவர் பெருமான்
சாற்றும் வாய்மொழி கேட்டருட் டையல்பூ சுரனிப்
போற்று மாக்கைய னுகியும் புணர்ந்தகா மத்தான்
ஆற்றி லானென வசித்தெதி ரறைகுவ ளானுள். 94

ஆய்ந்த - ஆராய்ந்த. மடவார் - பெண்கள். அறிவிலார் மடவார் என்றது நயம். மடம்: 'கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை' ஆகலின் மடவார் என்றது குறிப்பு எனினுமாம்.

92. அழகுகெட்டொழியுமாயினும் ஒழிக. விருப்பத்தையுரைத்தால் அதனைக் கொடுத்து மகிழ்வேன் (62) என்று கூறினுய். பெண்ணே! உன்னை அணைய நினைந்து உன்பால் வந்து அடுத்தேன். நீ அதற்கு இசையாயாயின் மனத்தில் கொண்ட உண்மையை இழந்தாய். நீ பெருந்தவத்தைச் செய்வதால் உண்டாகும் பயன் யாது?

வனப்பு - அழகு. அவா - விருப்பம். கொடுப்பல் - கொடுப்பேன். மடவாய்: இளநலம் வாய்ந்தவளே என்னும் குறிப்பு. நினைத்தழுவ - உன்னுடன் கலவி செய்ய நினைத்து அடுத்தனன். வாய்மை - சத்தியம்.

93. ஒரு நொடிப்பொழுதின் கடைக்கண் நோக்கம் செய்யாது நீங்குவாயாயின்; அடுத்த நொடிப்பொழுதினுள் இவ்வுருவம் எனக்கொழியும். இனிய மொழியினையுடையாய்! கொலைப்பாவம் உன்னைவந்து பொருந்தும். அப்பழி உன்னைப் பொருந்தினல் உன் தவப்பயனை அளிக்கும் கடவுள் யாவர்? சொல்.

உறுகணம் - இந்த நொடிப்பொழுது. மாயும் - மறையும். தேம் - இனிமை. தேமொழி - அன்மொழித்தொகை. சிவணும் - பொருந்தும்.

94. வேற்றுருக்கொண்டு அங்கே எழுந்தருளியுள்ள சிவபெருமான் சொல்லைக்கேட்டு அருள்நாயகியாகிய அந்தப்பெண்மணி, அந்தணர் வடிவுடைய இந்த ஐயன் மிகக் கிழவனுயினும் காமமிக்குடையான், பொறுத்திலன் எனச் சிரித்து எதிர்மொழி கூறத்தொடங்கினள்.

வேற்றுநீடுரு - அந்தணக்கிழக்கோலம். அருட்டையல் - கௌரி. பூசுரன் - பிராமணன். போற்றும் ஆக்கையன் - பாதுகாக்கத் தரும் முதிர்ந்த உடம்பையுடையான். அசித்து - சிரித்து.

வேறு

நரைத்துமெய் நடுக்குற நண்ணும் வேதியா
உரைத்தமை நன்றுநன் றொருத்தி கானகம்
புரைத்தகன் னிகையெனப் புந்தி கோடிகொல்
தரைத்தலைத் தவத்தையார் தாழ்த்து நீர்மையார். 95

இளமையு மிறக்குங்கொ லெடுத்த மாதவந்
தளர்வற முற்றுமேற் சார்ந்த மாணிக்கன்
றளவுசெ யெண்ணிரண் டாண்டெஞ் ஞான்றுமே
வளர்தர வளித்தவன் வரத்தைத் தேர்கிலாய். 96

ஆக்கையும் வாக்குமெ ன்னகமும் வார்நுதல்
நோக்கினுர் தமக்கென நுதலி வைத்தனன்
தீக்கெதி ரவர்மணஞ் செய்வ தில்லையேற்
போக்குவல் பொழுதெலாந் தவங்கள் போற்றியே. 97

---

95. நரையுடன் மூப்பினல் தளர்ச்சியுற்று உடம்பு நடுக்கத்துடனே பொருந்திய ஐயரே! நீர் சொல்லியவை நன்று, நன்று. நான் தன்னந்தனியே இருப்பவள். இடமோ காடு. கன்னிப் பருவமுடையேன் என்பதை நின் மனத்திற் கொள்ளுவாய். உலகத்திலே யாவர்தாம் தவத்தை நிந்திக்கும் தன்மையுடையார்?

கானகம் - காடு. புந்தி கோடி - மனத்திற்கொள்வாய். தரைத்தலை: தலை-ஏழனுருபு. தாழ்த்தும் - தாழ்வுபடுத்தும். நீர்மையார் - தன்மையையுடையார்.

96. இளமைப்பருவம் அழிந்துபடுமோ? எடுத்துக்கொண்ட சிறந்த தவம் தளர்வின்றி முடிவுபெறுமாறல் தம்மையடைந்த பிரமசாரியாகிய மார்க்கண்டேயருக்கு அக்காலத்திலே அளவுபடுத்தப்பட்ட பதினறுவயது எப்பொழுதுமே இருக்கும்படி கொடுத்தருளிய சிவபெருமானுடைய வரத்தை ஆராய்ந்திலையோ?

இறக்குங்கொல் - நீங்குமோ. முற்றுமேல் - முடிவுபெறுமாயின். மாணிக்கு-பிரமசாரிக்கு. எஞ்ஞான்றும் - எக்காலத்தும். தேர்கிலாய் - ஆராய்ந்தறிந்தா யில்லை.

97. மனம் வாக்குக் காயங்கள் எல்லாம் நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் தமக்குப் பயன்படும்படியாகவே கருதிப்படைத்தருளினர். அக்கினி சான்ருக அவர் மணஞ்செய்துகொள்ளாவிடின் தவங்கிடந்தே காலத்தையெல் லாம் கழிப்பேன்.

ஆக்கை - உடம்பு. அகம் - மனம். நுதல்நோக்கினர் - நெற்றிக்கண்ணர்: நுதல் - நெற்றி. நோக்கு - கண். நுதலி - கருதி. "மானிடப் பிறவி தானும் வகுத்தது மனம்வாக்காயம், ஆனிடத்தைந்து மாடும் அரன் பணிக்காக வன்றே" (சித்தி - 2 சூத் - 92). அவர் - அச்சிவபிரான்.

எடுத்தவிப் பவத்திடை யெம்பி ரான்மணை
மடுத்தில தாயினு மந்த ணாளகேள்
தொடுத்தவித் தவத்தின்மேற் ஞேற்றத் தாயினும்
விடுத்திட லருங்கடி மேவத் தக்கதே. 98

சிலபக லாயினுந் தவஞ்செய் யாதுறு
பலபகற் சிறியவர் பால ராவதிற்
பலபக லாயினும் பரிந்து நோன்பிறைற்
சிலபகன் மேலவர்ச் சேர்ச்சி செம்மற்றே. 99

இளமையி னழகினி னெதிரில் செல்வத்து
வளமையின் மிக்கவா னவரு நஞ்சமார்
களனடி கருதுமென் காமர் விழ்கலார்
விளரறி வினையனை விழ்தி வேதியா. 100

ஈசனர் காதலி யென்றும் வேதியா
ஆசையை வெறுத்திலை யதிக பாதகம்
பேசிய நூல்வழி சிறிதும் பேணிலை
மாசுசெ யுடலென மடமு மூத்தனை. 101

---

98. இந்தப் பிறந்த பிறப்பிலே தானே சிவபெருமானை மணஞ்செய்தல் பொருந்தாதாயினும், அந்தணரே! கேட்பீராக. தொடங்கிய இத்தவத்தினல் உண்டாகும் மறு தோற்றத்திலாயினும் கல்யாணம் செய்துகொள்ளுதலை விட்டிட மாட்டேன். பவத்திடை - பிறப்பில். தோற்றம் - பிறப்பு. கடி - கல்யாணம்.

99. சிலகாலமாயினும் தவஞ்செய்யாமல் பொருந்தும் பல காலங்கள் அற்பர்களிடத்துக் கழித்திடுவதினும், பலகாலங்கள் விரதங்களால் துன்புற்று மெலிந்து சிலகாலம் பெரியோருடன் கூடியிருத்தல் மிக மேலானதாம்.

பால் - பக்கம். பரிந்து - வருந்தி. நோன்பு - விரதம். மேலவர் - பெரியோர். சேர்ச்சி - சேர்ந்துவாழ்தல். செம்மற்று - பெருமையினையுடைத்து.

100. பிராமணனே! இளமையினலும், அழகினலும், ஒப்பில்லாத செல்வத்தினலும் மிக்கவராகிய தேவர்களும் ஆலகாலவிடம் பொருந்திய கண்டத்தை யுடைய சிவபெருமானைக் கருதித் தவஞ்செய்யும் என்பால் காமத்தை விரும்பார். வெள்ளறிவினையுடையை ஆதலின் நீ என்னை விரும்புகின்றாய்.

எதிரில் - ஒப்பில்லாத. களன் - கண்டத்தை யுடையவர். காமர் - அழகு. விழ்கலார் - விரும்பார். விளர் அறிவு - வெள்ளறிவு; எனவே அறிவில்லாதவன் என்றபடி. விழ்தி - விரும்புகின்றாய். வெள்ளை - அறிவின்மை.

101. சிவபெருமானை மணந்துகொள்ளும் பொருட்டுத் தவஞ்செய்கின்றேன், ஆகலின் அப்பெருமானுக்குரிய காதலியாவேன் என்று சொல்லியும்

காதன்மிக் கடுத்துழிக் கற்ற கல்வியின்
ஆதரு பயனுமங் கடுப்ப தில்லென
மூதறி வுடையவர் மொழிந்த சொற்பயன்
வேதிய நின்னிடை விளங்கக் கண்டனன். 102

இத்தினத் தெந்தநா ழிகையின் மாயுமோ
அத்தகு நின்னுயி ரார்வ வேலையின்
மொத்துண விடுப்பதோ முதல்வன் ருளிணை
பொத்துற விடுப்பது போக்கிப் பூசுரா. 103

ஆடிய கூத்தர்பா லமைத்த காதலர்
பீடிய றவத்தினைப் பேதித் தல்லதை
நாடிய தீயர்பா னுட்டும் வாய்மையுங்
கோடிய தீமையே குறிக்கின் விப்பிரா. 104

அந்தணனே! நீ ஆசையை வெறுத்திலாய், அதிபாதகங்கள் இவையென்று எடுத்துச்சொல்லிய நூல்களைப் பின்பற்றி நடந்தாயில்லை, குற்றமுடைய உடம்பைப்போலவே அறியாமையும் பெரிதாகவுள்ளாய்.

காதலி - மனைவி. பாதகம்: உபபாதகம், அதிபாதகம், மகாபாதகம் எனப் பலதிறப்படும். பேணுதல் - அதன்படி நடத்தல். மாசு - குற்றம். உடல் மூத்ததுபோலவே உனக்கு அறியாமையும் மூத்திருக்கின்றது எனக் கூறியபடி.

102. மகளிர்பால் விருப்பம் மிக்கதாயின் கற்ற கல்வியினுலாகிய பெரும் பயனும் சித்தித்தலில்லை என்று பேரறிவுடையவர்கள் கூறிய கூற்றின் பயனை அந்தணனே! உன்பால் விளக்கமாக இன்று அறிந்துகொண்டேன்.

காதல் - பெண்ணுசை. ஆதரு பயன் - ஆகின்ற பிரயோசனம். அடுப்பது - பொருந்துவது. சொற்பயன் - சொல்லால் ஆகிய பயன். நின்னிடை - உன்னிடத்து.

103. அந்தணனே! முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானுடைய திருவடிகளைப்பற்றி வாழ்வதனை வீணகச்செய்து, இந்த நாளிலே எந்த நாழிகையில் அழிந்துபடுமோ? அது தெரியாதே! அப்படிப்பட்ட உன்னுயிரை அவாக்கடலிலே மோதும்படி விடுக்கலாமோ?

பூசுரன் - அந்தணன். மாயுமோ - அழியுமோ, மறையுமோ. ஆர்வ வேலை - ஆசைக்கடல். மொத்துணல் - மோதப்படுதல். பொத்துற - பொதிய.

104. விப்பிரனே! ஐந்தொழிற் கூத்தையியற்றும் சிவபெருமானிடத்துப் பொருந்திய அன்புடையவர் பெருமைதங்கிய தவத்தை மாறுபடுத்தியல்லாமல் விரும்பும் தீயவர்களிடத்துச் செலுத்தும் சொல்லும் ஆராயுமிடத்துக் கோணுதலையுடைய தீமையேயாம்.

பிறர்மனை யார்தவம் பேணி னுருமை
முறுகிய காதலின் மோகித் தார்தமை
இறுதிசெய் திடிற்பய னென்னை நின்னுயிர்
அறுதியுற் றுலதி னுவ தென்கொலாம். 105

பாங்கியர் திருப்பள்ளித் தாம மாதியில்
நீங்கினர் வருகுவர் நிற்றி யேலிவண்
தாங்கருந் தண்டங்கள் சமைப்பர் பைப்பய
வாங்குநின் னிருக்கையை யடுப்பச் செல்கென்றாள். 106

பிணிமலர்க் கருங்குழற் பெரிய பூண்முலைப்
பணிமொழிப் பார்ப்பதி பகர்தல் கேட்டொளிர்
மணிநிற வண்ணனும் வணங்கும் விப்பிரன்
துணிவொடு மவளெதிர் சொல்லல் சொல்லினன். 107

கூத்தர் - திருக்கூத்தைச் செய்பவர்; சிவபிரான். காதலர் - அன்புடையார். பீடு - பெருமை. பேதித்கல் - மாறுபடுத்தல். வாய்மை - வாயின்தன்மை; எனவே பேசுதல் என்க. கோடிய - கோணுதல் பொருந்திய. விப்பிரன் - பிராமணன்.

105. பிறனுடைய மனைவியராய்த் தவஞ்செய்வாரிடத்து முதிர்ந்த காமத்தினால் விருப்பம் செய்தாரை அழித்தால் பயன் யாது? நின் உயிர் முடிந்தால் அதனால் ஆவதுதான் யாது?

உமை: ஏழனுருபு. முறுகிய காதல் - முற்றிய காமம். மோகித்தல் - விரும்புதல். இறுதி - அழிவு. அறுதி - முடிவு.

106. என்னுடைய தோழிமார் திருப்பள்ளித்தாமம் முதலியனகொண்டு வரும் பொருட்டுச் சென்றிருக்கின்றனர். விரைவிலே இங்கே வந்துவிடுவார்கள். நீ இங்கே நிற்பாயாயின் இப்போது பொறுக்கமுடியாத தண்டனைகளைச்செய்வார். மெல்லமெல்ல அங்கே உன்னுடைய இருப்பிடத்துக்குச் செல்வாய் என்று கௌரி கூறினாள்.

பாங்கியர் - தோழிகள். திருப்பள்ளித்தாமம் - பூசனைசெய்தற்குரிய மலர்கள். பைப்பய - மெல்லமெல்ல. செல்க - செல்வாய். வேதியா, அந்தணாள, பூசுரா, விப்பிரா என்று விளித்துச் சொல்லியதெல்லாம் உயர்ந்த குலத்திலே தோன்றி வேதங்களை ஓதி உணர்ந்த உனக்கு இது தக்கதன்று எனக் குறித்தபடி.

107. கௌரியாகிய பார்வதி தேவியார் இவ்வாறு சொல்லக் கேட்டுத் திருமாலும் வணங்குதற்குரிய அந்த வேதியர் துணிவோடும் அக்கௌரியின் முன்னே இதனைச் சொல்வாராயினர்.

மணிநிற வண்ணன் - நீலமணிபோலும் நிறத்தையுடைய திருமால். விப்பிரன் - பிராமணன். துணிவொடும் - தைரியத்தோடும்.

வேறு

மழலையந் தீஞ்சொ னங்காய் வடிவினை நோக்கி யந்தோ
கிழவனென் றெம்மை யெண்ணிக் கீழ்மைசெய் தெள்ளி நின்றாய்
பழகிய காமந் துய்ப்பப் படர்ந்துநீ யிசைந்தா யாகில்
அழகிய காளை யாவ லஃதுநீ பின்பு காண்டி. 108

நிற்றொழு மேவன் மாதர் நீங்கினர் வந்து சால
முற்றின ரடர்க்கத் தக்க மூப்பினை யுடையே மாகில்
பற்றிய மனமே கொண்டு படர்குவ மல்லேங் கண்டாய்
செற்றிய மலர்மென் கூந்தற் றேமொழிப் பாவை நல்லாய். 109

தேவர்கள் குழாம னைத்துந் திரளினுஞ் சீற்றத் துப்பிற்
காவலர் குழுக்கண் முற்றுங் கஞலினுங் கண்ணின் றெம்மைப்
போவது புரிய வல்லார் பூவைநின் வதுவைக் கோல
மாவது புரிந்திங் கல்லா லகல்கில மடியொன் றானும். 110

---

108. பெண்ணே! என்னுடைய வடிவத்தைப் பார்த்துக் கிழவன் என்று எண்ணிக் கீழ்மைப்படுத்தி இகழ்ந்தாய். காமநுகர்ச்சிக்கு நீ இசைந்தாயானால் அழகிய காளைப்பருவத்தை யுடையவனாவேன். அதனைப் பின்பு காண்பாய்.

வடிவு - உருவம். கிழவன் - கிழப்பருவம் உடையோன். கீழ்மைசெய்து - தாழ்த்தி. எள்ளி - இகழ்ந்து. துய்ப்ப - அநுபவிக்க. காண்டி - காண்பாய்.

109. பாவையே! உன்னை வணங்கித் தொண்டுபுரியும் ஏவல்மகளிர் பூக் கொய்யச் சென்றவர் மீண்டு வந்து மிகுதியும் வளைந்து தண்டனை செய்தற்குரிய மூப்புப்பருவத்தை உடையேமாகில் விரும்பிய மனத்துடனே திரும்பிச் செல்லேம்.

ஏவல் மாதர் - பணிசெய்யும் தோழியர். முற்றினர் - வளைந்துகொண்டவ ராய். பற்றிய மனம் - உன்பால் பொருந்திய மனம். படர்குவம் அல்லேம் - செல்ல மாட்டேம். செற்றிய - செறிந்த. தேமொழி - இனிய சொல்லையுடைய.

110. தேவர்கள் கூட்டமெல்லாம் வந்து திரண்டாலும் கடுங்கோபத் துடன் அரசர் கூட்டங்கள் முழுவதும் வந்து நெருங்கினாலும் கண்ணோட்டமின்றி எம்மைச் செல்லுமாறு செய்யமாட்டார். பூவையே! உன்னுடைய கலியாணக் கோலத்தைச் செய்தன்றி ஒரு அடியேனும் எடுத்து அப்பால் வைக்கமாட்டேன்.

சீற்றத் துப்பின் : துப்பு - வலிமை. சீற்றத்துப்பு - கடுங்கோபம். காவலர் - அரசர்; காவற்காரர்கள் எனினுமாம். கஞலினும்-நெருங்கிவரினும். கண்ணின்று - தாட்சணியமின்றி. வல்லார்-மாட்டார்; வல்லமையுடையாரல்லர். பூவை-நாகண வாய்ப்புள். வதுவைக்கோலம் - கலியாணக்கோலம். இங்கு ஆவது புரிந்து - இப்போது செய்யத்தக்கனவற்றைச் செய்து.

தகவறு பயிக்கம் புக்குத் தளர்ந்தழுந் தொழிலை யந்தோ
புகலுருத் திரப்பேர் பெற்றுப் புகழ்வெவ்வே றுருவு தாங்கிப்
பகுபெரு வாய பூதம் பலபரி சனமாக் கொண்டு
நகுதலை யிறகு கங்கை நகைமதி கபால மங்கி. 111

பன்னக மென்பு கோடு பரசத ளோடு தாங்கிப்
பொன்னுருச் சாம்பல் பூசிப் பொருவிடை யூர்ந்து நஞ்சுண்
டுன்னருங் கனலி னாடு முழைமழுக் கரக்கங் காளி
என்னினு மழக னேயோ வென்னவற் காசை கொண்டாய். 112

என்றுவேற் றுருவாய் வந்த விறையவ ரிழித்துக் கூறுந்
துன்றிய பொருள்கட் கெல்லாந் துகளில்கா ரணங்கள் காட்ட
நன்றுற வலித்தா ளென்ப நகுகதிர் முத்த மூரன்
மன்றலங் கூந்தல் வேய்த்தோள் வளரிளங் கொங்கை மாது. 113

111, 112. தகுதியல்லாத பிச்சையேற்றுத் தளர்ச்சியுற்று, அழுந்தொழிலை யுடையோன் என்னும் பொருள்படும் உருத்திரன் என்னும் பெயரைப்பெற்று, வேறு வேறு வடிவங்களை மேற்கொண்டு, பேழ்வாய்ப்பூதங்களைத் தம்முடைய பரிசனமாகக் கொண்டு, மண்டை ஓடுகள், இறகு, கங்கை, பிறைச்சந்திரன், பிரமகபாலம், நெருப்பு, பாம்பு, எலும்புமாலை, பன்றிக்கொம்பு, மழுவாயுதம், புலித்தோல், ஆமையோடு இவற்றைச் சுமந்து, உடல்முழுவதும் சாம்பலைப்பூசி, மாட்டின்மேல் ஏறிச் சவாரிசெய்து, விடத்தையுண்டு, நினைத்தற்கரிய கனலிலே ஆடுகின்ற, மானையும் மழுவையும் கரத்திலேந்திய கங்காளியானவன் என்னைவிட மிக்க அழகுடையவனோ? அவனிடத்து நீ எவ்வாறு ஆசைகொண்டாய்?

தகவு - பெருமை. பயிக்கம் - பிச்சை. உருத்திரன் - அழுகின்றவன். பகு பெரு வாய - பிளந்த பெரிய வாயினையுடைய. பரிசனம் - சேனை. நகு தலை - சிரிக்கின்ற பிரமன் தலைகள். இறகு - கொக்கிறகு. கபாலம் - பிரமன் தலையோடு. அங்கி - அக்கினி. பன்னகம் - பாம்பு. என்பு - எலும்புமாலை. கோடு - திருமாலாகிய பன்றியின் கொம்பு. பரசு - ஆயுதம். அதள் - தோல். புலித்தோல், சிங்கத்தின்தோல், யானையின்தோல் முதலியன. ஓடு - ஆமை முதுகோடு. உழை - மான். கங்காளி - முழு எலும்பை யணிந்தவன்: கங்காளம் - முழுஎலும்பு.

113. என்று வேற்றுருவாகிய அந்தணர் கோலங்கொண்டுவந்த சிவபெருமான் இழிவுபடுத்திக்கூறும் சொற்களுக்கெல்லாம் குற்றமில்லாத காரணங்களை எடுத்துக் காட்டக் கௌரி முற்பட்டனள்.

துன்றிய - செறிந்த. துகள்இல் - குற்றமில்லாத. நன்று உறவலித்தாள் - மிகவும் முற்பட்டாள்; என்றது மனவுறுதி கொண்டமையை.

வேறு

நரைத்த வெண்டலை வேதிய நல்லவர் போல
விரைத்த வெண்பொடி சாதன மணிந்தனை விமலர்க்
குரைத்தி மாசுரை யப்பொரு ளுற்றகா ரணங்கள்
தெரித்துங் கேளெனச் செப்புவாள் சினமொழி வாயாள். 114

கரும மாற்றுநர்க் கதன்பயன் கலந்துநின் றளிக்கும்
பொருவில் காரணன் போற்றுறுங் கருமமே பயனை
அருளு மாலெனு முனிவரை யாளுதற் பொருட்டு
மருவு தாருக வனத்திடைப் பயிக்கம்புக் கனனல். 115

பகர்ந்த தன்றியே வயிரவன் கூற்றினும் பயிக்கம்
புகுந்து ளானது தன்னையும் பூசுர கேண்மோ
முகுந்த னுன்முக னிருவரு முன்னொரு நாளில்
திகழ்ந்த மேருவி னெருமருங் கிருந்தனர் சிறப்ப. 116

---

114. நரைமுதிர்ந்த தலையையுடைய வேதியனே! நல்ல பத்திமான்களைப் போன்று திருநீறு உருத்திராக்கம் தரித்து விளங்குகின்றாய். மலரகிதராகிய சிவ பெருமான் விஷயமாகச் சொல்லியவையெல்லாம் குற்றம் பொருந்திய வார்த்தை களாம். அவைகளுக்கெல்லாம் உரிய காரணங்களைச் சொல்லுவோம் கேட்பாய் என்று கோபக் குறிப்புடன் கூடிய கௌரி சொல்வாளாயினள்.

நரைத்த வெண்டலை - வெள்ளியமண்டை என்று இழிவு தோன்றக் கூறிய படி. விரைத்த - மணம் வீசுகின்ற. சாதனம் - உருத்திராக்கம். விமலர் - பரிசுத்த மானவர். மாசு உரை உரைத்தி: மாசு உரை-குற்றம் பொருந்திய பழிச்சொற்கள். விமலர்க் 'குரைத்தி' என்னும் தொனிப் பொருள் காண்க. தெரித்தும் - தெரிவிப் போம். சினமொழி வாயாள், சினம் ஒழி வாயாள் எனவும் பொருள்படும்.

115. ஒரு கருமத்தைச் செய்வோருக்கு அக்கருமத்தின் பயனை அதனோடு கலந்துநின்றே அருள் செய்யும் ஒப்பற்ற நிமித்த காரணமாக உள்ளவன் செய் யும் கருமமே பயனைத்தரும் என்று மயங்கிய முனிவர்களை ஆட்கொள்ளும் பொருட் டாகத் தாருக வனத்திலே சென்று பிச்சை ஏற்றருளினர்.

"செய்வினையும் செய்வானு மதன்பயனும் சேர்ப்பானும்
மெய்வகையா னுன்காகும் விதித்தபொரு ளெனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி யல்லவற்றுக் கில்லை."

என்னும் சாக்கியநாயனர் புராணத்தாலறிக.

பொருஇல் - ஒப்பில்லாத. காரணன் - நிமித்த காரணமாக உள்ளார். மீமாம்சகர் கருமமே பயனைத்தரும் என்பர்.

116. தாருகவனத்திலே சென்று பிச்சை ஏற்றருளியமையே யன்றி வயிரவக் கடவுள் கோலத்திலும் சென்று பிச்சையேற்றனர். அதனையும் சொல்வேன்

ஆய காலையி னமரரு முனிவரு மடுத்து
மாயை காரண மாகிய வையகந் தனக்குத்
தூய னாகிய தனிமுத லியார்சொல்லு விரென்
றேயு மாறெலா மிறைஞ்சினர் தொழுதெதிர் நின்றார். 117

செருக்கு மிக்கொளுந் திசைமுகன் பிரமம்யா னென்றான்
தருக்கி மாயவன் யானலா லிலையெனத் தடுத்தான்
ஒருக்கு றுமனத் தின்னணங் கலாய்த்துழி யுலக
முருக்கு நாயகன் முன்னெழுந் தருளினா னன்றே. 118

இரியல் போயின னாரண னிருந்தய னிகழ்ந்தான்
திரியு மூவெயில் சிந்திய சேவகன் வெகுண்டான்
உரிய காரியங் குதித்திகழ் வுரைத்திடு மைந்தாம்
பெரிய நீண்முடி நகத்தினாற் கொய்துகை பிடித்தான். 119

பூசுரனே! கேட்பாய் திருமால் பிரமன் இருவரும் முன்னொரு காலத்திலே மேருவின் ஒருபக்கத்திலே சிறக்க இருந்து விளங்கினர்.

பயிக்கம் - பிச்சை. கூற்றினும் - கோலத்தினும். முகுந்தன் - திருமால். மருங்கு - பக்கம்.

117. அப்பொழுது தேவரும் முனிவரும் அவர் பக்கலை அடைந்து மாயா காரியமாகிய உலகத்துக்குத் தூயவனாகிய ஒப்பற்ற தலைவன் யார் சொல்லுவீராக என்று விண்ணப்பித்து வணங்கித் தொழுது எதிரிலே நின்றனர்.

அமரர் - தேவர். வையகம் - உலகம். உலகம் தோன்றுதற்கு முதற்காரணம் மாயை; ஆகலின் உலகம் மாயாகாரியமாம். தூயன் - பரிசுத்தன். தனி முதல் - ஒப்பற்ற முதல்வன். ஏயுமாறு - பொருந்துமாற்றால்.

118. அகந்தை மேற்கொண்ட பிரமதேவன் யானே பிரமப்பொருள் என்றான். விஷ்ணு மூர்த்தியும் செருக்குக்கொண்டு யான் அல்லாமல் தலைவன் வேறில்லை என்றான். ஒருமைப்படாத மனத்தையுடைய இருவரும் தாமே தலைவன் தலைவன் எனக்கூறிக் கலாம் விளைத்தனர். அப்போது சங்காரகர்த்தா அவர் முன்னே எழுந்தருளினர்.

ஒருக்கு உறு - ஒருமைப்படாத. கலாய்த்துழி - கலகம்செய்த காலத்தில். உலகம் முருக்கும் நாயகன் - சங்கார காரணனாகிய சிவபெருமான். முருக்கும் - அழிக்கும்.

119. கலகம் செய்தலைத் தவிர்ந்து நாரணன் சென்றான். இருந்த பிரம தேவன் சிவனை இகழ்ந்தான். திரிபுரத்தை யெரித்த சிவபிரான் வெகுண்டார். அங்கே வயிரவக்கடவுள் தோன்றி இகழ்ந்த ஐந்தாகிய தலையை நகத்தாற் கிள்ளிக் கையிலேந்தினர்.

இரியல் போயினன் - கெட்டோடினன். மூஎயில் - திரிபுரம். சேவகன் - சிவபிரான். காரி - வடுகக்கடவுள். கை பிடித்தான் - கையிலே ஏந்தினன்.

முனிவர் வானவர் தருக்கெலா முடித்தருள் கொடுப்ப
நனியு லாயுதி ரப்பலி நனந்தலைக் கபாலத்
தினிது வானங்கி னிவைபலிக் குழந்தவா கபாலம்
பனவ வேற்றதும் பகர்ந்திடப் பட்டதா லீங்கே. 120

உருவெ னப்படும் பாவநீள் கடலினின் றுயிரைத்
திரமெ னப்படு மருட்கரை சேர்த்தலின் மறையோய்
பரனெ னப்படு வாற்குருத் திரப்பெயர் பயிலும்
அரனெ னப்படு மவன்வடி வத்தரும் பெறுவார். 121

மருத்து நண்பின னழுதனன் மற்றவற் கதனுல்
உருத்தி ரப்பெய ருற்றதவ் வொலியழற் கல்லால்
திருத்து மப்பெயர் பிறருழைச் செல்வதொன் றன்று
கருத்த ழிந்தவ னழுததுங் கட்டுரைத் திடுவாம். 122

தேவர் தெவ்வவு ணரைத்தெறச் செல்லுழி யொருநாட்
பாவ கன்புடைப் பொருளெலாம் பதித்துப்பின் மீண்டு
மேவி நல்கென விசைந்திலான் வெய்தவ ரலைப்ப
வாவ மற்றவ னழுதன னருமறைக் கிழவோய். 123

---

120. முனிவர் தேவர் முதலியோருடைய செருக்குகளை அழித்து, அருள் செய்ய உலாவி, கபாலத்திலே உதிரப்பிச்சையை ஏற்றுன். இதுவே பலி கொள்ளும்படி உழந்தது என்பர்; வேதியனே!

பனவ - பிராமணனே. தருக்கு - செருக்கு. உதிரப்பலி - இரத்தப்பிச்சை.

121. மறையவனே! பிறப்பு என்று சொல்லப்படும் பாவமாகிய பெரிய கடலினின்று உயிர்களை நிலைத்த அருளாகிய கரையிலே சேர்க்கும் காரணத்தால் பரன் என்று சொல்லப்படும் சிவபிரானுக்கு உருத்திரன் என்னும் பெயர்வழங்கும்; அவர் சாரூபம் பெற்றோரும் உருத்திரன் என்ற பெயரைப் பெறுவர்.

உரு-வடிவம்; இங்கே பிறப்பைக் குறித்தது. 'பிறவிப்பெருங்கடல்' என்றது காண்க. திரம் = ஸ்திரம் - நிலையாகவுள்ள. அவன் வடிவத்தவர் - சாரூபம் பெற்ற ஆன்மாக்கள்.

122. வாயு தேவனுடைய நண்பனுகிய அக்கினி தேவன் அழுதான். அதனுல் அவனுக்கு உருத்திரன் என்ற பெயர் உண்டாயிற்று. அவ்வழுகையொலி அக்கினிக்கு அல்லாமல் அந்தப்பெயர் பிறரிடத்துச் செல்வதொன்றன்று. மனம் அழிந்து அவன் அழுதசெய்தியையும் சொல்லுவாம்.

மருத்து - வாயு. நண்பன் என்றது அக்கினியை. அழற்கு - அக்கினி தேவனுக்கு. பிறர் உழை - பிறர் பக்கத்தில்.

123. தேவர்கள் பகைவராகிய அவுணர்களைக் கொல்லும் பொருட்டுச் சென்ற காலத்தில் ஒருநாள் அக்கினி தேவனிடத்தில் பொருள்களையெல்லாம்

வேறு வேறுரு வெடுத்தன னென்றிவிப் பிரகேள்
கூறு மாருயிர்க் கறிவினைக் கொளுத்துவா னவற்றின்
ஏறு பாகபே தங்களுக் கியையவெவ் வேறு
நீறு பூசிய நிருமலன் றிருவுரு வெடுத்தான். 124

விளங்கு தாருக வனத்திடைப் பலிக்கென மேவித்
துளங்கு நூலிடை மாதரார் தொன்னிறை யழிப்பக்
களங்கு லாவிய கண்டரைக் காதுது மெனத்தீ
துளங்கு லாவிய முனிவர ரொலிதழல் வளர்த்து. 125

வேங்கை மான்மழு வியாளம்வெண் டலைதுடி செந்தீ
தாங்கு நீள்வலி முயலகன் றமைவிடு மந்நாள்
ஓங்கு பாரிடத் திரளையு முகைத்தன ரவற்றை
நீங்கு ருதபல் பரிசன மாக்கின னிமலன். 126

சேமித்துவைத்துப் பிறகு மீண்டுவந்து அவைகளைத் தருக எனக் கேட்டனர். அவன் அவைகளைத் தர இசைந்திலன். அதனல் தேவர்கள் அவனை மிகக் கொடுமையாகத் துன்புறுத்தினர். ஐயோ! என்று அக்கினிதேவன் அழுதான். வேதத்தை ஓதியவனே ! இதனை அறியாததென் என்பது எஞ்சி நின்றது.

தெவ் - பகை. தெற - கொல்ல. பாவகன் - அக்கினி. பதித்து - சேமித்து வைத்து. வெய்து - கொடுமையாக. அலைப்ப - வருத்த. ஆவ - இரக்கக்குறிப்பு.

124. விப்பிரனே ! வேறு வேறு வடிவங்களைக்கொண்டான் என்றுரைத்தாய். அரிய உயிர்த்தொகுதிகளுக்கு அறிவுச்சுடரைக் கொளுத்தும் பொருட்டு அவ்வுயிர்களின் பக்குவநிலைகளுக்குப் பொருந்த, விபூதி சண்ணித்த திருமேனியையுடைய நின்மலனாகிய சிவபெருமான் வடிவங்களைக் கொண்டருளினர்.

என்றி - என்றுகூறினாய். விப்பிரன் - பிராமணன். பாகபேதம் - பக்குவ வேறுபாட்டுநிலைகள். நிருமலன் - மலரகிதராகிய சிவபெருமான்.

125. தாருக வனத்திலே பிச்சைக்கெனச் சென்று முனிவர் பன்னியர் நிறையை அழிப்ப, நஞ்சு விளங்கும் கண்டத்தையுடைய இறைவரை அழிப்போம் எனக்கருதி உறுதி பூண்டு முனிவர் ஆபிசார வேள்வியொன்றை இயற்றி;

துளங்கும் - அசையும். நிறை - மனத்தை நிறுத்தும்தன்மை. களம் - நஞ்சு. காதுதும் - அழிப்போம். தீது உளம் குலாவிய முனிவரர்.

126. அவ்வேள்வியினிடைத் தோன்றிய வேங்கை, மான், மழு, யானை, வெண்டலை, துடி, தீ. முயலகன் முதலியவற்றை ஏவியனுப்பிய காலத்துப் பூத கணங்களையும் செலுத்தினர். சிவபெருமான் பூதகணங்களைத் தமக்கு நீங்காத சேனைகளாக்கிக் கொண்டனர்.

வியாளம் - யானை. துடி - உடுக்கை. பாரிடம் - பூதம். திரள் - கூட்டம். உகைத்தனர் - செலுத்தினர்கள். பரிசனம் - சேனை.

உடுத்த தோறலை மான்மழு வுரகந்தீ யிவையும்
எடுத்து வேதிய கூறிடப் பட்டன வீங்கு
நடித்து மான்முத லோர்க்கரு ணனிவழங் கிறைவன்
முடித்து ளானிற கென்றனை யதுமொழிந் திடக்கேள். 127

அண்டம் யாவையு மகட்டிடத் தொடங்கிய வாற்றன்
மண்டு மோர்பகா சுரனுயிர் மாட்டிவா ரிறகு
கொண்டு வேணியிற் செருகினன் குறையறு வலியோர்
கண்டு தீயன கருதுறு தடங்குதற் பொருட்டே. 128

எருக்கு வேய்ந்தவ னிரும்புன லேற்றது கேளாய்
ஒருக்கு மாமனப் பகீரதற் குதவிய ஞான்று
தருக்கி னுனில மழிதரச் சார்வது நோக்கி
மருக்கொள் வேணியி னொருமயிர் நுதியிடை மடுத்தான். 129

தாரை மாதர்மூ வொன்பதின் மரையுந்தந் திவர்பால்
வார நீவலை யென்றமை மறுத்துரோ கிணிபாற்
சார நோக்கியத் தக்கனு ரிடும்பெருஞ் சாபந்
தீர வேத்தலிற் றிங்களை முடித்தனன் செம்மல். 130

---

127. வேங்கை யானை இவற்றின் தோலை யுரித்து உடுத்து; மான், மழு, பாம்பு, தீ இவைகளையும் எடுத்துத் தரித்துக்கொண்டனர். வேதியனே! திருக்கூத்தைச்செய்து திருமால் முதலியோருக்குத் திருவருள் புரிந்த இறைவர் இறகை அணிந்தனர் என்றாய்; அதனையும் கூறுவேன் கேள். உரகம் - பாம்பு.

128. உலகம் முழுவதையும் உண்டு தன் வயிற்றிலே வைக்கத்தொடங்கிய வலிமைநிறைந்த பகாசுரன் என்பவன் உயிரைப்போக்கி அதன் நீண்ட இறகைத் தமது சடையில் செருகிக் கொண்டார். நிறைந்த வலிமையுடையோர் இதனைக் கண்டு தீயவற்றை நினையாமல் அடங்கியிருத்தற் பொருட்டேயாம்.

அகட்டு இட: அகடு - வயிறு. ஆற்றல் மண்டு - வலிமை நிறைந்த. பகாசுரன் - கொக்கு வடிவத்தையுடைய அசுரன்: பகம் - கொக்கு. மாட்டி - சவட்டி. வேணி - சடை.

129. எருக்கமலரை அணிந்த இறைவர் கங்கையைச் சிரத்தில் ஏற்றமை யைக்கேள். ஒரு நெறிப்பட்ட சிறந்த மனத்தையுடைய பகீரதனுக்குக் கொடுத்த காலத்தில் செருக்குடன் நிலவுலகம் அழியுமாறு கங்கை வந்தமையைக் கண்டு மணம் நாறும் சடாபாரத்தின் ஒரு மயிர் நுனியில் அதனை அடக்கியருளினர்.

ஒருக்கு மா மனம்: ''ஒருக்கும் மனத்தன்பர் உள்ளீர் சொல்லீர்'' (தேவா). மயிர் நுதி - மயிர் நுனியில்.

130. இருபத்தேழு நட்சத்திரங்களாகிய பெண்களையும் கலியாணம்செய்து கொடுத்து இவர்களிடத்து அன்பில் நீங்காமல் மகிழ்ந்திருப்பாயாக என்று

ஊழி வந்துழி யும்பரை நுதற்கணி னெரித்துப்
பாழி யென்புவெண் டலைபொடி பராபரன் றனது
வாழி நித்தியத் தியல்புமற் றவரநித் தியமுங்
கேழில் வையகந் தெரிந்துய்யக் கிளர்ந்துரு வணிந்தான். 131

அரியை வேதனை யொருமுறை யழற்றியென் பாதி
உரிய மேனியி னணிந்திடு மொருமுறை கரத்தின்
மரிய சூலத்தி னொருமுறை மடுத்துழி யவர்தங்
கரிய வார்சிகை மருமத்துக் காமர் நூ லாக்கும். 132

மாய னாதியர் தமையெரி வாயிடை மடுத்த
தூய தீவனத் தானந்த மிக்கொளத் தொண்டின்
மேய சாரதர் சூழ்தர விளிந்தவர்க் குறுதி
ஏயு மாறினி தாடின னிறையிலா விறையோன். 133

சொல்லிய சொல்லை மறுத்து உரோகிணியினிடத்து மிகுதியும் அன்புபொருந்தி யிருத்தலைநோக்கித் தக்கன் இட்ட பெருஞ்சாபம் நீங்குமாறு வணங்கித் துதிக்க சிவபெருமான் அச்சந்திரனை ஒரு கலையுடனே தமது சடையிலே சூடிக்கொண் டருளினர்.

தாரை - நட்சத்திரம்: நாண்மீன். மூவொன்பதின்மர் - இருபத்தெழுவர். வாரம் நிவலை - அன்பிற் குறையாதிரு. நீவுதல் - நீங்குதல். இவர்பால் - இந்த இருபத்தேழு பெண்களினிடத்தும். உரோகிணிபாற் சார: சார - பொருந்த. பெருஞ்சாபம் - கயநோயால் கலைகள் குறையும்படி இட்ட சாபமொழி. செம்மல் - பெருமையையுடைய சிவபிரான்.

131. ஊழிக்காலம் வந்தடுத்த காலத்திலே தேவர்களைத் தமது நெற்றிக் கண்ணால் எரித்து, அவரது வெந்த எலும்புகளையும் தலை மாலைகளையும் சாம்பரையும் சிவபிரான் தமது நித்தியத் தன்மையையும் ஏனைத் தேவர்கள் அநித்தியத் தன்மையையும் உலகம் அறிந்துய்யும்படி தமது திருமேனியில் அணிந்துகொண் டருளினர்.

ஊழி - ஊழிக்காலம்; சங்கார காலம்: என்றது நிவிர்த்திகலை முதலிய பஞ்ச கலைகளுக்குட்பட்ட ஐவகைச் சங்காரத்துள், இறுதிக்கண்ணதாகிய மாசங்காரம் என்க. அது சர்வசங்காரமாம். உம்பர் - தேவர். நுதற்கண் - நெற்றிக்கண். நித்தியம் - என்றும் அழியாமை. கேழ்இல் - ஒப்பில்லாத. வையகம் - உலகம். உரு - திருமேனியில்.

132. பிரம விஷ்ணுக்களை ஒரு காலத்து எரித்து என்பு முதலியவற்றைத் திருமேனியில் தரித்தருளுவர். ஒருகாலத்துக் கரத்திலுள்ள சூலத்தால் அழித்த வழி அவருடைய நீண்டசிகையை மார்பிற் பூணுநூலாகத் தரித்தருளுவர்.

அரி - விஷ்ணு. வேதன் - பிரமன். அழற்றி - எரித்து. மருமத்து - மார்பினிடத்து. காமர் - அழகிய.

133. திருமால் முதலிய தேவர்களை எரித்த தூய சுடுகாட்டிலே ஆனந்த மேலீட்டால் பூதகணங்கள் சூழ இறந்து பட்டவர்கட்கு உறுதிப்பயன் கைகூடும்

என்பு வெண்டலை மாலைநீ றணிந்தது மிருவர்
வன்பு மல்குட லணிந்தகங் காளியா மரபுந்
துன்ப மிக்குயிர்த் தொகைக்கறச் சுடலையா டியது
மன்பி லந்தண வறிந்தனை யேமற்று மறிமோ. 134

இரணி யாக்கனை யிறுத்திடு மாயனும் வராக
முரணி னாலுல கலைத்தலின் மோலிவா னவர்கள்
அரண நீயென வடர்த்தொரு கோட்டினை வாங்கிச்
சரண மேத்துற விடுத்துரத் தணிந்தனன் றலைவன். 135

வேத னார்வரம் பெறுகயா சுரன்விய னுலக
மோதி வாரணா சியுந்தப முன்னியங் கெதிர்ந்த
நாத னார்தமை விழுங்கின னாதர்கீண் டதனைச்
சோதி மேனியிற் போர்வையாக் கினர்சுரர் போற்ற. 136

படி தனக்கொரு முதல்வனில்லாத முழுமுதற் கடவுள் இனிதாகத் திருக்கூத்து ஆடினர்.

மாயன் - கரியோன். சாரதர் - பூதர்கள். விளிந்தவர்-இறந்தொழிந்தோர். உறுதி - உறுதிப்பயனாகிய வீடுபேறு. இறையிலா இறை - முழுமுதற்கடவுள்.

134. எலும்பு வெண்டலைமாலை நீறு முதலியவைகளைத் தரித்துக் கொண்டதும், பிரம விஷ்ணுக்களின் முழு எலும்புகளையணிந்த கங்காளியாகிய செய்தியும், உயிர்த் தொகைகளுக்குத் துன்பம் நீங்கும்படி சுடலையாடியதும் அன்பில்லாத அந்தணனே! அறிந்தாயன்றோ; மற்றும் அறிவாயாக.

இருவர் - பிரம விஷ்ணுக்கள். கங்காளி - முழுஎலும்பையணிந்தவர்: கங்காளம் - முழுஎலும்பு.

135. இரணியாக்கன் என்னும் அசுரனைக்கொன்ற திருமாலாகிய பன்றி செருக்கினால் மாறுபட்டு உலகத்தைத் துன்புறுத்துதலின், தேவர்கள் நீரே எங்களுக்குப் பாதுகாவலாவீர் என்று வேண்டிக்கொள்ள இறைவர் அப்பன்றியை வென்று ஒரு கொம்பை எடுத்துத் தம்முடைய மார்பிலே அணிந்துகொண்டு, திருவடிகளைத் தொழுதலால் அப்பன்றியை விடுத்தார்.

இறுத்திடும் - கொன்றருளிய. வராகம் - பன்றி; திருமால் கொண்டருளிய வராக அவதாரத்தைக் குறித்தது. முரணின் - வலிமையின், மாறுபாட்டினால். அலைத்தல் - வருத்துதல். மோலி - கிரீடம். அரண் - பாதுகாவல். கோடு - கொம்பு. சரணம் - திருவடிகள்.

136. பிரமதேவரிடத்து வரம் பெற்ற கயமுகாசுரன் உலகத்தைத் துன்புறுத்தி, காசிப்பதியையும் அழிக்க நினைந்து அங்கே எதிர்ந்து வந்த இறைவரையும் விழுங்கினான். இறைவர் அவனைக் கிழித்து அத்தோலை ஒளிநிறைந்த தமது திருமேனியில் தேவர்கள் போற்றப் போர்வையாக்கிக்கொண்டனர்.

மண்டு போரிர ணியனுயிர் குடித்தமான் மடங்கல்
அண்டர் யாரையு மலைத்தலி னதனுயிர் குடித்துத்
துண்ட மாகிய சிரஞ்சிரத் தணிந்துரி சுடுநஞ்
சுண்ட நாயக னுக்கின னுத்தரா சங்கம். 137

காரி கூற்றினுங் கண்ணுத லுலகெலா மளந்த
வேரி தூங்குபைந் துளவனுர் வெரிநெலும் பெடுத்துச்
சோரி தூங்குகைத் தண்டமாச் சுடர்தர வணிந்து
வாரி நீளுரி யாக்கினன் மணியுருக் கவயம். 138

கடலின் வானமிழ் தெடுத்தநாட் கச்சப வுருவாய்
உடலு மாயனை யுலகெலாம் வியப்புற வொறுத்துப்
படலை யோட்டினைப் பராபரன் பைத்தவா ளரவத்
தொடலை மார்பிடை யணிந்தனன் சுடர்ந்தபூ ணுகை. 139

வேதனுர் - பிரமதேவர். வாரணுசி - ஸ்ரீகாசி. தப - அழிக்க. முன்னி - நினைந்து. கீண்டு - கிழித்து. சுரர் - தேவர்கள்.

137. நிறைத்த போரிலே இரணியன் என்னும் அசுரன் உயிரைப்போக்கிய திருமாலாகிய நரசிங்கம் தேவர்களையெல்லாம் வருத்தியமையால் அதனைக் கொன்று துண்டாக்கப்பட்ட சிரத்தைச் சிரத்திலே அணிந்துகொண்டு அதன் தோலை நஞ்சுண்டகண்டன் மேலாடையாகக்கொண்டருளினர்.

மண்டு - நெருங்கிய. மால் மடங்கல்: பண்புத்தொகை. மால் - திருமால். மடங்கல் - சிங்கம். அண்டர் - தேவர். உரி - தோல். உத்தராசங்கம் - மேலாடை: அங்கவஸ்திரம்.

138. வடுகனுகிய அவசரத்தும் சிவபெருமான் மூவுலகையும் இரண்டு அடிகளால் அளந்தருளிய திரிவிக்கிரமனைக் கொன்று அவன் முதுகெலும்பைக் கையில் தண்டாகக்கொண்டு அவன் தோலைத் தமக்குக் கவசமாக அணிந்தருளினர்.

காரி - வடுகன். கண்ணுதல் - சிவபெருமான். உலகெலாம் அளந்த துளவனுர் - திருமால் அவதாரமாகிய திரிவிக்கிரமன். வேரி-வாசனை. துளவனுர்- திருத்துழாய் மாலையை யணிந்த திருமால். வெரிந் - முதுகு. சோரி - குருதி. நீள் உரி - நீண்டதோல். கவயம் - கவசம்.

"எளியரை வலியர் வாட்டின் வலியரை இருநீர் வைப்பில், அளியறத் தெய்வம் வாட்டும் எனுமுரைக் கமையவன்றே, தெளியுமா வலியைச் செற்றேூற் செருத்துரிக் கவயம்போர்த்த, வளியுளர் கச்சி காவல் வயிரவர்க்கன்பு செய்வாம்" திருவிக்கிரமாவதாரத்தில் உரிக்கவயம் போர்த்த வரலாறு காண்க. (காஞ்சிப் - கடவுள்.)

139. திருப்பாற்கடலைக் கடைந்து அமுதெடுத்த காலத்தில் ஆமை வடிவாகச் சமைந்த திருமாலை உலகமெல்லாம் மகிழும்படி ஒறுத்து முதுகு ஓட்டைச்

உலகம் யாவையு மொடுங்குழி யிறப்பினுக் கஞ்சி
அலகி லாவறக் கடவுளா னேறென வடுப்பச்
சுலவு சோமுகா சுரனுயிர் தொலைத்தமீன் றருக்க
விலகு வாள்விழி சூன்றவ னேறியூர்ந் தனனுல். 140

அடங்க லார்புர மழித்தஞான் ருழித்தேர் முரிய
மடங்கு ருவிறன் மாயனு மேறென வணங்கத்
தொடங்கு பூசையி ளெருமலர் சோர்தர விழிகொண்
டிடங்கொ ணேமிமுன் னளித்தவ னிவர்ந்தனன் மறையோய். 141

தரங்க வார்கட லமிழ்துணச் சார்ந்துமுன் கடைந்த
வரங்கொ டேவர்கள் விடமெழ வல்விரைந் தோடி
இரங்கு நாதவென் றிரத்தலு மினிதுகண் ணேடிப்
புரங்கொல் சேவகன் பொருக்கென வதனைவாய் மடுத்தான். 142

சிவபிரான் ஒளி பொருந்த அணியாகப் பாம்புகளை அணிந்த மார்பிலே தரித்துக் கொண்டருளினர்.

கச்சபம் - ஆமை. உடலும் - வருத்தும். பைத்த - படத்தையுடைய. பூண் - ஆபரணம்.

140. உலக முழுவதும் ஒடுங்கும் சங்கார காலத்தில் சாதற்குப் பயந்து தருமதேவதை இடபமாக வடிவங்கொண்டு வந்து பொருந்த, சோமுகாசுரன் என்பவன் உயிரை வீட்டிய மீனமாகிய திருமால் செருக்குற, விளங்கும் ஒளி பொருந்திய கண்ணைப் பறித்தருளிய சிவபெருமான் அந்த ஆனேற்றிலே ஏறி ஊர்ந்தருளினர்.

அறக்கடவுள் - தருமதேவதை. ஆன்ஏறு - இடபம். மீன் என்றது திருமாலை. சூன்றவன் - பறித்தவனுகிய சிவபெருமான்: வினையாலணையும் பெயர்.

141. பகைவருடைய திரிபுரத்தை எரித்த காலத்தில் பெரியதேர் முரிந்து விட, நீங்காத வலிய விஷ்ணுமூர்த்தியும் இடபவாகனமாக வந்து வணங்க, ஆயிரம் தாமரை மலர்கொண்டு அருச்சித்தபோது ஒருமலர் குறையத் தன்கண்ணையே தாமரைமலராகக் கொண்டு அருச்சித்த காரணத்தால் முன்பு சக்கராயுதத்தை அருளிய சிவபெருமான் அந்தத் திருமாலாகிய விடையினும் ஏறிச் செலுத்தி யருளினர்; வேதியனே!

அடங்கலார் - பகைவர். புரம் - திரிபுரம். ஆழித்தேர் - பெரியதேர்; சூரிய சந்திரர்களாகிய உருளையினையுடைய பூமியாகிய தேர் என்க. விறல் - வலிமை. சோர்தர - குறைய; நழுவிவிட. நேமி - சக்கராயுதம். அளித்தவன்: வினையாலணையும் பெயர்.

142. திருப்பாற்கடலில் உண்டாகிய அமுதத்தை உண்ணும்படிச் சென்று கடைந்த சிறந்த தேவர்கள் ஆலகாலவிடம் தோன்றிப் பரந்தகாலத்திலே மிக விரைந்து ஓடிச்சென்று சிவபெருமானே! இரங்கியருளுவீராக என்று வேண்டிக்

வேறு

நின்றுபல் லுயிர்க்கு மின்ப நிகழ்த்துதற் கிறைவன் கொண்ட
துன்றுபல் பொருள்க டம்மாற் சுந்தர னலனே வென்ன
நன்றுமை யுரைத்த லோடு நரைதிரை மூப்பு மாறி
வென்றிவெள் விடையி னின்றார் விரிபொருளனைத்து நின்றார். 143

அச்சமும் வியப்புந் தோன்ற வசலமீன் றெடுத்த நங்கை
நச்சிய வுளத்தி னோடு நாண்மலர்ப் பாதம் போற்றிக்
கச்சிள முலையிற் கண்கள் கதுவுறச் சென்னி கோட்டிப்
பச்சிளங் கொடியி னெல்கிப் பண்பொடு மெதிரே நின்றாள். 144

வானவர் மலர்பூ மாரி பொழிந்தனர் வணங்கி நின்ற
தேனலர் கோதை யாளைச் சேவுகைத் தருகு சென்று
கானமர் கூந்த னல்லாய் கலங்கலை யென்று கையால்
ஏனவெண் கொம்பு பூண்டா ரெழீஇயுட றைவந் திட்டார். 145

கொள்ள மிகவும் கருணையுடன் திரிபுரத்தைச் சிரித்தெரித்த வீரராகிய சிவபிரான் அந்த நஞ்சை அமுதுசெய்து தேவரைப் பாதுகாத்தருளினர்.

தரங்கம் - அலை. வார்கடல் - பெரியகடல்; என்றது திருப்பாற்கடலை. கண்ணோடி - தாட்சணியம் செய்து; கருணை செய்து என்றபடி. பொருக்கென - விரைவாக. வாய்மடுத்தான் - திருவமுது செய்தருளினர்.

143. நிலைபெற்ற பலவகைப்பட்ட உயிர்களுக்கும் இன்பத்தைக் கொடுத்தருளும் பொருட்டுச் சிவபெருமான் அணிந்து கொண்டருளிய பல பொருள்களையும் உடைமையால் அப்பெருமான் சுந்தரமுடையார் அல்லரோ? என்று கௌரி சொல்ல, நரை திரை மூப்பு முதலியவெல்லாம் மாறி எப்பொருளுமாய் நின்றருளும் சிவபெருமான் வெள்ளிய இடபவாகனத்தின் மேல் தோன்றிக் காட்சி அளித்தார்.

வெள்விடை - வெண்மையான இடபவாகனம்.

144. இமய மலையரையன் பெற்றருளிய உமாதேவியார், அச்சமும் வியப்பும் தோன்றும்படி விருப்பமிக்க மனத்துடனே திருவடித் தாமரைகளை வணங்கி நகில் களைக்குனிந்த பார்வையால் பார்த்துத் தலையை வளைத்து இளமென்கொடி போல அசைந்து எதிரிலே நின்றார்.

அசலம் - இமயமலை. நச்சிய - விரும்பிய. கச்சு - ரவிக்கை. கதுவுற - பொருந்த. கோட்டி - வளைத்து. ஒல்கி - அசைந்து.

145. தேவர்கள் யாவரும் பூமழை பொழிந்தார்கள். வணங்கி நின்ற கௌரியைச் சிவபெருமான் இடபவாகனத்துடனே நெருங்கிப் பெண்ணே! கலங்காதே என்று சொல்லித் தமது கரத்தால் உடம்பைக் கடவினர்.

முருகுயிர் கமலம் வென்ற முழுமதி முகத்தி னுடன்
ஒருகரங் கரத்தாற் பற்றி யுவளக மருங்கு போதந்
திருவியங் கவளை வைய மிணையடி யிறைஞ்ச நின்றார்
பொருவறு போதி நீழற் பூரணப் பொருளா யுள்ளார். 146

வரையினுக் கரைய னீன்ற மாதுமை தவங்க ளாற்றி
விரையநா யகனைப் பெற்ற விழுத்தகு காதை சொற்றும்
புரையிலி ரனையாண் மன்றல் புகலுதுங் கேண்மி னென்னத்
தரைவளம் பெருகச் சூத மாதவன் சாற்ற லுற்றான். 147

கௌரி தவம்புரி படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1743

கோதையாளை - கௌரியை: கோதை - மாலை; மாலைபோன்றவளை. சே உகைத்து - இடபவாகனத்தைச் செலுத்தி. கான் - வாசனை. ஏன வெண் கொம்பு - திருமாலாகிய பன்றியின் கொம்பு. எழீஇ - எழுந்து. தைவரல் - தடவுதல்.

146. தேனொழுகும் தாமரை மலரை வென்ற நிறைந்த சந்திரன் போன்ற முகத்தையுடைய கௌரியின் ஒரு கரத்தைத் தமது கரத்தால் பற்றிக்கொண்டு அந்தப்புரத்துக்குச் சென்று உலக முழுவதும் வணங்கும்படி இருந்தார்; ஒப்பற்ற அரசமரத்தின்கீழ் கோயில் கொண்டு விளங்கும் பூரணப்பொருளாக விளங்கும் சிவபெருமான்.

முருகு - தேன், வாசனை எனினுமாம். கமலம் - தாமரை. முழுமதி - பூரண சந்திரன். உவளகம் - அந்தப்புரம். வையம் - உலகம். போதி - அரசமரம்.

147. இமயமலையரசன் புத்திரியாகிய உமாதேவியார் தவங்களைச்செய்து விரைந்து நாயகராகிய சிவபெருமானை அடைந்த மேம்பட்ட வரலாற்றைச் சொன்னோம். இனி, குற்றமற்ற இருடிகளே! கௌரியினது திருமணச் செய்தியை யும் சொல்லக்கேட்பீராக என்று உலகத்திலே எல்லா வளங்களும் நிறையும்படி சூதமகா முனிவர் சொல்லத் தொடங்கினர்.

விரைய - விரைவாக. விழுத்தகு - மேம்பட்ட. புரையிலீர் - குற்றமற்ற முனிவர்களே. மன்றல் - கலியாணம்.

குறிப்பு: கௌரி தவம்புரிபடலம் 83-வது செய்யுளில் 'மவுணர்' என்ப தற்குக் 'கணவர்' என்றே பொருள்கொள்க. 'மகிணர், மவுனர்' என்றிருக்க வேண்டும் என்ற ஊகம் தவறுபட்டது. சிலப்பதிகாரம்: கடலாடுகாதை: 36-7 வரிகளின் உரையில் காட்டிய "குரைகடன் மதிக்கு மதலையை குறுமுய லொளிக்கு மரணினை, இரவிரு ளகற்று நிலவினை இறையவன் முடித்த வணியினை, கரியவன் மனத்தி னுதித்தனை கயிரவ மலர்த்து மவுணனை, பரவுநர் தமக்கு நினதிரு பதமலர் தபுக்க வினையையே" என்ற பகுதிகாண்க.

இருபத்தொன்பதாவது

கௌரி திருமணப்படலம்

சுணங்கு பூத்த துணைமுலைப் பார்ப்பதி
அணங்குக் கார்வ மளித்தருள் வள்ளலார்
கணங்கொண் டாருங் களிப்பொடுங் காணிய
மணஞ்செய் காதல்வைத் தார்திரு வுள்ளமே. 1

ஆர ணங்க ளளந்தறி யாதவர்
ஏர ணிந்த விசைமணி யாழெழூஉ
நார தப்பெயர் மாதவ னண்ணுமா
சீர ணிந்த திருவுளஞ் செய்தனர். 2

கட்டு வார்சடை யுங்கமழ் பூதியும்
இட்ட வக்க வடமு மிலங்குறச்
சட்ட நாரத மாமுனி சார்ந்தெதிர்
முட்டி லாவழி பாடுமு டித்தனன். 3

---

1. தேமல் பொருந்திய நகில்களையுடைய பார்வதி தேவியாருக்கு மகிழ்ச்சியைச் செய்தருளிய சிவபெருமான், கூட்டமாகப்பொருந்தி யாவரும் விருப்பமுடன் காணும்படி திருமணஞ்செய்து கொள்ளத் திருவுளங்கொண்டார்.

சுணங்கு - தேமல். கணம் கொண்டு - குழுமி. காணிய - காணும்பொருட்டு.

2. வேதங்களாலும் இன்னதன்மையன் என்று எடுத்துச்சொல்லுதற்கரிய சிவபெருமான் அழகிய இசைவல்லுநராகிய மகதி என்னும் வீணையையுடைய நாரதமுனிவர் வரவேண்டுமெனத் தமது திருவுளத்திற்கொண்டார்.

ஆரணம் - வேதம். ஏர் - அழகு. மணி - அழகிய. எழூஉம் - எழுப்பும்.

3. கட்டப்பட்ட நீண்ட சடையும், மணம்நாறும் திருநீறும், அணிந்த உருத்திராக்கமாலையும் விளங்க விரைவுடன் நாரதமுனிவர் வந்தடைந்து எதிரிலே வணக்கம் செய்து நின்றார்.

பூதி - விபூதி. அக்கவடம் - உருத்திராக்கமாலை. சட்ட - விரைவாக.

நகுமு கத்தின ராயரு ளுதனர்
மகதி வீணையி ளுய்மண நந்தமக்
ககில லோகத்தி ளுரமிங் கண்முறப்
பகர்தி போதி யெனப்பணித் தாரரோ. 4

தொழுத்தை யேனுய்ந் துளேனெனத் தொன்முனி
வழுத்தி யேகினன் மற்றெம் வதுவைக்கு
முழுத்த நாமே முழுக்கவின் செய்துமென்
றழுத்தி ளுர்திரு வுள்ளத்தி னண்ணலார். 5

புதுவ தாக நகர்கவின் பூப்பவும்
வதுவை மண்டப மாதி வயங்கவும்
விதுவ ணிந்தவர் விழ்ந்தனர் விழ்தலும்
எதிரி லாதவை யெண்ணியாங் கெய்தின. 6

வேறு

உருத்திரர் பலரு முவகையின் வதிய வுயர்சிவ லோகமுஞ் சமழ்ப்பத்
திருத்தக விளங்கிற் றெருபுற மொருபாற் றிருமறு மார்பனு மயனுங்
கருத்தமர்ந் திருப்ப வைகுந்த வுலகுங் காமரு சத்திய வுலகும்
வருத்துவ திதுவென் றுள்ளுடைந் தழிய வயங்கிய தாதிமா நகரம். 7

---

4. சிவபெருமான் மகிழ்ந்த முகமுடையவராய், மகதி என்னும் வீணைக்குத் தலைவனே! நமக்குத் திருமணம்; எல்லா உலகிலுள்ளவர்களும் இங்கேவந்து நெருங்குமாறு சொல்வாயாக, செல்க எனக் கட்டளையிட்டருளினர்.

நகுமுகம் - சிரித்தமுகம். மகதி - நாரதமுனிவர் யாழ். அகிலம் - எல்லாம். அண்முற - நெருங்க. போதி - போவாய்.

5. அடிமையாகிய யான் உய்ந்தேன் என்று நாரதமுனிவர் துதித்து வணங்கிச் சென்றார். பின்பு நம்முடைய திருக்கலியாணத்துக்கு முழுமுதற் கடவுளாகிய நாமே முழுதும் அழகுபடுத்துவோம் என்று சிவபெருமான் திருவுளத்திற் கொண்டருளினர்.

தொழுத்தையேன் - அடிமையாகிய யான். தொன்முனி - நாரதமுனிவர். வதுவை - கலியாணம்.

6. புதியதாக நகர் அழகு பொருந்தவும், கலியாணமண்டபம் முதலியன விளக்கம் பெறவும், பிறைச்சந்திரனை அணிந்த சிவபெருமான் விரும்பினர். விரும்பினவுடனே அவை நினைந்தவாறே பொருந்துவனவாயின.

விது - சந்திரன். விழ்ந்தனர் - விரும்பினர். எதிர் இலாது - ஒப்பிலாமல். எண்ணியாங்கு - நினைந்தவண்ணமே.

7. ஒருபக்கம் உயர்ந்த சிவலோகமும் நாணும்படி உருத்திரர்கள் யாவரும் மகிழ்ச்சியோடு வந்து தங்குமாறு அழகுற விளங்கியது. ஒரு பக்கத்திலே

இந்திர னங்கி யியமனே நிருதி யிர்ம்புனற் கடவுள்காற் றிறைவன்
நந்திய நிதிக்கோ னலங்கொளீ சான னென்றிவர் நண்ணினர் வதியச்
சுந்தர விருக்கை கிழக்கினைத் தொடங்கிச் சொல்லிய வடகிழக் கீரு
அந்தரத் தவர்க ளிருக்கைக ணுண வமைந்ததா லாதிமா நகரம். 8

ஏனைய வுலகின் விண்ணவ ராதி யெனைவரு மிருந்தனர் மகிழ
ஏனைய வுலக மனைத்துமுட் கோட்டத் தினையவெவ் வேறிருக் கைகளாய்ப்
பானலொண் குவளை பங்கய மாம்பல் பலமலர் பொய்கையுட் டழுவித்
தேனகு மலர்ப்பூஞ் சோலையும் பிறவுஞ் செறிந்ததா லாதிமா நகரம். 9

நனையவிழ் தருவோ ரைந்துமற் றிரண்டு நிதிகளு நளிர்ச்சிந்தா மணியும்
புனைபுகழ்க் காம தேனுவும் வரங்கள் புக்குநின் றேற்பவே ருக
அனைவரும் வியப்ப வைந்தரு வாதி யொரோவொரு பொருளள விலவாய்
மனைதொறும் வதிந்து வேட்டவேட் டாங்கு வழங்குவ தாதிமா நகரம். 10

திருமாலும் பிரமதேவரும் மனமுவந்திருக்க, வைகுந்தமும் சத்தியலோகமும் மன முடைந்து அழியுமாறு அந்த ஆதிமாநகரம் விளங்கியது.

வதிய - தங்க. சமழ்ப்ப - நாண. திருமறுமார்பன் - திருமால். அமர்ந் திருப்ப - விரும்பித்தங்க.

8. இந்திரன் அக்கினி இயமன் நிருதி வருணன் வாயு குபேரன் ஈசானன் என்னும் திக்குப்பாலகர் எண்மரும்வந்துதங்கக் கிழக்குத்திக்குமுதல் வடகிழக்குத் திசை ஈருக அழகிய இருப்பிடங்களும் பொருந்த விண்ணுலக வாசிகள் இருக் கையும் நாணும்படி ஆதிமாநகரம் அமைந்தது.

அங்கி - அக்கினி. ஈர்ம்புனற் கடவுள் - வருணன். நந்திய - ஆக்கமிக்க. நிதிக்கோன் - குபேரன். நண்ணினர்வதிய - பொருந்தியவராய்த் தங்க: நண்ணி னர்: முற்றெச்சம். அந்தரத்தவர் - விண்ணுலகவாசிகள்.

9. மற்றைய உலகிலுள்ள தேவர்களெல்லோரும் இருந்து மகிழும்படி அவ்வேனைய உலகங்களெல்லாம் மனங்கோணி வருந்த வெவ்வேறு இடங்களாக நீலோற்பலம் ஒளிபொருந்திய குவளைமலர்கள் தாமரை முதலிய பலவகை மலர் கள் நிறைந்த பொய்கைகளையுடையதாய்த் தேனேடு விளங்கும் பூஞ்சோலைகளும் பிறவும் செறிந்து ஆதிமாநகரம் விளங்கியது.

எனைவரும் - எல்லோரும். உள் கோட்டத்து இனைய - மனம் மாறுகொண்டு வருந்த. பானல் - நீலோற்பலம். குவளை - கருங்குவளை செங்குவளை மலர்கள். பங்கயம் - தாமரை. தேன்நகும் - தேன் விளங்கும்.

10. அரும்புகள் மலர்ந்த கற்பகம் முதலிய பஞ்சதருக்களும், சங்கநிதி பற்ப நிதிகளும், குளிர்ந்த சிந்தாமணியும், புகழ் விளங்கும் காமதேனுவும் வந்து வரங் களை ஏற்று நிற்கும்படி வேருகவுள்ள எல்லோரும் வியப்படைய ஐந்தருக்கள் முதலியன ஒவ்வொரு பொருளையும் அளவில்லாமல் வீடுகள்தோறும் தங்கி விரும்பிய விரும்பியபடி வழங்குவதாயுள்ளது அந்த ஆதிமாநகரம்.

அன்றெழு கங்கை யனைத்துமீப் போர்ப்ப வகல்கென விலக்குவ போன்று
நின்றெழு கொடிக ணுடங்கின நுடங்கு நெடுங்கொடிக் காற்றில தாகி
ஒன்றுமக் கங்கை வீற்றுவீற் ருகி யொருமண விழைவினின் ருங்குத்
துன்றிய தரளக் கோவைக டுக்குந் தோரண நிரைதுவன் றினவால். 11

புழுதிமிக் கவிய விரைப்பனி நீரும் புழுகுஞ்செங் குங்குமச் சேறும்
விழுதுசெய் கலவைச் சாந்துமோ ராங்கு வெற்றிட மறவெங்கு மெத்திப்
பழுதறு செம்பொற் சுண்ணமு மலரிற் பம்பிய நறும்பசுந் தாது
முழுதுமுள் ளீரந் துவரமே லட்டி மூதெழில் வாய்ந்தன வீதி. 12

கழிவளம் படைத்த வெமக்குமே லாகக் கடந்தபொன் னுலகுவாழ்ந் திருக்கை
அழகிய தாமென் றெழுந்துவிண் முழுது மடாதமைந் திருப்பவீ திகளின்
விழிகளை மறைத்து நின்றன போல விரைநடைக் காவண மோங்கி
ஒழுகின நிரை நீர்க் கும்பமும் புகையு மொளியுமற் றனைத்துமுட் டழுவி. 13

நனை - அரும்பு. தரு ஓரைந்து: கற்பகம், பாரிசாதம், மந்தாரம், சந்தானம், அரிசந்தனம் என்பன. நளிர் - குளிர்ந்த. ஏற்ப - யாசிக்க. வேட்ட வேட்டாங்கு- விரும்பியவைகளை விரும்பியவாறு.

11. முற்காலத்து எழுந்த கங்கைகள் அனைத்தும் வந்து மேலே போர்த்துக் கொள்ள, அவைகளை நீங்கிச் செல்க என்று விலக்குவன போன்று உயர எழுந்துள்ள கொடிகள் அசைந்தன. அசைகின்ற அந்தக் கொடிகளுக்கு ஆற்றுதவைகளாய்ப் பொருந்திய அக்கங்கை வேறு வேருக ஒப்பற்ற கலியாணத்தைக் காணும் விருப்பினவாய் நின்ருற் போன்று நெருங்கியுள்ள முத்துமாலைகள் தொங்கவிட்டிருக்கும் தோரணவரிசைகள் தோன்றின.

கங்கை அனைத்தும் என்றது உமாதேவியாரின் பத்துவிரல்களினின்றும் தோன்றிய கங்கைகள் பத்தையும். அன்று - விளையாட்டாக அம்மையார் சிவபெருமானுடைய கண்களைக் கைகளால் பொத்திய பொழுது. மீ - மேலே. நுடங்கின - அசைந்தன. ஒன்றும் - பொருந்தும். வீற்று வீற்ருகி - வேறு வேருகி. மண விழைவு - திருமணத்தைக் காணும் விருப்பம். துன்றிய - நெருங்கிய. தரளம் - முத்து. தூக்கும் - தொங்கவிட்டிருக்கும்.

12. புழுதிகள் மிகுதியும் அடங்கும்படி மணம் பொருந்திய பனிநீரும் புழுகும் குங்குமச்சேறும் இழுதாகவுள்ள கலவைச் சந்தனமும் ஒரு சிறிதும் வெற்றிடம் இன்றி எல்லாவிடங்களிலும் நன்ருகத் தெளித்து மெழுகி, குற்ற மற்ற பொற்சுண்ணமும் மலர்களிலே நிறைந்த பசிய மகரந்தப் பொடிகளும் முழுவதும் உள்ளிடங்களில் உள்ள ஈரத்தைத் துவட்டினுற்போல மேலே தெளித்து வீதிகள் அழகுபெறவுள்ளன.

அவிய - அடங்கும்படி. விழுது - இழுது. ஓராங்கு - ஓர் இடம். மெத்தி - பதித்து, மெழுகி. துவர - வறளும்படி. மேல் அட்டி - மேலே தெளித்து.

13. மிக்கவளப்பம் பொருந்தியுள்ள எமக்குமேலே உயர்ந்து விளங்கும் பொன்னுலகம் வாழ்ந்திருத்தல் மிக அழகிதாம் என்று எழுந்து மேற்சென்று

தமனியப் பொடியு நறுவிரைத் தாதுஞ் சாந்தமு நிறைபுனற் றசும்பும்
நிமிர்பொரிக் கலனும் பாலிகைத் திரளு நீளொளி விளக்கமும் புகையும்
உமிழ்சுவைக் கனியும் பாகடை பிறவு மோங்குகா வணத்துள்வே திகையின்
அமர்வன நெடுமால் வயிற்றடக் கியஞான் றகிலமு மடங்கின போன்றே. 14

உலகெலாந் தன்னை யன்றிவே றிலையென் றுறழ்தரக் காட்டுமா மாயை
நிலையினுட் புகுந்து பார்க்குநர்க் காங்கு நெடும்பயன் கிடைக்குமா போல
அலர்பொழிற் பரப்புட் புகுநருக் கெல்லா மளவிலா வரும்பெரும் போக
மலர்தரு தடமும் புளினமே டையுஞ்செய் வரைகளும் பிறவுமல் கினவே. 15

இழுக்குவ புழுகுஞ் சந்தனச் சேறு மெரிமணிச் சிவிறியின் வாங்கி
ஒழுக்கிய பனிநீர் விரவுகுங் குமமு மூட்டின ருகுத்தவஞ் சனமுங்
குழுக்கொடு பதங்க ளிடறுவ மணிச்செய் கோவைகள் சிதர்ந்தவுங் கலனுஞ்
செழுக்கடி மலரின் றெங்கலு மல்லாற் சேதக முலமுமாங் கிலையே. 16

விண்ணுலகத்தை வருந்தாதிருக்கும்படி தெருக்களின் கண்களை மறைத்து வைத்தாற்போல மணம் பொருந்தும் நடைக்காவணங்கள் உயர்ந்து உள்ளே நீர்க்கும்பங்களும் புகைகளும் தீபங்களும் முதலியன பொருந்தும்படி விளங்கின.

கழி வளம் - மிக்க வளப்பம். எமக்கு என்றது விதிகளை. அடாது அமைந் திருப்ப - வருத்தாமல் அமைதியுடன் இருக்கும்படி. நிரை - வரிசை.

14. பொற்சுண்ணமும் வாசனையுடைய மகரந்தப்பொடிகளும் சந்தனமும் நிறைந்த நீர்க்குடங்களும் பொரியையுடைய பாத்திரமும் முளைப்பாலிகைகளும் மிக்க ஒளியையுடைய விளக்குகளும் புகைகளும் சுவையையுடைய கனிகளும் தாம்பூலமும் பிறபொருள்களும் உயர்ந்துவிளங்கும் காவணத்தினுள்ளே வேதிகை களில் பொருந்தியருத்தல், திருமால் உலகமுழுவதையும் தமது வயிற்றகத்தடக்கிய காலத்து எல்லாம் அடங்கியிருந்தன போன்று இருந்தன.

தமனியம் - பொன். தசும்பு - குடம். பொரிக்கலன் - பொரியுள்ளபாத்திரம். பாலிகை - முளைப்பாலிகை. பாகடை - வெற்றிலைபாக்கு. வேதிகை - திண்ணை. காவணம் - பந்தர். ஞான்று - பொழுது. அகிலமும் - எல்லாவுலகமும்.

15. உலகமுழுவதும் தன்னையல்லாமல் வேறில்லை என்று மாறுபடக் காட்டும் மாயைநிலையினுள்ளே ஆராய்ந்து பார்ப்போருக்கு ஆங்குப் பெரும் பிரயோசனம் உண்டாதல்போல, மலர்களையுடைய சோலையிடமெல்லாம் புகு வோருக்கு அளவில்லாத பெரிய நுகர்ச்சியாகவுள்ள மலர்த்தடாகங்களும், மணற்குன்றுகளும், செய்குன்றுகளும் மற்று முள்ளனவும் நிறைந்துள்ளன.

உறழ்தர - மாறுபட. நெடும்பயன் - பெரும் பிரயோசனம். பொழில் - சோலை. புளினமேடை - மணற்குன்று. செய்வரை - செய்குன்று.

16. புழுகும் சந்தனச்சேறும் நீர்தூவும் துருத்தி கொண்டு வீசும் பனி நீரும் கலந்த குங்குமச்சாந்தும் இட்டுக்கொண்டு சிந்தியவையும் வழுக்கிவிடுவன. மணிக்கோவைகளும் சிதறிய மணிகளும் ஆபரணங்களும் கால்களை இடறுவன

மணிகளுந் துகிலும் வாசமென் றொடையும் வாழையுங் கமுகும்வார் கொடியும்
அணிநிலை நெடுந்தேர் நிரைநிரை யாக வகன்மனை வாயில்க டோறுந்
துணிகதி ரெறிப்ப நின்றன விண்ணுந் தொழுதெழ வாவயின் வதியும்
பிணிமலர்க் கூந்தன் மாதரா ரல்குற் பெற்றிகற் றிடவடுத் தனபோல். 17

சந்தனச் செச்சை யெறிவன பனிநீர் தடங்கையிற் றூவுவ மேலாற்
கொந்தொளிச் சுண்ணம் விசுவ மணியின் கோவைசுற் றழுத்துசாந் தாற்றி
பந்தியி னேந்தி யசைப்பன கவரி பாங்குற விரட்டுவ கவிகை
அந்தில்வந் தணைவோர் தமக்குறக் கவிப்ப வனைத்தும்பா வைகளிடந்
[தோறும். 18

குணிலெடுத் தொருவ ரெறிதரா தியல்பிற் குளிறுவ முரசங்க ளெங்கும்
பிணிநரம் புளரா திசையெழீஇ யின்பம் பெருக்குநல் யாழின மெங்கும்
அணிகயி றசையா தவிர்மணிப் பாவை யாடல்செ யரங்குக ளெங்குந்
துணியுமைம் பொறியும் புலனுக ராது சுவையெழக் களிப்பன வெங்கும். 19

வாம். வீதிகளில் இவைகளும் மணம் நாறும் மலர்மாலைகளும் அன்றி வேறு சேற்றுநிலமும் திரண்ட கற்களும் அவ்விடத்தில்லை.

இழுக்குவ - வழுக்குவன. சிவிறி - நீர் தூவும் துருத்தி. அஞ்சனம் - மை. சிதர்ந்தவும் - சிந்தியவைகளும். கலன் - ஆபரணம். தொங்கல் - மாலை. சேதகம் - சேற்றுநிலம். உலம் - திரண்டகல்.

17. இரத்தினங்களும் ஆடைகளும் மாலைகளும் வாழையும் கமுகும் நீண்ட கொடிகளும் இரத்தினங்கள் பதித்த நிலைத்தேர்களும் வரிசை வரிசையாக அகன்ற வீடுகளின் வாயில்கள்தோறும் பிரகாசத்தைச் செய்து கொண்டு, விண்ணரமகளிரும் அவ்விடங்களில் வணங்கி எழும்படி தங்கும் மகளிருடைய அல்குலின் தன்மையைக் கற்றுக்கொள்ளுவதற்காக வந்து பொருந்தியவைபோல நின்றன. தொடை - மாலை. கமுகு - பாக்கு. நிரை நிரையாக-வரிசை வரிசையாக. கதிர் எறிப்ப - ஒளியை வீச. ஆவயின் - அவ்விடத்து. வதியும் - தங்கும். பிணி - கட்டப்பட்ட. அடுத்தன - வந்து பொருந்தின.

18. இடந்தொறும் இடந்தொறும் உள்ள பாவைகள் சந்தனச்சேற்றை வீசுவன. பெரிய கைகளால் பனிநீரைத் தூவுவன. மேலே ஒளிபொருந்திய சுண்ணப்பொடிகளை விசுவன. மணிகளின் கோவையைச் சுற்றிலும் அழுத்தப் பட்ட சாந்தாற்றியை வரிசையாக ஏந்திக்கொண்டு அசைப்பன. சாமரங்களைப் பக்கங்களிலே மாறிமாறி அசைப்பன. குடைகளை வந்து நெருங்குவோர்களுக் கெல்லாம் கவிப்பன.

செச்சை - சேறு: 'செச்சைமை வெட்சி தேய்வை' (நிகண்டு). பத்தியின் - வரிசையாக. பாங்கு - பக்கம். இரட்டுவ - மாறிமாறி அசைப்பன. கவிகை - குடை.

19. எவ்விடத்தும் முரசவாத்தியங்கள் குறுந்தடியை எடுத்து ஒருவர் அடிக்காமல் இயல்பாகவே முழங்குவன. எவ்விடத்தும் கட்டப்பட்ட நரம்புகள் சத்திக்காமல் இசைப்பாட்டுக்களை எழுப்பி இன்பத்தைப் பெருக்கும் யாழினங்கள்

குழைகளும் பூணும் பருமமுந் துகிலுங் கோதையுந் தொடிகளு மற்றை
இழைகளு மணிய வெடுத்திகு ளோயர்பா லெய்திய மாதரார்க் காங்குப்
பழையன வணிமெய்க் கரந்திடப் புதிய படரொளி யணிகண்மெய் யினவாய்த்
தழையழ கெறிப்ப நோக்கினர் மகிழ்ந்து தமதணி யெறிவதெவ் விடனும். 20

பயிக்கமுற் றுழல்வோர் வறுமையிற் கவல்வோர் பருவரற் பிணியினுற் றழி
வயக்கமி லுருவோர் மகவிளம் பருவ மன்னினர் மூப்பின ரெல்லாந் [வோர்
தயக்கமுற் றமைந்த தருணரா ய் வெறுக்கை தழைத்தவ ராய்ப்பிணி யிலராய்
நயக்குமுத் தியினர் போலவோ ரியல்பு நண்ணின ரிடந்தொறு மாதோ. 21

வேறு

இன்னன வெழினக ரீண்டு மாக்கவின்
முன்னவன் போலிவை மொழிக்க டங்குரு
மன்னிய வதுவைசெய் மண்ட பத்தெழில்
தன்னமிங் கெடுத்தியாஞ் சாற்றற் பாலதே. 22

உள்ளன. அழகிய கயிறுகள் அசையாமல் விளங்கும் மணிப்பாவைகள் ஆடல் செய்யும் அரங்குகள் எங்கும் உள்ளன. எவ்விடங்களிலும் ஐம்புலன்களும் நுகராமல் அவ்வவற்றின் சுவைகள் எழக் களிப்பையடைவன.

குணில் - குறுந்தடி. எறிதராது - எறியாமல். குளிறுவ - முழங்குவன. மணிப்பாவை - அழகியபாவைகள். அரங்கு - சபை.

20. எவ்விடங்களினும் குழைகளும் ஆபரணங்களும் பருமம் என்னும் கோவையும் துகிலும் மாலையும் வளையல்களும் ஏனைய அணிகலன்களும் எடுத்துத் தோழியரிடத்துச்செல்லும் மாதர்கட்கு அங்கங்கே முன்னர் அணிந்துள்ள அணிகலங்கள் உடம்பிலே மறைந்துபோக, புதியனவாகிய ஒளியை வீசும் ஆபரணங்கள் உடம்பிலே உள்ளனவாக மிக்க அழகினைச் செய்ய அவற்றைப் பார்த்தோராய் மகிழ்ந்து தமது அணிகளை எடுத்து எறிவார்கள்.

பருமம் - இடையிலணியும் மணிக்கோவை விசேடம். கோதை - மாலை. தொடி - வளையல். இழை - இழைத்துச் செய்யப்பட்ட ஆபரணம். இகுளையர் - தோழிகள். கரந்திட - மறைய. மெய்யின - சரீரத்திலுள்ளன.

21. பிச்சை எடுத்துத் திரிவோர், வறுமையினுற் கவலையடைவோர், துன்புறுநோயால் பிடிக்கப்பட்டு வருந்துவோர், அழகில்லாதவடிவினர், இளம்பிராயமுடையோர், குழவிகள், மூப்புடையோர் முதலிய யாவரும் சிறந்த தருணப் பருவமுள்ளவராய், செல்வம் நிறைந்தவராய், நோயில்லாதவராய், இடங்கள் தோறும் விரும்பும் முத்திபெற்றுடையார் போல ஓரியல்பைப் பொருந்தியுள்ளார்கள்.

பயிக்கம் - பிச்சை. கவல் - கவலை. பருவரல் - துன்பம். வயக்கம் இல் - விளக்கமில்லாத. வெறுக்கை - செல்வம்.

22. இப்படிப்பட்ட அழகிய நகரிலே நெருங்கியுள்ள பேரழகு முழுமுதற் கடவுளைப் போல இன்னதன்மை உடையதென எடுத்துச் சொல்லுவதற்குச்

பரவுமுக் குணமும்பான் மையினின் ருலென
மரகத மடித்நலம் வயங்கச் சேயொளி
அரதன மிடையுற வவற்றின் மேக்குவச்
சிரமொளிர் குறடுபஃ றிசையும் வென்றதே. 23

பாயதண் பாற்கடற் பரப்பி னின்றிடு
மாயவ ரெண்ணில ரென்ன வச்சிரத்
தூயவண் டலமெலா நீலத் தூணங்கண்
மீயுயர் விசும்பினூ டெழுந்து நின்றவே. 24

தேவர்க ளொடுமகத் தீட்டுஞ் சீர்த்தியை
ஆவதென் ருழியான் கவர்ந்து சென்னிமேன்
மேவவைத் ததுபொரூஉம் விளங்கு தூண்டலைப்
பாவிய பளிக்குப்போ திகையின் வண்ணமே. 25

சொல்லில் அடங்கா நிலைபெற்ற கலியாண மண்டபத்தின் அழகினைச் சிறிதளவு இங்கே எடுத்துச் சொல்லுந் தரமுடையதாமோ?

ஈண்டும் - நெருங்கும். மாக்கவின் - பேரழகு. முன்னவன் - சிவபெருமான். வதுவை - கலியாணம். தன்னம் - சிறிதளவு.

23. பரந்துள்ள முக்குணங்களும் தனித்தனியே நின்றாற்போல மரகதமணி அடிப்பக்கத்திலே விளங்க, சிவந்த மாணிக்கமணி மத்தியிலே பொருந்த, அவற்றின் மேலே வைரமணி ஒளியை வீசும் குறடுகள் பலதிசைகளையும் வென்றாற் போன்று அமைந்துள.

முக்குணம் - சத்துவகுணம், இராசதகுணம், தாமதகுணம் என்பன. அவை முறையே வெண்மை, சிவப்பு, கறுப்பு நிறங்கள். நீலம், பச்சை, கறுப்பு நிறங்களை ஒன்றாகக் கூறுதல் கவிமரபு; ஆகலின், தாமதகுணத்தை மரகதம் என்றார். சேயொளி - சிவந்த நிறம். மேக்கு - மேலே. வச்சிரம் - வைரமணி.

24. பரந்து விளங்கும் குளிர்ந்த திருப்பாற் கடலிலே நிற்கும் திருமால் எண்ணிலர் என்னும்படி வச்சிரக்கற்கள் பதிக்கப்பெற்ற வளப்பம் பொருந்திய தரையில் நீலக்கற்களால் செய்யப்பட்ட தூண்கள் மேலே உயர்ந்து ஆகாயத்தை ஊடுருவி நின்றன.

பாய - பரவிய. மாயவர் - விஷ்ணுமூர்த்திகள். வச்சிரம் - வைரமணி. விசும்பினூடு - ஆகாயத்திலே பொருந்த.

25. வைரக்கற்கள் பதித்த தரையின்மேல் நீலமணிகளால் நிறுத்தப்பட்டு விளங்கும் தூண்களின் உச்சியில் பொருந்தும் பளிங்குக் கற்களாலாகிய போதிகையின் தன்மை, தேவர்களோடு கூடியிருந்து யாகங்களிலே தேடிய மிக்க புகழை யாதென்று ஆராய்வான்போலக் கவர்ந்து திருமால் தன்னுடைய சிரத்தின் மேல் பொருந்த வைத்துக்கொண்டதை ஒக்கும்.

கீர்த்தியைக் கவர்ந்தரி கெழும நிற்றலும்
ஆர்த்தபல் லமரரு மமர்ப்பச் சூழ்ந்தென
வார்த்தபித் திகைதொறும் வயங்கு சித்திரம்
பார்த்தக ணிமைப்புறுப் பண்பிற் றோன்றுமே. 26

நந்தமை நாடொறு மிருக்கை யாக்குவ
தெந்திவன் சிரமிதித் திருத்து நாமெனச்
சந்திரன் மான்முடித் தவிர்ந்த தும்பொரூஉங்
கொந்தொளிப் பளிக்குப்போ திகையின் கொள்கையே. 27

புவனமுண் டவன்றலை மிதித்த புன்மையின்
அவிர்மதிச் சிரமிதித் தலரி நின்றெனத்
தவளவொண் போதிகைத் தலையி னொன்றுறப்
பவளவா னுத்திரம் பயின்ற பல்லவும். 28

மகம் - யாகம். சீர்த்தி - மிகுபுகழ்: வெண்மைநிறம். ஆழியான் - திருமால். பொரூஉம்=பொருவும் - ஒக்கும். பாவிய - பரம்பியுள்ள. வண்ணம் - நிறம், தன்மை.

26. தம்முடைய புகழைக்கவர்ந்துகொண்டு திருமால் பொருந்த உயர்ந்து நின்ற அளவிலே ஆரவாரம் செய்த தேவர்கள் யாவரும் போர் செய்யுமாறு சூழ்ந்துகொண்டாற்போல, சுவர்கள்தோறும் விளங்கும் சித்திரங்கள் பார்த்த கண்களை இமை கொட்டாதபடி நிறுத்திய தன்மையை ஒத்துத்தோன்றுவன.

கீர்த்தி - புகழ். அரி - விஷ்ணுமூர்த்தி. கெழும - பொருந்த. ஆர்த்த - ஆரவாரம் செய்த. அமர்ப்ப - போர்செய்ய. பித்திகை - சுவர்.

27. ஒளிப்பிழம்பினையுடைய பளிங்கிறற் செய்யப்பட்ட போதிகையின் கொள்கையானது நம்மை நாடோறும் தன் மனத்தில் உதிக்கச்செய்தல் எவன்? ஆகலின், இவனுடைய தலையை மிதித்துக் கொண்டு நாம் இருப்போம் என்று சந்திரன் திருமால் முடியிலே பொருந்தியிருத்தலையும் ஒக்கும்.

இருக்கை - இருத்துதல். எந்து - எவன்? (திசைச் சொல்.) கொந்து ஒளி - கொத்தாகவுள்ள ஒளி.

28. உலகங்களை ஊழிக்காலத்திலே தமது திருவயிற்றிலே அடக்கிய திருமாலின் தலையை மிதித்த கீழான செயலையுடைய சந்திரனுடைய சிரத்தைச் சூரியன் மிதித்துக்கொண்டு நின்றாற்போல வெண்மையான போதிகையின் தலையிலே பொருந்தச் சிவந்த பவளத்தினாலாகிய உத்திரம் விளங்குவனவாம்.

புவனம் உண்டவன் - திருமால். புன்மை - கீழான தன்மை. அலரி - சூரியன். தவளம் - வெண்ணிறம். ஒன்றுற - பொருந்த. பவளவான் உத்திரம்: வான் - சிறந்த.

செக்கர்வா னிறங்கெடத் திகழுங் கேதுவில்
உக்கசீ தளமதி யுண்ண வோருழித்
தொக்குவாய் வைத்தவத் தோற்ற மும்பொரூஉந்
தக்கசெம் மணியினுத் திரத்த யக்கமே. 29

வெய்யவ னிளங்கதிர் வெயிற்பி ழம்புலாய்
ஐயென விசும்பெலா மலங்கிற் றுமென
மையற வொளிர்வயி டூரி யத்தினும்
பையவிர் பலகைமீப் பரவி நின்றவே. 30

உள்ளெழின் மேக்கிருந் துடல்வ ளைத்துறீஇத்
தள்ளரு மதுகையிற் காணுந் தன்மையிற்
கொள்ளவொண் கொடுங்கைகோ மேத கத்தின்மே
னள்ளின புட்பரா கத்தி னுசியே. 31

வாளுமிழ் மண்டபக் குறட்டின் மாடெலாங்
கோளறு கொழும்பொனிற் குயின்ற வார்படி
மூளுற வொன்றன்மே லொன்று முற்றியங்
கியாளிக ணித்திலத் தருகி யைந்தவே. 32

---

29. சிறந்த செம்மணிகள் பதிக்கப்பெற்ற உத்திரம் விளங்குதல் செவ்வானத்தின் நிறம் கெடும்படி திகழும் கேதுவினல் வருந்திய குளிர்ந்த சந்திரனை உண்ண ஓரிடத்துப்பொருந்தி வாயை வைத்த தோற்றத்தையும் ஒத்தது.

செக்கர்வான் - செவ்வானம். சீதளம் - குளிர்ச்சி. ஓர் உழி: உழி - இடம். ஒருழி - ஆராயுமிடத்து எனினுமாம். வாய்வைத்த - கௌவிய. தயக்கம் - விளக்கம்.

30. சூரியனுடைய இளங்கிரணம் பொருந்திய வெயிற்கற்றை உலாவி அழகிதாக ஆகாயமெல்லாம் விளங்கியதென்ன குற்றமற ஒளியைச் செய்யும் வயிடூரிய மணியாலாகிய விரிந்த பலகை மேலே பரவிநின்றன.

வெய்யவன் - சூரியன். இளங்கதிர் - இளமையான கிரணம். பிழம்பு - கற்றை. ஐ என - அழகிதென்று. அலங்கிற்று - அசைந்தது. மைஅற - குற்றமற. பைஅவிர் - விசாலமான. மீ - மேலே.

31. உள்ளேயிருக்கும் அழகை மேலிருந்து உடம்பைவளைத்து நீங்குதற்கரிய வன்மையுடன் பார்க்குந்தன்மைபோல ஒள்ளிய கொடுங்கைகள் கோமேதக மணியின்மேல் புருடராகமணியால் நாசிகள் பொருந்தின.

மேக்கிருந்து - மேலிருந்து. தள்ளரும் - நீங்குதற்கரிய. மதுகை - வலிமை. நள்ளின - பொருந்தியுள்ளன, நடுவேயுள்ளன.

32. ஒளிவீசும் மண்டபக்குறடுகளின் பக்கங்களிலெல்லாம் குற்றமற்ற பசுமையான பொன்னுற் செய்யப்பட்ட நீண்ட படிகள் ஒன்றின்மேல் ஒன்ருக முடிந்த பின்பு யாளிகள் முத்துக்களால் பொருந்தியுள்ளன.

பச்சைமால் காஞ்சியிற் பவள வானிற
மெச்சுநற் றவத்தினன் மேவி நின்றெனப்
பொச்சமி னீனிறம் பொலிந்த தூணெலாஞ்
செச்சையின் வாருறை சேர்க்கப் பட்டன. 33

விண்ணெழுஞ் சூரியன் வெயில்க ரப்பமிக்
கொண்ணிற முகில்பல வுராய்ப்ப ரந்தென
வண்ணம்வெவ் வேறுவாய்ந் தொளிர்வி தானங்கள்
கண்ணொளி கவர்வதோர் காட்சி மிக்கவே. 34

பொன்மழை நவமணி மழைதண் பூமழை
பன்னுமப் புயல்பஃ றாரை கான்றென
மின்னவ மணித்தொடை விளங்கு பொற்றொடை
என்னவும் விதானக்கீ ழலங்கி நான்றவே. 35

வாள் - ஒளி. குறடு - திண்ணைஒட்டு. மாடு - பக்கம். கோள் - குற்றம். கொழும்பொன் - பசும்பொன். குயின்ற - செய்த. நித்திலம் - முத்து.

33. பச்சை நிறத்தையுடைய திருமால், காஞ்சிபுரத்திலே பவளநிறத்தைத் தவத்தினாற் பெற்று விளங்கினாற்போல, பொய்மையில்லாத நீலநிறம் பொருந்திய தூண்களெல்லாம் சிவந்த நீண்ட உறைகளால் மூடப்பட்டுள்ளன.

பச்சைமால் பவளவண்ணம் பெற்றமை: காஞ்சிப்புரா - வீராட்டகாசப் படலம் - 24 - 26 செய். பொச்சம் - குற்றம். செச்சை - சிவப்பு.

34. ஆகாயத்தில் எழும் சூரியனுடைய வெயிலை மறைக்கும் பொருட்டு மிகுதியாக ஒளிபொருந்திய முகில்கள் பல நெருங்கிப் பரவியிருந்தாற்போல நிறங்கள் பல வேறுவகையாகப் பொருந்தி விளங்கும் மேற்கட்டிகள் கண்ணொளியைக் கவர்ந்து கொள்வதாகிய ஒப்பற்ற காட்சிகள் மிகுந்துள்ளன.

கரப்ப - மறைக்க. ஒள் நிற முகில் - ஒள்ளிய நிறத்தையுடைய மேகங்கள். பரந்தென - பரவினாற்போல. வண்ணம் - நிறம். விதானம் - மேற்கட்டி.

35. பொன்மழையும், நவரத்தினமழையும், குளிர்ந்த பூமழையும் அம்மேகங்கள் பலதாரைகளாக வெளிப்படுத்தினாற்போல ஒளியையுடைய நவரத்தின மாலைகளும் பொன்னரிமாலைகளும் மேற்கட்டிகளின்கீழே விளங்கும்படி தொங்கின.

புயல் - மேகம். நாரை - மழைத்துளியின் ஒழுக்கு. கான்றென - வெளிப்படுத்தினாற்போல. நான்ற - தொங்கின.

ஊற்றுபஃ ருரைநின் ஞெளிர வீழ்ந்துமண்
தோற்றியெங் கணுமவை துவன்றி ஞலென
மாற்றரும் பலநிறம் வயங்கு கம்பலம்
வேற்றிட மிலேயென விரிந்த தெங்கணும். 36

உமையுருக் கவின்கவர்ந் தோட முன்னியாங்
கமையம்பார்ப் பனவென வறிந்தங் கார்த்தெனக்
கமுகுதண் கரும்புநீள் கதலி பாங்கெலாம்
இமையவர் வியப்புற யாக்கப் பட்டன. 37

பூரணி யல்குலொப் பாகப் புற்றினு
டாருவ காலென வராவி னங்களே
நேரற வீக்கிய நீர்மை யாமெனத்
தோரண மணிநிரை சுற்று மார்ந்தன. 38

---

36. ஊற்றுகின்ற பல மழைத்தாரைகளும் நிலேபெற்று விளங்க விழுந்து நிலத்திலே பொருந்தித் தோன்றினுற்போல வேறுபடுத்த இயலாத பல நிறங்களோடு விளங்கும் கம்பலங்கள் வேறு இடமில்லேயென்று சொல்லும்படி எங்கணும் விரிந்துள்ளன.

நின்று ஒளிர - நிலேபெற்று விளங்க. துவன்றினுலென்ன - நெருங்கினுற் போல.

37. உமாதேவியாருடைய உருவத்தின் அழகைப் பறித்துக்கொண்டு ஒடுவதற்கு நினேந்து அங்கே சமயம் பார்த்துக்கொண்டு இருத்தலே அறிந்து கட்டி வைத்தாற் போலக் கமுகு கரும்பு நீண்டவாழை முதலியவைகள் பக்கங்களில் எல்லாம் தேவர்கள் வியக்கும்வண்ணம் கட்டப்பட்டுள்ளன.

உருக்கவின் - வடிவழகு. முன்னியாங்கு - நினேந்தாற்போல. ஆர்த்தென - பிணித்தாற்போன்று. கதலி - வாழை. யாத்தல் - கட்டுதல்.

38. பூரணியாகிய உமாதேவியின் அல்குலே ஒக்கும்படி புற்றினுள்ளே பொருந்திய இடமென்று பாம்புகளே ஒப்பில்லே எனக்கொண்டு கட்டிவைத்தாற் போன்று தோரணங்களாகிய அழகிய வரிசைகள் சுற்றிலும் கட்டப்பட்டுள்ளன.

பூரணி - உமாதேவியார். கால் - இடம்: ''பாம்பறியும் பாம்பின கால்'' என்ருற்போல. நேர்அற - ஒப்பிலதாம்படி. வீக்கிய - கட்டப்பட்ட.

பல்கனிக் கோவையும் பசும்பொற் ரூர்களும்
புல்கொளி மணிகளும் பூவின் ரெங்கலும்
நல்கெழி லாடியும் பிறவு நான்றன
வல்கெழிற் கொடுங்கையி னவனி தைவர. 39

சிவபுர வரைப்புமித் திவளு மண்டபக்
குவமைகொ லோவென வுற்றங் கின்மையின்
தவவெழு மகிழ்வினுற் றலேது ளக்கியாங்
கவிர்மணிக் கொடிபல நிவந்தங் காடுவ. 40

மரகத வல்லியின் வயங்கு மாணுருப்
பரவொளி பெறத்தவம் பயிறல் போன்றன
அரதன விளக்கமு மான நெய்பொழி
விரைகமழ் விளக்கமும் விராயுண் ணின்றன. 41

---

39. பலவகைப்பட்ட பழங்களின் குலேகளும், பசிய பொன்மாலேகளும், ஒளியையுடைய மணிகளும், பூமாலேகளும், அழகிய கண்ணுடிகளும், மற்றுள்ளனவும் அழகுதங்கிய கொடுங்கைகளிலே நிலத்தில் தோயும்படி தொங்கின.

கனிக்கோவை - பழக்குலே. பொற்ரூர் - பொன்னரிமாலே. தொங்கல் - மாலே. நான்றன - தொங்கின. அல்கு எழில் - அழகு தங்கப்பெற்ற. அவனி - பூமி. தைவர - தடவ. தோய.

40. சிவபுரமாகிய இடமும் இங்கே விளங்கும் மண்டபத்துக்கு உவமை யாமோ என்று அங்கே சென்று உவமையின்மையைக் கண்டு மிகுதியாக உண்டாகும் மகிழ்ச்சியால் தலேயசைத்தாற்போல விளங்கும் அழகிய கொடிகள் பல உயர்ந்து அங்கே ஆடுவனவாம்.

வரைப்பு - இடம். திவளும் - ஒளிவிடும். மண்டபக்கு - மண்டபத்துக்கு; அத்துச் சாரியை கெட்டது; "மாடக்குச் சித்திரமும்" என்ருற்போல. தவ - மிகுதியாக. துளக்கியாங்கு - அசைத்தாற்போல. நிவந்து - உயர்ந்து.

41. இரத்தின தீபங்களும் பசுவின் நெய் ஊற்றி வாசனே வீசும் விளக்குகளும் கலந்து உள்ளே நின்ற காட்சியானது மரகதவல்லியைப்போல விளங்கும் மாட்சிமைப்பட்ட உருவையும் மேலான ஒளியையும் பெறும் பொருட்டுத் தவஞ் செய்வனபோன்று விளங்கியது.

மாண் உரு - மாட்சிமைப்பட்ட வடிவம். அரதன விளக்கம் - இரத்தின தீபம். ஆன நெய் - பசுவின் நெய். விராய் - கலந்து.

தம்பிரா னிருந்தரு டவிசு நள்ளுற
உம்பரார் விழைய நன் றோங்கத் திங்களிற்
பம்புதா ரகையெனப் பாங்க ரெங்கணும்
எம்பிரா னருளினர்க் கிருக்கை வாய்ந்தவே. 42

வயங்குபொற் குண்டமு மணிச்செய் வேதியுந்
தயங்கொளிக் கரகமொண் டசும்பு பாலிகை
அயங்கொளி யகலுமற் றனைத்து மாவயிற்
பயங்கொள ஞெமிர்ந்தன பதம்வைப் பின்றியே. 43

கவரிகண் ணடிகுடை கால்செய் வட்டமும்
அவிர்கலப் பேழையு மமுதம் பல்வகை
தவமலி செப்புஞ்சாந் தமைத்த தட்டமும்
இவர்தரப் பாவைக ளிடந்தொ றேந்தின. 44

---

42. சிவபெருமான் வீற்றிருந்தருளும் பீடம் நடுவிலே பொருந்தத் தேவர்கள் விரும்பும்படி நன்கு உயர, சந்திரனைச்சுற்றி நிறைந்துள்ள நட்சத்திரங்களைப் போல, பக்கமுழுவதும் எமது சிவபெருமான் அருள்பெற்றோருடைய இருக்கைகள் பொருந்தின.

தம்பிரான் - தமக்குத்தாமே பிரானகவுள்ளவர். தவிசு - ஆசனம். நள்உற - நடுவிலே பொருந்த. தாரகை - நட்சத்திரங்கள். அருளினர்க்கு - அருளப்பட்டோருக்கு.

43. பாதங்களைவைத்தற்கு இடமில்லாமல் விளங்கும் அழகிய யாககுண்டங்களும், இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற வேதிகைகளும், ஒளிவிளங்கும் குடங்களும், ஒள்ளிய கலசங்களும் பாலிகைகளும் ஒளிசெய்யும் அகல்களும் மற்றுள்ளன எல்லாமும் அவ்விடத்திலே பிரயோசனப்படும்படி நெருங்கியுள்ளன.

குண்டம் - வேள்விக்குண்டம். வேதி - திண்ணை, மேடை. கரகம் - கடம். தசும்பு - கலசம். பாலிகை - முளைப்பாலிகைகள். ஆவயின் - அவ்விடத்து. பயம்கொள - பிரயோசனமாம்படி. ஞெமிர்ந்தன - நெருங்கின. பதம் வைப்பு இன்றி - கால்வைத்தற்கும் இடமில்லாமல்.

44. சாமரம், கண்ணாடி, குடை, காற்றையுண்டாக்கும் ஆலவட்டம், விளங்கும் ஆபரணப்பெட்டி, அமுதங்கள், பலவகைப்பட்ட மிகுதியானசெப்புகள், சந்தனம் அமைந்த தட்டுக்கள், முதலியவைகள் பொருந்துமாறு இடங்கள் தோறும் பாவைகள் ஏந்திக்கொண்டிருந்தன.

கவரி - சாமரம். கால் செய் வட்டம் - காற்றை உண்டாக்கும் வட்ட விசிறிகள். கலப்பேழை - அணிகலப்பெட்டி. தவமலி - மிகநிறைந்த. சாந்து - குங்குமச் சாந்து, சந்தனம். இவர்தர - நகர்ந்துசெல்ல; ஊர்ந்து செல்லும்படி.

வண்ணவொண் மணியொடு தகர்த்த மாசையஞ்
சுண்ணமு நறுவிரைத் துகளும் வண்டுணக்
கண்ணகு மலரும்வெண் கடுகுஞ் சாலியுந்
தண்ணிய வறுகுமுட் டதைந்த வென்பவே. 45

மண்டப மருங்கெலா மலர்ப்பொற் காவணம்
அண்டரும் வியத்தக வமைந்த மற்றயற்
புண்டரி கத்தடம் பொலிந்த வாங்கயற்
கொண்டன குளிர்பொழில் கோல மல்கவே. 46

இறையவ ளுக்கிய வெழில்கொண் மண்டப
நிறைவினை யாவரே நிகழ்த்து வாரினி
உறைபயில் வீணைகை யுறுவ ரன்புகுந்
தறையமற் றவரவ ரடுத்த தோதுவாம். 47

வேறு

ஏகியநா ரதமுனிவ னெம்பிரான் போதிவனத் திமைய மீன்ற
பாகியல்சொன் மரகதவல் லியைமணப்பத் திருவுள்ளம் பற்றி னூரற்
போகுகவங் கெவருமெனப் புகன்றுபுகன் றனன்மீண்டான் புகலக் கேட்டோர்
தேகமுறு பயன்படைத்தா மெனமகிழ்ச்சி தலைசிறப்பச் சேற லுற்றார். 48

---

45. அழகிய ஒளிபொருந்திய முத்துக்களோடு பொடித்த பொற்சுண்ணமும், நல்ல மணம்பொருந்திய பொடிகளும், வண்டுகள் உண்ணும்படி தேன் விளங்கும் மலர்களும், வெண்கடுகும், செந்நெல்லும், குளிர்ந்த அறுகம்புல்லும் உள்ளே நெருங்கியிருந்தன.

வண்ணம் - அழகு. தகர்த்த - பொடிபடுத்த. மாசை - பொன். விரைத் துகள் - வாசனைப்பொடி. கள் நகும் - தேன் விளங்கும். வெண்கடுகு - சிறுவெண் கடுகு. சாலி - செந்நெல். ததைந்த - செறிந்துள்ளன.

46. மண்டபத்தின் பக்கங்களிலெல்லாம் அழகிய பூம்பந்தர்கள் தேவரும் வியக்கும்படி அமைந்துள்ளன. அவைகளின் அயலிடங்களில் தாமரைத் தடாகங் கள் விளங்கின. அதனயலில் அழகு நிறையும்படி குளிர்ந்த சோலைகளமைந்தன.

பொற்காவணம் - அழகிய பந்தர். அண்டர் - தேவர். புண்டரிகத்தடம் - தாமரைத்தடாகம். பொழில் - சோலை. கோலம் மல்க - அழகு நிறைய.

47. சிவபெருமான் நிருமித்த அழகிய மண்டபத்தின் நிறைவை யாவரே சொல்லவல்லார்? இனிமேல், நாரதமுனிவர் சென்று திருக்கலியாணத்தைச் சொல்ல யாவரும் திருமணங் காணவந்த செய்தியைச் சொல்லுவோம்.

48. இறைவருடைய திருமணச் செய்தியைத் தெரிவிக்கும் பொருட்டுச் சென்ற நாரதமுனிவர் 'சிவபெருமான் அரசவனத்திலே இமயமலையரையன் புதல்வியாகிய வெல்லப் பாகினையொத்த இனிய மொழியையுடைய மரகதவல்லி யைத் திருமணம் செய்துகொள்ளத் திருவுளங் கொண்டருளினர். எல்லோரும்

பிரமனெரு சிரமரிந்த வயிரவர்பே ணியதக்கன் யாகத் தையர்
வரனழித்த வயவீர னரிகரபுத் திரன்வளர்கூர் மாண்டர் கால
எரியடுத்த வுருத்திரனு மாடகே சனுமெண்மர் மூவரென்னும்
உரன்மிகுத்த வுருத்திரரு முவப்பில்கணம் புடைசூழ வுவந்து சென்ருர். 49

மருக்கிளர்தண் டுளவணிந்த மணிமார்பன் மலரவன்மா திரத்தோ ரெண்மர்
அருக்கருருத் திரர்வசுக்கண் மருத்துவரென் றறைதருமுப் பத்து மூவர்
உருக்கிளர்விஞ் சையர்கருடர் கந்தருவ ருரகர்முத லும்பர் யாருந்
தருக்கறுமா ருயிரத்தெண் மருமனைவி மாருடங்கு சாரச் சென்ருர். 50

பரிசனமும் வரிசைகளு முடன்கொண்டு வரைபலவும் பாங்கர்ச் சூழ
உரியமனை மாதெனுமே னையுந்தானும் வரையரைய னுவந்து புக்கான்
திரைதவழேழ் கடல்கங்கை யாதிமணித் தீர்த்தமெலா ந் திரண்டு சேர்ந்த
வரைசெய்பல காலங்கண் மாதிரமெண் கயம்பிறவு மருவிப் போந்த. 51

இறைவர் திருமணத்தைக் காணும்பொருட்டுப் போதிவனத்துக்குச் செல்வீராக' என்று சொல்லி மீண்டார். நாரதமுனிவர் கூறிய கலியாணச் செய்தியைக் கேட்டோர் யாவரும் உடம்பெடுத்ததன் பயனைப் பெற்ருேம் என்று மகிழ்ச்சி மிகச் செல்வாராயினர்.

போதிவனம் - அரசவனம். பாகு இயல் - வெல்லப்பாகின் தன்மையை யுடைய. தலை சிறப்ப - மேம்பட.

49. பிரமதேவருடைய ஒரு சிரத்தைக் கிள்ளிய வயிரவக் கடவுளும், தக்கன் யாகத்தை அழித்த வீரபத்திரக்கடவுளும், அரிகர புத்திரராகிய மகா சாத்தாவும், கூர்மாண்டரும், காலாக்கினி யுருத்திரரும், ஆடகேசுரரும், எண்மரும் மூவரும் என்னும் வலிமை மிக்க உருத்திரர்களும் அளவில்லாத கணங்கள் புடை சூழ மகிழ்ச்சியுடன் சென்றனர்.

வரன் - மேன்மை. யாகத்து ஐயர் - யாகத்தலைவர். வய வீரன் - வெற்றி பொருந்திய வீரபத்திரர். அரிகர புத்திரன் - ஐயனுர். உரன் - வலிமை.

50. திருத்துழாய் மாலையை அணிந்த திருமால், பிரமன், திக்குப்பாலகர் எண்மர், அருக்கர் பன்னிருவர், உருத்திரர் பதினெருவர், வசுக்கள் எண்மர், மருத்துவர் இருவர் என்னும் முப்பத்து மூவரும், அழகிய வித்தியாதரர் கருடர் கந்தருவர் உரகர் முதலிய தேவர்கள் யாவரும் செருக்ககன்ற நாற்பத்தெண்ணுயிரம் முனிவர்களும் மனைவிமார் உடன்வரச் சென்றனர்.

மரு - வாசனை. துளவு - துளசி. மாதிரத்தோர் - திக்குப்பாலகர். அருக்கர் - சூரியர். ஆருயிரத்தெண்மர் - நாற்பத்தெண்ணுயிரவர். உடங்குசார - உடன்வர.

51. பரிசனங்களும், வரிசைகளை எடுத்துக்கொண்டு மலைகளெல்லாம் பக்கத்தில் சூழ்ந்துவர, மனைவியாகிய மேனையும் இமயமலையரசனும் மகிழ்வோடு வந்து சேர்ந்தனர். ஏழ்கடலரசர்களும் கங்கை முதலிய தீர்த்த மங்கையர்களும் திரண்டு சேர்ந்தனர். காலங்களும் திக்கயங்களும் பிறவும் சேர்ந்துவந்தன.

கடகரியும் வயப்பரியுங் கதிர்மணிக்கூ விரககொடிஞ்சிக் காமர் தேரு
மிடல்படைத்த தானைகளும் பரிசனமும் புடைநெருங்க வேந்தர் போந்தார்
அடல்படைத்த நெடுஞ்சூலத் தடிகளைப்போந் தவர்யாரு மண்மித் தாழ்ந்தார்
நடலையறுத் திடுங்கருணை நறைமிதப்ப வாய்மடுத்து நலமே தக்கார். 52

வேறு

உருத்திரர்முன் னுகவுறு மானுடர்பின் னுகத்
தருக்கொடுகு ழீஇயினர்க டம்முளுயர் வுற்றுத்
திருக்குலவி னர்களிரு சேவடிகள் சேப்ப
உருக்கிளர்மு டித்தலைக டிட்டினரு வந்தார். 53

வண்டொடு நறைத்தமலர் மாலைக டொடுப்பார்
பண்டிகழ விசர்புகழ் பாடினர் களிப்பார்
கண்டுளி துளிப்பவுள நெக்கருள் கலப்பார்
புண்டர நுதற்குலவு தொண்டரிவ ரோர்சார். 54

மேனை - இமவான் மனைவி. வரையரையன் - இமவான். மாதிரம் - திக்கு. எண்கயம் - எட்டு யானைகள்.

52. யானை, குதிரை, தேர், காலாட்கள் முதலிய சதுரங்கசேனைகளும் பரிசனங்களும் பக்கங்களிலே நெருங்க அரசர்கள் வந்தனர். வலிமைமிக்க நீண்ட சூலத்தையுடைய சிவபெருமானை வந்தோர்யாரும் நிலமிசை வீழ்ந்துவணங்கினர். பொய்ம்மைதீர்ந்த கருணையாகிய தேனை மிகவும் உண்டு நலமிகுந்தனர்.

கடகரி - மதயானை. வயப்பரி - வெற்றியையுடைய குதிரை. கூவிரம் - கூம்பு. கொடிஞ்சி - தாமரைமலர் வடிவாகச் செய்து தேர்த்தட்டின்முன் நடுவது. மிடல் - வலிமை. தானை - சேனை. சூலத்து அடிகள் - சிவபெருமான். போந்தவர் - வந்தவர்கள். நடலை - பொய். கருணை நறை - அருட்டேன். மிதப்ப - மிகுதியாக. வாய்மடுத்து - உண்டு.

53. உருத்திரர்கள் முதலாகவும், பொருந்தும் மானிடர்கள் பின்னுகவும் செருக்கோடு கூடினவர்களாய்த் தங்களுக்குள்ளே உயர்ந்துவிளங்கி இரண்டு திருவடிகளும் சிவக்கும்படி தம்முடைய சிரத்தால் வணங்கினர்கள்.

முன்னுக - முற்பட. பின்னுக - இறுதியாகவர. தருக்கு - செருக்கு. திருக்குலவினர்கள் - உயர்ந்து விளங்கினவராய்: முற்றெச்சம். சேப்ப - சிவக்க. திட்டினர் - பதித்தனர்.

54. வண்டுகளோடு தேன்பொருந்திய மலர்மாலைகளைத் தொடுப்பார்கள். பண்கள் பொருந்தச் சிவபிரானுடைய புகழ்களைப்பாடிக் களிப்பார்கள். கண்களில் நீர்த்துளிகள் துளிக்கும்படி உள்ளம் நெக்கு நெக்குருக அருளிலே பொருந்துவர். நீறுபூசிய நெற்றியினையுடைய அடியார்களாகிய இவர்கள் ஒரு பக்கத்திலே விளங்கினர்.

ஐவகை நறும்புகைக ளாலய நிறைத்துச்
செய்வகைய தொண்டுக டிருத்தக வியற்றிக்
கைவகையி னஞ்சலிமுன் காட்டிமுடி கோட்டிப்
பொய்வகை கடிந்துவரு புண்ணியர்க ளோர்சார். 55

எந்தையடி யார்களினி தேபுகுக விங்கு
மைந்தரொடு மங்கையர்கண் மற்றுமுற வாமோ
நுந்திரு வடித்துணைய லாலென நொடித்துச்
சிந்தைமகி ழப்பணிகள் செய்குநர்க ளோர்சார். 56

ஏதலற வன்பினிரு போதுமிசை மல்க
வேதநனி யோதியழல் வேட்டெளிதி னுங்குப்
போதுமிமை யார்க்கவிகள் பொற்பவினி தூட்டிக்
காதர மிரித்திடு கருத்தினர்க ளோர்சார். 57

நறைத்த - தேன்பொருந்திய, வாசனையுடைய எனினுமாம்: நறை - தேன், வாசனை. பண் திகழ - இசைபொருந்த. புண்டரம் - திருநீறு.

55. ஐந்து வகையாகவுள்ள நல்ல தூபங்களையிட்டு ஆலயத்தை நிறையப் பண்ணி, செய்யத்தக்க பணிவிடைகளையெல்லாம் நன்ருகச்செய்து, கைகளைக் குவித்துக் கும்பிட்டு நின்று, தலையைத்தாழ்த்தி வணங்கி, பொய்ம்மை நெறியைச் சாராத புண்ணியமுடையோர் ஒருபக்கமாய் உள்ளனர்.

ஐவகை நறும்புகை: "நேர்கட்டி செந்தேன் நிரியாசம் கற்பூரம், ஆரம் அகிலுறுப் போ ராறு" எனக் காட்டுவர் நச்சினுர்க்கினியர் (சீவக - 534). நிரியாசம் - பிசின். அது குங்குலிய முதலியன. "நேர்கட்டி செந்தேன் நிரியாசம் பச்சிலை, ஆரம் அகிலுறுப் போ டாறு" என்பர் அடியார்க்கு நல்லார் (சிலப் - இந்திர-14). 'கற்பூரம், பச்சிலை' நீக்கி ஐந்தெனக்கொள்க. கைவகையின் அஞ்சலி: 'கைகாள் கூப்பித்தொழீர்'. அஞ்சலி முன்காட்டி முடிகோட்டி - கைகளிரண்டு, தலையொன்று ஆக மூன்றுறுப்புக்கள்: இது திரியாங்க நமஸ்காரம்.

56. எம்பிரானுடைய அடியார் இனிதாகச் செல்லுக. இங்கே மைந்தர்களோடு மனைவி முதலியோர் உறவுகள் உறவு ஆகுமோ? உம்முடைய இரண்டு திருவடிகளே யல்லாமல் என்று சொல்லி ஒருபக்கத்திலே மனமகிழ்ச்சியுடன் தொண்டுசெய்வோர் உள்ளனர்.

மைந்தர் - பிள்ளைகள். மங்கையர் - மனைவியர். நொடித்து - சொல்லி. 'உற்ருர் ஆருளரோ உயிர்கொண்டுபோம்பொழுது, குற்ரு லத்துறை கூத்தனல் லால்நமக்கு உற்ருர் ஆருளரோ' (திரு அங்கமாலை) பணிகள் - தொண்டுகள்.

57. பழிப்பில்லா அன்பினுல் இரண்டு காலங்களிலும் இசைநிறைய வேதருக்குகளை நன்ருகச் சொல்லி வேள்வியழலை வளர்த்து எளிதாக அவ்விடத்து வந்துசேரும் தேவர்களுக்கு அவிசுகளை அழகாக இனிமையின் உண்பித்து அச்சத்தைக் கெடுக்கும் மனத்தையுடையவர்கள் ஒருபுறத்திலுள்ளனர்.

கன்னிமணி பொன்னறுவை கம்பலம் விழுப்பூண்
நன்னர்நில மோடிரத நாகநடை வாமான்
துன்னுசுரை யான்களிவை தோயமொடு நல்கி
முன்னவ னடிக்கணுள முற்றுநர்க ளோர்சார். 58

பூவிணர் நறும்பொழில் புகுந்துவள நோக்கி
ஆவண மனைத்தினு மமன்றபொரு ணோக்கிக்
காவண நிரந்தகடி வீதிபல நோக்கித்
தூவண வுளத்துவகை துள்ளுநர்க ளோர்சார். 59

வாவிகளி னோடைகளின் வார்நதியி னொண்மை
மேவுமத லைக்குலம் விடுத்தெதிர் கடாவிப்
பூவினொடு சாந்துபொலந் தார்முதல வீசி
ஆவியனை யாரொடு மமர்க்குநர்க ளோர்சார். 60

ஏதல் = ஏசல் - பழிப்பு. மல்க - நிறைய. அழல்வேட்டு - அழலையுடைய வேள்விகளைச் செய்து. காதரம் - அச்சம், துன்பம். இரித்திடும் - கெடுக்கும்.

58. கன்னிகைகளையும், இரத்தினம், பொன், ஆடை, இரத்தினக்கம்பளம், சிறந்த அணிகலன்கள், நன்செய்நிலம், இரதம், யானை, குதிரை, பசுக்கள்முதலிய பொருள்களையுமெல்லாம் தாரைவார்த்துத் தத்தம்செய்து கொடுத்து முழுமுதற் கடவுளின் திருவடிகளை மனத்திற்கொண்டு தியானித்திருப்போர் ஒரு புறத்தில் உள்ளனர்.

மணி - இரத்தினக்கற்கள். அறுவை - ஆடை. விழுப்பூண் - மேம்பட்ட ஆபரணங்கள். நன்னர் நிலம் - சிறந்த நிலம் எனவே விளைபுலம் என்றபடி. நாகம் - யானை. வாமான் - குதிரை. துன்னு - நெருங்கிய. சுரை ஆன் - முலைகளையுடைய பசுக்கள். தோயம் - நீர். முன்னவன் - முழுமுதற்கடவுள். உளம் முற்றுநர் - உள்ளம் முதிர்ந்தோர்.

59. அழகிய பூங்கொத்துக்களையுடைய சோலைகளிலே புகுந்து அங்குள்ள வளப்பங்களையெல்லாம் பார்த்தும் கடைவீதிகளிலே நெருங்கியுள்ள பண்டங்களை யெல்லாம் பார்த்தும், பந்தர்கள் வரிசையாகவுள்ள பலவீதிகளையும் பார்த்தும், தூய உள்ளத்திலே மகிழ்ச்சி பூப்பவர்கள் ஒருபக்கத்திலே உள்ளனர்.

இணர் - பூங்கொத்து. ஆவணம் - கடைத்தெரு. அமன்ற - நெருங்கியுள்ள. காவணம் - பந்தர். கடிவீதி - காவலோடு கூடிய தெருக்கள். தூவணம் - பரிசுத்தம்.

60. வாவிகளிலும் ஓடைகளிலும் நீண்ட நதிகளிலும் ஒள்ளிய மரக்கலங்களை விடுத்து எதிரே செலுத்திப் பூ, சந்தனம், அழகிய மாலைகள் முதலியவற்றை வீசியெறிந்து உயிர்போன்ற மகளிரோடு நெருங்கிச் செல்லுவோர் ஒருபுறத் துள்ளார்.

புறநக ரடுத்துமலர் போதுபல கொய்து
பறவைக ளெழுப்புமிசை பண்பொடு நுகர்ந்து
நறவினை வடித்தன நரப்பிசை யெழுப்பி
உறவினெடு மாடுமொளிர் மங்கையர்க ளோர்சார். 61

மும்மையுல கத்தவரு முந்தையறி யாத
செம்மைய புலன்கள்செறி யைம்பொறியி னூர்ந்து
விம்மிதம் விளக்குமொரு வேறுலகி தென்னத்
தம்மையறி யாதன மகிழ்ச்சிக டழைத்தார். 62

வேறுமுள தோவிதனின் வீட்டினை யடைந்து
பேறுபெறு மின்பநல மென்றுபெரி தோர்ந்தோர்
கூறவரை யின்புதுமை கும்பிடவ ணைந்தோர்க்
கூறுசுவை யின்பெருமை யாவருரை செய்வார். 63

மதலை - மரக்கலம். கடாவி - செலுத்தி. பொலம் - அழகு. ஆவி அனையார் - உயிர்போன்றவர். அமர்க்குநர் - நெருங்கிச்செல்வோர்.

61. புறநகரைச் சார்ந்து பல மலர்களையும் போதுகளையும் பறித்து, பறவைகள் எழுப்புகின்ற இசைகளை நன்ருக அநுபவித்து, தேனை ஒழுகவிட்டாற் போன்ற நரம்புக்கருவிகளின் இசைகளை எழுப்பி, உறவோடு ஆடுகின்ற விளங்கும் மங்கையர் ஒருபுறத்திலே உள்ளனர்.

புறநகர் - நகர்ப்புறம். போது - மலரும் பருவத்து அரும்புகள். நறவு - தேன். வடித்தன - ஒழுக்கிறைப்போன்ற.

62. சுவர்க்க மத்திய பாதலம் என்னும் மூன்றுலகத்தோரும் முற்பட்டு அறியாத செம்மையான புலன்கள் நெருங்கிய ஐந்து பொறிகளானும் அநுபவித்து ஆச்சரியத்தை விளைவிக்கும் ஒப்பற்ற வேருகிய உலகம் இது என்று சொல்லும் படியாகத் தம்மையும் அறியாதபடி உள்ளத்தில் மகிழ்ச்சி மிக்கோரானர்.

மும்மை - மூன்று. முந்தை - முற்பட; முன் ஒருகாலத்தும். ஆர்ந்து - நுகர்ந்து. விம்மிதம் - ஆச்சரியம்.

63. முத்தியுலகத்தினையடைந்து வீட்டின்பத்தைப் பெறும்பேறு இதனை விட வேருகவுள்ளதோ என்று பெரிதும் ஆராய்ந்துணர்ந்தோர் சொல்ல, கலியாணமாகிய மங்கலவிழாவைத் தரிசித்தற்பொருட்டு வந்தடைந்தவர்கட்குரிய இன்பப்பெருமையை யாவரே எடுத்துச் சொல்லுவார்.

ஓர்ந்தோர் - ஆராய்ந்துணர்ந்தோர். வரைவு - கலியாணம். புதுமை - மங்கலம்.

வரம்பினுற லின்றிவள ரின்பமலி வெய்த
வரம்புபடு தீவினை யனுக்கியனை வோரும்
பரம்பொருளை நோற்றவொரு பார்ப்பதியை மாண
நிரம்பவணி யக்கருதி நேர்தொழுது நின்ருர். 64

நின்றமை யறிந்திவரி னீடணி யெமக்கிங்
கொன்றுவன வல்லவெண வும்பர்தொழு பெம்மான்
தன்றுணைவி யோடுமெழில் சார்தர நினைந்தான்
மன்றலழ கெய்தியன மன்னிருவர் மாட்டும். 65

ஆரணனு நாரணனு மாய்ந்துமறி யாத
பூரணர்தம் மாதொடணி பொற்பளவி னில்லாச்
சீரணிவ தேனுமவர் சேவடிகள் போற்றித்
தாரணியி னேன்றவகை சாற்றுதல்செய் வாமால். 66

---

64. அளவில்லாமல் வளர்கின்ற இன்பம் நிறைய, துன்பத்தைச் செய்யும் தீவினைகளைப் போக்கி எல்லோரும் பரம்பொருளைக் குறித்துத் தவஞ் செய்த ஒப்பற்ற பார்வதிதேவியை மாட்சிமைப்பட மிகுதியும் அலங்காரம் செய்யநினைந்து நேரே வணங்கி நின்றனர்.

வரம்பு - எல்லை. அரம்பு - துன்பம். அனுக்கி - கெடுத்து. நோற்ற - நோன்பியற்றிய; தவஞ்செய்த. மாண - மாட்சிமைப்பட. அணிய - அலங்காரம் செய்ய.

65. அனைவரும் அலங்காரம் செய்யும் பொருட்டு நேரே நின்ற செய்தியை அறிந்து இவர்கள் செய்யும் பேரலங்காரம் எமக்குப் பொருந்துவனவல்ல என்று தேவர்களால் வணங்கப்படும் சிவபெருமான் தன் மனைவியுடன் அழகு பொருந்து மாறு திருவுளங்கொண்டார். நிலைபெற்ற அவ்விருவரிடத்தும் கலியாணக் கோலங்கள் வந்து பொருந்தின.

நீடு அணி - மிக்க அலங்காரம். ஒன்றுவன - பொருந்துவன. மன்றல் அழகு - கலியாணக்கோலம்.

66. பிரமதேவனும் விஷ்ணுமூர்த்தியும் ஆராய்ந்து அறியமுடியாத பூரணப் பொருளாகிய சிவபெருமான் தம்முடைய சத்தியோடு கொண்ட கலியாண அழகு அளவில்லாததாயினும் அவருடைய திருவடிகளை வணங்கி உலகிலே இயன்ற வரை சொல்லுவோம்.

ஆரணன் - பிரமதேவர். பூரணர் - சிவபெருமான். தம்மாது - சிவசத்தி யாகிய பார்வதி. அளவின் நில்லாச் சீர் - அளவிட்டுச் சொல்லமுடியாத சிறப்பு. தாரணி - பூமி. ஏன்றவகை - இயன்றபடி.

வேறு

மரகத வல்லி தன்னை வதுவைசெய் கோல நோக்கிப்
பரவுளப் பொருமை பொங்கப் பாய்புனற் கங்கை மாது
விரசின ருளைய மண்மேன் மேவலுஞ் செய்யு மென்னுப்
புரவுற மறைத்தா லென்னப் பொலிந்தது மகுடஞ் சென்னி. 67

வெண்மதி யணிந்து காத்த வித்தகன் கருணை நோக்கி
மண்மதித் திறைஞ்ச வேனைக் கோள்களும் வழிபா டாற்றி
ஒண்மையி னுருவம் வெவ்வே றுற்றிவர்ந் துடங்கு வைகும்
வண்மையே நிகர்க்கு மொன்பான் மணிகளு மிமைக்கு மோலி. 68

வழங்குபல் கோளு நாளு மாய்தொறு முலகி னுய்ப்ப
ஒழுங்கிய கோளு நாளு மொரோவொன் றற் கனந்த மாகச்
செழுங்கதி ரெறிப்பச் சேமஞ் செறித்துவைத் ததும்போன் றன்றே
தழங்கிசை மௌலி மாட்டுத் தயங்குபன் மணியி னீட்டம். 69

---

67. மரகதவல்லியம்மையார் திருக்கலியாணம் செய்யும் கோலத்தைப் பார்த்து மனத்திலே பொருமை மிகப் புனல்வடிவாகிய கங்காதேவி வந்தோர்கள் வருந்துமாறு நிலவுலகத்தினும் வந்து பொருந்துவாள் என்று பாதுகாத்தற் பொருட்டு மறைத்தாற்போலச் சிரத்திலே கிரீடம் விளங்கியது.

வதுவை - கலியாணம். பொங்க - மிக. விரசினர் - வந்திருந்தோர். உளைய - வருந்த. மேவலும் செய்யும் - பொருந்தும். புரவு = புரத்தல் - பாதுகாத்தல். சென்னியில் மகுடம் பொலிந்தது.

68. வெண்மையான பிறைச்சந்திரனை யணிந்து அதனை அழியாதபடி பாதுகாத்தருளிய சிவபெருமானது கருணையைப்பார்த்து உலகம்மதித்து வணங்க ஏனைய கிரகங்களும் வழிபட்டு விளக்கமாக வடிவம் வேறுவேருகப் பொருந்தி ஊர்ந்து ஒருசேரத் தங்கியுள்ள வளப்பத்தை ஒக்கும், கிரீடத்திலே பிரகாசிக்கும் நவரத்தினங்கள்.

வித்தகன் - சிவபெருமான். மண் - மண்ணுலகத்திலுள்ளோர்: ஆகுபெயர். ஏனைக்கோள்களும் - சந்திரனை யொழிந்த மற்றைக் கிரகங்களும். உடங்கு - ஒருசேர. மோலி - கிரீடம். ஒன்பான் மணிகள் - நவரத்தினங்கள்.

69. இயங்குகின்ற பல கோள்களும் நாண்மீன்களும் அழியுந்தோறும் உலகிலே செலுத்திய கிரகங்களும் நாண்மீன்களும் ஒவ்வொன்று அளவில்லாதன வாகச் செழுமையான கிரணங்களை வீசும்படி பாதுகாப்பாக வைக்கப்பட்டதும் போன்றது; சிவபெருமானுடைய கிரீடத்திலே விளங்கும் பல இரத்தினங்களின் கூட்டம்.

வழங்கு - இயங்கும். கோள் - கிரகம். நாள் - நாண்மீன்கள். மாய்தோறும் - அழியுந்தோறும். உய்ப்ப - உய்க்கப்பட்ட. அனந்தம் - அளவில. சேமம் - பாதுகாவல். மௌலி - கிரீடம். ஈட்டம் - கூட்டம்.

சேணுறக் கதிர்கால் விசுஞ் செம்பொனின் மோலி சென்னி
மாணுறக் கவிப்ப தோர்ந்து வதுவைநற் கோலங் காண்பான்
வேணியின் மிளிர்ந்த திங்கள் வெய்தெனப் பெயர்ந்த தென்ன
நீணுதல் செய்த நெற்றி யொளிர்ந்தது நீற்றுக் கோலம். 70

பாற்கடற் பரப்பிற் செங்கேழ்ப் பரிதிவந் தெழுந்த தென்ன
நூற்கடற் புலவர் போற்று நுண்பொடி திமிர்ந்த நெற்றி
ஏற்குமொள் ளெரியி னேக்க மிடைமறைத் திட்ட தேபோன்
மேற்கிளர் கிரணப் பட்டம் விளங்கிய திருள்கால் சீத்து. 71

மாரனைப் பொடித்த தீங்கு மறைவதே கரும மென்ன
வாரமுன் மறைக்கப்பட்ட வழல்விழி யடங்கா தாங்கு
நேருறப் பாங்கர்த் தோன்றி நிறைகுளி ருமிழ்வ தொக்குஞ்
சீரிய பட்டப் பாங்கர்த் திருத்திய திலக மாட்சி. 72

---

70. தூரத்திலே ஒளிவீசும் சிவந்த பொன்னாலாகிய கிரீடத்தைச் சிரத்தின் மேலே மாட்சிமைபெறக் கவிப்பதை நினைந்து கலியாணக் கோலத்தைக் காணும் பொருட்டுச் சடாபாரத்திலே விளங்கிய பிறைச்சந்திரன் விரைந்து அவ்விடத்தை விட்டுப் பெயர்ந்து வந்தாற்போல நெற்றியிலே விளங்கும் திருநீற்றின் அழகு விளங்கியது.

சேண் - தூரம், ஆகாயம். கதிர் - கிரணம். கால் - வெளிப்படுத்தி. காண்பான் - காணும்பொருட்டு. வேணி - சடை. வெய்தென - திடீரென்று. பெயர்ந்தது - நீங்கியது.

71. திருப்பாற்கடலின் மேலே சிவந்த நிறத்தையுடைய சூரியன் வந்து தோன்றினாற்போல, ஆகமங்களாகிய கடலை உண்டவர்களாகிய அறிவுடையோர் போற்றிப் பாதுகாக்கும் நுண்ணிய விபூதி சண்ணித்த நெற்றியில் பொருந்தும் அக்கினியாகிய கண் இடையிலே தடை செய்ததைப்போன்று மேலே விளங்கும் கிரணங்களையுடைய நெற்றிப்பட்டம் இருளைப்போக்கி விளங்கியது.

பரப்பு - விஸ்தீரணம். கேழ் - நிறம். பரிதி - சூரியன். புலவர் - ஞானிகள், அறிவர். நுண் பொடி - நுண்ணிய வெள்ளிய விபூதி. திமிர்ந்த - நன்றாகப் பூசப் பெற்ற. எரியின் நோக்கம் - அக்கினிக்கண். கால்சீத்து - போக்கி.

72. மன்மதனைச் சாம்பராக்கிய தீமை மறைவதே காரியம் என்று சந்தனத் தால் மறைக்கப்பட்ட நெருப்புக்கண் அடங்காமைபோல, நேரே பக்கத்திலே தோன்றி நிறைந்த குளிர்ச்சியை வெளிப்படுத்துதலை யொக்கும்; சிறந்த நெற்றிப் பட்டத்தின் பக்கத்திலே நன்றாக இடப்பெற்ற பொட்டின் மாட்சியானது (ஒக்கும் என்க).

மாரன் - மன்மதன். பொடித்த - பொடியாகச்செய்த. தீங்கு - தீமை. கருமம் - காரியம். ஆரம் - சந்தனம்; முத்து எனினுமாம்; இங்கே முத்துக்களால் வேயப் பட்ட நெற்றிப்பட்டம் என்க. பட்டப் பாங்கர் - நெற்றிப் பட்டத்தின் பக்கலில்.

முரிதிரைக் கங்கை மாது முடிகொடு மறைப்பப் பொங்கி
உரிமையி னெழியேன் யானென் றெண்களம் வளைத்தா லொப்பத்
தரளவண் டெரியல் பம்புந் தடம்புயங் குழைக டோய்ந்த
உரவுமக் கங்கை வெள்ளத் துழக்குமொண் மகரம் போன்றே. 73

தொள்ளையோர் குணமே யென்ன வடக்கியுந் தோற்று நிற்கும்
தள்ளரு மதுகை சான்ற தழல்விடந் தம்பி ரானூர்க்
குள்ளுறப் படரா வண்ண முறுதடை யியக்கிற் றேபோல்
வள்ளொளி கஞற்றுங் கட்டு வடங்களஞ் சூழ்ந்த தன்றே. 74

மனையவ ளென்னுஞ் செங்கண் மால்கிடந் துறங்கும் பள்ளி
இனைபசி மாணிக் கீத லாதியி னெழுந்த கீர்த்தி
அனையென வீன்ற திண்டோ ளகடுறத் தழுவி யாங்குப்
புனைநலம் வேறின் றாகப் பொலிந்தன மணிக்கே யூரம். 75

---

73. இடையிடையே மடங்கிவரும் அலைகளையுடைய கங்காதேவியைக் கிரீடத்தை வைத்து மறைக்க, பொங்கி உரிமையுடைமையால் யான் நீங்கேன் என்று ஒளிபொருந்திய கண்டத்திலே வளைத்தாற்போல முத்துமாலைகள்நிறைந்த பெரிய தோள்களில் வலிய அக்கங்கை வெள்ளத்திலே கலக்குகின்ற ஒள்ளிய மகரத்தைப் போன்று குழைகள் தோய்ந்துள்ளன.

முரிதிரை: முரிதல் - இடையே மடங்குதல். களம் - கண்டம். தரளம் - முத்து. தெரியல் - மாலை. பம்பும் - நிறையும், நெருங்கும். குழைகள் - மகரகுண்டலங்கள். மகரம் - மகரமீன்கள்.

74. அறிவில்லாதாருடைய குணத்தைப் போன்று அடக்கியும் மேம்பட்டு நிற்கும், நீங்குதற்கரிய வலிமைமிக்க அக்கினியைக் கக்கும் ஆலகாலவிடமானது சிவபிரானுக்கு உள்ளிடத்தே செல்லாவண்ணம் மிக்க தடைசெய்தாற்போல நிறைந்த ஒளி நெருங்கிய கட்டுவடமானது கண்டத்தைச் சூழ்ந்து விளங்கியது.

தொள்ளையோர் - அறிவில்லாதவர். மதுகை - வலிமை. வள் ஒளி - மிக்க ஒளி. கஞற்றும் - நெருங்கும். களம் - கண்டம்.

75. நால்வகைச்சத்திகளுள் ஒருவராகிய திருமால் அறிதுயில் செய்யும் திருப்பாற்கடல் பசியால் வருந்திய உபமன்னியுக்குக் கொடுத்தலால் எழுந்த புகழ் அன்னைபோன்று பெற்றவயிற்றோடு வைத்துத் தோள்களால் தழுவினாற் போல இரத்தினங்கள் பதித்த தோள்வளைகள் அலங்கரித்தல் வேறொன்றில்லை என்னும்படி விளங்கின.

மனையவள் - இல்லாள், சத்தி. பள்ளி - திருப்பாற்கடல். இனை - வருத்திய. மாணிக்கு - உபமன்னியுக்கு. கேயூரம் - தோள்வளை.

சிலைசிலை யாகக் கோலித் தெவ்வரை முருக்குந் தேசு
நிலைபெற வின்ற தாயை நீக்கறக் காட்டல் போன்று
மலிகதிர்ப் பதும ராக வலயமுன் கைக்க ணின்ற
அலரிசெங் கமலஞ் சேர்ந்த வமைதியு நிகர்த்த மாதோ. 76

பெருவிலைச் சிறிய வாழி பெருகொளி விரல்கண் மாட்டு
மருவின முன்பு மாய்ந்த மாயவ ராழி யென்கோ
பொருவிலன் புளூற்றி மேலே புரப்பதற் கடுப்போர் வேண்ட
அருளிய வைத்த வென்கோ யாதென வறைவ தம்மா. 77

களத்திடை யுருத்து நின்ற காளகூ டத்தின் வேகம்
உளத்திடைத் தழற்று வண்ணா முறுகுளி ருறுத்த தேய்ப்ப
வளச்செழுஞ் சாந்து கொட்டி மான்மதம் பனிநீர் வாக்கித்
திளைத்தெழு மணப்பூந் தாது செறித்துரம் விளங்கிற் றன்றே. 78

---

76. மலையை வில்லாக வளைத்துப் பகைவரை அழிக்கும் புகழ் நிலைபெறுமாறு பெற்றதாயை நீக்குதலின்றிக் காண்பித்தல் போல நிறைந்த ஒளியைவீசும் பதுமராகக் கற்களால் இழைக்கப்பட்ட வலயம் முன்கையினிடத்து நிலைபெற்றது. சூரியன் சிவந்த தாமரைமலரைச் சேர்ந்துள்ள தன்மையையும் அஃது ஒத்துத் தோன்றியது.

சிலை - மேருமலை. சிலையாக - வில்லாக. கோலி - வளைத்து. தெவ்வர் - பகைவர்; திரிபுர அசுரர். முருக்கும் - அழிக்கும். தேசு - புகழ். புகழை ஈன்ற தாய் என்றது தோள்களை. அலரி - சூரியன்.

77. விலையுயர்ந்த சிறிய மோதிரங்கள் மிக்க ஒளியுடன் விரல்களிலே பொருந்தியுள்ளன. அவைகளை முன்பு அழிந்துபோன திருமால்களின் சக்கரப் படைகள் என்று சொல்லுவேமா? ஒப்பற்ற அன்பைச்செய்து மேலே காப்பதற்கு அடுப்பவர்களாகிய விஷ்ணுமூர்த்திகளுக்குக் கொடுத்தருளும் பொருட்டு வைத்தவைகள் என்று சொல்லுவேமா? யாதென்று சொல்வது?

சிறிய ஆழி - சிறியமோதிரம். மாயவர்-விஷ்ணுமூர்த்திகள். 'முன்பு மாய்ந்த மாயவர்': 'நூறுகோடி பிரமர்கள் நொங்கினர், ஆறுகோடி நாராயணர் அங்ஙனே' (தேவாரம்). மாயவர்ஆழி - சக்கரப்படை. புரப்பதற்கு - காத்தற்றொழிலைச் செய்வதற்கு.

78. கண்டத்திலே கோபித்து நின்ற ஆலகாலவிடத்தின் வேகமானது மனத்திலே வெப்பம் தாக்காதபடி மிக்க குளிரைச் செறித்தாற்போல மிக்கவளம் பொருந்திய சந்தனத்தைக்கொட்டி, கஸ்தூரியையும் பனிநீரையும் ஊற்றி, மிக்க மணம் வீசும் மகரந்தப் பொடிகளையும் நிறைத்து மார்பு விளங்கியது.

களம் - கண்டம். உருத்து - கோபித்து. காளகூடம் - ஆலகாலவிடம். தழற்றுவண்ணம் - வெப்பம் தாக்காதபடி. உறுத்தது - செறித்துள்ளது. மான் மதம் - கஸ்தூரி. வாக்கி - ஊற்றி. உரம் - மார்பு.

காதலின் மருமமூட்டுங் கமழ்நறுங் கலவைச் சேறு
சீதளம் வறலா வண்ணஞ் செறியமேற் பொதிவித் தாங்குப்
போதுசெய் தொடையல் பூண்கள் பொழிகதிர் மணியின் கோதை
மாதர்கண் மணியின் கோவை மாசையந் தாரும் வார்ந்த. 79

பிரணவப் பொருள்யான் சேர்ந்த பிஞ்ஞக னெவரு மல்லர்
கரியென தகத்துள் ளீடும் பிரணவங் காண்மி னென்ன
விரிபொழி லனைத்துந் தேற மெய்ம்மையின் விளக்குந் தெய்வத்
தெரியலங் கொன்றை சாலத் திகழ்ந்ததவ் வணியின் மேலால். 80

ஊர்தொறு மிரப்ப வுள்ளே யுருத்தெழு பசிவெந் தீயும்
வார்தரு குழன்மென் சாயன் மரகத வல்லி மன்றல்
ஆர்தரு விழைவிற் காண வையென வெளிக்கொண் டாங்குச்
சீர்தரு பதும ராக வுதரபந் தனஞ்சீர்த் தன்றே. 81

---

79. விருப்பத்துடன் மார்பிலே சேர்த்த மணம்வீசும் கலவைச் சந்தனச் சேறு குளிர்ச்சியினின்றும் வறண்டுபோகாதபடி நெருங்க மேலே மூடிவைத்தாற் போல, பூமாலைகளும் ஆபரணங்களும் ஒளிவீசும் இரத்தின மாலைகளும் அழகிய உருத்திராக்க மணிவடங்களும் பொன்னரிமாலைகளும் அணியப்பெற்றுவிளங்கின.

காதல் - விருப்பம். மருமம் - மார்பு. சீதளம் - குளிர்ச்சி. வறலாவண்ணம் - வறண்டு போகாதபடி. பொதிவித்தல் - மூடிவைத்தல். தொடையல் - மாலை. மாதர் - அழகு. கண்மணி - உருத்திராக்கம். மாசை - பொன்.

80. பிரணவத்துக்கு உரிய பொருள் யானே, யான் சேர்ந்துள்ள பிஞ்ஞகம் என்னும் மயிற்பீலியை அணிந்து விளங்கும் சிவபிரானையன்றி எவருமல்லர். அதற்குச் சான்றாக என்னுள்ளே மிளிர்வதும் பிரணவமே காண்பீராக என்று பெரிய உலகமனைத்தும் தெளிய உண்மையை விளக்குகின்ற தெய்வீகம் பொருந்திய கொன்றைமலர்மாலை அவ்வாபரணங்களின் மேலே மிகவும் விளங்கியது.

யான் - யானே. பிஞ்ஞகம் - தலைக்கோலம். கரி-சான்று. பொழில்-உலகம். தேற - தெளிய. மெய்ம்மையின் - உண்மையாக. தெரியலங்கொன்றை - கொன்றை மலர் மாலை. இதனை, "திருமன்னு மணிமார்பன் தேமன்னு தாமரைப்பூந் தேவனு கார், உருமன்னு புகழ்க்குடிலைக் குரியபொரு ளொருதானென் றுலகோர்ந்துய்ய, மருமன்னு செழுங்கடுக்கை மலர்மாலை முடிக்கணிந்து வயங்கா நிற்கும், தருமன்னு மைங்கரத்தங் குஞ்சரப் பொற் செஞ்சரணம் தலைமேற் கொள்வாம்" (தியாகராச லீலை - காப்பு). என்று மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் கூறி வைத்தனர். இப்பாடலில் விநாயகர் காப்பில் அதனை அமைத்தார், விநாயகக் கடவுள் சிவபெருமானின் வேறல்லர் என்ற கருத்தால். இவ்வாசிரியர் சிவ பிரானையே குறித்தார். கொன்றைமலர் பிரணவ புஷ்பமென்று கூறப்படும். உள்ளீடு - உட்பொருள்; கொன்றைமலர் ஐந்து இதழ்களையும், ஐந்து வளைந்த மகரந்தத் தண்டாகிய கம்பிகளையும் உடையது காண்க.

81. ஊர்தோறும் சென்று இரத்தற்றொழிலைச் செய்யும் பொருட்டு உள்ளே உடன்று எழும் பசியாகிய கொடிய அக்கினியும் மரகத வல்லியின் திருக்கலியாணத்தை மிக்கவிருப்புடன் காணும் பொருட்டு விரைவிலே வெளிப்பட்டாற்

எட்டுத்தோல் பிணித்த வாடை யெரிவிழி யுழுவை தந்த
கட்டுத்தோ லாடை மற்றுங் காணிகைக் கொண்ட வல்குற்
பட்டுச்சூழ்ந் தரவே யென்னப் பன்மணி யிமைக்கும் பொன்ஞாண்
இட்டுச்சூழ் கதிர்ப்பொன் னுடை யிறுக்கப்பட் டிலங்கிற் ருலோ. 82

வலப்புறக் கணைக்கான் மீது வரிகழல் வில்லுக் கால
நலத்தகு விழிமேல் கொண்டு நாரணன் றனக்குத் தோற்ருப்
புலத்தரு செய்ய பாதம் பொன்னரிச் சிலம்பு தாங்கிக்
குலத்தரு மடியார் கண்கள் குழுமுவண் டெரியல் சூழ்ந்த. 83

பிப்பில வனத்துள் வைகும் பிஞ்ஞகன் வதுவைக் கோலஞ்
செப்பினன் சிறிது செம்பொற் சிலம்புயிர் தெய்வக் கற்பின்
மைப்படி கரிய வாட்கண் மரகத வல்லி கொண்ட
ஒப்பனை சிறிது சொல்வே னுஞற்றுமுன் வினையை வெல்வேன். 84

போலச் சிறந்த பதுமராகக் கற்களால் இழைக்கப்பட்ட உதரபந்தனம் சிறப்புற்று விளங்கியது.

உருந்து - கோபித்து. நீண்ட கூந்தலையும் மென்மையான சாயலையும் உடைய மரகதவல்லி என்க. மன்றல் - திருக்கலியாணம். ஆர்தரு - நுகரும். விழைவு - விருப்பம். ஐ என - அழகிதாக, விரைவாக. உதரபந்தனம் - வயிற்றுக் கட்டு; அரைப்பட்டிகை.

82. யானைத்தோலாடை புலித்தோலாடை முதலிய ஆடைகளெல்லாம் தமக்குரியனவாகவுள்ள அரை பட்டாடைகள் சூழ, பாம்பு என்று சொல்லும்படி பலவகை இரத்தினங்களும் ஒளியைச் செய்யும் பொன்னரைஞாண் அணிந்து, ஒளிசூழ்ந்த பீதாம்பரம் தரித்து விளங்கியது.

தோல் - யானை. உழுவை - புலி. காணி - உரிய இடம். அரவே என்ன - பாம்பென்று சொல்லும்படி. பொன்னுடை - பீதாம்பரம். இறுக்கப்பட்டு - கட்டப் பெற்று; இறுத்தல் - தங்குதல்.

83. வலது கணைக்காலின்மேல் கட்டப்பட்ட வீரக்கழல் ஒளிசெய்ய; நன்மையானவிழியை மேலே கொண்டிருந்தும் விஷ்ணுமூர்த்திக்குக்காணப்படாத சிவந்த திருவடிகள் பொன்னாலாகிய பரல்களையுடைய சிலம்பு என்னும் அணிகலத்தைப் பொருந்தி நிறைந்த மெய்யடியார்களுடைய கண்கள் வந்து நெருங்கப்பெற்ற மாலைகள் சூழ்ந்து விளங்கின.

வரி - கட்டப்பட்ட. கழல் - வீரக்கழல். வில்லுக் கால - ஒளியைச்செய்ய, அரி - பரல். தெரியல் - மாலை.

84. அரசவனத்திலே விற்றிருந்தருளும் சிவபெருமானுடைய கலியாணக் கோலத்தைச் சிறிது சொன்னேன். சிவந்த பொன்மயமான இமயமலை பெற்றெடுத்த தெய்வக் கற்பையுடைய மரகதவல்லியம்மை கொண்ட கலியாணக்

வேறு

கருமுகில் விளர்ப்ப வென்றுமோ ரியல்பாய்க் காசறை யாவியு மளைந்து
மருமலர்க் குவளைத் தூவிதழ் மடுத்து வலம்புரி தெய்வவுத் தியும்வைத்
துருகெழு பகுவாய் மகரம்வா ணுதலிற் ருழ்தர வுறுத்துற முடித்த
பெருகெழின் முச்சி மணிவட நான்று பிணையல்செய் முல்லைசூழ்ந் ததுவே.

கற்பினுக் குரிய முல்லையந் தெரியல் கமழ்தரக் காட்டுத லானுஞ்
சிற்பமிக் குடைய வலம்புரி யோடு திருவுருத் திகழ்ந்திட லானும்
பொற்புமிக் குடைய பூங்குழ னெடுமால் புல்லிய புறவமே போலும்
விற்பயில் பகுவாய் மகரமவ் வுருவாம் விண்டுவே போலுமால் விளங்கி. 86

கோலத்தைச் சிறிதுசொல்லுகின்றேன்; வருத்துகின்ற முன்னைவினையினை வெல்லக்கருதும் அடியேன்.

பிப்பிலவனம் - அரசவனம். சிலம்பு - மலை. ஒப்பனை - கோலம். உனுற்றும் - வருத்தும். வெல்வேனுகிய யான் என்க.

85. கரிய மேகங்கள் நாணத்தினுல் வெண்ணிறமடைய எக்காலத்தும் ஒருதன்மையையுடையதாய், மயிர்ச்சாந்தும் புகையும் அளாவி, மணம்பொருந்திய குவளை மலரின் தூய இதழைப் பொருந்தி; வலம்புரி தெய்வவுத்தி என்னும் தலையணிகலங்கள் வைக்கப்பெற்று, அழகு மிக்க அங்காந்தவாயையுடைய மகரமீன் வடிவாய ஆபரணத்தை ஒளிபொருந்திய நெற்றியிலே தாழ்ந்துதொங்கப்பண்ணி நன்ருக முடித்த அழகிய முச்சியிலே மணிவடம் தொங்கப் பிணைத்த முல்லைமாலை சூழ்ந்துள்ளது.

விளர்ப்ப - வெளிர்க்க. காசறை - மயிர்ச்சாந்து. ஆவி - புகை; மயிருக்குப் புகைக்கும் அகில் முதலாயின; அவையாவன :- "அஞ்சனக் கட்டி யரியாசம் பச்சிலை, ஆரம் அகிலுறுப்போ ரைந்து." அளைந்து - கலந்து. வலம்புரி - வலம்புரி வடிவாகச் செய்த தலைக்கோலம். தெய்வவுத்தி - சீதேவியென்னும் தலைக்கோலம். பகுவாய் மகரம் - சுருவினது அங்காந்த வாயாகப் பண்ணின தலைக்கோலம். "பைந்தாட் குவளைத் தூவிதழ் கிள்ளித், தெய்வவுத்தியொடு வலம்புரி வயின் வைத்துத், திலகந் தைஇய தேங்கமழ் திருநுதல், மகரப் பகுவாய் தாழமண்ணுறுத் துத் துவர முடித்த துகளறு முச்சி" (திருமுருகு - 22-26). முச்சி - கொண்டை. உற முடித்த - வேண்டுவன கூட்டி முற்ற முடித்த. பிணையல் - மாலை.

86. கற்பினுக்குரிய அடையாளமாகிய முல்லைமாலை மணம் பொருந்தக் காட்டுதலானும், சிற்பவேலைகள் சிறந்துள்ள வலம்புரியோடு அழகிய உருவம் விளங்குதலானும், அழகுமிக்க குழலையுடைய திருமால் பொருந்திய முல்லை நிலத்தையொக்கும். ஒளி பொருந்திய அங்காத்த வாயினையுடைய மகரம் அவ் வுருவமாகிய விஷ்ணுமூர்த்தியையொக்கும்.

மதுகர மெறிந்து தாதளைந் துழக்கி மதுநுகர்ந் தின்னிசை முரலும்
புதுமலர்த் தளவத் தொங்கல்சூழ்ந் திருண்ட பூங்குழன் முச்சியின் றேற்றம்
பதுமம்வென் றலர்ந்த திருமுகத் திங்கள் பரந்ததன் கற்றைவெண் கதிராற்
கதுமெனப் பிடித்துக் கழுமயாத் திருக்குங் காரிருட் பிழம்புபோன் றதுவே. 87

ஒழுகொளிக் கிரண வெண்ணிறப் பாச மோச்சியே தன்னெதிர் கரவா
தெழுமிகற் கருமென் கூந்தல்வல் லிருளை யிறுகுறப் பிணித்தலி னெழுந்த
முழுதுல கிறைஞ்சித் தொழும்பிர தாப மொய்யொளி யிரவியை வதன
விழுமிய திங்க ளணிந்தது போல விளக்கம்வாய்ந் ததுநுதற் றிலகம். 88

கற்புடைய மாதருக்கு முல்லைப்பூ உரித்தாதலால் கற்பினுக்குரிய முல்லை என்றார். முல்லை நிலத்துக்குரியது முல்லைமலர்; வலம்புரிச்சங்கம், இலக்குமி வடிவம் வடிவத்தில் விளங்குதல். பூங்குழல் - அழகிய புல்லாங்குழல். புறவம் - முல்லைநிலம்; காடும் காடுசார்ந்த இடமும் முல்லை. முல்லை நிலத்துக்குரியதெய்வம் மாயோன். வில் - ஒளி. மகரவடிவாம் விண்டு என்றது மச்சாவதாரத்தை நினைந்து.

87. வண்டுகள் மொய்த்து மகரந்தப் பொடிகளில் அளாவித் துவைத்துத் தேனையுண்டு இன்னிசைப் பாடல்களைச் செய்யும் புதிய மலர்களையுடைய முல்லை மாலை சுற்றப்பட்டுக் கரியகூந்தல் கொண்டையாகவுள்ள காட்சியானது தாமரை மலரை செயித்து மலர்ந்த திருமுகமாகிய சந்திரனிடத்திலிருந்து பரவிய தொகுதி யான வெள்ளிய கிரணங்களால் விரைந்து பிடித்துச்செறியும்படி கட்டப்பட்டுள்ள கரிய இருளின் தொகுதியை ஒத்துள்ளது.

மதுகரம் — வண்டு. எறிந்து — மொய்த்து. தாது — மகரந்தப்பொடி. அளைந்து - கலந்து. உழக்கி - துவைத்து. முரலும் - ஒலிக்கும். தளவம் - முல்லை. முச்சி - கொண்டை. பதுமம் - செந்தாமரை. திருமுகமாகியதிங்கள். கற்றை - தொகுதி. கதிர் - கிரணம். கதுமென - விரைந்து. கழும - செறிய.

88. நெற்றியிலணிந்த சிந்துரப் பொட்டு, வார்ந்த ஒள்ளிய கிரணமாகிய வெண்ணிறத்தையுடைய பாசத்தை விசித் தன் முன்னே ஒளியாமல் எழுந்து நிற்கும் பகையாகிய கரிய மென்மையான கூந்தல் என்னும் வலிய இருட்டை இறுக நன்முகக் கட்டியதால் உண்டாகிய எல்லாவுலகங்களும் தொழுது வணங்கும் பிரதாபமாகிய நிறைந்த பிரகாசம் பொருந்திய சூரியனை முகமாகிய சந்திரன் அலங்கரித்ததைப் போல நன்முக விளங்கியது.

ஒழுகு ஒளி - ஒழுகினுற்போன்ற ஒளி. பாசம் - கயிறு வடிவாகிய ஆயுதம். ஓச்சி - விசி. இகல் - பகை. வல் இருள் - வலிய இருட்டு, திண்ணிய இருள் என்க. பிரதாபம் - புகழ்: செம்மை நிறம். இரவி - சூரியன். வதனம் - முகம்.

அடுக்கிதழ்க் கமலஞ் சூதமே யசோக மயினுதி முல்லைதண் ணீலம்
எடுக்குமைங் கணையுங் கழைநெடுந் தனிவி லெரிமணித் தொடிக்கையின்
விடுக்குமத் தொழிற்கங் கியைதர மகர மிளிர்கொடி யுயர்த்தது போல [வாங்கி
ஒடுக்கிவல் லிருளை வெயிலுமிழ் மகர வொண்குழை யொளிர்ந்தன செவியில்.

புருவம்வார் சிலையென் றெண்ணினர் தமக்குப் பொருகணை யெனமிகக் [கூர்த்தும்
அருள்பொழி வதன மலர்ந்தவம் புயமென் றகத்துற நினைந்தவர் தமக்குக்
கருநிறச் சுரும்ப ரெனநனி களித்துங் கலைமதி முகமென நினைவோர்க்
குருவளர் சகோர மெனத்தவ நீண்டு மொளிர்விழி திகழ்ந்ததஞ் சனமே. 90

வெண்ணிறம் படைத்த புன்மையெண் மலரை வீழ்த்துநன் மணமுயி ராத
வெண்மையின் குமிழை யிழித்துவண் டணுகா விழிவுடைச் சண்பகங் கழித்த
ஒண்ணிறங் கமழு முயிர்ப்பிரு விழிவண் டொடும்பயி னுசிசேர் தரளந்
திண்ணிய முறுவன் மணியடி யிறைஞ்சச் செவ்விபார்த் திருத்தல்போன் [றதுவே. 91

---

89. அடுக்கடுக்காகவுள்ள இதழ்களையுடைய தாமரை, மா, அசோகு, கூரிய நுனியையுடைய முல்லை, குளிர்ந்தநீலம் ஆகிய ஐந்து அம்புகளும், மூங்கிலை ஒத்த நீண்ட ஒப்பற்ற ஒளிபொருந்திய இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற வளையல் அணிந்த கைகளில் வாங்கிச் செலுத்தும் அச்செயலுக்குப் பொருந்த மகரக் கொடியை உயரத் தூக்கியதைப்போல, இருளைக்கெடுத்து ஒளியை வீசும் மகரக் குழைகள் திருச்செவிகளில் பிரகாசித்தன.

கமலம் - தாமரை. சூதம் - மா. அயில்நுதி - கூரிய நுனி. இவை ஐந்து மலர்களும் மன்மதனுக்குரிய அம்புகள். கழை - மூங்கில், கரும்பு. கழையாகிய வில் என்பது நயம். பெண்களின் தோள்களுக்குப் பசுமூங்கில் உவமை. ஐங்கணை - ஐந்து அம்புகள். தொடி - வளையல். தனி வில் - ஒப்பற்றவில். வாங்கி - வளைத்து.

மன்மதனுக்கு மலரம்புகள் ஐந்து, கழைவில், மகரக்கொடி.

90. புருவத்தை வில் என்று நினைந்தோருக்குப் போர்செய்யும் அம்பு என்று கருதலாம்படி மிகக் கூர்மையாகவும், கருணை பொழியும் முகம் மலர்ந்த தாமரையென்று மனத்தில் நினைந்தவர்கட்குக் கருநிறம் பொருந்திய வண்டுகள் எனக் களிப்பை அடையவும், பதினாறு கலைகளும் பொருந்திய சந்திரன் என்று நினைந்தவர்களுக்கு அழகிய சகோரப்புள் என்று சொல்லும்படியாக மிக நீண்டும் ஒளியைச் செய்யும் கண்களில் மை பூசப்பெற்று விளங்கியது.

வார் சிலை - நீண்டவில். பொரு கணை - போர்செய்யும் அம்பு. வதனம் - முகம். அம்புயம் - தாமரை. சுரும்பர் - வண்டு: இறுதிப்போலி. தவ - மிகுதியாக. அஞ்சனம் - மை.

91. வெண்ணிறம் பொருந்திய சிறிய எள்ளினது பூவைக் கெடப்பண்ணி, நல்ல வாசனை கமழாத எளிமையையுடைய குமிழம்பூவை இகழ்ந்து, வண்டுகள் மொய்யாத இழிவையுடைய சண்பகமலரை நீக்கி, ஒள்ளிய நிறத்தையுடைய

சங்கமென் றுரைப்போர்க் கதற்றகு சான்று தரளமா லிகைபுடை வளைத்தும்
பைங்கமு கென்போர்க் கதற்றகு சான்று பரிமளப் புதுநறுங் கலவை
பொங்கிளங் கொங்கைத் துணைச்செழும் பாக்குப் பொருவிற னடித்தலந் [தெரித்தும்
ஓங்கிய மிடற்றின் மணிவடம் பொன்னா ணுறுவிரை பலததைந் தனவே. 92

கரும்பெனத் திரண்டு நுதல்விழிப் பெருமான் கருத்தினுங் காமமிக் கூறக்
கரும்பனை விளைக்கும் பெருந்திற னேக்கிக் கலைமதிக் கவிகையங் கடவுட்
கரும்படுத் திறைஞ்ச விருஞ்சமர் பயிற்றக் காதலிற் றழுவிய தேய்ப்பக்
கரும்பினி தெழுது தோளினங் கதமுங் கதிர்மணி வடங்களும் பொலிந்த. 93

சுவாசம் விடுத்து இரண்டு விழிகளாகிய வண்டுகளோடும் பழகும் மூக்கிலே பொருந்திய முத்துக்கள், வலிய பற்கள் அழகிய பாதங்களிலே வந்து வணங்கும் காலத்தை எதிர்நோக்கியிருத்தல் போலும்.

என் மலர் - எட்பூ. புன்மை - சிறுமை. எண்மை - எளிமை. சண்பகத்தில் வண்டுகள் மொய்யா. உயிர்ப்பு - மூச்சு. தரளம் - முத்து; என்றது புலாக்கு என்னும் ஆபரணத்தில் தொங்கும் முத்தை. செவ்வி - காலம். முறுவல் - பல்.

92. சங்கு என்று சொல்லுவோருக்கு அதற்குத் தக்க சான்றாக முத்து மாலை பக்கத்திலே வளையச்செய்தும், பசிய பாக்குமரம் என்போருக்குத் தக்க சான்றாக மிக்க வாசனையையுடைய புதிய நல்ல சந்தனக்கலவை விளங்கும் இளைய நகில்களாகிய சிவந்த பழம் ஒப்பற்ற தன்னுடைய அடியைக்காட்டியும் கழுத்திலே இரத்தினமாலை பொன்நாணினால் பொருத்தப்பெற்று அநேகம் நெருங்கியுள்ளன.

தரள மாலிகை - முத்துமாலை. கமுகு - பாக்கு. கலவை - கலவைச்சந்தனம். ததைந்தன - நெருங்கியுள்ளன.

93. கரும்புபோலத் திரண்ட வடிவினதாய்ச் சிவபெருமானுடைய உள்ளத்திலும் காமம் மிக உண்டாகும்படி மன்மதனைத் தோற்றுவிக்கும் பெருவலியை நோக்கி, சந்திரனாகிய குடையையுடைய மன்மதனுக்கு மலர்கள் பொருந்த வணங்குமாறு பெரிய போரை விளைக்கும்படி அன்பினாலே தழுவிக்கொண்டதைப்போல, கரும்பு உருவத்தைச் சந்தனக்கோலத்தால் எழுதப்பட்ட தோளிலே தோள்வளையும் ஒளியை வீசும் மணிவடங்களும் பொலிந்தன.

நுதல்விழி - நெற்றிக்கண். மதிக்கவிகை - சந்திரனாகிய குடை. இருஞ்சமர்- பெரும்போர். கரும்பு காமவல்லி என்பனவற்றைத் தோளிலும், தொய்யிலை நகில்களிலும் எழுதுதல் மரபு என்பர்.

அரிபரந் தகன்ற விழிமலர் நீல மவிரொளி முறுவலந் தளவம்
பெரியதண் வடிவின் முலைச்செழுங் கமல மாதிகள் பிறைமுடிச் சடிலத்
துரியவற் கேவ நிறுத்தவார் கழைவி லொத்தகைத் துணையினத் தனுவின்
வரிகுண மொருகாற் சூழ்ந்துவைத் தனைய வளைதொட ரனைத்துஞ் சீர்த்
[தனவே. 94

பொன்னரி மாலை நவமணித் தொடலை பொழிமது நறுமலர்த் தெரியன்
மின்னுவிட் டெறிக்கு மிலைமுகப் பைம்பூண் வீற்றுவீற் றெழுகின வவைதாம்
நன்னறுங் களப நகிற்றுணைச் செப்பி னலத்தக வெடுத்துமேல் விரித்தால்
என்னமிக் கழகு விரிந்தொளி யசும்பி யெம்பிரான் மனமும்வாங் கினவே. 95

கடிதடக் கடலின் வாங்குசை வலந்தண் கயறுகிர் தரளமும் பிறவும்
தொடலைமென் குழல்கண் ணிதழ்நகை பிறவுந் தோற்றவண் ணுந்தெழு
தடவரை மருங்கு வாங்கிய மடங்கறனைப்பொரு மிடுகிடை யிறுகப்[கொங்கைத்
படரொளி கஞற்றும் பல்வகைக் காசின் சில்வடம் பான்மையிற் சூழ்ந்த. 96

---

94. செவ்வரிபரந்து விசாலமான கண்கள் நீலமலர், ஒளிவிளங்கும் பற்கள் முல்லையரும்பு, பெரிய குளிர்ந்த அழகிய நகில்கள் செழுமையான தாமரை யரும்பு முதலியவற்றைப் பிறைச்சந்திரனையணிந்த சிவபெருமான் மேல் ஏவும்படி நிறுத்தப்பட்ட நீண்ட கரும்பாகிய வில்லையொத்த இரண்டு கைகளினும் அவ் வில்லினது வரிந்த நாணை ஒருமுறை சூழ்ந்து வைத்தாற் போன்ற வளையல்க ளாகிய அனைத்தும் சிறப்போடு கூடி விளங்கின.

அரி - செவ்வரி. முறுவல் - பற்கள். தளவம் - முல்லை. சடிலம் - சடை. உரியவற்கு - உரியவராகிய சிவபிரான்மேல்: உருபுமயக்கம். நிறுத்த - நிறுத் தப்பட்ட. கழை - கரும்பு. தனு - வில். குணம் - நாணி.

95. பொன்னரிமாலையும், நவரத்தினமாலையும், மலர்மாலையும், ஒளியைச் செய்யும் இலைவடிவாகச் செய்யப்பட்டுள்ள பசிய அணிகலங்களும் வேறுவேறாக விளங்கின. அவைகள் நறிய சந்தனக்கலவை பூசப்பெற்ற துணை நகில்களாகிய செப்புக்களில் நன்றாக எடுத்து மேலே பரப்பினாற்போல மிக்க அழகைச் செய்து ஒளி யொழுகிச் சிவபிரானுடைய மனத்தையும் வளைத்தன.

மாலை, தொடலை, தெரியல் என்பன ஒருபொருட் சொற்கள், வீற்று வீற்று- வேறு வேறாக. ஒளி அசும்பி - ஒளி ஒழுகி. வாங்கின - வளைத்தன.

96. அல்குலாகிய கடலிலே பாசி கயல்மீன் பவளம் முத்து முதலியவை களைப்போல, மாலை அணிந்த மென்மையான கூந்தல் கண்கள் இதழ் பற்கள் ஆகிய பிறபொருள்களும் தோன்றும்படி அண்ணாந்து நிமிர்ந்தெழுந்த நகில்க ளாகிய மலைகளின் பக்கத்தில் வளைந்த சிங்கத்தையொத்த சிற்றிடை இறுகும்படி விரிந்த ஒளியைச்செய்யும் பல்வகையான இரத்தினங்கள் பதித்த சில வடங்கள் சூழ்ந்து விளங்கின.

மருவுபன் மணிக்கும் பிறப்பிட மாந்தன் வண்மையைப் பருமத்தின் விளக்கும்
பெருகெழி லல்குல் வாரிதி யெழுந்த பேதுசெய் நஞ்சமே விழியா
வெருவர வஃதூர் நெறிமயி ரொழுக்கா விங்குமத் தொழுகிய தோளா
உருவளர் கூர்ம மெனப்படும் புறந்தா ளொளிர்ந்தன நூபுரம் பிறவும். 97

வேறு

திருமக டனக்குநற் றிருவ ளித்திடும்
ஒருமகள் வனப்பினை யுரைக்க லாகுமே
இருமுது குரவர்தம் மெழிலு நோக்குபு
மருவின வுலகெலா மல்கு மின்பமே. 98

ஈங்கிவ ரழகினுக் கிவர்க ணோக்குறுந்
தாங்கிய வாடியிற் சாயை யன்றியே
யாங்கணு முவமைவே றில்லை யென்றுவிண்
ஓங்கிய வமரர்க ளுவந்து தாழ்ந்தனர். 99

கடிதடம் : கடல். சைவலம் : குழல். கயல் : கண். துகிர் : உதடு. தரளம் : பற்கள். கொங்கையாகிய பரந்த மலை. மருங்கு - பக்கம். வாங்கிய - வளைந்த. மடங்கலைப் பொரும் இடுகிடை - சிங்கத்தின் இடையைப்போன்ற சிறிய இடுப்பு. காசு - இரத்தினம். சைவலம் - கொடிப்பாசி.

97. பொருந்திய பலவகையான இரத்தினங்கட்கும் பிறப்பிடமாகவுள்ள தன்னுடைய வள்ளற்றன்மையைப் பருமம் என்னும் பதினெட்டுக் கோவை வடத்தினால் விளங்கச்செய்யும் அல்குலாகிய கடலிலே எழுந்த அறிவு திரிதற்குக் காரணமாகிய விடமே விழியாகக்கொண்டு அஞ்சுமாறு, அது ஊர்ந்துசெல்லும் வழி மயிரொழுங்காக, பெரிய மத்து தொங்குகின்ற தோளாக, அழகிய ஆமை முதுகு என்று சொல்லப்படும் புறங்காலிலே நூபுரம் முதலிய பிற அணிகலங்களும் ஒளியைச்செய்தன.

வண்மை - வள்ளற்றன்மை, வளப்பம். பருமம் - பதினெண்கோவை மணி வடம். வாரிதி - கடல். பேது - அறிவு திரிதல். கூர்மம் - ஆமை.

98. இலக்குமி தேவிக்கும் நல்ல இலக்குமி கடாட்சத்தைக் கொடுத்தருளும் ஒப்பற்ற மரகதவல்லியின் அழகைச் சொல்ல இயலுவதாமோ? தாய் தந்தையர்களாகிய அம்மையப்பருடைய அழகினைநோக்கி உலகமுழுவதும் நிறைந்த இன்பம் பொருந்தின.

திரு - கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம். வனப்பு - அழகு.

99. இவ்வுலகத்திலே இவருடைய அழகுக்கு இவர்கள் பார்க்கும் கண்ணாடியில் உள்ள சாயையை அல்லாமல் எவ்விடத்தும் வேறு உவமையில்லை என்று தேவர்கள் யாவரும் மகிழ்ந்து வணங்கினர். ஆடி - கண்ணாடி. சாயை - நிழல்.

எழுந்தன மதுரமங் கலங்க ளெங்கணும்
எழுந்தன துவசங்க ளியம்பிற் றின்னியங்
கொழுந்தெழு கதிர்மணிக் குடைக வித்தன
செழுந்திருக் கவரிக டிரண்டு துள்ளின. 100

அவிர்மணி யழுத்திய வால வட்டமுந்
தவவளி யெழுப்புசாந் தாற்றி யீட்டமுங்
கவர்நிழற் றெங்கலுங் கதிர்த்த நித்திலத்
திவர்புதுப் பந்தரு மெழுந்தி யங்கின. 101

அரம்பையர் நிரைநிரை யடுத்தங் காடினர்
வரம்பெறு கின்னரர் மகிழ்ந்து பாடினர்
நரம்பிசை யெழுப்பினர் நார தாதியர்
பரம்பின பனிவிசும் பமரர் பூமழை. 102

மாயவன் பாதுகை வணங்கி யிட்டனன்
தூயவன் றிருவடி தொடக்கிப் பாங்கரின்
வேயன தோளிணுண் மேவ மென்மலர்ப்
பாயின வாடைமேற் படர்தன் மேயினன். 103

---

100. எல்லா இடங்களிலும் இனிமையான மங்கலங்கள் தோன்றின. பெருங்கொடிகள் நிமிர்ந்து ஆடின. இனிய வாத்தியங்கள் முழங்கின. கிரணங்களின் கொழுந்துகள் வீசும் இரத்தினக் குடைகள் கவிக்கப்பெற்றன. செழுமையான வளப்பத்தையுடைய சாமரங்கள் இரண்டு பக்கங்களினும் அசைந்தன.

மதுரம் - இனிமை. இயம் - வாத்தியம். கவரி - சாமரம். துள்ளின - அசைத்தலால் மேலும் கீழும் சென்றன.

101. விளங்கும் மாணிக்கக்கற்கள் பதித்த ஆலவட்டங்களும், மிகுதியும் காற்றை எழுப்புகின்ற சாந்தாற்றியின் கூட்டங்களும், பிளந்தநிழலைச் செய்யும் தொங்கல்களும், ஒளிவீசும் முத்துக்களால் வேயப்பட்ட புதிய பந்தர்களும் எழுந்து சென்றன.

தவ - மிகுதியாக. வளி - காற்று. ஈட்டம் - கூட்டம். கதிர்த்த - ஒளிவிடுகின்ற. நித்திலம் - முத்து.

102. அரம்பாஸ்திரீகள் வரிசை வரிசையாகப் பொருந்தி அங்கே ஆடினர்கள். மேம்பட்ட கின்னரர்கள் மகிழ்வாகப் பாடினர். நாரதமுனிவர் முதலியோர் நரம்புக்கருவிகளால் இசையெழுப்பினர். தேவர்கள் பொழிந்த பூமழை குளிர்ந்த ஆகாயத்தில் நிறைந்தன.

பரம்பின - நிறைந்தன. விசும்பு - ஆகாயம்.

103. திருமால் வணங்கித் திருவடிகளில் பாதுகையைச் சேர்த்தனர். சிவபெருமான் பாதுகைகளையணிந்துகொண்டு பக்கத்திலே பசுமூங்கிலையொத்த

விற்பொரு நுதலியர் மேனை தன்னொடுங்
கற்புய ருமைபுடை களித்துச் சென்றனர்
அற்பொடு மிமவரை யரைய னாதியோர்
தற்பர னுழையராத் ததைந்து சென்றனர். 104

தூயதன் னருள்கொடு தொல்லை நான்முகன்
பாயபல் பாலிகை பிறவு முன்னரே
ஆயுநன் முறையுளி யமைத்த மண்டபந்
தாயினு மினியவன் சாரச் சென்றனன். 105

அரத்தக வடியின ரட்ட மங்கலங்
கரத்தினி தேந்தினர் கண்டு வாழ்த்தினர்
புரத்தெரி யூட்டிய புனித னேக்குபு
வரத்தினை யளித்துமண் டபத்து ளெய்தினன். 106

மரகதவல்லியம்மை பொருந்த மெல்லிய மலர்களைப் பரப்பிய பட்டாடையின்மேல் நடந்துசெல்வாராயினர்.

தொடக்கி - அணிந்துகொண்டு. பாயின - பரப்பிய. படர்தல் - செல்லுதல்.

104. வில்லினையொத்த புருவத்தையுடைய பெண்கள் மேனையோடு உமா தேவியார் பக்கலிலே சூழ்ந்து மகிழ்வோடு சென்றனர். இமயமலையரசன் முதலியோர் அன்புடனே சிவபெருமான் பக்கத்திலே நெருங்கிச் செல்வாராயினர்.

நுதல் - புருவம். மேனை - மலையரசன் மனைவி. அற்பு - அன்பு. தற்பரன் - தனக்குத்தானே மேலானவர். உழையரா - பக்கத்திலுள்ளவராக. ததைந்து - நெருங்கி.

103. பரிசுத்தமாகிய தம்முடைய கருணையைப்பெற்றுப் பிரமதேவர், பரவியுள்ள முளைப்பாலிகைகளையும் பிறவற்றையும் முன்னரே விதிப்படி வைக்கப்பட்டுள்ள மண்டபத்திலே தாயினுமினியவராகிய சிவபெருமான் பொருந்தச் சென்றனர்.

பாய - பரப்பியுள்ள. முறையுளி - விதிப்படி.

106. செம்பஞ்சுக்குழம்பு ஊட்டப்பெற்ற பாதங்களையுடைய மங்கலப் பெண்கள் எட்டு மங்கலப் பொருள்களையும் கையிலேந்தினவராய் வாழ்த்தினர்கள். அவர்களைச் சிவபெருமான் நோக்கி வரங்களை நல்கி மண்டபத்தினுள்ளே எழுந்தருளினர்.

அரத்தகம் - செம்பஞ்சுக்குழம்பு. அட்டமங்கலம் - எட்டு மங்கலப் பொருள்கள்; "செய்கய லிரட்டைதிரு வார்சுடர் கணடி, பொங்குகொடி வார்முரசந் தோட்டிபுணர் கும்பம், மங்கலங்க ளெட்டும்" (சீவக சிந்தாமணி. 2487).

பானலங் கருவிழிப் பாவை தன்னொடும்
வானம ராதனம் வயங்க வைகுபு
தேனகு தொங்கலந் தேவர் யாவரு
மானமர் தவிசுற வருளிச் செய்தனன். 107

மங்கலத் துழனியு மதுர கீதமும்
பங்கய வதனியர் பணிசெ யூக்கமுந்
தங்கிய வமரர்க டதையு மண்டபத்
தெங்கணு மாயின வின்ப மல்கவே. 108

வேறு

அடுக்கலுக் கிறைவ னண்மி யவிரிமை சுமக்க லாற்ரு
நடுக்குமெல் லிடையின் மேனை வணங்கின ணறும்பால் வாக்க
மடுக்குமெய் யன்பிற் செம்மன் மலரடி விளக்கி நீர்பெய்
திடுக்கணெவ் வுலகு நீங்க வித்தனன் புதல்வி தன்னை. 109

விண்ணவர் மலர்கள் சிந்த விடையவ னங்கை யேற்றுத்
தண்ணிய மலர்மே லண்ண றழன்முறை வளர்ப்பத் தாலி
புண்ணிய மலர்ந்தா லன்ன பூங்கொடி மிடற்றிற் சேர்த்து
மண்ணவ ருய்யச் செய்யு மரபெலா மியற்றி னானே. 110

---

107. நீலோற்பலம் போன்ற கண்களையுடைய உமாதேவியாரோடும் சிறந்த ஆதனம் விளங்கும்படி அதில் எழுந்தருளியிருந்து, தேவர் யாவரையும் அவரவருக்குரிய ஆதனங்களில் இருக்குமாறு கட்டளையிட்டருளினர்.

பானல் - நீலோற்பலம். தொங்கல் - மாலை. தவிசு - பீடம்.

108. மங்கல முழக்கங்களும், இனிய கீதங்களும், தாமரை மலர்போன்ற முகத்தையுடைய மகளிர் பணிகளைச் செய்யும் முயற்சியும், தேவர்கள் நெருங்கியுள்ள மணடபம் முழுவதும் இன்பம் நிறையப் பொருந்தின.

துழனி - முழக்கம். பங்கய வதனியர் - தாமரைபோலும் முகமுடைய பெண்கள். ததையும் - நெருங்கும்.

109. மலையரசன் அணுகி, மனைவியாகிய மேனை வணங்கிப் பாலைவார்க்கப் பேரன்புடன் இறைவருடைய திருவடிகளை விளக்கி, எல்லாவுலகமும் துன்பத்தினின்று நீங்கி இன்பத்தை அடையுமாறு புதல்வியாகிய உமாதேவியாரை நீர் வார்த்து இறைவர்பால் கொடுத்தான்.

அடுக்கல் - மலை. அண்மி - நெருங்கி. செம்மல் - சிவபெருமான். இடுக்கண் - துன்பம்.

110. தேவர்கள் பூமாரிபொழிய, சிவபெருமான் அகங்கையிலே ஏற்றுப் பிரமதேவர் வேள்வித்தழலை விதிமுறையிலே வளர்க்க, புண்ணியம் மலர்ந்தாற்

இளமதி முடித்த வேணி யெம்பிரான் றேழ னூன
அளகையர் பெருமா னேடு மடுக்கலுக் கிறைவ னேகை
உளனுறச் சாந்த மாலை பாகடை பிறவு முற்ற
வளமையோ டியைய யார்க்கும் வழங்கினன் றழங்க மன்றம். 111

அளித்திடும் பரிசி லானு மணிந்தமெய்க் கோலத் தானுங்
களித்ததம் மனையின் மாதர் கண்ணுற்று நிற்ற லானுந்
தெளித்தெழு மன்றல் காணத் திரண்டவர் தாமு மந்நாள்
தளித்தெழு மின்ப மன்றல் சார்ந்தவ ரொத்து ளாரால். 112

கடியயர் வரைப்பி னின்றுங் கண்ணுதல் வெளிக்கொண் டும்பர்
முடியொடு முடிக டாக்க மூரிமால் விடையி னேறிப்
பிடிநடை யுமைதன் னேடும் பேரெழி னகர்சூழ் போந்து
கொடிபல நுடங்குஞ் செம்பொற் கோயில்புக் கணையி னுற்ருன். 113

போலத் தாலியை உமாதேவியாருடைய கழுத்திலே சேர்த்து நிலவுலகத்திலுள்ளோர் யாவரும் உய்யும்படி செய்யும் சடங்குகளையெல்லாம் இயற்றியருளினர்.

விடையவன் - சிவபெருமான். மலர்மேலண்ணல் - பிரமதேவன். பூங்கொடி - உமாதேவியார்.

111. இளம்பிறைச் சந்திரனை அணிந்த சிவபெருமான் தோழனுகிய அளகை வேந்தனும் இமயமலை யரையனும் மன மகிழ்ச்சி மிகச் சந்தனம், மாலை, பாகடை மற்றுமுள்ளன எல்லாவற்றையும் யாவருக்கும் வளப்பம் பொருந்த வழங்கினர்.

அளகையர் பெருமான் - குபேரன். அடுக்கலுக்கு இறைவன் - மலையரசன். ஓகை=உவகை - மகிழ்ச்சி. பாகடை - வெற்றிலை பாக்கு.

112. கொடுக்கும் பரிசில்களாலும், மெய்யில் அணிந்த கோலத்தாலும், மகிழ்ந்த நம்முடைய மனையிலுள்ளோராகிய மாதர்கள் கண்ணுற்றிருத்தலாலும் இந்தத் திருக்கலியாணத்தைக் காணத் திரண்டு வந்தவர்களும் அப்பொழுது கலியாணம் செய்து கொண்டவர்களைப்போலவே விளங்கினர்கள்.

113. திருக்கலியாணம் செய்த மண்டபத்தினின்றும் சிவபெருமான் வெளியே எழுந்தருளிவந்து தேவர்கள் நெருக்கத்தால் முடியோடு முடிகள் தாக்கு மாறு வலிய இடபவாகனத்தில் ஏறி உமாதேவியாரோடு விற்றிருந்து அழகிய பேரூர் நகரை வலம்வந்து கொடிகள் நெருங்கி அசையும் திருக்கோயிலையடைந்து சிங்காதனத்தில் எழுந்தருளியிருந்தார்.

கடி - கலியாணம். வரைப்பு - இடம். மூரி-வலிமை. நுடங்கும்-அசையும்.

திருமண வாளக் கோலஞ் சென்றுசென் றிறைஞ்சப் பெற்றோர்க்
கருள்வளம் பழுப்ப வேட்ட வரமெலா மளித்துப் போக்கிப்
பெருகிய மகிழ்ச்சி துள்ளப் பெய்வளை யோடு மங்கண்
மருவுமெவ் வுயிரும் வாழ வாழ்க்கைமேல் கொண்டி ருந்தான். 114

விதுவணி சடில மோலி வித்தகன் வெற்பின் மாதைப்
புதுவதி னியன்று சீர்த்த பொலங்கல மணிந்தெல் லோருங்
கதுவினர் போற்ற வாற்றுங் கடித்திறங் கேட்டோ ரீண்டை
வதுவைமிக் கயர்ந்து முத்தி மன்றலு மயர்வ ரீற்றின். 115

உரககங் கணங்கை பூண்ட வொருவரங் கினிது வேட்ட
மரகத வல்லி மன்றல் வழுத்தின முனிவிர் வைவேல்
விரகினன் றெய்வ யானை யென்னுமென் கொடியை வேட்ட
பரகதி யருளு மன்றல் கேட்கெனப் பகருஞ் சூதன். 116

கௌரி திருமணப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1859

---

114. திருமணவாளக் கோலத்தை வந்து வந்து வணங்கித் தரிசிக்கப் பெற்றோருக்கு அருள்நிறைய விரும்பிய வரங்களை விரும்பியவாறே அருள்செய்து விடை கொடுத்தனுப்பிப் பெருமகிழ்வோடு உமாதேவியாருடனே உலகமெல்லாம் போகம் நுகரும் பொருட்டு வீற்றிருந்தார்.

வேட்ட - விரும்பிய.

115. சந்திரசேகரராகிய சிவபெருமான் மலையரசன் மகளைப்புதுவதாக இயன்ற சிறந்த பொற்றாலியை யணிந்து எல்லோரும் நெருங்கிப் போற்றச் செய்தருளிய கலியாண மேன்மையைக் கேட்டோர் இவ்வுலகத்துக் கலியாணம் செய்து கொண்டு இம்மைப்பேற்றை யடைந்து, முத்தியாகிய மங்கலத்தையும் முடிவிலே பெற்று வாழ்வர்.

விது - சந்திரன். சடிலம் - சடை. பொலங்கலம் - பொற்றாலி. கடித்திறம் - கலியாணச்சிறப்பு. முத்திமன்றல்: பண்புத்தொகை.

116. ஒப்பற்ற சிவபெருமான் இனிது கலியாணம் செய்துகொண்ட மரகத வல்லியம்மையின் திருக்கலியாணத்தைத் துதித்துப் போற்றினேன். முனிவர்களே! முருகக்கடவுள் தெய்வயானையம்மையாரைத் திருமணஞ்செய்துகொண்டருளிய முத்திப்பேற்றைத் தரும் வரலாற்றைச் சொல்லுவேன் என்றார் சூதமகாமுனிவர்.

முப்பதாவது

தெய்வயானை திருமணப்படலம்

கமஞ்சூற் கொண்டல் வயிறுளைந்து கான்ற புதுநீ ரருவிகொளும்
இமஞ்சூழ் விலங்கற் றடஞ்சார லிமையோர்க் கிடுக்கண் டவப்புரியும்
நிமஞ்சூ ழொருவ னுயிர்குடிப்ப நினைந்து நரநா ராயணர்தாந்
தமஞ்சூழ் வகன்ற வுளத்தினெடுந் தவஞ்செய் தமராச் சிரமத்து. 1

தரங்கக் கடலின் வரைநிறுவித் தறுக ணரவ மிடைச்சுற்றி
இரங்கக் கடைந்து சுதையெடுத்த வெறுழ்த்தோண் மாயன் மீளிமையும்
அரங்கப் பொருதா யிரத்திருநான் கண்ட மரசாண் டவற்செகுத்தோன்
கரங்கைப் பிடிப்ப வளர்கடவுள் யானை கருதித் தவம்புரிந்தாள். 2

வெண்டு சுடுத்துப் பட்டொருவி வெண்ணீ றணிந்து விரைச்சாந்தம்
வண்டு தலர்மென் மாலிகையு மாற்றி யொளிர்கண் மணிதழுவிக்
கொண்டு தியமின் றெனமணியின் கோவை யகற்றித் தவம்புரிதல்
கண்டுங் கடுத்த வினைமுனி கருத்துள் வணங்கி யிதுசொன்னான். 3

---

1. நிறைந்த கருவினையுடைய மேகம் வயிறு வருந்திப் பெய்த புதியமழை நீரின் அருவிகள் நிறைந்த இமயமலையைச் சூழ்ந்த மலைச்சாரலில் தேவர்களுக்கு மிக்க துன்பத்தைச்செய்யும் நியமம்பூண்ட ஒருவனுடைய உயிரைப் போக்க நினைந்து நர நாராயணர்கள் தாமதகுணம் நீங்கிய மனமுடையவராய்த் தவஞ் செய்துகொண்டிருக்கும் ஆச்சிரமத்திலே.

கமஞ்சூல் - நிறைந்த கருப்பம்: "கமநிறைந் தியலும்" (தொல் - உரி.) கொண்டல் - மேகம். உளைந்து - வருந்தி. விலங்கல் - மலை. தவ - மிகுதியாக. நிமம் - நியமம். தமம் - தமோகுணம்.

2. அலைகளையுடைய பாற்கடலிலே மந்தரமலையை மத்தாக நிறுத்தி, அஞ்சாமையையுடைய வாசுகி என்னும் பாம்பைக் கயிறுகச்சுற்றி, அலறும்படி கடைந்து அமுதத்தை எடுத்த வலிய தோள்களையுடைய திருமாலினுடைய ஆண்மையும் கெடும்படி போர்செய்து ஆயிரத்தெட்டு அண்டங்களை அரசுசெய்த சூரபன்மனை அழித்த முருகக்கடவுளின் திருக்கரத்தைத் தாம்பிடிக்கத் தெய்வயானையம்மையார் எண்ணித் தவஞ்செய்தாள்.

தரங்கம் - அலை. வரை - மந்தரமலை. அரவம் - வாசுகி. சுதை - அமுதம். எறுழ் - வலிமை. மீளிமை - ஆண்மை. அரங்க - கெட. செகுத்தோன் - முருகக் கடவுள்.

3. பட்டாடைகளை நீத்து, வெள்ளிய ஆடையை உடுத்துக்கொண்டு, வெள்ளிய திருநீற்றை யணிந்து, வாசனை பொருந்திய சந்தனம் மலர்மாலை

அயிரா வதக்கோன் வளர்த்தெடுத்த வமுதே யயிரா ணியினுயிருக்
குயிராய் விளங்கு மணிவிளக்கே யுவண முயர்த்தோன் றிருமகளே
செயிரா னவைதீர்த் தருள்பேரூர்த் தேத்துத் தவங்கள் புரிகிற்பின்
வயிராங் கிசைப்ப மணம்விரைவின் வடிவே லவன்செய் திடுமென்றான். 4

நாக மணர்ந்த கருங்கோட்டு நல்யாழ் முனிவன் மொழிகேளா
மாக ரரையன் மகடெய்வ யானை மகிழ்ந்து விரைவினெழா
யூக முகள மலர்ச்சோலை யுகுதேன் விரவிக் குளிர்காஞ்சி
வேக நதியூ ராதிநகர் மேவிப் பணிந்து தவமுயன்றாள். 5

உள்ள முருகன் றிருமேனி யொற்றித் திடக்கண் முகிழிப்பத்
தெள்ளு மதிவாண் முகங்குவியத் திகழ்பொன் மாமை யுருச்சாம்பக்
கள்ளம் பயிலைம் பொறிகரப்பக் காய மணியோ வியத்தசையா
விள்ளற் கரிய பெருந்தவங்கள் விண்ணோர் யானை நிரப்புதலும். 6

முதலியவற்றை அணிந்துகொள்ளாமல் விளங்கும் உருத்திராக்க மணியணிந்து, பயனில்லையென்று இரத்தினமாலைகளையும் நீக்கி, தவம்புரிதலைக்கண்டு அங்கே சென்ற மகதி என்னும் வீணைக்குத் தலைவனாகிய நாரதமுனிவர் மனத்தால்வணங்கி இவற்றைச் சொல்வாராயினர்.

தூசு - ஆடை. ஒருவி - நீங்கி. மாலிகை - மாலை. கண்மணி - உருத்திராக்கம். ஊதியம் - இலாபம், பயன். ஊங்கு - அவ்விடத்தை. வீணைமுனி - நாரதமுனிவர்.

4. அயிராவதம் என்னும் யானையையுடைய இந்திரனால் வளர்க்கப்பட்ட அமுதம் போன்ற அம்மே! இந்திராணியின் உயிருக்குயிராய் விளங்கும் இரத்தின தீபமே! கருடக்கொடியை உயர்த்ததிருமால் மகளே! குற்றங்களைப் போக்கியருளும் பேரூர் என்னும் தலத்திலே சென்று தவஞ்செய்யில் இசைக்கருவிகள் இயம்ப விரைவிலே முருகவேள் திருமணம் புரிந்துகொள்வார் என்றார்.

அயிராவதம் - இந்திரன்யானை. அயிராணி - இந்திராணி. உவணம் - கருடன். செயிர் - குற்றம். தேத்து - இடத்தில். வயிர் - ஊதுகொம்பு.

5. நாரதமுனிவர் சொன்ன சொல்லைக்கேட்டு இந்திரன் மகளாகிய தெய்வயானை அம்மையார் மகிழ்ந்து விரைவில் எழுந்து கருங்குரங்குகள் தாவும் அழகிய மலர்ச்சோலையினின்று சிந்தும் தேன் கலந்து செல்லும் காஞ்சி நதியையுடைய ஆதிநகரை அடைந்து வணங்கித் தவஞ்செய்வாளாயினள்.

நாகத்தைப் போன்று அண்ணாந்திருக்கும் பெரிய கோட்டினையுடைய யாழ் என்க. மாகர் அரையன் - விண்ணவர் வேந்தன். யூகம்-கருங்குரங்கு; மந்தி எனினும் ஆம். உகள - பாய.

6. மனம் முருகக்கடவுளின் திருமேனியைப் பொருந்தக் கண்கள் நீர் துளும்ப, தெளிந்த சந்திரனையொத்த முகம் கூம்ப, விளங்கும் பொன்மயமாகிய மாமை நிறம் வடிவத்தைச் சோர்விக்க, கள்ளத்தைச் செய்யும் ஐம்பொறிகளும்

வேறு

இடுகிடை மிடைந்தெழுசொ லோடிரும றுன்னப்
படுகிழவ னுகியயில் பாணிவளர் செம்மல்
நெடுவழி நடந்தவ னிகர்ப்பவெய ராடக்
கடுகிடு முயிர்ப்பினெடு கன்னியெதிர் நின்முன். 7

உயிர்ப்பவெழு தன்னுலவை யோதையுடல் காதின்
அயிர்ப்பவினி தேறவன மன்ன நடை நங்கை
பயிற்சியுறும் யோகொடு படர்ந்தவுள மீட்டுக்
கயற்கண்மல ரக்கிழவ னின்றபடி கண்டாள். 8

கைதவ மளைந்தகரு மூப்புடைமை யானைச்
செய்தவ மடந்தையிரு செங்கையெதிர் கூப்பி
உய்தவ முருற்றலுறு வேனையொரு நீதான்
வெய்தென வடுத்தமை விளம்பென வுரைத்தாள். 9

சென்று ஒளிக்க, உடம்பு அழகிய சித்திரத்தைப்போன்று அசையாமல் சொல்லு தற்கு அருமையான பெரிய தவத்தைத் தெய்வயானை அம்மையார் செய்து முடித்தாள்.

ஒற்றித்திட - ஒன்றுபட. முகிழ்ப்ப - நீர் ததும்ப. மாமை - பசலை நிறம். கரப்ப - ஒளிக்க. ஓவியம் - சித்திரம். விண்ணோர் யானை - தெய்வயானை.

7. ஒடுங்கிய இடுப்பையும், தடுமாறும் சொல்லையும் உடையராய் இருமல் பொருந்த மிக்க கிழவனாக உருத்தாங்கி வேற்கரத்தையுடைய முருகவேள் நெடுந் தூரம் நடந்து இளைத்தவரையொப்ப வெயர்வைகொள்ள வேகமாக வரும் பெரு மூச்சோடு எழுந்தருளித் தெய்வயானையின் முன்னே நின்றார்.

இடுகு இடை - ஒடுங்கிய இடுப்பு. மிடைந்தெழு சொல் - தடுமாறுகின்ற சொல். அயில் - வேல். பாணி - கை. கடுகிடும் உயிர்ப்பு - பெருமூச்சு.

8. பெருமூச்செறியும் காற்றின் ஓசை உடலினும் காதினும் சந்தேகிக்கும் படி வந்து பொருந்த அன்னத்தின் நடையினையொத்த நடையினையுடைய தெய்வ யானை யோகநிலை பற்றியுள்ள உள்ளத்தை மீட்டு எதிரேநின்ற கிழவரைக் கண் களை விழித்துக் கண்டாள்.

உயிர்ப்ப - மூச்சுவிட. உலவை - காற்று; எனவே மூச்சுக்காற்று. அயிர்ப்ப - சந்தேகங்கொள்ள. யோகொடு படர்ந்த - யோகத்திலே சென்றிருந்த.

9. வஞ்சகம் பொதிந்து விளங்கும் மிக்க மூப்புப் பருவமுடைய அப்பெரிய வரைத் தவத்திலிருந்த தெய்வயானையம்மை கைகளைக் குவித்து வணங்கி உய்யும் பொருட்டாகத் தவஞ்செய்யும் என்னை ஒப்பற்ற நீயிர் விரைந்து அடுத்தற்குக் காரணம் யாது? சொல்லுவீர் என்றாள்.

மருதவரை யேபெரிதும் வாழெமது வைப்பிங்
கொருவனடி போற்றவுறு கின்றன மிடைக்கட்
பொருவிறவ மாற்றுமொரு பூவைநினை நோக்கிப்
பெருகுவிழை வாலுரிமை பேணியருகுற்றும். 10

யாதனை விழைந்ததஃ தோதுதல்செய் கென்றான்
வேதனரி காணரிய வித்தகவி சாகன்
மாதடிகள் சூரனுயிர் மாய்த்தவ னெனைத்தன்
காதலி யெனக்கொள விழைந்ததுக ணென்றாள். 11

வேறு

என்னே நினதெண் ணமிருந் தபடி
அன்னோ னினைமன் றலயர்ந் திடுமே
கொன்னே கவினைக் குலைவித் தனையே
மின்னே யெனவிண் டனன்வீழ் கிழவன். 12

கைதவம் - வஞ்சனை. கருமூப்பு - பெரிய மூப்பு; மிக்க கிழத்தனம். வெய்தென - திடீரென்று.

10. நாம் பெரும்பாலும் வசிக்குமிடம் மருதமலையேயாம். இங்கே ஒப்பற்ற சிவபெருமான் திருவடிகளை வணங்கச் செல்கின்றோம். இடையிலே போகும் வழியில் ஒப்பற்ற தவத்தைச் செய்யும் பெண்ணே! உன்னைப் பார்த்து மிக்க விருப்பத்துடன் உரிமையோடு உன் அருகில் வந்தோம்.

எமது வைப்பு - எமதிடம். ஒருவன் - சிவபெருமான். பொருஇல் - ஒப்பில்லாத. பூவை: அண்மை விளி. பெருகு விழைவு - பெருகிய விருப்பம், உரிமையை விரும்பி.

11. எதனை விரும்பித் தவஞ்செய்கின்றாய், அதனைச் சொல்லுக என்றார். தெய்வயானை, அடிகளே! பிரம விஷ்ணுக்களும் காணுதற்கரிய வித்தகராகிய விசாகக்கடவுள் சூரபன்மனுடைய உயிரைமாய்த்த பெருமான் என்னைத் தன்னுடைய தேவியாக ஏற்றுக்கொள்ளும்படி என்னுடைய விருப்பம் உள்ளது என்றாள்.

விசாகன் - விசாக நாளுக்குரியோன். காதலி - மனைவி.

12. உன்னுடைய எண்ணம் இருந்தவாறு என்னே! அந்தோ! உன்னைக் கலியாணம் செய்து கொள்வாரோ! வீணாக உன் அழகைக் கெடுத்துக்கொண்டாயே என்று விரும்பிய முதியவர் சொன்னார்.

மன்றல் - கலியாணம். அயர்ந்திடுமே - செய்து கொள்ளுமோ: ஏகாரம் ஓகாரப்பொருளில் வந்தது. கொன்னே - வீணாக. கவின் - அழகு. விண்டனன்- சொன்னார். வீழ் கிழவன்: விழ்தல் - விரும்புதல்.

சிவத்தான் முருகன் சிவணு தொழிக
தவத்தாற் கவினல் லதுசா ருயிரும்
அவத்தா னழிவெய் துகவஞ் சிலன்மேற்
பவத்தாற் பயனெய் துமென்ரு ளனையாள். 13

நெஞ்சத் துறுதித் திறநே ரிழைபால்
விஞ்சத் தவநோக் கியவேன் முருகன்
வஞ்சக் கிழவுக் கிடமா மயின்மேல்
துஞ்சப் பரிவாங் கெதிர்தோன் றினனே. 14

உயிர்கா வலனே யுருமா றியெதிர்
பயில்வா னெனில்யான் செய்தபாக் கியமென்
றயில்வாள் விழியா ளகனே கையுற
மயிலூர் தியினு னேவணங் கினளே. 15

விழியோ டுவிழித் துணைநோக் கியயக்
கழிகா தலரா யினர்கா ளைமதுப்
பொழிபூங் குழற்பூ வையுமென் றிவரென்
றழியா வருளீ சனகஞ் செய்தரோ. 16

---

13. மங்கலத்தினல் முருகக்கடவுள் என்னைப் பொருந்தாதொழியினும் ஒழிக. தவஞ்செய்தலால் அழகு அழிதலே யன்றி என் உயிரும் வீணே அழியினும் அழிக. அதற்காக யான் சிறிதும் அஞ்சிலேன். மேல் வரும் பிறப்பிலே பயன் உண்டாம் என்று தெய்வயானை கூறினள்.

சிவத்தால் - மங்கலத்தால். சிவணுது - பொருந்தாமல். அவம் - வீண். மேற்பவம் - வரும் பிறப்பு.

14. அப்பெண்ணிடத்து மனத்திலுள்ள உறுதியின் வலி மேம்பட்டிருத்தலை மிகவும் கண்ட முருகக்கடவுள் வஞ்சனை பொருந்தும் கிழத்தனத்தின் நீங்கி மயில் வாகனத்தில் பொருந்தி அன்புடன் எதிர்தோன்றிக் காட்சிதந்தார்.

நேரிழை - தெய்வயானை. விஞ்ச - மேம்பட. தவநோக்கிய - மிகவும் கண்ட. பரிவு - அன்பு.

15. உயிரைப் பாதுகாக்கும் தலைவனே வடிவம் மாறி எதிரிலே தோன்று வான் என்னில், யான் செய்த தவப்பேறேயாம் என்று அம்மையார் மனத்திலே உவகை பொருந்த மயில்வாகனப் பெருமானை வணங்கினுள்.

உயிர் காவலன் - உயிர்த்தலைவன். பாக்கியம் - பேறு. அயில் வாள் விழி யாள் - கூரிய வாளாயுதம் போன்ற கண்களையுடைய தெய்வயானை. ஒகை - உவகை. ஊர்தி - வாகனம்.

16. கண்ணேடு கண்ணிணைகள் நோக்கி அழகு மிக்க காதலர் ஆயினர்; காளையாகிய முருகவேளும் நாகணவாய்ப்புட்போன்ற தெய்வயானையும் என்ற இவர்கள் இருவரும் காதலர் ஆயினர் என்று நீங்காத அருளையுடைய சிவ பெருமான் மனத்துட்கொண்டு.

வேறு

எரிமணி யிமைக்கு மோலி யிந்திரன் றன்னைக் கூவித்
தெரியிழை சுமக்குங் கோலத் தெய்வயா னைக்கு மங்கை
உரிமைசெய் வேலி னுற்கு முறுமுறை மன்ற லிங்குப்
புரிவதற் கியைவ வெல்லாம் புரிகென வருளிச் செய்தான். 17

அடியனே னுய்ந்தே னென்னு வடியிணை பணிந்து விண்ணங்
கொடிதுழாம் புரிசைக் கோயிற் கோபுர வாய்தன் முன்போய்
இடிவளர் கொடியோன் பேரூ ரெம்பிரா னருளீ தென்ன
முடிவிலின் பருளு மன்றன் முடங்கலெத் திசையு முய்த்தான். 18

வினைத்திற மினிது வல்ல விச்சுவ கன்மற் கூவிக்
கனைத்துவண் டுளருந் தெய்வக் கடம்பணி தாரான் மன்றற்
கனைத்துல கத்து மில்லா வழகின்மண் டபமொன் றீண்டை
எனைத்துள வுறுப்பு முற்ற வியற்றுதி கடிதி னென்றான். 19

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள், என்ன பயனு மில" என்பது திருக்குறள். ஐய - அழகிய. கழி காதலர் - மிக்க விருப்ப முடையோர்; கழி காதலர் - சிறந்த மணமக்கள் என்னும் பொருளைத்தருதல் காண்க. அகம் செய்து - மனத்திற்கொண்டு.

17. கிரணங்களை வீசும் மணிமுடி அணிந்த இந்திரனை அழைத்துத் தெய்வ யானை அம்மையாருக்கும், வேற்படையையுடைய முருகவேளுக்கும் விதிப்படி திருக்கலியாணத்தை இவ்விடத்திலே இப்போது செய்வதற்குரியன எல்லாவற் றையும் சித்தஞ்செய்க எனக் கட்டளையிட்டருளினர்.

மோலி - கிரீடம். இழை - ஆபரணம். கோலம் - அழகு. உறு முறை - பொருந்திய விதிப்படி.

18. அடிமையாகிய யான் உய்ந்தேன் என்று திருவடிகளை வணங்கி, ஆகாயத்தை அளாவிய கொடிகள் கட்டப்பெற்ற மதில்களையுடைய கோயிலின் கோபுரவாயில் முன்னர்ச்சென்று இடிக்கொடியை உயர்த்த இந்திரன் பேரூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுடைய திருவருள் இதுவாகும் என்று கருதி முடி வில்லாத இன்பத்தைத்தரும் திருமணவோலையை எத்திசைகளுக்கும் செல்ல விடுத்தான்.

புரிசை - மதில். இடிக்கொடி இந்திரனுக்குரித்து. முடங்கல் - ஓலை; பத்திரிகை. உய்த்தான் - செலவிடுத்தான்.

19. சிற்பநுட்பங்களில் வல்ல தெய்வத்தச்சனாகிய விச்சுவகன்மாவை அழைத்துக் கடப்பமலர் மாலையை யணிந்து விளங்கும் முருகக்கடவுளின் திருமணத்துக்கு எந்தவுலகத்திலும் காணமுடியாத அழகுடைய மண்டபம் ஒன்றை இவ்விடத்திலே எல்லாப் பொருள்களும் பொருந்துமாறு விரைவின் இயற்றுக எனப் பணித்தான்.

கற்பக நிதிகள் சிந்தா மணிகாம தேனு வென்னும்
நற்பொரு ளனைத்துங் கூவி நகருளா ரடுத்தார்க் கெல்லாம்
பொற்பம ரிழைக ளாதி புரிந்தன புரிந்த வாறே
அற்பொடும் வழங்குகென்ன வியங்கொண்டா னுர்வந் தோன்ற. 20

வியவரி னியவர்க் கூவி வியத்தகு வதுவைச் செய்தி
புயல்வளர் மாட மூதூர்ப் பொருந்தின ரறிந்து சால
நயவரு நகர்கோ டிப்ப நளியிமி லேற்றின் வாங்கும்
வயவுரிப் போர்வை வள்வார் வண்முர செருக்கு கென்றான். 21

வினைத்திறம் - சிற்பத்தொழில் வன்மை. விச்சுவகன்மன் - தெய்வத்தச்சன்; மயன் என்பாரும் உளர். கனைத்து - ஒலித்து. எனைத்துள வுறுப்பும் - மண்ட பத்துக்கு உள்ளனவாகிய எல்லா அவயவங்களும். வேதிகை, யாககுண்டம், வேள்விக்குரிய சாமக்கிரியைகள், முளைப்பாலிகை, பொற்றகும்புகள், குடங்கள் முதலியனவும். முற்ற - பூர்த்தியாக.

20. கற்பகம், சங்கநிதி பற்பநிதிகள், சிந்தாமணி, காமதேனு என்னும் இவைகளை யெல்லாம் அழைத்து நகரத்தினுள்ளாருக்கும், கலியாணத்துக்கு வந்துசேரும் விருந்தினர்களுக்கும் அழகிய ஆபரணங்களை வேண்டுவன வேண் டியவாறே அன்புடனே வழங்குவீராக என்று தன்விருப்பம் தோன்றக் கட்டளை யிட்டான்.

அடுத்தார் - வந்துபொருந்துவோர். பொற்பு - அழகு. புரிந்தன - விரும் பியவற்றை: புரிதல் - விரும்புதல்; தாம் தாம் விரும்பப்படுகின்ற பொருள்களை யெல்லாம் விரும்பியபடியே என்றபடி. வியங்கொண்டான் - கட்டளையிட்டான்; ஏவல்செய்தான்.

21. தூதுவர்களிலே சிறந்தோரை அழைத்து வியக்கத்தக்க திருமணச் செய்தியை மேகமண்டலம் வரையில் உயர்ந்து விளங்கும் மாடங்களையுடைய பழைய நகரத்திலேயுள்ள மக்கள் யாவரும் அறிந்து மிகவும் வந்துகூடும் நகரத்தை அலங்காரம் செய்யும்படி பெரிய திமிலையுடைய காளையினின்றும் உரித்ததோலைப் போர்த்து நிண்ட வார்களால் விசிக்கப்பட்ட வளவிய முரசத்தை அறைவீராக எனக் கட்டளையிட்டான்.

வியவர் - ஏவல் செய்வோர். புயல் - மேகம். நயவரும் - விரும்பிவரும்; விரும்பும். இயவர் - வாச்சியக்காரர். கோடிப்ப - அலங்கரிப்ப. நளி - பெருமை. இமில் - முரிப்பு; இமில் = திமில் - கொண்டை. ஏற்றின் வாங்கும் வயவுரிப் போர்வை; "வென்றதன்பச்சை சீவாது போர்த்த, திண்பிணி முரசம்" (புறநா - 288). "ஏற்றுரி முரசம்" (சிந்தா - 2142).

கிளையழு திரங்கக் காரா கிருகத்துக் குரங்கி நையும்
விளைபகை யவுண ராதி மேவலர் தம்மை யெல்லாம்
உளைவற விடுத்துப் போக்கி யுறுதிறை கறையுஞ் சின்னாள்
திளைமகி ழரச ரேனோர் தாங்களே தெவ்வ விட்டான். 22

இன்னணம் பணிக ளேவி யெம்பிரான் கழல்கள் போற்றி
மின்னவிர் குலிச வேலான் விழைதக விருந்தா னாகத்
துன்னிய வியவர் தம்மாற் சொன்னதன் னரச னேவன்
மன்னிய வியவன் கேளா மகிழ்வொடு மிதனைச் செய்தான். 23

பழையன கலனுந் தூசும் பாற்றிமற் றினிய துய்த்துத்
தழைமணச் சாந்து பூசித் தகர்விரைச் சுண்ண மட்டி
மழைமதக் களிறு பண்ணி வார்வெரிந் முரச மேற்றிக்
குழவிவெண் டிங்க ளன்ன குணில்கரத் தெடுத்துக் கொண்டான். 24

---

22. சுற்றத்தார் அழுதுபுலம்பச் சிறையிலகப்பட்டுத் தாழ்ந்து வருந்தும்படி போரைச்செய்யும் பகைமையுடைய அவுணர் முதலிய பகைவரையெல்லாம் வருந்தாதபடி விடுத்துப் போகச்செய்து, கப்பமாகிய கடமையையும் சில நாட்கள் திளைத்து மகிழுமாறு அரசர்களையும் ஏனையோரையும் தாங்களே முகந்துகொள்ளுமாறுவிட்டான்.

கிளை - சுற்றம். காராகிருகம் - சிறைக்கோட்டம்; சிறைச்சாலை. குரங்கி - தாழ்ந்து. மேவலர் - பகைவர். உளைவு - வருத்தம். திறை கறையும் - திறையாகிய கடமையும்: திறை - கப்பம். கறை - கடமை. தெவ்வ - முகந்துகொள்ள.

23. இவ்வாறு குற்றேவல்களைச் செய்யும்படி கட்டளையிட்டு எமது சுவாமியின் திருவடிகளை வணங்கி, ஒளியினை வீசும் வச்சிராயுதத்தையுடைய இந்திரன் இருந்தான். நெருங்கிய ஏவலாளர்களால் சொல்லப்பட்ட தன் அரசனுடைய ஏவல்களையெல்லாம் நிலைபெற்ற வாச்சியக்காரன் கேட்டு மகிழ்ச்சியோடு இதனைச் செய்தான்.

குலிசவேல் - வச்சிராயுதம். வியவர் - ஏவலர். இயவர் - வாச்சியக்காரர்.

24. பழையனவாகிய ஆபரணங்களையும் ஆடைகளையும் அகற்றிப் புதியவற்றை அணிந்து நிறைந்த மணம் வீசும் சந்தனத்தைப் பூசி, சுண்ணத்தையடித்து, யானையை அலங்கரித்து, அதன்முதுகிலே முரசத்தை ஏற்றிவைத்துப் பிறைச்சந்திரனை யொத்த குறுந்தடியைக் கையிலெடுத்துக் கொண்டான்.

கலன் - ஆபரணம். தூசு - ஆடை. பாற்றி - அகற்றி. பண்ணி - அலங்கரித்து. வெரிந் - முதுகு. குணில் - குறுந்தடி.

வாழிய பட்டி நாதர் மரகத வல்லி வாழி
ஊழியு முலவாப் பேரூ ரொலிவளத் தோடும் வாழி
யாழியன் மொழியா டெய்வ யானைதன் வதுவை நோக்கி
ஏழிய னுலகி னுள்ளார் யாவரும் வாழி யென்றான். 25

வேறு

அறங்கள் யாவரும் பேணுக வறன்கடை யொழிக
மறங்கு லாவிய செற்றங்கண் மனத்திடை வரைக
திறங்கு லாவிய வவரவர் செய்தொழில் விடுக
கறங்கு போன்மெனச் சுலாவுறுங் கவலைநெஞ் சிறுக. 26

வறுமை யாளர்கள் வளநிதி வேண்டின மடுக்க
உறுபொ ருளர்க ளுவப்பன வுடன்செயத் தொடுக்க
முறுகு காதலி னினியவூண் முறையினுண் டடுக்க
நறுமொ றுப்பவா னவர்கணல் லணிகண்மெய்ப் படுக்க. 27

---

25. பட்டிநாதர் வாழ்க. மரகதவல்லி வாழ்க. ஊழிக்காலத்தும் அழியாத பேரூர் தழைத்த வளத்துடனே வாழி. யாழையொத்த மென்மையான இனிய சொற்களையுடைய தெய்வயானையம்மையாருடைய திருமணத்தைத் தரிசித்து ஏழுலகிலுள்ளோர் யாவரும் வாழி என முரசறைந்தான்.

உலவா - கெடாத. ஒலி வளம் - தழைத்த வளப்பம். யாழ் இயல் மொழி - யாழையொத்த சொல். வதுவை - திருக்கலியாணம்.

26. எல்லோரும் அறச்செயல்களை விரும்பிச்செய்க. பாவச்செயல்களினின்று நீங்குக. தீமையைச்செய்யும் கோபத்தை மனத்திலும் கொள்ளாதொழிக. சிறந்த யாவரும் அவரவர் செய்யும் தொழில்களைச் செய்யாதொழிக. காற்றுடியைப் போலச் சுழலும் கவலையை நெஞ்சத்திலே விடுக.

அறன் கடை - பாவம். மறம் - தீமை. செற்றம் - கோபம். வரைக - விட்டு நீங்குக: 'வரைதலே கோள்ளல் நீக்கல்'. கறங்கு - காற்றுடி. சுலாவுறும் - சுற்றும். இறுக - நீங்குக.

27. தரித்திரர்கள் வளப்பமிக்க செல்வத்துடன் வாழ்க. செல்வர்கள் மகிழத்தக்க செயல்களையெல்லாம் உடனே செய்யத்தொடங்குக. மிக்க விருப்புடனே இனிய உணவுகளை முறையே உண்டு பொருந்துக. தேவர்கள் மனம் புழுங்க நல்ல அணிகலங்களை உடம்பெல்லாம் அணிந்துகொள்க.

மடுக்க - கொள்ளக்கடவர். நறுமொறுப்ப - மனம் புழுங்க.

கந்த டர்த்தெழுங் கடகரிக் கணம்புற நகரின்
உந்தி யாத்துறு காவலி னோம்புதல் புரிக
எந்த வையத்து மில்லையென் றியாவரும் வியப்பச்
சுந்த ரந்திரு நகரெலாந் துறுக்கவென் றறைந்தான். 28

தாம ரைச்செழும் பூவினைத் தண்மதிக் குழவி
காம முற்றிட வணைதலுங் கனன்றஃ தறைமேல்
ஏம மல்குற வெறிந்தென வெறிகுணின் முரசி
னுமனைத்தையும் புரிந்தக நகரணி துறுப்பார். 29

வேறு

சிகர மாளிகை சேணுயர் வீதிகண்
மகர தோரணம் வார்கொடி பூகத
நெகும லர்த்தொடை நீண்மணி மாலையுந்
தகைசெ யுந்தடங் காவண மிட்டனர். 30

---

28. கட்டுத்தறிகளை முறிக்கும் மதயானைக் கூட்டங்களை நகர்ப்புறத்திலே நன்றாகக் கட்டிவைத்து மிக்ககாவல்செய்க. எந்த உலகங்களினும் இல்லையென்று சொல்லி யாவரும் வியக்குமாறு அழகிய நகரமுழுவதையும் அலங்கரித்துவந்து நெருங்குக என்று முரசறைந்து சொன்னான்.

கந்து - கட்டுத்தறி. கடகரி - மதயானை. யாத்து - கட்டி. உறுகாவல் - மிக்க காவல். ஓம்புதல் - பாதுகாத்தல். வையம் - உலகம். துறுக்க - நெருங்குக.

29. தாமரைமலரைப் பிறைச்சந்திரன் விரும்பி அணைந்த காலத்துக் கோபித்து அதனைப் பாறைமேல் தன்னைப் பாதுகாத்தற்பொருட்டு வீசி எறிந்ததை யொப்பக் குறுந்தடியால் அறைந்த முரசொலியைக்கேட்டு அவ்வாறே நகரம் முழுவதையும் அலங்கரித்தனர்.

மதிக்குழவி - பிறைச்சந்திரன். கனன்று - கோபித்து. அறை - பாறை. புரிந்து - விரும்பிச் செய்து.

30. சிகரங்களையுடைய மாளிகைகளும் நீண்ட வீதிகள் முழுவதும் மகர தோரணங்களும் நீண்ட கொடிகளும் அரும்புகள் மலர்ந்த மலர்மாலையும் நீண்ட இரத்தினமாலையும் நெருங்கிய பெரிய காவணத்தையிட்டார்கள்.

சேண் உயர் - மிகவும் உயர்ந்த. பூகதம் - அரும்பு. நெகு - விரிந்த. தொடை - மாலை. தகைசெயும் - நெருங்கிய. காவணம் - பந்தர்.

வேதி தோறும் விரைப்பனி நீர்களுங்
கோதை யுங்குளிர் பூரண கும்பமும்
மாதர் பாலிகை யீட்டமும் வாசமுந்
தீதி லாப்பொரி யுஞ்செறி வித்தனர். 31

அரம்பை யாத்தணி செய்மனை வாய்தலில்
நிரம்பு நித்திலக் கோவை நிரைத்தனர்
சுரும்பு ணக்கடி மாலைக டுக்கினர்
விரும்பு கண்ணடி மீமிசை வைத்தனர். 32

கரைத்த செம்மணி நீர்கடிக் குங்குமம்
விரைத்த நீரின் விராய்மட மங்கையர்
சுரைத்த நாளத் துருத்தியிற் சிந்திமேல்
நிரைத்து ளார்நெடு வீதிபொற் சுண்ணமே. 33

மணியும் பொன்னு மலருந்தண் சாந்தமும்
பிணிசெய் பட்டும் பெருகொளிச் சுண்ணமுந்
தணிவின் மாடமுந் தையலர் போன்மென
அணிய நின்றன வந்நக ரெங்கணும். 34

---

31. மேடைகள்தோறும் மணம்பொருந்திய பனிநீர்களும், மாலையும், குளிர்ந்த பூரணகும்பங்களும், அழகிய பாலிகைகளின் கூட்டமும், அரிசியும், குற்றமில்லாத நெற்பொரியும் நிறைத்தார்கள்.

வேதி - மேடை. மாதர் - அழகு. ஈட்டம் - கூட்டம். வாசம் - அரிசி. பொரி - நெற்பொரி.

32. வாழைமரங்களைக்கட்டி அழகுசெய்யும் மனைவாயில்களில் நிறைந்த முத்துக்கோவையும் வரிசையாகக் கட்டினர். வண்டுகள் உண்ணும்படி மண முடைய மாலைகளைத் தொங்கவிட்டனர். யாவரும் விரும்பும்படி கண்ணாடிகளை மேலேவைத்தனர்.

அரம்பை - வாழை. யாத்து - கட்டி. நித்திலம் - முத்து. தூக்கினர் - தொங்கவிட்டார். மீமிசை - உயரத்திலே.

33. கரைக்கப்பட்ட சிவந்த அழகிய நீரை மணம் பொருந்திய குங்குமங் கலந்த நீரில் சேர்த்து உட்டுளையையுடைய துருத்தியில்வைத்து இறைத்து மேலே நீண்டவீதியில் அழகிய பொன்பொடிகளை நிரைத்தார்கள்.

குங்குமம் - குங்குமப்பூ. சுரைத்த - உட்டுளையையுடைய. துருத்தி - நீர் தூவும் துருத்தி.

34. இரத்தினமும் பொன்னும் மலரும் சந்தனமும் கட்டப்பட்ட பட்டும் மிக்க ஒளியையுடைய பொடிகளும் உயர்ந்த மாடங்களும் பெண்களைப்போலும் அந்நகரமுழுவதும் அலங்கரிக்கப்பட்டு நின்றன. தையலர் - மகளிர்.

பூவ ணத்தொடை யும்பொலந் தார்களுந்
தூவ ணப்பொடி யுந்துகி லீட்டமுங்
காவ ணத்திர ளும்பல காட்டலான்
ஆவ ணத்தை யடுத்தபல் வீதியும். 35

வேறு

கன்னிமா நகர மெல்லாங் கவின்கொளக் கோடித் தங்குத்
துன்னிய மாந்த ரின்பத் துறைதுறை முழுகா நிற்ப
முன்னிய முடங்க லேற்று முதிர்சுவை மன்றல் காண்பான்
என்னரு மகிழ்ச்சி துள்ள வெழுந்தனர் பேரூர் நோக்கி. 36

மருங்குபல் கணங்கள்சூழ வயிரவன் வீரன் சாத்தன்
ஒருங்கிய கால வங்கி யுருத்திர னாட கேசன்
நெருங்குகூர் மாண்ட ரின்ப நிகழ்பதி னொருவ ரென்னும்
இருங்கதி யருள வல்லா ரிவர்மகிழ் துளும்பப் புக்கார். 37

---

35. பொருந்தும் பல தெருக்களும், பூமாலையும் பொன்மாலையும் பரிசுத்த மான வண்ணப்பொடிகளும் துகில்களின் கூட்டமும் பந்தர்களின் திரளும் ஆகிய பலவற்றையும் காட்டுதலால் கடைவீதியை யொத்தன.

பொலம் - பொன். ஆவணம் - கடைத்தெரு.

36. அழியாத நகரமுழுவதும் அழகாக அலங்கரித்து அங்கே நெருங்கிய மக்கள் இன்பத்துறைகள் தோறும் மூழ்கத் திருமணவோலையை வாங்கிச் சிறந்த கலியாணத்தைக் காணும்பொருட்டு யாவரும் பேரூரை நோக்கி மகிழ்ச்சி மிக வரத் தொடங்கினர்.

கோடித்து - அழகுறச்செய்து. முடங்கல் - ஓலை. என்னரும் - எவ்வகைப் பட்ட நிலையினரும்.

37. பக்கத்திலே பலகணங்களும் சூழ்ந்துவர வயிரவக்கடவுள், வீரபத்திரக் கடவுள், ஐயனார், காலாக்கினியுருத்திரர், ஆடகேசர், கூர்மாண்டர், இன்பத்தைச் செய்யும் உருத்திரர் பதினொருவர் என்னும் முத்தியைக் கொடுக்கவல்லார் இவர் கள் மகிழ்ச்சி மிக வந்தடைந்தனர்.

வீரன் - வீரபத்திரர். சாத்தன் - ஐயனார். பதினொருவர் என்றது மூவர் எனவும் எண்மர் எனவும் கூறும் உருத்திரரை என்க. இதனை, கௌரி திருமணப் படலம் 49-ஆம் செய்யுளானும் அறிக. துளும்ப - மிக.

திருத்துழா யலங்கன் மார்பன் றிசைமுக னருக்கர் பல்வே
றுருத்திரர் வசுக்கண் மற்றை மருத்துவ ரொன்பா னெண்ணைக்
கருத்துற விரட்டி செய்த கணத்தவர் நதிக ளோங்கல்
பொருத்துகா லங்கள் வேலை புங்கமா தவருந் தொக்கார். 38

உரைத்திடப் பட்டோர் தங்க ளொண்டொடி மனைவி யாரும்
இரைத்தெழு கடல்போ லீண்டி யெய்தினர் நகரிற் சிந்தும்
அரைத்தசெஞ் சாந்துங் கோதை யலருமிழ் மதுவு மல்கித்
தரைத்தலை யிழுக்கப் பாதந் தளரிடைக் கின்னல் செய்தார். 39

அரிமதர் மழைக்க ணல்லா ராயமு மமரர் தாமும்
விரிகட லுலகின் வாழு மேதகு மாந்த ரோடுந்
தெரியிழை தருக்க ணல்கத் தேனுவின் னடிசி லுய்ப்ப
உரியன நிதியுஞ் சிந்தா மணியுமிக் குதவப் பெற்ருர். 40

---

38. திருமால் பிரமன் சூரியர் பலவேறு உருத்திரர் வசுக்கள் மருத்துவர் பதினெண்கணத்தவர் நதிகள் மலைகள் காலங்கள் சமுத்திரம் தூய இருடிகள் முதலிய யாவரும் வந்து நிறைந்தனர்.

சூரியர் பன்னிருவர், உருத்திரர் பதினொருவர், வசுக்கள் எண்மர், மருத்துவர் இருவர் ஆகியோர் முப்பத்துமுக்கோடி தேவர்கள். ஒன்பான் எண்ணைக், கருத்துற இரட்டி செய்த கணத்தவர்: பதினெண்கணங்களாவார்: தேவரும், அசுரரும், தைத்தியரும், கருடரும், கின்னரரும், கிம்புருடரும், இயக்கரும், விஞ்சையரும், இராக்கதரும், கந்தருவரும், சித்தரும், சாரணரும், பூதரும், பைசாசகணமும், தாராகணமும், நாகரும், ஆகாயவாசிகளும், போகபூமியோரும் என இவர்; "ஒன்பதிற் றிரட்டி யுயர்நிலை பெறிஇயர்" (முருகு - 168) என்பதற்கு நச்சினர்க்கினியர் உரை. பிறவாறுரைத்தல் புறநானூறு கடவுள் வாழ்த்தின் உரையிலும், சிலப்பதிகாரம் 5 - 176 ஆம் அடி உரையிலும் காணலாகும்.

39. மேலே சொல்லப்பட்டவர்களுடைய மனைவிமார்களும் கடல்போலத் திரண்டுவந்து நெருங்கினர்கள். நகரத்திலே சிந்துகின்ற சந்தனக்குழம்பும், மலர்மாலையினின்று ஒழுகும் தேனும் நிறைந்து தரையிலே வழுக்கப் பாதங்களுக்கும் ஒல்கும் இடைக்கும் துன்பத்தைச் செய்தார்கள்.

இரைத்து எழு - ஒலித்து எழும்புகின்ற. ஈண்டி - நெருங்கி, செறிந்து. செஞ்சாந்து - செஞ்சந்தனக் குழம்பு. கோதை - மாலை. மல்கி - நிறைந்து' இழுக்க - வழுக்க. இன்னல் - துன்பம்.

40. பெண்கள் கூட்டமும், தேவர்களும் நிலவுலகத்தில் வசிக்கும் சிறந்த மக்களும் ஆராய்ந்த அணிகலங்களைத் தேவர் தருக்கள் கொடுக்க, காமதேனு இனிய உணவை நல்க, வேண்டிய பிறவற்றை யெல்லாம் சங்கநிதி பதுமநிதிகளும் சிந்தாமணியும் மிகுதியாக உதவ அவற்றையெல்லாம் பெற்றுக்கொண்டனர்.

விழுத்தகு முண்டி யானும் விலகிவில் லுமிழுந் தெய்வக்
குழுத்தகு கலனுந் தூசுங் குறைவற வணித லானும்
பழுத்தமெய் யன்பிற் றுன்னும் பாரினர் தம்மை விண்ணின்
வழுத்தப வதிகின் றூரை வரைவுசெய் தறிய லாகா. 41

உம்பர்கண் மிடைத லானு மொளிர்ந்தபொன் னிறத்தி னானும்
வம்பவிழ் தருக்க ளாதி வயின்வயி னிற்ற லானும்
பம்பிரு ளிரவு மாறப் பன்மணி கதிர்த்த லானும்
நம்பனூர் பேரூர் நாக நகரொடு மலைத்த தன்றே. 42

கண்டுகண் ணடியிற் பண்டைக் கலனெலா நீத்துத் தாரு
மண்டொளி யிழைகள் வாங்கி வனப்புற வணிகின் றூரும்
உண்டியி னுவக்கின் றூரு மொலிபுனற் றுளைகின் றூரும்
வண்டலாட் டயர்கின் றூரு மங்கைய ராயி னாரே. 43

அரி - செவ்வரி. மதர் - செழிப்பான. நல்லார் - பெண்கள். ஆயம் - கூட்டம். தெரி இழை - ஆராய்ந்தெடுத்த ஆபரணங்கள். தேனு - காமதேனு. இன்னடிசில் - இனிய உணவு. உய்ப்ப - கொண்டுவந்து கொடுப்ப. உரியன - மற்றும் உரிய பொருள்களையெல்லாம்.

41. மேம்பட்ட உணவினாலும், விட்டுவிட்டுப் பிரகாசிக்கும் தெய்வத் தன்மையுடையார் பூணும் அணிகலன்களும், ஆடைகளும் குறைவின்றி அணித லானும், முதிர்ந்த உண்மையன்புநிறைந்த நிலவுலகத்தவர்களையும் விண்ணுலகில் குற்றமற வசிக்கின்றவர்களையும் இவரிவர் என்று அளவிட்டுச் சொல்லமுடியாது.

வில் - பிரகாசம்: விலகிவில் உமிழ்தல் - இடைவிட்டு ஒளியைவீசுதல்; ''விலகி வில்லுமிழ் விரிகதிர் மணிபல வரன்றி'' (நைடதம் - நாட் - 3) கலன் - ஆபரணம். தூசு - பட்டு; ''தூசுந் துகிரும் ஆரமும் அகிலும்'' (சிலப் - இந்திர - 18) வரைவுசெய்து - வரையறை செய்து.

42. தேவர்கள் நெருங்கியிருத்தலானும், ஒளிவீசும் பொன்னிற முடைமை யானும், வாசனைவீசும் தருக்கள் முதலியன இடந்தொறும் இடந்தொறும் நிற்ற லானும், நிறைந்த இருளையுடைய இராக்காலம் மாறுபடும்படி பலவகை இரத்தி னங்களும் ஒளிசெய்தலானும், சிவபெருமானுடைய பேரூர் விண்ணுலகத்தோடு ஒத்தது.

உம்பர் - தேவர். மிடைதல் - செறிதல். வம்பு - வாசனை, புதுமை. வயின்வயின் - இடந்தோறும். பம்பு - நெருங்கிய. கதிர்த்தல் - பிரகாசித்தல். நம்பனூர் - சிவபெருமான். நாகநகர் - விண்ணுலகம். மலைத்தது - ஒத்தது.

43. கண்ணாடியைப் பார்த்து முன்பு அணிந்துள்ள ஆபரணங்களை யெல் லாம் கழற்றிவிட்டுக் கற்பகமுதலிய தருக்கள் வழங்கும் ஆபரணங்களை வாங்கி அழகுற அணிந்துகொள்ளுகின்றவர்களும், உணவினல் மகிழ்ச்சியடைவோரும், ஒலியுடைய நீரிலே துளைந்து ஆடுகின்றேரும், விளையாட்டுக்களைச் செய்கின் றேரும் ஆயினர் மகளிர்யாவரும்.

வாம்பரி யுகைக்கின் றூரு மதகரி துரக்கின் றூரும்
ஓம்பிய விமானம் பொற்றே ருழியுழி யூர்கின் றூரும்
ஆம்புற நகரி னேகி யரிவையை யணிகின் றூருந்
தாம்பல ராயி னூர்க டடவுத்தோண் மருமப் பூணூர். 44

பூவையிற் கிளியின் வென்றும் பூங்கழற் பந்தின் வென்று
மேவரு பிடியாட் டத்தின் மெல்லியர் தம்முள் வெல்ல
ஓவறு தகர்கள் கோழி யொண்சிவ லாதி விட்டுத்
தாவின்மைந் துடையோ ரெல்லாந் தம்முளே வெல்லா நின்றூர். 45

துறக்கநாட் டவர்கட் கெல்லாந் துறக்கமண் ணுலகா வேறு
துறக்கமொன் றெய்திற் றென்னச் சுவைப்பயன் பலவு நல்கிச்
சிறக்குமப் பேரூர் மாட்டுச் செறிந்தவர்க் கொழிவி னுள்ளம்
பிறக்குமோ சுவைத்த வுள்ளம் பெயரினு மிறக்கு மோதான். 46

தாரு - பஞ்சதருக்கள். உண்டி - உணவு. துளைதல் - மூழ்கிவிளையாடுதல். வண்டலாட்டு - விளையாட்டு.

44. தாவிச்செல்லும் குதிரைகளைச் செலுத்துகின்றோரும், மதயானைகளைச் செலுத்துவோரும், விமானம், தேர் முதலியவற்றில் ஏறி அங்கங்கே ஊர்ந்து செல்கின்றவர்களும் புறநகரிலே சென்று மகளிரை அலங்கரிக்கின்றோருமாகிப் பெரிய தோள்களிலும் மார்பிலும் ஆபரணங்களையுடைய ஆடவர் பலராயினர்.

வாம் = வாவும் - தாவிச்செல்லும். உகைத்தல், துரத்தல், ஊர்தல் என்பன செலுத்துதல் என்னும் பொருளையுடையன. மருமம் - மார்பு. தடவு - பெரிய.

45. பெண்கள் தங்களுக்குள்ளே நாகணவாய்ப்புள், கிளி முதலியவற்றால் வெல்லுதலும், அழகிய கழற்சிக்காய் பந்து இவைகளால் வெல்லுதலும், பிடியாட்டத்தால் வெல்லுதலும் உடையராக; ஆடவர்களில் நீங்குதலில்லாத தகர்வென்றி கோழிவென்றி கவுதாரிவென்றி முதலியவைகளால் கேடில்லாத வலியுடையோரெல்லாம் வெல்லுவாராயினர்.

பூவை - நாகணவாய்ப்புள். கழல் - கழற்சிக்காய். மெல்லியர் - பெண்கள். ஓவு அறு - நீங்குதலின்றி. சிவல் ஆதி - கவுதாரி, காடைமுதலியன. மைந்து - வலிமை.

46. விண்ணுலக வாசிகளுக்கெல்லாம் விண்ணுலகம் மண்ணுலகமாக வேறு விண்ணுலகமொன்று வந்தடைந்தது என்று சொல்லும்படி சுவையையுடைய பலவகையான பயன்களையும் கொடுத்துச் சிறந்திருக்கும் அந்தப் பேரூரில் வந்தடைந்தோருக்கெல்லாம் அதனைவிட்டு நீங்குதற்கு மனம் உண்டாமோ? அன்றி, பயனை நுகர்ந்த மனம் நீங்கினும் செயல் உண்டாகுமோ? உண்டாகாது.

துறக்கம் - விண்ணுலகம். ஒழிவின் - விட்டு நீங்குதலின். இறக்குமோ - செல்லுமோ.

நகரினை யடுத்தோர் சால நல்லபே ரின்பந் துய்ப்பப்
புகரிலாத் தேவ தச்சன் புயன்மணி யூர்தி மனனை
புகலரு டலைமேற் கொண்டு புவனங்க ளனைத்தி னுள்ளும்
நிகரில தாக நீண்ட மண்டப நிருமித் தானால். 47

வேறு

திண்ணென வடித்தலஞ் செம்பொ னோடவிட்
டொண்ணிற வச்சிர முறுத்தி யும்பரின்
நண்ணொளிச் செம்மணி நலக்க விட்டனன்
மண்ணற றிமுறை வயங்கி னாலென. 48

ஒளிக்குமேல் வளியென வுறுகு றட்டின்மேல்
துளிக்குநீ னிறக்கதிர்த் தூண நாட்டிமேற்
பளிக்கினிற் போதிகை பயிற்றி யிட்டனன்
வளிக்குமேல் வெளியென மருட்கை கொள்ளவே. 49

---

47. பேரூர் நகரத்தைப் பொருந்தினோர் மிகவும் சிறந்த பேரின்பத்தை நுகரக் குற்றமில்லாத தெய்வத்தச்சன் மேகவாகனனாகிய இந்திரன் சொன்ன சொற்களைச் சிரமேற்கொண்டு எல்லா உலகத்தினும் ஒப்பற்றதாகப் பெரிய மண்டபத்தைச் செய்துமுடித்தான்.

துய்ப்ப - அநுபவிக்க. புகர் இலா - குற்றமில்லாத. தேவதச்சன் - விச்சுவ கன்மன். புயல் ஊர்தி - இந்திரன். எனைத்தினுள்ளும் - எல்லாவற்றினும். நிகர் - ஒப்பு. நிருமித்தான் - செய்து முடித்தான். மயன் - அசுரத்தச்சன் என்பர். நிருமித்தல் - மனச்சங்கற்பத்தால் செய்தல்.

48. வன்மையாக அடித்தலத்திலே செம் பொன்னை உருக்கி வார்த்து, ஒளிபொருந்திய வயிரக்கற்களைப் பதித்து, மேலே பிரகாசத்தையுடைய மாணிக்கக் கற்களை நன்மை பொருந்தப் பதித்தான்; அவை மண் நீர் அனல் என்பன முறையே விளங்கினாற்போன்றுள்ளன.

அடித்தலம் - கீழ்ப்பரப்பு. ஓடவிட்டு - உருக்கி வார்த்து. வச்சிரம் - வயிரக் கல். உம்பரின் - மேலே. செம்மணி - மாணிக்கம். அறல் - நீர்.

49. ஒளிக்கு மேலே காற்று என்று சொல்லும்படி பொருந்திய குறட்டிலே நீல ஒளியை வீசும் இந்திரநீலக்கற்களால் தூண்களை நிறுத்தி, காற்றிற்குமேல் ஆகாயம் என்று யாவரும் மயங்கும்படிமேலே பளிங்குக்கற்களால் போதிகைகளைச் செய்து வைத்தான்.

ஒளி - அக்கினி. வளி - காற்று. வெளி - ஆகாயம். போதிகை - சுமையடை கட்டை. மருட்கை - மயக்கம்.

வேறு

தொத்தொளி கஞற்றிவரு சூரியரை வார்த்து
வைத்தனைய வித்துரும வுத்திரம் வயக்கிப்
பொத்துகுளிர் வெண்மதி புணர்த்ததென மேலான்
நித்தில மழுத்திய நெடும்பலகை யிட்டான். 50

வெய்யவ னொழுக்கிய விழுக்கிரண மென்ன
வையவொளி யுத்திர மமைத்தபுடை யெல்லாஞ்
செய்யமணி செந்துகிர் செழும்பொனிவை செய்த
பெய்யுமொளி மாலைபிற வுந்துவள வார்த்தான். 51

சீதள நறுங்கிரணந் திங்களுமிழ் கின்றுங்
கோதமலி நித்தில வொலித்தொடையல் வேய்ந்த
மாதரள வொண்பலகை வைகுவயின் முற்றுஞ்
சோதிமலி யப்பெரிதுந் தூக்கியொளிர் வித்தான். 52

---

50. கொத்தாக ஒளி செறிந்து வரும் சூரியர்களை வார்த்து வைத்தாற் போல, பவள உத்திரங்களைப் பரப்பி, நிறைந்த குளிர்ச்சியுள்ள வெண்மையான சந்திரனைச் சேர்த்தாற் போன்று மேலே முத்துக்களைப் பதித்துள்ள பலகைகளை வைத்தான்.

தொத்து - கொத்து. கஞற்றி - நெருங்கி. சூரியர் பன்னிருவர் ஆகலின் பன்மையாற் கூறினர். வித்துருமம் - பவளம். பொத்து - நிறைந்த. புணர்த்தது - சேர்த்து வைத்தது. நித்திலம் - முத்து. அழுத்திய - பதித்த. சூரியர்பால் வெண் மதி புணர்த்ததென என்றது நயம்.

51. சூரியன் ஒழுகவிட்ட மேம்பட்ட ஒளியென்று சொல்லுமாறு அழகிய உத்திரங்கள் பொருந்திய பக்கங்களிலெல்லாம் மாணிக்கம் பவளம் செம்பொன் இவைகளாற் செய்த ஒளிபொருந்தும் மாலைகளையும் பிறவற்றையும் துவளும்படியாகக் கட்டினன்.

வெய்யவன் - சூரியன். விழு - மேலான. ஐய - அழகிய. புடை - பக்கம். செய்யமணி - மாணிக்கம். செந்துகிர் - சிவந்த பவளம். துவள - அசையும்படி.

52. குளிர்ந்த நல்ல ஒளியைச் சந்திரன் வெளிப்படுத்தினாற்போல குளிர் நிறைந்த முத்துக்களால் வேயப்பட்ட மாலைகள் தொங்கவிட்ட சிறந்த முத்துப் பலகைமுழுவதும் ஒளிநிறையப் பெரிதும் தொங்கவிட்டு ஒளியையுண்டாக்கினன்.

சீதளம் - குளிர்ச்சி. கிரணம் - ஒளி. திங்கள் - சந்திரன். ஓதம் மலி - குளிர்ச்சி நிறைந்த. ஒலித்தொடையல் - தழைத்த மாலைகள். ஒலியல் - மாலை. மா தரளம் - பெரிய முத்துக்கள். மா - பெருமைபொருந்திய எனினுமாம். வயின் - இடம். தூக்கி - தொங்கவிட்டு.

வண்டுபட ராதமலர் வண்டொடலை யானு
முண்டளி சுலாவுமல ரொண்டெரிய லானுங்
கொண்டநவ மாமணியின் கோதைகளி னானும்
எண்டவிர் வரைப்புமில தாகவணி செய்தான். 53

பளிக்கினுயர் பித்திகை பயிற்றியதன் மாடே
வெளிக்கணிமை யார்கண்மிடை யுற்றநிரை யென்னத்
துளிக்குமொளி யோவிய வொழுங்குக டொகுத்தான்
களிப்பவெதிர் நோக்குநர்கள் கண்மலர்கள் வாங்க. 54

வாய்ந்தபல தூண்கடொறும் வாருறைகள் சேர்த்தான்
ஆய்ந்துநில னெங்குமவிர் கம்பலம் விரித்தான்
வேய்ந்துமணி யும்பரின் விதானமு முறுத்தான்
பாய்ந்தவெழி னித்திரள்கள் பாங்குற வமைத்தான். 55

---

53. வண்டுகள் மொய்யாத மலர் மாலைகளினாலும், தேனையுண்டு வண்டுகள் சுற்றும் மலர் மாலைகளினாலும், நவரத்தின மாலைகளாலும், நினைத்தற்கரிய எவ்விடத்தும் இல்லையென்னும்படி அழகுபடுத்தினான்.

வண்டு படராத மலர் - கற்பகப்பூ முதலாயின. தொடலை, தெரியல், கோதை என்பன ஒருபொருட் சொற்கள். அளி - வண்டு. சுலாவும் - சூழும். எண்தவிர் - எண்ணம் நீங்கிய: நினைத்தற்கரிய: அளவில்லாத எனவுமாம். வரைப்பு - இடம்.

54. பளிங்குக் கற்களால் உயர்ந்த மதில்களைச் செய்து அதன்பக்கலில் உள்ள வெற்றிடங்களிலே தேவர்கள் நெருங்கிய வரிசையென்று மிக்க ஒளியொழுகும் சித்திரங்களின் ஒழுங்குகளைத் தொகுத்து வைத்தான்; பார்ப்போர் வியப்படைய, கண்களைப் பின்வாங்கும்படியாக எதிரே வந்து.

பித்திகை - மதில், சுவர். மிடையுற்ற - நெருங்கிய. ஓவியம் - சித்திரம். மாடு - பக்கம். வாங்க - கூசுதலினால் மீட்க.

55. பொருந்தியுள்ள தூண்களுக்கெல்லாம் நீண்ட உறைகளைப் பொருத்தினான். நிலப்பரப்பு முழுவதும் விளங்கும் இரத்தினக் கம்பலங்களை விரித்தான். மேலே மணிகளால் வேயப்பட்ட மேற்கட்டிகளையும் கட்டினான். பரவியுள்ள எழினிகளையெல்லாம் பக்கங்களில் பொருந்தப் பண்ணினான்.

உறைகள் - மேலுறைகள். உம்பர் - மேலிடம். எழினி - திரைச்சீலை: ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரலெழினி என்பன. "இடத்தூணின் நிலையிடத்து ஒருமுக எழினியும், இரண்டு வலத்தூணின் நிலையிடத்துப் பொருமுக எழினியும், மேற்கரந்துவரலெழினியுமாகச் செயற்பாட்டுடனே வகுத்து" (சிலப் - அரங் - 109 - 10) என்பது காண்க.

மாமணி விளக்குமலர் மாலையொடு சாந்துங்
காமர்கல னுங்கவரி யாடிகுடை மற்றுந்
தூமணி யியன்றசுடர்ப் பாவையினி தேந்தி
ஏமுற விடந்தொறு மியங்கவிசை வித்தான். 56

குண்டமொடு வேதிமுத லானகுறை தீர்த்திட்
டொண்டவிசு மன்றலுறு வார்க்கிடை யுளுற்றிக்
கண்டவிர் நுதற்கடவு ளார்முதலி னோர்க்கு
மண்டுமரி யாதனம் வயின்றொறு முறுத்தான். 57

கதலிவள ருங்கமுகு கன்னனெடு வானிற்
பொதுளிய தருக்களிவை போதுகனி மற்றும்
உதவவொளிர் தூண்டொறு முறுத்துநனி யாத்தங்
கெதிரில்பல தோரண மிடந்தொறும் விசித்தான். 58

மிகக்கவின் விளைத்தவியன் மண்டப மருங்கு
புகப்படி பொலிந்தவயி டூரியம தாக்கி
நகைக்கதிர்செய் வச்சிரநல் யாளியதன் மாடே
முகக்கவினை வித்தனன் முதிர்ந்தழ கெறிப்ப. 59

---

56. இரத்தினதீபங்களும் மலர்மாலைகளுடனே சந்தனமும் அழகிய அணிகலங்களும் சாமரம் கண்ணாடி குடை மற்றுள்ள பொருள்களும் இரத்தினங்களால் செய்யப்பட்ட ஒளிபொருந்திய பாவைகள் இனிதாகச் சுமந்து கண்டோர் மயங்குமாறு இடங்கள்தோறும் ஊர்ந்துசெல்லும்படி பொருந்தவைத்தான்.

காமர் - அழகு, விருப்பம். பாவை - பிரதிமைகள், வடிவங்கள். ஏமுற-மயங்க. இயங்க - ஊர்ந்து செல்ல.

57. வேள்விக் குண்டங்களோடு, வேதிகை முதலியவற்றைக் குறைவின்றி அமைத்தும், ஆதனங்கள் திருமணங்காண வருவாருக்கு அங்கங்கே அமைத்தும், சிவபெருமான் முதலியோருக்கு நிறைந்த சிங்காதனங்களையும் இடந்தோறும் அமைத்தும் வைத்தான்.

58. வாழை கமுகு கரும்பு முதலியனவும், விண்ணோர் தருக்கள் உதவும் மலர் கனி முதலியனவும் தூண்கள்தோறும் நன்றாகக்கட்டப்பட்டுள. எதிரில்லாத பல தோரணங்களையும் இடங்கள்தோறும் கட்டினான்.

கதலி - வாழை. கமுகு - பாக்கு. கன்னல் - கரும்பு. பொதுளிய - நெருங்கிய. போது - மலர். யாத்து - கட்டி. விசித்தான் - கட்டினான்.

59. பேரழகைத்தரும் பெரிய மண்டபத்தின்கண் புகுவதற்குப் படிக்கட்டுகளை வயிடூரியமணிகளால் அமைத்தும், விளங்கி ஒளிவிசும் வைரக்கற்களால் நல்லயாளிகளைச் செய்தும் அதன்பக்கத்தில் சிறந்த அழகைச் செய்யும்படி முகப்பிலே பொருத்திவைத்தான்.

வேறு

கோமே தகத்தின் யாளிவரி கொளுத்திக் கொடுங்கை மரகதத்தின்
ஆமா றியற்றி யதினெங்கு மவிர்பொன் னரிமா லிகைவாசப்
பூமா லிகைபன் மணிமாலை புகரில் கவரி யாடிகனி
தூமா ணழகு பெறத்தூக்கித் துவண்டு நிலந்தோய்ந் தனநான்றே. 60

மருங்கு பயின்ற வயின்றோறு மலர்ப்பூம் பந்த ரமைத்துள்ளால்
இருங்குங் குமச்சே றிழுத்தநிலத் திலகு மணிநித் திலம்பரப்பி
ஒருங்கு கமழு நறும்பனிநீ ருரைத்துத் தவழ விளந்தென்றல்
நெருங்கு பலவிம் மிதப்பொருள்க ணிரப்பிக் கொடியு மிசையுயர்த்தான்.

வள்ள மருட்டும் வாய்க்கமல மலர்மென் குமுத நறுங்குவளை
வெள்ளை நிறத்தோ திமத்திரள்கள் விரிபூஞ் சிறைச்சக் கரவாகப்
புள்ளும் பிறவும் பயின்றுமணிப் புனன்மிக் குடைய தடம்பொய்கை
நள்ளு மலர்ப்பூம் பந்தரய னணுக வமைத்தா னலங்கொழிப்ப. 62

கவின் - அழகு. புக - நுழைவதற்கு. படி - படிக்கட்டுகள். வச்சிரம் - வைரமணி. முகக்க - வரப்பண்ண.

60. கோமேதகத்தினாலே யாளிவரியை அமைத்துக் கொடுங்கையை மரகதக்கல்லினாலே இயன்றவரைசெய்து அதில் எவ்விடத்தும் விளங்கும் பொன்னரிமாலை, மணம்வீசும் பூமாலை, பலவகை இரத்தினமாலை, குற்றமில்லாத சாமரம் கண்ணாடி பழங்கள் முதலியவற்றையும் அழகுபெறத் தொங்கவிட அவை துவளும்படி நிலத்திலே பொருந்தத் தொங்கின.

கொளுத்தி - அமைத்து. மாலிகை - மாலை. புகர் இல் - குற்றமில்லாத. கவரி - சாமரம். தூ - பரிசுத்தம். தூக்கி - தொங்கவிட்டு. ஆடி - கண்ணாடி. நான்று - தொங்கி.

61. பக்கத்திலே இடந்தோறும் அழகிய பூப்பந்தர்களை அமைத்து, உட்புறத்தில் மிக்க குங்குமச் சேற்றினாலே மெழுகி, அந்த நிலத்தில் விளங்கும் முத்துக்களைப் பரப்பி, மணம் நாறும் பனிநீரைத் தெளித்து, இளந் தென்றற்காற்று தவழ்ந்து செல்லுமாறு செய்து, செறிந்த பல வியப்பைத்தரும் பொருள்களையும் நிறைத்து மேலே கொடியையும் உயர்த்தி வைத்தான்.

இழுத்த - மெழுகிய. நித்திலம் - முத்து. உரைத்து - தெளித்து. விம்மிதம் - ஆச்சரியம்.

62. கிண்ணத்தை மயங்கச் செய்யும் வாயையுடைய தாமரைமலர், குமுதம், குவளை மலர்கள், வெண்ணிறமுடைய அன்னத்தின் குழுக்கள், விரிந்த அழகிய சிறகுகளையுடைய சக்கரவாகப்புள், பிறபறவைகள் முதலியன வசித்துவர அழகிய நீர்மிக்குள்ள பெரிய பொய்கைகள் பூப்பந்தரின் அயலிலே நெருங்கியிருக்கும்படி நலமிக அமைத்தான்.

சுரும்பு மிழற்றத் தேன்றுளிப்பத் தோகை நடிப்பக் கிளிபூவை
விரும்பிக் கிளவி யெதிர்பயிற்ற விழைந்து குயில்க ளனிகூவ
அரும்பு மொளிமே டைகள்புளின மமைத்த வரையென் றிவைபயில
இரும்பொ னுலகும் புறங்கொடுப்ப வெடுத்தான் மருங்காங் குய்யானம்.

இன்ன படிமங் கலவதுவைக் கியைய மணிமண் டபமாதி
மன்ன வியற்றி மகிழ்கூர்ந்து வானோர் தச்ச னடிபணியக்
கொன்னும் வயிரப் படைவேந்தன் குறுகி யுமைபா கரைப்பணிந்து
நன்னர் வதுவைச் சிறப்பனைத்து நம்ப வியன்ற வெனக்கிளந்தான். 64

கருணை யரும்புந் திருவுளத்துக் கடவுள் பெருமான் முகமலரா
அருகு வணங்கித் தொழுதேத்து பரவப்பள்ளி வானவனைப்
பெருகு மகிழ்வின் முகநோக்கிப் பேறு வவுணர் குலஞ்சாய்த்த
முருக னுருவ மணிசெய்தி முகுந்த வெனச்செவ் வாய்மலர்ந்தார். 65

வள்ளம் - கிண்ணம். மருட்டும் - மயங்கப்பண்ணும். கமலமலரின் வாய் கிண்ணம் போல்வது; 'வள்ளவாய்ச் செழுங்கமலத்தில்' (நைடதம்). "வள்ள வாய்க் கமலம் மலர்க்கையால் வளைத்து" (பண்டாரமும்மணிக்-26). குமுதம் - அல்லி. குவளை - நிலோற்பலம். ஓதிமம் - அன்னப்பறவை. சிறை - சிறகு. மணிப்புனல் - நிலமணிபோன்ற நீர்.

63. வண்டுகள் ஒலிக்கத் தேன்துளிக்க, மயில்கள் கூத்தாடக் கிளிகளும் நாகணவாய்ப்புட்களும் சொற்களை விரும்பி எதிராகச் சொல்ல, குயில்கள் மிக விருப்பத்துடன் நன்றாகக் கூவ, ஒளியினைச்செய்யும் மேடைகள் மணற்குன்றுகள் என்னும் இவைகள் பொருந்தப் பெரிய விண்ணுலகமும் புறமுதுகிட்டோடப் பக்கத்திலே அங்கங்கே உய்யானத்தையும் அமைத்தான்.

சுரும்பு - வண்டுகள். மிழற்ற - ஒலிக்க. தோகை - மயில். பூவை - நாகணவாய்ப்புள். கிளவி - சொற்கள். அரும்பும் - தோன்றும். புளினம் - மணற்குன்றுகள். உய்யானம் - பூஞ்சோலை.

64. இவ்வாறு மங்கலமாகிய திருமணத்துக்குப் பொருந்தும்படி அழகிய மண்டபம் முதலியவற்றைச் செய்துமுடித்து மகிழ்ந்து தெய்வத்தச்சன் அடிகளில் விழுந்து வணங்க, இந்திரன் சிவபெருமான் சந்நிதியை அடைந்து நன்றாகத் திருமணத்துக்குரிய சிறப்புக்களெல்லாம் சித்தமாயின என்று விண்ணப்பித்தான்.

இன்னபடி - இவ்வாறு. வதுவை - கலியாணம். வயிரப்படை - வச்சிராயுதம். வேந்தன் - இந்திரன். நன்னர் - நன்றாக. கிளந்தான் - சொன்னான்.

65. அருள்தோன்றும் திருவுளத்தையுடைய சிவபெருமான் முகமலர்ந்து, அருகிலே நின்று வணங்கித் துதிக்கும் திருமாலை மகிழ்ச்சியோடு பார்த்து முகுந்தனே! அவுணர் குலமுழுதையும் பொருதழித்த முருகவேளை அலங்காரம் செய்க என்று திருவாய் மலர்ந்தருளினர்.

குமிழ்மென் மலரைப் புறவகற்றுங் கொடிநா சியினித் திலமணிந்த
அமிழ்த நிகர்த்த மொழிக்கமலை யடிக ளிறைஞ்ச வடுத்தாளை
இமிழ்தண் கருணை யானேக்கி யிமையார் பழிச்சும் யானைதனைத்
தமிழி னினிப்ப வணிகென்னச் சயில முயிர்த்தாள் வாய்மலர்ந்தாள். 66

வேறு

அருள்செயப் பணிசெய வரிய மாதவ
மருவின முன்னர்மண் ணிலத்து மாமெனத்
திருமறு மார்பனுங் கமலச் செல்வியும்
உருகிய வன்புகொண் டுஞற்றப் புக்கனர். 67

பெருங்கடற் பாயலான் பெட்ட பல்பொருள்
தருங்கடன் பூண்டனன் சதம கத்தினன்
ஒருங்கயி ராணியொண் கமலை வேட்டன
அருங்கல னுதிக ளளிக்க நின்றனள். 68

அரும்பும் - தோன்றும். அரவப்பள்ளி வானவன் - திருமால். அரவப்பள்ளி- ஆதிசேடனாகிய படுக்கை. அணி செய்தி - அலங்காரம் செய்வாய்.

66. குமிழமலரை யொத்த மூக்கிலே முத்தையணிந்துள்ள அமுதத்தை யொத்த சொல்லையுடைய திருமகள் திருவடிகளில் வீழ்ந்து வணங்க, தம்மை வணங்கிய திருமகளைக் கருணையோடு பார்த்துத் தேவர்கள் துதிக்கும் தெய்வயானையைத் தமிழைப்போன்று இனிமையாக அலங்காரம் செய்வாய் என்று மலைமகளாகிய பார்வதி கூறினள்.

புறவு - முல்லைநிலம். கமலை - திருமகள். தமிழின்: இன் ஒப்புப் பொருள். அணிக - அலங்காரம் பண்ணுக. சயிலம் உயிர்த்தாள் - மலைமகள்.

67. கட்டளையிட்டருளிய அந்தப் பணிகளைச் செய்யுமாறு அரிய பெரிய தவத்தை நாம் செய்துவைத்தோம். நிலவுலகத்தும் ஆம் இது என்று திருமாலும் திருமகளும் உருகியோடும் அன்புடன் அலங்காரஞ் செய்யப்போயினர்.

திரு மறு மார்பன் - திருவையும் மறுவையும் உடைய மார்பனாகிய திருமால். கமலச்செல்வி - செந்தாமரை மலரிலுள்ள இலக்குமிதேவி. உஞற்ற-அணிசெய்ய.

68. பெரிய திருப்பாற்கடலிலே யோகநித்திரை செய்தருளும் திருமால் விரும்பிய பல பொருள்களையும் இந்திரன் கொடுத்தான். இந்திராணி, திருமகள் விரும்பிய பொருள்களாகிய அணிகலன்களையும் ஆடைகள் முதலியவற்றையும் கொடுக்கச் சித்தமாயிருந்தாள்.

மங்கல மணிமுர சியம்ப வானமர்
கங்கைவெண் களிற்றின்மேற் கடத்திற் போதரா
அங்கலும் மேனியி ஞட்ட வைத்தனர்
புங்கவர் முருகனைப் போற்றி மாயவன். 69

உவளக வரைப்பிஞெண் டவிசின் மேலிரீஇத்
தவளவெள் வளையினந் தழங்கத் தண்கடற்
பவளமொத் தவிர்நிறத் துருவிற் பல்கிய
திவளொளி யணிதிக ழன்பிற் போக்கினன். 70

அருக்கிய முதலிய வமைத்து வா நெய்
மருக்கிளர் சிகழிகை மலிய வைத்துரை
இருக்குரைத் தாட்டுவ வேனை யாவையும்
ஒருக்கிய சிந்தைகொண் டுழி ஞட்டினன். 71

பாயல் - படுக்கை. பெட்ட - விரும்பிய. சத மகத்தினன் - நூறு அசுவமே தங்களையியற்றிய இந்திரன். அயிராணி - இந்திராணி. கமலை - திருமகள். வேட்டன - விரும்பியவற்றை. கலன் - ஆபரணம்.

69. அழகிய மங்கல முரசு முழங்க ஆகாயகங்கைநீரை ஐராவதயானையின் மேல் குடத்திலே கொண்டுவந்து அழகிய திருமேனியில் அபிஷேகம் செய்தற்கு வைத்தார்கள் தேவர்கள். திருமால் முருகவேளை வணங்கி;

இயம்ப - ஒலிக்க. வான் அமர் கங்கை - ஆகாயகங்கை. வெண்களிறு - வெள்ளையானை; அயிராவதம். கடம் - குடம். அம் கலும் - அழகொழுகும். ஆட்ட - திருமஞ்சனம் செய்ய. புங்கவர் - தேவர்கள். மாயவன் - திருமால்.

70. உள்ளிடத்திலே ஒளியான பிடத்தின்மேல் எழுந்தருளுவித்து, மிக வெண்மையான சங்குகள் முழக்கத்தைச்செய்ய, பவளத்தையொத்து விளங்கும் திருமேனியில் நிறைந்த ஒளியுடைய ஆபரணங்களை அன்போடு களைந்தான்.

உவளகம் - அந்தப்புரம். இரீஇ - இருத்தி. தவளம் - வெண்மை. தழங்க - ஒலிக்க. அவிர் - விளங்கும். திவள்ஒளி - அசையும் ஒளி. அணி - அணிகலம்.

71. அருக்கியம் பாத்தியம் ஆசமனம் முதலியவற்றை அமைத்து மணம் பொருந்திய நெய்யைத் தலைமயிரிலே நிறையவைத்து வேதமந்திரங்களைக்கூறி அபிஷேகம் செய்தற்குரிய திரவியங்களையெல்லாம் மனவொருமையுடன் முறையே அபிஷேகம் பண்ணினன்.

ஆசனம், அருக்கியம், பாத்தியம், ஆசமநீயம், ஸ்நானம், வஸ்திரம், உபவீதம், கந்தம், புஷ்பம், அக்ஷதை, தூபம், தீபம், கருப்பூரம், நிவேதனம், தாம்பூலம், மந்த்ரபுஷ்பம் என்பன செய்தற்குரிய சோடச உபசாரங்களாம்.

நுழையிழைக் கலிங்கநோன் கரத்தி னேந்துபு
தழைமணக் குஞ்சியந் தலையி னூர்புனல்
விழைதகப் புலர்த்திமெய் யீர மொற்றினன்
மழையுறழ் திருவுரு வனப்பின் மாயனே. 72

மட்டுமிழ் நறும்புகை மடுத்துக் குஞ்சியின்
அட்டிவண் புழுகலர்த் தார்கொண் டியாத்துமேற்
கட்டுபு காஞ்சனக் கயிற்றிற் சென்னியின்
இட்டனன் மணிமுடி யிமைப்ப வாட்கதிர். 73

திங்கள்சென் னியின்வழுக் குற்றுத் தேசுற
தங்கிய திதுபொடி தானன் றுலயற்
செங்கனல் விழியிது திலக மன்றிவன்
சங்கர னெனநுதற் கழகு சார்த்தினன். 74

அருக்கியம் - கையில் நீர்தரல். சிகழிகை - மயிர்முடி. இருக்கு - மந்திரம். ஆட்டுவ - அபிஷேகம் செய்வனவாகிய. ஒருக்கிய சிந்தை - மனவொருமைப்பாடு. ஊழின் - முறைப்படி.

72. நுண்ணிய இழையினையுடைய மெல்லிய ஆடையை வலிய கரத்திலே கொண்டு தலையில் உள்ள குஞ்சியில் ஈரத்தைத் துவட்டித் திருமேனியில் உள்ள ஈரத்தை ஒற்றினன்; மேகத்தையொத்த கரிய மேனியையுடைய மாயோன்.

நுழை இழை - நுண்ணிய இழை. கலிங்கம் - மெல்லிய ஆடை. ஏந்துபு - ஏந்தி. குஞ்சி - ஆண்மயிர். புலர்த்தி - துவட்டி. மெய்ஈரம் - உடம்பிலுள்ள ஈரம். மழை உறழ் - மேகத்தை யொத்த. வனப்பு - அழகு.

73. மிக்க மணம் வீசும் புகையையூட்டித் தலைமயிரில் வளப்பம் பொருந்திய புழுகைக்கொட்டி மலர்மாலையைக்கொண்டு மேலே கட்டி, பொன் நாணினால் செறித்து, சென்னியில் கிரணங்கள் வீசும் இரத்தின முடியை அணிவித்தான்.

மட்டு - வாசனை. மடுத்து - ஊட்டி. அட்டி - கலந்து. யாத்து - கட்டி. காஞ்சனம் - பொன்.

74. சிரத்தினின்று சந்திரன் வழுக்கி ஒளி பொருந்தத் தங்கியது இது பொடியன்று, பக்கலில் சிவந்த அக்கினிக்கண் இது திலகமன்று, இவன் சிவனே என்று சொல்லும்படி நெற்றியில் அழகுசெய்தான்.

தேசு - ஒளி. கனல் விழி - நெருப்புக்கண். திலகம் - நெற்றிப் பொட்டு நுதல் - நெற்றி.

வழுக்கறும் யோகினர் மதிக்குந் திங்களின்
ஒழுக்கொளி மண்டலத் தொளியி தாமென
விழுக்குரு நீற்றொளி விளங்கு நெற்றியின்
முழுக்கவி னோடையு முறையின் யாத்தனன். 75

கண்ணுதல் பொடித்ததன் கான்மு ளைக்கொடி
நண்ணலு மதனைவே ளென்னு நாமத்திவ்
வண்ணலுக் காமென வமைத்த சீர்பொரத்
திண்மக ரக்குழை செவியி லேற்றினன். 76

செம்பொறி வாங்கிய திணிந்த தோளொடு
வம்பவிழ் மருமமு மறைப்பி னல்லது
கொம்பனா ருயிர்க்கொரு கொளுகொம் பின்றெனப்
பம்பிய மணிக்கலன் பலவுஞ் சாத்தினன். 77

---

75. குற்றமற்றயோகிகள் தியானிக்கும் அமுதொழுகும் சந்திரமண்டலத்தின் ஒளி இதுவாகும் என்று மேம்பட்ட நிறத்தையுடைய திருநீற்றினொளி விளங்குகின்ற நெற்றியில் நிறைந்த அழகினையுடைய நெற்றிப்பட்டத்தையும் முறையே கட்டினான்.

வழுக்கு அறும் - குற்றமற்ற. மதிக்கும் - தியானிக்கும். திங்களின்... மண்டலம் - சந்திரமண்டலம். விழுக்குரு - சிறந்த நிறம். ஓடை - நெற்றிப் பட்டம்.

76. சிவபெருமான் நீருகப்பண்ணிய தன்னுடைய புத்திரனாகிய மன்மதனுடைய கொடி பொருந்துதலும் அதனை வேள் என்னும் பெயரினையுடைய இந்த அண்ணலுக்கு ஆகும் என்று அமைத்த சிறப்பையொப்பத் திண்ணிய மகரக் குழையைத் திருச்செவியில் அணிந்தான்.

கண்ணுதல் - சிவபெருமான். கான்முளை - புத்திரன். வேள் - முருகவேள், மதனவேள். நாமத்து - பெயரையுடைய. 'மதனை வேளென்னு நாமத்து' என்றது நயம்.

77. வீர இலக்குமி பொருந்தும் வலிய தோள்களோடு வாசனை வீசும் மார்பினையும் மறைத்தால் அல்லாமல் பூங்கொம்பு போன்ற பெண்களுடைய உயிருக்குப் பற்றியேறும் கொம்பில்லை என்று சொல்லும்படி நிறைந்த இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற ஆபரணங்கள் பலவற்றையும் மார்பில் அணிந்தான்.

செம்பொறி - வீர இலக்குமி. வம்பு - வாசனை. மருமம் - மார்பு. கொம்பு - பூங்கொம்பு. கொளுகொம்பு - பற்றியேறும் கொம்பு.

மாதரா ருள்ளக மறுகும் வார்புயக்
கோதையார் மத்துமேற் கொளுவ நின்றதோர்
சீதவான் மதியெனத் தெளிந்த வச்சிரக்
காதலா ரங்கதங் கதிர்ப்பப் பூட்டினான். 78

பொழிகதிர்ச் செழும்பொனிற் பொதிந்த கண்மணி
அழகிய முழங்கைமே லமையக் கட்டினான்
ஒழுகிய புயமெனு மோங்கு மத்திடைத்
தழுவிய வாசுகித் தாம்பு மானவே. 79

செங்களத் தெதிர்ந்துநின் றிறலிற் றானவர்
மங்கின ரகழ்ந்தவென் வடிவு நல்கெனத்
தங்கிய பரிதியைத் தாங்கி னாலென
அங்கைமேற் செம்மணிக் கடக மாக்கினான். 80

---

78. பெண்கள் மனம் சுழலும் நீண்ட புயத்திலணிந்த மாலை பொருந்தும் மத்தின் மேலே மாட்டிவிடுதற்காகவுள்ள குளிர்ந்த வெள்ளிய சந்திரன் என்னும் படி தெளிவான வச்சிரக்கற்கள் நிறைந்த தோள்வளையை நன்கு ஒளி செய்யுமாறு அணிந்தான்.

மறுகும் - சுழலும். புயக்கோதை - தோள்மாலை. மத்து - தயிர் கடையும் மத்து. கோதை என்றது மாலையாகிய கயிறு எனக. மேற்கொளுவுதல் - மேலே மாட்டிவிடுதல். வச்சிரம் - வயிரக்கல். அங்கதம் - தோள்வளை.

79. நிறைந்த ஒளியை வீசும் செம்பொன்னால் மூடப்பட்ட உருத்திராக்க மணியை அழகான முழங்கைக்கு மேலே பொருந்துமாறு கட்டினான், தொங்க விட்ட தோள் என்னும் உயர்ந்த மத்திலே பொருத்தப்பட்ட வாசுகியாகிய கயிற்றை ஒப்பாகும்படி.

பொதிந்த - வைத்துக்கட்டப்பட்டுள்ள. வாசுகித்தாம்பு: பண்புத்தொகை.

80. போர்க்களத்திலே எதிர்த்து நின்று இறத்தலின் அசுரர்கள் மங்கினராகி நீங்கிய என்னுடைய வடிவத்தைக்கொடு என்று பொருந்திய சூரியனைத் தாங்கி நின்றாற்போன்று கையிலே மாணிக்கம் பதித்த கடகத்தைத்தரித்தான்.

செங்களம் - போர்க்களம். இறலின் - இறத்தலினால். மங்கினர் அகழ்ந்த- இறந்து போக்கிய. பரிதி - சூரியன்.

ஒருதலைச் செம்மணிக் கடக மொன்றமற்
றொருதலை வயிரவங் கதநின் றோங்கலாற்
பெருகெழிற் கரம்புரம் பேது செய்தவன்
உருண்மணித் தேரினு ளச்சும் போன்றதே. 81

வாழிய வருந்தவம் வயக்கிப் பல்பகல்
ஆழியோன் றணிந்தத ணங்கை யாற்பல
ஆழிக ளெடுத்தெடுத் தமலன் வார்விரல்
ஊழுறச் செறித்தன னுவண வூர்தியே. 82

தந்தைபோற் றிக்குடை தழுவ முன்னினு
மந்தின்மற் றஃதுரு தமைத்தல் செய்தெனச்
செந்துகிற் பட்டின்மேற் சிக்க யாத்தனன்
கொந்தொளி நாணுறிஇக் கொழும்பொ னுடையே. 83

---

81. ஒரு பக்கத்திலே மாணிக்கக்கடகம் பொருந்த, மற்றைப்பக்கத்திலே வயிரமணியாலாகிய தோள்வளை நிலைபெற்று விளங்குதலால் மிக்க அழகிய திரிபுரத்தை அழித்த சிவபெருமானுடைய உருளைகளையுடைய அழகிய தேரின் உள்ளச்சும் போன்று விளங்கியது.

ஒருதலை - ஒருபக்கம். அங்கதம் - தோள்வளை. புரம் - திரிபுரம்.

82. பலகாலம் அரிய தவத்தைச்செய்து சக்கரப்படையொன்றைப்பெற்று அணிந்துகொண்ட தன்னுடைய கரத்தினால் நின்மலராகிய முருகவேளுடைய விரல்களில் பல மோதிரங்களை எடுத்தெடுத்துக் கருடவாகனத்தையுடைய திருமால் முறையே அணிவித்தான்.

ஆழி ஒன்று - சக்கராயுதம் ஒன்றை. பல ஆழிகள் - பல மோதிரங்களை. அமலன் - நிர்மலராகிய முருகவேள். ஊழ் உற - முறையாற் பொருந்த. உவண ஊர்தி - கருடவாகனத்தையுடையோன்.

83. தமப்பனாராகிய சிவபெருமானைப்போலத் திக்காடையை அணிந்து கொள்ளக் கருதினும், அதுவந்து பொருந்தாமற் செய்தமைபோல, சிவந்த துகிலாகிய பட்டின்மேலே செழுமையான பொன்னுடையை ஒளிநிறைந்த அரைஞாணால் நன்றாக யாத்தான்.

தந்தை - சிவபெருமான். திக்கு உடை - திசையாகிய ஆடை. முன்னினும் - நினைந்தாலும். சிக்க - நன்றாகப்பற்ற; உறுதியாக என்றபடி. கொந்து ஒளி - மிகுந்த ஒளி. பொன் ஆடை - பீதாம்பரம்.

கயில்படு காஞ்சனக் கழலொன் ரூர்த்தபின்
வெயில்விரி பன்மணி விளக்க மாண்டெழில்
பயில்பரி புரமொடு பாத சாலமுஞ்
செயிர்தபு சேவடி சேர்த்தித் தாழ்ந்தனன். 84

அழகினிற் சிறந்திடு மநங்கன் ருதையாய்
அழகினிற் சிறந்தவ னுன செங்கண்மால்
அழகினுக் காகர மான வேட்கணி
அழகினை யளவையி னறைய லாங்கொலோ. 85

திருமக ளென்பவ டெய்வ யானையை
மருவள ருவளக வரைப்பிற் கொண்டுபோய்க்
குருமணி யாதனத் திருத்திக் கோமள
உருவொசி தரவுரைத் தாணெய் யோதியின். 86

---

84. மூட்டுவாயோடு கூடிய பொன்னுலாகிய வீரக்கழல் ஒன்றைக் கட்டிய பின்பு கிரணத்தை வீசும் பலவகை இரத்தினங்கள் பதிக்கப்பட்டு மிக்க அழகு பொருந்தும் பரிபுரமும், பாதசாலமும் குற்றமில்லாத திருவடிகளில் அணிந்து வணங்கினுன்.

கயில் - மூட்டுவாய். காஞ்சனம் - பொன். மாண்ட எழில் பயில். பரிபுரம் - காலணி வகையுளொன்று; பாதகிண்கிணி. பாதசாலம் - காலணியுளொன்று. செயிர் - குற்றம். தபு - நீங்கிய.

85. அழகினுலே சிறந்துவிளங்கும் மன்மதனுடைய தந்தையாகி அழகினுல் சிறந்த திருமால் அழகுக்கு இருப்பிடமாகவுள்ள முருகவேளுக்கு அலங்காரம் செய்த அணிகலங்களின் அழகை அளவுபடுத்திச் சொல்லமுடியுமோ?

அனங்கன் - மன்மதன். தாதை - தகப்பன். செங்கண்மால் - செந்தாமரைக் கண்ணனுகிய திருமால். ஆகரம் - இருப்பிடம். வேள் - முருகவேள். அணி - அலங்கரித்த. அறைதல் - சொல்லுதல்.

86. திருமகள் தெய்வயானையைத் தனியே அந்தப்புரத்துக்கு அழைத்துச் சென்று சிறந்த இரத்தின பீடத்தின்மேல் இருக்கச்செய்து அழகிய திருமேனி அசையக் கூந்தலில் நெய்யைத் தேய்த்தாள்.

உவளகம் - அந்தப்புரம். குரு மணி - நிறம் பொருந்திய இரத்தினம். கோமள உரு - அழகிய வடிவம். ஒசிதர - அசைய. உரைத்தாள் - தேய்த்தாள். ஓதி - கூந்தல்.

வேறு

முளிந்தவொண் ணெல்லிச் சாந்து மொய்யொளி மஞ்சட் சாந்துந்
தெளிந்தபஃ றுவருந் தெய்வ விரைகளும் பிறவுஞ் சேர்த்திக்
குளிர்ந்தவான் கங்கை நன்னீர் கொண்டன டிமிர்ந்து சால
ஒளிர்ந்திடப் பூங்கொம் பன்னா ளுருவினை மண்ணுச் செய்தாள். 87

மெய்வளா ரீர மாற்றி விளங்கிழைப் பட்டுச் சாத்திக்
கைவளர் வினைஞ ரிட்ட கமழ்மலர்ப் பந்த ருள்ளால்
ஐவளர் மணிப்பொற் பீடத் தணங்கினை யிருத்தி வாச
நெய்வளா ரோதி வாங்கிச் சிப்பினா னீவி விட்டாள். 88

காசறை கமழ வூட்டிக் காரகி லாவி யேற்றி
வீசொளிப் பட்டு நாணின் விக்கியேற் றிமிலிற் கொண்டை
வாசமென் மலருட் பெய்து வயக்கிமேற் காரைத் தென்னன்
தேசவிர் தளையிட் டென்னத் தெரியல்கள் வளாவி னாளே. 89

---

87. காய்ந்த பிரகாசமான நெல்லியின் சாந்தும், நிறைந்த ஒளியையுடைய மஞ்சளின் சாந்தும், தெளிவான பலவகையான துவர்களும், தெய்வத்தன்மை யுள்ள வாசனைப்பண்டங்களும் மற்றுள்ளனவும் இட்டுக் குளிர்ச்சியான ஆகாய கங்கா ஜலத்தை எடுத்தவளாய் நன்றாகத் தேய்த்து மிகவும் ஒளிவிளங்க, பூங் கொம்பினையொத்த தெய்வயானை அம்மையாருக்குத் திருமேனியில் அபிஷேகம் செய்தாள்.

முளிந்த - காய்ந்த. பலவகைப்பட்ட துவர்கள்: தெய்வவிரை: திமிர்ந்து - நன்றாக அப்பி. மண்ணுச் செய்தாள் - திருமஞ்சனம் பண்ணினாள்.

88. திருமேனியில் உள்ள ஈரத்தைத் துவட்டி, ஒளிபொருந்திய இழைகளை யுடைய பட்டாடையை அணிந்து, கைவல்ல வேலைக்காரர்களால் செய்யப்பட் டுள்ள மலர்ப்பந்தரினுள்ளே அழகுமிகுந்த இரத்தினாசனத்திலே தெய்வயானையை இருக்கச்செய்து மணம்பொருந்திய நெய்பூசப்பெற்ற கூந்தலை வகிர்ந்து சிப்பினால் சீவிவிட்டாள்.

ஐவளர் - அழகுமிக்க. ஓதி - கூந்தல். நீவுதல் - தடவுதல்; இங்கே சீவிவிடுதல்.

89. மயிர்ச்சாந்தை மணங்கமழும்படி ஊட்டி, கரிய அகில் முதலியவற்றின் புகையால் புகைத்து, ஒளிமிக்க பட்டாடையை நாணினால் கட்டி, காளையின் இமிலையொத்த கொண்டையில் மணமிக்க மலர்களைச்செறித்து, மேலேமேகத்தைப் பாண்டிய மன்னன் ஒளிவிளங்கும் விலங்கால் தளைத்தாற்போல மாலைகளால் கட்டி நிறைய அலங்கரித்தாள்.

காசறை - மயிர்ச்சாந்து. கார்அகில் - கரிய அகிற்கட்டை. விக்கி - கட்டி. ஏற்று இமிலின் - இடபத்தின் முரிப்பைப் போன்ற: இமில் - முரிப்பு: இன் ஐந்தாவது ஒப்புப்பொருள். வயக்கி - விளங்கக்காட்டி. கார் - மேகம். தென்னன் -

தடித்திடை விளங்கி யாங்குத் தயங்குபொன் னெஃகு தொட்டுக்
கடித்திர ளாலி யென்னக் கதிர்மணித் தொங்கன் முச்சி
தொடுத்திருண் மேகம் விண்டு துலங்குநீர்த் தாரை கான்றுங்
கெடுத்தொளி கொழுந்தப் பாங்க ரிலம்பகஞ் சூட்டி னாளே. 90

கொழுந்தெழு பவளக் காடு கூர்கருங் கடலின் மாட்டுஞ்
செழுந்திருக் குழவித் திங்க டிகழ்ந்தென மணிக்காழ் வீக்கி
அழுந்திய வளகப் பாங்க ரவிர்மணித் தெய்வ வுத்தி
தொழுந்தனிக் குழவித் திங்க ளிரண்டையுஞ் சுடர வைத்தாள். 91

கருங்கட னுப்ப ளரிட்ட கண்ணக னணையே யென்ன
ஒருங்கிய வோதி நாப்ப ணொழுக்கிய கீற்றின் மேலால்
தருங்கதிர்ச் சுட்டி யென்னுஞ் சருப்பம்வாய் திறந்து கான்ற
பெருங்கவின் மணியே யென்னப் பிறக்கின டிலக நெற்றி. 92

பாண்டியன். தளை - விலங்கு. தெரியல் - மாலை. வளாவுதல் - நிறையச்சூட்டுதல். பாண்டியன் காரைத்தளையிட்டது மதுரையில்; திருவிளையாடற் புராணத்தால் அறிக.

90. மின்னல் இடையிலே விளங்கினாற்போலப் பொன்னாலாகிய ஊசிகளைச்செருகி, வாசனையுள்ள திரண்ட ஆலங்கட்டிபோன்ற ஒளியுடைய முத்துத் தொங்கலைக் கொண்டையிலே தொடுத்து, இருண்ட மேகம் வெடித்து விளங்கும் நீரொழுக்கை ஒழுக்கினாற்போல மிக்கு ஒளிவிளங்கப் பக்கத்திலே இலம்பகம் என்னும் ஆபரணத்தை அணிந்தாள்.

தடித்து - மின்னல். தயங்கு - விளங்கும். பொன் எஃகு - பொன்னூசி. ஆலி - ஆலங்கட்டி. முச்சி - உச்சி, கொண்டை. விண்டு - பிளந்து. கொழுந்த- மிக. இலம்பகம் - தலைக்கோலம்.

91. கொழுந்து விட்டெழும் பவளக்காடு மிக்க கருங்கடலினிடத்தும் செழித்த பிறைச் சந்திரன் விளங்கினாற்போல மாணிக்க வடத்தால் கட்டிப் பதிந்துள்ள கூந்தலில் விளங்கும் இரத்தினங்கள் பதித்த சீதேவி என்னும் தலைக்கோலம், பிறையணி ஆகிய இரண்டையும் ஒளிவிடும்படி வைத்தாள்.

கூர் - மிகுந்த. குழவித்திங்கள் - பிறைச்சந்திரன். மணிக்காழ் - மணிவடம். அளகம் - கூந்தல். தெய்வவுத்தி-சீதேவியென்னும் ஆபரணம். சுடர - பிரகாசிக்க. கன்னிமகளிர் அஞ்சலி செய்தும் எருவிட்டும் சந்திரனை வணங்குதல் மரபாகலின் 'தொழுந்தனிக் குழவித்திங்கள்' என்றார்.

92. கரிய கடலின் நடுவே போகட்ட இடமகன்ற அணை என்று சொல்லும்படி ஒருசேர இருந்த கூந்தலின் நடுவிடத்திலே சூட்டிய பிறையின் மேலே பொருந்தும் சூரியவட்டமென்னும் பாம்பு, வாயைத்திறந்து கக்கிய பெரிய அழகிய மாணிக்கம் என்னும்படி நெற்றியிலே திலகத்தை விளங்க வைத்தாள்.

வேறு

முலையது தாமரை முகிழன் றம்பல
அலர்விழி யன்னவை யாத லான்மதி
சிலையுமன் றிஃதொளி திவளு நெற்றியென்
றலர்கதிர்ப் பட்டமாங் கமைய யாத்தனள். 93

வேறு

சேந்நரி பரந்து தேசு திகழ்ந்துசெஞ் செவியின் காறும்
போந்தகன் றிருண்டு வெண்மை புணர்ந்துகொட் புற்று நீண்டு
நாந்தகந் தடற்றுண் மூழ்க நாமவே லம்பைச் சீறி
வாய்ந்தகண் மலர்க்கு மாதோ வஞ்சனம் வயக்கி னாளே. 94

மகரவல் லேறு தூங்கும் வண்மையான் வள்ளை யேயென்
றகிலமுந் தெளியக் காதி னவிர்குழை மகர மிட்டு
நகுகதிர் முத்த நாசி நாற்றின ளிவற்றை நாடின்
முகநிதிக் கமலங் கான்ற மொய்யொளிப் பொருள்கள் போன்ற. 95

நாப்பண் - நடுவிடம். அணை - தெப்பம். ஒருங்கிய - நெருங்கிய. கதிர்ச்சுட்டி - சூரியபிறை. நலைக்கோலங்களில் சூரியபிறை, சந்திரபிறை என்பன காண்க.

93. நகில்அது தாமரையரும்பு அன்று, அம்பு அல்ல அவைகள் அலர்ந்த கண்கள், ஆதலால் பிறைச்சந்திரனுமன்று வில்லுமன்று இஃது அசையும் ஒளியை யுடைய நெற்றியென்று விளங்கும் நெற்றிப்பட்டத்தைப் பொருந்தக் கட்டினாள்.

முகிழ் - அரும்பு. அலர்விழி - மலர்ந்த கண். மதி - சந்திரன். சிலை - வில். மதிக்கப்படும் வில்லுமன்று எனினுமாம்.

94. சிவந்து வரிபரந்து ஒளிவிளங்கிக் காதளவும்போய் அகன்று இருள் நிறம் பெற்று வெண்மைநிறமும் கூடிச் சுழன்று நீண்டு வாளானது உறையி னுள்ளே மறைய அச்சத்தைத்தரும் வேலாயுதத்தையும் அம்பையும் கோபித்துப் பொருந்தும் கண்மலருக்கு மையிட்டு அழகுசெய்தாள்.

சேந்து - சிவந்து. அரி - செவ்வரி. கொட்புற்று - சுழன்று. நாந்தகம் - வாள். தடறு - ஆயுதவுறை. நாம் - அச்சம். அஞ்சனம் - மை.

95. மகரமீனாகிய வலிய ஆண் தூங்குகின்ற தன்மையினால் வள்ளைத் தண்டே என்று உலகமுழுதும் தெளிந்துகொள்ளக் காதிலே விளங்கும் மகரக் குழையை அணிந்து விளங்கும் ஒளியுடைய முத்தை நாசியில் தொங்கவிட்டாள்; இவற்றை ஆராயின் முகமாகிய பதுமநிதியிலே தோன்றிய மிகுந்த ஒளியை வீசும் பொருள்களைப்போன்றன அவை.

மகரமீன், வள்ளை, முத்தம் இவை கடல்படு பொருள்களாம். தூங்கும் - தொங்கும். கண்படுக்கும். குழை மகரமீன் வடிவம். காது வள்ளைத்தண்டு. நாற்றினள் - தொங்கவிட்டாள். நிதிக்கமலம் - பதுமநிதி; முகமாகிய பதுமநிதி.

உளைவற வடைந்தோர்க் கெல்லா முவப்பினைச் செய்யா நிற்கும்
வளைநிதி வெறுக்கை பாங்கர் மாண்டகப் பொழிந்தா லென்ன
விளைவிரை நானஞ் சாத்தி விளங்கிய கண்டஞ் சீர்ப்பத்
திளைகதிர் மணிக்காழ் கட்டு வடத்தொடுஞ் செறியச் சூழ்ந்தாள். 96

பாசிள வேயிற் றோன்றும் பருவரைக் குலங்க ளென்ன
வீசொளி மணிக்கே யூரம் விளங்குசூ டகமும் வண்டு
மூசுமென் மாலைத் தோளு முன்கையுங் கவினச் சேர்த்திக்
காசவிர் வளையு மற்று மாழியுங் கதிர்ப்பக் கோத்தாள். 97

பொற்பொடி சிதர்ந்தா லன்ன பொறிசுணங் கலர்ந்த கொங்கை
விற்பொலி மணிச்செய் சேற்றின் வியத்தகு தொய்யி றீட்டிப்
பற்பல மணியின் கோவை பன்மலர்த் தொடலை மற்று
மற்பொலி வேழப் பாங்கர் வார்த்தபஃ றொடரி னிட்டாள். 98

---

96. வருத்தமற வந்தடைந்தோருக்கெல்லாம் மிக மகிழ்ச்சியைச் செய்யும் சங்கநிதி தன்பாலுள்ள பொருள்களைப் பக்கத்திலே சிறப்பாகக் கொடுத்தாற் போல மணம்பொருந்தும் புழுகையணிந்து விளங்கிய கழுத்துச் சிறப்ப நிறைந்த ஒளியை வீசும் மணிவடம் கட்டுவடம் இவைகளை நெருங்க அணிந்தாள்.

உளைவு - வருத்தம். வளைநிதி - சங்கநிதி. வெறுக்கை - செல்வம். பாங்கர் - பக்கம். நானம் - புழுகு, கத்தூரி. கண்டம் - கழுத்து. சீர்ப்ப - சிறக்க.

97. பசுமையான இளமூங்கிலிலே தோன்றும் பருத்த மலைகள் என்னுமாறு ஒளிவீசும் மாணிக்கக் கற்கள் பதித்த தோள்வளையும், சூடகமும், வண்டுகள் மொய்க்கும் மென்மையான மலர்மாலையை அணிந்த தோளிலும் முன்கையிலும் அழகுபொருந்த அணிந்து பொன்னால் விளங்கும் வளைகளும் மோதிரங்களும் விளங்கும்படி அலங்கரித்தாள்.

வேய் - மூங்கில். கேயூரம் - தோள்வளை. சூடகம் - ஒருவகை வளை. மூசும் - மொய்க்கும். காசு - பொன், இரத்தினம். ஆழி - மோதிரம். கதிர்ப்ப - விளங்க.

98. பொன்னினது பொடியைச் சிந்தினாற்போல, புள்ளியாகவுள்ள தேமல் பரவிய நகில்களில் ஒளி விளங்கும் மணிகளால் செய்த சேற்றினால் வியக்கத்தக்க கோலம் எழுதிப் பலவகைப்பட்ட மணிகளின் கோவையும் பல மலர்களாலாகிய மாலையும் தோள்களில் உள்ள மாலைகளுடனே அணிந்தாள்.

சிதர்ந்தால் - சிந்தினால். சுணங்கு - தேமல். தொய்யில் - சந்தனக்கோலம். தொடலை - மாலை. தொடர் - சங்கிலி. மற்பொலிவேழம் - பசுமூங்கில்.

ஒல்கிய மருங்குற் கொம்ப ருறுதிகொண் டிருப்ப நாடி
நல்கெழிற் சலாகை யொன்று நாட்டியொன் றுறயாத் தென்னப்
புல்லிய மயிரின் வல்லி புடைவனப் புமிழக் காசு
பல்கிய பருமக் கோவை பயிற்றின ளல்குன் மாட்டு. 99

பாடக மணிந்து செம்பொற் கிண்கிணி பாத சாலஞ்
சேடுயர் மணிச்செய் பொன்னூ புரம்புற வடியிற் சேர்த்தித்
தோடவிழ் கமலம் வென்ற தூயவுள் ளடியிற் சிர்ப்பப்
பீடுயர் பஞ்சி யூட்டிப் பெரிதுவந் திறைஞ்சி நின்றாள். 100

வேறு

இன்ன வாறெலாந் தெய்வயா னையையிலக் குமிதான்
துன்னி வானணி யணிந்துழித் தோகைமா மயிலோன்
மன்னு மாநகர் வலம்வர வலித்தன னறிந்து
பன்னு வானவ ராதியோர் படர்ந்துமுன் னின்றார். 101

எட்டு மாதிரக் கயங்களு மெழிலியும் பனிப்பக்
கட்டு வார்முர சாதிக ளியம்பின கதிர்கள்
விட்டு வார்கொடி விசும்புடை யகடெலாந் தூர்த்த
முட்டி லாநிழல் பரப்பின முழுமதிக் கவிகை. 102

---

99. அசையும் இடையாகிய பூங்கொம்பு வலிபெற்றிருக்க ஆராய்ந்து அழகியநாராசம் ஒன்றை நாட்டி ஒன்றுகக்கட்டினாற்போல மென்மையான மயிரையுடைய வல்லிபோல்வாள் புறத்திலே அழகை உமிழும்படி மணிகள் பதித்த பதினெண்கோவை மணிவடத்தை இடையிலே அணிந்தாள். ஒல்கிய-அசைந்த. மருங்குல் - இடை. நாடி - ஆராய்ந்து. சலாகை - இருப்பு நாராசம்.

100. பாடகம், கிண்கிணி, பாதசாலம், நூபுரம் முதலிய அணிகலங்களைப் புறவடியிலே அணிந்து, செந்தாமரையை வென்ற தூய உள்ளங்காலிலே செம்பஞ்சுக் குழம்பையூட்டி மிகவும் மகிழ்ந்து நின்றாள்.

101. இலக்குமி இவ்வாறெல்லாம் தெய்வயானையம்மையை நெருங்கிச் சிறந்த அலங்காரஞ் செய்த காலத்து மயில்வாகனப் பெருமாள் நிலைபெற்ற நகரத்தை வலம்வரக் கருதியமையை அறிந்து தேவர்கள் முதலியோர் குழுமிவந்து முன்னே நின்றார்கள். வலித்தனன் - நினைந்தான்.

102. எட்டுத்திக்கிலுமுள்ள யானைகளும் மேகங்களும் நடுக்கங் கொள்ள வார்களைவிசித்த முரசவாத்தியங்கள் முதலியன முழங்கின. கிரணங்களை வீசி நின்று நீண்ட கொடிகள் ஆகாயத்தின் நடுவிடங்களை மறைத்தன. சந்திரவட்டக் குடைகள் தடையின்றி நிழலைச்செய்தன.

மாதிரக்கயம் - திக்கியானைகள். எழிலி - மேகம். பனிப்ப - நடுங்க. விசும்பு - ஆகாயம். அகடு - நடுவிடம். கவிகை - குடை.

கவரி துள்ளின வசைந்தன கால்செய்வட் டங்கள்
துவள மின்னிடை மாதரார் தொடங்கின ராடல்
உவரி யின்னமிழ் தெனப்பரந் தனவுயர் பாடல்
இவர்பெ ருஞ்சனம் விலக்கின ரேந்துவேத் திரத்தோர். 103

ஒழுகு மும்மதத் தாரையி னுறுபிர மரங்கண்
முழுகு வெண்கயம் பண்ணிமு னிறுவினர் பாகர்
தொழுகு லத்தவர்க் கமுதமாய்ச் சுவைக்கும்வேல் வலத்தோன்
குழுமு வையகங் குதுகல மடையமேல் கொண்டான். 104

இவனை நேர்பவ ரிலையென மறுப்பது போலக்
கவரி தூக்கிய முறச்செவி காலெழ மறியப்
புவன மேலிது போலிலை யெனப்புரத் துடலம்
அவவி மோத்தல்போன் மோந்துமோந் துலாவிய தத்தி. 105

---

103. சாமரங்கள் மேலுங் கீழுமாகச்சென்று துள்ளின. காற்றை வீசும் ஆலவட்டங்கள் அசைந்தன. மின்னலையொத்த இடையினையுடைய பெண்கள் துவளும்படி ஆடல் தொடங்கினர். உயர்ந்த பாடல்கள் கடலமுது போலப் பரவின. பிரம்பைக் கையிலே கொண்ட காவலர்கள் ஊர்ந்து நெருங்கிச்செல்லும் மிக்க மக்களை விலக்கிவிட்டார்கள்.

கால் - காற்று. வட்டம் - ஆலவட்டம். உவரி - கடல். இவர் - ஊர்ந்து செல்லும். வேத்திரம் - பிரம்பு.

104. ஒழுகுகின்ற மும்மதங்களின் தாரையிலே பொருந்திய வண்டுகள் முழுகுகின்ற வெள்ளையானையை அலங்கரித்துப் பாகர்கள் முன்னே நிறுத்தினார்கள்; அந்தணர்களுக்கு அநுபவிக்கும் அமுதம் போல்வாராகிய அறுமுகக் கடவுள் நெருங்கிய உலகம் குதூகலம் அடையும்படி யானையின்மேல் ஆரோகணம் செய்தருளினர்.

தாரை - ஒழுக்கு. பிரமரங்கள் - வண்டுகள். வெண்கயம் - வெள்ளையானை. பண்ணி - அலங்கரித்து. தொழுகுலத்தவர் - அந்தணர், அறவோர். வேல் வலத்தோன் - வேற்படையை வலக்கரத்திலேந்திய அறுமுகக்கடவுள். குழுமு - வந்து நெருங்கிய. வையகம் - நிலவுலகம். குதுகலம் - மகிழ்ச்சி.

105. இவனையொப்பார் எவருமிலர் என்று தடுப்பதைப்போன்று சாமரம் தொங்குவதென முறம்போலும் காதுகளினின்று காற்று எழுவதால் தடுப்ப, உலகத்திலே இதுபோல இல்லை என்று விண்ணுலகத்திலே உடம்பு அவாவி மோத்தலைப்போல யானை மோந்து மோந்து சென்றது.

முறச்செவி - முறம்போலும் செவி. கால் எழ - காற்றை எழுப்ப. புவனம் - உலகம். புரம் - விண்ணுலகு. அத்தி - யானை.

பொரியும் பாகடைத் திரளும்பொற் சுண்ணமு மலருஞ்
சொரியுந் தோயமுந் தூவிமுன் றெழுதனர் சில்லோர்
எரியுந் தீபமாங் காங்குநீ ரொடுமெதிர் சுழற்றிக்
கரியின் பாலுறக் கவிழ்த்துளங் களித்தனர் சில்லோர். 106

கரும்பின் வார்கழை தடிந்தபல் கடிகையுங் கனியுஞ்
சுரும்புண் கோதையுந் தும்பிமுன் னிறைத்தனர் சில்லோர்
விரும்பு மோகையின் விழுக்கலன் கன்னிகை பிறவும்
அரும்பு மார்வலர்க் களித்தன ராடவர் சில்லோர். 107

வளிம றைப்பிடை மறைந்துசற் றேயுடல் வயங்கி
வெளிதெ ரிந்துற நோக்கினர் மின்னனர் சில்லோர்
வெளியின் வந்துதம் பாங்கியர் வியோகத்தின் மறைந்து
களிற டுத்தலுங் கதுமெனத் தாழ்ந்தனர் சில்லோர். 108

---

106. நெற்பொரியும், வெற்றிலைபாக்குச் சுருளும், அழகிய பொற்சுண்ணமும், மலர்களும், மணம் பொருந்திய பன்னீர் முதலியவற்றையும் தூவிச் சிலர் முன்னேவந்து வணங்கினர். சுடரும் தீபங்களையும் அயினிநீரையும் ஆங்காங்கே எதிரிலே சுற்றி யானையின் பக்கலிலே கவிழ்த்துச் சிலர் மனமகிழ்ந்தனர்.

பொரி - நெற்பொரி. பாகடை - வெற்றிலைபாக்கு. பொற்சுண்ணம் - பொன்னுலாகிய பொடி; அழகிய பொடிகள், மற்றும் இரத்தினப்பொடியுமாம். சொரியும் தோயம் - தூவும் பனிநீர். 'கரியின் பாலுறக் கவிழ்ந்து' என்றது நயம். கரி - யானை. பால் - பக்கம்.

107. நீண்ட கரும்புகளை வெட்டிய பல துண்டங்களும், பழங்களும், மாலைகளும் யானையின் எதிரிலே நிறைய எறிந்தனர் சிலர். மகிழ்வுடன் சிறந்த ஆபரணங்களையும் கன்னிகைகளையும் பிறவற்றையும் விரும்பும் இரவலர்களுக்கு ஆடவர்களிற் சிலர் கொடுத்தனர்.

வார்கழை - நீண்டகரும்பு. கடிகை - துண்டம். கோதை - பூமாலை. தும்பி - யானை. முன் இறைத்தனர்; முன் நிறைத்தனர் எனவும் பிரிக்கலாம். ஓகை - உவகை. கலன் - ஆபரணம். ஆர்வலர் - விருப்புடையோர். அரும்பும் - தோன்றும்.

108. சில பெண்கள் காற்று மறைப்பிலே மறைந்துநின்று சிறிது உடம்பை வளைத்து வெளியே தெரியும்படி பார்த்தனர். சில பெண்கள் வெளியே வந்து தம்முடைய தோழிகள் நடுவில் மறைந்துநின்று யானைவந்து பொருந்துதலும் விரைந்து வணங்கினர்.

வளி மறைப்பு - காற்றைத் தடுத்தற்குரிய தடுப்பு. வயங்கி - வளைந்து. வியோகம் - கூட்டம், நடு. கதுமென - விரைந்து.

வணங்கு நுண்ணிடைப் பாரமோர்ந் தொழிப்பவர் மான
இணங்கு மண்மிசை யெரிகதிர் மேகலை யிரங்கக்
கணங்கொள் வண்டினங் கூட்டுணுங் கருங்குழ னெகிழ்ந்து
மணங்கொண் மாலைகள் பொழிதர வணங்கினர் சில்லோர். 109

பணிந்து நின்றவர் பணிந்திலேம் யாமென மீட்டுந்
தணிந்த சிந்தையிற் றரைமிசைத் தாழ்ந்தனர் சில்லோர்
அணிந்த வஞ்சலி முடியின ரதுமறந் தெங்கை
துணிந்த வோவெனச் சுற்றினு நோக்கினர் சில்லோர். 110

கொழுகொம் பில்லதோர் கொடியெனத் திருமுன்னர்த் தாழ்ந்து
பழுதில் பன்மணி மேகலை காத்தனர் சில்லோர்
முழுது மன்புள முகிழ்த்தெழ விழியெழின் முழுகத்
தொழுது செங்கையிற் காத்தனர் தொடிவளை சில்லோர். 111

---

109. வளையும் நுண்ணிடையின் பாரத்தை ஆராய்ந்து நீக்குபவர்போலப் பொருந்திய நிலத்தில் ஒளிவீசும் மேகலை புலம்ப, கூட்டமாகிய வண்டுகள் கொள்ளைகொண்டு உண்ணும் கரிய கூந்தல் அவிழ்ந்து வாசனையுடைய மாலைகள் விழுமாறு சிலர் வணங்கினர்.

வணங்கும் - வளையும். ஓர்ந்து - ஆராய்ந்து. மான - ஒப்ப. கூட்டுணும் - கொள்ளைகொண்டுண்ணும். நெகிழ்ந்து - அவிழ்ந்து, நழுவி.

110. வணங்கியெழுந்து நின்றவர்கள் நாங்கள் வணங்கினோமில்லை யென்று கருதி மீட்டும் மனமிரங்கி நிலத்தில் விழுந்து சிலர் வணங்கினர். கரங் கூப்பிச் சிரத்தில் வைத்து நின்றோர் அதனை மறந்து எம்முடைய கை இற்று விழுந்தனவோ என்று சுற்றிலும் நோக்கினர் சிலர்.

தணிந்த - ஆறிய. அஞ்சலி - கரங்கூப்பு.

111. பற்றியேறுதற்குரிய கொம்பில்லாத ஒரு கொடிபோல எதிரிலே வணங்கிக்குற்றமில்லாத பலமணிகள் கோத்த மேகலையைச் சிலர்தாங்கி நின்றனர். அன்பு பொருந்தும் மனம் முழுமையும் குவியக் கண்கள் அழகிலே ஆழ்ந்துவிடச் சிலர் கைகூப்பி நின்று வளைகள் கழலாவண்ணம் பாதுகாத்தனர்.

கொழு கொம்பு-பற்றியேறும் கொம்பு. முகிழ்த்து - குவித்து. தொடிவளை - தொடியாகிய வளை.

இன்ன வாறுமூன் றுலகமு மின்புறப் பலவாய்த்
துன்னு விதிகள் சூழ்ந்துபோய்த் தும்பியி னிழிந்தங்
கென்னை யாளுடை முருகவே ளிருங்கதி ரெறிக்குங்
கன்னி மாமணி மண்டபங் காதலிற் புகுந்தான். 112

ஆங்கு முன்னரே யரியணை விற்றிருந் தருளுந்
தேங்கு தண்புனற் சென்னியார் திருவருள் புரிய
வீங்கி ருங்கதிர் மணிப்பொலந் தவிசின்மே லிருந்தான்
பாங்கு ருத்திர ராதியோர் பான்மையின் வதிந்தார். 113

அமரர் தம்பெரு மானருள் கொண்டயி ராணி
விமல மல்கிய தெய்வயா னையைவெறி நறுந்தார்
கமழு மண்டபத் தினிதுபோ தரக்கரு துதலும்
இமிழு மன்புடைப் பரிசன மறிந்தெழுந் தனரால். 114

---

112. இவ்வாறு மூவுலகத்திலுள்ளோரும் இன்பமடையும்படி பல விதிகளிலும் உலாவந்து யானையினின்று இறங்கி, அங்கே என்னை அடிமைகொண்டு ஆளும் முருகவேள் ஒளிவீசும் அழியாத சிறந்த இரத்தின மண்டபத்தினுள்ளே விருப்பத்துடன் எழுந்தருளினர்.

துன்னும் - நெருங்கும். தும்பி - யானை. கன்னி - அழியாமை.

113. அம்மண்டபத்தினுள்ளே முன்னே சிங்காதனத்தில் விற்றிருந்தருளும் நிறைந்த கங்கையை முடியிலே அடங்கக்கொண்ட சிவபெருமான் திருவருள் செய்ய, இங்கே மணிகளிழைத்த பொற்றவிசின்மேல் முருகவேள் எழுந்தருளியிருந்தார். பக்கத்திலே உருத்திரர் முதலியோர் முறைப்படி இருந்தனர்.

அரியணை - சிங்காதனம். தேங்கு - நிறைந்த. பொலந்தவிசு - பொன்னாலாகிய பீடம். பான்மையின் - முறையே.

114. இந்திரனுடைய குறிப்பை மேற்கொண்டு அயிராணி தூய தெய்வயானையம்மையை மணம் நிறைந்த மண்டபத்துக்கு அழைத்துவர நினைந்த அளவிலே அதனையறிந்து அன்புகெழுமிய பரிசனங்கள் எழுந்தனர்.

அமரர்தம் பெருமான் - இந்திரன். அயிராணி - இந்திராணி. விமலம் - பரிசுத்தம். வெறி - வாசனை. போதர - அழைத்துவர.

வேறு

கடகமுங் குழையும் தோடுங் கதிருமிழ் மணிப்பொற் பூணும்
வடகமும் துகிலு மேனை யணிகளு மலர்ப்பூந் தாருங்
கடல்வரு மமுதுந் தெய்வக் கனிகளும் வேறு வேறு
படலிகை யமைத்து மூடிப் பற்பலா யிரர்கைக் கொண்டார். 115

பேடிய ராண்மைக் கோலம் பெரிதுமெய்த் தாங்கிக் கொண்டு
நீடிய வாள்கை யேந்தி நிரைந்துபற் பலர்கள் சூழ்ந்தார்
கோடிய புருவங் காட்டிக் கொம்மெனச் சினந்து செங்கை
ஆடிய பிரம்பி னோடு மாள்கடிக் கொண்டார் சில்லோர். 116

மறுவறு கவிகை பிச்சம் வார்கொடி கவரிக் காடு
முறைமுறை யசையுங் கால்செய் வட்டமு மொய்ப்ப வீசும்
அறுவையும் பார்ப்போர்க் கெல்லா மணங்குசெய் தருகு சூழ்ந்த
குறளொடு சிந்து முன்னே குறுகுறு நடந்து சென்ற. 117

---

115. கடகம், குழை, தோடு, இரத்தினாபரணம், வடகம், துகில், ஏனை அணிகலங்கள், மலர்மாலை, அமுதம், தேவருலகத்துக் கனிவகைகள் முதலியனவும் வேறுவேறாகப் பூந்தட்டுகளில் அமைத்து மூடிப் பலப்பல ஆயிரவர் கையிலே கொண்டார்கள்.

மணிப்பூண், பொற்பூண் என்க. வடகம் - உடை விசேடம். "வடகமுந் துகிலும் தோடும்" (சிந்தா-462). 'வடகம் - அத்தவாளம்; உடை விசேடம்' என்பர் நச்சினார்க்கினியர். படலிகை - பூந்தட்டு.

116. பேடியர் ஆடவர்களுடைய கோலத்தை மிகவும் உடலிலே பொருந்த நீண்ட வாளாயுதத்தைக் கையிலேந்திக்கொண்டு பலர் வரிசையாகச் சூழ்ந்தனர். வளைந்த புருவத்தைத்தோற்றி விரைவிற்கோபமுடையவராய்க் கையிலே அசைந்த பிரம்பினுடனே சிலர் காவலைப் பூண்டனர்.

பேடியர் - ஆண் தன்மையைவிட்டுப் பெண் தன்மையை அவாவுவனவாகிய பேடுகள். இது பெண்ணிலக்கணம் சிறந்து பெண்பாற்பட்டது. "பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ, கண்ணவாத் தக்க கலம்" (நாலடி - 251) "பேடிய ரன்றே பெற்றியி னின்றிடின்" (மணிமேகலை - 3; 25).

117. குற்றமற்ற கவிகை, பிச்சம், நீண்ட கொடிகள், சாமரத்தொகுதி, முறை முறையாக அசைகின்ற காற்றை வீசும் ஆலவட்டங்களுடன் நிறைந்துள்ளன. வீசுகின்ற வெள்ளிய ஆடைகளும் பார்க்கின்றவர்களுக்கெல்லாம் வருத்தத்தை யுண்டாக்கிப் பக்கங்களிலே நெருங்கின. குறளும் சிந்துகளும் முற்பட்டுக் குறு குறு நடந்துசென்றன.

கவிகை - குடைகள். பிச்சம் - பீலியாற்கட்டுவன; பிஞ்சம் என்னும் வட மொழிச் சிதைவு என்பர். கவரிக்காடு - சாமரத்தொகுதி. கால்செய்வட்டம் - ஆலவட்டம்; விசிறி எனினுமாம். கால் - காற்று. மொய்ப்ப - நெருங்க. அறுவை -

மங்கலம் பாடு வாரும் வளரிசை பாடு வாரும்
அங்கெதி ராடு வாரு மலர்புனல் விசு வாருஞ்
சிங்குத லறியாக் கோலச் சிவிகைதோட் காவு வாருந்
தங்கிய துறக்க வாழ்க்கைத் தையல ராயி னரே. 118

என்னிவ னேற்ற வாறென் றியாவரு மிறும்பூ தெய்தக்
கன்னியர் குழாத்தி னூடு காமரு சிவிகை யூர்ந்து
மன்னிய வதுவைக் கான மண்டப மருங்கு சார்ந்து
மின்னுகு குலிச வைவேற் றாதைபான் மேவி நின்றாள். 119

அருந்தவப் பேறு வாய்ந்த வமரர்கோன் றுணைவி யென்னத்
திருந்திய சசிமா னன்பிற் றிம்பயம் வணங்கி வாக்க
இருந்தருள் குமரன் பாத மெழில்பெற விளக்கி யந்நீர்
மருந்தினும் பருகிச் சென்னி மருங்கினுந் துளித்துக் கொண்டான். 120

ஆடை. மங்கல மரபின் வெள்ளிய தூசுகளை வீசுதல் மரபாம் என்க. அணங்கு - வருத்தம். குறள் சிந்து: குறுகிய வடிவினர்: குறள் இரண்டு அடியும் சிந்து மூன்றடியுமாகிய உயரமுள்ளவர்.

118. மங்கல வாழ்த்துக்களைப் பாடுகின்றவர்களும், இசைப்பாடல்களைப் பாடுகின்றவர்களும், எதிராகநின்று ஆடுகின்றவர்களும், மலர்களையும் நீரையும் வாரி வாரி இறைக்கின்றவர்களும், சிக்குதல் அறியாத அழகிய சிவிகையைச் சுமந்து செல்லுகின்றவர்களும் விண்ணுலக வாழ்க்கையினையுடைய மகளிர் ஆயினர்.

சிங்குதல் - சிக்குதல். தோட் காவுவார் - தோளிலே சுமந்து செல்வார்.

119. இவன் செய்த தவம் யாது என்று யாவரும் ஆச்சரியம் அடையக் கன்னிப்பருவ மகளிருடைய குழுவுடனே விருப்பத்தைத்தரும் சிவிகையில் ஊர்ந்து சென்று நிலைபெற்ற கலியாண மண்டபத்தின் பக்கலிலேபோய் ஒளியை வீசும் வச்சிரப்படையையுடைய தந்தையாகிய இந்திரன் பக்கத்தில் பொருந்தினாள்.

நோற்றவாறு-தவஞ்செய்த விதம். இறும்பூது- ஆச்சரியம். குலிசவைவேல்- வச்சிரப்படை. தாதை - தகப்பன்.

120. அரிய தவத்தின் பயனைப்பெற்ற தேவேந்திரனுடைய மனைவியாகிய சசி என்பவள் அன்பினோடு இனியபாலை வணங்கி வார்க்க, அங்கே வீற்றிருந் தருளும் குமரக் கடவுளின் திருவடியை அழகு பொருந்த அபிஷேகித்து அந்த நீரை அமுதம்போல உட்கொண்டு சிரத்தின்மேலும் துளித்துக் கொண்டான்.

அமரர்கோன் - இந்திரன். சசி - இந்திராணி. வாக்க - ஒழுகவிட. மருந்து - தேவரமுதம்.

முரன்றன சங்கம் பேரி முழங்கின முரச மார்த்த
நரன்றன வங்கி யங்க ணரம்பொடு மகிழ்ச்சி வெள்ளம்
வரன்றின திரண்டோ ருள்ள மடுத்தொரு மகளை நீரோ
டரன்றனிக் குமரற் கீந்தா னருமறை முறைகள் கூறி. 121

இந்திரன் வளர்த்த தெய்வ யானையை யேற்றுப் பின்னர்ச்
சுந்தர முருகன் வானோர் தொழுதகு குரவன் வேதச்
செந்தழல் வளரா நின்று திகழ்மது பருக்கஞ் சொன்றி
முந்துற முறையி னீட்ட முகமலர்ந் தருளி னானால். 122

கன்றொடு காமதேனுக் கலந்துடன் போத நோக்கி
மென்றுணர்க் கரிய கூந்தன் மெல்லியல் வலக்கை பற்றி
ஒன்றவே டிடியிட் டேகி யொளிர்மணி யம்மி யண்மி
அன்றதன் முடியிற் சால வச்சுதந் தெளித்த பின்றை. 123

---

121. சங்குகள் ஒலித்தன. பேரிவாத்தியங்கள் முழங்கின. முரசவாத்தியங்கள் ஒலித்தன. வங்கி என்னும் வாத்தியம்ஒலித்தன. நரப்புக்கருவிகளும் ஒலிசெய்தன. மகிழ்ச்சியின் மிகுதி திரண்டு வந்தோரின் உள்ளத்திலே தேக்கி, ஒப்பற்ற மகளாகிய தெய்வயானையம்மையைச் சிவபெருமானுடைய ஒப்பற்ற குமாரருக்கு அரிய வேதங்களின் பகுப்பைக் கூறி ஈந்தான்.

நரன்றன - ஒலித்தன. நரம்பு - நரப்புக்கருவிகள்.

122. இந்திரனால் வளர்க்கப்பட்ட தெய்வயானையம்மையாரைத் தமது சத்தியாக ஏற்றுக்கொண்ட பிறகு அழகிய முருகவேள் தேவர்களால் வணங்கத் தக்க வியாழப்புத்தேள் வேதமந்திரங்களால் வேள்விச் செந்தழலை வளர்த்து விளங்கும் மதுவர்க்கங்களையும் உணவையும் முற்பட்டு முறைப்படி நிவேதிக்க முகமலர்ச்சி கொண்டருளினர்.

ஏற்று - அங்கீகாரம் செய்து. குரவன் - வியாழகுரு. சொன்றி - சோறு; நிவேதனம். மதுபருக்கம் - மதுவர்க்கம்: ''காமரு சுரபித் தீம்பால் கற்பகக் கனி நெய் கன்னல், நாமரு சுவைய வின்ன நறுமது பருக்கம்'', ''கன்னனெய் கனிபா லின்ன கமழ்மதுப் பருக்க நல்கி''.

123. கன்றோடு காமதேனு ஒருசேரச் செல்வதைக் கண்ணுற்று, மென்மை யான பூங்கொத்துக்களை யணிந்த கரிய கூந்தலையுடைய தெய்வயானையம்மை யாருடைய வலக்கரத்தைப் பிடித்துக்கொண்டு பொருந்த ஏழடியிட்டுச் சென்று விளங்கும் அழகிய அம்மியை நெருங்கி அதன்மேல் மிக அறுகும் அரிசியும் இட்ட பின்பு;

திருமணச்சடங்குகளுள் கன்றோடு கூடிய பசுவைக் காண்டலும் ஒன்றும். ஏழடியிடுதல்: ''ஏழடி யிடுத லாற்று தாயினும்'' (பெருங்கதை 53 - 132); ''ஒன்ப தின்சா ணடப்பினும் ஒருகாத மென்றஞ்சும்'', ''ஏழடி யூக்கி நடந்து செலா'' (சீவக. 179, 1584); ''அச்சுதன் வலக்கை பற்றி முறையினே ழடியிட் டண்மி,

சந்திரன் சடையில் வேய்ந்த தம்பிரான் ருனு மந்நாள்
இந்தநல் வினையை நாணு தியற்றிு னென்னி லன்னேன்
மைந்தனு நானு மாறிங் கென்னென மதித்து நக்கான்
அந்தின்மற் றதனை நோக்கி யனைவரு முறுவல் பூத்தார். 124

மகளிர்பால் வணக்க மோம்பி மைந்தர்க ளின்பந் துய்க்குந்
தகுதியு மூடன் மாட்டுச் சாருதற் கங்கி சான்ரு
அகிலமுந் தெரிக்கு நீதி யாதரித் தணங்கு பாத
நகுமுகத் திளையோன்பற்றி நகைமணி யம்மி யிட்டான். 125

பங்கினண் மாட்டுச் சென்னிப் படர்புனன் மாதை வைத்த
அங்கணன் வணக்க நிற்க வவளையும் வணக்குஞ் சேயோன்
நங்கையின் வணக்க மன்ற நமக்கெலா மேற்ற மென்று
மங்கையர் பலரு நோக்கி மகிழ்தலை சிறந்து நின்ருர். 126

அச்சுதந் தெளித்து வல்லி யடியெடுத் தம்மி யிட்டான்'' (தனிகைப்புரா - வள்ளி திரு - 171) அச்சுதம் தெளித்தல், அடியெடுத்து அம்மிமேல் வைத்தல் எனக் கூறியதும் காண்க. அச்சுதம் - அறுகரிசி.

124. பிறைச்சந்திரனைச் சடையிலே சூடிய சிவபிரானும் அப்பொழுது இந்தத் திருமணச்சடங்கை நாணுமல் இயற்றியருளினர் என்னில், அவருடைய திருக்குமாரரும் நாணுதல் எவன் எனக் கருதிச் சிரித்தார். அதனை நோக்கி எல்லோரும் மகிழ்ந்தனர். நக்கான் - சிரித்தார். முறுவல் பூத்தல் - புன்சிரிப்புக் கொள்ளல். மதித்து - கருதி.

125. மகளிரிடத்து வணக்கத்தைச் செலுத்தி ஆடவர்கள் இன்பத்தை நுகரும் தன்மையும் ஊடற்காலத்திலே பொருந்துதலை, அக்கினிசாட்சியாக உலக முழுவதும் அறிவிக்கும் நீதியை ஒப்புக்கொண்டு தெய்வயானையம்மையின் பாதத்தைச் சிரித்த முகத்தையுடைய முருகவேள் பற்றி விளங்கும் அம்மியின்மேல் வைத்தருளினர்.

ஓம்புதல் - செலுத்துதல்; பாதுகாத்தல். மைந்தர் - காளைப்பருவத்தினர். ஊடற்காலத்தில் மகளிரை மைந்தர் வணங்குதல்: ''ஆதிபகவன் தனதூடல் தணிப்பான் பணிய'' (பிரபுலிங்கலீலை. கடவு) 'அணங்கு பாதம் இளையோன் அம்மியிடல்:' ''மங்கலம் புனைந்த செம்பொன் அம்மிமேல் மணட்டி பாத, பங்கய மலரைக் கையாற் பரிபுரஞ் சிலம்பப் பற்றிப், புங்கவன் மனுவா லேற்றி'' (பரஞ்சோதி - திருமணப் - 188). ''சோமசுந்தரக் கடவுள் ஒருதரம் தாம் அம்மை திருவடியை அம்மிமீது தூக்கிவைத்து, ஏழுதரம் அம்மை தானே தூக்கிவைக்கும் படி செய்தார்'' என்று முதல் நூல்கூறும் என்பர். இதனுல் தாமியற்றிய வேத வழியை உலகினர் கைக்கொண்டு கடைத்தேறத் தாமே செய்து காட்டியருளினர் என்பது கருத்தாகக் கொள்க.

126. பக்கத்திலேயுள்ள உமாதேவியாரிடத்துச் சிரத்திலே கங்காதேவியை வைத்தருளிய சிவபெருமானுடைய வணக்கமானது நிற்க, அப்பெருமானையும்

தந்தைத னுருவ மான தழல்வலம் வந்து நின்று
கொந்தலர்க் குழலி நல்கக் குரூஉப்பொரி யேற்றங் கட்டிச்
சுந்தர வணையின் வைகிச் சுடர்ந்தமங் கிலிய நன்னாண்
கந்தரங் கவின யாத்தான் களித்தன வுலக மெல்லாம். 127

வானவர் வளர்பூ மாரி சொரிந்தனர் மகவா னோடுந்
தேனலர் கொன்றை யார்தந் திருவருள் வழங்கப் பெற்றங்
கூனமி லளகைக் கோமா னெண்ணிதி மணிப்பூ ணுடை
போனகம் பிறவு நல்க யாவரு மகிழ்ச்சி பூத்தார். 128

பல்வகைச் சிறப்புந் தோன்றப் பம்பினோர் மகிழ்ச்சி தூங்க
எல்வளர் நகர வீதி யேந்திலை வேற்கை நம்பி
அல்வளர் கூந்தற் செவ்வா யணங்கொடு முலாப்போந் தண்மி
வில்வளர் கோயி லுள்ளால் விளங்கொளித் தவிசி னுற்றான். 129

வணங்கச்செய்யும் முருகவேள் தெய்வயானையை வணங்குதல் பெண்ணுலகமாகிய நமக்கெல்லாம் சிறந்த பெருமையைத் தருவதாகுமென்று பெண்கள் பலரும் கண்டு பெரிதும் மகிழ்ந்தனர்.

பங்கினள்-ஒருபாதியிலுள்ள உமாதேவி. புனல் மாது-கங்கை. அங்கணன்-சிவபெருமான். சேயோன் - முருகவேள். மன்ற - மிகுதியும். என்னு - என்றுகூறி.

127. தந்தையின் வடிவமாகிய அக்கினியை வலமாகவந்து நின்று தெய்வயானையம்மையார் கொடுக்கச் சிறந்த பொரியை வாங்கிச் சொரிந்து அழகிய பீடத்திலே எழுந்தருளிச் சுடரை வீசும் திருமங்கிலிய நாணைக் கழுத்திலே அழகு பொருந்தக் கட்டினார். உலக முழுவதும் மகிழ்ந்தன.

தந்தையின் உருவமான தழல்: "மண்ணீரனல் வளிவா னெடு வெண்ணீர் மதி கதிர் இயமானனெடெண்ணீடுரு வியை வானவ"னாகலின் அவ்வாறுகூறினர். இறைவன் எட்டு வடிவத்தில் தழலும் ஒரு வடிவமாம். எட்டுரு - அட்டமூர்த்தி சொரூபம்.

குரூஉப்பொரி - வெள்ளிய நெற்பொரி. ஏற்று அங்கு அட்டி: அட்டி - சொரிந்து. கந்தரம் - கழுத்து.

128. தேவர்கள் பூமழை பொழிந்தனர். இந்திரனோடும் சிவபெருமான் திருவருள் செய்யப்பெற்று, குபேரன் நிதிகளையும் இரத்தினாபரணங்களையும் ஆடைகளையும் உணவுகளையும் பிறவற்றையும் வழங்க எல்லோரும் மிகவும் மகிழ்சிறந்தனர்.

மகவான் - இந்திரன். ஊனம் இல் - குற்றமில்லாத. அளகைக் கோமான் - குபேரன். போனகம் - அமுது. பிறவும் என்றது பனிநீர் சந்தனம் தாம்பூலம் மலர் முதலியவற்றை.

129. பலவகைச் சிறப்புக்களும் மிக, அங்கே திருமணங் காணவந்து நெருங்கினோர் யாவரும் அகமிக மகிழ, பிரகாசத்தையுடைய நகரவீதியில் முருகக்

மற்றைய நாளு மாற்றும் வதுவையின் சடங்கு சால
முற்றிய பின்றை முக்கண் முதல்வனார் மகிழ்ச்சி கூர்ந்து
பற்றிய வன்பி னிங்குப் படர்ந்துளீர் யாரும் வேட்ட
தெற்றது தருதும் வல்லே யெழில்வரங் கொள்க வென்றார். 130

அவரவர் வேட்ட வேட்ட வரும்பெரும் வரங்கள் பெற்றுத்
துவரித ழுமையா ளோடுந் துணைவனார் பாதம் போற்றித்
தவலருங் களிப்புத் துள்ளச் சார்ந்தனர் விடைபெற் றேகி
இவர்தரு தத்தம் வைப்பி னினிதுவாழ்ந் திருந்தா ரன்றே. 131

குருதிகோப் பளிக்கும் வைவேற் குமரவேள் கொழுந்தண் டேறல்
அருவிசெம் மலர்மென் கூந்த லணங்கொடு பேரூர் வைப்பின்
இருமுது குரவர் தம்பா லிருந்தன னுலக மெல்லா
மருமலர்ப் பாதம் போற்றி வைகலும் வாழ மாதோ. 132

கடவுள் தெய்வயானையம்மையாருடன் திருவுலாப்போந்து, மிகுந்த சோதியை வீசும் கோயிலுள்ளே சென்று, இரத்தினங்களின் ஒளிமிகும் பீடத்திலே எழுந்தருளியிருந்தார்.

பம்பினோர் - நெருங்கியுள்ளோர். தூங்க - மிக. எல் - பிரகாசம். அல் - இருட்டு. வில் - ஒளி. தவிசு - பீடம்.

130. மற்றை நாட்களினும் செய்யும் கலியாணச் சடங்குகளையெல்லாம் மிகுதியும் செய்து முடிந்தபின்பு சிவபெருமான் மகிழ்ச்சிமிக்குப் பொருந்திய அன்பினால் இங்கேவந்து குழுமியுள்ள யாவரும் விரும்பியவை யாவை அவற்றை அருள்செய்வோம் விரைந்து அவ்வரங்களைப் பெறுவீராக என்று அருளினார்.

ஆற்றும் - செய்யும். வதுவை - கலியாணம். படர்ந்துளீர் - வந்திருக்கின்றவர்களே! வேட்டது - விரும்பியது. எற்று - எத்தன்மைத்து. வல்லே - விரைவாக.

131. சிவபெருமான் இவ்வாறு அருள் செய்யக்கேட்ட யாவரும் அவரவர் விரும்பிய விரும்பிய அரிய வரங்களையெல்லாம் பெரிதும் பெற்று, உமாதேவியாரோடு சிவபெருமான் திருவடிகளையும் வணங்கித்துதித்து, நீங்குதற்கரிய மகிழ்வு ஓங்கினவர்களாய் விடைபெற்றுச் சென்று, தங்கள் தங்கள் இருப்பிடங்களில் இனிதாக வாழ்ந்திருந்தனர்.

வேட்ட வேட்ட - விரும்பிய விரும்பிய. துவர் இதழ் - சிவந்த உதட்டையுடைய. தவலரும் - நீங்குதற்கு அரிய. இவர்தரு - தங்கியுள்ள. வைப்பு - இடம்: அவரவர் பதங்கள்.

132. இரத்தக்கறை மிகுதியாகத் தோய்ந்த கூரிய வேற்படையையுடைய குமரவேள் மிக்க தேன் பொருந்தும் செவ்விய மலர்களையணிந்த மென்மையான கூந்தலையுடைய தெய்வயானையம்மையாரோடு பேரூராகிய தலத்தில் இரு முது

தேன்வழிந் தொழுகுங் கோதை தேவர்க ளரைய னீன்ற
கான்வழிந் தொழுகுங் கூந்தற் கன்னியைச் சூட்டி யார்க்கும்
வான்வழிந் தொழுகு மின்பம் வழங்கிய காதை கேட்டோர்
ஊன்வழிந் தொழுகும் வேலா னுலகினி லின்பந் துய்ப்பார். 133

குறைவறு தவத்திற் சான்ற கொள்கையீர் தேவர் தங்கள்
சிறையினை விடுத்துக் காத்த செம்மலார் மன்றல் சொற்றும்
மறைவழி யொழுகுஞ் செங்கோல் வளர்குசத் துவச னென்பான்
பெறுவரங் கேண்மி னென்னுப் பேசுவன் சூத மேலோன். 134

தெய்வயானை திருமணப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1993

குரவராகிய அம்மையப்பரிடத்திலே உலகமெல்லாம் தமது திருவடிகளைப்போற்றி என்றும் வாழ்தற்பொருட்டாக எழுந்தருளினர்.

குருதி - இரத்தம். தேறல் - தேன். இருமுது குரவர் - தாய் தந்தையராகிய உமாபதி. வைகலும் - என்றும்.

133. தேவேந்திரன் பெற்றருளிய தெய்வயானையம்மையாரைத் திருமணம் செய்துகொண்டு, யாவருக்கும் முருகக்கடவுள் இன்பத்தைத் தரும் வரலாற்றைக் கேட்டவர்கள் முருகக்கடவுள் உலகத்திலிருந்து இன்பத்தை நுகர்வார்கள்.

தேவர்கள் அரையன் - தேவேந்திரன். கான் - வாசனை. ஊன் - மாமிசம்.

134. குறைவில்லாத தவத்தினுல் மேம்பட்ட இருடிகளே! தேவர்களுடைய சிறைத்துன்பத்தை நீக்கிப் பாதுகாத்தருளிய செவ்வேள் திருமணச் செய்தியைச் சொன்னேம். வேதவொழுங்கிலே நீதிசெலுத்திய குசத்துவசன் என்னும் அரசன் பெற்ற வரங்களையும் கேட்பீராக என்று சூதமகாமுனிவர் சொல்லுவாராயினர்.

முப்பத்தொன்றாவது

குசத்துவசன் வரம்பெறுபடலம்

உவவுமதிக் குடைநிழற்ற வுலகமொரு தாட்படுத்திக்
குவவுநிதி முடிமன்னர் குரைகழற்ருள் பணிந்தேத்தக்
கவவுமறை நெறியொழுகுங் கலைமதியின் வழிவந்தான்
அவவுமனத் திரவலருக் கடர்பருவ மழையனையான். 1

கோடாத கோலினன் குசத்துவச னெனும்பெயரான்
வாடாத சீர்த்தியான் மல்குபெருஞ் செல்வத்தான்
ஓடாத தானையா னொளிவளர்வை வேலினன்
விடாத பெரும்போக மிசைந்துலகம் புரக்குநாள். 2

---

1. சந்திரவட்டக் குடை நிழலைச் செய்ய, உலகத்தைத் தன்னடிக் கீழ்ப் படுத்தி, முடிமன்னர்கள் அடிகளில் வீழ்ந்து வணங்க, வேதநெறிப்படி அரசாளும் சந்திர வமிசத்திலே தோன்றியவன், விரும்பிவரும் இரவலர்களுக்குப் பருவமழை போன்று பொய்யாது கொடுப்பவன்.

உவவு மதி - பௌர்ணமிச் சந்திரன். நிழற்ற - நிழலைச் செய்ய. ஒருதாட் படுத்தி - தன்கீழ் அடங்கியிருக்கச்செய்து. கழல் - வீரக்கழல். கவவு - தழுவுதல். அவவு - அவா. "கவவுக்கை விடப்பெறும் பொருட்டிறத், தவவுக்கை விடுதலது மனும் பொருளே" (கலி-14), "கவிற் கமைந்த காமக் கனலி, அவவுறு நெஞ்சத் தகல்விடத் தகற்ற" (பெருங்கதை 3; 18; 8, 9), "கழுமிய காதலொடு கவவுக்கை விடாது" (பெருங் - 3: 23: 10) "அவவெனக் குறியதன் இறுதிச் சினைகெட்டு நின்றது" (தொல். உயிர்மயங்கு. சூ. 32 உரைபார்க்க). இரவலர்-யாசகர். பருவ மழை - பெய்யுங்காலத்துப் பொய்யாது பெய்யும் மழை.

2. கொடுங்கோல் இல்லாதவன், குசத்துவசன் எனும் பெயரையுடையவன், கெடாத மிகுபுகழையுடையவன், மிகப்பெரிதும் வளர்கின்ற செல்வமுடையான், புறங்கொடாத சேனையுடையான், புகழ் வளர்தற்கேதுவாகிய கூரிய வேலினை யுடையான் ஆகிய அவ்வரசன் அழியாத பெரும்போகத்தை நுகர்ந்து உலகத்தை ஆளுங்காலத்தில்.

"கோடாத செங்கோற் குளிர்வெண் குடைக் கோதை வெள்வேல், ஓடாத தானை" (சீவக-7); "ஓடாத தானை நளன்" (நளவெண்பா-சுயம்-18); "ஓட்டமில் தானையான்" (பாரத - 16 ஆம் போர். 86).

மக்கட்பே றில்லாமை மனைவியொடு மவ்வரையன்
தொக்குப்பா ரிடையெல்லாஞ் சுவைத்தாலு மென்னையுடல்
பக்குத்தூ தர்கள்வழியில் படருயிரைக் கதியேற்று
மிக்குத்தாம் புரிகடன்மை வினைவின்றே லெனக்கவல்வான். 3

உலகாட்சி யமைச்சர்பா லுறுத்தெழுந்து பலவரையும்
மலரார்ந்த பலவனமும் வளர்சுரமும் பலகடந்து
புலவோர்கள் பலகாலும் போற்றிசைத்துப் பெருவரங்கள்
விலகாது பெரும்பேரூர் வியனெல்லை மருங்கடுத்தான். 4

தூரத்தே யெதிர்தோன்றுஞ் சுடர்வெள்ளி வரைவணங்கி
யாரத்தாழ் விழிவெள்ள மகன்மருமத் திடையொழுக
வாரத்தா னெழுமன்பு மனங்கொண்டு முன்னடப்பச்
சாரத்தா னடந்தெய்தித் தவழ்காஞ்சி நதிபணிந்தான். 5

---

3. மனைவியோடு கூடியிருந்து அவ்வரசன் உலகமுழுவதையும் ஆட்சி புரியினும், உடலைப்பிரித்து இயமதூதுவர் கொண்டுசெல்லும் உயிரை நல்ல கதியிலே செலுத்தும் புதல்வர், பிதிர்க்கடனைச் செய்யாதொழியின் என்ன பயனும் என்று கவலைகொள்வான்.

மக்கட்பேறு இல்லாமை-புதல்வரைப் பெருதிருத்தல். பாரிடை-உலகத்தில். சுவைத்தாலும் - அனுபவித்தாலும். பக்கு - பிரித்து. தாம் - புதல்வர். கவல்தல் - கவலைகொள்ளல்.

4. உலகத்தை ஆட்சி செய்யும் பொறுப்பை அமைச்சரிடம் ஒப்புவித்துப் பல மலைகளையும் பாலைவனங்களையும் காடுகளையும் தாண்டித் தேவர்கள் பல முறையும் வணங்கித் துதித்து மிக்க வரங்களை நீங்காமல் பெறுகின்ற பேரூரின் அழகிய எல்லைப்புறத்தை அடைந்தான்.

உறுத்து - ஒப்புவித்து. வரை - மலை. வனம் - காடு. சுரம் - பாலைவனம். புலவோர் - தேவர். மருங்கு - பக்கம்.

5. நெடுந்தொலைவிலே முன்னே காணப்படும் வெள்ளிமலையை வணங்கி, கண்ணீர் பெருகி மார்பிலே ஒழுக, மிக்க அன்பானது மனத்தை முன்னர் இழுத்துச்செல்லத் தான் நடந்துபோய்க் காஞ்சிநதியை வணங்கினன்.

வெள்ளிவரை - வெள்ளிமலை. விழிவெள்ளம் - கண்களின்று உண்டாகும் கண்ணீர்ப்பெருக்கு. மருமம் - மார்பு. வாரத்தால் - அன்பினல். அன்பு மனத்தை முன்னே செலுத்தப் பின்பு காலாலே நடந்துபோய் என்க. சார - பொருந்த.

கரைசார மணியெறிந்து கனைத்தோடுங் காஞ்சிநதி
விரைசாருங் குளிர்புனலின் விதியுளிதோய்ந் தெழுந்தன்பான்
உரைசார்ந்த மறையவருக் கொண்பொருள்கண் மிகவார்த்தி
நிரைசார்ந்த மணிவிதி நேர்தொழுதா லயம்புக்கான். 6

சுடர்மணிக்கோ புரமிறைஞ்சித் தூவெள்ளை விடைகிடந்த
கொடிமருங்குப் பணிந்தெழுந்து குழைந்துருகி வலம்வந்து
கடிகமழ்பன் னீர்நிழலிற் கதித்தபெருஞ் சுவையமிழ்தை
முடிவுமுத லில்லாத முதிர்கனியைக் கண்ணுற்றான். 7

ஆடினா னாராத வானந்தத் துள்ளழுந்திப்
பாடினான் பலவேதம் படர்மனத்தி னெழும்பரிவு
விடினான் போலானான் விமலனா ரடித்தொண்டு
கூடினான் பிரியாத குணங்கொண்டங் கரிதகன்றான். 8

---

6. கரைகளிலே பொருந்தும்படி இரத்தினங்களை வீசியெறிந்து ஒலித்துக் கொண்டு ஓடுகின்ற காஞ்சிநதி நீரிலே விதிப்படி முழுகியெழுந்து, அன்போடு அந்தணர்களுக்கு ஒள்ளிய பொருள்களை மிகக்கொடுத்து, வரிசையாயுள்ள அழகிய விதிகளைத் தொழுதுகொண்டு ஆலயத்தையடைந்தான்.

கனைத்து - ஒலிசெய்து. விதியுளி - விதிப்படி. தோய்ந்து - முழுகி. ஒண் பொருள் - நல்லவழியால் வந்தபொருள். ஆர்த்தி - அன்போடு கொடுத்து.

7. ஒளிவீசும் அழகிய கோபுரத்தை வணங்கி, பரிசுத்தமான வெள்ளிய இடபதேவர் வீற்றிருக்கும் கொடியின் பக்கத்தில் வணங்கி எழுந்து, மனம் குழைந்து உருகுதலைச் செய்து வலமாக வந்து வாசனை வீசும் பன்னீர் மணம் வீசும் பன்னீர் மரநிழலில் விளங்கும் மிகுந்த சுவையுடைய அமுதத்தை, இறுதியு முதலுமில்லாத முதிர்ந்த சிவக்கனியைக் கண்டான். வெள்ளைவிடை கிடந்த கொடி - இடபக்கொடி. கொடியின் பக்கத்திலே தண்டாகாரமாக விழுந்து வணங்கி என்க. கடி-வாசனை. பன்னீர்மர நீழலில் எழுந்தருளியுள்ள சிவபிரான்.

8. ஆனந்தக் கூத்தாடினான்; அமையாத ஆனந்த வெள்ளத்தில் அழுந்திப் பாடினான்; பல துன்பங்கள் பொருந்தும் மனத்தில் வருத்தம் நீங்கினான் போன் றான்; சிவபெருமானுடைய திருவடித் தொண்டிலே பொருந்தினான்; பிரியாத விடையைப் பெற்று அவ்விடத்தையகன்றான்.

ஆராத - அமையாத. ஏதம் - துன்பம். பரிவு-வருத்தம். விடுதல் - நீங்குதல்.

கார்கொண்ட கருங்கூந்தற் கடிகொண்ட திலகநுதல்
வார்கொண்ட குவவுமுலை மரகதவல் லியையிறைஞ்சி
ஆர்கொண்ட சடைதாழ வனவரத நடம்புரியுஞ்
சீர்கொண்ட தம்பிரான் றிகழொளிமன் றமும்பணிந்தான். 9

அற்றைநா ளுணவின்றி யடர்கங்குற் றுயினீத்து
மற்றைநாள் வருவிடியல் வைகறைச்செய் கடனுற்றிக்
கற்றைவார் சடைப்பெருமான் கழலிணையுள் ளகத்திருத்தி
முற்றமா தவம்புரிந்தான் முழங்குபுகழ்க் குசத்துவசன். 10

வேறு

அற்றமி லமரர்க ளாண்டொ ராயிரம்
இற்றிடு மெல்லையி லிலைகொள் சூற்படைக்
கொற்றவன் குவிமுலைக் குமரி தன்னொடும்
பெற்றமேல் கொண்டெதிர் பிறங்கத் தோன்றினன். 11

---

9. மேகத்தையொத்த கரிய கூந்தலையும் வாசனை பொருந்திய திலகமிட்ட நெற்றியையும் கச்சணிந்த குவிந்த நகில்களையுமுடைய மரகதவல்லியம்மையாரை வணங்கி ஆத்திமலர் மாலையையணிந்த சடை தொங்கும்படி அனவரததாண்டவம் செய்தருளுகின்ற சிறப்புப் பொருந்தும் சிவபெருமானுடைய விளங்கும் ஒளியினை உடைய வெள்ளிமன்றத்தையும் வணங்கினன்.

ஆர் - ஆத்திமலர் மாலை. அனவரதம் - எப்பொழுதும். மன்றம் - வெள்ளி சபை.

10. அன்றையத்தினம் உணவு உண்ணுமல் இரவுக்காலத்திலே தூங்குதலை விட்டு நீங்கி மறுநாள் விடியற்காலம் வைகறைப்பொழுதிலே செய்யவேண்டிய நாட்கடன்களைச் செய்துமுடித்துச் சிவபெருமான் திருவடிகளை மனத்திலே தியானஞ்செய்து குசத்துவசன் தவங்கிடந்தான்.

அடர்கங்குல் - நிறைந்த இருளிரவில். துயில்நீத்து - தூங்குதலில்லாமல். உள்ளகத்து - மனத்தில்.

11. சோர்வில்லாத தேவவருடம் ஆயிரம் முடியுங்காலத்தில் சூலாயுதத்தை யேந்திய சிவபெருமான் உமாதேவியாருடன் இடபவாகனத்தில் தோன்றிக் காட்சி தந்தருளினர்.

அற்றம் - சோர்வு. அமரர்கள் ஆண்டு - தேவவருடம். இற்றிடும் - கழியும். சூல் - சூலாயுதம். பெற்றம் - இடபம். பிறங்க - விளங்க.

எழுந்தன னிருந்தவத் திருந்த மன்னவன்
விழுந்தன னடித்தல மீது சென்னிமேல்
தொழுந்தடங் கரத்தொடுந் துதிக ளார்த்தினன்
அழுந்தின னனந்த மென்னு மாழியுள். 12

வழிபடு வேந்தனை நோக்கி வார்சடைப்
பொழிகதிர் நிலவணி புனித வேதியர்
கழிபெருந் தவம்புரி கடனிற் சீர்த்தனை
பழிதபு வரமெது படர்ந்த தோதென்றார். 13

இறைவரங் கருளலு மிறைஞ்சிக் காவலன்
பொறைகொளும் புதல்வரைப் பூப்ப வேட்டனன்
குறைவறு வரமிது கொடுக்க வென்றனன்
அறைமறைத் தலைவர்கேட் டருளிச் செய்வரால். 14

---

12. தவஞ்செய்துகொண்டிருந்த குசத்துவச மன்னன் எழுந்து திருவடிகளில் விழுந்து வணங்கினன்; தலையின்மேற் கூப்பிய கைகளுடனே துதிகளைச் செய்தான்; ஆனந்தக்கடலிலே மூழ்கினன்.

ஆர்த்தினன் - சொன்னன். ஆழியுள் - கடலில்.

13. வழிபாடு செய்த அரசனை நோக்கிச் சிவபெருமான், 'மிகச் சிறந்த தவத்தைச் செய்துமுடித்தாய்; உனக்கு வேண்டும் குற்றமற்ற வரம் யாது சொல்வாய்' என்றருளினர்.

வார்சடை - நீண்டசடை. பொழிகதிர் நிலவு - கிரணத்தை வீசும் பிறைச் சந்திரன். வேதியர் - தேவர்களுள்ளே பிராமணராகிய சிவபெருமான். கடனில்-கடமையில். சீர்த்தனை - சிறந்து விளங்குகின்றாய்.

14. சிவபெருமான் அருளிச்செய்த அளவிலே அரசன் மீட்டும் வணங்கிப் 'புத்திரரைப் பெறுமாறு வேண்டித் தவங்கிடந்தேன்; குறைவில்லாத இந்த வரத்தைக் கொடுத்தருளுக' என்று இரந்தான். வேதத்தை அருளிச்செய்த முழுமுதற்கடவுள் அவ்விண்ணப்பத்தைக் கேட்டு அருளிச் செய்வாராயினர்.

காவலன் - குசத்துவசன். பொறை - என்னுடைய அரசுரிமைச் சுமையை. பூப்ப-பெறுதற்கு. வேட்டனன்-விரும்பினேன். அறை மறைத்தலைவர்-வேதத்தை அருளிச்செய்த சிவபெருமான்.

மருதமர் வரையிடை வதியும் வேற்படை
முருகனை வழிபடின் முடிகொண் மன்னவ
பெருவிறன் மைந்தனைப் பெறுவை யவ்வயின்
ஒருவிய கவலையி னுவந்து செல்கவே. 15

எ ந்தமைக் குறித்துநீ யீங்கு நோற்றலிற்
சு ந்தர மகளிர்க ளிருவர் தோற்றுவார்
மைந்துடைப் பார்த்திவ வென்று மால்விடக்
கந்தரக் கடவுளார் கரந்து போயினர். 16

அருடலைக் கொண்டுசென் றரைய னேங்கிய
மருதமர் சாரல்வண் மலையைச் சார்ந்தனன்
குருபர னாகிய குமரற் கன்புசெய்
திருநிலம் வியப்புற வரமங் கெய்தினன். 17

---

15. மருதமரமிருக்கும் மருதமலையில் வீற்றிருக்கும் வேலாயுதத்தையுடைய முருகவேளை வழிபாடுசெய்யின் முடியுடையரசனே! நீ விரும்பியவாறு மிக வலிய புத்திரனைப் பெறுவாய். கவலையின்றி மகிழ்வுடன் அம்மருதமலைக்குச் செல்வாய்.

மருது - மருதமரம். பெருவிறல் - மிக்கவன்மை. அவ்வயின் - அவ்விடத்திற்கு. ஒருவிய கவலையின் - நீங்கிய கவலையுடன்: என்றது கவலை நீங்க என்றபடி. ஒருவுதல் - நீங்குதல்.

16. எம்மைக்குறித்து நீ இங்கே தவங்கிடந்த காரணத்தால் இரண்டு அழகிய பெண்மக்கள் நின்பால் தோன்றுவர். வன்மையையுடைய மன்னவனே! என்று அருளி நஞ்சணி கண்டராகிய சிவபெருமான் மறைந்தருளினர்.

நோற்றலின் - தவங்கிடத்தலின். மைந்து - வலிமை. பார்த்திவ - அரசனே. மால் விடம் - மிக்கவிடம்; மயக்கத்தைத்தரும் விடம். கந்தரம் - கழுத்து. கரந்து - மறைந்து.

17. சிவபெருமான் திருவருளைச் சென்னிமேற்கொண்டு குசத்துவசன் உயர்ந்த மருதமரங்களடர்ந்த சாரலையுடைய மருதமலையை அடைந்தான். குருபரராகிய குமரக்கடவுளுக்கு அன்புடன் வழிபாடுசெய்து பெரிய நிலவுலகம் வியக்கும்படி அங்கே வரத்தைப் பெற்றான்.

அரையன் - அரசன். குருபரன் - குரவரில் மேலானவர். வரம் - புத்திரப்பேற்றுக்குரிய வரத்தை.

புதல்வனைப் பெறும்பரி செய்தும் பூபதி
இதமுறு பூசையும் விழாவு மேனவுஞ்
சதமகன் மருகனுர் தமக்கும் பட்டியின்
வதிதரு மிறைவற்கு மலிவித் தானரோ. 18

ஆதியம் புரிவள ரமல நாயகர்
போதியென் றருளலும் போதிக் கான நன்
நீதிசெய் மன்னவ னிங்கிச் சென்றுதன்
சோதிசெய் மணிநகர் துன்னி வைகினுன். 19

ஒக்கலு முலகமு முவகை கூர்தரத்
தொக்கதெவ் வரையர்க டுளங்கித் தேசற
மக்களை யுயிர்த்தனன் மகிழ்ச்சி மீக்கொளத்
தக்கபல் லறங்களுந் தழைய வாக்கினுன். 20

---

18. புத்திரனைப் பெறுதற்குரிய பெரிய தன்மையைப் பெற்றுள்ள அரசன் நன்மையை விளைவிக்கும் பூசையையும் விழாவையும் மற்றவற்றையும் இந்திரன் மருகராகிய முருகவேளுக்கும், பட்டீசருக்கும் சிறப்பச்செய்தான்.

பரிசு - தன்மை. பூபதி - அரசன். இதம் - நன்மை. பூசை - நித்திய நைமித்திக பூசைகள். விழா - திருவிழாக்கள். சதமகன் - நூறு அசுவமேத யாகங்களைச் செய்தோனுகிய இந்திரன். சதம் - நூறு. மகம் - யாகம்.

19. ஆதிபுரியாகிய பேரூரில் விற்றிருந்தருளும் சிவபெருமான் செல்க என்று அருள்செய்தபின் அரசன் அவ்விடத்தை நீங்கித் தன் நகரத்தையடைந்தான்.

20. சுற்றத்தாரும் உலகமக்களும் மகிழ்ச்சி மிக, தொகுதியாகவுள்ள பகை அரசர்கள் கலங்கிப் புகழ் தொலையுமாறு நல்ல பிள்ளைகளைப் பெற்றுன். அதனுல் மன்னவன் மிகவும் மகிழ்வுடையவனுய்ச் சிறந்த பல தருமங்களையும் பெருகச் செய்தான்.

ஒக்கல் - சுற்றம். கூர்தர - மிக. தெவ் - பகை. அரையர் - அரசர். துளங்கி - தளர்ந்து, நிலைகலங்கி. தேசு - புகழ், ஒளி. உயிர்த்தனன் - பெற்றுன். தழைய - மிகுதியாக.

குழவிகண் மணியுருக் கோல நோக்கியும்
மழலைகள் கேட்டுங்கை மலர ளாவிய
விழுமிய வடிசில்கண் மிசைந்து மார்புறத்
தழுவியு மோந்துந்தன் றளர்வு நீங்கினன். 21

சுரந்தவன் புடைக்குசத் துவசன் சந்ததி
வரம்பெற லிஃதொரு மன்னன் குட்டநோய்
பிரிந்தமை கூறுதும் பேணிக் கேண்மினென்
றுரம்பெறு சூதனங் குறுவர்க் கோதுமால். 22

குசத்துவசன் வரம்பெறுபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 2015

---

21. குழந்தைகளின் அழகியவடித்தைப் பலமுறைபார்த்தும், மழலைச் சொற்களைக் கேட்டும், கைகளாகிய மலர்களால் கலந்த சிறந்த உணவுகளை உண்டும், மார்பிலே அணைத்துத் தழுவிக்கொண்டும், உச்சியை மோந்தும் தன்னுடைய வருத்தம் நீங்கினன்.

குழவி - குழந்தை. உரு - வடிவம். மழலை - இளஞ்சொல்: எழுத்துவடிவு பெருது தோற்றும் இளஞ்சொல். "மெய்பெரு வெழுத்துயிர்க்கு மழலை" (சீவக. 181) "அவர்மழலை கேட்ட லதனினிதோ" (இனியது-15).

22. மிக்க அன்புடையனாகிய குசத்துவச மன்னன் சந்ததியுண்டாகும் பொருட்டு வரம்பெற்ற வரலாறு இதுவாகும். ஒரு அரசன் குட்டநோய் தீர்ந்த வரலாற்றையும் கூறுவோம் கேட்பீர்கள் என்று ஞானியாகிய சூதமுனிவர் தவசிகளுக்குக் கூறுவாராயினர்.

முப்பத்திரண்டாவது

குலசேகரன் குட்டநோய் தீர்ந்தபடலம்

கருவி மாமழை மதிதொறுங் கவிந்துநீர் பொழிய
அருவி தாழ்மலை நாடுகாத் தரசினி தளிக்குஞ்
செருவில் வார்கொடிச் சேரர்தங் குலத்தில்வந் துதித்தான்
பொருவில் சீர்க்குல சேகர னெனும்பெயர் பூண்டான். 1

மறங்கி டந்தொளி ரொன்னலர் மணிமுடி வணக்கி
அறங்கி டந்தொளிர் மனத்தின னரசுசெய் திடுநாள்
நிறங்கி டந்தொளி ராக்கையி னிறையெழி லழிக்குந்
திறங்கி டந்தொளிர் குட்டநோய் சிவணிய தவற்கே. 2

---

1. மாதங்கள் தோறும் உலகத்துக்குத் துணைக்காரணமாகிய பெருமை பொருந்தியமேகங்களானவை கால்வாங்கி நின்று மழைநீரைப்பொழிய அருவிகள் (மாலைகள் போன்று) தாழ்ந்து ஒழுகுகின்ற மலைநாட்டை ஆட்சிபுரியும் போர் செய்யும் வில்லைக் கொடியிலெழுதிக் கட்டியுயர்த்திய சேரமன்னர் குலத்திலே ஒப்பற்ற சிறப்பினையுடைய குலசேகரன் என்னும் பெயரையுடைய ஒருவன் வந்து தோன்றினன்.

கருவி - மின்முதலிய தொகுதியையுடைய மேகம். இதனை, "தூமமுமெமது பவனுமெமது தோழனத் தோயமுமெமதே, யாமுமிங் கிவற்றே டொன்றுத லொழிதும் ஈரிரு பொருள்களும் பிரிந்தால், மாமுகி லெனும்பேர் எங்குளது" (வில்லிபாரதம், ஆதி, காண்டவதகன,51.) என அக்கினிதேவன் செருக்குற்றமை காண்க. "தூம ஜ்யோதிஸ் ஸலில மருதாம் ஸந்நிபாத: க்வமேக:" என்றார் மேக ஸந்தேசத்தில் காளிதாஸரும்.

2. வீரச்செயல்மிக்க பகைவருடைய சிரங்களை வணங்கச் செய்து,தருமமே விளங்கும் மனத்தையுடையவனாய் அரசு செய்திருக்கின்ற காலத்தில், அழகுமிக்க சரீரத்தின் நிறைந்த அழகை அழிக்குந் தன்மையையுடைய வலிய குட்டநோய் அவனுக்கு வந்து பொருந்தியது.

மறம் - வீரம். ஒன்னலர் - பகைவர். வணக்கி - வணங்கச்செய்து. அறம்- தருமம். நிறம் - வடிவம். ஆக்கை - சரீரம். நிறை எழில் - நிறைந்த அழகு. திறம்- வன்மை. குட்டநோய் - தொழுநோய். சிவணியது - பொருந்தியது.

உருக்கு நோயினை நோக்கின னேங்கிய வரசின்
இருக்கு நீரினுக் கியைவதன் றேயிஃ திதனை
முருக்கு வாமென முன்னினன் மருத்துவர்க் கூவி
நெருக்கு நோயினை நெருக்குவீ ரெனநிகழ்த் தினனால். 3

தேறு நோய்ப்பகை யாளர்க டெரிந்தநூல் வழிவெவ்
வேறு லோகங்க ணீற்றியும் வெய்துநெய் வடித்து
நூறு தேம்பொடி யமைத்துநோன் குளிகைகள் சமைத்து
நாறு தேங்களி யாக்கியு நாடொறுங் கொடுத்தார். 4

கொடுப்ப தேகடன் மருந்துநோய் குமைக்குநர்க் கதுவாய்
மடுப்ப தேகடன் மன்னனுக் குவன்றனக் கின்னல்
படுப்ப தேகட னேய்க்கதன் பரிசினைப் பாரா
விடுப்ப தேகடன் மருந்தினை யென்றனர் மேலோர். 5

---

3. வடிவை அழிக்கின்ற இந்தப் பெருநோயை மனத்தில் நினைந்து உயர்ந்த அரசாட்சியில் இருக்கும் இத்தன்மைக்கு இந்தநோய் பொருந்துவ தன்று. ஆதலின் இதனை அழிப்பாம் என்று கருதினவனாய், மருத்துவர்களை அழைத்து, துன்பம் செய்யும் இந்த நோயினைப் போக்குவீர் எனச்சொன்னான்.

உருக்கும் நோய் - வடிவை அழிக்கின்ற நோய். நீரினுக்கு - தன்மைக்கு. முருக்குவாம்-அழிப்போம். முன்னினன்-கருதியவனாய்: முற்றெச்சம். மருத்துவர்-வயித்தியர். நெருக்கும் - துன்புறுத்தும். நெருக்குவீர் - போக்குவீர்.

4. தெளிந்த மருத்துவர்கள், தாங்கள் கற்றறிந்து அனுபவப்பட்ட மருத்துவ நூல்வழியே பலவேறு வகைப்பட்ட உலோகங்களை பஸ்மமாகச் செய்தும், மிக்க நெய்களைவடித்தும், மிக நுண்ணிய இனிய பொடிகளைச் செய்தும், வலிய குளிகைகளை ஆக்கியும், மணம் பொருந்திய இனிய களிகளைச்செய்தும் விதிப்படி நாடோறும் கொடுத்துவந்தார்கள்.

தேறு - தெளிந்த. நோய்ப்பகையாளர் - நோயை அழிப்பவர். தெரிந்த - ஆராய்ந்த. உலோகங்கள் நீற்றியும் - உலோகங்களைப் பஸ்மமாகச் செய்தும்; அவை தங்கபஸ்பம், தாமிரபஸ்பம் முதலியன. நூறும் - சாம்பாராக்கிய. நூறு - பல எனினுமாம். நோன் - வலிமை. குளிகை - மாத்திரை. தேங்களி - இனிய லேகியம்.

5. நோயை அழிக்கும் மருத்துவர்களுக்கு மருந்து கொடுப்பதே கடமை ஆயிற்று. அதனை உண்பதே மன்னனுக்குக் கடமையாயிற்று. அவனுக்குத் துன்பத்தை விளைப்பதே நோய்க்குக் கடமையாயிற்று. அந்நோயின் தன்மையைப் பார்த்து அறிவுடையோர் மருந்தை உண்ணாமல் விட்டுவிடுவதே கடமையாம் என்று கூறினார்கள்.

குமைத்தல் - அழித்தல். வாய்மடுத்தல் - உண்ணுதல். இன்னல் படுப்பது - துன்பத்தை உண்டாக்குவது. விடுப்பது - உண்ணாமல் ஒழிவது.

ஆய வேலையி லயற்புலத் தரையர்கள் விடுத்த
நோயி னாண்மைதேர் மருத்துவர் நுனித்தறிந் தியற்றுந்
தூய வான்மருந் தினத்தையுந் துகளுறப் புறங்கண்
டேயு நோய்நனி விறிய தியாவரு மினைய. 6

என்னை கூறுமா றிருநில மருந்தென வெடுத்துச்
சொன்ன யாவையுந் தொகுத்தநூன் முறையின்வாய் மடுத்தான்
கொன்னும் வான்மருந் தானும்வெவ் வேறுநோய் குனிப்ப
மன்னும் வாடினன் மருந்துவேண் டாவென விடுத்தான். 7

கருகி மெய்யெலாங் கறைபொழி புண்பல வாகி
உருகி வெண்ணிண முகநக மறவிரன் மடங்கி
இருகை கான்முக மிருசெவி நாசியும் விங்கி
வெருவ நோக்குவார் வேற்றுரு வாயினன் வேந்தன். 8

---

6. அப்பொழுது அயல்நாடுகளிலுள்ள அரசர்கள் தங்கள் நாட்டிலுள்ள நோயின் வலிமையை நன்குகத் தெளிந்து போக்குகின்ற மருத்துவர்களையனுப்ப, அவர்கள் மிகவும் நுண்மையாக ஆராய்ந்து, செய்த பரிசுத்தமாகிய சிறந்த மருந்துகளின் வகையையும் பொடியாகப் புறமுதுகிட்டு ஓடச்செய்து பொருந்திய அத்தொழுநோய் யாவரும் வருந்தும்படியாக மிகவும் விறிட்டெழுந்தது.

வேலை - பொழுது. அயற்புலம் - அயல்நாடு. நோயின் ஆண்மை - நோயின் வலிமை. நுனித்து அறிந்து - நுட்பமாக அறிந்து. வான்மருந்து - சிறந்த மருந்து. இனம் என்றது பலவகைப்பட்ட மருந்துகளை. துகள் உற - பொடிபடும்படி. புறங் கண்டு - புறமுதுகு காட்டி ஓடச்செய்து. நனி விறியது - மிகவும் மேம்பட்டு எழுந்தது. இனைய - வருந்த.

7. என்ன சொல்லுவது. நிலவுலகத்திலே தொழுநோய்க்கு என்று எடுத்துச் சொல்லிய எல்லா மருந்துகளையும் தொகுத்துவைத்த நூல்களில் கூறிய முறைப்படி உண்டான். சிறந்த உயர்ந்த மருந்துகளாயினும் அவை அனைத்தும் வேறுபடக் குட்ட நோயானது நடனம் செய்ய, அரசனும் மிகவருத்தம் உடையவனாய், இனி இதற்கு மருந்துகள் வேண்டா என்று வெறுத்து விட்டுவிட்டான்.

நூல் முறையின் - நூலிலே சொல்லிய விதிப்படி. கொன்னும் வான்மருந் தானும் - மிகச்சிறந்த மருந்தாயினும். வெவ்வேறு - வேறு வேறாக; பயனின்றி ஒழிய. நோய் குனிப்ப - நோயானது அதிகரிக்க; குனிப்ப - கூத்தாட.

8. அரசனுடைய உடம்பெல்லாம் கருநிறத்தை அடைந்து, புண்ணீர் ஒழுகும் புண்கள் பலவுண்டாய், வெள்ளிய கொழுப்புகள் விண்டு விண்டு சிதற, நகமில்லாமல் விரல்கள் மடங்கி, இரண்டு கைகளும் இரண்டு கால்களும் முகமும் இரண்டு காதுகளும் மூக்கும் ஆகிய எல்லா உறுப்புக்களும் விக்கத்தையடையப் பார்ப்போர் அஞ்சும்படி அரசன் முன்னுள்ள வடிவம்போய் வேறு வடிவமாகவே தோன்றினன்.

மருந்தி ளுலிது மடங்குரு தாயினு மறைகள்
திருந்த வோதிய வறங்களாற் றீருமென் றெண்ணிப்
பொருந்து காதலி னறமெலாம் விதியுளி புரிந்தான்
அருந்தி யாக்கையை யழிக்குநோய்க் கழிவினைக் காணன். 9

வேறு

அரத்தச் சடிலத் தெம்பெருமா னமருந் தலங்கள் பலபோற்றி
இரத்தச் செழும்புண் ணுடற்கீட்டி யின்னல் பெருக்கும் பெருநோயைத்
துரத்திக் களிப்பா மெனக்கருதித் தொக்க பொருள்கண் மிகத்தழுவி
வரத்திற் சிறந்த தலந்தோறு மாறு வன்பிற் போய்ப்பணிந்தான். 10

பிள்ளைக் கலைவெண் மதிமுடித்த பெருமான் சரணந் தலந்தோறும்
உள்ளத் தெழுந்த பேரன்பி னுற்று வணங்கி வழிபடலுந்
தள்ளற் கரிய பெரும்பிணிதான் றணியா துயரா தொருநிலைமை
கொள்ளக் களித்தாண் டுகடோறுங் குழகன் றலங்கும் பிடலுற்றான். 11

கறைபொழி - புண்ணீர் பொழியும். வெள்நிணம் - வெண்மையான கொழுப்பு. நகம் அற - நகம் ஒழிய. மடங்கி - மடங்கப்பெற்று. வெருவ - அஞ்ச. வேற்றுரு - வேறு வடிவம்.

9. இப்பெருநோய் எந்த மருந்துகளினலும் ஒழியாமற்போயினும் வேதங்களிலே சொல்லப்பட்ட சிறந்த தருமங்களைச் செய்தலால் இந்நோய் ஒழியும் என்று நினைந்து மிக்க விருப்பத்தோடு வேதங்களிலே விதித்த தருமங்கள் எல்லாவற்றையும் விதிப்படி செய்தான். எனினும் உடம்பை உண்டு ஒழிக்கும் தொழுநோய்க்கு அழிவைச் சிறிதும் கண்டிலன்.

மடங்குருது - வாசியாகாது. விதியுளி - முறைப்படி.

10. சிவந்த சடாபாரத்தையுடைய சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற அரிய தலங்கள் பலவற்றையும் தரிசித்து வணங்கித்துதித்து, உதிரம் ஒழுகும் மிக்க புண்ணை உடம்பிலே நிறைத்துத் துன்பத்தை மிகுவிக்கும் பெருநோயை அழித்து ஒழித்து மகிழ்வோம் என்று நினைந்து மிகுதியாக திரவியத்தை எடுத்துக் கொண்டு மகத்துவ மிக்க தலங்கள்தோறும் நீங்காத பேரன்போடு சென்று வணங்கினன்.

அரத்தச்சடிலம் - செஞ்சடை. உடற்கு ஈட்டி - உடலில் உண்டுபண்ணி. துரத்தி - விரட்டி. தொக்க - தொகுதியாக உள்ள. வரம் - மகத்துவம்.

11. இளம்பிறைச் சந்திரனைச் சடையிலே தரித்த சிவபெருமான் திருவடிகளைத் தலங்கள்தோறும் மனத்திலே எழுந்த மிக்க அன்பினலே சென்றுவணங்கி வழிபாடுசெய்த அளவிலே நீங்குதற்கரிய அப்பெரு நோய் தணியாமலும் மிக்கு வளராமலும் ஒரு தன்மையை உடைமையை அறிந்து மகிழ்ந்து வருடங்கள் தோறும் சிவதலங்களிற் சென்று வணங்கத் தொடங்கினன்.

பிள்ளைக்கலை வெண்மதி - பிறைச்சந்திரன். குழகன் - சிவபெருமான்.

அவ்வா றெழுகி வருநாளோ ராண்டு தனது பதிதணந்து
கைவா ரணத்தி னுரியார்தங் காமர் தலங்கள் பலவிறைஞ்சி
ஒவ்வா வரக்க னுயிர்பருகி யொளிர்வா ணுதலைச் சிறைமீட்ட
செவ்வாய் மையினன் வழிபட்ட சேது வணங்கித் திரும்பினன். 12

செல்லு நெறியின் மகதியாழ்த் தெய்வ முனிவ னெதிர்ப்படலும்
வல்லை வணங்கி யெனையாளும் வரதா வடியே னுடற்கிளைத்த
அல்லற் பிணிவிட் டகலுமா றருளா யென்று னம்முனிவன்
ஒல்லையிரங்கி விறல்வேந்த னுவகை கிளைப்ப வுரைக்குமால். 13

பண்டு புரிந்த தீவினையாற் படர்வ தாகும் பலநோயும்
மண்டு மவற்றுண் மணிமனுநன் மருந்தாற் றீராப் பிணியேனும்
அண்டர் பெருமா னமர்தலத்தி னகலு மனைய தலந்தம்முட்
கண்ட வுடனே பயனளிக்குங் காமர் தலமொன் றுளதாமால். 14

---

12. அவ்வாறு குலசேகரன் சிவதலங்கள்தோறும் ஒவ்வொரு ஆண்டிலும் சென்று வணங்கி வருகின்றகாலத்தில் ஒருவருடத்தில், தன்னுடைய நாட்டை நீங்கி, யானைத்தோலைப் போர்த்தருளிய சிவபெருமான் விரும்பி அமரும் தலங்கள் பலவற்றையும் வணங்கிக்கொண்டு, இராவணனுடைய உயிரைப்போக்கிச் சீதாபிராட்டியாரைச் சிறைமீட்டருளிய ஸ்ரீராமபிரான் வழிபட்ட சேதுவை வணங்கிவிட்டுத் திரும்பினன்.

தணந்து - நீங்கி. கைவாரணம் - யானை. உரி - தோல். காமர் - விருப்பத்தைத்தரும். ஒவ்வா அரக்கன் - பாவச் செயலிலே தலைப்பட்ட இராவணன். வாணுதல் - சீதாபிராட்டியார்: அன்மொழித்தொகை. செவ்வாய்மை - சிறந்த நெறி.

13. செல்லும் வழியிலே மகதி என்னும் வீணைக்குத் தலைவராகிய தெய்வத் தன்மை பொருந்திய நாரதமுனிவர் எதிரே வரலும், விரைந்து அவரை வணங்கி நின்று, என்னை ஆட்கொண்டருளும் வரதனே! அடியேனுடைய உடம்பிலே மேலும் மேலும் வளர்ந்தெழுந்த துன்பநோய் நீங்கும்பொருட்டு அருள்செய்வாய் என்று வேண்டினன். அந்த நாரதமுனிவர், அரசன் வேண்டுகோளைக்கேட்டு விரைவில் மனமிரங்கி அவனுக்கு மகிழ்வு உண்டாகும்படி சில சொல்லத் தொடங்கினர்.

தெய்வ முனிவன் - தெய்வத்தன்மையுள்ள நாரதமுனிவர். மகதியாழ் - நாரதருக்கு உரிய யாழ். வல்லை-விரைவாக. வரதன்-வரங்களைக் கொடுப்பவன். கிளைத்த - மேலும் மேலும் தோன்றிய. அல்லல் - துன்பம். பிணி - தொழுநோய். ஒல்லை - விரைவில்.

14. முன்னைப் பிறவிகளில் செய்த தீவினைகளின் தொடக்கினால் உண்டாவதாகின்ற பலநோய்களும் வந்து பொருந்துவதாம். அந்நோய்களுள் மணியாலும் மந்திரத்தாலும், மருந்தினாலும் நீங்காத நோயாயினும் சிவபெருமான் எழுந்தருளி

அனைய தலம்வண் டிசைமுரல வடர்மெல் லிதழின் முறுக்கவிழு
நனைமென் பொகுட்டம் போருகத்தி னணுகோ திமத்தி னிளம்பிள்ளை
கனைவெண் டரங்கந் தவழ்ந்தசைப்பக் களித்துத் துயில்கூர் தடம்பொய்கை
முனைவ னருள்போற் குளிர்பெருக்கு மூதூர்க் காஞ்சிப் பேரூரே. 15

வேறு

காப்பி னுலுல கத்துக் கரிசெலாம்
ஒப்பி நேமி யுருட்டுஞ்செங் கோலினய்
ஆப்பி யிற்புழு வர்க்கமு ருதுகாண்
மாப்பெ ருந்தல மாமவ் வரைப்பிடை. 16

இருக்கின்ற தலத்திற் சென்று வழிபடுவதால் நீங்குவதாம். அப்படிப்பட்ட சிறந்த சிவதலங்களுள் தரிசித்த மாத்திரத்தில் நல்ல பயனைக் கொடுக்கும் விரும்பத் தகுந்த தலம் ஒன்று உள்ளது.

படர்வது-தொடர்ந்து வருவது. மண்டும் - நிறையும். மணி மனு மருந்து - மணி மந்திர ஔடதம். தீராப்பிணி - நீங்காத நோய். அண்டர் - தேவர்கள். அண்டர்பெருமான் - தேவதேவன், மகாதேவன். காமர் - விரும்பத்தகுந்த.

15. அப்படிப்பட்ட தலமானது வண்டுகள் இசைப்பாட்டுக்களைப்பாட, நெருங்கிய மென்மையான இதழ்களின் கட்டு நீங்கும் பேரரும்புகளையுடைய மென்மையான பூங்கொட்டைகளோடு பொருந்திய தாமரைகளிலே பொருந்தும் அன்னப் பறவையின் இளைய பார்ப்புகள் ஒலிக்கின்ற வெண்மையான அலைகள் மெல்லச் சென்று அசைக்க, மகிழ்ச்சியோடு தூக்கம் மிகும் பெரிய பொய்கைகள் சிவபெருமானுடைய அருளைப்போலக் குளிர்ச்சியை மிக உண்டாக்கும் பழமை யாகிய தலம் காஞ்சிநதியையுடைய பேரூரேயாகும்.

முரல - ஒலிக்க. முறுக்கு - கட்டு. நனை - பேரரும்பு. பொகுட்டு - தாமரைப் பூங்கொட்டை. அம்போருகம் - தாமரை. ஓதிமம் - அன்னம். இளம்பிள்ளை - இளம் பார்ப்புகள். கனை - ஒலிக்கும். தரங்கம் - அலைகள். முனைவன் - சிவபிரான். காஞ்சி - காஞ்சிநதி.

16. நீதியோடு அரசுபுரிவதால் உலகத்திலேயுள்ள குற்றங்களையெல்லாம் நீங்கச்செய்து ஆணைசெலுத்தும் செவ்விய கோலையுடையவனே! அந்தச் சிறந்த தலத்திலே பசுச்சாணியில் புழுவானது தோன்றாது. அது அத்தகைய மகிமையை உடையது.

காப்பு - பாதுகாத்தல். கரிசு - குற்றம். ஒப்பி - நீக்கி. நேமி - ஆக்ஞா சக்கரம். ஆப்பி - பசுச்சாணம். வரைப்பு - தலம்.

அன்ன மாநகர் மேன்மை யனைத்தையும்
என்னை கூறுத லேந்தயின் மன்னவ
துன்னி நீயந்தச் சூழலு ருமுனங்
கன்னி நோய்கழிந் தோடுதல் காண்டியால். 17

கருத்தின் வேறு கருதலை யின்னினித்
திருத்த னாதி புரத்தினைச் சேறியென்
றருத்தி யோடு மறைந்து மறைந்தனன்
நிருத்தன் சீர்த்தி நிகழ்த்திடும் வீணையான். 18

அற்றை ஞான்றடர் நோய்கழிந் தானெனப்
பெற்ற வோகை பிறங்கவை வேலினன்
உற்ற நாட்டை யொழிந்துயர் கொங்குசேர்ந்
தெற்று நீர்நதிக் காஞ்சியை யெய்தினன். 19

---

17. அந்தச் சிறந்த நகரினது பெருமைகளையெல்லாம் எதற்காகக் கூறுதல் வேண்டும். அரசனே! நீ நெருங்கி அந்தப் பக்கத்தை அடைவதற்கு முன்னரே அழியாத இப்பெருநோய் நீங்குவதை நேரே காண்பாயாக.

அயில் - வேல். துன்னி - நெருங்கி. சூழல் - பக்கம். கன்னி நோய் - அழியாத பெருநோய். காண்டி - காண்பாய்.

18. சிவபெருமானுடைய மிக்கபுகழை வீணையில்வைத்துப் பாடிக்கொண்டு திரியும் நாரதமகாமுனிவர் அரசனே! நீ மனத்திலே வேறுவேறு எண்ணங்களைக்கொள்ள வேண்டா. இப்பொழுதே பரிசுத்தனாகிய சிவபிரான் எழுந்தருளியிருக்கும் ஆதிபுரத்தைச் சென்று அடைவாய் என்று விருப்பத்தோடு சொல்லி மறைந்தார்.

இன்னினி - இப்பொழுதே. திருத்தன் - பரிசுத்தன், நிர்மலன். ஆதிபுரம். பேரூர். சேறி - செல்வாய். அருத்தி - அன்பு. நிருத்தன் - சிவபெருமான். சீர்த்தி - மிகுபுகழ். வீணையான் - நாரதமகாமுனிவர்.

19. அப்பொழுது தன்னை மிகவும் வருத்திய பெருநோயினின்று நீங்கினன் என்று சொல்லும்படி மிகவும் மகிழ்ச்சி பொங்க, கூரிய வேலையுடைய குலசேகரன் தன்னுடைய நாட்டைவிட்டு நீங்கி, உயர்ந்த கொங்குநாட்டை அடைந்து அலை வீசுகின்ற காஞ்சிநதியை அடைந்தான்.

அற்றை ஞான்று - அப்பொழுதே. அடர் நோய் - வருத்தும்நோய். ஓகை - உவகை, மகிழ்ச்சி. பிறங்க - விளங்க. வைவேல் - கூரிய வேல். உற்ற நாடு - சேரநாடு. கொங்கு - கொங்குநாடு. எற்றும் - எறியும்.

வணங்கிக் காஞ்சி வருபுன லாடினன்
உணங்கிக் கன்ம முலக்கும்பே ரூர்வயின்
அணங்கி னேடம ரண்ணலைத் தாழ்ந்தனன்
பிணங்கு நோய்பிரிந் தோடிய தென்பவே. 20

தேசு மிக்க திருவுரு வாயினன்
ஈசன் மிக்கரு ளென்றரத் துஞ்செல
நேச மிக்க நெறியில னம்மவென்
ருசை மிக்க வகத்தொடு மாடினன். 21

பட்டி நாயகற் கான பணிபல
முட்டி லாத முறையி னியற்றினன்
விட்டு நீங்கற் கருமை விரவலிற்
சட்ட வவ்வயிற் றங்கி வதிந்தனன். 22

---

20. காஞ்சிநதியைக் கண்டு வணங்கி, மிக்க நீரிலே முழுகினன். வாடிக் கன்மங்கள் அழியும் பேரூர்த்தலத்திலே உமாதேவியாரோடு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை வணங்கினன். அப்பொழுதே மாறுபட்டு வருத்திய தொழு நோயானது நீங்கி ஓடியது என்று சொல்லுவார்கள்.

வருபுனல் - மிக்கநீர். உணங்கி - வாடி. உலக்கும் - அழியும். பிணங்கும் - மாறுபடும்.

21. ஒளி பொருந்திய மிக்க வடிவத்தை மன்னன் அடைந்தான். சிவ பெருமானுடைய பேரருள் என்னிடத்திலேயும் வந்து பொருந்த அன்பு மிகுந்த சன்மார்க்கத்திலே நின்றேனல்லேன். என்ன ஆச்சரியம்! என்று அன்பு மிகுந்த மனத்தோடும் ஆடினன்.

தேசு - ஒளி. திருவுரு - வடிவம். மிக்கருள் - மேம்பட்ட அருள். என் தரத்தும் - என் அளவிலும். நேசம் - அன்பு.

22. பட்டீசருக்குப் பொருந்திய பல திருப்பணிகளையும் தடையில்லாத விதிப்படிசெய்து முடித்தான். விட்டு நீங்குதற்கு முடியாமை பொருந்துதலின் விரைந்து அவ்விடத்திலே அவன் தங்கியிருந்தான்.

முட்டு - முட்டுப்பாடு, தடை. முறை - விதிப்படி. சட்ட - விரைவாக. அவ்வயின் - அவ்விடத்தில். வதிந்தனன் - வசித்தான்.

பத்தி செய்து பணிசெயு நாளையில்
தொத்து டற்பொறை நீங்கத்தொன் மாமலக்
கொத்து நீங்கிக் குழகன் பதமெனு
முத்தி யெய்தி முடிவிலின் பாயினன். 23

வேறு

பிரியாத பிணிகெழுவிப் பேரன்பிற் சேரலன்றன்
முரியாத விடெய்து முறைமையினை வகுத்துரைத்தாந்
திரிலோக சோழனுறு செயிர்தீர்ந்த படிமொழிதும்
உரிதாகக் கேண்மினென வுறுவரர்க்கோ துவன்சூதன். 24

குலசேகரன் குட்டநோய் தீர்ந்தபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 2039

---

23. அன்போடு திருப்பணிகளைச்செய்து வருங்காலத்தில் பொருந்திய உடற்சுமையானது நீங்கப் பழமையாக உள்ள மாமலக்கொத்தும் நீங்கப்பெற்றுச் சிவபெருமான் திருவடியென்னும் முத்தியை அடைந்து முடிவில்லாத இன்பமயம் ஆயினன்.

உடற்பொறை - உடற்சுமை. தொல் - பழமையாகிய. மலக்கொத்து - மலத்திரட்சி. மாமலம் - ஆணவ இருள்.

24. விட்டு நீங்காத பெருநோய் நீங்கப்பெற்று, மிக்க அன்புடைய சேர நாட்டு அரசனாகிய குலசேகரன் நீங்காத வீட்டின்பத்தையடைந்த வரலாற்றை வகுத்துச்சொன்னோம். இனி, திரிலோக சோழன் என்பவனுடைய மிக்க குற்றமானது நீங்கிய செய்தியைச் சொல்லுவோம். நீங்கள் மிகவும் கவனமாகக் கேளுங்கள் என்று நைமிசமுனிவர்களுக்குச் சூதமுனிவர் ஓதுவாராயினர்.

கெழுவி - நீங்கி. முரியாத - நீங்காத. செயிர் - குற்றம். உறுவரர் - மிக்க நைமிச முனிவர்.

முப்பத்துமூன்ருவது

திரிலோகசோழன் செயிர்தீர்ந்தபடலம்

இருணெ டும்பிழம் பெடுத்துவாய்ப் பெயவருங் காலம்
பருதி தப்பினும் பருவந்தப் பாதுநீர் வழங்கி
முருகு விம்மலர்ப் பண்ணைகண் முறைமுறை விளைக்கும்
பெருகு காவிரி நாட்டினைப் பேணுமோர் சோழன். 1

மும்மை வையகத் திடரெலா முதலொடு முருக்கி
அம்ம விண்ணகத் தரையனும் வரிசைக ளாற்றச்
செம்மை செய்தலிற் றிரிலோக சோழனென் றொருபேர்
விம்மு காதலின் யாவரும் விளம்புவ ரவற்கே. 2

ஒளிறு வேலவன் முறைசெய வோங்குசோ ணாட்டின்
அளகை யாளிபோ லனைவரும் வெறுக்கைய ராகி
வளமை யீட்டுவெண் பூதிசா தனநனி மருவி
வெளிறில் கேள்விய ராய்ப்பெரு வாழ்க்கைமே வினரால். 3

---

1. இருளினது மிக்க தொகுதியை எடுத்து உண்ணும் காலத்தைச் சூரியன் தவறினுலும் காலந்தவருமல் நீரைக்கொடுத்துத் தேன் கொப்பளிக்கும் மலர்களை யுடைய வயல்கள் முறைமுறையாக விளையச்செய்யும் நீர்ப்பெருக்கினையுடைய காவிரிநாட்டைப் பாதுகாக்கும் ஒரு சோழவரசன்.

நெடும்பிழம்பு - மிக்கதொகுதி. வாய்ப்பெய - உண்ண. பருதி - சூரியன். முருகு விம்மு அலர்: முருகு - தேன். பண்ணைகள் - வயல்கள். காவிரிநாடு - சோழநாடு.

2. மூன்றுலகங்களினுமுள்ள துன்பங்களையெல்லாம் வேரோடு களைந்து விண்ணுலக வேந்தனும் பல சிறப்புக்களைச் செய்ய, நீதி செலுத்துதலினல் திரிலோகசோழன் என்று ஒருபெயரை விருப்புடன் எவரும் அவனைச் சொல்லு வார்கள்.

மும்மை - மூன்று. வையகம் - உலகம். முருக்கி-அழித்து. வரிசை - சிறப்பு. விம்மு காதல் - மிக்க விருப்பம்.

3. ஒளிபொருந்திய வேற்படையையுடைய அரசன் நீதி செலுத்த, உயர்ந்து விளங்கும் சோழநாட்டில் குபேரனைப்போல எல்லோரும் செல்வமுடையவராய் வளப்பத்தைத் தேடும் வெண்மையான விபூதி உருத்திராக்கங்களை நன்ருக

சைவ ரேயலாற் பரமதத் தவர்தமைக் காணுத்
தெய்வ மேகமழ் திருத்தகு காவிரி நாட்டின்
மெய்வி ராவிய கல்வியர் தம்மொடு மேவி
நெய்வி ராவிய வேலினுன் முறைநிகழ்த் திடுநாள். 4

செல்வ மிக்கநே வாளதே யத்திடை யிருந்து
கல்வி கற்றகா பாலர்கள் சிலர்சென்று கலந்தார்
வில்வ மிக்கணி விமலனர் தலம்பல விராவிச்
சொல்வி ளைத்திடுஞ் சோழநாட் டெல்லையின் மாதோ. 5

அனைய செவ்வியிற் சிவநிசி யடுத்ததந் நாளின்
வினையி கந்தநல் வேதிய ரடியவர் பலருந்
தனைநி கர்த்திடுந் திருவிடை மருதெனுந் தலத்தின்
முனைவ னின்னருட் சேவடி வணங்கமுன் னினரால். 6

அணிந்து, அறிவுடைய கேள்விச் செல்வமுடையவர்களாய்ப் பெரிய வாழ்க்கையுடன் பொருந்தியிருந்தனர்.

ஒளிறு - ஒளிசெய்யும். முறைசெய - நீதி செலுத்தும் காரணத்தால். அளகையாளி - குபேரன். வெறுக்கையர் - செல்வமுடையோர். வெளிறு - அறிவின்மை.

4. சைவ சமயத்தவர்களே அல்லாமல் பிற மதத்தை உடையவர்களைக் காணுத தெய்வமணம் விசும் சிறந்த காவிரிநாட்டில் தத்துவஞானம் பொருந்திய கல்வியறிவுடையவரோடு பொருந்தி நெய் பூசப்பெற்ற வேற்படையை யுடைய அரசன் நீதிசெலுத்துங் காலத்தில்.

பரமதத்தவர் - பிறசமயிகள். மெய்விராவிய கல்வி - தத்துவ ஞானத்தைத் தரும்கல்வி: மெய் - தத்துவம். நெய் விராவிய வேல் - நெய்பூசப்பெற்ற வேற்படை. முறை - நீதி.

5. செல்வம் மிகுந்த நேபாள தேசத்திலிருந்து கல்வியறிவுடைய காபால மதத்தையுடையவர் சிலர் சென்று சிவபெருமான் எழுந்தருளியுள்ள தலங்கள் பலவற்றையும் தரிசித்து நெல்லை விளைக்கும்சோழநாட்டு எல்லையை அடைந்தார்.

காபாலர் - காபாலமதத்தினர். சொல் - நெல். காபாலர் தமது சாஸ்திர முறைப்படி தீட்சைபெற்றுப் பச்சைக்கொடி ஒன்றைக் கையிலேந்தி, மனிதர் தலையோட்டில் பிச்சை ஏற்று உண்டு, உன்மத்தராய்ச் சிவன் ஆவேசித்தலால் எல்லாக்குணங்களும் பெற்றுச் சிவசமமாவர் என்பர். இவர் ஆவேசவாதி எனவும் படுவர்.

சோழநாட்டு எல்லையில் காபாலர்கள் சிலர் கலந்தார் என்க.

6. அப்போது சிவராத்திரி காலம் வந்தடுத்தது. அந்த நாளில் தீவினையில்லாத நல்ல வேதியர்களும் அடியார்கள் பலரும் தனக்குத் தானே ஒப்பான

ஆற்றன் மிக்கவச் சோழனு மன்புள மீர்ப்பக்
கூற்றை வென்றருள் குழகனுர் குரைகழற் பாதம்
போற்ற வவ்வயிற் புக்கன னன்னது தெரிந்து
மாற்ற மிக்ககா பாலரும் வல்விரைந் தடுத்தார். 7

திருந்தி ணர்ச்செழுங் கொன்றையார் சேவடி வணங்கப்
பொருந்து செவ்விபார்த் திருந்தனன் பூபதி யொருபால்
இருந்த வெல்லையி லெய்துகா பாலவிப் பிரர்கள்
வருந்த லின்றியே கண்டனர் வழங்கின ராசி. 8

கொண்ட வேடமு மன்னவர் குரூஉமணி யுருவின்
மண்டு காந்தியு மதித்தவர் மனமதித் திலனுய்க்
கண்ட காவலன் விருப்பொடுங் கையிணை கூப்பி
மிண்டு தீவினை யாரையா ரெனவின வினனுல். 9

தாகிய திருவிடைமருதூர் என்னும் சிவதலத்தில் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்க எண்ணினர்.

செவ்வி - காலம். சிவநிசி - சிவராத்திரி. வினை இகந்த - தீவினையினின்று நீங்கிய. முனைவன் - முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான். முன்னினர் - கருதினுர்கள்.

7. வலிமைமிக்க அந்தத் திரிலோக சோழனும் அன்பானது மனத்தை இழுத்துச் செல்ல இயமனை வென்றருளிய சிவபெருமான் திருவடிகளை வணங்கும் பொருட்டு அத்தலத்தையடைந்தான். அதைத் தெரிந்து காபாலமதத்தினரும் அங்கே விரைந்து வந்து பொருந்தினர்.

ஆற்றல் - வலிமை. ஈர்ப்ப - இழுக்க. கூற்றை - இயமனை. குழகனுர் - சிவபெருமான். அவ்வயின் - அவ்விடத்துக்கு. மாற்றம் மிக்க - சொல்வன்மையுடைய, மாறுபாடு மிகுந்த.

8. நல்ல பூங்கொத்துக்களையுடைய கொன்றைமலர்மாலையை அணிந்த சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கும் பொருட்டுச் சமயத்தை நோக்கியிருந்தான். அரசன் ஒருபுறத்திலிருந்தபோது அங்கே சென்ற காபாலர்களாகிய பிராமணர்கள் வருத்தமின்றி அரசனைக்கண்டனர். ஆசிகூறினுர்.

இணர் - பூங்கொத்து. செவ்வி - சமயம். பூபதி - அரசன். விப்பிரர் - பிராமணர்.

9. காபாலிக மதத்தையுடைய பிராமணர்கள்கொண்ட வேடத்தையும், அவர்களுடைய உடம்பில் உள்ள ஒளியையும் மதித்தவனுய், மனத்தை மதியாதவனுய் அவர்களைக் கண்ணுற்ற அரசன் அன்போடு இரண்டு கைகளையும் குவித்து நிறைந்த தீவினையுடையாரை நீவிர் யார் என வினவினுன்.

கடாவு மன்னவன் கருத்தினைக் கதுமென நோக்கி
விடாது நம்வழி மேவுவ னிவனென விழைந்து
தடாத தீவினை போல்பவர் தம்முளே யொருவன்
கெடாத மூப்புடை யானெதிர் கிளக்குவ னானான். 10

நமது வாழ்க்கையி னிருக்கைநே வாளநற் றேயம்
நுமது நாட்டுடை வளமையு நுமதிரும் புகழும்
எமது வார்செவி யேறலி னினிதுகாண் விருப்பிற்
சமர வேற்றடங் கையினாய் சார்ந்தன மீங்கு. 11

பண்டு மாதவம் புரிந்தனை பார்த்திவ வதனால்
விண்ட தீவினை யாளரே மேவவிவ் விடத்துக்
கண்டு காதலை யாயினை கரையுமந் தணமொன்
றுண்டு சூழ்ந்தவ ரொழிதர விருந்துகே ளென்றான். 12

மணிஉரு - அழகியவடிவம். மண்டு - நிறைந்த. காந்தி - ஒளி. காவலன் - அரசன். மிண்டு - வலிமை.

10. கேட்ட அரசனுடைய எண்ணத்தை விரைவில் அறிந்து நீங்காமல் நம்முடைய கருத்தைப் பின்பற்றுவான் இவன் என்று விருப்புடன் தடையில்லாத தீவினைபோன்ற அவர்களுக்குள்ளே ஒருவன் மிக்க வயோதிகன் விடை சொல்லுவானானான்.

கடாவும்-வினவும். கதுமென-விரைவாக. நம்வழி-நம்முடைய கொள்கை. வழி - மார்க்கம். விழைந்து - விரும்பி. தடாத - தடைசெய்யாத. கெடாத - பழுதில்லாத. கிளக்குவன் - சொல்லுவான்.

11. நாம் வசித்திருப்பது நேபாளதேசமாம். உம்முடைய நாட்டின் வளப்பமும் உமது மிக்க புகழும் நாம் மிகக் கேட்டிருத்தலின் காணும் இனிய விருப்பத்துடனே போர்செய்யும் வேற்படையையுடைய அரசனே! இங்கே வந்தடைந்தோம்.

இருக்கை - இருப்பிடம். சமரம் - போர்.

12. அரசனே! நீ முற்பிறப்புக்களிலே சிறந்த தவங்களைச் செய்திருக்கின்றாய்; அதனால், நீங்கிய தீமையையுடைய யாம் இங்கே வந்து பொருந்த நீ எம்மைத் தரிசித்து மிக்க விருப்பினையுடையவனாயினை. உன்னிடத்திலே இரகசியமாகச் சொல்லவேண்டியதொன்று உள்ளது. உன்னைச் சூழ்ந்து இருப்பவர் யாவரையும் வெளியேபோக விடைகொடுத்தனுப்பிவிட்டுக் கேட்பாயாக என்றான்.

அரைய னேக்கமு மதற்குடன் பட்டமை நோக்கி
விரைய வாங்குளா ரெழுந்துவே றிடத்தொதுங் கினராற்
புரையி லீரினிப் புகல்கெனப் பூபதி பணிந்தான்
வரைசெய் துன்மதத் தலைவனும் வழங்குதல் வலித்தான். 13

உலக மின்புறத் தக்ககா ரியநனி யோரின்
இலகு மைவிழி யாரிணை மிணைவிழைச் சன்றே
கலவு மற்றது காரியத் தன்றுகொ லுயிர்கள்
பலவு மல்குத லாயின பார்த்திவ பாராய். 14

உலக மாக்குதற் கீசனென் றெருவனுண் டென்பர்
புலனி லாதவ ரவர்திறம் போகவை யகத்துக்
கலவு மீசனைக் கண்டவர் யார்கண்ணிற் காண
நிலவு நீரதே மெய்நில வாதது பொய்யே. 15

பார்த்திவ - அரச: விளி. விண்ட - நீங்கிய. காதலைஆயினை - விருப்பமுடையவனாயினாய். கரையும் - சொல்லும். மந்தணம் - இரகசியம். சூழ்ந்தவர் - சுற்றியுள்ளோர்; ஆராய்ச்சிக்குரியோர் என்னும் பொருள் தருதலுங் காண்க. சூழ்தல் - ஆராய்தல். ஒழிதர - நீங்க.

13. அரசனுடைய எண்ணமும் கபாலியின் சொல்லுக்கு உடன்பட்டு இருத்தலை அறிந்து அங்குள்ளோர் யாவரும் எழுந்து விரைந்து வேறோரிடத்தை அடைந்தனர். அவர்கள் சென்றபின்பு அரசன், கபாலசமயக் கிழவரைப் பார்த்துக் குற்றமில்லாதவரே! சொல்லியருளுக என வணங்கினான். வரையறையுடைய தீய மதத்தலைவனும் சொல்லத்தொடங்கினான்.

அரையன் - அரசன். நோக்கம் - எண்ணம். புரையிலீர் - குற்றமில்லாதவரே. பூபதி - அரசன். துன்மதம் - தீயமதம். வலித்தான் - உடன்பட்டான்.

14. உலகமானது இன்பத்தையடையத் தகுந்த செயல்களை நன்கு ஆராய்ந்தால் விளங்கும் மைதீட்டிய விழியினையுடைய பெண்களிடத்துப்பொருந்திடும் காமவின்பமாம், கலப்புடையதாகிய அச்செயல் செயல் மாத்திரத்திலன்று கொல்! அரசனே! உயிர்கள் பலவும் நிறைவனவற்றை நீ பிரத்தியட்சத்திலே காண்பாய்.

ஓரின் - ஆராய்ந்தால். மைவிழியார் - பரத்தையர்; போகமாதர். இணை விழைச்சு - கற்பின்மையாய்க் கொள்ளும் இச்சை. கலவும் - கலக்கும். மல்குதல் - நிறைதல். பார்த்திபன் - அரசன்.

15. உலகத்தைத் தோற்றுவித்தற்பொருட்டு ஈசன் ஒருவன் உளன் என்பர். அறிவில்லாதவராகிய அவர்தன்மைநிற்க, உலகத்திலே கலந்துநிற்கும் ஈசனைக்கண்டவர் யாவர்? கண்ணினாலே காணப்படும் தன்மையுடையனவே மெய்யாகும்; கண்ணால் காணப்படாதனவெல்லாம் பொய்யே.

புலன் - அறிவு. திறம் - தன்மை. கலவும் - கலந்து நிற்கும்.

80

ஆத லாலகி லத்தினுக் கமரன்வே றில்லை
ஓது நீண்மர மரத்துட னுரிஞ்சிய பொழுதுஞ்
சோதி வான்சிலை சுடரவன் கதிர்தொடும் பொழுதும்
காது தீயெழுங் கலவியிற் றேன்றுவ துலகே. 16

அனைய தாதலி னரும்பொரு ளிணைவிழைச் சன்றி
வினையில் காவல வேறிலை யிணைவிழைச் சினுக்குப்
புனையு மாட்சிமை தருவது புகல்சுரா பானம்
இனைய பானமும் பொருளென வினிதுகைக் கோடி. 17

தெய்வ நல்லவர் பெரியவ ரெனச்சிலர் பேசி
உய்ய லாமென வுரைப்பர்க ளவையெலா மொழிக
வைய மிக்கொளு மன்னவ வெனமதி மருளப்
பொய்யை மெய்யெனப் புகன்றனன் புன்மதத் தலைவன். 18

---

16. ஆதலால் உலகத்துக்குத் தேவன் வேறில்லை. சொல்லப்படும் மரமானது மரத்தினுடனே உராய்கின்றபொழுதும், சூரியகாந்தக்கல் சூரியகிரணம் படும்பொழுதும் மோதுகின்ற நெருப்புண்டாம். ஆண்பெண்கலப்பினால் உலகம் தோன்றும்.

அகிலம் - உலகம். அமரன் - தேவன். உரிஞ்சிய - உராய்ந்த. சோதிவான் சிலை - சூரியகாந்தக்கல். சுடரவன் - சூரியன். கதிர் - கிரணம். காது தீ - அழிவினையுண்டாக்கும் நெருப்பு: காதுதல் - பற்றுதல்.

17. ஆதலின் அரிய பொருளாகக் கொள்ளற்குரியது இணைவிழைச்சை யன்றி வேறொன்றில்லை. தீவினையென்பதில்லாத அரசனே! இணைவிழைச்சுக்குச் சிறந்தபெருமையைக் கொடுப்பது சிறப்பித்துச் சொல்லப்படும் கட்குடியேயாம்; இச்சிறந்த பானத்தையும் சிறந்த பொருளாகக் கைக்கொள்ளுவாய்.

இணைவிழைச்சு - மாதரின்பம். மாட்சிமை - பெருமை. சுராபானம்-கட்குடி. கைக்கோடி - கைக்கொள்ளுவாய்.

18. தெய்வமென்றும், நல்லவர் பெரியவர் என்றும் சிலர் சொல்லி உயிர்கள் உய்யலாம் என்று போதிப்பர். அவற்றையெல்லாம் நீக்கக் கடவாய். உலகம் போற்றும் அரசனே! என அவன் (மனம்) அறிவு மயங்கும்படி அற்ப மதத்தலைவனாகிய அவன் பொய்யை மெய்ப்பொருளென்று கூறினன்.

உய்யலாம் - கடைத்தேறலாம். வையம் - உலகம். மிக்கொளும் - புகழும். மதி - புத்தி. மருள - மயங்க. புன் மதம் - கீழானமதம்.

வேறு

காபால மதத்தலைவன் கடனிதுவென் றெடுத்துரைத்த
ஆபாச நெறிவிரும்பி யறிவழிந்து திறல்வேந்தன்
மாபாச வலைவளைப்ப மறைநெறியின் முறைதிறம்பிச்
சீபாவி யெனவறிஞர் சிந்தைசெய வொழுகினன். 19

மதுநுகர்ந்து வருணநிலை வழுக்கிமட மாதரார்
புதுநலனுண் டுயரொழுக்கம் பூண்டவரை நனியலைத்துக்
கதுவலுறுங் காபால மதத்தவரே களிதூங்க
இதமகன்ற கொடுங்கோன்மை யியற்றினன்வை யகத்தரசன். 20

மன்னவனே முறைதிறம்பின் மன்னவனு ணையினடக்குந்
துன்னியவை யகமுறைமை தொடங்கிநடந் திடுமேகொல்
பொன்னிவளந் தருநாட்டுப் பொருந்தியமாந் தர்களெல்லாம்
இன்னவிலக் கிவைவிதியென் றிரண்டின்றி யொழுகினர். 21

---

19. காபால மதத்தலைவன் செய்யவேண்டிய கடமை இது என்று எடுத்துச் சொல்லிய அருவருக்கத்தக்க நெறியை விரும்பி அறிவு அழியப்பெற்று வலிய அவ்வரசன் மிக்க பாசமாகிய கடல் வளைத்துக் கொள்ள வேதவிதியின் நீதியில் மாறுபட்டுச் சீ, பாவி என்று அறிஞர் இழித்து நினையுமாறு நடக்கலானன்.

கடன் - கடமை. ஆபாசநெறி - அருவருக்கத் தக்க நெறி. பாச அலை - பாசக்கடல்; பாசவலை எனினுமாம். முறைதிறம்பி - நீதிதவறி. சிந்தை செய - நினைக்க.

20. கட்குடித்து. சாதிவரம்பு கடந்து, இளம் பருவமகளிரை அணைந்து, அவருடைய புது நலனை நுகர்ந்து, உயர்ந்த நல்லொழுக்கமிக்கவர்களை மிகத் துன்புறுத்திப் புதிதாக வந்து பற்றிக்கொண்ட காபாலிக மதத்தினரெல்லாம் மனங்களிப்படைய, நன்மை நீங்கிய கொடுங்கோலை அவ்வரசன் நடாத்தினன்.

21. அரசனே! நீதிதப்பி நடப்பானயின் அரசன் ஆணையில் அடங்கி நடக்கும் உலகமக்கள் நீதியோடு நடக்குமோ? அதனல் சோழவளநாட்டிலே வாழும் மக்களெல்லாம் இவைகள் தாம் விலக்கியன, இவைகள்தாம் விதித்தன என்பதின்றி நடக்கத் தொடங்கினர்.

முறை - அறநூலும் நீதிநூலும் சொல்லும் நெறி. திறம்புதல் - மாறுபடல். ''முறைமைமுட் டாதுசெய்து முழுநிலங் காப்பினந்த, இறைவனைச் செங்கோல் காக்கும் எளியசெவ் வியனு மாகான், குறைவளர் குற்ற மோரான் குணத்தொடு முறைசெய் யானை, நிறைதரு பாவந் தேய்க்கும் நெடும்பகை யின்ரு மேனும்''; ''அறுதொழி லாளர் நூல்கள் அயர்ப்பரான் பயனின் ருகும், முறைபெய லொழியும் கூழுங் குடிகளு மொருங்கு நீங்கும், பெறுபயன் நாட்டிற் குன்றும் பிறங்கொளி நிலைபெருது'' (விநாயகபுரா - அரசியற்கை - 92, 93) காண்க.

முட்டாத சோறுடு முறைதிறம்புஞ் செயனேக்கி
மட்டார்ந்த மலர்க்குரிசின் மனம்வருந்தித் தீவினையின்
ஒட்டாத நாரதனை யுறவழைத்துக் கொடுங்கோன்மை
தொட்டானைத் திரிலோக சோழனை நீ திருத்தென்றுன். 22

வீணைமுனி யடிவணங்கி விரைந்துபோய்ச் சபையடுத்துப்
பேணுபர மதத்தழுந்தும் பெருமிதமன் னவன்வணங்கா
மாணுமடத் தினைநோக்கி மணிக்கரகத் தறலள்ளிப்
பூணுறுமஞ் செழுத்தோதிப் பொருக்கெனவா னனத்தெறிந்தான். 23

அஞ்செழுத்து நவின்றெறிந்த வறன்முகத்திற் படிதலொடும்
விஞ்சியதுன் மதமோகம் விளிந்ததுமன் னவனெழுந்து
கஞ்சமலர்ப் பதம்பணிந்தான் கருணைவிழி நோக்கருளி
எஞ்சலுருத் தவமுனிவ னெடுத்தளித்தான் றிருநீறு. 24

---

22. முட்டுப்பாடில்லாத சோழநாடு நீதிதப்பி நடக்கும் செயலைப்பார்த்துத் தேனெழுகும் தாமரைமலரில் வைகும் பிரமதேவர் மனவருத்தமுற்று; தீவினைகள் எல்லாம் ஒருங்கே துறந்தவராகிய நாரதமுனிவரை வரவழைத்து, கொடுங் கோலின் தன்மையிலே நுழைந்தவனாகிய திரிலோகசோழனைத் திருத்துவாயாக என்றருளினர். முறை திறம்பும் - நீதிகெடும். மட்டு - தேன். ஆர்ந்த - நிறைந்த. மலர்க் குரிசில் - பிரமதேவர்.

23. மகதி என்னும் வீணைக்குத் தலைவராகிய நாரதமுனிவர் பிரமதேவரை வணங்கி விரைந்து சென்று சோழன் அவைக்களத்தினை அடையப் பரமதத்தில் மூழ்கிக் கிடக்கும் பெருமிதத்தையுடைய திரிலோகசோழன் எழுந்து வணங்கா திருந்த மிக்க அறியாமையை நோக்கி அம்முனிவர் தம்முடைய கமண்டலத்தில் உள்ள நீரை எடுத்துத் திருவைந்தெழுத்தைக் கணித்து விரைந்து அவன் முகத்தில் வீசினர்.

வீணைமுனி - மகதி என்னும் வீணைக்குத் தலைவர். மகதி என்றது பேரியாழ் எனக்கொள்க. அருங்கலம், பெருங்கலம் என்பனவுமது. அஃதாவது கோட்டின தளவு பன்னிருசாணும், வணரளவு சாணும், பத்தரளவு பன்னிருசாணும், இப் பெற்றிக்கேற்ற ஆணிகளும், திவவும், உந்தியும் பெற்று, ஆயிரநரம்பு தொடுத்து நடப்பது. அது, "ஆயிர நரம்பிற் றதியா மூகும், ஏனை யுறுப்பு மொப்பன கொளலே, பத்த ரளவுங் கோட்டின தளவும், ஒத்த வென்ப விருமூன்றிரட்டி வணர்சா ணெழித்தென வைத்தனர் புலவர்" என்ற நாடகத் தமிழ்நூற் சூத் திரத்தாற் கண்டது. இசையில் பெரியோன் நாரதமுனியாகலானும், "தலமுத லூழியிற் றானவர் தருக்கறப், புலமகளாளர் புரிநரப்பாயிரம், வலிபெறத்தொடுத்த வாக்கமை பேரியாழ்ச், செலவுமுறை யெல்லாஞ் செல்கையிற் றெரிந்து, நாரத கீதக் கேள்வி நுனித்து" எனப் பெருங்கதையென்னும் உதயண காவியத் துரைத் துளாராகலானும், பேரியாழ் முனிவரனுக்கே பொருந்தியதாமென்க.

24. திருவைந்தெழுத்தை உச்சரித்துக் கையினுல் வீசியெறிந்த மந்திர நன்னீர் முகத்திலே படிந்தவுடன் மேம்பட்டுக்கிடந்த தீய மதத்தின் மேலுள்ள

வாழ்ந்தனனென் றங்கைகொடு வயங்குதிரு வெண்ணீறு
வீழ்ந்தணிந்து விறல்வேந்தன் விழைந்திருப்ப முனிநோக்கிச்
சூழ்ந்துமுன நீயளித்த சோணுடிப் பொழுதென்ணுய்த்
தாழ்ந்ததுபார் முறைதவிர்ந்த தன்மையா லெனநுவன்ருன். 25

வேறு

பார்த்து மன்னவன் பதைபதைத் துள்ளக மழிந்து
வேர்த்து மெய்யெலா முனிவனை மீட்டெதிர் வணங்கி
ஆர்த்த தீவினை யாளனே னடுபிழை யொருவிச்
சேர்த்தி நன்மையென் றிரந்தனன் றுதிபல செப்பி. 26

திருந்து மன்னனை முனிவரன் றிருமுக நோக்கி
வருந்தன் மேலைநற் சிதம்பர வரைப்பினை யடுத்துப்
பொருந்த லார்புரம் பொடித்தவர் பூங்கழல் பணிதி
மருந்து தீவினைக் கதுவலா லில்லையென்று மறைந்தான். 27

பெருவிருப்புக் கெட்டொழிந்தது. திரிலோகசோழன் எழுந்து தாமரை மலர் போன்ற திருவடிகளில் விழுந்து வணங்கினன். கருணை பொருந்திய பார்வை யுடன் குறைவில்லாத தவத்தையுடைய நாரதமுனிவர் விபூதியை யெடுத்துக் கொடுத்தருளினர்.

நவிலல் - கூறியடிப்படல். எறிந்த - வீசிய. அறல் - நீர். விஞ்சிய - மேம் பட்ட, தலைக்கொண்ட. விளிந்தது - கெட்டது. கஞ்சமலர் - தாமரைமலர். எஞ்சலுரு - குறையாத.

25. அடியேன் வாழ்ந்தேன் என்று கூறி அந்த விபூதிப்பிரசாதத்தை இரண்டு கைகளையும் நீட்டி வாங்கி மிக விருப்பத்துடன் நெற்றியில் பூசி அவ் வேந்தன் மிக மகிழ்ச்சியோடிருக்க, நாரதமுனிவர் அவனை நோக்கி நீ முன்னே அமைச்சர் முதலியோர் சூழ இருந்து அரசுபுரிந்த சோழநாடு இப்போது எப்படி மிகத் தாழ்ந்துவிட்டது, நீதியில்லாத தன்மையால் என்று கூறியருளினர்.

வயங்கு - விளங்கும். வீழ்ந்து - விரும்பி. சூழ்ந்து - அமைச்சர் முதலிய சுற்றத்தாரோடு ஆராய்ந்து. என்னுய்த் தாழ்ந்தது - எப்படிக் கீழ்மையாயிற்று. நுவன்ருன் - சொன்னுன்.

26. நாரதமுனிவர் கூறிய பின்பு தன் நாட்டின் நிலைமையைப் பார்த்துச் சோழ அரசன் உடம்பும் மனமும் பதைபதைப்புற்று, மனமழிந்து, உடம்பு வேர்த்து, முனிவரை மறுபடியும் கீழே விழுந்து வணங்கி தீவினையால் கட்டுண் டவனுகிய யான் செய்த இப்பெரும் பிழைகளெல்லாம் நீங்கி நன்மைகளெல்லாம் பெறுவதற்கு ஆவனவற்றைச் செய்தருளுக என்று பல தோத்திரங்களைச்சொல்லி இரந்து நின்ருன். பதைபதைத்து - துடிதுடித்து. உள்ளகம் - மனம். ஆர்த்த - பிணித்த. தீவினையாளனேன் - தீவினையையுடைய யான்: வினையாலணையும் பெயர். அடு பிழை - செய்தபிழை. ஒருவி - நீங்கி.

27. சிவனருள் விரவத் திருந்திய அரசனை முனிவர் பார்த்து, வருந்தாதே மேலைச் சிதம்பரதலத்தை அடைந்து, பகைவர் திரிபுரத்தைச் சாம்பராக்கிய

மகதி யாழினன் மன்னனைத் திருத்திய தறிந்து
தகுதி யல்லன சார்த்துந்தா பதனமக் கென்று
உகும னத்தொடுந் துன்மதத் தினர்களோட் டந்தார்
புகழ்செய் மன்னனு மடுத்தனன் புகரறு பேரூர். 28

தத்து வார்திரைக் காஞ்சியிற் றண்புன லாடிப்
பத்தி யோடுயர் கோயிலிற் படர்ந்தெதிர் பணிந்து
வைத்த வேல்விழி மரகத வல்லியோ டமர்ந்த
அத்த னார்தமைப் போற்றின னகன்றன பிழைகள். 29

சில்ல நாளவ ணிருந்துநற் பலபணி செய்திட்
டல்லை நேர்களத் தமலனா ரருள்விடை பெற்று
நல்ல காவிரி நாட்டினை நணுகிமுன் போலச்
சொல்லு நூல்வழி நடவினன் றுகளறு செங்கோல். 30

சிவபெருமான் திருவடிகளைப்போற்றி வணங்குக. உன்னுடைய தீவினையாகிய இந்த நோய்க்கு அந்த மருந்தையல்லாமல் வேறில்லை என்று கூறிமறைந்தார்.

திருந்து - நல்வழிப்பட்ட; செம்மை சேர்ந்த. மேலைநற் சிதம்பரம் - பேரூர். பொருந்தலார் - பகைவர். பொடித்தவர் - நீறுபடுத்தியவர். பணிதி - வணங்குக. கழலைப் பணிதல் மருந்தாகக் கூறி வினையைப் பிணியாகக் கூறாமையால் ஏகதேச வுருவகவணி.

28. மகதியென்னும்பேரியாழுக்குத் தலைவராகிய நாரதமுனிவர் அரசனைச் செவ்வை வழியிலே செல்லத்திருத்திய செய்தியை யறிந்து தகுதியல்லாத செய்திகளைச் சொல்லி அரசனைத் தன்வழிப்படுத்திய அப்புன்னெறியோர் பரசமயிகளாகிய நங்களுக்கு என்ன ஆகுமோ என்று கருதி மனமழிந்து ஓடிவிட்டனர். புகழை பாதுகாக்கும் சோழ அரசனும் குற்றமற்ற பேரூரைச்சென்று சேர்ந்தான்.

தாபதன் - தவசியாகிய நாரதர். நமக்கும் தகுதியல்லாதவற்றைச் சொல்லித்திருப்புவரோ என ஓட்டந்தார். ஓட்டந்தார் - ஓடிவிட்டனர். புன்னெறியோராகலின் தம்மையும் நாரதர் திருத்துவரோ என்று உகுமனத்தராயினர்.

29. தாவும் நீண்ட அலைகளையுடைய காஞ்சிநதியிலே சென்று முழுகிப் பக்தியோடு உயர்ந்த கோயிலுக்குச் சென்று எதிரே வணங்கி மரகதவல்லியம்மையாரோடு எழுந்தருளியிருக்கும் பட்டீசராகிய சிவபெருமானை வணங்கினான். அவ்வரசன் குற்றங்களெல்லாம் ஒழிந்தன.

தத்து - தாவும். வேல்வைத்த விழி - வேல்போலும் விழிகள். அத்தனார் - சிவபெருமான்.

30. அரசன் சிலகாலம் பேரூரிலே தங்கியிருந்து நல்லபணிகள் பலவற்றையும் செய்து இருள்போலும் கண்டத்தையுடைய சிவபெருமானிடத்து அருள்விடைபெற்றுச் சோழநாட்டை யடைந்து முன்புபோல மனுநீதி தவறாமல் குற்றமற்ற செங்கோலை நடாத்தினான்.

ஆளு மண்ணலார் தலங்களி னுற்றுதீ வினையுங்
காள கண்டமா புரமெனக் கரையிடை மருதின்
மாளு மந்நகர் வரைப்பிடை யாற்றுவல் வினைதான்
நீள்வ தன்றியே யாங்கணு நிலையழிந் திடாதால். 31

அன்ன தாகிய விடைமரு திடையிருந் தாற்றுந்
துன்னு தீவினைத் தொடர்திரி லோகநற் சோழன்
முன்னி நீங்கின னென்றிடின் மொழிந்தபே ரூரின்
மன்னு மேன்மையை யாவரே வகுத்திட வல்லார். 32

சோழன் வல்வினை தொலைத்தமை கூறிய சூதன்
வாழி யண்ணலார் பார்ப்பதி தனக்குமுன் வகுத்த
தாழி ருஞ்சடை பூதிகண் மணிதளிர் வில்வங்
கேழி னல்லுப சாரமுங் கிளக்குவ னுறன். 33

திரிலோகசோழன் செயிர்தீர்ந்தபடலம் முற்றிற்று
ஆகத் திருவிருத்தம் — 2072

அல் - இருட்டு. நேர் - ஒப்பு. களம் - கண்டம். காவிரிநாடு - காவிரிநதி பாயும் சோழநாடு. துகளறு - குற்றமற்ற. நடவினன் - செலுத்தினன்.

31. ஆன்மாக்களையெல்லாம் மீளா அடிமையாகக்கொண்டு (ஆட்கொண்டருளும்) அருள் செய்யும் சிவபெருமானுடைய திருத்தலங்களிலே செய்யும் தீய வினைகளெல்லாம் திருவிடைமருதூரிலே நீரும். அந்த நகரத்தில் (தலம்) செய்யும் தீவினை மிகுமே யன்றி எவ்விடத்திலும் தீராததாம்.

அண்ணலார் - சிவபெருமான். காளகண்டமாபுரம் - திரிபுரம்; குறிப்பால் உணர்த்துவது; திருவிடைமருதூர்.

32. அப்படிப்பட்ட திருவிடைமருதூரிலேயிருந்து செய்யும் தீவினையின் தொடர்ச்சி திரிலோகசோழனுக்குப் பேரூரிலே நீங்கியதென்னில் பேரூர்த் தலத்தின் மேன்மையை யாவரே எடுத்துச் சொல்ல வல்லார்.

துன்னு தீவினைத்தொடர் - காபாலிகரால் உண்டாகிய பெரும் பாவப் பிணிப்பு. முன்னி - கருதி, சென்று.

33. திரிலோகசோழனுக்கு நேரிட்ட வலிய தீவினை தொலைந்த வரலாற்றை அருளிச்செய்த சூதமாமுனிவர், சிவபெருமான் உமாதேவியாருக்கு முன் ஒரு காலத்தில் வகுத்துக் கூறிய தாழ்ந்துதொங்கும் சடை, விபூதி, உருத்திராக்கம், வில்வத்தளிர், ஒப்பற்ற உபசாரம் முதலியவற்றைச் சொல்லத் தொடங்கினர்.

பூதி - விபூதி. கண்மணி - உருத்திராக்கம். கேழ்இல் - ஒப்பில்லாத. கிளக்குவன் - சொல்லுவான்.

முப்பத்துநான்காவது

உபதேசப்படலம்

வெள்ளியம் பலத்துமுன் விமலர் காட்டிய
ஒள்ளிய திருநட முளத்து நாடொறு
நள்ளுற நினைத்திடு நங்கை பார்ப்பதிக்
கெள்ளலி லையமொன் றெழுந்த தென்பவே. 1

அவ்விய முயிர்க்கற வாடல் கண்டிடுங்
கோவ்வையங் கனிநிகர் கோல வாயிதழ்
நவ்வியின் விழியுமை நங்கை நாதரைச்
செவ்வியின் வினவுமா சிந்தை செய்தனள். 2

பண்ணவர் தொழுதெழும் பட்டி நாயகர்
உண்ணெகிழ் கருணையி னுருதி னந்தனில்
எண்ணரு மகிழ்ச்சியி னிருந்த செவ்வியைத்
தண்ணரிய விமவரைத் தைய னேக்கினள். 3

---

1. சிவபெருமான் முன்பு வெள்ளியம்பலத்திலே காட்டியருளிய சிறந்த திருக்கூத்தை நாடோறும் மனத்திலே அன்பு பொருந்தச் சிந்தித்திருக்கும் பார்வதியம்மையாருக்கு இகழப்படாத ஐயமொன்று தோன்றியது.

விமலர் - சிவபெருமான். ஒள்ளிய - ஒளிபொருந்திய. நள் உற - அன்பு மிக. எள்ளல் இல் - இகழ்தலில்லாத.

2. உயிர்களுக்குப் பொருமையின்றித் திருநடனத்தைத் தரிசித்திருக்கும் உமாதேவியார் தமது நாயகராகிய சிவபெருமானிடத்துச் சமயமறிந்து கேட்க வேண்டுமென எண்ணினள்.

அவ்வியம் - பொருமை. கோவ்வை அம் கனி. நவ்வி - மான். செவ்வியின் - நல்ல சமயத்தில்.

3. தேவர் யாவராலும் தொழப்படும் பட்டீசர் திருவுளத்தில் மிக்க மகிழ்வுடன் இருந்த சமயத்தை மலைமகள் அறிந்தாள்.

பண்ணவர் - தேவர். செவ்வி - பருவம். இமவரைத்தையல் - மலைமகள்.

எழுந்தனள் வணங்கின ளிறைவ யாவர்க்குந்
தொழுந்தர மன்றியத் தொடர்புந் தீர்சுகத்
தழுந்துநர்க் கருளுமா னந்த தாண்டவஞ்
செழுந்திரு முனிவர்க்குத் தெரித்த தென்னென்றாள். 4

குங்குமக் குவிமுலைக் குடங்கை வென்றகட்
பங்கய மலர்முகப் பாவைக் கீர்ம்புனல்
திங்களஞ் சடைமுடித் தெய்வக் கொன்றையின்
அங்கண னுத்தர மருளிச் செய்யுமால். 5

வேறு

பத்தி பெருகக் கோமுனியும் பட்டி முனியும் படர்செந்தீ
ஒத்த சடையும் வெண்ணீறு முயர்கண் மணியு மிவைதரித்துக்
கொத்து வளர்கூ விளத்தளிர்கள் கொண்டிங் குபசா ரத்தெம்மைச்
சுத்த மளிக்கு மிலிங்கத்துத் தொடுத்து நெடுநாட் பூசித்தார். 6

---

4. எழுந்து வணங்கி இறைவரே! யாவர்க்கும் வணங்கும் தன்மையின்றி அந்தத் தன்மையும் நீங்கிய சுகத்திலே மூழ்கிக்கிடக்கும் சிவஞானிகளுக்கு அருளுகின்ற ஆனந்த தாண்டவத்தை அந்த முனிவர்களுக்குக் காட்டியருளிய காரணம் யாது என்று கேட்டாள்.

தரம் அன்றி - தன்மையல்லாமல். அத்தொடர்பும் - வணங்கவேண்டும் என்னும் எண்ணமும். தீர் - நீங்கிய. எண்ணமும் நீங்குதலாவது: "உணர்ந்தார்க்குணர்வரியோன்" என்னும் திருச்சிற்றம்பலக் கோவைச் செய்யுட்குப் பேராசிரியர் 'ஒருகால் தன்னையுணர்ந்தவர்களுக்குப் பின் உணர்தற்குக் கருவியாகிய சித்தவிருத்தியும் ஒடுங்குதலான் மீட்டு உணர்வரியோன்' என்றருளிய உரைப்பகுதியும் நோக்கியறிக. சுகத்து அழுந்துநர் - சிவபோக நுகர்ச்சிக்கண் இடையறாது நிற்போர். முனிவர் - காலவர், கோமுனிவர், பட்டிமுனிவர்.

5. உமாதேவியாருக்குச் சிவபெருமான் விடை கூறுவாராயினர்.

குங்குமம் - குங்குமச்சாந்து. பங்கயம் - தாமரை. ஈர்ம்புனல் - குளிர்ந்த கங்கை. தெய்வக்கொன்றை - பிரணவ புஷ்பம். அங்கணன் - சிவபெருமான்.

6. அன்புமிகக் கோமுனிவரும் பட்டிமுனிவரும் சிவந்த தீயையொத்த சடையையும், திருவெண்ணீற்றையும், உருத்திராக்க மணிவடத்தையும் தரித்தவர்களாய் வில்வத்தளிர்களால் இங்கே நமது அருட் குறியாகிய சிவலிங்கத்திலே நெடுங்காலம் பூசித்திருந்தனர்.

கூவிளம் - வில்வம்.

மன்றி னடிக்கு மெமதுதிரு வடிவி னிடத்தும் பூசித்துத்
துன்று சிறப்பின் விழாவெடுத்துத் தொழுது வணங்கி மலமைந்தும்
வென்று விளங்கு முளத்தினராய் விழைந்தா ரதனல் வியப்பெய்த
அன்று நடன மவர்காண வளித்தா மணங்கே யெனமொழிந்தான். 7

பொறிவா ளவரப் பூணணிந்த புனிதர் புகன்ற மொழிகேளா
மறிமா னேக்கி னுமைமாது மகிழ்ந்து தலைவா விருவோருஞ்
செறிவார் சடையா திகடரித்துத் திகழ்கூ விளங்கொண் டுபசார
நெறியாற் பூசித் தாரென்றி ரவற்றின் றிறமு நிகழ்த்துமென. 8

ஆடு மரவிற் புடைபரந்த வல்கு லுமையாட் குலகுய்ய
நீடு சடிலத் துயர்வுமொளிர் நீற்றி னுயர்வுங் கண்மணியின்
பீடும் வளர்கூ விளத்துயர்வும் பிறங்கு முபசா ரமுமுடியிற்
கோடு மதிவெண் கலைவேய்ந்த குழகர் தெரிய வுரைப்பாரால். 9

---

7. அம்பலத்திலே திருக்கூத்தையியற்றும் எமது திருவடியையும் பூசித்து, மிகச் சிறப்பாகத் திருவிழாவையும் செய்து, தொழுது, வணங்கி ஐம்மலங்களையும் நீங்கி விளங்கும் உள்ளமுடையவர்களாய் விரும்பினர்கள். அதனல் வியப்படையுமாறு அவர்கள் காணும்படி அன்று நடனம் காட்டியருளினேம் என்று உமாதேவியாருக்கு இறைவர் கூறியருளினர்.

மலம் ஐந்து: ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதம் என்பன; "மலமாயை கன்மமாயே யந்திரோ தாயி மன்னி" (சித்தி. 2 : 88.) அணங்கு - ஈண்டு உமாதேவியார்.

8. படப்பொறிகளையும் ஒளியையுமுடைய பாம்பணியை அணிந்த சிவபெருமான் கூறியருளிய மொழியைக்கேட்டு உமாதேவியார் மகிழ்ந்து, தலைவரே! அவ்விரு முனிவரும் சடைமுதலியன தரித்து வில்வத்தால் விதிப்படி அருச்சித்துப் பூசித்தனர் என்றருளிச்செய்தீர். அவற்றின் திறத்தையும் கூறியருளுக என்றாள்.

பொறி - படப்புள்ளி. வாள் - ஒளி. பூண் - ஆபரணம். மறிமான் - பெண் மான். திறம் - வகை, தன்மை.

9. உமாதேவியாருக்குச் சிவபெருமான் உலகம் உய்யும்பொருட்டு நீண்ட சடையின் பெருமையும், விளங்கும் வெண்ணீற்றின் உயர்ச்சியும், உருத்திராக்கத்தின் மேன்மையும், வில்வத்தின் சிறப்பும், விளங்கும் உபசாரங்களின் வகையும் விளங்கக் கூறியருளுவாராயினர்.

சடிலம் - சடை. நீறு - விபூதி. கண்மணி - உருத்திராக்கம். பீடு - பெருமை கோடு மதி வெண்கலை - வளைந்த பிறைச்சந்திரன். குழகர் - சிவபெருமான்.

விம்மி யெழுந்து புடைபரந்து வெண்ணித் திலமா லிகைதரித்த
கொம்மை முலையாய் நம்முடைய கோல மார்ந்த பலவுறுப்புத்
தம்மு ளுயர்ந்த வுறுப்பாகுந் தயங்குந் தழலொத் தொளிர்சடில
மும்மை யுலகும் வியப்பெய்த முடிமேல் விளங்குங் காட்சியான். 10

அரையற் குரிய வடையாள மணிந்தோர் தம்மை யரையனென
விரைய மதித்திட் டுபசாரம் விளைப்பா ரெவரு மதுபோலப்
புரையி லெமது சடைதரித்த புனிதர் தம்மை யாமெனவே
உரையின் மனத்திற் காயத்தி னும்பர் முதலோர் வழிபடுவார். 11

வார்ந்த சடில மொரோவொன்று வயங்கு மிலிங்க மொரோ வொன்ரு
மார்ந்த சடிலம் யாரொருவ னணிந்தா னவற்கா யிரமுறைமுன்
சார்ந்த பவத்தி னுள்ளாருந் தனக்கா யிரமா முறைபின்னர்
நேர்ந்த பவத்தி னுள்ளாரு நீங்கி வினையெம் முலகடைவார். 12

---

10. உமாதேவியே! நம்முடைய அழகிய பல உறுப்புக்களுள்ளும் உயர்ந்த உறுப்பாக விளங்கும் நெருப்பையொத்து ஒளிவீசும் சடையானது மூவுலகமும் வியப்படையத் திருமுடியிலே விளங்கும் தோற்றத்தால்.

வெள் நித்தில மாலிகை - வெண்மையான முத்துமாலை. கொம்மை - திரட்சி. கோலம் ஆர்ந்த - அழகு நிறைந்த. தயங்கும் - விளங்கும். தழல் - நெருப்பு. சடிலம் - சடை. மும்மை உலகு - சுவர்க்க மத்திய பாதலங்கள். காட்சி - தோற்றம்.

11. அரசர்களுக்குரிய அடையாளத்தை அணிந்துகொண்டவர்களையும் அரசன் என்று விரைந்து மதித்து எவரும் உபசாரங்களைச் செய்வார்கள். அது போல, குற்றமில்லாத நமது சடையைத் தரித்துள்ள தூயோரையும் நாம் என்றே வாக்கால் மனத்தால் காயத்தால் தேவர் முதலியோர் வழிபாடு செய்வார்.

அரையர் - அரசர். அடையாளம் - முடி, கழல் முதலியன. புரை இல் - குற்றமில்லாத. புனிதர் - தூயோர். உரை - சொல். உம்பர் - தேவர்.

12. நீண்ட சடையை ஒன்று ஒன்ருகச் சிவலிங்கமூர்த்திக்கு அணிந்து உபசாரம் செய்தோர் யாவர் அவருடைய ஆயிரந் தலைமுறைகளில் முன்னே பொருந்தித் தோன்றிேரும், அவருக்கு ஆயிரந்தலைமுறைகளிலே பின்வந்து பிறந்தோரும் வினைகள் எல்லாம் நீங்கப்பெற்று நம்முடைய உலகத்தை வந்து அடைவர்.

சடிலம் - சடை. ஆர்ந்த - பொருந்திய. ஆயிரம்முறை - ஆயிரம் தலைமுறை. பவம் - பிறப்பு. எம் உலகு - எம்முடைய சிவலோகம்.

கதிருஞ் சடிலந் தரித்தானைக் கண்டு வணங்கான் றவமெல்லா
முதிரும் பரிந்து வணங்கினு னுலப்பில் பாவி யாயிடினு
முதிருந் தவத்தோ டுயர்செல்வ மொய்க்கு மவற்கே செழுங்கனகப்
பிதிருங் கணியி னறுந்தாதும் பேதுற் றிரியுஞ் சுணங்கினாய். 13

சுடருஞ் சடிலந் தோய்ந்தபுனற் றுளியொன் றொருவன் மேற்றெறிப்பின்
அடரும் பெரும்பேய் பூதங்க ளலைக்குந் துட்ட தெய்வதத்தின்
இடரும் பிணியும் பாதகமு மெனைத்து மிரியு மாதலினாற்
படருஞ் சடிலத் தவன்பச்சைப் பாவாய் நம்மின் வேறல்லன். 14

புரிபொற் சடில முடிதரித்த புனிதர் குலத்திற் பிறந்தோரும்
பிரம னூறுகற் பங்கள்சதம் பேணி நமது சிவலோகம்
விரவி யினிது வாழ்வரெனின் வேணி யணிந்தார் தம்பெருமை
அரவி னகன்ற கடிதடத்தா யளக்குந் தரமோ வமரருக்கும். 15

---

13. விளங்குகின்ற சடையைத் தரித்துள்ள ஒருவனைக்கண்டு வணங்காமல் இருந்தவனுடைய தவம் முழுவதும் நீங்கும். விருப்புடனே கண்டு வணங்கினவன் மிக்க பாவியாக இருந்தானாயினும் முற்றுப்பெற்ற தவத்துடனே மேம்பட்ட செல்வமும் கொழிக்கும்படி அவன் வாழ்வான்.

கதிரும் - ஒளிவிடும். வணங்கான் - வணங்காதவன். உதிரும் - சிதறும். பரிந்து - அன்புகொண்டு. உலப்புஇல் - கேடில்லாத, நீங்காத. முதிரும் - முற்றுப்பெறும்; மேலும் மேலும் வளர்ந்தோங்கும். மொய்க்கும் - தழைக்கும். கனகப்பிதிர் - பொன்னின்பொடி. கணி - வேங்கை. தாது - மகரந்தப்பொடி. பேதுற்று - மயங்கி. இரியும் - கெட்டோடும். சுணங்கு - தேமல்.

14. விளங்கும் சடையிலே தங்கிய நீர்த்துளி ஒன்று ஒருவன்மேல் தெறித்தால் வருத்துகின்ற பெரிய பேய் பூதங்களும், மிகவும் வருத்தும் துஷ்ட தெய்வங்களால் நேரும் துன்பங்களும் நோய்களும் பாவங்களும் ஆகிய எல்லாம் கெட்டோடும். ஆதலால், மரகதவல்லியே! படர்ந்த சடையுடையோன் நம்மினும் வேறுகான்.

புனற்றுளி - நீர்த்துளி. அடரும் - வருத்தும். அலைக்கும் - துன்புறுத்தும். இடர் - துன்பம். பிணி - நோய். எனைத்தும் - யாவையும். இரியும் - கெட்டோடும். படரும் - விரிந்த. பச்சைப்பாவை - மரகதவல்லியம்மை.

15. முறுக்கிவிட்ட அழகிய சடாமுடியையுடைய தூயோரின் குலத்திலே பிறந்தவர்களும் பிரமகற்பம் நூறுவரை நமது சிவலோகத்திலே பொருந்தி இனிமையுடன் வாழ்வார்கள் எனின், சடையை அணிந்தவர்களின் பெருமை தேவர்களாலும் அளவிடப்படுமோ?

புரி - முறுக்கு. பொற்சடிலம் - பொன்போன்ற சடை, அழகிய சடை. சதம் - நூறு. வேணி - சடை. கடிதடம் - அல்குல். அமரர் - தேவர்.

வேறு

இயம்புவை திகநீ றென்று விலௌகிக பூதி யென்றுப்
பயந்தரு நீறி ரண்டாம் பகர்ந்தவை திகவெண் பூதி
உயர்ந்திடு மோம குண்டத் தொளிர்வதா மற்றைப் பூதி
வயந்தரு புனித நல்லான் மயத்தினு ளவ தாகும். 16

தகுபுரா தனியே யென்றுஞ் சத்தியோ சாதை யென்றும்
இகலில்வை திகவெண் பூதி யிருதிற னாக நேரே
புகழ்தகு வேத னோம குண்டத்திற் பூப்ப தொன்று
பகர்தரு மறையோ ரோம்பு மங்கியிற் படுவ தொன்றும். 17

இலௌகிக பூதி தானு மிருதிற னாகும் பாவம்
உலைவுற வாற்றுந் தீக்கை யுற்றவர்க் குரிய தாக
நிலைபெற நிறுவுஞ் சைவ நீறென்றுந் தீக்கை யின்றி
அலைவுறு மாந்தர் தங்கட் கடுத்திடு மசைவ மென்றும். 18

வேறு

கற்பமனு கற்பமுப கற்பமென மூன்றும்
அற்பினொடு சைவரணி யுந்தவள நீறு
பொற்பவவை மூன்றுதிற னும்புகறல் கேளாய்
விற்புருவ வேற்கண்விது வானுதன்ம டந்தாய். 19

---

16. வைதிகநீறு இலௌகிகநீறு எனப் பயனைத்தரும் திருநீறு இரண்டு வகைப்படும். சொல்லப்படும் வைதிக விபூதி உயர்ந்த ஓம குண்டத்திலே விளங்குவதாம். ஏனை இலௌகிக விபூதி வெற்றி பொருந்தும் தூய நல்ல பசுச் சாணத்தினுல் செய்யப்படுவதாகும்.

பயம் - பிரயோசனம். பூதி - விபூதி. புனித நல் ஆன்: ஆன் - பசு. ஆன்மயம் - கோமயம்.

17. வைதிக வெண்ணீறும் புராதனி எனவும் சத்தியோசாதை எனவும் இருவேறுவகைப்படும். புராதனி பிரமதேவனுடைய ஓமகுண்டத்திலே தோன்றுவது. சத்தியோசாதை அந்தணர்கள் செய்யும் வேள்வியிலே தோன்றுவதாகும்.

இருதிறன் - இரண்டுவகை. வேதன் - பிரமதேவன். மறையோர் - வேதியர்.

18. இலௌகிக விபூதியும் இருவகைப்படும். பாவம் கெடும்படி செய்யும் தீட்சையுடையவர்களுக்கு உரியதாக நிலைபெறும்படி செய்யும் சைவநீறு என்றும், தீட்சை இல்லாதவர்களுக்காகச் செய்யும் அசைவநீறு என்றும் அது பேசப்படும்.

உலைவுற - கெட. அலைவுறும் - வருந்தும். அடுத்திடும் - பொருந்தும்.

19. கற்பம் அனுகற்பம் உபகற்பம் என்று சைவர் அன்போடு அணியும் வெள்ளிய விபூதி மூன்றுவகைப்படும். அம்மூன்றுவகை விபூதியினையும் உமா தேவியே! நாம் சொல்லக்கேட்பாயாக.

கன்றுபய வாதகளி நாகுபுனிற் றுக்கோ
கன்றிறுதி யுற்றகபி லைக்குலம லட்டான்
கன்றுதுணை யின்றகற வைத்திரண்மு திர்ந்த
கன்றுறு பசுக்கருவ யிற்றுவளர் பெற்றம். 20

வார்ந்தசெவி கோடுநெடு வாலிவைக டம்மில்
தீர்ந்தசுர பித்தொகுதி தீதுவளர் பவ்வி
ஆர்ந்துவரு காலிபிணி யான்றகுடஞ் சுட்டென்
றோர்ந்தவிவை நீங்கவெழி லோங்கிவளர் கற்றான். 21

பங்குனியி னெல்லரிப ணைக்கணுறு தாண்மேய்ந்
தங்கவைவி டுத்தமய மட்டமியி ரேழில்
தங்குபதி னைந்தின்வளர் சாதமனு வோதி
மண்டனில்வி ழாமுன்மரை மெல்லிலையி னேற்று. 22

அற்பு - அன்பு. தவளம் - வெண்மை. பொற்ப - பொலிவுற. விது - சந்திரன். வாள்நுதல் - ஒளிபொருந்திய நெற்றி. மடந்தை - மடந்தாய்: விளி.

20. கன்றுஈனாத கிடாரி, பத்துநாட் சூதகமுடைய பசு, தன் கன்று சாவப் பெற்ற பசு, மலட்டுப்பசு, இரட்டைக் கன்று ஈன்ற பசு, முற்றிய கன்றுள்ள பசு, கருப்பமுடைய பசு; (இவைகளும்).

பயவாத - ஈனாத. களிநாகு - கடாரி. புனிறு கோ - ஈன்று அணிமையை யுடைய பசு: கோ - பசு. இறுதி - சாவு. கபிலைக்குலம் - பசுக்கூட்டம். ஆன் - பசு. துணை - இரண்டு. கறவை - பசு. பெற்றம் - பசு.

21. நீண்ட காது, நீண்ட கொம்பு, நீண்ட வால் முதலியன குறைந்த பசுக்கள், மலந்தின்னும் பசு, நோயுற்ற பசு என்ற இவைகள் இல்லாதனவாகவும் ஆராய்ந்து இவைகளை யொழித்து அழகிய மற்றைப் பசுக்களே (உரியனவாம்).

வார்ந்த - நீண்ட. கோடு - கொம்பு. சுரபி - பசு. ஆர்ந்து - புசித்து. காலி - பசு. கன்று ஆன் - கற்றான்.

இரண்டு பாடல்களால் கோமயப் பசு கூறப்பட்டது.

22. பங்குனி மாதத்திலே நெற்கதிரை அரிந்த தாள்களை மேய்ந்து அங்கே போகட்ட கோமயத்தை, அட்டமி சதுர்த்தசி பௌர்ணமி காலங்களில், சத்தியோசாத மந்திரத்தைச் சொல்லி, பூமியில் விழா முன்னமே தாமரை இலையிலே ஏற்று;

நெல் அரி பணை - நெற்கதிரை அரிந்த வயல்; பணை = பண்ணை - வயல். மயம் - பசுச்சாணம். பசுவின் சாணத்தைக் கொள்ளும் முறை; சாந்திகம், பௌட்டிகம், காமதம் என மூவகைப்படும். அவற்றுள், சாந்திகமாவது கோமய மிடும்போது பசுவின் பின்தட்டிலே கைவைத்து ஏற்பது. பௌட்டிகமாவது

வழும்பொருவி வாமமனு வோதிவளர் கவ்யம்
பொழிந்ததில கோரமது போற்றுபு பிசைந்து
செழும்புருடம் விண்டுதிரள் செய்துதிக மோமத்
தெழுந்தழன்ம டுத்தபினெ டுத்திட லீ சானம். 23

வேறு

புதிய வறுவை கொடுவடித்துப் புதிய கடத்திற் கொளவமைத்துக்
கதிசெய் மனுக்கா யத்திரியைக் கழறிப் புனித நிலத்திருத்தி
மதுவிண் டொழுகு மலர்சாத்தி மறுவி றுகிலால் வாய்ப்பெய்தல்
விதியின் றழலி னிடாதுணக்கி விளைவித் திடலு முறையாமால். 24

கனத்திற் கரிய பூங்குழலாய் கற்ப முரைத்தா மனுகற்பம்
வனத்தி லுணங்கு மயமேட மதியிற் கொணர்ந்து பொடித்ததன்கண்
இனத்திற் சிறந்த கோசலம்வார்த் தெடுத்து நவின்ற முறையானே
அனற்றி விளைத்துக் கொளலாகு மறைது முபகற் பமுங்கேளாய். 25

சாணம் பூமியில் விழுமுன் ஏற்பது. காமதமாவது பூமியில் விழுந்தபின் மேல் கீழ் தள்ளி எடுப்பது. இவற்றுள் பௌட்டிகம் உத்தமம். சாந்திகம் மத்திமம். காமதம் அதமமாம். இது கோமயம் கொள்ளும் முறை கூறியது.

23. குற்றங்களை நீக்கி, வாமதேவமந்திரத்தை செபித்துப் பஞ்சகவ்வியத்தைச்சேர்த்து, அதனை அகோரமந்திரத்தைச் செபித்துக்கொண்டே பிசைந்து தற்புருஷமந்திரத்தைச் செபித்துக்கொண்டே உருண்டைசெய்து, ஓமத்தீயிலே வைத்து வெந்தபின்பு ஈசானமந்திரத்தைச் செபித்துக்கொண்டே எடுத்தல் வேண்டும்.

வழும்பு - குற்றம். மனு - மந்திரம். கவ்வியம் - பஞ்சகவ்வியம்: பால் ஐந்து பலமும், தயிர் மூன்றுபலமும், நெய் இரண்டுபலமும், கோசலம் ஒருபலமும் சேர்த்த கவ்வியத்தைத் தாமரையிலையில் ஏற்ற கோமயத்தில் ஓம் வாமதேவாயநம: என்று சொல்லி வார்க்க.

24. மெல்லிய புதிய ஆடைகொண்டு வடித்து எடுத்து, புதிய பானையிலே அந்த வடித்த விபூதியை அள்ளிவைத்துச் சிவகாயத்திரி மந்திரத்தைச் செபித்துத் தூய இடத்திலே வைத்துப் புதிய தேனொழுகும் மலர்களையணிந்து குற்றமில்லாத துணியினுல் வாயை நன்ருகக்கட்டி மூடிவைத்தல் முறைமையாம். விதிப்படி அக்கினியில் இடாமல் காயவைத்து விளைவிப்பதும் ஒருமுறையாம்.

அறுவை - துணி. கடம் - பானை. காயத்திரி மனு - காயத்திரி மந்திரம். மது - தேன். விண்டு - வாய்விரிந்து. மறு இல் துகிலால் - குற்றமில்லாத மெல்லிய ஆடையால். வாய்ப்பெய்தல் - வாயைக்கட்டுதல். தழலில் - அக்கினியில். உணக்கி - உலரவைத்து.

25. மேகத்தை யொத்த கரிய கூந்தலையுடைய உமையே! இப்போது கற்ப விதியைச் சொன்னேம். இனி அனுகற்பம் இன்னதென்பதையும் கூறுவோம்கேள். காட்டிலே உலர்ந்து கிடக்கும் கோமயத்தைச் சித்திரைமாதத்திலே கொண்டு

வளர்தீ யியல்பிற் கவர்ந்துண்ட வனத்துப் பொடியி லானைந்துந்
தளரா தொழுக்கி யொழிந்தபடி தழல்வைத் தெடுத்துக் கொளலாகும்
அளவாப் பிணியைத் தருநீல மாயு ணிக்குந் தாமிரஞ்சீர்
பிளவா விசையைத் தபுஞ்செம்மை பீத மளிக்கு நல்குரவே. 26

வெண்மை யளவில் புண்ணியத்தை விளைக்கு மதனு லதுதரிக்கும்
வண்மை யுடைய ததுநன்னை மான்றோல் புலித்தோல் வத்திரத்தால்
ஒண்மை விரல்பன் னிரண்டளவி னுயர மிருநான் களவகலந்
திண்மை கொளும்வாய் வட்ட முறச் செயுமா லயத்துச் செறித்தணிவார். 27

வந்து தூளாகச் செய்து அதிலே கோசலத்தை வார்த்து எடுத்து முன்புசொன்ன முறையே அக்கினியில் வைத்து விளைத்துக்கொள்வதாகும். உபகற்பத்தையும் சொல்லக் கேட்பாயாக.

கனத்தின்: கனம் - மேகம்: இன் உவமவுருபு. குழல் - கூந்தல். வனம் - காடு. மேடமதி - சித்திரைமாதம். நவின்ற - முன்புசொல்லிய. அனற்றி - அனலி லிட்டு விளைவித்து.

26. காட்டிலே மரத்தோடு மரம் இணைந்து தேய்வதால் உண்டாகும் தீ அதிகரித்து எழுந்து வெந்து விளைந்த சாம்பரில் பஞ்சகவ்வியத்தை வார்த்துப் பிசைந்து முன்னே சொன்னபடி அக்கினியிலிட்டு எடுத்துக்கொள்ளுதலாம். கருநிற விபூதி நோயை உண்டாக்கும். செந்நிற விபூதி கீர்த்தியைப்போக்கும். புகைநிற விபூதி ஆயுளைக்குறைக்கும். பொன்னிற விபூதி சம்பத்தைக்கெடுக்கும்.

ஆனைந்து-பஞ்சகவ்வியம். நீலம்-கருநிறம். தாமிரம் - புகைநிறம். செம்மை- செந்நிறம். பீதம் - பொன். இசை - கீர்த்தி. தபும் - நீக்கும். நல்குரவு - வறுமை. இதனை, 'மந்திரங் கேட்டி யரசனே சாத மயத்தினை யேற்றல் வாமத்தான், ஐந்தினை வாக்கல் அகோரத்தாற் பிசைத லழலிடை யுருட்டிவைத் திடன்மால், சிந்துதற் புருடத் தாற்புகை பீதம் சிவப்பறு கருமையுந் தீர, இந்துநேர் பூதி யெடுத்தலீ சம்பெய் திருந்தல்கா யத்திரி மனுவால்' (தணிகைப்புரா: இராமனருள், 19). விபூதி வகைகள் கூறப்பட்டன.

27. வெண்மைநிற விபூதி அளவில்லாத புண்ணியத்தை விளைவிக்கும். ஆதலால், அவ்வெண்ணிற விபூதியே தரித்தற் குரியதாம். அதனை மான்தோல், புலித்தோல், ஆடை முதலியவற்றுல் பன்னிரண்டு விரல் உயரமும் எட்டு விரல் அகலமுமுடையதாக வாய் வட்டமாகச் செய்த விபூதிப்பையில் வைத்து அணிந்து கொள்ளுவார்.

வண்மை - வளப்பம். வத்திரம் என்றது பட்டுத்துணியை. ஆலயம் என்றது விபூதிக்கோயிலை. செறித்து - நிறைத்து.

மேல் நான்கு பாடல்களால் விபூதி தாரணவகை கூறுவர்.

தரிக்கும் விரறர்ச் சனிகனிட்டை தணந்த மூன்று மாமவற்ருல்
வரிக்கு முறைகே ளனுமிகைமத் திமையால் வாமந் தொடுத்தீர்த்துத்
தெரிக்கும் வலப்பாற் ருெடுத்திடையே திகழங் குட்டத் தெதிரீர்த்தல்
பரிக்கும் வலத்தோட் கெதிர்முறையிற் பரிந்து தரித்தன் மரபாமால். 28

இடைமூ விரலி னெருங்குறநே ரிடலு முறையாஞ் சிரநுதன்மார்
புடைசே ருந்திக் கீசான முயர்தற் புருட மகோரமனு
நடைசேர் வாமம் புகன்றணிவர் நவில்சா தத்தின் முழந்தாடோள்
படுசீர் முழங்கை முன்கைகளம் பரந்த வெரிந்வார் செவிக்கணிவர். 29

அறவொன் றுடனென் றணுகனனி யகறல் வளைத லிடையறுதல்
பிறவு மொழிய வணிநீற்றிற் பேணு மளவு நுதலுரந்தோட்
குறுமங் குலமூ விரண்டாகு மொழிந்த வுறுப்புக் கொன்றேயாம்
இறுமெல் லிடையாய் திரிசூலத் தெழிலார் பூதி யிடலுமாம். 30

---

28. தரித்துக்கொள்ளுதற்கு உரிய விரல்கள் தர்ச்சனி விரலும் கனிட்டை விரலும் நீங்கிய மூன்று விரல்களுமாம். அவற்ருல் இட்டுக்கொள்ளும் முறைமை யாவது அனுமிகை மத்திமை விரல்களால் இடப்பக்கம் முதலாக இழுத்து வலப் பால் தொடுத்து இடையிலே அங்குட்ட விரலால் எதிராக இழுத்தலாம். வலத் தோளுக்கு எதிராக முறையே தரித்துக்கொள்ளுதல் முறையாம்.

கனிட்டை - சிறுவிரல். அங்குட்டம் - பெருவிரல். தர்ச்சனி - சுட்டுவிரல். மத்திமை - நடுவிரல். அநாமிகை - மோதிரவிரல். பரிந்து - விரும்பி.

29. இடையிலேயுள்ள மூன்று விரல்களாலும் ஒருங்கே பொருந்த நேரே இட்டுக்கொள்ளுதலும் முறைமையாம். தலை நெற்றி மார்பு உந்தி இந்தத் தானங் களிலே ஈசானம் தற்புருடம் அகோரம் வாமம் என்னும் மந்திரங்களைச் சொல்லி அணிந்துகொள்ளுவார். சத்தியோசாத மந்திரத்தால் முழந்தாள் தோள் முழங்கை முன்கை கண்டம் முதுகு காது முதலிய இடங்களில் தரித்துக்கொள்ளுவார்.

இடை மூவிரல் - சுட்டுவிரல், நடுவிரல், மோதிரவிரல்கள். ஒருங்கு உற - ஒருசேரப் பொருந்த. நுதல் - நெற்றி. உந்தி - கொப்பூழ். களம் - கண்டம். வெரிந் - முதுகு.

30. மிகுதியும் ஒன்ருேடொன்று நெருங்குதல், மிகவும் அகன்றிருத்தல், வளைந்திருத்தல், இடையிலே விட்டுப்போதல் முதலியன இல்லாதிருத்தல் வேண்டும். இட்டுக்கொள்ளுதலின் அளவு நெற்றி மார்பு தோள் இவற்றுக்கு அளவு அவ்வாறங்குலமாம். ஏனைய உறுப்புக்களுக்கு அளவு ஒவ்வோரங்குல மாம். உமாதேவியே! சூலத்தினுல் அழகிய விபூதியிட்டுக்கொள்ளுதலுமாம்.

திகழுத் தூளஞ் செய்தன்றித் திரிபுண் டரஞ்சாத் தாரெவருந்
தகுசந் திகள்செய் யாக்காலந் தன்னிற் புனலித் தினிதணிவர்
முகிழ்மென் முலையாய் சைவர்புரி முறைமை தெரித்தா மறைவழியிற்
பகர்வை திகர்நீ றணிகின்ற பரிசு முரைப்பா மினிக்கேண்மோ. 31

மறையோர் சிரம்வா னுதன்மருமம் வாகு விரண்டு மவற்றொடுமண்
இறையோர் செகில்வார் துடைநான்கு மிவற்றோ டேனை யோர்முழங்கை
செறிசீர் முன்கை முழந்தாள்வெந் செவிகண் பதினென் றினுநீறு
குறையா தணிவர் செகிற்றுடையுங் கூட்டி மறையோ ரணிதலுமாம். 32

தக்க வகர மிருக்குவிரா சதவொண் குணமான் மாவென்னத்
தொக்க பொறியா திகள்கிரியா சத்தி துகடீர் மாதேவர்
பக்க வழல்சேர் காருகபத் தியமென் றிவற்றின் மயமாகு
மிக்க வெழிலார் புண்டரத்துள் விளங்கு முதற்புண் டரமாதோ. 33

அற - மிக. அணுகல் - நெருங்குதல். இடை அறுதல் - நடுவிலே விட்டுப் போதல். உரம் - மார்பு. திரிசூலம் - சூலாயுதம். பூதி - விபூதி.

31. விளங்கும் விபூதியை உத்தூளனமாக அணிந்துகொண்டு அல்லாமல் திரிபுண்டரமாக அணிந்து கொள்ளமாட்டார். தக்க சந்தியாவந்தனம் செய்யாத காலத்திலே நீரில் குழைத்திடாமல் உத்தூளனமாகவே தரிப்பர். உமையம்மையே! சைவர்கள் செய்யும் முறைமையைச் சொன்னேம். வேத ஒழுங்கிலே சொல்லப் படும் நெறியிலே நிற்கும் வைதிகர்கள் விபூதியணியும் தன்மையையும் இனிச் சொல்லுவோம்; கேட்பாயாக.

உத்தூளம் - பரவப்பூசுதல். திரிபுண்டரம் - முக்குறியாகத் தரித்தல். திரி - மூன்று. புண்டரம் - குறி.

32. பிராமணர்கள் சிரம், நெற்றி, மார்பு, தோள்கள் இரண்டும் தரிப்பர். அரசர் செகில் நீண்ட துடைநான்கும் அவற்றுடன் தரிப்பர். ஏனையோர் முழங்கை, முன்கை, முழந்தாள், முதுகு, செவி, கண் ஆகிய பதினென்றினும் நீறுதரிப்பர். செகிலும் துடையும் கூட்டி அந்தணர் அணிதலுமாகும்.

செகில் - தோள்மேல்.

33. திரிபுண்டரத்திலே முதல் புண்டரமானது அகர எழுத்து இருக்கு வேதம் இராசதகுணம் ஆன்மா என்று தொகுதியாயுள்ள பொறி முதலியன கிரியாசத்தி குற்றமற்ற மகாதேவர் காருகபத்தியம் என்னும் இவற்றின் மயமாக விளங்குவதாம்.

தொக்க - தொகுதியாகவுள்ள. துகள்தீர் - குற்றமில்லாத. அழல் - அக்கினி. எழில் ஆர் புண்டரம் - அழகு மிக்க திரிபுண்டரம்.

வழங்கு முகர மெசுர்வேதம் வளர்சாத் துவிக மகமென்ன
முழங்கி யிடுமான் மாவிச்சா சத்தி முடிவின் மகேசர்மிகத்
தழங்கி யெழுந்தக் கிணச்செந்தீ சாற்று மிவற்றின் மயமாகும்
பழங்க ணறுத்து வான்கதியிற் படுக்கு மிரண்டாம் புண்டரமே. 34

போற்று மகர முயர்சாமம் புகரு மதமாங் குணமலநோய்
நீற்றும் பரமான் மா நன்மை நிகழ்த்து ஞான சத்திதகத்
தேற்றுஞ் சிவனு கவநீயஞ் செப்பு மிவற்றின் மயமாகுங்
கீற்று மதிவா ணுதற்பாவாய் கிளந்த மூன்றும் புண்டரமே. 35

மறையின் வழிச்செந் தீவேட்கு மறைஞர் முதலோர் மூவர்க்கும்
அறைவை திகவெண் பொடியாகு மசைவ மெனமுன் மொழிந்தபொடி
பறையு மெழிலா லயத்துமடைப் பள்ளிப் பொடியு மடியர்மடத்
துறையு மடைப்பள் ளிப்பொடியு முயர்கான் வெந்த பொடியுமாம். 36

தீக்கை புரியாச் சூத்திரர்க்குச் சிறப்ப தாகு மடைப்பள்ளி
ஆக்கும் பொடிகான் வெந்தபொடி யடுப்ப தாகுஞ் சாங்கரர்க்குத்
தீக்குச் சுரர்க்குக் குரவருக்குத் திருமுன் வழியிற் சுத்தியில்லாப்
பார்க்கு ளிழிஞ ரெதிரிடத்தும் பாவாய் தரித்த லிழுக்காகும். 37

---

34. இரண்டாம் புண்டரமானது யசுர்வேதம் சாத்துவிககுணம் மனம் என்று சொல்லப்படும் ஆன்மா இச்சாசத்தி அழிவில்லாத மகேசர் மிகவும் முழங்கியெழும் தட்சிணாக்கினி என்று சொல்லப்படும் இவற்றின் மயமாகவுள்ளது. துன்பத்தை நீக்கிச் சிறந்த முத்தியில் பொருத்துவதாம்.

அகம் - மனம். மகேசுரர் - தெய்வம். தழங்கி - முழங்கி. பழங்கண் - துன்பம். வான்கதி - சிறந்த முத்தி.

35. மூன்றுவது புண்டரம் மகரம், சாமவேதம், தாமதகுணம், ஆணவமல வலியைக் கெடச்செய்யும் பரமான்மா, நன்மையைச்செய்யும் ஞானசத்தி, மிகத் தெளிவிக்கும் சிவபிரான் அதிதெய்வம், ஆகவனியம் என்னும் இவற்றின் மயமாக விளங்குவது ஆகும். பிறைச் சந்திரனைப்போலும் நெற்றியையுடைய உமா தேவியே!

36. வேதவிதிப்படி யாகத்தைச்செய்யும் பிராமணர் முதலிய மூவருக்கும் சொல்லப்படும் வைதிக விபூதியாகும். அசைவம் என முன்னேசொன்ன திருநீறு சொல்லுகின்ற ஆலயத்திலுள்ள மடைப்பள்ளிச் சாம்பரும், அடியார் திருமடத்தில் உள்ள மடைப்பள்ளிச் சாம்பரும், உயர்ந்த காடுவெந்த சாம்பருமாம்.

வேட்கும் - வேள்வியைச் செய்யும். மறைஞர் - அந்தணர். அசைவம் - அசைவநீறு. பறையும் - சொல்லும். கான் - காடு.

37. தீக்கை செய்துகொள்ளாத சூத்திரருக்குச் சிறப்பாகவுள்ளது மடைப் பள்ளிச்சாம்பர்; காடுவெந்த சாம்பர் சங்கரசாதியாருக்குப் பொருந்துவதாம்.

ஒருகை யேற்ற பொடிவிதியி னுஞற்று நீறு விலைப்பூதி
அருள்செய் தீக்கை யிலர்போதந் தளித்த பூதி யிவையாகா
தரையின் விழுத்த லங்காத்த றலைகம் பித்தல் கவிழ்தன்முதல்
வரைசெய் பலவு மொழித்திடுவர் மாதே பூதி தரித்திடுங்கால். 38

பரவு மறையோ ருத்தூளம் படிவ முழுது நாபியின்மேல்
அரசர் வணிகர் பட்டம்போ லணிவர் சதுர்த்த ரெழுத்தாக
விரல்க ளொருமூன் றுறவணிவர் விபூதி யணியா தறமாதி
புரவு வளர்நல் வினையொன்றும் போற்றார் பனுவல் போற்றுவார். 39

ஏத மகற்றுந் திருநீற்றி னியற்கை யறிந்து தரியாதார்
வேத நவின்ற நெறிநின்றும் விலகும் பதித ராய்விடுவர்
பூதி யணியார் முகம்புறங்கா டதனை நோக்கிற் புரைதீர்ந்தோர்
நீது கழிய வொருநூறு திகழஞ் செழுத்தைக் கணித்திடுவர். 40

அக்கினியின் முன்னும், தேவர் முன்னும், ஆசாரியர் முன்னும், வழியிலும், அசுத்த மான இடத்திலும், இழிந்த சாதியார் முன்னும் விபூதி தரித்துக்கொள்ளுதல் குற்றமாம்.

அடுப்பது - பொருந்துவது. சாங்கரர் - கலப்புச்சாதியார். சுரர் - தேவர். குரவர் - ஆசாரியர்.

38. ஒரு கையினல் வாங்கிய விபூதி, விதிப்படி செய்யாத விபூதி, விலை கொடுத்து வாங்கிய விபூதி, அருளைத்தரும் தீக்கையில்லாதார் கொண்டுவந்து கொடுத்த விபூதி இவைகள் ஆகாவாம். விபூதி தரித்துக்கொள்ளும் காலத்துப் பூமியில் சிந்தாமலும், வாயைத் திறவாமலும், தலை நடுங்காமலும், தலை குனியாம லும் ஆகிய இவற்றையுடையராயிருந்து தரிப்பர்; அக்குற்றங்களைச் செய்யார்.

போதந்து - கொண்டுவந்து. அங்காத்தல் - வாயைத்திறத்தல். கம்பித்தல் - நடுங்குதல். கவிழ்தல் - முகம் கீழ் நோக்கல்.

39. பிராமணர் உடம்பு முழுவதும் உத்தூளனம்செய்துகொள்வர். அரசர் நாபிக்கு மேலாக முழுதும் உத்தூளனம் செய்வர். வைசியர் பட்டம்போலத் தரித்துக்கொள்வர். சூத்திரர் மூன்று விரல்களால் எழுத்துப்போலணிவார். விபூதி தரித்துக்கொள்ளாமல் தருமம் முதலிய சற்காரியங்களை நூல்வழியொழுகும் நல்லோர் ஒருக்காலும் செய்யார்.

படிவம் - உடம்பு. நாபி - கொப்பூழ். பனுவல் போற்றுவார் - விதி நூல்களை யறிந்தோர். நல்வினை - சற்காரியம்.

40. குற்றத்தை நீக்கும் திருநீற்றின் தன்மையை நன்குதெரிந்து தரித்துக் கொள்ளாதவர்கள் வேத அத்தியயனம்செய்த வழியினின்றும் விலகிய சண்டாள ராய்விடுவார்கள். விபூதி தரிக்காதவர்களுடைய முகம் சுடுகாடாம். அதனைப்

நீறு தரியார் தவமாதி நிரம்பச் செயினு முவர்வித்திற்
கூறு பயனின் ரும்பூதி கொண்டோர் வாளாங் கிருந்திடினும்
வீறு தவமா திகணிரம்ப விளைத்தோ ராவர் தென்புலத்தார்க்
கேறு தினத்தி னீறிடுவார்க் கியற்றிற் பூசைப் பயனனந்தம். 41

நீட லுறுந்தீ வினையனைத்து நீற்றி விடலா னீறென்றும்
வீடில் வெறுக்கை தருதலினால் விபூதி யென்று முயிர்தோறுங்
கூடு மலமா சினைக்கழுவுங் குணத்தாற் சார மென்றுமட
மோட வளர்சோ தியைத் தரலாற் பசித மென்று முரைப்பாரால். 42

பார்த்தோர் குற்றமற்றவராயினும் அக்குற்றம் நீங்கும்பொருட்டு நூறு உருப் பஞ்சாக்கரசெபம் செய்வார்.

ஏதம் - குற்றம். இயற்கை - தன்மை. பதிதர் - குலம் சமயம் முதலிய ஒழுக்கத்தினின்று தவறியவர். புறங்காடு - சுடுகாடு. புரை - குற்றம்.

41. விபூதிதரியாதவர்கள் தவம் முதலியவற்றை நிறையச் செய்தாராயினும் உவர் நிலத்திலிட்ட விதைபோலப் பயனில்லாமல் ஒழியும். விபூதி தரித்துக்கொண்டவர் சும்மா இருந்தாலும் மேம்பட்ட தவம் முதலியன நிறையச் செய்தோராவார். சிரார்த்ததினத்திலே விபூதியிட்டுக்கொள்ளுவோரை வரித்துப் பூசிப்பின் பயன் அளவில்லாததாம்.

உவர் - உவர்நிலம். வாளாங்கு - சும்மா. தென்புலத்தார்க்கு ஏறுதினம் - பிதிர்தினம். நீறு பூசியோரைப் பிதிரராகவரித்துப் பூசிப்பின் அளவில்லாத பயனுண்டாகும்.

42. மிக்க தீவினைகள் அனைத்தையும் நீருகச் செய்தலால் நீறு என்றும், அழிவில்லாத செல்வத்தைத் தருதலால் விபூதி என்றும், உயிர்கள்தோறும் பொருந்தியுள்ள மலமாகிய குற்றத்தினைப் போக்குதலால் சாரம் என்றும், அறியாமை விட்டு நீங்க வளரும் அறிவைத் தருதலால் பசிதம் என்றும் அறிஞர் கூறுவர்.

வி - மேலான. பூதி - ஐசுவரியம்; எனவே, தன்னைத் தரித்தவர்களுக்கு அழிவில்லாத மேலாய ஐசுவரியத்தைக் கொடுத்தலால் விபூதி எனப் பெயர்பெற்றது; ஈண்டு ஐசுவரியம் என்பது முத்திப் பேற்றினையேயாம். அதுவே மேலான ஐசுவரியம் எனப்படும். பாவங்களையெல்லாம் நீருக்கலால் நீறு எனவும், பசுமம், பற்பம் எனவும் சொல்லப்படும். அறியாமை அழியும்படி சிவஞானமாகிய சிவத்துவத்தை விளக்கலால் பசிதம் எனப்படும். ஆன்மாக்களைத் துன்பத்தினின்றும் நீக்கி இரட்சித்தலால் இரட்சை எனப்படும்; காப்பு என்பது தமிழ்மொழி. "பூதி எனப் படும்செல்வ வேதுவினுற் சிவமாகும் பொருடிகழ்த்தும், ஏதுவினிற் பசித மிகு பாவங்க டம்மையச்சத் திசைத்த லாலே, ஓதலுறும் பற்பமென விடரிடை நின் றகற்றுதலா லொன்றுஞ் சாரம், தீதகல வணைவரையு மளிப்பதனுல் இரக்கை எனச் செப்பு நூலே." (சித்தாந்த சிகாமணி.)

அலகை பூதம் வேதாள மடர்மந் திரத்தா னலைப்புறுத்தும்
பலதெய் வதங்க ளிடரச்சம் பழிபா வங்கண் மடமென்னுங்
கலதி முழுது மெளிதகற்றிக் காப்புக் கொளலாற் காப்புமா
நிலவைப் பிடத்தி னதன்பெருமை நிகழ்த்த லரிதா மடமாதே. 43

வேறு

முப்பு ரத்தவர் முருக்கலின் முரிந்திரிந் தமரர்
செப்பு தற்கரி தாகிய தவஞ்செயச் சென்றங்
கப்ப தத்திமை யாதுநா நோக்கின மாக
மைப்பெ ருங்கணாய் முக்கணும் வார்புன றுளித்த. 44

வலக்க ணிரிடைப் பன்னிரு மரமிடப் பாற்கட்
சலத்தி னேழிரு மரந்தழல் விழியினீர் தோய்ந்த
நிலத்தி னீயிரு மரமுமா யினநிகழ்த் தியவிக்
குலத்துக் கியாவருங் கூறுபே ருருத்திர வக்கம். 45

---

43. அலகை பூதம் வேதாளம் செறிந்தமந்திரத்தினுல் துன்புறுத்தும் பல தெய்வதங்களுடைய துன்பம் பயம் பழி பாவங்கள் அறியாமை என்னும் கீழ்மை முழுவதையும் எளிதாகப் போக்கிக் காத்தலால் காப்பு என்றும் பேசப்படும். நில வுலகத்திலே அந்த விபூதியின் பெருமையைச் சொல்லுதல் அரிதாகும். உமா தேவியே!

அலகை - பேய், பசாசு. மடம் - அறியாமை. கலதி - மூதேவி, கிழாந் தன்மை. நிலவைப்பு - நிலவுலகம்.

44. திரிபுரத்து அவுணர்கள் அழித்தலால் கெட்டோடித் தேவர்கள் சொல்லுதற்கு அரிதாகிய தவத்தைச் செய்யும்பொருட்டுச் சென்று செய்ய நாம் அக்காலத்திலே இமைகொட்டாமல் நோக்கினேம். மைபூசப்பெற்ற விசாலமான கண்களையுடைய உமாதேவியே! மூன்று கண்களினின்றும் மிக்க நீர் வெளிப் பட்டது.

முருக்கலின் - போர்செய்து அழித்தமையால். முரிந்து இரிந்து - தோற்றுக் கெட்டோடி. அப்பதத்து - அக்காலத்து. துளித்த - நீர்த்துளிகள் சிந்தின.

45. வலக்கண்ணினின்று தோன்றிய நீர்த்துளியால் பன்னிரண்டு மரங் களும், இடக்கண்ணினின்று வெளிப்பட்ட நீர்த்துளிகளால் பதினுன்கு மரங் களும், நெற்றியிலுள்ள நெருப்புக் கண்ணினின்று தோன்றிய நீர் துளித்த நிலத் திலே பத்து மரங்களும் தோன்றின. தோன்றிய இந்தக் கூட்டத்துக்கு யாவரும் உருத்திராக்கம் என்று பெயர் கூறினர்.

குலம் - கூட்டம். தழல்விழி - நெருப்புக்கண்.

வெண்மை யுந்திகழ் பொன்மையும் வெண்மைபொன் மையுஞ்சேர்
வண்மை யுங்கரு மையுமென வகுத்தநா னிறத்து
முண்மை யக்கமா மணிகளவ் வுரைத்தன முறையே
தண்மை யந்தணர் முதலிய நால்வர்க்குஞ் சாரும். 46

ஒருமு கஞ்சிவன் வடிவுவே தியர்கொலை யொழிக்கும்
இருமு கஞ்சிவன் சத்தியென் றிருவர்தம் வடிவாம்
பெருக ரும்பசுக் கொலையினைப் பெயர்க்குமும் முகஞ்சீர்
மருவு மங்கியின் வடிவுமா தர்கள்கொலை மாற்றும். 47

நான்மு கத்தது நான்முக னரர்கொலை தொலைக்குந்
தேன்மு கத்தலர் பனிமலர்க் கூந்தலாய் திகழை
வான்மு கத்தது காலவங் கிப்பெயர் வரதன்
கான்மு கத்ததீங் குணவினுங் கரிசெலாங் கழிக்கும். 48

மூன்றி ரட்டிய முகமறு முகனுரு வலக்கை
ஏன்ற ணிந்திடின் மறைஞரை யிறுத்திட வெதிரே
தோன்று ருத்தனைத் துமிக்குமேழ் முகஞ்சுடர் சேடன்
ஆன்ற பல்பசுக் கொலைதப நியக்கள வகற்றும். 49

---

46. வெண்மை நிறமும், பொன்னிறமும், வெண்மையும் பொன்மையும் கலந்த நிறமும், கருமை நிறமும் என்று சொல்லப்படும் நான்கு நிறங்களோடு பொருந்திய உருத்திராக்கமணிகள்; அவை முறையே அந்தணர் முதலிய நான்கு வகைச் சாதியாருக்கும் பொருந்துவனவாம்.

47. இனி, உருத்திராக்கமணியில் உள்ள முகங்களின் தன்மைகளாவன: ஒருமுகமணி சிவசொரூபமாய் பிரமகத்தியை நீக்கும். இருமுகமணி சிவசத்தி ரூபமாய்ப் பசுக்கொலைப் பாவத்தைப் போக்கும். மூன்றுமுகமணி அக்கினி சொரூபமாய்ப் பெண்கொலைப் பாவத்தை நீக்கும்.

வேதியர் - பிராமணர். பசுக்கொலை - கோகத்தி. அங்கி - அக்கினி. மாதர்கள் கொலை - ஸ்திரீகத்தி.

48. நான்கு முகமுடைய மணி பிரமன் வடிவமாய் மானுடக் கொலைப் பாவத்தைத் தவிர்க்கும். உமாதேவியே! ஐம்முகமணி காலாக்கினிருத்திர ரூபமாய் உணவினாலாகும் குற்றங்களைப் போக்கும்.

நான்முகன் - பிரமன். நரர் - மானுடர். கால அங்கிப் பெயர் வரதன் - காலாக்கினி ருத்திரர். கால் முகத்த தீங்கு - காற்றினால் உண்டாகும் குற்றம். கரிசு - குற்றம்.

49. ஆறுமுகமணி - ஆறுமுகக்கடவுளின் வடிவமாம். அதனை வலக் கையிலே தரித்தால் பிரமகத்திச் சாயையைப்போக்கும். ஏழுமுகமணி ஆதிசேடன் உருவாய்ப் பசுக்கொலை பொருட் களவுகளாலுண்டாகும் பாவத்தைப் போக்கும்.

எட்டு மாமுக மேரம்ப னுருக்குரு தாரந்
தொட்ட பாதகந் தொகுபல தானங்க ளேற்று
முட்டு பாதகம் பிறர்தமோ தனமுகந் துண்டு
விட்ட பாதக மனைத்தையுங் கதுமென விழ்த்தும். 50

ஒன்ப தாகிய முகம்வயி ரவனுருக் கணுதி
வன்ப தாகிய வாளராத் தீங்குகண் மாற்றித்
துன்ப தாகிய தொடரறு வெறுக்கைக டுறுத்திட்
டின்ப தாகிய முத்தியு மெண்மையி னளிக்கும். 51

ஒருப தாகிய முகம்புவி யுண்டவ னுருவ
மருவு நாளொடு கோள்பல மண்ணைபூ தங்கள்
பிரம ராக்கத முதலிய பேதுறப் புரியும்
விரவு தீங்கெலாம் வெயில்படு பனியென விளிக்கும். 52

மூன்று இரட்டிய - ஆறுமுகமுள்ள. ஏன்று - தாங்கி. மறைஞர் - வேதியர். இறுத்திட - கொல்ல. எதிரே தோன்று உரு - சாயை. துமிக்கும் - அழிக்கும். சேடன் - ஆதிசேடன். தபநியக் களவு - பொன்னைக் களவுசெய்தல்.

50. எட்டுமுகமணி விநாயகக்கடவுள் வடிவாய்க் குருதார கமனம், தானக் கிரகணம், பிறர் அன்னம் புசித்தல் முதலிய பாவங்களைக் கெடுக்கும்.

ஏரம்பன் - விநாயகர். குருதாரம் தொட்ட பாதகம் - குருபத்தினியைப் புணர்ந்த பெரும்பாவம். தானங்கள் பலவற்றையும் வாங்கும் பாவம். ஓதனம் - உணவு. உகந்து - விரும்பி. கதுமென - விரைவாக.

51. ஒன்பது முகமணி வயிரவக்கடவுள் வடிவாய்ப் பூதம் முதலியவை களால் உண்டாகும் தீங்கும் பாம்புகளாலுண்டாகும் தீங்கும் போக்கிச் செல்வத் தையும் முத்தியையும் கொடுக்கும்.

கணுதி வன்பு - பூதம் முதலியவற்றால் நேரும் துன்பம். வாள்அரா - ஒளி உடைய பாம்பு. வெறுக்கை - செல்வம். எண்மையின் - எளிதாக.

52. பத்து முகமுடைய உருத்திராக்கமணி விஷ்ணுருபமுடையதாய், நாள் கோள்களாலாகிய தீமைகளையெல்லாம் தவிர்ப்பதாம். பல மண்ணைகள் பூதங்கள் பிரமராக்கதம் முதலியவைகள் அறிவு திரியும்படி செய்யும் தீங்குகளையெல்லாம் வெயிலிடைப்பட்ட பனிபோல ஒழிப்பனவாம்.

புவி உண்டவன் - திருமால். நாள் - நட்சத்திரம். கோள் - கிரகங்கள். மண்ணை - பசாசு. பூதம் பசாசு பிரமராக்ஷஸ் முதலியவற்றால் உண்டாகும் துன்பம் நீங்கும் என்க. வெயில்படு பனி: "வெயின் முறுகப் புற்பனிப் பற்றுவிட்டாங்கு" (நாலடி). விளிக்கும் - போக்கும்.

ஐந்த னேடிரு மூன்றனைத் தலைப்பெயா னனந்தான்
பந்த நீங்குருத் திரர்பதி னொருவர்தம் படிவ
முந்து மாயிர மேதமொண் பசுக்களோ ரிலக்க
முந்து வானிதி யுடனளித் திடும்பயன் முகிழ்க்கும். 53

ஆறி ரட்டிய திருமுக மாறிரு வெய்யோர்
வீறு மெய்யுறு வாம்பரி மேதத்தின் பயனும்
ஏறு மிக்கொளி மேருதா னத்தெழு பயனும்
ஊறு மஞ்சனந் தீட்டிய வோடரிக் கண்ணாய். 54

கந்தன் மெய்பதின் மூன்றுவாண் முகங்கலந் ததுதான்
சிந்தை வேட்டவுஞ் செம்பொனும் வீரமுஞ் செறிக்குந்
தந்தை தாய்மனை தனயரைத் துணைவரைக் கருவை
அந்த மெய்துற வடர்த்தவெங் கொலைகளு மனுக்கும். 55

ஏழி ரட்டிய முகமெம துருவுநின் னுருவுந்
தாழி ருங்குழ லாய்சுரர் தாபதர் முதலோர்
சூழ நல்வசி யந்தனைத் துகளறத் துறுத்து
வாழி நம்பெருஞ் சிவபுர வரைப்பிடை யுறுத்தும். 56

---

53. பதினொரு முகமுடைய உருத்திராக்கம் பந்தங்களின் நீங்கிய பதினொரு உருத்திரர்களுடைய வடிவமாம். அதனைத் தரிப்போர் முற்பட்ட ஆயிரம் அசுவ மேதயாகப் பயனையும், ஒரு இலக்கம் பசுக்களைப் பொன்னுடன் சற்பாத்திரத்தில் கொடுத்தோருக்குரிய பயனையும் தருவதாம்.

ஐந்தனோடு இருமூன்று - பதினொன்று. ஆனனம் - முகம். பந்தம் - தொடக்கு. மேதம் - அசுவமேதம். வான்நிதி - சிறந்த திரவியம். முகிழ்க்கும் - உண்டாக்கும்.

54. பன்னிரண்டு முகமுடைய உருத்திராக்கமணி பன்னிரு சூரியருடைய வடிவமாம். அசுவமேதயாகத்தின் பயனும், மிகுந்த ஒளியையுடைய மேருவைத் தானம் செய்வதால் உண்டாகும் பயனும் அதனைத் தரிப்பதனால் உண்டாவ தாகும்; மைபூசப்பெற்ற நீண்ட கண்களையுடைய பார்வதியே!

55. பதின்மூன்று முகமுடைய உருத்திராக்கமணி ஸ்கந்த மூர்த்தியின் உருவமுடையதாம். மனத்திலே நினைத்தவைகளையும், சிவந்த பொன்னையும், வீரத்தையும் நிறையச்செய்யும். தந்தை தாய் மனைவி புத்திரர் சகோதரர் முதலி யோரைக் கொலைசெய்த பாவமும் கருவைச் சிதைத்த பாவமும் போக்கும். கந்தன் - முருகவேள். வேட்டவும் - விரும்பியவற்றையும். செறிக்கும் - நிறையப்பண்ணும். தனயர் - புத்திரர். துணைவர் - சகோதரர். அந்தம் எய்துற. அடர்த்தல் - சிதைத்தல். அனுக்கும் - வாடச் செய்யும்.

56. பதினான்கு முகமுள்ள உருத்திராக்கமணி நீண்ட கூந்தலையுடைய உமாதேவியே! எமது வடிவமும் உன்னுடைய வடிவமுமாம்; தேவர்கள், தவசிகள்

அன்ன வேழிரு முகமரி தாமது கிடைத்தான்
மன்ன வார்களத் தணிவது மந்திர முழுதும்
நன்னர் வாய்மையிற் பலிக்குநா ளிலநெறி படையில்
துன்னு மேவலர் புறந்தரும் விறன்மிகத் தோன்றும். 57

சந்தி செய்யினு மந்திரங் கணிப்பினுந் தவங்கள்
எந்த நல்வினை யியற்றினுங் கண்மணி யணிந்தோர்க்
கந்த நல்வினைப் பயன்களொன் றனந்தமாய் விளையும்
வந்தி டும்பய னில்லையம் மணிதரி யார்க்கே. 58

இழிஞ ராகமற் றவர்களேந் திழைநலா ராகக்
கழிக ளூன்முதல் கழித்துணு மாந்தர்க ளாக
மொழியும் வான்மணி முடிமிசை தரித்தன ராயின்
அழியு நீள்வினை யந்தியி னமதுருப் பெறுவார். 59

முதலியோர் சூழ்ந்திருக்கும்படி நல்ல வசியத்தைக் குற்றமறப் பெருக்கும்; நம்முடைய சிவபுரத்தை அடைவிக்கும்.

ஏழ் இரட்டி - பதினான்கு. சுரர் - தேவர். தாபதர் - தவசிகள். துகள் - குற்றம். துறுத்தும் - நிறையப்பண்ணும். உறுத்தும் - கொண்டுசேர்க்கும்.

57. அப்படிப்பட்ட பதினான்கு முகமணி கிடைத்தல் அரிதாகும். அந்தப் பதினான்கு முகமணி கிடைத்தால் நிலைபெறக் கண்டத்திலே அணிந்து கொள்ளுவதால் மந்திரங்கள் முழுவதும் நன்றாகப் பலிக்கும். மிகுந்த சேனையையுடைய பகைவர்களும் புறங்கொடுத்தோடும் வலிமை மிகவுண்டாகும்.

மன்ன - நிலைபெற. களம் - கண்டம். நன்னர் வாய்மையில் - நன்றாக உண்மையிலே. மேவலர் - பகைவர். புறம்தரும் - புறமுதுகிட்டோடும். விறல் - வலிமை.

58. சந்தியாவந்தனங்களைச் செய்தாலும், மந்திரங்களைச் செபித்தாலும், எந்தத் தவங்களைச் செய்தாலும் உருத்திராக்கமணியை அணிந்தவர்களுக்கு அந்த நற்செயல்கள் எல்லாம் ஒன்று பலபடியாக விளைந்து பெருகும். உருத்திராக்க மணியை அணியாதவர்களுக்குப் பயன் நன்றாக விளையாதாம்.

சந்தி - சந்தியாவந்தனம். கணிப்பினும் - செபித்தாலும். நல்வினை - சற்காரியம். கண்மணி - உருத்திராக்கம். அனந்தமாய் - அளவிறந்தனவாய்.

59. இழிந்த குலத்திலே பிறந்தவராயினும், பெண்களாயினும், மிக்க கள்ளு மாமிசம் முதலியவற்றை நீக்கி உண்ணும் மனிதராயினும் சிறப்பித்துச் சொல்லப் படும் சிறந்த உருத்திராக்கமணியை முடியின்மேல் தரித்துக்கொண்டாராயின் வினையின் நீங்கி முடிவிலே நம்முடைய வடிவத்தை அடைவர்.

இழிஞர் - இழிகுலத்தோர். ஏந்திழைநலார் - பெண்கள்: இழை-ஆபரணம். நலார் - பெண்கள்: தொகுத்தல் விகாரம். கழி - மிக்க. ஊன் - மாமிசம். கழி கள் -

வேறு

சிகையினொரு மணிமுடியி னுரறு செழுங்களமெண் ணூன்கு மார்பில்
தகைபெறவைம் பதுகரத்தி னீரெட்டு மணிபந்தந் தனிலீ ராறு
முகமுகமுஞ் செறியவிடை முடிந்துமே ருவுமமைத்து முறையிற் கொள்வார்
புகலமனு வடநூற்றெட் டதிற்பாதி பாதமுமாம் பூங்கொம் பன்னுய். 60

வடநடத்தி லனுமிகையின் மத்திமையிற் றர்ச்சனியின் மலிநோய் பாறும்
படர்சினத்தெவ் வர்களிறப்பர் பரபோக விடெய்தும் பசும்பொற் பாவாய்
உடல்வெறுத்தார் மேன்மறிப்பர் கீழ்மறிப்பர் நெடும்போக முறுதல் வேட்
[டோர்
கடவுண்மணி யொலியாமற் பிறர்விழிக்குப் படாமன்மனுக் கணிப்ப தாகும்.

மேருவினைத் தொடுத்துமனுக் கணித்திடுவர் வடமறிந்து விரன்மேன் மீட்டு
மேருவுறுங் காலதனைக் கடவாது வடந்திருப்பல் விதியா நன்மை
கூருமணி வடந்தவறி நிலம்விழ்தன் முதலான குற்றங் கட்குச்
சேருநம துருவினுக்குச் செயுங்கழுவா யதிற்பாதி செய்வர் தக்கோர். 62

அறிவுடையோரால் நீக்கப்பட்ட கள்: வினைத்தொகை. வான்மணி - சிறந்த உருத்திராக்கமணி. முடி - சிரம். வினை அந்தியின் - வினைகள் முடிந்த பின்பு.

60. பூங்கொம்புபோன்ற உமாதேவியே! சிகையில் ஒரு உருத்திராக்கமும், தலையில் முப்பத்தாறு மணிகளும், கழுத்தில் முப்பத்திரண்டும், மார்பிலே ஐம்பதும், கையிலே பதினறும், மணிக்கட்டில் பன்னிரண்டும் ஆக, முகத்தோடு முகமும் அடியோடு அடியும் பொருந்த, இடையிடையே முடிச்சும் இட்டு, மேருவும் அமைத்து விதிப்படி அணிவார்கள். செபவடம் நூற்றெட்டு அதிற்பாதியாகிய ஐம்பத்து நான்கு அதிற்பாதியாகிய இருபத்தேழு மணிகளாலும் ஆகும். புகல் அ மனு வடம். பாதமும் ஆம்: பாதம் - காற்பங்கு; அஃதாவது இருபத்தேழு.

61. செபவடத்தைச் செபிக்கும்போது செலுத்துதல் அனுமிகை மத்திமை தர்ச்சனி விரல்களால் செய்யின் மிகுந்த நோய் நீங்கும். மிக்க கோபத்தையுடைய பகைவர்கள் இறப்பார்கள். பரபோகமாகிய முத்தி சித்திக்கும். பசிய பொன்னுற் செய்த பாவைபோன்ற உமாதேவியே! உடம்பை வெறுத்த துறவறத்தார் மணியை மேல்நோக்கித் தள்ளிச் செபிப்பார்கள். போகத்தை விரும்பினோர் மணியைக் கீழ்நோக்கித் தள்ளிச் செபிப்பார்கள். தெய்வத்தன்மை பொருந்திய உருத்திராக்கமணிவடத்தை ஒலிசெய்யாமல், பிறர் கண்ணுக்குப் புலப்படாமல் மந்திரம் சொல்லிக் கணித்தல்வேண்டும்.

வடம் நடத்தில் - செபமணியைத் தள்ளி உருட்டினுல். அனுமிகை - மோதிர விரல். மத்திமை - நடுவிரல். தர்ச்சனி - சுட்டுவிரல். பாறும் - நீங்கும். தெவ்வர் - பகைவர். உடல் வெறுத்தார் - துறவிகள். கடவுண்மணி - உருத்திராக்க செப வடம். மனு - மந்திரம்.

62. மேருமணி தொடங்கி எண்ணரி மந்திரம் செபிப்பார்கள். செப வடத்தை மறித்து விரலின்மேல் மீட்டும் மேருமணி வந்தால் அதனைக் கடவாமல்

விரலிறைபுத் திரசிவஞ் சங்குமணி படிகமணி விளங்கு முத்து [வெல்லாம்
மரைமணிபொன் மணிகுசையின் வண்முடிகண் மணியென்ன வகுத்த
பரவுமனுக் கணிப்பதற்கா முறையேயொன் றனுக்கொன்று பயன்மிக் காகுங்
குரவமலி நறுங்குழலா யாதலினாற் கண்மணியே கொள்வர் சான்றோர். 63

மனையினுறும் பயன்பசுக்கோட் டத்தொருப தாநதியின் மருங்கு நூறுந்
தனிநிகரா லயத்துளொரா யிரம்வனத்தி லிலக்கம்வரை தன்னிற் கோடி
நனையொழுகு மலர்த்தொடையாய் நமதுதிரு முன்னிடத்தி னவில வொண்ணு
தனையமணி வடமெடுத்து முறையுளிமந் திரங்கணிப்போர்க் ககிலத் தம்மா.

வடத்தைத் திருப்பிச் செபித்தலே விதியாகும். நன்மை மிகுவிக்கும் செபவடம் தவறி நிலத்தின்மேல் விழுதல் முதலிய குற்றங்களுக்கு நமது உருவுக்குச் செய்யும் பிராயச் சித்தத்திலே தக்கோர் பாதியைச் செய்வார்கள்.

மேரு - நாயகமணி. மனு - மந்திரங்களை. வடம் மறிந்து - வடத்தைக் குறுக்கே திருப்பி. மேருமணியைக் கடவாமல் மறித்துச்செபிக்கவேண்டும். விதி - முறைமை. கூரும் - மிகும். நமது உரு - சிவலிங்கக் குறி. கழுவாய் - பிராயச்சித்தம்.

63. விரல், விரலிறை, புத்திரதீபம், சங்குமணி, படிகமணி, முத்துமாலை, தாமரைமணி, பொன்மணி, தருப்பை முடிச்சு, உருத்திராக்கம் என்று வகுத்துச் சொல்லிய எல்லாமும் மந்திரசெபம் பண்ணுதற்குஆகும். இவைகள் ஒன்றுக் கொன்று பயன் மிகவிளைவிக்குமாம். குராமலரைச் சூடிய கூந்தலுடைய உமையே! ஆதலினால் அறிவுடையோர் உருத்திராக்கமணி மாலையையே செபவடமாகக் கொள்வர்.

படிகம் - பளிங்கு. மரை-தாமரைமணி. குசை - தருப்பை. மனு - மந்திரம். குரவம் - குராமலர். புத்திரதீபம் - பத்திராட்சம்.

64. உருத்திராக்கமணி மாலையைக் கையிலேந்திக்கொண்டு வீட்டிலிருந்து செபிக்கின் ஒருமடங்கு பலமும், பசுக்கோட்டத்திலிருந்து செபிக்கின் பத்து மடங்கும், நதியின் பக்கத்திலே நூறுமடங்கும், ஆலயத்துளிருந்து செபிக்கின் ஆயிரம் மடங்கும், வனத்தில் இலக்கம் மடங்கும், மலையில் கோடிமடங்கும், தேனொழுகும் மலர் மாலையையணிந்த கூந்தலையுடைய உமையே! நமது சந்நிதியிலிருந்து செபிக்கின் சொல்லவொண்ணாதமடங்கு பலமும் உண்டாகும்; அத்தகைய உருத்திராக்க மணியாலமைந்த செபவடத்தைக்கொண்டு உலகத்திலே விதிப்படி மந்திரம் செபிப்போருக்கு.

பசுக்கோட்டம் - பசுக்கொட்டில். கோட்டம் - கொட்டில், கொட்டகை, கோயில், தொழுவம். மருங்கு - பக்கம், கரை. வனம் - காடு. வரை - மலை. நனை - அரும்பு, தேன். திருமுன் - சந்நிதி. முறையுளி - விதிப்படி. அகிலம் - உலகம்.

சூரியன், சந்திரன், அக்கினி, குரு, தீபம், நதி, பிராமணர், பசுக்கூட்டம் என்பவற்றிற்கு முன்னர் எதிர்முகமாகவிருந்து செபிக்கக்கடவர். கிழக்குநோக்கிச் செபிக்கின் விரும்பிய பொருள் யாவும் வரப்பெறுவர். தெற்குநோக்கிச் செபிக்கின் அபிசாரமுடையவராவர். மேற்குநோக்கிச் செபித்தோர் இட்டசித்தியடைவர். வடக்குநோக்கிச் செபித்தோர் வியாதிகள் நீங்கப்பெறுவர்.

முத்திநெறிக் கையைந்து மணிமூவொன் பான்மணிசோ பனத்துக் கின்ப
மெத்துநிதிக் கொருமுப்பான் மணியவிசா ரந்தனக்கு விளம்பு மூவைந்
தித்திறத்தின் வெவ்வேறு வடமியற்று வாரறிந்தோ ரிலங்கு வேற்கட்
பைத்தமணி யரவல்குற் பைந்தொடிக்கைத் தரள நகைப் பவள வாயாய். 65

கண்மணியைக் கண்டவர்க்குப் பயனிலக்கந் தொட்டவர்க்குக் கருதிற் கோடி
உண்மையின்மெய் யணிந்தவருக் கொராயிரமாங் கோடியுறு செபத்தனந்தம்
எண்மையினெய் துறும்பின்ன ரெமதுருவம் பெறுவர்பகைக் கென்றுந் தாழார்
வண்மையுறு மதன்பெருமை யளப்பரிதாங் குழைகிழிக்கு மழைக்கண் மாதே.

வேறு

திரைதவழ் பாற்கட றேவர் யாவரும்
நுரையெழக் கடைந்தநா ணுவன்ற வில்வமும்
விரைகமழ் துளவமும் விளங்கத் தோன்றலின்
உரைசெயு மவைநமக் குவப்புச் செய்வன. 67

---

65. முத்திநெறியை விரும்புவோருக்கு இருபத்தைந்து, சுபத்தை விரும்பினோர்க்கு இருபத்தேழு, இன்பந்தரும் பொருள் பெறுதற்கு முப்பது மணிவடம், ஆபிசாரத்தை விரும்புவோருக்குப் பதினைந்து என இவ்வகை எண்ணுள்ள வேறு வேறு செபவடங்கொண்டு செபம் செய்வார் அறிந்தோர்கள்; உமாதேவியே!

சோபனம் - போகம். பைத்த - படத்தையுடைய. தரளம் - முத்து. நகை - பற்கள். கண்களையும் அல்குலையும் கையையும் நகையையும் வாயினையும் உடையவளே என்க.

66. உருத்திராக்கத்தைத் தரிசித்தோர் அடையும் பயன் இலக்கமாம். பரிசித்தவர்களுக்குக் கோடிமடங்கு பயன். உண்மையாக உடலில் அணிந்து கொள்ளுவோருக்குப் பயன் ஆயிரங்கோடி. உருத்திராக்க செபவடத்தால் செபிப்போருக்கு எல்லையில்லாத அளவு பயன் உண்டாகும். பின்பு நம்முடைய சாரூபம் பெறுவர், பகைவர்களுக்கு எப்போதும் வணக்கம் செய்யார்; காதளவும் நீண்டு செல்லும் கண்களையுடைய பெண்ணே! வளப்பம் பொருந்திய செபவடத்தின் பெருமை அளவிடப்படாததாம்.

எண்மையின் - எளிதாக. எமது உருவம் - சிவசாரூபம். தாழார் - வணங்கமாட்டார். குழை - மாதர் காதணி.

67. அலைவீசுகின்ற திருப்பாற்கடலைத் தேவர்கள் யாவரும் சென்று நுரை எழும்படி கடைந்த காலத்திலே சொல்லிய வில்வபத்திரமும், மணம் வீசும் திருத்துழாயும் விளங்கும்படி தோன்றிய காரணத்தினுல் அவை நமக்கு விருப்பந் தருவனவாம்.

திரை - அலை. உவப்பு - விருப்பம்.

துளவினிற் சிறந்தது தூய கூவிளந்
தளிரற முதிர்ந்தது சருக தாயினும்
வளரிலை யிரண்டொன்று மரீஇய தாயினும்
விளரியங் கிளவியாய் விலக்கு றுததே. 68

வையகத் துயிர்க்கெலாம் வளமை நல்குறுஞ்
செய்யவட் கவ்வதி காரஞ் சேர்த்தலின்
நெய்யணி கருங்குழ னிமலை யன்னதிற்
பொய்யறு பூமகள் பொருந்தி வாழுமே. 69

நோயற வேண்டினு நோன்மை வேண்டினு
மாயிரும் புவியடி வணங்க வேண்டினுந்
தூயவிண் வேண்டினுந் துறுத்து மும்மலம்
ஓயநன் முத்தியை யுதவும் வில்வமே. 70

---

68. துளவத்தைவிடச் சிறந்தது தூயதாகிய வில்வத்தளிர். அது மிகவும் முதிர்ந்ததாயினும், சருகாக உலர்ந்துபோயினும் இலை இரண்டொன்று பொருந்தியிருந்தாலும் விளரிப்பண்ணையொத்த மொழியையுடைய உமையே! நீக்கப் பெறுதனவாம்.

கூவிளம் - வில்வம். விளரி - ஒருபண். கிளவி - சொல். நிமலை - நிர்மலமானவள்: உமாதேவி.

69. உலகத்திலுள்ள உயிர்களுக்கெல்லாம் செழிப்பைத் தருகின்ற திருமகளுக்கு அந்த அதிகாரம் பொருந்தியிருத்தலின், நெய் பூசப்பெற்ற கரிய கூந்தலையுடைய நிமலையே! அவ்வில்வத்தளிரிலே பொய்ம்மையில்லாத இலக்குமிதேவி பொருந்தி வாழ்வாள்.

வையகம் - உலகம். வளமை - செல்வம். செய்யவள் - சிவந்த நிறத்தை உடைய இலக்குமி. பூமகள் - செந்தாமரை மலரில் வாழ்பவள்.

70. நோய்கள் நீங்கவேண்டினும், வலிமைபெற வேண்டினும், உலகம் கால்களில் விழுந்து வணங்கவேண்டினும், விண்ணுலகத்தை வேண்டினும் கிடைக்கப்பெறுவர். அவ்வில்வத்தால் அருச்சிப்போர் ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களும் நீங்கிய நல்ல முத்திப்பேற்றையும் பெற்று வாழ்வார்.

நோய் - பிணி. நோன்மை - வன்மை. மா இரும் புவி - பெரிய நிலவுலகம். விண் - விண்ணுலகம். துறுத்தும் - கொண்டுவந்து நிரப்பும். மும்மலம் - ஆணவம் கன்மம் மாயை என்பன. ஓய - நீங்க.

எட்டனைத் தலைப்பெயி ரைம்ப தோதியும்
ஒட்டிய வாயிரம் பெயர்க ளோதியும்
பெட்டெம தடிமலர்ப் பெய்யு நற்பயன்
மட்டவிழ் தொங்கலாய் வகுக்கொ ணாததே. 71

வேறு

எவ்வளவு நமைப்பூசை யியற்றிடினு மிருநிலத்தின்
அவ்வளவு முபசார மாமதற்கோ ரளவில்லை
கொவ்வைநறுங் கனியிதழாய் கூறியவவ் வுபசாரஞ்
செவ்விபெற வடியார்கள் செயுமுறையிற் சிறிதுரைப்பாம். 72

காலையுறுங் கடன்முடித்துக் கமழ்மலரா திகள்கொணர்ந்து
சீலமுறப் புனலூேய்ந்து திகழ்சந்தி யினிதியற்றிக்
கோலமுறு மிடஞ்சுத்தி கொளச்செய்து பரிதியினுஞ்
சாலவெமைப் பேரன்பு தழைதரப்பூ சனைசெய்து. 73

---

71. நூற்றெட்டு (அஷ்டோத்தர சதம்) மந்திரங்களைச் சொல்லியும், ஆயிரம் பெயர்களைக் (சகத்திரநாமம்) கூறியும் விருப்பத்துடனே எம்முடைய திருவடிமலர்களில் வில்வத் தளிர்களைக்கொண்டு அருச்சனை செய்யின் அதனல் உண்டாகும் பயன், தேனொழுகும் மாலையை அணிந்த உமையே! சொல்ல முடியாத நன்மையை விளைவிக்கும்.

எட்டனைத் தலைப் பெய் ஈர் ஐம்பது - நூற்றெட்டு; நூற்றின்மேல் எட்டு. ஆயிரம் பெயர் - சகத்திர நாமங்கள்: "பேராயிரம் பரவி வானோ ரேத்தும் பெம் மானை" (தேவார). பெட்டு - விரும்பி. பெய்யும் - அருச்சிக்கும், தூவும். மட்டு - தேன். தொங்கல் - மாலை. வகுத்தல் - பிரித்துச்சொல்லுதல்.

72. பெரிய நிலவுலகத்திலே நம்மை எவ்வளவு பூசித்தாலும் அவ்வளவும் நமக்குச் செய்யும் உபசாரமாம். அதற்கு ஓர் அளவுமின்று. கொவ்வைப்பழம் போலும் சிவந்த இதழ்களையுடைய உமையே! சொல்லிய அந்த உபசாரங்களை மெய்யடியார்கள் செவ்வைபெறச் செய்யும் முறையினைச் சிறிது சொல்லுவோம்.

இதழ் - உதடு. செவ்விபெற - நன்ருக.

73. காலையிற் செய்யவேண்டிய நாட்கடன்களைச் செய்துமுடித்து, மணம் பொருந்தும் மலர்களைக் கொண்டுவந்து சேர்த்து, நீரிலே மூழ்கி, விளங்கும் சந்தியாவந்தனத்தை இனிதாகச்செய்து, பூசைசெய்யும் தானத்தைச் சுத்தப் படுத்தி, சூரியனை மிகுதியும் பேரன்புகொள்ளப் பூசித்து;

காலைக்கடன் - மலசலவிசர்க்கம், தந்தசுத்தி முதலியன. மலர் ஆதி - பத்திரம் புஷ்பம் அறுகு முதலியன. புனல் - நீர். சந்தி - சந்தியாவந்தனம். பரிதியினும் - சூரியனிடத்தும்: சூரியபூசைசெய்து என்க.

ஐவகைச்சுத் தியுமுறையா லமைத்திலிங்கத் தாசனமு
மொய்வளர்மூர்த் தியுமூர்த்தி மானுமெம் மையுநினைந்து
கைவளர்பூ வானிறைத்துக் கமழ்ந்தவருக் கியநல்கி
உய்வகையிங் கிருவென்ன வுளநெகிழ வெமைவேண்டி. 74

மஞ்சனசா லையினேக மணிவளர்பா துகையாக
அஞ்சிறைவண் டினமூசா வலரிருகா லருச்சித்துத்
துஞ்சுவிரைப் புகையொளியுஞ் சுழற்றிநறும் பாத்தியமுந்
தஞ்சமறு மாசமன வருக்கியமுந் தகக்கொடுத்து. 75

வேறு

வரைத்துரை யெண்ணெய் நெல்லி மாமஞ்சள் பஞ்ச கவ்யம்
விரைத்தபா றயிர்நெய் செந்தேன் வேழமைந் தமிழ்தம் வேறே
உரைத்தவைந் தமிர்தம் வாழை யாதியொண் கனிநீர் தாழை
அரைத்திடும் வில்ல மார மருக்கிய மனைத்து மாட்டி. 76

---

74. தானசுத்தி, பூதசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி என்னும் ஐந்துவகையான சுத்திகளையும் விதிப்படி இயற்றி, சிவலிங்கத்தில் ஆசனம், மூர்த்தி, மூர்த்திமானாகிய நம்மையும் சிந்தித்து, கையிலே கொண்ட பூக்களால் நிறையச்செய்து, மணம் தங்கிய அருக்கியம் கொடுத்து, பூசைமுடியும் வரையில் இந்த மூர்த்தியிடமாக இருந்து அருள்செய்ய வேண்டுமென்று மன நெகிழ்ச்சியுடன் எம்மை வேண்டிக்கொண்டு;

ஐவகைச்சுத்தி: தானசுத்தி, பூதசுத்தி (அந்தரியாகம்), திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி என்பன. ஆசனம், மூர்த்தி, மூர்த்திமான்; இறைவர் மூர்த்திமான். கைவளர் பூவால் நிறைத்து - ஒளிவடிவாகிய சிவபெருமானைத் துவாதசாந்தப் பெருவெளியினின்று புஷ்பாஞ்சலியாற் கொண்டுவந்து இலிங்க மூர்த்தியிடமாக இருக்கச்செய்து. அருக்கியம் நல்கி - பாத்திய அருக்கிய ஆசமனங்கள் கொடுத்து.

75. திருமஞ்சனம் செய்தருளும் பீடத்திலே வண்டுகள் மொய்யாத மலர்களால் இரண்டுமுறை அருச்சனை செய்து, மணம் பொருந்திய தூபதீபங்களைக் கொடுத்து, நல்ல பாத்தியம் முந்துறக் கொடுத்து, ஆசமனம் அர்க்கியங்களையும் முற்படக் கொடுத்து;

மஞ்சனச்சாலை - அபிடேகம் செய்தற்குரிய இடம். சிறை - சிறகு. மூசா - மொய்யாத. இருகால் - இரண்டுமுறை. விரை - வாசனை. சுழற்றி - சுற்றி. பாத்தியம் - பாதங்கழுவு நீர். அருக்கியம் - கை கழுவுநீர். ஆசமனம் - முக்குடி நீர். முந்தக - முற்பட்டு.

76. நன்றாகக் கழுவிச் செக்கிலிட்டு ஆட்டிய எண்ணெயும், நெல்லிமுள்ளி, மாவகை, கத்தூரி மஞ்சள், பஞ்சகவ்வியம், பால், தயிர், நெய், தேன், கருப்பஞ்சாறு, பஞ்சாமிர்தம், இதனினும் வேறாகச் சொல்லப்பட்ட பல பஞ்சாமிர்தம், வாழை, மா, பலா முதலிய பழங்கள், பழச்சாறு, இளநீர், அரைத்தவில்வம், சந்தனக்குழம்பு அருக்கியம் முதலியவைகளை முறையே அபிடேகம் பண்ணி;

புலர்த்திமெய் யீர நாண்கோ வணம்பொழி கதிர்ப்பட் டார
நலத்தக வுரிஞு தேய்வை நகைமணிக் கலன்கள் வாச
மலர்த்தொடை பலவுஞ் சாத்தி வளரறு சுவைநா லுண்டி
முலைத்தலைப் பூணு யூட்டி முதிர்சுவை நறுநீர் நல்கி. 77

பாத்திய மாதி யீந்து பகர்பஞ்ச வாச முய்த்துத்
தூத்தகு வதன நிவச் சுடரிழைத் தூசு நீட்டி
வாய்த்தொளிர் தீப பேத மனைத்தும்வட் டித்து நீறு
சாத்திமுன் னுடி காட்டித் தண்குடை கவித்து மேலால். 78

வார்தரு கவரி கொண்டு மருங்குற வலைத்து மெல்ல
ஏர்தரு கால்செய் வட்டத் தினிதுற வீசி மேலாஞ்
சீர்தரு மெழுத்தைந் தெண்ணிச் செறிபொரு ளுடலோ டாவி
கார்தரு குழலாய் நந்தங் கையிடைக் கொடுத்துப் போற்றல். 79

வரைத்து உரை எண்ணெய்-கழுவிச் செக்கிலிட்டு ஆட்டிய எள்ளின்நெய். மா - உழுந்து பயறு கடலை கோதுமை அரிசி முதலியவற்ருல் செய்த மா. மஞ்சள்-கத்தூரி மஞ்சட்பொடி; திரவியப்பட்டைத்தூள்; பச்சிலை பூலா ரோசாமொட்டுக் களின் பொடி. பஞ்சகவ்வியம் - கோமயம் கோசலம் பால் தயிர் நெய் என்பன: இவை விதிப்படி கலந்தவை. பால் தயிர் நெய் என்பன தனித்தனியே ஆட்டுவன. வேழம் - கரும்பு. கனிநீர் - எலுமிச்சை, நாரத்தை, கொளிஞ்சி, தமரத்தை, பம்பளிமாஸ், திராகைஷ இவற்றின் சாறு. தாழை - இளநீர். வில்வக்கட்டையை அரைத்த சாந்து. ஆரம் - சந்தனம். பனிநீர் முதலியனவும் கொள்க. இரத்தின சலம், தருப்பை சலம், கும்பசலங்கள். வில்லம் - வில்வம்.

77. திருமேனி ஈரம் புலரத் திருவொற்ருடை சாத்தி, அரைஞாண் கோவணம் பட்டாடை கலவைச்சந்தனம் இரத்தினுபரணங்கள் மலர்மாலைகள் முதலிய எல்லாவற்றையும் செவ்வையாகச்சாத்தி அறுசுவை நால்வகைப்பட்ட உண்டிகள் நிவேதித்து, உமையே! நறுநீரையும் கொடுத்து;

புலர்த்தி - உலர்த்தி; துவட்டி. நாண் - அரைஞாண். ஆரம் - சந்தனம். உரிஞு தேய்வை - அரைத்த சந்தனம்.

78. பாத்திய முதலியவற்றைக் கொடுத்து, பஞ்சவாசப்பொருள்களைக் கொடுத்து, தூயவாய் முகந்துடைத்தற்பொருட்டு மெல்லியதான துகிலைக் கொடுத்து, நன்ருக ஒளிவிடுகின்ற தீபவகைகள் எல்லாவற்றையும் உபசாரமாகக் காட்டி, திருநீறு சாத்தி, கண்ணுடி காட்டி, குடைகவித்து அதற்குப்பின்னர்.

பாத்தியம் ஆதி - பாத்திய அருக்கிய ஆசமனங்கள். பஞ்சவாசம் - "தக்கோலம் தீம்பூத் தகைசா லிலவங்கம். கப்பூரம் சாதியோ டைந்து" இவைமுக வாசப்பொருள்கள். வதனம் நிவ - முகந்துடைக்க. தூசு - மெல்லியபட்டாடை. வட்டித்து - உபசாரமாகக்காட்டி. ஆடி - கண்ணுடி.

79. நீண்ட வெண்சாமரம் கொண்டுநின்று பக்கத்திலே மாறி மாறி அசைத்து, மெதுவாக அழகிய காற்றை வீசும் விசிறியை இனிதாக வீசிப் பின்னர்

மொழிந்தவி துபசா ரத்தின் முறையிது வன்றி யானெய்
பொழிந்தொளிர் தீப மேற்றல் புகழுமைம் புகையு மார்த்தல்
அழிந்திடு பணியு மற்று மவிர்தரப் புதுக்கல் பாவம்
ஒழிந்திடும் விழாவெ டுத்த லாதியு முபசா ரந்தான். 80

இத்தகு முபசா ரத்தை யியற்றினோர்க் கிடர்க ளில்லை
உத்தம ரவர்கட் கெய்தாப் பொருள்களு முலகத் தில்லை
சுத்தவொண் புவனத் தெய்திச் சுகப்பெருங் கடலிற் றாழ்ந்து
முத்தியு மெளிதிற் சேர்வர் முகிழ்ந்தபூண் முலைப்பொற் பாவாய். 81

ஈண்டுநா முரைத்த வெல்லா மெழில்வளர் தீக்கை யில்லார்
வேண்டினு மவர்கட் கோதார் விழுத்தகு நெறியி னின்றார்
காண்டியா லென்றார் சூலக் கையினர் கௌரி வல்லே
நீண்டமெய் மகிழ்ச்சி துள்ள நிமலரை வணங்கி வாழ்ந்தாள். 82

பஞ்சாக்கர செபம் பண்ணி, உடல் பொருள் ஆவி என்னும் மூன்றையும் உமையம்மையே! நம்மிடத்துத் தத்தம்செய்து பூசித்து வணங்குதல்.

கவரி - வெண்சாமரை. மருங்கு - பக்கம். அலைத்து - மாறிமாறி வீசி: இரட்டுதலாம். ஏர் - அழகு. கால் - காற்று. கால் செய்வட்டம் - விசிறி: 'வேர்தரு கால் செய்வட்டம்'; வேர்தரு - வெட்டிவேரால் அமைத்த என்னும் பொருள் தொனித்தல் காண்க; வெட்டிவேர் விசிறி என்க.

80. மேலே சொல்லிய யாவும் உபசார முறையாம். இதுவல்லாமல் பசு நெய் ஊற்றி விளங்கும் தீபம் ஏற்றுதல், ஐந்துவகைப்புகையும் காட்டுதல், திருப்பணி முதலியவற்றையும் புதிதாகச் செய்தல், பாவம் நீங்கும் திருவிழாச்செய்தல் முதலியவைகளும் உபசாரங்களேயாம்.

ஆன்நெய் - பசுவின் நெய். ஐம்புகை: "நேர்கட்டி செந்தேன் நிரியாசம் கப்பூரம், ஆரம்......" என்பன. ஆர்த்தல் - காட்டுதல், நுகர்வித்தல். அழிந்திடு பணி - பழுது பார்த்தல்: சீரணோத்தாரணம். புதுக்கல் - புதியதாகச் செய்தல்.

81. உமாதேவியே! இத்தகைய உபசாரங்களை இயற்றினோருக்குத் துன்பமில்லை. உத்தமர்களாகிய அவர்களுக்குக் கிடையாத பொருள்கள் உலகத்தில் ஒன்றுமில்லை. சுத்தமாகிய ஒளிபொருந்திய புவனங்களையடைந்து சுகமாகிய பெரிய கடலிலே முழுகி முத்திப்பேற்றையும் எளிதாக அடைவர்.

இடர் - துன்பம். உத்தமர் - மேலானவர். எய்தா - வந்து பொருந்தாத. சுத்த புவனம் - சுத்தமாயையிலுள்ள புவனங்கள். சுகப் பெருங்கடல் - ஆனந்தமாகிய பெரியகடல். தாழ்ந்து - மூழ்கி.

82. இதுவரையில் நாம் இங்கே உனக்குச் சொல்லிய செய்திகளையெல்லாம் தீட்சையில்லாதார் விரும்பினாலும் மேம்பட்ட தவவொழுக்கத்திலே நிலைபெற்றோர் அவர்களுக்குச் சொல்லமாட்டார். இதனைக் காண்பாயாக என்று

என்றருள் கொழிக்கும் பட்டி யிறைவனு ருமையாட் கன்று
நன்றுற மொழிந்த வேணி யாதியி னன்மை கூறித்
துன்றிய வேணி மோலித் துறவர்க்கு நீற்று மேட்டின்
ஒன்றுறு நீற்றின் மேன்மை யுரைக்குவ னுயர்ந்த சூதன். 83

உபதேசப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 2155

சூலப்படையைத் தரித்த சிவபெருமான் அருளினர். கௌரி விரைந்து எழுந்து உண்மையான மகிழ்ச்சி பெருக நிர்மலராகிய சிவபெருமானை வணங்கி வாழ்ந்திருந்தாள்.

எழில் - அழகு. தீக்கை - சைவ சமயச் சடங்கு: அவை சமயம், விசேடம், நிருவாணம், அபிடேகம் என்பன. விரிந்த நூல்களால் அறிக. விழுத்தகு - மேம்பட்ட. காண்டி - காண்பாயாக.

83. என்று அருள் கொழிக்கும் பட்டீசர் உமாதேவியாருக்கு அக்காலத்து நன்ருக அருளிச்செய்த சடை முதலியவைகளின் நன்மைகளையெல்லாம் எடுத்துச்சொல்லி, நிறைந்த சடை முடியையுடைய முனிவர்களுக்கு நீற்று மேட்டிலே பொருந்தியுள்ள நீற்றின் மேன்மைகளைச் சூதமாமுனிவர் சொல்லுவாராயினர்.

நன்றுற - நன்மைகளெல்லாம் உண்டாக. வேணிஆதி - சடை, திருநீறு, உருத்திராக்கம், வில்வ அருச்சனை, உபசாரங்கள் முதலியன. வேணி - சடை. துன்றிய - நெருங்கிய. மோலி - முடி.

முப்பத்தைந்தாவது

திருநீற்று மேட்டுப்படலம்

செந்தமிழ் விளங்கிய தெய்வ நாட்டிடைச்
சந்தன மால்வரைத் தங்கு மாதவன்
சுந்தரக் கமண்டலஞ் சுரக்குந் தாமிர
உந்தியின் மருங்கொரு நகர முண்டரோ. 1

தேக்கிய மதுப்பொழில் செறிக சேந்திர
மோக்கமென் றியாவரு மொழியு மந்நகர்
காக்குநற் பாண்டியன் கருத லார்தமைத்
தாக்கிய தான்மிக னென்னு நாமத்தான். 2

கருமமுந் தானமுங் கரிசு தீர்சிவ
தருமமும் புரிவதிற் றாண்மிக் கெய்தினன்
பொருமுறு பாவத்திற் பொருள்கொ டாமையின்
ஒருவிய கீர்த்தியி னுள்ளம் வைத்திலான். 3

---

1. செந்தமிழ்மொழி கொழிக்கும் தெய்வத்தன்மை பொருந்திய பாண்டி நாட்டிலே பொதியில் மலையில் வீற்றிருக்கும் அகத்தியமுனிவருடைய அழகிய கமண்டலத்திலிருந்து பெருகும் தாமிரபன்னி நதியின் பக்கத்தில் ஒரு நகர முண்டு. சந்தனமால்வரை - பொதியில். மாதவன் - அகத்தியமுனிவர். தாமிர வுந்தி - பொருநையாறு. உந்தி - யாறு. மருங்கு - பக்கம்.

2. நிறைந்த தேனையுடைய சோலைகள் நெருங்கும் கஜேந்திரமோட்சம் என்று யாவரானும் சொல்லப்படும் அந்த நகரத்தைப் பாதுகாக்கும் பாண்டிய அரசன் பகைவரையழிக்கும் தான்மிகன் என்னும் பெயரையுடையவன்.

தேக்கிய - நிறைந்த. மது - தேன். பொழில் - சோலை. கஜேந்திரமோட்சம் அந்த நகரம். கருதலார் - பகைவர். அரசன் தான்மிகன் என்பவன்.

3. செய்யவேண்டிய சற்காரியங்களும், தானங்கொடுத்தலும், குற்றம் இல்லாத சிவதருமங்களும் செய்வதில் ஊக்கமுடையவன். உள்ளம் புழுங்கும் பாவத்திலே அவன்பொருள் சேராமையால் நீங்கும் கீர்த்தியிலே அவன் விருப்பமில்லாதவன்.

கருமம்-செயல்; ஈண்டு அரசகாரியம். தானம்-சற்பாத்திரத்திற் கொடுத்தல். கரிசு - குற்றம். தாள்மிக்கு - ஊக்கமிகுந்து; தாளாண்மை. ஒருவிய கீர்த்தி - கீர்த்தியின்மை: ஒருவிய - நீங்கிய.

அத்தகு தான்மிகற் கமைந்த கற்பினுள்
கொத்தொளி விரிதருங் கொடிமின் போறலால்
வித்துரு லதையென விளம்பு நாமத்தாண்
முத்தமிழ்க் கல்வியு முற்றக் கற்றுளாள். 4

அழகினிற் கல்வியி னுரு மொப்பிலா
மழலையங் கிளவியாண் மதுரச் செந்தமிழ்
பழகிய மாதர்கள் பலர்தற் சூழ்தரக்
கழகமுள் ளவர்கள்கை விதிர்ப்ப வைகுவாள். 5

புறநகர்க் குழாத்தொடும் போந்து மென்மலர்
நறவுகு பொழில்விளை யாட்டி னண்ணியும்
வெறிகமழ் வருபுனல் விழைவுற் ருடியு
முறுமகிழ் பண்ணையு முனுற்றிச் செல்லுவாள். 6

---

4. அப்படிப்பட்ட தான்மிகனுகிய அரசனுக்குப் பொருந்திய கற்புடைய மனைவி, தொகுதியாக ஒளி பெருகும் மின்னற்கொடியை ஒத்தலால் அவள் வித்துருலதை என்னும் பெயரையுடையாள்; இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ்த் துறையிலும் துறைபோயவள்.

கற்பினுள் - கற்புடைய மனைவி. கொத்து - தொகுதி. கொடிமின் - மின்னற் கொடி. போறல் - போலுதல். வித்துரு - மின்னல். லதை - கொடி. நாமம் - பெயர். முத்தமிழ் - இயல் இசை நாடகங்கள்.

5. அழகினலும் கல்வியாலும் யாரும் ஒப்பாகாத இனிய சொற்களையுடைய அவள் இனிய செந்தமிழ் நூற்கேள்வியையுடைய மகளிர் பலர் தன்னைச் சூழ்ந்து இருக்கச் சபையிலுள்ளார் நடுக்கம் அடையுமாறு வீற்றிருப்பாள்.

தற்சூழ்தர - தன்னைச் சுற்றியிருக்க. கழகம் - சபை. கைவிதிர்ப்ப - நடுக்கங் கொள்ள: கை - உபசர்க்கம்.

6. அந்த நகரத்தின் புறத்திலே தன்னைச் சூழ்தரும் குழாத்துடனே சென்று மென்மையான மலர்கள் தேனைச் சிந்தும் பொழிலிலே விளையாடியும், மணம் தங்கும் நீரிலே மிக விரும்பி விளையாடியும் மகளிருடனே நனி விளையாடியும் அவள் செல்லுவாள்.

புறநகர் - நகர்ப்புறம். நறவு - தேன். வெறி - வாசனை. விழைவுற்று - விரும்பி. பண்ணை - மகளிர் விளையாட்டு.

இன்னணை மிவள்பயின் றிருக்கு நாள்வயிற்
கொன்னவில் கொங்கண தேயத் துள்ளவன்
மன்னிய நான்மறை முழுதும் வல்லவன்
முன்னுநல் வினைபுரிந் தொழுகோ ரந்தணன். 7

வேறு

திகழுமெவ் வளனும் படைத்துயர் மகாராட் டிரமெனுந் தேயநன் ருளுந்
தகுபிர தாப மகுடனென் றரையன் றழைத்தெழு பெரும்புக ழுடையான்
நகுகதிர் மணிப்பூந் திரைதவழ் கங்கை நதிக்கரை யிடைத்துலா பார
மகனிலம் வியப்பத் தூங்குவான் சென்ரு னதுதெரிந் தாவயி னடுத்தான். 8

மறைநெறி மொழிகண் மழையெனச் சொரிந்து மாசறச் சோதனை கொடுத்
குறைவறு தவத்தா னிவனெனக் கருதிக்கோமகன் றூங்கிய துலாத்தின்[தான்
நிறைதரு பொருள்க ளனைத்தையு மளிப்ப நிகழ்ந்தபே ருவகையி னேற்றுப்
பறைதரு தனது பதிவயிற் புகுதப் படருவா னின்னது நினைந்தான். 9

உயர்முதல் வருண முதித்ததும் வேத மொழுக்கொடு பயின்றுதெள் ளியதுஞ்
செயிருறு வினையிற் றீர்ந்துநற் கதியிற் சேர்வதற் கேதுவாக் காது
மயர்தரு பாவம் தளர்ந்தரு நரகின் மறிதரத் தானமிக் கேற்றிங்
கயர்வதற் கேது வாக்கினேன் கற்ற வறிவும்வந் துதவிய தின்றே. 10

---

7. இவ்வாறு இவள் பொருந்தியிருக்கும் நாளில் அச்சந்தரும் கொங்கண தேசத்தில் உள்ளவன்; நான்கு வேதங்களிலும் வல்லவன்; நற்செயல்களைப்புரிந்து ஒழுகும் ஓர் பிராமணன். கொன் - அச்சம். முன்னும் - யாவரானும் கருதப்படும். புரிந்து - விரும்பி. ஒழுகும் - செய்யும்.

8. எல்லாவளப்பங்களும் மிக்க மகாராட்டிரம் என்னும் தேசத்தை நன்ருக ஆட்சிபுரியும் பிரதாப மகுடன் என்னும் அரசன் பெரும் புகழுடனே விளங்கினுன். அவன் கங்கை நதிக்கரையிலே உலகம் வியக்குமாறு துலாபாரதானம் செய்யும்படி சென்ருன். அதனைத்தெரிந்து அவ்வந்தணன் அங்கேபோய்ச் சேர்ந்தான்.

வளன் - வளப்பம், அழகு, மிகுதி. தேயம் - தேசம். வயின் - இடம்.

9. வேதங்களிலே கூறப்படும் விஷயங்களையும், வேதம் ஓதுதலையும் அவன் மழை சொரிவதுபோலப் பொழிந்து குற்றமில்லாத பரிட்சைகளிலே தேர்ந்தான். குறைவில்லாத தவத்தையுடையவன் இவன் என நினைந்து அவ்வரசன் துலாபார தானம் நிறையச் செய்தான். அந்தணன் மிக மகிழ்வுடன் அதனை ஏற்ருன். தன் இருப்பிடத்துக்குச் செல்பவன் இவ்வாறு நினைந்தான்.

மறைநெறி - வேதவொழுக்கு. சோதனை - பரிட்சை. கோமகன் - அரசன். தூங்கிய துலாம் - துலாபாரம். பறைதரு - சொல்லப்படும்.

10. உயர்ந்த வருணத்திலே பிறந்தமையும், வேதமோதியும் வேள்விகளைச் செய்தும் தெளிந்த அறிவைப் பெற்றமையும், குற்றமுடைய வினைகளினின்று

புரிந்ததீ வினையைப் போக்குதற் கான புரையறு வழிக்கொள லன்றி
விரிந்திடுந் துயர முழப்பதிற் பயனென் மேவுமிப் பொருளெலா மறத்திற்
சொரிந்துவார்ந் தொழுகுந் தாமிர பருணித் தூயநீ ரதனிடை வினைகள்
இரிந்தறப் படிது மெனமதித் தூர்புக் கில்லவ ளொடும்வெளிப் பட்டான். 11

நெடிபடு கானும் வரைகளு முரம்பு நிரம்பிய பழுவமும் பவளக்
கொடிவளர் புணரி மணிகொணர்ந் தெறியுங் குளிர்தகு கானலுங் கடந்து
முடிகுலைத் தள்ளன் முலைத்தலைப் பொறிப்ப முறைமுறை கடைசியர் பதிக்குங்
கடிமலர்க் கழனிக் கன்னிநா டெய்திக் கசேந்திர மோக்கஞ்சென் றடுத்தான்.

நீங்கியும் சிறந்த முத்தியைப் பெறுதற்குக் காரணமாக்காமல் மயக்கந்தரும் பாவம் வளர்ச்சியுற்று அரிய நரகத்திலே வீழ்ந்து துன்புறும்படி தானத்தை மிகுதியாகப் பெற்று இவ்வுலகத்திலே வருந்துதற்கு ஏதுவாகச் செய்தேன். கற்றகல்வியும் வந்து உதவிலதே.

உயர் முதல் வருணம் - உயர்ந்த அந்தணர் குலம். வேதம் ஒழுக்கொடு பயின்று: ''வேதியர்க் கழகு வேதமு மொழுக்கமும்'' ; ''மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான் - பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்'' (குறள்). செயிர்- குற்றம். கதி - மோட்சம். மறிதர - குப்புற. அயர்வதற்கு - வருந்துதற்கு. ஏது - காரணம்.

11. செய்த தீவினைகளைப் போக்குதற்கான மார்க்கத்தைத் தேடுதலின்றி மிக்க துயரப்படுவதால் பயனென்? இப்போது என்னிடத்துள்ள இப்பொருள் களையெல்லாம் தருமங்களிலே செலவழித்து, தாமிரபருணியாகிய தூயநதியிலே மூழ்கி, வினைகளை யெல்லாம் போக்குவோம் என நினைந்து ஊரை அடைந்து மனைவியையும் உடனழைத்துக்கொண்டு புறப்பட்டான்.

புரை அறு வழி - குற்றமற்ற மார்க்கம். இரிந்து அற - கெட்டோடி நீங்குமாறு. படிதும் - மூழ்குவோம். மதித்து - எண்ணி.

12. நீண்ட காடுகளும் மலைகளும் பரலடுத்து உயர்ந்த பாலை நிலமும் கடற்கரைச் சோலையும் கடந்து நாற்றுமுடிகளைப் பிரித்தெடுத்துக் குழைந்த சேறு மார்பிலே படும்படி வரிசை வரிசையாக மருதநிலமாக்கள் நாற்றுக்களை நடுகின்ற மருதநிலத்தையுடைய பாண்டி நாட்டையடைந்து கஜேந்திர மோட்சம் என்னும் நகரையடைந்தான்.

நெடிபடு - நீண்ட, ஒலியுடைய. முரம்பு - பரலடுத்து உயர்ந்த இடம். பழுவம் - காடு: இது காடு தன் வளம்கெட்ட பாலைநிலம். ''முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து, பாலை யென்பதோர் படிவம் கொள்ளும்'' என்பதனல் அறிக. புணரி - கடல். மணி - முத்து பவளம் முதலியவைகள். கானல் - கடற் கரைச் சோலை. முடி - நாற்றுமுடி. அள்ளல் - குழைசேறு. கடைசியர் - மருத நில மாக்கள்; மள்ளப் பெண்கள். கழனி - வயல். கன்னிநாடு - பாண்டிநாடு.

அங்கொரு மருங்கு தாமிர பருணி யணிமணித் துறையின்வா னளவும்
ஓங்கிய வரசி னிழலி னசைந்திட் டுயங்கிய செல்லல்கள் முழுது
நீங்குறு பொழுதே யிறுதிவந் தடுப்ப நீங்கின னுடலினை விடுத்துப்
பாங்குறு மந்தப் போதியே யிடமாய்ப் பயின்றன னரக்கனாய் மாதோ. 13

வேறு

கணவ னின்னுயிர் விடுத்தலுங் கையற்று மனைவி
உணர்வ ழிந்தழு திரங்கிப்பி னெண்பொரு ணம்மைத்
தணவு றும்பிறர் வௌவுவ ரெனவது தன்னைப்
பிணர ரைச்செழும் போதியின் பொந்தினுட் பெய்தாள். 14

பொருண்ம றைத்தபூங் கொடியனாள் புல்லிய கொழுநன்
உருவை வெந்தழன் மடுத்தன ளொருதின முழுது
மருவி கண்கொள வழுதழு திரங்கிமா ழாந்திட்
டிருநி லம்விழுந் திறந்தனள் வழிவரு நாளால். 15

---

13. அங்கே ஒரு பக்கத்திலே தாமிரபருணி நதியிலுள்ள ஒரு துறையிலே ஆகாயம் அளவும் உயர்ந்துள்ள அரசமர நிழலில் தங்கி, நடந்துவந்த வருத்தமும் துன்பமும் நீங்குகின்ற காலத்திலே மரணகாலம் வந்தடுப்ப, உடலைவிட்டு நீங்கினவனாய் அந்த அரசமரமே இடமாகக்கொண்டு அரக்கவுருக்கொண்டு சஞ்சரித்தான்.

மருங்கு - பக்கம். அசைந்திட்டு உயங்கிய - நடந்து இளைத்த. செல்லல் - துன்பம். இறுதி - மரணகாலம். போதி - அரசமரம்.

14. கணவன் இறந்தவுடன் மனைவியானவள் செயலற்று உணர்வுகெட்டு அழுதுபுலம்பிப் பின்பு கொண்டுவந்த இப்பொருள்களெல்லாம் நம்மை விட்டு நீங்கும், பிறர் பற்றிக்கொண்டு போய்விடுவர் என்று கருதி, அந்தப் பொருளைச் சருச்சரையையுடைய அந்த அரசமரத்தின் பொந்தினுள்ளே வைத்தாள்.

கையற்று - செயலிழந்து. உணர்வு அழிந்து - அறிவுகெட்டு. தணவுறும் - நீங்கும். வௌவுவர் - பிடுங்கிக்கொண்டு போவார். பிணர் அரை - சருச்சரையுடைய அடிமரம்.

15. கொண்டுவந்த பொருள்களை மறைத்து வைத்த பூங்கொடிபோன்ற மனைவி தன்னுடைய கணவன் பிணவுடம்பை நெருப்பிலிட்டு எரித்தாள். ஒருநாள் முழுவதும் கண்ணீர் அருவிபோலப் பெருக அழுது அழுது புலம்பி மயங்கி நிலத்திலே விழுந்து இறந்தாள். பின்வரும் நாட்களிலே.

புல்லிய - தழுவிய. கொழுநன் - கணவன். மனைவியாகிய பூங்கொடி படர்வதற்குக் கொழுகொம்பாகவுள்ளவன் கொழுநன் என்ற நயம் காண்க. உரு - பிணவடிவம். மாழாந்து - மயங்கி. வழி வரும் நாள் - பின்பு.

கனகங் காத்துய ரரசினிற் கடுந்துய ருழந்து
பனவ னாகிய வரக்கனின் றனன்படர் தவத்தீர்
வினையி னீங்குற வூக்கினும் விழுத்தவ மில்லார்க்
கனைய தாகுமோ வாகுரு தரும்பொரு ளிருந்தும். 16

பெரிது மோங்கிய வத்தகு பிப்பில நிழலில்
தெரிய வோதிய வித்துரு லதையெனுந் தெரிவை
விரியும் வார்புனல் விழுநதி தோய்தர விழைவுற்
றுரிய வாயமுந் தானுமுற் றவணடுத் திருந்தாள். 17

இருக்கு மெல்லையின் மரஞ்சிலை யெனுமிவை தமையும்
உருக்கு மின்னிசை யாழ்தழீஇ யுளர்ந்துபா டினளால்
தருக்கின் வைகிய தன்மையுங் கவினுமா டகங்கள்
திருக்கி யாழெழூஉந் திறத்தையு நோக்கின னரக்கன். 18

---

16. பொந்திலே பொதிந்து வைத்துள்ள பொன்னைப் பாதுகாத்துக் கொண்டு அந்த அரசமரத்திலே மிக்க துன்பத்துடன் பிராமணனாகிய அரக்கன் நின்றான். மிக்க தவமுனிவர்களே! வினையினின்று நீங்குதற்பொருட்டு மிக முயன்றாலும் பெருந்தவமில்லாதவர்களுக்குப் பெரும் பொருளிருந்தும் தவம் கைகூடுமோ? கூடாது.

"தவமுந் தவமுடையார்க் காகும் அவமதனை, அஃதிலார் மேற்கொள்வது" (குறள்). "ஆகும் சமயத்தார்க் காள்வினையும் வேண்டாவாம், போகும் பொறியார் புரிவும் பயமின்றே, ஏகன் மலைநாட என்செய்தாங் கென்பெறினும், ஆகாதார்க் காகுவ தில்" (பழமொழி - 127).

கனகம் - பொன். பனவன் - பிராமணன். ஊக்கினும் - முயற்சித்தாலும். விழுத்தவம் - மேம்பட்டதவம். அனையது - அந்த ஊக்கம்; வினையினீங்குதல் எனினுமாம்.

17. மிக ஓங்கியுயர்ந்து விளங்கும் அவ்வரசமர நிழலில், வித்துருலதை என்னும் பெயருடைய அரசியும் மிக்க நீரையுடைய மேலான தாமிரபருணி நதியில் நீராடும்பொருட்டு விரும்பித்தோழியர் குழுவுடன்வந்து அங்கேதங்கினாள்.

பிப்பிலம் - அரசு. தெரிவை - பெண். வித்துருலதை - மின்னற்கொடி. விழுநதி - விழுப்பமுடைய தாமிரபருணி. ஆயம் - தோழியர்கூட்டம்.

18. இவ்வாறு தங்கியிருக்கும் சமயத்தில் மரம் மலை என்னும் இவற்றையும் உருகச்செய்யும் இனிய இசை பொருந்திய யாழை வாசித்தாள். செருக்குடன் அவள் அங்கே தங்கியதையும், அழகையும், முறுக்காணியை நன்கு முறுக்கி யாழோசையை எழுப்பும் திறத்தையும் அவ்வரக்கன் நோக்கினான்.

எல்லையில் - காலத்தில். சிலை - கல், மலை. உளர்ந்து - நரம்புகளைத்தடவி. தருக்கின் - செருக்கோடு. கவின் - அழகு. மாடகம் - முறுக்காணி. திருக்கி - திருகி. யாழ் எழூஉம் - யாழிசையை எழுப்பும்.

மாது மற்றிவள் போல்பவர் வையகத் தில்லை
கோதை மல்கிய குழலியைக் குறுகுது மென்னுப்
போதி யின்குளிர் கொம்பினைப் பொருக்கென விடுத்துச்
சோதி மல்குபெண் கொம்பினைத் துன்னின னரக்கன். 19

பாடு மாடகத் திவவியாழ் பாணியின் வழுக்கி
மாடு விழ்தர வளரிளங் கொடிமறிந் தாங்கு
நீடு வார்குழல் வித்துரு லதைவிய விலமேற்
பீடு சோர்தர விழுந்தனள் பெயர்ந்தன னுணர்வு. 20

மருண்டு நோக்கினள் பிதற்றினண் மருங்குளார் வினவத்
தெருண்டு மாற்றமொன் றியம்பில டிகழ்நிறங் கருகி
வெருண்டு நோக்குவார் விதுப்புற வேறுபட் டனள்வார்
சுருண்ட பூங்குழ லலையமெய் துளங்கினள் பெரிதும். 21

---

19. உலகத்திலே இவளைப்போன்ற பெண் யாவருமில்லை. மாலையணிந்த கூந்தலையுடைய இவளை நெருங்கிச் செல்வோம் என்று அரசமரத்தின் கிளையை விரைந்து விடுத்து அரக்கன் ஒளிமிக்க பெண்ணாகிய கொம்பைப் பற்றினன்.

வையகத்து - உலகில். கோதை - மாலை. மல்கிய - நிறைந்த. குழலி - கூந்தலையுடையாள். கொம்பு - கிளை. பொருக்கென - விரைவாக. பெண் கொம்பு - பெண்ணாகிய பூங்கொம்பு: பண்புத்தொகை.

20. பாடிக்கொண்டிருக்கும் முறுக்காணியோடு கூடிய திவவினையுடைய யாழ் கையினின்று வழுக்கிப் பக்கத்திலேவிழ, செழித்த இளங்கொடி மடங்கி விழுந்தாற்போல வித்துருலதை நிலத்திலேசோர்ந்து விழுந்தவளாய் அறிவு நீங்கினள்.

மாடகம் - முறுக்காணி. திவவு - யாழ் உறுப்பு. பாணி - கை. மாடு - பக்கம். மறிந்தாங்கு - துவண்டு விழுந்தாற்போல. உணர்வு பெயர்ந்தனள் - அறிவு இழந்தாள்.

21. மயங்கிப் பார்த்தாள், பிதற்றினள், பக்கத்திலுள்ளார் கேட்கத் தெளிவடைந்து ஒருசொல்லும் சொல்லிலள். விளங்கும் ஒளிகருகி அஞ்சிப் பார்க்கின்றவர்கள் நடுங்க வேறுபட்டாள். நீண்ட அழகிய கூந்தல் புரளும்படி மிகவும் உடலை முறித்துக்கொண்டாள்.

மருண்டு - மயங்கி. பிதற்றினள் - புலம்பினள். தெருண்டு - தெளிந்து. மாற்றம் - சொல். வெருண்டு - அஞ்சி. விதுப்புற - நடுங்க. அலைய - புரள. துளங்கினள் - ஆடினள்.

புடையு ளார்பொருக் கெனச்சிவி கையிற்கொடு போந்தார்
அடைய லார்க்குரு மேறன தான்மிக வரையன்
நடையின் மாமயில் வென்றவிந் நங்கைதான் பிணியை
உடைய ளாவளோ வெனப்பெருந் துயருளத் துழந்தான். 22

பிரம ராக்கதன் பிடித்தன னெனச்சிலர் பேச
விரவி டாகினி மோகினி பூதவே தாளம்
பரவு பேய்முத லானவற் றியல்பெலாம் பயின்ற
கரவி லார்தமை யழைத்தனன் காவலன் கடுப்பின். 23

வல்ல வாறெலா மந்திரத் தலைவர்கண் முயன்று
மல்ல னீங்கில ளதுகண்டு தான்மிக னிந்த
வில்லின் மாதுபோல் வேறுமோ ரில்லெமக் குறுங்கொல்
செல்ல றீர்ந்தில தென்செய்கே னெனத்தெரு மந்தான். 24

---

22. பக்கத்திலுள்ளார் அந்நிலையைக்கண்டு விரைந்து சிவிகையில் வித்துருலதையை வைத்து எடுத்துவந்தனர். பகைவர்களுக்கு இடியேறுபோன்றவனுகிய தார்மிகமன்னன் சாயலால் மயிலைவென்ற இந்த நங்கை நோய் உடையவளாவாளோ? என்று மிக்க துயரால் வருந்தினன்.

புடை - பக்கம். அடையலார் - பகைவர். உரும் ஏறு - ஆண்இடி. உழந்தான் - வருந்தினன்.

23. பிரமராக்கதன் பிடித்தனன் என்று சிலர் சொல்ல இடாகினி மோகினி பூதவேதாளம் பேய் முதலியவற்றின் தன்மைகளையெல்லாம் தெரிந்து கைவந்த வஞ்சனையில்லாதோரை விரைந்து அரசன் அழைத்துவரச் செய்தான்.

இயல்பு - தன்மை. கரவு இல்லார் - வஞ்சகமில்லாத மந்திரம்வல்லார். காவலன் - அரசன். கடுப்பின் - விரைவாக. பிரமரக்ஷஸ், இடாகினி, மோகினி, பூதம், வேதாளம், பேய் முதலியன தீண்டி வருத்துவன. இவைகளின் தன்மை அறிந்து கரவின்றி நீக்கவல்லாரை அழைத்தான் என்க. போலிகளும் பொய்மையாளரும் நிறைந்த உலகத்திலே கரவிலாரை அழைத்துவரச் செய்தான்.

24. தாங்கள் கற்ற மந்திர வித்தையைக்கொண்டு ஒல்லும்வாறெல்லாம் மந்திரம் வல்லார் விலக்கமுற்பட்டும் அவள் துன்பம் நீங்கிலள். அதனைக்கண்ட தார்மிகன் இந்த மனைவியைப்போல எமக்கு வேறோர் மனைவி வாய்ப்பாளோ? இவள் கொண்ட துன்பம் தீர்ந்திலதே என்ன செய்கேன் என மனஞ்சுழன்றான்.

மந்திரத்தலைவர் - மந்திரவித்தையில் தலைசிறந்தோர். வல்லவாறு - முடிந்த வகையெல்லாம். அல்லல் - துன்பம். இல்லின் மாது - இல்லாள். செல்லல் - துன்பம். தெருமந்தான் - சுழன்றான். ''அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி'' (தொல்).

அடிய ரின்னலை யரக்குதற் கெளிவருங் கருணை
குடிகொ ணாரதன் குறைவற நல்வினை வளர்க்கு
முடிகொள் வேந்தனுக் கிரங்கிமுன் னடுத்தனன் வேந்தன்
படியின் மாதவன் பதமலர் பணிந்தனன் பண்பால். 25

அம்மை நல்வினை சாலவு மாற்றினை யன்றி
இம்மை நல்வினை யெதிரற விட்டினை யினையை
மம்ம ரின்னலின் மறுகுவ தடாதென மணிவேற்
செம்மல் வந்தன மெனமுனி செயிர்தபக் கூறும். 26

மறைகள் பல்கலை முழுவதுந் தெள்ளிய மறைஞன்
அறையு மந்திர முழுவதுங் கணித்துய ரறிஞன்
நிறையு மொண்பொரு ணிகழ்த்திய தானத்தி னேற்றுப்
பொறையி ருந்தனு நீத்தவன் புல்லிய வரக்கன். 27

---

25. அடியார்களுடைய துன்பத்தைப் போக்குதற்கு எளிதாகவரும் கருணையையுடைய நாரதமுனிவர் குறைவின்றி நற்செயல்களைச் செய்யும் முடி வேந்தனிடத்து மனமிரங்கி எதிரே தோன்றினர். தார்மிகன் அம்முனிவரைக் கண்டவுடனே அடியற்ற மரம்போல் கீழே விழுந்து அவர் பாதமலர்களிற் பணிந்தான்.

அரக்குதற்கு - போக்குதற்கு. படியில் - பூமியில்.

26. முற்பிறவிகளில் நல்வினைகளை மிகுதியாகச் செய்து முடித்தாய். இப்பிறவியிலும் நல்வினைகளை ஒப்பறச் செய்திருக்கின்றாய். இத்தன்மையையுடைய நீ மயக்கத்தைச் செய்யும் துன்பத்தால் சுழல்வது பொருந்தாததாம். ஆகலின், மன்னனே! நாம்வந்தோம் என முனிவர் அவன் குற்றம்தீரச்சொல்லுவாராயினர்.

அம்மை - அப்பிறப்பு. இம்மை - இப்பிறப்பு. எதிர் அற - ஒப்பின்றி. ஈட்டினை - தேடினாய். இனையை - இத்தன்மையையுடைய நீ. மம்மர் - மயக்கம். இன்னல் - துன்பம். மறுகுவது - சுழல்வது. செம்மல்: அண்மைவிளி. செயிர்தப - குற்றம் நீங்க.

27. வேதங்களையும் அறுபத்துநான்கு கலைகளையும் முழுதும் தெளிவாக உணர்ந்த பிராமணன், சொல்லப்படும்மந்திரம் முழுவதையும் அறிந்து செபித்து உயர்ந்த அறிவுடையவன், நிறைந்தபொருளைத் துலாபார தானத்தால் ஏற்றுச் சுமந்திருந்த உடம்பை விட்டவன் ஆவான் இந்த அற்ப அரக்கன்.

மறைகள் - வேதங்கள். பல்கலை - அறுபத்துநான்கு கலைகள். மறைஞன் - பிராமணன். நிறையும் ஒண்பொருள் - துலாபாரதானம். தானத்தின் ஏற்று - தானத்தால் ஏற்றுக்கொண்டு. பொறை இருந்த தனு - சுமந்திருந்த உடம்பு.

ஆத லாலவன் மந்திர மாதிகட் ககலான்
பாதி மாதொடு மிரசத மன்றினிற் பரதஞ்
சோதி நாயகன் சுரர்தொழக் குயிற்றுபே ரூரின்
வேதன் யாகஞ்செய் விழுத்தகு குண்டமொன் றுளதால். 28

அண்ண லார்திரு வருளினு னீறதில் வளரு
நண்ணு நீற்றினைத் தரித்தவர் வினையெலா நசிக்கும்
உண்மை யீது நீ யொண்டொடி மனைவியைப் போதந்
தெண்மை தீர்நதிக் காஞ்சியி னிரும்புன லழுத்தி. 29

பிரம தீர்த்தமும் பெய்வளை யுருவினிற் பெய்து
வரநி லாவுமந் நீற்றினை வடிவெலாந் திமிர்தி
விரவு தீவினை யரக்கன்விட் டகலுமென் றுரைத்துச்
சுரர்கள் போற்றுறு நாரதத் தொன்முனி மறைந்தான். 30

---

28. அதனல் இவ்வரக்கன் மந்திரம் முதலியவைகளுக்கு நீங்கமாட்டான். உமையொருகூருகக் கொண்டு வெள்ளியம்பலத்திலே திருக்கூத்தைச் சிவபெருமான் தேவர்களெல்லாம் வணங்கும்படிசெய்தருளும் திருப்பேரூரிலே பிரமதேவன் யாகஞ்செய்த மேம்பட்ட யாககுண்டம் ஒன்று உள்ளது.

அவன் - அவ்வரக்கன். இரசதமன்று - வெள்ளியம்பலம். பரதம் - திருக்கூத்து. குயிற்று - செய்தருளும். வேதன் - பிரமதேவன். விழுத்தகு - மேம்பட்ட.

29. சிவபெருமானுடைய திருவருளினலே அந்த யாககுண்டத்திலே விபூதி பெருகிவருவதாம். அக்குண்டத்திலே பொருந்திய திருநீற்றைத் தரித்தவர்களுடைய வினைகளெல்லாம் கெட்டொழியும். சத்தியம் இதுவாம். நீ உன் மனைவியாகிய வித்துருலதையை அழைத்துக்கொண்டு எளிய தன்மையையெல்லாம் கெடுக்கும் காஞ்சிநதி நீரிலே அவளை முழுகச்செய்து.

அண்ணலார் - சிவபெருமான். போதந்து - அழைத்துச்சென்று. எண்மை - தஞ்சம்: என்றது அரக்கன் பற்றுக்கோடாக உள்ளமை. அழுத்தி - முழுக்கி; எனவே அவள் தானுக விரும்பி முழுக அரக்கன் இடங்கொடான் ஆகலின் அவளைத் தீர்த்தத்திலே பிடித்து அழுத்தி என்க.

30. பிரம தீர்த்தத்தையும் எடுத்து முழுக்காட்டி மேம்பட்ட அந்தக் குண்டத்திலுள்ள திருநீற்றையும் அவள் உடம்பு முழுவதும் நன்ருகப் பூசுவாய், பொருந்தும் தீவினையையுடைய அந்த அரக்கன் அவளை விட்டகலுவான் என்று கூறித் தேவர்களால் வணங்கப்படும் நாரதமுனிவர் மறைந்தருளினர்.

பெய்வளை உரு - அம்மனைவியின் உடம்பு. வரம் - மேலான. வடிவுஎலாம் - உடல்முழுவதும். திமிர்தி - நன்ருகப்படியும்படி பூசுவாய். தொல்முனி - பழமையாகிய முனிவர்.

உரைத்த மாதவ னெண்கழ லுவந்தெதிர் வணங்கி
விரைத்த பூந்தொடை வேம்பினே யாக்கிய வேந்தன்
அரைத்த சாந்தணி யரும்பிளங் கொங்கைமா தினைக்கொண்
டிரைத்து ராவிய கடற்படை யொடுமினி தெழுந்தான். 31

பழன மல்கிய கன்னிநா டெனும்பதி தணந்து
மழலே வண்டின முல்லையின் மதுவுணுங் கானுங்
குழவி வெண்மதி தவழ்தரு குன்றமுங் கடந்து
விழவு மல்கிய வாதியம் புரத்தைமே வினனல். 32

அந்த ணர்க்கரும் பொருள்பல வார்த்தினன் காஞ்சி
உந்தி யம்புன லுறுமுறை யுவகையிற் படிந்தான்
சுந்த ரந்தவிர்ந் திருந்ததன் றுணைவியைத் தோய்த்தான்
நந்து குண்டிகைத் தீர்த்தமு நங்கைக்காட் டினனல். 33

---

31. அவ்வாறு கூறியருளிய நாரதமுனிவருடைய திருவடிகளில் மறுபடியும் விழுந்து வணங்கி மகிழ்ந்தெழுந்து மணந்தங்கிய வேப்பமாலையை அடையாளப் பூமாலையாக அணிந்து விளங்கும் தார்மிக மன்னன் தன்மனையாளை அழைத்துக் கொண்டு கடல்போல் முழங்கியெழும் சேனையோடு புறப்பட்டான்.

விரைத்த - மணம்விசும். தொடை - மாலை. வேந்தன் - பாண்டியமன்னன். இரைத்து உராவிய - ஒலிமிக்கெழும். கடற்படை - கடல்போன்ற சேனை.

32. வயல்கள் நிறைந்த பாண்டிநாட்டை நீங்கி வண்டுக்கூட்டங்கள் முல்லைமலரில் தேனையுண்டு திரியும் காட்டையும், சந்திரன் தோய்தரு மலையையும் கடந்து, விழாக்கள் நிறைந்த ஆதிபுரத்தைச் சேர்ந்தான்.

பழனம் - வயல். கன்னிநாடு - பாண்டிநாடு. தணந்து - நீங்கி. கான் - முல்லை நிலம். குன்றம் - குறிஞ்சி நிலம். ஆதியம்புரம் - பேரூர்.

33. பிராமணர்களுக்கெல்லாம் அரியபொருள்கள் பலவற்றையும் விருப் புடன் தானம் செய்தான். காஞ்சிநதி தீர்த்தத்தில் விதிப்படி மகிழ்ச்சியுடன் நீராடினன். அழகிழந்து வருந்தும் தன் மனைவியை முழுக்காட்டினன். ஆக்க மிக்க பிரமதீர்த்தத்தையும் எடுத்து அவளை முழுகச்செய்தான்.

ஆர்த்தினன் - கொடுத்தான். காஞ்சி உந்தி - காஞ்சி நதி. உறும்முறை - பொருந்தும் விதிப்படி. படிந்தான் - முழுகினன். சுந்தரம் - அழகு. தோய்த்தான் - முழுக்கினன்: பிறவினை. நந்தும் - ஆக்கமிகும். குண்டிகைத் தீர்த்தம் - பிரம தீர்த்தம்.

நீற்று மேட்டினை யடுத்தொளிர் நீற்றினை யள்ளிப்
போற்று காஞ்சியம் புனல்கமண் டலப்புனல் பொழிந்திட்
டாற்றன் மன்னவ னங்கையிற் குழைத்துமென் றேறல்
ஊற்று பூங்குழ லாளுடன் முழுதும்பூ சினனால். 34

நீறு பூசலு நேரிழை மாதுட னின்றும்
பாறி யாங்கொரு பாறையிற் படீரென விழுந்து
கீறி நீண்முடி கெழுமிய பிரமராக் கதன்றன்
கூறு தீவினை யுடலினைக் கொம்மென விடுத்தான். 35

விடுத்த வவ்வயின் விண்ணவ னுயினன் விமான
மடுத்த தன்னதி னேறின னரசனை நோக்கித்
தொடுத்த தீவினை யேனையுந் தூயனுக் கினையென்
றெடுத்து நன்னய மியம்பின னெய்தினன் றுறக்கம். 36

---

34. திருநீற்றுமேட்டை அடைந்து, விளங்கும் திருநீற்றை நிறைய எடுத்து, காஞ்சிநதி தீர்த்தத்தையும் பிரம தீர்த்தத்தையும் ஊற்றிக் குழைத்து அரசன் தன் மனைவியின் உடல்முழுவதும் பூசினன்.

ஒளிர் - விளங்கும். அள்ளி - நிறைய எடுத்து. கமண்டலப்புனல் - பிரம தீர்த்தம். ஆற்றல் - வலிமை. தேறல் - தேன். பூங்குழலாள் - வித்துருலதையாகிய மனைவி.

35. பிரமன் யாககுண்டத்திலிருந்து எடுத்த நீற்றை நிறையப் பூசிய அளவிலே வித்துருலதை உடம்பிலிருந்து நீங்கி அங்கேயுள்ள ஒரு பாறையிலே திடீரென்று விழுந்து நீண்ட முடியிலே பொருந்திய பிரமராக்கதன் தீய வினையா லுண்டாகிய உடம்பை விரைந்து விடுத்தான்.

நீறு - யாககுண்ட விபூதி. பாறி - நீங்கி. கீறி - கிழிந்து. தீவினையுடல் - தீயவினையாலுண்டாகிய அரக்கனுடம்பு. கொம்மென - விரைவாக.

36. அரக்கனுடலை விட்டொழித்த அவ்விடத்திலேயே தேவவடிவங்கொண்டான். விமானம் வந்து பொருந்தியது. அதில் ஏறினன். பாண்டிய அரசனைப் பார்த்து பொருந்தும் தீவினையையுடையவனாகிய என்னையும் புனிதனாகச்செய்தாய் என்று தன் நன்றியுடைய சில சொற்களை விருப்புடன்கூறி விண்ணுலகத்துக்குச் சென்றான்.

அவ்வயின் - அவ்விடத்திலே. விடுத்த - அரக்கவுருவினைப் போக்கிய. விண்ணவன் - தேவன். தீவினையேனையும்: வினையாலனையும் பெயர்: உம்மை இழிவுசிறப்பு. நன்னயம் - உபசாரவார்த்தை. துறக்கம் - விண்ணுலகம்.

மம்மர் நீங்கிமுன் போலுணர் வெய்தினள் மாது
செம்மல் மன்னவ ஞேக்கினன் சிந்தையிற் களித்தான்
வம்மென் றன்னவ டனைக்கொடு மறுவலுங் காஞ்சி
விம்மி ரும்புனல் படிவித்தான் விதியுளி மாதோ. 37

பத்துக் கோடியொண் பொருளிலக் கம்பசு நூற்றுப்
பத்துக் காமரு பரிகரி நூறுபல் கலனும்
பத்திக் கேயெளி வரும்பட்டி நாதர்க்குக் கொடுத்துப்
பத்தர்க் காம்பொருள் பண்பொடு பலவும்வி சினனல். 38

வணங்கி நாதரை விடைகொண்டு வல்வினை தீர்ந்த
அணங்கி னெடுகன் கழனிசூழ் கன்னிநா டடுத்து
நிணங்கொள் வேலவ னெடிதுவாழ்ந் திருந்தன னென்ப
பிணங்கு ருதநூன் முறையுளி யறமெலாம் பெருக்கி. 39

---

37. மன்னன் மனைவியாகிய வித்துருலதை முன்புள்ள மயக்கவுணர்வு நீங்கி நல்லுணர்வு பெற்ருள். அரசனுகிய தார்மிகன் அதனை நோக்கி மனத்திலே மகிழ்ச்சிகொண்டான். வா என்று அவளை அழைத்துக்கொண்டு மறுபடியும் காஞ்சிநதி தீர்த்தத்திலே சென்று விதிப்படி நீராடும்படி செய்தான்.

மம்மர் - மயக்கம். வம் என்று - வா என்று கூறி. மறுவலும் - மறுபடியும். விதியுளி - விதிப்படி.

38. பத்துகோடி பொன்னையும், இலக்கம் பசுக்களையும், ஆயிரம் குதிரைகளையும், நூறு யானைகளையும், பல ஆபரணங்களையும் அன்புசெய்யும் மெய்யன்பர்களுடைய அன்புக்கு எளிவரும் பட்டீசருக்குக் கொடுத்து, அடியார்களுக்கு வேண்டும் பொருள்களையெல்லாம் பலபடியாக அன்புடன் கொடுத்தான்.

இலக்கம் - நூறுயிரம். காமரு - விரும்பத்தக்க. கலன் - ஆபரணம். எளிவரும் - சுலபமாக எழுந்தருளும். பத்தர் - மெய்யன்பர். விசினன் - நிரையக் கொடுத்தான்.

39. பட்டீசரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு கொடிய வினையில் இருந்து நீங்கிய மனைவியாகிய வித்துருலதையுடனே பரந்த வயல்களால் சூழப்பட்ட பாண்டி நாட்டுக்குச் சென்று தார்மிகமன்னன் நெடுங்காலம் வாழ்ந்திருந்தான். மாறுபடாத நூல்களிலே விதிக்கப்பட்ட தருமங்களையெல்லாம் மிகுதியாகச்செய்து;

நாதர் - சிவபெருமான். கன்னிநாடு - பாண்டிநாடு. நிணம் - கொழுப்பு, மாமிசம். பிணங்குருத - மாறுபடாத.

பரவு நீற்றுமேட் டொளிர்பொடி பரித்தவர் தமக்குப்
பிரம ராக்கத மேயன்று பெயர்வது மலடும்
விரவு நோயும்வெவ் விடருந்தீ வினையுமே வுவன
வரநி லாவுபல் பொருள்களும் வானமும் வீடும். 40

துறந்த மாதவத் தீர்திரு மேட்டினிற் சுடருஞ்
சிறந்த பூதியின் மேன்மையைச் செப்பின மிப்பால்
அறந்த வாதவ ராற்றுறும் விசேடபூ சனையும்
உறந்து கேண்மினென் றுரைத்திடுஞ் சூதமா தவனே. 41

திருநீற்று மேட்டுப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 2196

---

40. யாவரானும் துதிக்கப்பெறும் நீற்றுமேட்டிலே விளங்கும் விபூதியைத் தரித்துக்கொண்டவர்களுக்கு பிரமராக்ஷஸ் மட்டுமல்லாமல் மலட்டுத்தன்மையும், நோய்களும், கொடிய துன்பமும், தீய வினைகளும் நீங்குவன. மேலான பல பொருள்களும், விண்ணுலக வாழ்வும், வீட்டின்பமும் வந்து பொருந்துவனவாம்.

பரவும் - துதிக்கும். பொடி - விபூதி. நீற்றுமேடு - பிரமன் யாககுண்டம். இடர் - துன்பம். மேவுவன - பொருந்துவன.

41. துறவொழுக்கத்திலே சிறந்த முனிவர்களே! திருமேட்டிலே விளங்கும் சிறந்த திருநீற்றின் சிறப்பை எடுத்துச் சொன்னோம். இனி, சிவபுண்ணியச் செயலினின்று தவறாதவர்களால் செய்யப்படும் விசேட பூசையையும் நன்றாகக் கேட்பீராக என்று சூதமாதவர் சொல்லுவாராயினர்.

துறந்த - துறவொழுக்கமுடைய; 'நடையருப் பெருந்துறவு' என்றபடி. சுடரும் - விளங்கும். பூதி - திருநீறு. அறந் தவாத - சிவபுண்ணியச் செயல் நீங்காத. உறந்து - நன்றாக.

முப்பத்தாறுவது

விசேட பூசைப்படலம்

சித்திரைத் திங்களிற் சேர்ந்த சித்திரை
ஒத்தபூ ரணையினு ரரவத் தொங்கலின்
அத்தனுக் கெண்ணெயா திகண்மிக் காட்டிநற்
பத்தியி னணியெலாம் பரிந்த ணிந்தரோ. 1

பல்வகை யன்னமும் பல்சிற் றுண்டியும்
பல்வகைக் கனிகளும் பண்பி னூட்டுவோர்க்
கல்வளர் வினையெலா மனுங்கு மேதக
நல்வினைப் பயனெலா நணுகு மென்பவே. 2

வேறு

இடப மதியிற் பூரணையி னியைந்த விசாகத் திருநாளிற்
கடிமிக் குயிர்க்கு முப்பழமுங் கனிவி னூட்டி யாவின்பால்
உடன்வெந் தெடுத்த நறுமாங்கா யூட்டி யிறைவன் பதந்தொழுவோர்
அடல்வல் வினைகள் புறங்கொடுப்ப வமல னுலகத் தினிதமர்வார். 3

---

1. சித்திரை மாதத்திலே வரும் சித்திரைநாளில் பூரணையிலே சிவபெருமானுக்கு எண்ணெய் முதலிய அபிஷேகப்பொருள்களைக்கொண்டு மிகுதியாக அபிஷேகம்செய்து மிக்க அன்போடு ஆபரணங்களால் அலங்கரித்து.

சித்திரை நாளோடு கூடிய பூரணைதிதி. பூரணை - பௌர்ணமி. அரவத் தொங்கல் - பாம்பாகியமாலை. அணி - ஆபரணம். பரிந்து - விரும்பி.

2. பலவாகிய அன்னவகைகளும், பலவகையான சிற்றுண்டிகளும், பலவகைப்பட்ட பழங்களும், தகுதியாக நிவேதனம்செய்வோர்களுக்குத் தீய வினைகள் எல்லாம் கெட்டொழியும். மேம்பட்ட நல்வினைப்பயன்கள் எல்லாம் வந்து பொருந்தும் என்பர்.

அன்னவகை: சுத்தான்னம், பாயசான்னம், எள்ளன்னம், சர்க்கரையன்னம், பயறன்னம் என்பன. இவைகள் முறையே ஒன்றற்கொன்று பலமடங்கு அதிகமான பலனுண்டு. தயிரன்னம், தேனன்னமும் மேலானவையே. அப்பவகைகள், வடை, அதிரசம், தேங்குழல் முதலிய சிற்றுண்டிகள். வாழை, மா, பலா, விளா, திராட்சை, கொய்யா, பேரிச்சை, மாதுளை முதலிய பழவகை.

3. வைகாசி மாதம் பூரணையோடு பொருந்தும் விசாக நாளிலே வாசனை மிகவுடைய முப்பழங்களையும் அன்புடன் அபிஷேகம் செய்து பசும்பாலிலே வேகவைத்து எடுத்த மாங்காயை நிவேதித்துப் பட்டீசருடைய திருவடிகளை

நறுநீர் சுற்றி னுறத்தேக்கி நாற்கான் மணிப்பொன் மண்டபத்தின்
உறுகா தலினுற் பெருவளங்க ளுறுத்தி யிறைவன் றனையிருத்திப்
பெறுநீர் மையினல் வசந்தவிழாப் பேசு மிடப மதியெடுத்தோர்க்
கிறுநோய் பலவும் பேரின்ப மெய்தும் போக மிடையடுத்தே. 4

மிதுன மதியிற் பூரணையின் விரவுங் கேட்டைத் திருநாளிற்
புதிய மணிமண் டபம்வட்ட மாகப் பொலிவித் ததின்முக்கட்
பதியை யிருவிப் பலபழமும் பாங்கி னுட்டி நிவேதிப்போர்
கதிர்செய் மௌலிக் கடவுளர்கள் கழல்கை கூப்புங் கதியடைவார். 5

உரைத்த வானித் திங்களினுத் திரத்தி னுமையாள் கணவனுக்கு
விரைத்த தயில முதற்பலவு மிதப்ப வாட்டி யலங்கரித்து
நிரைத்த பலநி வேதனமு நிவேதித் தினிது போற்றுவோர்
திரைத்தண் கடல்வை யகம்போற்றுந் தேவ தேவ னெனத்திகழ்வார். 6

வணங்குவோர் கொடிய வலிய வினைகள் நீங்கிச் சிவலோகத்திலே சென்று வசிப்பார்கள்.

இடபமதி - வைகாசி மாதம். கடி மிக்கு உயிர்க்கும் - வாசனை மிக வீசும். முப்பழம் - மா பலா வாழை என்பன. கனிவின் - அன்புடன். ஆவின்பால் - பசும்பால். அடல் - வருத்துகின்ற. புறங்கொடுப்ப - கெட்டோட.

4. பட்டீசரைச் சுற்றிலும் நல்ல தண்ணீரை நிறைத்து நாற்கால் மண்டபத்திலே அன்புமிக வளப்பத்துடனே இறைவரை எழுந்தருளப்பண்ணிச் சிறப்போடு வசந்தவிழாவை வைகாசி மாதத்திலே செய்தவர்களுடைய நோய்கள் பலவும் நீங்கும். போகங்களை நன்றாக அனுபவித்துப் பேரின்பம் அனுபவிப்பர்.

தேக்கி - நிறைவித்து. நோய் இறும் - நோய்கள் நீங்கும்.

5. ஆனிமாதம் பூரணையுடன் கூடும் கேட்டை நாளில் புதிய அழகிய மண்டபத்தை வட்டமாகச்செய்வித்து அதில் சிவபெருமானை எழுந்தருளச்செய்து பலவிதமான பழச்சாறுகளையும் இனிதாக அபிஷேகித்து நிவேதனம் செய்வோர் தேவர்கள் வணங்கும் முத்தியை அடைவர்.

மிதுனம் - ஆனி. முக்கட்பதி - மூன்று கண்களையுடைய சிவபெருமான். இருவி - இருத்தி. மௌலி - கிரீடம். கடவுளர் - தேவர்கள். பழச்சாறுகள் முன்னே கூறப்பட்டன.

6. சொல்லப்பட்ட ஆனித்திங்கள் உத்திரநாளில் உமையொருபாகருக்கு வாசனையுடைய எண்ணெய் முதலிய அபிஷேகங்களை மிகுதியாகச்செய்து அலங்காரம்செய்து பல நிவேதனங்களையும் முறையே நிவேதித்து இனிது பூசிப்பவர்கள் உலகத்தாரால் போற்றப்படும் தேவதேவன் என விளங்குவர்.

விரைத்த-மணந்தங்கிய. மிதப்ப - மிகுதியாக. நிரைத்த - வரிசையாயுள்ள.

ஆடி மதியிற் பூரத்தி லகில முயிர்த்த பார்ப்பதிதன்
தோடு விரிதா மரைப்பதங்க டொழுது வணங்கிப் பூசிப்போர்
பீடு விரியும் விழுச்செல்வம் பெருக வாழ்ந்து கடைநாளிற்
சேடு விரியு மவளுலகிற் சென்று போகந் திளைப்பாரால். 7

சிங்க மதியின் மூலத்திற் சிந்தை யினிது மகிழ்கூர
மங்கை யிடப்பா லமைத்தபிரான் மலர்த்தாட் கமலம் பூசித்துப்
பொங்கு சுவையி னறும்பிட்டுப் பொற்ப வூட்டுந் தவத்தினோர்
நுங்க வினைகள் பெரும்போக நுகர்வ ருலகம் புறக்கணித்தே. 8

கன்னி மதியின் வரையுயிர்த்த கன்னி மகிழப் பேரன்பான்
மன்னு நவராத் திரிபூசை மரபி னியற்று முறைமையோர்
நன்ன ருலகம் பணிகேட்ப நவைதீர் செல்வத் திடைமூழ்கி
முன்னுங் கதியி னினிதுறீஇ முடிவி லின்ப நுகர்வாரால். 9

---

7. ஆடிமாதம் பூர நாளில் உலகையீன்ற உமாதேவியின் தாமரைமலர் போன்ற திருவடிகளைத் தொழுது வணங்கி வழிபாடு செய்வோர் பெருமை பொருந்தும் மிக்க செல்வத்தோடு வாழ்ந்து, இறுதியில் உமாதேவியின் உலகத்திலே சென்று போகத்தை நுகர்வார்.

அகிலம் உயிர்த்த - உலகங்களைப் பெற்ற. பார்ப்பதி - பர்வதராஜனுடைய புத்திரி. தோடு - இதழ்கள். பீடு - பெருமை. திளைப்பார் - நுகர்வார், முழுகுவார்.

8. ஆவணிமாதம் மூலநாளில் மனமகிழ்ச்சி மிக உமாதேவியாரை இடப் பாகத்திலே கொண்ட சிவபெருமானுடைய திருவடித்தாமரைகளை வழிபட்டு மிகுந்த சுவையையுடைய பிட்டு நிவேதனம் செய்யும் தவத்தையுடையோர் வினைகளெல்லாம் தொலைய மிக்க போகத்தை அநுபவிப்பர்.

சிங்கமதி - ஆவணிமாதம். பொங்கு - மிக்க. பொற்ப - அழகாக. நுங்க - அழிய. உலகம் புறக்கணித்து - உலகபோகத்தை வெறுத்து.

9. புரட்டாதி மாதத்தில் உமாதேவியார் மகிழும்படி மிக்க அன்புடனே நிலைபெற்ற நவராத்திரி பூசையை விதிப்படி செய்யும் முறைமையையுடையோர் சிறந்த உலகத்திலுள்ளோர் யாவரும் ஏவலைக்கேட்டு நடக்குமாறு குற்றமில்லாத செல்வத்திலே அமிழ்ந்து நினைத்த முத்தியுலகத்திலே இனிமையாகப்பொருந்தி முடிவில்லாத இன்பத்தைப் பொருந்துவர்.

கன்னிமதி - புரட்டாதிமாதம். வரை - இமயமலை. நவராத்திரி - ஒன்பது நாட்கள். மரபின் - விதிப்படி. நன்னர் - நன்றாக. நவை - குற்றம். முன்னும் - நினைக்கும். கதி - முத்தி.

துலாவண் மதியிற் பூரணையிற் றூய வன்னங் கீற்றிளவெண்
நிலாவை முடித்த பொலஞ்சடில நிமலற் காட்டும் பெருந்தவத்தோர்
கலாவு மன்ன மொரோவொன்று தனக்குக் கற்ப மொரோவொன்று
குலாவு சிவலோ கத்தெய்திக் கோதி லின்ப நுகர்வாரால். 10

வருதேண் மதியிற் கார்த்திகைநாண் மல்கும் விழைவிற் பூசித்துக்
கருதார் புரங்க ணகைத்தெரித்த கடவுண் மகிழ விளக்கிடுவோர்
குருவார்ந் தினிய நறுநாற்றங் கொழிக்குஞ் சோதி யுருவினராய்
ஒருவா திமையோர் பணிகேட்ப வுயர்ந்த கதியி னுவப்புறுவார். 11

சிலைமா மதியின் வைகறையிற் றினமும் பூசை யியற்றுவோர்
தொலையா மலமுந் துமியவருட் டுறையிற் குளிப்ப ரம்மதியின்
நிலையா திரையி னெய்யாட்டி நிகரில் கலவை யினிதணிவோர்
அலையா தருளிற் கலந்தின்ப வாழி படிவ ரக்கணமே. 12

---

10. ஐப்பசிமாதம் பூரணையிலே தூய அன்னத்தைக்கொண்டு அபிடேகம் செய்வோர் கலந்த ஒவ்வொரு அன்னத்துக்கும் ஒவ்வொரு கற்பகாலம் சிவலோகத்தையடைந்து குற்றமில்லாத இன்பத்தை அநுபவிப்பார்.

துலாமதி - ஐப்பசி. அன்னம் ஆட்டும் - அன்னபிஷேகம் செய்யும். கீற்று இள வெண்ணிலா - வெள்ளிய பிறைச்சந்திரன். பொலம் சடிலம் - பொன் போன்ற சடை. நிமலன் - சிவபெருமான்.

11. கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நாளிலே நிறைந்த விருப்பத்தோடு பூசைசெய்து பகைவருடைய திரிபுரத்தைச் சிரித்தெரித்த சிவபெருமான் மகிழும்படி விளக்கிடுவோர் நிறம் பொருந்தும் இனிய நல்ல மணங்கமழும் சோதிவடிவுடையராய் நீங்காமல் தேவர்கள் ஏவல் கேட்கும்படி உயர்ந்த முத்தியில் இன்புறுவார்கள்.

தேள்மதி - கார்த்திகைமாதம். மல்கும் விழைவு-நிறைந்த விருப்பம். கருதார்- பகைவர். குரு - நிறம். ஒருவாது - நீங்காமல்.

12. மார்கழி மாதத்திலே விடியற்காலத்தில் நாடோறும் பூசைசெய்வோர் நீங்காத ஆணவமல வலிகுன்ற அருட்கடலிலே மூழ்குவார். அந்த மார்கழித் திருவாதிரை நாளிலே நெய்யினல் அபிஷேகம் செய்து ஒப்பில்லாத கலவைச் சந்தனத்தால் திருமேனிமுழுவதும் அப்புவோர் அசைவில்லாத திருவருளிலே கலந்து இன்பக்கடலிலே அக்கணத்திலே மூழ்குவர்.

சிலை - வில்; தனுர்மாதம். வைகறை - விடியற்காலம். மலம் - ஆணவ மலம். துமிய - வலிகெட. கலவை - கலவைச்சந்தனம்; குங்குமப்பூ, பச்சைக் கருப்பூரம், கோரோசனை, கஸ்தூரி, புழுகு, சவ்வாது, பனிநீர் இவைகளோடு கலந்த சந்தனச்சேறு. அலையாது - அசைவின்றி.

மகர மதியிற் பரியூர்ந்து வரதன் வரக்கண் டிறைஞ்சுவோர்
புகரில் பரியூர்ந் துயர்கதியிற் புக்குப் போக நுகர்கிற்பார்
பகரு மனைய மதிப்பூசம் பரமர் பாதம் பூசிப்போர்
துகண்முற் றிரிய மேலான துறக்க மாண்டு விடடைவார். 13

மாசி மகத்திற் சிவநிசியின் மழுமா னேந்தி மலர்ப்பாதம்
பூசை புரிவோர் தாம்வேட்ட போக முழுதுங் கைக்கொள்வார்
தேசு திகழ்பங் குனிமதியுத் திரத்திற் சிறந்த திருவிழா
ஆசை யுடன்சென் றேத்தினோ ரன்றே முத்தி பெறுகிற்பார். 14

வருடப் பிறப்பே மதிப்பிறப்பே வளரு மயன மோரிரண்டே
கருது முவாவே பதினான்கே கரிசில் பதின்மூன் றேயெட்டே
பொருவில் சோம வாரமெனப் புகன்ற விவற்றிற் பூசிப்போர்
திருகும் வினையின் றிருக்கறுத்துச் செயிர்தீர்ந் தருளி னினிதமர்வார். 15

---

13. தைமாதத்தில் குதிரை வாகனத்திலே ஊர்ந்து சிவபெருமான் எழுந்தருளுதலைத் தரிசித்து வணங்குபவர் குற்றமில்லாத குதிரையிலேறி உயர்ந்த கதியிற் சென்று போகங்களை அநுபவிப்பார்கள். சொல்லப்படும் அத் தைப் பூசத்திலே சிவபெருமானுடைய திருவடிகளைப் பூசிப்பவர்கள் குற்றம் முற்றும் நீங்க மேலான விண்ணுலகத்தை ஆண்டிருந்து வீட்டின்பத்தை அடைவார்கள்.

மகரமதி - தைமாதம். பரி - குதிரை. புகர்இல் - குற்றமில்லாத. அனைய மதி - அந்தத் தைமாதம். துகள் - குற்றம். முற்று இரிய - முழுவதும் கெட்டோட. துறக்கம் - விண்ணுலகம்.

14. மாசிமாதத்து மகநாளிலும், சிவராத்திரிகாலத்திலும், மழு மான்களைத் திருக்கரத்திலே தரித்த சிவபெருமானுடைய திருவடித்தாமரைகளிற் பூசைசெய்வோர் விரும்பிய போகமுழுவதையும் பெற்றுவாழ்வார். ஒளிவிளங்கும் பங்குனி மாதத்திலே வரும் உத்திரநாளில் நடைபெறும் திருவிழாவை அன்புடன்சென்று தரிசித்து வணங்குவோர் அப்பொழுதே முத்தியின்பத்தைப் பெற்றுவாழ்வார்.

சிவநிசி - சிவராத்திரி. மழுமானேந்தி: பெயர். வேட்ட - விரும்பிய. தேசு - ஒளி, புகழ்.

15. வருடப் பிறப்பு, மாதப் பிறப்பு, உத்தராயனதட்சிணாயனங்கள், அமாவாசியை, சதுர்த்தசி, திரயோதசி, அட்டமி, சோமவாரம் என்னும் புண்ணிய காலங்களிலே பூசைபுரிவோர் துன்புறுத்தும் வினைகளின் மாறுபாட்டை ஒழித்துக் குற்றந்தீர்த்து அருளிலே இனிமையுடன் பொருந்துவார்கள்.

அயனம் இரண்டு - உத்தராயனம் தட்சிணாயனம். உவா - அமாவாசியை. பதினான்கு - சதுர்த்தசி. பதின்மூன்று - திரயோதசி. எட்டு - அட்டமி. திருகும் - வருத்தும். திருக்கு - மாறுபாடு. செயிர் - குற்றம்.

மொழிந்த தினங்க டமிற்பூசை முடியா ரேனு முடித்தபயன்
பொழிந்து கருணை யுலாப்போதும் புனிதர் திருப்பங் குனிச்சாறு
விழைந்து பணிவோர் வினைமுழுதும் விளிய வினிது பெற்றேகித்
தழைந்த பெரும்போ கத்தழுந்தித் தலைவன் பாதந் தலைநிற்பார். 16

வென்று விளங்குங் கோமுனிவன் முதலா னோர்கள் விழைந்தெடுத்த
அன்று தொடங்கி யிதுகாறு மமலன் றிருப்பங் குனிச்சாறு
நன்று புரிந்து தரிசித்து நவைதீர் முத்தி யடைந்தோர்கண்
மன்ற வளவி னடங்கிடார் மணிவா ரிதிசூழ் வையகத்தில். 17

பட்டிப் பெருமா னினிதூரும் பசும்பொற் கொடிஞ்சிக் கூவிரத்தேர்
இட்டுத் தொடுத்த வடமமர ரெறுழ்த்தோ ளவுண ரிருபாலுந்
தொட்டுப் புவியோ ருருவினராய்த் துவன்றி யீர்ப்ப ரெனினன்பான்
ஒட்டித் திருப்பங் குனிவிழா வுவப்போர் பெருமை யுரைப்பாரார். 18

---

16. மேலே சொல்லிய புண்ணியகாலங்களிலே சென்று பூசனை செய்யாதவராயினும், முற்றிய பலத்தைக்கொடுத்து உமாதேவியாருடனே கருணையை மேற்கொண்டு திருவீதியில் எழுந்தருளும் சிவபெருமானுடைய பங்குனித் திருவிழாவை நன்கு விரும்பித் தரிசித்தோர்கள் வினைகள் முழுவதும் கெட்டொழிய நன்மைகளையெல்லாம்பெற்றுச் சென்று செழுமையான மிக்க போகநுகர்ச்சியில் மூழ்கிச் சிவபெருமான் திருவடிகளை அடையப்பெறுவார்கள்.

புனிதர் - சிவபெருமான். சாறு - திருவிழா. விளிய - அழிய. தலைவன் - உயிர்த்தலைவன்.

17. ஐம்புலன்களையும் வென்று விளங்கும் கோமுனிவர் முதலாயினோர் விரும்பிச் செய்த அன்று முதல் இன்றுவரையிலும் பட்டீசருடைய திருப்பங்குனி விழாவை நன்றாக நடத்தித் தரிசித்துக் குற்றமற்ற முத்தியைப்பெற்றோர் இந்தக் கடல் சூழ்ந்த நிலவுலகில், மிகுதியும் அளவிட்டு அறிவதற்கு அருமையானவர்கள்.

விழைந்து - விரும்பி. எடுத்த - நடாத்திய. அமலன் - சிவபெருமான். பங்குனிச்சாறு - பங்குனித்திருவிழா. நவை-குற்றம். மன்ற - மிகுதியும். வாரிதி - கடல். மணி வாரிதி – நீலக்கடல்; மணிகளையுடைய வாரிதி எனினுமாம்.வையகம்- உலகம்.

18. பட்டீசர் விரும்பி இனிமையாக ஊர்ந்து செல்லும் பசிய பொன்னலாகிய கொடிஞ்சியையுடைய தேரிலேபூட்டிவிட்ட வடத்தைத் தேவர்களும், வலிய தோள்களையுடைய அவுணர்களும் இரண்டு பக்கத்திலும் பிடித்து நிலவுலகிலுள்ள மக்கள் உருவமுடையவராய்த்தோன்றி இழுத்துச்செல்வார்களாயின் அன்பினலே மனம் ஒருப்பட்டவராய்த் திருப்பங்குனி விழாவைத்தரிசித்து மகிழ்கின்றவருடைய பெருமையை யாவர்தாம் சொல்லவல்லவராவார்.

வேறு

மரகத வல்லி பங்கன் மான்மியந் தெரிக்கு மிந்தப்
புரவருள் புராணந் தன்னைப் பூசிப்போர் படிப்போர் கேட்போர்
உரிமையிற் பொருள்க ளாய்வோ ருவப்புறத் தெரிப்போ ரெல்லாம்
விரிபுகழ்ச் சிவலோ கத்தின் மேவியா னந்தந் துய்ப்பார். 19

வடித்தினி தெடுத்த பேரூர் வள்ளலார் புராணந் தன்னைப்
படிப்பவர்க் கன்னஞ் செம்பொன் பரிகரி சிவிகை மற்றுங்
கொடுப்பவர் வெறுக்கை யென்றுங் குறைவில ராகி வாழ்ந்திங்
கடுத்துயர் சிவலோ கத்தி னரும்பெரும் போகந் துய்ப்பார். 20

பிப்பில வனத்தெஞ் ஞான்றும் பேரருள் வழங்கி வைகும்
ஒப்பறு பட்டி நாதர்க் குவப்பொடு சிறப்புச் செய்வோர்க்
கெப்பெரும் பயன்க ளுண்டா மப்பெரும் பயன்க ளுண்டாஞ்
செப்பிய புராணந் தன்னிற் சிறப்பினி தியற்று வோர்க்கே. 21

கொடிஞ்சி-தாமரைப்பூவடிவமாகப்பண்ணித் தேரின் முன்னே நடப்படுவ தோர் உறுப்பு; கொடுஞ்சி எனலுமாம்: 'தாமரைப் பூவாகப்பண்ணித் தேர்த் தட்டின் முன்னே நடுவது' என்பர். (மதுரைக்காஞ்சி: 752.) கூவிரத்தேர்: கொடுஞ்சியாகிய கூவிரம் என்க.

19. மரகதவல்லி அம்மையாரைப் பக்கத்திலேயுடைய பட்டீசரது பெருமையைத் தெரிவிக்கும் இந்தப் புராணத்தைப் பூசை செய்வோரும், படிப்போரும், படிக்கக் கேட்போரும், உரிமையுடன் நூற்பொருளையும் நூலாற் சொல்லப்படும் பொருளையும் ஆராய்ச்சி செய்வோரும், மனமகிழ்வுடன் அதனைத் தெரிவிப்போரும் ஆகிய யாவரும் விரிந்த புகழையுடைய சிவலோகத்திலே பொருந்தி ஆனந்தத்தை அனுபவிப்பார்கள்.

பங்கன் - பாதியிலுள்ள சிவபெருமான். மான்மியம் - பெருமை; மகாத்மியம். தெரிக்கும்: விவ்விகுதி தொக்கது. புரவு அருள் - பாதுகாக்கும். புராணம் - பழைய வரலாறு. துய்ப்பார் - அனுபவிப்பார்.

20. வடித்தெடுத்த பேரூர்ப் பட்டீசரது புராணத்தைப் படனஞ்செய்வோருக்கு அன்னமும் சொன்னமும் பரியும் கரியும் சிவிகையும் மற்றுமுள்ள பொருள்களும் வழங்குவோர் என்றும் செல்வம் குறைவில்லாதவராய் வாழ்ந்திருந்து பின் உயர்ந்த சிவலோகத்திற் சென்று பெறுதற்கரிய பெரிய போகத்தை அனுபவிப்பார்கள்.

பேரூர் வள்ளலார் - பட்டீசர். சிவிகை - பல்லக்கு. மற்றும் - மற்றுள்ள கவிகை, சின்னம், பரிசனம் முதலியனவும். வெறுக்கை - செல்வம். இங்கு அடுத்து - இவ்வுலகத்திலே பொருந்தி. அரும்பெரும் போகம் - சிவபோகம்.

21. அரசவனத்திலே எப்போதும் மிகுந்த அருளைவழங்கி வீற்றிருக்கும் ஒப்பில்லாத பட்டீசருக்கு மனமகிழ்ச்சியுடன் சிறப்புச்செய்வோர்களுக்கு எல்லாப் பெரும் பயன்களும் உண்டாகும். அதுபோலவே பட்டீசருடைய சிறப்புக்களை

எனமகிழ் சிறப்பச் சூத முனிவர னியம்பக் கேட்டு
நனிதவ முழந்து வேட்கு நைமிச வனத்தோ ரெல்லாங்
கனிவொடு மிறைஞ்சிப் போதிக் கடிவரைப் பமர்ந்த முக்கண்
அனகன தருளை யுன்னி யானந்தந் திளைத்து வாழ்ந்தார். 22

மன்னிய போதி வைப்பின் வதிந்தெனை யீர்த்து மூவாத்
தன்னையென் ஞுவாற் பாடித் தமியனேன் றனையு மாண்ட
முன்னவ ளுதி நாதன் முக்கணெம் மானை யல்லாற்
பின்றெரு தெய்வந் தன்னைப் பேசுமோ வெனது செந்நா. 23

யெல்லாம் எடுத்துச்சொல்லும் புராணத்தை இனிதாகச் செய்வோருக்கும் அப்பெரும் பயன்களெல்லாம் உண்டாகும்.

பிப்பிலவனம் - அரசவனம். எஞ்ஞான்றும் - எப்பொழுதும். பட்டிநாதருக்குச் சிறப்புச்செய்வோருக்கு எப்பெரும் பயன்கள் உண்டாம் அப்பெரும் பயன்களெல்லாம் புராணத்திற் கூறப்படும் சிறப்புக்களை இயற்றுவோருக்கும் உண்டாம்.

எனவே, புராணத்துக்குச் செய்யப்படும் சிறப்புக்கள் எல்லாம் பட்டீசருக்குச்செய்யும் சிறப்புக்களாம் என எண்ணுக என்க.

22. என்று மகிழ்ச்சிமிகச் சூதமுனிவர் கூறியருளக்கேட்டு மிக்கதவத்தை வருந்திச்செய்யும் நைமிசமுனிவர்கள் யாவரும் மிகுந்த அன்புடன் வணங்கி அரசவனத்திலே எழுந்தருளியுள்ள மூன்று கண்களையுடைய சிவபெருமானுடைய திருவருளை நினைந்து ஆனந்தத்திலே முழுகி வாழ்ந்திருந்தனர்.

முனிவரன் - முனிகளிற் சிறந்தோன். உழந்து - வருந்தி. போதி கடிவரைப்பு. அனகன் - பாவமில்லாதவன். உன்னி - தியானித்து. திளைத்து - மூழ்கி.

23. நிலைபெற்ற அரசவனத்திலே வீற்றிருந்து எளியனுகிய என்னையும் வலிந்து இழுத்து, அழிவில்லாத தம்மை என்னுடைய நாவினலே பாடுவித்துப் பற்றுக்கோடில்லாத என்னையும் அடிமையாகக் கொண்டருளிய முழுமுதற்கடவுளாகிய ஆதிநாதர் என்னும் மூன்று கண்களையுடைய சிவபெருமானை அல்லாமல் என்னுடைய செவ்விய நாவானது வேறொரு தெய்வத்தைப் புகழ்ந்து கூறுமோ? கூறாது.

மன்னிய - நிலைபெற்ற. போதிவைப்பு - போதிவனமாகியவைப்பு: வைப்பு - இடம், தலம். மூவா - இறவாத: மூவாத்தன்னை - மூத்தல் முதலிய இல்லாத தன்னை. "மூவா முதலா" என்னும் சீவகசிந்தாமணி முதற்செய்யுளில் உச்சிமேற் புலவர் கொள்ளும் நச்சினர்க்கினியர் உரைத்த உரைப்பகுதியாலறிக. 'மூவாத் தன்னை என்னுவாற்பாடி' என்ருர், இறைவனுயர்வும் ஆன்மாவாகிய தன்னிழிபும் நோக்கி: இதனைக் 'கூசி' என்பர் பெரியோர். 'தமியேன்றனையும்' என்ருர் 'பற்று மற்றெனக்கின்றி' எனக்கருதி. பாடி - பாடுவித்து. 'முக்கண் எம்மானையல்லால், பின்றெரு தெய்வந்தன்னைப் பேசுமோ எனது செந்நா' என்ருர். திருவிசைப்பா: கோயில்: "இணங்கிலா ஈசன்" என்று தொடங்கும் திருமாளிகைத்தேவர்

மாமறை முனிவர் வாழ்க மரகத வல்லி யோடும்
பாமலி புலவர் போற்றும் பட்டிநா யகனுர் வாழ்க
காமரு வெள்ளி மன்றிற் கண்ணுத னடனம் வாழ்க
கோமனு நீதி வாழ்க குவலய முழுதும் வாழ்க. 24

விசேட பூசைப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 2220

பேரூர்ப்புராணம் மூலமும், பொழிப்புரை குறிப்புரைகளும் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்

அருளிய பதிகமுழுவதும் நோக்கி அறிக. 'எனது செந்நா' என்ற நயம் ஊன்றி யூன்றி உணர்ந்து உய்தற்குரியது.

24. சிறந்த வேதங்களை யோதும் முனிவர்கள் வாழக்கடவர். மரகதவல்லி அம்மையாரோடு பாமலிந்த புலவர்களால் போற்றப்படும் பட்டீசர் வாழக்கடவர். விரும்பத்தகுந்த வெள்ளியம்பலத்திலே செய்தருளும் சிவபெருமானுடைய திருக்கூத்து வாழக்கடவது. அரசனுடைய மனுநீதி வாழக்கடவது. உலகமுழுவதும் வாழக்கடவது.

மாமறை முனிவர் - அந்தணர். முனிவர் - மனசிலர். பாமலி புலவர் என்றது தேவார முதலிகள் மூவரையும்.

உ

செய்யுள் முதற்குறிப்பகராதி

[எண் - பக்க எண்]

செய்யுள் முதற்குறிப்பகராதி முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மேலைச்சிதம்பரமாகிய

பேரூர்ப்புராணச் சுருக்க வசனம்

---

1. நைமிசப்படலம்

நைமிசவனத்திலே, யாகங்கள் செய்து, சித்த சுத்தி பெற்றிருந்த சௌனகர்முதலிய முனிவர்கள் மாட்டு, சூதமுனிவர் வர, அவரை அம்முனிவர் குழாங்கள் வணங்கி "முன்னொரு காலத்திலே, பிரமாண்ட புராணத்துள் கௌமார சங்கிதையில், குமாரகண்டத்தில், பேரூர் மான்மியத்தை அருளிச் செய்தீர். அம்மான்மியத்தை மீண்டும் கேட்க விரும்புகின்றேம்'' என்று விண்ணப்பஞ்செய்ய, சூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

2. புராண வரலாற்றுப்படலம்

திருக்கயிலாயமலையிலே உமாதேவி சமேதராக எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் மாட்டு, துவிதிய சம்பு என்று பிரதிபாதிக்கப்படும் திருநந்தி தேவர் பண்டைக்காலத்தே பதினெண்புராணங்களும் கேட்டு வருங்கால், ஒரு தினத்திலே அச்சிவபெருமான் திருவடிக்கமலங்களைப் பேரன்போடு வணங்கி 'சுவாமீ! தேவரீர் எழுந்தருளியிருக்கும் தலங்களில்' இத்திருக் கயிலாயத்துக்கு ஒப்பாகிய மகிமை உடையது எதுவென்று விண்ணப்பஞ் செய்ய, அதற்குச் சிவபிரான் "உத்தர கயிலாயம், தக்ஷிண கயிலாயம், மத்திய கயிலாயம் என்னும் மூன்றும் ஒத்த சிறப்பினையுடையனவாயினும் சுத்தோதக சமுத்திர தீரத்திலுள்ள உத்தரகயிலாயமும் இம்மத்திய கயிலாயமும் தேவர் முனிவர்கட்கன்றி மற்றையோர்க்கு எளிதில் அடைதற்கு அரியனவாதலால், பேரூரென்னும் தக்ஷிண கைலாயமே யாவருஞ்சென்று, எளிதில் போக மோக்ஷங்களை அடையத்தக்கது'' என்று அதன் மகிமையைத் திருநந்தி தேவருக்குத் திருவாய் மலர்ந்தருளினர். அவர் முகமாக உணர்ந்த முருகக் கடவுள் நாரதமுனிவருக்கும், அவர் வியாசமுனிவருக்கும், அவர் எனக்கும் அம்மகிமையை அருளிச்செய்தார்.

3. நாரதன் வழிபடு படலம்

குமாரக்கடவுள்மாட்டு உணர்ந்த நாரதமுனிவர் கொங்கநாட்டின் கண்ணதாகிய பேரூரிற்சென்று, வெள்ளியங்கிரியில் ஏறி, சிவலிங்கப்பெரு மானையும், உமாதேவியாரையும், விநாயகக்கடவுளையும், முருகக்கடவுளையும் தரிசித்து, நேசித்துப் பூசித்து, கீழே இறங்கி, அம்மலைச்சாரலின் மேலைத் திசையில் இருக்கின்ற ஆலயத்தையும், மற்றை ஆலயத்தையும் அடுத்து,

சுவாமி தரிசனம் செய்து, பின்பு அரசம்பலவாணரையும் தரிசித்தார். அதன் மேல், காஞ்சிநதி தீரத்தில், சிவலிங்கம் தாபித்து, ஒரு தீர்த்தமுண்டாக்கி, அந்நீரை அபிஷேகித்து, ஆராதனஞ் செய்தனர். நாரதர் ஆலயத்திற்கு நாரதேச்சுவரமென்றும், தீர்த்தத்திற்கு நாரததீர்த்தம் என்றும் பெயர்.

4. காலவன் வழிபடுபடலம்

காசிபமுனிவர் புத்திரராகிய காலவமுனிவர் சிவபுண்ணியமேலீட்டினால் இருவினையொப்பும் மலபரிபாகமும் சத்திநிபாதமும் உற்று, பாசத்தையும், பாசத்தையுடைய பசுவையும், பசுவுக்குப் பதியாகிய சிவபிரானையும் தமது மதி நுட்பத்தினாலே ஆராய்ந்து, பதியை அடைதற்குரிய நெறி சிவலிங்க உபாசனையே என்றும், அவ்வுபாசனை எளிதில் கைகூடுதற்குரிய தலம் பேரூரே என்றும் உணர்ந்து, அத்திருப்பதியை அடைந்து, காஞ்சிநதியில் மூழ்கி, சுவாமி தரிசனஞ்செய்து, அவ்வாற்றங்கரையில் சிவலிங்கப்பிரதிட்டை செய்து, ஒரு தீர்த்தம் அகழ்ந்து, அந்த ஜலத்தை அபிஷேகித்து அருச்சனை புரிந்து, தினந்தோறும் ஸ்ரீ பஞ்சாக்ஷரம் பதினையாயிரம் உரு ஜபித்து வந்தார். இங்ஙனம் பதினாயிரவருஷம் தவஞ்செய்யுமளவில், அவ்வருட்குறியினின்று சிவபிரான் தோன்ற, அவரைக் காலவமுனிவர் வழிபட்டு, வரங்கள்பெற்று, தீக்ஷையுற்று, சித்தாந்த மகாவாக்கியோபதேசம்கேட்டு, சிந்தித்து, தெளிந்து, நிட்டைகூடி, வெள்ளியம்பலத் திருக்கூத்தையும் தரிசிக்க விரும்பி இருந்தனர். காலவமுனிவர் ஆலயத்திற்குக் காலவேச்சுரம் என்றும், தீர்த்தத்திற்குக் காலவதீர்த்தம் என்றும் பெயர். அவ்வாலயம் பட்டீசர் ஆலயத்திற்கு ஈசானதிக்கில் உள்ளது.

5. காமதேனு வழிபடுபடலம்

சுவாயம்பு மனுப்பட்டத்தில், சகரனென்னும் அரசன் ஆட்சிபுரியுங்கால் பிரமதேவர் பிரஜைகளைப் படைக்கும்வண்ணம் எண்ணி, சிவயோகத்தில் இருந்தபொழுது, தீயூழினால் நித்திரை செய்தனர். அதனை இந்திராதி தேவர்கள் முகமாக உணர்ந்த விஷ்ணுமூர்த்தி காமதேனுவை நோக்கி, "நீ தவம்புரிந்து சிவபிரான் திருவருள்பெற்று, சிருட்டித்தொழில் செய்வாயாக" என்றபோது, காமதேனு இமையமலையை எய்தி, ஆயிரம் தேவ வருடம் அருந்தவம் புரிந்தும் சிவபெருமான் அருளாமைபற்றி கவலையுற்றிருக்கும் காலத்து, நேர்பட்ட நாரதமுனிவர் ஏவுதலால் அதிரகசிய ஸ்தலமாகிய ஆதிபுரியை அடுத்து, காஞ்சிநதியில் வாஞ்சையோடு முழுகி, அசரீரிவாக்கின்படியே ஆதிலிங்க மூர்த்தியின்மீது தனதுபாலைப்பொழிந்து, பூசித்துக்கொண்டிருந்தது.

6. குழகன் குளப்புச்சுவடுற்ற படலம்

அங்ஙனம் * பட்டியிட்டு வழிபட்டு வரும்போது, ஒருநாள் காமதேனு முன்பகலிலே, சிவபூசைசெய்து, சிவயோகத்திலிருந்தது. அப்பொழுது

* பட்டி = தொழு.

சூரியன் மறைந்து சந்திரன் உதயமான காலத்தில் அக்காமதேனுவின் கன்றானது விளையாட்டினால் அண்டங்கள் குலையும்படி அலைத்து, அண்ட நாயகராகிய ஆதிலிங்கமூர்த்தி அருமைத் திருமேனியை மறைத்திருந்த மேரு மலையாகிய புற்றினை ஓரடியினால்மிதித்தது. அவ்வடி திருமுடியிலே அழுந்திப் பெயர்க்கக் கூடாமையினால், கொம்புகளாற்குத்தி அப்புற்றை உடைத்தது. கொம்புகளே அன்றிக் காற்குளம்பு ஆதிலிங்கேசர் திருமுடியில் உதிரம் பெருக அழுந்தியதனால் அக்குழகர் குளப்புச்சுவட்டினை உற்றருளினர். பின்பு காமதேனு சூரியோதய காலத்தில், அவ்விடத்தே வந்து, நிகழ்ந்தவற்றை உணர்ந்து, கவன்று, “என் இளங்கன்றினால், நான் பேரபராதி ஆயினேன்” என்று வருந்துகையில், சிவபிரான் இடபாரூடராய் எழுந்தருளி, “உனது இளங்கன்றின் விளையாட்டினால் உற்றதைக் குற்றமாக உள்ளத்திற் சற்றும் பற்றிலோம். நமது உமாதேவி முலைத்தழும்பும், வளைத்தழும்பும், மார்பி னிடத்தே போல, முடியின் கண்ணே குளப்படிச்சுவடும் கோட்டுச்சுவடும் குதூகலத்தோடு கொண்டருளினோம்” என்றும், ‘உனது கருத்துப்படி இப்போது பத்தியும், பின்னர் நடன தரிசனமும் முடிவில் முத்தியும் தந்தருளுவோம்’ என்றும், ‘நீ வழிபட்டுத் தங்கியபடியால் இந்தப் பேரூர் காமதேனுபுரி, பட்டிபுரி என்னும் பெயர்கள்பெற, பட்டிநாதர் என்னும் நாம தேயத்தை நாமும் பெற்றோம்’ என்றும் திருவாய் மலர்ந்து, இது முத்தித் தலம் ஆதலால் நீ கருதிய சிருட்டித் தொழிலைப்பற்றி, வஞ்சி க்ஷேத்திரத்தில் அநுக்கிரகிப்போம் என்றனர். அவ்வாறு காமதேனு வஞ்சித்தலத்திற் சென்று, வரம்பெற்றுச் சிருட்டித் தொழிலைச் செய்தது.

7. தென்கயிலாயப்படலம்

கீழைச் சிதம்பரம் என்னும் க்ஷேத்திரத்தில், சிவபெருமான் தன் அருட் சத்தியாகிய உமாதேவியார் காண, மேலைச்சிதம்பரம் போல ஆனந்த தாண் டவம் செய்தருளுவர். அத்திருநடனத்தைத் தரிசிக்கும்படி, சிவபிரானது ஆக் ஞையினால், வியாக்கிரபாதமுனிவர் கீழைச் சிதம்பரத்திற்சென்று, பத்தியினால் வழிபாடுகள்செய்து சிவயோகத்திற்பயின்று வதிந்தார். அப்போது கர்மமே கர்த்தா என்னும் கொள்கையுடைய தேவதாரு வனத்து முனிவர்களைத் தடுத் தாட்கொள்ளும் வண்ணம், சிவபிரான் பிக்ஷாடனமூர்த்தியாக அம்முனிவர்க ளுடைய பத்தினிகளிடத்தே சென்று கற்புநிலையைக் கலக்கியும், சிவாக்ஞைப் படி விஷ்ணுமூர்த்தி, மோகினிமாதாகி, அம்முனிவர்கள் தவநிலையை அவ நிலையாக்கியும் அவ்விருடிகள் கருவபங்கம் ஆனபின்பு அவ்வனத்தின் கண்ணே சிவபிரான் திருநடனம்செய்தருளினர். அந்நிருத்தத்தைத் தரிசித்த திருமால், ஆதிசேடன்மீது சயனித்து, ஒருதினம் விழிக்குங்காலையில், கண் களினின்றும் ஆனந்த பாஷ்பம் பொழியவும், உடல்முழுதும் உரோமாஞ் சிதம் கொள்ளவும், பேரன்போடு சங்கர சங்கர என்று ஆரவாரித்தனர். அப்பொழுது ஆதிசேடன் அடுத்து, வினவியதற்கு விஷ்ணுமூர்த்தி, தேவ தாருவனத்தில் நிகழ்ந்த நிருத்த தரிசனத்தைக் குறிப்பித்த அளவில், அந்த நிருத்தத்தைத் தரிசிக்கும் பொருட்டு, ஆதிசேடன் ஆசைகூர்ந்து விடை பெற்று மேரு மலையைச்சார்ந்து தவஞ்செய்ய, அதற்கு எதிர்வந்து, தில்லை

அம்பலத்தைச் சேரும்வண்ணம் சிவபிரான் அருள்புரிய, அவ்வாறு அத்திரி முனிவர் பத்தினியாகிய அனசூயையைமாட்டு, பதஞ்சலிமுனிவராக அவதரித்து, தில்லைப்பதியில், வியாக்கிரபாத முனிவரோடு கூடி, பஞ்சகிருத்திய திருநிருத்தத்தைத் தரிசித்திருந்தனர். அச்செய்தியை அறிந்த திருமால் திருக்கயிலாய மலையைச்சேர்ந்து, சிவபெருமானைத் திரிகரணங்களாலும் சேவித்து, தில்லைச் சிற்றம்பலத் திருநடன தரிசனத்தின் பேரவாவைப் பெரிதும் விண்ணப்பம் பண்ணினர். அதற்குத் திருக்கயிலாயபதி, "விராட்புருடனுக்கு இருதயத் தானமாகிய கீழைச் சிதம்பர நடன தரிசனத்தைப் பதஞ்சலி வியாக்கிரபாதர் பொருட்டுச் சுதந்திரமாக்கினோம். ஆகையால் தக்ஷிண கயிலாயமாய் விராட் புருடனுக்கு விந்து ஸ்தானமாயுள்ள மேலைச் சிதம்பரநடன தரிசனத்தைக் காலவமுனியும் காமதேனுவும் கருதியிருத்தலானும், நீயும் கோமுனியாய், பேரூரைச் சார்ந்திருப்பாயாகின், அங்கே வெள்ளியம்பலத்தில் திருநடனஞ் செய்து காட்டுவோம்" என்று விஷ்ணுவுக்கு விடைகொடுத்தருளினர்.

உடனே விஷ்ணு கோமுனியாய், மரவுரியுடுத்து, சடைமுடிதரித்து திருநீறுங் கண்டிகையும் அணிந்து, திருவைந்தெழுத்தைச் சிந்தித்துக் கொண்டு, ஆதிபுரியை அடுத்து, காஞ்சிநதியில் விதிப்படி நீராடி, மலைமீது சென்று, சுவாமியையும் அம்மையையும் தரிசித்து, கீழே இறங்கி மற்றைய ஆலயங்களையும் இரசதசபையையும் தரிசித்து, பின்னர்ச் சிவபெருமான் திருக்கோயிலுக்குத் தென்திசையிலே தென்கயிலாயமென்று திருநாமமிட்டு, ஓராலயம் நிருமித்து, சிவலிங்கப் பிரதிட்டை செய்து, சக்கரதீர்த்தம் எனப் பெயரிய ஒரு தீர்த்தம் அகழ்ந்து, அந்நீரை அபிஷேகித்துச் சிவாகம விதிப்படி சிவாராதனம் செய்து காலவ முனிவரோடு கலந்து சிவயோகத்தில் இருந்தனர்.

8. வடகயிலாயப்படலம்

அங்ஙனம் திருமால் தவம்புரியும்போது, பிரமா நித்திரை நீங்கி, நித்திய கர்மங்களை நிறைவேற்றி, உலகத்தைப் படைக்கத் தொடங்கிய அளவில், வேதங்களின் முறையை மறந்தமையால் அத்தொழில் கைகூடப்பெற்றிலர். "ஐயையோ, இதற்காகவோ சிவயோகம் பயிலும்போது துயில் உண்டாகியது" என்று பிரமா வருந்தி மத்திய கயிலாயமலையைச் சார்ந்து, தேவ தேவரை வணங்கி, சிறியேன் பிழையைப் பொறுத்தருளவேண்டும் என்று விண்ணப்பஞ்செய்ய அதற்கு மகாதேவர், "தக்ஷிண கயிலாயமாகிய பேரூரில் அரசவிருக்ஷ மூலத்தின் கண்ணதாகிய இரசத சபையிலே நமது தாண்டவத்தைவேண்டி, விஷ்ணு கோமுனிவனாகிக் காலவமுனிவனோடுகலந்து தவம் செய்கின்றான். காமதேனு வழிபட்டமையால் நமக்குப்பட்டிநாதர் என்னும் நாமதேயமும் உண்டு. ஆகையால் நீ பட்டிமுனியாய் அத்தலத்தே சென்று, பத்தி செய்வாயாகில், நமது நடனத்தையும் கண்ணுற்று எண்ணுற்ற வரம் பெறலாம்" என்று திருவாய் மலர்ந்தருளினர். பிரமதேவர் உடனே விடை பெற்று, திருவைந்தெழுத்தைச் சிந்தித்துப் பட்டிமுனியாகி, தண்டு கமண்டலங்களைத் தாங்கி, விபூதி உருத்திராக்ஷதாரணம் செய்து, குழந்தை உளத்தோடு தவசித்திபுரத்தைச் சார்ந்து, காஞ்சிநதியில் மூழ்கி, சிவபிரானை

வணங்கி, பன்னீர்மரத்தடியிலே குடிகொண்டருளும் மூலலிங்க மூர்த்திக்கு உத்தரதிக்கிலே தமது கமண்டலத்தைத் தீர்த்தமாக இருத்தி, சிவலிங்கப் பிரதிட்டைசெய்து, அபிஷேகித்து, அருச்சித்து, வெள்ளியம்பலத்தையும் தரிசித்து, காலவமுனிவர் கோமுனிவர் இருவருடன் மருவி இருக்குங்கால், காஞ்சிநதியின் வடதிசையில் முத்தியைத்தரத்தக்க ஒரு யாகம் வளர்த்து, சிவ பெருமான் திருவுளம் களிகூரும்படி முற்றுவித்தார். பிரமதேவர் ஆலயத் திற்கு வடகயிலை என்றும், தீர்த்தத்திற்குப் பிரமதீர்த்தம், குண்டிகைதீர்த்தம் என்றும், யாககுண்டத்திற்குத் திருநீற்றுமேடு என்றும் பெயர்.

9. நிருத்தப்படலம்

பேரூரிலே காலவமுனிவர் முதலியோர் சிவபிரான் திருநடனத்திற் காகக் குறித்த காலத்தையே நாடிக்கொண்டிருந்தனர். இருக்கும்பொழுது காலவேச்சுரத்தில் அரசடியில் வெள்ளியம்பலம் உள்ளதாகச் சிவபெருமான் அருளியபடி, அதனைக் காணப்பெற்றிலேன் என்று கோமுனிவர் தியானித் தார். அக்காலையில், "பழைய அம்பலத்தைப் பரமசிவன் மறைத்தபடியால் அவ்விடத்தே ஒரு சபையும் அதிலே நடராஜர் திருவுருவும் அமைத்து வழி படுவாயாக" என்று ஒரு அசரீரி வாக்கு எழுந்தது. உடனே கோமுனிவர் விசுவகம்மியனை வருவித்தும், சபை நிருமிக்கும் இடம் புலப்படாது திகைத் திருக்கும்போது, சிவபிரான் சித்தராகத் திருவுருக்கொண்டு பற்பல அற்புதங் களைச் செய்தருளினர். அவர்மாட்டு, கோமுனிவர் முதலிய மூவரும் அடுத்து, வினவி, சிவபெருமான் திருநடனஞ் செய்கின்ற திருச்சபையைத் தெளிவிக்க வல்லீராயின், நீவிரே முற்றுணர்ந்த பெற்றியர் எனச்சொல்லிய அளவிலே, சித்தேசர் ஆதிலிங்கமூர்த்திக்கு வடகிழக்கில் திரிமூர்த்தி உருவமான அரசடி நீழலில் வந்து, இரசதசபை எழுக என்று ஆக்ஞாபித்தனர். உடனே வெள்ளியம்பலம் பொள்ளென எழுந்தது. அப்பொழுது தேவர்கள் கற்பகப் பூமாரி பொழிந்தனர். பொழிந்தபோது கோமுனிவர் முதலியோர் சித்த மூர்த்தியை வணங்கி, "தேவரீர் செய்தருளிய தெய்வ சபைக்கு ஏற்பத் தேவர்பிரான் திருவுருவம் செய்தருளுவீராக என்றகாலையில், சித்தேசர் திருவுளம் மகிழ்ந்து, திருச்சபையைச்சூழத் திரைகோலச்செய்து அதனுள்ளே ஒரு முகூர்த்தமளவும் அமர்ந்து, இரண்டாம் முகூர்த்தத்திலே திரையோடு சித்தேசர் அந்தர்த்தானமாயினர். பின்பு திருநடராசர் திருவுருவோடு சிவகாமியம்மை திருவுருவையும் அத்திருச்சபையிலே கோமுனிவர் முதலிய மூவரும் தேவர்கள் யாவரும் தரிசித்தனர். பின்னர் அம்முனிவர்கள் மூவரும் சிவாகமவிதிப்படி சம்புரோக்ஷணம் செய்து ஸ்ரீ ஞானநடராஜரோடு சிவகாமி அம்மையையும் தினந்தோறும் ஆறுகாலமும் ஆராதனஞ்செய்து வந்தனர்.

இங்ஙனம் நிகழுங்கால், விசுவகம்மியனால் ஆலயங்கள் அமைத்து, பஞ்சமூர்த்திகளையும் பரிவார தேவதைகளையும் பிரதிட்டைபண்ணி, திரு விழாச் செய்யத் தொடங்கி, பங்குனி மாதத்துப் பூருவபட்சத்து சஷ்டியோடு கூடிய கார்த்திகை நக்ஷத்திரத்தில் துவஜாரோகணஞ்செய்து ஒன்பதாம் நாள் இரதோற்சவம் நடாத்தி, பத்தாம்நாள் உத்திரத்தன்று இரசதசபைக்கு

எதிரிலுள்ள மண்டபத்திலே அனைவரும் நிற்க, கோமுனிவர் முதலிய மூவரும் அருகில் நிற்ப, நாரதமுனிவரும் தும்புருமுனிவரும் வீணாகானம் செய்யவும், அகத்திய மகாமுனிவரும் ஆனந்திமுனிவரும் தாளம் ஒத்தவும், மந்து நாதரும் நந்திபெருமானும் மத்தளம் முழக்கவும், திருத்தொண்டர்கள் சிரமீது திருக்கைகளைக்கூப்பி 'ஹர ஹர' முழக்கம் செய்யவும், தமது திரு மேனியின் ஒரு பாகத்திலே, உமாதேவியார் அமர்ந்திருக்கவும், ஒரு கையில் உடுக்கை ஒலிக்கவும், ஒருகையில் அக்கினிவிளங்கவும், ஒருகை வரதமாகவும், ஒருகை அபயமாகவும், திரோதானத் திருவடி முயலகன் முதுகிற் பதித்தும், அருள்திருவடி குஞ்சிதமுற விசியும், திருக்கண்கள் காளிதேவியின் முகத்தை நோக்கியும் ஸ்ரீ ஞானநடராஜர் வெள்ளியம்பலத்திலே திருநிருத்தம் செய் தருளினர். செய்தருளியும் திருவடிக்கண்ணதாகிய மறைச் சிலம்பொலியும் வாத்தியங்களின் ஒலியும் செவிப்புலப்பட்டனவன்றி, திருநடனக் காட்சி கட்புலப்படாமையால், ஆங்கு நின்ற அனைவரும் ஏங்கி இரந்து துதித்தனர். துதித்தமாத்திரையில், ஊனநடனம்செய்து எவ்வகை உயிர்கட்கும் ஆணவ மல வலியை மாற்றி ஞானநடனம் செய்தருளும் நடராஜர் ஞானநோக் கத்தைத் தந்தருளலும் அஞ்ஞானம் நீங்கி, முனிவரர் மூவர் முதலிய யாவரும் தாண்டவத்தின் ஆனந்தத்தைக் கண்களாற்கண்டு, மொண்டு மொண்டு உண்டு, கழிபேருவகையுற்றுக் கூத்தாடினர்கள். சிவபெருமான் செய்தருளிய நாடக வேகத்தினல் ஆபரணமாக அணிந்த பாம்புகள் விடத்தை உமிழ அது புலித்தோல் போர்த்தாற்போலத் திருமேனி முழுவதும் வரிவரியாக ஒழுகியது. அவ் விடவெப்பத்தினல் தேவர்கள் முதலிய யாவரும் அஞ்சி, பசியோடு தாகசோகங்கள் உற்றனர். உற்றபோது, உமாதேவியார் அன்ன பூரணியை உண்டாக்கி, பசியைத் தணித்தனர்.

முருகக்கடவுள் நீர்வேட்கையை ஒழித்தனர். விநாயகக்கடவுள் உடம்பி லுற்ற வெப்பத்தைத் துதிக்கையினல் நீர்துளிக்கும் வண்ணம் காற்றினை விசித் தைவந்து ஆற்றியருளினர். பின்பு திருநடராஜர் கருணைகூர்ந்து காலவமுனிவருக்கு விரும்பிய வண்ணம் விதேக முத்தியையும், பிரமாவை நோக்கி, நீ பழைய வடிவொடு, படைப்பினைச்செய்து, பட்டிமுனி அம்சத்தால் நமது நிருத்தத்தைத் தரிசிப்பாயாக என்றும், விஷ்ணுவைநோக்கி, நீயும் பண்டை உருக்கொடு பாற்கடலில் பள்ளிகொண்டு காத்தல் தொழில்செய்து, கோமுனி அம்சத்தால் நிருத்த தரிசனம் செய்வாயாக என்றும், மற்றை யோரை நோக்கி, இப்பேரூரிலே வதிவோர்க்கும், இத்தலத்தைத் தரிசித் தோர்க்கும், நமது நாடகத்தைக் கண்டோர்க்கும் தருமம், அருத்தம், காமம், மோக்ஷம் என்னும் சதுர்வித பிரயோசனங்களும் சித்திக்கக்கடவன என்றும் திருவாய் மலர்ந்தருளினர். பின்பு வெள்ளியங்கிரி மீதுள்ள வெள்ளியம்பலத் திலும், உமாதேவியார் வேணவாவோடு காணும் வண்ணம் சிவபெருமான் திருநடனம் செய்தருளினர்.

10. அபயப்படலம்

சிவபெருமான் தம்மை வேற்றுமை செய்து தேவர்களோடு தக்கன் யாகம் புரிந்தமைபற்றி விரபத்திரக் கடவுளால் அவர்களைத் தண்டித்து

யாகத்தை அழித்து எஞ்சிய பாகத்தை நுகர்வித்துக்கெடுக்கும்படி திருவுளங் கொண்டார். அக்காரணத்தினுல், மாயையிடத்தே காசிபமுனிவர் கலந்து சூரன், சிங்கமுகன், தாரகன் என்னும் மூவரைப் பெற்ருர். அம்மூவரும் ஆபிசாரயாகம் இயற்றி, சிவபிரான்மாட்டு வரம்பெற்று, அரிபிரமேந்திராதி தேவர்கள் ஆற்றலை அகற்றி ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் ஆணை செலுத்தினுர். அப்பொழுது இந்திரன் முதலியோர் திருக்கயிலாய பதியைச் சேர்ந்து சூரன் முதலியோரைக் கொல்லும் வண்ணம் விண்ணப்பம்பண்ணினுர். அதற்குச் சிவபிரான், ''சூரன் முதலியோரைவெல்லும்படி நமது நெற்றிக்கண்ணில் தோன்றும் ஆறுமுகன் வருமளவும் ஆதிபுரியைஅடைந்து நீவிர் வதிந்தால், அசுரர்பயம், பிணி, துன்பங்கள் அணுகமாட்டா. பாவமும் அகலும். முருகனது உருவமாகிய மருதவரையும் அங்கே உள்ளது. செல்லுங்கள்'' என்று விடைகொடுத்தார். அவ்வாறே திருமால் முன்னிட்ட தேவர்கள் பேரூரைச் சார்ந்து, பயம் நீங்கி, காஞ்சி நதியில் மூழ்கி, நித்த நியமங்களை முடித்து, ஆதிலிங்கேசரையும் வெள்ளியம்பலத்தையும் பணிந்து, சிவமயமாகிய வெள்ளியங்கிரி, உமாதேவிகிரி, பிரமகிரி, விஷ்ணுகிரி, மருதவரையாகிய பஞ்சகிரிகளிலுமுள்ள தீர்த்தங்களில் நீராடி, அக்கிரிகளைத் தரிசித்து, சிவலிங்கபூசை செய்து, மருதவரையில் முருகக்கடவுளை நோக்கி, தவம் புரிந்துகொண்டிருந்தார்கள். அப்பஞ்சகிரிகளும் பேரூரின் மேற்றிசைமலைத் தொடரில் உள்ளன.

11. மருதவரைப்படலம்

முருகக்கடவுள் உருவமாகிய மருதவரைக் கண்ணே, சமஸ்த தேவர்களும்சார்ந்து, பகைவரை ஒழிக்கும்வண்ணம் எண்ணி, தவம் புரியுமிடத்தே முருகக்கடவுள் திருவடிகண்மாட்டு, பேரன்புள்ள நாரதமுனிவர் வந்து, விஷ்ணுவை வணங்க, அவர் முனிவரைத்தழுவி உபசரித்து, முருகக்கடவுள் விரைந்து கருணை புரியுமுறைமையைச் சொல்லும்படி கேட்க, அதற்கு நாரத முனிவர் சொல்லத்தொடங்கினுர். ''சிவதருமங்கள் பலவற்றுள் பூசை சிறந்தது. அப்பூசையின் உபசாரங்கள் பலவற்றுள் அபிஷேகம், விரை, தீபம், அருச்சனை, நைவேத்தியம் என்னும் ஐந்தும் சிறந்தன. இவற்றைப் பன்னிரண்டு மண்டலம் இயற்றினுல், எண்ணிய பயனை எளிதில் இம்மையின் எய்தலாம். அவற்றுள் அபிஷேகமாவது சூரியோதயத்திற்கு முன்னே பன்னிரண்டு புதுச்சால்களில் புதியநீரை வஸ்திரத்தால் வடித்தெடுத்து, மணல் பரப்பி அதிலே வைத்து, ஒவ்வொரு சாலிலும் ஏலம் முதலிய திரவியங்களை நறுமலரோடு பெய்து மந்திரத்தால் அபிமந்திரித்து ஆயிரம் வாழைக்கனியும், ஆறுபடி பசும்பாலும், தேனும், நறுநெய்யும், சர்க்கரையும் இவ்விரண்டு படியுமாகச் சேர்த்துப் பஞ்சாமிர்தம் ஒரு பாத்திரத்தில் அமைத்து, பால், தேன், மூவகை இளநீர், பஞ்சாமிர்தம், சந்தனக்குழம்பு என்னும் இவைகளை முருகக்கடவுள் திருமேனியில் அபிஷேகித்து இடையிடையே சால்களிலுள்ள ஜலத்தைச் சங்கினுல் ஆட்டுவதாம். விரையாவது இலேபனமும் சுகந்தமும் என்று இருவகைப்படும். அவற்றுள் இலேபனமாவது பச்சைக்கர்ப்பூரமும்,

குங்குமப்பூவும், கோரோசனையும், புழுகும், கஸ்தூரியும் கலந்த மலாக்காச் சந்தனத்தைத் திருமேனி முழுவதும் செறிவாகச் சாத்துதலாம். சுகந்த மாவது முல்லை, இருவாட்சி, பிச்சி, மல்லிகை, பன்னீர், மரு, மருக்கொழுந்து, வெட்டிவேர் என்னும் ஏழினையும் தொகுத்து, திருவுருத் தெரியாவண்ணம் அலங்கரித்தலாம். தீபமாவது முருகக்கடவுள் திருக்கண் அளவினதாகிய உயரமுள்ள ஒருபடி நெய் கொள்ளத்தக்க தகழி பொருந்திய தீபத்தை வெள்ளி அல்லது வெண்கலத்திறற் செய்வித்து, இரண்டு பக்கங்களிலாதல் அன்றி ஒரு பக்கத்திலாதல் வைத்து, கபிலை காரா முதலிய பசுநெய் நிறைய வார்த்து, தாமரைநூல் அல்லது செம்பருத்தி வெண்பஞ்சினல் விரல் பருமையதாகிய திரி அமைத்து, பச்சைக்கர்ப்பூரம் அல்லது ஆலத்திக் கர்ப் பூரம்சேர்த்து, அத்திரிநுனியில் பொருந்திய சுடர்க்கொழுந்து பன்னிரண்டு விரலளவும் எழுந்து விளங்குவதாம்.

அருச்சனையாவது முருகக்கடவுளுக்கு உரிய ஆயிரநாமத்தால் செந் தாமரைமலர் அல்லது வெண்துளசியோடு வில்வமும் சேர்த்துத் திருவடி களிலே தூவுதலாம். நைவேத்தியமாவது வெண்மையான ஒருபடி அரிசிக்கு மூன்றுபடி பசும்பாலும், காற்படி நெய்யும், நூற்றறுபதுகழஞ்சு சர்க்கரையும், இடித்த ஏலம் சுக்கு விசம்படியும், ஒரு தேங்காய்த்திருகலும் சேர்த்து, பக்குவ மாகச் சமைத்தபின் உரித்த பதினைந்து வாழைக்கனி கலந்து அப்பரமான் னத்தை, அருச்சித்தவுடன் நிவேதித்தலாம். இவ்வாறு இரண்டு வருட மாதல், பொருளில்லார் பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் மும்மைப் பருவங்களிலாதல் செய்தல்வேண்டும். அம்மூன்று பருவத்தினும் அபிஷேகம் முதலிய ஐந்தனையும்செய்ய அசக்தராயின், அகத்தே சற்பாவனை யாற்செய்து, பரிசுத்தமான ஸ்தலத்தில் வதிந்து தினந்தோறும் பதினயிரம் முறை சடாக்ஷர ஜபம்செய்தால் இஷ்டகாமியங்கள் அனைத்தும் சித்திக்கும். இடர்கள் அனைத்தும் தொடரமாட்டா'' என்று நாரதமுனிவர் சொல்லிய அளவில், விஷ்ணு மனமகிழ்ந்து, பிரமாதிதேவர் சூழ மருதவரையில் ஏறி, வேற்படை வடிவாகிய மருதவிருட்சமூலத்தில், எழுந்துசெல்லும் அருச்சுன தீர்த்தத்தில் நீராடி, நித்தியநியமங்களை முடித்து, முருகக்கடவுள் திருவடி களில் நாரதமுனிவர் கூறியவாறு பூசித்திருந்தார். அப்பொழுது முருகக் கடவுள் எதிர்தோன்றி, 'நீவிர் விரும்பிய வரம் யாது' என வினவிய அளவில் விஷ்ணு, "சூரன் முதலியோர் செய்யும் கொடுங்கோன்மையை மாற்றியருள வேண்டும்'' என்று விண்ணப்பஞ்செய்ய, அதற்கு முருகக் கடவுள் திருப்புன்முறுவல்செய்து, நால்வகைப் படைக்கடலும் புடைசூழ்ந்து வர எழுந்தருளி, தாரகனையும் சிங்கமுகனையும் கொன்று, சூரனை வென்று தேவர்களை விண்ணுலகில் குடியேற்றி, மீண்டு மண்ணுலகில் பேரூரை அடுத்து, கந்ததீர்த்தம் எனப்பெயரிய தீர்த்தம் அகழ்ந்து, அமிர்தலிங் கேசரை அபிஷேகித்து அருச்சனைசெய்து, அம்மருதவரைக்கண் அமர்ந்து அனைவர்க்கும் அருள்புரிந்து வருகின்றார். அம்மலையிலே கன்னிகை தீர்த்தம், அநுமதீர்த்தம், சரவணப்பொய்கை என்பவைகளும் உண்டு. சரவணப் பொய்கையைப் புற்றின்கட்கனை என்பர்.

12. சுமதி கதிபெறுபடலம்

மகாராட்டிர தேசத்தில் எச்சதேவன் என்னும் பிராமணன் அரிய தவங்களும் வேள்விகளும் செய்து, சிவபெருமான் திருவருளினுல் ஒருபுத்திர னைப்பெற்று, அவனுக்குச் சுமதி என்னும் நாமகரணம் இட்டனன். அப் புதல்வன் அப்பெயருக்கு ஏற்ப வேதம் முதலிய கலைகளை ஓதி உணர்ந்து அதன்பயனுகிய ஒழுக்கத்தோடு வளர்ந்து பதிறுறு பிராயம் உற்றனன். அவன் சிவதாமாவின் புத்திரியை மணம்செய்து வாழுங்கால் யாத்திரை செய்யக்கருதி, திருப்பருப்பதத்தை அடைந்து, அங்கே சிவபெருமான் கொண்டருளும் மகோற்சவத்தைத் தரிசித்து வசிக்கும் நாளில் ஒருநாள், திருவீதியின் வளத்தை நோக்கும்படி புறப்பட்டு, தீயூழினுல் பொதுமாதர் வீதிவளத்தைக் கண்டு செல்லுமிடத்தே, சூரியன் வெயில் வெப்பத்தினுல் அயர்வுற்று ஆகாயத்தை அளாவிய பந்தர் பொருந்திய முன்றிலையுடைய இந்திரலோகம் போன்ற சுந்தரமுள்ள ஒரு மாளிகையைக் கண்ணுற்று அப் பந்தரிடையே தங்கி, செந்தமிழ்ப்பொதியச் சந்தனமுதலிய நறுமணத்தையும் குளிர்ச்சியையும் கொண்டுவந்துலாவும் மந்த மாருதத்தினுல் சிரமபரிகார மாகி, அம்மாளிகையிற் செல்வார் செயல்களை வினவத் தொடங்கினுன். அதற்கு அருகே நின்ற ஒருவன். "இத்திருப் பருப்பதத்திலே வேதியர் வீதியின் மத்தியிலுள்ள ஒரு பிராமணன் பத்தினியாகிய ஏமாங்கி என்பவள் காமத்தினுற் கற்புநிலை குலைந்து, கணவனையுங்கொன்று, பெரும்பொருளும் கைக்கொண்டு, பரத்தையர் வாழும் இவ்வீதியில்வந்து, இந்தமாளிகையைக் கட்டுவித்து, இளையளாயிருந்தும் பொதுமகளிர் தொழிலில் பழகிய முது மகளாய், இளைய ஆடவர் வரவைத்தேடி உறைகின்ருள்" என்றனன்.

அப்போது அம்மனையின் அகத்திருந்து ஏமாங்கி புறத்தேபோந்து, சுமதி நல்வரவை வினவி, கையைப்பற்றித் தழுவி உள்ளே அழைத்துக் கொண்டுபோய், இன்பத்தை நுகர்வித்தனள். நுகர்ந்த சுமதி சிலதினத் திலே பல பொருளையும் இழந்து, ஏமாங்கியினுல் இகழப்பட்டு, பின்னும் பெருமோகியாய், தனது தந்தை புரோகிதமாக இருந்த காஸ்மீரகண்டத்து அரசனை அடுத்து, இரத்தினுபரணங்களும் பெரும்பொருளும் பெற்று, மீட்டும் ஏமாங்கியை எய்தி, இன்பத்துறையில் மூழ்கி, சிலநாளில் எல்லா வற்றையும் இழந்து, மற்றுங் கொடைக்குணம் உடையாரை அடைந்து, பொருள்பெற்றும், உற்கலதேயத்தில் பர்க்கதேவன் என்னும் பார்ப்பானைக் கொன்று பொருள் கவர்ந்து, துராசாரன் என்னும் பெயர் பெற்றும் ஏமாங்கி யிடத்தே வந்தனன். அவன் பெருங் கொடுஞ்செயல்களைக் கேள்வியுற்ற ஏமாங்கி, "வருணமும் ஒழுக்கமும் கற்பும் வழுவிக் கொழுநனையும்கொன்று பழிபூண்டு அளவில்லாத தீமைகளைச் செய்திருக்கின்ருேம். இன்னமும் எம்மிடத்துள்ளாராலும் பழிபாவங்கள் உளவாதல் முறையோ" என வருந்தி அச்சுமதியை விலக்கவும், அவன் விலகாது மாளவதேசத்தை எய்தி அங்கும் ஒரு பிராமணனை வதைத்து, பொருள்கொண்டு, திரும்பி ஏமாங்கியை அடைந்தனன். உடனே ஏமாங்கி, "இப்பாவியைப் பார்ப்பதும் பாவம் பாவம்" என்று அவ்விடத்தைவிட்டு அகலவும் சுமதி அவளைத் தேடிச்

செல்லுமிடத்தே தென் கயிலாயமாகிய பேரூர் எல்லையிலுள்ள காட்டில், விழ்ந்து மாண்டனன். திருப் பருப்பதமாகிய மல்லிகார்ச்சுனத்தை வழிபட்டு, பேரூர் வெள்ளியங்கிரியின் அருகே இறந்த சுமதியின் உடம்பை நாய் நரிகள் உண்ண எண்ணி இழுத்து, காஞ்சிநதியில் இட்ட அளவில், ஆதி புரியில் உடலம் விழ்ந்ததும், ஸ்ரீ காஞ்சி தீர்த்தத்தில் பொருந்தியதும் ஆகிய புண்ணியங்களினல் சுமதி சிவலோகத்தைச் சேர்ந்தனன்.

13. முசுகுந்தன் முகம்பெறுபடலம்

கலிங்கதேசத்திலே சிவபூசை செய்யும் மெய்யன்பினையுடைய ஒரு அந்தணன் அருந்தவஞ்செய்ய, அவன் மனைவியினிடத்தே ஒரு புத்திரி அவதரித்து, சுகுமாரி என்னும் பெயர் பெற்றனள். அவள் தன் பிதாவை வணங்கி, சிவார்ச்சனை புரியும் விருப்பம் இருப்பதை விண்ணப்பம் செய் தனள். அதற்குப் பிதா மகிழ்ந்து சமயதீக்கை செய்து, மந்திராதிகாரம் கொடுத்து, அது மனத்திற்கு இனித்தபின் விசேட தீக்கைசெய்து அர்ச்சனுதி காரம் கொடுத்தனன். கொடுத்தபின் சுகுமாரி அச்சிவபூசையில் நேசமுற்று, சூரியன் உதிக்க ஐந்துநாழிகைக்குமுன் நித்திரைநீங்கி, சதாசிவமூர்த்தியைத் தியானித்து, சௌசம், தந்தசுத்தி, ஸ்நானம், அனுஷ்டானங்கள் முடித்து, திரு நந்தனவனம் சேர்ந்து, சேடியரோடு திருப்பள்ளித்தாமம் கொய்து சிவபூசை செய்து வரும்நாளில் ஒருநாள் பூக்கொய்வதற்கு நந்தனவனத்திற் சார்ந்தனள். அவளை விதூமன் என்னும் காந்தருவன் கண்டு மையலுற்று, "தையலே, நீ எனக்கு மனைவியாவை எனில், உனக்கு வேண்டும் பொருள் கொடுத்து, பணியும் புரிவேன்" என்றனன். அதற்குச் சுகுமாரி "போகத்திற் சிறிதும் கருத்தின்றிச் சிவார்ச்சனையில் பெரிதும் கருத்துடையேன். ஆத லால் நீ உன் இடத்தை அடைவாயாக." என்று சொல்லியும், பிடி விடாது வருந்தி இரந்த விதூமனைநோக்கி "நீ முசுவாகக் கடவாய்" என்று சபித் தனள். உடனே அவன் முசுவாய் மலைகடோறும் உழன்று, இமயமலையை எய்தி வில்வ விருக்ஷத்திலே தாவும்போது உதிர்ந்த சருகுகள் அவ்வில்வ மூலத்திலே அமரும் சிவலிங்கப்பெருமான் திருமேனியை மறைத்தன. அப் போது இடப்பாகத்திருந்த உமாதேவியார் முசுவைநோக்கி, "எம்பெருமான் திருவுரு மறையச் சருகுகளை உதிர்த்தபடியால் பனவமாது சாபம் தீரும்போ தும் உனக்கு முசுமுகம் அமைக" என்று சபித்தனர். இதனைத் திருச்செவி சாத்தியருளிய சிவபெருமான் "அளவில்லாத தீங்கையும் நீங்கச்செய்யும் வில்வத்தை நமதுருவில் விழ்த்திய புண்ணியத்தினல் இம்முசுவுக்கு உலக முழுவதும் ஆளும் அரசினைக்கொடுப்போம் தேவி, நீ கோபியாதே." என்று அமைத்து, அம்முசுவுக்கு எதிரிலே தோன்றி, இறைமையை ஈந்து, உமா தேவியோடு மறைந்தருளினர். அவ்வரத்தினல் அக்காந்தருவன் முசுமுகத் தோடு அரசர் குலத்திலே உதித்து, முசுகுந்தனென்னும் பெயர்பெற்று, உல கத்தை ஆளுங்கால் அகிதவுட்டிரன் என்னும் அவுணன் அமரர்களைக்கலக்கி, இந்திரனை வென்று, தேவலோகத்தைத் தன்வசமாக்கி ஆளுமிடத்து, இந் திரன் இமயமலையில் மறைந்திருந்தான். இருக்கும்போது, பிருகுமுனிவர்

புத்திரியைக்கண்டு மயங்கி வலிந்து கைப்பற்றிய வழி, அம்முனிவர் சாபத்தினல் அரக்கனுகி உழன்ருன். அங்ஙனம் நிகழுங்கால் வியாழபகவானெடு தேவர்கள் பூமியில்வந்து முசுகுந்தச் சக்கரவர்த்தியைச் சார்ந்து நிகழ்ந்தவற்றைக் கூறி, தேவலோகத்தைக் காக்கும்படி வேண்டினர். அவ்வாறு முசுகுந்தன் விண்ணுலகை அடுத்து, அகிதவுட்டிரனைவென்று அவ்வுலகைக் காத்தவழி, அதனை ஆளும்படிக்கும் அமரர்கள் விரும்பினர். அவ்வாறு திரிலோகத்திலும் செங்கோல் செலுத்தி ஒருநாள் சிங்காதனத்தில் இருக்கும்போது, நாடகம்செய்த அரம்பை அவன் முசுமுகத்தைநோக்கி நகைத்தனள். அதனுல் நாணமுற்று அவ்வரசாட்சியை அகற்றிய முசுகுந்தன் அருந்தவம் இயற்றி ஆதித்தன் அனுமதியினுல், சிவக்ஷேத்திர யாத்திரை புரிந்து, நாரதமுனிவர் ஏவுதலால் பேரூரைச் சார்ந்து கலிகன்மநாசினி என்னும் காஞ்சி நதியில் மூழ்கி, சுவாமி தரிசனம் செய்து, அந்நதி தீரத்திலே சிவலிங்கப் பிரதிட்டை பண்ணி இரண்டு தினம் அந்நதியில் நீராடி, மூன்ரும்நாள் மூழ்கும் போது, முசுமுகம் நீங்கி, நன்முகம் பெற்று, தானங்கள் செய்து, தென்கயிலாய வடகயிலாயங்களைக்கண்டுதரிசித்து, மருதவரையில் முருகக்கடவுளை வணங்கி, தன்பதியை அடைந்து அரசாட்சி செய்து கொண்டிருந்தான்.

14. இந்திரன் சாபம்தீர்ந்தபடலம்

இமயமலைச்சாரலில் மேற்சொல்லியவாறு இந்திரன் அரக்கனுய் உழன்றமையாலும் முசுகுந்தன் நாணமுற்றுச் சென்றமையாலும் தேவலோகம் பாழாய், தேவர்கள் வருந்தியிருந்தபோது நாரதமுனிவர் வந்து, ''இமயமலையை எய்தி, அரக்கவுருவை அகற்றி, இந்திரனைக் கொண்டுவருவேன்'' என்று அமரர்களுக்கு அறிவித்து, இமாசலத்தில் அவ்வரக்கனைக்கண்டு, கமண்டலத்திலுள்ள ஜலத்தை ஸ்ரீ பஞ்சாக்கரத்தை உச்சரித்து, முகத்திலே புரோக்ஷித்த அளவில் மயக்கம் நீங்கினுன். அவனை அழைத்துக்கொண்டு ஆதிபுரியிற்சென்று, காஞ்சிநதியில் அமிழ்த்தினுர். உடனே அரக்கவுரு நீங்கி, உறங்கி விழித்தவனைப்போலப் பழைய உருவும் அறிவும் பெற்று இந்திரனுயினுன். அவனுக்கு முனிவரர் முன்பு நிகழ்ந்த செய்திகளை உணர்த்தினர். அதற்கு இந்திரன் முசுகுந்த வேந்தனையும் முனிவரரையும் வியந்து துதித்து, காஞ்சிநதியில் மீண்டும் மூழ்கி முனிவரோடு சென்று அரசம்பலவாணரையும், பன்னீர் நீழலில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கப் பெருமானையும் உமாதேவியாரையும் வணங்கினுன். பின்பு தேவதச்சனை அழைத்து, திருப்பணி செய்வித்து, பிரமகுண்டத்தில் யாகம்செய்து சிவபெருமானிடம் வரங்கள் பெற்று, துறக்க உலகத்தில் அரசியற்றி வாழ்ந்திருந்தான்.

15. கரிகாற்சோழன் கொலைப்பழி தீர்ந்தபடலம்

காஞ்சீபுரத்தில் அரசாட்சி செய்துகொண்டிருந்த விக்கிரம சிங்க சோழன் புத்திரனுகிய கரிகாற்சோழன் வேட்டையாடும் பொருட்டு, காட்டிற் சென்று, பல பிராணிகளையும் வேட்டையாடி, அவ்விடத்தை விட்டு நீங்கி ஒரு செந்தாமரையோடையைக் கண்டு, அதில் தண்ணீர் குடிக்கவந்த ஒரு

பன்றிமிது பாணம் தொடுத்த அளவில் அது பதைபதைத்து விழ, அதி னின்றும் ஒரு பூதம் எழுந்து அரசனைப்பார்த்து, "நான் பன்றியல்ல, சுவிர்த்தி என்னும் பிராமணன். முன்பு இல்லறத்தைவிட்டு வானப்பிரஸ்தாச் சிரமத்தை அடைந்தும், மனைவி முதலியோர் வனத்தில் வந்துதொடர்ந்தமை யால், அவர்கள் தொடராவண்ணம் பன்றியுருவாய் வசித்தேன். பின்பு அப்பன்றியுருவை அகற்றுதற்கு அறியாமல் நீர்வேட்கையினால் இவ்விடத்து வந்தேன். அப்படிப்பட்ட என்னை நீ கொன்றதனால் உன்னை நான் விட மாட்டேன்'' என்று கொலைச்சாயையாகிய அப்பூதம் அரசனைப் பற்றியது. அரசன் அஞ்சி, அந்தணரை அழைத்து, 'தன்னைப்பற்றிய பூதத்தைப் பேதித்தற்கு ஏது என்னை' என்றுகேட்க. அதற்கு அந்தணர் 'சிவஸ்தல யாத்திரை செய்தால் நீங்கும்' என்றனர். அவ்வாறு அரசன் ஸ்ரீசிதம்பரம், திருக்குடந்தை, திருவாரூர், ஸ்ரீகாஞ்சி, ஸ்ரீகாசி, சேது முதலிய தலங்களிற் சென்று வழிபடப்போயினன். அப்போது கன்னசூலன் என்னும் தானவன் அப்பொன்னி நாட்டைக் கைப்பற்றினன். இங்ஙனம் நிகழுங்கால் இமய மலையில் உமையம்மை திருவவதாரம் செய்தபோது சிவபூசைக்குத் திருப் பள்ளித்தாமம் கொண்டுவரக் காமநோக்கினால் தாழ்த்த சேடியர் எழுவரும் மானுட மகளிராகும்படி சாபம்பெற்று, ஸ்ரீரங்கத்திலே சார்ங்கமுனிவர் பத்தினி சத்திரவதி வயிற்றிலே தங்கிப்பிறந்து, நிறைந்த போகங்களை அனுப வித்து, உமாதேவியார் ஆக்ஞைப்படி பேரூருக்குச் செல்லும்பொருட்டு, கரிகாற்சோழன் வரவை எதிர்பார்த்திருந்தனர். இருக்குங்கால் கரிகாற் சோழன் பல தலங்களையும் பணிந்தும் பூதம் விலகாமைபற்றி வருந்திய போழ்து, நேர்பட்ட நாரதமுனிவர் அருளியபடி அப்பேரூருக்குச் செல்லக் கருதி, திருவானைக்காவிற்சேர்ந்து, சுவாமி தரிசனம் செய்தான். அதனைக் கேள்வியுற்ற அம்மாதர் எழுவரும் அம்மன்னவனைச் சந்தித்து, தாங்கள் வந்த வரலாற்றைத் தெரிவித்தனர். அதற்கு அரசன் மகிழ்ந்து, உமா தேவியார் திருவடிகளைச் சிந்தித்து அவ்வெழுவரையும் சிவிகையில் ஏற்று வித்து அழைத்துக்கொண்டு பிப்பிலவனமாகிய பேரூரைச்சார்ந்து "கொலைச் சாயைக் கழியக்கடவது'' என்று சங்கற்பம்செய்து, காஞ்சிநதியில் மூழ்கினன். அம்மாதர் எழுவரும் "சாபம் கழிக'' என்று ஸ்நானம்செய்தனர். அரசனுக்குக் கொலைச் சாயை அகன்றது. மாதர் எழுவரும் சாபம் நீங்கி, தேவமகளிர் ஆனார்கள். அவ்விருதிறத் தெண்மரும் வேள்வி வளர்த்து, சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசித்தார்கள். அவ்வெண்மருக்கும் சிவபெருமான் எதிர்தோன்றி, அவர்கள் விரும்பிய வண்ணம் பிறவாநெறியைத் தந்தருளி னார். அக்காரணத்தினால் பேரூருக்கும் காஞ்சிநதிக்கும் பிறவாநெறி என்னும் நாமமுண்டு. அரசன்மூழ்கிய காஞ்சிநதித்துறைக்குக் கரிகாற்சோழன்துறை என்று பெயர்.

16. பள்ளுப்படலம்

திருக்கயிலாயமலையில் சிவபெருமான் தமது திருவுருவைக் கண்ணாடி யில் பார்த்து அழைத்தலும் அதினின்று ஒருவர் சுந்தரர் என்னும் நாமத் தோடுதோன்றி, ஆலகாலவிடத்தை அமுதுசெய்யும்படி அச்சிவபிரானுக்குத் திரட்டிக் கொடுத்தமையால், ஆலாலசுந்தரர் என்னும் திருநாமம் பெற்று,

திருத்தொண்டுகள் செய்து வந்தனர். வரும்போது ஒருதினம் சிவபிரானுக்குத் திருப்பள்ளித்தாமம் கொய்யச்சென்றனர். அப்பொழுது உமாதேவியாருக்கு மலர்கள் கொய்யும்படி அநிந்திதை, கமலினி என்னும் இரு மாதரும் திருநந்தனவனம் சார்ந்தனர். அங்கே அவ்விருவர் அழகையும் ஒருவராகிய சுந்தரர் நோக்க, அவ்வொருவர் அழகை இரண்டு மகளிரும் பார்த்தனர். இடையிலே மன்மதன் பஞ்சபாணங்களையும் தொடுத்தனன். பின்பு மந்தகாசத்தோடு சுந்தரர் சிவபிரான்மாட்டும், நெகிழ்ந்த மனத்துடன் உபயமடவாரும் உமாதேவியாரிடத்தும் சென்றனர். சிவபிரான் சுந்தரரை நோக்கி மானுடப் பிறவியிற் சேர்த்தனர். சுந்தரர் திருநாவலூர் ஆதிசைவ வேதியராகிய சடையனாரிடத்தே அவதரித்து, ஆரூரர் என்னும் அபிதானம் பூண்டனர். அவ்விரண்டு மாதருள் கமலினியார், திருவாரூரில் உருத்திர கணிகையர் மரபிலே அவதரித்து பரவையார் என்னும் பெயர் பெற்றனர். அநிந்திதையார் ஞாயிறு என்னும் தலத்திலே வேளாளர் குலத்தில் அவதரித்து, சங்கிலியார் என்னும் நாமம் அடைந்தனர்.

பின்னர், சுந்தரமூர்த்தி வேதம் முதலிய கலைகளை ஓதியுணர்ந்து, திருமணப் பருவமுற்று, பிதாவினாலே ஒரு மணம் நடத்தப்பெற்ற அளவில், சிவபெருமான் ஒரு பிராமணர் வேடம் பூண்டு அம்மணப்பந்தரில் வந்து சுந்தரமூர்த்தியைத் தடுத்தாட்கொண்டு திருவெண்ணெய்நல்லூரில் அருட்டுறை என்னும் ஆலயத்தை அடைந்தனர். அடைந்த சிவபிரானைச் சுந்தரமூர்த்திநாயனார் தொடர்ந்து, "பித்தா பிறைசூடி" என்னும் திருப்பதிகம் பாடினார். பின்பு திருநாவலூரைத் தரிசித்து, திருத்துறையூரில் தவநெறியைத் தரும்படி திருப்பதிகம்பாடி இரவிலே திருவதிகையில் சிவபெருமான் திருவடி சூட்டப்பெற்று, திருமாணிகுழி, திருத்தினைநகர், ஸ்ரீ சிதம்பரம் என்னும் தலங்களில் சென்று பாடி, சீர்காழிசேர்ந்து, அங்கே திருக்கயிலாய மலையிலுள்ள காட்சியைக்கண்டு, திருக்கோலக்கா முதலாகிய தலங்களை வணங்கி, திருவாரூர் சேர்ந்து, சிவபிரானுக்குத் தோழராம்படி திருவருள் பெற்றனர்.

பின்பு பரவையாரை மணந்து, அத்திருக்கோலத்தோடு வன்மீகநாதரை வழிபட்டுவரும் நாளில், ஒருநாள் விறன்மிண்டநாயனார்கோபம் கொண்டமையால் திருத்தொண்டத்தொகை பாடிப் பணிந்தார். அதன்பின் குண்டையூர்க்கிழவர் தந்த நெல்மலையைப் பரவையார்வீட்டிற் சேர்க்கும்படி கோளிலியில் சென்று பதிகம்பாடி, நாட்டியத்தான்குடியில் சேர்ந்து கோட்புலிநாயனார் தம் புத்திரிகளை மணந்துகொள்ளும்வண்ணம் வேண்டவும் அவ்விருவரையும் தம்புத்திரிகளாகவைத்துத் திருப்பதிகம்பாடி, வலிவலம் சென்று, பின் திருப்புகலூரில் செங்கல் பொன்னாகப்பெற்று, திருப்பனையூரில் சிவபெருமான் திருநடக்காட்சியைத் தரிசித்து, மற்றும் தலங்களைப்பணிந்து திருப்பாச்சிலாச்சிராமத்தில் பொன்தரும்படி பாடி ஏனைய திருப்பதிகளைச் சேர்ந்து வணங்கி, திருப்பேரூரில்சென்று, காஞ்சிநதியில்நீராடி, ஆலயத்தை அடைந்தனர்.

சுந்தரமூர்த்திநாயனர் வருமுன்னரே, உயர்திணைப் பொருளும் அஃறிணைப்பொருளும் தாமே என்று வேதங்கள் எடுத்து ஓதுதற்கேற்ப, முன்பு வேதியராய்த் தம்மைக்காட்டிப் பயனைக்கொடுத்த சிவபெருமான் இழிந்ததும் காட்டத் திருவுளங்கொண்டு, பள்ளனுகி, திருவிளையாட்டினுல் வயலில் சென்றனர். உமாதேவியாரும் பள்ளியாகி, கழனியிலே தொழில் செய்யத் தொடங்கினர். விநாயகக்கடவுளும் முருகக்கடவுளும் பள்ளச் சிருராய் வயலின்கண் விளையாடினர். அரிபிரமேந்திராதி தேவர்கள் நுகமும், கலப்பையும், மேழியும், கொழுவும், வாரும், கயிறும், கோலும், கடாவும், வித்தும், நாறும், ஆகிய எல்லாமாகி வந்தனர். சிவகணநாதர்கள் ஏவல் செய்கிற பள்ளர்களாய், சிவபிரானுகிய பட்டிப்பள்ளர் ஏவல்வழி உழுகின்ற வரும், நீர் பாய்ச்சுகின்றவரும், வரப்பின் அருகு சீக்கின்றவரும், பரம்படிக் கின்றவரும், நாற்று நடுகின்றவரும், விதைக்கின்றவருமானுர்கள். இலக்குமி, சரசுவதி, இந்திராணி முதலாயினேர் பள்ளிகளாய், உமாதேவியாகிய பச்சைப் பள்ளியோடு நாற்றுநட்டார்கள்.

இங்ஙனம் இவர்கள் கழனியிலே தொழில் செய்துகொண்டிருந்த போது, ஆலயத்தில் சென்ற சுந்தரமூர்த்திநாயனர் சிவபிரானை அங்கே தரிசிக்கப்பெருமல், இடபதேவரை வினவினர். அதற்கு இடபதேவர், வன் ரெண்டனுக்கு ஒன்றும் சொல்லவேண்டாம் என்று சிவபிரான் ஆக்ஞாபித்த படியால் கண்ணினுற்காட்ட, அக்குறிப்பின்வழியே நாயனர் வயலினிடத்தே ஆராய்ந்து வந்து, சுவாமியையும் அம்மையையும் கண்டு வணங்கினர்.

நாயனரோடு சிவபெருமான் கரையேறி, காஞ்சிநதியில் நீராடி ஆலயத்தையடைந்து, இடபதேவர்முகத்தை மண்டொடு கருவியால் சேதிக்க, அதற்கு இடபதேவர் அஞ்சி, வணங்கி, கொம்பினுலே ஒரு தீர்த்தம் அகழ்ந்து, சிவலிங்கம் தாபித்துப் பூசித்து, குற்றத்தினின்று நீங்கினர். பின்னர்ச் சிவபிரான் வெள்ளியம்பலத்திலே திருநடனம் செய்தார். அதனைத் தரிசித்து நாயனர் பொன்தரும்படி பாடியும் கொடாமல் உனது பாட்டுக்குப் பரிசில் நமதாட்டே என்றும், இதுமுத்தித்தலமாதலால் மற்றைய தலங்களிலே பொன்தருவோம், சேரமானுக்கும் உன்செய்தி தெரிவித்தோம் என்றும் சிவபிரான் அருளிச்செய்ய, நாயனர் விடைபெற்று, பல தலங்களை யும் பணிந்து, பழமலையிற்சென்று, பொன் பெற்று, ஆற்றிலிட்டு, கடம்பூர் வணங்கி, ஸ்ரீசிதம்பரம் சேர்ந்து, பொன்னம்பலத்திலே ஸ்ரீ ஞான நடராஜர் பேரூரின் கண்ணதாகிய வெள்ளியம்பல நடனத்தைக் காட்டத் தரிசித்து "மடித்தாடு மடிமைக்கள்" எனத் திருப்பதிகம் எடுத்து, அதில் "பேரூரர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றுமன்றே" என்று சிறப்பித்துப் பாடியருளி, திருவாரூர்சேர்ந்து ஆற்றிலிட்டபொன்னைக் குளத்திலெடுத்துப் பரவையாருக்குக் கொடுத்து, சோனுட்டுத் திருப்பதிகளையும், நடுநாட்டுத் திருப்பதிகளையும், தொண்டைநாட்டுத் திருப்பதிகளையும்தொழுது, ஸ்ரீகாஞ்சி யில் திருவேகம்பம் முதலிய தலங்களைத் தரிசித்து, திருவோணகாந்தன்தளி யில் பொன்பெற்று, திருவொற்றியூர் உற்று, சங்கிலியாரோடு கூடி வாழ்ந்து, திருவாரூர்சேர்ந்து, பரவையார் ஊடல்தீர்க்கும்படி தூதுசெல்லும்வண்ணம்

பாடி, நாகைக்காரோணத்தில் பலபொருள் பெற்று, திருவாரூரில் சேரர் பிரான் வர, அவரோடு கலந்து, மலைநாட்டுக்குச் செல்லுகின்றபோது, மத்தியிலே திருவையாற்றில் காவிரியைத் தடுத்து, தரிசித்து, திருவஞ்சைக் களம் சேர்ந்து, சேரமான்பெருமாள் நாயனாரிடத்தே பெரும்பொருள்பெற்று, இடையே பறிகொடுத்து, திருமுருகன்பூண்டியில் பெற்று, திருவாரூருக்குச் சென்று, மீட்டும் மலைநாட்டுக்குச் செல்லும் மார்க்கத்திலே, திருப்புக்கொளி யூரிலே முதலைவாய்ப் பிள்ளைதரும்வண்ணம் பாடி திருவஞ்சைக்களம் சேர்ந்து, வெள்ளையானைமீது அரிபிரமேந்திராதி தேவர்சூழத் திருக்கயி லாயமலை சேர்ந்து, சிவபெருமானுக்குப் பழைய திருத்தொண்டு செய்து கொண்டிருந்தனர். பரவையாரும் சங்கிலியாரும் முறையே அநிந்திதை யாரும் கமலினியாருமாகி, திருக்கயிலாயத்தை அடைந்து, உமாதேவியாருக் குத் திருப்பணி செய்துகொண்டிருந்தனர்.

17. அழகிய திருச்சிற்றம்பலப்படலம்

சுந்தரமூர்த்திநாயனார் திருப்பேரூரை அடுத்து, வணங்கிச் சென்று, தில்லைச் சிற்றம்பலத்திலே திருநடராஜரைப் பாடும் திருப்பதிகத்திலே "பேரூரர் பெருமானைப் பெற்றும்" என்று அருளிச்செய்த தேவாரத்தைத் தில்லைவாழந்தணர் கேட்டு, நாயனாரை நோக்கி, இத்தில்லைத் தலம்போல் இவ்வுலகிலே ஒரு தலம் உண்டோ என்று வினவியதற்கு, "இக்கனகசபை யிலே, தாண்டவம் செய்வதுபோலப் பேரூர் இரசதசபையில் சிவபிரான் திருநடனஞ்செய்தருளுகின்றார். அத்தலத்தில், முத்திதருவதன்றி தருமார்த்த காமங்களைத் தருதலில்லை" என நாயனார் நவின்றனர். உடனே தில்லை வாழந்தணர் திருப்பேரூர் சேர்ந்து ஸ்ரீ காஞ்சிநதியில் நீராடி, திருமேனியில் சிவசின்னங்களாகிய திருநீறும் கண்டிகையும் பூண்டு, சுவாமியையும் அம்மையையும் வணங்கி, அரசம்பலவாணரைத் தரிசித்து, மற்றைநாள் காலவனீச்சரத்திற்கு அக்கினிதிக்கில் சிவலிங்கம் தாபித்துப் பூசித்து, வதிந்தார். அப்பொழுது வெள்ளியம்பலத்திலே சிவபிரான் திருநடனம் செய்ய அதனைத் தில்லைவாழந்தணர் தரிசித்து, ஆன்மாவும் சிவமும் அயிக் கியமாய் மனம் அழிந்து அவசமாய் நின்று துதித்து, விடைபெற்று, கீழைச் சிதம்பரம் சேர்ந்து பண்டைக்காலம்போல் வாழ்ந்திருந்தனர். அவ்வந் தணர் பூசித்த ஆலயத்திற்கு அழகிய திருச்சிற்றம்பலம் என்றும், சுவாமிக்கு அழகிய திருச்சிற்றம்பலமுடையார் என்றும்பெயர்.

18. தீர்த்தப்படலம்

திருப்பேரூர் எல்லை பட்டீச்சுரத்தைச் சூழ மூன்று யோசனை அளவினை உடையது. அவ்வெல்லையில் தேவர் அசுரர் முனிவர் முதலாயினர் தாபித்த சிவலிங்கங்களுக்கும் தீர்த்தங்களுக்கும் அளவில்லை. பூருவ பரார்த்தத்திலே பிரமா சிருட்டித் தொழிலைப்பற்றிச் சிவபிரானை நோக்கி, தவம் செய்தனர். அப்பொழுது முன்னர் அதிகாரம் செய்த பிரமர்கள் நாரணர்கள் இருடிகள் யோகிகள் தேவர்கள் அனைவரும் கூடி வீடுபேற்றைநாடிப் பலவகைத் தவங் களைப் புரிந்தனர். அவர்களுக்குத் திருவருள் செய்யக்கருதி, சிவபெருமான்

உமாதேவியார் காண அப்பேரூர் வெள்ளியங்கிரியிலே திருநடனஞ்செய் தருளினர். அந்நிருத்தத்தை அனைவரும் தரிசித்து ஆனந்தத்தில் மூழ்கி யிருக்கும்போது எம்பெருமான் திருவுருவில், தரித்த சர்ப்பங்கள் ஆடல் வேகத்தைச் சகிக்காமல் விடத்தை உமிழ, அவ்வெம்மை தாக்கி சமஸ்தருங் காத்தருள வேண்டுமென்று முறையிட்டு வருந்தினர். அதற்கு ஸ்ரீ நடராஜர் இரக்கமுற்று, கங்கையை நோக்கி, விடவெம்மை தணியும்வண்ணம் நதியாக ஒழுகும்படி ஆக்ஞாபித்த அளவில் அவ்விரசதகிரியின் செவியடியுரோமமான வன்னிவிருக்ஷ மூலத்தினின்றும் கங்கையானது பெருவெள்ளமாக எழுந்து சென்றது. அனைவரும் விடவெப்பத்தாலாய தாக சோகங்கள் நீங்கும்படி அந்நீரையுண்டு அதில்மூழ்கி முத்தியும் சித்திக்கப்பெற்றார்கள். அந்நதிக்குச் சிவநதி, அமிர்தவுந்தி, தக்ஷிணகங்கை, ஆதிகங்கை, ஞானதோயை, பிப்பில நதி, பிறவாநெறி, கலிகன்ம நாசினி, விருத்த கங்கை, பிரயாகை, காஞ்சிநதி என்று பலபரியாய நாமங்களுண்டு.

அத்தீர்த்தத்தைத் தீண்டிய கீழானவரும் சிவசரியை முதலியவைகளால் சித்திக்கும் சிவசாலோகாதி முத்திகளைப்பெறுவர். அதிபாதக, மகாபாதக, உபபாதகங்களினின்றும் நீங்குவர். அந்நதிதீரத்தில் தபம், செபம், தியானம், யோகம், வேள்வி முதலியவற்றைச்செய்தால் ஒன்று அனந்தமாய்ப் பெருகும். வடகயிலாயத்திலுள்ள பிரமதீர்த்தத்தில் ஒருமண்டலம் மூழ்கி அதனைப் பருகினோர்க்கு மலடுகளும் பேய் முதலியவும் நோய்களும் நீங்கும். இஷ்ட காமியங்கள் எளிதில் கைகூடும். இறுதியில் பிரமபதம் கிடைக்கும்.

அப்பிரம தீர்த்தத்திற்குக் கிழக்கேயுள்ள காலவதீர்த்தத்தில் நீராடினால் பிறவி நீங்கும். பட்டிநாயகருக்குக் கீழ்த்திசையிலுள்ள சூரியதீர்த்தம் கண்ணொளிதந்து இறுதியில் ஆதித்திய உலகில் சேர்க்கும். இந்திர தீர்த்தம் இட்டகாமியங்களை ஈந்து முடிவில் இந்திரலோகத்தில் இருத்தும். பட்டீச்சுரத்துக்கு ஈசானதிக்கில் கந்ததீர்த்தத்தின் மூழ்கினோர் பேய் பூதம் முதலிய வற்றின் நீங்கிச் செல்வம், வீரம், ஞானம், மோக்ஷம் என்பவைகளை எய்துவர். அகத்திய மகாமுனிவர் மலைக்குக்கீழ்பால், அகத்திய தீர்த்தம், யோகிதீர்த்தம், சித்ததீர்த்தம் என்பவை வேண்டியவைகளைக்கூட்டுவிக்கும். பட்டீச்சுரத்தின் உத்தரதிக்கில், நச்சுப்பொய்கை நீரை அருந்தினோர் இறந்து முத்திசேர்வர். சித்தர்கள் கைப்படில், தாமிர முதலியவற்றைப் பொன்னாக்கி அற்புதங்கள் செய்வர்.

காஞ்சிநதியின் வடகரையில் வசிட்டதீர்த்தம், வாமதேவதீர்த்தம், பார்க்கவதீர்த்தம், வியாழதீர்த்தம் நான்கும் பெரும்பயனைத்தரும். வயிரவக் கடவுள் திருமுன்பு சிங்கக்கிணறாகிய சிங்கதீர்த்தமும், உமாதேவி சந்நிதியில் துர்க்கை தீர்த்தமும், க்ஷேத்திரபாலதீர்த்தமும், அமுதலிங்கேசர் ஆலயத் திற்குத் தென்திசையில் காளிதீர்த்தமும், சக்கரதீர்த்தமும், தென்கிழக் கெல்லையில் குலசேகரதீர்த்தமும், நந்திதீர்த்தமும், அக்கினி தீர்த்தமும், ஏம தீர்த்தமும், யக்ஷதீர்த்தமும், சண்டேசர் ஆலயத்திற்கு வாயுதிசையில் சண்டேசுர தீர்த்தமும், சோமதீர்த்தமும், மரகதவல்லியம்மை ஆலயத்திற்கு

வாயுதிக்கில் பிரமதகண தீர்த்தமும், பட்டீச்சுரத்திற்கு வாயுதிசையில் சப்த மாதர்கள் தீர்த்தமும் விளங்கும்.

மேல்பாலுள்ள பாலதீர்த்தத்தில் மூழ்கினல் நரை திரை மூப்புகள் அகலும். முசுகுந்த தீர்த்தமும், அங்கிர தீர்த்தமும், இந்திர தீர்த்தமும், சோழ தீர்த்தமும், காமதேனு தீர்த்தமும், கன்னிகை தீர்த்தமும் ஸ்ரீ காஞ்சி நதியின் மேலைத்திசைமுதல் கீழைத்திசை அளவும் உள்ளன. இத்தீர்த்தங்களில் மூழ்குவார் மண்ணுலகில் செல்வமும், விண்ணுலகில் போகமும், பின்பு வீடும் கூடுவர்.

19. விம்மிதப்படலம்

பேரூரிலே சிவமாகிய வெள்ளியங்கிரியில் அநேக விம்மிதங்கள் உள்ளன. யாவை எனில்? தன்னை அடுத்தவரை அயலோர் கண்ணுக்குக் காட்டாததிவ்வியாஞ்சனதாரு, காலில் பாதுகையாகத் தரித்தால்ஆகாயத்தில் கொண்டுசெல்லும் தாரு, பசி தாகம் தீர்க்கும் தாரு, காயசித்திதரும் தாரு, யோகசித்தித்தாரு முதலிய தாருக்களும், மாங்கிசபேதி முதலியவும் வசியாதிகளைத் தருவனவுமாகிய கொடிகளும் செடிகளும், அயக்காந்தம் முதலியவும், நாற்கோட்டு யானைகளும், நவரத்தினங்களும் அவைகள் விளை நிலங்களும், ஜலஸ்தம்பம் செய்தல் முதலிய மணிகளும் இரசமணிக்கிணறு முதலியனவும் அற்புதக் குகைகளும், அற்புதமான சரசுகளுமாம் அவ்வெள்ளிமலைக்குத் தென்பால், ஏமகிரியில் ஏமபுரம் ஒன்று உண்டு. அதில் விரிந்த ஒரு குகையும் அதில் ஒரு தாமரை ஓடையும் உள்ளது. அது சருவசித்தியையும் தரும். அம்மலைக்குத் தெற்கேயுள்ள பாற்கிணற்றுநீரை அள்ளியுண்டால் ஆறு மாசம் பசி தாகம் இல்லையாகும். அதற்குக் கீழ்த்திசையில் மூன்று யோசனை ஒளிவிடும் சோதி விருக்ஷமுண்டு. அதில் சர்க்கரைநதி முதலிய நதிகளுண்டு. அந்நதிக்கரையில் சித்தர் சாத்தியர் தங்குவர். அந்நதிக்கு மேல்பால் அத்தி மரச்சோலையில் தேவர் முனிவர் முதலியோர் தவஞ்செய்வர். அதன்பக்கத்தே சேர்ந்தபொருளைக் கல்லாக்கும் சிலாநதி தீரத்தில் கருதியவுடன் மரணமும் முத்தியும் சித்திக்கும். அங்கே ஔடதங்கள் அநேகமுள்ளன. அதன் வடக்கே குங்கிலிய மரப்பாலினுல் அனந்த சித்திகளாகும். அதன் ஈசானத் திக்கிலிருக்கும் பளிங்குமலைச் சிலையினுல் சிவலிங்கம் இயற்றிப் பூசித்தால் விரைவிலே சிவபிரான் கருணைபுரிவர். அப்படிக வரையின் வடபால் ஒரு பெரிய குகையுண்டு. அதற்கடுக்கப் பாரதசரசின் கரையில் கோடி தூண்களுடைய கனகமண்டபம் உள்ளது. அதிலே சிவலிங்கப்பெருமான் விநாயகக்கடவுள் முருகக்கடவுள் அரிபிரமேந்திராதி தேவர்கள் வழிபடும் வண்ணம் எழுந்தருளியிருப்பார். அங்கே காலந்தோறும் முழங்கும் பஞ்ச துந்துபியின் ஒலி முத்திகாமிகள் செவிக்குப் புலப்படும். அம்மண்டபத்தின் வடமேற்குத் தென்மேற்கிலுள்ள ஓடைக்கரையில் சந்தானகரணி முதலியபல மருந்துகள் உண்டு. அங்குள்ள சந்தனமரச் செறிவில் ஐந்தலை நாகம் எழுதலைநாகங்கள் இயங்கும். பிரமகிரியில் சிலாநதி முதலியன உண்டு. விண்டுவரையில் விஷ்ணுதீர்த்தம் ஏலம் முதலியன அதிசயமாக உள்ளன.

மருநவரையில் காமதேனு உலாவும். வடகயிலேயில் இறவாப்பனையும் பிறவாப்புளியும் உறையும். பன்னீர்விருக்ஷமாகிய சித்தேசமரம் ஆதிலிங்க மூர்த்திக்கு அருகே உள்ளது. அங்கே காஞ்சி விருக்ஷமும் உளது. அதன் மூலத்தினின்று செல்லும் நதிக்குக் காஞ்சிநதி என்று பெயர். இன்னும் பல அதிசயங்களும் உண்டு.

20. வியாதன் கழுவாய்ப்படலம்

ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தில் சிவபிரானைத்தொழுது, பல முனிவரும் தவம் செய்யுங்கால் ஒருதினம் விஷ்ணுவே பரம்பொருள் என்றும், உருத்திரனே பரம்பொருள் என்றும், தம்முள்ளே கலாஞ்செய்து வியாசமுனிவரை வினவினர். அதற்கு வியாசமுனிவர் "வேதங்களெல்லாம் விளக்கும் பரம்பொருள் விஷ்ணுவே" என்றபோது விஷ்ணு பக்ஷமாகிய முனிவர்கள் மகிழ்ந்தனர்.

உருத்திர மூர்த்தியே பரப்பிரமம் என்னும் முனிவர் குழாங்கள் வியாச முனிவரை நோக்கி, "உயர்ந்தோர் அனைவரும் சிவபிரானே பரம் என்று தெளிந்திருக்கவும் அதற்கு விருத்தமாக நீவிர் கூறினமையால் ஸ்ரீவிசுவேசர் சந்நிதானத்தில் விஷ்ணுவே பரம் என்று கூறுவீராயின் அதனை உறுதியாகக் கொள்ளுவேம்" என்றனர். அதனைக்கேட்ட வியாசமுனிவர் தீயூழினுல் சற்றும் அஞ்சாது கங்காநதியில் மூழ்கி ஸ்ரீ விசுவேசர் திருமுன்னர்ச் சென்று சிரசின்மிது இரு கைகளையும் கூப்பிக்கொண்டு "விஷ்ணுவே பரம்" என்று சொன்னார். அதனையுணர்ந்த திருநந்திதேவர் வியாசமுனிவரை நோக்கிக் கோபித்துச் சாபமிட்ட அளவில் மேலே உயர்த்திய கையோடு நாவும் தம்பிக்க, ஸ்ரீ விசுவேசர் சந்நிதியில் நாட்டிய வெற்றித்தம்பம் போல வியாச முனிவர் நின்றார்.

விஷ்ணுவைப் பரம் என்று கருதும் மதத்தாரன்றி, மற்றைய பல மதத்தினரும் ஸ்ரீ விசுவநாதரே பரப்பிரமம் என்று மெய்ம்மையாக உணர்ந்து உய்ந்தார்கள். அப்போது வியாசமுனிவர் விஷ்ணுவைத் தியானிக்க, அவர் அங்கே வந்து, வியாசரை நோக்கி, "ஹே வியாசனே! நீ என்னையும் கெடுக்க, இங்கே எத்துணைப் பெருங்கொடுஞ்செய்கை புரிந்தாய், சிவபிரான் அருட்சத்தி எங்கும் வியாபித்திருத்தலால் என்போன்ற தேவர்களாகிய பசுக்களையும் பதியென்று வேதங்கள் உபசரித்து ஓதியதாம். ஆதலால் தக்ஷிணமூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் சிவபிரான் திருவடிகளைத் தியானித்து உய்யக்கடவாய்" என்று கூறி மறைந்தனர். வியாசமுனிவர் அதனைக் கேட்டு, சிவபிரானைச்சிந்தித்து, காத்தருளவேண்டும் என்று பிரார்த்திக்கவும் பிரமாவும் விஷ்ணுவும் இருபக்கத்தும் பாதுகைகளைத் தாங்கும் வண்ணம் இடபாரூடராய் விசுவநாதர் எழுந்தருளி, வியாசரைநோக்கி, "நின்னாலே, முதல்வனாகச் சுட்டப்பட்ட விஷ்ணு, நமது அகத்தொண்டின் கண்ணே நிற்பதைக் காண்பாய். நமது தன்மையிற் சிறிதும் அறியாய், நீ புரிந்த குற்றம் பெரிதாயினும் நம்மைத் தியானித்தபடியால் பேரூரைச் சார்வாயாகில் தீரும்" என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினர். உடனே வியாச

முனிவர் பேரூர் சேர்ந்து ஸ்ரீகாஞ்சிநதியில் மூழ்கி, வெள்ளியங்கிரியை அடுத்து, சுவாமியைத் தரிசித்துத் துதித்த அளவில் கைகளும் தாழ்ந்து நாக்கும் அசைவுற்றது. அப்பொழுது கைகளாற் சிவபூசை செய்து நாவினல் புகழ்ந்து மகிழ்ந்து வாழ்ந்தனர்.

21. விசுவாமித்திரன் வரம்பெறுபடலம்

பிரமாவும் விஷ்ணுவும் யான்பரம் யான்பரம் என்று அளவில் காலம் கலாஞ்செய்தவழி அதனை அகற்றும்படி திருவுளங்கொண்டு சிவபெருமான் எதிர்தோன்றினர். அப்போது விஷ்ணு அஞ்சி ஓடினர். பிரமா அஞ்சாது நின்று இகழ்ந்தவழி, சிவபெருமான் கோபங்கொள்ள அதிலே வயிரவக் கடவுள் தோன்றி இகழ்ந்த பிரமன் சிரத்தைக்கொய்து செருக்கினைக் களைந்தனர். பின்பு விஷ்ணுவாதிதேவர்கள் உதிரத்தையும் வாங்கி, மனத்தருக்கைக் கெடுத்து ஸ்ரீ காசிக்ஷேத்திரம் சேர்ந்து காவல்தொழிலைக் கைக்கொண்டு அங்கே தங்கும் ஆன்மாக்கள் புரியும் பாவத்தைத் தமதுபுயத்தில்பொருந்தும் சூலப்படையில் சேர்த்துச்சுழற்றி அகற்றும் அற்புதத் தொழிலும் பூண்டனர்.

இங்ஙனம் இயமனது ஆணை செல்லாத ஸ்ரீ காசி மான்மியத்தை நோக்கி, விசுவாமித்திரமுனிவர் வந்து அந்தத் திருப்பதியில் வதிந்து சிவ யோகம் செய்யுங்கால் ஒருதினத்தில் சிவபிரான் திருப்பேரூரின் கண்ணதாகிய வெள்ளியம்பலத்திலே திருநடனம்செய்துகாட்டி அப்பேரூர்எல்லையில் உள்ள உயிர்கள் இயற்றும் பாவங்களைத் தண்டஞ் செய்யாது போக்கி வீட்டிற் கூட்டும் விதத்தையும் விளக்கியருளினர். அங்ஙனம் பேரூரின் பெருமையை யோகக்காட்சியில் கண்ட முனிவர் அத்திருப்பதியை அடுத்து, காஞ்சி நதியில் முழுகிச் சுவாமியையும் அம்மையையும் வழிபட்டு வெள்ளியம்பலத்தையும் தரிசித்தார். மற்றைநாட்காலையில் காஞ்சியாற்றில் மூழ்கி நித்தநியமங்களை முடித்து, சிவலிங்கம் தாபித்துப் பூசித்து, சிவயோகத்தில் வசிக்குங்கால் ஒருநாள் சிவபிரான் இடபாரூடராய் எழுந்தருளினர். அப்பொழுது முனிவர் வணங்கித் துதித்துப் பெருமானிடத்தே, 'அடியேனுக்குப் பத்தியைத் தந்தருளுக! முத்தியைத் தரும் இத்திருப்பதியில் யாவர்க்கும் ஏனைத் தர்மார்த்த காமங்களையும் அருளுக. இத்தலம் குருக்ஷேத்திரம் என்னும் திருநாமம் பெறுக' என்பது முதலாகிய வரங்களை வேண்டிப்பெற்று அப்பதியிலே சிவயோகத்திற் பயின்று வதிந்தனர்.

22. அந்தகன் அரசுபெறுபடலம்

சிவபெருமான் விசுவாமித்திரமுனிவருக்கு அருளிய வரத்தினல் தவத்தினராகிய ஆன்றோரேயன்றி, பாவிகளும் ஆதிபுரியை அடைந்து, வழிபட்டு முத்தியைப் பெறுதலால் நிரயத்தில் அழுந்துவாரின்றி இயமலோகம் பாழாயிற்று. உடனே இயமன் அப்பதியை அடுத்து, தக்ஷிணகங்கையாகிய ஸ்ரீ காஞ்சிநதியில் நீராடி, சிவசின்னங்களாகிய விபூதி உருத்திராக்கங்களை அணிந்து, பட்டீசரையும் மரகதவல்லியம்மையையும் பணிந்து, இரசத சபையையும் தரிசித்து, ஓரிடத்தே வதிந்து திருவைந்தெழுத்தை ஜபித்தான்.

மற்றைநாட்காலையில் நித்தியகர்மங்களைமுடித்து, சிவலிங்கப்பிரதிட்டை செய்து, பத்தியோடு பூசித்து வரும்போது ஒருநாள் நாயினேனை அடிமை பூண்ட பரமகருணாநிதியாகிய சிவபெருமான் இடபாரூடராய் எழுந்தருளி வினவியதற்கு இயமன், ''பாவிகளும் பேரூரைச் சேவித்து வீடுகூடுதலால் அடியேன் அரசாட்சி நீங்கினமை பற்றி இங்கே வந்தனன்'' என்று விண்ணப்பம்செய்ய, அதனைக் கேட்டருளிய மகாதேவர் ''எவ்விடத்தே புண்ணியஞ்செய்தாலும் அவ்வுயிர்களிடம் நினதாணை செல்லாதல்லவா? அன்னோரே நம்பாலன்புடையராய் முத்தி பெறுவர். ஏனையோர் நினதாணைக் குட்படுவர். உனது அரசினைச் செலுத்துவாய்'' என்று திருவாய் மலர்ந்து அவ்வருட்குறியில் அந்தர்த்தானமாயினர். இயமன் தனது நகரைச் சார்ந்து செங்கோல் செலுத்தி அரசுபுரிந்தான். பேரூரில் எழுந்தருளியிருக்கும் சிவபிரான் கிரேதாயுகத்தில் விசுவநாதர், திரேதாயுகத்தில் அமிர்தலிங்கேசர், துவாபரயுகத்தில் தருமநாதர், கலியுகத்தில் கோட்டீச்சுரர் என்னும் திருநாமங்களைப் பெறுவர்.

23. தலவிசேடப்படலம்

பிரமா, ஒருகற்பத்தில் சிவபெருமான் திருவருளினால் உலகத்தையும் உயிர்களையும் படைத்து, பல சிவாலயங்களும் தீர்த்தங்களும் நிருமித்து, அற்ப உணர்வினாலே இறுமாந்திருக்கும்போது, ''திருப்பேரூரும் ஸ்ரீ காஞ்சி நதியும் நின்னால் படைக்கப்பட்டனவோ'' என்று ஆகாயத்தினின்றும் ஒரு அசரீரிவாக்கு எழுந்தது. அக்கணமே பிரமா, தேவர் முனிவர் சூழச்சென்று இமயவரைக் கன்னாதாகிய திருக்கயிலாய மலையிலே தேவதேவரைப் பணிந்து, பேரூர் மான்மியத்தைக் கேட்க, அதற்குப் பரமசிவன் அருளிச் செய்வாராயினர். ''பிரமனே, நீ பூர்வபரார்த்தத்திலே சிருட்டித்தொழில் கைகூடும்படி, எமதடியிற்பூசித்திருந்த காலையில் நாமே பேரூரைப் படைத்து, நடனமும் செய்தோம். அற்றைத் தினமுதல் ஆன்மாக்கள் நமது அடியிற் கலக்கும் வண்ணம் அனவரதமும் ஆனந்த தாண்டவம் புரிகின்றோம். இரசதகிரியும் ஆயினோம். நமது முடியிலுள்ள கங்கையே காஞ்சி நதியாகத் தவழ்வது. அத்தலத்தை அத்தானஸ்தானமாகக்கொண்டு வீற்றிருக்கிறோம். அத்தலம் நித்தியம் என்பதற்கு இறவாப் பனைமிருத்தல் முதலாயினவே சான்றும். நித்தராயிருக்கக் கருதினோர் அங்கே நம்மைவழிபட்டுச் சிரஞ்சீவியாயிருக்கின்றனர். முத்திபெற்றவர் அளவில்லாதவர். விசுவாமித்திரன் அங்கே தவம்புரிந்து வரங்கள்பெற்று வசிட்டனோடு விரோதித்து, பிராமண முனிவனாக நினைந்து, மீட்டும் தவம்செய்யுங்கால் அயோத்திநகரின் அரசனாகிய திரிசங்கு தன்குல குருவாகிய வசிட்டனையும் அவன் புத்திரரையும் அடுத்து உடலோடு சுவர்க்கத்தில் வசிக்க விரும்பியவழி, இப்போது அத்துணைப் பருவம் உனக்கு அமையாமையால் சிலகாலம் சென்று யோசிப்போம் என்றதற்கு, மற்றொரு குருவைச் சரணம் புகுந்து பெறுவாம் எனச் சொல்லிய திரிசங்கு அவ்வசிட்டனுதியரால் நீசனாகக் கடவாய் என்னும் சாபம்பெற்று, விசுவாமித்திரனைச் சார்ந்து, நிகழ்ந்தவற்றைக் கூறினன்.

கூறவும் விசுவாமித்திரன் ஒருவேள்விசெய்து திரிசங்குவை இந்திரன் சபைநடுவே இருத்தினன். உடனே இந்திரன் கோபித்து, நீசனுகிய திரிசங்குவைப் பூமியில் விழும்படி தள்ள அத்திரிசங்கு விசுவாமித்திரனை அழைத்து, 'காத்தருளுக' என முறையிட்டு விழும்போது விசுவாமித்திரன் நெய்வார்க்குஞ் சுருக்கினை வீசி அந்தரத்திலே திரிசங்குவை நிறுத்தி, சில நக்ஷத்திரங்களைப் பெயர்த்து புவனம் படைக்கத் தொடங்கினன். அப்போது அமரர்கள் வணங்கிய அளவில் அந்தரசுவர்க்கம் இயற்றி திரிசங்குவை அதிலிருந்து போகம் அனுபவிக்கும்படிச்செய்து தவவலிமையினுல் பிராமண முனி என்னும் பெயர் பெற்றனன். இங்ஙனம் தவமுற்றுதலால் தவசித்தி புரம் எனவும், நாம் ஆனந்ததாண்டவம் செய்தலால் மேலைச்சிதம்பரம் எனவும், நமது உருவாகிய வெள்ளிமலையைத் தன்னிடத்துக்கொண்டு பாவத்தைப்போக்கி முத்தியைத் தருதலால் பேரூர் எனவும், பத்திபுரி, வன்மிகநகரம், பரம்புரம், ககனபுரி, போதபுரம், நாட்டியபுரம், ஆதிபுரி, மேரு நகரம், ஞானபுரம், பிரமநகரம், குருக்ஷேத்திரம், பசுபதிபுரம், இரசதசபை, குந்தகானம், சிற்சபை, கலியாணபுரம், போதிக்கானம், தேனுபுரம், பிறவா நெறி ஆதியாகவும் அப்பேரூர் காரணப்பெயர்கள் பூண்டன'' என திருவாய் மலர்ந்தருளினர். பின்னர்ப் பிரமா புறவிடைபெற்று, திருப்பேரூர் சேர்ந்து, காஞ்சிநதியில் மூழ்கி, சுவாமியையும் அம்மையையும் வணங்கி, வெள்ளி யம்பலத்தையும் தரிசித்து, சிலதினம் வதிந்து, பின்பு சத்தியலோகம்சார்ந்து வாழ்ந்திருந்தனர்.

24. அங்கிரன் கதிபெறுபடலம்

வங்கதேசத்திலுள்ள வனத்தில் அங்கிரன் என்னும் வேடன் மனைவி மக்கள் சுற்றம் சூழ பெருஞ்செல்வமுற்று படைக்கலங்களோடு பலரும் தன்னைப் போற்றும்படி வழிச்செல்வோர் பொருள்களை அபகரித்து வாழுங் கால், மாமகதீர்த்த ஸ்நானம் செய்யவும் மணங்கள் செய்யவும் சுற்றத்தவர்க ளோடு பிராமணர்கள் அக்காட்டுவழியே சென்றனர். சென்று முடுக்கரை அடுத்தவுடனே அனைவரையும் கொன்று இரத்தினுபரணங்களையும் பொன் அணிகளையும் பீதாம்பராதிவஸ்திரமூட்டைகளையும் எருதுகளின்மீது ஏற்றிய திரவியமூட்டைகளையும் கொள்ளைகொண்டு தனது இடத்தை அடைந்தான். அப்பொழுது, மக்கள் முதலாயினர் ஒருங்குகூடி, "பொருள்களை மாத்திரம் அபகரியாமல் அனைவரையும் கொலை செய்தமையால் அரசர் அறிந்து குலத் தோடு எங்களை ஒழிப்பார்'' என்று தம்முள்ளே துணிந்து அவ்வங்கிரனை விலக்கி நீங்கினர். விலக்கிய அற்றைநாள் நடுஇரவில் மக்களையும் சுற்றத் தாரையும் கொன்று அவ்விடத்தைவிட்டு, தென்கயிலாயத்தின் புறத்தில் சேர்ந்து, பலமிருகங்களையும் பட்சிகளையும் கொன்று பக்ஷித்து வரும்நாளில், ஒருநாள் ஓர் அந்தணன் பத்தினியோடுவர, அவ்வேதியனைக்கொலைசெய்து அவன் பத்தினியைக் கைப்பற்றி இன்பம் நுகர்ந்தனன். பின்பு வேட்டை யாட விரும்பி வில்லோடு காட்டில் உழன்றமையால் பசியும் தாகமும் உற்று திரும்பும்போது, காஞ்சிநதியைக் கண்டு சமீபித்து அந்நீரையுண்டு கரை யிலேறுங்கால் ஒருபாம்பு தீண்டி மாண்டனன். அவனை இயமதூதர்

கொண்டு போகின்ற மார்க்கத்தில் சிவகணங்கள் அத்தூதர்களைத்தண்டித்து அங்கிரனை விமானத்தில் ஏற்றி, திருக்கயிலாயத்தில் சேர்த்தனர்.

இதனையுணர்ந்த இயமன் திருக்கயிலாயநாதரை அடுத்து, வணங்கி நிகழ்ந்தவற்றை விண்ணப்பஞ் செய்தான். அதற்குச் சிவபெருமான், "அங்கிரன் சிறிதும் புண்ணியம் புரியாத பெரும் பாதகனே ஆயினும் பேரூரின் கண்ணதாகிய நமது உருவான வெள்ளியங்கிரியை அடுத்து நித்தமும் தரிசித்தமையாலும், காஞ்சிநதி நீரைப்பருகிக் கரையில் இறந்த அவனுருவம் அந்நதி நீரில் உருண்டுவிழ, அதனை நரிகள் திருநீற்று மேட்டில் இட்டமையாலும் பாவங்களெல்லாம் போய் புண்ணியவானாய் நமது கயிலைமலையை அடைந்தான். ஆதலால் பேரூர் எல்லையினன்றி மற்றைய எல்லையில் மரித்தோர்மாட்டு உனது அதிகாரத்தைச் செலுத்துவாய் எனத் திருவாய் மலர்ந்தருளினர். உடனே இயமனும் வணங்கி விடைபெற்று, தன் பதியை அடைந்து அதிகாரம் செலுத்துவானாயினன்.

25. கௌரி தவம்புரி படலம்

பிரமாவின் புத்திரனாகிய தக்ஷன் பரசிவனைப்பணிந்து, திரிலோகாதிபதியாய் வாழுங்கால் தவத்தினால் உமையம்மையைப் புத்திரியாகப்பெற்று சதிதேவி என்னும் நாமகரணமிட்டு, சிவபெருமானுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். பின்பு வேள்விபுரிய விரும்பி தன்னுடைய மருகராகிய சிவபெருமானுக்கும் புத்திரியாகிய உமாதேவிக்கும் தெரிவிக்கும்பொருட்டு திருக்கயிலாயமலையைச்சேர்ந்தான். அப்போது சிவபிரான் ஓர் உத்தரமும் அருளாதிருந்தமை நோக்கி தக்ஷன் அந்நிருமலமூர்த்தியை இகழ்ந்துகொண்டு திரும்பி, "சுடுகாட்டாடிக்கு விவாகம்செய்துகொடுத்த அன்றே புத்திரியை இழந்தோம். இனி அவனுக்கு யாகத்தில் கொடுக்கும் அவிர்ப்பாகத்தை அகற்றி ஏனையோர்க்கு ஈந்து, அவ்விரந்துண்பவனுக்குக் கொடுக்கும் பாகத்தையும் காத்தற்கடவுளாகிய விஷ்ணுமூர்த்திக்குக் கொடுப்பேன்" என்று வேள்வி செய்யத்தொடங்கினான். அப்போது உமாதேவியார் சிவபிரான் தடையையும் கடந்து தக்ஷனிடம் சென்றபொழுது, தக்ஷனும் அவன் மனைவியும் மக்களும் ஒன்றும்பேசாதிருந்தனர். பின்பு தக்ஷன் சிவபிரானுக்குக் கொடுக்கும் அவிர்ப்பாகத்தையும் விஷ்ணுவுக்குக் கொடுத்தனன். அது கண்ட உமாதேவியார் "தாக்ஷாயணி என்னும் நாமத்தைத் தள்ளுவதே முறை" என்று அக்கினியில் மூழ்கினர். அப்போது தேவர்கள் முனிவர்களோடு தக்ஷனும் வருந்தினான்.

உமாதேவி அழலின்கண் முழுகியதை உணர்ந்த சிவபிரான் கோபித்து ஒருசடையைப் பூமியில் வீசவும் அதினின்றும் வீரபத்திரக் கடவுள் தோன்றி வணங்க, அவரைச் சிவபிரான் நோக்கி, தக்ஷன் யாகத்தை அழித்து, அங்குள்ளாரையும் தண்டித்து வரும்படி ஆக்ஞாபித்தனர். அவ்வாறே வீரபத்திரக்கடவுள் சென்று தக்ஷன் முடியையும் எச்சன் முடியையும் வெட்டி வேள்விக்குண்டத்தில் இட்டு அதனை அழித்து, மற்றவர்களைத் தக்கபடி தண்டித்து, வேள்விச்சாலையில் அக்கினியை வைத்து, எதிர்த்த விஷ்ணு

சக்கரப்படையின் வலிமையைப் போக்கி புறங்கண்டு திரும்பினர். அக்கினியில்முழுகி தாக்ஷாயணி என்னும் பெயரைமாற்றிய உமாதேவியார் இமயமலையரையன் புத்திரியாய் சிவபெருமான் தம்மைத்திருமணம் செய்யும் வண்ணம் கருதி தவம்புரியத் தொடங்கினர்.

அப்போது நாரதமுனிவர் சமீபித்து, "திருப்பேரூரில் தவமியற்றினல் விரைவில் சிவபெருமான் எழுந்தருளி மணந்தருளுவார்" என்று விண்ணப்பம்செய்ய, அங்ஙனமே பேரூர்சார்ந்து உமாதேவியார் தவம் செய்தருளினர். அப்பொழுது சிவபெருமான் வயோதிகப் பிராமணராய் வந்தருளினர். அவரை உமாதேவியார் அடியவரில் ஒருவராகக்கொண்டு வணங்க, வேற்று உருவம்கொண்ட சிவபிரானும் பலபல விநோதமாக வினவ, அதற்கு உமாதேவியாரும் விடைகொடுத்து, இரந்துண்டல் முதலியவாகச் சிவபெருமானை இகழ்ந்து கூறியவைகளின்பொருட்டு உத்தரஞ் சொல்லத் தொடங்கினர். "கர்மமே கர்த்தாவென்னும் தேவதாருவனத்து முனிவரை ஆளுதற் பொருட்டு பிக்ஷாடனரானதே அன்றி வயிரவ அம்சத்தானும் இகழ்ந்த பிரமன் சிரத்தைக்கிள்ளி விஷ்ணு முதலிய தேவர் முனிவரிடத்தும் தருக்கழியும்படி உதிரபிக்ஷை ஏற்றனர். பாவக்கடலினின்றும் உயிரை அருட்கரை ஏற்றுதலால் உருத்திர நாமம் உற்றனர்.

அடைக்கலமாக வைத்தபொருளைக் கொடாமைபற்றி அமரர் வருந்தினமையால் அக்கினிதேவன் அழுது உருத்திரப்பெயரும் அடைந்தான். உயிர்களின் பருவபேதம்பற்றி சிவபிரான் பலவுருக் கொண்டருளினர். தேவதாருவனத்துமுனிவர் வேள்வியினின்றும்வந்த புலியின்தோலை உடுத்து மற்ற மான், மழு, பாம்பு, தீ, நகுசிரம் இவைகளைத் தரித்து, முயலகனை மிதித்து, நடித்து, பூதங்களைப் படைகளாக்கினர். அண்டங்களை வயிற்றில் அடக்கத்தொடங்கிய பகாசுரனைக்கொன்று இறகினை அணிந்தனர். பகீரதன் பொருட்டுக் கொடுத்த கங்கை உலகத்தை அழிக்கச்சென்ற தருக்கை அடக்கி முடியில் தரித்தனர். தக்கன் சாபம் திரும்படி சரணடைந்த சந்திரனைச் சடையில் முடித்தனர். அரிபிரமேந்திராதி தேவரை நெற்றிக்கண்ணால் நீற்றி, அப்பொடியையும் என்பு முதலியவற்றையும் தாம் நித்தியர் என்பது தோன்ற திருமேனியில் தரித்தலாதிகளைப் புரிந்தனர். இத்துணைப் பெருமையுடையார் பேரழகரல்லரோ!" என்று உமாதேவியார் விடை அளித்தபோது, விருத்த வேதியர் உருவை மறைத்து, இடபாரூடராய் சிவபிரான் எதிர்நின்றனர். உமாதேவியாரும் வணங்கி நின்றார். தேவர்கள் பூமாரிபொழிந்தனர். பின்பு சிவபெருமான் உமாதேவியார் திருக்கரம்பற்றி அந்தப்புரத்தில் சென்று அனைவரும் வணங்க எழுந்தருளியிருந்தார்.

26. கௌரி திருமணப்படலம்

பார்வதிதேவியைத் திருமணம் செய்துகொள்ள சிவபிரான் திருவுளம் கொண்டு, நாரதமுனிவர் முகமாகச் சமஸ்த லோகத்தாருக்கும் அறிவித்

தருளினர். பின்பு பேரூரில் திருக்கலியாணமண்டபம் முதலியவற்றைத்தாமே சங்கற்பமாத்திரையால் நிருமித்தனர். நாரத முனிவர் எவ்விடத்தும் சென்று "திருப்பேரூரில் பருவதராஜன் பெற்ற பார்வதி தேவியாரைத் திருமணம் செய்யச் சிவபெருமான் திருவுளம் பற்றினர். அங்கே அனைவரும் செல்லக் கடவிர்'' என்று கூறிமீண்டனர். பின்பு வயிரவக்கடவுள், வீரபத்திரக்கடவுள், அரிகரபுத்திரர், கூர்மாண்டர், காலாக்கினி ருத்திரர், ஆடகேசர், ஏகாதச ருத்திரர் ஆகிய எல்லோரும் அளவற்ற சிவகணங்கள் சூழ்ந்துவரச் சென்றனர். திருமால், பிரமதேவர், அஷ்டதிக்குப் பாலர், ஆதித்தியர், உருத்திரர், வசுக்கள், மருத்துவரென்னும் முப்பத்துமுக்கோடி தேவர், வித்தியாதரர், கருடர், காந்தருவர், உரகர், நாற்பத்தெண்ணுயிரமுனிவர் ஆகிய அனைவரும் பத்தினிகளுடன் போயினர். பரிசனங்களும் வரிசைகளும் உடன்கொண்டு, மலைகள் பலவும் சூழ்ந்துவர மேனையாகிய பத்தினியுடன் பருவதராஜன் சென்றனன். சப்த சாகரங்களும், கங்கையாதி தீர்த்தங்களும், காலங்களும், திக்குகளும், அஷ்டகஜங்களும் போந்தன. நால்வகைப் படைக்கடலும் புடையே நடக்கப் பூலோகவேந்தர்களும் சார்ந்தனர். சார்ந்த சமஸ்தர்களும் பரசிவனுடைய ஸ்ரீ பாதார விந்தங்களைப் பணிந்தனர். பின்னர்ச் சிவபெருமானும் உமாதேவியாரும் திருமணக் கோலம்கொண்டு, மங்கலவாத்தியங்கள் முழங்க, அரம்பையர் ஆட, கின்னரர்பாட, நாரதர் முதலியோர் வீணகானம்செய்ய, அமரர் பூமழை சொரிய, திருமால் இட்ட பாதுகைமிது சிவபெருமான் திருவடிசாத்தி பக்கத்தே உமாதேவியார் வர, பாவாடைமிது சென்று தேவமகளிர் அஷ்டமங்கலங்கள் ஏந்தி வாழ்த்த, அவர்களுக்குத் திருவருள் நோக்கம்செய்து வேதசிவாகமங்களில் விதித்த வண்ணம் பிரமதேவர் முளைப்பாலிகை முதலியவற்றை முன்னரே அமைத்துள்ள திருக்கலியாண மண்டபத்தில் உமாதேவியாரோடும் ஆசனத்தில் விற்றிருந்தனர்.

அமரர்கள் அனைவரும் ஆக்ஞைப்படி ஆதனத்தில் இருந்தனர். அப்பொழுது பருவத ராஜன் சமிபித்து மேனை வணங்கி பசுப்பால் வார்க்க மெய்யன்பினுல் சிவபெருமானின் திருவடிகளை விளக்கி, தன் சிரம்மீது புரோக்ஷித்து உள்ளும் பருகி உமாதேவியாராகிய புத்திரியாரைத் தத்தம் செய்தான். உடனே தேவர்கள் பூமாரிபொழிய, தேவதேவர் திருக்கையில் ஏற்றருளி, பிரமதேவர் அக்கினி வளர்க்க, மங்கல சூத்திரத்தை உமாதேவியார்கழுத்திலே தாரணம்செய்து ஆன்மகோடிகள் அனைத்தும் இன்பம் நுகர்ந்து உய்யும்வண்ணம் செய்யத்தக்க சடங்குகள் எல்லாம் நடத்தியருளினர். பின்பு மணமண்டபத்தினின்றும் சிவபெருமான் இடபாரூடராய் உமாதேவியோடும் திருவிதியில் எழுந்தருளி, திருக்காட்சி கொடுத்து, திருக்கோயிற் புகுந்து சிங்காதனத்தில் விற்றிருந்து, திருமணவாளக் கோலம் தரிசிக்க வந்தவர்கட்கெல்லாம் விரும்பிய வரங்களையருளி எல்லாவுயிரும் வாழும் வண்ணம் உமாதேவியாரோடும் திருப்பேரூரில் வாழ்ந்திருந்தார். இத்திருமணச்சரிதம் கேட்டோர் இம்மையில் மணம்பெற்று இறுதியில் முத்தி மணமும் பெறுவர்.

27. தெய்வயானை திருமணப்படலம்

இமயமலைச்சாரலில் நரநாராயணரது ஆச்சிரமத்திலே, முருகக் கடவுளைத் திருமணம் புரியக்கருதி தெய்வயானையம்மை தவம்செய்தனள். அப்போது நாரதமுனிவர் அடுத்து, மானசிகமாக வணங்கி, ''பேரூரைச் சார்ந்து, தவம் புரிவாயாகில் விரைவில் முருகக்கடவுள் மணந்தருளுவார்'' என்ற அளவில் உடனே தெய்வயானையம்மை திருப்பேரூர் சேர்ந்து, திருவுள்ளம் முருகக்கடவுள் திருமேனியை மருவவும், கண்கள் அரும்பவும், முகங்குவியவும், திருவுருவாடவும், பஞ்சப்பொறிகள் மறையவும், சித்திரதீபம் போல் அசைவற்றிருந்து தவஞ்செய்தனள். அக்காலையில் முருகக்கடவுள் எதிர்நிற்க, அவரைவணங்கிய தெய்வயானையம்மை திருநோக்கமும் முருகக் கடவுள் திருநோக்கமும் இசையப் பெருங்காதலுடையராயினர். இதனைச் சிவபெருமான் திருவுளங்கொண்டருளி இந்திரனையழைத்து, 'தெய்வயானைக்கும் முருகனுக்கும் இத்திருப்பேரூரில் மணம் செய்வற்கு வேண்டியவைகளை விரைந்து செய்வாய்' என்று திருவாய் மலர்ந்தருளினர்.

அப்பொழுது இந்திரன் மணவோலை எவ்விடத்துக்கும் அனுப்பி, நகரத்தைப்புதுக்கி, மணமண்டபம் நிருமித்து, சிவபெருமானிடத்தில் விண்ணப்பம் செய்தான். பின்பு அம்மணமண்டபத்தில் சிங்காசனத்தின் மீது சிவபெருமான் வீற்றிருந்தருளி முருகக்கடவுளைத் திருமணக்கோலத்துடன் வெள்ளையானைமீது வீதிவலம் வரச்செய்து,மணமண்டபத்தில் இருக்கும்படி ஆக்ஞாபித்தருள, அங்ஙனம் ஆசனத்தில் முருகக்கடவுள் இருந்த பின்பு தெய்வயானை அம்மையும் அருகே வந்திருந்தனள். உருத்திரர் முதலியோர் பக்கத்தே விளங்கினர். மங்கல வாத்தியமும் வாழ்த்தும் முழங்கின. அப்போது இந்திரன், இந்திராணி பசுப்பால் வார்க்க, முருகக் கடவுள் திருவடிகளை விளக்கி அதனை உள்ளும் பருகி சிரமீது புரோக்ஷித்துக் கொண்டு, தெய்வயானையம்மையைத் தத்தம்செய்ய முருகக்கடவுள்ஏற்றருளி, வியாழபகவான் அக்கினிகாரியம் செய்து மதுபருக்கம் அமுதுகளை ஏந்த, அதற்கு முகமலர்ந்தருளி, கன்றோடு காமதேனு செல்லுதலை நோக்கி, தெய்வயானையம்மை வலத்திருக்கைபற்றி, ஏழடியிட்டு, அம்மியில்அக்ஷதைதெளித்து அத்தேவிபாதமலரைத் தூக்கிவைத்து, சிவபிரான் அஷ்டமூர்த்தத்தில் ஒன்றான அக்கினியை வலம்செய்து, தெய்வயானையம்மை திருக்கையினின்றும் பொரியை ஏற்று, அக்குண்டத்தில் சொரிந்து, பின்னர்த் திருமங்கலிய தாரணம் செய்தருளினர். அப்போது தேவர்கள் மலர்மழை பொழிந்தனர். சிவபெருமான் ஆக்ஞைப்படி குபேரன் அனைவர்க்கும் பொருளும் இரத்தினாபரணங்களும் பீதாம்பரம் முதலியனவும் கொடுத்தான். பின்பு திருவீதியில் தெய்வயானையம்மையோடு முருகக்கடவுள் திருவுலாச்செய்து, திருக்கோயிலின்கண் ஆசனத்தில் இருந்தருளினர். மற்றைய நாளிலும் செய்யும் சடங்குகளை முடித்தபின்னர்ச் சிவபிரான் சமஸ்தருக்கும் வேண்டும் வரங்களை அருளினர். முருகக்கடவுள் தெய்வயானையம்மையுடன் சிவபிரானும் உமாதேவியாருமாகிய இருமுதுகுரவரிடத்தே இருந்தருளினர். இத்திருமணச் சரிதத்தைக்கேட்டோர் ஸ்கந்தலோகத்தில் ஆனந்தம் அனுபவிப்பார்.

28. குசத்துவசன் வரம்பெறுபடலம்

குசத்துவசன் எனும் மன்னன் உலகை ஆளுகின்றபோது, புத்திரப் பேறின்றி மனங்கவன்று, அமைச்சர்களிடத்தே உலகாட்சியை ஒப்பித்து, பலமலையும் பலவனமும் பலசுரமும் கடந்து, பேரூர் எல்லையில் வந்து, தூரத்திலே வெள்ளியங்கிரியை வணங்கி, கண்களினின்றும் மார்பின்கண்ணே ஆனந்த அருவிஒழுக உழுவலன்பின் முழுகி மனம்முன்னேசெல்ல, ஸ்ரீகாஞ்சி நதியைப் பணிந்து அதில் விதிப்படி நீராடி, பத்தியோடு உத்தம வேதியர்க்குத் தானங்கொடுத்து, ஆலயத்தை அடுத்து, ஸ்தூலலிங்கமாகிய திருக்கோபுரத்தைச் சேவித்து, இடபதேவருக்குச் சமீபத்திலுள்ள பத்திரலிங்கத்தின் அருகே பணிந்து எழுந்து குழைந்து உருகி, பிரதக்ஷிணம் வந்து, பன்னீர் நிழலின்கண் எழுந்தருளியிருக்கும் முழுமுதலாகிய ஆதிலிங்கேசர் பாதாரவிந்தங்களைத் தரிசித்து, மரகதவல்லியம்மை திருவடிகளையும் வணங்கி, பின்பு வெள்ளியம்பலத்தைத் தரிசித்தான்.

தரிசித்த அற்றைநாள் உபவாசமாய், இரவிலே நித்திரையின்றி மற்றைநாட்காலையில் நித்திய கர்மானுட்டானங்களை முடித்து, சிவபெருமான் திருவடிகளைத் தியானித்துத் தவம்செய்தான். அங்ஙனம் ஆயிரம் தேவவருடம் ஆகும்போது சிவபிரான் உமாதேவி சமேதராக இடபாரூடராய் எழுந்தருளினர். அப்பொழுது குசத்துவசன் வணங்கித் துதித்துக் கூத்தாடினன். அவனுக்குச் சிவபெருமான் "நம்மை வழிபட்டமையால் இரண்டு பெண் மக்களைப் பெறுவாய்; மருதவரையில் முருகனை வழிபடுவாயாகின் ஒரு புத்திரனைப் பெறுவாய்'' என்று வரமருளி அந்தர்த்தானமாயினர். பின்பு அரசன் மருதவரையில் முருகக்கடவுளை வழிபட்டு வரம்பெற்று முருகக்கடவுளுக்கும் சிவபெருமானுக்கும் நித்திய நைமித்திகங்களை நடாத்தி, விடைபெற்றுச் சென்று, தன்பதியில் வதிந்து, புதல்வனையும் புதல்விகளையும் பெற்று மகிழ்ந்து வாழ்ந்திருந்தான்.

29. குலசேகரன் குட்டநோய் தீர்ந்தபடலம்

மலைநாட்டிலே சேரர்குலத்திலே குலசேகரன் என்னும் மன்னவன் உதித்து ஆண்டுவந்தபோது அவன் உடலில் குட்டநோய் பொருந்தியது. அதனோடு அரசாளுதலில் விரசங்கொண்டு வைத்தியரை வருவித்து "என்னை வருத்துகின்ற நோயை வருத்தக்கடவிர்'' என்று சொன்னான். அதனைக் கேட்ட வைத்தியருக்கு வாகடநூல் வழியே சூரணம், இலேகியம்,நெய், குளிகை, குழம்பு, பஸ்மம், சிந்தூரம் முதலிய மருந்துகள் அமைத்துக் கொடுப்பதே கடனும், அரசனுக்கு அம்மருந்தை அருந்துவதே கடனும், நோய்க்கு வருத்துவதே கடனும் ஆயினமைபற்றி மருந்தினைக் கைவிட்டு அரசன் அறங்கள் பலவற்றையும் செய்துவந்தான். அதனாலும் நோய் நீங்காமையால், சிவக்ஷேத்திர யாத்திரையை விரும்பிச் செய்துவருங்கால் வியாதி அதிகம் குறைவின்றிச் சமமாயிருக்கக் கண்டு அரசன் களிப்புற்று ஆண்டுகள்தோறும் சிவஸ்தல சேவை செய்து ஒரு வருடத்தில் தனது

பதியைவிட்டு பல தலங்களைப் பணிந்து, இராமன் வழிபட்ட இராமேசு வரத்தை வணங்கித் திரும்பும்போது நேர்பட்ட நாரதமுனிவர் அருளிய வண்ணம் திருப்பேரூர் சேர்ந்து ஸ்ரீ காஞ்சிநதியில் நீராடி சுவாமியையும் அம்மையையும் வழிபட்ட மாத்திரத்திலே குட்டநோய் விட்டொழிந்து அழகிய வடிவத்தினையுடையவனாய் விளங்கினன். பின்பு அரசன் "நேசம் சிறிதுமில்லாது பாசம் பெரிதுமுடைய நீசனேன்மாட்டும் ஈசனார் செய்த பெருங் கருணையிருந்தபடி என்னை'' என்று நைந்துருகி, பட்டிநாயகருக்கு மட்டில்லாத திருப்பணிகள் செய்வித்து, அப்பட்டிநகரை விட்டு நீங்காது வதிந்து, பத்திசெய்து, பெத்தநிலை குலைந்து முத்திநிலை சித்திக்கப் பெற்றனன்.

30. திரிலோக சோழன் செயிர்தீர்ந்தபடலம்

தெய்வப் பொன்னித் திருநதியாற் சூழப்பெற்ற சோழநாட்டிலே திரிலோகத்திலுமுள்ளார் இடர் அடையாதபடி காத்தமையால் திரிலோக சோழராஜன் என்னும் பெயர் பூண்டவன் அரசு புரியுங்கால் அனைவரும் திருநீறும் கண்டிகையும் பூண்டு, சித்தாந்த சைவக்கேள்வி உடையராய், செல்வராய் வாழ்ந்தனர். அங்ஙனம் வாழும்போது நேபாள தேயத்தினின்றும் கல்வியில் வல்ல காபாலமதத்தவர் சிலர்வந்து கலந்தனர். அப்பொழுது சிவநிசி அடுத்தது. அந்நாளில் பிராமணரும் அடியவரும் திருவிடைமருதூரில் சிவபிரானைத் தரிசிக்கப் போந்தனர். அச்சோழனும் அத்தலத்தை அடைந்தான். அதனையுணர்ந்த காபாலமத வேதியரும் அங்கே வந்து ஆலயத்தில் அரசனை எளிதிற் சந்தித்து ஆசீர்வாதம் செய்ய அரசன் அவ்வேதியர் புறவேடப் பொலிவையும் தேககாந்தியையும் மதித்து அகத்தை மதியாதவனாய் அஞ்சலி செய்து யாரென்று வினவ, அதற்கு 'இவ்வரசன் நமது வழிப்படுவன்' என்று கருதி, அவருள்ளே ஒரு விருத்தன், "மகாராஜாவே, நாங்கள் வாழ்வது நேபாள தேசம், உமது தேசவளப்பமும் புகழும் கேள்வியுற்று நோக்குதற் பொருட்டு இங்கே வந்தோம். அதிரகசியமாக உமக்கு உபதேசிக்கத்தக்கது ஒன்றுண்டு'' என்றவுடனே அரசன் அதற்கு உடன்பட்டு, தனித்தவனாய் வணங்கினன். அப்போது அவ்விருத்தன், "ஆராயும்வழி, மகளிரைப்புணர்தலே இன்பமாகும். அதனாலே உயிர்கள் அபிவிர்த்தியாகின்றன. இதனையன்றி, உலகத்தைச் சிருட்டிப்பதற்கு ஒருகடவுள் இருப்பதாக அறிவிலார் கூறுவர். கடவுளைக்கண்டவர் யாவர்? கண்ணாற் காண்பதேமெய். காணாதது பொய். ஆதலால் உலகத்துக்கு வேறான கடவுள் ஒருவனில்லை. மரத்துடன் மரம் உரினும் போதும், சூரியகாந்தக்கல்லில் சூரியகிரணம் தொடும்போதும் அக்கினி தோன்றுதல் போலப் புணர்ச்சிக் கண்ணே உலகம் தோன்றும். அங்ஙனமாகவின் புணர்ச்சியே பொருளாம். அதற்கு மகிமைதருவது சுராபானமே. இதனையும் பொருளாகக்கொள்ளக் கடவீர்'' என்று பொய்யை மெய்யாகக் கூறினான்.

அக்காபால மதத்தின் ஆபாச மார்க்கத்தை அரசன் விரும்பி, அறிவு அழிந்து, மறைமுறை பிறழ்ந்து, மது நுகர்ந்து, வருணாச்சிரமங் கடந்து, மடவாரோடுகூடி இன்பமனுபவித்து, ஒழுக்கமுடையாரை வருத்தி, காபால

மதத்தவரே களிப்படையும்படி கொடுங்கோல் செலுத்தினன். "மன்னவனெப்படி மன்னுயிரப்படி" என்றபடி குடிகளும் விதிவிலக்கின்றி ஒழுகினார்கள். இங்ஙனம் சோழநாடு முறைதிறம்பிய செய்கையைப் பிரமதேவர் நோக்கி, நாரதமுனிவரை அழைத்து, அவ்வரசனைத் திருத்தும்படி ஏவ, அப்போதே முனிவர் அரசன் சபையை அடைந்து, கமண்டலத்தின் நீரை ஸ்ரீபஞ்சாக்கரத்தை உச்சரித்து அவன் முகத்திலே புரோக்ஷித்தனர். உடனே அரசன் துன்மதமோகம் ஒழிந்து, முனிவரை வணங்க, அக்காலையில் முனிவர் திருவருள் நோக்கம் செய்து திருநீறுகொடுக்க, அதனை ஏற்று அரசன் அணிந்து, பணிந்த அளவில், "உனது தீவினைநோய்க்கு மருந்து மேலைச் சிதம்பரத்தில் சிவபெருமான் திருவடிகளை வழிபடுதலே" என்று முனிவர்கூறி மறைந்தார். மன்னனை முனிவர் திருத்திய முறையை அறிந்த காபால மதத்தினர் அந்நாட்டைவிட்டு ஓட்டம்பிடித்தனர். அரசனும் பேரூர் சார்ந்து, காஞ்சி நதியில் நீராடி, சுவாமியையும் அம்மையையும் தொழுது துதித்துப் பிழைகள் ஒழிந்து, சிலநாள் அங்கேதங்கி, பலதிருப் பணிகள் செய்து, விடைபெற்று சோழநாடு அடைந்து, மனுநூல்வழியே செங்கோல் செலுத்தி, சைவசமயம் தழைத்தோங்கும்படி அரசாண்டான்.

31. உபதேசப்படலம்

திருப்பேரூரில் சிவபெருமான் பெருங்கருணையினால் மகிழ்ந்து எழுந்தருளியிருக்கும் போழ்து, உமாதேவியார் எழுந்துவணங்கி, "சுவாமி, பெத்த நிலை நீங்கி, முத்தியின்பத்தில் அழுந்துகின்றவர்க்குக் காட்டும் ஆனந்த தாண்டவத்தைக் கோமுனி முதலியோருக்குக் காட்டிய காரணம் என்னை" என்று வினவ அதற்குச் சிவபிரான், "தேவி, கோமுனியும் பட்டிமுனியும் பேரன்போடு சடைமுடியுடன் விபூதி உருத்திராக்கங்களைத் தரித்து, வில்வத் தளிர்களைக்கொண்டு உபசாரங்களினால் நம்மைச் சிவலிங்கத்தின்கண்ணே நெடுங்காலம் பூசித்ததேயன்றி, இரசதசபையிலே நடிக்கும் நமதுவடிவத்தும் அருச்சித்து மஹோற்சவம் நடாத்தி வணங்கி பஞ்சமலங்களையும் வென்று விரும்பியபடியால் அப்பொழுது நமது நாடகத்தைக் காட்டினோம்", என்று திருவாய்மலர்ந்தனர்.

அதனைக்கேட்ட உமாதேவியார், "அம்முனிவர் இருவரும் சடை முதலியவற்றைத் தரித்துப் பூசித்தபடியால் அச்சடை முதலியவற்றின் மகிமைகளைச் சாற்றி அருளவேண்டும்" என்று வேண்ட, அதற்குச் சிவபெருமான் அருளிச்செய்யத் தொடங்கினர்.

"உமையே, நமது வேடங்கள் பலவற்றுள்ளும் சடைமுடியே சிறந்தநாம். சடைமுடி தரித்தவரை யாமாகக் கருதி தேவர் முதலாயினோர் வழிபடுவர். ஒவ்வொரு சடையும் ஒவ்வொரு சிவலிங்கமாம். சடையை முடித்தவனுக்கு ஆயிரம் பிறவியின் முன்னுள்ளாரும் பின்னுள்ளாரும் நமது சிவலோகத்தைச் சேர்வர். அவனை வணங்கினோன் பாவியாயினும் புண்ணியமும் செல்வமும் பெறுவன். சடையிற்பொருந்திய ஒரு நீர்த்துளி ஒருவன் மேல் தெறித்தால் பேய் பூதம் ஆதியால் வருந்தும் துன்பமும் நோயும்

பாவமும் போம். விபூதியாவது வைதிக விபூதி என்றும் இலௌகிக விபூதி என்றும் இரண்டாகும். அவற்றுள் வைதிக விபூதி ஓமகுண்டத்தில் விளங்குவதாம். இலௌகிக விபூதி கோமயத்தினுல் ஆவதாம். வைதிக விபூதி பிரமன் ஓமகுண்டத்திலே தோன்றுவதாகிய புராதனி என்றும், பிராமணர் ஓமகுண்டத்திலே தோன்றுவதாகிய சத்தியோசாதை என்றும் இரண்டாம். தீக்ஷிதராகிய சைவர் தரிக்கும் விபூதி கற்பம், அநுகற்பம், விகற்பகம் என மூன்ரும். அவற்றுள் கற்பமாவது கன்று ஈனுதபசு, இளங்கன்றுப் பசு, கன்றிழந்த பசு, மலட்டுப்பசு, குறைந்த செவி கோடு வால்களை யுடைய பசு, பவ்வியுண்ணும் பசு, நோயுள்ள பசு என்னும் இவற்றைவிட்டு பங்குனி மாதத்தில் நெல்லரிந்த கழனிகளிலுள்ள தாளைமேய்ந்த நல்ல பசுக்கள் விட்ட மயத்தை எட்டாம் திதி, பதினுன்காம் திதி, பதினைந்தாம் திதிகளிலே, சத்தியோசாதத்தினுல் பூமியில் விழுமுன்னே தாமரை இலையில் ஏற்று மேல்வழும்பு நீக்கி, வாமதேவத்தினுல் பஞ்சகவ்வியம் பெய்து, அகோரத்தினுல் பிசைந்து, தற்புருடத்தினுல் திரட்டி, ஓமாக்கினியில் இட்டு ஈசானத்தால் எடுத்து, புதிய வஸ்திரத்தினுல் வடிகட்டி, புதிய கடத்தில் நிறைத்து, காயத்திரிமந்திரம் உச்சரித்து, பரிசுத்த ஸ்தானத்தில் வைத்து, நறுமலர் சாத்தி, சுத்த வஸ்திரத்தால் வாய்கட்டுவதாம். உடனே ஓம குண்டத்திலிடாது உலர்த்தி விளைவித்தலும் விதியாம்.

அநுகற்பமாவது வனத்தில் உலர்ந்த மயத்தைச் சித்திரை மாதத்தில் கொணர்ந்து பொடித்து அதில் கோஜலம் பெய்து முன்கூறிய விதிப்படி விளைவித்தலாம். உபகற்பமாவது இயல்பாக அக்கினியினுலே தகிக்கப்பட்ட வனத்திலுள்ள பொடியில் பஞ்சகவ்வியம் பெய்து முற்கூறிய விதிப்படி அக்கினியிலிட்டு எடுத்தலாம். நீலநிற விபூதி நோயை ஆக்கும். தாமிரநிற விபூதி ஆயுளை நீக்கும். செந்நிற விபூதி புகழைப் போக்கும். பொன்னிற விபூதியானது தரித்திரத்தைச் சேர்க்கும். வெண்ணிற விபூதி புண்ணியத்தை விளைக்கும். ஆதலால் வெள்ளிய விபூதியே தரித்தற்குரிமை உடையதாம். அவ்விபூதியை மான்தோல், புலித்தோல், வஸ்திரம் இவைகளால் பன்னிருவிரல் அளவு உயரமும் எண்விரல் அளவு அகலமும் வாய் வட்டமுமாக அமைத்த ஆலயத்தில் வைத்து சைவரும் வைதிகரும் அவரவர்க்குரிய விதிப்படி மூவிரலாலும் சிரம் முதலிய ஸ்தானங்களில் அணியக்கடவர். பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் இம்மூவருக்கும் வைதிகவிபூதியே உரியது. அதீக்ஷிதராகிய சூத்திரர்க்கு அசைவ விபூதியும் திருக்கோயில் மடைப்பள்ளி விபூதியும் திருவடியார் மடாலயத்தின் மடைப்பள்ளி விபூதியும் வனத்தில் வெந்த விபூதியும் உரிமையாம். சங்கரஜாதியார்க்கு மடைப்பள்ளி விபூதியும் வனத்தில் வெந்த விபூதியும் ஆகும்.

அக்கினி, தேவர், குரவர் இவர் முன்னும், வழி, அசுத்தநிலம், இழிஞர் இவற்றிடத்தும் விபூதி தரிக்கப்படாது. ஒருகையால் ஏற்றவிபூதி, விதிப்படி இயற்று விபூதி, விலைவிபூதி, அதீக்ஷிதர் கொடுத்த விபூதி ஆகிய இவைகள் தரிக்கலாகா. பூமியில் விழ்த்தலும், அங்காத்தலும், தலை நடுக்கலும், கவிழ்தலும் செய்யாது, திருநீறு தரிக்கக்கடவர். பிராமணர் உருவமுழுவதும்

மற்றையோர் நாபிக்கு மேலும் உத்தூளனம் செய்க. விபூதிதரித்தே அற மாதிகள் புரிக. திருநீறு தரியாதவர்முகம் சுடுகாடாகும். அதனைப்பார்த்தவர் பஞ்சாக்கரத்தில் நூறு உரு ஜபிக்கக்கடவர். விபூதி தரியாது தவம் முதலியன நிரம்பச்செய்தாலும் பயனில்லை. தரித்தவர் சும்மா இருந்தாலும் பயன் பெறுவர். திருநீறு தரித்தே சிராத்தம் செய்க. பாவத்தை நீற்றலால் நீறு, செல்வம் தரலால் விபூதி, உயிர்களின் மலக்குற்றத்தைக் கழுவுதலால் சாரம், அறியாமை நீங்க விளக்குதலால் பசிதம், பூதாதிகளைப் போக்கிக் காத்தலால் காப்பு என்னும் காரணப்பெயர்களும் அவ்விபூதிக்கு உண்டு.

உருத்திராக்ஷமாவது முப்புரத்தவர் வருத்தலினாலே அமரர்கள் தவம் செய்ய அதற்கு இரங்கி நாம் போய் இமையாது நோக்கினமை பற்றி மூன்று கண்களினும் நீர் துளித்தன. அவற்றுள் வலக்கண் நீரிலே பன்னிரண்டு விருக்ஷமும், இடக்கண் நீரிலே பதினன்கு விருக்ஷமும், நடுக்கண் நீரிலே பத்து விருக்ஷமும் உண்டாயின. இவைகளுக்கு உருத்திராக்ஷவிருக்ஷம் என்று பெயர். வெண்ணிறமணி பிராமணர்க்கும், பொன்னிறமணி க்ஷத்திரியர்க்கும், வெண்மை பொன்மை கலந்தமணி வைசியர்க்கும், கருநிறமணி சதுர்த்த ருக்கும் உரிமையாம்.

ஒருமுகமணி சிவரூபமாய் பிரமகத்தி நீக்கும். இருமுகமணி சிவசத்தி ரூபமாய் கோகத்தி நீக்கும். மும்முகமணி அக்கினி ரூபமாய் ஸ்திரீகத்தி நீக்கும். நான்முகமணி பிரமனுருவாய் மாநுடக்கொலை தொலைக்கும். ஐம்முக மணி காலாக்கினி ருத்ரரூபமாய் உணவினலாகும் குற்றங்களை ஒழிக்கும். ஆறுமுகமணி அறுமுகன் உருவாய் வலக்கையிலே தரித்தலால் பிரமகத்திச் சாயையைப் போக்கும். ஏழுமுகமணி ஆதிசேடன் உருவாய் பசுக்கொலை பொருட்களவுகளைத் தீர்க்கும். எண்முகமணி விநாயகனுருவாய் குருதார கமனம் தானக்கிரகணம் பிறர் அன்னம் புசித்தலாகிய பாவங்களைக்கெடுக்கும். ஒன்பதுமுகமணி வயிரவனுருவாய் பூதாதிகளின் தீங்கும் பாம்புகளின் தீங்கும் நீங்கச்செய்து செல்வத்தையும் முத்தியையும் கொடுக்கும். பத்துமுக மணி விஷ்ணுரூபமாய் தீய நாள் கோள் முதலிய தீங்குகளைத் தீர்க்கும். பதினொருமுகமணி ஏகாதச ருத்திரரூபமாய் ஆயிரம் வேள்வியின் பயனும் ஒருலக்ஷம் பசுக்களோடு பெரும்பொருளும் தானம்செய்த பயனும் உண் டாக்கும். பன்னிருமுகமணி துவாதச ஆதித்தரூபமாய் அசுவமேதப் பயனும் மேருதானப் பயனும் கொடுக்கும். பதின்மூன்று முகமணி முருகனுருவாய் இஷ்டகாமிய முதலியவற்றைக் கொடுத்து தந்தை முதலியோர் கொலைப் பாவத்தைத் தொலைக்கும். பதினன்முகமணி எமதுருவும் நினதுருவுமாய் வசியத்தை ஆக்கி சிவபுரத்தில் இருத்தும். அதனைக் கழுத்தில் அணிந்தால் மந்திரங்கள் பலிக்கும். வெற்றியுண்டாம். உருத்திராக்ஷம் தரித்து சற்காரி யங்கள் இயற்றினல் ஒன்று அனந்தமாம். தரியாதவர்க்குப் பயனில்லை. கீழ்மக்களாயினும் பெண்களாயினும் மதுமாமிச பக்ஷணிகளாயினும் உருத்திராக்ஷத்தை முடிமீது தரித்தாராயின் அவர் பாவம் நீங்கி, இறுதியில் நமது வடிவத்தைப் பெறுவர். சிகையில் ஒன்றும், சிரசில் முப்பத்தாறும்,

கழுத்தில் முப்பத்திரண்டும், மார்பில் ஐம்பதும், கரத்தில் பதினறும் மணிக்கட்டில் பன்னிரண்டும், முகமுகம் சேர இடையே முடிந்து மேரு அமைத்து முறையே கொள்ளக்கடவர்.

ஜபவடம் நூற்றெட்டு, ஐம்பத்து நான்கு, இருபத்தேழு மணிகளாகக் கொள்க. அநாமிகை விரலில் செபித்தால் நோய் நீங்கும். மத்திமை விரலில் செபித்தால் பகைநீங்கும். தர்ச்சனி விரலில் செபித்தால் முத்தி சித்திக்கும். முத்திகாமிகள் மேல்நோக்கியும் புத்திகாமிகள் கீழ்நோக்கியும் ஒலியாமலும் பிறர் வழிக்குப் படாமலும் ஜபிக்கக்கடவர். மேருவினைத் தொடுத்து ஜபித்து மீட்டும் மேருவரும்போது அதனைக்கடவாது திருப்பல் வேண்டும். ஜபவடம் தவறுதல் முதலியவற்றிற்கு நமது அருட்குறிக்குச் செய்யும் பிராயச்சித்தத்திலே அரைவரிசை இயற்றுக. விரல், இறை, புத்திர சிவகமணி, சங்குமணி, படிகமணி, முத்து, தாமரைமணி, பொன்மணி, குசைமுடி, உருத்திராக்ஷம் இவை ஒன்றுக்கொன்று உயர்வாம். கிருகத்திலும் பசுக்கோட்டம் பத்துமடங்கு, நதிக்கரை நூறுமடங்கு, ஆலயம்ஆயிரமடங்கு, வனம் லக்ஷமடங்கு, மலைகோடிமடங்கு, நமது சந்நிதி அளவில்லாமல் ஜபிப்பவர்க்குப் பயன் உண்டாக்கும். முத்திகாமிகள் இருபத்தைந்து மணியும், சுபகாமிகள் இருபத்தேழுமணியும், திரவியகாமிகள் முப்பது மணியும் ஆபிசாரத்துக்குப் பதினைந்து மணியுமாகச் செபவடங்கொள்க. உருத்திராக்ஷத்தைத் தரிசித்தவர்க்கு லட்சம், பரிசித்தவர்க்குக்கோடி, தரித்தவர்க்கு ஆயிரம்கோடி, ஜபித்தவர்க்கு அநந்தம் மடங்குப் பயன் உண்டாம். அவர்கள் இம்மையில் வெற்றியும் மறுமையில் நமதுருவும் பெறுவர்.

உபசாரமாவது தேவர்கள், பாற்கடல் கடையும்போது வில்வமும் துளவமும் உண்டாயின. அவை நமக்கு மகிழ்ச்சி செய்வனவாம். துளவத்தினும் வில்வம் சிறந்ததாம். முற்றியதாயினும், சருகாயினும், ஈரிலை அல்லது ஓரிலை பொருந்தியதாயினும் விலக்கப்படாது. செல்வத்தைச் செய்யும் திருமகள் வாழ்தலால் ஸ்ரீ பலமாம். நோய்நீக்கம் முதலிய இம்மைப்பயனும் முத்திப் பயனும் தரும். அஷ்டோத்தர சத சகஸ்ரநாமங்களால் வில்வங் கொண்டு நமதடியில் அருச்சித்தவற்கு அளவற்ற பயனும். இங்ஙனம் வில்வ மாதிகளால் நம்மைப் பூசிப்பதேயாம். பின்னும் அவ்வுபசாரம் காலையில் செய்யும் கடன்களை முடித்து, திருப்பள்ளித்தாமம் கொண்டுவந்து, பின்பு நீராடி, சந்திபண்ணி, இடஞ்செய்து, சூரியனிடத்தும் நம்மைப் பூசித்து, பின்னர்ப் பஞ்சசுத்திபண்ணி, அருட்குறியின்கண் ஆசனமும் மூர்த்தியும் அருச்சித்து, மூர்த்திமானாகிய நம்மையும் தியானித்து, புஷ்பாஞ்சலியினால் ஆவாகித்து, பாத்தியம் ஆசமனம் அர்க்கியம் கொடுத்து, பூஜை முடியுங் காறும் இருந்தருளவேண்டி, எண்ணெய்க் காப்பு முதலியன அபிஷேகித்து அலங்கரித்து நிவேதித்து தீபாராதனை செய்து, கண்ணாடி முதலியனகாட்டி, திருவைந்தெழுத்தைச் செபித்து, அதனோடு உடல் பொருள் ஆவி மூன்றும் தத்தம்செய்து துதித்தலாம். இவ்வுபசாரத்தை இயற்றினோர் புத்தி முத்திகளைப் பெறுவர்'' என்று அருளிச் செய்தனர்.

32. திருநீற்று மேட்டுப்படலம்

செந்தமிழ் விளங்கும் பாண்டிவள நாட்டிலே கஜேந்திரமோக்ஷ நகரத்தில், தான்மிக பாண்டியராஜன் செங்கோல் செலுத்தி வித்துருலதை என்னும் பெயருடைய கற்பிற் சிறந்த மாதேவியோடுகூடி வாழ்ந்திருந்தான். அம்மாதேவி முத்தமிழ்க் கல்வியும் முற்றக்கற்று அழகினிற் சிறந்துள்ளவளாதலால் செந்தமிழ்க் கல்வியிற் பயின்ற மகளிர்குழாம் சூழச் சபையில் வதிந்தும், அக்குழாத்தொடு பூக்கொய்தல், புனல்விளையாடல், பொழில் விளையாடல் முதலாகியவற்றைப் புறநகரில் புகுந்து மகிழ்ந்து செய்தும் வருவாள்.

அக்காலத்தில் கொங்கணதேசத்தில் நான்கு வேதங்களிலும் வல்ல ஒரு அந்தணன், மகாராட்டிர நாட்டையாளும் பிரதாபமகுடராஜன், கங்கா நதி தீரத்திலே துலாபாரந்தூங்கச் செல்லும் செய்தி அறிந்து, அங்கே சென்று, வேதசோதனை கொடுத்து, துலாபாரப் பொருளைத் தானம்வாங்கிய பின் "வேதங்களை ஓதியுணர்ந்தும் அதன்பயனாகிய அறிவொழுக்கங்களிலே செல்லாது தானம் ஏற்று பாவ வழியில் ஒழுகுதல் முறையல்ல" என்று நைந்துருகிச் சிந்தனைசெய்து, தன்னகர் சேர்ந்து தானம் ஏற்றபொருளையெல்லாம் அறவழியிற் செலவிட்டு, தாமிரபருணிநதியில்நீராடி, பாவத்தைப் போக்கக்கருதி மனைவியோடு புறப்பட்டு கஜேந்திரமோக்ஷ நகரத்திற்சென்று தாமிரபருணி நதித்துறையில் உள்ள அரசவிருட்ச நிழலில் தங்கி, சிரமபரிகாரம் ஆகும்போதே இறுதிக்காலம் வந்து மரணம் அடைந்து, அரக்கனாய் அவ்வரச விருட்சத்தில் வசித்தான். மனைவியும் வருந்தி அப்பொருள் முழுவதையும் அவ்விருட்சத்தின் பொந்திலே சேமித்துவைத்து, பின்பு நாயகன் உடம்பை அக்கினியில் தகித்து, அன்றுமுழுதும் அழுது அழுது மயங்கி, மற்றைநாள் நிலத்தில் விழுந்து இறந்தனள். தவத்தொடர்பு இல்லாமையால் பொருள் இருந்தும் புண்ணியம் கைகூடப்பெறாது அப் பொந்தின் பொருளையும் காத்து அம்மரத்தில் அரக்கன் இருந்தான். இருக்கும்போது ஒருநாள் வித்துருலதையும் தாமிரபருணி நதியில் நீராட எண்ணி அவ்வரசடியிலே வந்துதங்கி, கல்லும் கசிந்து உருக வீணாகானம் செய்தனள். உடனே அரக்கன், "மாதேவி அழகையும், தருக்கையும், யாழ் பாடும் வல்லமையையும் நோக்கி இவளை அடைவோம்" என்றுகருதி அரசின் கொம்பினை விட்டு அப்பெண் கொம்பினைப் பற்றினான். அப்பொழுது வித்துருலதை மயங்கி உணர்விழந்து பிதற்றினள். அதனை அறிந்த மன்னன் மணி மந்திர ஔஷதங்கள் இயற்றியும் தீராது வருந்துங்கால் நாரதமுனிவர் தோன்றி, அரக்கன் பற்றிய இயல்பை அரசனுக்கு விரித்துரைத்து, "பேரூர் சேர்ந்து உன்மனைவி காஞ்சிநதியில் மூழ்கி, பிரமகுண்ட நீற்றை யணிந்து, பிரமதீர்த்தம் புரோட்சிக்கப் படுவாளாயின் அரக்கன் விலகுவான்" என்று அருளிச்செய்து மறைந்தனர்.

அங்ஙனமே தான்மிக பாண்டியன் மாதேவியை அழைத்துக்கொண்டு மேலைச்சிதம்பரம் சேர்ந்து, காஞ்சிநதியில் மூழ்கி, மனைவியையும் மூழ்குவித்து பிரமதீர்த்தத்தையும் ஆட்டி பிரம குண்டமாகிய திருநீற்றுமேட்டின் விபூதியை

அள்ளி காஞ்சிநதி தீர்த்தமும் பிரமதீர்த்தமும் பெய்து குழைத்து மனைவி வடிவம் முழுதினும் பூசிய மாத்திரையில் அவளைப் பற்றிய அரக்கன் வெளிப் பட்டு, அரக்கவுரு நீங்கி, தேவவுருப்பெற்று விமானம் ஏறி அரசனைநோக்கி "தீயேனையும் தூயனுக்கினை" என்று சுவர்க்கலோகம் சார்ந்தான். வித்துரு லதையும் பண்டை உணர்வு பெற்றனள். அப்பொழுது மன்னன் மனமிக மகிழ்ந்து திரும்பவும் ஸ்ரீ காஞ்சிநதியில் விதிப்படி மாதேவியோடு நீராடி, பல தானங்கள் கொடுத்து, சுவாமி தரிசனம் செய்து விடைபெற்று மாதேவி யுடன் பாண்டிநாடு சேர்ந்து வாழ்ந்திருந்தான். திருநீற்றுமேட்டு விபூதி தரித்தவர்க்கு பிரமராக்ஷஸமன்றி மலடும் நோயும் பாவம் முதலியவும் தீரும். பல பொருளும் சுவர்க்கமும் முத்தியும் சித்திக்கும்.

33. விசேட பூசைப்படலம்

சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரம் சேர்ந்த பூரணை திதியில் பட்டிசருக்கு எண்ணெய் முதலியவற்ருல் அபிஷேகித்து, ஆபரணங்கள் அணிந்து, பலவகை அன்னம் முதலியவற்றை நிவேதித்தவர் தீவினை அனைத்தும் நீங்கி, சிவபுண்ணியங்களைச் சேருவர்.

வைகாசி மாதம் விசாக நட்சத்திரம் சேர்ந்த பூரணையில் முப்பழமும் அபிஷேகித்து பால்மாங்காய் நிவேதிப்பவர் பாவங்கள் நீங்கி பரமனுலகில் இருப்பர். பின்னும் அம்மாதத்தில் நறியநீரைச் சூழ நிறைத்து நாற்கால் மண்டபத்தில் சிவபெருமானை எழுந்தருளச்செய்து வசந்தோற்சவம் நடத்து வோர் நோய்கள் பலவும் ஒழிந்து போகம் அநுபவித்து பேரின்பம்பெறுவர்.

ஆனி மாதத்தில் கேட்டை நட்சத்திரம் சேர்ந்த பூரணையில் விருத்த வடிவாக மண்டபம் அமைத்து அதில் சிவபிரானை எழுந்தருளப் பண்ணி பலவகைப் பழமும் அபிஷேகித்து, நிவேதிப்போர் சிவலோகம் சேர்வர். ஆனி மாதம் உத்திர நட்சத்திரத்தில் அபிஷேகித்து அலங்கரித்து பலவற்றை யும் நைவேத்தியம் புரிவோர் சிவகதி அடைவர்.

ஆடிமாதம் பூரநக்ஷத்திரத்தில் உமாதேவியாரைப் பூசிப்பவர் இம்மை யிலே செல்வம் பெற்று மறுமையிலே சத்தியுலகம் சேர்வர்.

ஆவணி மாதம் மூல நக்ஷத்திரத்தில் சிவபிரானைப் பூசித்து பிட்டு நிவேதிப்பவர் வினைகள் நீங்கி விண்ணுலகம் நண்ணி போகம் அனுப விப்பர்.

புரட்டாசிமாதம் நவராத்திரியில் உமாதேவியாரைப் பூசிப்பவர் இம்மை யில் செல்வமும் மறுமையில் இன்பமும் அநுபவிப்பர்.

ஐப்பசி மாதம் பூர்ணமியில் சிவபிரானுக்கு அன்னுபிஷேகம் செய்து வழிபடுவோர் ஒவ்வோர் அன்னத்திற்கு ஒவ்வொரு கற்பம் சிவலோகத்தில் ஆனந்தம் அநுபவிப்பர்.

கார்த்திகை மாதம் கார்த்திகை நக்ஷத்திரத்தில் சிவபெருமானை ஆரா தித்து தீபம் இடுவோர் சோதியுருவினராய் சுகம் அனுபவிப்பர்.

மார்கழி மாதத்தில் தினந்தோறும் வைகறையில் சிவபிரானைப் பூசிப்ப வரும், திருவாதிரையில் நெய் அபிஷேகித்து கலவைச் சாந்தணிபவரும் மலங்கள் நீங்கி அருட்டுறையில் மூழ்குவர்.

தைமாதத்தில் சிவபிரானை அசுவ வாகனத்தில் எழுந்தருளிவரத் தரிசிப் போரும், பூச நக்ஷத்திரத்தில் பூஜிப்பவரும் நற்கதி பெறுவர்.

மாசிமாதம் மகநக்ஷத்திரத்திலும் சிவநிசியிலும் சிவபிரானைப்பூசிப்பவர் எல்லாப் போகங்களையும் அனுபவிப்பர்.

பங்குனிமாதம் உத்திரநக்ஷத்திரத்திலே பரமசிவன் கொண்டருளும் மகோற்சவத்தைத் தரிசிப்போர் முத்தி அடைவர்.

வருடப்பிறப்பு, மாதப்பிறப்பு, உத்தராயணம், தக்ஷிணாயனம், அமா வாசியை, சதுர்த்தசி, திரயோதசி, அஷ்டமி, சோமவாரம் இவைகளில் சிவ பிரானைப் பூசிப்பவர் அருளில் கலப்பர். இத்தினங்களில் பூசியாதவரும் பங்குனி உற்சவத்தில் பணிந்து தரிசித்தவர்அப்பயன்பெறுவர். கோமுனிவர் முதலாயினோர் நடாத்திய காலம் முதல் இதுகாறும் பங்குனி திருவிழாவைச் சேவித்து முத்தியடைந்தவர் அளவில்லாதவர். பட்டிநாதர் எழுந்தருளும் இரதத்தில் பூட்டிய வடங்களைத் தேவர்கள் மானுடவடிவங்கொண்டு இரு புறமும் இழுப்பராயின் அவ்வுற்சவ மகிமையை யாவரே உரைக்கவல்லார்.

இப்பேரூர்ப் புராணத்தை விதிப்படி பூஜிப்பவரும் படிப்பவரும் கேட் பவரும் பொருளாராய்ச்சி செய்பவரும், பிறர்க்குப் பிரசங்கிப்பவரும் சிவலோகம் சேர்ந்து பேரானந்தம் அனுபவிப்பர். இப்புராணத்தைப் படிப்பவர்க்கு அன்னம், பொருள், அசுவம், யானை, சிவிகை முதலியவற்றைக் கொடுப்போர் இம்மையிற் செல்வமுற்று இறுதியில் சிவலோகம் சேர்வர். இச்சிவபுராணத்திற்குச் சிறப்புச் செய்பவர் பட்டீசருக்குச் சிறப்புச்செய்த பயனைப்பெறுவர்.

பேரூர்ப்புராண சுருக்கவசனம் முற்றிற்று.

உ
சிவமயம்

திருப்பேரூரின் பண்டைய சரித வரலாறு

[கோவை திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் B. A., B. L., அவர்களால் எழுதப்பெற்றது.]

இட அமைதி

தற்காலத்தில் பேரூர் என்பது கோவை நகர்க்கு 3 மைல் மேற்கே நொய்யல் என்கிற காஞ்சிமா நதிக்கரையில் பண்டைய ஓர் ஆலயத்தை யுடைய ஒரு சிறு கிராமமாகக் காண்கிறோம். கொங்கு நாட்டாரும் மலையாள தேசத்தாரும் மிகுதியாக தை ஆடி அமாவாசைகளிலும், மார்கழி திருவாதிரை பங்குனி உத்திரம் நாட்களிலும் திருவிழாக்காண வருவதுண்டு. மேலைச் சிதம்பரம் என்ற சிறப்புப் பெயர் வாய்ந்த இந்தப் புண்ணிய தலத்தினுடைய பண்டைய வரலாறு மிகவும் அருமை வாய்ந்தது. அதைப்பற்றித் தற்காலம் தெரிந்தவற்றை மட்டும் குறிப்பிடுவோம்.

பேரூர் நாடு :

தமிழ்நாட்டில் மேற்குத் தொடர்ச்சிமலை ஓரமாகக் காவேரியின் மேல்பாகத்தில் அதன் இருபுறமும் இருப்பது கொங்குநாடு. இந்த நாடு சங்கத்தார் காலமுதலே தனி நாடாக இருந்ததற்குப்புறநானூறே சான்றாகும். பிற்காலத்தில் இக்கொங்கு நாடானது வடகொங்கு, தென்கொங்கு, என்ற பெயரால் இருபெரும் பிரிவுகளாக இருந்ததாக சோழர் ஆதிக்கத்துக் கல் வெட்டுக்களால் தெரிகிறோம். ஆனால் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பேரூர்க்கு விசயம் செய்த காலத்தில் அப்பாகத்தை "மீகொங்கு"* அதாவது மேல் கொங்கு என்று கூறியிருக்கிறார். ஆகவே மேல்கொங்கு ஒன்று இருந்த தாகத் தெரிகிறது. ஆனால் அதுபோலவே கீழ்க்கொங்கு என ஒன்று இருந்த தாக எந்த ஆதாரத்திலும் காணோம். இவ்விதமான பிரிவுகள் இருக்க, கர்னபரம்பரையினாலும் கொங்குமண்டல சதகத்தினாலும் கொங்குநாடு 24 நாடுகளைக்கொண்டிருந்ததென அறிகிறோம். இந்நாட்டுப் பெயர்களில் குறும்புநாடு என்றதைக் "கொங்கிற்குறும்பிற் குரக்குத்தளியாய்" என்பது முதலிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்திலும், வடபாரிசாரநாடு முதலான ஏனைய பேர்களைக் கல்வெட்டுகளிலும் காண்கிறபடியாலும் இப் பிரிவுகளும் பழமையானவை என்றே கூறலாம்.

* "மீகொங்கில்அணி காஞ்சிவாய்ப் பேரூரர் பெருமானை."

இது நிற்க, கொங்குநாட்டில் உட்பிரிவுகளில் ஒன்று ஆறைநாடு ஆகும். இது வெள்ளிமலை முதல் அவிநாசி மட்டும் எட்டினதாம். தற்காலத்துக் கோவை அவிநாசி இந்த இரண்டு தாலுகாக்களும் சேர்ந்ததாகும். இதில் கிழக்குப்பாகத்தை வடபாரிசாரி நாடு எனத்தனியாகவும் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆறை நாட்டில் மேல் பாகத்தைப் பேரூர்நாடு என்ற தனிப் பெயராலே கல்வெட்டுகளில் வழங்கி வந்திருக்கிறார்கள். இந்தப்பேரூர் நாடு மூன்று யோசனை நீளம் இருந்ததாம். கல்வெட்டுகளும் இதைநிரூபிக்கின்றன. பேரூர்ப் புராணமும் இதைக் காட்டுகிறது. பேரூர் நாட்டில் வெள்ளலூர்* (கோவைக்குத் தென்கிழக்கு 5 மைல்) கோவை, குறிச்சி (கோவைக்குத்தெற்கு 5 மைல்) முட்டத்து நாகேசுவர கோயில் (கோவைக்கு மேற்கு 15 மைல்) ஆகிய இவைகள் சேர்ந்திருந்ததாகக் கல்வெட்டுகள் சொல்கின்றன. 'பேரூர் நாட்டு கோவன்புத்தூர் என்ற விரகேரளநல்லூர்' என்ற பதத்தொடர் அக்காலத்தில் பேரூர் முக்கியமான பெரிய தலைநகரமாகவும் கோயமுத்தூர் அதை ஒட்டின ஒரு சிறு கிராமமாகவும் இருந்ததென்றும் தெரிவிக்கிறது. பெருநகரத்தை ஒட்டிப் புதிதாய் அமைத்த சிற்றூர்களுக்குப் ''புதூர்'' என வழங்கும் வழக்கம் இந்நாளிலும் இந்நாட்டிற் காணலாம். கோவன் என்ற பேருடைய ஒரு சிற்றரசனால் புதிதாய் அமைத்த ஊர் என்பது இதன் பொருளாம். இந்நகரே இப்போது நாம் கோயம்புத்தூர் என்ற பெயரால் அறிகின்ற பெருநகரமாகும். பேரூர் புராணம் பேரூரைச் சுற்றி வில்லைப் போல வளைந்து நிற்கும் பஞ்சகிரிகளாகிய, விட்டுணுகிரி, பிரமகிரி, உமாகிரி, மருதகிரி, வெள்ளியங்கிரி இவைகள் பேருருக்குச் சேர்ந்ததெனக் கூறுகிறதனால் இந்தப் பேரூர் நாட்டு இடவமைதி அக்காலத்தில் போளுமாம் பட்டிக் கணவாய் முழுதும் சேர்ந்து கிழக்கே வெள்ளலூர் மட்டும் எட்டி இருந்ததெனக் கூறலாம்.

பேரூர் நகரம் :

இச்சிறந்த நாட்டின் மத்தியில் பஞ்சகிரிகளாகிய வில்லுக்கு ஓர் அம்பு தொடுத்தாற்போலக் காஞ்சிமா நதி என்ற நொய்யலாறு ஓடும். இதன் கரையில் திவ்வியமான பண்டைய மேன்மைகளுடன் விளங்குவது பேரூர் ஊராகும். இதன் சரிதத்தைப் புலவர் பெருமானார் கச்சியப்ப முனிவர் இற்றைக்கு 110 ஆண்டுகளின் முன், சகம் 1712-ம் ஆண்டில் அக்காலத்தில் வழங்கிவந்த சரிதங்களைத் திரட்டி ஓர் அழகிய இலக்கியமாகப் பேரூர்ப் புராணம் என்ற பெயரால் இயற்றியுள்ளார். அதனைச் சிறிது ஆராய்ச்சி செய்தால் இந்தத் தலமானது அரசமரங்களடர்ந்த ஒரு காடாக இருந்ததெனவும் அதனால் அதற்கு பிப்பலாரணியம் எனப்பெயர் ஏற்பட்டதெனவும் தெரியவரும். அந்த ஆரணியத்தில் ஆதிகாலத்தில் ஓரிடையன் தான் ஓட்டும் பசு தானகவே ஒரு இடத்திற் சென்று பால்கரக்கும் அதிசயத்தைக்

---

* வெள்ளலூர் 141/1910. பேரூர் நாட்டு வெள்ளலூர். ஒரு செப்புச் சாசனம் வெள்ளலூர் அர்ச்சகரிடம் உண்டு. அதில் பேரூர் நாட்டு வெள்ளலூர், குறிச்சி என்று கண்டிருக்கிறது.

கண்டு அடித்த காலத்தில் அதன் குளம்பு பட்டு வடு ஏற்பட்ட ஓர் இலிங்கத்தைக்கண்டு அதை ஊரார் தெரிந்து அதன்மூலமாக ஒருகோயிலும் பிரபலமாக ஏற்பட்டதென்று ஒரு வரலாறு வழங்கப்பெறுகிறது. இதுதான் இக்கோயிலின் புராதன ஆதாரம்.

சரித்திரம்

1. பண்டைய வரலாறு :

பண்டைத் தமிழ்மக்கள் தங்கள் வாழ்நாளில் வழங்கிவந்த பண்டங்கள் முதலியவைகளை அங்கங்கே வைத்துவிட்டிருப்பதைக்கொண்டு அந்தக் காலத்துப் பழக்க வழக்கங்களை நாம் அறிய முடியும். மண்பாத்திரங்கள், தட்டுமுட்டுச் சாமான்கள், இடுகாட்டுக்குழிகள் இவைகள் சிலவிடங்களில் நிலமட்டத்திற்குக்கீழ் அகப்படுகின்றன. இவைகள் பழமையான இடங்களில் தான் அகப்படும். அப்படிப் பட்டவைகளில் பேரூர் நாடும் ஒன்று. பேரூரிலிருந்து சித்திரைச் சாவடிக்குப் போகும்வழியில் சிலகுழிகள் இருக்கின்றன. பலகைக் கற்களாலாக்கின மூன்று அல்லது நான்கு சிறு அறைகளும் அவைகளின்கீழ் பெரிய பானைகளும் வைத்திருக்கிருர்கள். அப்பானைகளில் இறந்தவன் பிணத்தைவைத்து, அவனுக்கு அருமையாக இருந்த பண்டங்களையும் வைத்திருந்தார்கள். இப்படிப்பட்ட பானைகளை வெள்ளலூரிலும் நொய்யலாற்றங்கரையிலும் கண்டெடுத்தார்கள். இக்குழிகளை இக்காலத்தில் பாண்டவர் குழிகள் என்கிருர்கள். ஆனல் அவைகள் மாண்டவர் குழிகள் ஆகும். மணிமேகலையில்,

> " தாழ்வயி னடைப்போர்
> தாழியிற் கவிப்போர் " — (6—67)

என்று இருத்தலும் புறநானூற்றுச் செய்யுள் 228-ல் *

> " தேவர் உலகம் எய்தினன் ஆதலின்
> அன்னேற் கவிக்கும் கண்ணகன் தாழி "

என்று இருத்தலும் இவ்வழக்கத்தையே குறிக்கும். இத்தன்மைய வழக்கத்தைக் குறிக்கும் சின்னங்களால் இந்நாடு மிகப் புராதன நாகரிகத்தைப் பெற்றிருந்த நாடு என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். பேரூர் பெரிய நகரமாகவும் கோவன்புத்தூர் அதை அடுத்த மஜரா என்னும் சிற்றூராகவும் அந்நாள் இருந்த நிலை காலாந்தரத்தில் தலைமாறிப் பேரூர் சிற்றூராகியும், புத்தூர் பேரூராகியும், இந்நாட்காணும் காட்சியைக் கூர்ந்து நோக்கினல் இந்த மாறுதல் ஆவதற்கு உள்ள காலம் எத்தனை ஆண்டுகளாயிருக்கக் கூடும் என்பதும் ஒருவாறு ஊகிக்கலாம்.

---

* புறநானூறு செ. 238, 256, 364-லும் காண்க.

2. உரோமானியர் காலம் :

சில ஆண்டுகளுக்கு முன் பேரூர் நாட்டைச் சேர்ந்த பேரூரின்கண்ணும் வெள்ளலூரின்கண்ணும் நூற்றுக்கணக்கான உரோமானிய நாணயங்களைக் கண்டுபிடித்தார்கள். அங்கு அப்படிப்பட்ட புதையல்களிற் கண்டெடுத்த நாணயங்கள் கி. மு. 44 முதல் கி. பி. 54 வரை ஆண்டுவந்த உரோமானிய அரசர்களின் நாணயங்கள் ஆகும். அக்காலந்தான் உரோமானியர் உச்சநிலைமையில் இருந்த காலம். தங்கள் அரசாங்கத்தையும் வாணிபத்தையும் பல தூரதேயங்களிலும் செலுத்திச் சிறந்து வாழ்ந்தனர். அங்கு ஆண்ட *அகஸ்டஸ் அரசன் முதல் நிரோ அரசன்வரை 68 நாணயங்களும், நிரோ (Nero) முதல் கேரகல்லா (Caraculla) வரை 217 நாணயங்களும் இந்தப் பிரதேசத்தில் கண்டெடுத்தார்கள். மேலும் பிற்காலத்து பைசேண்டியன் (Byzantian) வம்சத்து அரசர்கள் நாணயங்களும் சில கிடைத்தன. இவ்வளவு அதிகமான நாணயங்கள் ஒரே இடத்தில் கிடைத்ததை நோக்கிறல் இந்நாட்டு மாந்தர் அக்காலத்தில் நாகரிகத்தில் முதிர்ச்சி அடைந்தும், வாணிபத்தில் சிறந்தும் விளங்கி அக்காலத்தில் நாகரிகத்தில் முதிர்ச்சி பெற்றவரான உரோமானியருடன் மிக்க செல்வாக்குடன் வாணிபமும் போக்குவரத்தும் கொண்டிருந்தார்கள் என எண்ண இடமிருக்கிறது. மேலும் இந்நாணயங்களைப் பார்த்தால் அவைகள் சிறிதும் தேயாமல் புதிதாகத் தோன்றுகிறபடியால் அக்காலத்திலேயே புதைக்கப்பட்டுப் பின் வெகு காலம் எடுக்கப்படாமல் இருந்திருக்கவேண்டும் எனத் தெரிகின்றது. மேலும் வேறு நூல்களிலிருந்தும் முத்து, மிளகு, இரத்தினங்கள் இவைகளும் தென்னிந்தியாவிலிருந்து உரோமானியர் ஏற்றுமதி செய்ததாக நாம் அறிகிறோம். ஆகவே இப்பிரதேசம் கிறிஸ்து உயிருடன் இருந்த காலத்திலேயே மிகுந்த பிரபலம் பெற்றதாக இருந்திருக்கவேண்டும். ஆனால் வாணிகத்தொழிலில் இவ்வாறு அபிவிருத்தி அடைந்த அந்தக் காலத்தில் அரசாங்கநிலைமை எவ்வாறு இருந்ததென்பதும், எந்த அரசர்கள் ஆண்டார்கள் என்பதும் அறிய ஓர் ஆதாரமும் கிடைக்கவில்லை. பண்டைத் தமிழ் நூல்களின் வாயிலாக அக்காலத்தில் சேரமன்னர் தம் ஆளுகைக்குள் சேர்த்து இருக்கலாமென்றும் சிற்றரசர்களான அதிகமான் போன்ற வேளிர்கள் இந்நாட்டை ஆண்டிருக்கவேண்டும் என்றும் ஊகிக்க இடம் உண்டு.

3. பல்லவர் காலம் :

தமிழ்நாட்டில் பல்லவர்கள் மூன்றுவது நூற்றுண்டு முதல் ஏழாவது நூற்றுண்டு வரையில் மிகுந்த பராக்கிரமத்தோடு ஆண்டு வந்தார்கள். அவர்கள் காஞ்சியைத் தலைநகராகக்கொண்டு தமிழ்நாடு முழுதும் கைக்கொண்டு கன்னட தேசத்தையும் செயித்தார்கள். அக்காலத்தில் பிரசித்திப் பெற்ற அப்பர்சுவாமிகள் கொங்குநாட்டை அடைந்திருக்கிறுர்கள். அன்னுர்

* K. V. Subramanya Iyer's Ancient Dekhan.

கி. பி. 650-ல் இருந்தார்கள். தம் க்ஷேத்திரக்கோவையில் "பேரூர் பிரமபுரம் பேராவூரும்" "ஆரூரார் பேரூரமுந்தையுள்ளார்" என்றும் நம் பேரூரைக் குறித்திருக்கின்றனர். இதைப்பற்றிய தனித்தேவாரம் மறைந்து போய் விட்டது போலும். ஆகவே ஒரு சைவ ஆசிரியர் விசயம்செய்து சமயப் பிரசாரம் செய்யும்படியான தேச அமைதி கொங்குநாட்டில் அக்காலத்தில் இருந்ததால் இந்த நாடு பல்லவர் வசத்தில் இருந்திருக்கலாம் என்று ஊகிக்கமுடியும்.

4. சேரர் மரபு :

சுமார் 8 அல்லது 9-ஆவது நூற்றுண்டில் சேரர்களோ அல்லது ஒரு சேர வம்சமோ இந்நாட்டை வெற்றிகொண்டது. பேரூரில் பண்டைத் தமிழ் எழுத்தில் உள்ள ஒரு கல்வெட்டில் கோக்கண்டன் ரவி என்றும் இரவி கண்டன் என்றும் அரசர் பெயர்களைக் காண்கிறோம்[1] இச்சாசனம் தான் பேரூரில் உள்ள எல்லாச் சாசனங்களிலும் பழையது. வெள்ளலூர் சாசனங் களிலும் [2]பண்டைய தமிழ் இலிபியான அந்தக் காலத்து எழுத்தில் சில எழுதப்பட்டிருக்கின்றன. அவைகள் கோக்கண்டன் வீரநாராயணன், கோக்கண்டன் ரவி என்ற இரண்டு சேர அரசர் பெயர்களைக் குறிக் கின்றன. தில்லை ஸ்தானம் செப்புத் தகடுகள் 9-ம் நூற்றுண்டில் இருந்த முதலாம் ஆதித்திய சோழன் காலத்தில் ஒரு கோக்கண்டன் தானு ரவி என்ற ஓர் அரசன் இருந்ததாகக் கூறுகின்றன. அரசாங்கத்துச் சாசன ஆராய்ச்சிச் சாலைத் தலைவர் இவ்விரு அரசர் பேர்களும் ஒன்றே என்று அபிப்பிராயப்படுகிறர். ஆனல் அதன் உண்மை ஒன்றும் தெரியவில்லை. மேற்கூறிய சாசனங்களில் 'வெள்ளலூரை' அன்னதான சிவபுரி அல்லது வள்ளலூர் எனக்குறிப்பிட்டிருப்பது கவனிக்கத் தக்கது. கோயமுத்தூருக்கு [3] வீரகேரள நல்லூர் எனப் பெயர் கொடுத்திருப்பதனல் அக்காலத்தில் ஒரு வீரகேரளன் என்ற சேர அரசன் இவ்வூரைச் செயித்துத் தன்பெயரை இங்கு நிலைநாட்டி இருக்கவேண்டும். வீரகேரளம் என்ற பேருடன் ஒரு கிராமம் இப்போது கோயமுத்தூருக்கு மேற்கே இருப்பது இங்கே கவனிக்கத்தக்க தாகும். மற்றும் பேரூர் நாட்டைச் சேர்ந்த நாககேசுரத்தில் அமர புஜங்க சதுர்வேதி மங்கலம் முதலிய பெயர்கள் காணப்படுகின்றன. இப்பெயர் களாலே கேரளதேசத்து மன்னர் இந்நாட்டை உட்படுத்தி ஆண்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது.

5. முதற் பாண்டிய ஆதிக்கம் :.

தென் இந்தியாவில் 8, 9-ம் நூற்றுண்டுகளில் பாண்டியர்கள் சிறிது மேம்பட்டுவந்து கொங்குநாட்டைக் கவர்ந்து ஆண்டார்கள் என்று சொல்ல லாம். அக்காலம் மாறன் சடையன் என்ற பாண்டியன் கொங்குநாட்டை

1 S. I. I. Vol. 5. 223.
2 Ep. Reports 147/1910 and 148/1910.
3 கோயமுத்தூர் alias வீரகேரள நல்லூர் *129/1990* Ep. Reports.

வென்று பேரூர் அடைந்து அங்குத் திருமாலுக்குக் குன்றம் அன்னதோர் பெருங்கோயில் கட்டினதாக ஜடாவர்மன் [1] சாசனத்தால் தெரிகிறது. இப் பாண்டியன் ஒருபரம வைணவ பக்தன். மதுரகவியாழ்வார் அவன் மந்திரியாக இருந்தனராம். இதை மேற்கூறிய சாசனத்தில்.

[2] "காஞ்சிவாய்ப் பேரூர்புக்குத்
திருமாலுக் கமர்ந்துறையக்
குன்றமன்னதோர் கோயிலாக்கியும்
ஆழிமுன்னிர் அகழாக
அகல்வானத் தகடுரிஞ்சும்
பாழிநீண்மதில் பரந்தோங்கும்
பகலவனும் அகலவோடும்"

என்று கண்டிருக்கிறது.

ஆனால் அக்குன்றம் அன்னதோர் கோயில் இப்போது எங்கு போயிற்றோ தெரியவில்லை. சமீபகாலத்தில் விசாரித்ததில் பேரூர் கோயிலுக்குத் தென்கிழக்கில் உள்ள குளத்தில் முற்காலத்தில் ஒரு பெரிய விஷ்ணு கோயில் இருந்ததாகவும் அது அழிந்துபோக அதன் மூல விக்கிரஹம்தான் இப்போது தெப்பக்குளத்திற்குத் தென்பக்கத்தில் வெளியில் வைத்திருக்கும் இலக்குமி நாராயணர் விக்கிரஹம் என்றும் தெரிகிறது. இவ்விக்கிரஹம் பண்டைய காலத்து விக்கிரஹம் என்று அதைப் பார்த்தாலே தெரியவரும். அதைத் தட்டிப்பார்த்தால் வெண்கலம்போல் சப்திக்கும். 1292-ல் ஆண்ட ஹொய்சள வீரவல்லாளன் காலத்தில் இவ்வாலயம் இருந்ததாக அவன் சாசனம் கூறுகிறது. இதைப்பற்றிய விவரங்கள் அதிகம் தெரியவில்லை.

6 கங்கர்கள் :

பிறகு கொங்கு நாட்டைக் கைப்பற்றி ஆண்டமன்னர்கள் தலைக்காட்டுக் கங்க வம்சத்தார்கள். இத்தலைக்காடு என்பது கொள்ளேகாலத் தருகில் காவேரியின் வடகரையில் உள்ளது. அக்காலத்தில் இரணவிக்கிரமன் என்பான் தலைக்காட்டில் அரசாண்டான். அமோகவர்ஷன் சளுக்கிய தேசத்திலும் வரகுணன் மதுரையிலும் ஆண்டார்கள். தேசம் அமைதி பெற்றுக் கல்வியும் சமயப்பிரச்சாரமும் பெருகியிருந்தது. அப்போதுதான் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கொங்கு நாட்டிற்கு மும்முறை விஜயம் செய்து பேரூருக்கும் வந்தார். அதை அவரே தம் கோயிற்றிருப்பதிகத்தில், 'மீ கொங்கி லணிகாஞ்சிவாய்ப் பேரூரர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம் பலத்தே பெற்றாம் அன்றே' என்று வியந்துள்ளார். அந்த விசயத்தைக் குறித்துச் சரித்திர உண்மைகள் கூறும் பெரிய புராணமும், பேரூர்ப்புராணம் முதலிய தல புராணங்களும் கூறுகின்றன. என் சிறு நூலாகிய "கொங்கு நாடும் சுந்தரரும்" என்ற நூலின்கண் இதை விவரமாகக் கூறியுள்ளேன்.

---

1 Museum plates of Jatavarman
2 453/1906. 770 - A. D.

அக்காலம் 850 கி. பி. ஆகும். அக்காலத்தில் இப்போது ஒதுக்கப்பட்ட வருப்பார்களாகிய பள்ளர்களும் கோயில் விழாக்களில் கலந்துகொண்டிருப்பார்கள் என்ற கருத்தைப் பள்ளுப்படலத் திருவிளையாடல் என்ற ஐதிகத்திலிருந்து நாம் ஊகிக்க முடியும். இந்த நாளிலும் அத்திருவிழாவைக் கொண்டாடுவதற்காக அமைத்த நாற்று நடவு [1]உற்சவத்திலே அவர்கள் கலந்துகொள்வதுபோல வேறு தலங்களிலே நாம் பார்க்க முடியாது. வகுப்பு உரிமைகள் பல காலங்களில் பலவாறு மாறுபடுதல் சகசம் என்பதை தென்னிந்திய சரித்திர ஆராய்ச்சியினால் நாம் தெரியலாம்.

7. சோழ ஆதிக்கம் :

தமிழ் நாட்டில் 9-ம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து 12-வது நூற்றாண்டின் இறுதிவரைக்கும் சோழர்கள் ஆதிக்கம் பலப்பட்டிருந்தது. அவர்கள் தெக்காணம், பர்மா, சாவகம் முதலிய நாடுகளையும் செயித்துத் தமிழர் நாகரிகத்தைத் தீவாந்தரங்களிலும் பரவச் செய்தனர். 900-ம் வருஷத்தில் தலைக்காட்டு மன்னர் க்ஷீணதசையடையச் சோழர் கொங்கு நாட்டைக் கைப்பற்றினர். அப்போது கொங்குநாட்டை அன்னார் ஒரு மாகாணம் ஆக்கி, அதற்கு 'அதிராஜ ராஜமண்டலம் அல்லது சோழகேரள மண்டலம்' என்று பேர்இட்டார்கள். விவரமாகக் கூறின் கொங்கு நாட்டிற்கு I இராஜேந்திரன் காலத்தில் அதிராஜ ராஜமண்டலம் என்றும், குலோத்துங்கன் காலத்தில் சோழ கேரள மண்டலம் என்றும், விக்கிரம சோழன் காலத்தில் வீரசோழ மண்டலம் என்றும் பேர் இடப்பட்டது. அக்காலத்தில் இந்நாட்டில் வைக்கப்பட்ட அவரது பிரதிநிதி மன்னர்கள் பரம்பரையாக ஆளத்தொடங்கி விட்டார்கள். அன்னார்களைக் 'கொங்கு சோழர்' என்று இப்போது ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகிறார்கள்.

கொங்குநாட்டில் முக்கியமாய்க் கொங்கு சோழரின் கல்வெட்டுகளே கிடைக்கின்றன. ஆனால் இப்பிரதிநிதிகள் ஆதிக்கம் அடைவதற்கு முந்தின காலத்தில் சோழநாட்டுச் சோழர் கல்வெட்டுகளும் கிடைக்கின்றன[2]. உதாரணமாகப் பேரூர் ஆலயத்தின் அர்த்த மண்டபமும், மகா மண்டபமும் கட்டினது கொங்கு சோழர்கள் அல்ல. சோழநாட்டுச் சோழர்கள் காலத்திலேயே அவைகள் கட்டப்பெற்றன என்று கூறமுடியும். மகா மண்டபத்து ஆறு தூண்களிலும் ஒரு உத்திரத்திலும் கல் வெட்டுகள் உண்டு. அவைகள் இராஜேந்திர தேவனுடைய 26-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 29-வது ஆண்டில் முடிவடைந்திருக்கின்றன. ஆகவே அக்கட்டிடம் கட்ட மூன்று ஆண்டுகள் பிடித்திருக்கின்றன என்னலாம். தூண்கள் 26-ம் ஆண்டிலும்

---

1 இவ்வுற்சவமானது காலவேசுவரர் கோயிலைப் புதுப்பித்த மீனும்பாள் அம்மாள் அவர்களால் நியமிக்கப்பெற்று, சுமார் 50 ஆண்டுகளாக ஆனி மாதத்தில் நடைபெறுகிறது.

2 இவற்றை அரசாங்கத்தார் பிரதி எடுக்கவில்லை.

உத்திரம் 29-ம் ஆண்டிலும் செதுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு தூண்[1] முட்டத்து வியாபாரி விழுமி பட்டியான் தனபாலனாலும், கெனபாட்டி அசாண்டானாலும், ஒன்று விரசேகர தேவன் அகமுடையாள் தேவியாராலும், மற்றொன்று ஆயத்தாரில் சோலை பிச்சனை அழகமானாலும், தாம் தாம் தனிமையில் செய்துவிட்ட தருமங்களாகக் கூறியிருக்கிறது. உத்தரத்தைக் கொடுத்தது பேரூர் மன்ருடி திருவெண்காவுடையனை விரகங்கன் என்பான் என்று கண்டிருக்கிறது. ஆகவே ஆலயத்தின் முக்கிய பாகங்கள் இராஜேந்திரதேவன் காலத்தில் ஏற்பட்டன எனத் தெரிகிறது. இராஜேந்திரதேவன் என்ற கொங்குசோழன் கிடையாது. ஆனல்சோழநாட்டுச் சோழரில் இரண்டு பேர் உண்டு. ஒருவர் கங்கை கொண்ட சோழன் (1013-1045 கி. பி.) அவரை இராஜேந்திரசோழன் I என்று கூறுவார்கள். அவர் மகனுன மற்றவர் (1052 - 1062. கி. பி.) யில் ஆண்டனர். அவரை இராஜேந்திர தேவன் என்று மாத்திரம் கூறுவார்கள். ஆண்டுகளை நோக்கினல் 1013-1045 ஆண்டவரையும், பெயரை நோக்கினல் 1055-1062 ஆண்ட வரையும் குறிக்கும். எவ்விதம் கொண்ட போதிலும் இக்கட்டிடம் சுமார் பதினென்ரும் நூற்ருண்டின் முதலில் கட்டப்பட்டிருக்கலாம்.

மேலும் கொங்கு சோழரில் முக்கியமான அரசர்கள் இருவர். அவர்கள் முறையே விக்கிரம சோழர் 1004 முதல் 1065 வரைக்கும் விரராஜேந்திர சோழர் 1207 முதல் 1252 வரைக்கும் ஆண்டார்கள். பேரூரிலே விக்கிரமனைக் குறித்து 4 சாசனங்களும் விரராஜேந்திரனைக் குறித்து ஒரு சாசனமும் உண்டு. மற்றைய கொங்கு சோழர்கள் கரிகாலன், விரசோழன், அதிராஜன், விரநாராயணன், என்பவர்களும் சாசனம் பதிப்பித்திருக்கிருர்கள். ஒரு விரபாண்டியன் என்பவரும் அவ்விதமே செய்திருக்கிருர்.

(a) விக்கிரம சோழன்:- மேற்கூறிய கொங்கு சோழரில் 1004-1045 ஆண்ட விக்கிரம சோழரைப்பற்றி[2] (இவன் வேறு, சோழநாட்டு விக்கிரமன் வேறு.) கொங்குநாட்டில் இப்போதுவரை கிடைத்த 68 கல் வெட்டுக்களில் கூறப்பட்டிருக்கிறது. வெள்ளலூரில் 4-ம் போளுமாம்பட்டி நாகேசுரத்தில் 2-ம் இவன் காலத்தில் ஏற்பட்டவை. இவனுக்கு 'கோனட்டான் கலிமூர்க்கன், பரகேசரிவர்மன், திருச்சிற்றம்பலமுடையான், கோக்கலிமூர்க்கன்' என்ற பட்டப்பெயர்கள் உண்டு. இவன்தான் கொங்கு சோழரில் சாசனங்களில் கூறப்பட்ட முதல்மன்னன். ஆனல் இவன் எந்த ஊரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான் என்பதற்கு ஆதாரம் கிடைக்கவில்லை. அதைப் போலவே மற்ற கொங்கு சோழரின் தலைநகரும் தெரியவில்லை. பேரூரில்

---

1. இப்போது பாழாகி [illegible]ச்சரம் வரும் முட்டம் என்பது அக்காலத்தில் அமரபுஜங்க சதுர்வேதி மங்கலம் என்ற பெரிய அக்கிரகாரமாக இருந்ததை நாகேசுவரன் கோயில், வெள்ளலூர்ச் சாசனங்களால் அறியலாம்.

2 விக்கிரமசோழன்
S. I. I Vol. V. No. 225—(549/93) No. 227—(551/93)
,, 226—(550/93) ,, 236—(560/93)

இவனுடைய 12 ஆண்டு முதல் 27 ஆண்டு வரையிலும், வெள்ளலூரில் 3 ஆண்டு முதல் 18 ஆண்டு வரையிலும், சாசனங்கள் கிடைத்திருக்கின்றன. இவன் சுமார் 40 வருடகாலம் ஆண்டதினல் தேசம் மிகவும் அமைதியுடன் இருந்திருக்கவேண்டும். இவனுடைய கல்வெட்டுக்களால் பேரூர் பட்டீ சருக்கு அந்தக் காலத்தில் திருவான்பட்டியுடையார் என்று பேர் வழங்கி வந்ததாகத் தெரிகின்றது. மற்ற ஆலயங்களிலே கோரப்பாடி என்ற ஆம்மடி சதுர்வேதிமங்கலம் கருணீசுர உடையார் கோயில் கூறப்பட்டுள் ளது. சிவப் பிராமணர்களில் ஆண்டான் மாமுனி தில்லைநாயகபட்டன், உய்யக்கொண்டான், விக்கிரமசோழபட்டன், ராசபட்டன், சோமநாததேவன், மருதவனப்பெருமாள் என்ற பேர்கள் காணப்படுகின்றன. கைக்கோளர் களில் குலையன் பொத்தியன் செல்வஞான சம்பந்தன், என்பவனையும் வாணிபக்குடியில் செட்டியரசன், செட்டி கறுத்தான், செட்டி சிறுவரன் என் பவர்கள் பெயர்களும் காணப்படுகின்றன. *விக்கிரமன் 24-ம் வருஷம் மாசி மாதம் முதல்தேதி முதல் நெல்வேலி உடையான் ஆளவந்த பிள்ளை யான பல்லவராயன் தான் வைத்த நந்தா விளக்கைத் திருவான் பட்டீசுர முடையார்க்கு இடுவதற்காக எண்ணெய் தருமம் செய்தான். அதற்காக மேற்படியானுக்கு மேற்கூறிய வாணியக்குடி மக்கள் ஒரு நந்தா விளக்குக்காக அச்சு ஏழுக்கு எள் எண்ணெய் சூலக்காலாலே ஏழு நாழி அளப்பதாக ஒப்பந்தம் ஒன்று 1028-ம் வருஷம் மாசிமாதம் 1-ம்தேதியில் செய்ததாகக் கண்டிருக்கின்றது. ஆகவே அந்தக் காலத்தில் வாணியர் செட்டிப் பட்டம் கொண்டதும் எண்ணெய் முதலிய பண்ட மாற்றுதலுக்கு ஒப்பந்தங்கள் செய்வதும் வழக்கமாக இருந்தன என்று அறிகிறோம்.

1031 கி. பி. யில் கோரப்பாடி கருணீசுரமுடையார் கோயில் சிவப் பிராமணன் தில்லை நாயகபட்டன் பேரூர் கைக்கோளரில் செல்வ ஞான சம்பந்தன்பால் பணம் பெற்றுக்கொண்டு அக்கோயிலுக்கு இருநாழி அரிசி, சோறு இரண்டுசட்டி இடுவன் ஆகவும் அதைக் கோயில்குடத்தால் அளப்பா ளுகவும் எள் ஒப்பந்தம் செய்தான். மற்றும் மேற்சொன்ன தில்லை நாயக பட்டனும் உய்யக்கொண்டானும், அதே ஞானசம்பந்தன்பால் கொண்ட பணத்திற்காகப் பங்குனித் திருநாள் தீர்த்தம் தெப்பம் முதலியவைகளுக் காக ஐந்து கலம் நெல் கொடுப்பதாகவும் இன்னமும் பல கணக்குகளுடன் ஒப்பந்தம் செய்தான். மேலும் திருவான்பட்டி உடையான் கோயில் சிவ பிராமணன் விக்கிரம சோழபட்டன், இராசபட்டன், சோமதேவன், மருத வனப்பெருமாள் இந்நால்வரும் திருஞான சம்பந்தன்பால் பணம் பெற்றுக் கொண்டு சந்தியாதீபம் இடுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே செல்வ ஞானசம்பந்தன் அக்காலத்தில் ஒரு பெரிய தர்மப் பிரபுவாக இருக்க வேண்டுமென்பது அறியக்கிடக்கிறது. அவன் விக்கிரமசோழன் 12 முதல் 27 ஆண்டுவரை 15 வருடகாலம் பேரூரில் தர்மிஷ்டனுக வாழ்ந்ததும் நோக்கத்தக்கது.

---

* 225/S 11 Vol. 5.

பேரூர் பட்டீசுரமுடையார் கோயிலுக்கு வடகிழக்கில் தெப்பக்குளத்திலிருந்து அரசம்பலவாணர் சந்நிதிக்குச் செல்லும் ஒரு சந்துத் தடத்தில் ஓர் இடிந்த பழைய கோயில் இருக்கின்றது. அதை அழகிய சிற்றம்பலம் என்கிறார்கள். அதன் அடிப்பாகத்தில் 8 கல்வெட்டுகள் இருக்கின்றன. இவைகளை இதுவரையில் அரசாங்கத்தார் பிரதி எடுக்கவில்லை இவைகளும் பேரூர் விஷ்ணுகோயில் சம்பந்தமான சில பொருள்களும் மற்றும் சில பொருள்களும் எனது நண்பர் கோவை திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் பேருதவிகொண்டு கிடைக்கப்பெற்றன. அவைகளில் 5 கல்வெட்டுகள் பூர்த்தியாக இருக்கின்றன. அந்தக் கோயிலிலுள்ள சுவாமிபெயர் இடங்கை நாயக ஈசுரமுடையார் என்று காணப்படுகின்றது. பட்டீசருக்கு இடது கைப்பாகத்தில் உள்ளதால் இந்தப் பெயர் ஏற்பட்டதுபோலும். அவைகளில் எல்லாம் தானங்கள் கொடுத்த விஷயங்களே காணப்படுகின்றன. ராஜாதித்தமல செம்பியன் கிழானடிவதி, திருவானடை வாய்க்கால், கண்ணாற்று, சிவபாத சேகர சதுர்வேதி மங்கலத்துச் சபை, வீரகேரள விலாடகுல மாணிக்கவதி, அதிராஜராஜ வாய்க்கால் முதலிய எல்லைப் பெயர்களும், குடிமைப்பாடு, கடமை, எலவை, அகவை, திருக்கொற்ற வாசலால் போனகுடிமைப் பாடுகள், விரசமக்கள், அம்மனங்காரர், சேனாபதிகள் முதலிய பெயர்களும் காணப்படுகின்றன. இரக்ஷை சொல்லும் போது 'பன்மாகேசுரரக்ஷை; ஆறு சமக்கட்டார் ரக்ஷை' என்று கூறியிருக்கிறது. இதன்பொருள் விளங்கவில்லை. இக்கல்வெட்டுக்களைத் தவிர மூன்று கல்வெட்டுகள் மழுங்கிக் கிடக்கின்றன. ஒன்று அரைகுறைவாக இருக்கிறது. இக்கோயில் மிகப் பழைய கோயில் என்பது இவைகளால் தெரியவருகிறது.

(b) வீரசோழன் *1183 — 1206* :— இவனைப்பற்றிய ஒரே சாசனம் பேரூரில் இருக்கிறது. வெள்ளலூரிலும் ஒன்று உண்டு. கொங்கு நாட்டில் சுமார் 20 சாசனங்கள் உண்டு. இவனுக்குப் பரகேசரி, இரு கொங்கும் ஆண்டவன், களிமூர்க்கன் என்ற பட்டங்கள் உண்டு. ஒருவேளை முதல் முதலாகத் தென் கொங்கு, வடகொங்கு என்ற இரண்டு நாடுகளையும் தன் வசப்படுத்திய முதலரசன் இவனாக இருக்கலாம். இவன்தான் உடுமலைப் பேட்டை தாலுக்கா ஆம்பிராவதி நதிதீரத்தில் உள்ள சங்கிராம நல்லூரில் உள்ள விரசோளிசுரமுடையார் ஆலயம் கட்டினவன். இவனுடைய காலம் சரியாகத் தெரியவில்லை. உத்தேசமாகப் போடப்பட்டிருக்கிறது. இவனது காலத்தில் 15 ஆண்டில் ஏற்பட்ட பேரூர்ச்* சாசனத்தில் பெருமான் அதிகாரம் செய்வார்களில் 'சாத்தில்லை நாயகம் மூவேந்த வேளான்' என்பான் திருவான் பட்டீசுரம் உடையாருக்கு உத்திராயனத்துக்குக் கலசம் 108-ம் ஆடியருள அரிசி அமுது செய்யவும், திருவீதியிலே எழுந்தருளித் திருவோலக்கம் செய்து அரிசி அமுது செய்ய அரிசியும் 100 பிராமணர்களும், 100 தபசிகளும் அமுதுசெய்யவும், தேவரடியார்க்கு நெல்லும் கோயில்

* S. I. I. Vol. 5 231—555/93.

அதிகாரிகளிடம் கொடுத்துத் தானம் செய்தது கண்டிருக்கின்றது. அக்காலத்தில் இவ்வகுப்பார்கள் பெற்ற சிறப்பு எத்தன்மையது என்று இதனுல் தெரிகிறது.

(c) வீர ராஜேந்திர சோழன் 1207—1252 :- இவன்தான் கொங்கு சோழரில் மிகவும் பிரக்கியாதி பெற்றவன். இவனைப்பற்றி 141 சாசனங்கள் கிடைத்திருக்கின்றன. அவைகளில் பேரூரில் 1-ம் அவிநாசியில் 9-ம் இருக்கின்றன. இவனுக்கு உலகுடைய பெருமாள், கோனேரின்மை கொண்டான், இருகொங்கும் ஆண்டான் என்ற பட்டங்கள் உண்டு. இவன் காலத்து ஒரு சாசனத்தில் முட்டம் என்ற அமரபுஜங்க சதுர்வேதி மங்கலத்தில்முற்காலத்து சேர மன்னர்களான அதிராஜ ராஜன், ராஜராஜ தேவன் முதலானோர் கொடுத்திருந்த தானங்களை மறுபடியும் புதுப்பித்ததாகக் கண்டிருக்கிறது. ஆகவே இப்போதைக்குச் சில காலத்திற்குமுன் பாழாகக் கிடந்த முட்டத்து நிலங்கள் 700 வருஷத்துக்கு முன் செழிப்பான நாடாக இருந்திருக்க வேண்டும். இவன் ஒரு காலத்தில் படையெடுத்து ஒரு கோயிலை இடித்து மறுபடியும் புதுக்கினதாகத் தெரிகிறது. இவன் அரசியின் பெயர் உலகுடைய பிராட்டி. இவன் காலத்தில் ஆனையச்சு சியக்கி என்ற நாணயங்கள் வழங்கி வந்தன. இவன் காலத்துப் [1] பேரூர் சாசனத்தில் பாண்டிநாட்டு ஒரு வியாபாரி பாம்புணி கிழவன் அப்பன் அகத்தீசுர முடையானை இருநிதிக் குபேரன் என்பான், பேரூர் திருவான் பட்டியுடையார்க்குச் சந்திரா தீபம் இரண்டு தானம்செய்ததும், அதற்கு வேண்டிய பொருள் கோயிலில் சேர்த்ததும் கண்டிருக்கிறது.

(d) கோனேரின்மை கொண்டான் :- இப்பெயர் ஒரு பட்டப்பெயரேயன்றி ஓர் அரசனின் சிறப்புப்பெயர் அல்ல. என்றுலும் கொங்குநாட்டில் இப்பெயராலே 55 கல்வெட்டுகள் கிடைத்திருக்கின்றன. [2] அவைகளில் பேரூரில் மூன்று. பெரும்பான்மையாக இப்பெயரால் கல்வெட்டுகள் இருப்பதாலும் அப்பெயரை வீரராஜேந்திரனே கொண்டுள்ளதாலும் இக்கல்வெட்டுகள் எல்லாம் அவ்வரசனுடையதாகவே கொள்ள இடம் உண்டு. வேறு இரண்டு அரசர்களும் இப்பெயரைக் கொண்டிருந்தார்கள். இவ்வரசன் காலத்துக் குமரலிங்கத்து ஒரு சாசனத்தினுல் தான் கோயமுத்தூரின் ஆதிப் பெயரும் அதன் உற்பத்தியும் ஒருவாறு அறியலாம். கோவன் என்ற இருளர் தலைவனுல் ஆக்கப்பெற்ற ஒரு புதூர் என்றது அதன் காரணமென்று அறிகிறோம். இவன் காலத்துப்[3] பேரூர் சாசனத்தால் இராசத் துரோகிகள் அந்நாளில் எவ்வாறு தண்டிக்கப்பெற்றுர்கள் என்று அறிகிறோம். ஒரு திரிபுவன சிங்கதேவன் என்பான் இராஜத் துரோகியானதால் அவன் சொத்துக்கள் எல்லாம் அரசன் கைப்பற்றிக்கொண்டு பேரூர் திரு ஆன் பட்டீசுரமுடையார்க்கு இராஜராஜ சந்தி என்ற திருவிழாவாக உச்சிச்சந்தி அமுதுக்காக

1 S. I. I. Vol. 5. 237—561/93.
2 S. I. I. Vol. 5. 232—556/93. 238—562/93. 241—565/93
3 No. 232.

மேற்படியானுக்குச் சேர்ந்திருந்த புத்தூர், கோனூர், குறிச்சி முதலான பேரூர்நாட்டு விளைநிலங்களை எல்லாம் மார்கழி மாதம் 4-ந் தேதியில் கொடுத்ததாகக் கண்டிருக்கின்றது. இக்காலத்திலும் இராஜத்துரோகிகளுடைய சொத்துக்களை அரசாங்கத்தார் கைப்பற்றும் விஷயத்தை ஒத்திட்டுப் பார்க்கலாம்.

மற்றோர் சாசனத்தில்[1] கோவன்புத்தூர் என்ற விரகேரளநல்லூரில் ஒரு நிலத்தின் எல்லையைச் சொல்லும்போது சிவபாதசேகர மன்னரை, அதிராஜராஜவாய்க்கால், கொங்குகுல வல்லிவதி என்ற பெயர்கள் காணப்படுகின்றன. இதனாலே இப்போது பேரூர் அணையிலிருந்து வரும் ராஜாவாய்க்கால் அக்காலத்திலேயே அதே பெயருடன் ஏற்பட்டதென்று அறியலாகும். மேலும் பங்குனித் திருநாளில் திருப்பதிகம் (திருப்பதியம்) பாடுவார்க்கும், நட்டுவர்க்கும் நெல் தானியம் அளிக்க அந்த நிலத்தைத் தானம் செய்ததாகக் கண்டிருக்கிறது. சோழநாட்டில் இராஜராஜசோழன் ஆலயங்களில் திருப்பதிகம் பாடும்படி உத்தரவு செய்ததுபோலவே கொங்குநாட்டிலும் செய்யப்பட்டது காணலாம். இவ்வரசன் 15-ம் ஆண்டில் ஆடி மாதத்தில் கம்மாளர்க்குச் சில உரிமைகள் தந்தவாகவும், அதை மற்ற இடங்களில் எழுதிவைக்க உத்தரவு இட்டதாகவும் ஒரு சாசனம்[2] பேரூரிலும், அதைப் போன்ற சாசனங்கள் கரூர், பாரியூர், மொடக்கூர், குடிமங்கலம் என்ற ஊர்களிலும் செதுக்கப்பட்டு இருக்கின்றன. அச்சாசனங்களின்படி அந்தநாள் முதல் கம்மாளர்கள் "நன்மை தீமைகளுக்கு இரட்டைச் சங்கு ஊதுதல், பேரிகை அடித்தல், போகும்போது பாதரட்சை அணிதல், வீட்டுக்கு சாந்து பூசுதல் செய்யலாம்" என்று கண்டிருக்கிறது. இவ்வுரிமைகள் சாதாரணமாக ஒவ்வொருவனுக்கும் இருக்கத்தக்கனவாக இருந்தாலும் அதுகாறும் கம்மாளர்க்கு இருக்கவில்லையென்றும், அவை அவ்வரசனால் புதிதாய் அவர்களுக்கு அளிக்கப்பட்டன என்றும் அறியக்கிடக்கிறது.

மேலும் கோனேரின்மை கொண்டான் காலத்துத் தாம்பிரப்பட்டயம் ஒன்று பேரூர் கோயில் அருச்சகர் வசம் இருக்கிறது. இரண்டு செப்புத் தகடுகளாக இருக்கின்றது. அவைகளில் ஒன்றில் முதலும் மற்றொன்றில் கடைசியும் இல்லை. எழுத்தோ புராதனமானது. கோனேரின்மை கொண்டான் என்ற அரசன் பேரூர்நாட்டு வெள்ளலூர் தேனூருடையார் கோயிலில் காணியுடைய சிவப்பிராமணன் பாரத்துவாஜ கோத்திரத்து இராசராச பட்டன் அவ்வரசனுக்குச் செய்த பணிக்காகத் தானம் கொடுத்ததாம். அனுத்திர பல்லவராயன் உத்தமசோழன் காரைத்தொழுவில் உத்தமசோழர் இட்டகோட்டையை எறியலான விஷயங்கள் கண்டிருக்கின்றன. ஆனால் விஷயம் பூர்த்தியாக இல்லை. மற்றொன்றில் அக்காலத்துச் சாசனம் (தஸ்தாவேஜ்) எழுதும்விதம் தெரிகிறது. "விலை, ஒற்றி, தர்மம், தானம், ஸ்ரீதனம் இவைகளுக்கு உரித்தாகி" என்பன நோக்கத்தக்கன. மேலும் "இவனுக்குக்

1 129/1909 143/1910 which mentions கோவன் அரசன்.
2 562/1893

கொடுத்த வரிசை ஆண் வழிக்கு மரணச்சங்கு ஊதிவருவதாயும், பெண் வழிக்கு இரட்டைச் சங்கு ஊதிவருவதாயும், வளையல் வைப்பானாகவும், காலுக்குச் சந்தனம் பூசிவருவதாகவும், பச்சை பிடாம் போற்பானாகவும், அகம் இரண்டா நிலையெடுத்துச் சாந்து இட்டுக்கொள்ளப்பெறுவானாகவும், இவன் மக்கள், மறுமக்கள் செய்துகொள்ளப் பெறுவதாகவும், நம் ஓலை செம்பிலும் சிலையிலும் வெட்டிக்கொள்ளக் கொடுத்தோம்'' என்று கண்டிருக்கிறது. இதைப் பார்த்தால் கம்மாளருக்குக் கொடுத்த உரிமைகளைப் போன்று இருக்கிறது. அக்காலத்தில் ஜனசமூக உரிமைகளும் அரசர்களால் கொடுக்கப்பட வேண்டியிருத்தல் காண வியப்பாக இருக்கிறது. இதனால் சுலபத்தில் சில வகுப்பார் உரிமைகள்பெறவும் இழக்கவும் ஏற்படும் என்பது ஆராயத்தக்கது.[1] இக்காலத்தில் முடியுமா ?

(e) கரிகாற்சோழன்:- இப்பெயர்கொண்ட ஓர் அரசனின் சாசனங்கள் ஆறு[2] பேரூரில் உண்டு. இவனுக்கு ராஜராஜன் என்ற பெயரும் உண்டு. இப்பெயரும் பட்டப்பெயராக இருக்கலாம். பேரூர்ப் புராணத்திலும் இவன் பெயரைக் காண்கிறோம். இவன் காலத்தில் அற்பிசியிலும் உத்திராடத்திலும் திருவிழாக்கள் கொண்டாடப்பெற்றதும், கறியமுது, உப்பமுது, மிளகமுது, பருப்பமுது, நெய்யமுது, தயிரமுது, சர்க்கரை யமுது, திருவிளக்கெண்ணெய், அடைக்காயமுது, இலையமுது இவைகள் கோயிலுக்கு அளிக்கப்பட்டன என்றும், திருப்பதிகம் பாடுவார்க்கு நிலம் விட்டதும் குறிக்கப்பட்டிருக்கிறது. நெல் அக்காலத்தில் கலத்தால் அளக்கப்பட்டதும் தெரிவிக்கிறது. அக்காலத்து அர்ச்சகர் பேர்களில் சந்திரசேகரபட்டர், திருமகன்பாடி திருவாலந்துறை குமரங்க விமபட்டன் என்ற பேர்களும், கைக்கோளரில் ராமன் பொன்னன் ஆன காடவராயன் பெயரும், ஏனையோரில் உய்யவந்தான், அருளாளன், வில்லவன், சோழ பிரமராயன் என்ற பேர்களும் காண்கிறோம். இதனால் அந்தக் காலத்தில் பெயரிடும் தன்மை அறிகிறோம்.

மேலும் நடராஜப் பெருமானுக்குக் கூத்தாடுதேவர் என்ற சிறந்த பெயரும், அவர் பங்குனித் திருநாளில் திருச்சாந்து சாத்திப் பிச்சவேடம் கொண்டருளினதும் குறிக்கிறது. மற்றோர் சாசனம் திருவான் பட்டீசுரம் உடையார்க்குச் செங்கழுநீர் மலர் சாத்தினதும் சொல்லுகிறது. அந்தக் காலத்து ஒரு கல்சிற்பியும் எழுத்தாளனுமான விழுபாதராயன் கலிங்கராயன் என்பவன் பல கல்வெட்டுக்களையும் எழுதின ஆசிரியனாய் இருந்தான்.

கொங்குநாட்டில் உள்ள சாசனங்களை ஆராய்ச்சிசெய்தால் பலவித காரணங்களைக்கொண்டு ஒரு இராஜவம்சமே இங்கு அரசாண்டதென்று கூறமுடியும். அதை அடியிற்கண்ட விதமாகக் கணிக்கக் கூடியதாயிருக்கிறது.

1 Note Sarada Act and agitation on it.

2 S. I. I. Vol. 5. 228—552/93 230—554/93 239—563/93
229—553/93 233—557/93 240—564/93

விக்கிரமசோழன் (1004—45)
|
அபிமான சோழ இராஜாதி ராஜன் (1080—1110)
|
இராஜாதிராஜ உத்தமன் 1110—1117 | இராஜாதிராஜ விரசோழன் 1117—1135
|
உத்தம சோழ விர நாராயணன் 1135—1149
|
குலோத்துங்கன் 1149—1183
|
விரசோழன் 1183—1206
|
விர இராஜேந்திரன் 1207—1255
|
விக்கிரமன் II 1155—1263
|
(ஒரு இராஜகேசரி) 1263—1273
|
விக்கிரமன் III 1273—1303

8. கொங்கு பாண்டியர் :

சோழராச்சியம் 13-ம் நூற்றுண்டில் சிர்குலைந்த காலத்தில் பாண்டிய மன்னர் முன்னுக்கு வந்தார்கள் என்று சரித்திரத்தால் அறிகிறேம். அக்காலத்தில் கொங்குநாடும் அன்னூர்கையில் அகப்பட்டது. அப்போது இங்கு ஆண்ட பிரதிநிதிகள் கொங்குபாண்டியர் என்ற பேராலே கூறப்படுகின்றனர். அவர்களில் முக்கியமானவன் 1265 - 1285 ஆண்ட விரபாண்டியன். இவனைப்பற்றி 51, சாசனங்கள் உண்டு. அவைகளில் 2 பேரூரில்* உண்டு. இவன் காலத்தில்தான் அவினுசி 'சுந்தரநாயனர்' கோயில் ஏற்பட்டது. இவனதுபேரூர்ச்சாசனம் ஒன்றில் ஒருவெண்பா காணப்படுகிறது.

* S. I. I. Vol. 1. 5. 243—567/93.
,, 244—568/93.

கொங்கு நாட்டிலே செய்யுள்வடிவானது இது ஒன்றுதான். ஆனாலும் இதே வெண்பா மூவலூரில் சிறிது மாற்றிச் செதுக்கப்பட்டுள்ளது. அது,

"தண்டீஸ் வரன்ஓலை சாகரம்சூழ் வையகத்துக்
கண்டீஸ் வரன்கரும மாராய்க — பண்டே
அறம்செய்தான் செய்தான் அறங்காத்தார் பாதம்
திறம்பாமல் சென்னிமேல் வைத்து"

என்றது. இவ்வெண்பாவின்கீழ்க் கோவன்புத்தூரில் ஒரு நிலம் தானம் செய்த விஷயம் கண்டிருக்கிறது.

9. ஹாய்சளர் ஆதிக்கம் :

12-ம் நூற்றாண்டில் சோழர்களும் பாண்டியர்களும் க்ஷீணதிசையடைய மைசூர்நாட்டு துவார சமுத்திரத்தில் ஆண்ட ஹாய்சள அரசன் விஷ்ணு வர்த்தனன் கொங்குநாட்டைக் கைப்பற்றிக்கொண்டான். பேரூர் சாசனங்களினால் வீரவல்லாள தேவன் III என்பவன் இந்நாட்டை ஆண்டது தெரிய வரும். அவன் சாசனங்கள் 1292 முதல் 1341 வரை கிடைக்கின்றன. அவன்காலத்து சாசனங்களினாலே பல தானங்கள் பேரூர் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதைக் கண்டால் தேசம் அப்போது மிகவும் செழிப்பாக இருந்திருக்க வேண்டும் என்று எண்ணலாம். பேரூரில் இவ்வரசன் சாசனம்[1] ஒன்றில் சக வருஷம் 1245-ம் வருஷம்ருதிரோத்காரி மின்னுயிற்று பூர்வபக்ஷம் பிரதிமை உத்திரட்டாதி நாளில் வீரமார்த்தாண்ட நாயக்கர் மகன் விரசிக்க நாய்க்கர் ஒடுவங்கா நாட்டு நிலகிரி சாதாரணன் கோட்டையில் மாதவப்பெருமாளுக்கு 13 ஊர்களின் தர்மம் செய்தது குறிக்கப்பட்டிருக்கிறது. மேலும் மற்றோர் [2]சாசனத்தில் உச்சிச்சந்தி, தென்னவதரையன் சந்தி, தோப்பில் மண்டபத்தே தைப்பூசத்திருநாள், பங்குனித் திருநாள், ஆகிய திருவிழாக்களும், பிறவாநெறிக் காணியில் அளப்பதும் கண்டிருக்கிறது. ஆகவே பிறவாநெறி என்ற க்ஷேத்திரப்பேர் அக்காலத்தில் வழக்கத்தில் இருந்தது எனத் தெரிகிறது. "பேரூர் உறைவாய்பட்டிப்பெருமான் பிறவா நெறி யானே" என்ற சுந்தரமூர்த்திகள் தேவாரம் இங்கே கவனிக்கத் தக்கது.

10. விஜயநகர் அரசியல் :

1295 கி. பி. யில் அல்லாவுதீன் என்ற முகம்மதிய அரசன் தக்ஷிண தேசத்து அரசரைத்தோற்கடித்துக் கைப்பற்றினபோது பழைய அரசியல்கள் எல்லாம் போய் விஜயநகரம் என்ற இந்து சாம்ராஜ்ஜியம் தாபிக்கப்பட்டது. அந்தக் காலத்தில் கொங்குநாடும் அவர்பாற்பட்டது. சிறு மன்னர்களான பாளையக்காரர்கள் எங்கும் இராணுவ விஷயத்திற்காக வெளிப்படனர்.

---

1 S. I. I Vol. 5. 224—548/93

2 S. I. I. Vol 5 242 — 566/93. 245 — 569/93

சுற்றுப் பக்கத்துச் சாசனங்களில் விஜயநகரத்து மன்னர்கள் பெயர்கள் குறிக்கப்பட்டிருப்பதால் பேரூரும் அவர்கள்பால் சென்றது. இக்காலம் அதாவது 1450-ம் வருஷ காலத்தில் திருவண்ணுமலையிலே அவதரித்த அருணகிரிநாதர் கொங்குநாடு விஜயம்செய்து பல தலங்களுக்கும் திருப்புகழ் பாடி வந்து பேரூருக்கு வந்து அதற்கும் திருப்புகழ்[1] அருளியிருக்கிருர். இந்த ஸ்தலத்திற்குச் சேர்ந்த மருதகிரி, அனுமக்குமரர் மலை, குருடிமலை (குருவிருடிமலை) முதலான தலங்களுக்கும் அருளியிருக்கிருர். ஆதலில் இவ் வூரில் சிறிதுகாலம் அப்புலவர் பெருமான் அமர்ந்திருத்தல் வேண்டும் என ஊகிக்கலாம்.

இக்காலத்தில்தான் தெற்கநாம்பி அரசர்கள் முன்னேற்றம் அடைந்து கொங்கில் சில பாகங்களைக் கைப்பற்றினர்கள். அவர்களில் விரநஞ்சராய உடையார் சிக்கராய உடையார் முதலியவர்களின் சாசனங்கள் அவிநாசி, திருமுருகன்பூண்டி முதலிய இடங்களில் இருக்கின்றன. அவர்கள் காலம் 1489—1517 வரையில். அக்காலத்தில் தெற்கநாம்பிக்குச் சேர்ந்த சங்கரையன் மகன் மாதையன் என்ற மந்திரி திருப்பேரூர் திருக்குளத்தைக் கட்டித் தனது பெயரைக் கன்னடத்திலும், தமிழிலும் செதுக்கியிருக்கிருன். அதில் அவன் தன் செயலை "திருக்கண்ணும்பி சங்கரையன் அவர்கள் குமாரன் மாதையன் சேவை'' என்று செதுக்கி இருக்கின்ருன். இது 16 இடங்களில் முதற்படியிலும், 6-ம் படியிலும் 8 புறங்களில் செதுக்கப்பட்டிருக்கின்றது. கர்ண பரம்பரையாக முற்காலத்து, "குன்ற மன்னதோர் திருமால் கோயிலின்'' இடிந்த கற்களைக்கொண்டுதான் இந்தக் குளத்துப் படிகளை இவன் கட்டினதாகச் சொல்வார்கள். குளத்தின் தென்கரையில் லட்சுமி நாராயணமூர்த்தியை[2] வெட்ட வெளியில் இப்போது வைத்திருக்கக் காணலாம். இந்த மூர்த்திதான் அக்கோவிலினுடைய மூர்த்தியாகும் என் பார்கள். மேலும் அந்தக் குளத்துக் கிழக்குக்கரையில் அந்த மாதையனுல் கட்டப்பட்ட மாதேசுவரன் கோயிலும் ஒன்று இருக்கிறது.

11. மதுரை வமிசம்:

கி. பி. 1565-ல் விஜயநகரம் தொலையவே 1600-ல் மைசூரார் கொங்குநாட்டைக் கைப்பற்றினர். ஆனல் சில வருஷங்களுக்குள்ளாக மதுரை அரசர்களான நாய்க்கர்கள் கொங்குநாட்டில் படை எடுத்து அதைப் பிடித்துக்கொண்டனர். பேரூரின்கண் அமைந்துள்ள சிறந்த சிற்பவேலை கொண்ட கனகசபையானது அந்தக்காலத்தில் ஆண்ட திருமலைநாயக்கர்

---

[1] பேராற் பெரியோனே பேரூர்ப் பெருமாளே. — திருப்புகழ் 953.
பட்டி யாள்பவர் கொட்டி யாடினர்
பாரூரா சூழ் பேரு ராள்வார் பெருமாளே. — திருப்புகழ் 954.

[2] S. I. I. Vol. 5. 242. சாசனத்தில் "இலக்ஷ்மி நாராயணம்பெருமாள் திருவிடையாட்டத்துக்குத் தெற்கு'' என்று ஒரு நிலத்தின் எல்லையைக் குறித்திருக்கிறதினுல் அச்சாசன காலமாகிய வீரவல்லாள் III காலத்தில் அக்கோயில் இருந்ததென அறியலாம்.

(1625—1659) சகோதரனுன அளகாத்திரி நாயக்கனுல்[1] கட்டப்பட்ட தென்பர். கனகசபையின் முன்னுள்ள ஒரு தூணில் ஆங்கிலேய உடுப்புடன் உள்ள ஒரு போர்வீரன் ஒரு துப்பாக்கியைக் கையில் கொண்டிருக்கும் சிறப்பு நோக்கத்தக்கது. இதுவே இச்சபை சமீப காலத்ததென்று காட்டும். கோயில்கட்டின அளகாத்திரி நாய்க்கரின் உருவமும் ஒரு தூணில் உண்டு. அதைத் தற்காலம் புதுப்பித்த செல்வமான்கள் கட்டிடத்திலிருந்து விலக்கி வெளியில் வைத்துவிட்டார்கள். இந்தக் கனகசபையின் அழகைப்பற்றி நாம் வருணிக்கமுடியாது. அதை அனுபவிப்பதானுல் ஒவ்வொருவரும் பார்த்தே தீரவேண்டும். ஒரே கல்லால் செதுக்கப்பட்ட நுட்பமான பெரிய உருவங் களும், சங்கிலிகளும், சுழல்கிறதாமரையும், நடனமாதர் சிலேகளும் ஒவ்வொரு வரும் நோக்கத்தக்கன. கனகசபையின் சிற்ப விசேஷத்தைப் பார்த்த பெர்க் குஸன் என்ற ஆங்கில சிற்ப நிபுணர் அதன் சிற்பங்கள் வேலூர் சிற்பங் களேப் பார்த்து அதன்படி ஏற்படுத்தியதென்றும், தேர்ந்த சிற்பியின் நிபுணத்துவம் யாதொன்றும் கிடையாதென்றும் இழிவாக எழுதியிருக்கிருர்.[2] ஆனுல் வேலூர் சிற்பங்களேயும் பேரூர் சிற்பங்களேயும் ஒத்திட்டுப் பார்த்த வர்கள் வேலூரையொட்டிப் பேரூர் ஆக்கப்பட்டதென்று ஒருகாலும் சொல்ல மாட்டார்கள். வேலூர் சிற்பங்கள் மிகக் குறைவாகவும், நுட்பத்தில் திறமை யற்றும் சிறியவைகளாகவும் இருக்கின்றன. பேரூரிலோ மகத்தாகவும், நுட்பவேலேகளேக் கொண்டதாகவும் மானிட இயற்கையைக் கவனித்தும் செய்யப்பட்டுள்ளன. அக்காலத்தில் ஆடவர்கள், பெண்கள் அணிந்திருந்த நகைகள், துணிகள், தலேமயிர் புனேதல், கட்டில், வாத்திய வகைகள், விலே மாதர் நடனவகைகள், கோமாளிவேடம் முதலிய பழக்க வழக்கங்களே எளிதில் அறியக்கூடிய சிற்பங்கள் பேரூர்ச் சபையில் அமைந்துள்ளன. மானிட உருவ அமைப்பும் மிருக உருவ அமைப்பும் இயற்கையின்படி ஆக்கப் பட்டிருப்பதோடு "கிராதார்ஜ் ஜுனியம்" என்ற சிவபெருமான் வேடனுகி வந்து அர்ஜ்ஜுனனேடு போர்புரிந்த கதை, பிக்ஷாடன மோகினி கதை, ஊர்த்தவ தாண்டவ சரிதம், பலவித நர்த்தன விசேஷங்கள் இவைகளெல் லாம் வரிசையாக செதுக்கப்பட்டிருப்பதும் ஆராயத்தக்கது. பெர்குஸன் சொல்லுகிறுற்போல இவை சிற்பம் க்ஷீணதிசை அடைந்த காலத்தன என்று கூறக் காரணமில்லே. ஏனெனில் வேலூர் சிற்பங்கள் இதைவிட மிகப் பழமை யானவையென்று கூறவும் ஆதாரமில்லே. அவையும் இதன் காலத்திலேயோ அல்லது இதற்குப் பிந்தியோ ஏற்பட்டிருத்தல்வேண்டும்.

மதுரைத் திருமலே நாய்க்கனுக்கு முன்பிருந்தே இந்தப் பேரூர்கிராமம் முழுதும் அக்கோயிலுக்குச் சர்வமானியமாகக் கொடுக்கப்பட்டதாக அரசாங் கத்து அறிக்கையினுல் தெரிகிறது. இந்தக் காலத்தில்தான் வீரசைவ சமய ஆசிரியரான சாந்தலிங்கசுவாமிகள் பேரூரில் வந்து ஒரு மடத்தை ஸ்தா

1 அளகாத்திரி நாய்க்கனே திருமலே நாய்க்கரின் மைத்துனன் என்பாரும் உண்டு. See Rangachariar's inscriptions of Madras Presidency page 528.

2 கோவை ஜில்லா கெஜடியர்.

பித்து அங்கேயே சமாதி அடைந்தார். இன்றைக்கும் அவர் மடம் சிறந்து விளங்குகிறது.

இந்தக்காலத்தில் ஏற்பட்ட மற்றோர் சாசனம்[1] வாயிரக்கா நாட்டு களந்தைக் காணிப்பூலுவர் பெரும்பற்றூர் சந்திர குமார கோப்பன மன்றாடியார் கந்தசாமிக் கவுண்டர் கலி 4734 (=1633 கி. பி.) சித்தாத்திரியில் கர்ப்பக்கிரகம்கட்டி முடித்ததாகக் கூறுகிறது. அக்காலம் அவர் கர்ப்பக்கிருகம் புதுப்பித்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

12. மைசூர் ஆதிக்கம் :

மைசூரார் 1672-ல் மறுபடியும் கொங்கு நாட்டைக் கைப்பற்றிக் கொண்டனர். ஹைதரும் திப்புவும் பேரூரைத் தம் வசத்தில் வைத்திருந்தனர். 1785 வரையில் முழுதும் சர்வமானியமாகவிருந்த இந்தக் கிராமத்தை திப்புசுல்தான் ஜப்திசெய்து அதில் கிடைத்த வருவாயில் அரை வரிசை வரியை மாத்திரம் கோயிலுக்குக் கொடுத்துவந்தான். 1790, 1791-வது வருஷங்களில் ஆங்கிலேயர் இக்கிராமத்தைத் தம் வசப்படுத்திக்கொண்டு அதன் வரவு முழுதும் கோயிலுக்குக் கொடுத்துவந்தார்கள். ஆனால் மறுபடியும் 1792-ல் திப்புசுல்தான் பிடித்துக்கொண்டு ½ வரிசைதான் கொடுத்து வந்தான். 1799-ல் ஆங்கிலேயர் திப்புவை ஜெயித்துப் பேரூரைத் தம் வசப்படுத்திக்கொண்டு கிராமம் முழுதும் கோயிலுக்குக் கொடுத்து ஜாரி பட்டா கொடுத்துவிட்டார்கள்.[2]

இந்தக் காலத்தில்தான் திருவாவடுதுறை ஆதீனத்துக் கச்சியப்ப முனிவர் பேரூருக்கு வந்திருந்து பேரூர்ப்புராணத்தை இயற்றினர். அதைத் தேவஸ்தான சபையார் வசனத்தோடு முதற்பதிப்பு அச்சிட்டுள்ளதன்றி பின்னரும் பல திருத்தப்பாடுகளுடன் இந்த இரண்டாம் பதிப்பும் அச்சிட்டு உள்ளார்கள். இந்த முனிவரின் ஆசிரியரின் ஆசிரியரான பின் வேலப்ப தேசிகர் என்ற மூர்த்திகள் அவ்வாதீனம் சின்னப்பட்டத்தில் எழுந்தருளியிருந்து பேரூரில் இருந்து சமாதியாயினர். அந்தச் சமாதி இப்போதும் பேரூரில் மேற்படி ஆதீன மடாலயத்தின் பின்புறம் ஷெ மடாலயத்தின் சொந்த நிலத்தில் ஒரு சிறு தனிக்கோயிலாகக் காணப்படுகிறது.

தற்காலம்

திப்புசுல்தான் இறந்ததற்குப் பிறகு ஆங்கிலேயர் வசத்தில் வந்த இந்தக் கிராமமானது இனமாக இருந்து 1847-ல் தர்மகர்த்தாக்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டது. இந்தக் கிராமத்திற்கு ஒரு வாய்க்காலும், இரண்டு சிறு குளங்களும் உண்டு. மற்றொரு குளத்தில் அரை வரிசையும் உரிமையுண்டு. பேரூர், மாவுத்தம்பதி என்ற இரண்டு கிராமங்கள் உண்டு.

---

1 S. I. I. Vol. 5, 235=99 C. B. E.

2 Order No. 1907 dated 25-9-1893 and G. O. 1790 dated 5-9-1893.

அவைகளின் விபரம்

	ஏக்கர்	கந்தாயம்
பேரூர்	1607—50	7858—15—0
மாவுத்தம்பதி	3005—77	1791— 3—7

இவைகளில் இனும் பூமி

பேரூர்	986—88	7505— 8—0
மாவுத்தம்பதி	1944—82	1260—15—7
	2931—70	8766— 7—7

இந்நிலங்களைத் தவிர இதர பக்தர்கள் விட்டிருக்கும் கட்டளைப் பூமிகள் பல உண்டு. தற்காலம் தர்மகர்த்தர்களும் அவர்களுக்கு மேல் தேவஸ்தானக் கமிட்டியாரும் பரிபாலித்து வருகிறார்கள்.

சமீபத்தில் நகரத்தார்களால் ரூ. மூன்றரை லட்சம் செலவழிக்கப் பட்டுப் பல மண்டபங்கள் புதுப்பிக்கப்பட்டன. பல வித்துவான்கள் பல பிரபந்தங்கள் சமீபத்தில் இக்கோயிலைப்பற்றிப் பாடியிருக்கிறார்கள்.

அனுபந்தம் A.

இப்போது பேரூரில் இருக்கும்படியான முக்கிய ஆலயங்கள் கீழ் வருமாறு :-

I. (1) பட்டீசுவரர் ஆலயம்—இதில் பட்டீசர் சந்நிதி சிருங்கதீர்த்தம் (இதைச் சிங்க தீர்த்தம் என்று தவறாய்ச் சொல்வதன்றிச் சிங்கத்தையும் வைத்திருக்கிறார்கள்) பிரகாரத்தில் 63 நாயன் மார்கள், சேரமான், சுந்தரர், விக்கிரகங்கள் உண்டு.

(2) பச்சைநாயகி அம்மன் சந்நிதி.

(3) கனகசபை.

I. *(1)* இராஜேந்திரதேவன் காலத்தில் அர்த்தமண்டபம் கட்டப்பட்டது. கோபண்ண மன்றாடியார் கர்ப்பகிருகத்தைப் புதுப்பித்தது. அண்ணாமலைச்செட்டியார் உள்மதிலும் அறுபத்துமூவர் மண்டபம் முதலியவையும் கட்டினது.

(2) வித்துவான் கந்தசாமி முதலியார் பட்டீசர் கோயில் கர்ப்பமண்டபம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், சபாமண்டபமும், அம்மையார்கோயிலும் புதுப் பித்தனர்.

(3) அளகாத்திரி நாய்க்கர் கட்டியது.

(4) சுப்பிரமணிய சந்நிதி — பழுதுபார்க்கப்படவில்லை.

(5) கல்யாணமண்டபம்.

(6) கனகசபைக்கு முன்புறம் புதுமண்டபம்.

II. திருக்குளம் — இதனுள் 5 தீர்த்தங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

III. மாதேசுவரன் கோயில்.

IV. அழகிய சிற்றம்பலம் — ஆதிபெயர் — இடங்கைநாயக ஈஸ்வரமுடையார்.

V. அரசம்பலவாணர் சந்நிதி — சின்னக் கோயில் என்பார்கள்.* இதுதான் காலவேசுவரம். இதில் சுவாமியும் அம்மனும் உண்டு. நடராசர் திருநடனம்செய்த புராதனமான பெரிய அரசமரம் இக்கோயிலில் உள்ளது. வாயிலில் பெரிய ரிஷபம்—கோபுரத்துக்குப் பதிலாய் மாடியில் வைத்திருக்கிறது.

VI. பட்டிவிநாயகர் சந்நிதி — இது புதிதாகப் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன் கீழ்தான் நச்சுப்பொய்கை இருப்பதாகக் கூறுவர்.

VII. வட கைலாசம் — இதில் பிரமதீர்த்தம் என்ற ஒரு தீர்த்தம் உண்டு. பைத்தியம் நாய்க்கடி முதலியவை தீரும் என்பர். செப்புக் காசு இட்டுவைத்தால் களிம்பு போய்த் தங்கம் பூசியதுபோல மாறுகிறது. இதன் பிரகாரத்தில் இறவாப்பனை உண்டு.

VIII. பட்டி சுற்றும் மேடை — அரசமரம் — பிறவாப்புளி — ஈசன் பள்ளனை உருவக்கோயில்.

IX. தென் கைலாசம் ஊரில் தென்மேற்கில் உள்ளது—கல்வெட்டுகள் உண்டு. சமீபத்தில் புதுப்பிக்கப்பட்டது.

X. பாண்டவர் குழிகள் — சித்திரச் சாவடிக்குப் போகும் வழியில் இருந்தன. சமீபத்தில் தூர்க்கப்பட்டன.

XI. இரண்டு இடிந்த கோயில்கள் — சித்திரச்சாவடி மார்க்கம்.

---

(5) மந்திரபாளையம் நீலம்பாளையத்தார்கள் கட்டுவித்தது.

(6) சோமசுந்தரம் செட்டியார் கட்டினது.

II & III தெற்கனும்பி சங்கரையனுடைய மகன் மாதையன் கட்டினது.

IV. விக்கிரமசோழன் தருமம்.

V * இது சுமார் 45 ஆண்டுகளின் முன் மீனும்பாள் என்ற ஓர் அம்மையாரால் புதுப்பிக்கப்பெற்றது.

XII. வீரபத்திரர் கோயில் — கோயிலுக்கு மேற்கில் வீர சைவர்களுக்குச் சேர்ந்தது.

XIII. சோழன்துறை—அரசமரம் மிகப்பெரிது. கணபதி — நாகர்கள் — காஞ்சிமா நதிக்கரை.

XIV. திருநீற்று மேடு.

XV. சாந்தலிங்க சுவாமி சந்நிதி — கோயிலுக்குக் கிழக்கு.

B

சிலாசாசனம் முதலியவைகளிலிருந்தும், பழைய! நூல்களில் இருந்தும் காணும் இடங்கள் வகைகள்.

1. பேரூர்நாட்டு வெள்ளலூர் தேனீசுரம் உடையார்.
2. பேரூர்நாட்டு கோவன்புத்தூர் என்ற வீரகேரள நல்லூர்.
3. பேரூர்நாட்டு முட்டமென்கிற அமரபுஜங்க சதுர்வேதிமங்கலம்.
4. பேரூர்நாட்டுக் குறிச்சி.
5. பேரூர்நாட்டுக் கோரப்பாடி என்ற ஆம்மடி சதுர்வேதிமங்கலம்.
6. பேரூர்நாட்டுச் சிவபாத சேகர சதுர்வேதமங்கலம்.
7. பேரூர்நாட்டு முட்டத்து நாகேசுரம் உடையார்.
8. இடங்கைநாயக ஈசுவரம் உடையார்.
9. அதிராஜராஜ வாய்க்கால்.
10. வீரகேரள விலாட மாணிக்கவதி.
11. கொங்குகுல வல்லி வதி.
12. சிவபாத சேகர மண்ணரை.
13. புத்தூர்.
14. கோளூர்.

காரணாகமத்தில் உள்ள பௌர்ணமி பூஜாக்கிரமம்

மாதம் 1	குண்டம் 2	பிரதான அபிஷேக திரவியம் 3	புஷ்பம் 4	வஸ்திரம் 5	நிவேதனம் 6	பலன் 7
சித்திரை	சதுரசிரம்	"தவனம்" பலவித புஷ்பம்	முல்லை, கானற்பூ, மருக்கொழுந்து, வாழைப்பூ, கடப்பம்பூ	வெண்பட்டு	சுத்தான்னம்	லக்ஷ்மி கடாக்ஷம்
வைகாசி	பதுமம்	சந்தனம்	அலரிப்பூ, நெய்தல், செவ்வந்தி, செந்தாமரை, பாதிரி, நெருஞ்சில், சிறுவழுதலை	மகிழம்பூ வர்ணப்பட்டு	எள்ளன்னம்	சாலோகம்
ஆனி	விருத்தம்	பழவர்க்கங்கள்	கடப்பம்பூ, சிவப்பு செண்பகம், தாமரை, நீலப்பாதிரி, வெள்ளைக்காக்கரட்டான்	பச்சை வஸ்திரம்	ஹரித்ரான்னம்	மனோரத நிறை வேற்றம்
ஆடி	ஷோடசம்	திரட்டிப்பால்	ஊமத்தை, கருநெய்தல்	கறுப்புப்பட்டு	பரமான்னம் (மூங்கிலரிசி)	சத்துருநாசம்
ஆவணி	திக்தளம்	சருக்கரை	விஷ்ணுகரந்தை, மல்லிகை, புன்னை, காக்கரட்டான், செண்பகம், முல்லை	மாடப்புரு வர்ணப்பட்டு	கோதுமைப் பொங்கல்	இகலோகம் காமியம்

புரட்டாதி	யோனி	அதிரசம்	தேவதாரு, விஷ்ணுகரந்தை, பொன் ஊமத்தை, வெள்ளறுகு, தாமரை	சிவப்புப்பட்டு	நாரத்தை எலுமிச்சை சாதம்	தனப்பிராப்தி
ஐப்பசி	திரிகோணம்	அன்னம் கறிவகைகளுடன்	சங்குப்பூ, வில்வப்பூ, கொன்றை, மகிழ், பட்டிப்பூ, முல்லை	பொன் வர்ணப்பட்டு	சருக்கரைப் பொங்கல்	தர்மார்த்த காமம்
கார்த்திகை	அஷ்ட கோணம்	தீபம்	குடமல்லிகை, கருநெய்தல், மல்லிகை, பலாசு, பாக்குப்பூ	பலவித வர்ணப்பட்டு	க்ருதான்னம்	பிரமஹத்தி தோஷ நிவிர்த்தி
மார்கழி	பஞ்ச கோணம்	நெய்	வெண்தாமரை, செந்தாமரை, தும்பை, வெள்ளறுகு	சுவர்ண வஸ்திரம்	பொங்கல்	மோக்ஷம்
தை	சப்த கோணம்	தேன்	ஒற்றை நந்தியாவர்த்தம் இரட்டை நந்தியா வர்த்தம், தாமரை	வெள்ளை வஸ்திரம்	குளான்னம்	ஆயுள் அபிவிருத்தி
மாசி	ஷட்கோணம்	நெய்யில் நனைத்த கம்பளம்	தாமரை, மகிழம்பூ, மருதோன்றி, மல்லிகை	மஞ்சள் வஸ்திரம்	பாலன்னம்	ஆரோக்கியம்
பங்குனி	அர்த்த சந்திராகாரம்	தயிர்	கொக்கிறகு, தாமரை, காசித்தும்பை	வெள்ளையும் மஞ்சளும் கலந்தவஸ்திரம்	பிட்டு	புத்திர, ஐசுவரியப் பிராப்தி

இத்துடன் மகாநைவேத்தியம், ஆராதனம், வாத்தியம், உத்ஸவம், தானம் ஆகியவைகள் நிகழ்த்தவேண்டியது.

உ
சிவமயம்

திருவிடைமருதூர்க் கோயிலில் நடைபெறுவது

மாதம்	அபிஷேக திரவியம்	நிவேதனம்
சித்திரை	மருக்கொழுந்து	எலுமிச்சம்பழ அன்னம்
வைகாசி	சந்தனம்	சித்திரான்னம்
ஆனி	முப்பழம்	புளியன்னம்
ஆடி	திரட்டிப்பால்	நாரத்தம்பழஅன்னம்
ஆவணி	சருக்கரை	எள்ளன்னம்
புரட்டாதி	அதிரசம்	உளுந்தன்னம்
ஐப்பசி	அன்னபிஷேகம்	சுத்தான்னம்
கார்த்திகை	தீபம்	பொரி
மார்கழி	பசுநெய்	சம்பா
தை	தேன்	சம்பா
மாசி	க்ருதகம்பளம்	சம்பா
பங்குனி	பசுந்தயிர்	சம்பா

பிழையும் திருத்தமும்

பக்கம்	செய்யுள்	உரை	பிழை	திருத்தம்
22	37		வரைவிழி	வரையிழி
48		49	தனமையானும்	தன்மையானும்
63		5	யாகததிற்கு	யாகத்திற்கு
69		9	வீபூதியும்	விபூதியும்
90		19	லோகநெறி	யோகநெறி
			தேவதுந்திபி	தேவதுந்துபி
			செரிந்துண்டாக	செறிந்துண்டாக
100		55	செனருன்	சென்ருன்
113	39		கலக்கணி	நலக்கணி
132	31		மள்னி	மன்னி
134	37		நிமிலன்	நிமலன்
135		42	மலேக்காணவும்	மலேகாணவும்
137	51		கண்மலர்ந்து	கண்மலர்த்து
138		53	ஆண் பறவைப் புணர்ச்சிக்காக	ஆண் பறவை புணர்ச்சிக்காக
143		72	சிவமெருமான்	சிவபெருமான்
151		15	பூமியுலுள்ள	பூமியிலுள்ள
,,		16	கொடையின்	குடையின்
154		25	குளிச்சியை	குளிர்ச்சியை
158		41	மறைந்துப் பூசிக்கின்ற	மறைந்து பூசிக்கின்ற
,,	43		கனிவாயி	நனிவாயி
159	44		மூறுதெறிந்	மூறுதெரிந்
163	60		டாமல்	டாமால்
167		74	ஔியாலும்	ஒலியாலும்
			இடையும்பர்	மிடையும்பர்
169	82		ஏள	ஏஎ
		82	ஏள	ஏஎ
201	7		செயதேன்	செய்தேன்
203		11	இலென்	இலேன்
230		58	கூகூ	ஊகூ
232		63	கலேக்த்	கலேக்கு

பக்கம்	செய்யுள்	உரை	பிழை	திருத்தம்
321		44	அவள	அவள்
521	120		இனிது வானங்கி	இனிது வாங்கின
546	52		கூவிரககொடிஞ்சி	கூவிரக்கொடிஞ்சி
550	64		ிரம்பவணியக்	நிரம்பவணியக்
555		80	பின்ளையவர்கள்	பிள்ளையவர்கள்
608		123	தனிகைப்புரா	தணிகைப்புரா
613	4		பெரும்பேரூர்	பெறும்பேரூர்
690		24	மனசிலர்	மனனசிலர்

R